# வாசக நூல்

# 1

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# திருப்பலிப் புத்தகம்

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் ஆணையின்படி திருத்தி
அமைக்கப்பெற்று, திருத்தந்தை ஆறாம் சின்னப்பரின்
அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது.

## வாசக நூல்

## I

ஆண்டின் சிறப்புக் காலம் :

திருவருகைக் காலம்முதல் பரிசுத்த ஆவி விழாவரை

CHS
St. XAVIER'S COLLEGE
FATHERS LIBRARY
TIRUNELVELI-2.

தமிழ் இலக்கியக் கழகம்
திருச்சிராப்பள்ளி-620001
1974

தமிழக மறை ஆயர்களின் ஆணைப்படி
இறைப்பணிக் குழுவினரால் தயாரிக்கப்பட்டது

தமிழாக்கம் மூலநூலுக்கு ஒத்திருக்கிறது

அச்சிடலாம்:

+ THOMAS,
திருச்சி மறை ஆயர்
15—6—1973

## SACRA CONGREGATIO PRO CULTU DIVINO

Prot. No. 1758/70

### DECRETUM

Ordine lectionum Missae approbato per Constitutionem Apostolicam Missale Romanum, a summo Pontifice Paulo VI die 3 aprilis 1969 datam, Sacra haec Congregatio pro Cultu Divino, quae decreto diei 25 maii 1969 elenchum lectionum biblicarum jam evulgaverat, curavit ut Lectionarium quoque conficeretur, quod omnium lectionum integrum textum lingua latina exhiberet.

Praesentem nunc editionem latinam Lectionarii Missalis Romani haec Sacra Congregatio evulgat, eandemque typicam esse declarat.

Contarariis quibuslibet minime obstantibus.

Ex aedibus Sacrae Congregationis pro Cultu Divino, die 30 septembris 1970, in festo S. Hieronymi.

*Benno Card. Gut*
**PRAEFECTUS**

*A. Bugnini*
**a SECRETIS**

# INTRODUCTION TO THE LECTIONARY

## I. General Principles :

1. The Second Vatican Council has frequently insisted on a return to the reading of Holy Scripture as the chief source of interior renewal for God's People. Theretore the same Council decreed that, -'in sacred celebrations there is to be more reading from holy scripture, and it is to be more varied, and suitable, (Constitution on the Sacred Liturgy 35, 1). Especially in the Mass, "the treasures of the Bible are to be opened up more lavishly, so that richer fare may be provided for the faithful at the table of God's word...... " (ib. 51).

2. In the readings from holy scripture, which are explained in the homily, "God himself speaks to his people, he unfolds to them the mystery of salvation and nourishes their spirit; Christ is present amidst the faithful" (Roman Missal, General Instruction 33).

3. Hence, this lectionary provides texts for Sundays, feastdays and weekdays throughout the year, and also for the memorial days of the saints and other special occasions.

4. The readings for days of obligation (Sundays, and major feasts) give the people who participate at Mass the opportunity of hearing the most important scriptural texts within a reasonably brief space of time.

The readings for week days complement those of Sundays; yet each series runs independently one from the other.

## II. The Lectionary for Sundays and Feastdays :

On these days the readings show the following particularities.

5. There are THREE READINGS for each day-one from the Old Testament; a second from the writings of an apostle (also called 'the Apostle'); the third reading is the gospel. The purpose of these three readings is to show the unity of the Old and the New Testament, and the continuity in the history of salvation. Christ in the mystery of his death and resurrection occupies the central place.

6. The readings are divided over a period of THREE YEARS. Hence the same texts recur every fourth year.

Year I (A) begins with Advent 1968 and runs all through 1969 (1971–1972...)

Year II (B) begins with Advent 1969 and runs all through 1970 (1972–1973...)

Year III (C) begins with Advent 1970 and runs all through 1971 (1973–1974...)

7. **TWO PRINCIPLES GOVERN** the choice of these readings:

(a) for the Sundays of Advent, Lent and Eastertide, the readings of the Old Testament and the Apostle are centred around the theme of the Gospel; this is called the "thematic principle".

(b) for the other 33 Sundays during the year, the gospel and the epistle are SEMI - CONTINUOUS and independent from one another (e. g. in year I the gospel of Matthew is read together with the epistle taken successively from the letters of Paul to the Romans and to the Philippians) - The reading from the Old Testament is chosen to harmonize with the gospel.

## III. The Lectionary For Weekdays:

8. In Lent the TWO READINGS bear the character of this season - it is a time of penance and of preparation for baptism.

9. On other ferial days the same gospel is read every year, while the first reading recurs every second year. - Hence on odd years (1971, 1973 etc.) the epistle of series I is read; on even years (1972, 1974 etc.) that of series II.

N. B.: The two readings of Advent and Eastertide are chosen relevant to the same theme.

## IV. The Lectionary for Masses of the Saints:

10. Two series of readings are proposed.

(a) There is the PROPER OF THE SAINTS, which comprises the solemnities, the feasts, and the memorial days. At times one or other reading of the common is indicated as being more appropriate.

(b) A rich choice of readings is presented in the COMMON OF THE SAINTS. Besides readings proper to a particular group of saints (martyrs, pastors, virgins), a more general selection is also given. The latter may freely be chosen whenever a referance is made to the COMMON OF THE SAINTS.

11. For each type of saints, first several Old Testament readings are proposed followed by a number of readings from the WRITINGS OF THE APOSTLES; and finally some 5 or more GOSPEL readings are given. From these the celebrant should make a judicious choice with a view to the needs of his congregation. The same remark applies to the choice of the intermediate chants.

## V. Readings for Ritual Masses - Masses for Various Occasions - Votive Masses:

12. The Proposed choice is SIMILAR to that of the COMMON OF THE SAINTS.

## VI. Major Criteria that govern the Selection of the Readings:

Beside certain principles that have been applied in the general division of the lectionary, the following should be noted.

13. Several books of scripture are RESERVED FOR SPECIAL SEASONS, both because of their nature and liturgical tradition.

For example the Acts of the Apostles are read at Easter time to illustrate how the life of the Church finds its origin in the paschal mystery. The Gospel of John is read during the last weeks of Lent and at Easter time; it is called the 'spiritual' gospel, and propounds the mystery of the person and mission of Christ. The book of Isaiah is traditional Advent reading. Some extracts are also read at Christmas.

14. With regard to THE LENGTH OF THE READINGS, people listen more easily to narratives than to doctrinal texts. Hence the former are at times long, because of the event that is narrated; the latter are always kept short.

15. Because of a more pastoral concern, DIFFICULT SCRIPTURE TEXTS have usually been excluded from the readings of Sundays and Solemnities; yet certain passages are so important for christian life, that they could not be omitted. Pastors have the duty to explain such texts to the people. Parallel readings in the same Mass will often throw light on more difficult texts.

N. B. : In several Liturgies it is customary to omit certain verses of scripture. This tradition has been preserved in most instances where it appeared legitimate after a judicious examination of the text had been made.

## VII. Guiding Principles for the Celebrant in His Choice of Readings :

16. At times the celebrant is free to choose an alternative text or one from among several. This happens rarely on Sundays and Solemnities, in order to preserve the spirit of the season or the continuity in reading from the same book. A broader choice is presented on memorial days, in ritual, occasional and votive Masses. In his choice the celebrant should advert to the following norms.

17. IN MASSES WITH THREE READINGS he is urged to read all three. When for pastoral reasons the Bishops' Conference permits the reading of two lessons, he should choose from among the two first the reading which harmonizes best with the gospel. or the one which suits best a protracted catechesis, or again the text which suits best the semi - continuous reading of one or other book of scripture. Above all he will keep in mind the spiritual benefit of the congregation.

18. In his choice between the LONGER OR SHORTER FORM of the same reading he should be guided by the same pastoral concern.

19. ON WEEKDAYS it may happen that the readings of one or more days are to be omitted (e. g. because of a funeral, a votive Mass). The celebrant will either omit the less important readings of that week, or he will perhaps combine them with other readings in such a manner that the congregation can readily grasp the main teaching of a particular book of scripture.

20. For the FEASTS OF THE SAINTS there are three possibilities.

(a) Some readings are **proper to the saint**, and must be read instead of the weekday readings ; e. g. on the feast of the conversion of Saint Paul.

(b) Other readings are indicated **as appropriate**, because they illustrate the spiritual life and apostolic activities of that particular saint. They may be replaced by the weekday readings for the sake of respecting the semi-continuous reading from a book which is proper to the season.

(c) The readings may also be taken **from the Common** in view of tha audience, but on condition that on Solemnities the first is an Old Testament reading, the second from the writings of an apostle, and the third is the gospel (unless the Bishops' Conference has allowed that only two texts be read).

On feasts and memorial days there are only **two readings** -the first is taken either from the Old Tastament or from an apostle, the second is the gospel. But at Easter time, in keeping with tradition, the first reading should be from an apostle, the second from the gospel of John.

21. In ritual, occasional and votive Masses, the criteria listed under n. 20 should be observed.

## VIII. The Intermediate Chants :

22. The norms given in the 'General Instruction of the Roman Missal' should be observed (nn. 36–40).

23. The **Psalm** which follows the first reading is very important. As a rule, when the readings are taken from the "**Common of the Saints**", and in ritual, occasional and votive masses, the celebrant will choose the psalm that is of greater benefit to the congregation.

24. To facilitate the **singing of the responsorial Psalm** a judicious choice may be made from the series of "Common Texts" proposed for various times of the year, or from the "Common of the Saints".

25. The chant, which is sung between the second reading and the gospel, is either proper to the Mass (the gospel) or may be chosen from a series of seasonal texts or from the Common. .

26. During Lent, the "Alleluia" is replaced by one of the following acclamations :

"Praise to you, O Christ, King of eternal glory".

"Praise and honour to you, Lord Jesus".

"Glory and praise to you, O Christ".

"Glory to you, O Christ, you are the Word of God".

(or any other similar acclamation).

## SYNOPSIS OF THE LECTIONARY

### I The Season of Advent:

#### 1. The Sundays :

Gospel theme of Sunday I: The Lord's coming at the end of times.
Sundays II and III: The Mission of John the Baptist.
Sunday IV: Events that precede the nativity of the Lord.

Old Testament readings : Messianic prophecies taken mostly from the book of Isaiah. The Apostle : exhortations or professions of faith: suited to the season.

#### 2. The Weekdays :

These are divided into **two periods**-upto December 16;-from December 17 to 24.

For the First period – first reading from the book of Isaiah;
– gospel on the life and work of John the Baptist.

For the Second period – prophecies regarding the Messiah from different books;
– gospel relating events that prepare the Nativity.

### II The Christmas Season :

1. Solemn Feasts – Feastdays – Sunday.

Vigil Mass and 3 Christmas Masses – first reading: prophecy of Isaiah.
– second reading and gospel : all, except 2 are of the old Roman Missal.

Feast of the holy Family (Sunday after Christmas) : gospel of the infancy with readings about family life.

The octave of the Nativity (also feast of the Motherhood of the B. V. M.): readings about the B. V. M and the holy name of Jesus.

First Sunday after the octave – the mystery of the incarnation.
Epiphany: in the second reading : the call of all men unto salvation.
Sunday after Epiphany – Christ's baptism.

#### 2. Ferial Days:

First reading : – continuous reading from John's first epistle

Gospel : – Christ makes himself known (Luke's gospel of the infancy ; chapter I of John ; texts from the 3 synoptics).

### III. LENT

#### 1. The Sundays :

Gospel of Sundays I and II: The Lord's temptation ; his transfiguration.

Sundays III – IV – V : The Samaritan woman: the man born blind : the raising of Lazarus.

N. B. : For years II and III alternative readings are given.

Old Testament readings : texts that illustrate the history of salvation.

The Apostle : readings that harmonize with the gospel and the Old Testament reading.

## 2. The Week days :

The gospel and Old Testament readings are complementary to each other, and expound a theme of the Lenten catechesis.

From Monday of the fourth week : semi - continuous reading from the Gospel of John.

N. B.: When in years II and III the gospels of the Samaritan Woman, the man born blind, and Lazarus are not read on the Sundays, they may be read on any weekday within the 3rd, 4th and 5th week respectively.

## IV. EASTERTIDE :

### 1. The Sundays :

Gospel Reading - from Easter till 3rd Sunday : apparitions of the Lord.
- 4th Sunday : the good shepherd.
- 5th to 7th Sunday : excerpts from the discourse after the last supper.

First Reading : - from the Acts of the Apostles [the life, witness and growth of the early church].

The " Apostle " - year I: the Ist letter of Peter ; year II : the Ist letter of John ; year III : the Apocalypse [with its spirit of joy and faith].

### 2. The Weekdays :

First Reading - semi - continuous reading from the Acts of the Apostles.

Gospel - the Easter octave : narratives of the Lord's apparitions.
- the following weeks: the gospel of John [especially the last discourse]

## V. The Yearly Cycle :

### 1. Arrangement and choice of texts :

The yearly cycle comprises 33 or 34 weeks, divided into two periods.

- The first period begins on the Monday after the Sunday which comes after January 6, and ends on Shrove Tuesday.
- The Second period begins on the Monday after Pentecost and ends on the eve of the first Sunday of Advent.

N. B. : Though the Lectionary provides readings for 34 Sundays with their subsequent weekdays, some Sundays like the feast of the Lord's Baptism and Pentecost, pertain to other seasons; still other Sundays may be impeded by a solemnity like that of the feast of the Blessed Trinity, or of Christ Eternal King.

2. **Norms** for the observance of the order proper to the Yearly Cycle.

(a) The Sunday of the feast of the Lord's Baptism takes the place of the first Sunday in the year. On the weekdays that follow, the readings of the first week are read.

(b) the Yearly Cycle is resumed from the Monday after Pentecost in the following manner:

When the Yearly Cycle has 34 Sundays, the readings will be taken from the week subsequent to the one to which Shrove Tuesday belonged. E.g. if the readings of the Monday and Tuesday before Ash–Wednesday belonged to the 6th week, those of week following Pentecost Sunday will be of the 7th week in the year. When the Yearly Cycle has only 33 Sundays, one week will be omitted. E. g. when there are 5 weeks before Lent, the 6th week will be omitted, and after Pentecost Sunday the readings of the 7th week will be read.

3. **Sunday Readings:**

Gospel of the 2nd Sunday – either the miracle of Cana, or another episode in John's gospel.

the other Sundays – semi - continuous reading from one of the synoptics.

N. B.: The disposition of the gospel is such as to harmonize with the liturgical year (after Epiphany: the beginning of the Lord's preaching; at the end of the year: eschatological themes. In year II, 5 readings from chapter 6 of John's gospel have been inserted.)

Old Testament readings: these are brief and very intelligible.

They harmonize with the gospel.

The "Apostle": independent from the gospel, proposed as semi–continuous reading, comprising the letters of Paul and the letter of James.

N. B.: The feast of Christ the King is kept on the 34th and last Sunday.

4. **Weekday Readings:**

Gospel: taken successively from Mark, Matthew, and Luke (the first 12 chapters of Mark are read entirely. Those from Matthew and Luke complement what is not found in Mark. Features proper to each gospel have been retained. e. g. Luke's eschatological discourse which is read at the end of the year).

First Reading: always continuous whether from the Old or the New Testament. Texts from historical books are meant to expose salvation history. Certain passages from Sapiential books are chosen to highlight some events. Only very few books found no place in the Lectionary for weekdays (E. g. some minor prophets, the canticles). At the end of the year passages from Daniel and the Apocalypse are read because of their eschatological meaning.

# உள்ளுறை

Decretum
General Introduction

| | |
|---|---|
| திருவருகைக் காலம் ... | 1 |
| டிசம்பர் 16 வரை அல்லேலூயா வசனங்கள் ... | 67 |
| டிசம்பர் 17 முதல் 24 வரை அல்லேலூயா வசனங்கள் ... | 98 |
| கிறிஸ்து பிறப்புக் காலம் ... | 99 |
| திருக்குடும்பம் ... | 113 |
| இறைவனின் அன்னையாகிய புனித மரியாள் ... | 125 |
| திருக்காட்சி விழாவுக்கு முன்வரும் வார நாட்களுக்கான அல்லேலூயா வசனங்கள் ... | 141 |
| ஆண்டவரின் திருக்காட்சி ... | 141 |
| திருக்காட்சி விழாவுக்குப் பின்வரும் வார நாட்களுக்கான அல்லேலூயா வசனங்கள் ... | 165 |
| ஆண்டவரின் ஞானஸ்நானம் ... | 166 |
| ஆண்டின் பொதுக்காலம் (9 வாரங்கள்) ... | 170 |
| பொதுக்காலத்திற்கான அல்லேலூயா வசனங்கள் ... | 459 |
| தவக் காலம் ... | 464 |
| வார நாட்களுக்கான ''நற்செய்தி வாசகத்திற்கு முன்வசனங்கள்'' ... | 633 |
| பரிசுத்த வாரம் ... | 636 |
| பாஸ்கா காலம் ... | 701 |
| ஆண்டவரின் விண்ணேற்றம் ... | 855 |
| பரிசுத்த ஆவி விழா ... | 890 |
| அல்லேலூயா வசனங்கள் : | |
| விண்ணேற்ற விழாவுக்கு முன்வரும் வாரநாட்களுக்கானவை ... | 901 |
| விண்ணேற்ற விழாவுக்குப்பின்வரும் வாரநாட்களுக்கான்வை ... | 903 |
| பதிலுரைப் பாடல்களுக்கான பொதுப்பாடங்கள் : | |
| பல்லவிகள் ... | 905 |
| சங்கீதங்கள் ... | 906 |

# விழாக்கள், ஞாயிறுகளுக்கு ஏற்றவாறு வாசகங்களை ஒழுங்குபடுத்தக் கால அட்டவணை

| ஆண்டு | காலச்சக்கரம் | | திருநீற்றுப் புதன் | உயிர்ப்பு ஞாயிறு | பரிசுத்த ஆவி விழா | ஆண்டின் பொதுக்கால வாரங்கள் | | | திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஞாயிறு | வார நாட்கள் | | | | தவக்காலத்திற்கு முன் வாரங்கள் | பாஸ்கா காலத்திற்குப் பின் தொடக்க நாள் | தொடக்க வாரம் | |
| 1974 | 3 | 2 | பெப்ரவரி 27 | ஏப்ரல் 14 | ஜூன் 2 | 7 | ஜூன் 3 | 9 | டிசம்பர் 1 |
| 1975 | 1 | 1 | பெப்ரவரி 12 | மார்ச் 30 | மே 18 | 5 | மே 19 | 7 | நவம்பர் 30 |
| 1976 | 2 | 2 | மார்ச் 3 | ஏப்ரல் 18 | ஜூன் 6 | 8 | ஜூன் 7 | 10 | நவம்பர் 28 |
| 1977 | 3 | 1 | பெப்ரவரி 23 | ஏப்ரல் 10 | மே 29 | 7 | மே 30 | 9 | நவம்பர் 27 |
| 1978 | 1 | 2 | பெப்ரவரி 8 | மார்ச் 26 | மே 14 | 5 | மே 15 | 6 | டிசம்பர் 3 |
| 1979 | 2 | 1 | பெப்ரவரி 28 | ஏப்ரல் 15 | ஜூன் 3 | 8 | ஜூன் 4 | 9 | டிசம்பர் 2 |
| 1980 | 3 | 2 | பெப்ரவரி 20 | ஏப்ரல் 6 | மே 25 | 6 | மே 26 | 8 | நவம்பர் 30 |
| 1981 | 1 | 1 | மார்ச் 4 | ஏப்ரல் 19 | ஜூன் 7 | 8 | ஜூன் 8 | 10 | நவம்பர் 29 |
| 1982 | 2 | 2 | பெப்ரவரி 24 | ஏப்ரல் 11 | மே 30 | 7 | மே 31 | 9 | நவம்பர் 28 |
| 1983 | 3 | 1 | பெப்ரவரி 16 | ஏப்ரல் 3 | மே 22 | 6 | மே 23 | 8 | நவம்பர் 27 |
| 1984 | 1 | 2 | மார்ச் 7 | ஏப்ரல் 22 | ஜூன் 10 | 9 | ஜூன் 11 | 10 | டிசம்பர் 2 |
| 1985 | 2 | 1 | பெப்ரவரி 20 | ஏப்ரல் 7 | மே 26 | 6 | மே 27 | 8 | டிசம்பர் 1 |
| 1986 | 3 | 2 | பெப்ரவரி 12 | மார்ச் 30 | மே 18 | 5 | மே 19 | 7 | நவம்பர் 30 |
| 1987 | 1 | 1 | மார்ச் 4 | ஏப்ரல் 19 | ஜூன் 7 | 8 | ஜூன் 8 | 10 | நவம்பர் 29 |
| 1988 | 2 | 2 | பெப்ரவரி 17 | ஏப்ரல் 3 | மே 22 | 6 | மே 23 | 8 | நவம்பர் 27 |
| 1989 | 3 | 1 | பெப்ரவரி 8 | மார்ச் 26 | மே 14 | 5 | மே 15 | 6 | டிசம்பர் 3 |
| 1990 | 1 | 2 | பெப்ரவரி 28 | ஏப்ரல் 15 | ஜூன் 3 | 8 | ஜூன் 4 | 9 | டிசம்பர் 2 |
| 1991 | 2 | 1 | பெப்ரவரி 13 | மார்ச் 31 | மே 19 | 5 | மே 20 | 7 | டிசம்பர் 1 |
| 1992 | 3 | 2 | மார்ச் 4 | ஏப்ரல் 19 | ஜூன் 7 | 8 | ஜூன் 8 | 10 | நவம்பர் 29 |
| 1993 | 1 | 1 | பெப்ரவரி 24 | ஏப்ரல் 11 | மே 30 | 7 | மே 31 | 9 | நவம்பர் 28 |
| 1994 | 2 | 2 | பெப்ரவரி 16 | ஏப்ரல் 3 | மே 22 | 6 | மே 23 | 8 | நவம்பர் 27 |
| 1995 | 3 | 1 | மார்ச் 1 | ஏப்ரல் 16 | ஜூன் 4 | 8 | ஜூன் 5 | 9 | டிசம்பர் 3 |
| 1996 | 1 | 2 | பெப்ரவரி 21 | ஏப்ரல் 7 | மே 26 | 7 | மே 27 | 8 | டிசம்பர் 1 |
| 1997 | 2 | 1 | பெப்ரவரி 12 | மார்ச் 30 | மே 18 | 5 | மே 19 | 7 | நவம்பர் 30 |
| 1998 | 3 | 2 | பெப்ரவரி 25 | ஏப்ரல் 12 | மே 31 | 7 | ஜூன் 1 | 9 | நவம்பர் 29 |
| 1999 | 1 | 1 | பெப்ரவரி 17 | ஏப்ரல் 4 | மே 23 | 6 | மே 24 | 8 | நவம்பர் 28 |

# திருவருகைக் காலம்

## திருவருகைக் காலம் – முதல்வாரம்

## ஞாயிறு – முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*ஆண்டவர் நித்திய சமாதான இறையரசில்
மக்கள் இனத்தார் அனைவரையும் ஒன்று சேர்க்கிறார்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 2 : 1 - 5

யூதாவையும் யெருசலேமையும் குறித்து ஆமோஸ் என்பவரின் மகனான இசையாஸ் கண்ட காட்சி:

இறுதி நாட்களில், ஆண்டவரின் கோயில் அமைந்துள்ள மலை, மலைகளுக்கெல்லாம் உயர்ந்ததாய் நாட்டப்படும்; குன்றுகளுக்கெல்லாம் மேலாக உயர்த்தப்படும்; மக்களினங்கள் யாவும் அதை நோக்கி ஓடிவரும்.

பல நாட்டு மக்கள் கூடிவந்து, "வாருங்கள், ஆண்டவரின் மலைக்கு ஏறிச்செல்வோம்; யாக்கோபின் கடவுளது கோயிலுக்குப் போவோம். தம்முடைய வழிகளை அவர் நமக்குக் கற்பிப்பார், நாமும் அவர் நெறிகளில் நடப்போம்; ஏனெனில், சீயோனிலிருந்தே திருச்சட்டம் வெளியாகும்; யெருசலேமிலிருந்தே ஆண்டவர் வாக்குப் புறப்படும்" என்பார்கள்.

மக்களினங்களுக்கிடையில் அவரே தீர்ப்பிடுவார்; பல்வேறு மக்களுக்கு நீதி வழங்குவார்; அவர்களோ தங்கள் வாள்களைக் கலப்பைக்

கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். நாட்டுக்கு எதிராய் நாடு வாள் எடுக்காது. இனி அவர்களுக்குப் போர்ப் பயிற்சியும் அளிக்கப்படாது.

யாக்கோபின் வீட்டாரே, வாருங்கள், ஆண்டவரின் ஒளியிலே நாம் நடப்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 121 : 1-2 (4-5, 6-7) 8-9 (பல்லவி : 1 காண்)

பல்லவி: மகிழ்ச்சியோடு ஆண்டவரின் இல்லம் செல்வோம்.

1 "ஆண்டவரின் இல்லம் செல்வோம்" என்று எனக்குச் சொல்லினர். நான் பெருமகிழ்ச்சியுற்றேன்.
2 எருசலேமே, இதோ உன் வாயில்களில் வந்து நிற்கின்றோம். பல்லவி

4 ஆண்டவருடைய கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன. இஸ்ரயேலின் சட்டப்படி ஆண்டவரின் திருப்பெயரைப் போற்றச் செல்கின்றன.
5 நீதி இருக்கைகள் அங்கே அமைக்கப்பட்டுள்ளன: தாவீதின் இல்லத்து அரியணைகள் அங்குள்ளன. பல்லவி

எருசலேமின் அமைதி நிலை வேண்டுங்கள்: எருசலேமே, உன்மீது அன்பு வைத்தவர்களுக்கு எத்துன்பமும் இல்லாதிருப்பதாக.
7 உன் மதில்களுக்குள் அமைதி இருப்பதாக. உன் மாளிகைகள் பாதுகாப்புடன் விளங்குவனவாக. பல்லவி

8 "அமைதி உன்னகத்து விளங்குவதாக!" என்பேன். என் சகோதரர், நண்பர் பொருட்டு அவ்வாறு சொல்வேன்.
9 உனக்கு எல்லா நன்மையும் உண்டாக நான் மன்றாடுவேன்; ஆண்டவராகிய நம் இறைவனின் இல்லத்தின் பொருட்டு வேண்டுவேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

நமது மீட்பு அண்மையில் உள்ளது.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 13:11-14

சகோதரர்களே:

இறுதிக் காலம் இதுவே என நீங்கள் அறிந்தவர்களாய் நடந்து கொள்ளுங்கள்; விழித்தெழும் நேரம் ஏற்கெனவே வந்துவிட்டது;

ஏனெனில் நாம் விசுவசிக்கத்தொடங்கியபோது இருந்ததைவிட மீட்பு இப்பொழுது மிக அண்மையில் உள்ளது.

இரவு முடியப்போகிறது. பகல் அண்மையிலுள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு ஒளியின் ஆட்சிக் குரிய படைக்கலங்களை அணிந்துகொள்வோமாக. பகலில் ஒழுகுவதுபோல் கண்ணியமாக நடந்துகொள்வோமாக. களியாட்டம், குடிவெறி, காமம், ஒழுக்கக்கேடு, சண்டை, பொறாமை இவற்றையெல்லாம் தவிர்த்து, ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவை அணிந்துகொள்ளுங்கள். வலுவற்ற உங்கள் இயல்பைப் பேணுபவர்களாய், தீய இச்சைகளுக்கு இடங் கொடாதீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

சங். 84 : 7

அல்லேலூயா

அல்லேலூயா. ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்; உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஆயத்தமாய் இருக்க விழிப்பாயிருங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 24:37-44

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"நோவாவின் காலத்தில் இருந்ததுபோல மனுமகன் வருகையும் இருக்கும். பெரு வெள்ளத்திற்கு முந்தின காலத்தில், நோவா பெட்டகத்தில் நுழைந்த நாள்வரை அவர்கள் உண்டும் குடித்தும், பெண் கொண்டும் கொடுத்தும் வந்தனர். பெரு வெள்ளம் வந்து அனைவரையும் வாரிச் செல்லும்வரை அவர்கள் ஒன்றையும் உணரவில்லை. அப்படியே மனுமகன் வருகையும் இருக்கும். அப்போது வயலில் இருவர் இருப்பர். ஒருவன் எடுக்கப்படுவான்; மற்றவன் விடப்படுவான். திரிகையில் இரு பெண்கள் மாவரைப்பர். ஒருத்தி எடுக்கப்படுவாள்; மற்றவள் விடப்படுவாள்.

விழிப்பாயிருங்கள்; ஏனெனில், எப்போது உங்கள் ஆண்டவர் வருவார் என்று உங்களுக்குத் தெரியாது. திருடன் இன்ன சாமத்தில் வருவான் என்று வீட்டுத் தலைவனுக்குத் தெரிந்தால், அவன் விழிப்பாயிருந்து வீட்டில் கன்னம் வைக்க விடமாட்டான் அன்றோ? இதை உணர்ந்து நீங்களும் ஆயத்தமாய் இருங்கள்; ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*வானத்தைக் கிழித்து நீர் இறங்கி வர மாட்டீரா.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்

63: 16b - 17; 64: 1. 3b-8

ஆண்டவரே, நீரே எங்கள் தந்தை, நீரே எங்கள் மீட்பர்: தொன்று தொட்டு உமது பெயர் அதுவே. ஆண்டவரே, உம் வழிகளிலிருந்து நாங்கள் பிறழும்படி விட்டதேன்? உமக்கு அஞ்சாதபடி எங்கள் உள்ளத்தைக் கடினமாக்கியதேன்? உம்முடைய ஊழியர்களை முன்னிட்டும், உம் உரிமைச் சொத்தாகிய கோத்திரங்களை முன்னிட்டும் எங்கள் பக்கமாய்த் திரும்பியருளும்.

வானத்தைக் கிழித்து நீர் இறங்கி வரமாட்டீரா! மலைகள் உம் திருமுன் கரைந்து போகுமே!

நீர் இறங்கி வந்தீர், உம் திருமுன் மலைகள் உருகிப்போயின. தமக்காகக் காத்திருப்பவர்களுக்கென நீர் ஏற்பாடு செய்தவற்றை, இறைவா, உம்மையன்றி வேறு எவரும் தொடக்கத்திலிருந்து கேள்விப்பட்டதுமில்லை, செவியுற்றதுமில்லை, கண்ணால் கண்டதுமில்லை. மகிழ்ச்சியோடு நீதியைக் கடைப்பிடிப்பவனையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைவு கூர்கிறவர்களையும் நீர் எதிர்கொண்டு வந்து சந்திக்கிறீர்.

இதோ, நீர் எங்கள் மேல் சினங்கொண்டீர், நாங்களோ பாவஞ் செய்தோம்; அவற்றிலேயே நாங்கள் நெடுங்காலமாய் உழல்கிறோம். எங்களுக்கும் மீட்புக் கிடைக்குமோ? நாங்கள் அனைவரும் தீட்டுப் பட்ட மனிதனைப் போல் ஆனோம். எங்கள் நீதியின் செயல்கள்யாவும் கறைபட்ட ஆடை போலாயின; இலைபோல் நாங்கள் அனைவரும் உதிர்ந்து போனோம்; காற்றைப்போல் எங்கள் அக்கிரமங்கள் எங்களை அடித்துப் போயின.

உமது பெயரைக் கூவியழைப்பவன் எவனுமில்லை, எழுந்து உம்மைப் பற்றிக்கொள்பவன் ஒருவனுமில்லை; எங்களிடமிருந்து உமது முகத்தை மறைத்துக்கொண்டீர், எங்கள் அக்கிரமங்களின் கையில்

எங்களை விட்டுவிட்டீர். ஆயினும், ஆண்டவரே, நீரே எங்கள் தந்தை, நாங்கள் களிமண்; நீர் எங்களை வனைபவர், நாங்கள் யாவரும் உம்முடைய கைவேலைப்பாடுகள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 79:1ac. 2b. 14-15, 17-18 (பல்லவி: 3)*

பல்லவி: இறைவா, எங்களை மனமாற்றியருளும்; உமது இன்முகம் காட்டி எங்களை மீட்டருளும்.

2 இஸ்ராயேலரின் மேய்ப்பரே, செவிசாய்த்தருளும்; கெருபீம்களின் மேல் வீற்றிருப்பவரே, ஒளிவீசும்.
3 உமது வல்லமையைத் தூண்டி எழுந்தருளும்; எம்மை மீட்க எழுந்து வாரும். பல்லவி
15 சேனைகளின் இறைவனே, மீளவும் எழுந்து வாரும்; வானினின்று கண்ணோக்கிப் பாரும்; இத்திராட்சைக் கொடியை வந்து பாரும்.
16 உமது வலக்கரத்தால் நீர் நட்டதைப் பாதுகாத்தருளும். நீர் உமக்கென உறுதிப்படுத்திய மனிதனை உமது வலக்கரம் காப்பதாக. பல்லவி
18 உமது வலக்கரத்தால் தேர்ந்தெடுத்த ஆளை உமது கைவன்மை காப்பதாக: உமக்கென உறுதிப்படுத்திய மனிதனை அது காப்பதாக.
19 இனி நாங்கள் உம்மை விட்டு அகலோம்: உயிரோடு எங்களை நீர் காத்தருள்வீர்; உமது பெயரை நாங்கள் போற்றுவோம். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து வெளிப்பட வேண்டுமெனக் காத்திருக்கிறோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *1:3-9*

சகோதரர்களே:

நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக.

கிறிஸ்து யேசுவுக்குள் உங்களுக்கு அளிக்கப்பட்ட இறை அருளுக்காக உங்களை நினைத்து, கடவுளுக்கு என்றும் நன்றிகூறுகிறேன். ஏனெனில், கிறிஸ்துவைப்பற்றி நாங்கள் அளித்த சாட்சியம் உங்களுக்குள் உறுதிப் பட்டிருப்பதால், சொல்வன்மையும் அறிவும் நிரம்பப்பெற்று அவருக்குள் எல்லா விதத்திலும் வளம்பெற்றவர்கள் ஆனீர்கள்; அதனால், ஆண்டவ

ராகிய யேசு கிறிஸ்து வெளிப்பட வேண்டுமெனக் காத்திருக்கிற உங்களுக்கு ஞானக் கொடை எதிலும் குறையே இல்லை. நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வருகை நாளில் நீங்கள் குறைபாடற்றவர்களாயிருக்க அவரே உங்களை இறுதிவரை உறுதிப்படுத்துவார். கடவுள் நம்பிக்கைக்குரியவர்; தம் மகனும் நம் ஆண்டவருமாகிய யேசு கிறிஸ்துவோடு நீங்கள் நட்புறவு கொள்ள அவரே உங்களை அழைத்திருக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *சங். 84: 7*

அல்லேலூயா. ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்; உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

**விழிப்பாயிருங்கள்: வீட்டுத் தலைவர் எப்பொழுது வருவார் என்று உங்களுக்குத் தெரியாது.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *13:33-37*
அக்காலத்தில்: யேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது:

"எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து செபியுங்கள்; ஏனெனில் அந்நேரம் எப்பொழுது என்று உங்களுக்குத் தெரியாது. இது எப்படியெனில், வெளியூர் செல்லும் ஒருவன் செய்வதுபோலாகும். அவன் தன் வீட்டை விட்டுப் புறப்படும்போது, ஊழியர்களிடம் எல்லாம் ஒப்படைத்து, அவனவன் வேலையையும் குறிப்பிட்டு, விழிப்பாயிருக்கும்படி காவலாளுக்குக் கட்டளையிடுகிறான்.

அதுபோல நீங்களும் விழிப்பாயிருங்கள்; ஏனெனில், வீட்டுத் தலைவர் மாலையிலோ நள்ளிரவிலோ கோழி கூவும்பொழுதோ காலையிலோ எப்பொழுது வருவார் என்று உங்களுக்குத் தெரியாது; அவர் திடீரென்று வரும்பொழுது, நீங்கள் உறங்கிக்கொண்டு இருப்பதைக் காணலாகாது.

உங்களுக்குக் கூறுவதை நான் எல்லாருக்குமே கூறுகிறேன்; விழிப்பாயிருங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**தாவீதுக்கு நீதியின் தளிர் ஒன்றை முளைப்பிப்போம்.**

**இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** *33 ; 14 - 16*

"இதோ நாட்கள் வருகின்றன; இஸ்ராயேலின் வீட்டாருக்கும் யூதாவின் வீட்டாருக்கும் நாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவோம்" என்கிறார் ஆண்டவர்.

அந்நாட்களில் - அக்காலத்தில் தாவீதுக்கு நீதியின் தளிர் ஒன்றை முளைக்கச்செய்வோம்.

அவர் நாட்டில் நீதியையும் நியாயத்தையும் செலுத்துவார். அந்நாட்களில் யூதா மீட்கப்படும், யெருசலேம் அச்சமின்றிக் குடியிருக்கும்; 'ஆண்டவரே நமது நீதி' என்பதே இனி அதற்குப் பெயராய் வழங்கும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 24 : 4bc - 5 ab. 8-9. 10-14 (பல்லவி 1b)*

பல்லவி: **ஆண்டவரே, உம்மை நோக்கி என் உள்ளம் தாவுகின்றது.**

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்: உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.

5 உமது உண்மைஎன்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்: என் மீட்பராம் இறைவன் நீரே. பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்: ஆகவே பாவிகளுக்கு, நல்வழி கற்பிப்பார்;

9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார்: எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார். பல்லவி

10 ஆண்டவருடைய உடன்படிக்கையையும் கட்டளைகளையும் கடைப்
பிடிப்போர்க்கு, அவருடைய வழிகள் எல்லாம் அருளும் உண்மையும்
கொண்டவை.

14 தமக்கு அஞ்சி நடப்போரிடம் ஆண்டவர் அன்புறவுகொண்டுள்
ளார்: தமது உடன்படிக்கையை அவர்களுக்கு வெளிப்படுத்து
கின்றார்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

***கிறிஸ்துவின் வருகைக்கென்று ஆண்டவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு

எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 12 - 4 : 2

சகோதரர்களே:

உங்கள்மீது எங்களுக்குள்ள அன்பு பெருகுவதுபோல், ஒருவருக்கொருவர்மீதும் அனைவர்மீதும் உங்களுக்குள்ள அன்பில் ஆண்டவர் உங்களை வளர்ந்தோங்கச் செய்வாராக. நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தர்கள் அனைவரோடும் வரும்போது, நம் கடவுளும் தந்தையுமானவரின் திருமுன், நீங்கள் குற்றமின்றிப் பரிசுத்தமாய் இருக்கும்படி உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக.

சகோதரர்களே, இறுதியாக உங்களுக்கு அறிவுறுத்த விரும்புவது: நீங்கள் எவ்வாறு நடக்கவேண்டும், கடவுளுக்கு உகந்தவர்களாக எவ்வாறு வாழவேண்டும் என்ற படிப்பினையை எங்களிடமிருந்து பெற்றுக்கொண்டீர்கள்; அதன்படியே நடந்து இன்னும் முன்னேற வேண்டுமென்று, ஆண்டவராகிய யேசுவின்பெயரால் கேட்டுக்கொள்கிறோம். ஆண்டவராகிய யேசுவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகள் எவை என அறிவீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

சங். 84 : 7

அல்லேலூயா. ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்.

உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது.**

✣ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

21: 25- 28. 34 - 36

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"கதிரவனிலும் நிலாவிலும் விண்மீன்களிலும் அறிகுறிகள் தென்படும்; மண்ணுலகில் கடற்கொந்தளிப்பின் முழக்கத்தினுல் நாடுகள் குழப்பமடைந்து இடுக்கண் உறும். உலகத்திற்கு என்ன நேருமோ என்னும் ஏக்கத்தினுலும் அச்சத்தினுலும் மக்கள் உயிர் விடுவர். வானத்தின் படைகள் அசைக்கப்படும். அப்பொழுது மனுமகன் மிகுந்த வல்லமையோடும் மாட்சிமையோடும் மேகத்தின்மீது வருவதைக் காண்பார்கள்.

இவை நிகழத் தொடங்கும்போது, தலை நிமிர்ந்து நில்லுங்கள்; உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது.

ஆனுல், களியாட்டத்தாலும் குடிவெறியாலும் உலகக் கவலையாலும் உங்கள் உள்ளங்கள் மந்தமடையாதபடியும், அந்நாள் எதிர்பாராமல் கண்ணிபோல் உங்களைச் சிக்கவைக்காதபடியும், எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், மண்ணுலகெங்கும் வாழும் அனைவர்மேலும் அந்நாள் வந்து விடியும். நிகழ்ப்போகும் அனைத்திலிருந்தும் தப்பித்துக்கொண்டு மனுமகன்முன் நிற்க நீங்கள் வலிமையுள்ளவர்களாய் இருக்கும்படி, எந்நேரமும் செபித்து விழிப்பாயிருங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

**ஆண்டவர் நித்திய சமாதான இறையரசில் மக்கள் இனத்தார் அனைவரையும் ஒன்று சேர்க்கிறார்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 2:1-5

யூதாவையும் யெருசலேமையும் குறித்து ஆமோஸ் என்பவரின் மகனான இசையாஸ் கண்டகாட்சி:

இறுதி நாட்களில் ஆண்டவரின் கோயில் அமைந்துள்ள மலை, மலைகளுக்கெல்லாம் உயர்ந்ததாய் நாட்டப்படும்; குன்றுகளுக்கெல்லாம் மேலாக உயர்த்தப்படும்; மக்களினங்கள் யாவும் அதை நோக்கி ஓடிவரும்

பல நாட்டு மக்கள் கூடிவந்து, "வாருங்கள், ஆண்டவரின் மலைக்கு ஏறிச் செல்வோம், யாக்கோபின் கடவுளது கோயிலுக்குப் போவோம் தம்முடைய வழிகளை அவர் நமக்குக் கற்பிப்பார்; நாமும் அவர் நெறிகளில் நடப்போம். ஏனெனில், சீயோனிலிருந்தே திருச்சட்டம் வெளியாகும். யெருசலேமிலிருந்தே ஆண்டவர் வாக்குப் புறப்படும்" என்பார்கள்.

மக்களினங்களுக்கிடையில் அவரே தீர்ப்பிடுவார்; பல்வேறு மக்களுக்கு நீதி வழங்குவார்; அவர்களோ தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். நாட்டுக்கு எதிராய் நாடு வாள் எடுக்காது, இனி அவர்களுக்குப் போர்ப் பயிற்சியும் அளிக்கப்படாது.

யாக்கோபின் வீட்டாரே, வாருங்கள்; ஆண்டவரின் ஒளியிலே நாம் நடப்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

முதல் ஆண்டு வாசகத் தொகுப்பின்படி, மேற்கண்டுள்ள வாசகம் திருவருகைக் கால முதல் ஞாயிற்றுக் கிழமையில் வாசிக்கப் பட்டால் பின்வரும் வாசகத்தைப் பயன்படுத்தலாம்.

**மீட்படைந்தவர்களுக்கு மகிமையும் பெருமையுமாயிருக்கும்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 4 : 2 - 6

அந்நாளில், ஆண்டவரின் தளிர் அழகும் மகிமையும் வாய்ந் திருக்கும்; நாட்டில் விளையும் நற்கனி, இஸ்ராயேலில் எஞ்சியோரின் மகிமையும் பெருமையுமாயிருக்கும். சீயோனில் எஞ்சியிருப்பவர்களும், யெருசலேமில் விடப்பட்டவர்களும் புனிதர்கள் என்றே சொல்லப் படுவர்; யெருசலேமில் வாழ்வதற்கெனப் பேரெழுதப்பட்டவன் ஒவ் வொருவனும் புனிதன் எனப்படுவான்.

ஆண்டவர் சீயோன் மகளின் அசுத்தத்தையும், யெருசலேமின் இரத்தக் கறைகளையும், நீதியின் ஆவியாலும் நெருப்பின் ஆவியாலும், அதினின்று கழுவித் தூய்மைப் படுத்துவார்; பின்னர், சீயோன் மலையின் முழுப்பரப்பின் மேலும், ஆங்கே கூடிவரும் சபைகள் மேலும், பகலில் மேகமும் இரவில் புகைப்படலமும், கொழுந்துவிட்டெரியும் நெருப்பின் ஒளிச்சுடரும் ஆண்டவர்தாமே படைத்தருள்வார்; ஏனெனில், அனைத் திற்கும் மேலே ஆண்டவரின் மகிமை கவிகையாகவும் கூடாரமாகவும் இருக்கும்; அது பகலில் வெப்பத்தினின்று காக்கும் நிழலாகவும், மழைக் கும் காற்றுக்கும் தப்பிக்கப் புகலிடமும் பாதுகாப்புமாயிருக்கும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

பதிலுரைப் பாடல்

*சங். 121 : 1 - 2. 4 - 5. 6 - 7. 8 - 9. (பல்லவி; 1 காண்)*

பல்லவி : மகிழ்ச்சியோடு ஆண்டவர்தம் இல்லம் செல்வோம்.

1 ஆண்டவர்தம் இல்லம் செல்வோம்' என்று எனக்குச் சொல்லினர்: நான் பெருமகிழ்ச்சியுற்றேன்.

2 யெருசலேமே, இதோ உன் வாயிலில் வந்து நிற்கின்றோம். பல்லவி

4 ஆண்டவருடைய கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன. இஸ்ராயேலின் சட்டப்படி ஆண்டவரின் திருப்பெயரைப் போற்றச் செல்கின்றன.

5 நீதி இருக்கைகள் அங்கே அமைக்கப்பட்டுள்ளன: தாவீதின் இல்லத்து அரியணைகள் அங்குள்ளன. பல்லவி

6 யெருசலேமில் அமைதி நிலவ வேண்டுங்கள்: "யெருசலேமே,உன்மீது
அன்பு வைத்தவர்களுக்கு எத்துன்பமும் இல்லாதிருப்பதாக.
7 உன் மதில்களுக்குள் அமைதி இருப்பதாக; உன் மாளிகைகள் பாது
காப்புடன் விளங்குவனவாக. பல்லவி
8 'அமைதி உன்னகத்து விளங்குவதாக' என்பேன்: என் சகோதரர், நண்பர்
பொருட்டு அவ்வாறு சொல்வேன்.
9 உனக்கு எல்லா நன்மையும் உண்டாக நான் மன்றாடுவேன்: ஆண்டவராகிய
நம் இறைவனின் இல்லத்தின் பொருட்டு வேண்டுவேன். பல்லவி

அல்லேலூயா சங். 79 : 2-3 காண்

அல்லேலூயா. எங்கள் இறைவனாகிய ஆண்டவரே, எங்களை மீட்க எழுந்து வாரும். உமது இன்முகம்காட்டி எங்களை மீட்டருளும். அல்லேலூயா.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் தரப்படும் அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக67-ம் பக்கத்திலுள்ளவற்றுள் ஒரு வசனத்தைப்பயன்படுத்தலாம்.

## நற்செய்தி வாசகம்

*கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் விண்ணரசில் புகுவர்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8 : 5 - 11

அக்காலத்தில் :

யேசு கப்பர்நகூம் ஊருக்குள் போனபோது, நூற்றுவர் தலைவன் ஒருவன் அவரிடம் வந்து அவரை வேண்டி, "ஆண்டவரே, என் வேலையாள் திமிர்வாதத்தால் வீட்டில்கிடந்து மிகுந்த வேதனைப்படுகிறான்" என்றான். யேசு அவனை நோக்கி, "நான் வந்து அவனைக்குணமாக்குவேன்" என்றார். நூற்றுவர் தலைவன் மறுமொழியாகக் கூறியதாவது: 'ஆண்டவரே, நீர் என் இல்லத்துள் வர நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை சொன்னால் போதும்; என் வேலையாள் குணமடைவான். ஏனெனில், நான் அதிகாரத்திற்கு உட்பட்டவனாயினும், எனக்கு அடியிலும் படைவீரர்கள் உள்ளனர். ஒருவனை நோக்கி, 'போ' என்றால் போகிறான்; வேறொருவனை நோக்கி, 'வா' என்றால் வருகிறான்; என் வேலையாளைப் பார்த்து, 'இதைச் செய்' என்றால் செய்கிறான்.

இதைக் கேட்டு யேசு வியந்து தம்மைப் பின்தொடர்ந்தவர்களை நோக்கி, "இஸ்ராயேலில் யாரிடமும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். கிழக்கிலும்

மேற்கிலுமிருந்து பலர் வந்து விண்ணரசில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுடன் பந்தி அமர்வார்கள்'' என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**ஆண்டவருடைய ஆவி அவர்மேல் தங்கும்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *11 : 1 - 10*

*அந்நாளில்:*

யெஸ்ஸேயின் தண்டிலிருந்து ஒரு தளிர் கிளம்பும், அவன் வேரிலிருந்து ஒரு கிளை தோன்றும்; ஆண்டவருடைய ஆவி அவர்மேல் தங்கும்; ஞானமும் மெய்யுணர்வும் தரும் ஆவி, ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவி, அறிவும் ஆண்டவரைப் பற்றிய அச்சமும் தரும் ஆவி, இந்த ஆவி அவர்மேல் தங்கும். ஆண்டவருக்கு அஞ்சுவதில் அவர் மகிழ்ந்திருப்பார்.

அவர் தம் கண்ணால் கண்டதைக்கொண்டு மட்டும் தீர்ப்பிடமாட்டார்; காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் தீர்ப்புச் செய்யமாட்டார். ஆனால், நீதி பிறழாமல் எளியோரைத் தீர்ப்பிடுவார்; நாட்டின் ஏழைகளுக்கு நடுவுநிலையோடு தீர்ப்புச் சொல்வார்; தமது வாய் மொழியால் உலகத்தைச் சாடுவார்; தமது மூச்சினால் தீயோரை அழிப்பார். நீதி அவருக்கு அரைக் கச்சை, உண்மை அவருக்கு இடைக் கச்சை.

அந்நாளில், செம்மறியோடு ஓநாய் தங்கியிருக்கும்; வெள்ளாட்டுக் குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துறங்கும்; கன்றும் சிங்கமும் ஒன்றாய் மேயும்; சிறு பிள்ளை ஒன்று அவற்றை நடத்தும்; பசுவும் கரடியும் கூடி மேயும்; பசுவின் கன்றும் கரடிக் குட்டியும் ஒன்றாய் இளைப்பாறும்; சிங்கமும் எருதைப்போல வைக்கோல் தின்னும். பால்குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும்; பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையில் தன் கையை விடும்; நம் பரிசுத்த மலையெங்கும் தீங்கு செய்வதோ, கேடு விளைவிப்பதோ யாதுமிராது; ஏனெனில், தண்ணீர் கடலை நிரப்பியிருப்பது போல், ஆண்டவரைப் பற்றிய அறிவு நாட்டை நிரப்பும்.

அந்நாளில், யெஸ்ஸேயின் தளிர் மக்களினங்களுக்கொரு விருதுக் கொடியாய் விளங்கும்; புறவினத்தாரெல்லாம் அவரைத் தேடிச் செல்வர்; அவருடைய இருப்பிடம் மகிமையுள்ளதாய் இருக்கும்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங் 71: 1-2. 7-8. 12-13. 17(பல்லவி: 7 காண்)

அவருடைய நாட்களில் நீதி செழித்தோங்கும்; மிகுந்த சமாதானம் என்றென்றும் நிலைபெறும்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச்செய்யும்; அரச
மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.
2 நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக; உம்முடையவரானஎளியோரை
நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி
7 அவரது ஆட்சியின் நாளில் நீதி செழித்தோங்கும்; நிலவு இருக்கும்
வரையில் சமாதானம் நிலைபெறும்.
8 ஒரு கடலினின்று மறு கடல் வரைக்கும் அவர் அதிகாரம் செலுத்து
வார்: நதியினின்று உலகின் எல்லைவரை அவர் ஆள்வார். பல்லவி
12 தம்மைக் கூவி அழைக்கும் ஏழைக்கு அவர் விடுதலை தருவார்; திக்கற்ற
எளியவனை விடுவிப்பார்.
13 ஏழை எளியவர்மீது இரக்கம் கொள்வார்; ஏழைகளின் வாழ்வை
மலரச் செய்வார். பல்லவி
17 அவரது பெயர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவதாக; கதிரோன்
இருக்கும்வரை அவரது பேரும் புகழும் நிலைப்பதாக. அவர் வழியாய்ப்
பூவுலக இனத்தார் அனைவரும் ஆசி பெறுவர்; மக்கள் இனத்தார்
அனைவரும் அவரைப் பேறுபெற்றவர் எனப் போற்றிப் புகழ்வர். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இதோ, நம் ஆண்டவர் வல்லமையுடன் வருவார்; தம் ஊழியரின் கண்களுக்கு ஒளி தருவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யேசு பரிசுத்த ஆவியினால் அக்களிப்புறுகிறார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 21 - 24

அக்காலத்தில் :

யேசு பரிசுத்த ஆவியினால் அக்களிப்புற்றுக் கூறியதாவது : "தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன். ஆம், தந்தாய், இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக் கையளித்துள்ளார். மகன் யாரென்று

தந்தையன்றி வேறெவரும் அறியார். தந்தை யாரென்று மகனும், மகன் எவனுக்கு வெளிப்படுத்துவாரோ அவனுமன்றி வேறெவரும் அறியார். அவர் தம் சீடர் பக்கம்திரும்பி அவர்களுக்கு மட்டும் கூறியதாவது: "நீங்கள் காண்பதைக் காணும் கண்கள் பேறுபெற்றவை. ஏனெனில், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: இறைவாக்கினர், அரசர் பலர் நீங்கள் காண்பதைக் காண விரும்பியும் காணவில்லை. நீங்கள் கேட்பதைக் கேட்க விரும்பியும் கேட்கவில்லை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

**ஆண்டவர் தம் விருந்துக்கு அழைக்கின்றார்;**
**எல்லா முகங்களினின்றும் கண்ணீரைத் துடைத்துவிடுகின்றார்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம். 25 : 6 - 10a

அந்நாளில் :

சேனைகளின் ஆண்டவர் இந்த மலைமேலே எல்லா மக்களுக்கும் விருந்தொன்று தயாரிப்பார்; அறுசுவை உணவும், சிறந்த பழரசமும் கொழுப்பு நிறைந்த இறைச்சியும், வடிகட்டிச் சுத்தம் செய்த திராட்சை இரசமும் அவ்விருந்திலே பரிமாறப்படும். எல்லா மக்களையும் மூடியிருக்கிற மூடியையும், எல்லா இனத்தவர் மேலிருக்கும் அழுகையின் முக்காட்டையும் இந்த மலையின்மேல் அவர் அகற்றிடுவார். என்றென்றைக்கும் சாவை அழித்து விடுவார், கடவுளாகிய ஆண்டவர் எல்லா முகங்களினின்றும் கண்ணீரைத் துடைத்து விடுவார்; உலகத்தில் எங்குமே இராதபடி தம் மக்களின் நிந்தையை அகற்றி விடுவார்; ஏனெனில் ஆண்டவரே இதைச் சொல்லியிருக்கிறார்.

அந்நாளில் மக்கள் அனைவரும், "இதோ, இவரே நம் கடவுள். இவரையே நாம் எதிர்பார்த்திருந்தோம், இவரே நம்மை மீட்பார், இவரே ஆண்டவர், இவரையே நாம் எதிர்பார்த்திருந்தோம். இவர் தரும் மீட்பைக் குறித்து அகமகிழ்ந்து அக்களிப்போம். ஏனெனில், ஆண்டவருடைய கைவன்மை இம் மலைமேல் அமரும்" என்பார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 22:1-3a. 3b-4. 5. 6. (பல்லவி) 6cd

பல்லவி: **ஆண்டவர் தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்;**
**ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன்.**

1 என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
3 என் களைப்பை ஆற்ற நீர்அருவிக்கு என்னை அழைத்துச் செல் பல்லவி
கின்றார்; எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார்.

தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய
வழியில் செலுத்துகின்றார்.
4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்,
தீமையானதெதற்கும் அஞ்சேன்: ஏனெனில், நீர் என்னோடு
இருக்கின்றீர்; உமது கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் பல்லவி
உள்ளன.

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்
கின்றீர்: என் தலைக்கு எண்ணெய் பூசினீர்; என் கிண்ணம் பல்லவி
நிரம்பி வழிகின்றது.

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும்; என் வாழ்நாளெல்லாம்
என்னைத் தொடரும்: ஆண்டவர்தம் இல்லத்தில் நான் குடியிருப்
பேன்; ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இதோ, ஆண்டவர் தம் மக்களை மீட்க வருவார்; அவரை எதிர் கொள்ள ஆயத்தமாயிருப்போர் பேறு பெற்றோர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*யேசு பலரைக் குணமாக்கினார், அப்பம் பலுகச்செய்தார்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 15 : 29 - 37

அக்காலத்தில்:

யேசு கலிலேயாக் கடற்கரைக்கு வந்து மலையில் ஏறி அங்கு அமர்ந்தார். மக்கள் திரள்திரளாக அணுகி, ஊமை, குருடர், முடவர், ஊனர் இன்னும் பலரையும் கொண்டுவந்து அவரது காலடியில் வைக்க, அவர் அவர்களைக் குணமாக்கினார். எனவே, ஊமைகள் பேசுவதையும், ஊனமுடையோர் குணமடைவதையும், முடவர் நடப்பதையும், குருடர் பார்ப்பதையும் மக்கள் கண்டு வியந்து இஸ்ராயேலின் கடவுளை மகிமைப் படுத்தினர்.

யேசு தம் சீடரை அழைத்து, "இக்கூட்டத்தின்மீது நான் மனமிரங்குகிறேன். இவர்கள் விடாமல் இம் மூன்று நாட்களாக என்னுடன் இருக்கிறார்கள். இவர்களுக்கு உணவு ஒன்றுமில்லையே. இவர்களைப் பட்டினியாக அனுப்பிவிட எனக்கு விருப்பமில்லை. அனுப்பினால், வழியில் சோர்ந்து விழக்கூடும்" என்றார்.

சீடரோ, "இவ்வளவு பெரிய கூட்டத்திற்கு வயிறார உணவளிக்க இப்பாழ்வெளியில் அப்பங்கள் நமக்கு எங்கிருந்து கிடைக்கும்?" என்றனர்.

யேசு, உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன?" என்று அவர்களைக் கேட்க, அவர்கள், "ஏழு இருக்கின்றன. சில சிறு மீன்களும் உள்ளன" என்றனர்.

அப்போது அவர் தரையில் பந்தியமரக் கூட்டத்துக்குக் கட்டளையிட்டு, ஏழு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து நன்றி கூறி, பிட்டுத் தம் சீடரிடம் கொடுத்தார். அவர்கள் மக்களுக்குக் கொடுத்தனர். எல்லாரும் வயிறார உண்டனர். மீதியான துண்டுகளை ஏழு கூடை நிறைய எடுத்தனர்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

**உண்மையைக் கடைப்பிடிக்கும் நீதியுள்ள மக்களினம் உள்ளே வரட்டும்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 26 : 1 - 6

"நமக்கு, சீயோன் என்னும் வலிமையான ஒரு நகரமுண்டு; நம்மைக் காக்க அதில் மதிலும் அரணும் அமைத்தார். வாயில்களைத் திறந்து விடுங்கள்; உண்மையைக் கடைப்பிடிக்கும் நீதியுள்ள மக்களினம் உள்ளே வரட்டும். மன உறுதியுள்ளவனை நீர் சமாதானத்தில் உறுதிப்படுத்துகிறீர்; ஏனெனில், உம்மீது அவன் நம்பிக்கை வைக்கிறான்.

ஆண்டவர் பேரில் என்றென்றும் நம்பிக்கை வையுங்கள்; ஏனெனில், ஆண்டவர் என்றென்றும் நிலைத்திருக்கும் பாறை! உயர்வான இடத்தில் வாழ்ந்தவர்களைத் தாழ்த்தினார், மேலோங்கியிருந்த கோட்டையைத் தகர்த்தார்; தரைமட்டமாய் ஆகும்படி அதனைத் தகர்த்தார்; புழுதியில் அதை வீழ்த்தினார். காலால் அது மிதிபடும்; ஏழையின் கால்களும் எளியவர்களின் அடிகளும் அதனை மிதிக்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 117: 1.8-9. 19-21. 25-27a (பல்லவி : 26 a)

பல்லவி: ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசிபெற்றவர்.
அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் : ஏனெனில், அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.

8 மனிதன்மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்.

9 தலைவர்கள்மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம். பல்லவி

19 நீதிமான்கள் நுழையும் வாயில்களைத் திறந்து விடுங்கள்; உள் நுழைந்து நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்.

ஆண்டவரது வாயில் இது; இது வழியாய் நீதிமான்களே நுழைவர்.
என் மன்றாட்டை நீர் கேட்டதால் நான் உமக்குநன்றி செலுத்துவேன்.
எனக்கு நீர் மீட்பரானதால் உமக்கு நன்றி செலுத்துவேன். பல்லவி
25 ஆண்டவரே, என்னை மீட்டருளும்; ஆண்டவரே, வெற்றியைத் தாரும்.
26 ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்; ஆண்டவரது இல்லத்
தினின்று உங்களுக்கு ஆசி கூறுகிறோம்.
27 ஆண்டவராகிய இறைவனே, நம்மீது ஒளி வீசினார். பல்லவி

அல்லேலூயா இசை: 55:6

அல்லேலூயா. ஆண்டவரைக் கண்டடையக் கூடியபோதே, அவரைத் தேடுங்கள்,

அவர் அண்மையில் இருக்கும்போதே, அவரைக் கூவியழையுங்கள். அல்லேலூயா,

## நற்செய்தி வாசகம்

**தந்தையின் விருப்பப்படி நடப்பவனே விண்ணரசு சேருவான்**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:21. 24-27
அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேரமாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே சேருவான்.

ஆகவே, நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடப்பவன் எவனும் கற்பாறையின்மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது. புயலடித்து அவ்வீட்டின்மேல் மோதியது. ஆனால், அது விழவில்லை. ஏனென்றால், கற்பாறையின்மேல் ஊன்றியிருந்தது.

நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடக்காதவன் எவனும் மணல்மீது தன் வீட்டைக் கட்டிய மூடனுக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின்மேல் மோதியது; அது விழுந்தது. பெரிது அதன் அழிவு!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

*அந்நாளில், குருடரின் கண்கள் பார்வை பெறும்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 29 : 17 - 24

இறைவனுகிய ஆண்டவர் கூறுவதாவது:

"இன்னும் கொஞ்ச நாளில், குறுகிய காலத்தில், லீபான் மலை வளமான வயலாகவும், வளமான வயல் காடாகவும் மாறிப்போகுமன்றோ? அந்நாளில், செவிடர், சுவடியின் வாக்கியங்களைக் கேட்பர்; குருடரின் கண்கள் காரிருளிலிருந்து விடுதலையாகிப் பார்வை பெறும். சாந்த முள்ளோர் ஆண்டவரிடம் புதிய மகிழ்ச்சியைப் பெறுவர்; எளியோர் இஸ்ராயேலின் பரிசுத்தரிடம் அகமகிழ்ந்து அக்களிப்பர்; ஏனெனில், கொடியவன் மாய்வான், ஏளனம் செய்தவன் ஒழிவான்; தீமை செய்வதிலேயே சிந்தை செலுத்தியவர்கள் வெட்டுண்டு அழிந்து போவார்கள்; தங்கள் வார்த்தையால் மனிதரைக் குற்றத்துக்குள்ளாக்குபவர்களும் ஊர்ச்சபையில் நீதி வழங்குபவனை இடறச் செய்பவர்களும் குற்றமற்றவனின் வழக்கைக் காரணமின்றித் தள்ளச் செய்பவர்களும் பூமியிலிருந்து களைந்தெறியப்படுவர்."

ஆதலால், ஆபிரகாமை மீட்டருளிய ஆண்டவர், யாக்கோபின் வீட்டாரைக் குறித்துக் கூறுகிறுர்: "யாக்கோபு இனி நாணமடையான், அவன் முகம் இனி வெட்கத்தால் வெளிறுது. நம் கைகளின் வேலைப் பாட்டைத் தன் மக்கள் நடுவில் காணும்போது, நமது பெயரைப் பரிசுத்தமானதெனப் போற்றுவான்; யாக்கோபின் பரிசுத்தரை, அவர்கள் பரிசுத்தரெனப் போற்றுவர். இஸ்ராயேலின் கடவுளுக்கு அஞ்சியிருப்பர். உள்ளத்துணர்வில் தவறுகிறவர்கள் உண்மையறிவைக் கண்டு பிடிப்பார்கள்; முணுமுணுத்துப் பேசுகிறவர்கள், போதனையை ஏற்றுக் கொள்வார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 26 : 1. 4.-4. 13-14 (பல்லவி: 1a)

பல்லவி : ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு: நான் யாருக்கு அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான் நடுங்கவேண்டும்? பல்லவி

4 ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே, நான் விரும்புவதும் ஒன்றே: ஆண்டவருடைய இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும்; ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்க வேண்டும்; அவரது ஆலயத்தை நான் பார்க்கவேண்டும். பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில், ஆண்டவருடைய நலன்களைக் காண்பேனென நம்புகிறேன்.

14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு: உன் உள்ளம் திடம் கொள்வதாக, ஆண்டவரை எதிர்பார்த்திரு. பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இதோ, நம் ஆண்டவர் வல்லமையுடன் வருவார்; தம் ஊழியரின் கண்களுக்கு ஒளிதருவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யேசுவை விசுவசித்து இருகுருடர் பார்வை பெறுகின்றனர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9:27-31

அக்காலத்தில்:

யேசு வழியே போகையில், இரு குருடர் அவரைப் பின்தொடர்ந்து, "தாவீதின் மகனே, எங்கள்மேல் இரக்கம்வையும்" என்று கூவினர். அவர் வீடு வந்து சேர்ந்ததும், குருடர் அவரிடம் வர, யேசு அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு நான் இதைச் செய்ய முடியும் என விசுவசிக்கிறீர்களா?" என்றார். "ஆம், ஆண்டவரே" என்றனர். பின் அவர், அவர்களுடைய கண்களைத் தொட்டு, "உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்கு ஆகட்டும்" என்றார். அவர்களுடைய கண்கள் திறந்தன. "இது யாருக்கும் தெரியாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்" என்று அவர்களுக்குக் கண்டிப்பாய்ச் சொன்னார். அவர்களோ வெளியே போய் அவரைப் பற்றி நாடெங்கும் பேசலாயினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

*உங்கள் கூக்குரலுக்குச் செவிசாய்த்து இரக்கம் காட்டுவார்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்
30 : 19 - 21, 23 - 26

இஸ்ராயேலின் பரிசுத்தராம் இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது:

"யெருசலேமில் குடியிருக்கும் சீயோன் குடிகளே, இனிமேல் நீங்கள் ஒருபோதும் அழமாட்டீர்கள்; அவர் உங்கள் மேல் திண்ணமாய் இரக்கம் காட்டுவார்; உங்கள் கூக்குரலுக்கு உடனே செவிசாய்த்து அருள் செய்வார்.

ஆண்டவர் உங்களுக்குத் துன்பம் என்கிற அப்பத்தையும், வேதனை என்கிற நீரையும் கொடுத்தாலும், உங்களுடைய போதகர் இனி உங்களை விட்டு ஒருபோதும் விலக மாட்டார்; உங்கள் கண்முன்னாலேயே உங்கள் போதகர் இருப்பார். நீங்கள் எப்பக்கம் போனாலும், உங்களுக்குப் பின்னாலிருந்து, 'இதுதான் வழி. இதிலேயே நடந்துபோங்கள்' என்னும் வார்த்தையைக் கேட்பீர்கள்.

நீங்கள் நிலத்தில் விதை தெளித்துள்ள இடங்களிலெல்லாம், ஆண்டவர் உங்கள் விதைகளுக்கு மழை தருவார்; நிலம் மிகுதியான விளைவைத் தரச் செய்வார்; உணவுக்குப் பஞ்சமே இராது. அந்நாளில் ஆடுகள் உங்கள் மேய்ச்சல் நிலத்தில் தாராளமாய் மேயும்; உங்கள் நிலத்தை உழுகின்ற காளைகளும் கழுதைகளும் களத்தில் தூற்றப்பட்டாற் போலக் கலந்து கிடக்கும் தானியங்களையெல்லாம் சாப்பிடும்.

கோட்டைகள் இடிந்து விழுந்த பின்னர், பகைவர்கள் மாய்ந்து விழும் அந்த நாளில், உயர்ந்த மலை ஒவ்வொன்றிலும், ஓங்கிய குன்றுகள் அனைத்திலும் நீரோடைகள் வழிந்தோடும். ஆண்டவர் தம் மக்களின் காயங்களைக் கட்டி, அடிகளால் உண்டான புண்களை ஆற்றும்போது நிலாவின் ஒளி கதிரவனின் ஒளியைப்போலும், கதிரவனின் ஒளி ஏழு நாட்களின் ஒளியெல்லாம் ஒன்று திரண்டாற்போல் ஏழு மடங்காகவும் இருக்கும்."

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 146: 1-2. 3-4. 5-6 (பல்லவி: இசை. 30:18)

பல்லவி: ஆண்டவருக்காகக் காத்திருப்பவர் பேறுபெற்றோர்.
அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரைப் போற்றுங்கள்; ஏனெனில், அவர் நல்லவர். நம் இறைவனுக்குப் புகழ் பாடுங்கள்; ஏனெனில், அவர் இனிமையுள்ளவர்; அவரைப் புகழ்வது தகுமே.
2 ஆண்டவர் யெருசலேமை அமைக்கிறார்; சிதறுண்ட இஸ்ராயேலை ஒன்றுசேர்க்கிறார். பல்லவி
3 உள்ளம் உடைந்தவர்களைக் குணமாக்குகிறார்; அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.
4 விண்மீன்களின் எண்ணிக்கையை வரையறுக்கிறார்: ஒவ்வொன்றையும் பெயரிட்டு அழைக்கிறார். பல்லவி
5 நம் ஆண்டவர் மிக உயர்ந்தவர், வல்லமை மிக்கவர்; அவருடைய ஞானத்துக்கு அளவேயில்லை.
6 தாழ்ந்தவர்களை ஆண்டவர் தூக்கி விடுகிறார்: கெட்டவர்களைத் தரை மட்டும் தாழ்த்தி விடுகிறார். பல்லவி

அல்லேலூயா இசை. 33:22

அல்லேலூயா. ஆண்டவர் நம்முடைய நீதிபதி, நமக்குச் சட்டம் இயற்றுகிறவர், நம் அரசர்; அவரே நம்மை மீட்பார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மக்கட்கூட்டத்தைக் கண்டு அவர்கள் மேல் மனமிரங்கினர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 35-10:1. 6-8

அக்காலத்தில்:

யேசு, நகரங்கள் ஊர்கள் எல்லாம் சுற்றி வந்து, அவர்களுடைய செபக் கூடங்களில் போதித்து, விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து நோய் பிணியெல்லாம் குணமாக்கி வந்தார்.

அவர் மக்கட் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் ஆயனில்லா ஆடுகள் போல் தவித்துக் கிடந்தமையால், அவர்கள் மேல் மனமிரங்கினர். அப்

பொழுது அவர் தம் சீடர்களை நோக்கி, "அறுவடை மிகுதி, வேலையாட்களோ குறைவு; ஆதலால், தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்" என்றார்.

"அவர் தம் சீடர் பன்னிருவரையும் அழைத்து, நோய் பிணியெல்லாம் குணப்படுத்தவும், அசுத்த ஆவிகளை ஓட்டவும் அவற்றின்மேல் அதிகாரம் அவர்களுக்கு அளித்தார். இப்பன்னிருவரையும் போக அனுப்புகையில் கற்பித்ததாவது:

"இழந்துபோன இஸ்ராயேல் குலத்து ஆடுகளிடமே செல்லுங்கள். சென்று, விண்ணரசு நெருங்கியுள்ளது என்று அறிவியுங்கள். நோயாளிகளைக் குணமாக்குங்கள், இறந்தோரை உயிர்ப்பியுங்கள், தொழுநோயுற்றோரைச் சுகமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள்; இலவசமாய்ப் பெற்றுக் கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திருவருகைக் காலம் - 2ஆம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***நீதி பிறழாமல் எளியோரைத் தீர்ப்பிடுவார்***

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *11: 1-10*

*அந்நாளில்:*

யெஸ்ஸேயின் தண்டிலிருந்து ஒரு தளிர் கிளம்பும், அவன் வேரிலிருந்து ஒரு கிளை தோன்றும்; ஆண்டவருடைய ஆவி அவர்மேல் தங்கும். ஞானமும் மெய்யுணர்வும் தரும் ஆவி, ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவி, அறிவும் ஆண்டவரைப்பற்றிய அச்சமும் தரும் ஆவி, இந்த ஆவி அவர்மேல் தங்கும், ஆண்டவருக்கு அஞ்சுவதில் அவர் மகிழ்ந்திருப்பார்.

அவர் தம் கண்ணால் கண்டதைக் கொண்டு மட்டும் தீர்ப்பிட மாட்டார். காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் தீர்ப்புச் செய்ய மாட்டார். ஆனால் நீதி பிறழாமல் எளியோரைத் தீர்ப்பிடுவார்; நாட்டின் ஏழைகளுக்கு நடுவு நிலையோடு தீர்ப்புச் சொல்வார்; தமது வாய் மொழியால் உலகத்தைச் சாடுவார்; தமது மூச்சினால் தீயோரை அழிப்பார். நீதி அவருக்கு அரைக் கச்சை, உண்மை அவருக்கு இடைக் கச்சை.

அந்நாளில், செம்மறியோடு ஓநாய் தங்கியிருக்கும், வெள்ளாட்டுக குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துறங்கும், கன்றும் சிங்கமும் ஒன்றாய் மேயும், சிறு பிள்ளை ஒன்று அவற்றை நடத்தும். பசுவின் கன்றும் கரடிக் குட்டியும் ஒன்றாய் இளைப்பாறும், சிங்கமும் எருதைப்போல வைக்கோல் தின்னும். பால்குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையில் தன் கையை விடும், நம் பரிசுத்த மலையெங்கும் தீங்கு செய்வதோ, கேடு விளைவிப்பதோ யாதுமிராது, ஏனெனில் தண்ணீர் கடலை நிரப்பியிருப்பதுபோல், ஆண்டவரைப்பற்றிய அறிவு நாட்டை நிரப்பும்.

அந்நாளில், யெஸ்ஸேயின் தளிர் மக்களினங்களுக்கொரு விருதுக் கொடியாய் விளங்கும், புறவினத்தாரெல்லாம் அவரைத் தேடிச் செல்வர், அவருடைய இருப்பிடம் மகிமையுள்ளதாய் இருக்கும்.

இது ஆண்டவருடைய அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 71:1-2. 7-8. 12-13. 17 (பல்லவி 7 காண்)*

பல்லவி : அவருடைய நாட்களில் நீதி செழித்தோங்கும்,
மிகுந்த சமாதானம் என்றென்றும் நிலைபெறும்.

இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச் செய்யும்.
அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.

நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக.
உம்முடையவரான எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

அவரது ஆட்சியின் நாளில் நீதி செழித் தோங்கும்;
நிலவு இருக்கும் வரையில் சமாதானம் நிலைபெறும்.

ஒரு கடலினின்று மறு கடல் வரைக்கும் அவர் அதிகாரம் செலுத்துவார்:
நதியினின்று உலகின் எல்லை வரை அவர் ஆள்வார். பல்லவி

தம்மைக் கூவி அழைக்கும் ஏழைக்கும் அவர் விடுதலை தருவார்.
திக்கற்ற எளியவனை விடுவிப்பார்.

ஏழை எளியவர் மீது இரக்கம் கொள்வார்.
ஏழைகளின் வாழ்வை மலரச் செய்வார். பல்லவி

அவரது பெயர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவதாக.
கதிரோன் இருக்கும்வரை அவரது பேரும் புகழும் நிலைப்பதாக.
அவர் வழியாய்ப் பூவுலக இனத்தார் அனைவரும் ஆசி பெறுவர்.
மக்கள் இனத்தார் அனைவரும் அவரைப் பேறு பெற்றவர் எனப் போற்றிப் புகழ்வர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**மக்கள் அனைவரையும் கிறிஸ்து மீட்கிறார்.**

அப்போஸ்தரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 15 : 4 - 9

சகோதரர்களே :

முற்காலத்தில் எழுதப்பட்ட மறைநூல் வாக்குகள் நமக்குப் போதனையாகவே எழுதப்பட்டன; மறைநூல்கள் தரும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நமக்கு நம்பிக்கை உண்டாக வேண்டும் என்பதே அவற்றின் நோக்கம். நீங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு, நம்ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவரை ஒருவாய்ப்பட

மகிமைப்படுத்துமாறு, கிறிஸ்து யேசுவின் முன்மாதிரிக்கேற்ப ஒரே உள்ளத்தினராய் இருக்கும்படி, பொறுமைக்கும் ஆறுதலுக்கும் ஊற்றாகிய கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக.

ஆகையால், கிறிஸ்து உங்களை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் கடவுளின் மகிமைக்காக ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளுங்கள். முன்னோர்க்குச் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கடவுள் உண்மை உள்ளவர் எனக்காட்டவும்; புறவினத்தார் கடவுளுடைய இரக்கத்தைப் பார்த்து அவரை மகிமைப்படுத்தவுமே கிறிஸ்து விருத்தசேதன முள்ளோருக்குப் பணியாளரானார். இதுவே என் துணிபு. இப்புறவினத்தாரைக் குறித்து மறைநூலிலும், "ஆண்டவரே, புறவினத்தார் நடுவில் உம்மைப் புகழ்வேன் உம்முடைய பெயருக்குப் பண் பாடுவேன்" என எழுதியுள்ளது.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

*அல்லேலூயா:* லூக். 3:4.6

அல்லேலூயா. ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவர் தம் பாதைகளைச் செம்மைப் படுத்துங்கள்; மனிதர் எல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனந்திரும்புங்கள்; விண்ணரசு நெருங்கிவிட்டது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3:1-12

அக்காலத்திலே, ஸ்நாபக அருளப்பர் யூதேயாவின் பாலைவனத்தில் தோன்றி, 'மனந்திரும்புங்கள், ஏனெனில், விண்ணரசு நெருங்கிவிட்டது' என்று அறிவித்து வந்தார். இவரைப்பற்றியே,

> "ஆண்டவரது வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவர் தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள். எனப் பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கிறது"

என்று இசையாஸ் இறைவாக்கினர் கூறியுள்ளார். இந்த அருளப்பர் உடுத்தியது, ஒட்டக மயிராடை; இடையில் கட்டியது, வார்க்கச்சை; உண்டது, வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும். யெருசலேமிலும், யூதேயா முழுவதிலும், யோர்தானை அடுத்த நாடெங்கும் வாழ்ந்தோர் அவரிடம் போய்த் தங்கள் பாவங்களை வெளியிட்டு, யோர்தான் ஆற்றில் அவரிடம் ஞானஸ்நானம் பெற்றுவந்தனர். பரிசேயர், சதுசேயருள் பலர் தம்மிடம் ஞானஸ்நானம் பெறவருவதைக் கண்டு, அவர்களைப் பார்த்து,

"விரியன் பாம்புக் குட்டிகளே, வரப்போகும் சினத்துக்குத் தப்பித்துக்கொள்ள, உங்களுக்குச் சொல்லிக்கொடுத்தவன் யார்? எனவே, மனந்திரும்பியவர்களென்று செயலால் காட்டுங்கள். 'ஆபிரகாமே எங்களுக்குத்

தந்தை' என்று சொல்லிக்கொள்ளத் துணியவேண்டாம். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்கு மக்களை எழுப்பக் கடவுள் வல்லவர் என்று உங்களுக்குக் கூறுகின்றேன். ஏற்கெனவே அடிமரத்தில் கோடரி வைத்தாயிற்று; நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும்.

நீங்கள் மனந்திரும்பியதைக் காட்ட உங்களுக்கு நான் நீரால்ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருபவரோ என்னைவிட வல்லவர். அவருடையமிதியடிகளைத் தூக்கிச்செல்ல நான் தகுதியற்றவன். அவர் பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்; அவர், சுளகைக் கையில் கொண்டு தம் களத்தைத் துப்புரவாக்கிக் கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியா நெருப்பில் சுட்டெரிப்பார்'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவர் வழியை ஆயத்தப் படுத்துங்கள்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 40:1-5. 9-11

"ஆறுதல் அடையுங்கள், எம் மக்களே, ஆறுதல் அடையுங்கள்,'' என்கிறார் உங்கள் கடவுள். யெருசலேமின் இதயத்தோடு உரையாடி உரத்த குரலில் அதற்குச் சொல்லுங்கள்: "அதனுடைய அடிமை வேலை முடிந்து போயிற்று; அதன் அக்கிரமம் மன்னிக்கப்பட்டது; ஆண்டவரின் கையிலிருந்து தன் பாவங்கள் அனைத்திற்காகவும் அது இரு மடங்கு தண்டனை பெற்றுக்கொண்டது.''

கூக்குரல் ஒன்று ஒலிக்கிறது: "பாலை நிலத்தில் ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள். பாழ்வெளியில் நம் கடவுளின் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள், பள்ளத் தாக்குகள் எல்லாம் நிரவப்படுக; மலை, குன்று யாவும் தாழ்த்தப்படுக; கோணலானவை நேராக்கப்படுக; கரடு முரடானவை சமமான வழிகள் ஆகுக! அப்போது ஆண்டவரின் மகிமை வெளிப்படுத்தப்படும். மனிதர் அனைவரும் ஒருங்கே அதைக் காண்பர்; ஏனெனில், ஆண்டவர் தாமே திருவாய் மலர்ந்தார்.''

சீயோனுக்கு நற்செய்தி அறிவிப்பவனே, உயர்ந்த மலைமேல் நீ ஏறிப் போய்நில்; யெருசலெமுக்கு நற்செய்தி அறிவிப்பவனே, உன் குரலையெழுப்பிமுழங்கு; அஞ்சாமல் உன் குரலையுயர்த்தி, "இதோ உங்கள் கடவுள்,

இதோ ஆண்டவராகிய கடவுள் வல்லமையோடு வரப்போகிறுர்; அவருடைய கை செங்கோல் செலுத்தும்; இதோ, அவருடைய வெற்றிப் பரிசு அவரோடு இருக்கிறது. அவர் முன்னுல் அவருடைய வெற்றிச் சின்னங்கள் வருகின்றன. ஆயனைப்போல் அவர் தமது மந்தையை மேய்ப்பார், ஆட்டுக் குட்டிகளைத் தம் கையால் கூட்டிச் சேர்ப்பார். அவற்றை அன்போடு எடுத்து அரவணைப்பார், சினையாடுகளை இளைப்பாறு மிடத்திற்குக் கூட்டிச் செல்வார்,'' என்று யூதாவின் பட்டணங்களுக்கு அறிவிப்பாயாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 84: 8ac-9. 10-11. 12-13 (பல்லவி:7)

பல்லவி: ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்;
உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன்:
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும் அவர் கூறுவது சமாதானமே.
அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில்உள்ளது:
அதனுல் நம் நாட்டில் மாட்சிமை குடிகொள்ளும். பல்லவி

இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்:
நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
உண்மை பூமியினின்று முளைத்தெழும்:
நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும். பல்லவி

ஏனெனில், நன்மையானதை ஆண்டவர் அருள்வார்:
நம் நிலமும் தன் பலனைத் தரும்.
நீதி அவருக்கு முன்செல்லும்;
மீட்பும் அவரைப் பின்தொடரும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**புதிய வானமும் புதிய வையமும் வருமென்று காத்திருக்கிறோம்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
இரண்டாம் திரு முகத்திலிருந்து வாசகம். 3:8-14

அன்பிற்குரியவர்களே, இந்த ஒன்றை நீங்கள் மறக்கவேண்டாம்: ஆண்டவருக்கு ஒருநாள் ஆயிரம் ஆண்டுகள்போல்! ஆயிரம் ஆண்டுகள் ஒருநாள்போல்! ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலம்

தாழ்த்துவதாகச் சிலருக்குத் தோன்றுகிறது; ஆனால், அவர் காலந்தாழ்த்துவதில்லை; உங்கள்பொருட்டுப் பொறுமையாயிருக்கிறார், ஒருவரும் அழிவுறக்கூடாது, எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்றிருக்கிறார். ஆனால், ஆண்டவர்து நாள் வந்தே தீரும்; அது திருடனைப்போல் வரும். அப்பொழுது வானம் பேரிடி முழக்கத்துடன் மறைந்தொழியும், ஐம்பெரும் பூதங்கள் நெருப்பால் வெந்துஉருகிப்போகும். மண்ணுலகும், அதில் வாழ்ந்தோரின் செயல்களும் வெளியாக்கப்படும்.

இவை அனைத்தும் இவ்வாறு மறைந்தொழிந்துபோகுமாதலின், ஆண்டவருடைய நாளின் வருகைக்காகக் காத்திருந்து, அது விரைவில் வர உழைக்கும் நீங்கள், பரிசுத்த நடத்தையிலும் இறைப்பற்றிலும் எவ்வளவோ சிறந்து விளங்கவேண்டும். அந்நாள் வரும்போது வானங்கள் நெருப்புக்கிரையாகி மறைந்தொழியும், ஐம்பெரும் பூதங்கள் வெந்து உருகிப் போகும். நாமோ, நீதி குடிகொள்ளும் புதிய வானமும் புதிய வையமும் அவர் வாக்களித்தபடியே வருமென்று காத்திருக்கிறோம்.

ஆகவே, அன்புக்குரியவர்களே, இவற்றிற்காகக் காத்திருக்கும் உங்களை அவர் மாசுமறுவற்றவர்களாய், அமைதியான நிலையில் காணும்படி உழைத்துவாருங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா ... லூக். 3:4.6

ஆண்டவர்வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவர்தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்; மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அவர்தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்.*

✣ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:1-8

கடவுளின் மகனாகிய யேசு கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியின் தொடக்கம்.

"இதோ, என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவர் உம் வழியைச் சீர்ப்படுத்துவார். 'ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவர்தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்' எனப் பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கிறது" என்று இசையாஸ் இறைவாக்கினர் எழுதியபடி, ஸ்நாபக அருளப்பர் பாலைவனத்தில் தோன்றி, பாவமன்னிப்படைய மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று அறிவித்துக் கொண்டிருந்தார். யூதேயா நாடு முழுவதும்

யெருசலேம் நகரினர் அனைவரும் அவரிடம் போய்த் தங்கள் பாவங்களை வெளியிட்டு, யோர்தான் ஆற்றில் அவரிடம் ஞானஸ்நானம் பெற்று வந்தனர்.

அருளப்பர் ஒட்டக மயிராடையும், இடையில் வார்க்கச்சையும் அணிந்திருந்தார்; வெட்டுக் கிளியும் காட்டுத் தேனும் உண்டு வந்தார். அவர் அறிவித்ததாவது: "என்னைவிட வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார்; குனிந்து அவருடைய மிதியடிவாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன். நான் உங்களுக்கு நீரால் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவரோ உங்களுக்குப் பரிசுத்த ஆவியால் ஞானஸ் நானம் கொடுப்பார்."

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## ஞாயிறு - 3ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

*கடவுள் உன்னுடையஒளியினைக்காட்டிடுவார்.*

இறைவாக்கினர் பாரூக் ஆகமத்திலிருந்து வாசகம் 5: 1- 9

யெருசலமே, உன் துக்க உடைகளையும், துயரக் கோலத்தையும் உரிந்து போடு; கடவுள் உனக்கு அருளும் முடிவில்லா மகிமை உன்னை அழகு செய்யட்டும். ஆண்டவர் உனக்கு அருளும் நீதியை ஆடையாய் உடுத்திக்கொள்; நித்தியமானவரின் மகிமையை மணி முடியாய் அணிந்து கொள். உலகமெலாம் காணும்படி கடவுள் உன்னுடைய ஒளியினைக் காட்டிடுவார். எந்நாளும் நிலைக்கும்படி கடவுள் உனக்கு இடும் பெயர்கள்: "நீதியின் அமைதி, இறைப்பற்றின் மகிமை."

யெருசலமே, எழுந்திரு; உயரத்தில் எழுந்து நில்; கிழக்குத் திசையை நோக்கிப் பார். மேற்றிசை முதல் கீழ்த்திசை வரையில் இருந்த உன் குழந்தைகள் பரிசுத்தரின் வார்த்தையால் ஒன்றாய்க் கூடிக் கடவுள் தங்களை நினைவு கூர்ந்ததற்காக மகிழ்ந்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் உன்னை விட்டு அகலும்பொழுது, தங்கள் பகைவர்களால் கால்நடையாய் நடத்திச் செல்லப்பட்டார்கள். ஆனால், கடவுள் அவர்களை உன்னிடம் திரும்பச் செய்யும்பொழுது, அரசுக்குரிய மக்களைப்போல மகிமையோடு கொண்டுவரப்படுவார்கள். ஏனெனில், கடவுளின் மகிமையோடு இஸ்ராயேல் தீங்கற்ற வழியில் தாராளமாய் நடக்கும்படி, உயர்ந்த மலைகளையும் அழியாத குன்றுகளையும் தாழ்த்திப் பள்ளத்தாக்குகளை நிரப்பிச் சம நிலமாக்கும்படி கடவுள் கட்டளை கொடுத்தார்.

காடுகளும் நறுமணம் வீசும் மரங்களும் கடவுளின் கட்டளையால், இஸ்ராயேலுக்கு நிழலைத் தந்தன; ஏனெனில், கடவுள் தம் மகிமையின் வெளிச்சத்தில் இஸ்ராயேலை அகமகிழ்ச்சியோடும், தம்மிடத்திலிருந்து வெளிப்படும் இரக்கத்தோடும் நீதியோடும் கூட்டிக்கொண்டுவந்து சேர்ப்பார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 125; 1-2ab. 2cd-3. 4-5.6 (பல்லவி: 3)*

பல்லவி : ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்;
அதனால் பெருமகிழ்ச்சி கொண்டோம்.

1 ஆண்டவர் சீயோனின் அடிமைகளை மீட்டு வந்தார்.
அது நமக்குக் கனவு போல் இருந்தது.
2 அப்போது நம் உதடுகளில் சிரிப்பு ஒலித்தது.
நாவில் மகிழ்ச்சிக் கீதமும் எழும்பியது. பல்லவி

'ஆண்டவர் அவர்களுக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்'' என்று
அப்போது மக்களினத்தார் பேசிக் கொண்டனர்.
3 ஆம், ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்,
அதனால் பெருமகிழ்ச்சி கொண்டோம். பல்லவி

4 ஆண்டவரே, பாலைநிலத்தில் வெள்ளத்தைத் திருப்பி விடுவதுபோல்
எங்கள் அடிமைநிலையை மாற்றிவிடும்.
5 கண்ணீரோடு விதை விதைப்பவர்கள்,
பெருமகிழ்ச்சியோடு அறுவடை செய்வார்கள். பல்லவி

6 விதை தெளிக்கச் செல்லும்போது,
அழுகையோடு செல்கிறார்கள்;
அறுத்த அரிகளைச் சுமந்து வரும்போது
பெருமகிழ்ச்சியோடு வருவார்கள். பல்லவி

## இரண்டாம் வாசகம்.

**கிறிஸ்துவின் நாளை எதிர்நோக்கிக் குற்ற மற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்து வாருங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

*1:4-6.8-11*

சகோதரர்களே :

உங்கள் அனைவருக்காகவும் நான் மன்றாடும் பொழுதெல்லாம், தொடக்கத்திலிருந்தே இன்றுவரை நீங்கள் நற்செய்தித் திருப்பணியில்

பங்கேற்று வருவதை நினைத்து, மகிழ்ச்சியுடன் மன்றாடுகிறேன். உங்களில் சிறந்ததொரு வேலையைத் தொடங்கியவர், யேசு கிறிஸ்துவின் நாள்வரை அதைத்தொடர்ந்து செய்து நிறைவு பெறச் செய்வார் என நான் நம்பியிருக்கிறேன்.

கிறிஸ்து யேசுவுக்குரிய அதே பரிவுள்ளத்தோடு உங்கள் எல்லோர் மீதும் எவ்வளவோ ஏக்கமாயிருக்கிறேன்; இதற்குக் கடவுளே சாட்சி. எனவே, உங்கள் அன்பு மேன்மேலும் வளர்ந்து, மேலானவற்றையே பகுத்தறியச் செய்யும் அறிவையும் உள்ளுணர்வு அனைத்தையும் உங்களுக்குத் தரவேண்டும் என்பதே என் செபம். இவ்வாறு யேசு கிறிஸ்துவின்வழியாய் நாம் பெறும் ஏற்புடைய வாழ்வின் பயனால் நிரப்பப்பட்டு, கிறிஸ்துவின் நாளை எதிர்நோக்கி, கடவுளின் மகிமைக்காகவும் புகழுக்காகவும் நீங்கள் குற்றமற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்து வரவேண்டுமென்றும் மன்றாடுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* லூக். 3:4.6

அல்லேலூயா. ஆண்டவர்வழியை ஆயத்தப்படுத்துங்கள்,
அவர்தம் பாதைகளைச் செம்மைப் படுத்துங்கள்;
மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர்.***

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3:1-6

திபேரியு செசார் ஆட்சியேற்ற பதினைந்தாம் ஆண்டில், போன்சியு பிலாத்து யூதேயாவின் ஆளுநராகவும், கலிலேயா நாட்டுக்கு ஏரோதும் இத்துரேயா - திராக்கோனித்து நாட்டுக்கு அவன்சகோதரன் பிலிப்பும் அபிலேனே நாட்டுக்கு லிசானியாவும் சிற்றரசர்களாகவும், அன்னாஸ், கைப்பாஸ் தலைமைக்குருக்களாகவும் இருக்க, சக்கரியாசின் மகனை அருளப்பருக்குப் பாலைவனத்தில் கடவுளின் வாக்கு அருளப்பட்டது.

பாவமன்னிப்படைய, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று, அவர் யோர்தான் ஆற்றை அடுத்த நாடெல்லாம் சுற்றி அறிவித்தார்; இதைப்பற்றி இசையாஸ் இறைவாக்கினரின் திருச்சொல் ஆகமத்தில் எழுதியிருப்பதாவது:

"பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கிறது: ஆண்டவர்வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவர்தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள். பள்ளத்தாக்குகளெல்லாம் நிரவப்படுக, மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுக, கோணலானவை நேராகவும், கரடுமுரடானவை சமமான வழிகளாகவும் ஆக்கப்படுக; மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

கடவுள்தாமே வந்து உங்களை மீட்பார்.

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 35 : 1-10

பாழ்வெளியும் வறண்ட நிலமும் அகமகிழும், பாலை நிலம் அக்களிப்பால் பூரித்து லீலி போல மலரும். வளமாக முளைகிளம்பித் தளிர் கொள்ளும், மகிழ்ச்சி பொங்கப் புகழ்கூறி நடனமாடும்; லீபானின் மகிமை பாலைக்குக் கிடைக்கும், கர்மேல், சாரோன் அழகு அதனில் ஒளிரும், ஆண்டவருடைய மகிமை அங்கே விளங்கும். நம் கடவுளின் அழகொளி அங்கே புலனாகும்.

தளர்ந்துபோன கைகளை வலிமைப் படுத்துங்கள், நடுக்கமுற்ற முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள். உள்ளத்தில் உரமில்லாதவர்களை நோக்கி, "உறுதியாய் இருங்கள், அஞ்சவேண்டா; இதோ, உங்கள் கடவுள் பழி தீர்க்க வருகிறார், வந்து கைம்மாறு கொடுப்பார், கடவுள் தாமே வந்து உங்களை மீட்பார்" என்று சொல்லுங்கள்.

அப்போது குருடருடைய கண்கள் திறக்கப்படும், செவிடரின் காதுகள் கேட்கும் ஆற்றல்பெறும்; அப்போது முடவன் மான்கன்று போலத் துள்ளுவான், ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியால் பாடும்; பாழ் வெளியில் நீரூற்றுகள் பீறிட்டுக் கிளம்பும், பாலை நிலத்தில் நீரோடைகள் வழிந்தோடும். கொதிக்கும் மணல் பரப்பு நீர் நிறைந்த குளமாகும், வறண்ட பூமி, நீரூற்றுகள் நிறைந்திருக்கும்; குள்ள நரிகள் குடியிருந்த குகைகளிலும் நாணல், கோரை முதலியவை முளைத்து வளரும்.

நெடுஞ்சாலையும் வழியும் அங்கே உண்டாகும். 'திருப்பாதை' என்று அது பெயர் பெறும்; அசுத்தர் அதன் வழியாய்ச் செல்ல மாட்டார்கள், உங்களுக்கு நேர்வழி அதுவே ஆகும். பேதைகளும் அதில் வழி தவற முடியாது. சிங்கம் அங்கே இருக்காது, கொடிய மிருகம் அவ்வழியாய் ஏறிப்போகாது; அப்படிப் பட்டது எதுவும் அங்குத் தென்படாது, மீட்படைந்தவர்களே அவ்வழியாய் நடந்து போவார்கள். ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி வருவர், வாழ்த்திக்கொண்டு சீயோனுக்கு வந்து சேருவர்; அவர்கள் தலைமேல் அகமகிழ்ச்சி என்றென்றும் நிலைத்திருக்கும். அவர்கள் மகிழ்ச்சியும் அக்களிப்பும் பெற்றுக் கொள்வர். துன்பமும் அழுகையும் பறந்து போய்விடும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 84: 8 அஆ-9, 10-11, 12-13. (பல்லவி: இசை. 35:4d)*

**இதோ நம் இறைவன் வந்து நம்மை மீட்பார்.**

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வ தென்னவென்று நான் கேட்பேன்:
தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும் அவர் கூறுவது சமாதானமே.
9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில் உள்ளது.
அதனால் நம் நாட்டில் மாட்சிமை குடிகொள்ளும்.

பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும்
அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும், நீதி நேர்மை வானத்தினின்று
எட்டிப்பார்க்கும்.

பல்லவி

12 ஏனெனில் நன்மையானதை ஆண்டவர் அருள்வார். நம் நிலமும் தன்
பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன்செல்லும்: மீட்பும் அவரைப் பின் தொடரும்.

பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இதோ, மாநிலத்தின் ஆண்டவராம் அரசர் வருவார், அவரே நமது அடிமைத் தனத்தின் நுகத்தடியை அகற்றிடுவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இன்று புதுமையானவற்றைக் கண்டோம்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5: 17-26

ஒரு நாள் யேசு போதித்துக் கொண்டிருக்கும் பொழுது கலிலேயா, யூதேயா நாடுகளிலுள்ள எல்லா ஊர்களிலிருந்தும் யெருசலேமிலிருந்தும் வந்த பரிசேயரும் சட்டவல்லுநரும் அமர்ந்திருந்தனர். நோய் நீக்குவதற்கென ஆண்டவருடைய வல்லமை யேசுவோடு இருந்தது.

அப்போது இதோ திமிர்வாதங்கொண்ட ஒருவனைச் சிலர் கட்டிலோடு தூக்கி வந்து உள்ளே கொண்டுபோய் அவர் முன்னே கிடத்த முயன்றனர். கூட்ட மிகுதியால் உள்ளே கொண்டுபோக வழியறியாது

கூரை மேலேறி ஓடுகளைப் பிரித்து அவனைக் கட்டிலோடு நடுவில் யேசுவின் முன்பாக இறக்கினர். அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, "அன்பனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார்.

மறைநூல் அறிஞரும் பரிசேயரும், 'இறைவனை நிந்தித்துப் பேசும் இவன்யார்? கடவுள் ஒருவரேயன்றிப் பாவத்தை மன்னிக்க வல்லவர் யார்?' என்று எண்ணினர்.

அவர்களுடைய எண்ணங்களை அறிந்த யேசு அவர்களிடம், "நீங்கள் உள்ளத்தில் எண்ணுவதென்ன? எது எளிது? 'உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டன' என்பதா? 'எழுந்து நட' என்பதா?" என்று கேட்டார். மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டு என்று நீங்கள் உணருமாறு" - திமிர்வாதக்காரனை நோக்கி—"நான் உனக்குச் சொல்லுகிறேன்: எழுந்து, உன் கட்டிலைத் தூக்கிக்கொண்டு வீட்டிற்குப் போ" என்றார். உடனே அவன் அவர்கள் எதிரில் எழுந்து, தன் படுக்கையைத் தூக்கிக் கொண்டு, கடவுளை மகிமைப் படுத்திக்கொண்டே வீடு சென்றான்.

அனைவரும் திகைப்புற்றுக் கடவுளை மகிமைப்படுத்தினர். அன்றியும் அச்சம் மேலிட்டவராய், "இன்று புதுமையானவற்றைக் கண்டோம்" என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**இறைவன் தம் மக்களைத் தேற்றுகிறார்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *40:1-11*

"ஆறுதல் அடையுங்கள், எம் மக்களே, ஆறுதல் அடையுங்கள். என்கிறார் உங்கள் கடவுள். யெருசலேமின் இதயத்தோடு உரையாடி உரத்த குரலில் அதற்குச் சொல்லுங்கள்: அதனுடைய அடிமை வேலை முடிந்து போயிற்று. அதன் அக்கிரமம் மன்னிக்கப்பட்டது. ஆண்டவரின் கையிலிருந்து தன் பாவங்கள் அனைத்திற்காகவும் அது இரு மடங்கு தண்டனை பெற்றுக்கொண்டது."

கூக்குரல் ஒன்று ஒலிக்கிறது. "பாலை நிலத்தில் ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள், பாழ்வெளியில் நம் கடவுளின் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள். பள்ளத் தாக்குகள் எல்லாம் நிரவப்படுக! மலை, குன்று யாவும் தாழ்த்தப்படுக! கோணலானவை நேராக்கப்படுக! கரடு முரடானவை சமமான வழிகள் ஆகுக! அப்போது ஆண்டவரின் மகிமை வெளிப்படுத்தப்படும், மனிதர் அனைவரும் ஒருங்கே அதைக் காண்பர்; ஏனெனில், ஆண்டவர் தாமே திருவாய் மலர்ந்தார்."

"உரக்கக் கூவிச் சொல்" என்றது ஒரு குரலொலி. "உரக்கக் கூவி எதைச் சொல்வேன்?" என்றேன் நான். "மனிதர் அனைவரும் புல்லுக்குச் சமம். அவர்களின் மகிமையெல்லாம் வயல் வெளிப் பூவேயாகும். ஆண்டவரின் ஆவி அதன்மேல் அடிக்கும்போது, புல் உலர்ந்து போகிறது, பூ உதிர்ந்து போகிறது. உண்மையாகவே மக்கள் புல்லைப் போன்றவர்கள் தான். புல் உலர்ந்து போகிறது, பூ உதிர்ந்து போகிறது. நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்."

சீயோனுக்கு நற்செய்தி அறிவிப்பவனே, உயர்ந்த மலைமேல் நீ ஏறிப்போய் நில்; யெருசலெமுக்கு நற்செய்தி அறிவிப்பவனே, உன் குரலையெழுப்பி முழங்கு; அஞ்சாமல் உன் குரலை யுயர்த்தி, "இதோ உங்கள் கடவுள், என்று சொல்லி அறிவி. இதோ, ஆண்டவராகிய கடவுள் வல்லமையோடு வரப்போகிறார், அவருடைய கை செங்கோல் செலுத்தும். இதோ அவருடைய வெற்றிப் பரிசு அவரோடு இருக்கிறது, அவர் முன்னால் அவருடைய வெற்றிச்சின்னங்கள் வருகின்றன. ஆயனைப் போல் அவர் தமது மந்தையை மேய்ப்பார், ஆட்டுக் குட்டிகளைத் தம் கையால் கூட்டிச் சேர்ப்பார்; அவற்றை அன்போடு எடுத்து அரவணைப்பார்; சினையாடுகளை இளைப்பாறு மிடத்திற்குக் கூட்டிச் செல்வார்." என்று யூதாவின் பட்டணங்களுக்கு அறிவிப்பாயாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்.

*சங். 95: 1-2. 3. 10 ac. 11-12. 13 (பல்லவி: இசை. 40: 10)*

பல்லவி இதோ நம் கடவுள் வல்லமையோடு வரப்போகிறார்.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்.
மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்
2 ஆண்டவரைப் பாடுங்கள், அவர் பெயரை வாழ்த்துங்கள்:
அவர் தரும் மீட்பை நாடோறும் அறிவியுங்கள். பல்லவி

3 புற இனத்தாரிடையே அவரது மாட்சிமையை எடுத்துச் சொல்லுங்கள்.
மக்கள் அனைவரிடையிலும் அவர்தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள்.

10 நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள்:
"ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்,
மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கின்றார்." பல்லவி

11 வானங்கள் மகிழட்டும், பூவுலகம் களிகூரட்டும்:
கடலும் அதில் வாழ்வனவும் ஆரவாரம் செய்யட்டும்.

12 வயல் வெளியும் அதில் உள்ள அனைத்தும் ஆர்ப்பரிக்கட்டும்:
காட்டில் உள்ள மரங்கள் அனைத்தும் அப்போது
ஆண்டவர் முன் மகிழ்ச்சியுறும். பல்லவி

13 ஏனெனில், அவர் வருகின்றார்: பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார்
பூவுலகை நீதியுடன் ஆட்சி செய்வார்: மக்களை அவர்தம்
சொல்லுறுதியால் ஆள்வார். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது;
இதோ, அவர் நம்மைமீட்க வரவிருக்கிறார்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சிறுவர் அழிவுறுவது இறைவனின் விருப்பமன்று**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 18:12-14

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? ஒருவனுக்கு நூறு ஆடுகள் இருக்க, அவற்றுள் ஒன்று வழி தவறிப்போனால் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுவிட்டுத் தவறிப் போனதைத் தேடிச் செல்வான் அன்றோ? அதைக் கண்டுபிடிக்க நேர்ந்தால், தவறிப் போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைப்பற்றி அவன் கொள்ளும் மகிழ்ச்சியை விட, அவ்வொன்றைப்பற்றி அவன் கொள்ளும் மகிழ்ச்சி பெரிதாம் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்விதமே, இச் சிறுவருள் ஒருவன்கூட அழிவுறுவது, வானகத்தில் உள்ள உங்கள் தந்தையின் விருப்பமன்று."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

எல்லாம் வல்ல ஆண்டவர் களைத்தவனுக்கு வலுவூட்டுகிறார்.

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்

"யாருக்கு நம்மை நீங்கள் ஒப்பிடுவீர்கள், யாருக்குச் சமமாக்குவீர்கள்?" என்கிறார் பரிசுத்தர். உங்கள் கண்களை உயர்த்தி மேலே பாருங்கள். இவற்றைப் படைத்தவர் யார்? இவற்றின் படைகளை ஒன்றன்பின் ஒன்றாய் வெளி நடத்தி, இவையனைத்தையும் பெயரிட்டழைக்கிறவரே அன்றோ? தம்முடைய பலத்தின் மகத்துவத்தாலும் ஆற்றலின் வல்லமையாலும், ஒன்றேனும் குறைவுறாதபடி பார்த்துக் கொள்ளுகிறார்.

"என் நடத்தை ஆண்டவருக்கு மறைவாயுள்ளது, எனக்கு நீதி செலுத்தாமல் என் கடவுள் விட்டுவிட்டார்" என்று யாக்கோபே, நீ சொல்வதெப்படி? இஸ்ராயேலே, நீ பேசுவதெப்படி? உனக்குத் தெரியாதா? நீ கேட்டதில்லையோ? ஆண்டவர்தான் முடிவில்லாத கடவுள்; பூமியின் எல்லைகளைப் படைத்தவர் அவரே, அவர் சோர்ந்து போவாரல்லர்; களைப்படைவாரல்லர்; அவருடைய ஞானமோ புத்திக்கு எட்டாதது. அவரே களைத்தவனுக்குப் பலம் தருகிறார், வலிமையும் சக்தியும் அற்றவர்க்கு அவற்றை ஊட்டுகிறார். இளைஞரும் சோர்ந்து போவார்கள், களைப்படைவார்கள்; வாலிபர்கள் நோய்வாய்ப்பட்டு விழுவார்கள்; ஆனால், ஆண்டவர்மேல் நம்பிக்கை வைப்பவர்கள், புதிய வலிமையைப் பெற்றுக்கொள்வர்; கழுகுகளைப்போல் இறக்கைகள் பெற்றுப் பறந்திடுவர், ஓடுவார்கள், ஆனால் களைக்கமாட்டார்கள்; நடப்பார்கள், ஆனால் சோர்வடைய மாட்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102 : 1 - 2. 3 - 4 8. 10 (பல்லவி: 1a)

பல்லவி நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: என் அகத்துள்ளதெல்லாம்
அவரது திருப் பெயரை வாழ்த்துவதாக!

2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: அவர் செய்த நன்மைகளை
எல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களையெல்லாம் மன்னிக்கிறார்; உன் நோய்களை
யெல்லாம் குணமாக்குகிறார்.

4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்: அருளையும் இரக்கத்தையும்
உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்; சினங் கொள்ளத் தாமதிப்பவர்;
சாந்தமுடையவர்.

10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை: நம் குற்றங்
களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இதோ, ஆண்டவர் தம் மக்களை மீட்க வருவார்;
அவரை எதிர் கொள்ள ஆயத்தமாயிருப்பவர் பேறுபெற்றோர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:28-30

அக்காலத்தில்: யேசு கூறியதாவது:

“சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், நான் சாந்தமும் மனத் தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம், என் நுகம் இனிது, என் சுமை எளிது.”

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

**இஸ்ராயேலின் பரிசுத்தராகிய நாமே உன் மீட்பர்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 41:13-20

உன் கடவுளாகிய ஆண்டவர் நாமே; உன்னுடைய வலக் கையைப் பிடித்துக்கொண்டு, "அஞ்சாதே, நாமே உனக்குத் துணையாக இருப்போம்" என்று உன்னிடம் சொல்லுகின்றோம்.

புழுவுக்கு நிகரான யாக்கோபே, அற்பமான இஸ்ராயேலே, அஞ்ச வேண்டா; நாமே உனக்குத் துணைநிற்போம், என்கிறார் ஆண்டவர். இஸ்ராயேலின் பரிசுத்தரே உன் மீட்பர். புதிய, கூரிய பற்களையுடைய புணையடிக்கும்எந்திரம் போல் உன்னை ஆக்குவோம்; மலைகளை மிதித்து நொறுக்குவாய், குன்றுகளைத் தவிடுபொடியாக்கிடுவாய். அவற்றை நீ தூற்றுவாய், காற்று அடித்துச் செல்லும், புயல் அவற்றை சிதறடிக்கும்; ஆண்டவரில் நீ அக்களிப்பாய், இஸ்ராயேலின் பரிசுத்தரில் அகமகிழ்வாய்.

ஏழைகளும் எளியவரும் தண்ணீர் தேடுகின்றனர், ஆனால் கிடைக்க வில்லை. தாகத்தால் அவர்கள் நாக்கு வறண்டுள்ளது; ஆண்டவராகிய நாம் அவர்கள் மன்றாட்டைக் கேட்போம்; இஸ்ராயேலின் கடவுளாகிய நாம் அவர்களைக் கைவிட மாட்டோம். மொட்டைக் குன்றுகளைப் பிளந்து ஆறுகளையும், பள்ளத் தாக்குகள் நடுவில் ஊற்றுகளையும் புறப்படச் செய்வோம்; பாலை நிலத்தை நீர் நிலைகளாகவும், வறண்ட பூமியை நீரோடைகளாகவும் ஆக்குவோம்.

பாலை நிலத்தில் கேதுரு மரங்களையும் வேலமரம், மீர்ச்செடி, ஒலிவ மரங்களையும் உண்டாக்குவோம்; பாழ் வெளியில் தேவதாரு மரங்களையும் புன்னை மரங்களையும் ஊசியிலை மரங்களையும் வைப்போம். அப்போது, ஆண்டவருடைய கையே இதைச் செய்தது, இஸ்ராயேலின் பரிசுத்தரே இதை உண்டாக்கினார் என்பதை எல்லோரும் பார்த்துத் தெரிந்து கொள்வர், சிந்தித்து ஒருங்கே கண்டுபிடிப்பர்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 144:1.9.10-11.12-13ab (பல்லவி: 8)*

பல்லவி: **அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர்;
சினங்கொள்ளத் தாமதிப்பவர், அருள் உள்ளம் படைத்தவர்.**

1 என் இறைவா, என் அரசே, நான் உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
என்றென்றும் உம் திருப்பெயரை வாழ்த்துவேன்.

9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர்: தம் படைப்புகள்
அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுபவர். பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக.
உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.

11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக.
உமது ஆற்றலைப் பறைசாற்றுவார்களாக. பல்லவி

12 இவ்வாறு மனுமக்கள் உம் வல்லமையை அறிந்து கொள்வர்:
உமது மாண்புமிக்க அரசின் வல்லமையைத் தெரிந்து கொள்வர்.

13 உமது அரசு ஊழிஊழியாக உள்ள அரசு; உம்முடைய ஆட்சி
தலைமுறை தலைமுறையாக நிலைத்துள்ளது. பல்லவி

*அல்லேலூயா* இசை. 45:8

அல்லேலூயா. வானங்களே, மேலிருந்து பனி பொழியுங்கள்
மேகங்கள் நீதிமானைப் பொழிகவே.
நிலம் திறக்க, அதிலிருந்து மீட்பர் அரும்புகவே.
**அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**ஸ்நாபக அருளப்பருக்கு மேலானவர் எவரும் தோன்றவில்லை**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:11-5

அக்காலத்தில்: யேசு மக்கட்கூட்டத்துக்குக் கூறியதாவது:

"நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: பெண்களிடம் பிறந்தவர்களுள் ஸ்நாபக அருளப்பருக்கு மேலான எவரும் தோன்றவில்லை. ஆயினும் விண்ணரசில் மிகச் சிறியவன் அவரினும் பெரியவன்.

ஸ்நாபக அருளப்பர் நாள்முதல் இதுவரை, விண்ணரசு பலவந்தத்திற்கு உள்ளாகி வருகிறது; பலவந்தம் செய்வோர் அதைக் கைப்பற்றுகின் றனர். ஏனெனில், திருச்சட்டமும், இறைவாக்கினர் அனைவரும் அருளப்பர்வரை இறைவாக்கு உரைத்தனர். நீங்கள் ஏற்றுக் கொள்ள விரும்பினால், வர இருக்கும் எலியாஸ் இவரே. கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்.

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# வெள்ளி

## முதல் வாசகம்

***நம் கட்டளைகளைக் கடைப்பிடிக்க நீ முயற்சி எடுத்திருந்தால்!***

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 48:17-19

இஸ்ராயேலின் பரிசுத்தரும், உன்னுடைய மீட்பருமான ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: "உனக்குப் பயனுள்ளவற்றைப் போதித்து நீ நடக்க வேண்டிய நெறியில் உன்னை நடத்துகின்ற உன் கடவுளாகிய ஆண்டவர் நாமே. நம் கட்டளைகளைக் கடைப்பிடிக்க நீ முயற்சி எடுத் திருந்தால், உன் சமாதானம் ஆறுபோலப் பெருக்கெடுத்திருக்கும். உன் நீதி கடலலைகள்போலப் பொங்கியிருக்கும்; உன்வித்து, கடற்கரை மணல்கள்போலும், உன் சந்ததி கரையோரத்துக் கற்கள் போலும் இருந்திருப்பர். அதனுடைய பெயர் நம் திருமுன்னிருந்து அழிந்திருக் காது, மறைந்திருக்காது."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

## பதிலுரைப் பாடல்

*சங். 1:1-2. 3.4-6 (பல்லவி : அரு. 8:12 காண்.)*

பல்லவி : **ஆண்டவரே, உம்மைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்.**

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன், பாவிகளின் வழியில் செல்லா தவன், பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.

2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய், அதை அல்லும் பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன்.
பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல் தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்: அவன் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான்.
பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒரு நாளுமிராது: காற்றோடு காற்றாய்ப் பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.

6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்: தீயோரின் வழியோ அழிவுக்கே செல்லும்.
பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. ஆண்டவர் வரவிருக்கிறார், அவரை எதிர்கொள்ளுங்கள்; அமைதியின் அரசர் அவரே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மக்கள் அருளப்பருக்கும் செவிசாய்க்கவில்லை, மனுமகனுக்கும் செவிசாய்க்கவில்லை.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:16-19

அக்காலத்தில்: யேசு மக்கட் கூட்டத்துக்குக் கூறியதாவது:

"இத்தலைமுறையை யாருக்கு ஒப்பிடுவேன்? பொது இடத்தில் உட்கார்ந்து தம் தோழரைக் கூவியழைத்து, 'நாங்கள் குழல் ஊதினோம், நீங்கள் ஆடவில்லை; நாங்கள் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லை' என்று கூறும் சிறுவரைப் போன்றது. ஏனெனில், அருளப்பர் வந்தபோது உண்ணா நோன்பிருந்தார்; குடிக்கவுமில்லை. அவரைப் பேய்பிடித்தவன் என்று சொல்லுகிறார்கள். மனுமகன் வந்த போதோ உண்டார், குடித்தார்; அவரை 'இதோ! போசனப் பிரியன், குடிகாரன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் நண்பன்' என்கிறார்கள். ஆனால், தேவ ஞானம் சரியென்று அதன் செயலால் விளங்கிற்று."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

எலியாஸ் மீண்டும் வருவார்.

48:1-4. 9-11

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்

நெருப்பைப்போல் எலியாஸ் இறைவாக்கினர் எழுந்தார். பந்தம் போல் அவருடைய வார்த்தை பற்றி எரிந்தது. அவர் மக்களுக்குப் பஞ்சம் வரும்படி செய்தார். அவர்கள் தங்கள் பொறுமையால் அவருக்குக் கோபம் மூட்டினார்கள். அவர்களோ சொற்பப் பேர் ஆனார்கள். ஏனென்றால், அவர்களால் ஆண்டவருடைய கட்டளைகளைச் சகிக்கக் கூடவில்லை. அவர் ஆண்டவருடைய வார்த்தையால் வானத்தை மூடினார். வானத்தினின்று மும்முறை நெருப்பு விழச்செய்தார். இவ்வாறே எலியாஸ் தம்முடைய புதுமைகளால் புகழ் பெற்றார். உம்மைப்போல மகிமை பாராட்டக்கூடியவன் யார்?

நெருப்புச் சுவாலையில் நெருப்புக் குதிரைகள் பூட்டின வண்டியில் எடுத்துக்கொள்ளப்பட்டீர். ஆண்டவருடைய கோபத்தைத் தணிக்கக் காலங்களின் தீர்மானங்களில் எழுதப்பட்டீர். தந்தையின் இதயத்தைப் பிள்ளையுடன் சமாதானப்படுத்தவும், யாக்கோபின் கோத்திரங்களைத் திரும்ப ஏற்படுத்தவும் நியமிக்கப்பட்டீர். உம்மைப் பார்த்தவர்கள் பேறு பெற்றோர். அவர்கள் உமது நேசத்தால் மகிமைப்படுத்தப்பட்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங் 79. 1 ac & 2b. 14-15. 17-18 (பல்லவி: 3)

பல்லவி: இறைவா, எங்களை மனமாற்றியருளும்;
உமது இன்முகம் காட்டி எங்களை மீட்டருளும்.

1 இஸ்ராயேலரின் மேய்ப்பரே, செவிசாய்த்தருளும்; கெருபீம்களின்மேல் வீற்றிருப்பவரே, ஒளிவீசும்.
2 உமது வல்லமையைத் தூண்டி எழுந்து வாரும். பல்லவி

14 சேனைகளின் இறைவனே, மீளவும் எழுந்து வாரும்; வானினின்று கண்
ணோக்கிப் பாரும்: இத்திராட்சைக் கொடியை வந்துபாரும்.
15 உமது வலக்கரத்தால் நீர் நட்டதைப் பாதுகாத்தருளும்: நீர் உமக்கென
உறுதிப்படுத்திய மனிதனை உமது வலக்கரம் காப்பதாக. பல்லவி

17 உமது வலக்கரத்தால் தேர்ந்தெடுத்த ஆளை உம் கைவன்மை காப்பதாக:
உமக்கென உறுதிப்படுத்திய மனிதனை அது காப்பதாக.
18 இனி நாங்கள் உம்மை விட்டு அகலோம்: உயிரோடு எங்களை நீர் காத்
தருள்வீர். உமது பெயரை நாங்கள் போற்றுவோம். பல்லவி

அல்லேலூயா — லூக். 3 : 4 . 6

அல்லேலூயா. ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவர் தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்; மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எலியாஸ் ஏற்கெனவே வந்துவிட்டார்; மக்கள் அவரை அறிந்து கொள்ளவில்லை.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17:10-13

சீடர்கள் மலையிலிருந்து இறங்கும் பொழுது, "முதலில் எலியாஸ் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர் கூறுவதேன்?" என யேசுவைக் கேட்டனர். அதற்கு அவர், "எலியாஸ் வந்து எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தத்தான் போகிறார். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: எலியாஸ் ஏற்கெனவே வந்துவிட்டார். அவர்கள் அவரை அறிந்து கொள்ளாமல் தாம் விரும்பியதெல்லாம் அவருக்குச் செய்தார்கள். இவ்வாறே மனுமகனும் அவர்கள் கையால் பாடுபடப் போகிறார்" என்றார். அவர் சொன்னது ஸ்நாபக அருளப்பரைப்பற்றித்தான் என்பதை அப்போது சீடர்கள் உணர்ந்தனர்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

# திருவருகைக் காலம் - 3ஆம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*கடவுள்தாமே வந்து நம்மை மீட்பார்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 35:1-6a. 10

பாழ்வெளியும் வறண்ட நிலமும் அகமகிழும், பாலை நிலம் அக்களிப்பால் பூரித்து லீலி போல மலரும். வளமாக முளை கிளம்பித் தளிர் கொள்ளும். மகிழ்ச்சி பொங்கப் புகழ்கூறி நடனமாடும்; லீபானின் மகிமை பாலைக்குக் கிடைக்கும், கர்மேல், சாரோன் அழகு அதனில் ஒளிரும், ஆண்டவருடைய மகிமை அங்கே விளங்கும், நம் கடவுளின் அழகொளி அங்கே புலனாகும்.

தளர்ந்துபோன கைகளை வலிமைப்படுத்துங்கள். நடுக்கமுற்ற முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்; உள்ளத்தில் உரமில்லாதவர்களை நோக்கி, "உறுதியாய் இருங்கள், அஞ்சவேண்டா; இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்க வருகிறார், வந்து கைம்மாறு கொடுப்பார், கடவுள் தாமே வந்து உங்களை மீட்பார்" என்று சொல்லுங்கள்.

அப்போது குருடருடைய கண்கள் திறக்கப்படும், செவிடரின் காதுகள் கேட்கும் ஆற்றல் பெறும்; அப்போது முடவன் மான்கன்று போலத் துள்ளுவான், ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியால் பாடும்.

ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி வருவர், வாழ்த்திக் கொண்டு சீயோனுக்கு வந்து சேருவர்; அவர்கள் தலைமேல் அகமகிழ்ச்சி என்றென்றும் நிலைத்திருக்கும்; அவர்கள் மகிழ்ச்சியும் அக்களிப்பும் பெற்றுக்கொள்வர், துன்பமும் அழுகையும் பறந்து போய்விடும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 145:7, 8-9a, 9bc-10 (பல்லவி: இசை. 35:4 காண்)

பல்லவி: ஆண்டவரே, எங்களை மீட்க வந்தருளும்.

அல்லது அல்லேலூயா.

7 அவர் என்றென்றும் சொல் தவறாதவர்;
துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிறார்;
பசியுற்றோர்க்கு உணவளிக்கிறார்;
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிறார். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்து விடுகிறார்;
தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கி விடுகிறார்;
நீதிமான்கள்மீது ஆண்டவர் அன்புகூர்கிறார்.
9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிறார்; பல்லவி

அனாதைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிறார்;
பாவிகளின் திட்டங்களைக் கலைத்துவிடுகிறார்.
10 நித்தியத்துக்கும் ஆண்டவர் அரசாள்வார்
சீயோனே, உன் இறைவன்
தலைமுறை தலைமுறையாக ஆள்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள்;**
**ஏனெனில், ஆண்டவரது வருகை அண்மையிலுள்ளது.**

புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 7 10

சகோதரர்களே, ஆண்டவரின் வருகைவரை பொறுமையாயிருங்கள். பயிரிடுபவனைப் பாருங்கள். நிலத்தில் நல்ல விளைச்சலை எதிர்பார்த்து முன்மாரியும், பின்மாரியும் வருமளவும் பொறுமையோடு காத்திருக்கிறான். நீங்களும் பொறுமையாயிருங்கள். உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள். ஏனெனில் ஆண்டவரது வருகை அண்மையிலுள்ளது.

சகோதரர்களே, நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதபடி, ஒருவர்க்கெதிராய் ஒருவர் குறைகூறி முறையிடாதீர்கள். இதோ! நடுவர் வாசலில் நிற்கிறார். சகோதரர்களே, ஆண்டவர் பெயரால் பேசின

இறைவாக்கினரை நினைத்துக் கொள்ளுங்கள். துன்பத்தைத் தாங்குவதிலும், பொறுமையைக் கடைப்பிடிப்பதிலும் அவர்களை மாதிரிகளாக் கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா இசை. 61:1

அல்லேலூயா. ஆண்டவரின் ஆவி என்மேலே.
எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க
என்னை அனுப்பியுள்ளார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*வரவிருக்கிறவர் நீர்தாமோ? வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ?*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:2-11

அக்காலத்தில்:

அருளப்பர் கிறிஸ்துவின் செயல்களைச் சிறையில் கேள்வியுற்று, "வரப்போகிறவர் நீர்தாமோ? வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ?" என்று தம் சீடர்வழியாகக் கேட்டு அனுப்பினர்.

யேசு மறுமொழியாக: "நீங்கள் கண்டதையும் கேட்டதையும் அருளப்பரிடம் போய் அறிவியுங்கள். குருடர் பார்க்கின்றனர், முடவர் நடக்கின்றனர், தொழுநோயாளர் குணமடைகின்றனர், செவிடர் கேட்கின்றனர், இறந்தவர் உயிர்க்கின்றனர், எளியவர்க்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது; என்னைப்பற்றி இடறல் படாதவன் பேறுபெற்றவன்" என்றார்.

அவர்கள் போகும்போது, யேசு அருளப்பரைப்பற்றி மக்கட்கூட்டத்திற்குச் சொன்னதாவது; "எதைப் பார்க்கப் பாலைவனத்திற்குப் போனீர்கள்? காற்றில் அசையும் நாணலையோ? பின் எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய ஆடையணிந்த மனிதனையோ? இதோ, மெல்லிய ஆடையணிந்தோர் அரசர் மாளிகையில் இருக்கின்றனர். பின் எதைத்தான் பார்க்கப் போனீர்கள்? இறைவாக்கினரையா? ஆம், இறைவாக்கினருக்கும் மேலானவரைத்தான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இவரைப்பற்றித்தான்: 'இதோ! என் தூதனை உனக்கு முன்பாக அனுப்புகிறேன், அவர் உமக்குமுன் உமது வழியை ஆயத்தம்செய்வார்' என்று எழுதியுள்ளது. நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். பெண்

களிடம் பிறந்தவர்களுள் ஸ்நாபக அருளப்பருக்கு மேலான எவரும் தோன்றவில்லை; ஆயினும் விண்ணரசில் மிகச் சிறியவன் அவரினும் பெரியவன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*ஆண்டவரில் நான் அகமகிழ்ந்து அக்களிப்பேன்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 61 : 1-2a. 10-11

ஆண்டவரின் ஆவி என் மேலே, ஏனெனில் ஆண்டவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார்; எளியோருக்கு நற்செய்தி அறிவித்து, உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும், கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியும் அறிவிக்கவும், ஆண்டவர் தம் அருளைத் தரும் ஆண்டைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார்.

ஆண்டவரில் நான் அகமகிழ்ந்து அக்களிப்பேன், என் கடவுளிடம் எனதான்மா களிகூரும்; ஏனெனில், மணிமுடி சூட்டப்பட்ட மணவாளனைப் போலும், அணிகலன்களால் அழகு செய்யப்பட்ட மணவாட்டியைப் போலும் மீட்பின் ஆடைகளை எனக்கு உடுத்தினார்; நீதியின் மேலாடையை எனக்குப் போர்த்தினார். ஏனெனில், நிலமானது தன் விதைகளை முளைக்கச் செய்வது போலும், தோட்டமானது தன்னில் நட்டதைத் தளிர்க்கச் செய்வது போலும், எல்லா இனத்தாரின் முன்னிலையில் நீதியையும் புகழ்மொழியையும் கடவுளாகிய ஆண்டவர் தளிர்க்கச் செய்வார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

லூக். 1 : 46 - 48. 49 - 50. 53 - 54 (பல்லவி : இசை. 61:10b)

பல்லவி: என் கடவுளிடம் எனதான்மா களிகூரும்.

46 என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது;
47 என் மீட்பராம் கடவுளை நினைந்து என் இதயம் களிகூருகின்றது;

48 ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கண்ணோக்கினார்,
இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும், பல்லவி
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.

49 ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார்;
அவர்தம் பெயர் புனிதமானதே.

50 அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத் பல்லவி
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

53 பசித்தோரை நலன்களால் நிரப்பினார்,
செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

54 இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து பல்லவி
தம் அடியாராகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

## இரண்டாம் வாசகம்

**உங்கள் ஆவி, ஆன்மா, உடல் அனைத்தும்**
**ஆண்டவரின் வருகைக்கென்று காக்கப்படுவதாக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு 5: 16-24
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்

சகோதரர்களே :

எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள். இடைவிடாது செபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து யேசுவில் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே.

தேவ ஆவியை அணைத்துவிட வேண்டாம்; இறைவாக்குகளைப் புறக்கணிக்க வேண்டாம்; அவை அனைத்தையும் சீர்தூக்கிப்பார்த்து நல்லதையே ஏற்றுக்கொள்ளுங்கள்; தீமையானதெல்லாம் விட்டு விலகுங்கள்.

சமாதானத்தின் ஊற்றாகிய கடவுள் உங்களை முற்றும் பரிசுத்தராக்குவாராக; அவ்வாறே உங்கள் ஆவி, ஆன்மா, உடல் அனைத்தும் நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வருகையின்போது சீர்குலையாமல் குற்றமின்றி இருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கும் இறைவன் நம்பிக்கைக்குரியவர்; சொன்னதைச் செய்து முடிப்பார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இசை. 61:1

அல்லேலூயா
அல்லேலூயா. ஆண்டவரின் ஆவி என் மேலே;
எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க என்னை
அனுப்பியுள்ளார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*1 : 6-8 . 19-28*

கடவுள் அனுப்பிய ஒருவர் இருந்தார்; அவர் பெயர் அருளப்பர். அனைவரும் தம்வழியாக விசுவசிக்கும்படி, ஒளியைக்குறித்துச் சாட்சியம் அளிப்பதற்கு அவர் சாட்சியாக வந்தார். அவர் ஒளியல்லர்; ஒளியைக் குறித்துச் சாட்சியம் அளிக்க வந்தவரே.

யெருசலேமிலிருந்து யூதர்கள் குருக்களையும் இலேவியர்களையும், அருளப்பரிடம் அனுப்பியபோது, அவர் கூறிய சான்றாவது: "நீர் யார் ?" என்று அவர்கள் கேட்க, அவர், "நான் மெசியா அல்லேன்" என்று ஒப்புக் கொண்டார்; மறுக்காமல் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். "பின் என்ன ? நீர் எலியாசோ ?" என்று அவரைக் கேட்க, "நானல்லேன்" என்றார். "நீர் இறைவாக்கினரோ ?" "அல்லேன்" என்றார். "எங்களை அனுப்பினவர்களுக்கு மறுமொழி அளிக்க வேண்டுமே; உம்மைப்பற்றி என்ன சொல்லுகிறீர் ? நீர் யார் ?" என்று அவரை வினவினர். "இறை வாக்கினரான இசையாஸ் கூறியபடி: "ஆண்டவருடைய வழியைச் செம் மைப்படுத்துங்கள் என்று பாலைவனத்தில் உண்டாகும் கூக்குரல் நான்" என்றார்.

அனுப்பப்பட்டவர் பரிசேயர். அவர்கள், "நீர் மெசியாவோ எலியாசோ இறைவாக்கினரோ, அல்லவென்றால், ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர் ?" என்று அவரைக் கேட்டார்கள். அதற்கு அருளப்பர், "நான் நீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப்பின் வருபவர்; அவருடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன்" என்றார். இது யோர்தானுக்கு அப்பாலுள்ள பெத்தானியாவில் நிகழ்ந்தது; அங்கே அருளப்பர் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவர் உன்னைக் குறித்துப் புகழ்ப்பாடி அக்களிப்பார்.**

இறைவாக்கினர் செப்போனியா ஆகமத்திலிருந்து வாசகம் 3:14-17

சீயோன் மகளே, மகிழ்ச்சியால் ஆர்ப்பரி! இஸ்ராயேலே, ஆரவாரம் செய்! யெருசலேம் மகளே, உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி! ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்; உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்; இஸ்ராயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்; இனி நீ தீமைக்கு அஞ்சமாட்டாய்.

அந்நாளில் யெருசலேமை நோக்கி, "சீயோனே, அஞ்ச வேண்டா; உன் கைகள் சோர்ந்து தளராதிருக்கட்டும்; உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார். அவர் மாவீரர், வெற்றி தருபவர்; உன் மட்டில் அவர் மகிழ்ச்சியால் அக்களிப்பார்; தம் அன்பினால் உன்னைப் புதுப்பிப்பார்; திருவிழா நாளில் செய்வதுபோல், உன்னைக்குறித்து உரக்கப்பாடி அக்களிப்பார்," என்பார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

இசை. 12:2-3 4bcd. 5-6 (பல்லவி: 6)

பல்லவி மகிழ்ச்சியினால் பாடுவாய்; ஏனெனில், இஸ்ராயேலின் பரிசுத்தர் உன் நடுவில் மேன்மையோடு விளங்குகிறார்.

2 இதோ, கடவுள்தாம் என் மீட்பு, அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன், அஞ்சேன்.
ஏனெனில், ஆண்டவரே என் வலிமை, அவரையே பாடுவேன்; என் மீட்பு அவரே.

3 மீட்பின் ஊற்றுகளினின்று தண்ணீரை அகமகிழ்வோடு நீங்கள் முகந்து கொள்வீர்கள்.
பல்லவி

4 ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள்;
அவரது பெயரைப் போற்றிப் புகழுங்கள்;
புறவினத்தார்க்கு அவர் செயல்களை அறிக்கையிடுங்கள்;
அவர் பெயர் உயர்ந்ததெனப் பறைசாற்றுங்கள். பல்லவி

5 ஆண்டவருக்குப் புகழ்பாடுங்கள்; ஏனெனில், மகிமைக்குரிய செயல்களைச் செய்தார்.
உலகெங்கும் இதனைத் தெரியப்படுத்துங்கள்.

6 சீயோனின் குடிகளே ஆர்ப்பரியுங்கள்,
மகிழ்ச்சியினால் பாடுங்கள்,
ஏனெனில், இஸ்ராயேலின் பரிசுத்தர் உன் நடுவில் மேன்மையோடு விளங்குகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*ஆண்டவர் அண்மையில் உள்ளார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4:4-7

*சகோதரர்களே :*

ஆண்டவருக்குள் என்றும் அகமகிழுங்கள்; மீண்டும் கூறுகிறேன்: அகமகிழுங்கள். பொறுமை வாய்ந்த உங்கள் உள்ளம் அனைவர்முன்னும் விளங்கட்டும். ஆண்டவர் அண்மையில் உள்ளார். எதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். ஆனால், எல்லாத் தேவைகளிலும் நன்றியோடு கூடிய செபத்திலும் மன்றாட்டிலும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை ஒப்படையுங்கள்.

அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறைஅமைதி கிறிஸ்து யேசுவுக்குள் உங்கள் உள்ளத்துக்கும் மனத்துக்கும் அரணாயிருக்கும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* இசை. 61:1

அல்லேலூயா. ஆண்டவரின் ஆவி என்மேலே:
எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க என்னை
அனுப்பியுள்ளார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நாங்களும் செய்ய வேண்டியதென்ன ?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3 : 10 - 18

அக்காலத்தில் :

"நாங்கள் செய்ய வேண்டியதென்ன ?" என்று மக்கள் கூட்டம் அருளப்பரைக் கேட்டது.

அதற்கு அவர், "இரண்டு அங்கி வைத்திருப்பவன் இல்லாதவனோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவு உடையவனும் அவ்வாறே செய்யட்டும்" என்றார்.

ஆயக்காரர் ஞானஸ்நானம் பெற வந்து, "போதகரே, நாங்கள் செய்ய வேண்டியதென்ன ?" என்று அவரைக் கேட்க, அவர், "உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் கேட்க வேண்டாம்" என்று பதிலளித்தார்.

"நாங்கள் செய்ய வேண்டிய தென்ன ?" என்று படை வீரரும் கேட்டனர். அவரோ, ஒருவரையும் பயமுறுத்திப் பணம் பறிக்க வேண்டாம்; பொய்க் குற்றம் சாட்ட வேண்டாம்; கிடைக்கும் சம்பளமே போதுமென்றிருங்கள்" என்றார்.

அந்நாட்களில் மக்கள் எதிர்பார்த்த நிலையில் இருக்கவே, ஒருவேளை அருளப்பரே மெசியாவாக இருக்கலாம் என்று எல்லாரும் உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருந்தனர். அப்போது அருளப்பர் அவர்களிடம், "நானோ உங்களுக்கு நீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; ஆனால், என்னைவிட வல்லவர் ஒருவர் வருகிறார்; அவருடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன்; அவர் பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். அவர் தம் களத்தைத் துப்புரவாக்கிக் கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்க்க, சுளகைக் கையில் கொண்டுள்ளார். பதரையோ அவியா நெருப்பில் சுட்டெரிப்பார்" என்றார்.

மேலும் பல அறிவுரைகள் கூறி மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

*இந்நாள் டிசம்பர் 17 அல்லது 18ஆம் நாளாயிருக்க நேர்ந்தால், கீழ்க்கண்டுள்ள வாசகங்களை விடுத்து டிசம்பர் 17 அல்லது 18ஆம் நாளுக்குரிய வாசகங்களைப் பயன் படுத்தவும்.* *(பக்கம் 78)*

## முதல் வாசகம்

**யாக்கோபிலிருந்து ஒரு விண்மீன் உதிக்கும்.**

எண்ணாகமத்திலிருந்து வாசகம் *24:2-7. 15-17a*

*அந்நாட்களில் :*

பாலாம் கண்களை ஏறெடுக்கவே, இஸ்ராயேலர் தங்கள் கோத்திரங்களின்படியே பாளையம் இறங்கியிருக்கக் கண்டான். அந்நேரம் கடவுளால் ஏவப்பட்டவனாய் அவன் இறைவாக்கு உரைக்கலானான். எப்படியென்றால்: பேயோரின் புதல்வனாகிய பாலாம் உரைத்த வார்த்தை, இருண்ட கண்களையுடையவன் பகர்ந்த வாக்கியம், கடவுள் அருளும் வார்த்தைகளைக் கேட்டு எல்லாம் வல்லவரின் தரிசனத்தைக்கண்டு மயங்கிக் கீழே விழுந்தபின், கண்பார்வை பெற்றவன், சொல்வதாவது: யாக்கோபே, உன் திரைக்கூடாரங்கள் எவ்வளவோ அழகானவை! இஸ்ராயேலே, உன் கூடாரங்கள் எவ்வளவு அலங்காரமாய் இருக்கின்றன! அவைகள் செடி கொடி மரங்கள் நிறைந்த பள்ளத்தாக்குகளைப் போலும், நதியோரத்திலுள்ள சிங்காரவனங்களைப் போலும், ஆண்டவர் வைத்த வாசனை மரங்களைப் போலும், நீரருகே வளர்கின்ற கேதுரு மரங்களைப் போலும் இருக்கின்றன.

அவனுடைய நீர்ச்சாலினின்று தண்ணீர் பாய்ந்தோடும். அவன் குலம் பெருவெள்ளம் போலப் பரவும். அவனுடைய அரசன் ஆகாகைக் காட்டிலும் உயர்ந்தவனாய் இருப்பான். ஆகாகின் ஆட்சியை அவனிடமிருந்து பறித்துக்கொள்வான்.

பாலாம் மறுபடியும் இறைவாக்கு உரைக்கத் தொடங்கினான். எப்படியென்றால்: பேயோரின் புதல்வன் பாலாம் பேசினான், எவனுடைய கண் மூடியிருந்ததோ அவன் உரைத்தான், கடவுளின் வார்த்தைகளையும் கேட்டு, உன் உத்தம (கடவுளின்) உண்மையையும் அறிந்து, எல்லாம் வல்லவரின் தரிசனத்தையும் கண்டு, மயங்கிக் கீழே விழுந்து கண்பார்வை

பெற்ற நான் அவரைக் காண்பேன்; ஆனால் இப்போதல்ல. அவரைத் தரிசிப்பேன்; ஆனால், அண்மையில் அல்ல. யாக்கோபிலிருந்து ஒரு விண்மீன் உதிக்கும். இஸ்ராயேலரிடமிருந்து ஒரு செங்கோல் எழும்பும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 24 : 4bc - 5ab. 6-7bc. 8-9 (பல்லவி :4b)

பல்லவி ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்.

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்: உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.

5 உமது உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்: என் மீட்பராம் இறைவன் நீரே. பல்லவி

6 ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவுகூரும்; ஆதிகால முதல் உள்ள உம் அருளன்பை மறவாதேயும்.

7 உம் அருள் அன்பிற்கேற்ப என்னை நினைவுகூரும்; உமது அருள் நன்மையின் பொருட்டு என்னை மறவாதேயும். பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்; ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.

9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார்; எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார். பல்லவி

அல்லேலூயா சங். 84 : 7

அல்லேலூயா. ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்; உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அருளப்பருடைய ஞானஸ்நானம் எங்கிருந்து வந்தது?*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21 : 23-27

*அக்காலத்தில் :*

யேசு கோயிலுக்கு வந்து போதித்துக்கொண்டிருக்கையில் தலைமைக் குருக்களும் மக்களின் மூப்பரும் அவரிடம் வந்து, "எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறீர்? உமக்கு இந்த அதிகாரம் கொடுத்தவர்

யார்?'' என்றார்கள். அதற்கு யேசு, "நானும் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன்; அதற்கு நீங்கள் பதில் சொன்னால், நானும் எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறேன் என்று உங்களுக்குக் கூறுவேன். அருளப்பருடைய ஞானஸ்நானம் எங்கிருந்து வந்தது? வானகத்திலிருந்தா? மனிதரிடமிருந்தா?'' என்று கேட்டார்.

அவர்கள் தங்களுக்குள் ஆலோசித்ததாவது: "வானகத்திலிருந்து வந்தது என்போமாயின், 'பின் ஏன் நீங்கள் அவரை நம்பவில்லை?' என்று நம்மைக் கேட்பார். 'மனிதனிடமிருந்து வந்தது' என்போமாயின், பொது மக்களுக்கு அஞ்சவேண்டியிருக்கிறது. ஏனெனில் எல்லாரும் அருளப்பரை இறைவாக்கினர் என்று கருதுகின்றனர்.'' எனவே, அவர்கள் யேசுவுக்கு மறுமொழியாக: "எங்களுக்குத் தெரியாது'' என்றார்கள். அதற்கு அவர், "நானும் எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறேன் என உங்களுக்குச் சொல்லேன்'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

*இந்நாள் டிசம்பர் 17 அல்லது 18 ஆம் நாளாயிருக்க நேர்ந்தால் கீழ்க்கண்டுள்ள வாசகங்களை விடுத்து, டிசம்பர் 17 அல்லது 18 ஆம் நாளுக்குரிய வாசகங்களைப் பயன்படுத்தவும். (பக். 78)*

## முதல் வாசகம்

**மெசியாவின் மீட்பு எளியவர் அனைவர்க்கும் வாக்களிக்கப்படுகிறது.**

இறைவாக்கினர் சொப்போனியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்
*3:1-2. 9-13*

ஆண்டவர் கூறுகிறார் :

கலகஞ் செய்து தீட்டுப்பட்டவளும், கொடிய நகரமுமாகிய சீயோன் மகளுக்கு ஐயோ கேடு! நாம் சொல்வதை அவள் கேட்பதுமில்லை, நமது திருத்தத்தை அவள் ஏற்பதுமில்லை; ஆண்டவர் மேல் அவள் நம்பிக்கை வைக்கிறதில்லை, தன் கடவுளை அண்டி வருகிறதுமில்லை.

"ஆம், அக்காலத்தில் நாம் மக்களினங்களுக்குத் தூய்மையான உதடுகளை அருளுவோம்; அப்போது அவர்கள் அனைவரும் ஆண்டவரின் திருப்பெயரைத் தொழுது கொண்டு, தோளோடுதோள் கொடுத்துப் பணிபுரி

வர். எத்தியோப்பியாவின் ஆறுகளுக்கும் அப்பாலிருந்து நம்முடைய அடியார்கள் காணிக்கையுடன் வருவார்கள்; நம் குடிகளுள் சிதறுண்டவர்களின் மக்கள் நமக்குக் காணிக்கைகள் கொண்டு வருவர்.

“நமக்கு எதிராய் நீ எழுந்து செய்த செயல்களை முன்னிட்டு அந்நாளில் நீ அவமானம் அடையமாட்டாய்; ஏனெனில், அப்பொழுது உன் நடுவிலிருந்து இறுமாப்பாய்க் களிகூர்ந் திருப்பவர்களை அகற்றிடுவோம்; இனி ஒருபோதும் நம் பரிசுத்த மலையின் மீது பெருமை காட்டிக் கொள்ள மாட்டாய். ஏழ்மையும் எளிமையும் உள்ள மக்களை உன் நடுவில் நாம் விட்டு வைப்போம்.

இஸ்ராயேலில் எஞ்சினோர் ஆண்டவரின் பெயரில் நம்பிக்கை கொள்வர்; அவர்கள் தீமை செய்ய மாட்டார்கள்; பொய் சொல்லவே மாட்டார்கள்; வஞ்சக நாவென்பது அவர்கள் வாயில் இராது; அச்சுறுத்துவார் யாருமின்றி அவர்கள் மந்தைபோல மேய்ந்து இளைப்பாறுவார்கள்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 33: 1-2. 5-6 16-17. 18. 22 (பல்லவி: 6a)*

பல்லவி: திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டருளினார்.

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்; அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும்; சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக.
பல்லவி

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்; வெட்கத்தால் தலைகுனிய மாட்டீர்கள்.
6 இதோ! திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார், எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார்.
பல்லவி

16 ஆண்டவருடைய முகம் தீயோரை எதிர்த்து நிற்கின்றது: ஆண்டவர் பூமியிலிருந்து அவர்களுடைய நினைவையே எடுத்து விடுவார்.
17 நீதிமான்கள் கூக்குரலிட்டனர். ஆண்டவர் அவர்களுக்குச் செவிசாய்த்தார்; எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார்.
பல்லவி

18 உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர்; மனம் நைந்தவர்களைக் காத்தருள்வார்.

22 தம் ஊழியரின் ஆத்துமங்களை ஆண்டவர் மீட்கிறார்; அவரிடம் அடைக்கலம் புகுபவன் எவனும் தண்டனையடையான். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. வாரும், ஆண்டவரே, காலம் தாழ்த்தாதேயும்;
உம் மக்களின் பாவங்களைப் போக்கியருளும்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அருளப்பர் வந்தார்; பாவிகள் அவரை நம்பினார்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21:28-32

அக்காலத்தில்: யேசு தலைமைக்குருக்களையும் மக்களின் மூப்பரையும் நோக்கிக் கூறியதாவது:

"இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன? ஒருவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். அவன் ஒருவனிடம் போய் 'மகனே, இன்று என் திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்' என்றான். அதற்கு அவன், 'போகமாட்டேன்' என்றான்; பின்னர் வருந்தி மனமாறிச் சென்றான். மற்றவனிடமும் வந்து அவ்வாறே சொன்னான். அதற்கு அவன், 'இதோ! போகிறேன், ஐயா' என்றான்; ஆனால் போகவில்லை. இருவருள் எவன் தந்தையின் விருப்பப்படி நடந்தவன்?" என்று கேட்டார். அவர்கள், "முந்தியவனே" என்றனர்.

யேசு அவர்களை நோக்கி, "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆயக்காரரும் விலைமாதரும் உங்களுக்கு முன் கடவுள் அரசில் செல்வார்கள். ஏனெனில், அருளப்பர் நீதி நெறியைக் காட்ட உங்களிடம் வந்தார்; நீங்களோ அவரை நம்பவில்லை. ஆனால் ஆயக்காரரும் விலைமாதரும் அவரை நம்பினர்; நீங்களோ அதைப் பார்த்த பின்னும் வருந்தி மனமாறி அவரை நம்பவில்லை" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

*இந்நாள் டிசம்பர் 17 அல்லது 18 ஆம் நாளாயிருக்க நேர்ந்தால், கீழ்க்கண்ட வாசகங்களை விடுத்து, டிசம்பர் 17 அல்லது 18 ஆம் நாளுக்குரிய வாசகங்களைப் பயன்படுத்தவும். (பக். 78)*

## முதல் வாசகம்

**வானங்களே, மேலிருந்து பனி பொழியுங்கள்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 45:6b-8.18.21b-26

"நாமே ஆண்டவர், வேறு எவனுமில்லை. ஒளியை உருவாக்குகிறவரும், இருளைப் படைக்கிறவரும், வாழ்வை வழங்குகிறவரும், தாழ்வைத் தருகிறவரும் நாமே; இவற்றையெல்லாம் செய்கிற நாமே ஆண்டவர். வானமே மேலிருந்து பனிமழை பெய், மேகங்கள் நீதியைப் பொழிக! நிலம் திறக்கப்படுக! மீட்பு முளைப்பதாக! அதனோடு நீதி தளிர்ப்பதாக! ஆண்டவராகிய நாமே அதைச் செயலாற்றுகிறோம்."

ஏனெனில், வானத்தைப் படைத்த ஆண்டவரே கடவுள், அவர் தான் பூமியை உருவாக்கினார்; அதைப் படைத்து நிலைநாட்டினார்; வெறுமையாக இருக்கும்படி அதை உண்டாக்கவில்லை. அதில் மனிதர் வாழவே அதை உருவாக்கினார். அவரே கூறுகிறார்:

"நாமே ஆண்டவர், வேறு எவனுமில்லை. ஆண்டவர் நாமல்லவோ? நம்மையல்லால் வேறு தெய்வம் இல்லை. நீதியுள்ளவரும், மீட்கிறவருமான கடவுள் நம்மையல்லால் வேறு யாருமில்லை. உலகத்தின் எல்லைகளில் வாழும் மக்களே, நீங்கள் அனைவரும் நம்மிடம் திரும்பி வாருங்கள், நீங்கள் மீட்பு அடைவீர்கள். ஏனெனில், நாமே கடவுள், வேறு எவனுமில்லை. நம் மேலேயே நாம் ஆணையிட்டோம், நம் வாயிலிருந்து புறப்படுவது உண்மையே, பொய்யா மொழியே. 'எல்லா முழந்தாளும் நமக்கு மண்டியிடும், எல்லா நாவும் நம் பெயரால் ஆணையிடும்.' நம்மைப் பற்றி மக்கள் சொல்வது இதுவே: ஆண்டவர் ஒருவரிடம் மட்டுமே நீதியும் வல்லமையும் இருக்கின்றன. அவருக்கு எதிராய் எழுந்தவர் அனைவரும், வெட்கத்தோடு அவர்முன் வருவர். இஸ்ராயேலின் வழித்தோன்றல் அனைத்திற்கும் ஆண்டவர் வழியாகவே நீதி வழங்கப்படும்; அவர் வழியாகவே அவர்களுடைய புகழோங்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 84 : 8ab-9. 10 - 11. 12 - 13 (பல்லவி : இசை. 45 : 8)

பல்லவி : வானங்களே, மேலிருந்து பனி பொழியுங்கள்; மேகங்கள் நீதிமானைப் பொழிகவே.

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்ன வென்று நான் கேட்
பேன் : தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும் அவர் கூறுவது சமாதானமே.
9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில்
உள்ளது; அதனால் நம் நாட்டில் மாட்சிமை குடிகொள்ளும். பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும்
அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும்; நீதி நேர்மை வானத்தி
னின்று எட்டிப் பார்க்கும். பல்லவி

12 ஏனெனில் நன்மையானதை ஆண்டவர் அருள்வார். நம் நிலமும்
தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும்; மீட்பும் அவரைப் பின்தொடரும். பல்லவி

அல்லேலூயா இசை. 40 : 9 - 10

அல்லேலூயா. நற்செய்தி அறிவிப்பவனே, உன் குரலை எழுப்பி
இதோ, ஆண்டவராகிய கடவுள் வல்லமையோடு
வரப் போகிறார் என்று முழங்கு. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் கண்டதையும் கேட்டதையும் அருளப்பருக்கு அறிவியுங்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7 : 19 - 23

அக்காலத்தில் :

அருளப்பர் தம் சீடருள் இருவரை அழைத்து, "வரப்போகிறவர் நீர்தாமோ? வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ?" என்று கேட்டு வர யேசுவிடம் அனுப்பினார். அவர்கள் அவரிடம் வந்து, "வரப்போகிறவர் நீர்தாமோ? வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ?' என்று கேட்குமாறு ஸ்நாபக அருளப்பர் எங்களை உம்மிடம் அனுப்பினார்" என்று சொன்னார்கள்.

அந்நேரத்தில் நோய் நோக்காடுகளாலும், பொல்லாத ஆவிகளாலும் வருந்தியவர்களைக் குணமாக்கி, குருடர் பலருக்குப் பார்வை அளித்துக் கொண்டிருந்தார். அவர் அவர்களுக்கு மறுமொழியாக, "நீங்கள் போய்க் கண்டதையும் கேட்டதையும் அருளப்பருக்கு அறிவியுங்கள்: குருடர் பார்க்கின்றனர், முடவர் நடக்கின்றனர், தொழுநோயாளர் குணமடைகின்றனர், செவிடர் கேட்கின்றனர், இறந்தவர் உயிர்க்கின்றனர், எளியவருக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. என்னைப்பற்றி இடறல்படாதவன் பேறு பெற்றவன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

*இந்நாள் டிசம்பர் 17 அல்லது 18 ஆம் நாளாயிருக்க நேர்ந்தால் கீழ்க்கண்டுள்ள வாசகங்களை விடுத்து, டிசம்பர் 17 அல்லது 18 ஆம் நாளுக்குரிய வாசகங்களைப் பயன்படுத்தவும்.* (பக். 78)

## முதல் வாசகம்

**கைவிடப்பட்ட மனைவி போன்ற**
**உன்னை ஆண்டவர் அழைத்துள்ளார்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 54 : 1 - 10

பிள்ளை பெறாத மலடியே, மகிழ்ச்சியால் கூச்சலிடு! பிரசவ வேதனை அறாத மங்கையே, அக்களித்து ஆர்ப்பரி! ஏனெனில், கைவிடப்பட்டவளின் மக்கள் கணவனைக் கொண்டுள்ளவளின் மக்களை விடப் பலராயினர் என்கிறார் ஆண்டவர். உன் கூடாரத்தின் இடத்தை அகலப்படுத்து, உன் கூடாரத் துணிகளை தாராளமாய் விரித்துவிடு; இன்னும் கயிறுகளை நீளமாக்கு, கயிறு கட்டும் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலப்புறம் இடப்புறமாய்ப் பெருகி விரிவாய், உன் சந்ததியார் மக்களினங்களை உடைமையாக்கிக் கொள்வர்; பாழடைந்த நகரங்களில் குடியேறி வாழ்வர்.

அஞ்சாதே, ஏனெனில் நீ அவமானம் அடையமாட்டாய்; கலங்காதே, ஏனெனில் நீ வெட்கத்துக்குள்ளாகமாட்டாய்; உன் இளமையின் வெட்கத்தை மறந்து விடுவாய், உன் கைம்மையின் நிந்தையை இனி நினைக்கமாட்டாய். ஏனெனில் உன்னைப் படைத்தவரே உனக்குக் கணவன். 'சேனைகளின் ஆண்டவர்' என்பது அவர் பெயர்; இஸ்ராயேலின் பரிசுத்தரே உன் மீட்பர், உலகுக்கெல்லாம் கடவுள் என அழைக்கப்படுகிறார்.

ஏனெனில், கைவிடப்பட்டு மனம் நொந்தவளான மனைவியை அழைப்பதுபோலும், இளமை முதலே துணையாய் இருந்த ஒருத்தியை மண முறிவுக்குப் பின் அழைப்பது போலும் ஆண்டவர் உன்னை அழைக்கிறார், என்கிறார் உன்னுடைய கடவுள். குறுகிய காலந்தான் நாம் உன்னைக் கைவிட்டோம்; ஆனால், மிகுந்தஇரக்கத்தோடு உன்னைச் சேர்த்துக் கொள்வோம்.

பொங்கிய கோபத்தில் ஒரு நொடிப்பொழுது உன்னிடமிருந்து நம் முகத்தைத் திருப்பிக் கொண்டோம்; ஆயினும், முடிவில்லாத அன்போடு உன் மேல் இரக்கம் கொள்வோம், என்கிறார் உன் மீட்பராகிய ஆண்டவர்.

நோவே நாட்களில் நாம் செய்ததுபோல் இன்றும் செய்வோம். நோவே காலத்துப் பெருவெள்ளம் இனிமேல் மண்ணுலகை மூழ்கடிக்காது என்று ஆணையிட்டுச்சொன்னது போல், உன்மேல் சினங்கொள்ளவே மாட்டோம் என்றும், உன்னைக் கண்டனம் செய்யமாட்டோமென்றும் ஆணையிட்டு உனக்குச் சொல்லியுள்ளோம். மலைகள் நிலைபெயரலாம், குன்றுகள் அசைந்து போகலாம், ஆனால் உன்மீது நாம் கொண்ட அன்பு நிலை பெயராதிருக்கும்; நம் சமாதானத்தின் உடன்படிக்கை அசையாதிருக்கும் என்கிறார், உன்மேல் இரக்கம் கொள்ளும் ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 29:1. 3. 4-5. 10-11a. 12b (பல்லவி: 1a)*

பல்லவி: ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்; ஏனெனில், நீர் எனக்கு விடுதலையளித்தீர்.

1 ஆண்டவரே, உம்மைப்போற்றுகிறேன்; ஏனெனில், நீர் எனக்கு விடுதலை யளித்தீர்: என் எதிரிகள் என்னைக் கண்டு மகிழ்வுற விடவில்லை.

3 ஆண்டவரே, கீழுலகினின்று என் ஆன்மாவை வெளியேற்றினீர்; பாதாளப் படுகுழிக்குச் செல்பவர்களிடையினின்று என்னைக் காத்தீர். பல்லவி

4 புனிதர்களே, ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்; அவர் எத்துணை பரிசுத்தர் என்பதை நினைத்துப் போற்றுங்கள்.

5 ஏனெனில், அவரது சினம் ஒரு நொடிப்பொழுது மட்டுமே, அவரது தயவோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்; மாலையில் அழுகை என்றால் காலையில் உண்டாவது அக்களிப்பு. பல்லவி

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாய்த்தருளும், என் மீதிரங்கும். ஆண்டவரே, எனக்குத் துணைசெய்யும்.

11 என் அழுகையைக் களிநடனமாக மாற்றினீர்;
12 ஆண்டவராகிய என் இறைவா, என்றென்றும் உம்மைப் போற்றுவேன்.
பல்லவி

அல்லேலூயா லூக். 3:4, 6

அல்லேலூயா. ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவர் தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்.
மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அருளப்பர் ஆண்டவர்வழியை ஆயத்தம் செய்யும் தூதர்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:24-30

அருளப்பருடைய தூதர்கள் சென்ற பின்பு அவரைப்பற்றி மக்கட் கூட்டத்திற்கு யேசு சொன்னதாவது:

"எதைப் பார்க்கப் பாலைவனத்திற்குப் போனீர்கள்? காற்றில் அசையும் நாணலையோ? பின் எதைப் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய ஆடை அணிந்த மனிதனையோ? இதோ! அலங்கார ஆடை அணிந்து இன்பமாய் வாழ்வோர் அரச மாளிகையில் உள்ளனர். பின் எதைத்தான் பார்க்கப் போனீர்கள்? இறைவாக்கினரையா? ஆம், இறைவாக்கினருக்கும் மேலானவரைத்தான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இவரைப்பற்றித்தான், 'இதோ! என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவர் உமக்குமுன் உமது வழியை ஆயத்தம் செய்வார்' என்று எழுதியுள்ளது.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பெண்களிடம் பிறந்தவர்களுள் அருளப்பருக்கு மேலானவர் யாருமில்லை. ஆயினும் கடவுளுடைய அரசில் மிகச் சிறியவன், அவரினும் பெரியவன்."

அருளப்பர் சொன்னதை மக்கள் எல்லாரும் கேட்டு, அவர் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கடவுளின் திட்டம் ஏற்கத் தக்கது என்று காட்டினார்கள். ஆயக்காரரும்கூட ஞானஸ்நானம் பெற்றனர். ஆனால், பரிசேயரும் சட்ட வல்லுநரும் அவர் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெறாமல் கடவுளுடைய திட்டத்தைத் தங்களைப் பொறுத்த மட்டில் வீணாக்கினார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

*இந்நாள் டிசம்பர் 17 அல்லது 18-ஆம் நாளாயிருக்க நேர்ந்தால், கீழ்க்கண்டுள்ள வாசகங்களை விடுத்து, டிசம்பர் 17 அல்லது 18-ஆம் நாளுக்குரிய வாசகங்களைப் பயன்படுத்தவும் (பக்கம் 78).*

## முதல் வாசகம்

**நம் வீடு எல்லா மக்களினங்களுக்கும் செபவீடு.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 56: 1-3, 6-8

ஆண்டவர் கூறுகிறார்:

"நீதியைக் கடைப்பிடியுங்கள், நேர்மையானதைச் செய்யுங்கள்; ஏனெனில் நாம் தரப்போகும் மீட்பு அண்மையில் இருக்கிறது, நமது நீதி வெளியாகப் போகிறது. இவ்வாறு செய்கிறவன் பேறு பெற்றவன்; இதைக் கைக்கொண்டு ஓய்வு நாளை அவசங்கை செய்யாமல் அதைக் கடைப்பிடித்து, எவ்வகையிலும் தீமை செய்யாமல் தன் கையைக் காத்துக்கொள்ளுகிற மனிதனும் பேறு பெற்றவன்! ஆண்டவரை அணுகி வரும் அந்நியன், 'தம் மக்களிடமிருந்து திண்ணமாய் ஆண்டவர் என்னைப் பிரித்து விடுவார்' என்று சொல்லாதிருக்கட்டும்; அவ்வாறே அண்ணகனும், 'இதோ, நான் பட்ட மரந்தானே' என்று கூறுதிருக்கட்டும்.

ஆண்டவரிடம் அவரை வழிபடுவதற்காக அணுகி வந்து, அவருடைய அடியார்களாய் இருக்கும்படி ஆண்டவரின் திருப் பெயர்மேல் அன்புகூர்கிற அந்நியர்கள், ஓய்வு நாளை அவசங்கை செய்யாமல் அதைக் கடைப்பிடித்து நமது உடன்படிக்கையை உறுதியாய்ப் பற்றியிருந்தால், அவர்களை நமது பரிசுத்த மலைக்குக் கூட்டி வந்து நம் செப வீட்டில் அவர்கள் மகிழ்ந்திருக்கச் செய்வோம். நமது பீடத்தின் மேல் அவர்கள் தரும் தகனப் பலிகளும் மற்றப் பலிகளும் நமக்கு உகந்தவையாய் ஏற்கப்படும்; ஏனெனில், நம் வீடு எல்லா மக்களினங்களுக்கும் செப வீடு என வழங்கப்படும்."

இஸ்ராயேலில் சிதறிப் போனவர்களைக் கூட்டிச் சேர்க்கும் இறைவனாகிய ஆண்டவர் கூறுகிறார்: "ஏற்கெனவே கூட்டிச் சேர்க்கப்பட்டவர்கள் தவிர, இன்னும் மற்றவர்களையும் அவர்களோடு கூட்டிச் சேர்ப்போம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 66 : 1 - 2. 4. 6 - 7 (பல்லவி : 3)

பல்லவி : இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றுவார்களாக;
மக்கள் எல்லோரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.

1 கடவுள் நம் மீது இரங்கி, நமக்கு ஆசி அளிப்பாராக; நம் மீது தம் திருமுக ஒளியை வீசுவாராக.
2 அப்போது உலகம் உமது வழியை அறிந்து கொள்ளும்; மக்களினங்கள் எல்லாம் உமது மீட்பை உணரும். பல்லவி

4 நீதியோடு மக்களை ஆள்கின்றீர், உலகத்து மக்களினங்கள்மீது ஆட்சி செலுத்துகின்றீர் என்று நாடுகள் அனைத்தும் மகிழ்ந்து கூறட்டும். பல்லவி

6 பூமி தன் பலனைத் தந்தது; கடவுள் நமக்கு ஆசி அளித்தார்.
7 கடவுள் நமக்கு ஆசி அளிப்பாராக. மாநிலத்தின் கடையெல்லைவரை மக்கள் அவருக்கு அஞ்சுவார்களாக. பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. ஆண்டவரே, எழுந்தருளி வாரும், எம்மைச் சந்தித்துச் சமாதானம் தாரும்;
புனிதம் நிறை உள்ளத்தோடு உம் திருமுன் மகிழ்வோமாக.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அருளப்பர் எரிந்து சுடர்விடும் விளக்கு.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5 : 33 - 36

அக்காலத்தில் : யேசு யூதர்களை நோக்கிக் கூறியதாவது :

"நீங்கள் அருளப்பரிடம் ஆள் அனுப்பினீர்கள், அவரும் உண்மைக்குச் சாட்சியம் கூறினார். எனக்கோ மனிதன் தரும் சாட்சியம் தேவையில்லை. ஆனால் நீங்கள் மீட்புப் பெறும்படி இதை நினைவூட்டுகிறேன். அருளப்பர் எரிந்து சுடர்விடும் விளக்கு; அவருடைய ஒளியில் நீங்கள் சற்று நேரமே களிப்புற விரும்பினீர்கள்.

அருளப்பருடைய சாட்சியத்திலும் மேலான சாட்சியம் எனக்கு உண்டு. நான் செய்துமுடிக்கத் தந்தை எனக்கு அருளியுள்ள செயல்களே, நான் செய்துவரும் அச்செயல்களே, தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்குச் சான்று."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# அல்லேலூயா வசனங்கள்

## திருவருகைக் காலத்தில் டிசம்பர் 16 ஆம் நாள்வரை வரும் வாரநாட்களுக்கான வசனங்கள்

*வாசகங்கள் ஒவ்வொன்றுக்கும்பின் தரப்பட்டுள்ள அல்லேலூயா வசனங்களுக்குப் பதிலாகக் கீழ்க் கண்டவற்றைப் பயன்படுத்தலாம்.*

1 *சங். 79:3 காண்*

அல்லேலூயா. எங்கள் இறைவனுகிய ஆண்டவரே, எங்களை
மீட்க எழுந்து வாரும்;
உமது இன்முகம் காட்டி எங்களை
மீட்டருளும். அல்லேலூயா.

2 *சங். 84 : 7*

அல்லேலூயா. ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக்
காட்டியருளும்;
உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.
அல்லேலூயா.

3 *இசை. 33 : 22*

அல்லேலூயா. ஆண்டவர் நம்முடைய நீதிபதி, நமக்குச் சட்டம்
இயற்றுகிறவர், நம் அரசர்;
அவரே நம்முடைய மீட்பர். அல்லேலூயா.

4 *இசை. 40: 9-10*

அல்லேலூயா. நற்செய்தி அறிவிப்பவனே, உன் குரலை எழுப்பி
இதோ, ஆண்டவராகிய கடவுள் வல்லமையோடு
வரப்போகிறுர் என்று முழங்கு. அல்லேலூயா.

5 *இசை. 45:8*

அல்லேலூயா. வானங்களே, மேலிருந்து பனி பொழியுங்கள்;
மேகங்கள் நீதிமானைப் பொழிகவே;
நிலம் திறக்க, அதிலிருந்து மீட்பர் அரும்புகவே.
அல்லேலூயா.

6 *இசை. 55:6*

அல்லேலூயா. ஆண்டவரைக் கண்டடையக் கூடியபோதே,
அவரைத் தேடுங்கள்;
அவர் அண்மையில் இருக்கும்போதே, அவரைக்
கூவியழையுங்கள். அல்லேலூயா.

7

லூக். 3:4,6

அல்லேலூயா. ஆண்டவர்வழியை ஆயத்தப்படுத்துங்கள்;
அவர்தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள்;
மனிதரெல்லாரும் கடவுளின் மீட்பைக் காண்பர்.
அல்லேலூயா.

8

அல்லேலூயா. வாரும், ஆண்டவரே, காலந்தாழ்த்தாதேயும்;
உம் மக்களின் பாவங்களைப் போக்கியருளும்.
அல்லேலூயா.

9

அல்லேலூயா. இதோ, நம் ஆண்டவர் வல்லமையுடன் வருவார்;
தம் ஊழியரின் கண்களுக்கு ஒளி தருவார்.
அல்லேலூயா.

10

அல்லேலூயா. ஆண்டவரே, எழுந்தருளிவாரும், எம்மைச்சந்தித்து
சமாதானம் தாரும்;
புனிதம் நிறை உள்ளத்தோடு உம் திருமுன்
மகிழ்வோமாக. அல்லேலூயா.

11

அல்லேலூயா. இதோ, மாநிலத்தின் ஆண்டவராம் அரசர் வருவார்;
அவரே நமது அடிமைத்தனத்தின் நுகத்தடியை
அகற்றிடுவார். அல்லேலூயா.

12

அல்லேலூயா. ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது;
இதோ, அவர் நம்மை மீட்க வரவிருக்கிறார்.
அல்லேலூயா.

13

அல்லேலூயா. ஆண்டவர் வரவிருக்கிறார், அவரை எதிர்கொள்ளுங்கள்;
அமைதியின் அரசர் அவரே. அல்லேலூயா.

14

அல்லேலூயா. இதோ, ஆண்டவர் தம் மக்களை மீட்க வருவார்;
அவரை எதிர்கொள்ள ஆயத்தமாயிருப்போர்
பேறுபெற்றோர். அல்லேலூயா.

# திருவருகைக் காலம்–4ஆம் வாரம்

## ஞாயிறு – முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*இதோ, கன்னிப்பெண் கருத்தாங்குவாள்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7: 10-14

அந்நாட்களில் :

ஆண்டவர் ஆக்காசிடம் பேசி, "உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஓர் அடையாளம் காட்டும்படி கேள்; பாதாளத்தின் கீழோ, வானத்தின் மேலோ தோன்றும்படி கேட்கலாம்" என்றார்.

அதற்கு ஆக்காஸ், "நான் கேட்க மாட்டேன்; ஆண்டவரை நான் சோதிக்கமாட்டேன்" என்று சொன்னான்.

அப்பொழுது இசையாஸ் சொன்னார் : "அப்படியானால் தாவீதின் வீட்டாரே, கேளுங்கள் : மனிதரைச் சலிப்படையச் செய்தது போதாதென்று என் கடவுளையும் சலிப்படையச் செய்கிறீர்கள்? ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கோர் அடையாளம் தருவார் : இதோ, கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்; அவர் இம்மானுவேல் என்னும் பெயர் பெறுவார்." அதாவது, 'நம்மோடு கடவுள்'.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்:

*சங். 23: 1-2. 3-4ab. 5-6 (பல்லவி: 7c - 10b காண்)*

பல்லவி: **ஆண்டவர் எழுந்தருள்வார்: மாட்சிமிகு மன்னர் அவரே.**

1 மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன:
பூவுலகும் அதில் வாழும் குடிகள்யாவரும் அவர்தம் உடைமையே.
2 ஏனென்றால், கடல்களின்மீது பூவுலகை நிலை நிறுத்தியவர் அவரே:
ஆறுகளின்மீது அதை நிலைநாட்டியவர் அவரே. பல்லவி

3 ஆண்டவரது மலைமீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக்கூடியவன் யார்?
4 மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன்,
பயனற்றதில் மனத்தைச் செலுத்தாதவன். பல்லவி

5 இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான்:
இவனே தன்னைக் காக்கும் ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.
6 இறைவனைத் தேடும் மக்களினம் இதுவே.
யாக்கோபின் கடவுளது திருமுகம் நாடுவோர் இவர்களே. பல்லவி

## இரண்டாம் வாசகம்

***இறைமகன் யேசு கிறிஸ்து தாவீதின் வழி வந்தவர்.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 1-7.

இறைமக்களாகும்படி அழைக்கப்பட்டு, கடவுளின் அன்பைப் பெற்றிருக்கிற உரோமைக் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும், யேசு கிறிஸ்துவின் ஊழியனும், அப்போஸ்தலனாக அழைக்கப்பெற்றவனுமாகிய சின்னப்பன் யான் எழுதுவது:

நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும், சமாதானமும் உண்டாகுக.

நான், கடவுளின் நற்செய்தியை அறிவிக்கக் குறிக்கப்பட்டிருக்கிறேன். இந் நற்செய்தியை இறைவன் தம் இறைவாக்கினர் வழியாய் பரிசுத்த நூல்களில் ஏற்கெனவே வாக்களித்திருந்தார்; இந்நற்செய்தி அவருடைய மகனைப்பற்றியதாகும்: இவர், மனிதன் என்ற முறையில் தாவீதின் வழிவந்தவர்.

இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்ததனால் அவர் பரிசுத்த ஆவியைப் பெற்ற நிலையில் கடவுளின் வல்லமை விளங்கும் இறைமகனாக ஏற்படுத்தப் பட்டார். இவரே நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து; புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவசிக்குமாறு, அப்போஸ்தலப் பணிபுரியும் திரு அருளை இவருடைய பெயரின் மகிமைக்காக இவர்வழியாகவே பெற்றுக்கொண்டோம். அந்தப் புறவினத்தாரைச் சார்ந்த நீங்களும் இறைவனின் அழைப்பைப் பெற்று, யேசு கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்கிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா : மத். 1 : 23

அல்லேலூயா. இதோ, கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்;
அவருக்கு இம்மானுவேல். அதாவது, 'நம்மோடு கடவுள்,
என்று பெயரிடுவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

தாவீதின் மகனான சூசைக்கு மண ஒப்பந்தமான
மரியாளிடமிருந்து யேசு பிறப்பார்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 18 - 24

யேசு கிறிஸ்து தோன்றியது பின்வருமாறு:

அவருடைய தாய் மரியாளுக்கும் சூசைக்கும் மண ஒப்பந்தம் ஆயிருக்க, அவர்கள் கூடி வாழுமுன் பரிசுத்த ஆவியினால் அவள் கருத்தாங்கியிருப்பதாகத் தெரிந்தது. அவள் கணவர் சூசை நீதிமானாயும், அவளைக் காட்டிக்கொடுக்க மனமில்லாதவராயும் இருந்ததால் அவளை மறைவாக விலக்கிட வேண்டும் என்றிருந்தார்.

இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், இதோ ! ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "சூசையே, தாவீதின் மகனே, உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்; ஏனெனில் அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான். அவள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்; அவருக்கு யேசு என்று பெயரிடுவீர். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார்.

“இதோ! கன்னி கருத்தாங்கி மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர்” என்று ஆண்டவர் இறைவாக்கினர் வாயிலாகக் கூறியது நிறைவேறும்படியே இவையனைத்தும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால், ‘நம்மோடு கடவுள்’ என்பது பொருள்.

சூசை விழித்தெழுந்து, ஆண்டவரின் தூதர் கட்டளையிட்டவாறு, தம் மனைவியை ஏற்றுக் கொண்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*தாவிதின் அரசு ஆண்டவர் முன்பாக என்றென்றும் நிலைத்திருக்கும்.*

சாமுவேல் இரண்டாம் ஆகமத்திலிருந்து வாசகம் 7:1-5. 8b-12. 14a.16

தாவீது அரசர் தம் மாளிகையில் குடியேறின பிறகு, நாற்புறத்திலுமுள்ள அவருடைய பகைவர் அனைவரும் ஆண்டவருடைய அருளால் அவரோடு சமாதானமாய் இருந்ததைக்கண்டு, அவர் இறைவாக்கினர் நாத்தானை நோக்கி, “கேதுரு மரங்களால் கட்டப்பட்ட வீட்டில் நான் வாழும்போது, ஆண்டவருடைய பேழை தோல்திரைகளின் நடுவில் வைக்கப்பட்டிருப்பதை நீர் பார்ப்பதில்லையா?” என்றார்.

அப்பொழுது நாத்தான் அரசரை நோக்கி, “ஆண்டவர் உம்மோடு இருப்பதால், நீர் விரும்பியபடி எல்லாம் செய்யும்” என்றார். அன்றிரவே ஆண்டவருடைய வார்த்தை நாத்தானுக்கு வந்தது: “நீ போய் நம் ஊழியன் தாவீதை நோக்கி இவ்வாறு சொல்வாயாக:

‘ஆண்டவர் சொல்லுகிறதாவது: நாம் வாழ்வதற்கு ஒரு வீட்டை நீ கட்டமாட்டாயோ? நீ ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கையில் நாம் உன்னை அழைத்து நம் மக்கள் இஸ்ராயேலுக்குத் தலைவனாய் இருக்கச் செய்தோம். நீ சென்ற இடங்களில் எல்லாம் நாம் உன்னோடு இருந்து, உன் எதிரிகளை எல்லாம் உனக்கு முன்பாக அழித்து, பூமியிலிருக்கிற பெரியோர்களின் பெயருக்கொத்த சிறந்த பெயரை உனக்குத் தந்தோம். நம் மக்கள் இஸ்ராயேலை ஓர் இடத்தில் நிலைநிறுத்துவோம்; அவர்களை அவ்விடத்தில் உறுதிப்படுத்துவோம். அவர்கள் அங்குக் குடியேறி முன்போல் அலைக்கழிக்கப்படமாட்டார்கள்; நம் மக்கள் இஸ்ராயேலின்மேல் நீதிபதி

களை ஏற்படுத்தின நாள்வரை நடந்ததுபோல், அக்கிரமிகள் அவர்களை மறுபடியும் துன்பப்படுத்த மாட்டார்கள். உன் எதிரிகளில் யாரும் உன்னைச் சிறுமைப்படுத்தாமல் சமாதானமாய் இருக்கச் செய்வோம். மேலும் ஆண்டவரே உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்று ஆண்டவர் உனக்கு அறிவிக்கிறார்.

பிறகு, உன் வாழ்நாள் முடிந்து நீ உன் முன்னோருடன் துயில் கொள்ளும்பொழுது, உனக்குப் பிறக்கும் ஒரு மகனை உனக்குப்பின் நாம் உயர்த்தி அவனது அரசை நிலைநாட்டுவோம். நாம் அவனுக்குத் தந்தையாக இருப்போம்; அவனும் நமக்கு மகனாக இருப்பான்.

உன் வீடோ பிரமாணிக்கமாய் இருக்கும். உன் அரசோ என்றென்றும் உனக்கு முன்பாக இருக்கும்; உன் அரியணை என்றும் நிலை பெற்றிருக்கும்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 88 : 1 - 2. 3 - 4. 26. 28 (பல்லவி: 1a காண்)*

*பல்லவி:* ஆண்டவரே, உம் அருட்செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன்.

1 ஆண்டவரின் அருட் செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன் ; உமது சொல்லுறுதியை எல்லாத் தலைமுறைகளுக்கும் என் நாவால் எடுத்துரைப்பேன்.
2 ஏனெனில் ''என்றென்றும் உள்ளது எம் அருளன்பு'' என்று நீர் கூறினீர் : உமது சொல்லுறுதிக்கு வானகமே அடித்தளம். பல்லவி

3 ''நான் தேர்ந்தெடுத்தவரோடு உடன்படிக்கை செய்து கொண்டேன், என் ஊழியன் தாவீதுக்கு ஆணையிட்டுக் கூறியது :
4 உன் சந்ததியை என்றென்றும் நிலைநாட்டுவேன். எல்லாத் தலைமுறைகளிலும் உன் அரியணை நிலைக்கச் செய்வேன்.'' பல்லவி

26 நீரே என் தந்தை, என் இறைவன், எனக்கு மீட்பளிக்கும் அரண் என்று என்னை நோக்கிக் கூறுவார்.
28 என்றென்றும் என் அருளன்பை அவர் மேல் பொழிவேன் ; அவரோடு நான் செய்த உடன்படிக்கை நிலைத்திருக்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**மீட்பின் மறைபொருள் ஊழி ஊழிக்காலமாக மறைவாயிருந்து இப்பொழுது அறிவிக்கப்படுகிறது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *16 : 25 - 27*

சகோதரர்களே :

ஊழி ஊழிக் காலமாக மறைவாயிருந்து இப்பொழுது வெளியாக்கப்பட்டு முடிவில்லா கடவுளின் திட்டத்திற்கொப்ப, புறவினத்தார் அனைவரும் கீழ்ப்படிந்து விசுவசிக்குமாறு இறைவாக்குகளின் மூலமாய் அறிவிக்கப்பட்ட மறைபொருளை வெளிப்படுத்தும் என் நற்செய்தியின்படியும், யேசுகிறிஸ்துவைப்பற்றிய தூதுரையின்படியும், உங்களை உறுதிப்படுத்த வல்லவரும், ஞானமே உருவும் ஆன கடவுள் ஒருவருக்கே யேசுகிறிஸ்து வழியாய் என்றென்றும் மகிமை உண்டாவதாக! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா *லூக். 1 : 38*

அல்லேலூயா. இதோ! ஆண்டவருடைய அடிமை:
உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இதோ! நீர் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *1:26 - 38*

அக்காலத்தில் :

கபிரியேல் தூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னிகையிடம் அனுப்பினார். அவள் தாவீது குலத்தவராகிய சூசை என்பவருக்கு மண ஒப்பந்தமானவள். அவள் பெயர் மரியாள்.

தூதர் அவளது இல்லம்சென்று, "அருள் நிறைந்தவளே வாழ்க, ஆண்டவர் உம்முடனே," என்றார். இவ்வார்த்தைகளை அவள் கேட்டுக் கலங்கி, இவ்வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது வானதூதர் அவளைப் பார்த்து, "மரியே, அஞ்சாதீர்; கடவுளின் அருளை அடைந்துள்ளீர். இதோ! உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு யேசு என்னும் பெயரிடுவீர். அவர் மேன்மை மிக்கவராயிருப்பார்; உன்னதரின் மகன் எனப்படுவார்; அவருடைய தந்தையான தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்; அவர் யாக்கோபின் குலத்தின்மீது என்றென்றும் அரசாள்வார்; அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார்.

மரியாள் தூதரிடம், "இது எங்ஙனம் ஆகும்? நானோ கணவனை அறியேனே" என்றாள்.

அதற்கு வானதூதர், "பரிசுத்த ஆவி உம்மீது வருவார்; உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் திருக்குழந்தை கடவுளுடைய மகன் எனப்படும். இதோ! உம் உறவினளான எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறாள்; மலடி எனப்படும் அவளுக்கு இது ஆறாம் மாதம்; ஏனெனில், கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" என்றார்.

மரியாளோ, "இதோ! ஆண்டவருடைய அடிமை; உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்றாள். என்றதும், வானதூதர் அவளிடமிருந்து அகன்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இஸ்ராயேலை ஆள்பவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்.**

**இறைவாக்கினர் மிக்கேயாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 5: 2-5a

**ஆண்டவர் கூறுவதாவது:**

நீயோ, எப்பிராத்தா எனப்படும் பெத்லெகேமே, யூதாவின் கோத்திரங்களுள் நீ மிகச் சிறியதாயினும், இஸ்ராயேலில் ஆட்சி செலுத்தப் போகிறவர் உன்னிடமிருந்தே எனக்கென்று தோன்றுவார்; பண்டை நாட்களிலிருந்தே, பழங்காலத்திலிருந்தே வருகிற கால்வழியில் தோன்றுவார். ஆதலால், பேறுகால வேதனையிலிருப்பவள் பிள்ளை

பேறுபவளை, அவர்களை அவர் கைவிட்டுவிடுவார்; அப்பொழுது அவருடைய சகோதரர்களுள் எஞ்சியிருப்போர் இஸ்ரயேல் மக்களிடம் திரும்பி வருவார்கள். அவர் தோன்றி, ஆண்டவருடைய வல்லமையோடும், தம் கடவுளாகிய ஆண்டவரது பெயரின் மாட்சியோடும் தமது மந்தையை மேய்ப்பார்.

அவர்களும் அச்சமின்றி வாழ்வார்கள்; ஏனெனில், இப்பொழுது உலகத்தின் இறுதி எல்லைகள் வரை அவர் பெரியவராய் விளங்கப் போகிறார். அவர்களுக்கு அவரே சமாதானமாய் இருப்பார்.

## பதிலுரைப் பாடல்

சங். 79:1அஇ-2ஆ,14-15,17-18 (பல்லவி: 3)

பல்லவி: இறைவா, எங்களை மனமாற்றியருளும்,
உமது இன்முகமும் காட்டி எங்களை மீட்டருளும்

இஸ்ரயேலின் மேய்ப்பரே, செவிசாய்த்தருளும்;
கெருபீன்களின் மேல் வீற்றிருப்பவரே, ஒளிவீசும்.
2 உமது வல்லமையைத் தூண்டி எழுந்தருளும்;
எம்மை மீட்க எழுந்து வாரும். பல்லவி

14 படைகளின் இறைவனே, மீண்டும் எழுந்து வாரும்;
வானின்று கண்ணோக்கிப் பாரும், இத் திராட்சைக் கொடியை வந்து பாரும்.
15 உமது வலக்கரத்தால் நீர் நட்டதைப் பாதுகாத்தருளும்;
உமக்கென உறுதிப்படுத்திய மனிதனை உமது வலக்கரம் காப்பதாக. பல்லவி

17 உமது வலக்கரத்தால் தேர்ந்தெடுத்த ஆளை உமது கைவன்மை காப்பதாக.
உமக்கென உறுதிப்படுத்திய மனிதனை அது காப்பதாக.
18 இனி நாங்கள் உம்மைவிட்டு அகலோம்; உயிரோடு எங்களை நீர் காத்தருள்வீர்;
உமது பெயரை நாங்கள் போற்றுவோம். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இதோ, உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 10:5-10

சகோதரர்களே :

உலகிற்கு வரும்போது கிறிஸ்து: "பலியோ, காணிக்கையோ, நீர் விரும்பவில்லை; ஆனல், எனக்கு ஓர் உடலை அமைத்தளித்தீர்; தகனப் பலிகளோ, பாவப் பரிகாரப் பலிகளோ உமக்கு உகந்தவையாய் இல்லை. அப்பொழுது நான் கூறியது, இதோ! இறைவா, உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன், என்னைக் குறித்தே மறைநூற் சுருளில் எழுதியுள்ளது" என்கிறார்.

திருச்சட்டப்படி ஒப்புக்கொடுக்கப்பட்டபோதிலும், 'பலிகள், காணிக்கைகள், தகனப் பலிகள், பாவப் பரிகாரப் பலிகள் இவற்றையெல்லாம் நீர் விரும்பவில்லை. இவை உமக்கு உகந்தவையாய் இல்லை' என்று முதலில் கூறுகிறார். பின்பு, 'இதோ இறைவா, உமது திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன்' என்கிறார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை எடுத்துவிடுகிறார். இந்தத் திருவுளத்தால்தான், ஒரே முறையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட யேசு கிறிஸ்துவுடைய உடலின் பலியால் நாம் பரிசுத்தராக்கப்பட்டோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* லூக். 1:38

அல்லேலூயா. இதோ! ஆண்டவருடைய அடிமை: உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றது எப்படி?**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:39-45

அந்நாட்களில், மரியாள் புறப்பட்டு யூதாவிலே மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்று, சக்கரியாசின் வீட்டிற்கு வந்து எலிசபெத்தை வாழ்த்தினாள்.

மரியாளின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபோதே அவள் வயிற்றிலிருந்த குழந்தை அக்களித்தது; எலிசபெத்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, "பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே; உம் வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே. என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் யார்? உமது வாழ்த்து என் காதில் ஒலித்ததும், என் வயிற்றிலிருந்த குழந்தை அக்களிப்பால் துள்ளியது. ஆண்டவர் சொன்னவை நிறைவேறும் என்று விசுவசித்த நீர் பேறு பெற்றவரே" என்று உரக்கக் கூவினாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

டிசம்பர் 17 முதல் 24 வரை உள்ள
திருவருகைக் கால வார நாட்கள்

## டிசம்பர் 17

### முதல் வாசகம்

செங்கோல் யூதாவை விட்டு நீங்காது.

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 49 : 1-2, 8-10

அந்நாட்களில் :

யாக்கோபு தம் புதல்வர்களை வரவழைத்து அவர்களுக்குக் கூறியதாவது: "நீங்கள் கூடிவாருங்கள், கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரியங்களை நான் உங்களுக்கு அறிவிக்கப் போகிறேன். கூடிவந்து கேட்டுக் கொள்ளுங்கள். யாக்கோபின் புதல்வர்களே, உங்கள் தந்தையாகிய இஸ்ராயேலுக்குச் செவி கொடுங்கள்."

"யூதாவே, உன் சகோதரர் உன்னைத் துதித்துப் புகழ்வார்கள். உன் கை உன் பகைவருடைய தலையின் மேல் இருக்கும். உன் தந்தையின் புதல்வர்கள் உன்னை வணங்குவார்கள். யூதா சிங்கக் குட்டியாம். இரையைக் கவர எழுந்தாய், என் மகனே. ஆண் சிங்கத்தைப் போலும் பெண் சிங்கத்தைப் போலும் இளைப்பாற மடங்கிப் படுத்தாய். அவனைத் தட்டி எழுப்புகிறவன் யார்? அனுப்பப்பட இருக்கிறவர் வரும் வரையிலும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை; அவனுடைய சந்ததியை விட்டுக் கடவுள் விலகுவதும் இல்லை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 71: 1-2; 3-4ab 7-8. 17 (பல்லவி: 7காண்)

பல்லவி: அவருடைய நாட்களில் நீதி செழித்தோங்கும்;
மிகுந்த சமாதானம் என்றென்றும் நிலைபெறும்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச்செய்யும்:
அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.
2 நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக.
உம்முடையவரான எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

3 மலைகள் உம் மக்களுக்குச் சமாதானம் தருவனவாக.
குன்றுகள் நீதியைக் காப்பனவாக.
4 எளிய மக்களை அவர் காப்பாராக,
ஏழைகளின் மக்களை அவர் பாதுகாப்பாராக. பல்லவி

7 அவரது ஆட்சியின் நாளில் நீதி செழித்தோங்கும்;
நிலவு இருக்கும் வரையில் சமாதானம் நிலைபெறும்.
8 ஒரு கடலினின்றும் மறு கடல் வரைக்கும்
அவர் அதிகாரம் செலுத்துவார்; நதியினின்று
உலகின் எல்லைவரை அவர் ஆள்வார். பல்லவி

17 அவரது பெயர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவதாக.
கதிரோன் இருக்கும்வரை அவரது பேரும் புகழும் நிலைப்பதாக.
அவர் வழியாய்ப் பூவுலக இனத்தார் அனைவரும் ஆசிபெறுவர்.
மக்கள் இனத்தார் அனைவரும் அவரைப் பேறுபெற்றவர்
எனப் போற்றிப் புகழ்வர். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. உன்னதரின் ஞானமே,
ஆற்றலுடன் அனைத்தையும் அன்பாய் நடத்துகின்றவரே,
எங்களுக்கு உண்மையின் வழி காட்ட வந்தருளும்.
அல்லேலூயா.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் தரப்பட்டிருக்கும் அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக, 98 ஆம் பக்கத்திலுள்ளவற்றிலிருந்து ஏதாவது ஒன்றைப் பயன் படுத்தலாம்.

## நற்செய்தி வாசகம்

*இயேசு கிறிஸ்துவின் தலைமுறை அட்டவணை.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 1-17

தாவீதின் மகனும், ஆபிரகாமின் மகனுமாகிய யேசு கிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையாவது:

ஆபிரகாமுக்கு ஈசாக்கு பிறந்தார். ஈசாக்குக்கு யாக்கோபு பிறந்தார். யாக்கோபுக்கு யூதாவும் அவருடைய சகோதரர்களும் பிறந்தார்கள். யூதாவுக்கு பாரேசும் சாராவும் தாமாரிடம் பிறந்தார்கள். பாரேசுக்கு எஸ்ரோம் பிறந்தார். எஸ்ரோமுக்கு ஆராம் பிறந்தார். ஆராமுக்கு அம்மினதாப் பிறந்தார். அம்மினதாபுக்கு நகசோன் பிறந்தார். நகசோனுக்கு சல்மோன்பிறந்தார். சல்மோனுக்கு ராகாபிடம் போவாஸ் பிறந்தார். போவாசுக்கு ரூத்திடம் ஓபேத் பிறந்தார். ஓபேதுக்கு ஈசாய் பிறந்தார். ஈசாயுக்கு தாவீது அரசன் பிறந்தார்.

தாவீதுக்கு உரியாவின் மனைவியிடம் சாலொமோன் பிறந்தார். சாலொமோனுக்கு ரெகொபெயாம் பிறந்தார். ரெகொபெயாமுக்கு அபியா பிறந்தார். அபியாவுக்கு ஆசா பிறந்தார். ஆசாவுக்கு யோசபாத் பிறந்தார். யோசபாத்துக்கு யோராம் பிறந்தார். யோராமுக்கு உசியா பிறந்தார். உசியாவுக்கு யோதாம் பிறந்தார். யோதாமுக்கு ஆகாஸ் பிறந்தார். ஆகாசுக்கு எசேக்கியா பிறந்தார். எசேக்கியாவுக்கு மனாசே பிறந்தார். மனாசேயுக்கு ஆமோன் பிறந்தார். ஆமோனுக்கு யோசியா பிறந்தார். யோசியாவுக்கு எகொனியாவும், அவருடைய சகோதரர்களும் பிறந்தார்கள். பாபிலோனுக்கு யூதர்கள் நாடு கடத்தப்பட்டது இக்காலத்தில் தான்.

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபின் எகொனியாவுக்கு சலாத்தியேல் பிறந்தார், சலாத்தியேலுக்கு சொரொபாபேல் பிறந்தார். சொரொபாபேலுக்கு அபியூத் பிறந்தார். அபியூத்துக்கு எலியாக்கீம் பிறந்தார். எலியாக்கீமுக்கு ஆசோர் பிறந்தார். ஆசோருக்கு சாதோக்கு பிறந்தார். சாதோக்குக்கு ஆகீம் பிறந்தார். ஆகீமுக்கு எலியூத் பிறந்தார். எலியூதுக்கு எலெயாசார் பிறந்தார். எலெயாசாருக்கு மாத்தான் பிறந்தார். மாத்தானுக்கு யாக்கோபு பிறந்தார். யாக்கோபுக்கு மரியாளின் கணவரான சூசை பிறந்தார். இவளிடம் கிறிஸ்து என்னும் யேசு பிறந்தார்.

ஆகமொத்தம்: ஆபிரகாம்முதல் தாவீதுவரை தலைமுறை பதினான்கு: தாவீதுமுதல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதுவரை தலைமுறை பதினான்கு: பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதுமுதல் கிறிஸ்துவரை தலைமுறை பதினான்கு.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

# டிசம்பர் 18

## முதல் வாசகம்

***நீதியுள்ள 'தளிர்' தாவீது குலத்தில் தோன்றுவார்.***

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *23:5-8*

"நாட்கள் வருகின்றன,-ஆண்டவர் கூறுகிறார்- நீதியுள்ள 'தளிரை' தாவீதுக்குப் பிறப்பிப்போம்; அரசராக இருந்து அவர் ஆட்சி செய்வார்; அவர் ஞானமுள்ளவராய் இருப்பார்; நாட்டில் நியாயத்தையும் நீதியையும் செலுத்துவார். அந்நாட்களில் யூதா மீட்புப் பெறும்; இஸ்ராயேல் நம்பிக்கையோடு வாழும்; 'ஆண்டவர் நமது நீதி' என்பதே அவருக்குப் பெயராய் வழங்கும்.

"ஆதலால், இதோ நாட்கள் வருகின்றன, என்கிறார் ஆண்டவர்; அந்நாட்களில், 'எகிப்து நாட்டினின்று இஸ்ராயேல் மக்களை மீட்டு வந்த ஆண்டவரின் உயிர்மேல் ஆணை' என்று இனி மக்கள் சொல்லமாட்டார்கள்; 'வட நாட்டினின்றும், அவர்கள் துரத்தப்பட்டிருந்த எல்லா நாடுகளினின்றும் இஸ்ராயேல் வீட்டாரின் சந்ததியை மீட்டுத் திரும்ப அழைத்து வந்த ஆண்டவரின் உயிர்மேல் ஆணை' என்றே இனிச் சொல்வார்கள்; அப்போது அவர்கள் தங்கள் சொந்த நாட்டில் வாழ்வார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 71:1-2. 12-13. 18-19 (பல்லவி:7 காண்)*

பல்லவி: அவருடைய நாட்களில் நீதி செழித்தோங்கும்; மிகுந்த சமாதானம் என்றென்றும் நிலைபெறும்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச் செய்யும்:
அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.
2 நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக: உம்முடையவரான
எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

12 தம்மைக் கூவி அழைக்கும் ஏழைக்கும் அவர் விடுதலை தருவார்;
திக்கற்ற எளியவனை விடுவிப்பார்.
13 ஏழை எளியவர்மீது இரக்கம் கொள்வார்; ஏழைகளின் வாழ்வை
மலரச் செய்வார். பல்லவி

18 இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவர் போற்றி. அவர் ஒருவரே
வியத்தகு செயல்களைச் செய்கிறார்.
19 மாட்சிமை விளங்கும் அவரது பெயர் என்றென்றும் வாழ்த்துப் பெறுவ
தாக. வையகம் அனைத்தும் அவர் புகழால் நிரம்புவதாக. ஆமென்,
ஆமென். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இஸ்ராயேல் குடும்பத்தின் தலைவரே, சீனாய் மலை மீது மோயீசனுக்குத் திருச்சட்டம் ஈந்தவரே, திருக்கரம் நீட்டி எங்களை மீட்க வந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*தாவீதின் மகனான சூசைக்கு மண ஒப்பந்தமான மரியாளிடமிருந்து யேசு பிறப்பார்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 18 - 24

யேசுகிறிஸ்து தோன்றியது பின்வருமாறு:

அவருடைய தாய் மரியாளுக்கும் சூசைக்கும் மண ஒப்பந்தம் ஆயிருக்க, அவர்கள் கூடிவாழுமுன் பரிசுத்த ஆவியினால் அவள் கருத்தாங்கியிருப்பதாகத் தெரிந்தது; அவள் கணவர் சூசை நீதிமானாயும், அவளைக் காட்டிக் கொடுக்க மனமில்லாதவராயும் இருந்ததால் அவளை மறைவாக விலக்கிவிட வேண்டும் என்றிருந்தார்.

இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், இதோ! ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "சூசையே, தாவீதின் மகனே, உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம்; ஏனெனில், அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான். அவள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு யேசு என்று பெயரிடுவீர். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார்.

'இதோ! கன்னி கருத்தாங்கி மகனைப் பெற்றெடுப்பாள், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர்' என்று ஆண்டவர் இறைவாக்கினர்

வாயிலாகக் கூறியது நிறைவேறும்படியே இவையனைத்தும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால், ' நம்மோடு கடவுள் ' என்பது பொருள்.

சூசை விழித்தெழுந்து, ஆண்டவரின் தூதர் கட்டளையிட்டவாறு தம் மனைவியை ஏற்றுக் கொண்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 19

## முதல் வாசகம்

***சாம்சனின் பிறப்பு முன்னறிவிக்கப்படுகிறது.***

*நீதிபதிகள் ஆகமத்திலிருந்து வாசகம்* *13:2-7,24-25a*

*அந்நாட்களில்:*

சாராவில் தான்கோத்திரத்தானான மனுவே என்ற ஒருவன் இருந்தான். அவன் மனைவி மலடியாய் இருந்தாள். அவளுக்கு ஆண்டவரின் தூதர் தோன்றி அவளை நோக்கி, "பிள்ளைகள் இல்லாத மலடி நீ; ஆனால் கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவாய். எனவே, நீ திராட்சை இரசமோ மதுபானமோ அருந்தாமலும், அசுத்த உணவுகளை உண்ணாமலும் எச்சரிக்கையாய் இரு. ஏனெனில், நீ கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவாய். அவன் தலைமேல் கத்தி படலாகாது. அவன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாசரேயனாய் இருப்பான். அவனே இஸ்ராயேலரைப் பிலிஸ்தியர் கைகளினின்று மீட்பான்" என்றார்.

அப்பொழுது, அவள் தன் கணவனிடம் வந்து அவனை நோக்கி, "வானவனின் முகத்தையுடைய அச்சம் தரும் கடவுளின் மனிதர் ஒருவர் என்னிடம் வந்தார். அவர் யார் என்றும், எங்கிருந்து வந்தவர் என்றும், பெயர் என்ன என்றும் நான் கேட்டேன். அவர் எனக்குப் பதில் கூறாது என்னை நோக்கி, நீ கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவாய்; நீ திராட்சை இரசமோ, மதுபானமோ அருந்தாமலும், அசுத்த உணவுகளை உண்ணாமலும் எச்சரிக்கையாய் இரு. ஏனெனில், அவன் பிறந்தது முதல் சாகும் வரை தன் வாழ்நாள் முழுவதும் கடவுளின் நாசரேயனாய் இருப்பான் என்றார்" என்று கூறினாள்.

பிறகு அவள் ஒரு மகனைப் பெற்று அவனுக்குச் சாம்சன் என்று பெயரிட்டாள். பிள்ளை வளர்ந்து ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டான். பிறகு அவன் சாராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளையத்திலிருக்கும்போது ஆண்டவரின் ஆவி அவன்மேல் இருக்கத் தொடங்கிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 70: 3-4a. 5-6ab. 16-17 (பல்லவி: 8ab காண்)*

பல்லவி: நாளெல்லாம் உம்மை நான் வாயாரப் போற்றுகிறேன்.

3 என் அடைக்கலப் பாறையாக நீர் இருந்தருளும்;
கோட்டை அரணாயிருந்து என்னை மீட்டருளும்:
ஏனெனில், நீர் எனக்குக் கற்பாறையாகவும் அரணாகவும் இருக்கிறீர்.
4 தீயவனின் கையினின்று, என் இறைவா, என்னை விடுவித்தருளும். பல்லவி

5 ஏனெனில், என் இறைவா, நான் உம்மையே எதிர்நோக்கி வாழ்கிறேன்:
ஆண்டவரே, என் இளமையிலிருந்து நீரே என் நம்பிக்கை.
6 பிறப்பிலிருந்து நீரே எனக்கு ஆதாரம்;
தாயின் வயிற்றிலிருந்து நீரே என் பாதுகாப்பு. பல்லவி

16 இறைவனின் வல்லமையை எடுத்துரைப்பேன்: ஆண்டவரே,
உமக்கு மட்டுமே உரிய நீதி நேர்மையைப் புகழ்ந்து உரைப்பேன்.
17 இறைவா, நீர் எனக்கு என் இளமையிலிருந்தே அறிவு புகட்டினீர்:
இந்நாள்வரை நான் உமது வியத்தகு செயல்களை வெளிப்படுத்துகிறேன்.
பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. யெஸ்ஸேயின் குலக்கொழுந்தே, மக்களுக்கோர் அருஞ் சின்னமே, எமைமீட்க எழுந்தருளும். தாமதம் செய்யாதேயும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***ஸ்நாபக அருளப்பரின் பிறப்பு முன்னறிவிக்கப்படுகிறது.***

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1: 5-25

ஏரோது யூதேயா நாட்டு அரசனாக இருந்த காலத்தில், அபியா வகுப்பைச் சார்ந்த சக்கரியாஸ் என்னும் குரு ஒருவர் இருந்தார். அவர் மனைவி, ஆரோன் குலத்தவள்; பெயர் எலிசபெத்து. இவ்விருவரும்

ஆண்டவருடைய கற்பனைகள் முறைமைகளின்படி குறைகூற இடமில்லாமல் கடவுள் முன்னிலையில் நீதிமான்களாய் நடந்து வந்தனர். எலிசபெத்து மலடியாய் இருந்தமையால், அவர்களுக்கு மகப்பேறு இல்லை. மேலும், இருவரும் வயது முதிர்ந்தவர்களாயும் இருந்தனர்.

இவ்வாறு இருக்க, தம் பிரிவின்முறை வந்தபோது சக்கரியாஸ் கடவுள் முன்னிலையில் குருத்துவப் பணி செய்து வருகையில், இறை வழிபாட்டு முறைமைப்படி ஆலயத்துள் சென்று தூபங்காட்ட அவருக்குச் சீட்டு விழுந்தது. தூபங்காட்டுகிற வேளையிலே, மக்களெல்லாரும் கூட்டமாய் வெளியே செபித்துக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது ஆண்டவருடைய தூதர் தூபப்பீடத்தின் வலப் பக்கத்தில் நின்ற வண்ணம் அவருக்குத் தோன்றினார். அவரைக் கண்டு சக்கரியாஸ் கலங்கினார்; அவரை அச்சம் ஆட்கொண்டது. வானதூதர் அவரிடம், "சக்கரியாசே, அஞ்சாதே, உன் வேண்டுகோள் ஏற்கப்பெற்றது. உன் மனைவி எலிசபெத்து உனக்கு ஒரு மகனைப் பெறுவாள். அவருக்கு 'அருளப்பர்' என்று பெயரிடுவாய். உனக்கு அகமகிழ்வும் அக்களிப்பும் உண்டாகும். அக்குழந்தையின் பிறப்பால் பலரும் மனமகிழ்வர். அவர் ஆண்டவர் முன்னிலையில் மேலானவராய் இருப்பார்; திராட்சை இரசமோ மதுவோ குடிக்கமாட்டார். தாய்வயிற்றில் இருக்கும்போதே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெறுவார். அவர் இஸ்ராயேலர் பலரை அவர்களுடைய கடவுளாகிய ஆண்டவர் பக்கம் திருப்புவார். தந்தையரையும் மக்களையும் ஒப்புரவாக்குவார். இறைவனுக்கு அடங்காதவர்களை நீதிமான்களின் மனநிலைக்குத் திருப்புவார். இவ்வாறு, ஆண்டவருக்கு ஏற்ற மக்களை ஆயத்தப்படுத்துவார். எலியாசை ஆட்கொண்டிருந்த தேவ ஆவியும் வல்லமையும் உடையவராய் அவர் ஆண்டவருக்கு முன்னே செல்வார்" என்றார்.

சக்கரியாஸ், தூதரிடம், "இவையாவும் நிகழும் என எனக்கு எப்படித் தெரியும்? நானோ வயதானவன், என் மனைவியும் வயது முதிர்ந்தவள்" என்றார். அதற்குத் தூதர், "நான் கடவுளின் திருமுன் நிற்கும் கபிரியேல். உன்னிடம் பேசவும், இந்நற்செய்தியை உனக்கு அறிவிக்கவும் அனுப்பப்பெற்றேன். இதோ! இவை நடைபெறும் நாள்வரை நீ பேசாமலும், பேசமுடியாமலும் இருப்பாய். ஏனெனில் உரிய காலத்தில் நிறைவேறும் என் சொல்லை நீ நம்பவில்லை" என்றார்.

மக்கள் சக்கரியாசுக்காகக் காத்திருந்தனர். ஆலயத்தில் அவர் காலந்தாழ்த்தியதுபற்றி வியப்படைந்தனர். அவர் வெளியே வந்தபொழுது, அவர்களிடம் பேசமுடியவில்லை. ஆலயத்தில் ஏதோ காட்சி கண்டிருக்கவேண்டும் என்று அவர்கள் அறிந்துகொண்டார்கள். அவர், அவர்களுக்குச் சைகைகள் காட்டி நின்றார். அதுமுதல் ஊமையாகவே இருந்தார்.

தம்முடைய திருப்பணி நாட்கள் கடந்ததும் அவர் வீடு திரும்பினார். அடுத்து அவர் மனைவி எலிசபெத்து கருத்தரித்து ஐந்து மாதமளவும் பிறர் கண்ணில் படாதிருந்து, "மக்களுக்குள் எனக்கிருந்த இழிவைப் போக்க ஆண்டவர் என்னைக் கடைக்கண் நோக்கி, இந்நாளில் இவ்வாறு செய்தருளினார்" என்றாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 20

## முதல் வாசகம்

**இதோ, கன்னிப்பெண் கருத்தாங்குவாள்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7 : 10 - 14

அந்நாட்களில் :

ஆண்டவர் ஆக்காசிடம் பேசி, "உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஓர் அடையாளம் காட்டும்படி கேள்; பாதாளத்தின் கீழோ வானத்தின் மேலோ தோன்றும்படி கேட்கலாம்" என்றார். அதற்கு ஆக்காஸ் மறுமொழியாக, "நான் கேட்கமாட்டேன்; ஆண்டவரை நான் சோதிக்கமாட்டேன்" என்று சொன்னான். அப்பொழுது அவர் சொன்னார்: "அப்படியானால் தாவீதின் வீட்டாரே, கேளுங்கள்; மனிதரைச் சலிப்படையச் செய்தது போதாதென்று என் கடவுளையும் சலிப்படையச் செய்கிறீர்கள்? ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கோர் அடையாளம் தருவார்: இதோ, கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்; அவன் எம்மானுவேல் அதாவது 'நம்மோடு கடவுள்' என்னும் பெயர் பெறுவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 23 : 1 - 2. 3 - 4ab. 5 - 6 (பல்லவி : 7c. 10b காண்.)

பல்லவி: **ஆண்டவர் உள்ளே நுழைவார்: மாட்சிமை மிகு மன்னர் அவரே.**

1 மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன : பூவுலகும் அதில் வாழும் குடிகள் யாவரும் அவர்தம் உடைமையே.

2 ஏனெனில், கடல்களின் மீது பூவுலகை நிலை நிறுத்தியவர் அவரே : ஆறுகளின் மீது அதை நிலைநாட்டியவர் அவரே. பல்லவி

3 ஆண்டவரது மலை மீது ஏறிச்செல்லத் தகுந்தவன் யார்? அவரது திருத்
தலத்தில் நிற்கக் கூடியவன் யார்?
4 மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன், பயனற்றதில் மனதைச்
செலுத்தாதவன். பல்லவி

5 இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான்; இவனே தன்னைக் காக்கும்
ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.
6 இறைவனை தேடும் மக்களினம் இதுவே; யாக்கோபின் கடவுளது திருமுகம்
நாடுவோர் இவர்களே. பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. வானக அரசின் வாயிலைத் திறக்கும் தாவீதின் திறவுகோல் நீரே. இருளிலே இருக்கும் கைதிகள் தளையைக் களைந்திட எழுந்தருள்வீரே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*இதோ, நீர் கருத்தரித்து ஒருமகனைப் பெறுவீர்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். *1:26-38*

ஆறும் மாதத்திலே, கபிரியேல் தூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்து ஒரு கன்னிகையிடம் அனுப்பினார். அவள் தாவீது குலத்தவராகிய சூசை என்பவருக்கு மண ஒப்பந்தமானவள். அவள் பெயர் மரியாள். தூதர் அவளது இல்லம் சென்று, "அருள் நிறைந்தவளே வாழ்க, ஆண்டவர் உம்முடனே" என்றார். இவ்வார்த்தைகளை அவள் கேட்டுக் கலங்கி, இவ்வாழ்த்து எத்தலையதோ என்று எண்ணிக்கொண்டிருந்தாள். அப்போது வான தூதர் அவளைப் பார்த்து, "மரியே, அஞ்சாதீர்; கடவுளின் அருளை அடைந்துள்ளீர். இதோ! உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு யேசு என்னும் பெயரிடுவீர். அவர் மேன்மை மிக்கவராயிருப்பார். உன்னதரின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தையான தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குலத்தின்மீது என்றென்றும் அரசாள்வார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். மரியாள் தூதரிடம், "இது எங்ஙனம் ஆகும்? நானோ கணவனை அறியேனே" என்றாள். அதற்கு வானதூதர், "பரிசுத்த ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் திருக்குழந்தை கடவுளுடைய மகன் எனப்படும். இதோ! உம் உறவினளான

எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறாள். மலடி எனப்படும் அவளுக்கு இது ஆறும் மாதம். ஏனெனில், கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை'' என்றார். மரியாளோ, "இதோ! ஆண்டவருடைய அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்'' என்றாள். என்றதும் வானதூதர் அவளிடமிருந்து அகன்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 21

## முதல் வாசகம்

**இதோ, மலைகளைக் கடந்து என் அன்பர் வந்து விட்டார்.**

உன்னத சங்கீதத்திலிருந்து வாசகம் *2 : 8 - 14*

என் காதலர் குரல் கேட்கிறது! மலைகள் மேல் தாவிக் கொண்டு குன்றுகளைக் குதித்துத் தாண்டி அதோ, அவர் வந்து விட்டார். என் காதலர் வெளிமானுக்கும் கலைமானுக்கும் ஒப்பானவர். இதோ, எங்கள் மதிற்புறத்தே அவர்தான் வந்து நின்று கொண்டு பலகணி வழியாய்ப் பார்க்கின்றார், பலகணிக் கம்பிகள் வழி நோக்குகிறார்.

இதோ, என் காதலர் என்னை நோக்கி, உரையாடி என்னிடம் சொல்லுகிறார்: "எழுந்திரு, என் அன்பே! என் அழகுருவே! எழுந்து வா. இதோ, குளிர்காலம் கடந்து விட்டது, மழையும் பெய்து ஓய்ந்து விட்டது. தரையில் மலர்கள் தோன்றுகின்றன, பாடி மகிழும் காலம் வந்து விட்டது; காட்டுப் புறாவின் கூவுதலும், நம் நாட்டில் எங்கும் கேட்கின்றது. அத்திமரம் புதிதாய்க் காய்க்கிறது, திராட்சைக் கொடிகள் மலர்கின்றன; எங்கும் நறுமணம் வீசுகிறது.

எழுந்திரு, என் அன்பே! என் அழகுருவே! எழுந்துவா. பாறைப் பிளவுகளிலும் கன்மலை வெடிப்புகளிலும், தங்கியிருக்கும் என் வெண் புறாவே! காட்டிடு உன் முகத்தை; உயர்த்திடு உன் குரலை. உன் குரல் இனிமை, உன் முகம் அழகே!''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது

**இஸ்ராயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்.**

இறைவாக்கினர் சொப்போனியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *3 : 14 - 18*

சீயோன் மகளே, மகிழ்ச்சியால் ஆர்ப்பரி; இஸ்ராயேலே, ஆரவாரம் செய்; யெருசலேம் மகளே, உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி. ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார். உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்; இஸ்ராயேலின் அரசராகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்; நீ இனித் தீமைக்கு அஞ்சமாட்டாய்.

அந்நாளில் யெருசலேமை நோக்கி, "சீயோனே, அஞ்ச வேண்டா; உன் கைகள் சோர்ந்து தளராதிருக்கட்டும்! உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் மாவீரர், வெற்றி தருபவர்; உன்மட்டில் அவர் மகிழ்ச்சியால் அக்களிப்பார், தம் அன்பினால் உன்னைப் புதுப்பிப்பார்; திருவிழா நாளில் செய்வதுபோல், உன்னைக் குறித்து உரக்கப் பாடித் துள்ளுவார்" என்பார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## பதிலுரைப் பாடல்

*சங். 32 : 2-3. 11-12. 20-21 (பல்லவி : 1a-3a)*

பல்லவி : நீதிமான்களே, ஆண்டவரில் அகமகிழுங்கள்; அவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்.

2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள் : பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள்.
3 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள் : மகிழ்ச்சிக் குரலில் நன்றாகப் பாடுங்கள். பல்லவி

11 ஆண்டவருடைய திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் : அவருடைய எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.
12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது; தமது உரிமைப்பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறு பெற்றவர்கள். பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது: அவரே நமக்கு உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.
21 அவரில் நம் உள்ளம் மகிழ்கின்றது; அவருடைய திருப்பெயரில் நம்பிக்கை வைக்கிறோம். பல்லவி

## அல்லேலூயா

அல்லேலூயா. எம்மானுவேலே, சட்டம் இயற்றும் எம்மரசே,
இறைவனும் எம் ஆண்டவரே, எம்மை மீட்க எழுந்தருளும்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றது எப்படி?***

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13:9-45

அந்நாட்களில், மரியாள் புறப்பட்டு யூதா மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்று, சக்கரியாசின் வீட்டிற்கு வந்து எலிசபெத்தை வாழ்த்தினாள். மரியாளின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டவுடனே அவள் வயிற்றினுள்ளே குழந்தை துள்ளியது. எலிசபெத்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று, "பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே. உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே. என் ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றது எப்படி? உமது வாழ்த்து என் காதில் ஒலித்ததும், என் வயிற்றினுள்ளே குழந்தை அக்களிப்பால் துள்ளியது. ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்தவள் பேறு பெற்றவளே" என்று உரக்கக் கூவினாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 22

## முதல் வாசகம்

***சாமுவேலின் பிறப்புக்காக அன்னா நன்றி செலுத்துகிறாள்.***

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 1 : 24 - 28.

அந்நாட்களில் :

பால்குடி மறந்த பின் அன்னா தன்னுடைய மூன்று கன்றுகளையும், மூன்று மரக்கால் மாவையும், ஒரு சாடி திராட்சை ரசத்தையும் எடுத்துக் கொண்டு சீலோவிலுள்ள கோயிலுக்குத் தன் மகனை எடுத்துக் கொண்டு போனாள்; பிள்ளையோ மிகச் சிறியவனாய் இருந்தான். அவர்கள் ஒரு கன்றைப் பலியிட்ட பின் பிள்ளையை ஏலி என்பவரிடம் ஒப்படைத்தனர்.

அன்னா அவரை நோக்கி, "குருவே, நீர் உயிரோடு இருப்பது எப்படி உண்மையோ, அப்படியே உண்மையாகச் சொல்கிறேன் : இங்கு நின்று உமக்கு முன் ஆண்டவரை மன்றாடி வந்த அந்தப் பெண் 'நானே; இப் பிள்ளைக்காக மன்றாடினேன்; ஆண்டவரும் என் மன்றாட்டைக்

கேட்டருளினார். ஆகவே, இவனை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தேன்; இவன் வாழ்நாளெல்லாம் ஆண்டவருக்குச் சொந்தமாய் இருப்பான்" என்று சொன்னாள். பிறகு அவர்கள் அங்கு ஆண்டவரை வழிபட்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*1 சாமு. 2 : 1. 4 - 5. 6 - 7. (பல்லவி : 1a)*

பல்லவி : **என் மீட்பரான ஆண்டவரிடத்தில் என் இதயம் அக்களிக்கின்றது.**

1 ஆண்டவரிடத்தில் என் இதயம் அக்களிக்கின்றது; என் ஆண்டவ
ரால் என் ஆற்றல் உயர்வடைந்துள்ளது. என் பகைவர்க்கு எதிராக என்
வாய் திறக்கப்பட்டது; ஏனெனில் உமது மீட்பினால் நான் அகமகிழ்ந்தேன்.
பல்லவி

4 வலியோரின் வில் முறிந்து போனது; வலிமையற்றோர் வலிமையுற்றனர்.
5 முன்பு நிறைவு கொண்டிருந்தவர்கள் உணவிற்காகக் கூலிக்கு அமர்ந்தனர்;
பசித்திருந்தவர்களோ பசி தீர்ந்தனர். மலடி பல மக்களைப் பெற்றாள்;
பல பிள்ளைகளைப் பெற்றவளோ பலவீனமுற்றாள். பல்லவி

6 ஆண்டவர் உயிரைப் பறிக்கிறார்; உயிரைக் கொடுக்கிறார்.
பாதாளங்களுக்குக் கொண்டு போகிறார்;
அதினின்று மீண்டும் கொண்டு வருகிறார்.
7 ஆண்டவர் எளியவனாக்குகிறார்; செல்வராக்குகிறார்.
தாழ்த்துகிறார்; திரும்பவும் உயர்த்துகிறார். பல்லவி

8 "பெருமக்களுடன் அமர்ந்து புகழ் அரியணை ஏற ஏழையைத்
தூசியினின்றும், எளியோனைக் குப்பையினின்றும் உயர்த்துகிறார்.
பல்லவி

## அல்லேலூயா

அல்லேலூயா. மக்களனைவர்க்கும் அரசரே, திருச்சபையின் மூலைக்கல்லே, மண்ணிலிருந்து நீர் உருவாக்கிய மனிதனை மீட்க வாரும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**வல்லமைமிக்கவர் எனக்கு அரும் பெரும் செயல் பல புரிந்தார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:46-56

அக்காலத்தில்: மரியாள் உரைத்ததாவது:

"என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைந்து என் இதயம் களிகூருகின்றது. ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார். இதோ! இந்நாள்முதல் எல்லாத் தலைமுறைகளும், என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே. ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே. அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத் தலைமுறை தலைமுறையாய் உளதாமே. அவர் தமது கைவன்மையைக் காட்டினார், நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடித்தார். வலியோரை அரியணையினின்று அகற்றினார். தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால் நிரப்பினார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார். நம் முன்னோருக்கு அவர் சொன்னதுபோலவே அவர்தம் வழிவந்தோர்க்கும் என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம் அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்."

மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு வீடு திரும்பினாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 23

## முதல் வாசகம்

**ஆண்டவரின் நாள் வருமுன், இறைவாக்கினர் எலியாசை உங்களிடம் அனுப்புவோம்.**

இறைவாக்கினர் மலாக்கியா ஆகமத்திலிருந்து வாசகம் 3 : 1-4; 4:5-6

இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது:

"இதோ, நமக்கு முன்பாக நம் தூதரை அனுப்புவோம்; அவர் நமக்குமுன் வழியை ஆயத்தம் செய்வார்; நீங்கள் தேடுகின்ற ஆண்டவர் திடீரெனத் தம் கோயிலுக்கு வருவார்; நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கும்

உடன்படிக்கையின் தூதர் இதோ வருகிறார், என்கிறார் சேனைகளின் ஆண்டவர். ஆனால் அவர் வரும் நாளைத் தாங்க வல்லவன் எவன்? அவர் தோன்றும்போது அவர்முன் நிற்கக்கூடியவன் யார்? ஏனெனில், அவர் புடமிடுகிறவனின் நெருப்புப்போலும், வண்ணாரின் காரம் போலும் இருப்பார். புடமிடுபவன்போலவும், வெள்ளியைச் சுத்தம் செய்பவன் போலவும் உட்காருவார்; லேவியின் மக்களைத் தூய்மையாக்கிப் பொன் வெள்ளியைப்போலப் புடம் போடுவார்; அவர்களும் ஆண்டவருக்கு ஏற்புடைய முறையில் காணிக்கை செலுத்துவர். அதன்பிறகு யூதாவின் காணிக்கையும் யெருசலேமின் காணிக்கையும், பண்டைநாட்களில் - முற்காலத்தில் -இருந்ததுபோல் ஆண்டவருக்கு உகந்தவையாயிருக்கும்."

"இதோ, பெரியதும் நடுக்கத்துக்குரியதுமான ஆண்டவரின் நாள் வருமுன், இறைவாக்கினர் எலியாசை உங்களிடம் அனுப்புவோம். நாம் வந்து உலகத்தைச் சாபனையால் தண்டிக்காதபடி, தந்தையரின் உள்ளங்களை அவர்கள் பிள்ளைகளிடமும், பிள்ளைகளின் உள்ளங்களை அவர்கள் தந்தையரிடமும் அவர் திருப்பி விடுவார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 24:4-5ab 8-9. 10.14 (பல்லவி: லூக் 21:28)

பல்லவி: தலை நிமிர்ந்து நில்லுங்கள்;
உங்கள் மீட்பு அண்மையில் உள்ளது.

ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்: உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.

5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்: என் மீட்பராம் இறைவன் நீரே. பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்; ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.

9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார்: எளியோர்க்குத்தம் வழியைக் கற்பிப்பார். பல்லவி

10 ஆண்டவருடைய உடன்படிக்கையையும் கட்டளைகளையும் கடைப்பிடிப்போர்க்கு, அவருடைய வழிகள் எல்லாம் அருளும் உண்மையும் கொண்டவை.

14 தமக்கு அஞ்சி நடப்போரிடம் ஆண்டவர் அன்புறவு கொண்டுள்ளார்; தமது உடன்படிக்கையை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். பல்லவி

அல்லேலூயா.

அல்லேலூயா. மக்களனைவர்க்கும் அரசரே, திருச்சபையின் மூலைக்கல்லே,
மண்ணிலிருந்து நீர் உருவாக்கிய மனிதனை மீட்க வாரும்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

ஸ்நாபக அருளப்பரின் பிறப்பு.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 57 - 66

எலிசபெத்துக்குப் பேறுகாலம் வந்தது. ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அவளுக்கு ஆண்டவர் மிகுந்த இரக்கம் காட்டியதைக் கேள்விப்பட்டு அயலாரும் உறவினரும் அவளோடு மகிழ்ந்தனர்.

எட்டாம் நாள் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வந்து, சக்கரியாஸ் என்று அவன் தந்தையின் பெயரையே அவனுக்கு இட விரும்பினர். ஆனால், அவன் தாய் மறுத்து, "அப்படியன்று, அருளப்பன் என்று அவனை அழைக்கவேண்டும்" எனக் கூறினாள். அதற்கு அவர்கள், " உன் உறவினருள் இப்பெயர் கொண்டவர் ஒருவரும் இல்லையே " என்று சொல்லி, "குழந்தைக்கு என்ன பெயரிட விரும்புகிறீர்?" என்று தந்தையிடம் சைகை காட்டிக் கேட்டனர். அவர் எழுது பலகையொன்றைக் கொண்டுவரச் சொல்லி, " இவன் பெயர் அருளப்பன் " என்று எழுதினார். அனைவரும் வியப்படைந்தனர். அந்நேரமே, அவரது வாய் திறக்க, நா கட்டவிழ, பேசத் தொடங்கி, கடவுளைப் போற்றினார்.

அயலார் அனைவரையும் அச்சம் ஆட்கொண்டது. இச்செய்தியெல்லாம் யூதேயா மலை நாடெங்கும் பரவலாயிற்று. கேள்விப்பட்டவர்கள் யாவரும் அதை உள்ளத்தில் பதித்து, "இக்குழந்தை எத்தகையவன் ஆவானோ?" என்றனர். உண்மையில் ஆண்டவருடைய அருட்கரம் அவனோடு இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 24

## காலைத் திருப்பலி

### முதல் வாசகம்

*ஆண்டவர் முன்பாகத் தாவீதின் அரியணை என்றும் நிலைபெற்றிருக்கும்.*

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 7:1-5,8b-12.16

தாவீது அரசர் தம் மாளிகையில் குடியேறின பிறகு, நாற்புறத்திலுமுள்ள அவருடைய பகைவர் அனைவரும் ஆண்டவருடைய அருளால் அவரோடு சமாதானமாய் இருந்ததைக் கண்டு, அவர் இறைவாக்கினர் நாத்தானை நோக்கி, "கேதுரு மரங்களால் கட்டப்பட்ட வீட்டில் நான் வாழும்போது, ஆண்டவருடைய பேழை, தோல் திரைகளின் நடுவில் வைக்கப்பட்டிருப்பதை நீர் பார்ப்பதில்லையா!" என்றார். அப்பொழுது நாத்தான் அரசரை நோக்கி, "ஆண்டவர் உம்மோடு இருப்பதால் நீர் விரும்பியபடி எல்லாம் செய்யும்" என்றார்.

அன்றிரவே ஆண்டவருடைய வார்த்தை நாத்தானுக்கு வந்தது. "நீ போய் நம் ஊழியன் தாவீதை நோக்கி, 'ஆண்டவர் சொல்லுகிறதாவது: நாம் வாழ்வதற்கு ஒரு வீட்டை நீ கட்டமாட்டாயோ? நீ ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் நாம் உன்னை அழைத்து நம் மக்கள் இஸ்ராயேலுக்குத் தலைவனாய் இருக்கச் செய்தோம். நீ சென்ற இடங்களில் எல்லாம் நாம் உன்னோடு இருந்து, உன் எதிரிகளை எல்லாம் உனக்கு முன்பாக அழித்துப் பூமியிலிருக்கிற பெரியோர்களின் பெயருக்கொத்த சிறந்த பெயரை உனக்குத் தந்தோம். நம் மக்கள் இஸ்ராயேலை ஓர் இடத்தில் நிலை நிறுத்துவோம்: அவர்களை அவ்விடத்தில் உறுதிப்படுத்துவோம். அவர்கள் அங்குக் குடியேறி முன்போல் அலைக்கழிக்கப்படமாட்டார்கள்; நம் மக்கள் இஸ்ராயேலின்மேல் நீதிபதிகளை ஏற்படுத்தின நாள்வரை நடந்தது போல், அக்கிரமிகள் அவர்களை மறுபடியும் துன்பப்படுத்த மாட்டார்கள். உன் எதிரிகளில் யாரும் உன்னைச் சிறுமைப் படுத்தாமல் சமாதானமாய் இருக்கச் செய்வோம். மேலும், ஆண்டவரே உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்று உனக்கு அறிவிக்கிறார்.

பிறகு உன் வாழ்நாள் முடிந்து நீ உன் முன்னோருடன் துயில் கொள்ளும் பொழுது உனக்குப் பிறக்கும் ஒரு மகனை உனக்குப்பின் நாம் உயர்த்தி அவனது அரசை நிலைநாட்டுவோம். உன் அரசோ என்றென்றும் உனக்கு முன்பாக இருக்கும்; உன் அரியணை என்றும் நிலைபெற்றிருக்கும்' என்கிறார், என்று சொல்லச் சொன்னார்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 88 : 1 - 2. 3 - 4. 26 . 28 (பல்லவி : 1a காண்)*

பல்லவி : ஆண்டவரே, உம் அருட் செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன்.

1 ஆண்டவரது அருட் செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன்: உமது சொல்லுறுதியை எல்லாத் தலைமுறைகளுக்கும் என் நாவால் எடுத்துரைப்பேன்.

2 'என்றென்றும் உள்ளது எம் அருளன்பு' என்று நீர் கூறினீர்: உமது சொல்லுறுதிக்கு வானகமே அடித்தளம். பல்லவி

3 'நான் தேர்ந்தெடுத்தவரோடு உடன்படிக்கை செய்து கொண்டேன்' என் ஊழியன் தாவீதுக்கு ஆணையிட்டுக் கூறியது :

4 உன் சந்ததியை என்றென்றும் நிலைநாட்டுவேன் : எல்லாத் தலைமுறைகளிலும் உன் அரியணை நிலைக்கச் செய்வேன்.' பல்லவி

26 'நீரே என் தந்தை, என் இறைவன், எனக்கு மீட்பளிக்கும் அரண்' என்று என்னை நோக்கிக் கூறுவார்.

28 என்றென்றும் என் அருளன்பை அவர் மேல் பொழிவேன் : அவரோடு நான் செய்த உடன்படிக்கை நிலைத்திருக்கும். பல்லவி

*அல்லேலூயா*

அல்லேலூயா. விடி விண்மீனே, நித்திய ஒளியின் சுடரே, நீதியின் கதிரவனே, இருளிலும் மரண நிழலிலும் அவதிப்படுவோரைச் சுடர் வீசி ஒளிர்விக்க வந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**வானினின்று இளஞாயிறு நம்மில் எழுந்து வந்தது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 67 - 79

அக்காலத்தில் :

அருளப்பரின் தந்தை சக்கரியாஸ் பரிசுத்த ஆவியால் நிரப்பப் பெற்று உரைத்த இறைவாக்காவது :

"இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவர் போற்றி ! ஏனெனில், தம் மக்களைத் தேடிவந்து விடுவித்தருளினர். தொன்றுதொட்டு வந்த தம் பரிசுத்த இறைவாக்கினர்களின் வாயினால் அவர் மொழிந்தது போலவே, தம் அடியானாகிய தாவீதின் குலத்திலே மீட்கும் வல்லமை எழச் செய்தருளினர். இவ்வாறு நம் பகைவரிடமிருந்தும், நம்மை வெறுப்பவர் அனைவரின் கையிலிருந்தும் மீட்டருளினர். நம் முன்னோர்க்கு இரக்கங் காட்டி, நம்பகைவரின் கையினின்று விடுதலை பெற்று, அச்சமின்றி நம் வாழ்நாளெல்லாம் அவர் முன்னிலையில், புனிதத்தோடும் நீதியோடும் அவருக்குப் பணிபுரியத் தாம் வழி வகுப்பதாக அவர் நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு அளித்த உறுதி மொழியையும், நமது பரிசுத்த உடன்படிக்கையையும் நினைவுகூர்ந்தருளினர்.

நீயோ பாலனே, உன்னதரின் வாக்குரைப்பவன் எனப்படுவாய். பாவமன்னிப்பில் உளதாகிய மீட்பை அவர்தம் மக்களுக்கு அறிவித்து, ஆண்டவருடைய வழிகளை அமைக்க அவர் முன்னே செல்வாய். இருளிலும் இறப்பின் நிழலிலும் இருப்போர்க்கு ஒளி காட்டவும், அமைதிப்பாதையில் நம் காலடிகளைச் செலுத்தவும், நம் கடவுளின் இரக்கப் பெருக்கத்தால், வானினின்று இளஞாயிறு நம்பால் எழுந்து வரும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# அல்லேலூயா வசனங்கள்

## டிசம்பர் 17 முதல் 24 வரையுள்ள வார நாட்களுக்கானவை

அந்தந்த நாளுக்குத் தரப்பெற்ற அல்லேலூயா வசனங்களுக்குப் பதிலாக கீழ் உள்ளவற்றுள் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

1 அல்லேலூயா.

உன்னதரின் ஞானமே, உருவாக்கும் திருவாக்கே,
அன்புடனே அனைத்தையும் ஆளுகின்ற ஆற்றலே,
உண்மையின் வழிகாட்ட உலகிற்கு வந்தருள்வாய்.
அல்லேலூயா.

2 அல்லேலூயா.

இஸ்ராயேல் குடும்பத்தின் தலைவரே, எம் இறைவா,
சீனயில் திருச்சட்டம் மோயீசனுக் கீந்தவரே,
வலிமையுடன் கைநீட்டி எமைமீட்க வந்தருளும்.
அல்லேலூயா.

3 அல்லேலூயா.

யெஸ்ஸேயின் குலக்கொழுந்தே, மக்களுக்கோர்
அருஞ்சின்னமே,
எமைமீட்க எழுந்தருளும், தாமதம்செய் யாதேயும்.
அல்லேலூயா.

4 அல்லேலூயா.

வானக அரசின் வாயிலைத் திறக்கும்
தாவிதின் திறவுகோல் நீரே:
இருளிலே இருக்கும் கைதிகள் தளையைக்
களைந்திட எழுந்தருள் வீரே. அல்லேலூயா.

5 அல்லேலூயா.

விடியற் கால விண்மீனே,
முடிவிலா ஒளியின் மெய்ச்சுடரே,
படிமிசை நீதியின் கதிரவனே!
இருளில், மரண நிழல்தனிலே
வருந்தி வாடும் அனைவருக்கும்
அருளொளி வீச வருவீரே. அல்லேலூயா.

6 அல்லேலூயா.

மக்களை எல்லாம் ஆள் அரசே,
திருச்சபையின் மூலைக்கல்லே,
மண்ணால் நீரே உருவாக்கிய
மனிதனை மீட்க வருவீரே. அல்லேலூயா.

7 அல்லேலூயா.

இம்மானுவேலே, எம் அரசே,
சட்டம் இயற்றும் கொற்றவனே,
இறைவனும் எம் ஆண்டவரே,
எம்மை மீட்க எழுந்தருளும். அல்லேலூயா.

# கிறிஸ்து பிறப்புக்காலம்

## டிசம்பர் 25

### கிறிஸ்து பிறப்பு

திருவிழிப்புப் பூசை

டிசம்பர் 24ஆம் நாள் மாலையில் நடைபெறும் திருவிழிப்புப் பூசையில் கீழ்க்கண்ட வாசகங்களைப் பயன்படுத்தவும்.

முதல் வாசகம்

ஆண்டவர் உன்மீது அன்புகூர்ந்தார்.

62 : 1 - 5

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்

சீயோனைப்பற்றிப் பேசாமல் நான் மௌனமாய் இருக்க மாட்டேன், யெருசலேமின் காரியத்தில் சோர்வடைய மாட்டேன்; அதன் நீதி சுடரொளிபோல வெளிப்படுமட்டும், அதன் மீட்பு தீப் பந்தம்போலச் சுடர்விடும் வரையிலும் நான் அமைதியடைய மாட்டேன். புறவினத்தார் உன் நீதியைக் காண்பார்கள், அரசர்கள் அனைவரும் உன் மகிமையை நோக்குவார்கள்; புதுப் பெயர் ஒன்று உனக்கு வழங்கப்படும்; ஆண்டவரின் நாவே அந்தப் பெயரைச் சூட்டும். ஆண்டவரின் கையில் நீ மகிமையின் மணி முடியாகவும், உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாகவும் இருப்பாய்.

'தள்ளப்பட்டவள்' என நீ இனி அழைக்கப்படமாட்டாய், 'கைவிடப்பட்டவள்' என உன் நாடும் இனிச் சொல்லப்படாது; 'என் அன்புடையாள்' என நீ அழைக்கப்படுவாய், 'மணமானவள்' என உன் நாடும் சொல்லப்படும்; ஏனெனில், ஆண்டவர் உன்மேல் அன்பு கூர்ந்தார். உன் நாடு இறைவனுக்கு வாழ்க்கைப்படும். இளைஞன் கன்னிப் பெண்ணை மணந்து கொள்வதுபோல், உன்னை அமைத்தவர் உன்னை மணந்துகொள்வார்; மணவாளன் தன் மணவாட்டியைக் குறித்து மகிழ்வதுபோல், உன் கடவுள் உன்னைக் குறித்து மகிழ்ச்சியடைவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 88 : 3-4. 15-16. 26 . 28 (பல்லவி : 1a காண்)

பல்லவி : ஆண்டவரே, உம்முடைய அருட்செயல்களை நினைத்து
நான் என்றென்றும் பாடுவேன்.

3 'நான் தேர்ந்தெடுத்தவரோடு உடன்படிக்கை செய்து கொண்டேன், என் ஊழியன் தாவீதுக்கு ஆணையிட்டுக் கூறியது :
4 'உன் சந்ததியை என்றென்றும் நிலைநாட்டுவேன்; எல்லாத் தலைமுறைகளிலும் உன் அரியணையை நிலைக்கச் செய்வேன்.' பல்லவி

15 உமது விழா ஆர்ப்பரிப்பில் பங்குபெறுவோர் பேறு பெற்றோர். ஆண்டவரே, அவர்கள் உம்முகத்தின் ஒளியில் நடக்கின்றனர்.
16 உமது பெயரை நினைத்து என்றும் அகமகிழ்கின்றனர் : உமது நீதியை நினைத்துப் பெருமிதப்படுகின்றனர். பல்லவி

26 'நீரே என் தந்தை, என் இறைவன், எனக்கு மீட்பளிக்கும் அரண்' என்று என்னை நோக்கிக் கூறுவார்.
28 என்றென்றும் என் அருளன்பை அவர்மேல் பொழிவேன் : அவரோடு நான் செய்த உடன்படிக்கை நிலைத்திருக்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தாவீதின் மகனை கிறிஸ்துபற்றிய சின்னப்பரின் சான்று.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 13 : 16-17. 22-25

பிசிதியா நாட்டு அந்தியோக்கியா வந்தபின் சவுல் செபக்கூட்டத்தில் எழுந்து சைகை காட்டி உரைத்ததாவது : "இஸ்ராயேலரே, கடவுளுக்கு அஞ்சுபவரே, கேளுங்கள். இஸ்ராயேலராகிய இம்மக்களின் கடவுள் நம்

முன்னோரைத் தெரிந்தெடுத்தார். நம் மக்கள் எகிப்து நாட்டில் குடியேறியபோது அவர்களை மேன்மைப் படுத்தினார். ஓங்கிய தம் கைவன்மையால் அவர்களை அந்நாட்டிலிருந்து வெளியேற்றி, பிறகு கடவுள் அவனை நீக்கிவிட்டு, தாவீதை அவர்களுக்கு அரசனாக ஏற்படுத்தினார். அவரைப் பற்றிக் கடவுள், ' யீசாயின் மகன் தாவீது என் மனதுக்கு உகந்தவனாய் இருக்கக் கண்டேன். நான் விரும்பியதெல்லாம் அவன் செய்வான் ' என்று நற்சான்று கூறினார். அவரது மரபிலிருந்தே கடவுள் தாம் வாக்களித்தபடி யேசுவை இஸ்ராயேலருக்கு மீட்பராக வரச் செய்தார். யேசுவின் வருகைக்கு முன், அருளப்பர் இஸ்ராயேல் மக்கள் அனைவருக்கும், மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அறிவித்து வந்தார். தம் பணி முடிவுறும் காலத்தில் அருளப்பர், ' நீங்கள் என்னை யாரென நினைக்கிறீர்களோ, அவரல்ல நான். இதோ ! ஒருவர் எனக்குப் பின் வருகின்றார். அவருடைய மிதியடிகளை அவிழ்க்க நான் தகுதியற்றவன் ' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அல்லேலூயா. நாளை அவனியின் அநீதி அழிவுறும் : உலகின் மீட்பர் நம் மீது அரசாள்வார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*தாவீதின் மகனான யேசுகிறிஸ்துவின் தலைமுறை அட்டவணை.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1: 1-25

தாவீதின் மகனும், ஆபிரகாமின் மகனுமாகிய யேசு கிறிஸ்துவின் தலைமுறை அட்டவணையாவது :

ஆபிரகாமுக்கு ஈசாக்கு பிறந்தார். ஈசாக்குக்கு யாக்கோபு பிறந்தார். யாக்கோபுக்கு யூதாவும் அவருடைய சகோதரர்களும் பிறந்தார்கள். யூதாவுக்கு பாரேசும் சாராவும் தாமாரிடம் பிறந்தார்கள். பாரேசுக்கு எஸ்ரோம் பிறந்தார். எஸ்ரோமுக்கு ஆராம் பிறந்தார். ஆராமுக்கு அம்மினதாப் பிறந்தார். அம்மினதாபுக்கு நகசோன் பிறந்தார். நகசோனுக்கு சல்மோன் பிறந்தார். சல்மோனுக்கு ராகாபிடம் போவாஸ் பிறந்தார். போவாசுக்கு ரூத்திடம் ஓபேத் பிறந்தார். ஓபேதுக்கு ஈசாய் பிறந்தார். ஈசாயிக்கு தாவீது அரசன் பிறந்தார்.

தாவீதுக்கு உரியாவின் மனைவியிடம் சாலொமோன் பிறந்தார். சாலொமோனுக்கு ரெகொபெயாம் பிறந்தார். ரெகொபெயாமுக்கு அபியா பிறந்தார். அபியாவுக்கு ஆசா பிறந்தார். ஆசாவுக்கு யோசபாத்

பிறந்தார். யோசபாத்துக்கு யோராம் பிறந்தார். யோராமுக்கு உசியா பிறந்தார். உசியாவுக்கு யோதாம் பிறந்தார். யோதாமுக்கு ஆகாஸ் பிறந்தார். ஆகாசுக்கு எசேக்கியா பிறந்தார். எசேக்கியாவுக்கு மனாசே பிறந்தார். மனாசேயுக்கு ஆமோன் பிறந்தார். ஆமோனுக்கு யோசியா பிறந்தார். யோசியாவுக்கு எகொனியாவும் அவருடைய சகோதரர்களும் பிறந்தார்கள். பாபிலோனுக்கு யூதர்கள் நாடு கடத்தப்பட்டது இக் காலத்தில்தான்.

பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபின் எகொனியாவுக்கு சலாத்தியேல் பிறந்தார். சலாத்தியேலுக்கு சொரொபாபேல் பிறந்தார். சொரொபாபேலுக்கு அபியூத் பிறந்தார். அபியூத்துக்கு எலியாக்கீம் பிறந்தார். எலியாக்கீமுக்கு ஆசோர் பிறந்தார். ஆசோருக்கு சாதோக்கு பிறந்தார். சாதோக்குக்கு ஆகீம் பிறந்தார். ஆகீமுக்கு எலியூத் பிறந்தார். எலியூதுக்கு எலெயாசார் பிறந்தார். எலெயாசாருக்கு மாத்தான் பிறந்தார். மாத்தானுக்கு யாக்கோபு பிறந்தார். யாக்கோபுக்கு மரியாளின் கணவரான சூசை பிறந்தார். இவளிடம் கிறிஸ்து என்னும் யேசு பிறந்தார்.

ஆகமொத்தம்: ஆபிரகாம்முதல் தாவீதுவரை தலைமுறை பதினான்கு; தாவீதுமுதல் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதுவரை தலைமுறை பதினான்கு; பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதுமுதல் கிறிஸ்துவரை தலைமுறை பதினான்கு.

யேசு கிறிஸ்து தோன்றியது பின்வருமாறு:

அவருடைய தாய் மரியாளுக்கும் சூசைக்கும் மண ஒப்பந்தம் ஆயிருக்க, அவர்கள் கூடி வாழுமுன் பரிசுத்த ஆவியினால் அவள் கருத்தாங்கியிருப்பதாகத் தெரிந்தது. அவள் கணவர் சூசை நீதிமானும் அவளைக் காட்டிக் கொடுக்க மனமில்லாதவராயும் இருந்ததால் அவளை மறைவாக விலக்கி விட வேண்டும் என்றிருந்தார். இதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் இதோ! ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "சூசையே, தாவீதின் மகனே, உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக் கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில், அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான். அவள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு யேசு என்று பெயரிடுவீர். ஏனெனில் அவர், தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார்.

'இதோ! கன்னி கருத்தாங்கி மகனைப் பெற்றெடுப்பாள், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர்' என்று ஆண்டவர் இறைவாக்கினர் வாயிலாகக் கூறியது நிறைவேறும்படியே இவையனைத்தும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால், 'நம்மோடு கடவுள்' என்பது பொருள்.

சூசை விழித்தெழுந்து, ஆண்டவரின் தூதர் தமக்குக் கட்டளை யிட்டவாறு தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். அவள் தன் தலைப் பேறான மகனைப் பெற்றெடுக்கும்வரை அவர் அவளை அறியாதிருந்தார். அவருக்கு யேசு என்று பெயரிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது, குறுகிய வாசகம்

மரியாள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்;
அவருக்கு யேசு என்று பெயரிடுவீர்.

✣ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:18-25

யேசு கிறிஸ்து தோன்றியது பின்வருமாறு: அவருடைய தாய் மரியாளுக்கும் சூசைக்கும் மண ஒப்பந்தம் ஆயிருக்க, அவர்கள் கூடிவாழு முன் பரிசுத்த ஆவியினால் அவள் கருத் தாங்கியிருப்பதாகத் தெரிந்தது. அவள் கணவர் சூசை நீதிமானும், அவளைக் காட்டிக்கொடுக்க மனமில்லாதவராயும் இருந்ததால் அவளை மறைவாக விலக்கிவிட வேண்டும் என்றிருந்தார். இதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் இதோ! ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "சூசையே, தாவீதின் மகனே, உம்முடைய மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில், அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால்தான். அவள் ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு யேசு என்று பெயரிடுவீர். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார்.

'இதோ! கன்னி கருத்தாங்கி மகனைப் பெற்றெடுப்பாள்
அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவீர்'

என்று ஆண்டவர் இறைவாக்கினர் வாயிலாகக் கூறியது நிறைவேறும் படியே இவையனைத்தும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால், 'நம்மோடு கடவுள்' என்பது பொருள். சூசை விழித்தெழுந்து, ஆண்டவரின் தூதர் தமக்குக் கட்டளையிட்டவாறு தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். அவள் தன் தலைப்பேறான மகனைப் பெற்றெடுக்கும்வரை அவர் அவளை அறியா திருந்தார். அவருக்கு யேசு என்று பெயரிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இரவில் பூசை

## முதல் வாசகம்

**நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளார்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 9 : 2 - 4. 6 - 7

இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்துச் சுடர் வீசிற்று. மக்களினத்தைப் பலுகச் செய்தீர், அதன் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தினீர்; அறுவடையின்போது உழவன் மகிழ்வது போலும், கொள்ளைப் பொருளைப் பங்கிடுவோர் அக்களிப்பது போலும், உம் முன்னிலையில் அவர்கள் அக்களிக்கிறார்கள். ஏனெனில், மாதியான் நாட்டுப் போர்க் காலத்தில் செய்தது போல், அவர்கள் தோள் மேல் சுமத்தப்பட்ட நுகத்தையும், தோளைக் காயப்படுத்திய தடியையும், அவர்களை ஒடுக்கியவர்களின் கொடுங்கோலையும் நீர் ஒடித்தெறிந்தீர்.

ஏனெனில், நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது, நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளான்; ஆட்சியின் பொறுப்பு அவருடைய தோள் மேல் இருக்கும், அவருடைய பெயரோ, "வியத்தகு ஆலோசனையாளர், வல்லமையுள்ள இறைவன், முடிவிலாத் தந்தை, அமைதியின் மன்னன்" என வழங்கப்படும். அவருடைய ஆட்சியின் வளர்ச்சிக்கும் அமைதியின் பெருக்கிற்கும் முடிவு என்பதே இராது. தாவீதின் அரியணையில் அமர்வார்; அவரது அரசை நிறுவுவார்; இன்று முதல் என்றென்றும் நீதியாலும் நியாயத்தாலும் அதை நிலைபெயராது காத்திடுவார்; சேனைகளின் ஆண்டவரது ஆர்வம் இதைச் செய்யும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 95 : 1-2a. 2b-3. 11-12. 13 (பல்லவி: லூக். 2:11)*

*பல்லவி:* இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார் ;
அவரே ஆண்டவராகிய மெசியா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.

2 ஆண்டவரைப் பாடுங்கள், அவர் பெயரை வாழ்த்துங்கள் : பல்லவி

3 அவர் தரும் மீட்பை நாடோறும் அறிவியுங்கள்.
4 புற இனத்தாரிடையே அவரது மாட்சிமையை எடுத்துச் சொல்லுங்கள்;
மக்கள் அனைவரிடையிலும் அவர் தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள்.
பல்லவி

11 வானங்கள் மகிழட்டும், பூவுலகம் களிகூரட்டும்: கடலும் அதில் வாழ்
வனவும் ஆரவாரம் செய்யட்டும்.
12 வயல்வெளியும் அதில் உள்ள அனைத்தும் ஆர்ப்பரிக்கட்டும்: காட்டில்
உள்ள மரங்கள் அனைத்தும் அப்போது ஆண்டவர்முன் மகிழ்ச்சியுறும்.
பல்லவி

13 ஏனெனில் அவர் வருகின்றார்: பூவுலகை ஆட்சிசெய்ய வருகின்றார்.
பூவுலகை அவர் நீதியுடன் ஆட்சி செய்வார்: மக்களை அவர் தம்
சொல்லுறுதியால் ஆள்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*மாந்தர் அனைவருக்கும் கடவுளின் அருள் பிரசன்னமாகியுள்ளது.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீத்துவுக்கு எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 2:11-14

மாந்தர் அனைவருக்கும் மீட்பளிக்கும் கடவுளின் அருள் பிரசன்னமாகி நாம்இறைப் பற்றின்மையையும் உலக இச்சைகளையும் விட்டொழித்து விவேகத்தோடும், நீதியோடும், பக்தியோடும் இம்மையில் வாழ நம்மைப் பயிற்றுகிறது. இவ்வாறே வாழும் நாமோ, மகத்துவமிக்க கடவுளும், நம் மீட்பருமாகிய யேசு கிறிஸ்துவின் மாட்சிமை பிரசன்னமாவதால்; மகிழ்வளிக்கும் நம்முடைய நம்பிக்கை நிறைவேறுமென எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவர் நம்மை எல்லா அக்கிரமத்திலிருந்தும் மீட்கவும், நம்மைத் தூயவர்களாக்கி, நற்செயல்களில் ஆர்வமுள்ள ஓரினமாகத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளவும் தம்மை நமக்காகக் கையளித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 2: 10-11

அல்லேலூயா. மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை
உங்களுக்கு அறிவிக்கிறேன்:
இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார்;
அவரே ஆண்டவராகிய மெசியா. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இன்று உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்.**

✣ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2 : 1 - 14

அந்நாளில் உலக முழுமையும் மக்கள் தொகையைக் கணக்கிடும்படி செசார் அகுஸ்துவிடமிருந்து கட்டளை பிறந்தது. முதலாவதான இக் கணக்கு சீரியா நாட்டைக் கிரேனியு ஆண்ட காலத்தில் எடுக்கப்பட்டது. அதன்படி அனைவரும் பெயரைப் பதிவு செய்யத் தத்தம் ஊருக்குச் சென்றனர். சூசையும் கருப்பவதியாயிருந்த மனைவி மரியாளோடு பெயரைப் பதிவு செய்யக் கலிலேயா நாட்டு நாசரேத்தூரை விட்டு, யூதேயா நாட்டிலுள்ள பெத்லெகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். ஏனெனில், அவர் தாவீதின் குலத்தவரும் குடும்பத்தவருமாக இருந்தார்.

அவர்கள் அங்கிருந்த பொழுது, அவளுக்குப் பேறுகாலம் வந்தது. அவள் தலைப்பேறான மகனை ஈன்றெடுத்து, துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தினாள். ஏனெனில், சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

அதே பகுதியில் இடையர் வெட்டவெளியில் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடைக்குச் சாமக் காவல் காத்துக்கொண்டிருந்தனர். ஆண்டவருடைய தூதர் அவர்களுக்குத் தோன்ற, விண்ணொளி அவர்களைச் சூழ்ந்து சுடர்ந்தது. மிகுந்த அச்சம் அவர்களை ஆட்கொண்டது. வான தூதர் அவர்களை நோக்கி, "அஞ்சாதீர், இதோ! மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா. குழந்தை ஒன்றைத் துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அறிகுறியாகும்" என்றார். உடனே வானோர் படைத்திரள் அத்தூதரோடு சேர்ந்து,

"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையுண்டாகுக.
உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக"

என்று கடவுளைப் புகழ்ந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*கிறிஸ்து பிறப்பு பெருவிழாவின் மூன்று பூசைகளிலும் அதற்குள்ள பாடங்களைப் பயன்படுத்தவும். ஆனாலும், மக்கள் நலனுக்காக இவற்றுள் ஏதாவது ஒரு பூசையிலிருந்து பொருத்தமான வாசகங்களைத் தேர்ந்தெடுக்கலாம்.*

# விடியற்காலப் பூசை

## முதல் வாசகம்

**இதோ, உன் மீட்பர் வருகின்றார்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 62:11-12

இதோ, உலகத்தின் எல்லைவரை கேட்கும்படி, ஆண்டவர் அறிவித்துச் சொன்னதாவது “இதோ உன் மீட்பர் வருகின்றார், அவருடைய வெற்றிப்பரிசு அவரோடு இருக்கிறது; அவர் முன்னால் அவருடைய வெற்றிச் சின்னங்கள் வருகின்றன” என்று சீயோன் மக்களுக்குச் சொல்லுங்கள். அப்போது, ‘பரிசுத்த மக்கள்’ என அவர்களை அழைப்பார்கள், ‘ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள்’ என்பார்கள்; நீயோ ‘தேடிக் கொள்ளப்பட்டவள்’ எனப்படுவாய், ‘கைவிடப்படாத நகரம்’ என்று பெயர் பெறுவாய்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 96 : 1.6. 11-12

பல்லவி : பேரொளி இன்று நம்மேல் ஒளிரும்; ஏனெனில் நமக்காக ஆண்டவர் பிறந்துள்ளார்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் : பூவுலகு களிகூர்வதாக ! தீவுகள் எல்லாம் அகமகிழட்டும் !
6 வானங்கள் அவரது நீதியை எடுத்துரைக்கின்றன : உலக மக்களனைவரும் அவரது மகிமையைக் காண்கின்றனர். பல்லவி

11 நீதிமானுக்கு ஒளி எழுகின்றது : நேரிய உள்ளத்தவர்க்கு மகிழ்ச்சி பிறக்கின்றது.
12 நீதிமான்களே, ஆண்டவரை நினைந்து அகமகிழுங்கள் : அவரது திருப் பெயரைப் புகழ்ந்தேத்துங்கள். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தம் இரக்கத்தை முன்னிட்டே நம்மை மீட்டார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீத்துவுக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 4 - 7

நம் மீட்பராகிய கடவுளின் பரிவும் நேயமும் பிரசன்னமானபோது, நீதிநெறியைப் பின்பற்றி நாமே செய்த நற்செயல்களை முன்னிட்டன்று, தம் இரக்கத்தை முன்னிட்டே புதுப் பிறப்பைத் தரும் முழுக்கினாலும், புத்துயிர் அளிக்கும் பரிசுத்த ஆவியாலும் இறைவன் நம்மை மீட்டார். இந்த ஆவியை அவர் நம் மீட்பராகிய யேசுகிறிஸ்துவின் வழியாக நம் மீது நிரம்பப் பொழிந்தார். கிறிஸ்துவின் அருளினால் நாம் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகி நமக்குள்ள நம்பிக்கையால் முடிவில்லா வாழ்வுக்கு உரிமையாளராவதற்கே இவ்வாறு செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 2 : 14

அல்லேலூயா. உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக,
உலகிலே அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதி ஆகுக.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இடையர் மரியாளையும் சூசையையும் குழந்தையையும் கண்டனர்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2 : 15-20

தூதர்கள் அவர்களை விட்டு வானகம் சென்றபின், இடையர் ஒருவரையொருவர் நோக்கி, "வாருங்கள், பெத்லெகேமுக்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்த இந்நிகழ்ச்சியைக் காண்போம்" என்று சொல்லிக்கொண்டு, விரைந்துசென்று, மரியாளையும் சூசையையும், முன்னிட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டனர். கண்டபின்னர், அப்பாலனைப் பற்றித் தமக்குக் கூறப்பட்டதைப் பிறருக்கு அறிவித்தனர்.

கேட்ட யாவரும் தங்களுக்கு இடையர் கூறியதுபற்றி வியப்படைந்தனர். மரியாளோ இந்நிகழ்ச்சிகளை எல்லாம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து வந்தாள். இடையர் தாம் கண்டது கேட்டதெல்லாம் நினைத்துக் கடவுளை மகிமைப்படுத்திப் புகழ்ந்துகொண்டே திரும்பினர். அவர்களுக்குச் சொன்னபடியே எல்லாம் நிகழ்ந்திருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## முதல் வாசகம்

**உலகின் கடைகோடி நாடுகள் எல்லாம் கடவுள் தரும் மீட்பைக் காணப்போகின்றன.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 52 : 7-10

நற்செய்தியை அறிவிக்கவும், சமாதானத்தைத் தெரிவிக்கவும், மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கவும், மீட்பைத் தெரிவிக்கவும், சீயோனைப் பார்த்து, "உன் கடவுள் அரசாள்கிறார்" என்று பறைசாற்றவும் வருகிறவருடைய மலரடிகள் மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன! இதோ, உன் சாமக்காவலர் குரல் கேட்கிறது, அவர்கள் தம் குரலை உயர்த்தி மகிழ்ச்சியோடு ஆர்ப்பரிக்கிறார்கள்; ஏனெனில், ஆண்டவர் சீயோனுக்குத் திரும்பி வருவதை நேருக்கு நேராய்க் காண்கிறார்கள்.

யெருசலேமின் பாழடைந்த இடங்களே, நீங்கள் அனைவரும் அக்களித்து ஆர்ப்பரியுங்கள்; ஏனெனில், ஆண்டவர் தம் மக்களுக்கு ஆறுதல் தந்தார், யெருசலேமை அவர் மீட்டருளினார். மக்களினங்கள் அனைத்தின் கண்களுக்கும், ஆண்டவர் தம் பரிசுத்த கைவன்மையைக் காட்டினார். உலகின் கடைகோடி நாடுகள் எல்லாம், நம் கடவுள் தரும் மீட்பைக் காணப்போகின்றன.

## பதிலுரைப் பாடல்

சங். 97:1.2-3 ab. 3cd-4. 5-6 (பல்லவி: 3c)

பல்லவி: **மாநிலத்தின் எல்லைகளெல்லாம் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார்: மக்கள் இனத்தார்
காணத் தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த்
தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவுகூர்ந்தார். பல்லவி

4 மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக்கண்டன.
வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்:
அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ்பாடுங்கள். பல்லவி

5 யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ்பாடுங்கள்: வீணையும் யாழும் இசைத்துப் பாடுங்கள்.
9 எக்காளமும் கொம்பும் ஊதி, ஆண்டவராகிய அரசரின் திருமுன் களிகூருங்கள். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கடவுள் நம்மிடம் மகனின் வாயிலாகப் பேசியுள்ளார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1:1-6

பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள், நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார். இவரை எல்லாவற்றிற்கும் உரிமையாளராக்கினார். இவர் வழியாகவே உலகங்களையெல்லாம் படைத்தார். கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய உள்ளியல்பின் சாயலாகவும் விளங்கும் இவர் தம்முடைய வல்லமை மிக்க வார்த்தையால் எல்லாவற்றையும் தாங்கி வருகிறார். மக்களைப் பாவங்களிலிருந்து தூய்மைப் படுத்திய பின்னர் உன்னதங்களில் மகத்துவம் மிக்கவரின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார். இவ்வாறு அவர் எவ்வளவுக்கு வானதூதர்களை விட மேலான பெயரை உரிமையாகப் பெற்றாரோ அவ்வளவுக்கு அவர்களை விட மேன்மை அடைந்தார்.

ஏனெனில், 'நீரே என் மகன், இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்' என்றும், 'நான் அவருக்கு தந்தையாயிருப்பேன், அவர் எனக்கு மகனாயிருப்பார்' என்றும் எப்போதாவது வானதூதருள் யாரிடமாவது சொன்னதுண்டா? மேலும் தம் தலைப் பேறானவரை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தபொழுது, கடவுளின் தூதர்கள் அனைவரும் அவர்களைத் தொழுவார்களாக" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா*

அல்லேலூயா. புலர்ந்தது நமக்குப் புனித நாள்: புறவினத்தாரே, வருவீர், இறைவன் மலரடி தொழுவீர்: ஏனெனில் உலகின் மீது எழுந்தது பேரொளி இன்றே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் தொடக்கம் 1 : 1 - 18

ஆதியிலே வாக்கு இருந்தார். அவ்வாக்கு கடவுளோடு இருந்தார். அவ்வாக்கு கடவுளாயும் இருந்தார். அவர் ஆதியிலே கடவுளோடு இருந்தார். அவர் வழியாகவே அனைத்தும் உண்டாயின; உண்டான தெதுவும் அவராலேயன்றி உண்டாகவில்லை. அவருள் உயிர் இருந்தது; அவ்வுயிரே மனிதருக்கு ஒளி. அவ்வொளி இருளில் ஒளிர்ந்தது; இருளோ அதை மேற்கொள்ளவில்லை. கடவுள் அனுப்பிய ஒருவர் இருந்தார்; அவர் பெயர் அருளப்பர். அனைவரும் தம் வழியாக விசுவசிக்கும் படி, ஒளியைக் குறித்துச் சாட்சியம் அளிப்பதற்கு அவர் சாட்சியாக வந்தார். அவர் ஒளியல்லர்; ஒளியைக் குறித்துச் சாட்சியம் அளிக்க வந்தவரே.

உண்மையான ஒளி அவ்வாக்கு. ஒவ்வொருவனையும் ஒளிர்விக்கும் அவ்வொளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது. வாக்கு உலகில் இருந்தார்; அவர் வழியாகத்தான் உலகம் உண்டானது; உலகமோ அவரை அறிந்து கொள்ளவில்லை. தமக்குரிய இடத்திற்கு வந்தார். அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தமது பெயரிலே விசுவாசம் வைத்துத் தம்மை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார். இவர்கள் இரத்தத்தினாலோ உடல் ஆசையினாலோ ஆண்மகன் கொள்ளும் விருப்பத்தினாலோ பிறவாமல், கடவுளாலேயே பிறந்தவர்கள். வாக்கு மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம். தந்தையிடமிருந்து அவர் பெற்ற இம்மாட்சிமை, ஒரே பேறான அவருக்கு ஏற்றமாட்சிமையே. ஆகவே அருளும் உண்மையும் நிறைந்து விளங்கினார் அவர்.

அருளப்பர் அவரைக் குறித்துச் சான்றாக, "எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் முன்னிடம் பெற்றார். நான் சொன்னது இவரைப்பற்றியே. ஏனெனில், எனக்கு முன்பு இருந்தார்" என உரக்கக் கூவினார். அவருடைய நிறைவிலிருந்து நாம் அனைவரும் அருளுக்குமேல் அருளைப் பெற்றுள்ளோம் ஏனெனில், திருச்சட்டம் மோயீசன் வழியாக அளிக்கப்பெற்றது. ஆனால், அருளும் உண்மையும், யேசு கிறிஸ்து வழியாக வந்தன. யாரும் கடவுளை என்றுமே கண்டதில்லை; தந்தையின் அணைப்பிலுள்ள ஒரே பேறானவர் தான் அவரை வெளிப்படுத்தினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது குறுகிய வாசகம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் தொடக்கம்

1: 1-5. 9-14

ஆதியிலே வாக்கு இருந்தார்: அவ்வாக்கு கடவுளோடு இருந்தார். அவ்வாக்கு கடவுளாயும் இருந்தார். அவர் ஆதியிலே கடவுளோடு இருந்தார். அவர் வழியாகவே அனைத்தும் உண்டாயின; உண்டான தெதுவும் அவராலேயன்றி உண்டாகவில்லை. அவருள் உயிர் இருந்தது; அவ்வுயிரே மனிதருக்கு ஒளி. அவ்வொளி இருளில் ஒளிர்ந்தது; இருளோ அதை மேற்கொள்ளவில்லை. வாக்கு உண்மையான ஒளி. ஒவ்வொருவனை யும் ஒளிர்விக்கும் அவ்வொளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது.

வாக்கு உலகில் இருந்தார்; அவர் வழியாகத்தான் உலகம் உண்டானது; உலகமோ அவரை அறிந்துகொள்ளவில்லை. தமக்குரிய இடத்திற்கு வந்தார். அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால், அவர் தமது பெயரிலே விசுவாசம் வைத்துத் தம்மை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார். இவர்கள் இரத்தத்தினாலோ உடல் ஆசையினாலோ ஆண் மகன் கொள்ளும் விருப்பத்தினாலோ பிறவாமல், கடவுளாலேயே பிறந்தவர்கள். வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம். தந்தையிடமிருந்து அவர் பெற்ற இம்மாட்சிமை ஒரே பேறான அவருக்கு ஏற்ற மாட்சிமையே. ஆகவே அவர் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## கிறிஸ்து பிறப்பு விழாவின் எண்கிழமைக்குள் வரும் ஞாயிறு

# திருக்குடும்பம்

### முதல் வாசகம்

**ஆண்டவருக்கு அஞ்சுகிறவன் தாய் தந்தையரை மதிக்கிறான்.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் *3:3-7. 14-17a*

ஆண்டவர், பிள்ளைகள் தந்தையை மதிக்கவேண்டும் என்றும், தாயின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கவேண்டும் என்றும் நியமித்திருக்கிறார். கடவுளை நேசிக்கிறவன் தன் பாவங்களுக்காகப் பரிகாரம் செய்வதல்லாமலும் அவைகளை விலக்குவான்; ஆதலால் அவன் மன்றாட்டும் கேட்கப்படும். தன் தாயை மதிக்கிறவன் செல்வங்களைச் சேர்த்தவன் [போல வாழ்வான்]. தன் தந்தையை மதிக்கிறவன் பிள்ளைகளால் மகிழ்ச்சி அடைவான். அவன் வேண்டுதலும் கேட்கப்படும். தன் தந்தையை மதிக்கிறவன் நெடுங்காலம் வாழ்வான். தன் தந்தைக்குக் கீழ்ப்படிகிறவன் தாய்க்கு உதவுவான்.

மகனே, உன் தந்தையின் முதுமையில் அவனை ஆதரி. அவன் வாழ்நாளில் அவனை மனம் நோகச் செய்யாதே. அவன் அறிவு குறைந்தாயின் மன்னித்துக்கொள். உன் விவேகத்தை முன்னிட்டு அவனை நிந்தியாதே. ஏனென்றால், தந்தைக்குக் காண்பிக்கப்படும் இரக்கம் ஒரு போதும் மறக்கப்படமாட்டாது. உன் தாயின் குற்றத்தைச் சகிப்பதனால் உனக்கு நன்மை ஏற்படும். ஏனென்றால், நீ நீதியில் நிலைநாட்டப்படுவாய்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 127: 1-2. 3. 4-5 (பல்லவி: 1 காண்)*

பல்லவி: ஆண்டவருக்கு அஞ்சுபவர் பேறுபெற்றோர்,
அவர் வழிகளில் நடப்பவர் பேறுபெற்றோர்.

ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறுபெற்றோன்: அவர் காட்டிய வழியில்
1 நடப்பவன் நீ பேறு பெற்றோன்.
ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக் கொள்வாய்:
2 பேறு பெற்றவனாவாய், எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

3 கனிதரும் கொடி முந்திரிபோல் உன் மனைவி உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள்: ஒலிவச் செடிகள் போல உன் மக்கள் பந்தியில் உன்னைச் சூழ்ந்திருப்பர்.
பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.
5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசிபொழிவாராக: உன் வாழ்நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை நீ காணும்படி உனக்கு ஆசி கூறுவாராக.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஆண்டவருக்குகந்த குடும்ப வாழ்க்கை.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3: 12-21

சகோதரர்களே :

கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டு அவரால் அன்பு செய்யப்பட்ட இறைமக்கள் நீங்கள். இரங்கும் உள்ளம், பரிவு, தாழ்ச்சி, சாந்தம், பொறுமை ஆகிய பண்புகளை அணிந்துகொள்ளுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள்; ஒருவர்மீது ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால், மன்னித்துவிடுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்ததுபோல் நீங்களும் மன்னியுங்கள். இவையெல்லாவற்றிற்கும் மேலாக அன்பை அணிந்துகொள்ளுங்கள். அதுவே எல்லா நற்பண்புகளையும் பிணைத்து நிறைவு அளிப்பது. கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இதயங்களில் ஆட்சி புரிவதாக. இச்சமாதானத்திற்கே நீங்கள் ஒரே உடலின் உறுப்பினராய் அழைக்கப்பட்டீர்கள். நன்றியுள்ளவர்களாயும் இருங்கள்.

கிறிஸ்துவின் வார்த்தை நிறைவளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக. முழு ஞானத்தோடு ஒருவருக்கொருவர் போதியுங்கள்; அறிவு புகட்டுங்கள். தேவ ஆவி ஏவிய சங்கீதங்களையும் புகழ்ப்பாக்களையும் பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடுங்கள். எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவராகிய யேசுவின் பெயரால் செய்து, அவர் வழியாகத் தந்தையாகிய கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

மனைவியரே, உங்கள் கணவருக்குப் பணிந்து நடங்கள். இதுவே ஆண்டவருக்குள் வாழும் முறை. கணவர்களே, உங்கள் மனைவியர்க்கு அன்பு காட்டுங்கள். அவர்கள்மேல் எரிந்துவிழாதீர்கள். பிள்ளைகளே,

எல்லாவற்றிலும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருங்கள். இதுவே ஆண்டவருக்கு உகந்தது. தந்தையரே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்ட வேண்டாம்; அவர்கள் மனந்தளர்ந்து போகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — கொலோ. 3: 15a, 16a.

அல்லேலூயா. கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இதயங்களில்
ஆட்சிபுரிவதாக;
கிறிஸ்துவின் வார்த்தை நிறைவளத்தோடு உங்களுள்
குடிகொள்வதாக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

### முதல் ஆண்டு

**பிள்ளையையும் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போம்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 2: 13-15. 19-23

ஞானிகள் சென்றபின், இதோ! ஆண்டவரின் தூதர் சூசைக்குக் கனவில் தோன்றி, "எழுந்து, பிள்ளையையும் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போம். நான் சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையைத் தொலைக்க ஏரோது தேடப் போகிறான்" என்றார். அவர் எழுந்து, பிள்ளையையும் தாயையும் இரவிலேயே கூட்டிக் கொண்டு, எகிப்துக்குச் சென்றார். ஏரோது இறக்கும்வரை அங்கேயே இருந்தார். இவ்வாறு, 'எகிப்திலிருந்து என் மகனை அழைத்தேன்' என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் கூறியது நிறைவேற வேண்டியிருந்தது.

ஏரோது இறந்ததும், இதோ! ஆண்டவரின் தூதர் எகிப்தில் சூசைக்குக் கனவில் தோன்றி, "எழுந்து, பிள்ளையையும் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ராயேல் நாட்டுக்குச் செல்லும். ஏனெனில், குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடினவர்கள் இறந்துவிட்டனர்" என்றார். அவர் எழுந்து, பிள்ளையையும் தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ராயேல் நாட்டுக்கு வந்தார்.

ஆனால் யூதேயாவிலே, அர்கெலாவு தன் தந்தை ஏரோதிற்குப் பதிலாக அரசாள்வதாகக் கேள்வியுற்று அங்குச் செல்ல அஞ்சினார். கனவில் எச்சரிக்கப்பட்டு கலிலேயா நாட்டுக்குச் சென்று, நாசரேத்து என்னும் ஊரில் குடியிருந்தார். இவ்வாறு, 'நசரேயன் எனப்படுவார்' என்று இறைவாக்கினர்கள் கூறியது நிறைவேற வேண்டியிருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

## இரண்டாம் ஆண்டு

*பாலன் வளர்ந்து ஞானம் நிறைந்தவராய் இருந்தார்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:22-40

மோயீசன் சட்டப்படி அவர்களுக்குச் சுத்திகர நாள் வந்தபோது குழந்தையை யெருசலேமுக்குக் கொண்டுபோயினர். 'தலைப்பேறான எந்த ஆணும் ஆண்டவருடைய உரிமையாகக் கருதப்படும்' என்று ஆண்டவருடைய சட்டத்தில் எழுதியிருந்தபடி அதனை ஆண்டவர் திருமுன் நிறுத்தவும், அச்சட்டத்திலே கூறியுள்ளபடி ஒரு சோடி காட்டுப் புறாக்கள் அல்லது இரண்டு மாடப் புறாக் குஞ்சுகளைப் பலியாகக் கொடுக்கவும் வேண்டியிருந்தது.

அப்போது யெருசலேமிலே சிமியோன் என்னும் ஒருவர் இருந்தார். அவர் நீதிமான், கடவுள் பக்தர். இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர். பரிசுத்த ஆவி அவர்மீது இருந்தார். ஆண்டவருடைய மெசியாவைக் காண்பதற்குமுன் தாம் சாவதில்லை என்று பரிசுத்த ஆவியால் அறிவிக்கப்பெற்றிருந்தார். அவர் தேவ ஆவியின் ஏவுதலால் கோயிலுக்கு வந்தார். திருச்சட்ட முறைமைப்படி குழந்தைக்குச் செய்யவேண்டியதை நிறைவேற்றுவதற்குப் பாலன் யேசுவைப் பெற்றோர் கொண்டுவந்தபோது, சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு,

"ஆண்டவரே, இப்போது உம் அடியானை அமைதியாகப் போக விடும். ஏனெனில், உமது வாக்கு நிறைவேறிற்று. மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இதுவே புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி. இதுவே உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை" என்று கடவுளைப் போற்றினார்.

குழந்தையைக் குறித்துக் கூறியவற்றைக் கேட்டு அதன் தாயும் தந்தையும் வியந்து கொண்டிருந்தனர். சிமியோன், அவர்களுக்கு ஆசி கூறி, அதன் தாயாகிய மரியாளைப் பார்த்து, "இதோ! இப்பாலன்

இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ எழுச்சியாகவோ அமைந்துள்ளான்; எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான். - உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும். - இதனால் பலருடைய உள்ளங்களினின்று எண்ணங்கள் வெளிப்படும்" என்றார்.

அன்றியும், ஆசேர் குலத்தைச் சார்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்றொருத்தி இருந்தாள். அவள் இறைவாக்குரைப்பவள். வயதில் மிக முதிர்ந்தவள்; மணமாகி ஏழு ஆண்டுகள் கணவனோடு வாழ்ந்த பின், கைம்பெண் ஆனாள். ஏறக்குறைய எண்பத்து நான்கு வயதானவள். கோயிலை விட்டு நீங்காமல் நோன்பாலும் செபத்தாலும் அல்லும் பகலும் பணிபுரிந்து வந்தாள். அவளும் அந்நேரத்தில் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து, யெருசலேமின் விடுதலையை எதிர்பார்த்திருந்த அனைவருக்கும் குழந்தையைப் பற்றி எடுத்துரைத்தாள்.

ஆண்டவருடைய சட்டப்படி எல்லாம் நிறைவேற்றிய பின், அவர்கள் கலிலேயாவில் உள்ள தம் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள். பாலனோ வளர்ந்து வலிமை பெற்றார்; ஞானம் நிறைந்தவராகவும் இருந்தார்; கடவுள் அருளும் அவர் மீது இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✣ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
**2 : 22. 39-40**

மோயீசன் சட்டப்படி அவர்களுக்குச் சுத்திகர நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவர் திருமுன் நிறுத்த யெருசலேமுக்குக் கொண்டு போயினர்.

ஆண்டவருடைய சட்டப்படி எல்லாம் நிறைவேற்றிய பின், அவர்கள் கலிலேயாவில் உள்ள தம் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள். பாலனோ வளர்ந்து வலிமை பெற்றார்; ஞானம் நிறைந்தவராகவும் இருந்தார். கடவுள் அருளும் அவர் மீது இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## மூன்றாம் ஆண்டு

*போதகர்கள் நடுவில் அமர்ந்திருந்த யேசுவை அவருடைய பெற்றோர் கண்டுகொள்கின்றனர்.*

✣ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:41-52

ஆண்டுதோறும் அவருடைய பெற்றோர் பாஸ்காத் திருவிழாவுக்காக யெருசலேமுக்குப் போவார்கள். அவருக்குப் பன்னிரண்டு வயது நடக்கும்போது திருவிழாவின் முறைப்படி யெருசலேமுக்குச் சென்றனர். திருநாட்கள் முடிந்து அவர்கள் திரும்பியபோது சிறுவன் யேசு யெருசலேமிலேயே தங்கிவிட்டார். இது அவருடைய பெற்றோருக்குத் தெரியாது. யாத்திரிகள் கூட்டத்தில் அவர் இருப்பார் என்று நினைத்துக்கொண்டு அவர்கள் ஒருநாள் வழி நடந்த பின்னர் உற்றார் உறவினரிடையே அவரைத் தேடினார்கள். அவரைக் காணாததால் தேடிக்கொண்டு யெருசலேமுக்குத் திரும்பினார்கள்.

மூன்று நாளுக்குப்பின், அவரைக் கோயிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்பதும், அவர்களை வினவுவதுமாய் இருந்தார். கேட்டவர் அனைவரும் அவருடைய மறுமொழிகளில் விளங்கிய அறிவுத்திறனைக் கண்டு திகைத்துப் போயினர். அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு மலைத்துப் போயினர். அவருடைய் தாய் அவரைப் பார்த்து, "மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்துவிட்டாய்? இதோ! உன் தந்தையும் நானும் உன்னை ஏக்கத்தோடு தேடிக்கொண்டிருந்தோமே!" என்றாள். அதற்கு அவர், "ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்கவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார். அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை.

பின்பு அவர் அவர்களோடு புறப்பட்டு நாசரேத்துக்கு வந்து அவர்களுக்குப் பணிந்திருந்தார். அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தன்னுள்ளத்தில் கொண்டிருந்தாள். யேசு வளர வளர ஞானத்திலும் முதிர்ந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் மேன்மேலும் உகந்தவரானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 29

## கிறிஸ்து பிறப்பின் எண்கிழமையில் 5ஆம் நாள்

### முதல் வாசகம்

*தன் சகோதரனுக்கு அன்பு செய்கிறவனே ஒளியில் நிலைத்திருக்கிறான்.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2: 3-11

அன்புக்குரியவர்களே:

யேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடித்தால்தான் நாம் அவரை அறிந்துள்ளோம் என உறுதி கொள்ளலாம். 'நான் அவரை அறிவேன்' என்று சொல்லிக்கொண்டு, அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காதவன் பொய்யன்; உண்மை என்பது அவனிடம் இல்லை. ஆனால் அவரது வார்த்தையை ஒருவன் கடைப்பிடித்தால், அவனிடம் கடவுளன்பு உண்மையாகவே நிறைவாகியுள்ளது. நாம் அவருள் இருக்கிறோம் என்பது இதனால் உறுதியாகும். 'அவருள் நிலைத்திருக்கிறேன்' எனக் கூறுபவன் அவர் நடந்ததுபோல நடக்கவேண்டும்.

அன்புக்குரியவர்களே, நான் உங்களுக்கு எழுதுவது புதியதொரு கட்டளையன்று; ஆதிமுதல் நீங்கள் பெற்றிருந்த பழைய கட்டளையே. நீங்கள் கேட்டுள்ள வார்த்தையே அப்பழைய கட்டளை. இருப்பினும், நான் உங்களுக்கு எழுதுவது புதியதொரு கட்டளைதான். இது புதியது என்பது அவர் வாழ்க்கையில் விளங்கியது போல் உங்கள் வாழ்க்கையிலும் விளங்குகிறது. ஏனெனில், இருள் அகன்றுபோகிறது, உண்மையொளி இப்போதே ஒளிர்கின்றது.

'நான் ஒளியில் இருக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு தன் சகோதரனை வெறுப்பவன் இன்னும் இருளிலேயே இருக்கிறான். தன் சகோதரனுக்கு அன்புசெய்பவனே ஒளியில் நிலைத்திருக்கிறான். அவனை இடறிவிழச் செய்வது எதுவுமில்லை. தன் சகோதரனை வெறுப்பவனோ இருளிலே இருக்கிறான், இருளிலே நடக்கிறான், தான் செல்வதெங்கே என்றறியான்; இருள் அவன் கண்களைக் குருடாக்கி விட்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 95:1-2a. 2b-3. 5b-6 (பல்லவி: 11a)

வானங்கள் மகிழட்டும், பூவுலகும் களிகூரட்டும்

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: மாநிலத்தோரே நீங்கள்
அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.
2 ஆண்டவரைப் பாடுங்கள், அவர் பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

அவர் தரும் மீட்பை நாடோறும் அறிவியுங்கள்.
3 புற இனத்தாரிடையே அவரது மாட்சிமையை எடுத்துச் சொல்லுங்கள்:
மக்கள் அனைவரிடையிலும் அவர்தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள். பல்லவி

5 ஆண்டவரே வானங்களைப் படைத்தவர்.
6 மகத்துவமும் மேன்மையும் அவர் முன் செல்லும்;
வல்லமையும் எழிலும் அவரது திருத்தலத்தில் உள்ளன. பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. இதுவே புறவினத்தாருக்கு இருளகற்றும் ஒளி;
இதுவே உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும்
மாட்சிமை. அல்லேலூயா.

ஒவ்வொருநாளும் தரப்படும் அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக பக்கம் 141ல் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து ஏதாவதொன்றைப் பயன்படுத்தலாம்.

## நற்செய்தி வாசகம்

புறவினத்தார்க்கு இருளகற்றும் ஒளி.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2 : 22 - 35

மோயீசன் சட்டப்படி அவர்களுக்குச் சுத்திகரநாள் வந்தபோது குழந்தையை யெருசலேமுக்குக் கொண்டு போயினர். 'தலைப்பேறான எந்த ஆணும் ஆண்டவருடைய உரிமையாகக் கருதப்படும்' என்று ஆண்டவருடைய சட்டத்தில் எழுதியிருந்தபடி அதனை ஆண்டவர் திருமுன் நிறுத்தவும், அச்சட்டத்திலே கூறியுள்ளபடி ஒரு சோடி காட்டுப் புறாக்கள் அல்லது இரண்டு மாடப்புறாக் குஞ்சுகளைப் பலியாகக் கொடுக்கவும் வேண்டியிருந்தது.

அப்போது யெருசலேமிலே சிமியோன் என்னும் ஒருவர் இருந்தார். அவர் நீதிமான், கடவுள் பக்தர். இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர். பரிசுத்த ஆவி அவர் மீது இருந்தார். ஆண்டவருடைய மெசியாவைக் காண்பதற்கு முன் தாம் சாவதில்லை என்று பரிசுத்த ஆவியால் அறிவிக்கப் பெற்றிருந்தார். அவர் தேவ ஆவியின் ஏவுதலால் கோயிலுக்கு வந்தார். திருச்சட்ட முறைப்படி குழந்தைகளுக்குச் செய்ய வேண்டியதை நிறைவேற்றுவதற்குப் பாலன் யேசுவைப் பெற்ருேர் கொண்டு வந்தபோது, சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு, "ஆண்டவரே, இப்போது உம் அடியானை அமைதியாகப் போகவிடும். ஏனெனில், உமது வாக்கு நிறைவேறிற்று. மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இதுவே புறவினத்தார்க்கு இருளகற்றும் ஒளி. இதுவே உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை" என்று கடவுளைப் போற்றினர்.

குழந்தையைக் குறித்துக் கூறியவற்றைக் கேட்டு அதன் தாயும் தந்தையும் வியந்து கொண்டிருந்தனர். சிமியோன், அவர்களுக்கு ஆசி கூறி அதன் தாயாகிய மரியாளைப் பார்த்து, "இதோ! இப்பாலன் இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ, எழுச்சியாகவோ அமைந்துள்ளார். எதிர்க்கப் படும் அறிகுறியாக இருப்பார். (உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்.) இதனுல் பலருடைய உள்ளங்களினின்று எண்ணங்கள் வெளிப்படும் என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 30

## கிறிஸ்து பிறப்பின் எண்கிழமையில் 6-ஆம் நாள்

### முதல் வாசகம்

*கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவன் என்றும் நிலைத்திருப்பான்.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2:12-17

அன்புக் குழந்தைகளே, அவர் பெயரின் பொருட்டு உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன; ஆகையால், நான் உங்களுக்கு இவ்வாறு எழுதுகிறேன். தந்தையரே, ஆதிமுதல் இருக்கும் அவரை நீங்கள் அறிந்

திருக்கிறீர்கள்; ஆகையால் நான் உங்களுக்கு இவ்வாறு எழுதுகிறேன். இளைஞரே, நீங்கள் தீயோனை வென்றுவிட்டீர்கள்; ஆகையால் நான் உங்களுக்கு இவ்வாறு எழுதுகிறேன். அன்புப் பிள்ளைகளே, பரம தந்தையை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; ஆகையால் நான் உங்களுக்கு இவ்வாறு எழுதுகிறேன். இளைஞரே, நீங்கள் வலிமை மிகுந்தவர்கள்; கடவுளின் வாக்கு உங்களுள் நிலைத்து நிற்கிறது; தீயோனை நீங்கள் வென்றுவிட்டீர்கள்; ஆகையால் நான் உங்களுக்கு இவ்வாறு எழுதுகிறேன்.

உலகின்மீதும் அதிலுள்ள எதன்மீதும் அன்பு வைக்காதீர்கள். உலகின்மீது ஒருவன் அன்பு வைத்தால், பரம தந்தையின்மீது அவனுக்கு அன்பு இல்லை. ஊனியல்பு இச்சிப்பதும், கண்கள் காண இச்சிப்பதும் செல்வத்தில் செருக்குக்கொள்வதுமாகிய இவ்வுலகிற்குரியவை யெல்லாம் பரம தந்தையிடமிருந்து வரவில்லை; உலகிலிருந்தே வருகின்றன. உலகமோ மறைந்துபோகிறது; அத்துடன், மனிதன் உலகில் இச்சிக்கும் அனைத்தும் மறைந்துபோகிறது. ஆனால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவன் என்றும் நிலைத்திருப்பான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 95: 7-8a. 8b-9. 10 (பல்லவி: 11a)*

பல்லவி: வானங்கள் மகிழட்டும், பூவுலகும் களிகூரட்டும்.

7 மக்கள் இனத்தோரே, ஆண்டவருக்குச் செலுத்துங்கள், மகிமையும்
வல்லமையும் ஆண்டவருக்குச் செலுத்துங்கள்.
8 அவரது பெயருக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள். பல்லவி

பலிப்பொருளை ஏந்தி அவர்தம் ஆலய முற்றங்களில் செல்லுங்கள்.
9 திருவுடை அணிந்து ஆண்டவரை வணங்குங்கள்.
மாநிலமே நீ அவர்முன் நடுங்குவாயாக. பல்லவி

10 மாநிலத்தோரே, நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள்:
ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகை அவர் நிலை நிறுத்தியுள்ளார்.
அது அசைவுறாது: மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கின்றார். பல்லவி

அல்லேலூயா

**அல்லேலூயா.** புலர்ந்தது நமக்குப் புனிதநாள் :
புறவினத்தாரே வருவீர், இறைவன் மலரடி தொழுவீர்:
ஏனெனில், உலகின்மீது எழுந்தது பேரொளி இன்றே.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***இஸ்ராயேலின் விடுதலையை எதிர்பார்த்திருந்த அனைவருக்கும் குழந்தையைப்பற்றி எடுத்துரைத்தாள்.***

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2: 36 40

அக்காலத்தில் :

ஆசேர் குலத்தைச் சார்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்றொருத்தி இருந்தாள். அவள் இறைவாக்குரைப்பவள். வயதில் மிக முதிர்ந்தவள்; மணமாகி ஏழு ஆண்டுகள் கணவனோடு வாழ்ந்தபின், கைம்பெண் ஆனாள். ஏறக்குறைய எண்பத்து நான்கு வயதானவள். கோயிலை விட்டு நீங்காமல் நோன்பாலும் செபத்தாலும் அல்லும் பகலும் பணிபுரிந்து வந்தாள். அவளும் அந்நேரத்தில் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து, யெருசலேமின் விடுதலையை எதிர்பார்த்திருந்த அனைவருக்கும் குழந்தையைப்பற்றி எடுத்துரைத்தாள்.

ஆண்டவருடைய சட்டப்படி எல்லாம் நிறைவேற்றியபின், அவர்கள் கலிலேயாவில் உள்ள தம் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப் போனார்கள். பாலனோ வளர்ந்து வலிமை பெற்றார்; ஞானம் நிறைந்தவராகவும் இருந்தார்; கடவுள் அருளும் அவர்மீது இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# டிசம்பர் 31

## கிறிஸ்து பிறப்பின் எண்கிழமையில் 7-ஆம் நாள்

### முதல் வாசகம்

பரிசுத்தரிடமிருந்து அபிஷேகம் பெற்று
அனைத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல்
திருமுகத்திலிருந்து வாசகம்

2:18-21

அன்புப் பிள்ளைகளே, இதுவே இறுதிக் காலம்; எதிர்க் கிறிஸ்து வருவதாக நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களே, இதோ, இப்போதே எதிர்க்கிறிஸ்துகள் பலர் தோன்றியுள்ளனர். இது இறுதிக்காலம் என இதனால் நாம் அறிகிறோம். இவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தனர், உண்மையில் இவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் அல்லர். உண்மையில் நம்மைச் சார்ந்தவர்களாய் இருந்திருப்பின், நம்மோடு நிலைத்திருப்பர். இவர்களுள் யாரும் உண்மையில் நம்மைச் சார்ந்திருக்கவில்லை என்பது தெளிவாகுமாறு நம்மைவிட்டுப் பிரிந்து சென்றார்கள்.

நீங்கள் பரிசுத்தரிடமிருந்து அபிஷேகம் பெற்றிருக்கிறீர்கள். அதனால் அனைவரும் அறிவு பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் உண்மையை அறியவில்லை என்பதால் நான் இதை உங்களுக்கு எழுதவில்லை; அதை அறிந்திருக்கிறீர்கள் என்பதாலும், பொய் எதுவும் உண்மையிலிருந்து வராது என்பதாலுமே எழுதினேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

### பதிலுரைப் பாடல்

*சங். 95:1-2, 11-12, 13 (பல்லவி: 11a)*

வானங்கள் மகிழட்டும், பூவுலகும் களிகூரட்டும்.

1 பாடுங்கள்: மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.

2 ஆண்டவரைப் பாடுங்கள், அவர் பெயரை வாழ்த்துங்கள்; அவர் தரும் மீட்பை நாடோறும் அறிவியுங்கள். பல்லவி

11 வானங்கள் மகிழட்டும், பூவுலகும் களிகூரட்டும்: கடலும் அதில்
வாழ்வனவும் ஆரவாரம் செய்யட்டும்.
12 வயல் வெளியும் அதில் உள்ள அனைத்தும் ஆர்ப்பரிக்கட்டும்: காட்டில்
உள்ள மரங்கள் அனைத்தும் அப்போது ஆண்டவர்முன் மகிழ்ச்சியுறும்.
பல்லவி

13 ஏனெனில், அவர் வருகின்றார்: பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார்.
பூவுலகை அவர் நீதியுடன் ஆட்சி செய்வார்: மக்களை அவர்தம் சொல்லுறு
தியால் ஆள்வார்.
பல்லவி

அல்லேலூயா அரு 1:14. 12b

அல்லேலூயா. வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார். தம்மை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**வார்த்தை மனுவுருவானார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் தொடக்கம் 1:1-18

பக்கம் 111 காண்க

# ஜனவரி 1

## கிறிஸ்து பிறப்பு விழாவின் 8ஆம் நாள்

## இறைவனின் அன்னையாகிய புனித மரியாள்

### முதல் வாசகம்

**இஸ்ராயேல் மக்கள்மீது நமது பெயரைக்கூறி வேண்டும்போது, நாம் அவர்களுக்கு ஆசி அளிப்போம்.**

எண்ணாகமத்திலிருந்து வாசகம் 6: 22-27

ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ ஆரோனுக்கும் அவன் புதல்வர் களுக்கும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: இஸ்ராயேல் மக் களுக்கு ஆசீர் அளிக்கும்போது நீங்கள் அவர்களைப் பார்த்துச் சொல்ல

வேண்டியதாவது: ஆண்டவர் உனக்கு ஆசீர் அளித்துக் காப்பாற்று வாராக. ஆண்டவர் உனக்குத் தம்முடைய திருமுகத்தைக் காண்பித்து, உன்மேல் இரக்கமாய் இருப்பாராக. ஆண்டவர் உன் பக்கம் தம் திரு முகத்தைத் திருப்பி, உனக்குச் சமாதானம் அருள்வாராக என்பதாம்.

இப்படி அவர்கள் இஸ்ராயேல் மக்கள் மீது நம்முடைய பெயரைக் கூறி வேண்டும்போது, நாம் அவர்களுக்கு ஆசீர் அளிப்போம் என்றருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 66: 1-2, 4. 5.7 (பல்லவி: 1a)*

பல்லவி: கடவுள் நம்மீது இரங்கி, நமக்கு ஆசி அளிப்பாராக.

1 கடவுள் நம்மீது இரங்கி, நமக்கு ஆசி அளிப்பாராக: நம் மீது தம் திருமுக ஒளியை வீசுவாராக.

2 அப்போது உலகம் உமது வழியை அறிந்துகொள்ளும், மக்களினங்கள் எல்லாம் உமது மீட்பை உணரும். பல்லவி

4 நீதியோடு மக்களை ஆள்கின்றீர், உலகத்து மக்களினங்கள் மீது ஆட்சி செலுத்துகின்றீர் என்று நாடுகள் அனைத்தும் மகிழ்ந்து கூறட்டும். பல்லவி

5 இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக: மக்கள் எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.

7 கடவுள் நமக்கு ஆசி அளிப்பாராக; மாநிலத்தின் கடையெல்லைவரை மக்கள் அவருக்கு அஞ்சுவார்களாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 4 - 7

சகோதரர்களே :

காலம் நிறைவுற்றபோது, நாம் இறைவனின் பிள்ளைகளாகும்படி திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களை மீட்டுக் கொள்வதற்காக, கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவராகவும் அனுப்பினார். நீங்கள் இறை மக்களாய் இருப்பதால்,

கடவுள் தம் மகனின் ஆவியை நம் உள்ளங்களுக்குள் அனுப்பினர்; அந்த ஆவியானவர் 'அப்பா, தந்தாய்' எனக் கூப்பிடுகிருர். ஆகவே, இனி நீ அடிமை அல்ல, மகன் தான்; மகனுயின் உரிமையாளனுமாம். இவை யாவும் கடவுளின் செயலே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா எபி. 1 : 1 2

அல்லேலூயா. பல்வேறு வகையில் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னேரிடம் பேசிய கடவுள், நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*மரியாளையும் சூசையையும் குழந்தையையும் கண்டனர்.*
*எட்டாம் நாள் அவருக்கு யேசு என்னும் பெயரிட்டார்கள்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2 : 16 - 21

அக்காலத்தில் :

இடையர் பெத்லெகேமுக்கு விரைந்து சென்று, மரியாளையும், சூசையையும், முன்னிட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டனர். கண்ட பின்னர், அப்பாலனைப் பற்றித் தமக்குக் கூறப்பட்டதைப் பிறருக்கு அறிவித்தனர். கேட்ட யாவரும் தங்களுக்கு இடையர் கூறியது பற்றி வியப்படைந்தனர். மரியாளோ இந்நிகழ்ச்சிகளை எல்லாம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்து வந்தாள். இடையர் தாம் கண்டது கேட்டதெல்லாம் நினைத்துக் கடவுளை மகிமைப்படுத்திப் புகழ்ந்து கொண்டே திரும்பினர். அவர்களுக்குச் சொன்னபடியே எல்லாம் நிகழ்ந்திருந்தது.

எட்டாம் நாள் வந்தபோது குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டியிருந்தது. தாய் கருத்தரிக்கும் முன்பே தூதர் குறிப்பிட்டிருந்த 'யேசு' என்னும் பெயரை அதற்கு இட்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# கர்த்தர் பிறப்பு விழாவுக்குப் பின் 2 ஆம் ஞாயிறு

## முதல் வாசகம்

**இறைவனின் ஞானம் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களிடத்தில் குடிகொண்டது.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 24:1-4.12-16

ஞானம் தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளும்; கடவுளிடத்தில் மகிமைப்படுத்தப்படும்; மனிதர்கள் நடுவில் மேன்மைப்படுத்தப்படும்; உன்னத ஆண்டவரை வாழ்த்தும் சபைகளில் தன் வாய் திறக்கும்; அவருடைய வல்லமையின் முன்பாக மேன்மைப்படுத்தப்படும். மக்கள் நடுவில் மகிமைப்படுத்தப்படும்; அதன் புனித மேன்மையைக் கண்டுபிடிக்கிறவர்கள் வியப்படைவார்கள். தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுடைய கூட்டத்தில் அது புகழ்ச்சி பெறும். பேறு பெற்றவர் நடுவில் ஆசிபெறும்.

அப்போது எல்லாம் படைப்பவர் எனக்கும் தம் கட்டளைகளைத் திருவுளம்பற்றினார்; என்னைப் படைத்தவர் என் கூடாரத்தில் இளைப்பாறினார். அவர் என்னை நோக்கி: யாக்கோபிடம் வாழ்ந்திரு; இஸ்ராயேலைச் சொந்தமாக்கிக்கொள்; தேர்ந்துகொள்ளப்பட்ட என்னுடையவர்களிடம் வேரூன்று என்றார்.

தொடக்கத்திலும் உலகத்திற்கு முன்னும் நான் படைக்கப்பட்டேன்; எக்காலமும் இருப்பேன்; புனித உறைவிடத்தில் அவர்முன் பணிசெய்தேன். ஆதலால், சீயோனில் உறுதிப் படுத்தப்பட்டேன்; புனித நகரிலும் இளைப்பாறினேன்; யெருசலேமில் என் அதிகாரம் சென்றது. மாட்சிப்படுத்தப்பட்ட குடிகளிடத்தில் நான் வேரூன்றினேன். என் கடவுளின் உரிமை என் உடைமை. புனிதருடைய கூட்டத்தில் என் உறைவிடம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147: 1-2, 3-4, 8-9 (பல்லவி: அரு. 1:14)

பல்லவி: வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார்.
அல்லது அல்லேலூயா.

1 யெருசலமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்: சீயோனே, உன்
இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினார்;
உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசியளித்தார். பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார்; கோதுமை வளத்தால் உனக்கு
நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார்; விரைந்து செல்கிறது அவருடைய
வார்த்தை. பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார்;
இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும், நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை: தம் கட்டளைகளை
அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

## இரண்டாம் வாசகம்

யேசுவழியாக நம்மைத் தம் பிள்ளைகளாக முன்குறித்து வைத்தார்.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 1: 3-6. 15-18

நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி! அவர் கிறிஸ்துவுக்குள் வானக வாழ்வுக்குரியவையும், தேவ ஆவி தருபவையுமான கொடைகள் அனைத்தும் பொழிந்து, நமக்கு ஆசி அளித்தார். எவ்வாறெனில், நாம் அவரது திருமுன் பரிசுத்தரும் மாசற்றவருமாய் இருக்குமாறு, உலகம் உருவாகுமுன்னரே அவர் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தேர்ந்து கொண்டார். அவர் தம் திருவுள விருப்பத்திற்கேற்ப தம் அன்பு மகனுக்குள் நமக்கருளிய அருளின் மாட்சிமை புகழ் பெற்று விளங்க, யேசு கிறிஸ்துவின் வழியாகவே, நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் நம்மை முன்குறித்து வைத்தார்.

ஆகவே, ஆண்டவராகிய யேசுவில் உங்களுக்குள்ள விசுவாசத்தையும் இறைமக்களான அனைவரிடமும் நீங்கள் காட்டும் அன்பையும் கேள்வியுற்று, நானும் என் செபங்களில் உங்களைக் குறிப்பிட்டு, உங்களை நினைத்து இடைவிடாது நன்றி கூறுகிறேன். நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் கடவுளும், மாட்சிமை மிக்க தந்தையுமானவர் தேவ ஆவியை உங்களுக்குக் கொடுப்பாராக! அந்த ஆவியினால் நீங்கள் உண்மையை வெளிப்படுத்தும் அருளையும் ஞானத்தையும் பெற்று, அவரை முற்றும் அறிந்துகொள்வீர்களாக. இறைவன் உங்களை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும், இறைமக்களிடையே அவர் உங்களுக்கு அளிக்கும் உரிமைப் பேற்றின் மாட்சிமை எவ்வளவு வளம் மிக்கது என்றும், விசுவசிப்போரான நம் பொருட்டு அவர் விளங்கச் செய்யும் வல்லமை எத்துணை பெருமை மிக்கது என்றும் நீங்கள் அறிந்துகொள்ளும்படி உங்கள் அகக் கண்களுக்கு ஒளி தருவாராக!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — 1 திமோ. 3:16 காண்

அல்லேலூயா. புறவினத்தார்க்கு அறிவிக்கப்பெற்ற கிறிஸ்துவே,
உமக்கு மகிமை;
விசுவாசத்தோடு உலகில் ஏற்கப்பெற்ற கிறிஸ்துவே,
உமக்கு மகிமை. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1: 1-18

பக்கம் 111 காண்க.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

1: 1-5. 9-14

பக்கம் 112 காண்க.

# ஜனவரி 2

## முதல் வாசகம்

*தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருக்கட்டும்.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 22-28

அன்புக்குரியவர்களே :

யேசுதான் கிறிஸ்து என்பதை எவன் மறுக்கிறானோ அவன் பொய்யன்; அவனே எதிர்க் கிறிஸ்து; பரம தந்தையையும் அவர் மகனையும் அவன் மறுக்கிறான். மகனை மறுக்கிறவன் எவனும் தந்தையையும் வேண்டாமென்கிறான்; மகனை ஏற்றுக்கொள்பவன் தந்தையையும் ஏற்றுக்கொள்ளுகிறான்.

தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருக்கட்டும். தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருந்தால், தந்தைக்குள்ளும் அவர் மகனுக்குள்ளும் நீங்கள் நிலைத்திருப்பீர்கள். அவர் நமக்கு வாக்களித்தது முடிவில்லா வாழ்வாகும். அதை அவர்தாமே வாக்களித்தார். உங்களை ஏமாற்றப் பார்க்கிறவர்களைக் குறித்து இதை எழுதினேன்.

நீங்களோ அவரிடமிருந்து அபிஷேகம் பெற்றிருக்கிறீர்கள்: அந்த அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது; ஆகவே ஒருவரும் உங்களுக்குக் கற்பிக்கத் தேவையில்லை; அவரது அபிஷேகமே உங்களுக்கு எல்லாவற்றைக் குறித்தும் கற்பித்து வருகிறது. உண்மையைத்தான் கற்பித்து வருகிறது. பொய்யையன்று. எனவே, அது உங்களுக்குக் கற்பித்ததுபோல் அவருள் நிலைத்திருங்கள்.

ஆகவே, அன்புக் குழந்தைகளே, அவர் வெளிப்படும்போது நாம் நம்பிக்கையோடிருக்கவும், அவரது வருகையின்போது வெட்கி விலகாதிருக்கவும், அவருள் நிலைத்திருங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 97 :1. 2-3ab. 3cd-4 (பல்லவி: 3a)

பல்லவி : மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.

ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் : வியத்தகு செயல்களை
1 அவர் செய்துள்ளார் ; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு
வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார் : மக்கள் இனத்தார் காணத்
2 தம் நீதியை அறிவித்தார்.

தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த் தாம்
3 தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவுகூர்ந்தார். பல்லவி

மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள் ;
அகமகிழுங்கள், களிகூருங்கள் , புகழ்பாடுங்கள். பல்லவி

எபி. 1 : 1-2

அல்லேலூயா
அல்லேலூயா. பல்வேறு வகையில் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள், நாம் வாழும் இவ் இறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எனக்குப் பின் வருபவர் உங்களிடையே நிற்கிறார்.**

✣ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1: 19-28

யெருசலேமிலிருந்து யூதர்கள் குருக்களையும் இலேவித்தர்களையும் அருளப்பரிடம் அனுப்பியபோது அவர் கூறிய சான்றுவது: "நீர் யார்?" என்று அவர்கள் கேட்க, அவர், "நான் மெசியா அல்லேன்" என்று ஒப்புக் கொண்டார். மறுக்காமல் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். "பின் என்ன ? நீர் எலியாசோ?" என்று அவரைக்கேட்க. "நானல்லேன்" என்றார். "நீர் இறைவாக்கினரோ ?" என, "அல்லேன்" என்றார். "எங்களை அனுப்பினவர்களுக்கு மறுமொழி அளிக்க வேண்டுமே; உம்மைப் பற்றி என்ன சொல்லுகிறீர் ? நீர் யார்?" என்று அவரை வினவினர். "இறைவாக்கினரான இசையாஸ் கூறியபடி: 'ஆண்டவருடைய வழியைச் செம்மைப்படுத்துங்கள் என்று பாலைவனத்தில் உண்டாகும் கூக்குரல் நான்' என்றார்.

அனுப்பப்பட்டவர் பரிசேயர். அவர்கள், "நீர் மெசியாவோ எலியாசோ, இறைவாக்கினரோ அல்லவென்றால் ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்?" என்று அவரைக் கேட்டார்கள். அதற்கு அருளப்பர், "நான் நீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப் பின் வருபவர், அவருடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன்" என்றார்.

இது யோர்தானுக்கு அப்பாலுள்ள பெத்தானியாவில் நிகழ்ந்தது. அங்கே அருளப்பர் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

(நம் நாட்டில் நடப்பது போல) திருக்காட்சிவிழா ஜனவரி 2 முதல் 8 வரையுள்ள நாட்களில் வரும் ஞாயிறன்று கொண்டாடப்படுமானால் அவ்விழாவுக்குப்பின் இங்கு தரப்பட்ட வாசகங்களுக்குப் பதிலாக ஜனவரி 7 முதல் 12 வரையுள்ள நாட்களுக்கான வாசகங்களைப் பயன் படுத்தவும்.

(பக்கம் 150 காண்)

# ஜனவரி 3

## முதல் வாசகம்

*கடவுளுள் நிலைத்திருக்கிற எவனும் பாவத்திலே வாழ்வதில்லை.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 29-3 : 6

அன்புக்குரியவர்களே:

இறைவன் நீதியுள்ளவர் என நீங்கள் அறிவீர்களாகில், நீதியைக் கடைப்பிடிப்பவன் எவனும் அவரிடமிருந்து பிறந்தவன் என ஒப்புக்கொள்ளுங்கள்.

பரம தந்தை நம்மிடம் காட்டிய அன்பு எவ்வளவு என்று பாருங்கள்! நாம் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுகிறோம். அவருடைய மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்துகொள்ளாததால்தான், நாம் எத்தன்மையரென்பதையும் அது அறிந்துகொள்வதில்லை. அன்புக்குரியவர்களே, இப்போது நாம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம்.

இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் வெளிப்படும்போது, அவரைப்போலவே நாமும் இருப்போம் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்.

அவர்மேல் இந்த நம்பிக்கை கொள்ளும் எவனும் அவர் குற்றமற்றவராய் இருப்பதுபோலத் தன்னையும் குற்றமற்றவனாய்க் காத்துக்கொள்வான். பாவஞ்செய்கிற எவனும் திருச்சட்டத்தை மீறுகிறான். ஏனெனில் திருச்சட்டத்தை மீறுதலே பாவம். பாவங்களைப் போக்குவதற்காகவே அவர் தோன்றினார் என்று உங்களுக்குத் தெரியும். அவரிடமோ பாவமென்பது இல்லை. அவருள் நிலைத்திருக்கிற எவனும் பாவத்திலே வாழ்வதில்லை; பாவத்தில் வாழும் எவனும் அவரைக் கண்டதுமில்லை, அறிந்ததுமில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங் 97:1-3cd-4. 5-6 (பல்லவி: 3a)

பல்லவி: பாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்; வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

3 பாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள் அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

5 யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள், வீணையும் யாழும் இசைத்துப் பாடுங்கள்.
6 எக்காளமும் கொம்பும் ஊதி ஆண்டவராகிய அரசரின் திருமுன் களிகூருங்கள். பல்லவி

அல்லேலூயா அரு 1:14. 12b

அல்லேலூயா. வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார். தம்மை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*இதோ! கடவுளின் செம்மறி.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
1: 29-34

மறுநாள் யேசு தம்மிடம் வருவதைக் கண்ட அருளப்பர், "இதோ! கடவுளுடைய செம்மறி; இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர். 'எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் என்னிலும் முன்னிடம் பெற்றவர்' என்று நான் சொன்னது இவரைப்பற்றியே: ஏனெனில், அவர் எனக்கு முன்பே இருந்தார். நானும் இவரை அறியாதிருந்தேன். ஆயினும், இவர் இஸ்ராயேலுக்கு வெளிப்படும் பொருட்டே நான் நீரால் ஞானஸ்நானம் கொடுத்து வந்தேன்" என்றார்.

மேலும், அருளப்பர் சாட்சியம் கூறியதாவது: "ஆவியானவர் புறாவைப்போல் வானிலிருந்து இறங்கி இவர்மேல் தங்கியதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனால், நீரால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர், 'ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவர்' என்றார். நான் கண்டேன். இவரே கடவுளின் மகன்" என்று சாட்சியம் கூறுகின்றேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 4

## முதல் வாசகம்

*கடவுளிடமிருந்து பிறந்திருப்பதால்*
*அவன் பாவத்தில் வாழ முடியாது.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 7-10

அன்புக் குழந்தைகளே, எவனும் உங்களை ஏமாற்ற இடங்கொடாதீர்கள். இறைவனுக்கு ஏற்புடையதைச் செய்பவனே, கிறிஸ்து இறைவனுக்கு ஏற்புடையவராய் இருப்பதுபோல, தானும் ஏற்புடையவனாய்

இருக்கிறான். பாவஞ்செய்பவன் அலகையைச் சார்ந்தவன்; ஏனெனில் அலகை ஆதிமுதல் பாவஞ்செய்து கொண்டு வருகிறது. இவ்வலகையின் செயல்களைத் தொலைக்கவே கடவுளின் மகன் தோன்றினார்.

கடவுளிடமிருந்து பிறந்தவன் பாவஞ்செய்வதில்லை; ஏனெனில், அவர் இட்ட வித்து அவனுக்குள் நிலைத்திருக்கிறது. அவன் பாவத்தில் வாழமுடியாது; ஏனெனில், அவன் கடவுளிடமிருந்து பிறந்திருக்கிறான். இறைவனுக்கு ஏற்புடையதைச் செய்யாதவனும், தன் சகோதரனுக்கு அன்பு செய்யாதவனும் கடவுளிடமிருந்து வந்தவன் அல்லன். இதினின்று, கடவுளின் மக்கள் யாரென்றும் அலகையின் மக்கள் யாரென்றும் புலப் படும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங் 97: 1. 7- 8.9 (பல்லவி: 3a)*

பல்லவி : மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள். வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார். அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன.
பல்லவி

7 கடலும் அதில் வாழ்வனவும் ஆர்ப்பரிக்கட்டும்: பூவுலகும் அதில் வாழ்வோரும் உளம் பூரிக்கட்டும்.

8 பெருவெள்ளங்கள் கைகொட்டட்டும்: ஆண்டவர் எழுந்தருளும்போது மலைகளும் ஆரவாரம் செய்யட்டும்.
பல்லவி

9 ஏனெனில், அவர் வருகின்றார்: பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார். நீதியுடன் பூவுலகை அவர் ஆள்வார்: மக்களினத்தாரை அவர் நேர்மையுடன் ஆட்சி செய்வார்.
பல்லவி

அல்லேலூயா

எபி. 1: 1-2

அல்லேலூயா. பல்வேறு வகையில் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள், நாம் வாழும் இவ் இறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகப் பேசியுள்ளார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மெசியாவைக் கண்டோம்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 35 - 42

அக்காலத்தில் :

அருளப்பர் தம்முடைய சீடர் இருவரோடு இருக்கையில், யேசு அப்பக்கம் நடந்து சென்றார். அருளப்பர் அவரை உற்று நோக்கி, "இதோ! கடவுளுடைய செம்மறி" என்றார். சீடர் இருவரும் அவர் கூறியதைக் கேட்டு யேசுவைப் பின்தொடர்ந்தனர்.

யேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின்தொடர்வதைக் கண்டு, "என்ன வேண்டும்?" என்று கேட்டார். அவர்கள், "ராபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்றனர். - ராபி என்றால் போதகர் என்று பொருள்படும். - "வந்து பாருங்கள்" என்றார் யேசு. அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்று அவரோடு தங்கினர். அப்பொழுது பிற்பகல் ஏறக்குறைய நான்கு மணி.

அருளப்பர் சொன்னதைக் கேட்டு யேசுவைப் பின்தொடர்ந்த இருவருள் பெலவேந்திரர் ஒருவர். அவர் சீமோன் இராயப்பரின் சகோதரர். அவர் முதலில் தம் சகோதரனாகிய சீமோனைக் கண்டுபிடித்து, "மெசியாவைக் கண்டோம்" என்றார். - மெசியா என்பதற்கு 'அபிஷேகம் செய்யப்பட்டவர்' என்பது பொருள் - பின்பு அவரை யேசுவிடம் அழைத்து வந்தார். யேசு அவரை உற்று நோக்கி "நீ அருளப்பனின் மகனாகிய சீமோன், கேபா எனப்படுவாய்" என்றார். கேபா என்பதற்கு இராயப்பர் என்பது பொருள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 5

## முதல் வாசகம்

*சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோம். ஏனெனில் நம் சகோதரர்களுக்கு அன்பு செய்கிறோம்.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 11 - 21

அன்புக்குரியவர்களே :

தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்த செய்தி இதுவே: நாம் ஒருவர்க்கு ஒருவர் அன்பு செய்ய வேண்டும். காயீனைப்போல் இராதீர்கள்; தீயோனைச் சார்ந்த அவன் தன் தம்பியைக் கொன்றான். ஏன் அவனைக் கொன்றான்? அவனுடைய செயல்கள் தீயனவாகவும், அவன் தம்பியின் செயல்கள் நல்லனவாகவும் இருந்தன.

சகோதரர்களே, உலகம் உங்களை வெறுக்கிறதென்றால் வியப்புற வேண்டாம். சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோம்; நாம் நம் சகோதரர்களுக்கு அன்பு செய்வதால் அதை அறிகிறோம். அன்பு செய்யாதவன் சாவில் நிலைகொள்ளுகிறான். தன் சகோதரனை வெறுக்கிற எவனும் கொலைகாரன். கொலைகாரன் எவனிடத்திலும் முடிவில்லா வாழ்வு நிலைத்திருப்பதில்லை; இது உங்களுக்குத் தெரியும்.

கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்; இதனால் அன்பு இன்னதென்று அறிந்தோம். ஆகவே நாமும் நம்முடைய சகோதரர்களுக்காக நம் உயிரைச் கொடுக்கவேண்டும். இவ்வுலகச் செல்வங்களை உடையவன் ஒருவன், தன் சகோதரன் வறுமையுற்றிருப்பதைக் கண்டு மனமிரங்காவிடில், அவனுள் கடவுளன்பு நிலைத்திருக்கிறதென்று எவ்வாறு சொல்ல முடியும்?

அன்புக் குழந்தைகளே, நம் அன்பு சொல்லிலும் பேச்சிலும் இராமல், செயலில் விளங்கும் உண்மையான அன்பாய் இருக்கட்டும். இதனால் நாம் உண்மையைச் சார்ந்தவர்கள் என்றறிவதோடு, அவர் முன் நம் மனச்

சான்றை அமைதிப்படுத்த முடியும். ஏனெனில், நம் மனச்சான்று நம்மைக் கண்டனம் செய்தால், நம் மனச்சான்றைவிடக் கடவுள் மேலானவர், அனைத்தையும் அறிபவர் என்பதை நினைவில் கொள்வோம். அன்புக் குரியவர்களே, நம் மனச்சான்று நம்மைக் கண்டனம் செய்யாதிருந்தால், கடவுள் முன் நாம் நம்பிக்கையோடு நிற்க முடியும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங் 99:1-2,3,4,5 (பல்லவி: 1a)

பல்லவி: மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும்
ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் அக்களிப்போடு ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள். பெருமகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள்; அவரே நம்மை உண்டாக்கினவர், அவருக்கே நாம் சொந்தம், அவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

4 புகழ்ப் பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள்; இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள்: அவரைப் போற்றிப் புகழுங்கள், அவருடைய பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது. அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

## அல்லேலூயா

அல்லேலூயா. புலர்ந்தது நமக்குப் புனித நாள்: புறவினத்தாரே
வருவீர், இறைவன் மலரடி தொழுவீர்: ஏனெனில் உலகின்
மீது எழுந்தது பேரொளி இன்றே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***நீர் கடவுளின் மகன்; நீரே இஸ்ராயேலின் அரசர்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1: 43-51

அக்காலத்தில்:

யேசு கலிலேயாவுக்குச் செல்ல விரும்பினார். பிலிப்புவைக் கண்டு "என்னைப் பின்செல்" என்றார். பிலிப்பு பெத்சாயிதா ஊரினர். அதுவே பெலவேந்திரர், இராயப்பர் இவர்களுடைய ஊர்.

பிலிப்பு, நத்தனயேலைக்கண்டு, "இறைவாக்கினர்களும், திருச்சட்ட நூலிலே மோயீசனும் யாரைக் குறித்து எழுதினார்களோ அவரைக் கண்டோம். அவர் நாசரேத்தூர் சூசையின் மகன் யேசு" என்றார். அதற்கு நத்தனயேல், "நாசரேத்தூரிலிருந்து நல்லது எதுவும் வரக்கூடுமா? என்றார். பிலிப்போ, "வந்து பார்" என்றார்.

நத்தனயேல் தம்மிடம் வருவதை யேசு கண்டு, அவரைப்பற்றி, "இதோ! உண்மையான இஸ்ராயேலன். இவன் கபடற்றவன்" என்றார். நத்தனயேல் அவரிடம், "எவ்வாறு என்னை அறிந்தீர்?" என்று கேட்க, யேசு அவரைப்பார்த்து," பிலிப்பு உன்னை அழைப்பதற்குமுன், நீ அத்திமரத்தின் கீழ் இருக்கையில் நான் உன்னைக் கண்டேன்" என்றார். நத்தனயேல் அவரிடம், "ராபி, நீர் கடவுளின் மகன், நீரே இஸ்ராயேலின் அரசர்" என்று சொன்னார்.

யேசுவோ அவரைநோக்கி, "உன்னை அத்திமரத்தின் கீழ்க்கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதாலா நீ விசுவசிக்கிறாய்? இதிலும் பெரியவற்றைக் காண்பாய்" என்றுரைத்தார். தொடர்ந்து, "வானம் திறந்திருப்பதையும், கடவுளுடைய தூதர்கள் மனுமகன்மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் என்று உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

# அல்லேலூயா வசனங்கள்

## திருக் காட்சி விழாவுக்கு முன்வரும் வார நாட்களுக்கு

அரு: 1;14-12b

1
அல்லேலூயா. வார்த்தை மனுவுருவானார்: நம்மிடையேகுடிகொண்டார்; தம்மை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார். அல்லேலூயா.

எபி. 1 : 1 - 2

2
அல்லேலூயா. பல்வேறுவகையில் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய இறைவன், நாம் வாழும் இவ் இறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார். அல்லேலூயா.

3
அல்லேலூயா. புலர்ந்தது நமக்குப் புனித நாள்: புறவினத்தாரே வருவீர்: இறைவன் மலரடி தொழுவீர்: ஏனெனில் உலகின்மீது எழுந்தது பேரொளி இன்றே. அல்லேலூயா.

# ஜனவரி 6

# ஆண்டவரின் திருக்காட்சி

## முதல் வாசகம்

**ஆண்டவரின் மகிமை உன்மேல் உதித்துவிட்டது.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 60: 1-6

யெருசலேமே எழுந்திரு, எழுந்து ஒளிவீசு, ஏனெனில் உனது ஒளி வந்துவிட்டது, ஆண்டவரின் மகிமை உன்மேல் உதித்து விட்டது. இதோ, காரிருள் பூமியை மூடிக்கொள்ளுகிறது; அடர்ந்த இருள் மக்களைச் சூழ்ந்து கொள்ளுகிறது; ஆனால் ஆண்டவர் உன்மேல் எழுந்தருள்வார், அவரது மகிமை உன்மீது உதயமாகும்.

மக்களினங்கள் உன் ஒளி நோக்கி வருவார்கள், உன்னில் உதிக்கும் சுடர்கண்டு மன்னர்கள் வருவர். கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார், இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி உன்னிடம் வருகின்றனர்; உன் புதல்வர்கள் தொலைவிலிருந்து வருகின்றனர். உன் புதல்வியர் இடுப்பில் தூக்கி வரப்படுகின்றனர்.

நீயோ அதைக் கண்டு அக்களிப்பாய். உன் உள்ளம் வியப்பினால் பூரிப்படையும்; ஏனெனில், கடல்வளம் உன்னிடம் கொணரப்படும். மக்களினங்களின் செல்வம் உன்னிடம் வந்து சேரும். ஒட்டகங்களின் கூட்டம் உன்னை நிரப்பும், மாதியான், எப்பா நாட்டு இளம் ஒட்டகங்களும் வரும்; சாபா நாட்டினர் அனைவரும் பொன்னும் தூபமும் ஏந்தியவராய் ஆண்டவருக்குப் புகழ் பாடிக்கொண்டு வருவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 71:1-2. 7-8. 10-11. 12-13 (பல்லவி: 11 காண்)*

பல்லவி: ஆண்டவரே, மாநிலத்து மக்களினத்தார் அனைவரும் உம்மை வணங்குவர்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச் செய்யும்: அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.

2 நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக; உம்முடையவரான எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

7 அவரது ஆட்சியின் நாளில் நீதி செழித்தோங்குவதாக; சமாதானம் நிலைபெறும்: நிலவு இருக்கும் வரையில் சமாதானம் நிலைபெறும்.

8 ஒரு கடலினின்றும் மறு கடல் வரைக்கும் அவர் அதிகாரம் செலுத்துவார்: நதியினின்று உலகின் எல்லைவரை அவர் ஆள்வார். பல்லவி

10 தார்சிஸ் நாட்டு மன்னர்களும் தீவுகளின் மன்னர்களும் காணிக்கைகள் கொணர்வர்: அராபியா, சாபா நாட்டு வேந்தர்களும் காணிக்கை செலுத்துவர்.

11 மாநிலத்தரசர் அனைவரும் அவரை வணங்குவர். மக்களினத்தார் அனைவரும் அவருக்கு ஊழியம் செய்வர். பல்லவி

12 தம்மைக் கூவி அழைக்கும் ஏழைக்கு அவர் விடுதலை தருவார்; திக்கற்ற எளியவனை விடுவிப்பார்.

13 ஏழை எளியவர்மீது இரக்கம் கொள்வர். ஏழைகளின் வாழ்வை மலரச் செய்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**புற இனத்தவரும் ஒரே உரிமைப்பேற்றுக்கு வாரிசுகள் என இப்பொழுது வெளியாக்கப்பட்டுள்ளது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். *3:2-3a 5-6*

சகோதரர்களே:

உங்கள் நன்மைக்காகக் கடவுள் எனக்களித்த அருளைப்பற்றிய பொறுப்பைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டுத்தானிருப்பீர்கள். இறை வெளிப்பாட்டின் வழியாய்த்தான் இறைவனின் மறைபொருள் எனக்கு அறிவிக்கப்பட்டது. தேவ ஆவியின் வழியாக இறைவன் தம் பரிசுத்த அப்போஸ்தலருக்கும், இறைவாக்கினருக்கும் இந்த மறைபொருளை இப்பொழுது வெளியாக்கியதுபோல, முந்தின தலைமுறைகளில் மனுமக்களுக்குத் தெரிவிக்கவில்லை. நற்செய்தியின் வழியாக கிறிஸ்து யேசுவுக்குள் புற இனத்தவரும் இறைமக்களோடு சேர்ந்து ஒரே உரிமைப் பேற்றுக்கு வாரிசுகள், ஒரே உடலின் உறுப்பினர், வாக்குறுதியில் பங்கு உடையோர் ஆயினர் என்பதே அம்மறைபொருள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* மத். 2 : 2

அல்லேலூயா. கீழ்த்திசையில் ஆண்டவருடைய விண்மீன் எழக் கண்டோம்; அவரை வணங்க வந்தோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அரசரை வணங்கக் கீழ்த்திசையிலிருந்து வந்துள்ளோம்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2 : 1-12

ஏரோது அரசன்காலத்தில், யூதேயாவிலுள்ள பெத்லெகேமில் யேசு பிறந்திருக்க, இதோ! ஞானிகள் கீழ்த்திசையிலிருந்து யெருசலேமுக்கு வந்து, "யூதர்களின் அரசர் பிறந்திருக்கிறாரே, அவர் எங்கே? அவருடைய விண்மீன் எழுதலைக் கண்டு, அவரை வணங்க வந்தோம்" என்றார்கள்.

இதைக்கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான். அவ்வாறே யெருசலேம் முழுவதும் கலங்கிற்று. அப்பொழுது அவன், தலைமைக் குருக்கள், மக்களுள் மறைநூல் அறிஞர் அனைவரையும் கூட்டி 'மெசியா எங்கே பிறப்பார்' என்று விசாரித்தான். அவர்கள் அவனிடம், "யூதேயாவிலுள்ள

பெத்லெகேமிலே பிறப்பார்; ஏனெனில், 'யூதா நாட்டுப் பெத்லெகேமே யூதாவின் தலைநகரங்களில் நீ சிறியதே அல்ல. ஏனெனில், என் மக்கள் இஸ்ரயேலை மேய்க்கவேண்டிய தலைவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்' என்று இறைவாக்கினர் எழுதியுள்ளார்" என்றனர்.

அப்போது, ஏரோது அந்த ஞானிகளை மறைவாக அழைத்து, அவர்களுக்கு விண்மீன் தோன்றியது எப்பொழுது என்று அவர்களிடம் கருத்தாய்க் கேட்டு அறிந்துகொண்டான். பின்பு அவர்களைப் பெத்லெகேமுக்குப் போகச் சொல்லி, "நீங்கள் சென்று குழந்தையைப்பற்றிக் கருத்தாய் ஆராய்ந்து பாருங்கள்; அவரைக் கண்டபின் எனக்குத் தெரிவியுங்கள், நானும் போய் அவரை வணங்க வேண்டும்" என்றான். அவர்கள் அரசன் கூறியதைக் கேட்டுப் புறப்பட்டுப் போனார்கள்.

இதோ! முன்பு எழக்கண்ட அந்த விண்மீன், குழந்தை இருந்த இடத்திற்குமேல் வந்து நிற்குமளவும், அவர்களுக்கு முன்னே சென்றுகொண்டிருந்தது. விண்மீனைக் கண்டதும் அவர்கள் அளவில்லா மகிழ்ச்சியுற்றனர். வீட்டிற்குள் போய்ப் பிள்ளையை, அதன் தாய் மரியாளுடன் கண்டு, தெண்டனிட்டு வணங்கினர். தம் பேழைகளைத் திறந்து பொன்னும் தூபமும் வெள்ளைப்போளமும் அவருக்குக் காணிக்கையாகச் செலுத்தினர். 'ஏரோதிடம் மீண்டும் செல்ல வேண்டாம்' என்று கனவில் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினர்.

1 இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 6

ஜனவரி 7 அல்லது 8 ஆம் நாளில் வரும் ஞாயிறன்று, திருக்காட்சி விழா கொண்டாடப்படும் இடங்களில்

## முதல் வாசகம்

**தேவ ஆவி, நீர், இரத்தம்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5:5-6, 8-13

அன்புக்குரியவர்களே :

உலகை வெல்பவன் யார்? யேசு, கடவுளின் மகன் என்று விசுவசிப்பவனே. இந்த யேசு கிறிஸ்து நீராலும் இரத்தத்தாலும் வந்தவர். நீரோடு மட்டுமன்று, நீரோடும் இரத்தத்தோடும் வந்தார். இதற்குத் தேவ ஆவியே சாட்சி, ஏனெனில், தேவ ஆவி உண்மையானவர். ஆகவே, தேவ ஆவி, நீர், இரத்தம் ஆகிய மூன்று சாட்சிகள் உள்ளன; இம் மூன்றின் நோக்கமும் ஒன்றே.

நாம் மனிதரின் சாட்சியத்தை ஏற்கிறோமே, கடவுளின் சாட்சியம் அதைவிட மேலானதன்றோ? இந்த மூன்றும் கடவுள் தந்த சாட்சியமே. தம் மகனைப்பற்றி அவர் தந்த சாட்சியமே இது. கடவுளின் மகன்மீது விசுவாசம் கொள்பவன் இந்தச் சாட்சியத்தைத் தன்னுள்கொண்டிருக்கிறான். கடவுளை விசுவசியாதவன் அவரைப் பொய்யனாக்குகிறான்; ஏனெனில், கடவுள் தம் மகனைப்பற்றித் தந்த சாட்சியத்தை அவன் விசுவசிக்கவில்லை.

கடவுள் நமக்கு முடிவில்லா வாழ்வைத் தந்தார்; இவ்வாழ்வு அவர் மகனுள் இருக்கிறது: இதுவே அவர் தரும் சாட்சியம். யாரிடம் இறை மகன் இருக்கிறாரோ, அவனுக்கு வாழ்வு உண்டு; யாரிடம் கடவுள் மகன் இல்லையோ அவனுக்கு வாழ்வு இல்லை.

கடவுளுடைய மகனின் பெயர்மீது விசுவாசம் வைத்துள்ள உங்களுக்கு முடிவில்லா வாழ்வு உண்டு என்பதை நீங்கள் அறியவே இதையெல்லாம் எழுதினேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147:1-2. 3-4. 8-9 (பல்லவி: 1a)

பல்லவி: யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய் :
அல்லது அல்லேலூயா.

1 யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்; சீயோனே, உன் இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினார்: உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசியளித்தார். பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார்: கோதுமை வளத்தால் உனக்கு நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார். விரைந்து செல்கிறது அவருடைய வார்த்தை. பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார். இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை: தம் கட்டளைகளை அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

அல்லேலூயா

மாற்கு 9:6 காண்.

அல்லேலூயா. வானம் திறந்தது, தந்தையின் குரலொலி கேட்டது: இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவிசாயுங்கள். அல்லேலூயா.

ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ள அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக பக்கம் 165 இல் உள்ள தொகுப்பிலிருந்து ஏதாவதொன்றைப் பயன்படுத்தலாம்.

### நற்செய்தி வாசகம்

**நீரே என் அன்பார்ந்த மகன் : உம்மிடம் பூரிப்படைகிறேன்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *1:7-11*

அக்காலத்தில் :

அருளப்பர் அறிவித்ததாவது : "என்னைவிட வல்லவர் ஒருவர் எனக்குப் பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன். நான் உங்களுக்கு நீரால் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவரோ உங்களுக்கு பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பார்."

அந்நாட்களில் யேசு, கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெற்றார். உடனே அவர் ஆற்றிலிருந்து கரையேறுகையில், வானம் பிளவுபடுவதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம் மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, "நீரே என் அன்பார்ந்த மகன் : உம்மிடம் நான் பூரிப்படைகிறேன்" என்று வானிலிருந்து ஒரு குரலொலி கேட்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 7

*ஜனவரி 8ஆம் நாளில் வரும் ஞாயிறன்று, திருக்காட்சி*
*விழா கொண்டாடப்படும் இடங்களில்*

### முதல் வாசகம்

**நாம் கேட்கும் பொழுதெல்லாம் அவர் செவிசாய்க்கிறார்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *5:14-21*

அன்புக்குரியவர்களே:

நாம் இறைவனிடம் கேட்பது அவரது திருவுளத்திற்கேற்றதாய் இருந்தால், அவர் நமக்குச் செவிசாய்க்கிறார் ; இந்த நம்பிக்கையுடன் நாம் அவர்முன் நிற்கமுடியும். நாம் கேட்கும்போதெல்லாம் அவர் செவிசாய்க்

கிறார் என்ற உறுதி நமக்கிருந்தால், அவரிடம் கேட்டதனைத்தும் கிடைத்து விட்டது என்ற உறுதியும் இருக்கும்.

இறுதிச்சாவை வருவிக்காத பாவம் ஒன்றைச் சகோதரன் செய்வதை ஒருவன் கண்டால், அவனுக்காக வேண்டுவானாக; இறைவன் அவனுக்கு வாழ்வளிப்பார். இறுதிச்சாவை வருவிக்காத பாவத்தைச் செய்பவர்களைப் பற்றியே நான் சொல்லுகிறேன். இறுதிச்சாவை வருவிக்கும் பாவம் ஒன்றுண்டு; வேண்டுதல் செய்யும்படி நான் சொல்வது அதைப்பற்றியன்று. தீயசெயலனைத்தும் பாவம்; ஆயினும், இறுதிச்சாவை வருவிக்காத பாவமும் உண்டு.

கடவுளிடமிருந்து பிறக்கிற எவனும் பாவத்திலே வாழ்வதில்லை; கடவுளிடமிருந்து பிறந்தவர், அவனைக் காப்பாற்றுகிறார்; தீயோன் அவனைத் தீண்டுவதில்லை; இது நமக்குத் தெரியும். நாம் கடவுளைச் சார்ந்தவர்கள், ஆனால் உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கிறது; இதுவும் நமக்குத் தெரியும். கடவுளின் மகன் வந்தார்; உண்மை இறைவனை அறியும் ஆற்றலை நமக்குத் தந்தார்: இதுவும் நமக்குத் தெரியும். அவருடைய மகனாகிய யேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் உண்மை இறைவனுக்குள் இருக்கிறோம். இவரே உண்மைக் கடவுள். இவரே முடிவில்லா வாழ்வு.

அன்புக் குழந்தைகளே, பொய்த் தேவர்களிடமிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 149:1-2.3-4.5.6a.9b (பல்லவி: 4a)*

*பல்லவி:* ஆண்டவர் தம்மக்கள்மீது அன்புகூர்கிறார்.

*அல்லது* அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள். புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக!

2 இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து அகமகிழ்வார்களாக: சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக.

பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக: தம்பூராவும் யாழும்கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.

4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிறார், தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிறார்.

பல்லவி

5 மகிமை பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக: தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக!
6 அவர்களது நாவில் இறைவனது பெரும் புகழ் ஒலிப்பதாக:
இத்தகைய மகிமை அவர் தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.

பல்லவி

*அல்லேலூயா* லூக். 7: 16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்: கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இதுவே யேசு செய்த அருங்குறிகளில் முதலாவது.**
**இது கலிலேயாவிலுள்ள கானாவூரில் நிகழ்ந்தது.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:1-12

அக்காலத்தில்:

கலிலேயாவிலுள்ள கானாவூரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. யேசுவின் தாய் அங்கு இருந்தாள். யேசுவும் அவருடைய சீடரும் அத் திருமணத்திற்கு அழைக்கப் பெற்றிருந்தனர். திராட்சை இரசம் தீர்ந்து விடவே, யேசுவின் தாய் அவரை நோக்கி, "இரசம் தீர்ந்து விட்டது" என்றாள். அதற்கு யேசு, "அம்மா! அதை ஏன் என்னிடம் கூறுகிறீர்? எனது நேரம் இன்னும் வரவில்லை" என்றார். அவருடைய தாய் பணியாளரிடம், "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்றாள்.

யூதரின் துப்புரவு முறைப்படி ஆறு கற்சாடிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் பிடிக்கும். யேசு அவர்களை நோக்கி, "இச்சாடிகளில் நீர் நிரப்புங்கள்" என்றார். அவர்கள் அவற்றை வாய் மட்டும் நிரப்பினார்கள். பின்பு அவர், "இப்பொழுது முகந்து பந்தி மேற்பார்வையாளனிடம் எடுத்துச் செல்லுங்கள்" என்றார். அவர்கள் அப்படியே செய்தனர்.

பந்தி மேற்பார்வையாளன் திராட்சை இரசமாய் மாறின நீரைச் சுவைத்தான். இத்திராட்சை இரசம் எங்கிருந்து வந்ததென்று அவனுக்குத் தெரியாது. - ஆனால், நீரைக் கொண்டு வந்த பணியாளருக்குத் தெரியும்- அவன் மணமகனை அழைத்து, "எல்லோரும் முதலில் நல்ல இரசத்தைப் பரிமாறுவர், நன்றாய்க் குடித்த பின் கீழ்த்தரமானதைத் தருவர். நீரோ நல்ல இரசத்தை இதுவரை வைத்திருந்தீரே" என்றான்.

இதுவே யேசு செய்த அருங்குறிகளில் முதலாவது. இது கலிலேயாவிலுள்ள கானாவூரில் நிகழ்ந்தது. இவ்வாறு அவர் தமது மாட்சிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீடர் அவரில் விசுவாசங் கொண்டனர். இதற்குப் பின், அவரும் அவருடைய தாயும் சகோதரரும் அவருடைய சீடரும் கப்பர்நகூமுக்குச் சென்றனர். அங்குச் சில நாட்களே தங்கினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 7 அல்லது திருக்காட்சி விழாவுக்குப்பின் திங்கள்

## முதல் வாசகம்

*ஏவுதல் கடவுளிடமிருந்துதான் வருகிறதா என்பதைச் சோதித்தறியுங்கள்.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3:22-4:6

அன்புக்குரியவர்களே :

நாம் கேட்பதையெல்லாம் அவரிடமிருந்து பெறுவோம். ஏனெனில், அவருடையகட்டளைகளைக் கடைப்பிடித்து, அவருக்குகந்ததைச் செய்கிறோம். நாம் அவருடைய மகன் யேசு கிறிஸ்துவின் பெயர்மீது விசுவாசம் வைத்து, அவர் தந்த கட்டளைப்படி ஒருவருக்கொருவர் அன்பு செய்ய வேண்டும்; இதுவே அவரது கட்டளை. அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவன் அவருள் நிலைத்திருக்கிறான்; அவரும் அவனுள் நிலைத்திருக்கிறார்; அவர் நம்முள் நிலைத்திருக்கிறார் என்பதை அவர் நமக்கு அருளிய ஆவியினால் அறிகிறோம்.

அன்புக்குரியவர்களே, தேவ ஆவியின் ஏவுதல் தமக்கிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் எல்லோரையுமே நம்பிவிடாதீர்கள். அந்த ஏவுதல் கடவுளிடமிருந்துதான் வருகிறதா என்பதைச் சோதித்தறியுங்கள். ஏனெனில், போலித் தீர்க்கதரிசிகள் பலர் உலகெங்கும் பரவியுள்ளனர். கடவுளது ஆவியின் ஏவுதலை நீங்கள் இவ்வாறு அறியக்கூடும். ஊன் உருவில் வந்த யேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளச் செய்யும் ஏவுதல் எல்லாமே கடவுளிடமிருந்து வருகிறது. யேசுவை மறுக்கச் செய்யும் எந்த ஏவுதலும் கடவுளிடமிருந்து வருவதன்று; எதிர்க் கிறிஸ்துவை ஏவும் ஆவியே அது. எதிர்க் கிறிஸ்து வருகிறானென்று கேள்விப்பட்டீர்களே, இதோ அவன் இப்பொழுது உலகில் இருக்கிறான்.

அன்புக் குழந்தைகளே, நீங்களோ கடவுளைச் சார்ந்தவர்கள். நீங்கள் அந்தப் போலித் தீர்க்கதரிசிகளை வென்றுவிட்டீர்கள்; ஏனெனில் உலகில் இருக்கும் அவனைவிட உங்களுள் இருப்பவர் மேலானவர். அவர்கள் உலகைச் சார்ந்தவர்கள், அதனால், அவர்கள் பேசுவதும் உலகைச்சார்ந்ததே. உலகமும் அவர்களுக்குச் செவிசாய்க்கிறது. நாமோ கடவுளைச் சார்ந்தவர்கள்; கடவுளை அறிபவன் நமக்குச் செவிசாய்க்கிறான். கடவுளைச் சார்ந்திராதவன் நமக்குச் செவிசாய்ப்பதில்லை. இதினின்று, உண்மையின் ஆவி எது, ஏமாற்றும் ஆவி எது என்று அறியக்கூடும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 2:7-8, 10-11 (பல்லவி: 8a)*

யாம் உமக்கு மக்களினங்களை உரிமையாக்குவோம்.

7 கடவுள் விடுத்த கட்டளையை நான் பறைசாற்றுவேன்: ஆண்டவர்
என்னிடம் கூறியது, "நீர் எம் மகன், இன்று உம்மை ஈன்றெடுத்தோம்."
8 எம்மிடம் கேளும், யாம் உமக்கு மக்களினங்களை உரிமை யாக்குவோம்:
உலகின் கடைஎல்லைவரை உமக்குச் சொந்தமாக்குவோம். பல்லவி

10 ஆகவே அரசர்களே, இப்போது உணர்ந்து கொள்ளுங்கள்; மாநிலத்தை
ஆள்பவர்களே, அறிந்துகொள்ளுங்கள்.
11 ஆண்டவருக்கு அச்சத்தோடு ஊழியம் செய்யுங்கள்: நடுக்கமுடன் அவர்
முன் அகமகிழுங்கள். பல்லவி

அல்லேலூயா மத்: 4:23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கிவந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விண்ணரசு நெருங்கிவிட்டது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

4:12-17. 23-25

அக்காலத்தில் :

அருளப்பர் சிறைப்பட்டதைக் கேள்வியுற்று யேசு கலிலேயாவுக்குத் திரும்பினார். அவர் நாசரேத்தூரை விட்டு, செபுலோன் நப்தலி நாட்டில் கடலோரமாயுள்ள கப்பர்நகூமுக்கு வந்து குடியிருந்தார். இசையாஸ் இறைவாக்கினர் பின்வருமாறு கூறியது இப்படி நிறைவேற வேண்டியிருந்தது:

'செபுலோன் நாடே! நப்தலி நாடே! கடல் நோக்கும் வழியே! யோர்தான் அக்கரைப் பகுதியே! புறவினத்தார் வாழும் கலிலேயாவே! இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்தது.'

அதுமுதல் யேசு, "மனந்திரும்புங்கள், ஏனெனில், விண்ணரசு நெருங்கிவிட்டது" என்று அறிவிக்கத் தொடங்கினார்.

அவர் கலிலேயா எங்கும் சுற்றி, அவர்களுடைய செபக்கூடங்களில் போதித்து, விண்ணரசைப்பற்றிய நற்செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லா நோயையும் பிணியையும் குணமாக்கி வந்தார். அவரைப் பற்றிய பேச்சு சீரியாநாடு முழுவதும் பரவியது. பல்வேறு நோய் நோக்காட்டினால் வருந்தும் பிணியாளர் அனைவரையும், பேய் பிடித்தோரையும் பைத்தியக்காரரையும் திமிர்வாதக்காரரையும் அவரிடம் கொண்டுவந்தனர். அவர் அவர்களைக் குணப்படுத்தினார். கலிலேயா, தெக்கப்போலி, யெருசலேம், யூதேயா, யோர்தானுக்கு அக்கரைப் பகுதியாகிய இடங்களிலிருந்து, மக்கள் கூட்டமாய் அவரைப் பின் தொடர்ந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 8 அல்லது திருக்காட்சி விழாவுக்குப் பின் செவ்வாய்

## முதல் வாசகம்

**அன்பே கடவுள்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 4:7-10

அன்புக்குரியவர்களே

நாம் ஒருவர்க்கொருவர் அன்பு செய்வோமாக. ஏனெனில், அன்பு கடவுளிடமிருந்து வருகிறது; அன்பு செய்பவன் எவனும் கடவுளிடமிருந்து பிறந்துள்ளான்; அவனே கடவுளை அறிவான். அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை; ஏனெனில் அன்பே கடவுள்.

தம் ஒரே பேறான மகனின் வழியாக நாம் வாழ்வு பெறும் பொருட்டு, கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம் மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது. நாம் கடவுளுக்கு அன்பு செய்ததால் அன்று, அவரே நமக்கு அன்பு செய்து நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம் மகனை அனுப்பியதால்தான் அன்பின் தன்மை விளங்குகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 71:-12. 3-4ba. 78 (பல்லவி: 11 காண்.)

பல்லவி: மாநிலத்து மக்கள் அனைவரும், ஆண்டவரே உம்மை வணங்குவர்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச் செய்யும்,
அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.

2 நீதியோடு அவர் உன் மக்களை ஆள்வாராக. உம்முடையவரான எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

3 மலைகள் உம் மக்களுக்குச் சமாதானம் தருவதாக: குன்றுகள் நீதியைக் காப்பனவாக.
4 எளிய மக்களை அவர் காப்பாராக, ஏழைகளின் மக்களை அவர் பாதுகாப்பா ராக. பல்லவி

7 அவரது ஆட்சியின் நாளில் நீதி செழித்தோங்குவதாக. சமாதானம் நிலை பெறும்; நிலவு இருக்கும் வரையில் சமாதானம் நிலைபெறும்.
8 ஒரு கடலினின்றும் மறு கடல் வரைக்கும் அவர் அதிகாரம் செலுத்துவார். நதியினின்று உலகின் எல்லை வரை அவர் ஆள்வார். பல்லவி

அல்லேலூயா லூக். 4:18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப் பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யேசு அப்பம் பெருகச்செய்து, தாம் இறைவாக்கினர் எனக் காட்டுகிறார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6.34-44

அக்காலத்தில்:

யேசு பெருங்கூட்டத்தைக் கண்டார். ஆயனில்லா ஆடுகள்போல் இருந்ததால் அவர்கள்மீது மனமிரங்கி நெடுநேரம் போதிக்கலானார். இதற்குள் நேரமாகிவிடவே, சீடர் அவரிடம்வந்து,"பாழ்வெளியாயிற்றே, ஏற்கெனவே நேரமுமாகிவிட்டது. சுற்றிலுமுள்ள பட்டிகளுக்கும் ஊர்களுக்கும் சென்று உண்பதற்கு ஏதாவது வாங்கிக்கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிடும்" என்றனர்.

அதற்கு அவர், "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" என, "அவர்களுக்கு அப்பம் கொடுக்க நாங்கள் இருநூறு வெள்ளிக்காசுக்கு அப்பம் வாங்கிவர வேண்டுமா?" என்றனர். அவர் அவர்களை நோக்கி "உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன? போய்ப் பாருங்கள்" என்று அவர்களும் பார்த்துவந்து, "ஐந்து அப்பங்கள் இருக் கின்றன. இரண்டு மீனும் உண்டு" என்றனர்.

எல்லோரையும் பசும்புல் தரையில் பந்தி பந்தியாய் அமர்த்தும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். மக்கள் நூறு நூறாகவும் ஐம்பது ஐம்பதா கவும் கும்பல் கும்பலாய் அமர்ந்தனர். ஐந்து அப்பத்தையும் இரண்டு

மீனையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, இறைபுகழ் கூறி அப்பங்களைப் பிட்டு, சீடருக்கு அளித்துப் பரிமாறச் சொன்னார். இரண்டு மீனையும் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார். அனைவரும் வயிரார உண்டனர். அப்பத்துண்டுகளையும் மீன்களில் மீதியானதையும் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள். அப்பம் உண்டவர்கள் ஐயாயிரம் ஆண்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## ஜனவரி 9 அல்லது திருக்காட்சி விழாவுக்குப்பின் புதன்

### முதல் வாசகம்

நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்தால்
கடவுள் நம்முள் நிலைத்திருக்கிறார்.

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல்
திருமுகத்திலிருந்து வாசகம் 4:11-18

அன்புக்குரியவர்களே, கடவுள் நமக்கு இவ்வாறு அன்பு செய்தார் எனில், நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செய்தல் வேண்டும். கடவுளை எவனும் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால், நாம் ஒருவர்க்கொருவர் அன்பு செய்தால், கடவுள் நம்முள் நிலைத்திருக்கிறார். அவரது அன்பு நம்மிடம் நிறைவுற்றிருக்கிறது.

தம் ஆவியில் அவர் நமக்குப் பங்கு தந்தமையால், நாம் அவருள் நிலைத்திருக்கிறோம் எனவும், அவர் நம்முள் நிலைத்திருக்கிறார் எனவும் அறிகிறோம். தந்தை தம் மகனை உலகின் மீட்பராக அனுப்பினாரென்று கண்டோம்; அதற்குச் சான்று பகர்கின்றோம்.

யேசு கடவுளின் மகன் என ஏற்றுக்கொள்பவன் எவனோ அவனுள் கடவுள் நிலைத்திருக்கிறார்; அவனும் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான். இங்ஙனம், கடவுள் நம்மீதுகொண்ட அன்பை அறியலானோம்; அந்த அன்பை விசுவசித்தோம். அன்பே கடவுள்; அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான் கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்.

தீர்ப்பு நாளில் நாம் நம்பிக்கையோடிருப்போம் என்று எதிர்பார்ப்பதில் அன்பின் நிறைவு நம்மிடம் விளங்குகிறது. இவ்வுலகிலேயே நாம் அவரைப்போல் இருப்பதால் அந்த நம்பிக்கை நமக்குண்டு. அன்பில் அச்சத்துக்கிடமில்லை; நிறை அன்பு அச்சத்தை அகற்றும்; ஏனெனில், அச்சம்கொள்பவன் தண்டனையை எதிர்பார்க்கிறான். அச்சம் கொள்பவனோ அன்பில் நிறைவு பெறவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 71: 1-2. 10-11. 12-13 (பல்லவி: 11 காண்)

பல்லவி : மாநிலத்து மக்கள் அனைவரும் ஆண்டவரே,
உம்மை வணங்குவர்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச் செய்யும், அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.
2 நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக: உம்முடையவரான எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

10 தார்சிஸ் நாட்டு மன்னர்களும் தீவுகளின் மன்னர்களும் காணிக்கைகள் கொணர்வர்: அராபியா, சாபா நாட்டு வேந்தர்களும் காணிக்கை செலுத்துவர்.
11 மாநிலத்தரசர் அனைவரும் அவரை வணங்குவர்: மக்களினத்தார் அனைவரும் அவருக்கு ஊழியம் செய்வர். பல்லவி

12 தம்மைக் கூவி அழைக்கும் ஏழைக்கு அவர் விடுதலை தருவார். திக்கற்ற எளியவனை விடுவிப்பார்.
13 ஏழை எளியவன்மீது இரக்கம் கொள்வார்: ஏழைகளின் வாழ்வை மலரச் செய்வார். பல்லவி

அல்லேலூயா 1 திமோ 3: 16 காண்

அல்லேலூயா. புறவினத்தார்க்கு அறிவிக்கப்பெற்ற கிறிஸ்துவே, உமக்கு மகிமை;
விசுவாசத்தோடு உலகில் ஏற்கப்பட்ட கிறிஸ்துவே, உமக்கு மகிமை. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர் கடல் மீது நடப்பதைக் கண்டனர்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6 : 45 - 52.

ஐயாயிரம் ஆண்களும் வயிறார உண்டபின், சீடர்கள் உடனே படகேறிக் கடலைக் கடந்து முன்னதாகப் பெத்சாயிதாவை நோக்கிப் போகும்படி யேசு வற்புறுத்தினார். மக்களை அனுப்பிவிட்டு மலைக்குச் செபிக்கச் சென்றார்.

இரவாயிற்று, படகு நடுக் கடலில் இருந்தது. அவர் தனியே தரையில் இருந்தார். எதிர்க் காற்று அடித்ததால் அவர்கள் தண்டு வலிக்க வருந்துவதைக் கண்டு, ஏறக்குறைய நான்காம் சாமத்தில் அவர்களை நோக்கிக் கடல் மீது நடந்து வந்து அவர்களைக் கடந்து செல்ல இருந்தார். அவர்களோ அவர் கடல் மீது நடப்பதைக் கண்டு பூதமென்று எண்ணி அலறினர். அனைவரும் அவரைக் கண்டு கலங்கினர். உடனே அவர் அவர்களிடம் பேசி, "தைரியமாயிருங்கள், நான்தான், அஞ்சாதீர்கள்" என்று சொன்னார். அவர்களை அணுகிப் படகில் ஏறினார், காற்று ஓய்ந்தது.

அவர்கள் தங்களுக்குள் மிகமிகத் திகைத்துப் போயினர். ஏனெனில் அப்பங்களின் புதுமையைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர்கள் உள்ளம் மழுங்கிப் போயிருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 10 அல்லது திருக்காட்சி விழாவுக்குப் பின்

# வியாழன்

## முதல் வாசகம்

**கடவுளுக்கு அன்பு செய்பவன், தன் சகோதரனுக்கும் அன்பு செய்ய வேண்டும்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல்
திருமுகத்திலிருந்து வாசகம் 4: 19 - 5 : 4

அன்புக்குரியவர்களே :

அவரே நமக்கு முதலில் அன்பு செய்ததால், நாமும் அன்பு செய்வோமாக. 'நான் கடவுளுக்கு அன்பு செய்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு, ஒருவன் தன் சகோதரனை வெறுத்தால், அவன் பொய்யன். ஏனெனில் கண்ணால் கண்ட சகோதரனுக்கு அன்பு செய்யாதவன், தான் கண்டிராத கடவுளுக்கு அன்பு செய்ய இயலாது. கடவுளுக்கு அன்பு செய்பவன், தன் சகோதரனுக்கும் அன்பு செய்ய வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை.

யேசுதான் கிறிஸ்து என்று விசுவசிக்கும் எவனுக்கும் கடவுளே தந்தை. தந்தைக்கு அன்பு செய்பவன், தந்தை பெற்ற மகனுக்கும் அன்பு செய்கிறான். நாம் கடவுளுக்கு அன்பு செய்து அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது, கடவுளுடைய மக்களுக்கும் அன்பு செய்கிறோம் என்பது தெளிவாகிறது.

அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதே கடவுள் அன்பு. அவருடைய கட்டளைகள் நமக்குச் சுமையல்ல. ஏனெனில், கடவுளிடமிருந்து பிறந்தவன் எவனும் உலகை வெல்கிறான். உலகைத் தோற்கடித்து நாம் அடைந்த வெற்றி நம் விசுவாசமே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 71: 1-2. 14-15bc. 17 (பல்லவி: 11 காண்)

பல்லவி: மாநிலத்து மக்கள் அனைவரும், ஆண்டவரே,
உம்மை வணங்குவர்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச் செய்யும். அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.

2 நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக: உம்முடையவரான எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

14 கொடுமையினின்றும் துன்பத்தினின்றும் அவர்களை விடுவிப்பார்; அவர்கள் இரத்தம் அவர் முன்னிலையில் விலை மிக்கது.

15 அவருக்காக வேண்டுதல் என்றும் எழும்பும்; என்றும் அவருக்கு ஆசிமொழி கிடைக்கும். பல்லவி

16 அவரது பெயர் என்றென்றும் வாழ்த்தப் பெறுவதாக: கதிரோன் இருக்கும்வரை அவரது பேரும் புகழும் நிலைப்பதாக. அவர் வழியாய்ப் பூவுலக இனத்தார் அனைவரும் ஆசிபெறுவர்: மக்கள் இனத்தார் அனைவரும் அவரைப் போற்றிப் புகழ்வர். பல்லவி

அல்லேலூயா லூக். 4: 18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:14-22a

அக்காலத்தில்:

ஆவியானவரின் வல்லமை பூண்டவராய் யேசு கலிலேயாவுக்குத் திரும்பினார். அவரைப்பற்றிய பேச்சு சுற்றுப்புறம் எங்கும் பரவியது. யூதர்களுடைய செபக்கூடங்களில் அவர் போதித்து வந்தார். யாவரும் அவரை மகிமைப் படுத்தினர்.

அவர் தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்திற்கு வந்தார். வழக்கப் படி ஓய்வுநாளன்று செபக்கூடத்திற்கு வந்து வாசிக்க எழுந்தார். இசையாஸ் எழுதிய இறைவாக்குகளின் ஏட்டுச் சுருளை அவரிடம் கொடுத்தனர். அதை விரித்துப் பின்வரும் பகுதியைக் கண்டார்.

ஆண்டவருடைய ஆவி என்மேலே. ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப் பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார்.

பின்னர் ஏட்டைச் சுருட்டிப் பணிவிடைக்காரனிடம் கொடுத்து விட்டு அமர்ந்தார். செபக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே நோக்கிய வண்ணமாயிருந்தன. அப்போது அவர், "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்று கூறலானார். யாவரும் அவரைப் பாராட்டி, அவர் வாயினின்று எழுந்த அருள் மொழிகளை வியந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 11 அல்லது திருக்காட்சி விழாவுக்குப் பின் வெள்ளி

## முதல் வாசகம்

***தேவ ஆவி, நீர், இரத்தம்.***

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 5-6, 8-13

அன்புக்குரியவர்களே :

உலகை வெல்பவன் யார்? யேசு, கடவுளின் மகன் என்று விசுவசிப்பவனே. இந்த யேசு கிறிஸ்து நீராலும் இரத்தத்தாலும் வந்தவர். ஆகவே தேவ ஆவி, நீர், இரத்தம் ஆகிய மூன்று சாட்சிகள் உள்ளன; இம்மூன்றின் நோக்கமும் ஒன்றே.

நாம் மனிதரின் சாட்சியத்தை ஏற்கிறோமே, கடவுளின் சாட்சியம் அதைவிட மேலானதன்றோ? இந்த மூன்றும் கடவுள் தந்த சாட்சியமே. தம் மகனைப் பற்றி அவர் தந்த சாட்சியமே இது. கடவுளின் மகன்மீது விசுவாசம் கொள்பவன் இந்தச் சாட்சியத்தைத் தன்னுள்கொண்டிருக்கிறான். கடவுளை விசுவசியாதவன் அவரைப் பொய்யனாக்குகிறான்; ஏனெனில், கடவுள் தம் மகனைப்பற்றித் தந்த சாட்சியத்தை அவன் விசுவசிக்கவில்லை.

கடவுள் நமக்கு முடிவில்லாத வாழ்வைத் தந்தார்; இவ்வாழ்வு அவர் மகனுள் இருக்கிறது; இதுவே அவர் தரும் சாட்சியம். யாரிடம் இறைமகன் இருக்கிறாரோ, அவனுக்கு வாழ்வு உண்டு; யாரிடம் கடவுள் மகன் இல்லையோ அவனுக்கு வாழ்வு இல்லை.

கடவுளுடைய மகனின் பெயர்மீது விசுவாசம் வைத்துள்ள உங்களுக்கு முடிவில்லா வாழ்வு உண்டு என்பதை நீங்கள் அறியவே இதையெல்லாம் எழுதினேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147:1-2. 3-4. 8-9 (பல்லவி: 1a)

பல்லவி: யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்.

அல்லது அல்லேலூயா.

1 யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்: சீயோனே, உன்
இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினார்:
உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசியளித்தார்.

பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார்; கோதுமை வளத்தால்
உனக்கு நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார். விரைந்து செல்கிறது அவருடைய
வார்த்தை.

பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார்.
இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை; தம் கட்டளைகளை
அவர்களுக்கு வெளியிட்டதில்லை.

பல்லவி

அல்லேலூயா மத். 4:23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப்பற்றிய நற்செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லாப் பிணிகளையும் குணமாக்கி வந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உடனே தொழுநோய் அவனை விட்டு நீங்கியது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:12-16

யேசு ஓர் ஊரில் இருந்தபோது, இதோ! உடலெல்லாம் தொழுநோயாயிருந்த ஒருவன் யேசுவைக் கண்டு முகங்குப்புற விழுந்து, "ஆண்டவரே, நீர் விரும்பினால், என்னைக் குணமாக்க உம்மால் கூடும்" என்று மன்றாடினான். அவர் தம் கையை நீட்டி, "விரும்புகிறேன், குணமாகு" என்று சொல்லி அவனைத் தொட்டார். உடனே தொழுநோய் அவனை விட்டு நீங்கியது. "ஒருவருக்கும் இதைச் சொல்ல வேண்

டாம்'' என்று அவனுக்குக் கட்டளையிட்டு, ''போய், உன்னைக் குரு விடம் காட்டி, நீ குணமானதற்காக மோயீசன் கற்பித்தபடி காணிக்கை செலுத்து. அது அவர்களுக்கு அத்தாட்சியாகும்'' என்றார்.

அவரைப்பற்றிய பேச்சு இன்னும் மிகுதியாய்ப் பரவிற்று. அவர் சொல்வதைக் கேட்கவும், தங்கள் பிணிகள் நீங்கவும் மக்கள் திரள் திரளாக அவரிடம் வருவார்கள். அவரோ தனிமையான இடங்களுக்குச் சென்று செபஞ் செய்வது வழக்கம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஜனவரி 12 அல்லது திருக்காட்சி விழாவுக்குப்பின் சனி

## முதல் வாசகம்

*நாம் கேட்பதற்கெல்லாம் அவர் செவிசாய்க்கிறார்.*

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல்
திருமுகத்திலிருந்து வாசகம் 5:14-21

அன்புக்குரியவர்களே:

நாம் இறைவனிடம் கேட்பது அவரது திருவுளத்திற்கேற்றதாய் இருந்தால், அவர் நமக்குச் செவிசாய்க்கிறார். இந்த நம்பிக்கையுடன் நாம் அவர்முன் நிற்கமுடியும். நாம் கேட்கும்போதெல்லாம் அவர் செவிசாய்க் கிறார் என்ற உறுதி நமக்கிருந்தால், அவரிடம் கேட்டதனைத்தும் கிடைத்து விட்டது என்ற உறுதியும் இருக்கும்.

இறுதிச்சாவை வருவிக்காத பாவம் ஒன்றைச் சகோதரன் செய்வதை ஒருவன் கண்டால், அவனுக்காக வேண்டுவானாக; இறைவன் அவனுக்கு வாழ்வளிப்பார். இறுதிச்சாவை வருவிக்காத பாவத்தைச் செய்பவர்களைப் பற்றியே நான் சொல்லுகிறேன். இறுதிச்சாவை வருவிக்கும் பாவம் ஒன்றுண்டு; வேண்டுதல் செய்யும்படி நான் சொல்லுவது அதைப்பற்றி யன்று. தீய செயலனைத்தும் பாவம்; ஆயினும் இறுதிச்சாவை வருவிக்காத பாவமும் உண்டு.

கடவுளிடமிருந்து பிறக்கிற எவனும் பாவத்திலே வாழ்வதில்லை. கடவுளிடமிருந்து பிறந்தவர் அவனைக் காப்பாற்றுகிறார்; இது நமக்குத் தெரியும். நாம் கடவுளைச்சார்ந்தவர்கள்; ஆனால் உலகனைத்தும் தீயோனின் பிடியில் இருக்கிறது; இதுவும் நமக்குத் தெரியும். கடவுளின் மகன் வந்தார்; உண்மை இறைவனை அறியும் ஆற்றலை நமக்குத் தந்தார்; இதுவும் நமக்குத் தெரியும். அவருடைய மகனாகிய யேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் உண்மை இறைவனுக்குள் இருக்கிறோம்; இவரே உண்மைக் கடவுள். இவரே முடிவில்லா வாழ்வு.

அன்புக் குழந்தைகளே, பொய்த் தேவர்களிடமிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 149:1-2. 3-4. 5-6a. 9b (பல்லவி: 4a)

பல்லவி: ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிறார்.
அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள். புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக!
2 இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து அகமகிழ்வார்களாக: சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக.
பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக: தம்பூராவும் யாழும் கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.
4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிறார், தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிறார்.
பல்லவி

5 மகிமை பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக: தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக!
6 அவர்களது நாவில் இறைவனது பெரும் புகழ் ஒலிப்பதாக:
9 இத்தகைய மகிமை அவர்தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.
பல்லவி

## அல்லேலூயா

மத். 4 : 16

அல்லேலூயா. இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்: மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்தது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

மணமகனின் நண்பன் அவன் குரலைக் கேட்டுப் பெருமகிழ்வடைகிறான்.

அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
3 : 22 - 30

அக்காலத்தில் :

யேசுவும் அவருடைய சீடரும் யூதேயா நாட்டிற்கு வந்தனர். அங்கே அவர் அவர்களோடு தங்கி, ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். அருளப்பரும் சாலீமுக்கு அருகிலுள்ள அயினோன் என்னுமிடத்தில் நிறைய தண்ணீர் இருந்ததால், ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார். மக்கள் வந்து ஞானஸ்நானம் பெற்றனர். அருளப்பர் இன்னும் சிறைப்படவில்லை.

இதனால் அருளப்பரின் சீடர் சிலருக்கும், யூதன் ஒருவனுக்கும் தூய்மைச் சடங்கு முறைமை பற்றி வாக்குவாதம் உண்டாயிற்று. அவர்கள் அருளப்பரிடம் வந்து, " ராபி, உம்மோடு யோர்தானுக்கு அப்பால் ஒருவர் இருந்தாரே, அவரைக் குறித்து நீர் சாட்சியம் கூறினீரே ; இதோ ! அவர் ஞானஸ்நானம் கொடுக்கிறார், எல்லாரும் அவரிடம் போகின்றனர் " என்றார்கள்.

அதற்கு அருளப்பர் கூறியதாவது : " கடவுள் கொடுத்தாலொழிய யாரும் எதையும் பெற முடியாது " ' நான் மெசியா அல்லேன். அவருக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன் ' என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சி. " மணமகளை உடையவன் மணமகனே; மணமகனின் சொல்லுக்காகக் காத்து நிற்கும் அவனுடைய நண்பன் மணமகனுடைய குரலைக் கேட்டுப் பெருமகிழ்வடைகிறான். இதுவே என் மகிழ்ச்சி; இம்மகிழ்ச்சியும் நிறைவுற்றது. அவர் வளர வேண்டும், நானோ குறைய வேண்டும். "

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# அல்லேலூயா வசனங்கள்

## திருக்காட்சி விழாவுக்குப் பின் வரும் வார நாட்களுக்கு

1 மத். 4:16

அல்லேலூயா. இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்தது. அல்லேலூயா.

2 மத். 4:23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கி வந்தார். அல்லேலூயா.

3 லூக். 4:18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

4 லூக். 7:16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்; கடவுள் தம் மக்களைத் தேடிவந்திருக்கிறார். அல்லேலூயா.

5 1 திமோ. 3:16 காண்க

அல்லேலூயா. புறவினத்தாருக்கு அறிவிக்கப் பெற்ற கிறிஸ்துவே, உமக்கு மகிமை; விசுவாசத்தோடு உலகில் ஏற்கப் பெற்ற கிறிஸ்துவே, உமக்கு மகிமை. அல்லேலூயா.

### ஜனவரி 6ஆம் நாளுக்குப்பின் வரும் ஞாயிறு

# ஆண்டவரின் ஞானஸ்நானம்

## முதல் வாசகம்

***இதோ, நம் ஊழியன்; அவரிடத்தில் நம் உள்ளம் பூரிப்படைகின்றது.***

*42:1-4, 6-7*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்

ஆண்டவர் சொல்வதாவது :

"இதோ நம் ஊழியன், அவரை நாம் ஆதரிக்கிறோம், அவர் நம்மால் தேர்ந்துகொள்ளப்பட்டவர், அவரிடத்தில் நம் உள்ளம் பூரிப்படைகின்றது; அவர்மேல் நம்முடைய ஆவியைத் தங்கச் செய்தோம். அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். அவர் சச்சரவு செய்ய மாட்டார், கூக்குரலிடவும் மாட்டார்; அவர் குரல் தெருவிலே கேட்காது. அவர் நெரிந்த நாணலை முறியார், புகையும் திரியை அணையார். உண்மையுள்ளவராய் அறத்தைக் கொணர்வார். உலகில் அறத்தை நிலைநாட்டும்வரை, அவர் மனந்தளர மாட்டார், ஊக்கங்குறைய மாட்டார்; அவருடைய சட்டத்திற்காகத் தீவுகளும் காத்திருக்கின்றன.

ஆண்டவராகிய நாமே அறத்தை நிலைநாட்ட உன்னை அழைத்திருக்கிறோம், உன் கையைப் பிடித்து உன்னைக் காத்தோம்; குருடர்களுக்குக் கண்களைத் திறக்கவும், கட்டுண்டவரைத் தளையினின்று விடுவிக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும், உன்னை மக்களுக்கு உடன்படிக்கையாகவும், புறவினத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்தினோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 28: 1a.2. 3ac-4. 3b.9b-10 (பல்லவி: 11b)

பல்லவி: ஆண்டவர் தம் மக்களுக்கு அமைதியளித்து ஆசீர்வதிப்பார்:

1 வானோர்களே, ஆண்டவரை வாழ்த்துங்கள்:
2 ஆண்டவரது பெயருக்கு உரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்:
அவருடைய திருமன்றத்தில் அவரை வழிபடுங்கள்: பல்லவி

3 நீர்த்திரைகளின்மீது ஆண்டவரின் குரல் ஒலிக்கின்றது. நீர்ப்பரப்பின்மீது
ஆண்டவர் விளங்குகின்றார்.
4 ஆண்டவருடைய குரல் வலிமை வாய்ந்தது. அவருடைய குரல் மாட்சிமை
மிக்கது. பல்லவி

9 மகத்துவமிக்க ஆண்டவர் பேரிடி முழங்குகின்றார்:
10 அவரது ஆலயத்தில் எல்லாரும், 'போற்றி! போற்றி! என்று ஆர்ப்பரிக்
கின்றனர்.
வெள்ளப்பெருக்கின்மீது விளங்குகின்றார் ஆண்டவர்; என்றென்றும் அரச
ரென வீற்றிருப்பார் ஆண்டவர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**பரிசுத்த ஆவியை அளித்து அவரை அபிஷேகம் செய்தார்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 10:34-38

அந்நாட்களில்:

இராயப்பர் பேசத் தொடங்கிச் சொன்னதாவது: "கடவுள் மனிதர்களிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை என்பதை இப்போது மெய்யாகவே உணர்கிறேன். எக்குலத்தவனாயினும் இறைவனுக்கு அஞ்சி அவருக்கு ஏற்புடையதைச் செய்பவனே அவருக்கு உகந்தவன்.

"அவர் தம் இஸ்ராயேல் மக்களுக்குத் தமது வார்த்தையை விடுத்து 'அமைதி உண்டாயிற்று' என்னும் நற்செய்தியை யேசுகிறிஸ்து வழியாக அறிவித்தார். இவரே அனைவருக்கும் ஆண்டவர். அருளப்பர் அறிவித்த ஞானஸ்நானத்திற்குப்பின் கலிலேயா தொடங்கி யூதேயா நாடெங்கும் நிகழ்ந்தது என்னவென்று உங்களுக்குத்தெரியும். நாசரேத்தூர்யேசுவைத்தான் குறிப்பிடுகிறேன். கடவுள் அவருக்குப் பரிசுத்த ஆவியையும் வல்லமையையும் அளித்து அபிஷேகம் செய்தார். கடவுள் அவரோடு இருந்ததால்,

அலகை துன்புறுத்திய அனைவரையும் குணமாக்கி, எங்கும் அவர் நன்மை செய்துகொண்டே சென்றார். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா
மாற். 9:7 காண்

அல்லேலூயா, வானம் திறந்தது, தந்தையின் குரலொலி கேட்டது.
"இவரே என் அன்பார்ந்த மகன்; இவருக்குச்
செவிசாயுங்கள்." அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

### முதல் ஆண்டு

*ஞானஸ்நானம் பெற்ற யேசு கடவுளின் ஆவியானவர் தம்மீது இறங்கிவருவதைக் கண்டார்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3:13-17

அக்காலத்தில்:

யேசு அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெறக் கலிலேயாவிலிருந்து யோர்தானுக்கு வந்தார். அருளப்பரோ, "நானே உம்மிடம் ஞானஸ்நானம் பெறவேண்டியிருக்க, நீரா என்னிடம் வருவது?" என்று சொல்லி அவரைத் தடுக்கப்பார்த்தார். அதற்கு யேசு, "இப்போதைக்குத் தடைசெய்ய வேண்டாம். ஏனெனில், இவ்வாறு நாம் நியமங்களையெல்லாம் நிறைவேற்றுவது தகுதியே" என்று பதில் உரைக்க, அவர் இணங்கினார்.

ஞானஸ்நானம் பெற்றவுடன் யேசு தண்ணீரைவிட்டு வெளியேறினார். அப்போது வானம் திறக்க, கடவுளின் ஆவியானவர் புறாவைப்போல் தம்மீது இறங்கி வருவதைக் கண்டார். அப்போது வானிலிருந்து, 'இவரே என் அன்பார்ந்த மகன். இவரிடம் நான் பூரிப்படைகிறேன்' என்று ஒரு குரல் கேட்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## இரண்டாம் ஆண்டு

நீரே என் அன்பார்ந்த மகன்; உம்மிடம் நான் பூரிப்படைகிறேன்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:6b-11

அக்காலத்தில்:

அருளப்பர் அறிவித்ததாவது: "என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப் பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடிவாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன். நான் உங்களுக்கு நீரால் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவரோ உங்களுக்குப் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பார்."

அந்நாட்களில் யேசு, கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெற்றார். உடனே அவர் ஆற்றிலிருந்து கரையேறுகையில், வானம் பிளவுபடுவதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, "நீரே என் அன்பார்ந்த மகன்; உம்மிடம் நான் பூரிப்படைகிறேன்" என்று வானிலிருந்து ஒரு குரலொலி கேட்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## மூன்றாம் ஆண்டு

யேசு ஞானஸ்நானம் பெற்று செபித்துக்கொண்டிருக்க, வானம் திறந்தது.

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
3:15-16, 21-22

அக்காலத்தில்:

மக்கள் எதிர்பார்த்த நிலையில் இருக்கவே, ஒருவேளை அருளப்பரே மெசியாவாக இருக்கலாம் என்று எல்லாரும் உள்ளத்தில் எண்ணிக்கொண்டிருந்தனர். அப்போது அருளப்பர் அவர்களிடம், "நானோ உங்களுக்கு நீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆனால், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன். அவர் பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

மக்களெல்லாம் ஞானஸ்நானம் பெறும் வேளையில் யேசுவும் ஞானஸ்நானம் பெற்று, செபித்துக்கொண்டிருக்க, வானம் திறந்தது. பரிசுத்த ஆவி புலப்படும் வடிவெடுத்து, புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து குரலொலி உண்டாகி, "நீரே என் அன்பார்ந்த மகன். உம்மிடம் நான் பூரிப்படைகிறேன்" என்றது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஆண்டின் பொதுக் காலம்

## முதல் வாரம்

### திங்கள்

முதல் வாசகம்

முதல் ஆண்டு

**கடவுள் நம்மிடம் தம் மகனின் வாயிலாகப் பேசியுள்ளார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத் தொடக்கம் 1:1-6

பற்பல முறைகளிலும் பல்வேறு வகைகளிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக நம் முன்னோரிடம் பேசிய கடவுள், நாம் வாழும் இவ்விறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாகவே பேசியுள்ளார். இவரை எல்லாவற்றிற்கும் உரிமையாளராக்கினார். இவர் வழியாகவே உங்களையெல்லாம் படைத்தார்.

கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய உள்ளியல்பின் சாயலாகவும் விளங்கும் இவர், தம்முடைய வல்லமை மிக்க வார்த்தையால் எல்லாவற்றையும் தாங்கி வருகிறார். மக்களைப் பாவங்களிலிருந்து தூய்மைப்படுத்திய பின்னர், உன்னதங்களில் மகத்துவமிக்கவரின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார். இவ்வாறு அவர் எவ்வளவுக்கு வானதூதர்களைவிட மேலான பெயரை உரிமையாகப் பெற்றாரோ அவ்வளவுக்கு அவர்களைவிட மேன்மை அடைந்தார்.

ஏனெனில், "நீரே என் மகன், இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்" என்றும், "நான் அவருக்குத் தந்தையாயிருப்பேன், அவர் எனக்கு மகனாயிருப்பார்" என்றும் எப்போதாவது வானதூதருள் யாரிடமாவது சொன்னதுண்டா? மேலும் தம் தலைப்பேறானவரை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தபொழுது, "கடவுளின் தூதர்கள் அனைவரும் அவரைத் தொழுவார்களாக" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 96 :1-2b, 6-7c, 9 (பல்லவி : 7c காண்க)

பல்லவி: இறைவனின் தூதர்களே, அனைவரும் அவரை ஆராதியுங்கள்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகு களிகூர்வதாக ! தீவுகள் எல்லாம் அகமகிழட்டும்.
2 நீதியும் நேர்மையும் அவரது அரியணைக்கு அடிப்படை. பல்லவி

6 வானங்கள் அவரது நீதியை எடுத்துரைக்கின்றன: உலக மக்களனைவரும் அவரது மகிமையைக் காண்கின்றனர்.
7 அவர் முன்னிலையில் தெய்வங்களெல்லாம் குப்புற விழுகின்றன. பல்லவி

9 ஏனெனில், ஆண்டவரே, நீர் பூவுலகனைத்தையுமே ஆளும் உன்னதர்; தெய்வங்களனைத்திற்கும் மேலானவர். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் அன்னாளை மலடியாக்கியிருந்ததால், அவளுடைய சக்களத்தி அவளை வருத்தினாள்.**

*1 : 1 - 8*

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்தின் தொடக்கம்

எபிராயீம் என்ற மலையில் சொப்பீம் என அழைக்கப்பட்ட ராமாத்தாயீம் ஊரானாகிய ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் ஏல்கானா. அவன் ஏரோவாம் மகன்; இவன் எலியூ மகன்; இவன் தோயு மகன்; இவன் எபிராயீம் கோத்திரத்தானான சூபுடைய மகன். அவனுக்கு இரு மனைவிகள் : ஒருத்தியின் பெயர் அன்னா, மற்றொருத்தியின் பெயர் பெனென்னா. பெனென்னாவுக்குப் பிள்ளைகள் இருந்தனர். அன்னாவுக்கோ பிள்ளைகள் இல்லை. அம்மனிதன் குறிக்கப்பட்ட நாட்களில் சேனைகளின் ஆண்டவரை வழிபடவும், அவருக்குப் பலி செலுத்தவும் தன் ஊரினின்று சீலோவுக்குப் போவான். ஏலியின் புதல்வர் ஓப்னி, பினேசு இருவரும் ஆங்கே ஆண்டவரின் குருக்களாய் இருந்தனர்.

ஒருநாள் ஏல்கானா பலி செலுத்திய பின் அப்பலியின் பங்குகளைத் தன் மனைவி பெனென்னாவுக்கும், அவளுடைய புதல்வர், புதல்வியர் எல்லாருக்கும் கொடுத்தான். அன்னாவுக்கோ ஒரு பங்கு கொடுத்தான். தான் அன்னாவுக்கு அன்பு செய்து வந்ததைப் பற்றி வருந்தினான். ஆண்டவரோ அவளை மலடியாக்கியிருந்தார். அவளுடைய சக்களத்தி அவளை வருத்தி மிகவும் துன்பப்படுத்துவாள். ஆண்டவர் அவளை மலடியாக்கியிருந்ததைப் பற்றியே பலமுறை அவளை ஏசுவாள்.

ஆண்டவரின் ஆலயத்திற்குப் போக வேண்டிய காலம் வரும் போதெல்லாம் ஆண்டுதோறும் அவ்வாறு செய்வாள்; அவளைப் பரிகாசம் செய்வாள். ஆகவே அன்னா அழுவாள்; உண்ணமாட்டாள். இதனால் அவள் கணவன் எல்கானா அவளை நோக்கி, "அன்னா, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் உன் உள்ளம் துன்பப்படுகிறது? பத்துப் பிள்ளைகளை விட உனக்கு நான் மேலன்றோ?" என்பான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 115: 3-4. 5-8. 9-10 (பல்லவி: 8a)

பல்லவி ஆண்டவரே, புகழ்ச்சிப்பலியை உமக்குச் செலுத்துவேன்.

அல்லது அல்லேலூயா.

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன கைம்மாறு செய்வேன்?

4 மீட்புக்காக நன்றிகூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன். பல்லவி

5 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

9 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்; ஆண்டவருடைய திருப்பெயரைக் கூவி அழைப்பேன். பல்லவி

8 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

10 ஆண்டவருடைய ஆலயத்தின் முற்றங்களிலும், யெருசலேமே, உன் நடுவிலும் ஆண்டவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். பல்லவி

## அல்லேலூயா

மாற்கு 1:15

அல்லேலூயா. கடவுளரசு நெருங்கிவிட்டது;
மனந்திரும்பி, இந்த நற்செய்தியை நம்புங்கள் என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் தரப்பட்டுள்ள அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக 9 வது வாரத்திற்குப் பின்வரும் அல்லேலூயா வசனங்களிலிருந்து ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தலாம்.

நற்செய்தி வாசகம்

**மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்**

மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:14 20

அருளப்பர் சிறைப்பட்டபின் யேசு கலிலேயாவிற்கு வந்து, கடவுள் அருளிய நற்செய்தியை அறிவிக்கலானார். "காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கிவிட்டது. மனந்திரும்பி, இந்நற்செய்தியை நம்புங்கள்' என்றார்.

அவர் கலிலேயாக் கடலோரமாய்ப் போகையில் சீமோனும், இவருடைய சகோதரன் பெலவேந்திரரும் கடலில் வலைவீசிக்கொண்டிருப்பதைக் கண்டார். ஏனெனில், அவர்கள் மீன் பிடிப்போர். யேசு அவர்களைப் பார்த்து, "என் பின்னே வாருங்கள். நீங்கள் மனிதரைப் பிடிப்பவராய் இருக்கச் செய்வேன்'' என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்சென்றனர்.

அங்கிருந்து சற்று அப்பால் சென்று செபெதேயுவின் மகன் யாகப்பரும், இவருடைய சகோதரன் அருளப்பரும் படகில் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கக் கண்டார். கண்டதும், அவர்களை அழைத்தார். அவர்கள் தம் தந்தை செபெதேயுவைக் கூலியாட்களுடன் படகில் விட்டுவிட்டு அவரைப் பின்சென்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

முதல் வாசகம்

**மீட்பைத் தொடங்கி வைத்தவரைப் பாடுகளால் நிறைவுள்ளவராக்கியது தகுதியே.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 5 - 12

நாம் குறிப்பிடும் புதிய உலகைக் கடவுள் வானதூதர்களுடைய அதிகாரத்திற்கு உட்படுத்தவில்லை. அதற்குச் சான்றாக ஓரிடத்தில் எழுதியுள்ளதாவது:

*"மனிதன் யார்? நீர் அவனை நினைவுகூர! மனுமகன் யார்? நீர் அவனைத் தேடி வர! நீர் அவனைச் சிறிது காலத்திற்கு வானதூதரை விடத் தாழ்ந்தவனாக்கினீர். மகிமையும் மாட்சியும் அவனுக்கு முடியெனச் சூட்டினீர். அனைத்தும் அவனுக்கு அடிபணியச் செய்தீர்!"*

அனைத்தையும் அவனுக்குப் பணியச் செய்ததால் பணியாமலிருக்க எதையும் விடவில்லை. ஆயினும் அனைத்தும் மனிதனுக்கு இன்னும் பணிந்திருக்கக் காணோம். நாம் காண்பது சிறிது காலத்திற்கு வானதூதரைவிடத் தாழ்ந்தவராக்கப்பட்ட ஒருவரைத்தான். இவர் இயேசுவே. இவர் பாடுபட்டு இறந்ததால், 'மகிமையும் மாட்சிமையும்' இவருக்கு முடியெனச் சூட்டப்பட்டதையும் காண்கிறோம். இவ்வாறு கடவுளின் அருளால் அனைவருடைய நன்மைக்காகவும் இவர் சாவுக்குட்பட வேண்டியிருந்தது.

யாருக்காக எல்லாம் உள்ளனவோ, யாரால் எல்லாம் உண்டாயினவோ அவர், புதல்வர் பலரை மகிமைக்கு அழைத்துச் செல்ல விரும்பிய போது, அவர்களுடைய மீட்பைத் தொடங்கி வைத்த இயேசுவைப் பாடுகளால் நிறைவுள்ளவராக்கியது தகுதியே. பரிசுத்தமாக்குபவர், பரிசுத்தமாக்கப்படுபவர்கள் அனைவருக்கும் உயிர் முதல் ஒன்றே. இதனாலே இறைமகன் அவர்களைச் 'சகோதரர்கள்' என்றழைக்க வெட்கப்படவில்லை.

"என் சகோதரர்களுக்கு உம் பெயரை அறிவிப்பேன்; சபையின் நடுவே உமக்குப் புகழ்பாடுவேன்" என்று கூறினாரன்றோ?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 8: 1உ. 4. 5-6உ. (6-8) (பல்லவி: 6 காண்)

பல்லவி: உம் திருமகனுக்குப் படைப்புகள் அனைத்தின் மீதும் அதிகாரம் தந்தீர்.

1 ஆண்டவரே, எம் ஆண்டவரே, உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு வியப்புக்குரியது!
4 மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்? அவனைப்பற்றி நீர் அக்கறை கொள்ள அவன் யார்?
பல்லவி

5 வானதூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்; மாண்மையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்.
6 உம்படைப்புகள் அனைத்தின்மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர். பல்லவி

7 அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகள், வயல்வெளி
யில் உலவும் விலங்குகள் அனைத்தும் அவனுக்குப் பணியச் செய்தீர்;
8 வானத்துப் பறவைகள், கடலில் வாழும் மீன்கள், அதில் நீந்தும் அனைத்
தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் அன்னாள்மேல் இரக்கம் கொண்டார்;
அவள் சாமுவேலைப் பெற்றாள்.**

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 1 : 9-20

அந்நாட்களில் :

அன்னா சீலோவில் உண்டு குடித்தபின் எழுந்தாள். ஏலி என்ற குரு ஆண்டவரின் ஆலயத்து வாசற்படிமுன் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தபோது, அன்னா துயரம் நிறைந்தவளாய் வெகுவாய் அழுது ஆண்டவரை நோக்கி, "சேனைகளின் ஆண்டவரே, உம் அடியாளின் துன்பத்தைக் கண்ணோக்கிப் பாரும். உம் அடிமையை மறவாது நினைவு கூர்ந்தருளும். உம் அடியாளுக்கு ஓர் ஆண்குழந்தையைக் கொடுத்தால், அவனை வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பேன். சவரக்கத்தி அவன் தலைமேல் படாது" என்று பொருத்தனை செய்துகொண்டாள்.

அவள் ஆண்டவர் திருமுன் அதிகம் வேண்டிக்கொண்டிருக்க, ஏலி அவளது வாயைக் கவனிக்க நேரிட்டது. ஏனெனில், அன்னா தன் மனதுக்குள்ளே பேசுவாள். அவள் உதடுகள் மட்டும் அசைந்தன; ஆனால் குரல் ஒலி கேட்கப்படவில்லை. அவள் குடிவெறியில் இருப்பதாக ஏலி எண்ணி, அவளை நோக்கி, "எத்தனை காலம் குடிவெறியில் இருப்பாய்? உனக்குப் போதை தரும் திராட்சை இரசத்தை கொஞ்சம் செரிக்கும்படி விடக்கூடாதா?" என்றார்.

அன்னா மறுமொழியாக, "குருவே அப்படியன்று, நானோ மிகவும் அபாக்கியவதி. திராட்சை இரசத்தையோ, போதை தரும் எதையுமோ நான் குடிக்கவில்லை. என் ஆன்மாவை ஆண்டவர் திருமுன் திறந்து காட்டினேன். பெலியால் புதல்விகளில் ஒருத்தியாக அடியாளை எண்ண வேண்டாம். ஏனெனில், என் துன்ப துயரத்தின் மிகுதியால் நான் இதுவரை பேசினேன்" என்றாள்.

அப்போது ஏலி, "இஸ்ராயேலின் ஆண்டவரிடத்தில் நீ கேட்ட மன்றாட்டை அவர் உனக்குத் தந்தருள்வார். நீ சமாதானமாய்ப் போய் வா" என்று உரைத்தார். அவளோ மறுமொழியாக, "உம் அடியாள்மேல் உமது அருள் இருப்பதாக" என்றாள். மேலும் அப்பெண் தன் இல்லம் சென்று சாப்பிட்டாள். அதற்குப்பின் அவள் முகம் துக்கமின்றி இருந்தது.

அவர்கள் அதிகாலையில் எழுந்து, ஆண்டவரை வழிபட்டபின் புறப்பட்டு ராமாத்தாவிலுள்ள தம் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். மேலும் எல்கானா தன் மனைவி அன்னாவோடு கூடினான். ஆண்டவர் அவள்மேல் இரக்கம் கொண்டார். உண்மையில் சிலநாள் கழித்து அன்னா கருவுற்று ஒரு மகனைப் பெற்றாள். ஆண்டவரிடத்தில் அவனைக்கேட்டு அடைந்தபடியால், அவனுக்குச் சாமுவேல் என்று பெயரிட்டாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*1 சாமு. 2:1. 4-5. 6-7. 8abcd (பல்லவி: 1a)*

பல்லவி: **என் மீட்பராம் ஆண்டவரிடத்தில் என் இதயம் அக்களிக்கின்றது.**

1 ஆண்டவரிடத்தில் என் இதயம் அக்களிக்கின்றது; என் ஆண்டவரால் என் ஆற்றல் உயர்வடைந்துள்ளது; என் பகைவர்க்கு எதிராக என் வாய் திறக்கப்பட்டது; ஏனெனில், உமது மீட்பினால் நான் அகமகிழ்ந்தேன்.

பல்லவி

4 வலியோரின் வில் முறிந்துபோனது, வலிமையற்றோர் வலிமையுற்றனர்.
5 முன்பு நிறைவு கொண்டிருந்தவர்கள் உணவிற்காகக் கூலிக்கு அமர்ந்தனர்; பசித்திருந்தவர்களோ பசி தீர்ந்தனர். மலடி பல மக்களைப் பெற்றாள்; பல பிள்ளைகளைப் பெற்றவளோ பலவீனமுற்றாள்.

பல்லவி

6 ஆண்டவர் உயிரைப் பறிக்கிறார்; உயிரைக் கொடுக்கிறார். பாதாளங்களுக்குக் கொண்டுபோகிறார்; அதிலின்று மீண்டும் கொண்டுவருகிறார்.
7 ஆண்டவர் எளியவனாக்குகிறார்; செல்வராக்குகிறார். தாழ்த்துகிறார்; திரும்பவும் உயர்த்துகிறார்.

பல்லவி

8 "பெருமக்களுடன் அமர்ந்து புகழ்அரியணை ஏற ஏழையைத் தூசியினின்றும், எளியோனைக் குப்பையினின்றும் உயர்த்துகிறார்.

பல்லவி

அல்லேலூயா 1 தெச. 2 : 13

அல்லேலூயா. கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொள்ளுங்கள்; அதை மனித வார்த்தையாக அன்று, உள்ளபடியே கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அதிகாரமுள்ளவராக அவர்களுக்குப் போதித்து வந்தார்.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 21 - 28

யேசு கப்பர்நகூம் ஊருக்கு வந்தார். ஓய்வு நாளில் அவர் செபக் கூடத்திற்குச் சென்று போதிக்கலானார். அவருடைய போதனையைக் கேட்டு மக்கள் மலைத்துப் போயினர். ஏனெனில், அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரமுள்ளவராகப் போதித்து வந்தார்.

அச்செபக்கூடத்தில் அசுத்த ஆவியேறிய ஒருவன் இருந்தான். அவன், " நாசரேத்தூர் யேசுவே, எங்கள் காரியத்தில் ஏன் தலையிடுகிறீர் ? எங்களைத் தொலைக்க வந்தீரோ ? நீர் யாரென்று எனக்குத் தெரியும். நீர் கடவுளின் பரிசுத்தர் " என்று கத்தினன். யேசுவோ, " பேசாதே, இவனை விட்டுப் போ " என்று அதட்டினார். அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, பெருங் கூச்சலிட்டு அகன்றது.

மக்கள் அனைவரும் எவ்வளவு திகிலுற்றனர் என்றால், " இது என்ன, அதிகாரம் கொண்ட புதிய போதனை ! அசுத்த ஆவிகளுக்கும் அவர் கட்டளையிடுகிறார், அவை கீழ்ப்படிகின்றனவே ! " என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர். உடனே அவரைப் பற்றிய பேச்சு கலிலேயா நாடெங்கும் பரவிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யேசு இரக்கமுள்ளவராகும்படி எல்லாவற்றிலும் சகோதரர்களைப்போல் ஆகவேண்டியதாயிற்று.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2:14-18

பிள்ளைகளுக்கு ஒரே ஊனும் இரத்தமும் இருப்பதால், யேசுவும் அதே ஊனும் இரத்தமும் பெற்றுக்கொண்டார். இவ்வாறு சாவைத் தன் கையில் கொண்டிருந்தவனை, அதாவது அலகையை, சாவின் வழியாகவே அழித்துவிட்டார். சாவுக்கு அஞ்சியதால் வாழ்நாள் முழுவதும் அடிமைத் தனத்தில் கட்டுண்டிருந்தவர்களை விடுவித்தார்.

வானதூதர்களுக்கு அவர் துணை நிற்கவில்லை என்பது கண்கூடு. ஆபிரகாமின் வழி வந்தவர்களுக்கே அவர் துணை நின்றார். ஆகையால் மக்களுடைய பாவங்களுக்குக் கழுவாயாகுமாறு, கடவுளைச் சார்ந்தவற்றில் அவர் இரக்கமுள்ளவரும் நம்பிக்கைக்குரியவருமான தலைமைக் குருவாகும் படி எல்லாவற்றிலும் சகோதரர்களைப்போல் ஆகவேண்டியதாயிற்று. அவ்வாறு தாமே சோதனைக்குள்ளாகித் துன்பப்பட்டதனாலேயே சோதிக்கப்படுகிறவர்களுக்கு அவரால் உதவிசெய்ய முடிகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 104:1-2. 3-4. 6-7. 8-9 (பல்லவி : 8a)

பல்லவி: ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவு கூர்கின்றார்.
அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரைப் புகழ்ந்தேத்துங்கள் : அவர் தம் திருப் பெயரைச் சொல்லி வழிபடுங்கள். எல்லா இனத்தாரும் அவருடைய செயல்களை அறியச் செய்யுங்கள்.

2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள் : இசைக் கருவி மீட்டுங்கள் : அவர் செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள். பல்லவி

3 அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள்: ஆண்டவரைத்
தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக.
4 ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்: அவரது திருமுகத்தை
என்றும் தேடுங்கள். பல்லவி

6 ஆண்டவருடைய ஊழியராகிய ஆபிரகாமின் வழித் தோன்றல்களே,
7 அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகிய யாக்கோபின் மக்களே,
ஆண்டவரே நம் கடவுள்: அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது. பல்லவி
8
தம் உடன்படிக்கையை அவர் என்றென்றும் நினைவு கூர்கின்றார்: ஆயிர
மாயிரம் தலைமுறைக்கும் தாம் அளித்த வாக்குறுதியை அவர் நினைவு
கூர்கின்றார்.
9 ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையை அவர் மறக்கவில்லை,
ஈசாக்குக்கு அவர் இட்ட ஆணையை அவர் மறக்கவில்லை. பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவரே பேசும்; உம் அடியான் கேட்கிறேன்.**

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் *3:1-10.19-20*

*அந்நாட்களில்:*

சிறுவன் சாமுவேல் ஏலிக்கு முன்பாக ஆண்டவருக்குப் பணிவிடை செய்து வந்தான். அந்நாட்களில் ஆண்டவரின் வாக்கு மிகவும் அருமையாய் இருந்தது. வெளிப்படையான காட்சியும் இல்லை. ஒருநாள் ஏலி தமக்கு உரிய இடத்தில் படுத்திருக்க, இதோ, அவரது பார்வை மங்கிப்போயிற்று. அவரால் பார்க்க முடியவில்லை. கடவுளின் விளக்கு அணைக்கப்படுமுன்பே கடவுளின் பேழை இருந்த ஆலயத்தில் சாமுவேல் தூங்கிக்கொண்டிருந்தான்.

ஆண்டவர், "சாமுவேல்" என்று கூப்பிட்டார். அவன் மறுமொழியாக, "இதோ, இருக்கிறேன்" என்றான். உடனே ஏலியின் அருகில் ஓடி, "என்னைக் கூப்பிட்டீரே: இதோ, நிற்கிறேன்" என்றான். அவர், "நான் கூப்பிடவில்லை; திரும்பிப்போய்த் தூங்கு" என்றார். அப்படியே சாமுவேல் திரும்பிப்போய்த் தூங்கினான்.

6 பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை; ஆனால் என் செவிகளை நீர்
திறந்துவிட்டீர்; தகனப் பலியும் பாவம் போக்கும் பலியும்
நீர் கேட்கவில்லை.

பல்லவி

7 அப்பொழுது நான் சொன்னது "இதோ வருகிறேன்.

ஏட்டுச் சுருளில் என்னைக் குறித்து:

8 என் இறைவா, உம் திருவுளத்தின்படி நடப்பதே எனக்கின்பம்; உம்
திருச்சட்டத்தை என் உள்ளத்தில் கொண்டிருக்கிறேன் என்று எழுதப்
பட்டுள்ளது."

பல்லவி

9 மக்கட் பேரவையில் உம் நீதியை வெளிப்படுத்தினேன். இதோ! நான் என்
வாயை மூடிக்கொண்டிருக்கவில்லை; ஆண்டவரே, இதை நீர் அறிவீர்.

பல்லவி

அல்லேலூயா — அரு. 10:27

அல்லேலூயா. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவி கொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன்; அவையும் என்னைப் பின்தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*பல்வேறு நோய்களால் வருந்திய பலரைக் குணப்படுத்தினார்.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:29-39

அக்காலத்தில்:

யேசு செபக்கூடத்தை விட்டு சீமோன், பெலவேந்திரர் இவர்களுடைய வீட்டுக்கு வந்தார். யாகப்பரும் அருளப்பரும் அவரோடு சென்றனர்.

சீமோனுடைய மாமியார் காய்ச்சலாய்க் கிடந்தாள். உடனே அவளைப்பற்றி அவரிடம் சொன்னார்கள். அவர் அருகில் சென்று கையைப் பிடித்து அவளை எழுப்பினார். காய்ச்சல் அவளை விட்டுவிட்டது. அவள் அவர்களுக்குப் பணிவிடை புரிந்தாள்.

பொழுது போய் இரவானதும், நோயாளிகள், பேய் பிடித்தவர்கள் எல்லோரையும் அவரிடம் கொண்டுவந்தனர். ஊர் முழுவதும் வாயிலருகே ஒன்றாகத் திரண்டிருந்தது. பல்வேறு நோய்களால் வருந்திய பலரைக் குணப்படுத்தினார். பல பேய்களையும் ஓட்டினார். பேய்களை அவர் பேசவிடவில்லை. ஏனெனில், அவை அவரை அறிந்திருந்தன.

[illegible]

[illegible]

# வியாழன்

முதல் ஆண்டு

முதல் வாசகம்

[illegible]

[illegible]

[illegible]

வரையில் நாடோறும் ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுங்கள். ஏனெனில், நாம் கிறிஸ்துவோடு பங்கு பெற்றவர்களானோம்; ஆனால் தொடக்கத்தில் நமக்கிருந்த நம்பிக்கையை இறுதிவரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 94:6-7a. 7b. 9. 10-11 (பல்லவி: 7,8 காண்)

பல்லவி: "உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்" என்னும் ஆண்டவரின் குரலை இன்று கேளுங்கள்.

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், நம்மைப் படைத்த ஆண்டவரின் முன் முழந்தாளிடுவோம்.
7 அவரே நம் கடவுள். நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள். அவர் அரவணைப்பிலுள்ள மந்தை.
பல்லவி

8 இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா? அக்குரல் கூறுவதாவது:
"அன்று மெரிபாவிலும் பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல்
உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்."
9 அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்; என் செயல்களைக்
கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர்.
பல்லவி

10 நாற்பது ஆண்டளவாக இந்த மக்களை நான் பொறுத்துக் கொண்டேன்.
தவறிழைக்கும் இதயமுள்ள மக்கள்: இவர்கள் என் வழிகளை அறியவில்லை.
11 எனவே, "என் இளைப்பாற்றியை அடையமாட்டார்கள்" என்று சின
மேலிட்டால் சபதம் செய்தேன்.
பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*இஸ்ராயேலர் மடிந்தனர், கடவுளின் பேழையும் பிடிபட்டது.*

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 4:1-11

அந்நாட்களில் நிகழ்ந்ததாவது: பிலிஸ்தியர் போரிட ஒன்று திரண்டனர். இஸ்ராயேலர் பிலிஸ்தியரோடு போருக்குப் புறப்பட்டு, சனுக்குப் பாறைக்கு அருகில் பாசறை அமைத்தனர். பிலிஸ்தியரோ அபேக்

என்ற இடத்திலிருந்து வந்து இஸ்ராயேலருக்கு எதிராகப் போருக்கு அணி வகுத்து நின்றனர். போர் தொடங்கவே, இஸ்ராயேலர் பிலிஸ்தியருக்குப் புறங்காட்டி ஓடினர். அப்போரில் அங்குமிங்கும், நிலங்களிலும் ஏறக் குறைய நாலாயிரம்பேர் வெட்டுண்டு மாண்டனர்.

மக்கள் பாளையத்திற்குத் திரும்பி வந்தனர். அப்போது இஸ்ராயேலருக்குள் வயதில் முதிர்ந்தோர், "ஆண்டவர் பிலிஸ்தியருக்குமுன் இன்று நம்மை ஏன் தண்டித்தார்? ஆண்டவரின் உடன்படிக்கைப் பெட்டகத்தைச் சீலோவிலிருந்து நம்மிடம் கொண்டு வருவோமாக. நம் எதிரிகளின் கையினின்று நம்மை மீட்க நமது நடுவில் அது வருவதாக" என்றனர்.

மக்கள் சீலோவுக்கு ஆட்களை அனுப்பினர்; அங்கிருந்து கெருபிம் மேல் அமர்ந்திருக்கும் சேனைகளின் ஆண்டவருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவந்தனர். கடவுளின் உடன்படிக்கைப் பெட்டியோடு ஏலியின் புதல்வர் ஓப்னி, பினேஸ் இருவரும் இருந்தனர். ஆண்டவரின் உடன்படிக்கைப் பெட்டி பாளையத்திற்கு வந்தபோது இஸ்ராயேலர் அனைவரும் நிலம் அதிர ஆர்ப்பரித்தனர்.

பிலிஸ்தியர் இப்பெருங் கூச்சலைக்கேட்டு, "எபிரேயர் பாளையத்தில் இப்பெரிய ஆரவாரத்திற்குக் காரணம் என்ன?" என்று சொல்லிக்கொண்டனர். ஆண்டவரின் பேழை பாளையத்தில் வந்திருந்ததைப் பிறகு அறிந்து கொண்டனர். பிலிஸ்தியர் அஞ்சி, "கடவுள் பாளையத்திற்கு வந்துவிட்டார்" என்று சொல்லிக்கொண்டனர். மேலும், அவர்கள் பெருமூச்சு விட்டு, "நமக்குக் கேடு வந்துற்றது! நேற்றும் முந்தாநாளும் இத்தனை மகிழ்ச்சி இருந்ததில்லையே! இத்தனை வல்லமையுள்ள கடவுள்களின் கைகளினின்று நம்மை மீட்பவன் யார்? பாலைவனத்தில் எகிப்து நாடு முழுவதையும் வதைத்த கடவுள் அவரே! பிலிஸ்தியரே, திடம்கொண்டு ஆண்மையுள்ளவர்களாய் இருங்கள்; எபிரேயர் உங்களுக்கு அடிமைகளாய் இருந்ததுபோல் நீங்கள் அவர்களுக்கு அடிமைகளாய் இராதீர்கள். திடம் கொண்டு போரிடுங்கள்" என்றனர்.

பிலிஸ்தியர் போரிட்டனர். இஸ்ராயேலர் தோல்வி அடைந்தனர். அனைவருமே தத்தம் கூடாரங்களுக்கு ஓடிப்போயினர். அப்போது கணக்கற்ற பேர் கொல்லப்பட்டனர்; இஸ்ராயேலரில் முப்பதாயிரம் காலாட் படையினர் மடிந்தனர். கடவுளின் பேழையும் பிடிபட்டது. ஏலியின் புதல்வர்களாகிய ஓப்னியும் பினேசும் மாண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 43:9-10. 13-14. 23-24 (பல்லவி: 26b)*

பல்லவி : **ஆண்டவரே, உமது இரத்தத்தை முன்னிட்டு, எங்களுக்கு விடுதலை அளித்தருளும்.**

9 இப்போது நீர் எங்களைப் புறக்கணித்து விட்டீர்: எங்களைக் கலங்கடித்தீர்;
கடவுளே, நீர் எங்கள் சேனையோடு புறப்பட்டு வரவில்லை.
10 எங்கள் எதிரிகள் முன் நாங்கள் பின்னடையச் செய்தீர்: எங்கள் பகைவர்கள்
எங்களைக் கொள்ளையிட்டுச் சென்றனர். பல்லவி

13 எங்கள் அயலாருடைய நிந்தனைக்கு நீர் எங்களை ஆளாக்கினீர்.
எங்களைச் சூழ்ந்துள்ள மக்களின் ஏளனத்துக்கும் பழிப்புக்கும் எங்களை உட்படுத்தினீர்.
14 புற இனத்தாரிடையே எங்களை ஒரு பழிச்சொல்லாக்கினீர்: மக்கள்
எங்களைப் பார்த்துத் தலையசைக்கின்றனர். பல்லவி

23 ஆண்டவரே, துயிலெழும், ஏன் உறங்குகின்றீர்? விழித்தெழும், எங்களை
ஒருபோதும் தள்ளிவிடாதேயும்.
24 ஏன் உமது முகத்தை மறைத்துக் கொள்கிறீர்? நாங்கள் உறும் சிறுமையை
யும் துன்ப நிலையையும் ஏன் மறந்துவிட்டீர். பல்லவி

அல்லேலூயா

மத். 5 : 23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கி வந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தொழுநோய் அவனைவிட்டு நீங்க அவன் குணமானான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:40-45

அக்காலத்தில் :

தொழுநோயாளி ஒருவன் இயேசுவிடம் வந்து முழந்தாளிட்டு, "நீர் விரும்பினால் என்னைக் குணமாக்க உம்மால் கூடும்" என்று வேண்டினான். யேசு அவன்மீது மனமிரங்கி, கையை நீட்டி, அவனைத் தொட்டு, "விரும்புகிறேன், குணமாகு" என்றார். உடனே தொழுநோய் அவனை விட்டு நீங்க, அவன் குணமானான்.

அவனை நோக்கி, "பார், யாருக்கும் ஒன்றும் சொல்லாதே. போய் உன்னைக் குருவிடம் காட்டி, நீ குணமானதற்காக, மோயீசன் கட்டளையிட்டதைக் காணிக்கையாகச் செலுத்து. அது அவர்களுக்கு அத்தாட்சியாகும்" என்று கண்டிப்பாய்ச் சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

அவனோ சென்று நடந்ததைச்சொல்லி எங்கும் விளம்பரப்படுத்தினான். அதனால் அவர் எந்த நகருக்குள்ளும் வெளிப்படையாய்ப் போகமுடியாமல் வெளியே தனிமையான இடங்களில் இருந்தார். எனினும் மக்கள் எங்குமிருந்து அவரிடம் வந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*அந்த இளைப்பாற்றியை அடைய ஆர்வத்தோடு முயல்வோமாக.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4:1-5. 11

சகோதரர்களே :

தம் இளைப்பாற்றியை அடையச் செய்வதாக இறைவன் அளித்த வாக்குறுதி நிலைத்தேயிருப்பினும், உங்களுள் எவரேனும் அதை வந்தடையத் தவறிவிடக்கூடுமோ என அஞ்சுவோமாக. அவர்களைப்போலவே நமக்கும் இந்த நல்ல செய்தி அறிவிக்கப்பட்டது. அவர்கள் கேட்ட வார்த்தையோ அவர்களுக்குப் பயன்படவில்லை. ஏனென்றால், கேட்டவர்கள் அவ்வார்த்தையை விசுவாசத்தோடு கேட்கவில்லை.

இனி அந்த இளைப்பாற்றியை அடையப்போவது விசுவாசிகளான நாமே. அதைக்குறித்துத்தான், "நான் சினங்கொண்டு, 'எனது இளைப்பாற்றியை அவர்கள் அடையவே மாட்டார்கள்' என்று ஆணையிட்டேன்" என எழுதியுள்ளது. ஆனால் உலகம் உருவானதோடு கடவுளுடைய வேலைகள் முடிந்துவிட்டன. ஏனென்றால், ஓரிடத்தில் ஏழாம் நாளைப்பற்றி, "தம் வேலைகள் எல்லாம் முடித்து, கடவுள் ஏழாம் நாள் இளைப்பாறினார்" என்று எழுதியுள்ளது. மேலும் மேற்சொன்ன வசனத்தில், "அவர்கள் எனது இளைப்பாற்றியை அடையவே மாட்டார்கள்" என்று இருக்கிறது.

ஆதலால், அவர்கள் காண்பித்த கீழ்ப்படியாமையைப் பின்பற்றி யாரும் அதே குற்றத்தில் விழாதபடிக்கு, அந்த இளைப்பாற்றியை அடைய ஆர்வத்தோடு முயல்வோமாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 77:3.4bc, 6c-7.8 (பல்லவி: 7c காண்க)

பல்லவி: இறைவன் செயல்களை மறவாதீர்கள்.

3 நாங்கள் கேட்டவை, நாங்கள் அறிந்தவை: எங்கள் முன்னோர் எங்களுக்குச் சொன்னவை.

4 வரும் தலைமுறைக்கு அவற்றை எடுத்துச் சொல்வோம். ஆண்டவருடைய மாண்புமிக்க செயல்களையும் அவருடைய வல்லமையையும் கூறுவோம்.

பல்லவி

7 அவர்கள் எழுந்து தம் மக்கள், தங்கள் மக்களுக்கு அவற்றை அறிவிப்பார்கள். கடவுள்மீது நம்பிக்கை வைக்கவும், அவருடைய செயல்களை மறவாதிருக்கவும், அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கவுமே.

பல்லவி

8 தங்கள் முன்னோர்களைப்போல் இவர்களும் எதிர்ப்பு மனமும் அடங்காத் தனமும் கொண்ட தலைமுறையாய் ஆகாதிருக்கவும், நேரிய மனமில்லாத மக்களாய்க் கடவுளுக்குப் பிரமாணிக்கமற்ற உள்ளத்தினராய் இல்லாதிருக்கவுமே.

பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*உங்கள் அரசனுக்கு எதிராய் நீங்கள் முறையிடுவீர்கள்; ஆனால், நீங்களே அரசனை விரும்பினதால், ஆண்டவர் அந்நாளில் உங்களுக்குச் செவி கொடுக்க மாட்டார்.*

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 8:4-7. 10-22a

அந்நாட்களில் :

இஸ்ராயேலின் முதியோர் அனைவரும் ஒன்றுகூடி ராமாத்தாவில் இருந்த சாமுவேலிடம் வந்தனர். அவரை நோக்கி, "இதோ நீர் முதியவரானீர். உம்மக்கள் நீர் நடந்த வழியில் நடக்கிறதில்லை; எமக்கு நீதி

வழங்க, மற்ற நாடுகளுக்கெல்லாம் இருப்பது போல் எங்களுக்கும் ஓர் அரசனை ஏற்படுத்தும்'' என்று சொன்னார்கள். “நீதி வழங்க ஓர் அரசனை எங்களுக்குக் கொடும்'' என்ற அவர்களின் முறையீடு சாமுவேலுக்குப் பிடிக்கவில்லை. சாமுவேல் ஆண்டவரை மன்றாடினார். ஆண்டவர் சாமுவேலை நோக்கி, “மக்கள் உன்னிடம் சொல்வதை எல்லாம் கேள். உன்னை அவர்கள் புறக்கணித்து விடவில்லை; நாம் அவர்களை ஆளவிடாதபடி நம்மைத்தான் புறக்கணித்து விட்டார்கள்'' என்றார்.

எனவே, ஆண்டவர் கூறியவற்றை எல்லாம் சாமுவேல் தங்களுக்கு அரசன் வேண்டுமென்று கோரிய மக்களிடம் கூறினார். மீண்டும், “உங்களை ஆளப்போகிற அரசனின் உரிமை இதோ. அவன் உங்கள் பிள்ளைகளை எடுத்துத் தன் தேர்களை ஓட்ட வைத்துக் கொள்வான்; தனக்குக் குதிரை வீரர்களாகவும், தன் நான்கு குதிரைத் தேருக்கு முன் ஓடுகிறவர்களாகவும் செய்வான். அவன் அவர்களை ஆயிரம் பேருக்கும், நூறு பேருக்கும் தலைவர்களாகவும், தன் நிலங்களை உழுகிறவர்களாகவும், தன் விளைச்சலை அறுக்கிறவர்களாகவும், ஆயுதங்கள், தேர்கள் செய்கிறவர்களாகவும் ஏற்படுத்துவான். உங்கள் புதல்விகளையோ தனக்குப் பரிமளக்காரிகளாகவும், சமையற்காரிகளாகவும், உரொட்டி செய்கிறவர்களாகவும் வைத்துக் கொள்வான். மேலும் உங்கள் வயல்களையும், திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவமரங்களில் நல்லவற்றையும் எடுத்துக் கொண்டு தம் ஊழியர்களுக்குக் கொடுப்பான். தன் அண்ணகர்களுக்கும் ஊழியர்களுக்கும் கொடுக்கும் பொருட்டு, உங்கள் விளைச்சல்களிலும், திராட்சைத் தோட்டங்களிலும் பத்தில் ஒரு பங்கு கேட்பான். உங்கள் வேலைக்காரர் வேலைக்காரிகளையும், நல்ல இளைஞர்களையும், கழுதைகளையும் தன் வேலைக்கு வைத்துக் கொள்வான். உங்கள் மந்தைகளிலே பத்தில் ஒரு பங்கு எடுத்துக் கொள்வான்; நீங்கள் அவனுக்கு ஊழியர்களாய் இருப்பீர்கள். நீங்களே தேர்ந்தெடுத்துக் கொண்ட உங்கள் அரசனுக்கு எதிராய் நீங்கள் முறையிடும் நாள் வரும். ஆனால் நீங்களே அரசனை விரும்பினதால் ஆண்டவர் அந்நாளில் உங்களுக்குச் செவி கொடுக்க மாட்டார்'' என்றார்.

மக்கள் சாமுவேலின் சொல்லைக் கேட்க மனமின்றி, “அப்படியன்று; எங்களுக்கு ஓர் அரசன் இருக்கத்தான் வேண்டும்'' என்றனர். “எல்லா இனத்தையும் போல நாங்களும் இருப்போம்; எங்கள் அரசன் எங்களுக்கு நீதி வழங்குவான்; எங்களுக்கு முன் சென்று எங்கள் பொருட்டுப் போரிடுவான்'' என்றனர். சாமுவேல் மக்கள் கூறியவற்றையெல்லாம் கேட்டு அவற்றை ஆண்டவருக்குத் தெரியப்படுத்தினார். ஆண்டவர் சாமுவேலை நோக்கி, “நீ அவர்கள் சொல்லைக்கேட்டு அவர்களுக்கு ஓர் அரசனை ஏற்படுத்து'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 88:15-16. 17-18 (பல்லவி: 1a காண்க)*

பல்லவி : ஆண்டவரே உம் அருட்செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன்.

15 உமது விழா ஆர்ப்பரிப்பில் பங்குபெறுவோர் பேறு பெற்றோர்; ஆண்டவரே, அவர்கள் உம் முகத்தின் ஒளியில் நடக்கின்றனர்.
16 உமது பெயரை நினைத்து என்றும் அகமகிழ்கின்றனர்: உமது நீதியை நினைத்துப் பெருமிதப்படுகின்றனர். பல்லவி

17 ஏனெனில், அவர்களது வல்லமைக்குச் சிறப்புத் தருபவர் நீர்; உம் தயவால் தான் எங்கள் வலிமை ஓங்கியுள்ளது.
18 நமக்குள்ள கேடயம் ஆண்டவருடையதே. நம் அரசரும் இஸ்ராயேலின் பரிசுத்தருக்குச் சொந்தமானவரே: பல்லவி

*அல்லேலூயா* *லூக். 7:16*

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்; கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டு.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:1-12

சில நாட்களுக்குப்பின் யேசு கப்பர்நகூம் ஊருக்கு மீண்டும் வந்தார். வீட்டில் அவர் இருக்கிறார் என்ற செய்தி பரவிற்று. பலர் வந்து கூடவே, வாசலுக்கு வெளியே முதலாய் இடமில்லை. அவர் அவர்களுக்குத் தேவ வார்த்தையை எடுத்துச் சொன்னார். அப்பொழுது திமிர்வாதக்காரன் ஒருவனை நால்வர் சுமந்துகொண்டு அவரிடம் வந்தனர். கூட்ட மிகுதியால் அவர்முன் அவனைக் கிடத்தமுடியாமல் அவர் இருந்த வீட்டின் மேல்தட்டைப் பிரித்து, திறப்பு உண்டாக்கி, திமிர்வாதக்காரன் படுத்திருந்த படுக்கையை இறக்கினர். யேசுவோ அவர்கள் விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி, "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார்.

அங்கிருந்த மறைநூல் அறிஞருள் சிலர், "என்ன, இவர் இப்படிப் பேசுகிறார்? கடவுளைப் பழிக்கிறார். கடவுள் ஒருவரேயன்றிப் பாவத்தை மன்னிக்க வல்லவர் வேறு யார்?" என்று உள்ளத்தில் எண்ணினர்.

இவர்கள் தமக்குள் இவ்வாறு எண்ணுவதை யேசு உடனே மனத்தில் அறிந்து, அவர்களை நோக்கி, "உங்கள் உள்ளத்தில் இப்படி நினைப்பதேன்? எது எளிது? இந்தத் திமிர்வாதக்காரனை நோக்கி, 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்பதா? 'எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட' என்பதா? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டு என்று நீங்கள் உணருமாறு"—திமிர்வாதக்காரனை நோக்கி—"நான் உனக்குச் சொல்கிறேன்: எழுந்து உன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போ" என்றார்.

என்றதும், அவன் எழுந்து தன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு எல்லாருக்கும் முன்பாக வெளியே சென்றான். இதனால் அனைவரும் திகைப்புற்று, "இதைப்போல் நாம் ஒருபோதும் கண்டதேயில்லை" என்று கடவுளை மகிமைப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

### முதல் வாசகம்

**இறையருளின் அரியணையை அணுகிச் செல்லத் துணிவோமாக.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4:12-16

சகோதரர்களே:

கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல்மிக்கது. இருபக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவின் உள்ளாழத்தையும் ஆவியின் உள்ளாழத்தையும் ஊடுருவுகிறது; மூட்டு, மூளைவரை எட்டுகிறது; உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. அவரது பார்வைக்கு மறைந்திருக்கும் படைப்பெதுவும் இல்லை. யாருக்கு நாம் கணக்குக் கொடுக்கவேண்டுமோ, அவரது கண்ணுக்கு அனைத்தும் வெளிப்படையாகவும் திறந்தவையாகவும் உள்ளன.

ஆகையால் வானங்களெல்லாம் கடந்து சென்ற ஒருவரை-அதாவது கடவுளின் மகனுகிய யேசுவை-தனிப்பெரும் தலைமைக்குருவாய்பெற்றுள்ள நாம், நாம் அறிக்கையிடும் விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்வோமாக. நம்முடைய குறைபாடுகளைக் கண்டு இரக்கம்காட்ட இயலாதவர் அல்லர், நம் தலைமைக்குரு. மாருக, அவர் நம்மைப்போல் ஒருவராயிருப்பதால், பாவம் தவிர, மற்றெல்லாவற்றிலும் சோதனை துன்பங்களுக்கு உட்பட்டவரானுர்.

ஆதலால், தக்க வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், இரக்கத்தைப்பெறவும், இறை அருளின் அரியணையை அணுகிச்செல்லத் துணிவோமாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 18:7.8.9.14 (பல்லவி அரு. 6:63b)*

*பல்லவி :* ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்.

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது; ஆண்டவருடைய கட்டளை உறுதியானது: எளியோருக்கு அறிவூட்டுவது.
பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை: உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை; ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது.
பல்லவி

9 ஆண்டவர் மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை.
பல்லவி

14 எனக்கு அடைக்கலமும் என் மீட்பருமான ஆண்டவரே, உம் முன்னிலையில் என்வாய்மொழியும், என் இதயச் சிந்தனையும் உமக்கு உகந்தனவாகட்டும்.
பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**இதோ ஆண்டவர் குறிப்பிட்ட மனிதன் சவுல்:
இவரே, இறை மக்களை ஆளுவார்.**

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்
*9:1-4. 17-19. 10:1a*

பெஞ்சமின் கோத்திரத்தில் சீஸ் என்ற பெயருள்ள ஆற்றல் வாய்ந்த மனிதன் இருந்தான், இவன் அபியேல் மகன்; இவன் சேரோர் மகன்; இவன் பெக்கோராத் மகன்; இவன் அபியா மகன்; இவன் பெஞ்சமின் கோத்திரத்தானான ஒரு மனிதனின் மகன். அவனுக்குச் சவுல் என்ற பெயருள்ள மகன் ஒருவன் இருந்தான். இவன் மிகவும் சிறந்தவன், நல்லவன். இஸ்ராயேல் மக்களில் இவனைவிட அழகு வாய்ந்தவன் வேறு ஒருவனும் இல்லை. அவர்கள் அனைவரும் இவனுடைய தோள் உயரமே இருந்தனர். இவன் அவர்களைவிட உயர்ந்தவன்.

சவுலின் தந்தை சீஸ் என்பவனின் கழுதைகள் காணாமல் போயின. சீஸ் தன் மகன் சவுலை நோக்கி, "வேலைக்காரரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு போய்க் கழுதைகளைத் தேடு" என்றான். அவர்கள் இருவரும் எபிராயீம் மலையிலும் சலிசா நாட்டிலும் அவற்றைத்தேடி அங்குக் காணாததால், அவற்றைக்கடந்து சலீம் நாட்டுக்கு வந்தார்கள். அங்கேயும் காணவில்லை. ஜெமினி நாட்டில் கூடத் தேடியும் அகப்படவில்லை.

சாமுவேல் சவுலைக் கண்டபோது, "இதோ, நாம் உனக்குச் சொன்ன மனிதன்; அவன்தான் நம் மக்களை ஆளுவான்" என்று ஆண்டவர் அவருக்குச் சொன்னார்.

சவுல், வாயில் நடுவில் சாமுவேலை அணுகி, "திருக்காட்சியாளருடைய வீடு எது எனத் தயவு செய்து காண்பியும்" என்றான். சாமுவேல் சவுலுக்கு மறுமொழியாக, திருக்காட்சியாளர் நானே. என்னுடன் இன்று சாப்பிடும்படி எனக்குமுன் மேட்டிற்கு ஏறிப்போ; நாளை உன்னை அனுப்பி வைப்பேன்; உன் உள்ளத்தில் இருப்பவற்றை எல்லாம் உனக்குச் சொல்வேன் என்றார்.

அப்போது சாமுவேல் ஓர் எண்ணெய்ச்சிமிழை எடுத்து அவன் தலையின்மேல் ஊற்றி, அவனை முத்தமிட்டு, "இதோ ஆண்டவர் தமது உரிமையின் பேரில் மன்னனாக உன்னை அபிஷேகம் செய்தார். நீ அவருடைய மக்களைச் சூழ்ந்திருக்கும் எதிரிகளின் கையிலிருந்து அவர்களை மீட்பாய்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 20:1-2. 3-4. 5-6 (பல்லவி:1a)

பல்லவி: ஆண்டவரே, உமது வல்லமையை நினைத்து அரசர் மகிழ்கின்றார்.

1 ஆண்டவரே, உமது வல்லமையை நினைத்து அரசர் மகிழ்வுறுகிறார்: நீர் தரும் உதவியை நினைத்து எவ்வளவோ அக்களிப்புக் கொள்கின்றார்.
2 அவரது உள்ளத்தின் விருப்பம் நிறைவேறச் செய்தீர்; வாய் திறந்து அவர் உம்மிடம் கேட்டதை நீர் புறக்கணிக்கவில்லை. பல்லவி

3 அவரை எதிர்கொண்டுபோய் நலமிக்க ஆசியை நிரம்ப அளித்தீர்; அவர் தலையில் தூய தங்கத்தால் ஆன முடியைச் சூட்டினீர்.
4 வாழ்வளிக்கும்படி அவர் உம்மிடம் கேட்டார்; நீரும் நீடிய வாழ்வை அவருக்கு அளித்தீர். பல்லவி

5 உம் துணையால் அவருக்குக் கிடைத்தது பெருமாண்பு; மகத்துவமும் மேன்மையும் அவருக்கு ஆடையாக உடுத்தினீர்.
6 என்றென்றும் அவர் ஆசிமிக்கவராகச் செய்கிறீர்: உம் திருமுன் மகிழ்ச்சி மிக்கவராய் விளங்கச் செய்கிறீர். பல்லவி

## அல்லேலூயா

லூக். 4:18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையுண்டு என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2: 13-17

அக்காலத்தில்:

யேசு மீண்டும் கடலோரம் சென்றார். கூட்டம் எல்லாம் அவரிடம் வரவே அவர்களுக்குப் போதிக்கலானார். அவர் வழியே போகையில் அல்பேயுவின் மகன் லேவி, சுங்கத்துறையில் அமர்ந்திருக்கக் கண்டு அவரை நோக்கி, "என்னைப் பின் செல்" என்றார். அவர் எழுந்து அவரைப் பின் சென்றார்.

அவருடைய வீட்டில் யேசு பந்தி அமர்ந்திருக்கையில், ஆயக்காரர், பாவிகள் பலர், யேசுவோடும் அவருடைய சீடரோடும் ஒருங்கே அமர்ந்திருந்தனர். ஏனெனில், அவரைப் பின் தொடர்ந்தவர் பலர். பரிசேயரைச் சேர்ந்த மறைநூல் அறிஞர், அவர் பாவிகளோடும் ஆயக்காரரோடும் உண்பதைக் கண்டு அவருடைய சீடரை நோக்கி, "உங்கள் போதகர் பாவிகளோடும் ஆயக்காரரோடும் உண்பதேன்?" என்றனர்.

இதைக் கேட்ட யேசு, "மருத்துவன் நோயற்றவர்க்கன்று, நோயுற்றவர்க்கே தேவை. நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்று அவர்களிடம் கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# இரண்டாம் வாரம்

# ஞாயிறு - முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**நமது மீட்பு விளங்க புறவினத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினோம்.**

49:3. 5-6

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்

ஆண்டவர், என்னைப் பார்த்து, "இஸ்ராயலே, நீ நம் ஊழியன், உன்னில் நாம் மகிமை யடைவோம்" என்றார்.

யாக்கோபைத் தம்மிடம் அழைத்துவர, இஸ்ராயேலைத் தம்மிடம் கூட்டிவர, என்னைத் தம் ஊழியனாய் என் தாய் வயிற்றில் உருவாக்கிய ஆண்டவர் கூறுகிறார்; ஏனெனில் ஆண்டவர் திருமுன் நான் மகிமையடைந்தேன், என் கடவுள் என்னுடைய வலிமை ஆனார்.

அவர் சொன்னார்: "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ராயேலில் எஞ்சினோரைத் திருப்பிக் கொணரவும், நமக்கு நீ ஊழியனாய் இருத்தல் பெரிதன்று. உலகத்தின் எல்லைவரையில் நமது மீட்பு எட்டும்படி, புறவினத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 39:14.3ab.6-7a. 7b-8.9 (பல்லவி: 7a-8a)

பல்லவி: ஆண்டவரே, உம் திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன்.

1 நம்பினேன், ஆண்டவரை நம்பினேன்: அவர் என் கூக்குரலைக் கேட்டருளினார்.

3 புதியதோர் பாடலை, நம் இறைவனைப் புகழும் பாடல் ஒன்றை என் நாவினின்று எழச்செய்தார்.

பல்லவி

6 பலியும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை; ஆனால் என் செவிகளை நீர்
திறந்துவிட்டீர்: தகனப் பலியும் பாவம் போக்கும் பலிப்பொருளும் நீர்
கேட்கவில்லை.
7 அப்போது நான் சொன்னது: இதோ வருகிறேன். பல்லவி

ஏட்டுச்சுருளில் என்னைக் குறித்து:
8 என் இறைவா, உம் திருவுளத்தின்படி நடப்பதே எனக்கின்பம். உம்
திருச்சட்டத்தை என் உள்ளத்தில் கொண்டிருக்கிறேன் என்று எழுதப்
பட்டுள்ளது. பல்லவி

9 மக்கட் பேரவையில் உம் நீதியை வெளிப்படுத்தினேன்: இதோ! நான் என்
வாயை மூடிக்கொண்டிருக்கவில்லை; ஆண்டவரே, இதை நீர் அறிவீர்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

*நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும்,*
*ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும்*
*உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தின் தொடக்கம். 1:1-3

கொரிந்து நகரில் இருக்கும் கடவுளின் சபைக்கு, கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து யேசுவின் அப்போஸ்தலனாய் அழைக்கப்பட்ட சின்னப்பனும், சகோதரனை சொஸ்தேனேயும் எழுதுவது: நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் பெயரை எங்கும் போற்றித் தொழுகின்ற அனைவரோடும் கூடப் புனிதராயிருக்கும்படி உங்களுக்கு, அவர்களுக்கும் நமக்கும் ஆண்டவராகிய கிறிஸ்து யேசுவுக்குள் பரிசுத்தராக்கப்பட்ட உங்களுக்கு,

நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் சமாதானமும் உண்டாகுக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 1:14.12b.

அல்லேலூயா. வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார். தம்மை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார். அல்லேலூயா.

இவ்வாறு ஆண்டின் பொதுக்காலத்தில் வரும் ஒவ்வொரு ஞாயிறும் தரப்பட்டுள்ள அல்லேலூயா வசனத்துக்குப் பதிலாக 9 ஆம் வாரத்துக்குப் பின்வரும் அல்லேலூயா வசனங்களுள் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

### நற்செய்தி வாசகம்

**இதோ! கடவுளுடைய செம்மறி: இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 1:29-34

அக்காலத்தில்:

யேசு தம்மிடம் வருவதைக் கண்ட அருளப்பர், இதோ! கடவுளுடைய செம்மறி; இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர். 'எனக்குப் பின் ஒருவர் வருகிறார், அவர் என்னிலும் முன்னிடம் பெற்றவர்.' என்று நான் சொன்னது இவரைப்பற்றியே. ஏனெனில், அவர் எனக்கு முன்பே இருந்தார். நானும் இவரை அறியாதிருந்தேன். ஆயினும், இவர் இஸ்ராயேலுக்கு வெளிப்படும் பொருட்டே நான் நீரால் ஞானஸ்நானம் கொடுத்து வந்தேன்'' என்றார்.

மேலும், அருளப்பர் சாட்சியம் கூறியதாவது: ''ஆவியானவர் புறாவைப்போல் வானிலிருந்து இறங்கி இவர்மேல் தங்கியதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனால், நீரால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர், 'ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவர்' என்றார்.

நான் கண்டேன். இவரே கடவுளின் மகன் என்று சாட்சியம் கூறுகின்றேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## ஞாயிறு - இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறான்.**

சாமுவேல் ஆகமம், முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 3:3b - 10. 19

கடவுளின் விளக்கு அணைக்கப்படுமுன்பே, கடவுளின் பேழை இருந்த ஆலயத்தில் சாமுவேல் தூங்கிக்கொண்டிருந்தான். ஆண்டவர் சாமுவேலைக் கூப்பிட்டார். அவன் மறுமொழியாக, ''இதோ இருக்கிறேன்'' என்றான். உடனே ஏலியின் அருகில் ஓடி, ''என்னைக் கூப்பிட்

டீரே! இதோ, நிற்கிறேன்" என்றான். அவர், "நான் கூப்பிடவில்லை; திரும்பிப்போய்த் தூங்கு" என்றார். அப்படியே சாமுவேல் திரும்பிப் போய்த் தூங்கினான்.

ஆண்டவர் மறுமுறையும் சாமுவேலைக் கூப்பிட்டார். சாமுவேல் எழுந்து ஏலியின் அருகே போய், "என்னைக் கூப்பிட்டீரே; இதோ, நிற்கிறேன்" என்றான். ஏலி, "மகனே, நான் உன்னை அழைக்கவில்லை; திரும்பிப் போய்த் தூங்கு" என்று பதிலுரைத்தார். சாமுவேலோ ஆண்டவரை இன்னும் அறியவில்லை; ஆண்டவரின் வாக்கு அவனுக்குத் தெரிவிக்கப் பட்டதுமில்லை.

மேலும் ஆண்டவர் மூன்றாம்முறை சாமுவேலைக் கூப்பிட்டார். அவன் எழுந்து ஏலியருகில் வந்து, "என்னை அழைத்தீரே; இதோ, நிற்கிறேன்" என்றான். அப்போது ஆண்டவர் சிறுவனை அழைக்கிறதை ஏலி கண்டறிந்து சாமுவேலை நோக்கி, "நீ போய்த் தூங்கு. திரும்பவும் நீ அழைக்கப்பட்டால், 'ஆண்டவரே பேசும்; உம் அடியான் கேட்கிறான்' என்று சொல்வாயாக" என்றார். சாமுவேல் திரும்பிப்போய்த் தனது இடத்தில் தூங்கினான்.

ஆண்டவர் வந்து சாமுவேல் அருகே நின்று, "சாமுவேல், சாமுவேல்!" என்று முன்போலவே கூப்பிட்டார். சாமுவேல், "ஆண்டவரே, பேசும்; உம் அடியான் கேட்கிறான்" என்றான்.

சாமுவேல் வளர்ந்தான். ஆண்டவரும் அவனுடன் இருந்தார். அவர் சொன்ன சொல்லில் ஒன்றும் வீண்போகவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 39 : 2.3ab.6-7a. 7b-8.9 (பல்லவி : 7a.8a)

பல்லவி : ஆண்டவரே, உம் திருவுளத்தை நிறைவேற்ற
இதோ நான் வருகிறேன்.

2 அழிவுதரும் குழியினின்றும் சதுப்பு நிலச் சேற்றினின்றும் அவர் என்னைத் தூக்கிவிட்டார்: உறுதியான பாறையின்மீது என் காலடிகளை நிறுத்தினார்; நடக்க எனக்கு உறுதி தந்தார்.

3 புதியதோர் பாடலை, நம் இறைவனைப் புகழும் பாடல் ஒன்றை என் நாவினின்று எழச்செய்தார். பல்லவி

6 பலியும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை: ஆனால் என் செவிகளை நீர்
திறந்துவிட்டீர். தகனப் பலியும் பாவம் போக்கும் பலிப்பொருளும் நீர்
கேட்கவில்லை.

7 அப்போது நான் சொன்னது: "இதோ வருகிறேன்: பல்லவி

8 ஏட்டுச்சுருளில் என்னைக்குறித்து: "என் இறைவா, உம் திருவுளத்தின்படி
நடப்பதே எனக்கின்பம்: உம் திருச்சட்டத்தை என் உள்ளத்தில் கொண்
டிருக்கிறேன்" என்று எழுதப்பட்டுள்ளது. பல்லவி

9 மக்கட் பேரவையில் உம் நீதியை வெளிப்படுத்தினேன்: இதோ! நான்
என் வாயை மூடிக்கொண்டிருக்கவில்லை; ஆண்டவரே, இதை நீர் அறிவீர்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புக்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரியந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 6 : 13c-15a. 17-20

சகோதரர்களே :

உடல் காமத்திற்கென்று இல்லை. ஆண்டவருக்கென்று இருக்கிறது. ஆண்டவரும் உடலுக்கே. ஆண்டவரை உயிர்ப்பித்த கடவுள் நம்மையும் தம் வல்லமையால் உயிர்ப்பிப்பார்.

உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஆனால் ஆண்டவரோடு சேர்ந்திருப்பவன் அவரோடு ஒரே ஆவி ஆகிறான்.

கெட்ட நடத்தையை விட்டு விலகுங்கள். மனிதன் செய்யும் பாவமெல்லாம் உடலுக்குப் புறம்பானது; ஆனால் கெட்ட நடத்தை, சொந்த உடலுக்கே எதிரான பாவம். உங்களுடைய உடல், பரிசுத்த ஆவியின் ஆலயம் என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்குள் குடிகொண்டிருக்கும் அந்த ஆவியைக் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்டீர்கள். ஆகவே நீங்கள் உங்களுக்குச் சொந்தமல்ல. ஏனெனில், நீங்கள் விலைகொடுத்து வாங்கப்பெற்றீர்கள். ஆகவே, உங்கள் உடலில் கடவுளை மகிமைப்படுத்துங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *அரு. 1:41. 17b*

அல்லேலூயா. மெசியாவை, அதாவது அபிஷேகம் செய்யப்பட்டவரைக் கண்டோம். அவர் வழியாகவே அருளும் உண்மையும் வந்தன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:35-42

அக்காலத்தில் :

அருளப்பர் தம்முடைய சீடர் இருவரோடு இருக்கையில், யேசு அப்பக்கம் நடந்து சென்றார். அருளப்பர் அவரை உற்று நோக்கி, " இதோ! கடவுளுடைய செம்மறி " என்றார். சீடர் இருவரும் அவர் கூறியதைக் கேட்டு யேசுவைப் பின் தொடர்ந்தனர். யேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின்தொடர்வதைக் கண்டு,"என்ன வேண்டும்?" என்று கேட்டார். அவர்கள், " ராபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் ? " என்றனர்.- ராபி என்றால் போதகர் என்றுபொருள்படும்.-" வந்து பாருங்கள் " என்றார். அவர்கள் வந்து அவர்கள் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்று அவரோடு தங்கினர். அப்பொழுது பிற்பகல் ஏறக்குறைய நான்கு மணி.

அருளப்பர் சொன்னதைக் கேட்டு யேசுவைப் பின்தொடர்ந்த இருவருள் பெலவேந்திரர் ஒருவர். அவர் சீமோன் இராயப்பரின் சகோதரர். அவர் முதலில் தம் சகோதரராகிய சீமோனைக் கண்டுபிடித்து, " மெசியாவைக் கண்டோம் " என்றார். - மெசியா என்பதற்கு 'அபிஷேகம் செய்யப்பட்டவர்' என்பது பொருள். - பின்பு அவரை யேசுவிடம் அழைத்து வந்தார்.

யேசு அவரை உற்று நோக்கி, " நீ அருளப்பரின் மகனாகிய சீமோன் கேபா " எனப்படுவாய் என்றார். (கேபா என்பதற்கு இராயப்பர் என்பது பொருள்.)

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு-3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

மணவாளன் தன் மணவாட்டியைக் குறித்து மகிழ்வான்.

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 62:1-5

சீயோனைப்பற்றிப் பேசாமல் நான் மௌனமாய் இருக்கமாட்டேன். யெருசலேமின் காரியத்தில் சோர்வடையமாட்டேன். அதன் நீதி சுடரொளிபோல வெளிப்படுமட்டும், அதன் மீட்பு தீப் பந்தம் போலச் சுடர் விடும் வரையிலும் நான் அமைதியடைய மாட்டேன். புறவினத்தார் உன் நீதியைக் காண்பார்கள், அரசர்கள் அனைவரும் உன் மகிமையை நோக்குவார்கள்; புதுப் பெயர் ஒன்று உனக்கு வழங்கப்படும். ஆண்டவரின் நாவே அந்தப் பெயரைச் சூட்டும். ஆண்டவரின் கையில் நீ மகிமையின் மணிமுடியாகவும், உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாகவும் இருப்பாய்.

'தள்ளப்பட்டவள்' என நீ இனி அழைக்கப்படமாட்டாய்' 'கைவிடப்பட்டவள்' என உன் நாடும் இனிச் சொல்லப்படாது. 'என் அன்புடையாள்' என நீ அழைக்கப்படுவாய், 'மணமானவள்' என உன் நாடும் சொல்லப்படும்; ஏனெனில் ஆண்டவர் உன்மேல் அன்பு கூர்ந்தார், உன் நாடு இறைவனுக்கு வாழ்க்கைப்படும்.

இளைஞன் கன்னிப் பெண்ணை மணந்து கொள்வது போல், உன்னை அமைத்தவர் உன்னை மணந்து கொள்வார்; மணவாளன் தன் மணவாட்டியைக் குறித்து மகிழ்வது போல், உன் கடவுள் உன்னைக் குறித்து மகிழ்ச்சியடைவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 95:1-2a. 2b-3. 7-8. 9-10a.c (பல்லவி: 3)

பல்லவி: மக்கள் அனைவரிடையிலும் அவரது வியத்தகு செயல்களைக் கூறுங்கள்.

1 பாடுங்கள் மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.

2 ஆண்டவரைப் பாடுங்கள், அவர் பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

3 அவர் தரும் மீட்பை நாடோறும் அறிவியுங்கள். புற இனத்தாரிடையே அவரது மாட்சிமையை எடுத்துச் சொல்லுங்கள்: மக்கள் அனைவரிடையிலும் அவர் தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள். பல்லவி

7 மக்கள் இனத்தாரே, ஆண்டவருக்குச் செலுத்துங்கள், மகிமையும் வல்லமையும் ஆண்டவருக்குச் செலுத்துங்கள்.

8 அவரது பெயருக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள். பல்லவி

9 திருவுடை அணிந்து ஆண்டவரை வணங்குங்கள். மாநிலமே நீ அவர் முன் நடுங்குவாயாக.

10 மாநிலத்தோரே, நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள்: ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்; மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கின்றார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிப்பவர் அந்த ஒரே ஆவிதான்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 12:4-11

வரங்கள் பலவகை; ஆவியானவரோ ஒருவர்தான். திருப்பணிகள் பலவகை; ஆண்டவரோ ஒருவர்தான். ஆற்றல் மிக்க செயல்கள் பலவகை; கடவுளோ ஒருவர்தான். அவரே அனைத்தையும் அனைவரிலும் செயலாற்றுகிறார்.

தேவ ஆவியின் செயலை வெளிப்படுத்தும் ஆற்றல் அவனவனுக்கு அருளப்படுவது பொது நன்மைக்காகவே. ஒருவனுக்கு ஆவியின் வழியாக ஞானம் நிறைந்த பேச்சு அருளப்படுகிறது. மற்றவனுக்கு அறிவு செறிந்த பேச்சு அளிக்கப்படுவது அதே ஆவியின் ஆற்றலால்தான். வேறொரு

வனுக்கு விசுவாசம் அருளப்படுவது அதே ஆவியால்தான். பிறிதொரு வனுக்கு நோய்களைக் குணமாக்கும் வரம் கிடைப்பது அவ்வொரே ஆவியால்தான். ஒருவனுக்குப் புதுமை செய்யும் ஆற்றலும், இன்னொருவனுக்கு இறைவாக்கு வரமும், வேறொருவனுக்கு ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறனும், வேறொருவனுக்குப் பல்வகை பரவசப் பேச்சும், பிறிதொருவனுக்கு அதை விளக்கும் திறனும் கிடைக்கின்றன.

இவற்றை எல்லாம் தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளித்துச் செயலாற்றுகிறவர் அந்த ஒரே ஆவிதான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 2 தெச. 2:14

அல்லேலூயா. நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் மகிமையைப் பெற்றுக்கொள்ளும்படி, நற்செய்தி வழியாக இறைவன் நம்மை அழைத்தார். அல்லேலூயா.

### நற்செய்தி வாசகம்

**இதுவே யேசு செய்த அருங்குறிகளில் முதலாவது;**
**இது கலிலேயாவிலுள்ள கானாவூரில் நிகழ்ந்தது.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:1-12

பக்கம் 149 காண்க

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யேசு இறைமகனாய் இருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5:1-10

தலைமைக் குரு ஒவ்வொருவரும் மனிதரிடையிலிருந்து தேர்ந்து கொள்ளப்பட்டு, பாவங்களுக்காகப் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துவதற்காகக் கடவுளைச் சார்ந்தவற்றிற்கென மனிதர்களின் சார்பாக ஏற்படுத்தப்படுகிறார். தாமே வலுவின்மைக்கு ஆளாயிருப்பதால்,

அறியாமையால் நெறிதவறிச் செல்வோரைப் பொறுமையோடு நடத்தக் கூடியவராயிருக்கிறார். அவர் எவ்வாறு மக்களுக்காகப் பலி செலுத்துகிறாரோ, அவ்வாறே தம் வலுவின்மையின் பொருட்டு தமக்காகவும் பாவப் பரிகாரப் பலி ஒப்புக் கொடுக்கவேண்டும். மேலும் யாரும் இவ்வுயர் நிலையைத் தானே தனக்கு உரியதாக்கிக் கொள்வதில்லை; ஆரோனைப் போன்று கடவுளிடமிருந்து அழைப்புப் பெற வேண்டும்.

அவ்வாறே கிறிஸ்துவும் தலைமைக் குருவாகும் மகிமைக்குத் தம்மையே உயர்த்திக்கொள்ளவில்லை. "நீரே என் மகன் இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்" என்று கூறியவரே, அந்த மகிமையை அளித்தார். அங்ஙனமே மற்றோரிடத்தில், "மெல்கிசெதேக்கின் முறைமைப்படி என்றென்றும் குருவாயிருக்கிறீர்" எனவும் கூறுகிறார்.

அவர் இம்மையில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து மீட்க வல்லவரிடம் பலத்த குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி, வேண்டுதல்களையும் மன்றாட்டுக்களையும் ஒப்புக்கொடுத்தார். அவருக்கிருந்த பயபக்தியை முன்னிட்டு இறைவன் அவருக்குச் செவிசாய்த்தார். அவர் இறைமகனாய் இருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார். இவ்வாறு, நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணரானார். 'மெல்கிசெதேக் முறைமைப்படி தலைமைக் குரு' எனக் கடவுளால் பெயரிடப்பட்டவர் இவரே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 109:1. 2. 3. 4 (பல்லவி: 4a)*

பல்லவி: மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே,

1 ஆண்டவர் என் ஆண்டவரிடம் சொன்னது: "நான் உம் பகைவரை உமக்குக் கால் மணையாக்கும்வரை நீர் என் வலப்பக்கத்தில் அமரும்."
பல்லவி

2 வலிமைமிக்க உமது செங்கோலை ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்: உம் எதிரிகளிடையே அதிகாரம் செலுத்தும்.
பல்லவி

3 புனிதம் சிறப்புற்றோங்க, நீர் உதித்த நாளிலே ஆட்சியுரிமையும் உம்மோடு உதித்தது: விடிவெள்ளி தோன்றுமுன் பனியைப்போல் உம்மை ஈன்றெடுத்தேன்.
பல்லவி

4 "மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே" என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்: சொன்ன சொல்லை மாற்றமாட்டார்.
பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

*பலிகளைக் காட்டிலும் கீழ்ப்படிதலே மேலானது; நீர் அரசராயிராதபடி ஆண்டவர் உம்மைத் தள்ளி விட்டார்.*

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 15:16-23

அந்நாட்களில்:

சாமுவேல், சவுலிடம் "எனக்கு விடை கொடுத்தால் இந்த இரவில் ஆண்டவர் எனக்குச் சொன்னதை உமக்குச் சொல்வேன்" என்றார். அவர் "சொல்லும்" என்றார். சாமுவேல், "நீர் உமது பார்வைக்குச் சிறியவராய் இருந்த போதன்றோ இஸ்ராயேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; ஆண்டவரும் உம்மை இஸ்ராயேலின் அரசராக அபிஷேகம் செய்தார். பிறகு அவர் உம்மை வழி நடத்தி, 'போ, பாவிகளாகிய அமலேக்கியரைக் கொல்; அவர்கள் அழியும் வரை அவர்களுடன் போரிடுவாய்' என்று அனுப்பினார். ஆனால், நீர் ஆண்டவருடைய சொல்லைக் கேளாமல் கொள்ளைப் பொருட்களின் மேல் ஆசை வைத்து ஆண்டவர் கண் முன் பாவம் செய்தது ஏன்?" என்றார்.

சவுல் சாமுவேலை நோக்கி, "நான் ஆண்டவருடைய சொற்படிதான் நடந்தேன். ஆண்டவர் என்னை அனுப்பின வழியில்தான் சென்றேன். அதன்படி அமலேக்கியரின் அரசனை ஆகாகைக் கொண்டு வந்தேன்; அமலேக்கியரைக் கொன்று குவித்தேன். மக்களோ கொள்ளைப் பொருட்களின் முதற் பலன் என்று ஆடு மாடுகளில் மேலானவற்றைத் தங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குக் கல்கலாவிலே பலியிடுவதற்காகக் கொண்டு வந்தார்கள்" என்று மறுமொழி சொன்னார்.

அதற்குச் சாமுவேல், "ஆண்டவர் தகனப்பலிகளையும் வேறு பலிகளையுமா ஆசிக்கிறார்? அதை விட மனிதன் ஆண்டவரின் குரல் சத்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கேட்கிறாரன்றோ? பலிகளைக் காட்டிலும் கீழ்ப்படிதலே மேலானது. ஆட்டுக்கடாக்களின் கொழுப்பை அவருக்கு ஒப்புக் கொடுக்கிறதை விட அவருக்குச் செவி கொடுத்தலே சிறந்தது. ஆகவே கிளர்ச்சி செய்வது, சூனியம் பார்ப்பதற்குச் சமம். கீழ்ப்படியாமை சிலை வழிபாட்டுக்குச் சமம். நீர் ஆண்டவருடைய வார்த்தையைத் தள்ளினதால் நீர் அரசராய் இராதபடி ஆண்டவர் உம்மைத் தள்ளி விட்டார்" என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 49: 8-9. 16bc-17. 21. 23 (பல்லவி: 23b)

பல்லவி: நேர்மையோடு நடப்போனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்

8 நீ இடும் பலிகளைக் குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை; ஏனெனில், உன் தகனப் பலிகள் எந்நேரமும் என் கண் முன்னே இருக்கின்றன.
9 உன் வீட்டின் உள்ள காளையையோ நான் கேட்கிறேன்? உன் மந்தையில் உள்ள ஆடுகளையோ நான் கேட்கிறேன்?

பல்லவி

16 "என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்?" என் உடன்படிக்கையைப் பற்றி நீ ஏன் பேசுகின்றாய்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ? என் வார்த்தையைப் புறக்கணித்தவன் அன்றோ நீ?

பல்லவி

21 இப்படியெல்லாம் நீ செய்ய நான் வாளாவிருப்பதா? நானும் உன்னைப் போன்றவன் என நினைத்தாயா? உன்னைக் கண்டித்து நீ செய்ததையெல்லாம் எடுத்துச் சொல்கிறேன், பார்!
23 இறை புகழ்ச்சி என்னும் பலி இடுபவனே எனக்கு மகிமை கொடுப்பவன்; நேர்மையோடு நடப்போனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

பல்லவி

அல்லேலூயா எபி. 4:12

அல்லேலூயா. இறைவனின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது;
உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும்
சீர் தூக்கிப் பார்க்கின்றது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மணமகன் அவர்களோடு இருக்கிறார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:18-22

அக்காலத்தில்:

அருளப்பருடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்தனர். அப்பொழுது சிலர் அவரிடம் வந்து, "அருளப்பருடைய சீடரும், பரிசேயருடைய சீடரும் நோன்பு இருக்க, உம்முடைய சீடர் ஏன் நோன்பு இருப்பதில்லை?" என்றனர்.

யேசு அவர்களை நோக்கி, "மணமகன் தங்களோடு இருக்குமளவும் அவன் தோழர்கள் நோன்பு இருக்கலாமா? மணமகனுடன் இருக்குந்தனையும் அவர்கள் நோன்பு இருக்க முடியாது. மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும். அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள். பழைய ஆடையில் கோடித் துணியை எவனும் ஒட்டுப் போடுவதில்லை. அப்படிப்போட்டால் அந்த ஒட்டு பழையதைக் கிழிக்கும், கிழிசலும் பெரிதாகும். புதுத் திராட்சை இரசத்தைப் பழஞ் சித்தைகளில் ஊற்றி வைப்பவர் எவரும் இல்லை. வைத்தால் இரசம் சித்தைகளை கிழிப்பது மல்லாமல் இரசமும் சித்தைகளும் பாழாகும். ஆனால், புது இரசத்தைப் புதுச் சித்தைகளில் ஊற்றி வைக்கவேண்டும்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***அந்த நம்பிக்கைதான் நங்கூரம் போல் உள்ளது;***
***அது உறுதியானது, நிலையானது.***

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 6:10-20

சகோதரர்களே:

கடவுள் நீதியற்றவர் அல்லர். இறைமக்களுக்கு நீங்கள் முன்பு செய்த பணிவிடையிலும் இப்போது செய்து வரும் பணிவிடையிலும் கடவுளின் பெயருக்கு அன்புகாட்டிச் செய்வதை அவர் மறக்க மாட்டார். நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை முற்றும் உறுதி பெறும்படி உங்களுள் ஒவ்வொருவனும் இறுதி வரை அதே ஆர்வம் காட்ட வேண்டுமென்று விரும்புகிறோம். நீங்கள் சோம்பலுக்கு இடம் தராமல் விசுவாசத்தினாலும் பொறுமையினாலும் வாக்குறுதிகளை உரிமையாக்கிக் கொண்டவர்களைப் பின்பற்ற வேண்டும்.

அந்த வாக்குறுதிகளைக் கடவுள் ஆபிரகாமுக்கு அளித்தபோது, ஆணையிட்டழைப்பதற்குத் தம்மை விட மேலானவர் ஒருவரும் இல்லாததால், தாமே தம் பெயரால் ஆணையிட்டு, "என் மேல் ஆணை: என் ஆசி

உன்னிலிருக்கும். உன்னைப் பெருக்கிறேனாய்ப் பெருகச் செய்வேன்" என்றார். இவ்வாறு ஆபிரகாம் பொறுமையோடு காத்திருந்த பின், கடவுள் வாக்களித்ததைப் பெற்றுக் கொண்டார். தம்மிலும் மேலான ஒருவர் பெயரால்தான் மக்கள் ஆணையிடுவர். எல்லாச் சச்சரவுகளிலும் ஆணையிட்டே முடிவு கட்டுவர். அந்த முடிவை ஆணை உறுதிப்படுத்தும்.

அப்படியிருக்க, கடவுள் தமது வாக்குறுதியின் உரிமையாளர்களுக்குத் தம் திட்டத்தின் மாறாத் தன்மையை இன்னும் தெளிவாய்க் காண்பிக்க விரும்பி, ஆணையிட்டுத் தாமே பிணையாய் நின்றார். கடவுள் நம்மை ஏமாற்ற முடியாதவாறு, மாறாத் தன்மை கொண்ட இரு பிணைப்புகள் இவ்வாறு ஏற்பட்டன. இங்ஙனம் இறைவன் தம் அடைக்கலத்தைத் தேடிய நமக்கு நம் கண் முன் நிற்கும் நம்பிக்கையைப் பற்றிக் கொள்வதற்குப் பெருக்கம் அளிக்க விரும்பினார். அந்த நம்பிக்கைதான் நம் ஆன்மாவுக்கு நங்கூரம் போல் உள்ளது. அது உறுதியானது, நிலையானது. அந்த நம்பிக்கை திரைச்சீலைக்கு அப்பாலும் எட்டியிருக்கிறது. மெல்கிசெதேக் முறைப்படி வேக என்றென்றும் தலைமைக் குருவாகி, நம் சார்பாக நமக்கு முன்னோடியாய் அந்தத் திரைச் சீலையைக் கடந்து சென்றிருக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா. 110:1-2. 4-5. 9,10c (பல்லவி: 5)

பல்லவி: தாம் செய்த உடன்படிக்கையை ஆண்டவர் என்றும் மறவார்.

நெஞ்சார ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன்: நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.
ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை; அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர்.

பல்லவி

தம் வியத்தகு செயல்கள் என்றும் நினைவில் இருக்கச் செய்தார்: அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.
தமக்கு அஞ்சி நடப்போர்க்கு உணவு ஊட்டினார்; தாம் செய்த உடன்படிக்கையை என்றும் மறவார்.

பல்லவி

தம் மக்களுக்கு அவர் மீட்பை அளித்தார்; தம் உடன்படிக்கையை என்றென்றும் நிலைக்கச் செய்தார்: அவரது திருப்பெயர் புனிதமானது, வணங்குதற்குரியது.
அவரது புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**அவனுடைய சகோதரர் நடுவில் தாவீதை சாமுவேல் அபிஷேகம் செய்தார். அவன்மேல் ஆண்டவருடைய ஆவி இறங்கி இருந்தது.**

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் *16:1-13*

அந்நாட்களில் :

ஆண்டவர் சாமுவேலைப் பார்த்து, "சவுல் இஸ்ராயேலின் அரசனாய் இராதபடி நாம் அவனைத் தள்ளியிருக்க, நீ எத்தனை காலம் அவனுக்காக ஏங்கிக் கொண்டிருப்பாய்? கொம்பினால் செய்யப்பட்ட உன் கிண்ணத்தை எண்ணெயால் நிரப்பிக் கொண்டு வா; பெத்லெகேமைச் சேர்ந்த இசாயி னிடம் நாம் உன்னை அனுப்புவோம். நாம் அவன் புதல்வர்களில் ஒருவனை அரசனாகத் தேர்ந்து கொண்டுள்ளோம்" என்றருளினார். அதற்குச் சாமுவேல், "எப்படிப் போவேன்? சவுல் கேள்விப்பட்டால் என்னைக் கொன்று விடுவானே?" என்றார். மறுபடியும் ஆண்டவர், "நீ மாட்டு மந்தையில் ஒரு கன்றுக்குட்டியைப் பிடித்துக் கொண்டு: 'ஆண்டவருக்குப் பலியிட வந்துள்ளேன்' என்று சொல்லி, இசாயியைப் பலிக்கு அழைப்பாய்; பின்னர் நீ செய்யவேண்டியதை உனக்கு நாம் காட்டுவோம். நாம் உனக்கு எவனைக் காண்பிப்போமோ, அவனை நீ அபிஷேகம் செய்வாய்" என்று சொன்னார்.

ஆண்டவர் தமக்குச் சொன்னபடி சாமுவேல் செய்து பெத்லெகேமுக்குப் போனார். அவ்வூரின் மூப்பர்கள் வியப்புற்று அவர்முன் ஓடிவந்து "உமது வருகை எங்களுக்குச் சமாதானத்தைத் தருமா?" என்று கேட்டனர். அதற்கு அவர், "ஆம், ஆண்டவருக்குப் பலிசெலுத்த வந்துள்ளேன். நீங்கள் உங்களைத் தூயவராக்கிக் கொண்டு என்னுடன் பலியிட வாருங்கள்" என்று சொன்னார். மேலும் இசாயியையும் அவனுடைய புதல்வர்களையும் தூய்மைப்படுத்தி அவர்களைப் பலிக்கு அழைத்தார்.

அவர்கள் வந்தபோது சாமுவேல் எலியாபைக்கண்டு, "ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவன்தானோ?" என்று கேட்டார். ஆண்டவர் சாமுவேலை நோக்கி, "அவனுடைய முகத்தையும் உடல் உயரத்தையும் பார்க்காதே; ஏனெனில் நாம் அவனைத் தள்ளிவிட்டோம். மனிதன் பார்க்கிறது ஒரு விதம், நாம் தீர்ப்பிடுவது வேறுவிதம். மனிதன் வெளிக்குத் தோன்றுவதைமட்டும் பார்க்கிறான்; ஆண்டவரோ இதயத்தைப் பார்க்கிறார்" என்று சொன்னார். அப்போது இசாயி அபினதாபை அழைத்து அவனைச் சாமுவேல் முன்பாகக் கூட்டிவந்தான். அவர், "இவனையும் ஆண்டவர் தேர்ந்துகொள்ளவில்லை" என்றார். இசாயி சம்மாவைக்

கூட்டி வந்தான். அவர், "இவனையும் ஆண்டவர் தேர்ந்துகொள்ளவில்லை" என்று சொல்லி விட்டார். இவ்வாறு இசாயி தன் புதல்வர்களில் எழுவரைச் சாமுவேல் முன் கொண்டு வந்தான். "இவர்களுள் ஒருவனையும் ஆண்டவர் தேர்ந்துகொள்ளவில்லை" என்று சாமுவேல் இசாயிடம் சொன்னார்.

அப்பொழுது இசாயியைப் பார்த்துச் சாமுவேல், "உம் பிள்ளைகள் எல்லாம் இவ்வளவுதானா?" என்று கேட்டார். அதற்கு அவன், "இன்னும் ஒரு சிறுவன் இருக்கிறான். அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" என்று மறுமொழி சொன்னான். அப்பொழுது சாமுவேல் இசாயியை நோக்கி, "நீ ஆள் அனுப்பி அவனை வரச்சொல்; அவன் வரும் வரை நான் உண்ணாது இருப்பேன்" என்றார்.

இசாயி ஆள் அனுப்பி அவனை அழைத்து வரச் செய்தான். அவனோ சிவந்த மேனியும், பார்வைக்கு அழகும், முகப்பொலிவும் உள்ளவனாய் இருந்தான். அப்பொழுது ஆண்டவர், "இவன்தான்; எழுந்து இவனை அபிஷேகம் செய்" என்று சொன்னார். அப்பொழுது சாமுவேல் கொம்பினால் செய்யப்பட்ட எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்து அவனுடைய சகோதரர் நடுவில் அவனை அபிஷேகம் செய்தார். அன்று முதல் ஆண்டவருடைய ஆவி தாவீதின்மேல் இறங்கி எப்பொழுதும் இருந்தது. சாமுவேல் எழுந்து ராமாத்தாவுக்குத் திரும்பினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 88 : 19. 20-21. 26-27 (பல்லவி : 20a)*

பல்லவி: **என் ஊழியன் தாவீதை நான் தேர்ந்தெடுத்தேன்.**

19 ஆதியில் உம் புனிதர்களுக்குக் காட்சி தந்து நீர் சொன்னது: வல்லவனுக்கு மணிமுடி சூட்டினேன்; மக்களினின்று ஒருவனை நான் தேர்ந்தெடுத்து மகிமைப்படுத்தினேன்.

பல்லவி

20 என் ஊழியன் தாவீதை நான் தேர்ந்தெடுத்தேன்: புனித தைலத்தால் அவரை அபிஷேகம் செய்தேன்.

21 அதனால் என் கைவன்மை என்றும் அவருக்குத் துணை நிற்கச் செய்வேன்: என் புயபலம் அவரை உறுதிப்படுத்தச் செய்வேன்.

பல்லவி

26 "நீரே என் தந்தை, என் இறைவன், எனக்கு மீட்பளிக்கும் அரண்" என்று என்னை நோக்கிக் கூறுவார்.

27 நானும் அவரை என் தலைப்பேறாக்குவேன்: மண்ணக அரசருள் மாண்பு மிக்கவராக்குவேன்.

பல்லவி

அல்லேலூயா எபேசி. 1:17-18 காண்

அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது என்று நாம் அறிந்துகொள்ளும்படி நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் தந்தை நம் அகக் கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***ஓய்வு நாள் இருப்பது மனிதனுக்காக; மனிதன் இருப்பது ஓய்வு நாளுக்காக அன்று.***

2:23-28

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.

ஓய்வு நாளில் வயல் வழியே யேசு செல்லும்பொழுது அவர் சீடர் நடந்து கொண்டே கதிர்களைக் கொய்யத் தொடங்கினர். பரிசேயரோ அவரை நோக்கி, "பாரும், ஓய்வு நாளில் செய்யத் தகாததை ஏன் செய்கிறார்கள்?" என்றனர். அதற்கு அவர், "தாவீதும் அவரோடு இருந்தவர்களும் உணவின்றிப் பசியாயிருந்தபொழுது அவர் என்ன செய்தார் என்று நீங்கள் ஒருபோதும் வாசித்ததில்லையோ? அபியத்தார் தலைமைக் குருவாய் இருந்தபொழுது அவர் கடவுளின் இல்லத்தில் நுழைந்து, குருக்களைத் தவிர வேறு எவரும் உண்ணக்கூடாத காணிக்கை அப்பங்களைத் தாம் உண்டதுமன்றி, கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தாரே" என்றார். அவர் அவர்களை நோக்கி, "ஓய்வுநாள் இருப்பது மனிதனுக்காக; மனிதன் இருப்பது ஓய்வு நாளுக்காக அன்று. ஆதலால் மனுமகன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவர்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*நீர் மெல்கிசெதேக் முறைப்படி என்றென்றும் குருவாயிருக்கிறீர்.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 7:1-3. 15-17

சகோதரர்களே :

மெல்கிசெதேக் சாலேம் ஊர் அரசர்; உன்னத கடவுளின் குரு; அரசர்களை வெட்டி வீழ்த்தித் திரும்பி வந்துகொண்டிருந்த ஆபிரகாமை எதிர்கொண்டுபோய் அவருக்கு ஆசி அளித்தவர். ஆபிரகாமிடமிருந்து எல்லாவற்றிலும் பத்திலொரு பங்கைப் பெற்றுக்கொண்டவர். முதலாவது, நீதியின் அரசர் என்பது அவருடைய பெயரின் பொருள்; பின்னர் அவர் சாலேம் அரசர்; அதற்கு அமைதியின் அரசர் என்பது பொருள். இவருக்குத் தந்தையில்லை, தாயில்லை, தலைமுறை வரலாறில்லை, வாழ் நாளுக்குத் தொடக்கமுமில்லை, முடிவுமில்லை; இவர் கடவுளின் மகனுக்கு ஒப்பானவர்: அவரைப்போல் என்றென்றும் குருவாக நிலைத்திருக்கிறார்.

இப்படித் தோன்றிய அவ்வேறொரு குரு மெல்கிசெதேக்குக்கு ஒப்பானவராய்த் திருச்சட்டத்திலுள்ள கட்டளைப்படி இயல்பான பிறப்பினாலன்று, அழியாத உயிரின் வல்லமையால் குருவாய்த் தோன்றினார் என்பதை நினைக்கும்போது, மேற்கூறியது இன்னும் தெளிவாகிறது. "நீர் மெல்கிசெதேக் முறைமைப்படி, என்றென்றும் குருவாயிருக்கிறீர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 109:1.2.3.4 (பல்லவி: 4a)

பல்லவி: மெல்கிசெதேக் முறைமைப்படி நீர் என்றென்றும் குருவே.

1 ஆண்டவர் என் ஆண்டவரிடம் சொன்னது: "நான் உம் பகைவரை உமக்குக் கால்மணையாக்கும்வரை நீர் என் வலப்பக்கத்தில் அமரும்."

2 வலிமைமிக்க உமது செங்கோலை ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்: உம் எதிரிகளிடையே அதிகாரம் செலுத்தும். பல்லவி

3 புனிதம் சிறப்புற்றோங்க, நீர் உதித்தநாளிலே ஆட்சியுரிமையும் உம்மோடு உதித்தது: விடிவெள்ளி தோன்றுமுன் பனியைப்போல் உம்மை ஈன்றெடுத்தேன். பல்லவி

4 "மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே" என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்: சொன்ன சொல்லை மாற்றமாட்டார். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

***தாவீது ஒரு கவணாலும் கல்லாலும் பிலிஸ்தியனை வென்றான்.***

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 17:32-33. 37. 40-50

அந்நாட்களில்:

சவுல் அருகில் தாவீது அழைக்கப்பட்டபோது அவன் சவுலை நோக்கி, "கோலியாத்தின் பொருட்டு யாருடைய இதயமும் கலங்க வேண்டியதில்லை, உம் அடியானாகிய நானே போய் அப்பிலிஸ்தியனோடு சண்டையிடுவேன்" என்றான். அதற்குச் சவுல், "அப்பிலிஸ்தியனை எதிர்க்கவும், அவனுடன் சண்டையிடவும் உன்னால் முடியாது. நீயோ சிறுவன்; அவனோ இளமை முதல் போரில் பயிற்சி உள்ளவன்" என்றார்.

தாவீது, "என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர், இப்பிலிஸ்தியன் கையினின்றும் என்னை மீட்பார்" என்றான். "சென்று வா; ஆண்டவர் உன்னோடு இருப்பார்" என்று சவுல் தாவீதுக்குச் சொன்னார்.

எப்பொழுதும் கையில் வைத்திருக்கும் தன் தடியைப் பிடித்துக் கொண்டு, ஓடையில் ஐந்து கூழாங்கற்களைப் பொறுக்கி எடுத்துத் தன் மேலிருந்த இடையனுக்குரிய சட்டைப் பையில் போட்டுக் கவணையும் கையில் எடுத்துக் கொண்டு பிலிஸ்தியனுக்கு எதிராகப் புறப்பட்டான்.

பிலிஸ்தியனும் நடந்து தாவீதின் அருகில் வந்தான்; அவனுடைய பரிசையனும் அவன் முன் நின்றான். பிலிஸ்தியன் சுற்றிப் பார்த்துத் தாவீதைக் கண்டு, அவன் இளைஞனும் செந்நிறமாயும் பார்க்க அழகாயும் இருப்பதைப் பற்றி அவனை ஏளனம் செய்தான். பிலிஸ்தியன் அவனை நோக்கி, "நீ என்னிடம் ஒரு கோலுடன் வர நான் என்ன ஒரு நாயா?" என்று சொல்லி, தன் தேவர்களின் மேல் ஆணையிட்டுத் தாவீதைச் சபித்தான். மேலும் அவன் தாவீதை நோக்கி, "என் அருகில் வா; நான் வானத்துப் பறவைகளுக்கும், காட்டு விலங்குகளுக்கும் உன் தசைகளைக் கொடுப்பேன்" என்றான்.

அதற்குத் தாவீது பிலிஸ்தியனைப் பார்த்து, " நீ வாளோடும் ஈட்டியோடும் கேடயத்தோடும் என்னிடம் வருகிறாய்; நானோ சேனைகளின் ஆண்டவருடைய பெயராலே, நீ அவமதித்த இஸ்ராயேலுடைய படைகளின் கடவுளுடைய பெயராலே உன்னிடத்தில் வருகிறேன். இன்று ஆண்டவர் உன்னை என் கையில் ஒப்படைப்பார். நான் உன்னைக் கொன்று உன் தலையைத் துண்டிப்பேன். இஸ்ராயேலரில் கடவுள் இருக்கிறதை உலகெல்லாம் அறிந்து கொள்ளும்படி, இன்று பிலிஸ்தியரின் பிணங்களை வானத்துப் பறவைகளுக்கும் காட்டு விலங்குகளுக்கும் கொடுப்பேன். அதனால் ஆண்டவர் மீட்பது வாளாலும் அன்று, ஈட்டியாலும் அன்று என்று இந்த மக்கட் கூட்டம் எல்லாம் தெரிந்து கொள்ளும்; ஏனெனில் போர் அவருடையது. அவர் உங்களை எங்கள் கைகளில் ஒப்படைப்பார்" என்று சொன்னான்.

பிலிஸ்தியன் எழுந்து தாவீதுக்கு எதிரே நெருங்கி வருகையில் தாவீது விரைந்து பிலிஸ்தியனுக்கு எதிராகச் சண்டையிட ஓடினான். தன் பையில் கையை விட்டு ஒரு கல்லை எடுத்துக் கவணில் போட்டு அதைச் சுழற்றிப் பிலிஸ்தியன் நெற்றியில் எறிந்தான். கல் அவன் நெற்றியில் பதிந்து போனதால், அவன் தரையில் முகங்குப்புற விழுந்தான்.

இப்படித் தாவீது ஒரு கவணாலும் கல்லாலும் பிலிஸ்தியனை வென்று, அடிபட்ட பிலிஸ்தியனைக் கொன்றான். தாவீதின் கையில் வாள் இல்லாததால், அவன் ஓடிப் பிலிஸ்தியன் மேல் ஏறி நின்று, அவன் வாளைப் பிடித்து அதன் உறையிலிருந்து உருவி அவனைக் கொன்று, அவன் தலையைக் கொய்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 143 : 1. 2. 9-10 (பல்லவி: 1a)

பல்லவி : என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் போற்றி.

1 என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் போற்றி; போரிட என் கைகளுக்குப் பயிற்சி அளிப்பவர் : சண்டையிட என் கைகளுக்குப் பலமளிப்பவர் அவரே.

பல்லவி

2 எனக்கு இரக்கம் காட்டுபவர், என் அடைக்கலக்கோட்டை அவரே : எனக்குப் பாதுகாப்பும் விடுதலையும் அளிப்பவர் அவரே. என் கேடயமும் புகலிடமும் அவரே : மக்கள் இனத்தாரை எனக்குக் கீழ்ப்படுத்துபவர் அவரே.

பல்லவி

9 இறைவா, நான் உமக்குப் புதியதொரு பாடலைப் பாடுவேன். பத்து நரம்பு வீணையால் உமக்குப் புகழ்பாடுவேன்.

10 மன்னர்களுக்கு வெற்றியளிப்பவர் நீரே: உம் ஊழியன் தாவீதை விடுவித்தவர் நீரே. பல்லவி

அல்லேலூயா மத் 4 : 23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப்பற்றிய நற்செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கி வந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*ஓய்வுநாளில் எது செய்வது முறை?*
*உயிரைக் காப்பதா, அழிப்பதா?*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3 : 1-6

அக்காலத்தில்:

யேசு மீண்டும் செபக்கூடத்திற்கு வந்தார். அங்கே சூம்பிய கையன் ஒருவனிருந்தான். அவர்மேல் குற்றஞ்சாட்டும்படி, 'ஓய்வுநாளில் குணமாக்குவாரா' என்று பார்த்துக் கொண்டேயிருந்தனர்.

அவரோ சூம்பிய கையனை நோக்கி, "வந்து நடுவிலே நில்" என்றார். பின் அவர்களிடம், "ஓய்வு நாளில் எது செய்வது முறை? நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா?" என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தனர். அவர் சினத்தோடு அவர்களைச் சுற்றிப்பார்த்து, அவர்களது மனக்கடினத்தைக் கண்டு வருந்தி, அவனை நோக்கி, "கையை நீட்டு" என்றார். நீட்டினான். கை குணமாயிற்று.

பரிசேயரோ, வெளியே போய், ஏரோதியரோடு சேர்ந்து அவரை எப்படித் தொலைக்கலாமென்று அவருக்கெதிராக உடனே ஆலோசனை செய்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தபோது, ஒரே முறையில் எக்காலத்திற்குமே பலியை நிறைவேற்றி விட்டார்.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 7:25-8:6

சகோதரர்களே :

யேசு, தம் வழியாகக் கடவுளை அணுகிச் செல்வோரை முற்றும் மீட்க வல்லவராயிருக்கிறார். அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே வாழ்கிறார்.

நமக்கேற்ற தலைமைக் குரு எத்தகையவரெனில்: புனிதர், குற்றமில்லாதவர், மாசற்றவர், பாவிகளினின்று பிரிக்கப்பட்டு வானகங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர். ஏனைய தலைமைக் குருக்கள் செய்வதுபோல் இவர் முதன்முதலில் தம்முடைய பாவங்களுக்காகவும், பின்பு மக்களுடைய பாவங்களுக்காகவும் நாள்தோறும் பலி ஒப்புக்கொடுக்கத் தேவையில்லை. ஏனெனில், தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தபோது ஒரே முறையில் எக்காலத்திற்குமே பலியை நிறைவேற்றி விட்டார். திருச்சட்டம் குறைபாடுள்ள மனிதர்களையே தலைமைக் குருக்களாக ஏற்படுத்துகிறது. அச்சட்டத்துக்குப் பின் வந்த ஆணையோடு கூடிய திருவாக்கு என்றென்றும் நிறைவு பெற்ற மகனையே குருவாக ஏற்படுத்துகிறது.

நாம் சொன்னவற்றில் தலையாயது: இத்தகைய தலைமைக்குரு நமக்கு வாய்த்துள்ளார்; அவர் மகத்துவ மிக்கவரது அரியணையின் வலப்புறத்திலே வானகத்தில் அமர்ந்துள்ளார். அங்கே மனிதராலன்று, கடவுளாலேயே அமைக்கப்பட்ட உண்மையான கூடாரமாகிய தூயகத்தில் இறைபணி ஆற்றுபவராயிருக்கின்றார்.

ஒவ்வொரு தலைமைக் குருவும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவே ஏற்படுத்தப்பட்டிருப்பதால், அவ்வாறு செலுத்துவதற்கு ஏதாவது இவருக்கும் இருந்திருக்கவேண்டும். உலகிலேயே இருந்திருப்பாரானால் இவர் குருவாக இருந்திருக்கமாட்டார். ஏனெனில், திருச்சட்டம்

குறிப்பிடும் காணிக்கைகளை ஒப்புக்கொடுக்க ஏற்கெனவே வேறு குருக்கள் இருக்கின்றனர். இவர்கள் வானக இறைபணியின் வெறும் சாயலும் நிழலுமாயுள்ள பணியைப் புரிகிறார்கள். இதை, மோயீசன் கூடாரத்தை அமைக்கத் தொடங்கியபொழுது கடவுள் கொடுத்த கட்டளை குறிப்பிடுகிறது. 'மலைமீது உனக்குக் காண்பித்தவற்றின் மாதிரியாக எல்லாவற்றையும் செய்யப் பார்' என்பது அக்கட்டளை.

மேலான வாக்குறுதிகளை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பட்டு, யேசுவை இணைப்பாளராகக் கொண்டிருக்கும் உடன்படிக்கை எவ்வளவுக்கு மேலானதோ அவ்வளவுக்கு மேலானது அவர் பெற்றிருக்கும் இறைபணி அலுவல்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 39:6-7a. 7b-8. 9.16 (பல்லவி: 7a.8a)*

பல்லவி : இதோ வருகிறேன், ஆண்டவரே, உம் திருவுளப்படி நடப்பதே எனக்கின்பம்.

6 பலியும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை; ஆனால் என் செவிகளை நீர் திறந்துவிட்டீர்: தகனப் பலியும் பாவம் போக்கும் பலிப்பொருளும் நீர் கேட்கவில்லை.

7 அப்போது நான் சொன்னது: "இதோ வருகிறேன். பல்லவி

ஏட்டுச் சுருளில் என்னைக் குறித்து:

8 என் இறைவா, உம் திருவுளத்தின்படி நடப்பதே எனக்கின்பம்; உம் திருச்சட்டத்தை என் உள்ளத்தில் கொண்டிருக்கிறேன் என்று எழுதப் பட்டுள்ளது." பல்லவி

9 மக்கட் பேரவையில் உம் நீதியை வெளிப்படுத்தினேன்; இதோ! நான் என் வாயை மூடிக்கொண்டிருக்கவில்லை: ஆண்டவரே, இதை நீர் அறிவீர். பல்லவி

16 உம்மைத் தேடுவோர் அனைவரும் மகிழ்ச்சிகொண்டு அக்களிப்பார்களாக; உமது அருட்துணையை வேண்டுவோர், 'இறைவா, போற்றி!' என்று எந்நேரமும் வாழ்த்துவாராக. பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

***என் தந்தை சவுல் உன்னைக் கொல்லத் தேடுகிறார்.***

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 18:6-9; 19:1-7

*அந்நாட்களில் :*

தாவீது பிலிஸ்தியனை வென்று திரும்பி வருகையில் இஸ்ராயேலின் எல்லா நகர்களிலிருந்தும் பெண்கள் கஞ்சிராக்களுடனும் நரம்பிசைக் கருவிகளுடனும் மகிழ்ச்சியாய் ஆடிப்பாடிச் சவுல் அரசரை எதிர்கொண்டு வந்தார்கள். அப் பெண்கள், "சவுல் கொன்றது ஆயிரம் பேர்; தாவீது கொன்றதோ பதினாயிரம் பேர்" என்று ஆடிப்பாடிக்கொண்டு சென்றனர். அது கேட்ட சவுல் மிகுந்த எரிச்சல் அடைந்தார். ஏனெனில் அது அவர் மனதுக்குப் பிடிக்கவில்லை. "அவர்கள், தாவீதுக்குப் பதினாயிரமும் எமக்கு ஆயிரமும் கொடுத்தார்களே; இன்னும் ஆட்சியைவிட அவனுக்கு என்ன குறைவாய் இருக்கிறது?" என்று அவர் சொன்னார். அன்றுமுதல் சவுல் தாவீதை நல்ல கண்கொண்டு பார்க்கவில்லை.

தாவீதைக் கொல்லவேண்டும் என்று சவுல் தம் மகன் யோனத்தாசிடமும், தம் எல்லா ஊழியர்களிடமும் கூறினார். ஆனால், சவுலின் மகன் யோனத்தாசு தாவீதுக்கு மிகவும் அன்பு செய்து வந்தான். யோனத்தாசு தாவீதுக்கு இதைத் தெரிவித்து, "என் தந்தை சவுல், உன்னைக் கொல்லத் தேடுகிறார்; ஆகையால், நாளைக் காலையில் விழிப்பாயிரு; இரகசியமான இடத்தில் தங்கி மறைவாய் இரு. நான் எழுந்து, நீ வெளியில் எங்கெங்கு இருப்பாயோ, அங்கெல்லாம் என் தந்தை அருகில் நான் நிற்பேன். நான் உன்னைக்குறித்து என் தந்தையிடம் பேசி எனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் உனக்கு அறிவிப்பேன்" என்றான்.

யோனத்தாசு தன் தந்தை சவுலிடத்தில் தாவீதைக்குறித்து நல்லன பேசி, "அரசே, தாவீது உமக்குத் துரோகம் செய்ததில்லை; அவன் செயல்கள் எல்லாம் உமக்கு மிகவும் பயன்படுகிறபடியால், நீர் உம் அடியானாகிய அவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்ய வேண்டாம். அவன் தன் உயிரை ஒரு பொருட்டாய் எண்ணாது அப் பிலிஸ்தியனைக் கொன்றான். ஆண்டவர் இஸ்ராயேல் முழுவதற்கும் பெரும் மீட்பைத் தந்தார். நீர் அதைப் பார்த்து மகிழ்வுற்றீர். காரணமின்றித் தாவீதைக் கொன்று குற்றமற்ற இரத்தத்தைச் சிந்த நினைத்துப் பாவம் செய்யவேண்டுமா?" என்று

சொன்னான். சவுல் யோனத்தாசின் சொற்களைக் கேட்டு அமைதி அடைந்து "ஆண்டவர் மேல் ஆணை! அவன் கொலைசெய்யப்படமாட்டான்" என்று சத்தியம் செய்தார்.

யோனத்தாசு தாவீதை அழைத்து இவ்வார்த்தைகளை எல்லாம் அவனுக்குத் தெரிவித்தான். பின்னர் தாவீதைச் சவுலிடம் கூட்டி வந்தான். அவனும் முன்போலவே சவுலின் அவையில் பணியாற்றினான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 55 : 1-2. 8-9ab. 9c-10. 11-12 (பல்லவி : 4ab)

பல்லவி: இறைவன் மீது நம்பிக்கை வைக்கிறேன், அச்சம் எனக்கில்லை.

1 இறைவா, என்மீது இரக்கம் வையும்: மனிதர் என்னை நசுக்கி விடுகின்றனர்;
இடைவிடாமல் என்னைத் தாக்கித் துன்புறுத்துகின்றனர்.
2 என் எதிரிகள் என்னை எந்நேரமும் நசுக்கப் பார்க்கின்றனர்: எனக்
கெதிராய்ப் போரிடுபவர் திரளாய் உள்ளனர். பல்லவி

8 நான் இங்கும் அங்கும் அலைவதை நீர் பார்த்துக்கொண்டுதானிருக்கிறீர்:
என் கண்ணீர்களை நீர் உம் தோற் பையில் சேர்த்து வைத்திருக்கிறீர்; உம்
முடைய நூலிலும் அவற்றை நீர் எழுதி வைக்கவில்லையா?
9 நான் உம்மை எந்நேரத்தில் கூவியழைத்தாலும் என் எதிரிகள் பின்
னடைந்து போவர். பல்லவி

10 இறைவனின் வாக்குறுதியை நான் புகழ்ந்தேத்துகிறேன்: ஆண்டவருடைய
வார்த்தையைப் புகழுகிறேன். பல்லவி

11 இறைவன்மீது நம்பிக்கை வைக்கிறேன். அச்சமெனக்கில்லை. மனிதன்
எனக்கு என்ன செய்வான்?
12 இறைவனே, நான் உமக்குச் செய்த பொருத்தனைகளை நிறைவேற்ற
வேண்டுமல்லவா? நன்றிப் பலிகளை உமக்குச் செலுத்துவேன். பல்லவி

## அல்லேலூயா

2 திமோத். 1:10b

அல்லேலூயா. நம் மீட்பராகிய யேசுகிறிஸ்து சாவை அழித்து, வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***"நீர் கடவுளின் மகன்" என அசுத்த ஆவிகள் கத்தின; தம்மை வெளிப்படுத்த வேண்டாமென அவர் அவை களிடம் மிகக் கண்டிப்பாகச் சொன்னார்.***

*✠ மாற்கு எழுதிய புனித நற்செய்தியிலிருந்து வாசகம்* *3:7-12*

*அக்காலத்தில் :*

இயேசு தம் சீடருடன் கடலோரம் சென்றார். கலிலேயாவிலிருந்து பெருந் திரளான மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அவர் செய்த தெல்லாம் கேள்வியுற்று யூதேயா, எருசலேம், இதுமேயா, யோர்தான் அக்கரைப் பகுதி, தீர் சீதோன் வட்டாரம் ஆகிய இடங்களிலிருந்தும் திரளான மக்கள் அவரிடம் வந்தனர். கூட்டமாயிருக்கவே, அவர்கள் தம்மை நெருக்காதபடி தமக்குப் படகு ஒன்றைத் தயாராக வைத்திருக்கு மாறு சீடருக்குச் சொன்னார்.

ஏனெனில், பலரை அவர் குணமாக்கியதால் நோயாளிகளெல்லாரும் அவரைத் தொட வேண்டுமென்று அவர் மேல் வந்து விழுந்தனர். அசுத்த ஆவிகள் அவரைக் காணும்போது, "நீர் கடவுளின் மகன்" என்று கத்திக் கொண்டு அவர் காலில் விழுந்தன. ஆனால், அவர், தம்மை வெளிப்படுத்த வேண்டாமென மிகக் கண்டிப்பாய்ச் சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

***மேலான உடன்படிக்கையின் இணைப்பாளராயிருக்கிறார்.***

*எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* *8:6-13*

*சகோதரர்களே :*

மேலான வாக்குறுதிகளை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பட்டு, இயேசுவை இணைப்பாளராகக் கொண்டிருக்கும் உடன்படிக்கை எவ்வளவுக்கு மேலானதோ அவ்வளவுக்கு மேலானது அவர் பெற்றிருக்கும்

இறைபணியலுவல். அந்த முதல் உடன்படிக்கை குறையில்லாததாக இருந்திருப்பின் மற்றொன்றிற்குத் தேவையே இருந்திராது. ஆனால் கடவுள் அவர்களைக் குற்றங் கூறிச் சொன்னதாவது :

"ஆண்டவர் கூறுவது: இதோ, ஒருநாள் வரும். அந்நாளில் இஸ்ராயேல் குலத்தாரோடும் யூதாவின் குலத்தாரோடும் புதியதோர் உடன்படிக்கை செய்துகொள்வேன். எகிப்து நாட்டிலிருந்து அவர்களுடைய முன்னோரைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோன நாளில், அவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைபோலிராது, இவ்வுடன் படிக்கை. அவர்கள் என் உடன்படிக்கையில் நிலைத்திருக்கவில்லை. நானும் அவர்களைக் கைவிட்டேன் என்கிறார் ஆண்டவர்.

அந்நாட்களுக்குப்பின் இஸ்ராயேல் குலத்தாரோடு நான் செய்து கொள்ளும் உடன்படிக்கை இதுவே, என்கிறார் ஆண்டவர்: என் சட்டங்களை அவர்களுடைய மனத்தில் புகுத்துவேன், அவர்களுடைய உள்ளங்களில் அவற்றைப் பொறித்துவைப்பேன். நான் அவர்களுக்குக் கடவுளாயிருப்பேன். அவர்கள் எனக்கு மக்களாயிருப்பர். 'ஆண்டவரை அறிந்துகொள்' என்று இனி ஒருவனும் தன் அயலானுக்கோ, தன் சகோதரனுக்கோ கற்பிக்க வேண்டியதில்லை. சிறுவர் முதல் பெரியோர் ஈறாக எல்லாரும் என்னை அறிவர். ஆம், நான் அவர்களுடைய அக்கிரமங்களை இரக்கத்தோடு மன்னிப்பேன், அவர்களுடைய பாவங்களை இனி நினையேன்."

'புதியதோர் உடன்படிக்கை' என்றதால் முந்தினதைப் பழமையாக்கிவிட்டார். பழமையானதும் நாள்பட்டதும் விரைவில் மறைந்து போகவேண்டியதே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 84: 7.9. 10-11. 12-13 (பல்லவி: 10a)*

பல்லவி: இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்.

7 ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்: உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில் உள்ளது. அதனால் நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும்.
பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்: நீதியும் அமைதியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும்: நீதி நேர்மை வானத்தினின்று எட்டிப்பார்க்கும். பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார்: நம் நிலமும் பயனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும், மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்டவர்; ஆதலால், அவர் மேல் கைபோடமாட்டேன்.**

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 24:3-21

அந்நாட்களில்:

சவுல், இஸ்ராயேல் அனைத்திலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களில் மூவாயிரம் பேரை அழைத்துக் கொண்டு காட்டாடுகள் மட்டுமே ஏறக்கூடிய செங்குத்தான பாறைகளில்கூடத் தாவீதையும் அவனுடைய ஆட்களையும் தேடிப் போனார். வழியோரத்தில் ஆட்டு மந்தைகளின் தொழுவங்கள் காணப்பட்டன.

அவ்விடத்தில் ஒரு குகை இருந்தது. அதில் சவுல் காலைக்கடன் கழிக்கப் போனார். தாவீதும் அவனுடைய ஆட்களும் குகையினுள் ஒளிந்து கொண்டிருந்தனர். தாவீதின் ஆட்கள் அவனை நோக்கி, "இதோ, நாம் உன் எதிரியை உன் கையில் ஒப்படைத்தோம். உன் மனத்துக்குப் பிடித்தபடி அவனுக்குச் செய்வாய் என்று ஆண்டவர் உனக்குச் சொன்ன நாள் இதுவே" என்று அவனுக்குச் சொன்னார்கள். தாவீது எழுந்து சவுலுடைய போர்வையின் விளிம்பை அறுத்துக் கொண்டான். அதன் பின், சவுலின் போர்வை விளிம்பை அறுத்தது பற்றித் தாவீது மிகவும் வருந்தினான். அவன் தன் ஆட்களை நோக்கி, "ஆண்டவர் அவரை அபிஷேகம் செய்துள்ளார். அவர் ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்டவராகவும் என் தலைவராகவும் இருக்கிறபடியால் அவர் மேல் கைபோடும்படியான இப்படிப்பட்ட செயலை நான் செய்யாதபடி ஆண்டவர் என் மேல் இரக்கம் கொள்வாராக" என்று சொல்லி, தன் ஆட்கள் சவுலின் மேல் பாயாதபடி தம் சொற்களால் அவர்களைத் தடுத்தான். பிறகு சவுல் குகையை விட்டுப் புறப்பட்டுத் தம் வழியே நடந்து போனார்.

அப்போது தாவீதும் எழுந்து குகையிலிருந்து வெளியேறி சவுலுக்குப் பின்னே சென்று, " அரசே, என் தலைவா ! " என்று கூப்பிடச் சவுல் திரும்பிப் பார்த்தார். உடனே தாவீது தரை மட்டும் குனிந்து வணங்கி, சவுலை நோக்கி, " தாவீது உமக்குத் தீங்கு செய்யப் பார்க்கிறான் " என்று சொல்லும் மனிதருடைய பேச்சை நீர் கேட்கலாமா? இதோ ஆண்டவர், குகையில் உம்மை என் கையில் ஒப்படைத்தார் என்பதை இன்று உம் கண்களே கண்டன. நான் உம்மைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தது மெய்யே; ஆனால் என் கண் உம்மைக் காப்பாற்றியுள்ளது. நீர் ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்டவராய் இருக்கிறபடியால் என் தலைவர் மேல் கைபோடமாட்டேன் என்று சொல்லிக் கொண்டேன். ஆதாரம் என்ன என்று கேட்கிறீரா? என் தந்தையே, என் கையில் உள்ள உமது போர்வையின் நுனியைப் பார்த்து அறிந்து கொள்ளும்; ஏனெனில் உம்மைக் கொன்றுபோடாமலே உம் போர்வையின் நுனியை அறுத்துக் கொண்டேன். ஆதலால், நீர் யோசித்துப் பார்ப்பீராயின் நான் யாதொரு குற்றமோ, துரோகமோ நினைக்கவில்லை என்றும், நான் உமக்கு விரோதமாய்த் தீங்கு செய்ததில்லை என்றும் நீர் அறிந்து கொள்வீர். பின் நீர் என் உயிரை வாங்க வழிதேடுவது ஏன்? உமக்கும் எனக்கும் ஆண்டவர் நடுவராய் இருப்பாராக! உம் பொருட்டு ஆண்டவரே என்னைப் பழி வாங்கட்டும்! ஆனால் உம்மேல் நான் கைபோட மாட்டேன். முதுமொழி வழங்குவதுபோல், 'தீயோனிடமிருந்து தீமை பிறக்கும்' ஆதலால் நான் உம்மேல் கைவைக்க மாட்டேன். இஸ்ராயேலின் அரசே! யாரைப் பின்தொடர்கிறீர்? யாரைப் பிடிக்க வந்துள்ளீர்? ஒரு செத்த நாயை, ஓர் உண்ணியை அன்றோ? ஆண்டவர் நடுவராயிருந்து உமக்கும் எனக்கும் நீதி வழங்குவாராக! அவர் என் வழக்கை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லி, என்னை உமது கையினின்று விடுவிப்பாராக" என்று சொன்னான்.

தாவீது சவுலை நோக்கி இச்சொற்களைச் சொல்லி முடித்தபோது, சவுல், " என் மகனாகிய தாவீதே, இது உன் குரல்தானா?" என்று சொல்லி ஓலமிட்டு அழுதார். பின்பு தாவீதை நோக்கி, " நீ என்னிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்குத் தீமை செய்தேன். ஆண்டவர் என்னை உன் கையில் ஒப்படைத்திருந்தும் நீ என்னைக் கொன்று போடவில்லை. நீ எனக்கு நன்மையே செய்து வந்துள்ளாய் என நன்கு விளங்குகிறது. ஒருவன் தன் எதிரியைக் கண்டுபிடிப்பானாகில், அவனை நலமுடன் போகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காக ஆண்டவர் உனக்கு நன்மை செய்வாராக! நீ உறுதியாக அரசாள்வாய் என்றும், இஸ்ராயேலின் ஆட்சியைக் கட்டாயம் அடைவாய் என்றும் இப்போது அறிவேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 56:1. 2-3. 5.10 (பல்லவி : 1a)

பல்லவி: என்மீதிரங்கும் இறைவா, என்மீதிரங்கும்.

1 என்மீதிரங்கும் இறைவா, என்மீதிரங்கும்; உம்மிடமே என் ஆன்மா அடைக்கலம் புகுகிறது; கொடுமையெல்லாம் தீரும்வரையில் உம் சிறகுகளின் நிழலில் நான் அடைக்கலம் புகுகிறேன். பல்லவி

2 உன்னதரான இறைவனை நோக்கிக் கூவுகிறேன்: எனக்கு நன்மை புரியும் இறைவனை நாடுகிறேன்.

3 வானினின்று எனக்குதவி புரிந்து மீட்பளிப்பாராக; என்னைத் துன்புறுத்துவோரைக் கேட்டுக்குஆளாக்குவாராக: தமது அருளும் சொல்லுறுதியும் எனக்குத் துணைபுரியச் செய்வாராக. பல்லவி

5 இறைவனே, நீர் வானங்களுக்கு மேலாக உன்னதராய் விளங்கியருளும். உமது மாட்சிமை புவியனைத்தும் விளங்குவதாக.

10 ஏனெனில், உயர்ந்துள்ளது வானமட்டும் உமது இரக்கம். மேகங்கள் மட்டும் உயர்ந்துள்ளது உமது சொல்லுறுதி. பல்லவி

அல்லேலூயா 2 கொரி. 5:19

அல்லேலூயா. கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினர்: அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை நம்மிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தம்மோடு இருக்கும்படி, தாம் விரும்பியவர்களை அழைத்தார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 3:13-19

அக்காலத்தில்:

யேசு மலைமேல் ஏறித் தாம் விரும்பியவர்களை அழைத்தார். அவர்கள் அவரிடம் வந்தனர். தம்மோடு இருப்பதற்கும், பேய்களை ஓட்டும் அதிகாரத்தோடு தூது அறிவிக்கத் தாம் அனுப்புவதற்குமெனப் பன்னிருவரை ஏற்படுத்தினர்.

அவர்கள் யாரெனில்: சீமோன்—இவருக்கு இராயப்பர் என்று பெயரிட்டார். —செபதேயுவின் மகன் யாகப்பர், யாகப்பருடைய சகோதரன் அருளப்பர்—இவர்களுக்கு இடியின் மக்கள் எனப் பொருள்படும்

போவனேர்கெஸ் எனப் பெயரிட்டார்.—பெலவேந்திரர், பிலிப்பு, பார்த்தொலொமேயு, மத்தேயு, தோமையார், அல்பேயுவின் மகன் யாகப்பர், ததேயு, கனானேய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் இஸ்காரியோத்து.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**தம் சொந்த இரத்தத்தைக்கொண்டே அவர் ஒரே முறையில் எக்காலத்திற்குமே தூயகத்தில் நுழைந்து விட்டார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 9 : 2-3. 11-14

சகோதரர்களே :

முன்கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அங்கே ஒரு விளக்குத் தண்டு, ஒரு மேசை, காணிக்கை அப்பங்கள் இவை இருந்தன. இதற்குத் 'தூயகம்' என்று பெயர். இரண்டாம் திரைக்குப்பின் 'திருத்தூயகம்' என்னும் கூடாரம் இருந்தது.

கிறிஸ்துவோ வரப்போகும் நன்மைகளுக்குத் தலைமைக் குருவாக வந்துள்ளார். அவர் முன்னதைவிட மேலானதும் நிறைவுள்ளதுமான கூடாரம் ஒன்றைக் கடந்து ஒரே முறையில் எக்காலத்திற்குமே தூயகத்தில் நுழைந்து விட்டார். இந்தக் கூடாரமோ மனிதரின் கையால் அமைக்கப் பட்டதன்று. அதாவது, இந்தப் படைப்புலகைச் சார்ந்ததன்று. ஆட்டுக் கடாக்கள், இளங் காளைகளின் இரத்தத்தைக் கொண்டு கிறிஸ்து தூயகத் தில் நுழையவில்லை. தம் சொந்த இரத்தத்தைக்கொண்டே அதில் நுழைந்தார். இவ்வாறு நாம் முடிவில்லா மீட்பைக் கண்டடையச் செய்தார்.

உண்மையில் ஆட்டுக்கடாக்கள், காளைமாடுகள் இவற்றின் இரத்த மும், கிடாரியின் சாம்பலும் மாசுள்ளவர்கள்மீது தெளிக்கப்படும்பொழுது உடலின் தூய்மையைப் பொறுத்தவரை, அவர்களைப் பரிசுத்தராக்கு

மெனில், முடிவில்லாத் தேவ ஆவியால் தம்மையே மாசற்ற பலியாய்க் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவின் இரத்தம், நாம் உயிருள்ள கடவுளுக்கு வழிபாடு செலுத்தும்படி நம்முடைய மனச்சாட்சியைச் சாவுக்குரிய செயல்களிலிருந்து எவ்வளவோ மேலாகத் தூய்மைப்படுத்தும் அன்றோ?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 46 : 1-2. 5-6. 7-8 (பல்லவி : 5)

பல்லவி : மக்கள் ஆர்ப்பரிக்க இறைவன் அரியணை ஏறுகிறார் :
எக்காளம் முழங்க ஆண்டவன் எழுந்தருள்கிறார்.

1 மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் கை கொட்டுங்கள் : அக்களிப்போடு இறைவனுக்குப் புகழ்பாடி ஆர்ப்பரியுங்கள்.

2 ஏனெனில், ஆண்டவர் உன்னதமானவர், அஞ்சுதற்குரியவர் : உலகுக்கெல்லாம் பேரரசர்.

பல்லவி

5 மக்கள் ஆர்ப்பரிக்க இறைவன் அரியணை ஏறுகிறார் : எக்காளம் முழங்க ஆண்டவர் எழுந்தருளுகிறார்.

6 பாடுங்கள், இறைவனுக்குப் புகழ்பாடுங்கள்: பாடுங்கள், நம் வேந்தனுக்குப் புகழ் பாடுங்கள்.

பல்லவி

7 ஏனெனில், கடவுள் உலகுக்கெல்லாம் அரசர் : அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்.

8 நாடுகள் அனைத்தின் மீதும் இறைவன் ஆட்சி புரிகின்றார் : தம் புனித அரியணைமீது இறைவன் வீற்றிருக்கின்றார்.

பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

***போரில் இவ்வலியோர் எவ்வாறு விழுந்தனர்?***

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 1:1-4, 11-12, 19, 23-27

அந்நாட்களில்:

தாவீது அமலேக்கியரின் படுகொலையிலிருந்து திரும்பி சிசெலேகில் இரண்டுநாள் தங்கினான். மூன்றும் நாள் சவுலின் பாசறையினின்று கிழிந்த ஆடையோடும், புழுதிபடிந்த தலையோடும் ஒரு மனிதன் வந்தான். அவன் தாவீதிடம் வந்து முகங்குப்புற விழுந்து வணக்கம் புரிந்தான். தாவீது, "நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று அவனை வினவினான். அவன் "இஸ்ராயேல் பாசறையினின்று ஓடிவந்தேன்" என்று அவனுக்குப் பதில் கூறினான். மீண்டும் தாவீது அவனை நோக்கி, "நடந்தது என்ன? எனக்கு அறிவி" என்றான். அதற்கு அவன், "மக்கள் போரைவிட்டு ஓடிப் போனார்கள். அவர்களில் பலர் மடிந்தனர்; அன்றியும் சவுலும், அவர் மகன் யோனத்தாசும் இறந்தார்கள்" என்றான்.

இதைக் கேட்டுத் தாவீதும் அவனோடு இருந்த எல்லா மனிதர்களும் தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, சவுலும் அவர் மகன் யோனத்தாசும், ஆண்டவருடைய மக்களும், இஸ்ராயேல் குடும்பத்தாரும் வாளால் மடிந்து விழுந்தனர் என்று கதறி அழுது, மாலைவரை நோன்பு காத்திருந்தனர். "புகழ்பெற்ற இஸ்ராயேலர் உன் மலைகளின்மேல் கொலையுண்டனர்! இவ்வலியோர் எவ்வாறு விழுந்தனர்? உயிரோடிருக்கையில் சவுலும் யோனத்தாசும் அன்பும் அழகும் உள்ளவர்களாய் இருந்தார்கள். சாவிலும் அவர்கள் பிரிந்து போகவில்லை. அவர்கள் கழுகுகளிலும் வேகம் உள்ளவர்களாய், சிங்கங்களிலும் வலிமை உள்ளவர்களாய் இருந்தார்கள்.

"இஸ்ராயேலின்புதல்விகளே, சவுலுக்காக அழுங்கள்! ஏனெனில் அவரே ஒள் சிவப்பு மெல்லாடைகளால் உங்களை உடுத்தி உங்கள் உடைகளின்மேல் பொன்னணிகளை அணிவித்தவர்! போர்க்களத்தில் வல்லவர் வீழ்ந்தது எங்ஙனம்? உயர்விடங்களில் யோனத்தாசு கொலையுண்டது எவ்வாறு? தம்பி, யோனத்தாசு! உனக்காகத் துயரப்படுகிறேன். நீ பேரழகனும் பெண்களைவிடப் பேரன்பனுமாய் இருந்தாய்! ஒரு தாய் தன் ஒரே மகனுக்கு அன்பு செய்வதுபோலன்றோ நான் உனக்கு அன்பு செய்தேன்! வலியோர் வீழ்ந்தது எங்ஙனம்? போர்க் கருவிகள் அழிந்தது எவ்வாறு?"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 79 : 1-2. 4-6 (பல்லவி: 3b)

பல்லவி: ஆண்டவரே, எங்களுக்கு மீட்புக் கிடைக்க உமது
இன்முகம் காட்டியருளும்.

1 இஸ்ராயேலரின் மேய்ப்பரே, செவிசாய்த்தருளும்: யோசேப்பை ஆட்டு
மந்தையைப் போல் வழிநடத்துபவரே, என் குரல் கேளும். கெருபீம்களின்
மேல் வீற்றிருப்பவரே,
2 எப்பிராயீம், பெஞ்சமீன், மனாசே இவர்கள் முன் உம் மாண்பு விளங்கச்
செய்யும்; உமது வல்லமையைத் தூண்டி எழுந்தருளும்: எம்மை மீட்க
எழுந்து வாரும். பல்லவி

4 படைகளின் இறைவனே, உம் மக்கள் மன்றாடுகையில், செவிகொடாமல்
எதுவரை சினம் கொண்டிருப்பீர்?
5 கண்ணீரையே அவர்களுக்கு உணவாக ஊட்டினீர்: பெருகியோடிய
கண்ணீரையே அவர்கள் பருகச் செய்தீர்.
6 எங்கள் அயலார்க்கு நாங்கள் சச்சரவின் காரணமாயிருக்கச் செய்தீர்:
எங்கள் எதிரிகளின் நகைப்புக்கு இலக்கானோம். பல்லவி

அல்லேலூயா — அப். பணி. 16 : 14b காண்

அல்லேலூயா. உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில்
இருத்தும்படி, ஆண்டவரே, எங்கள் இதயத்தைத்
திறந்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***அவர் மதிமயங்கிவிட்டார் என்று மக்கள் சொல்லினர்.***

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3 : 20-21

அக்காலத்தில்:

யேசு தம் சீடர்களுடன் வீட்டிற்கு வரவே, மீண்டும் கூட்டம் கூடியது. ஆதலால் அவர்கள் சாப்பிடவும் முடியவில்லை. அவருடைய உறவினர் இதைக் கேட்டு அவரைப் பிடித்துக் கொண்டுவரப் புறப்பட்டார்கள். ஏனெனில், 'அவர் மதிமயங்கிவிட்டார்' என்று மக்கள் சொல்லிக் கொண்டிருந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# மூன்றும் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*புறவினத்தார் வாழும் கலிலேயாவில் மக்கள் பேரொளியைக் கண்டனர்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 9 : 1-4

முற்காலத்தில் ஆண்டவர் சபுலோன் நாட்டையும், நெப்தலிம் நாட்டையும் அவமதிப்புக்கு உள்ளாக்கினூர்; ஆனுல் பிற்காலத்தில் கடல் நோக்கும் வழியையும், யோர்தான் அக்கரைப் பகுதியையும், புறவினத்தார் வாழும் கலிலேயாவையும் மகிமைப்படுத்துவார்.

இருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்துச் சுடர் வீசிற்று. மக்களினத்தைப் பலுகச் செய்தீர், அதன் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தினீர்; அறுவடையின்போது உழவன் மகிழ்வது போலும், கொள்ளைப் பொருளைப் பங்கிடுவோர் அக்களிப்பது போலும், உம் முன்னிலையில் அவர்கள் அக்களிக்கிறூர்கள்.

ஏனெனில், மாதியான் நாட்டுப் போர்க்காலத்தில் செய்ததுபோல், அவர்கள் தோள்மேல் சுமத்தப்பட்ட நுகத்தையும், தோளைக் காயப் படுத்திய தடியையும், அவர்களை ஒடுக்கியவனின் கொடுங்கோலையும் நீர் ஒடித்தெறிந்தீர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 26:1, 4, 13-14 (பல்லவி: 1a)

பல்லவி: **ஆண்டவரே என் ஒளி, என் மீட்பு.**

1 ஆண்டவரே என் ஒளி, என் மீட்பு; நான் யாருக்கு அஞ்சவேண்டும்?
ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான் நடுங்க வேண்டும்?
பல்லவி

ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே, நான் விரும்புவதும் ஒன்றே.
4 ஆண்டவருடைய இல்லத்தில் நான்
வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும்;
ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்கவேண்டும்;
அவரது ஆலயத்தை நான் பார்க்கவேண்டும்.
பல்லவி

நான் வாழ்வோருடைய நாட்டில், ஆண்டவருடைய நலன்களைக்
13 காண்பேனென நம்புகிறேன்.
ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு: உன் உள்ளம் இடம் கொள்வ
14 தாக, ஆண்டவரை எதிர்பார்த்திரு.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

***நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழுங்கள்;***
***உங்களிடையே பிளவுகள் வேண்டாம்.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1:10-13, 17

சகோதரர்களே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் பெயரால் உங்களை நான் வேண்டுவது: நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழுங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். மாறாக, ஒரே மனமும் ஒரே கருத்தும்கொண்டு, மீண்டும் முற்றிலும் ஒன்றித்து வாழுங்கள்.

என் சகோதரர்களே, உங்கள் நடுவில் சண்டை சச்சரவுகள் இருப்பதாகக் குலோவேயாளின் வீட்டினர் எனக்கு அறிவித்தனர். உங்களுள் ஒவ்வொருவரும், 'நான் சின்னப்பரைச் சேர்ந்தவன், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன். நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்' என்று பலவாறு சொல்லிக்கொள்ளுகிறீர்களாம்.

கிறிஸ்து பிளவு பட்டிருக்கிருரோ? சின்னப்பனு உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டான்? அல்லது சின்னப்பன் பெயராலா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? கிறிஸ்து என்னை அனுப்பினது ஞானஸ்நானம் கொடுக்க அன்று, நற்செய்தியை அறிவிக்கவே. அதுவும் நாவன்மையை நம்பியன்று; அப்படி நம்பினுல் கிறிஸ்துவின் சிலுவை பொருளற்றதாய்ப் போகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 4:23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கி வந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யேசு கப்பர்நகூமுக்கு வந்தார். இசையாஸ் இறைவாக்கினர் கூறியதுஇப்படி நிறைவேற வேண்டியிருந்தது.**

4:12-23

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

அருளப்பர் சிறைப்பட்டதைக் கேள்வியுற்று யேசு கலிலேயாவுக்குத் திரும்பினுர். அவர் நாசரேத்தூரை விட்டு, செபுலோன் நப்தலி நாட்டில் கடலோரமாயுள்ள கப்பர்நகூமுக்கு வந்து குடியிருந்தார். இசையாஸ் இறைவாக்கினர் பின்வருமாறு கூறியது இப்படி நிறைவேற வேண்டியிருந்தது.

"செபுலோன் நாடே! நப்தலி நாடே! கடல் நோக்கும் வழியே! யோர்தான் அக்கரைப் பகுதியே! புறவினத்தார் வாழும் கலிலேயாவே! இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல் படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்தது." ✠

அதுமுதல் யேசு, "மனந்திரும்புங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி விட்டது" என்று அறிவிக்கத் தொடங்கினுர்.

கலிலேயாக் கடலோரமாய் யேசு நடந்து செல்லுகையில், இராயப்பர் என்னும் சீமோனும், அவர் சகோதரர் பெலவேந்திரருமாகிய இரு சகோதரரைக் கண்டார். அவர்கள் கடலில் வலை வீசிக் கொண்டிருந்தனர். ஏனெனில், அவர்கள் மீன் பிடிப்போர். அவர்களைப் பார்த்து, "என் பின்னே வாருங்கள்; உங்களை, மனிதரைப் பிடிப்போராக்குவேன்" என்றுர். உடனே அவர்களும் வலைகளை விட்டு விட்டு, அவரைப் பின் சென்றனர்.

அங்கிருந்து அப்பால் சென்று, செபெதேயுவின் மகன் யாகப்பரும், அவர் சகோதரர் அருளப்பருமாகிய வேறு இரு சகோதரர், தம் தந்தை செபெதேயுவோடு படகில் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அவர்களை அழைத்தார். உடனே அவர்கள் தம் படகையும் தந்தையையும் விட்டு விட்டு அவரைப் பின் சென்றனர்.

யேசு கலிலேயா எங்கும் சுற்றி, அவர்களுடைய செபக்கூடங்களில் போதித்து விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து,மக்களிடையே எல்லா நோயையும் பிணியையும் குணமாக்கி வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✣ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:12-17

பக்கம் 231 ✣ வரை

---

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***நினிவே மக்கள் தங்கள் தீநெறியைவிட்டு மனந்திரும்பினர்.***

இறைவாக்கினர் யோனாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 3:1-5. 10

ஆண்டவர் யோனாசுக்குக் கூறினார்: "நீ புறப்பட்டு நினிவே என்னும் மாநகருக்குப் போய் நாம் உனக்குச் சொல்லும் தூதுரையை அவர்களுக்கு அறிவி" என்றார். யோனாஸ் உடனே புறப்பட்டு ஆண்டவருடைய வார்த்தையின்படியே நினிவே நகருக்குப் போனார். நினிவே ஒரு மாபெரும் நகரம்; அதன் ஒரு முனையிலிருந்து எதிர்முனைக்குச் செல்ல மூன்று நாளாகும். யோனாஸ் நகருக்குள் நுழைந்து, ஒருநாள் பயணம் செய்து, உரத்த குரலில், "இன்னும் நாற்பது நாட்களில் நினிவே வீழ்த்தப்படும்" என்று அறிவித்தார்.

நினிவே மக்கள் கடவுளை விசுவசித்தனர்; உடனே, உண்ணாநோன்பு இருக்கும்படி அறிக்கையிட்டனர்; பெரியோர்முதல் சிறியோர் ஈறாக அனைவரும் கோணியுடுத்திக் கொண்டனர்.

அவர்கள் செய்ததைக் கடவுள் கண்டு, அவர்கள் தங்கள் தீநெறியை விட்டுத் திரும்பியதை அறிந்தார்; தாம் அவர்களுக்குச் செய்யப்போவதாகச் சொல்லியிருந்த தீங்கைக் குறித்துக் கடவுள் தம் மனத்தை மாற்றிக் கொண்டு, அதைச் செய்யாமல் விட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 24 : 4-5ab. 6-7bc. 8-9 (பல்லவி : 4a)*

பல்லவி: ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்.

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்; உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.
5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்: என் மீட்பராம் இறைவன் நீரே. பல்லவி

6 ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவுகூரும்: ஆதிகாலம்முதல் உள்ள உம் அருளன்பை மறவாதேயும்.
7 உம் அருள் அன்பிற்கேற்ப என்னை நினைவுகூரும், உமது அருள் நன்மையின் பொருட்டு என்னை மறவாதேயும். பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்; ஆகவே பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.
9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார், எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இவ்வுலகத்தின் அமைப்பு கடந்து செல்கிறது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 7 : 29-31

சகோதரர்களே, நான் சொல்வது இதுதான்: இனியுள்ள காலம் குறுகியதே. இனி மனைவி உள்ளவர்களும், மனைவி இல்லாதவர்களைப் போல் இருக்கட்டும். துயருறுவோர் துயரத்திலேயே ஆழ்ந்தவர்கள்

போலவும், மகிழ்ச்சியுறுவோர் மகிழ்ச்சியிலேயே மயங்கினவர்கள் போலவும் இருத்தலாகாது. பொருளை விலைக்கு வாங்குவோர், அதைத் தமக் கென்றே வைத்துக்கொள்ளாமலும், இவ்வுலகப் பயனைத் துய்ப்போர், அதிலே ஆழ்ந்து விடாமலும் இருக்கட்டும்.

ஏனெனில், இவ்வுலகத்தின் அமைப்பு கடந்து செல்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — மாற்கு 1:15

**அல்லேலூயா. கடவுளரசு நெருங்கி விட்டது.**
**நற்செய்தியை நம்புங்கள். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

***மனந்திரும்பி, நற்செய்தியை நம்புங்கள்.***

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் — 1:14-20

பக்கம் 173 காண்க

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***திருச்சட்ட நூலை வாசித்தார்கள்; மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்துகொண்டனர்.***

நெகேமியா ஆகமத்திலிருந்து வாசகம் — 8:2-4a, 5-6, 8-10

அந்நாட்களில்:

ஏழாம் மாதம் முதல்நாள், குரு எஸ்ரா திருச்சட்ட நூலை, புரிந்து கொள்ளும் திறமை படைத்த ஆண் பெண் அடங்கிய சபை முன்னிலையில் கொண்டுவந்தார். தண்ணீர் வாயிலுக்கு முன் இருந்த வளாகத்தில் காலை முதல் நண்பகல்வரை அவர்கள் முன் அதை அவர் வாசித்தார். எல்லா மக்களும் திருச்சட்ட நூலுக்குக் கவனமாய்ச் செவிமடுத்தனர்.

திருச்சட்ட வல்லுநர் எஸ்ராவோ பேசுவதற்கென்று மரத்தால் செய்யப்பட்ட ஒரு மேடையின்மேல் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது எஸ்ரா எல்லா மக்களையும் பார்க்கும் அளவுக்கு உயரமான இடத்தில் நின்றுகொண்டு அவர்கள் முன்னிலையில் நூலைத் திறந்தார். உடனே மக்கள் எல்லாரும் எழுந்து நின்றனர். அப்பொழுது எஸ்ரா ஆண்டவராகிய மகத்தான கடவுளைத் துதித்து வாழ்த்தவே, மக்கள் எல்லாரும் தங்கள் கைகளை உயர்த்தி, “ஆமென், ஆமென்” என்று சொல்லிப் பணிந்து, முகங்குப்புற விழுந்து கடவுளைத் தொழுதார்கள்.

அவர்கள் மக்களுக்குப் புரியும்படி தெளிவாகவும் பொருளோடும் கடவுளின் திருச்சட்ட நூலை வாசித்தார்கள். ஆதலால் மக்களும் வாசிக்கப் பட்டதன் பொருளைப் புரிந்துகொண்டனர். ஆளுநர் நெகேமியாவும், குருவும் மறைநூல் அறிஞருமான எஸ்ராவும், லேவியர்களும் மக்கள் அனைவர்க்கும் திருச்சட்டத்தின் பொருளை விளக்கிக் கூறினர். “கடவுளான ஆண்டவரின் புனித நாள் இதுவே! எனவே, நீங்கள் அழுது புலம்ப வேண்டாம்” என்றனர். ஏனெனில் எல்லா மக்களும் திருச்சட்ட நூலை வாசிக்கக் கேட்டுக் கண்ணீர்விட்டு அழுதுகொண்டேயிருந்தனர். மீண்டும் எஸ்ரா அவர்களைப் பார்த்து, “நீங்கள் போய்க் கொழுத்தவற்றை உண்டு இனிய திராட்சை இரசத்தைக் குடித்து, உண்ண உணவு இல்லாதவர் களுக்கு உணவு அனுப்பி வையுங்கள். ஏனெனில், ஆண்டவரின் புனித நாள் இதுவே! எனவே வருந்த வேண்டாம். ஆண்டவரில் மகிழ்வதிலேயே உங்களுடைய ஆற்றல் அடங்கியிருக்கிறது” என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங் 18 : 7. 8. 9. 14 (பல்லவி : அரு. 6 : 63b)*

பல்லவி : **ஆண்டவரே, உம்முடைய சொற்கள்**
**ஆவியும் உயிருமாகும்.**

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது: ஆண்டவருடைய கட்டளை உறுதியானது, எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை; உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது. பல்லவி

9 ஆண்டவர் மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது;
ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம்
நீதியானவை. பல்லவி

14 எனக்கு அடைக்கலமும் என் மீட்பருமான ஆண்டவரே, உம் முன்னிலையில்
என் வாய்மொழியும், என் இதயச் சிந்தனையும் உமக்கு உகந்தனவாகட்டும்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

***நீங்கள் கிறிஸ்துவின் உடல்; ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 12 : 12-30

சகோதரர்களே :

உடல் ஒன்று, உறுப்புகள் பல; உடலின் உறுப்புகள் பலவகையாயினும், ஒரே உடலாய் உள்ளன : கிறிஸ்துவும் அவ்வாறே என்க. ஏனெனில், நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும் உரிமைகுடிமக்களாயினும், அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்; ஒரே ஆவியால் தாகந்தணியப்பெற்றோம்.

உடல் ஒரே உறுப்பன்று; பல உறுப்புகளால் ஆனது. 'நான் கையல்லேன் ஆகவே உடலைச் சேர்ந்தவன் அல்லேன்' என்று கால் சொன்னால், அதனால் அது உடலைச் சேராதது ஆகிவிடுமா? 'நான் கண்ணல்லேன், ஆகவே உடலைச் சேர்ந்தவன் அல்லேன்' என்று காது சொன்னால், அதனால் உடலைச் சேராதது ஆகிவிடுமா? முழு உடலும் கண்ணாயிருந்தால் கேட்பது எப்படி? முழு உடலும் காதாயிருந்தால் முகர்வது எப்படி?

ஆனால், கடவுள் ஒவ்வொரு உறுப்பையும் தாம் விரும்பியவாறு உடலில் அமைத்தார். அவையெல்லாம் ஒரே உறுப்பாய் இருப்பின், உடல் என்பது ஒன்று இருக்குமா? உண்மையில் உறுப்புகள் பல உள்ளன; உடலோ ஒன்றுதான். கண் கையைப் பார்த்து, " நீ எனக்குத் தேவையில்லை " என்றோ, தலை கால்களைப்பார்த்து, " நீங்கள் எனக்குத் தேவையில்லை " என்றோ சொல்ல இயலாது.

அதுமட்டுமன்று; வலுவற்றவையாய்த் தோன்றும் உறுப்புகளே மிகத் தேவையானவை; மதிப்புக் குறைவானவை என நாம் கருதும் உடலுறுப்புகளுக்கே மிகுதியான மதிப்பளித்துக் காக்கிறோம்; இழிவான உறுப்புகளே மிகுந்த மரியாதை பெறுகின்றன. மாண்புள்ளவற்றுக்கு

அது தேவையில்லை; உடலை உருவாக்கியபோது கடவுள் மதிப்பில்லாத வற்றுக்குச் சிறப்பான மதிப்புத் தந்தார். உடலில் பிளவு ஏற்படாமல் ஒவ்வொன்றும் மற்ற உறுப்புகள் மேல் அக்கறை காட்ட வேண்டும் என்றே இப்படிச் செய்தார். உறுப்பு ஒன்று துன்புற்றால், எல்லா உறுப்பு களும் அதனுடன் சேர்ந்து துன்புறும்; உறுப்பு ஒன்று மாண்புற்றால் எல்லா உறுப்புகளும் சேர்ந்து இன்புறும்.

நீங்களோ கிறிஸ்துவின் உடல்; ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு. அவ்வாறே திருச்சபையிலும் கடவுள், முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது இறைவாக்கினரையும், மூன்றாவது போதகரையும் ஏற்படுத்தினார்; பின்னர் புதுமை செய்யும் ஆற்றல், பின்பு நோய்களைக் குணமாக்கும் வரம், பிறர் சேவை, ஆளும் வரம், பல்வகைப் பரவசப்பேச்சு, இவையுள்ளன. அனைவருமா அப்போஸ்தலர்? எல்லாருமா இறைவாக்கினர்? யாவரும் போதகரோ? எல்லாரும் புதுமை செய்யும் ஆற்றல் வாய்ந்தவரோ? எல்லாரும் நோய்களைக் குணமாக்கும் வரமுடையவரோ? எல்லாருமா பரவசப் பேச்சு பேசுகிறார்கள்? எல்லாருமா விளக்கம் சொல்லுகிறார்கள்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 12:12-14. 27

சகோதரர்களே:

உடல் ஒன்று, உறுப்புகள் பல; உடலின் உறுப்புகள் பலவகையா யினும், ஒரே உடலாய் உள்ளன; கிறிஸ்துவும் அவ்வாறே என்க. ஏனெனில் நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும் உரிமைக் குடிமக்களாயினும் அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்; ஒரே ஆவியால் தாகந்தணியப் பெற்றோம். உடல் ஒரே உறுப்பன்று; பல உறுப்புகளால் ஆனது. நீங்களோ கிறிஸ்துவின் உடல்; ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா ‍‍‍ லூக். 4:18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
1:1-4; 4:14-21

மாண்புமிக்க தெயோப்பிலுவே, நம்மிடையே நிறைவேறிய நிகழ்ச்சிகளைத் தொடக்கமுதல் கண்கூடாகக் கண்டவர்கள் தேவ வார்த்தையின் பணியாளராகி நம்மிடம் ஒப்படைத்துள்ளனர். ஒப்படைத்தவாறே அவற்றைப் பலர் நிரல்பட எழுத முயன்றுள்ளனர்.

அப்படியே யானும் யாவற்றையும் நுணுகி ஆய்ந்தறிந்து, நீர் கேட்டு அறிந்தது உறுதி எனத் தெளியும் பொருட்டு முறையாக வரைவது நலமெனக் கண்டேன்.

அக்காலத்தில் :

ஆவியானவரின் வல்லமை பூண்டவராய் யேசு கலிலேயாவுக்குத் திரும்பினார். அவரைப்பற்றிய பேச்சு சுற்றுப்புறம் எங்கும் பரவியது. யூதர்களுடைய செபக்கூடங்களில் அவர் போதித்து வந்தார். யாவரும் அவரை மகிமைப்படுத்தினர்.

அவர் தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்திற்கு வந்தார் வழக்கப்படி ஓய்வுநாளன்று செபக்கூடத்திற்கு வந்து வாசிக்க எழுந்தார். இசையாஸ் எழுதிய இறைவாக்குகளின் ஏட்டுச் சுருளை அவரிடம் கொடுத்தனர். அதை விரித்ததும் பின்வரும் பகுதியைக் கண்டார்.

'ஆண்டவருடைய ஆவி என்மேலே, ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார்'.

பின்னர் ஏட்டைச் சுருட்டிப் பணிவிடைக்காரனிடம் கொடுத்து விட்டு அமர்ந்தார். அப்போது செபக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள்

அனைத்தும் அவரையே நோக்கிய வண்ணமாயிருந்தன. அவர் "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்று கூறலானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**பாவங்களைப் போக்க ஒரே முறையில் எக்காலத்திற்குமே யேசு தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்; தமக்காகக் காத்திருப்பவர்களுக்கு மீண்டும் தோன்றுவார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *9:15.24–28*

சகோதரர்களே :

முந்தின உடன்படிக்கையின் காலத்தில் செய்யப்பட்ட குற்றங்களிலிருந்து மக்களை விடுவிக்கக் கிறிஸ்து இறந்தார். இங்ஙனம் சாவொன்று நிகழ்ந்துள்ளதால், அழைக்கப்பட்டவர்கள் புதிய உடன்படிக்கையால் வாக்களிக்கப்பட்ட முடிவில்லா உரிமையைப் பெற முடிந்தது. இவ்வகையில் அவர் புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராக இருக்கிறார்.

உள்ளபடி கிறிஸ்து நுழைந்தது மனிதரின் கையால் ஆகிய தூயகம் அன்று; அது உண்மையான தூயகத்தின் முன்அடையாளமே. நமக்காகப் பேசும்படி கடவுளின் திருமுன் நிற்பதற்கு அவர் வானகத்துக்குள்ளேயே நுழைந்து விட்டார். தமதல்லாத இரத்தத்தை கையிலேந்தி ஆண்டுதோறும் தூயகத்திற்குள் நுழையும் தலைமைக் குருவைப்போல், கிறிஸ்து செய்யவில்லை. அவர் வானகத்திற்குள் நுழைந்தது தம்மைத் திரும்பத் திரும்ப ஒப்புக் கொடுப்பதற்காக அன்று. அப்படி ஒப்புக் கொடுப்பதாய் இருந்தால் படைப்புக் காலந்தொட்டு திரும்பத் திரும்பப் பாடுபட வேண்டியிருக்கும். அதற்கு மாறாக, உலகின் இறுதிக் காலமான இப்போது தம்மைத் தாமே பலியிட்டு, பாவங்களைத் தொலைக்க ஒரே முறை உலகில் தோன்றினார்.

மனிதர் ஒரே முறை சாவுக்கு உட்படுகின்றனர்; பின்னர் தீர்ப்பு வருகிறது. அவ்வாறே கிறிஸ்துவும் பல்லோர் பாவங்களைப் போக்கும் பொருட்டு ஒரே முறையில் எக்காலத்திற்குமே தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். மீண்டும் தோன்றுவார். அப்போது பாவத்திற்குப் பரிகாரம் செய்வதற்காக அன்று, தமக்காகக் காத்திருப்பவர்களுக்கு மீட்பு அளிக்கும் பொருட்டே தோன்றுவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 97: 1.2-3ab. 3cd-4. 5-6 (பல்லவி: 1a)*

பல்லவி: ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினர்: மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.

3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த் தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

4 மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன. வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்; அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ்பாடுங்கள். பல்லவி

5 யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ்பாடுங்கள்: வீணையும் யாழும் இசைத்துப் பாடுங்கள்.

6 எக்காளமும் கொம்பும் ஊதி, ஆண்டவராகிய அரசரின் திருமுன் களிகூருங்கள். பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

நம் மக்கள் இஸ்ராயேலை நீ பராமரிப்பாய்.

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 5:1-7. 10

அந்நாட்களில் :

இஸ்ராயேலின் கோத்திரங்கள் எல்லாம் எபிரோனில் இருந்த தாவீதிடம் வந்து, "இதோ நாங்கள் உமது எலும்பும் தசையுமானவர்கள்; மேலும், நேற்றும் முந்தாநாளும் சவுல் எங்களுக்கு அரசனாய் இருந்தபோது, நீர் இஸ்ராயேலை நடத்திச் செல்பவராக இருந்தீரே; அன்றியும், ஆண்டவர் உம்மை நோக்கி, 'நம் மக்கள் இஸ்ராயேலை நீ பராமரித்து இஸ்ராயேலுக்குத் தலைவனாய் இருப்பாய்' என்று உம்மிடம் திருவுளம் பற்றினாரே!" என்றனர்.

இஸ்ராயேலின் முதியவர்களும் எபிரோனில் இருந்த அரசரிடம் வந்தார்கள். தாவீது அரசர் எபிரோனில் ஆண்டவர் திருமுன் அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்ட பின்பு, அவர்கள் தாவீதை இஸ்ராயேலின் அரசராக அபிஷேகம் செய்தார்கள்.

தாவீது அரச பதவி ஏற்றபோது அவருக்கு வயது முப்பது. அவர் நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவர் எபிரோனில் யூதாவை ஏழரை ஆண்டும், யெருசலேமில் இஸ்ராயேல் முழுவதையும் யூதாவையும் முப்பத்துமூன்று ஆண்டும் அரசாண்டார்.

அரசரும் அவருடன் இருந்த மனிதர் அனைவரும் எழுந்து நாட்டில் குடியிருந்த எபிசேயர்மேல் போரிடுவதற்கு யெருசலேமுக்குப் போனார்கள். எபிசேயர் தாவீதிடம், "நீர் குருடர்களையும் முடவர்களையும் அப்புறப் படுத்தாவிட்டால் இங்கு உம்மால் நுழைய முடியாது" என்று கூறித் தாவீது நகருள் நுழைவதைத் தடுத்தனர்.

ஆயினும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தார். அவர் நாளுக்கு நாள் சீரும் சிறப்பும் பெற்றார். சேனைகளின் ஆண்டவராகிய கடவுள் அவரோடு இருந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 88:19. 20-21. 24-25 (பல்லவி: 24a)

என் சொல்லுறுதியும் என் அருளும் அவரோடிருக்கும்.

19 ஆதியில் உம் புனிதர்களுக்குக் காட்சி தந்து நீர் சொன்னது: 'வல்லவனுக்கு மணிமுடி சூட்டினேன்; மக்களினின்று ஒருவனை நான் தேர்ந்தெடுத்து மகிமைப்படுத்தினேன். பல்லவி

20 'என் ஊழியன் தாவீதை நான் தேர்ந்தெடுத்தேன்; புனித தைலத்தால் அவரை அபிஷேகம் செய்தேன்.
21 'அதனால் என் கைவன்மை என்றும் அவருக்குத் துணை நிற்கச் செய்வேன்: என் புய பலம் அவரை உறுதிப்படுத்தச் செய்வேன். பல்லவி

24 'என் சொல்லுறுதியும் என் அருளும் அவரோடிருக்கும்: என் பெயரினால் அவரது வலிமை ஓங்கும்.
25 'அவரது செங்கோல் ஓங்கச் செய்வேன்· ஆறுகளின்மேல் அவரது ஆட்சியைப் பரவச் செய்வேன்.' பல்லவி

அல்லேலூயா 2 திமோ. 1:10b

அல்லேலூயா. நம் மீட்பராகிய யேசுகிறிஸ்து சாவை அழித்து, வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சாத்தான் தொலைவான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3:22-30

அக்காலத்தில் :

யெருசலேமிலிருந்து வந்த மறைநூல் அறிஞர் 'இவரைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறதென்றும், பேய்த் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறார்' என்றும் சொல்லி வந்தனர்.

ஆதலால் அவர் அவர்களை அழைத்து, அவர்களுக்கு உவமையாகச் சொன்னதாவது: "சாத்தான் சாத்தானை எப்படி ஓட்டமுடியும்? ஓர் அரசு தனக்கு எதிராகத் தானே பிரிந்தால் அவ்வரசு நிலைக்க முடியாது. ஒரு வீடு தனக்கு எதிராகத் தானே பிரிந்தால், அவ்வீடு நிலைக்க முடியாது. சாத்தான் தனக்கெதிராகத் தானே எழுந்தால், பிரிவுபட்டு நிற்க முடியாமல் தொலைவான். முதலில் வலியவனைக் கட்டினாலன்றி அவ்

வலியவனுடைய வீட்டினுள் நுழைந்து அவனுடைய பொருள்களைக் கொள்ளையிட எவனாலும் முடியாது. கட்டின பின்புதான் அவனுடைய வீட்டைக் கொள்ளையிடுவான்.''

''உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மக்களுக்கு எல்லாம் மன்னிக்கப்படும். பாவங்களும் அவர்கள் சொல்லும் தெய்வ நிந்தனைகளும் மன்னிக்கப்படும், ஆனால், பரிசுத்த ஆவியை நிந்திப்பவன் எவனும் ஒருபோதும் மன்னிப்புப் பெறான், என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவான்.''

''அசுத்த ஆவி அவரைப் பிடித்திருக்கிறது'' என்று அவர்கள் சொல்லிவந்ததால் யேசு இவ்வாறு கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## செவ்வாய்

### முதல் ஆண்டு

#### முதல் வாசகம்

***இதோ, இறைவா உமது திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன்.***

*10:1 10*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

*சகோதரர்களே :*

வரப்போகும் நன்மைகளின் உண்மை உருவைத் திருச்சட்டம எடுத்துக்காட்டவில்லை. அவற்றின் நிழலாக மட்டுமே உள்ளது. அதனால் தான், ஆண்டுதோறும் இடைவிடாமல் ஒப்புக்கொடுத்துவரும் அதே பலிகளால் இறைவனை அணுகி வருபவர்களை நிறைவுள்ளவர்களாக்கத் திருச்சட்டத்திற்கு வலிமையில்லை. இருந்திருந்தால், பலிகளை ஒப்புக் கொடுப்பது நின்றிருக்குமன்றோ ? ஏனெனில், பலிகளால் வழிபடுபவர்கள் ஒரே முறையில் எக்காலத்திற்குமே தூய்மை அடைந்தவர்களாய், பாவத்தினின்று விடுபட்ட மனச்சாட்சியைப் பெற்றிருப்பார்களன்றோ ? மாறாக, அந்தப் பலிகளினாலே பாவம் நீங்கவில்லை என்பதுதான் ஆண்டுதோறும் நினைவூட்டப்படுகிறது. காளைமாடுகள், ஆட்டுக்கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்க முடியாது.

அதனால்தான் உலகிற்கு வரும்போது கிறிஸ்து : "பலியோ காணிக்கையோ, நீர் விரும்பவில்லை. ஆனால், எனக்கு ஓர் உடலை அமைத்தளித்தீர். தகனப் பலிகளோ, பாவப் பரிகாரப் பலிகளோ உமக்கு உகந்தவையாய் இல்லை. அப்பொழுது நான் கூறியது : இதோ ! இறைவா, உம் திருவுளத்தை நிறைவேற்ற வந்துவிட்டேன், என்னைக் குறித்தே மறைநூற் சுருளில் எழுதியுள்ளது" என்கிறார்.

திருச்சட்டப்படி ஒப்புக் கொடுக்கப்பட்டபோதிலும், பலிகள், காணிக்கைகள், தகனப் பலிகள், பாவப் பரிகாரப் பலிகள் இவற்றையெல்லாம் நீர் விரும்பவில்லை, இவை உமக்கு உகந்தவையாய் இல்லை என்று முதலில் கூறுகிறார். பின்பு, 'இதோ, உமது திருவுளத்தை நிறைவேற்ற வந்து விட்டேன்' என்கிறார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை எடுத்துவிடுகிறார்.

இந்தத் திருவுளத்தால்தான், ஒரே முறையில் எக்காலத்திற்குமே ஒப்புக் கொடுக்கப்பட்ட யேசுகிறிஸ்துவுடைய உடலின் பலியால் நாம் பரிசுத்தராக்கப்பட்டோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 39:1.3*ad. *6-7*a. *9-10*. (பல்லவி: 7a.8a)

இதோ வருகிறேன் ஆண்டவரே, உம் திருவுளப்படி நடப்பதே எனக்கின்பம்.

1 நம்பினேன், ஆண்டவரை நம்பினேன் : அவர் என் பக்கமாய்க் குனிந்து, என் கூக்குரலைக் கேட்டருளினார்.

3 புதியதோர் பாடலை, நம் இறைவனைப் புகழும் பாடல் ஒன்றை என் நாவினின்று எழச் செய்தார். பல்லவி

6 பலியும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை; ஆனால் என் செவிகளை நீர் திறந்துவிட்டீர் : தகனப் பலியும், பாவம் போக்கும் பலிப் பொருளும் நீர் கேட்கவில்லை.

7 அப்போது நான் சொன்னது : "இதோ வருகிறேன்." பல்லவி

9 மக்கட் பேரவையில் உம் நீதியை வெளிப்படுத்தினேன் : இதோ ! நான் என் வாயை மூடிக் கொண்டிருக்கவில்லை; ஆண்டவரே, இதை நீர் அறிவீர். பல்லவி

10 உமது நீதியின் தன்மையை என் இதயத்துள் ஒளித்து வைக்கவில்லை; உமது சொல்லுறுதியைப் பற்றியும், உமது அருள் துணையைப் பற்றியும் வெளிப் படையாய்ப் பேசினேன். உமது அருளைப் பற்றியும், உமது வாக்குறுதியைப் பற்றியும் மக்கட் பேரவையில் பேசாமல் ஒளித்து வைக்கவில்லை.

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

***தாவீதும் இஸ்ராயேல் மக்கள் அனைவரும் ஆண்டவருடைய உடன்படிக்கைப் பேழையை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு கொண்டுவந்தனர்.***

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்
*6:12b-15. 17-19*

*அந்நாட்களில் :*

தாவீது போய் ஒபேதெதோமின் வீட்டிலிருந்து கடவுட் பேழையை மகிழ்ச்சியுடன் தாவீதின் நகருக்குக் கொண்டு வந்தார். தாவீதுடன் ஏழு பாடகர்க் குழுக்களும், பலிக்கு ஓர் இளங்கன்றும் இருந்தன. ஆண்டவருடைய பேழையைத் தூக்கிச் சென்றவர்கள் ஆறு காலடி தூரம் சென்ற பின் அவர் ஒரு மாட்டையும் ஓர் ஆட்டுக் கடாயையும் பலியிடுவார். தாவீது சணல் நூலால் நெய்யப்பட்ட எபோதை அணிந்துகொண்டு முழு வலிமையோடும் ஆண்டவர் திருமுன் நடனமாடுவார். அவ்விதமே தாவீதும் இஸ்ராயேல் குடும்பத்தார் அனைவரும் ஆண்டவருடைய உடன் படிக்கைப் பேழையை மகிழ்ச்சி ஆரவாரத்தோடும் எக்காளத் தொனி யோடும் கொண்டு வந்தனர்.

பிறகு அவர்கள் கடவுட் பேழையை உள்ளே கொண்டுவந்து, தாவீது அதற்கெனத் தயாரித்திருந்த கூடாரத்தின் நடுவே வைத்தார்கள். அப்பொழுது தாவீது ஆண்டவர் திருமுன் தகனப் பலிகளையும் சமாதானப் பலிகளையும் செலுத்தினார். அவர் தகனப் பலிகளையும் சமாதானப் பலிகளையும் செலுத்தியபின், சேனைகளின் ஆண்டவருடைய பெயரால் மக்களை ஆசீர்வதித்து, பெரும் திரளாய்க் கூடியிருந்த இஸ்ராயேலின் ஆண், பெண் அனைவருக்கும் ஆளுக்கொரு மாட்டுக்கறித்துண்டும் அப்பமும் எண்ணெயில் பொரித்த மிருதுவான மாவுமாகப் பகிர்ந்து கொடுத்தார். பிறகு மக்கள் அனைவரும் தத்தம் இல்லம் ஏகினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 23:7.8.9.10 (பல்லவி: 8a காண்)

பல்லவி: **மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ? ஆண்டவரே இவர்.**

7 வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்; பழங்காலக் கதவுகளே, உயர்ந்து நில்லுங்கள்: மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்! பல்லவி

8 மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?' 'வீரமும் வலிமையும் கொண்ட ஆண்டவரே இவர்: போரில் வல்லவரான ஆண்டவரே இவர்!' பல்லவி

10 மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?' 'சேனைகளின் ஆண்டவரே இவர்: மாட்சிமிகு மன்னர் இவரே!' பல்லவி

அல்லேலூயா மத்.11:25 காண்

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி; ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளின் விருப்பப்படி நடப்பவன் எவனோ அவனே என் சகோதரனும் சகோதரியும் தாயுமாவான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3:31-35

அக்காலத்தில்:

யேசுவின் தாயும் சகோதரரும் வந்து வெளியே நின்று கொண்டு, அவரை வரச் சொல்லி ஆள் அனுப்பினர். அவரைச் சுற்றி மக்கள் கூட்டமாய் உட்கார்ந்திருந்தனர். "இதோ! உம் தாயும் சகோதரரும் உம்மைத் தேடிக் கொண்டு வந்து வெளியே இருக்கின்றனர்" என்று அவரிடம் சொன்னார்கள்.

அதற்கு அவர், "என் தாயும் சகோதரரும் யார்?" என்று கேட்டு, தம்மைச் சூழ்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து, "இதோ! என் தாயும் சகோதரரும். கடவுளின் விருப்பப்படி நடக்கிறவன் எவனோ அவனே என் சகோதரனும் சகோதரியும் தாயுமாவான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*தாம் பரிசுத்தமாக்கியவர்களை என்றென்றைக்கும் நிறைவுள்ளவர்களாக்கினார்.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *10:11-18*

ஒவ்வொரு குருவும் நாடோறும் இறை பணி ஆற்றுகையில், கையில் திரும்பத் திரும்ப அதே பலிகளை ஒப்புக் கொடுத்து வருகிறார். அவையோ பாவங்களை ஒருபோதும் போக்கிவிட இயலாதவை. ஆனால், இவர் என்றென்றைக்கும் பயன்தரும் ஒரு பலியைப் பாவங்களுக்காக ஒப்புக் கொடுத்துக் கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார். அங்கே, 'தம் பகைவர் தமக்குக் கால்மணையாக்கப்படும் வரை' காத்திருக்கிறார். தாம் பரிசுத்தராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவர்களாக்கினார்.

இதைப் பற்றிப் பரிசுத்த ஆவியும் நமக்குச் சாட்சியம் அளிக்கின்றார். எவ்வாறெனில், "ஆண்டவர் கூறுகிறார்: அந்நாட்களுக்குப் பின் அவர்களோடு நான் செய்து கொள்ளும் உடன்படிக்கை இதுவே: என் சட்டங்களை அவர்களுடைய உள்ளத்தில் பதிப்பிப்பேன் அவர்களுடைய மனதில் அவற்றைப் பொறித்து வைப்பேன்" என்று சொன்ன பின் "அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையேன்" என்று தொடர்ந்து சொல்லுகிறார்.

இவற்றிற்கு மன்னிப்புக் கிடைத்தபின், பாவப் பரிகார பலிக்கு இடமேயில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 109:1.2.3.4 (பல்லவி : 4a)

பல்லவி: **மெல்கிசெதேக் முறைப்படி நீர், என்றென்றும் குருவே.**

1 ஆண்டவர் என் ஆண்டவரிடம் சொன்னது: "நான் என் பகைவரை உமக்குக் கால் மணையாக்கும்வரை நீர் என் வலப் பக்கத்தில் அமரும்."
பல்லவி

2 வலிமைமிக்க உமது செங்கோலை ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்: உம் எதிரிகளிடையே அதிகாரம் செலுத்தும்.
பல்லவி

3 புனிதம் சிறப்புற்றோங்க, நீர் உதித்த நாளிலே ஆட்சியுரிமையும் உம்மோடு உதித்தது: விடிவெள்ளி தோன்றுமுன் பனியைப்போல் உம்மை ஈன்றெடுத்தேன்.
பல்லவி

4 "மெல்கிசெதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே" என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்: சொன்ன சொல்லை மாற்றமாட்டார்.
பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**உன் மகனை உனக்குப்பின் நாம் உயர்த்தி, அவனது அரசை நிலைநாட்டுவோம்.**

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 7:4-17

அந்நாட்களில் :

ஆண்டவருடைய வார்த்தை நாத்தானுக்கு வந்தது. "நீ போய் நம் ஊழியன் தாவீதை நோக்கி, 'ஆண்டவர் சொல்லுகிறதாவது: நாம் வாழ்வதற்கு ஒரு வீட்டை நீ கட்டமாட்டாயோ? இஸ்ராயேல் மக்களை எகிப்திலிருந்து மீட்ட நாள் முதல் இன்றுவரை நாம் வீட்டில் தங்காது கூடாரத்திலும் பேழையிலும் அன்றோ உலாவி வந்தோம்? இஸ்ராயேல் மக்கள் எல்லாரோடும் நாம் பயணம் செய்து வந்தோம் அன்றோ? நம்முடைய மக்களாகிய இஸ்ராயேலை வழி நடத்த வேண்டும் என்று நாம் கட்டளையிட்டபொழுது, எவ்விடத்திலேனும் நம் கோத்திரங்களில் ஒன்றைப் பார்த்து, "நீங்கள் நமக்குக் கேதுரு மரங்களால் ஓர் ஆலயத்தைக் கட்டவில்லை?" என்று எப்போதாவது நாம் சொன்னதுண்டா?

ஆகையால், இப்போது நீ போய் நம் ஊழியன் தாவீதைப் பார்த்து, 'சேனைகளின் ஆண்டவர் சொல்லுகிறதாவது: நீ ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் நாம் உன்னை அழைத்து நம் மக்கள் இஸ்ராயேலுக்குத் தலைவனாய் இருக்கச் செய்தோம். நீ சென்ற இடங்களில் எல்லாம் நாம் உன்னோடு இருந்து, உன் எதிரிகளை எல்லாம் உனக்கு முன்பாக அழித்துப் பூமியிலிருக்கிற பெரியோர்களின் பெயருக்கொத்த சிறந்த பெயரை உனக்குத் தந்தோம். நம் மக்கள் இஸ்ராயேலை ஓர் இடத்தில் நிலை நிறுத்துவோம் அவர்களை அவ்விடத்தில் உறுதிப்படுத்துவோம். அவர்கள் அங்குக் குடியேறி முன்போல் அலைக்கழிக்கப்படமாட்டார்கள்; நம் மக்கள் இஸ்ராயேலின்மேல் நீதிபதிகளை ஏற்படுத்தின நாள்வரை நடந்ததுபோல், அக்கிரமிகள் அவர்களை மறுபடியும் துன்பப்படுத்த மாட்டார்கள்.

உன் எதிரிகளில் யாரும் உன்னைச் சிறுமைப் படுத்தாமல் சமாதான மாய் இருக்கச் செய்வோம். மேலும் ஆண்டவரே உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்று உனக்கு அறிவிக்கிறார். பிறகு உன் வாழ்நாள் முடிந்து நீ உன் முன்னோருடன் துயில்கொள்ளும்பொழுது உனக்குப் பிறக்கும் ஒரு மகனை உனக்குப்பின் நாம் உயர்த்தி அவனது அரசை நிலைநாட்டுவோம்.

அவனே நமது பெயரால் ஓர் ஆலயத்தைக் கட்டுவான்; நாமோ அவனுடைய அரியணையை என்றும் நிலைநிறுத்துவோம். நாம் அவனுக்குத் தந்தையாக இருப்போம்; அவனும் நமக்கு மகனாக இருப்பான். அவன் ஏதாவது கொடுஞ்செயல் புரிந்தால், மனிதர்கள் பயன்படுத்தும் கோலால் நாம் அவனை அடிப்போம்; மனிதப் புதல்வருக்கேற்ற வாதையால் கண்டிப்போம். ஆயினும், இரக்கமே காட்டாது சவுலை நம் திருமுன் அழித்துவிட்டதுபோல் உன்மீதும் இரக்கம் காட்டாது இருக்கமாட்டோம்.' உன் வீடோ பிரமாணிக்கமாயிருக்கும்; உன் அரசோ என்றென்றும் உமக்கு முன்பாக இருக்கும்; உன் அரியணை என்றும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று, சொல்லச் சொன்னார்.''

நாத்தான் இவ்வார்த்தைகள் எல்லாவற்றையும், காட்சி முழுவதையும் தாவீதிடம் கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 88 : 3-4. 26-27. 28-29 (பல்லவி : 28a)

பல்லவி : என்றென்றும் என் அருளன்பை அவர்மேல் பொழிவேன்.

3 நான் தேர்ந்தெடுத்தவரோடு உடன்படிக்கை செய்துகொண்டேன். என்
ஊழியன் தாவீதுக்கு ஆணையிட்டுக் கூறியது :
4 'உன் சந்ததியை என்றென்றும் நிலைநாட்டுவேன். எல்லாத் தலைமுறை
களிலும் உன் அரியணை நிலைக்கச் செய்வேன்.' பல்லவி

26 'நீரே என் தந்தை, என் இறைவன், எனக்கு மீட்பளிக்கும் அரண் என்று
என்னை நோக்கிக் கூறுவார்.
27 'நானும் அவரை என் தலைப்பேறுக்குவேன் : மண்ணக அரசருள் மாண்பு
மிக்கவராக்குவேன். பல்லவி

28 என்றென்றும் என் அருளன்பை அவர்மேல் பொழிவேன் : அவரோடு
நான் செய்த உடன்படிக்கை நிலைத்திருக்கும்.
29 'அவரது சந்ததி என்றென்றும் வாழச்செய்வேன் ; அவரது அரியணை
வானங்கள்போல் நீடிக்கச் செய்வேன். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா, கடவுளின் வார்த்தையே விதை :
அதை விதைப்பவர் கிறிஸ்துவே :
அவரைக் கண்டடைந்தவனே
என்றென்றும் நிலைத்திருப்பான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விதைப்பவன் விதைக்கச் சென்றான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4 : 1-20

அக்காலத்தில் :

மீண்டும் யேசு கடலோரத்தில் போதிக்கத் தொடங்கினார். மாபெருங் கூட்டமொன்று அவரை நெருக்கவே, அவர் படகிலேறிக் கடலிலிருக்க, கூட்டமனைத்தும் கடலோரமாய்க் கரையிலிருந்தது. அவர் அவர்களுக்கு உவமைகளால் பற்பல போதிக்கலானார். போதிக்கையில் சொன்னதாவது :

"கேளுங்கள்: இதோ, விதைப்பவன் விதைக்கச் சென்றான். விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரமாய் விழவே, பறவைகள், வந்து அவற்றைத் தின்றுவிட்டன. சில, அதிக மண்ணில்லாத பாறை நிலத்தில் விழுந்தன. அடி மண்ணில்லாததால் உடனே முளைத்தன. வெயில் ஏறியதும் தீய்ந்து, வேரில்லாமையால் காய்ந்து போயின. சில, முட்செடிகள் நடுவில் விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெரித்துவிடவே அவை பலன் கொடுக்கவில்லை. சில, நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து ஓங்கி வளர்ந்து ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுத்தன." மேலும், "கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்" என்றார்.

அவர் தனித்திருக்கையில் பன்னிருவரும், அவரைச் சூழ இருந்தவர்களும் உவமைகளைப்பற்றி வினவினர். அவர் அவர்களை நோக்கி: "கடவுளது அரசின் மறை பொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. புறத்தே இருப்பவர்களுக்கோ எல்லாம் உவமைகளாயிருக்கின்றன. எதற்கெனில், ஒருவேளை அவர்கள் மனந்திரும்பி மன்னிப்புப் பெறுதபடி, 'பார்த்துப் பார்த்தும் காணமலும், கேட்டுக் கேட்டும் உணராமலும் இருக்கவே'" என்றார்.

மேலும் அவர்களை நோக்கி, "இவ்வுவமை உங்களுக்கு விளங்கவில்லையா? பின் எப்படி எல்லா உவமைகளையும் புரிந்துகொள்வீர்கள்? விதைப்பவன் விதைப்பது தேவ வார்த்தை; வழியோரமாய் விழுந்த வார்த்தை என்னும் விதைபோல் சிலர் உள்ளனர். அவர்கள் அதைக் கேட்டவுடனே அவர்களுடைய உள்ளத்தில் விதைக்கப்பட்ட வார்த்தையைச் சாத்தான் வந்து எடுத்துவிடுகிறான். அவ்வாறே பாறை நிலத்தில் விழுந்த விதை போன்றவர்கள் ஒரு சிலர் உள்ளனர். இவர்கள் வார்த்தையைக் கேட்டவுடன் மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் இவர்கள் வேரற்றவர்கள், நிலையற்றவர்கள்; பின்பு, வார்த்தையின் பொருட்டு வேதனையுற்றாலோ துன்புறுத்தப்பட்டாலோ உடனே இடறல் படுவர். முட்செடிகள் நடுவில் விழுந்த விதை போன்றவர்கள் வேறு சிலர். இவர்கள் வார்த்தையைக் கேட்கின்றனர்; ஆனால், உலகக் கவலையும் செல்வ மாயையும் மற்ற இச்சைகளும் நுழைந்து வார்த்தையை நெரிக்க அது பயனற்றுப் போகின்றது. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதை போன்றவர்கள் சிலர். இவர்கள் வார்த்தையைக் கேட்டு ஏற்றுக் கொண்டு முப்பதும் அறுபதும் நூறுமாகப் பலன் கொடுக்கின்றனர்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***நாம் அறிக்கையிடும் நம்பிக்கையை முழு விசுவாசத்தோடு பற்றிக் கொள்வோமாக; அன்பு செய்யவும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாயிருப்போமாக.***

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *10:19-25*

சகோதரர்களே, யேசு தம் உடலாகிய திரைச்சீலையைக் கடந்து, புதியதும் உயிருள்ளதுமானதொரு பாதையை நமக்குத் திறந்து வைத்தார். அதன் வழியாய்த் தூயகம் நுழைய அவருடைய இரத்தத்தின் ஆற்றலால் நமக்குத் துணிவு உண்டு. கடவுளின் வீட்டின் மீது அதிகாரம் பெற்ற ஒரு தலைமைக் குருவும் நமக்கு இருக்கிறார். ஆகையால் கெட்ட மனச்சாட்சியிலிருந்து துப்புரவாக்கப்பட்ட உள்ளமும், தூய நீரில் கழுவப்பட்ட உடலும் கொண்டவர்களாய் நேர்மை உள்ளத்தோடும், முழு விசுவாச உறுதியோடும் அவரை அணுகிச் செல்வோமாக.

நாம் அறிக்கையிடும் நம்பிக்கையைத் தயக்கமின்றிப் பற்றிக் கொள்வோமாக. நமக்கு வாக்களித்தவர் உண்மையுள்ளவர். அன்பு செய்யவும் நற்பணிகள் புரியவும் ஒருவரை யொருவர் தூண்டி யெழுப்பக் கருத்தாயிருப்போமாக. சிலர் வழக்கமாக நம் கூட்டங்களுக்கு வருவதில்லை. அதைப்போல் நாமும் செய்யலாகாது. ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுவோமாக. இறுதிநாள் எவ்வளவுக்கு அருகிலிருப்பதாகக் காணப்படுகிறதோ அவ்வளவுக்கு உற்சாகமாக ஊக்கமூட்டுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 23:1-2. 3-4ab. 5-6 (பல்லவி : 6 காண்)

பல்லவி : **ஆண்டவரே, உம்மைத் தேடும் மக்களினம் இதுவே.**

1 **மண்ணுலகும் அதில் நிறைந்த யாவும் ஆண்டவருடையன : பூவுலகும்**
**அதில் வாழும் குடிகள் யாவரும் அவர்தம் உடைமையே.**
2 **ஏனென்றால், கடல்களின் மீது பூவுலகை நிலைநிறுத்தியவர் அவரே : ஆறு**
**களின் மீது அதை நிலைநாட்டியவர் அவரே.** பல்லவி

3 **ஆண்டவரது மலை மீது ஏறிச் செல்லத் தகுந்தவன் யார்? அவரது திருத்**
**தலத்தில் நிற்கக் கூடியவன் யார்?**
4 **மாசற்ற செயலினன், தூய உள்ளத்தினன், பயனற்றதில் மனதைச் செலுத்**
**தாதவன்,** பல்லவி

5 **இவனே ஆண்டவரிடம் ஆசி பெறுவான்; இவனே தன்னைக் காக்கும்**
**ஆண்டவரிடம் மீட்பு அடைவான்.**
6 **இறைவனைத் தேடும் மக்களினம் இதுவே: யாக்கோபின் கடவுளது**
**திருமுகம் நாடுவோர் இவர்களே.** பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவராகிய கடவுளே, நான் யார்? என் இல்லம் எத்தகையது?**

**சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்**

7 : 18-19. 24 - 29

**நாத்தான் பேசியபின் தாவீது அரசர் உட்புகுந்து ஆண்டவர் திருமுன் அமர்ந்து, " ஆண்டவராகிய கடவுளே, இதுவரை நீர் என்னைக் கொண்டு வந்ததற்கு நான் யார்? ஆயினும், ஆண்டவராகிய கடவுளே, உமது பார்வைக்கு அது எளிதாய் இருப்பதுபோல் நீண்ட நாட்களுக்குப் பின் நடக்கவிருக்கும் உம் அடியான் வீட்டைப் பற்றிய செய்தியையும் நீர் சொல்லத் திருவுளமானீரே! ஆண்டவராகிய கடவுளே, இது ஆதாமின் சந்ததியாருக்குள்ள முறைமையே.**

**ஏனெனில், உம்முடைய மக்களாகிய இஸ்ராயேலர் என்றும் உமக்குச் சொந்த மக்களாயிருக்கும்படி தேர்ந்துகொண்டீர். ஆண்டவராகிய கடவுளே, நீரே அவர்களுக்குக்கடவுளானீர். இப்பொழுதும், ஆண்டவராகிய**

கடவுளே, உம் ஊழியனையும் அவன் வீட்டையும் குறித்து நீர் அருளிச் செய்த வாக்கியத்தை என்றென்றும் நிறைவேற்றி நீர் சொன்னபடியே செய்தருளும். அப்படிச் செய்தால், 'சேனைகளின் ஆண்டவராகிய கடவுள், இஸ்ராயேலின் கடவுள்' என்று உமது பெயர் என்றென்றும் புகழப்படும். மேலும் உம் அடியான் தாவீதின் வீடும் ஆண்டவருக்கு முன்பாக நிலை நிற்கும்.

ஏனெனில், சேனைகளின் ஆண்டவரே, இஸ்ராயேலின் கடவுளே, 'நாம் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவோம்' என்று நீரே உம் அடியானுக்கு வெளிப்படுத்தியிருந்ததினாலன்றோ உம் அடியான் நான், உம்மை நோக்கி இத்தகைய வேண்டுதலைச் செய்யத் துணிந்தேன்? இப்பொழுது ஆண்டவராகிய கடவுளே, நீரே கடவுள்; உமது வார்த்தையே உண்மை; ஏனெனில் நீரே உம் அடியானுக்கு மேற்கூறிய நற்செய்திகளைச் சொன்னீர்.

"எனவே, நீர் அவ்வார்த்தைகளின்படி செய்யத் தொடங்கி அடியேனுடைய வீடு உம் திருமுன் என்றென்றும் நிலைநிற்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். ஏனெனில் ஆண்டவராகிய கடவுளே, நீரே திருவுளம் பற்றியிருக்கிறீர். உம்முடைய ஆசீரால்தான் உம் அடியானுடைய வீடு என்றென்றும் ஆசீர் பெற்றிருக்கும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 131: 1-2. 3-5. 11. 12. 13-14 (பல்லவி: லூக்.1 [illegible])*

பல்லவி: ஆண்டவருடைய தந்தையான தாவீதின் அரியணையை
ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்.

1 ஆண்டவரே, தாவீதின் சார்பாக நினைவு கூர்ந்தருளும்: அவர் ஏற்ற துன்ப
மனைத்தையும் நினைத்துக்கொள்ளும்.
2 ஆண்டவருக்கு அவர் ஆணையிட்டதையும், யாக்கோபு வழிபட்ட வல்லமை
யுள்ள இறைவனுக்கு அவர் பொருத்தனை செய்ததையும் நினைத்துக்
கொள்ளும். பல்லவி

3 'ஆண்டவருக்கு நான் ஓர் இடம் அமைக்கும்வரை, யாக்கோபு வழிபட்ட
5 வல்லமையுள்ள இறைவனுக்கு உறைவிடம் ஏற்படுத்தும்வரை என்வீட்டில்
நான் குடியிருக்கச் செல்வதில்லை; உறங்குவதற்குக் கட்டில் மீது ஏறுவதில்லை;
கண்கள் அயர நான் விடுவதில்லை' என்று அவர் கூறிய சபதத்தை நினைவு
கூரும். பல்லவி

11 தாவீதுக்கு ஆண்டவர் ஆணையிட்டுக் கூறினார்; அவரது வாக்குறுதி
தவறாது: 'உம் வழித் தோன்றல் ஒருவனை உம் அரியணை மீது ஏற்று
வேன்.' பல்லவி

12 'உம் மக்கள் என் உடன்படிக்கையைக் காத்து நான் தரும் சட்டங்களைக்
கடைப்பிடித்தால், அவர்களுடைய மக்களும் என்றென்றுமே உம் அரியணை
மீது அமர்வர்' என்றார். பல்லவி

13 'ஏனெனில், ஆண்டவர் சீயோனைத் தேர்ந்தெடுத்தார்; தம்முடைய
அரியணையாகக் கொள்ள விரும்பினார்.'

14 'என்றென்றும் என் இளைப்பாற்றியின் இடம் இதுவே; இங்கே நான்
தங்குவேன்; ஏனெனில், இதை நான் விரும்பினேன்.' பல்லவி

அல்லேலூயா சங்- 118:105

அல்லேலூயா. நான் நடக்க வேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு, உமது வார்த்தையாம்; செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விளக்கைக் கொண்டுவருவது விளக்குத் தண்டின் மேல் வைப்பதற்கே. எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:21.25

அக்காலத்தில் யேசு கூட்டத்தை நோக்கி:

"விளக்கைக் கொண்டு வருவது எதற்கு? மரக்காலின் கீழோ கட்டிலின் கீழோ வைப்பதற்கா? விளக்குத் தண்டின் மேல் வைப்பதற்கு அன்றோ? வெளிப்படாதபடி ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை. வெளியாகாதபடி மறைந்திருப்பதும் ஒன்றுமில்லை. கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்" என்றார்.

பின்னும் சொன்னதாவது: "நீங்கள் கேட்கும் வார்த்தைகளைக் கவனியுங்கள். எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும், கூடவும் கொடுக்கப்படும். ஏனெனில் உள்ளவனுக்குக் கொடுக்கப்படும், இல்லாதவனிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**பெரிய போராட்டத்தைத் தாங்கிக்கொண்டீர்கள், எனவே, நம்பிக்கை இழந்துவிடாதீர்கள்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 10:32-39

சகோதரர்களே :

நீங்கள் ஒளிபெற்றபின் பாடுகள் நிறைந்த போராட்டத்தைத் தாங்கிக்கொண்ட முன்னைய நாட்களை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள் அந்நாட்களிலே, நீங்கள் வசை மொழிக்கும் வேதனைக்கும் ஆளாகி, மக்கள் முன்னிலையில் நகைப்புக்கு உள்ளானீர்கள். இவ்வாறு துன்புற்றோருக்குப் பக்கத் துணையாயிருந்தீர்கள். மெய்தான். சிறையிடப்பட்டவர்களுக்குப் பரிவிரக்கம் காட்டினீர்கள்; உங்கள் உடைமைகள் பறிமுதலானபோதும், அதை நீங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டீர்கள். ஏனெனில், மேலானவையும் நிலையுள்ளவையுமான உடைமைகள் உங்களுக்கு உள்ளன என்று உணர்ந்தீர்கள்.

இவ்வுறுதியான நம்பிக்கையை இப்பொழுது இழந்துவிடாதீர்கள். இதற்குப் பெரிய கைம்மாறு உண்டு. நீங்கள் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி அவர் வாக்களித்ததைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு மன உறுதி தேவை. ஏனெனில், “இன்னும் மிக மிகச் சொற்பக் காலமே இருக்கிறது. வரவிருப்பவர் வந்துவிடுவார். காலம் தாழ்த்தமாட்டார். நீதிநெறியில் நடக்கும் என் அடியான் விசுவாசத்தால் வாழ்வு பெறுவான். எவனாவது பின்வாங்கினால் அவனில் நான் பூரிப்பு அடையேன்.”

நாமோ அழிவுக்கேதுவான முறையில் பின்வாங்குபவர்களல்ல; ஆனால், நம் ஆன்மாவைக் காத்துக்கொள்வதற்காக விசுவாசத்தில் வாழ்பவர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 36:3-4. 5-6. 23-24. 39-40 (பல்லவி: 39a)

பல்லவி: நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே.

3 ஆண்டவர்மீது நம்பிக்கை வை, நன்மை செய்: புனித நாட்டில் எவ்விதக் கவலையுமின்றி இருப்பாய்.

4 ஆண்டவரில் உன் இன்பத்தைத் தேடு: அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார்.

பல்லவி

5 உன் வாழ்வின் முடிவை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு; அவர்பேரில் நம்பிக்கை வைத்திரு: அவரே எல்லாம் செய்வார்.

6 உனது நேர்மை, ஒளிபோல எழும்பச் செய்வார்: உனது மாசின்மை பட்டப்பகல் போல விளங்கச் செய்வார்.

பல்லவி

அவர்கள் அழிந்துபோவர்.

23 ஒருவனுடைய வாழ்வின் நெறி உறுதிபெறுவது ஆண்டவராலே: அவனுடைய வாழ்வை அவர் உகந்ததென ஏற்கிறார்.

அப்போது அவன் கீழே விழுந்தாலும் அப்படியே குப்புறக் கிடக்க மாட்டான்: ஏனெனில் ஆண்டவர் அவனது கையைத் தாங்கிக்கொள்
24 கிறார்.

பல்லவி

39 நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும்: துன்ப வேளையில் அவர்களுக்குப் புகலிடம் அவரே.

40 ஆண்டவர் அவர்களுக்குத் துணை நின்று விடுதலையளிக்கிறார்; தீயோரின் கையினின்று விடுவித்துக் காப்பாற்றுகிறார்: ஏனெனில், அவர்கள் அவரிடம் அடைக்கலம் தேடுகின்றனர்.

பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*நீ நம்மைப் புறக்கணித்து, உரியாசின் மனைவியை உனக்கு மனைவியாக்கிக் கொண்டாய்.*

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 11 : 1-4a. 5-10a. 13-17

மறு ஆண்டு அரசர்கள் போருக்குப் புறப்படும் காலம் வந்தபோது தாவீது யோவாபையும் அவரோடு தம் வீரரையும் இஸ்ராயேலர் அனைவரையும் அனுப்பினார். அவர்கள் அம்மோனியரை அழித்தொழித்து ரபாவை முற்றுகையிட்டனர். தாவீதோ யெருசலேமிலேயே தங்கிவிட்டார்.

அன்றொரு நாள் தாவீது நண்பகலுக்குப் பின் தம் படுக்கையினின்று எழுந்து அரண்மனை மாடியில் உலாவுகையில், அவருக்கு எதிரே தம் மேல் மாடியில் குளித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கண்டார். அப்பெண் மிகவும் அழகாக இருந்தாள். அப்பொழுது அரசர் அப்பெண் யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பி, அவள் எலியாமின் மகளும் ஏத்தையனான உரியாசின் மனைவியுமான பெத்சாபே என்று அறிந்து கொண்டார். பின்னர் தாவீது ஆள் அனுப்பி அவளை வரவழைத்தார். கருவுற்றவளாய்த் தன் வீடு திரும்பிய பின், தான் கருவுற்றிருப்பதாகத் தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்.

அப்போது தாவீது யோவாபிடம் ஆள் அனுப்பி, "ஏத்தையனான உரியாசை என்னிடம் அனுப்பிவை" என்று சொன்னார். அப்படியே யோவாப் ஏத்தையனான உரியாசைத் தாவீதிடம் அனுப்பி வைத்தான். உரியாசு தாவீதிடம் வந்தபோது, அவர் அவனை நோக்கி, "யோவாபும் மக்களும் நலமாய் இருக்கிறார்களா ? போர் எவ்வாறு நடந்து வருகிறது ?" என்று விசாரித்தார். பிறகு தாவீது உரியாசை நோக்கி, "உன் இல்லத்திற்குப் போய் உன் கால்களைக் கழுவு" என்றார். உரியாசு அரண்மனையிலிருந்து புறப்பட்டபோது, அரச உணவு அவனுக்குப் பின்னால் அனுப்பப்பட்டது. உரியாசோ தன் இல்லத்திற்குப் போகாமல் தன் தலைவரின் மற்ற ஊழியர்களோடு அரண்மனை வாயிலில் படுத்துக் கொண்டான். உரியாசு தன் இல்லத்திற்குச் செல்லவில்லை என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது அவனைத் தன் முன்னிலையில் உண்ணவும் குடிக்கவும் அழைத்து அவனுக்குப் போதை ஊட்டினார். ஆயினும் அவன் தன் வீட்டுக்குப் போகாமல் மாலையிலேயே வெளியே போய் அரசரின் சேகவரோடு தன் படுக்கையில் தூங்கினான்.

காலையில் தாவீது யோவாபுக்கு ஒரு கடிதம் எழுதி, அதை உரியாசின் கையில் கொடுத்து அனுப்பினார். அக்கடிதத்தில், "போர் கடுமையாக நடக்கும் இடத்தில் உரியாசை நீர் படை முகத்தில் நிறுத்தி அவன் வெட்டுண்டு சாகும்படி விட்டுவிடும்" என்று எழுதப்பட்டிருந்தது. அவ்வாறு யோவாப் நகரை முற்றுகையிடுகையில் மிக்க ஆற்றல் வாய்ந்த வீரர்கள் இருக்கிறார்கள் என்று தான் அறிந்திருந்த இடத்தில் உரியாசை நிறுத்தினான். வீரர் நகரிலிருந்து வெளிப்போந்து யோவாபோடு போரிட்டபோது தாவீதின் வீரருள் பலர் விழுந்து மடிந்தனர். ஏத்தையனாகிய உரியாசும் இறந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 50:1-2. 3-4a. 4bc-5.8-9 (பல்லவி: 1a காண்.)*

பல்லவி : இறைவா, நாங்கள் பாவம் செய்தோம், எங்கள் மீது இரக்கம் வையும்.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என் மீது இரக்கம் வையும் : உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்களைப் போக்கிவிடும்.

2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கி விடும் : என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

3 என் குற்றங்குறைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன் : நான் செய்த பாவம் எந்நேரமும் என் கண் முன்னே நிற்கின்றது.

4 உமக்கெதிராக மட்டுமே பாவம் செய்தேன்; உம் திரு முன்னிலையிலேயே செய்தேன். பல்லவி

5 உம் தீர்ப்பில் உமது நீதி விளங்குகின்றது. உமது நியாய வாக்கினில் உம் நேர்மை துலங்குகின்றது.

8 இதோ ! குற்றமுள்ள நிலையில் நான் பிறந்தேன் : பாவ நிலையிலேயே என் அன்னை என்னைக் கருத்தரித்தாள். பல்லவி

9 அகமகிழ்வும் அக்களிப்பும் என் செவியில் விழச் செய்யும், நொறுங்குண்ட எலும்புகளும் அக்களிப்படையும்.

என் பாவங்களினின்று உம் திருமுகத்தைத் திருப்பிக் கொள்ளும். என் குற்றங்களையெல்லாம் போக்கிவிடும். பல்லவி

## அல்லேலூயா

மத். 11:25

அல்லேலூயா. "தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, இறையரசின் மறைபொருளைச் சிறுவர்களுக்கு வெளிப் படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன்." அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விதை விதைத்துப் பின் தூங்குகிறான். அவனுக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். *4:26-34*

அக்காலத்தில் : யேசு கூட்டத்தை நோக்கி :

"கடவுளரசு நிலத்தில் விதையைப் போட்ட ஒருவனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் இரவில் தூங்கினாலோ பகலில் விழித்திருந்தாலோ எவ்வாறென்று அவனுக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது. நிலம் தானாகவே பலன் அளிக்கிறது : முதலில் பயிர், பின் கதிர், அதன் பின் கதிர் நிறைய மணி. பயிர் விளைந்ததும் அவன் அரிவாளை எடுக்கிறான். ஏனெனில், அறுவடை வந்துவிட்டது" என்றார்.

பின்னும், "கடவுளரசை எதற்கு ஒப்பிடுவோம்? எந்த உவமையால் எடுத்துக் காட்டுவோம்? அது கடுகு மணியைப் போன்றது. இது நிலத்தில் விதைக்கப்படும்பொழுது உலகிலுள்ள விதைகளிலெல்லாம் மிகச் சிறியது. விதைத்த பின்போ, முளைத் தெழுந்து செடிகளிலெல்லாம் மிகப் பெரியதாகித் தன் நிழலில் வானத்துப் பறவைகள் வந்து தங்கக் கூடிய பெரும் கிளைகளை விடும்" என்றார்.

அவர்கள் கேட்டறியும் திறனுக்கேற்ப இத்தகைய பல உவமைகளால் அவர்களுக்குத் தேவ வார்த்தையைச் சொல்லுவார், உவமைகளால் அன்றி அவர் அவர்களிடம் பேசியதில்லை. தம் சீடருக்கோ தனியாக அனைத்தையும் விளக்குவார்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுளைத் தன் சிற்பியும் ஆக்குநருமாகக்கொண்ட ஒரு நகரை அவர் எதிர்நோக்கியிருந்தார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *11:1-2. 8-19*

விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவை பற்றி மனந்தளராத நிலை. இந்த விசுவாசத்தின் பொருட்டே நம் முன்னோர் நற்பெயர் பெற்றனர்.

இறைவனின் அழைப்பை ஏற்ற ஆபிரகாம் கீழ்ப்படிந்து தம் உரிமைச் சொத்தாகப் பெறவிருந்த இடத்திற்குப் போனது விசுவாசத்தினலேயே. போகவேண்டிய இடத்தை அறியாதிருந்தும் புறப்பட்டுப் போனுர். வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறி, அதே வாக்குறுதியின் உடன் உரிமையாளர்களான ஈசாக், யாக்கோபுடன் கூடாரங்களில் குடியிருந்து, வேற்று நாட்டினர்போல் வாழ்ந்தது, விசுவாசத்தினலேயே. ஏனெனில், அவர் அசையாத அடித்தளமுள்ளதொரு நகரை எதிர்நோக்கியிருந்தார். அதன் சிற்பியும் ஆக்குநரும் கடவுளே.

சாராள் வயதான காலத்திலும் ஒரு மகனை ஈன்றெடுக்க ஆற்றல் பெற்றது விசுவாசத்தினலேதான். ஏனென்ருல், வாக்களித்தவர் நம்பிக்கைக்குரியவர் என்று அவள் கருதினுள். இவ்வாறு உயிரிழந்தவர் போலிருந்த ஒரே ஆள், விண்மீன்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் கணக்கற்ற மக்களுக்குத் தந்தையானுர்.

இவர்களெல்லாரும் விசுவாசத்தினலேயே இறந்தனர். வாக்களிக்கப்பட்டவற்றைக் கைக்கொள்ளவில்லையெனினும், அவற்றைத் தொலைவில் கண்டனர்; கண்டு வாழ்த்தினர். இவ்வுலகில் தாங்கள் வேற்று நாட்டினர் எனவும், அந்நியர்களெனவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். இவ்வாறு ஒப்புக்கொள்பவர்களோ தம் தாய்நாட்டைத் தேடுவோர் எனக் காட்டுகின்றனர். தாங்கள் விட்டுவந்த நாட்டையே நினைவில் வைத்திருந்தால் திரும்பிச் செல்ல வாய்ப்பு இல்லாமலா இருந்திருக்கும்! ஆனுல், அவர்கள் உண்மையில் நாடியது ஒரு மேலான நாட்டை, அதாவது விண்ணக நாட்டையே. அதனுல்தான் கடவுளும் தம்மை 'அவர்களுடைய கடவுள்' என அழைத்துக்கொள்ள வெட்கப்படவில்லை. தாமே அவர்களுக்காக ஒரு நகரை அமைத்துள்ளார் அல்லரோ?

விசுவாசத்தினலேயே ஆபிரகாம் தாம் பரிசோதிக்கப்பட்டபொழுது ஈசாக்கைப் பலியிடத் துணிந்தார். "உன் பெயர் நீடிக்க, ஈசாக்கின் வழியாய் உனக்கு மக்கள் பிறப்பார்கள்" என்று இறைவன் கூறியிருந்தார். வாக்குறுதிகளைப் பெற்றிருந்தும் ஆபிரகாம் தம் ஒரே மகனைப் பலியிடத் தயங்கவில்லை. ஏனெனில், கடவுள் இறந்தோரையும் எழுப்ப வல்லவர் என்பதை மனத்திற்கொண்டிருந்தார். எனவே, தம்மகனை மீண்டும் பெற்றுக்கொண்டார். இது ஒரு முன்னடையாளமாயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

லூக் 1 : 69-70, 71-72, 73-75 (பல்லவி : 68)

பல்லவி : **இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவர் போற்றி !**
**ஏனெனில், தம் மக்களைத் தேடிவந்து விடுவித்தருளினார்.**

தொன்றுதொட்டு வந்த தம் பரிசுத்த இறைவாக்கினர்களின் வாயினால் அவர் மொழிந்தது போலவே, தம் அடியாராகிய தாவீதின் குலத்திலே மீட்கும் வல்லமை எழச் செய்தருளினார். பல்லவி

இவ்வாறு நம் பகைவரிடமிருந்தும், நம்மை வெறுப்பவர் அனைவரின் கையிலிருந்தும் மீட்டருளினார்.

நம் முன்னோர்க்கு இரக்கம் காட்டி, நம் பகைவரின் கையினின்று விடுதலை பெற்று அச்சமின்றி நம் வாழ்நாளெல்லாம் அவர் முன்னிலையில், புனிதத்தோடும் நீதியோடும் அவருக்குப் பணிபுரியவே. பல்லவி

தாம் வழி வகுப்பதாக அவர் நம் தந்தையாம் ஆபிரகாமுக்கு அளித்த உறுதிமொழியையும், தமது பரிசுத்த உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்தருளினார். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்தேன்.**

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 12 : 1-a7, 10-17

அந்நாட்களில் :

ஆண்டவர் நாத்தானைத் தாவீதிடம் அனுப்பினார். அவர் அரசரிடம் வந்து அவரை நோக்கி, "ஒரு நகரில் இரு மனிதர் இருந்தனர். ஒருவன் செல்வந்தன் ; மற்றவன் ஏழை. செல்வந்தனுக்கு ஆடுமாடுகள் மிகுதியாக இருந்தன. ஏழை மனிதனுக்கோ விலைக்கு வாங்கி வளர்த்த ஓர் ஆட்டுக் குட்டியைத் தவிர வேறொன்றுமில்லை. அது அவனோடும் அவன் பிள்ளைகளோடும் வீட்டில் வளர்ந்து, அவன் அப்பத்தைத் தின்று அவனது கிண்ணத்தில் குடித்து அவன் மடியில் தூங்கி, அவனுக்கு ஒரு மகளைப் போலவே இருந்து வந்தது. ஆனால் செல்வந்தனிடம் வழிப்போக்கன் ஒருவன் வந்தபோது, அவன் தன்னிடம் வந்த அவனுக்கு விருந்து செய்யத் தன் ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனமின்றி, அந்த ஏழை மனிதனுடைய ஆட்டைப்பிடித்து தன்னிடம் வந்தவனுக்காகச் சமையல் செய்தான்" என்றார்.

இதைக் கேட்ட தாவீது அம்மனிதனின் மேல் மிகவும் சினந்து நாத்தானை நோக்கி, " ஆண்டவர் மேல் ஆணை ! இதைச் செய்தவன் சாக வேண்டும். இரக்கமின்றி அவன் இதைச் செய்தபடியால் அந்த ஆட்டுக்குப் பதிலாக நான்கு மடங்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்" என்றார்.

அப்போது நாத்தான் தாவீதை நோக்கி, " நீரே அந்த மனிதன் ; நீ நம்மைப் புறக்கணித்து ஏத்தையனாகிய உரியாசின் மனைவியை உனக்கு மனைவியாகக் கொண்டபடியால், வாளானது என்றும் உன் வீட்டை விட்டு அகலாது. ஆகையால் ஆண்டவர் சொல்லுகிறதாவது : இதோ உன் வீட்டின் தீமை உன்மேல் வரச் செய்வோம்; உன் பார்வையிலேயே நாம் உன் மனைவியரை எடுத்துப் பிறனுக்குக் கையளிப்போம். அவன் இச்சூரிய வெளிச்சத்தில் உன் மனைவி மக்களோடு படுப்பான். நீயோ மறைவில் செய்தாய் ; நாமோ இஸ்ராயேலர் எல்லாருக்கும் முன்பாகவும் சூரியனுக்கு முன்பாகவும் அதைச் செய்வோம்," என்று கூறினார்.

அப்போது தாவீது நாத்தானிடம், "நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்தேன்" என்றார். நாத்தான் தாவீதை நோக்கி, " ஆண்டவர் உமது பாவத்தை மன்னிப்பார். நீர் சாகப் போகிறதில்லை. ஆயினும் ஆண்டவருடைய எதிரிகள் அவரைப் பழிக்க நீர் காரணமாயிருந்தீரே ; அதன் பொருட்டு உமக்குப் பிறந்திருக்கும் பிள்ளை சாகவே சாவான்" என்று சொல்லி நாத்தான் தம் வீடு திரும்பினார்.

அப்பொழுது ஆண்டவர், உரியாசின் மனைவி தாவீதுக்குப் பெற்ற பிள்ளையை அடித்து வீழ்த்தினார். அது நோயுற்றுச் சாகக் கிடந்தது. அதைக் கண்ட தாவீது பிள்ளைக்காக ஆண்டவரிடம் மன்றாடி நோன்பு காத்துத் தம் அறைக்குள் சென்று தரையில் வீழ்ந்து கிடந்தார். அவரது வீட்டிலுள்ள பெரியோர்கள் வந்து அவரை எழுந்திருக்கச் சொல்லி எவ்வளவோ முயன்றும் அவர் மறுத்து விட்டதுமன்றி, அவர்களோடு சாப்பிடவுமில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 50:10-11.12-13. 14-15 (பல்லவி : 10a)

பல்லவி : தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்.

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும் : உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.

11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும் : உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும்.

பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்; உமது பெருந்
தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
13 தீயவர்களுக்கு உம் வழிகளை நான் புகட்டுவேன்: பாவிகள் உம்மிடம்
திரும்பி வருவர். பல்லவி

14 இறைவா, என் மீட்பரான இறைவா, இரத்தப் பழிக்குரிய தண்டனை
யினின்று விடுவித்தருளும்: உமது நீதியைக் கண்டு என் நாவு ஆர்ப்பரிக்கும்.
15 ஆண்டவரே என் உதடுகளைத் திறந்துவிடும்: என் வாய் உமது புகழ்ச்சியை
எடுத்துரைக்கும். பல்லவி

அல்லேலூயா அரு. 3:16

அல்லேலூயா. தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவனும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு, அந்த ஒரே பேறுன மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே;*
*இவர் யாராயிருக்கலாம்.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:35-41

அன்று மாலை யேசு அவர்களிடம், "அக்கரைக்குச் செல்வோம்" என்ருர். அவர்கள் கூட்டத்தை அனுப்பிவிட்டு அவரை அப்படியே படகில் அழைத்துச் சென்றனர். அவருடன் வேறு படகுகளும் சென்றன.

அப்போது பெரிய புயல் காற்று உண்டாயிற்று. அலைகள் படகின் மேல் மோத, படகு நீரால் நிரம்பும் தருவாயிலிருந்தது. அவர் பின்னணியத்தில் தலையணை மீது தூங்கிக் கொண்டிருந்தார், அவர்கள் அவரை எழுப்பி, "போதகரே, மடிந்து போகிறோமே; உமக்கு அக்கறை இல்லையா?" என்றனர். அவர் எழுந்து, காற்றைக் கடிந்து கடலை நோக்கி, "இரையாதே, சும்மாயிரு" என்ருர். காற்று நின்றது; பேரமைதி உண்டாயிற்று.

பின், அவர் அவர்களை நோக்கி, "ஏன் இவ்வளவு பயம்? இன்னும் உங்களுக்கு விசுவாசமில்லையா?" என்ருர். அவர்கள் பெரிதும் அச்சமுற்று, "காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யாராயிருக்கலாம்?" என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## நான்காம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*ஏழ்மையும் எளிமையும் உள்ள மக்களை உன் நடுவில் விட்டுவைப்போம்.*

இறைவாக்கினர் சொப்போனியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்
*2:3. 3:12-13*

நாட்டிலிருக்கும் எளியோரே, ஆண்டவரின் கட்டளைகளைக் கடைப் பிடிப்பவர்களே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைத் தேடுங்கள்; நேர்மையைத் தேடுங்கள், தாழ்ச்சியைத் தேடுங்கள்; ஆண்டவருடைய கோபத்தின் நாளில் ஒருவேளை உங்களுக்குப் புகலிடம் கிடைக்கலாம்.

"ஏழ்மையும் எளிமையும் உள்ள மக்களை உன் நடுவில் நாம் விட்டு வைப்போம்; இஸ்ராயேலில் எஞ்சினோர் ஆண்டவரின் பெயரில் நம் பிக்கை கொள்வர்; அவர்கள் தீமை செய்ய மாட்டார்கள், பொய் சொல்லவே மாட்டார்கள், வஞ்சக நாவென்பது அவர்கள் வாயில் இராது; அச்சுறுத்துவார் யாருமின்றி அவர்கள் மந்தைபோல மேய்ந்து இளைப் பாறுவார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 145:7,8-9a, 9bc-10 (பல்லவி: மத். 5:3)

பல்லவி: எளிய மனத்தோர் பேறு பெற்றோர். ஏனெனில், விண்ணரசு அவர்களதே.
அல்லது அல்லேலூயா.

7 அவர் என்றென்றும் சொல் தவறாதவர்; துன்புறுத்தப்படுவோர்க்கு நீதி வழங்குகிறார்:
பசியுற்றோர்க்கு உணவளிக்கிறார்:
சிறைப்பட்டவர்களை ஆண்டவர் விடுவிக்கிறார். பல்லவி

8 குருடருடைய கண்களை ஆண்டவர் திறந்துவிடுகிறார்: தாழ்த்தப்பட்டவர்களை ஆண்டவர் தூக்கிவிடுகிறார்; நீதிமான்கள்மீது ஆண்டவர் அன்புகூர்கிறார்.

9 அந்நியரை ஆண்டவர் காப்பாற்றுகிறார். பல்லவி

அனாதைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிறார்: பாவிகளின் திட்டங்களைக் கலைத்துவிடுகிறார்.

10 நித்தியத்துக்கும் ஆண்டவர் அரசாள்வார்: சீயோனே உன் இறைவன் தலைமுறை தலைமுறையாக ஆள்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**வலுவற்றது என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்துகொண்டார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1:26-31

சகோதரர்களே, நீங்கள் அழைக்கப்பட்டபோது என்ன நிகழ்ந்தது என்பதை எண்ணிப்பாருங்கள். மனிதர் மதிப்பின்படி உங்களுள் ஞானிகள் எத்தனை பேர்? வல்லமையுள்ளவர்கள் எத்தனை பேர்? உயர் குலத்தோர் எத்தனை பேர் ?

இருப்பினும், ஞானிகளை நாணச்செய்ய மடமை என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்துகொண்டார். வன்மையானதை நாணச் செய்ய வலுவற்றது என உலகம் கருதுவதைக் கடவுள் தேர்ந்து கொண்டார். உலகம் பொருட்படுத்துவதை ஒழித்துவிட, உலகம் பொருட்படுத்தாததையும், தாழ்ந்ததெனக் கருதுவதையும், இகழ்ச்சிக்குரியதையும் கடவுள் தேர்ந்துகொண்டார். எந்த மனிதனும் கடவுள் முன் பெருமை பாராட்டாதபடி இவ்வாறு செய்தார்.

அவர் செயலால்தான் நீங்கள் கிறிஸ்து யேசுவுக்குள் இருக்கிறீர்கள். இவரே கடவுளின் செயலால் நமக்கு ஞானத்தின் ஊற்றானார். இறைவனுக்கு நாம் ஏற்புடையவர்களும் பரிசுத்தர்களும் ஆவதற்கு வழியானார், நமக்கு விடுதலை அளிப்பவருமானார். ஆகவே, மறைநூலில் எழுதியுள்ளபடி, "பெருமை பாராட்டுவோன் ஆண்டவரில் பெருமை பாராட்டுக."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 5:12a

அல்லேலூயா. அகமகிழ்ந்து களிகூருங்கள்; ஏனெனில், வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எளிய மனத்தோர் பேறு பெற்றோர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:1-12a

அக்காலத்தில் :

யேசு திரளான கூட்டத்தைக் கண்டு, மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரை அணுகினர். அவர் திருவாய்மலர்ந்து போதிக்கலானார்:

"எளிய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே. துயருறுவோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் ஆறுதல் பெறுவர். சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில், மண்ணுலகு அவர்களது உரிமையாகும். நீதியின்பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் நிறைவு பெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர். தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர். சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர். நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர், ஏனெனில், விண்ணரசு அவர்களதே.

என் பொருட்டுப் பிறர் உங்களை வசைகூறித் துன்புறுத்தி, உங்கள் மேல் இல்லாததும் பொல்லாதது எல்லாம் சொல்லும் போது, நீங்கள் பேறுபெற்றோர். அகமகிழ்ந்து களிகூருங்கள். ஏனெனில், வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 94:1-2. 6-7. 8-9 (பல்லவி: 7b.8b)*

பல்லவி: உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக்கொள்ளாதீர்கள் என்னும் அவரது குரலை இன்று கேட்பீர்களா?

1 வாருங்கள், ஆண்டவர்க்குப் புகழ் பாடுவோம்: மீட்பளிக்கும் பாறையாம்
அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.
2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்:
இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம்: நம்மைப்
படைத்த ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.
7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள், அவர்
அரவணைப்பிலுள்ள மந்தை. பல்லவி

இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா?
8 "அன்று மெரிபாவிலும் பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல்.
உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
9 "அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்: என் செயல்களைக்
கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கன்னிப்பெண் தூயவளாயிருக்கும்படி**
**ஆண்டவர்க்குரியதிலேயே கவலையாயிருக்கிறாள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 7:32-35

சகோதரர்களே:

நீங்கள் கவலைக்கு ஆளாகாதவர்களாய் இருக்கவேண்டுமென நான் விழைகிறேன். மணமாகாதவன் ஆண்டவர்க்குரியதில் கவலையாய் இருக்கிறான்; அவரை எவ்வாறு மகிழ்விக்கலாம் என்ற நினைவாகவே இருக்கிறான். மணமானவனோ உலகத்துக்குரியதில் கவலையாய் இருக்கிறான்; மனைவியை எவ்வாறு மகிழ்விக்கலாம் என்ற நினைவாகவே இருக்கிறான், பிளவுபட்டதொரு நிலையில் அவன் இருக்கிறான். மணமாகாதவளும் கன்னிப்பெண்ணும் ஆண்டவர்க்குரியதிலேயே கவலையாய் இருக்கிறார்கள்;

உடலிலும் உள்ளத்திலும் பரிசுத்தராய் இருக்கவேண்டுமென்பதே அவர்கள் நோக்கம். மணமானவனோ உலகத்திற்குரியதில் கவலையாய் இருக்கிறான்; மனைவியை எவ்வாறு மகிழ்விக்கலாம் என்ற நினைவாகவே இருக்கிறான்.

நான் இதைச் சொல்வது உங்களைக் கட்டுப்படுத்துவதற்கன்று, உங்கள் நன்மைக்கே; எல்லாம் ஒழுங்காய் இருக்கவும் மனச்சிதைவின்றி நீங்கள் ஆண்டவரிடம் பற்றுக்கொண்டிருக்கவும் வேண்டுமென்றே நான் இதைச் சொல்லுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — மத் 4 : 16

அல்லேலூயா. இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்;
மரண நிழல்படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்தது.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அதிகாரமுள்ளவராகப் போதித்து வந்தார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1 : 21-28

கப்பர்நகூம் ஊருக்கு வந்து, ஓய்வுநாளில் யேசு செபக் கூடத்திற்குச் சென்று போதிக்கலானார். அவருடைய போதனையைக் கேட்டு மக்கள் மலைத்துப் போயினர். ஏனெனில், அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரமுள்ளவராகப் போதித்து வந்தார். அச் செபக்கூடத்தில் அசுத்த ஆவியேறிய ஒருவன் இருந்தான். அவன், "நாசரேத்தூர் யேசுவே, எங்கள் காரியத்தில் ஏன் தலையிடுகிறீர்? எங்களைத் தொலைக்க வந்தீரோ? நீர் யாரென்று எனக்குத் தெரியும். நீர் கடவுளின் பரிசுத்தர்" என்று கத்தினான். யேசுவோ, "பேசாதே, இவனை விட்டுப்போ" என்று அதட்டினார். அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து பெருங்கூச்சலிட்டு அகன்றது. மக்கள் அனைவரும் எவ்வளவு திகிலுற்றனர் என்றால், "இது என்ன, அதிகாரம் கொண்ட போதனை! அசுத்த ஆவிகளுக்கும் அவர் கட்டளையிடுகிறார், அவை கீழ்ப்படிகின்றனவே!" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர். உடனே அவரைப்பற்றிய பேச்சு கலிலேயா நாடெங்கும் பரவிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு – 3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**உன்னை மக்களினங்களுக்கு இறைவாக்கினராக ஏற்படுத்தினோம்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *1:4-5. 17-19*

யோசியாவின் காலத்தில் ஆண்டவருடைய வாக்கு எனக்கு அருளப்பட்டது. "உன் தாய் வயிற்றில் உன்னை உருவாக்கு முன்பே நாம் உன்னை அறிந்திருந்தோம்; கருப்பையினின்று நீ வெளிப்படும் முன்பே உன்னை நாம் அர்ச்சித்திருக்கிறோம்; மக்களினங்களுக்கு இறைவாக்கினராக ஏற்படுத்தினோம். நீயோ உன் இடையை வரிந்து கட்டிக் கொள்; எழுந்து போய் நாம் உனக்குக் கட்டளையிடும் எல்லாவற்றையும் அவர்களுக்கு அறிவி. அவர்கள் முன்னால் அச்சம் கொள்ளாதே, நாமும் உன்னை அஞ்சவிடோம்; இதோ இன்று நாடெங்கணும் உன்னை, யூதாவின் அரசர்களுக்கும் தலைவர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும் நாட்டின் மக்களுக்கும், அரணுள்ள நகராகவும் இரும்புத் தூணாகவும், வெண்கல மதிற் சுவராகவும் ஏற்படுத்தினோம்.

அவர்கள் உனக்கெதிராய்ப் போராடுவார்கள்; ஆயினும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; ஏனெனில் நாம் உன்னோடிருக்கிறோம், உன்னை மீட்டுக் கொள்வோம்" என்கிறார் ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 70:1-2. 3-4a. 5-6ab.17 (பல்லவி : 15)*

பல்லவி : **ஆண்டவரே, உமது அருள் நன்மையை என் நா எடுத்துரைக்கும்.**

1 ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுகிறேன் : எந்நாளும் நான் ஏமாற்றம் அடையவிடாதேயும்.

2 உமது நீதிக்கேற்ப எனக்கு விடுதலை அளித்துக் காத்தருளும் : எனக்கு உம் செவிசாய்த்து என்னை மீட்டுக் கொள்ளும். பல்லவி

3 என் அடைக்கலப் பாறையாக நீர் இருந்தருளும்; கோட்டை அரணாயிருந்து
என்னை மீட்டருளும்: ஏனெனில், நீர் எனக்குக் கற்பாறையாகவும் அரணா
கவும் இருக்கிறீர்.

4 தீயவனின் கையினின்று, என் இறைவா, என்னை விடுவித்தருளும். பல்லவி

5 ஏனெனில், என் இறைவா, நான் உம்மையே எதிர்நோக்கி வாழ்கிறேன்:
ஆண்டவரே, என் இளமையிலிருந்து நீரே என் நம்பிக்கை.

6 பிறப்பிலிருந்து நீரே எனக்கு ஆதாரம்; தாயின் வயிற்றிலிருந்து நீரே என்
பாதுகாப்பு.

பல்லவி

15 உமது அருள் நன்மையை என் நா எடுத்துரைக்கும்; நான் முழுவதும் உம்
அருட் துணையை எடுத்துச் சொல்லும்.

17 இறைவா, நீர் எனக்கு என் இளமையிலிருந்தே அறிவு புகட்டினீர்:
இந்நாள் வரை நான் உமது வியத்தகு செயல்களை வெளிப்படுத்து
கிறேன்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

*விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன;
இவற்றுள் தலைசிறந்தது அன்பே.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்

12:31–13:13

சகோதரர்களே:

நீங்கள் ஆர்வமாய்த் தேடவேண்டியது மேலான வரங்களையே. அனைத்திலும் சிறந்த நெறியை நான் உங்களுக்குக் காட்டப்போகிறேன்.

“மண்ணோர் மொழிகளிலும் விண்ணோர் மொழிகளிலும் நான் பேசினும், அன்பு எனக்கு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும் ஆனேன். இறைவாக்கு வரம் எனக்கு இருப்பினும் மறை பொருள் யாவும் எனக்குத் தெரிந்தாலும் அறிவு அனைத்தும் எனக்கு இருந்தாலும் மலைகளைப் பெயர்த்தகற்றும் அளவுக்கு விசுவாசம் என்னிடம் நிறைந்திருப்பினும் அன்பு எனக்கு இல்லையேல், நான் ஒன்றுமில்லை. எனக்குள்ளதெல்லாம் நான் வாரி வழங்கினும் எரிப்பதற்கு என் உடலைக் கையளித்தாலும் அன்பு எனக்கில்லையேல், எனக்குப் பயன் ஒன்றுமில்லை.

அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது. அன்பு அழுக்காறு கொள்ளாது. பெருமை பேசாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலத்தைத் தேடாது, சீற்றத்திற்கு இடந்தராது, வர்மம்

வைக்காது. அநீதியைக் கண்டு மகிழ்வுறாது; உண்மையைக் கண்டு உளம் மகிழும். அனைத்தையும் தாங்கிக்கொள்ளும்; பிறர்மீது நல்லெண்ணம் இழப்பதில்லை; நம்பிக்கையில் தளர்வதில்லை; அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்.

அன்புக்கு என்றும் முடிவு இராது; இறைவாக்கு வரம் எது இருந்தாலும், அது ஒருநாள் இல்லாமற் போகும்; பரவசப் பேச்சுவரம் இருந்தால், அதுவும் முற்றுப் பெறும். ஏனெனில், நமது அறிவு குறைவுள்ளது; நாம் உரைக்கும் இறைவாக்கும் குறைவுள்ளது; நிறைவுள்ளது தோன்றும் பொழுது குறைவுள்ளது மறைந்துவிடும். நான் குழந்தையாய் இருந்த போது, குழந்தையின் பேச்சு, குழந்தையின் மனநிலை, குழந்தையின் எண்ணம்கொண்டிருந்தேன். நான் பெரியவனாய் வளர்ந்த பின்னர், குழந்தைக்குரியதைக் களைந்துவிட்டேன்; இப்பொழுது கண்ணாடியில் மங்கலாகக் காண்கிறோம்; அப்பொழுது முகமுகமாய்க் காண்போம். இப்பொழுது அரைகுறையாய் அறிகிறேன்; அப்பொழுது கடவுள் என்னை அறிவதுபோல் நானும் அறிவேன்.

எனவே, விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன; இவற்றுள் தலைசிறந்தது அன்பே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

*அல்லது குறுகிய வாசகம்*

புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *13:4-13*

சகோதரர்களே :

அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது, அன்பு அழுக்காறு கொள்ளாது, பெருமை பேசாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலத்தைத் தேடாது, சீற்றத்திற்கு இடந்தராது, வர்மம் வைக்காது, அநீதியைக் கண்டு மகிழ்வுறாது; உண்மையைக் கண்டு உளம் மகிழும்; அனைத்தையும் தாங்கிக் கொள்ளும்; பிறர் மீது நல்லெண்ணம் இழப்பதில்லை; நம்பிக்கையில் தளர்வதில்லை: அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்.

அன்புக்கு என்றும் முடிவு இராது: இறைவாக்கு வரம் எது இருந்தாலும், அது ஒருநாள் இல்லாமற் போகும். பரவசப் பேச்சுவரம் இருந்தால், அதுவும் முற்றுப்பெறும். அறிவு வரம் இருந்தால் அதுவும் ஒருநாள் இல்லாமற் போகும். ஏனெனில், நமது அறிவு குறைவுள்ளது: நாம் உரைக்கும் இறைவாக்கும் குறைவுள்ளது. நிறைவுள்ளது தோன்றும்பொழுது

குறைவுள்ளது மறைந்துவிடும். நான் குழந்தையாய் இருந்தபோது, குழந்தையின் பேச்சு, குழந்தையின் மனநிலை, குழந்தையின் எண்ணம் கொண்டிருந்தேன். நான் பெரியவனாய் வளர்ந்த பின்னர் குழந்தைக்குரியதைக் களைந்து விட்டேன். இப்பொழுது கண்ணாடியில் மங்கலாகக் காண்கிறோம்; அப்பொழுது முகமுகமாய்க் காண்போம். இப்பொழுது அரைகுறையாய் அறிகிறேன்; அப்பொழுது கடவுள் என்னை அறிவது போல் நானும் அறிவேன்.

எனவே, விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் தலைசிறந்தது அன்பே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

*அல்லேலூயா* 4 : 18-19

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எலியாஸ், எலிசேயுவைப் போல் யேசுவும் யூதர்களுக்காக மட்டும் அனுப்பப்பெறவில்லை.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:21-30

அக்காலத்தில் யேசு செபக்கூடத்தில் கூறியதாவது:

" நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" என்று கூறலானார். யாவரும் அவரைப் பாராட்டி, அவர் வாயினின்று எழுந்த அருள்மொழிகளை வியந்து, " இவர் சூசையின் மகனன்றோ? " என்றனர்.

பின் அவர் அவர்களை நோக்கி, " மருத்துவனே, உன்னையே குணமாக்கிக் கொள் என்ற பழமொழியை எனக்கே சொல்லிக் காட்டி 'கப்பர்நகூம் ஊரில் நீர் செய்ததாக நாங்கள் கேள்விப்பட்டதெல்லாம், உம் சொந்த ஊராகிய இங்கேயும் செய்யும் எனக் கண்டிப்பாக நீங்கள் கூறுவீர்கள் " என்றார்.

மேலும், அவர், " உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்கப்படுவதில்லை. உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : எலியாசின் காலத்தில் மூன்று ஆண்டுகள்

ஆறு மாதங்களாக வானம் வறண்டு நாடெங்கும் பஞ்சம் உண்டானபோது, இஸ்ராயேல் நாட்டில் கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் சீதோன் நாட்டின் சரெப்தா ஊரார்க் கைம்பெண் ஒருத்தியிடமன்றி வேறு எவரிடமும் எலியாஸ் அனுப்பப்படவில்லை. இறைவாக்கினரான எலிசேயுவின் காலத்திலும் இஸ்ராயேல் நாட்டில் தொழுநோயாளர் பலர் இருந்தனர். ஆயினும் சீரியா நாட்டு நாமானைத் தவிர வேறு எவரும் குணமாக்கப்படவில்லை" என்றார்.

இவற்றைக் கேட்டுச் செபக்கூடத்தில் இருந்த அனைவரும் வெகுண்டெழுந்து, அவரை ஊருக்கு வெளியே தள்ளி, அவ்வூர் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிடக் கொண்டு சென்றனர். அவரோ அவர்களிடையே நடந்து தம் வழியே போனார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***விசுவாசத்தினால்தான் அவர்கள் அரசுகளை எதிர்த்து வென்றனர். கடவுள் நமக்காக மேலானதொரு திட்டம் வகுத்துள்ளார்.***

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *11 : 32-40*

*சகோதரர்களே :*

இன்னும் சொல்ல வேண்டுமா ? கிதியோன், பாராக், சாம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் ஆகியோரைப் பற்றியும் இறைவாக்கினர்களைப் பற்றியும் கூற எனக்கு நேரமில்லை. விசுவாசத்தினால்தான் அவர்கள் அரசுகளை எதிர்த்து வென்றனர் ; நீதி வழங்கினர் ; வாக்களித்தவற்றைப் பெற்றுக்கொண்டனர் : சிங்கத்தின் வாயை அடைத்தனர் ; தீயின் கொடுமையைத் தணித்தனர் ; வாள் முனைக்குத் தப்பினர் ; வலிமையற்றவராயிருந்தும் வலிமை பெற்றனர் ; போரில் வீரம் காட்டினர் ; மாற்றார் படைகளை முறியடித்தனர்.

இறந்த தம்மவர் உயிருடன் எழுந்து வரப் பெண்கள் கண்டார்கள். மேலான உயிர்த்தெழுதலை அடைந்துகொள்ளும்பொருட்டு, சிலர் விடுதலை பெற விரும்பாமல் வதைக்கப்பட்டு மடிந்தனர். வேறு சிலர் ஏளனத்துக்கும்

சாட்டையடிகளுக்கும் ஆளாயினர், விலங்கிடப்பட்டுச் சிறையில் வாடினர். கல்லால் எறியப்பட்டனர்; வாளால் அறுக்கப்பட்டனர்; பட்டயத்துக்கு இரையாயினர்; ஆட்டுத் தோலையும் செம்மறியின் தோலையும் போர்த்தி அலைந்தனர்; வறுமையுற்று வாடினர், துன்புறுத்தப்பட்டனர்; கொடுமைக்காளாயினர். உலகமோ அவர்களைக் கொண்டிருக்க அருகதையற்றுப் போயிற்று. குகைகளிலும் நிலப் பொந்துகளிலும் பாலை வெளிகளிலும் மலைகளிலும் அலைந்தனர்.

இவர்களனைவரும் விசுவாசம் கொண்டிருந்ததினாலே நற்பெயர் பெற்றனர். ஆயினும் வாக்களித்ததை அவர்கள் பெறவில்லை. ஏனெனில், நம்மோடு சேர்ந்தாலொழிய அவர்கள் நிறைவு பெறலாகாது என்று கடவுள் நம்மை மனத்திற்கொண்டு மேலானதொரு திட்டம் வகுத்திருந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 30 : 19-20a. 20bc. 21. 22. 23 (பல்லவி : 24)*

பல்லவி: ஆண்டவர் மீது நம்பிக்கையுள்ளவர்களே,
உங்கள் நெஞ்சம் உறுதி கொள்ளட்டும்.

19 ஆண்டவரே, உம்மை அஞ்சுவோர்க்கு நீர் சேர்த்துவைத்திருக்கும் அருள்
எத்துணை மிக்கது!

20 உம்மை நாடி வருவோர்க்கு அனைவர் முன்னிலையிலும் நீர் காட்டும் அருள்
எத்துணை மிகுதியானது. பல்லவி

எதிரிகளுடைய சதிகளினின்று உம்முடைய திருமுகத்தின் ஆதரவால் அவர்களைப் பாதுகாக்கின்றீர். தீ நாவுகளுடைய பேச்சுக்கு இரையாகாதபடி அவர்களை உம் கூடாரத்தில் ஒளித்துக் காக்கின்றீர். பல்லவி

21 ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக: ஏனெனில், அரண்கொண்ட நகரத்
தில் என்மீது தம் வியப்புக்குரிய இரக்கத்தைக் காட்டியுள்ளார். பல்லவி

22 நானோ "உம் திருமுன்னிலையிலிருந்து தள்ளிவிடப்பட்டேன்!" என்று
அச்சம் மேலிட்டவனாய்ச் சொல்லலானேன்: நீரோ என் வேண்டுதலின் குரலைக் கேட்கலானீர். நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது எனக்குச் செவி கொடுத்தீர். பல்லவி

23 ஆண்டவருடைய புனிதர்களே, அவருக்கு அன்பு காட்டுங்கள்: விசுவாச
முள்ளவர்களை ஆண்டவர் பாதுகாக்கிறார். செருக்குற்று நடப்பவர்களுக்கு அவர் நிறைவான தண்டனை அளிக்கின்றார். பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

*அப்சலோமின் கைக்குத் தப்பி ஓடுவோம். ஆண்டவருடைய கட்டளைப்படி செமேயி என்னைப் பழிக்கட்டும், தடைசெய்யாதீர்கள்.*

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்

*15:13-14. 30. 16:5-13a*

அந்நாட்களில் :

ஒரு தூதன் தாவீதிடம் வந்து, "இஸ்ராயேலர் அனைவரும் இப்போது முழு மனத்தோடு அப்சலோமைப் பின்பற்றி வருகின்றனர்" என்றான். இதைக் கேட்டுத் தாவீது யெருசலேமில் தம்முடன் இருந்த தம் ஏவலர்களை நோக்கி, "எழுந்திருங்கள், நாம் தப்பி ஓடுவோம்; இல்லாவிடில் நாம் அப்சலோமின் கைக்குத் தப்ப முடியாது. விரைவில் வெளியேறுங்கள். நாம் புறப்படுவதற்குமுன் ஒருவேளை அவன் வருவானாகில் நம்மையும் கொன்று நகரையும் வாளால் அழித்துவிடுவான்" என்றார்.

ஆனால் தாவீது மூடிய தலையுடன் அழுதுகொண்டு வெறுங்காலாய் ஒலிவ மலைமேல் ஏறிச் செல்ல, அவரோடு இருந்த மக்கள் அனைவரும் அவ்விதமே தலையை மூடிக்கொண்டு அழுதவராய் நடப்பார்கள்.

பிறகு தாவீது பாகூரிம்வரை வந்தார். அந்நேரத்தில் சவுலின் குடும்பத்தைச் சேர்ந்த கேராவின் மகனான செமேயி என்ற பெயருடைய ஒரு மனிதன் அங்கிருந்து புறப்பட்டு வசைமொழி கூறியவண்ணமாய் நடந்து வந்தான். எல்லா மக்களும் வீரர்களும் தாவீதின் வலப்புறமும் இடப்புறமுமாக நடந்து போகையில், அவன் தாவீதையும், அவருடைய எல்லா ஊழியர்களையும் கல்லால் எறியத் தொடங்கினான்.

செமேயி அரசரைப் பழித்துப் பேசி, "இரத்த வெறியனே, அப்பாலே போ! பெலியாலின் மனிதா, தொலைந்து போ! சவுலின் அரியணையை நீ அபகரித்துக் கொண்டதினால் அன்றோ, ஆண்டவர் சவுலின் வீட்டாருடைய இரத்தப் பழியை உன்மேல் வரச் செய்து, உன் அரசை உன் மகன் அப்சலோமுக்குக் கொடுத்திருக்கிறார்? இதோ, உன் தீச் செயல்களின் பாரம் உன்னை அழுத்துவது முறையே. ஏனெனில், நீ ஓர் இரத்த வெறியன்" என்று அரசரைத் திட்டினான்.

அப்போது சார்வியாவின் மகன் அபிசாயி அரசரைப் பார்த்து, "இந்தச் செத்த நாய் என் தலைவரான அரசரைப் பழிப்பது ஏன்? நான் போய் அவன் தலையைக் கொய்து வருகிறேன்" என்றான்.

அதற்கு அரசர், "சார்வியாவின் புதல்வர்களே, உங்களுக்கும் எனக்கும் என்ன? அவன் என்னைப் பழிக்கட்டும். தாவீதைப் பழிக்க வேண்டும் என்று ஆண்டவர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்க, 'அவன் இவ்வாறு செய்வானேன்?' என்று சொல்லத் துணிகிறவன் யார்?" என்றார். மீண்டும் அரசர் அபிசாயியையும் தம் ஊழியர்கள் அனைவரையும் நோக்கி, "இதோ, எனக்குப் பிறந்த என் மகனே, என் உயிரைப் பறிக்கத் தேடும்போது, இந்த பென்யமின் மகன் அதிகமாய்ச் செய்தாலும் வியப்புற வேண்டாம். ஆண்டவருடைய கட்டளையின்படி அவன் என்னைப் பழிக்கட்டும்; தடை செய்யாதீர்கள். ஒருவேளை ஆண்டவர் நான் படும் இன்னல்களைக் கண்ணோக்கி இன்றைய இச் சாபத்துக்குப் பதிலாக எனக்கு நன்மை செய்வார்" என்றார். அதன்படியே தாவீதும் அவரோடு இருந்த அவர் தோழர்களும் தம் வழியே நடந்து போனார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 3:1-2. 3-4. 5-7a (பல்லவி: 7a)

பல்லவி : **ஆண்டவரே, எழுந்தருளும், என்னைக் காத்தருளும்.**

1 ஆண்டவரே, என்னைத் துன்புறுத்துவோர் பலராயுள்ளர்; எனக் கெதிராய்க் கலகம் விளைப்போர் பலராயுள்ளர்.
2 "அவனுக்கெங்கே கடவுள் துணைபுரியப் போகிறார்?" என்று என்னை இழித்துரைப்போர் பலராயுள்ளர். பல்லவி

3 ஆனால், ஆண்டவரே, என்னைக் காப்பவர் நீரே: எனக்குப் பெருமை தருபவர் நீரே; நான் தலை நிமிரத் துணை செய்பவர் நீரே.
4 கடவுளை நோக்கிக் கூக்குரலிட்டேன்: தமது புனித மலையிலிருந்து என் குரலுக்குச் செவிசாய்த்தார். பல்லவி

5 இனி நான் படுத்து உறங்குவேன், விழித்தெழுவேன்: ஏனெனில், ஆண்டவரே எனக்கு ஆதரவாயிருக்கிறார்.
6 என்னை எதிர்க்கச் சூழ்ந்திருக்கும் ஆயிரமாயிரம் பகைவர்க்கு நான் அஞ்சேன்.
7 ஆண்டவரே எழுந்தருளும்; என் இறைவா என்னைக் காத்தருளும். பல்லவி

அல்லேலூயா லூக். 7:16

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடிவந்திருக்கிறார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அசுத்த ஆவியே இம் மனிதனை விட்டுப்போ.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:1-20

அக்காலத்தில் :

யேசுவும் அவர் சீடரும் அக்கரை சேர்ந்து கெரசேனர் நாட்டை அடைந்தனர். அவர் படகை விட்டுஇறங்கியதும் அசுத்த ஆவியேறிய ஒருவன் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிரே வந்தான். கல்லறைகளே அவன் தங்குமிடம். அவனை யாரும் சங்கிலியால்கூடக் கட்ட முடியவில்லை. ஏனெனில், பலமுறை அவனுக்கு விலங்கும் சங்கிலியும் மாட்டியிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்தெறிவான். யாரும் அவனை அடக்க முடியவில்லை. அவன் இரவு பகலாய் எந்நேரமும் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிடுவான். கற்களால் தன்னைக் கீறிக்கொள்வான்.

அவன் தொலைவிலிருந்து யேசுவைக் கண்டு ஓடிவந்து அவர் முன் பணிந்து, "யேசுவே, உன்னத கடவுளின் மகனே, என் காரியத்தில் ஏன் தலையிடுகிறீர்? கடவுள் பெயரால் உம்மைக் கேட்கிறேன், என்னை வதைக்கவேண்டாம்" என்று உரக்கக் கத்தினான். ஏனெனில் அவர், "அசுத்த ஆவியே, இவனை விட்டுப் போ" என்று சொல்லியிருந்தார். "உன் பெயர் என்ன?" என்று யேசு அவனைக் கேட்டார். "என் பெயர் 'படை', ஏனெனில் நாங்கள் பலர்" என்றான். அவற்றை அந்நாட்டை விட்டு விரட்டாதபடி அவன் அவரை வருந்தி வேண்டினான்.

அங்கே மலைச்சாரலில் பன்றிகள் பெருங் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. "நாங்கள் பன்றிகளுக்குள் போகும்படி எங்களை அனுப்பும்" என்று ஆவிகள் அவரை வேண்டவே, அவற்றிற்கு அவர் விடை கொடுத்தார். அசுத்த ஆவிகள் வெளியேறிப் பன்றிகளுக்குள் புகுந்தன. அப்பன்றிக் கூட்டம் மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து மூழ்கலாயிற்று. அவை ஏறக்குறைய இரண்டாயிரம் இருக்கும்.

அவற்றை மேய்த்தவர்களோ ஓடிப்போய் நகரிலும், நாட்டுப்புறத்திலும் இதை அறிவித்தனர். நடந்தது என்னவென்று பார்க்க மக்கள் வந்தனர். அவர்கள் யேசுவிடம் வந்து, பேய் பிடித்திருந்தவன்—முழுப் பேய்ப் படையே பிடித்திருந்த அவன் - ஆடையணிந்து தன்னுணர்வுடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அஞ்சினர். பார்த்தவர்கள் பேய் பிடித்திருந்தவனுக்கு நேர்ந்ததையும், பன்றிகளைப்பற்றிய செய்தியையும் அவர்களுக்குச் சொன்னார்கள். அப்பொழுது அவர்கள், தம் நாட்டை விட்டுச் செல்லுமாறு அவரை வேண்டத் தொடங்கினர்.

அவர் படகேறும்பொழுது, பேய் பிடித்திருந்தவன் தானும் அவருடன் இருக்க வேண்டும் என அவரை வேண்டலானான். ஆனால் அவர் அதற்கு இசையாமல் அவனைப் பார்த்து, "உன் வீட்டிற்கு உன் உற்றாரிடம் போ. ஆண்டவர் உன் மீது இரங்கி உனக்குச் செய்ததெல்லாம் அவர்களுக்குத் தெரிவி" என்றார். அவன் சென்று யேசு தனக்குச் செய்ததெல்லாம் தெக்கப்போலி நாட்டில் அறிவிக்கத் தொடங்கினான். கேட்டவரெல்லாம் வியப்புற்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நமக்குக் குறிக்கப்பட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக.**

*எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* **12 : 1-4**

*சகோதரர்களே :*

எண்ணிக்கையில்லாச் சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க, நமக்குத் தடையாயிருக்கும் எந்தச் சுமையையும், நம்மை எளிதில் வயப்படுத்தும் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. விசுவாசத்தைத் தொடங்கி வைத்தவரும் அதை நிறைவு பெறச் செய்பவருமான இயேசுவின்மேல் கண்களைப் பதிய வைப்போம். அவர் தம் முன்னே வைத்திருந்த மகிழ்ச்சியின் பொருட்டு நிந்தையைப் பொருட்படுத்தாமல், சிலுவையைத் தாங்கினார். இப்பொழுது கடவுளது அரியணையின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார்.

பாவிகளால் தமக்கு உண்டான எவ்வளவோ எதிர்ப்பைத் தாங்கிக் கொண்ட அவரைச் சிந்தையில் இருத்துங்கள். அப்போது நீங்கள் மனம் சோர்ந்து தளர்ந்து போகமாட்டீர்கள். பாவத்திற்கு எதிராகச் செய்யும் போராட்டத்தில், இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே !

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 21 : 25b-26. 27-29. 30-31 (பல்லவி: 26b)

பல்லவி : **ஆண்டவரைத் தேடுவோர் அவரைப் புகழ்வர்.**

25 அவருக்கு அஞ்சுவோர் முன்னிலையில் என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

26 எளியோர் உண்பர், நிறைவு பெறுவர், ஆண்டவரைத் தேடுவோர் அவரைப் புகழ்வர்: உங்களுடைய நெஞ்சங்கள் என்றென்றும் வாழ்க! என்பர். பல்லவி

27 பூவுலகின் கடையெல்லைகளில் உள்ளவர்கள் அனைவருமே இதை நினைத்து ஆண்டவரிடம் திரும்புவார்கள். உலகின் மக்களினங்களெல்லாம் அவர் திருமுன் விழுந்து வணங்குவார்கள்.

29 தரையினுள் துஞ்சுவோர் யாவரும் அவரை மட்டுமே ஆராதிப்பர்: கல்லறைக்குச் செல்லுகிற யாவரும் அவர்முன் தலை வணங்குவர். பல்லவி

30 நான் அவருக்காகவே வாழ்வேன்; என் சந்ததியார் அவருக்கே ஊழியம் செய்வர்.

31 வரப்போகிற தலைமுறையினருக்கு ஆண்டவரைக்குறித்துக் தெரிவிப்பார்கள் : பிறக்கப்போகும் மாந்தர்க்கு அவருடைய நீதியைக் குறித்து, 'இதெல்லாம் ஆண்டவருடைய செயல்' என்று அறிவிப்பார்கள். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**என் மகனே, அப்சலோம், உனக்குப் பதிலாக நான் சாவேனாக!**

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம்
18:9-10. 14b. 24-25a. 30-19:3

அந்நாட்களில் நிகழ்ந்ததாவது : அப்சலோம் கோவேறு கழுதை மேல் ஏறி வரும்போது, தாவீதின் வீரர்களைக் கண்டான். அந்நேரத்தில் அக்கோவேறு கழுதை பெரிய, அடர்ந்ததொரு கருவாலி மரத்தின் அடியில் சென்று கொண்டிருக்கும்போது, அப்சலோமுடைய தலை அம் மரத்தில் சிக்கிக் கொண்டது. அவன் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே தொங்கிக்கொண்டிருக்க, அவன் ஏறிவந்த கோவேறு கழுதை

அப்பால் ஓடிப்போயிற்று. இதை ஒருவன் கண்டு, யோவாபிடம் சென்று "கருவாலி மரத்தில் அப்சலோம் தொங்கக் கண்டேன்" என்று அறிவித்தான். யோவாப், தன் கையில் மூன்று ஈட்டிகளை எடுத்து வந்து அவற்றை அப்சலோமின் இதயத்தில் பாய்ச்சினான்.

தாவீது இரண்டு வாயில்களுக்கு இடையே உட்கார்ந்திருந்தார். ஆனால் நகர மதிலின் வாயிலுக்குமேல் இருந்த காவலன் தன் கண்களை உயர்த்தி தனிமையாய் ஓடிவந்த ஒரு மனிதனைக் கண்டதும், அரசரைக் கூவி அழைத்து அவருக்கு அதை அறிவித்தான். அப்போது அரசர், "நீ அங்கே போய் நில்" என்றார். அவன் அப்படியே போய் நின்று கொண்டிருக்கையில், கூசாயி அவர் கண்ணில்பட்டான். அவன் நெருங்கி வந்து, "என் தலைவராகிய அரசே, நான் நற்செய்தி கொண்டுவருகிறேன். அதாவது, ஆண்டவர் உமது பக்கத்திலிருந்து உமக்கு எதிராய் எழுந்த அனைவருடைய கைகளினின்றும் இன்று உம்மைக் காப்பாற்றினார்" என்றான். அப்பொழுது அரசர் கூசாயியை நோக்கி, "என் மகன் அப்சலோம் நலந்தானா?" என்று கேட்டார். கூசாயி, "அவனுக்கு நேரிட்டதுபோல் என் தலைவராகிய அரசரின் எதிரிகளுக்கும், தீங்கு செய்ய உமக்கு எதிராய் எழும்பின யாவருக்கும் நிகழ்வதாக!" என்று மறுமொழி சொன்னான்.

அதைக் கேட்டு அரசர் மிகவும் துயருற்று, மேல் மாடியில் இருந்த தம் அறைக்குச் சென்று அழுதார். அவர் ஏறிப்போகையில், "என் மகன் அப்சலோம்! அப்சலோம், என் மகனே! உனக்குப் பதிலாக நான் சாவேன். என் மகனே, அப்சலோம்!" என்று புலம்பி அழுதார்.

"அரசர் தம் மகனைக் குறித்து அழுகிறார்" என்று யோவாபுக்கு அறிவிக்கப்பட்டது. அரசர் தம் மகனுக்காகப் புலம்புகிறார் என்ற செய்தியை அன்று மக்கள் கேள்விப்பட்டதின் பொருட்டு மக்கள் அனைவர்க்கும் அன்றைய வெற்றி துக்கமானதாக மாறிப்போயிற்று. போரில் புறமுதுகு காட்டி ஓடும் வீரர்கள் போன்று மக்களும் அன்று நகருக்குத் திரும்பினார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 85: 1-2, 3-4, 5-6 (பல்லவி: 1a)*

*பல்லவி:* **ஆண்டவரே, செவிசாய்த்து என்மன்றாட்டைக் கேட்டருளும்.**

1 ஆண்டவரே, செவிசாய்த்து என் மன்றாட்டைக் கேட்டருளும்: ஏனெனில், நான் ஏழையும் எளியவனுமாயிருக்கிறேன்.
2 நான் உமக்கு அடியான் என்பதால் என்னைக் காப்பாற்றியருளும்: என் இறைவா, உம்மீது நம்பிக்கை வைத்திருக்கிற ஊழியனை மீட்டருளும். பல்லவி

3 ஆண்டவரே, என்மேல் இரக்கமாயிரும்: ஏனெனில், எந்நேரமும் நான் உம்மை நோக்கி அபயக்குரல் எழுப்புகிறேன்.
4 ஆண்டவரே, என் ஆன்மாவை உம்மை நோக்கி எழுப்பினேன். ஆதலால் உம் ஊழியனுடைய உள்ளத்தை மகிழ்வித்தருளும். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவரே, நீர் நல்லவர்; கருணைமிக்கவர்; உம்மைக் கூவியழைக்கிற யாவருக்கும் மிகுந்த அருளன்பு காட்டுகிறவர்.
6 ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும். என் வேண்டுதலின் குரலுக்குச் செவிசாய்த்தருளும்.

*அல்லேலூயா* மத் 8:17

அல்லேலூயா. அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்; நம் நோய்களைச் சுமந்துகொண்டார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சிறுமியே, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திரு.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:21-43

*அக்காலத்தில்:*

யேசு படகேறி, மீண்டும் கடலைக் கடந்து, இக்கரையை அடைந்ததும் பெருங் கூட்டமாக மக்கள் அவரிடம் வந்தனர். அவர் கடலோரத்தில் இருந்தார். செபக்கூடத் தலைவர்களுள் ஒருவனுன யாயீர் என்பவன் வந்து, அவரைக்கண்டு, காலில் விழுந்து, "என் மகள் சாகக் கிடக்கிறாள். நீர் வந்து அவள்மீது உம் கைகளை வையும். அவள் குணமாகிப் பிழைத்துக் கொள்வாள்" என்று அவரை வருந்தி வேண்டினான். அவர் அவனுடன் சென்றார். பெருங்கூட்டம் அவரைப் பின்தொடர்ந்து நெருக்கியது.

வயது பன்னிரண்டு. மக்கள் பெரிதும் திகைத்துப்போயினர். இது யாருக்கும் தெரியக்கூடாது என்று அவர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டார். அவளுக்கு உணவு கொடுக்கச் சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர் யார்மேல் அன்புகூர்கிறாரோ அவனைக் கண்டித்துத் திருத்துகிறார்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *12:4-7. 11-15*

சகோதரர்களே :

பாவத்திற்கு எதிராகச் செய்யும் போராட்டத்தில், இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

தம் பிள்ளைகளிடம் பேசுவது போல் இறைவன் உங்களுக்குத் தந்த அறிவுரையை நீங்கள் மறந்து விட்டீர்களோ? "என் மகனே, ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்தும்போது, அதைப் பொருட்படுத்தாமலிராதே. அவர் தண்டிக்கும்போது, தளர்ந்து போகாதே. ஏனெனில், ஆண்டவர் யார்மேல் அன்புகூர்கிறாரோ, அவனைக் கண்டித்துத் திருத்துகிறார். தாம் ஏற்றுக் கொள்ளும் பிள்ளைகள் அனைவரையும் ஒறுக்கிறார்."

திருத்தப்படுவதற்காகத்தான் நீங்கள் துன்புறுகிறீர்கள். கடவுள் உங்களைத் தம் மக்கள் என நடத்துகிறார். தகப்பன் கண்டித்துத் திருத்தாத மகன் உண்டோ? கண்டித்துத் திருத்தம் பெறுவது இப்பொழுது இன்பமாயிராமல் துன்பமாகத்தான் தோன்றும். ஆனால் அவ்வாறு பயிற்றப்பட்டவர்கள் பின்னர் அமைதியையும் நீதி வாழ்வையும் பயனாகப் பெறுவர். எனவே, 'சோர்வுற்ற கைகளையும், தளர்ந்துபோன முழங்கால்களையும் திடப்படுத்துங்கள்.' 'நீங்கள் நடந்து செல்லும் பாதையை நேர்மையாக்குங்கள்.' அப்போதுதான் ஊனமான உறுப்பு, மூட்டுப் பிசகாது நலமடையும்.

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

மக்களைக் கணக்கிட்டதால் பாவம் செய்தது நானல்லவோ?
ஆடுகளுக்கு ஒப்பான இம்மக்கள் என்ன செய்தார்கள்?

சாமுவேல் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 24: 2.9-17

அந்நாட்களில் :

தாவீது அரசர் படைத்தலைவனை யோவாபை நோக்கி, "நான் மக்களின் எண்ணிக்கையை அறியும்படி நீ 'தான்' முதல் 'பெர்சபே' வரை உள்ள இஸ்ராயேலின் கோத்திரங்கள் முழுவதும் சென்று மக்களைக் கணக்கிடு" என்றார். அப்போது யோவாபு மக்கட் தொகையை அரசரிடம் சமர்ப்பித்தான். இஸ்ராயேலில் வாள் எடுக்கத்தக்க போர் வீரர் எட்டு லட்சம் மனிதரும், யூதாவில் ஐந்து லட்சம் போர் வீரர்களும் இருந்தனர்.

ஆனால் மக்களைக் கணக்கிட்ட பின் தாவீதின் இதயம் அவரை வாட்டியது. அவர் ஆண்டவரை நோக்கி, "நான் இப்படிச் செய்ததினால் பெரும் பாவம் செய்தேன். ஆயினும் ஆண்டவரே, நான் மதிகேடான முறையில் நடந்து கொண்டபடியால் அடியேனின் தீச்செயலை அகற்றியருள வேண்டுகிறேன்" என்றார். தாவீது அதிகாலையில் எழுந்திருந்த போது இறைவாக்கினரும் தாவீதின் திருக்காட்சியாளருமான காத் என்பவருக்கு ஆண்டவருடைய வார்த்தை வந்தது. "நீ தாவீதிடம் போய், 'இம் மூன்று காரியங்களில் ஒன்றை நீ தேர்ந்து கொள்ளலாம். அதில் உனக்குப் பிடித்தமானது எதுவோ அதை நான் உனக்குச் செய்வேன்' என்று ஆண்டவர் சொன்னார் என்று சொல்" என்பதாம்.

அதன்படியே காத் தாவீதிடம் வந்து அவரை நோக்கி, "உம்முடைய நாட்டில் ஏழு ஆண்டுகள் பஞ்சம் ஏற்படும். அல்லது மூன்று மாதம் நீர் உம் எதிரிகளுக்குப் பயந்து ஓட, அவர்கள் உம்மைப் பின் தொடரநேரிடும். இன்றேல் மூன்று நாட்களுக்கு உமது நாட்டில் கொள்ளை நோய் இருக்கும். எனவே, நீர் சிந்தனை செய்து, என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுமொழி சொல்ல வேண்டுமென்று சொல்லும்" என்றார். அப்பொழுது தாவீது காத் என்பவரை நோக்கி, "நான் பெரும் இக்கட்டில் அகப்பட்டிருக்கிறேன். ஆயினும், மனிதர்களுடைய கையில் விழுவதைவிட ஆண்டவரின் கைகளில் விழுவது நலம். (ஏனெனில் அவர் பேரிரக்கம் உள்ளவர்)" என்றார்.

அப்பொழுது ஆண்டவர் அன்று காலை தொடங்கி குறித்த காலம் வரை கொள்ளை நோய்வரச் செய்தார். அதனால் 'தான்' முதல் 'பெர்சபே' வரை மக்களில் எழுபதினாயிரம் பேர் இறந்தனர். மேலும் ஆண்டவரின் தூதர் யெருசலேமை அழிக்கும் பொருட்டுத் தம் கையை அதன் மேல் நீட்டின போது, ஆண்டவர் மக்களின் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கி, மக்களைக் கொன்று குவித்த வானவரை நோக்கி, "போதும் இப்போது உன் கையை நிறுத்து" என்றார். அந்நேரத்தில் ஆண்டவரின் தூதர் எபூசையனான அரெவுனா என்பவனுடைய களத்திற்கு அருகில் இருந்தார்.

தூதர் மக்களை வதைக்கிறதைக் கண்டபோது, தாவீது ஆண்டவரை நோக்கி, "பாவம் செய்தது நானன்றோ? தீச் செயல் புரிந்தது நானன்றோ? இந்த ஆடுகள் என்ன செய்தன? ஆதலால் உம்முடைய கை என்னையும் என் தந்தை வீட்டாரையும் வதைக்கக் கடவதாக" என்று விண்ணப்பம் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*(சங். 31: 1-2. 5. 6.7. (பல்லவி: 5c காண்)*

*பல்லவி :* ஆண்டவரே, பாவி என் குற்றத்தை மன்னித்தருளும்.

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ அவன் பேறு பெற்றவன்; எவன் பாவம் மறைக்கப்பட்டதோ அவனும் பேறு பெற்றவன்.

2 ஆண்டவர் எவன்மேல் பாவத்தைச் சுமத்தவில்லையோ அவன் பேறு பெற்றவன்; யாருள்ளத்தில் வஞ்சகம் இல்லையோ அவனும் பேறு பெற்றவன். பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன்; என் குற்றத்தை நான் உம் திருமுன் மறைத்தேனில்லை: "ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக்கொள்கிறேன்" என்றேன்; நீரும் என் குற்றத்தை மன்னித்தீர். பல்லவி

6 இதனால் நல்லவர் யாவரும் உம்மை நோக்கி வேண்டுவர்: நெருக்கடியான வேளையில் அவர்கள் உம்மை மன்றாடுவார்கள். வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும் அவர்களை நெருங்காது. பல்லவி

7 "ஆண்டவரே, நீர் எனக்கு அடைக்கலமாய் உள்ளீர். இன்னல்கள் அனைத்திலின்றும் என்னைக் காத்தருள்வீர்: உம் மீட்பால் வரும் மகிழ்வாலே என்னை அணைக்கின்றீர்." பல்லவி

அல்லேலூயா அரு 10:27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவிகொடுக்கின்றன: நானும் அவற்றை அறிவேன்: அவையும் என்னைப் பின் தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**சொந்த நாட்டைத் தவிர மற்றெங்கும் இறைவாக்கினருக்கு மதிப்பு உண்டு.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:1-6

அக்காலத்தில் :

யேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் சொந்த ஊருக்கு வந்தார். அவர் சீடரும் அவரைப் பின் தொடர்ந்தனர். ஓய்வுநாளன்று செபக் கூடத்தில் போதிக்கத் தொடங்கினார். கேட்டவர் பலர் மலைத்துப்போய், "இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது? என்னே இவர் பெற்ற ஞானம்! என்னே இவர் கையால்ஆகும் வல்ல செயல்! இவர் தச்சன் அல்லரோ? மரியாளின் மகன்தானே! யாகப்பன், சூசை, யூதா, சீமோன் இவர்களுடைய சகோதரர்தானே! இவர் சகோதரிகளும் இங்கு நம்மோடு இல்லையா?" என்று சொல்லி அவர் மட்டில் இடறல்பட்டனர்.

யேசு அவர்களை நோக்கி, "சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினருக்கு மதிப்பு உண்டு" என்றார். அங்கே பிணியாளர் ஒரு சிலர்மீது கைகளை வைத்துக் குணமாக்கியது தவிர வேறு ஒரு வல்ல செயலையும் செய்யமுடியவில்லை. அவர்களுக்கு விசுவாசமில்லாததைக் கண்டு அவர் வியப்புற்றார். சுற்றிலுமுள்ள ஊர்களில் போதித்துக்கொண்டு வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

***நீங்கள் வந்தடைந்திருப்பது சீயோன்மலை,***
***உயிருள்ள கடவுளின் நகர்.***

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *12:18-19.21-24*

சகோதரர்களே :

நீங்கள் வந்தடைந்திருப்பது சீனாய் மலையன்று: அம்மலையில் எரிகின்ற நெருப்பும், இருண்ட மேகமும் காரிருளும் சூழ்ந்திருந்தன; சூழல் காற்று வீசியது; எக்காளம் முழங்கியது; பேசும் குரலொன்று’ ஒலித்தது; அதைக் கேட்டு நின்றவர்கள், அக்குரல் அதற்குமேல் பேச வேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்கள். அக்காட்சி எவ்வளவு அச்சம் விளைத்ததென்றால் மோயீசனும், “நான் அச்சத்தால் நடுங்குகிறேன்’ என்றார்.

நீங்கள் வந்தடைந்திருப்பதோ சீயோன் மலை, உயிருள்ள கடவுளின் நகர், வானக எருசலேம். அங்கே எண்ணற்ற வானதூதர் சூழ்ந்துள்ளனர். வானகத்தில் பெயர் எழுதியுள்ள தலைப்பேறானவர்களின் திருச்சபை அங்கே விழாக் கூட்டமெனக் கூடியுள்ளது. நிறைவுபெற்ற நீதிமான்களின் ஆவிகளோடு சேர்ந்து அனைவருக்கும் நடுவரான கடவுள் முன்னிலையிலும், புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளரான யேசுவின் முன்னிலையிலும் நிற்கின்றீர்கள்; ஆபேலின் இரத்தத்தைவிட மேலான முறையில் கூக்குரலிடும் இரத்தத் தெளிப்பின் பயனைப்பெற வந்திருக்கிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 47:1-2a, 2b-3, 8.9-10 (பல்லவி:9 காண்க)

பல்லவி: இறைவா, உம் ஆலயத்தில் இரக்கம் பெற்றுள்ளோம்.

1 ஆண்டவர் மகத்துவமிக்கவர், நம் இறைவனின் நகரில் மிகுந்த
புகழ்ச்சிக்குரியவர்.
2 அவர்தம் மலை புனிதமானது, புகழ்மிக்கது. உலகனைத்திற்கும்
மகிழ்ச்சியாய் விளங்குவது.
பல்லவி

சீயோன் மலை வடகோடியில் உள்ளது. பேரரசரின் நகரம் அதுவே.
3 அதன் கொத்தளங்களில் கடவுள் உறைகின்றார். அசைக்க முடியாத
பாதுகாப்பாய் விளங்குகின்றார்.
பல்லவி

8 நாங்கள் கேள்வியுற்றது போலவே இருக்கக் கண்டோம். வான் படை
களுக்கு ஆண்டவராயுள்ளவரது நகரில் நிகழக் கண்டோம். நம்
இறைவனின் நகரில் கண்டோம். கடவுள் அதை என்றென்றைக்கும்
நிலைநிறுத்துகிறார்.
பல்லவி

9 இறைவா, உம் இரக்கத்தைத் தியானித்தோம்: உம் ஆலயத்தில் அதைச்
சிந்தனை செய்தோம்.
10 இறைவா, உமது பெயரைப்போலவே உமது புகழும் பூமியின்
கடையெல்லைவரை எட்டுகின்றது: உமது வலக்கரம் நீதியால் நிரம்பி
யுள்ளது.
பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**எல்லோரையும்போல் நானும் இறக்கும் காலம் வந்துவிட்டது;**
**நீ மனத்திடன் கொள்; ஆண்மையோடு நட.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 2:1-4. 10-12

தாவீதின் இறுதிக்காலம் நெருங்கினபோது, தம் மகன் சாலமோனுக்குக் கட்டளையிட்டுக் கூறிய அறிவுரையாவது: "எல்லாரையும் போல் நானும் இறக்கும் காலம் வந்துவிட்டது; நீ மனத்திடன் கொள்; ஆண்மையோடு நட. உன் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளைக் கடைப்பிடி; அவரைப் பின்பற்றி நட. மோயீசனின் சட்ட நூலில் எழுதப்பட்டுள்ளதுபோல், நீ செய்வதையெல்லாம் விவேகத்தோடு செய்ய, கடவுளுடைய திருச்சடங்குகளையும் அவர் கட்டளைகளையும் முடிவுகளையும்

சான்றுகளையும் கடைப்பிடி. ஏனெனில் என்னை நோக்கி, 'உன் புதல்வர்கள் தங்கள் முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் தம் திருமுன் நேர்மையுடன் நடந்து வருவார்களானால், இஸ்ரயேலின் அரியணை ஒருபோதும் ஆளின்றிக் காலியாக விடப்படமாட்டாது' என்று ஆண்டவர் எனக்குக் கொடுத்த வாக்குறுதி அப்போதுதான் நிறைவேறும்."

பிறகு தாவீது தம் மூதாதையரோடு துயில் கொண்டு தாவீதின் நகரில் புதைக்கப்பட்டார். தாவீது இஸ்ரயேலரை நாற்பது ஆண்டுகள் ஆண்டு வந்தார். எபிரோனில் ஏழு ஆண்டுகளும் எருசலேமில் முப்பத்து மூன்று ஆண்டுகளும் ஆட்சி புரிந்தார்.

சாலமோன் தம் தந்தை தாவீதின் அரியணையில் வீற்றிருக்க அவருடைய ஆட்சி மிகவும் உறுதியடைந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

1 நாள. 29: 10b-11ab, 11cd-12a, 12bcd. (பல்லவி: 12b)

பல்லவி: ஆண்டவரே, அனைத்தையும் நீரே ஆள்கின்றீர்.

10 எங்கள் தந்தையாகிய இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவரே, நீர் என்றென்றும் வாழ்த்தப்பெறுவீர். - பல்லவி

11 ஆண்டவரே, பெருமையும் மகிமையும் வல்லமையும் வெற்றியும் உமக்கே உரியன. புகழும் உமக்கே உரியது. விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைத்தும் உமக்குரியவையே. - பல்லவி

12 அரசும் உமக்குரியதே. ஆண்டவரே, நீரே மன்னருக்கு மன்னர், செல்வமும் மகிமையும் உமக்குரியன.

அனைத்தையும் நீரே ஆள்கின்றீர். உமது கரத்தில் ஆற்றலும் வல்லமையும் உண்டு. எல்லாப் பெருமையும் ஆற்றலும் உம் கரங்களிலே இருக்கின்றன.

அல்லேலூயா மாற்கு 1:15

அல்லேலூயா. கடவுளரசு நெருங்கி விட்டது;
நற்செய்தியை நம்புங்கள். அல்லேலூயா.

### நற்செய்தி வாசகம்

**அவர்களை அனுப்பத் தொடங்கினார்.**

மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

*6:7-13*

அக்காலத்தில் :

யேசு பன்னிருவரையும் அழைத்து இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார். அவர்களுக்கு அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம் அளித்தார்.

மேலும் பயணத்துக்கு ஒரு கோல் தவிர, பையோ உணவோ, மடியில் காசோ கொண்டுபோக வேண்டாம் என்று கட்டளையிட்டார். ஆனால், "மிதியடி போட்டுக் கொள்ளலாம். உள்ளாடை இரண்டு அணிய வேண்டாம்" என்றார்.

பின்னும் அவர்களுக்குக் கூறியது : "நீங்கள் எங்கேயாவது ஒரு வீட்டிற்குச் சென்றால் அவ்வீட்டிலிருந்து போகும் வரை அங்கேயே தங்கியிருங்கள். எந்த ஊராவது உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்களுக்குச் செவிசாய்க்காமலும் இருந்தால், நீங்கள் அங்கிருந்து வெளியேறி அவர்களுக்கு எதிர் சாட்சியாக உங்கள் காலிலிருக்கும் தூசியைத் தட்டிவிடுங்கள்."

அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனந்திரும்ப வேண்டுமென்று அறிவித்தனர். பேய்கள் பல ஓட்டினர். பிணியாளர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**யேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

*13:1-8*

சகோதரர்களே :

சகோதர அன்பில் நிலைத்திருங்கள். விருந்தோம்பலை மறவாதீர்கள். விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களையும்

உபசரித்ததுண்டு. சிறைப்பட்டுள்ளவர்களோடு நீங்களும் சிறைப்பட்டிருப்பதுபோல, அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். துன்புறக்கூடிய உடல் உங்களுக்கும் உள்ளதால், துன்புறுத்தப்படுபவர்களை மறவாதீர்கள். திருமணம் அனைவராலும் பெரிதும் மதிக்கப்படுவதாக. பள்ளியறை மஞ்சம் மாசுறாது இருக்கட்டும். காமுகரும் விபச்சாரரும் கடவுள் தீர்ப்புக்கு உள்ளாவர். பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளது போதுமென்றிருங்கள். ஏனெனில், 'நான் ஒருபோதும் உன்னைக் கைவிடேன்; உன்னை விட்டுப் பிரியேன்' என்று இறைவனே கூறுகிறார். இதனால் நாம் துணிவோடு 'கடவுளே எனக்குத் துணை, அஞ்சேன். மனிதர் எனக்கு என்ன செய்ய முடியும்?' என்று சொல்ல முடியும்.

உங்களுக்குக் கடவுளின் வார்த்தையை எடுத்துச் சொன்ன உங்கள் தலைவர்களை நினைவுகூருங்கள். அவர்களது வாழ்வின் நற்பயனை எண்ணிப் பார்த்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.

யேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங் 26:1. 3. 5. 8b-9abc (பல்லவி: 1a)

பல்லவி: ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு, நான் யாருக்கு அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான் நடுங்க வேண்டும்? பல்லவி

3 எனக்கெதிராய் அவர்கள் பாளையம் இறங்கினாலும் என் நெஞ்சம் கலங்காது; எனக்கெதிராய்ப் போரெழுந்தாலும் நான் நம்பிக்கையோடிருப்பேன். பல்லவி

5 கேடுவரும் நாளில் அவர் என்னைத் தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார்: தம் கூடாரத்தின் உட்புறத்தில் என்னை ஒளித்து வைப்பார்; உயர்ந்ததொரு பாறையில் என்னைத் தூக்கி வைப்பார். பல்லவி

8 ஆண்டவரே, நீர் எனக்கு இன்முகம் காட்டவேண்டுமென விழைகிறேன்.
9 உம்முகத்தை எனக்கு மறைத்துக்கொள்ளாதேயும்: சினங்கொண்டு உம் ஊழியனைத் தள்ளி விடாதேயும். நீரே எனக்குத் துணை, என்னைத் தள்ளி விடாதேயும். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*தாவீது தம் முழு இதயத்தோடு ஆண்டவரைப் புகழ்ந்தார்; கடவுளை அவர் நேசித்தார்.*

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 47 : 2-13

தசையினின்று பிரிக்கப்பட்ட கொழுப்பைப்போல், இஸ்ராயேல் மக்களிடையே தாவீது இருந்தார்.

அவர் செம்மறிக்குட்டிகளோடு விளையாடுவதுபோலச் சிங்கங்களோடு விளையாடினார்; தமது இளமையில் ஆட்டுக்குட்டிகளோடு நடந்துகொள்வதுபோலக் கரடிகளோடு நடந்துகொண்டார். அரக்கனை அவர் கொல்லவில்லையா? மக்களிடத்தினின்று நிந்தையை நீக்கிவிடவில்லையா? அவர் கையைத் தூக்கிக் கவண் கல்லால் கோலியாத்தினுடைய அகந்தையைத் தாழ்த்தினார். ஏனென்றால், எல்லாம் வல்ல ஆண்டவரை மன்றாடினார். போரில் வீரனான மனிதனை அவர் கையளித்தார். அவர் மக்களின் கொம்பை உயர்த்தினார். இவ்வாறே பதினாயிரம் பேருக்குள்ளாக அவரை மகிமைப்படுத்தினார்; அவருக்கு மகிமையின் முடியைக்கொடுத்து ஆண்டவருடைய ஆசியால் அவரை வாழ்த்தினார்.

ஏனென்றால், எப்பக்கத்திலும் பகைவர்களை முறியடித்தார்; எதிரிகளான பிலிஸ்தியரை இற்றைவரைக்கும் அழித்தொழித்தார்; எப்போதுமே அவர்களுடைய அதிகாரத்தை ஒழித்தார்.

அவர் எல்லாக் காரியங்களிலும் பரிசுத்தருக்கு துதி செய்தார். மகிமையின் வார்த்தையால் உன்னத கடவுளைப் புகழ்ந்தார். தம் முழு இதயத்தோடு ஆண்டவரைப் புகழ்ந்தார்; தம்மை உண்டாக்கின கடவுளை நேசித்தார். அவருக்கோ பகைவருக்கு விரோதமாய் ஆண்டவர் அதிகாரம் கொடுத்தார்.

அவர் பீடத்திற்கு முன்பாகப் பாடகர் நிற்கும்படி செய்தார். அவர்களுடைய குரலால் இனிதான இராகங்களை எழுப்பினார். திருவிழாக்களில் ஆடம்பரத்தைப் புகுத்தினார். ஆண்டவருடைய புனிதப் பெயரைத் துதிக்கவும், காலைமுதல் கடவுளுடைய புனிதத்துவத்தை மேன்மைப் படுத்தவும் வாழ்வின் முடிவு வரையிலும் காலங்களை அலங்கரித்தார்.

ஆண்டவர் அவருடைய பாவங்களைப் பரிகரித்தார்; அவர் அதிகாரத்தை எப்போதைக்கும் உயர்த்தினார்; அரசின் உடன்படிக்கையையும், இஸ்ராயேலில் மகிமையின் அரியணையையும் அவருக்குக் கொடுத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 17:30. 46.49.50 (பல்லவி: 46bகாண்.)

பல்லவி: என் மீட்பரான இறைவன் புகழப்படுவாராக.

30 கடவுள் காட்டும் வழி குற்றமற்றது, ஆண்டவருடைய வாக்குறுதி புடமிடப்பட்டது; அவரிடம் அடைக்கலம் புகுவோரனைவருக்கும் அவரே கேடயம். பல்லவி

46 ஆண்டவர் வாழ்க, என் கற்பாறையாகிய அவர் வாழ்த்தப்பெறுவாராக: என் மீட்பரான இறைவன் பெரிதும் புகழப்படுவாராக.
49 ஆதலால் ஆண்டவரே, மக்களிடையே உம்மைப் புகழ்ந்தேத்துவேன்: உமது பெயருக்குப் புகழ்ச்சிப்பா இசைப்பேன். பல்லவி

50 நீர் ஏற்படுத்திய அரசருக்குப் பெரிய வெற்றிகளை அளித்தவர் நீரே: உம்மால் அபிஷேகமான தாவீதுக்கும் அவர் தலைமுறைக்கும் என்றென்றும் இரக்கம் காட்டியவர் நீரே. பல்லவி

அல்லேலூயா லூக். 8:15 காண்

அல்லேலூயா. இறைவனின் வார்த்தையைக் கேட்டு, சீரிய செம்மனத்தில் பதித்து, நிலையாயிருந்து பலன் அளிப்பவர் பேறுபெற்றோர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அருளப்பர் தலையை நான் வெட்டினேன்:**
**ஆனால் அவர் உயிர்த்திருக்கிறார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:14-29

அக்காலத்தில்:

ஏரோது அரசன் யேசுவைப்பற்றிக் கேள்வியுற்றான். ஏனெனில், அவர் பெயர் எங்கும் விளங்கிற்று மக்களும், "ஸ்நாபக அருளப்பர் இறந்தோரிடமிருந்து உயிர்த்திருக்கிறார். ஆதலால் புதுமை செய்யும்

வல்லமை இவரிடம் செயலாற்றுகிறது'' என்றனர். "இவர் எலியாஸ்'' என்றனர் சிலர். "இறைவாக்கினர்களைப்போல் இவரும் ஓர் இறைவாக்கினர்'' என்றனர் வேறு சிலர். இதைக் கேட்ட ஏரோது, "இவர் அருளப்பர்தான். அவர் தலையை நான் வெட்டினேன். ஆனால் அவர் உயிர்த்திருக்கிறார்'' என்றான்.

இந்த ஏரோது தன் சகோதரன் மனைவி ஏரோதியாளின் பொருட்டு, ஆள்விட்டு அருளப்பரைப் பிடித்துச் சிறையில் விலங்கிட்டிருந்தான். ஏனெனில், அவளைத் தன் மனைவியாக்கியிருந்தான். அருளப்பரோ ஏரோதிடம், "உன் சகோதரன் மனைவியை நீ வைத்திருக்கலாகாது'' என்று சொல்லி வந்தார். ஏரோதியாள் அவர்மேல் வர்மம் கொண்டு, அவரைக் கொல்ல விரும்பியும் முடியாமல் போயிற்று. ஏனெனில், அருளப்பர் நீதிமானும் புனிதரும் என்றறிந்த ஏரோது அவருக்கு அஞ்சி, அவரைப் பாதுகாத்து வந்தான். அவர் சொல்லைக் கேட்கும்போது கலக்கமுறுவான். ஆயினும் அவருக்கு மனமுவந்து செவி சாய்ப்பான்.

ஒருநாள் ஏரோதியாளுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது ஏரோது, தன் பிறப்பு விழாவில் பெருங்குடி மக்களுக்கும் படைத் தலைவர்க்கும் கலிலேயாவின் பெரியோர்க்கும் விருந்து செய்தான். அந்த ஏரோதியாளின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் மகிழ்வித்தாள். அரசன் சிறுமியிடம், "உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன்'' என்றான். "நீ என்ன கேட்டாலும், அது என் அரசில் பாதியேயானாலும், உனக்குக் கொடுக்கிறேன்'' என்று ஆணையுமிட்டான். அவள் வெளியே சென்று, "என்ன கேட்கலாம்?'' என்று தன் தாயை வினவினாள். அவளோ, "ஸ்நாபக அருளப்பரின் தலையைக் கேள்'' என்றாள்.

உடனே அவள் அரசனிடம் விரைந்து வந்து, "ஸ்நாபக அருளப்பரின் தலையை இப்போதே ஒரு தட்டில் எனக்குக் கொடுக்கவேண்டும்'' என்று கேட்டாள். அரசன் மிக வருத்தமுற்றான். ஆனால், தன் ஆணையின் பொருட்டும் விருந்தினர் பொருட்டும் அவளுக்கு மறுத்துச் சொல்ல விரும்பவில்லை. உடனே அரசன் ஒரு கொலைஞனை அனுப்பி அவருடைய தலையை ஒரு தட்டில் கொண்டுவரக் கட்டளையிட்டான். அவன் போய்ச் சிறையில் அவருடைய தலையை வெட்டினான். அதைத் தட்டில் கொண்டு வந்து சிறுமியிடம் கொடுக்க அவளும் தன் தாயிடம் கொடுத்தாள்.

இதைக் கேள்விப்பட்டு அவருடைய சீடர்கள் வந்து அவருடலை எடுத்துச் சென்று கல்லறையில் வைத்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*சமாதானத்தின் ஊற்றாகிய கடவுள் மகத்துவமிக்க நல்லாயரான யேசுவை இறந்தோரிடமிருந்து எழுப்பினார்: எல்லா நன்மையும் செய்ய அவர் உங்களுக்குத் தகுதி அளிப்பாராக.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 13:15-17. 20-21

சகோதரர்களே :

நாம் யேசு வழியாக எப்போதும் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியை ஒப்புக்கொடுப்போமாக. அவருடைய பெயரை அறிக்கை செய்வதால் நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலி. பிறருக்கு உதவிபுரியவும், உங்களுக்குள்ளதைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளையே கடவுள் உவந்து ஏற்கிறார்.

உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள்: அவர்களுக்குப் பணிந்திருங்கள். அவர்கள் உங்களைக் குறித்துக் கணக்குக் கொடுக்கவேண்டும் என்பதால், உங்கள் ஆன்ம நலனில் விழிப்பாய் இருக்கின்றனர். இப்பொறுப்பு அவர்களுக்கு மகிழ்ச்சியானதாய் இருக்கும்படி நடந்து கொள்ளுங்கள். மனத்துயர் தராதீர்கள். அவர்களுடைய துயரம் உங்களுக்கு நலம் பயக்காது.

ஆடுகளின் மகத்துவமிக்க மேய்ப்பரான நம் ஆண்டவராகிய யேசுவை, முடிவில்லா உடன்படிக்கையின் இரத்தத்தை முன்னிட்டு, இறந்தோரிடமிருந்து எழுப்பியவரும் சமாதானத்தின் ஊற்றுமாகிய கடவுள், தமது திருவுளத்தை நீங்கள் நிறைவேற்றும்படி, எல்லா நன்மையும் செய்ய உங்களுக்குத் தகுதி அளித்து, தமக்கு உகந்ததை யேசு கிறிஸ்துவின் வழியாக நம்மில் செய்தருள்வாராக. யேசு கிறிஸ்துவுக்கேஎன்றென்றும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங் 22:1-3a. 3b-4.5.6. (பல்லவி: 1)

பல்லவி: **என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!**

1 என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
3 என் களைப்பை ஆற்ற நீர்அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்:
எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய வழியில்
செலுத்துகின்றார்.
4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்,
தீமையானதெதற்கும் அஞ்சேன்: ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர்;
உமது கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர்.
என் தலைக்கு எண்ணெய் பூசினீர்: என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது·
பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும்; என் வாழ்நாளெல்லாம்
என்னைத் தொடரும்: ஆண்டவர்தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்;
ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**உம் மக்களுக்கு நீதி வழங்க ஞானத்தை எனக்கு அளித்தருளும்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 3 : 4-13

அந்நாட்களில் :

காபாவோன் மிக உயர்ந்த மேடாய் இருந்ததால் சாலமோன் ஒருநாள் அங்குச் சென்று, அந்தக் காபாவோன் பலிபீடத்தில் ஆயிரம் தகனப் பலிகளைச் செலுத்தினார். அன்றிரவு ஆண்டவர் கனவில் தோன்றி " நீ விரும்புவதைக் கேள் " என்றார்.

அதற்குச் சாலமோன், "உம் அடியாராகிய என் தந்தை தாவீது உம் திருமுன் உண்மையுடனும் நீதியுடனும் நேரிய உள்ளத்துடனும் உம்மோடு நடந்து வந்ததற்கு ஏற்ப நீர் அவர் மேல் பேரிரக்கம் கொண்டீர். அப்பேரிரக்கத்தை என்றும் அவருக்குக் காட்டி இன்று உள்ளதுபோல் அவரது அரியணையில் வீற்றிருக்க ஒருமகனை அவருக்குத் தந்துள்ளீர். இப்போது, என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் உம் அடியானை என் தந்தை தாவீதுக்குப்பதிலாக அரியணையில் ஏற்றினீர். நானோ சிறுவன்; எதையும் தலைமை ஏற்று நடத்தும் ஆற்றல் அற்றவன். நீர் தேர்ந்து கொண்டவர்களும், எண்ணிக்கைக்குள் அடங்காத, மதிப்பிட முடியாதவர்களுமான திரளான மக்களாகிய உம் மக்கள் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமையைப் பகுத்தறியவும் வேண்டிய ஞானத்தை அடியேனுக்கு அளித்தருளும்; ஏனெனில், கணக்கற்ற இந்த உம் மக்களுக்கு நீதி வழங்க யாரால் முடியும்?" என்றார்.

சாலமோன் சொன்ன சொற்களும், செய்துகொண்ட விண்ணப்பமும் ஆண்டவருக்குப் பிடித்திருந்தன. ஆகையால் ஆண்டவர் அவரை நோக்கி, "உனக்கென நீடிய ஆயுளையும் மிகுந்த செல்வத்தையும் உன் எதிரிகளின் உயிர்களையும் கேளாமல், நீ இதையே கேட்டு, நீதி வழங்குவதற்கு ஏற்ற ஞானத்தை உனக்குத் தரவேண்டும் என்று நீ மன்றாடினதால், உன் வார்த்தையின் படியே நாம் உனக்குச் செய்தோம். ஞானமும் அறிவும் உள்ள இதயத்தை உனக்குத் தந்தோம். இதில் உனக்கு இணையானவன் இதற்குமுன் இருந்ததுமில்லை; இதற்குப்பின் இருக்கப் போவதுமில்லை. இதுவுமன்றி, நீ நம்மிடம் கேளாத செல்வத்தையும் புகழையும் நாம் உனக்குத் தந்தோம். இதற்குமுன் இருந்த அரசர்களில் ஒருவன்கூட உனக்கு இணையாய் இருந்ததில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங் 118 : 9. 10. 11. 12. 13. 14. (பல்லவி : 12b)

பல்லவி ஆண்டவரே, உமது நியமங்களை எனக்குக் கற்பித்தருளும்.

9 இளைஞன் தான் செல்லும் வழியில் புனிதனாய் எங்ஙனம் நடக்க இயலும்?
உம் வார்த்தையைக் கடைப்பிடிப்பதால்தான்.

பல்லவி

10 முழு மனத்தோடு நான் உம்மைத் தேடுகிறேன்: உம் கற்பனைகளை விட்டுத்
தவறிச் செல்ல என்னை விடாதேயும்.

பல்லவி

11 உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன். பல்லவி

12 ஆண்டவரே, நீர் வாழ்த்துக்குரியவர்: எனக்கு உம் நியமங்களை கற்பித் தருளும். பல்லவி

13 நீர் திருவாய் மலர்ந்து வெளிப்படுத்திய முறைமைகளையெல்லாம் என் நாவினால் எடுத்தியம்புகின்றேன். பல்லவி

14 பெருஞ் செல்வத்தில் மகிழ்ச்சி கொள்வதுபோல், நான் உம் ஆணைகளைக் குறித்து மகிழ்ச்சி கொள்கிறேன். பல்லவி

அல்லேலூயா அரு 10:27

அல்லேலூயா. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவி கொடுக்கின்றன. நானும் அவற்றை அறிவேன். அவையும் என்னைப் பின்தொடர்கின்றன என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவர்கள் ஆயனில்லா ஆடுகளைப்போல் இருந்தார்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:30-34

அக்காலத்தில்:

அப்போஸ்தலர் யேசுவிடம் வந்து கூடித் தாங்கள் செய்தது போதித்ததெல்லாம் அவருக்குத் தெரிவித்தனர். அவர் அவர்களைப் பார்த்து, "நீங்கள் தனிமையான இடத்துக்கு ஒதுக்கமாக வந்து சற்றே இளைப்பாறுங்கள்" என்றார். ஏனெனில், பலர் வருவதும் போவதுமாயிருந்தனர். உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரங் கிடைக்கவில்லை.

அவர்கள் படகேறி, தனிமையான இடத்துக்கு ஒதுக்கமாகச் சென்றனர். அவர்கள் போவதை மக்கள் கண்டார்கள். இதைப் பலர் தெரிந்துகொண்டு எல்லா ஊர்களிலிருந்தும் கால்நடையாகக் கூட்டமாய் ஓடி அவர்களுக்கு முன் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

யேசு கரையில் இறங்கியபோது பெருங்கூட்டத்தைக் கண்டார். ஆயனில்லா ஆடுகள் போல் இருந்ததால் அவர்கள் மீது மனமிரங்கி நெடு நேரம் போதிக்கலானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஐந்தாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

முதல் வாசகம்

**உன் ஒளி காலைக் கதிரவன் போலத் தோன்றும்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 58:7-10

ஆண்டவர் கூறுவதாவது:

"பசித்திருப்பவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு, ஏழைகளுக்கும் அகதிகளுக்கும் உன் வீட்டில் தங்குவதற்கு இடங்கொடு; ஆடை இல்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து; உன் இனத்தானை அவமதிக்காதே.

அப்போது, உன் ஒளி காலைக் கதிரவன் போலத் தோன்றும், விரைவில் உனக்கு நலம் கிடைக்கும்; உன் நீதி உனக்கு முன் நடக்கும், ஆண்டவருடைய மகிமை உன்னைப் பின் தொடரும்.

அப்போது, ஆண்டவரைக் கூவியழைப்பாய், அவரும் உன் மன்றாட்டைக் கேட்டருள்வார்; அவரை நோக்கிக் கூக்குரலிடுவாய், அவரும், இதோ "இருக்கிறேன்" என்பார்.

உன் நடுவிலிருந்து நுகத்தடியைத் தள்ளிவிட்டு, உன் அயலானுக்கு எதிராய்க் கைபோடாமல், அடாததொன்றையும் சொல்லாமல் இருந்தால், பசித்திருப்பவனுக்கு உன் உணவைப் பகிர்ந்து, துன்புற்றவன் விருப்பத்தை நிறைவு செய்தால், உன் வெளிச்சம் இருள் நடுவில் உதயமாகும், உன் காரிருள் பட்டப்பகல்போல் இருக்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 111:4-5. 6 7. 8a & 9 (பல்லவி : 4a)

பல்லவி : நேர்மையுள்ளவரிடையே அவன் இருளில் ஒளியென விளங்குவான்.

அல்லது அல்லேலூயா.

4 இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான்: கருணை, இரக்கம், நீதி உள்ளவனாய் இருப்பான்.
5 மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிறான்: தன் அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே. பல்லவி

6 எந்நாளும் அவன் அசைவுறான்: என்றென்றும் அவன் மக்கள் நினைவில் வாழ்வான்.
7 தீமையான செய்தி எதுவும் அவனை வருத்தத்துக்கு உள்ளாக்காது: அவன் இதயம் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து, எதையும் தாங்கக் கூடியது. பல்லவி

8 அவன் நெஞ்சம் நிலையாய் இருக்கும்; அவனுக்கு அச்சம் மேலிடாது.
9 ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பான்;
அவனது ஈகை என்றும் நிலைத்திருக்கும்:
அவனது வலிமை மகிமை பெற்று விளங்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

***சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவின் மறைபொருளை உங்களுக்கு அறிவித்தேன்.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 2:1-5

சகோதரர்களே, கடவுளின் மறைபொருளை அறிவிக்க நான் உங்களிடம் வந்தபோது சிறந்த சொல் வன்மையையோ, ஞானத்தையோ காட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில், நான் உங்களிடையே இருந்தபோது யேசு கிறிஸ்துவைத் தவிர, அதுவும் சிலுவையில் அறையுண்ட அவரைத் தவிர வேறெதையும் விரும்பவில்லை.

உங்களோடு இருந்தபோது வலுவற்றவனாய் மிகுந்த அச்ச நடுக்கத்தோடு இருந்தேன். நான் சொன்னதும் அறிவித்ததும் மனித ஞானத்தின் கவர்ச்சியான சொற்களில் அமையவில்லை; ஆவியானவரும்,

அவரது வல்லமையும் தந்த அத்தாட்சியின்மீது அமைந்தன. உங்கள் விசுவாசம் மனிதர்களின் ஞானத்தில் ஊன்றியிராமல் கடவுளின் வல்லமையிலே ஊன்றியிருக்க வேண்டுமென்றே இவ்வாறாயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அரு. 8:12

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நானே உலகின் ஒளி ;
என்னைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக்
கொண்டிருப்பான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*உலகிற்கு ஒளி நீங்கள்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:13-16

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"உலகிற்கு உப்பு நீங்கள். உப்பு சாரமற்றுப் போனால் வேறு எதனால் சாரம் பெறும்? இனி, வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடுமே யொழிய, ஒன்றுக்கும் உதவாது.

உலகிற்கு ஒளி நீங்கள். மலைமேல் உள்ள ஊர் மறைவாயிருக்க முடியாது. மேலும், விளக்கைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைக்க மாட்டார்கள். மாறாக, வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும்பொருட்டு விளக்குத் தண்டின்மீது வைப்பார்கள்.

அப்படியே, மக்கள் உங்கள் நற்செயல்களைக்கண்டு, வானகத்திலுள்ள உங்கள் தந்தையை மகிமைப்படுத்தும்படி உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**விடியும் வரை படுக்கையில் புரண்டு புரண்டு சலிப்புறுகிறேன்.**

யோபு ஆகமத்திலிருந்து வாசகம் *7:1-4. 6-7*

யோபு கூறியதாவது :

"மனிதனின் வாழ்நாள் உலகில் போர்ச்சேவை நாள் அன்றோ? அவனுடைய நாட்கள் கூலியாளின் நாட்கள் போன்றவை அல்லவா? அடிமை ஊழியன் நிழலுக்கு ஏங்குவது போலும், கூலியாள் தன் கூலியையே எதிர்பார்ப்பது போலும், எனக்கு எத்தனையோ மாதங்கள் வீணாயின, வேதனை மிக்க இரவுகள் என் பங்காயின.

படுக்கப் போகையில், 'எப்போது விடியுமோ!' என்கிறேன். இரவோ நீண்டதாயிருக்கிறது, விடியும் வரை படுக்கையில் புரண்டு புரண்டு சலிப்புறுகிறேன்.

நெசவுத்தறி நாடாவிலும் விரைவாக என் நாட்கள் ஓடி, நம்பிக்கைக்கு இடமே இன்றி முடிவடைகின்றன. என் உயிர் வெறும் காற்றே என்பதை நினைவுகூரும். என் கண் இனி ஒருபோதும் நன்மையைக் காணாது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 146:1-2.3-4.5-6 (பல்லவி: 3a காண்)*

பல்லவி : **ஆண்டவரைப் போற்றுங்கள்; அவர் உள்ளம் உடைந்தோரைக் குணமாக்குகிறார்.**

அல்லது **அல்லேலூயா.**

1 ஆண்டவரைப் போற்றுங்கள்; ஏனெனில் அவர் நல்லவர். நம் இறைவனுக்குப் புகழ்பாடுங்கள் : ஏனெனில் அவர் இனிமையுள்ளவர். அவரைப் புகழ்வது தகுமே. பல்லவி

2 ஆண்டவர் யெருசலேமை அமைக்கிறார் : சிதறுண்ட இஸ்ராயேலை ஒன்று சேர்க்கிறார். பல்லவி

3 உள்ளம் உடைந்தவர்களைக் குணமாக்குகிறார்: அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்.

4 விண்மீன்களின் எண்ணிக்கையை வரையறுக்கிறார் : ஒவ்வொன்றையும் பெயரிட்டு அழைக்கிறார். பல்லவி

5 நம் ஆண்டவர் மிக உயர்ந்தவர், வலிமை மிக்கவர் : அவருடைய ஞானத்துக்கு அளவேயில்லை.

6 தாழ்ந்தவர்களை ஆண்டவர் தூக்கிவிடுகிறார் : கெட்டவர்களைத் தரை மட்டும் தாழ்த்திவிடுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*நற்செய்தியை அறிவிக்காவிடில், ஐயோ! எனக்குக் கேடு.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 9:16-19, 22-23

சகோதரர்களே :

நற்செய்தியை அறிவிப்பதுகூட நான் பெருமைப்படுவதற்குரிய தன்று. அது என்மேல் சுமத்தப்பட்ட கடமையே. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ! எனக்குக் கேடு. நானாகவே இந்த வேலையை மேற்கொண்டிருந்தால், அதற்குத் தக்க ஊதியம் கிடைத்திருக்கும். ஆனால் அது என்மேல் சுமத்தப்பட்டதாயிருப்பதால், கண்காணிப்பாளன் என என்னிடம் ஒப்படைக்கப்பட்ட அலுவலையே செய்கிறேன். ஆகவே, எனக்குரிய ஊதியம் எது? நற்செய்தியை நான் அறிவிக்கும்போது அந்த நற்செய்தி எனக்குத் தரும் உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளாமல், உங்களுக்கு எச்செலவுமின்றி, அந்நற்செய்தியை வழங்குவதே எனக்குரிய ஊதியம்.

நான் யாருக்கும் அடிமையாய் இல்லாதிருந்தும், மிகுதியான மக்களை வசமாக்க என்னையே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். வலிமையற்றவர்களை வசமாக்க வலிமையற்றவர்களுக்கு வலிமையற்றவன் ஆனேன். எப்படியேனும் ஒரு சிலரையாவது மீட்க, எல்லாருக்கும் எல்லாம் ஆனேன். நற்செய்தியின் பலனில் பங்குபெறவேண்டி நற்செய்திக் காகவே இவையெல்லாம் செய்கிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா மத். 8:17

அல்லேலூயா. அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார்; நம் நோய்களைச் சுமந்துகொண்டார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பல்வேறு நோய்களால் வருந்திய பலரைக் குணப்படுத்தினார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 1:29-39

அக்காலத்தில் :

யேசு செபக்கூடத்தை விட்டு சீமோன், பெலவேந்திரர் இவர்களுடைய வீட்டுக்கு வந்தார். யாகப்பரும் அருளப்பரும் அவர்களோடு சென்றனர். சீமோனுடைய மாமியார் காய்ச்சலாய்க் கிடந்தாள். உடனே அவளைப்பற்றி அவரிடம் சொன்னார்கள். அவர் அருகில் சென்று கையைப் பிடித்து அவளை எழுப்பினார். காய்ச்சல் அவளை விட்டுவிட்டது. அவள் அவர்களுக்குப் பணிவிடை புரிந்தாள்.

பொழுது போய் இரவானதும், நோயாளிகள், பேய் பிடித்தவர்கள் எல்லாரையும் அவரிடம் கொண்டுவந்தனர். ஊர் முழுவதும் வாயிலருகே ஒன்றாகத் திரண்டிருந்தது. பல்வேறு நோய்களால் வருந்திய பலரைக் குணப்படுத்தினார். பல பேய்களையும் ஓட்டினார். பேய்களை அவர் பேச விடவில்லை. ஏனெனில், அவை அவரை அறிந்திருந்தன.

அதிகாலையில் கருக்கலோடு எழுந்து புறப்பட்டுத் தனிமையானதோர் இடத்திற்குச் சென்றார். அங்கே செபம் செய்துகொண்டிருந்தார். சீமோனும் அவருடன் இருந்தவர்களும் அவரைத் தேடிப் போயினர். அவரைக் கண்டு, "எல்லாரும் உம்மைத் தேடுகிறார்கள்" என்றனர். அதற்கு அவர், "அடுத்த ஊர்களுக்குப் போவோம். அங்கும் நான் தூது அறிவிக்க வேண்டும். இதற்காகவே வந்திருக்கிறேன்" என்றார். அவ்வாறே கலிலேயா எங்கும் அவர்களுடைய செபக்கூடங்களில் தூது அறிவித்தும், பேய்களை ஓட்டியும் வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு -3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இதோ, அடியேன் என்னை அனுப்பும்**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 6:1-2a, 3-8

ஓசியாஸ் அரசன் இறந்த ஆண்டில், மிகவும் உயரமான அரியணையின்மேல் ஆண்டவர் வீற்றிருப்பதைக் கண்டேன்; அவருடைய தொங்கலாடை திருக்கோயிலை நிரப்பி நின்றது. அவருக்கு மேலே உயரத்தில் சேராபீன்கள் நின்றனர். ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன; இரண்டு இறக்கைகளால் முகத்தை மூடிக்கொண்டனர்; இன்னும் இரண்டினால் கால்களை மறைத்துக் கொண்டனர்; மற்ற இரண்டினால் பறந்தனர்.

ஒருவரை ஒருவர் உரத்த குரலில் கூப்பிட்டு, "சேனைகளின் ஆண்டவர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; உலக முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்துள்ளது" என்று கூறிக்கொண்டிருந்தார்கள். கூறியவரின் குரலொலியால் வாயில் நிலைகளெல்லாம் அதிர்ந்தன; கோயில் முழுவதும் புகை நிறைந்தது.

அப்பொழுது நான்: "ஐயோ, நான் அழிந்தேன்; ஏனெனில் அசுத்த உதடுகள் கொண்டவன் நான்; அசுத்த உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்கிற நான், சேனைகளின் ஆண்டவராகிய அரசரை, என் கண்களால் கண்டேனே!" என்றேன்.

அப்பொழுது, சேராபீன்களுள் ஒருவர் பீடத்திலிருந்து எரி நெருப்புப் பொறியொன்றைக் குறட்டினால் எடுத்துக்கொண்டு என்னிடம் பறந்து வந்தார். அதனால் என் வாயைத்தொட்டு, "இதோ, இந் நெருப்புத் தழல் உன் இதழ்களைத் தொட்டது; ஆதலின் உன் குற்றம் நீக்கப்பட்டது; உன் பாவம் மன்னிக்கப்பட்டது" என்றார்.

மேலும் ஆண்டவருடைய குரலைக் கேட்டேன்; அவர், "யாரை அனுப்புவோம்? நமக்காக எவன் போவான்?" என்றார். உடனே நான், "இதோ, அடியேன் என்னை அனுப்பும்" என்றேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப்பாடல்

சங். 137 : 1-2a. 2bc-3. 4-5. 7c-8 (பல்லவி: 1c)

பல்லவி : வானதூதர் முன்னிலையில் உமக்குப் புகழ்பாடுவேன், ஆண்டவரே.

1 ஆண்டவரே, என் முழு மனத்துடன் உம்மைப் போற்றிப் புகழ்வேன்.
ஏனெனில், நான் வாய் திறந்து உம்மிடம் சொன்னதைக் கேட்டருளினீர்;
வானதூதர் முன்னிலையில் உமக்குப் புகழ் பாடுவேன்.
2 உமது புனித ஆலயத்தில் உம்மை ஆராதிப்பேன். பல்லவி

உமது இரக்கத்தையும் சொல்லுறுதியையும் நினைத்து, உமது திருப்
பெயரைப் புகழ்வேன்: ஏனெனில் அனைத்திற்கும் மேலாக உமது திருப்
பெயரையும் உம் வாக்குறுதியையும் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.
3 நான் உம்மைக் கூவியழைத்த நாளில் என் மன்றாட்டைக் கேட்டருளினீர்:
என் ஆன்மாவுக்கு மேன்மேலும் வலிமை தந்தருளினீர். பல்லவி

4 ஆண்டவரே, நீர் திருவாய் மலர்ந்தருளிய மொழிகளை உலகின் அரசர்
அனைவரும் கேட்டு, உம்மைப் போற்றுவார்கள்.
5 'ஆண்டவருடைய மகிமை உண்மையில் உன்னதமானது' என்று அவர்கள்
ஆண்டவருடைய வழிகளைப்பற்றிப் புகழ்ந்து பாடுவார்கள். பல்லவி

7 உமது வலக்கரம் என்னைக் காப்பாற்றும்.
8 ஆண்டவர் தாம் தொடங்கிய வேலையை எனக்கெனச் செய்து முடிப்பார்:
ஆண்டவரே, உமது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது; உம்
படைப்புகளைக் கைவிடாதேயும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**நாங்கள் அறிவிப்பது இதுவே, நீங்கள் விசுவசிப்பதும் இதுவே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 15:1-11

சகோதரர்களே, உங்களுக்கு நான் அறிவித்த நற்செய்தியை நினைவுறுத்த விழைகிறேன்; நீங்கள் அதை ஏற்றுக்கொண்டீர்கள்; அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு நற்செய்தியாக அறிவித்த வாக்கை நீங்கள் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தால், அதனாலேயே மீட்படைவீர்கள்; இல்லையேல் நீங்கள் விசுவசித்தது வீண் என்று சொல்ல வேண்டியிருக்கும்.

ஏனெனில், நான் பெற்றுக்கொண்டதும், முதன்மையானதாக உங்களுக்குக் கையளித்ததும் எதுவெனில், மறைநூலில்உள்ளபடி, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு, மறை நூலில் உள்ளபடியே, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். கேபாவுக்கும் பின்னர் பன்னிருவர்க்கும் தோன்றினார். பின்பு ஒரே சமயத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சகோதரர்களுக்குத் தோன்றினார். —அவர்களுள் பலர் இன்னும் உயிரோடு இருக்கின்றனர்; ஒரு சிலர் இறந்துபோயினர்.— பின்னர் யாகப்பருக்கும், அடுத்து அப்போஸ்தலர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியாக, காலந்தப்பிய பிறவி போன்ற எனக்கும் தோன்றினார்.

நானோ அப்போஸ்தலர்களுள் மிகச் சிறியன்; கடவுளின் திருச்சபையைத் துன்புறுத்திய நான் அப்போஸ்தலன் என்னும் பெயர்பெறத் தகுதியற்றவன். ஆயினும் நான் இப்பொழுது இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான்; அவர் எனக்குத் தந்த அருளோ வீணாய்ப் போகவில்லை; அவர்கள் அனைவரையும்விட நான் மிகுதியாகவே உழைத்தேன். ஆனால் உழைத்தவன் நானல்லேன், என்னோடு இருக்கும் இறையருள்தான் உழைத்தது.

நானோ அவர்களோ யார் போதித்தாலும் நாங்கள் அறிவிப்பது இதுவே; நீங்கள் விசுவசித்ததும் இதுவே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 15:3-8. 11

சகோதரர்களே:

நான் பெற்றுக்கொண்டதும், முதன்மையானதாக உங்களுக்குக் கையளித்ததும் எதுவெனில், மறை நூலில் உள்ளபடி, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு, மறை நூலில் உள்ளபடியே, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். கேபாவுக்கும் பின்னர் பன்னிருவர்க்கும் தோன்றினார். பின்பு ஒரே சமயத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சகோதரர்களுக்குத் தோன்றினார். –அவர்களுள் பலர் இன்னும் உயிரோடு இருக்கின்றனர்; ஒரு சிலர் இறந்து போயினர்.–பின்னர் யாகப்பருக்கும், அடுத்து அப்போஸ்தலர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியாக காலந்தப்பிய பிறவி போன்ற எனக்கும் தோன்றினார்.

நானே அவர்களோ யார் போதித்தாலும் நாங்கள் அறிவிப்பது இதுவே; நீங்கள் விசுவசித்ததும் இதுவே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லேலூயா மத் 4:19

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: "என் பிறகே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிப்போராக்குவேன்."
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யாவற்றையும் துறந்து, அவரைப் பின்தொடர்ந்தார்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:1-11

அக்காலத்தில்:

ஒருநாள் யேசு கெனேசரேத்து ஏரிக்கரையில் நின்று கொண்டிருந்த போது, திரளான மக்கள் கடவுளின் வார்த்தையைக் கேட்பதற்கு அவரை நெருக்கிக்கொண்டிருந்தனர். அப்போது, ஏரிக்கரையில் இரண்டு படகுகள் இருக்கக் கண்டார். மீனவர்களோ படகை விட்டு இறங்கி வலைகளை அலசிக் கொண்டிருந்தனர். அப்படகுகளுள் ஒன்று சீமோனுடையது. அதில் ஏறி, கரையிலிருந்து சற்றே தள்ளச் சொல்லி, அமர்ந்து கொண்டு படகிலிருந்தே கூட்டத்திற்குப் போதிக்கலானார்.

பேசி முடிந்ததும் சீமோனிடம், "ஆழத்திற்கு தள்ளிக் கொண்டு போய் மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்று கூறினார். அதற்குச் சீமோன், "குருவே, இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை; ஆயினும் உமது சொல்லை நம்பி வலைகளைப் போடுகிறேன்" என்றார். அவ்வாறே செய்ததும் ஏராளமான மீன்களை வளைத்துப் பிடித்தனர். வலைகள் கிழியத் தொடங்கவே, மற்றப் படகிலிருந்த தங்கள் தோழர்களுக்குச் சைகை காட்டி உதவிக்கு வருமாறு அழைத்தனர். அவர்களும் வந்து படகுகள் இரண்டையும் நிரப்ப, அவை மூழ்குவன போல் இருந்தன.

இதைக் கண்ட சீமோன் இராயப்பர் யேசுவின் காலில் விழுந்து, ஆண்டவரே, "பாவியேனை விட்டு அகலும்" என்றார். அவரும் அவரோடிருந்த அனைவரும், அகப்பட்ட மீன்பாட்டைக் கண்டு திகிலுற்றனர். சீமோனுடைய கூட்டாளிகளான செபதேயுவின் மக்கள், யாகப்பரும் அருளப்பரும் அவ்வாறே திகிலுற்றனர். யேசுவோ சீமோனை நோக்கி, "அஞ்சாதே, இன்று முதல் நீ மனிதர்களைப் பிடிப்பவன் ஆவாய்" என்றார்.

அவர்கள் படகுகளைக் கரை சேர்த்ததும், யாவற்றையும் துறந்து, அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுள் உரைத்தார்: உரைத்தபடியே ஆயிற்று.**

ஆதி ஆகமத்தின் தொடக்கம் 1:1-19

ஆதியிலே கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார். பூமி உருவமற்றதும் வெறுமையுற்றதுமாய் இருந்தது. பாதாளத்தின் முகத்தே இருள் பரவியிருந்தது. கடவுளின் ஆவியானவர் தண்ணீரின்மீது அசைவாடிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது கடவுள்: ஒளி உண்டாகுக என்று உரைத்தார். உரைக்கவே, ஒளி உண்டாயிற்று. கடவுள் ஒளியை நல்லது என்று கண்டு, ஒளியை இருளினின்று பிரித்தார். ஒளிக்குப் பகல் என்றும், இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் சேர்ந்து முதல் நாள் ஆயிற்று.

பின் கடவுள்: நீர்த்திரளின் நடுவில் வானவெளி உண்டாகி நீரினின்றும் நீர் பிரியக் கடவது என்றார். இவ்வாறு கடவுள் வானவெளியை உண்டாக்கி, வானவெளிக்குக் கீழேயுள்ள நீரையும், வானவெளிக்கு மேலேயுள்ள நீரையும் பிரித்தார். அதுவும் அவ்வண்ணமே ஆயிற்று. கடவுள் வானவெளிக்குப் பரலோகம் என்று பெயரிட்டார். மாலையும் காலையும் சேர்ந்து இரண்டாம் நாள் ஆயிற்று.

மேலும் கடவுள்: வானவெளிக்குக் கீழேயுள்ள நீரெல்லாம் ஒரே இடத்தில் ஒன்றாகச் சேரக்கடவது; காய்ந்த தரை தோன்றக் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. காய்ந்த தரைக்கு நிலம் என்றும், ஒன்றாகச் சேர்ந்த நீர்த்திரளுக்குக் கடல் என்றும் கடவுள் பெயரிட்டார். அதுவும் நலமென்று கடவுள் கண்டார். அப்போது அவர்: விதையைப் பிறப்பிக்கும் பசும் புற்பூண்டுகளையும், பூமியின்மீது தம்மிடம் விதைகளைக் கொண்டுள்ள கனிகளைத் தத்தம் இனத்தின்படியே தரும் மரங்களையும் பூமி முளைப்பிக்கக்கடவது என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. பூமி தத்தம் இனத்தின்படி தத்தம் விதையைப் பிறப்பிக்கும் புற்பூண்டுகளையும்,

தத்தம் இனத்தின்படி தம்மிடம் விதைகளைக் கொண்டுள்ள மரங்களையும் முளைப்பித்தது. கடவுள் அதுவும் நல்லதென்று கண்டார். மாலையும் காலையும் சேர்ந்து மூன்றும் நாள் ஆயிற்று.

மேலும் கடவுள்: பரமண்டல வான்வெளியில் சுடர்கள் உண்டாகிப் பகலையும் இரவையும் பிரிக்கக் கடவன; அவை பருவ காலங்களையும் நாட்களையும் ஆண்டுகளையும் குறிப்பதற்கான அடையாளங்களாய் அமையக்கடவன; அவை பரமண்டல வான்வெளியில் சுடர்களாய் இருந்து பூமிக்கு ஒளி தரக்கடவன என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் பகலை ஆளப் பெரியதொரு சுடரும், இரவை ஆளச் சிறியதொரு சுடருமாக இரு பெரும் சுடர்களையும் விண்மீன்களையும் உண்டாக்கினார். கடவுள் அவற்றைப் பரமண்டல வானவெளியில் நிறுவிப் பூமியின்மேல் ஒளி வீசவும், பகலையும் இரவையும் ஆளவும், ஒளியையும் இருளையும் பிரிக்கவும் அமைத்தார். கடவுள் அதுவும் நல்லதென்று கண்டார். மாலையும் காலையும் சேர்ந்து நான்காம் நாள் ஆயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 103:1-2a. 5-6. 10. 12. 24. 35c (பல்லவி: 31b)*

*பல்லவி:* ஆண்டவர் தம் படைப்புகளைக் குறித்து மகிழ்வாராக.

1 நெஞ்சே! நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக! ஆண்டவரே, என் இறைவா,
நீர் எத்துணை உயர்ந்தவர்.

2 மாண்பும் மகத்துவமும் நீர் அணிந்திருக்கிறீர்:
ஒளியை நீர் போர்வையாகக் கொண்டுள்ளீர். பல்லவி

5 பூமியை நீர் அடித்தளத்தின்மேல் அமைத்தீர்: அது எந்நாளும் அசையவே
அசையாது.

6 கடல்களை அதற்கு உடையெனத் தந்திருக்கிறீர்: வெள்ளப்பெருக்கு
மலைகளையும் மூடியிருக்கும்படி செய்தீர். பல்லவி

10 நீரூற்றுகள் ஆறுகளாய்ப் பெருக்கெடுக்கக் கட்டளை இடுகிறீர்:
மலைகளிடையே அவைகளை ஓடச் செய்கிறீர்.

12 அவற்றினருகேதான் வானத்துப் பறவைகள் குடியிருக்கின்றன: மரக்
கிளைகளிடையே இன்னிசை எழுப்புகின்றன. பல்லவி

24 ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள், எத்தனை, எத்தனை! அனைத்தையும்
நீர் ஞானத்தோடு செய்து முடித்தீர்: உம் படைப்புகளால் நிறைந்துள்ளது
வையகம்.

35 நெஞ்சே, ஆண்டவரை நீ வாழ்த்துவாயாக. பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

***ஆண்டவருடைய உடன்படிக்கைப் பேழையை ஆலயத்தின் மகாப் புனித இடத்தில் கொண்டுவந்து வைத்தனர்; ஆண்டவரின் மாட்சி ஆலயத்தை நிரப்பிற்று.***

*அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்* 8: 1-7, 9-13

*அந்நாட்களில்:*

கடவுளுடைய உடன்படிக்கைப் பேழையைத் தாவீதின் நகர் சீயோனின்று கொண்டு வரும்படி இஸ்ராயேலின் மூப்பரும் இஸ்ராயேலின் கோத்திரத் தலைவர்களும் குடும்பத் தலைவர்களும் யெருசலேமிற்கு சாலமோன் அரசரைக் காண வந்தனர். இஸ்ராயேலர் அனைவரும் ஏழாம் மாதமாகிய எத்தானிம் மாதப் பண்டிகையின்போது சாலமோன் அரசரிடம் வந்தனர். இஸ்ராயேலின் மூப்பர் அனைவரும் வந்தவுடன் குருக்கள் ஆண்டவருடைய பேழையை எடுத்து, ஆண்டவருடைய பேழையையும் வாக்குறுதியின் பேழையையும் திருத்தலத்தின் பரிசுத்த தட்டுமுட்டுகள் அனைத்தையும் குருக்களும் லேவியரும் தூக்கிச் சென்றனர்.

சாலமோன் அரசரும் அவரோடு இஸ்ராயேல் மக்கள் அனைவரும் பேழைக்கு முன்பாக நடந்து சென்றனர். கணக்கற்ற ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டனர். அப்படியே குருக்கள் ஆண்டவருடைய உடன்படிக்கைப் பேழையை ஆலயத்தின் திருத்தலமாகிய மகா பரிசுத்த இடத்தில் கெருபீம்களுடைய இறக்கைகளின் கீழ் கொண்டுவந்து வைத்தனர். அக்கெருபீம்கள் பேழையிருக்கும் இடத்தில் தங்கள் இரு இறக்கைகளையும் விரித்து, மேலிருந்து பேழையையும் அதன் தண்டுகளையும் மூடிக் கொண்டிருந்தன. இஸ்ராயேல் மக்கள் எகிப்து நாட்டிலிருந்து புறப்பட்ட பின் கடவுள் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டபோது, மோயீசன் ஒரேபில் அப்பேழையில் வைத்த இரு கற்பலகைகளையன்றி அதில் வேறொன்றும் இல்லை.

குருக்கள் பரிசுத்த இடத்திலிருந்து புறப்படவே ஒரு மேகம் கடவுளுடைய ஆலயத்தை நிரப்பிற்று. அம் மேகத்தின் பொருட்டு குருக்கள் திருப்பணி புரிய அங்கு நிற்கக் கூடாமல் போயிற்று. ஆண்டவருடைய மாட்சி ஆண்டவருடைய ஆலயத்தை நிரப்பிற்று

அப்பொழுது சாலமோன், "நாம் மேகத்தில் தங்கி வாழ்வோம் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். ஆண்டவரே, நீர் தங்கி வாழத் தகுந்த வீடும், நீர் என்றென்றும் இருக்கத்தக்க அரியணையுமான ஆலயத்தைத் நான் கட்டியுள்ளேன்" என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 131 : 6-7, 8-10. (பல்லவி: 8a)

பல்லவி : எழுந்தருளும் ஆண்டவரே, உமது இருப்பிடத்திற்கு
எழுந்தருளும்.

6 இதோ வாக்குறுதிப் பேழை எபிராத்தாவில் இருக்கிறதென்று கேள்விப்
பட்டோம்: இயார் என்னும் வயல் வெளிகளில் அதனைக் கண்டு
கொண்டோம்.
7 செல்வோம் அவருடைய உறைவிடத்திற்கே: பணிவோம் அவரது
கால்மணை முன்னே! பல்லவி

8 எழுந்தருளும் ஆண்டவரே, உமது இருப்பிடத்திற்கு எழுந்தருளும்:
உமது மாட்சி விளங்கும், உமது பேழையும் எழுவதாக.
9 உம் குருக்கள் நீதியை உடையாய் அணிவார்களாக: உம் புனிதர்கள்
பெருமகிழ்ச்சியுடன் களிகூர்வார்களாக.
10 உம் ஊழியன் தாவீதின் பொருட்டு, நீர் அபிஷேகம் செய்தவரிடமிருந்து
உமது முகத்தைத் திருப்பிக்கொள்ளாதேயும். பல்லவி

அல்லேலூயா மத். 4:23

அல்லேலூயா. யேசு விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து, மக்களிடையே எல்லாப் பிணியையும் குணமாக்கினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவரைத் தொட்ட அனைவரும் குணம் பெறுவர்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:53-56

அக்காலத்தில்:

இயேசுவும் அவர் சீடர்களும் கடலைக் கடந்து கெனேசரேத்துக்கு வந்து கரை சேர்ந்தனர். அவர்கள் படகை விட்டு இறங்கியதும், மக்கள் அவரை அறிந்து கொண்டு அந்நாடெங்கும் விரைந்து போய், அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களுக்கெல்லாம் நோயாளிகளைப் படுக்கையில் கொண்டுவரத் தொடங்கினர். அவர் ஊரோ, நகரோ, பட்டியோ எங்குச் சென்றாலும் பொதுவிடங்களில் நோயாளிகளைக் கிடத்தி அவருடைய போர்வையின் விளிம்பையாகிலும் தொடவிடும்படி அவரை வேண்டுவர். அவரைத் தொட்ட அனைவரும் குணம் பெறுவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 1:20-2:4a

மேலும் கடவுள்: அசைந்து உலாவும் உயிரினங்களையும், பூமியின் மேலே பரமண்டல வான்வெளியில் பறந்து திரியும் பறவைகளையும், நீர்த்திரள் பிறப்பிக்கக்கடவது என்றார். அப்போது கடவுள் திமிங்கிலங்களையும், உயிரும் அசைவும் உடையனவாய் நீர்த்திரளில் உற்பத்தியாகிய வகைவகையான பிராணிகள், விதவிதமான பறவைகள் எல்லாவற்றையும் படைத்தார். கடவுள் அதுவும் நல்லதென்று கண்டார். அவர் அவைகளை ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள்; பறவைகளும் பூமியில் பலுகக்கடவன என்றார். மாலையும் காலையும் சேர்ந்து ஐந்தாம் நாள் ஆயிற்று.

பின் கடவுள் பலவகையான உயிரினங்களையும், வீட்டு விலங்குகளையும், ஊர்வனவற்றையும், காட்டு விலங்குகளையும் பூமி பிறப்பிக்கக்கடவது என்றார். அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் பலவகைக் காட்டு விலங்குகளையும், வீட்டு விலங்குகளையும், பூமியின் மீது ஊர்வன யாவற்றையும் படைத்தார். கடவுள் அதுவும் நல்லதென்று கண்டார்.

பின்னர் கடவுள்: நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக; அவன் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், மிருகங்களையும், பூமி முழுவதையும், பூமியின்மீது அசைவன ஊர்வன யாவற்றையும் ஆளக்கடவன் என்றார். இவ்வாறு கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். தெய்வச் சாயலாகவே அவனைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

கடவுள் அவர்களை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப்படுத்துங்கள்; கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், பூமியின்மீது அசைந்து உலாவும் உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றார்.

மேலும் கடவுள்: இதோ பூமியின்மீது விதைதரும் புற்பூண்டுகள் எல்லாவற்றையும், தத்தம் இனத்தின்படி தம் விதைகளைக் கொண்டிருக்கும் விதைதரும் மரங்களையும் உங்களுக்கு உணவாகத் தந்துள்ளோம்; மேலும், பூமியில் உயிர்வாழும் விலங்குகள், வானத்தில் பறக்கும் பறவைகள், உயிரோடு பூமியில் அசையும் எல்லாவற்றிற்கும் அதே புற்பூண்டுகளை உணவாகக் கொடுத்தோம் என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் தாம் படைத்த எல்லாவற்றையும் நோக்கினார். அவை எல்லாமே மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் சேர்ந்து ஆறாம் நாள் ஆயிற்று.

இவ்வாறு விண்ணும் மண்ணும் அவற்றிலிருக்கும் அழகுதரும் யாவும் படைக்கப்பட்டு முடிந்தன. கடவுள் தாம் ஏழாம் நாளிற்குமுன் செய்த வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு ஏழாம் நாள் ஓய்வு எடுத்தார். மேலும் தாம் செய்ய நினைத்திருந்த வேலைகளையெல்லாம் செய்துவிட்டு அந்நாளில் ஓய்வெடுத்தார். எனவே, அவ்வேழாம் நாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார். இவையே விண்ணும் மண்ணும் படைக்கப்பெற்ற தொடக்ககால நிகழ்ச்சிகள் ஆகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 8:3-4, 5-6, 7-8 (பல்லவி: 1a)*

பல்லவி: ஆண்டவரே, எம் ஆண்டவரே,
உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு வியப்புக்குரியது!

3 உம்முடைய வானங்களை, உம் படைப்புகளை, நீர் அமைத்த நிலவை,
விண்மீன்களைக் காணும்போது,
4 மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்? அவனைப்பற்றி
அக்கறை கொள்ள அவன் யார் என்று சொல்லத்தோன்றுகிறது! பல்லவி

5 வானதூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்;
மாண்மையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்.
6 உம் படைப்புகள் அனைத்தின்மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்;
அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். பல்லவி

7 ஆடுமாடுகள், வயல் வெளியில் உலவும் விலங்குகள் அனைத்தும் அவனுக்குப்
பணியச் செய்தீர்.
8 வானத்துப் பறவைகள், கடலில் வாழும் மீன்கள், அதில் நீந்தும்
அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*உம் மக்களாகிய இஸ்ராயேலின் வேண்டுதலை நீர் கேட்டருளும்படி,*
*'நம்முடைய பெயர் இவ்விடத்தில் விளங்கும்' என்று நீர் சொன்னீர்.*

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 8:22-23.27-30

அந்நாட்களில்:

சாலமோன் ஆண்டவருடைய பீடத்துக்கு முன் இஸ்ராயேல் சபையார் முன்னிலையில் நின்று வானத்தை நோக்கித் தம் கைகளை விரித்து, சொன்னதாவது:

"இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரே, மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் உமக்கு இணையான கடவுள் இல்லை. உம் திருமுன் தங்கள் முழு இதயத்தோடும் நடந்த உம் அடியார்களோடு நீர் உடன்படிக்கை செய்து உமது இரக்கத்தையும் அவர்களுக்குக் காட்டி வருகிறீர்.

"கடவுள் உண்மையில் பூமியில் தங்கி வாழ்வாரா? வானகங்களும் வானாதி வானகங்களும் உம்மைக் கொள்ள இயலாதென்றால், நான் கட்டியுள்ள இவ்வாலயம் எம்மாத்திரம்! என் கடவுளாகிய ஆண்டவரே, உம் அடியான் இன்று உம் திருமுன் செய்கிற விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு உம் அடியானுடைய மன்றாட்டுக்கும் வேண்டுதலுக்கும் இரங்கியருளும், உம் அடியான் இவ்விடத்தில் செய்யும் விண்ணப்பத்தை நீர் கேட்டருளும்படி, 'நம்முடைய பெயர் இவ்விடத்தில் விளங்கும்' என்று நீர் சொன்ன இடமாகிய இந்த ஆலயத்தின் மீது இரவும் பகலும் உமது திருக்கண் நோக்கியருளும்.

உம் அடியானும், இவ்விடத்தில் விண்ணப்பம் செய்யவிருக்கிற உம் மக்கள் இஸ்ராயேலரும் எவ்வித விண்ணப்பத்தைக் கொண்டு வந்தாலும், அவர்களுக்குச் செவிமடுத்தருளும். விண்ணகமாகிய உமது உறைவிடத்தில் அதை நீர் கேட்பீராக; கேட்டு அவர்களை மன்னிப்பீராக."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 83: 2. 3. 4. 9. 10. 11 (பல்லவி : 1)*

பல்லவி : வான்படைகளின் ஆண்டவரே, உமதில்லம் எத்துணை அருமையாயுள்ளது!

2 என் ஆன்மா ஆண்டவருடைய ஆலய முற்றங்களை விரும்பித் தேடிச் சோர்ந்து போகின்றது: என் உள்ளமும் உடலும் உயிருள்ள இறைவனை நினைத்துக் களிகூர்கின்றன. பல்லவி

அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கக் கூடும் கிடைத்தது: சேனைகளின் ஆண்டவரே, என் அரசே, என் இறைவா, உம் பீடங்கள் உள்ள இடத்திலே கிடைத்தது. பல்லவி

4 ஆண்டவரே, உம் இல்லத்தில் வாழ்வோர் பேறு பெற்றோர்: எந்நாளும் உம்மைப் புகழ்வார்கள்.

9 எங்கள் கேடயமாகும் இறைவா, எங்களைக் கண்ணோக்கும்: நீர் அபிஷேகம் செய்தவரின் மேல் உம் பார்வையைத் திருப்பும். பல்லவி

10 உமது ஆலய முற்றங்களில் ஒருநாள் இருப்பது, வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதைவிட உண்மையிலேயே மேலானது.

11 பாவிகளின் கூடாரங்களில் தங்குவதைவிட என் இறைவனது இல்லத்தின் வாயிலில் நிற்பதே மேலானது.

சங். 118:36a 2b

## அல்லேலூயா

அல்லேலூயா. உம் ஆணைகளின்பால் என் இதயத்தைத் திருப்பியருளும் உம் திருச்சட்டத்தை எனக்கருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளுடைய கட்டளைகளைக் கைவிட்டு, மனிதருடைய பரம்பரையைக் கடைப்பிடிக்கிறீர்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:1-13

அக்காலத்தில் :

பரிசேயரும் யெருசலேமிலிருந்து வந்த மறைநூல் அறிஞர் சிலரும் யேசுவிடம் வந்து கூடினர். அவர்கள் அவருடைய சீடரில் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் உண்பதைக் கண்டனர்.—பரிசேயரும் எல்லா யூதரும் முன்னோரின் பரம்பரையைக் கடைப்பிடித்துக் கைகளைத் தேய்த்துக் கழுவாமல் உண்பதில்லை. பொது இடங்களிலிருந்து வரும் பொழுது, குளிக்காமல் உண்பதில்லை. பரம்பரையின்படி கடைப்பிடிக்க வேண்டியவை இன்னும் பல இருந்தன. அதாவது, கிண்ணங்கள், பாத்திரங்கள், செம்புகலங்கள் கழுவுவது முதலியன.

எனவே, "முன்னோர் பரம்பரையின்படி உம் சீடர் நடவாமல் தீட்டான கைகளால் உண்பதேன்?" என்று பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரைக் கேட்டனர்.

அதற்கு அவர், "வெளிவேடக்காரராகிய உங்களைப்பற்றி இசையாஸ் பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கிறார்: 'இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர், அவர்கள் உள்ளமோ என்னைவிட்டுத் தொலையில் இருக்கின்றது. அவர்கள் என்னை வழிபடுவது வீண், ஏனெனில், அவர்கள் போதிப்பது மனிதர் கற்பனை' என்று அவர் எழுதியுள்ளார். கடவுளுடைய கட்டளைகளைக் கைவிட்டு, மனிதர்களுடைய பரம்பரையைக் கடைப்பிடிக்கிறீர்கள்" என்றார்.

மேலும் சொன்னதாவது: "உங்கள் பரம்பரையைக் கடைப்பிடிக்கக் கடவுளுடைய கட்டளையை எவ்வளவு நன்றாக வெறுமையாக்குகிறீர்கள்! ஏனெனில், 'உன் தாய் தந்தையைப் போற்று' என்றும், 'தாய் தந்தையைத் தூற்றுகிறவன் செத்தொழியட்டும்' என்றும் மோயீசன் கூறியுள்ளார். ஆனால், ஒருவன் தன் தந்தையையோ தாயையோ நோக்கி, 'நான் உமக்கு உதவியாகக் கொடுக்கக்கூடியதெல்லாம் கோர்பான்—அதாவது நேர்த்திக் கடன்—ஆயிற்று' என்பானாகில், அதன்பின் அவன் தன் தாய் தந்தைக்கு எவ்வுதவியும் செய்ய நீங்கள் விடுவதில்லை. இவ்வாறு நீங்கள் சொல்லிக் கொடுத்த பரம்பரையின்பொருட்டு, கடவுளின் வார்த்தையை வீணாக்கி விடுகிறீர்கள். இவை போன்ற பலவும் செய்கிறீர்கள்."

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

# புதன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவராகிய கடவுள் மனிதனை இன்ப வனத்திலே வைத்தார்.**

ஆதிஆகமத்திலிருந்து வாசகம் 2:4b-9. 15-17

அந்நாளில் ஆண்டவராகிய கடவுள் விண்ணையும் மண்ணையும் உண்டாக்கினார். இதற்கு முன் தரையில் இல்லாதிருந்த செடிகள் யாவற்றையும், இதற்கு முன் தரையில் வளர்ந்திராப் புற்பூண்டுகள் எல்லாவற்றையும் வயல் வெளிகளில் உண்டாக்கினார். உண்மையிலே அது வரை ஆண்டவராகிய கடவுள் பூமியின் மீது மழை பொழியச் செய்யவு மில்லை; நிலத்தை உழுவதற்கு ஒரு மனிதனும் இருந்ததுமில்லை. ஆயினும், பூமியிலிருந்து தோன்றிய ஒரு நீரூற்று பூமியெங்கும் பாய்ந்து கொண்டிருந்தது.

அப்படியிருக்க, ஆண்டவராகிய கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் முகத்தில் உயிர் மூச்சை ஊதவே, மனிதன் உயிருள்ளவன் ஆனான்.

ஆண்டவராகிய கடவுள் ஆதியிலே ஓர் இன்ப வனத்தை நட்டிருந் தார். தாம் உருவாக்கின மனிதனை அதிலே வைத்தார். ஆண்டவராகிய கடவுள் அவ்வனத்திலே பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய கனிகள் கொண்டுள்ள பலவித மரங்களையும் மண்ணினின்று தோன்றச் செய்தார். மேலும், அந்த இன்பவனத்தின் நடுவிலே வாழ்வளிக்கும் மரத்தையும், நன்மை தீமை அறியும் மரத்தையும் வளரச் செய்தார்.

ஆண்டவராகிய கடவுள் மனிதனை அழைத்து அவ்வின்ப வனத்தை உழுது பேணும்படி அவனை அங்கு விட்டு வைத்தார். அன்றியும் அவனை நோக்கிக் கட்டளையிட்டு, "இவ்வின்ப வனத்திலுள்ள எல்லாவித மரங்களின் கனிகளையும் நீ உண்ணலாம்; ஆனால், நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்ணாதே; ஏனென்றால் அதை நீ உண்ணும் நாளிலே சாகவே சாவாய்" என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 103: 1-2a. 27-28. 29bc-30 (பல்லவி: 1a)

பல்லவி : நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக.

1 நெஞ்சே ! நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக ! ஆண்டவரே, என் இறைவா,
நீர் எத்துணை உயர்ந்தவர்.
மாண்பும் மகத்துவமும் நீர் அணிந்திருக்கிறீர்;
2 ஒளியை நீர் போர்வையாகக் கொண்டுள்ளீர். பல்லவி

27 இவையெல்லாம் உம்மையே நம்பியிருக்கின்றன: தக்க காலத்தில்
உணவளிப்பீர் என்று எதிர்பார்க்கின்றன.
28 நீர் கொடுக்க, அவை பெற்றுக் கொள்கின்றன: நீர் உமது கையைத்
திறக்க அவை நலன்களால் நிறைவுறுகின்றன. பல்லவி

29 அவற்றின் மூச்சை நீர் நிறுத்தி விட்டால் அவை மடிந்து மறுபடியும்
மண்ணாகிவிடும்.
30 உமது ஆவியை நீர் அனுப்பினால் அவை படைக்கப்படும் : உலகனைத்தும்
புத்துயிர் பெறும். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**சாபாவின் அரசி சாலமோனின் ஞானத்தைக் கண்டாள்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்

அந்நாட்களில் :

ஆண்டவர் பெயரால் சாலமோன் அடைந்திருந்த புகழைச் சாபா நாட்டு அரசி கேள்வியுற்றுப் பல புதிர்களால் அவரைச் சோதிக்க வந்தாள். மிகுந்த பரிவாரத்தோடும், நறுமணப்பொருட்களையும் மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமந்து வந்த ஒட்டகங்களோடும் யெருசலேமை அடைந்தாள். அவள் சாலமோனிடம் வந்து தன் மனத்திலிருந்த எல்லாவற்றையும் குறித்து அவரிடம் உரையாடினாள். சாலமோன் அவள் கேட்டவற்றை எல்லாம் அவளுக்கு விளக்கிக் கூறினான். அவள் கேட்டவற்றுள் ஒன்றாகிலும் மன்னருக்குப் புதிராக இருக்கவில்லை. அனைத்திற்கும் தக்க பதில் கொடுத்தார்.

சாபாவின் அரசி சாலமோனின் ஞானத்தையும், அவர் கட்டியிருந்த அரண்மனையையும், அவர் உண்டு வந்த உணவுவகைகளையும், அவர் ஊழியரின் வீடுகளையும், அவர் அலுவலரின் ஊர்களையும், அவர்களின் ஆடைகளையும், குடிகலம் பரிமாறுபவரையும், அவரால் தேவாலயத்தில் செலுத்தப்பெற்று வந்த தகனப்பலிகளையும் கண்டபோது, வியப்பில் ஆழ்ந்தாள். அவள் மன்னரை நோக்கி,

"உமது பேச்சுத்திறனைப்பற்றியும் உமது ஞானத்தைப்பற்றியும் என் நாட்டில் நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையே! நான் இங்கு வந்து அவற்றை நேரில் காணும்வரை அவர்கள் சொன்னவற்றை நம்பவில்லை. இப்பொழுதோ நான் கண்டவற்றில் பாதியைக்கூட அவர்கள் எனக்குச் சொல்லவில்லை என அறிந்துகொண்டேன். உம் ஞானமும் சாதனைகளும் நான் கேள்விப்பட்டதைவிட மேலானவையாய் இருக்கின்றன.

உம் மக்களும் உம் ஊழியரும் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் எப்போதும் உம்முன் நின்று உமது ஞானத்தைக் கேட்டு வருகிறார்கள். உம்மீது பிரியம் கொண்டு உம்மை இஸ்ராயேல் அரியணையில் ஏற்றிய உம் கடவுளாகிய ஆண்டவர் வாழ்த்துப் பெறுவாராக! ஆண்டவர் இஸ்ராயேலின் மீது என்றென்றும் அன்பு கொண்டதினால் அன்றோ, நீதி செலுத்துவதற்கு உம்மை மன்னராக ஏற்படுத்தினார்!" என்றாள்.

அவள் அரசருக்கு நூற்றிருபது தாலந்து நிறையுள்ள பொன்னையும் மிகுந்த நறுமணப் பொருட்களையும் இரத்தினங்களையும் கொடுத்தாள். சாபாவின் அரசி சாலமோனுக்குக் கொடுத்த அத்துணை நறுமணப் பொருட்கள் அதன் பிறகு யெருசலேமுக்கு வந்ததே கிடையாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 36 : 5-6. 30-31. 39-40 (பல்லவி : 30a)*

பல்லவி : நீதிமானின் வாயிலிருந்து ஞானம் வெளிப்படும்.

5 உன் வாழ்வின் முடிவை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு; அவர் பேரில் நம்பிக்கை வைத்திரு; அவரே எல்லாம் செய்வார்.

6 உனது நேர்மை ஒளிபோல எழும்பச் செய்வார்; உனது மாசின்மை பட்டப் பகல்போல விளங்கச் செய்வார்.

பல்லவி

30 நீதிமானின் வாயிலிருந்து ஞானம் வெளிப்படும் : அவனது நாவு
நேரியதை எடுத்துரைக்கும்.
31 கடவுளுடைய திருச்சட்டம் அவன் நெஞ்சில் பதிந்துள்ளது : அவனுடைய
பாதங்கள் தடுமாறுவதில்லை.
பல்லவி
39 நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும்: துன்ப வேளையில்
அவர்களுக்குப் புகலிடம் அவரே.
40 ஆண்டவர் அவர்களுக்குத் துணை நின்று விடுதலையளிக்கிறார் ; தீயோரின்
கையினின்று விடுவித்துக் காப்பாற்றுகிறார் : ஏனெனில், அவர்கள்
அவரிடம் அடைக்கலம் தேடுகின்றனர். பல்லவி

அல்லேலூயா

அரு. 17:17ab

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை:
உண்மையினால் எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனிதனுள்ளிருந்து வெளிவருவதே அவனை மாசுபடுத்தும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 7:14-23

அக்காலத்தில் :

மீண்டும் யேசு கூட்டத்தைத் தம்மிடம் அழைத்து, "அனைவரும் நான் சொல்வதைக் கேட்டு உணர்ந்து கொள்ளுங்கள். புறத்தேயிருந்து மனிதனுக்குள்ளே சென்று அவனை மாசுபடுத்தக்கூடியது ஒன்றுமில்லை. மனிதனுள்ளிருந்து வெளிவருவதே அவனை மாசுபடுத்தும். கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும்" என்றார்.

அவர் கூட்டத்தை விட்டு வீட்டிற்கு வந்தபோது, அவருடைய சீடர் இவ்வுவமையின் பொருளைக் கேட்டனர். அதற்கு அவர், "உங்களுக்குமா அறிவில்லை? புறத்தேயிருந்து மனிதனுக்குள்ளே செல்வது எதுவும் அவனை மாசுபடுத்தமுடியாதென்று உணரவில்லையா? ஏனெனில், அது அவனுடைய உள்ளத்துள் நுழையாமல், அவனுடைய வயிற்றிலே சென்று ஒதுக்கிடத்திற்குப் போய்விடுகிறது" என்றார். இவ்வாறு உணவுகள் எல்லாம் தூயனவென்று குறிப்பிட்டார்.

மேலும், "மனிதனுள்ளிருந்து வருவதே அவனை மாசுபடுத்தும். ஏனெனில், மனிதர் உள்ளத்தினின்றே தீய எண்ணம், மோகம், களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், கபடு, கெட்ட நடத்தை,

பொறாமை, பழிச்சொல், செருக்கு, மதிகேடு ஆகியவை வெளிவரும். இத் தீயவை யாவும் உள்ளத்திலிருந்துவந்து மனிதனை மாசுபடுத்தும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*அவளை ஆதாமிடம் கொண்டுவந்தார்; இருவரும் ஒரே மாமிசமாயிருப்பார்கள்.*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம். 2:18-25

ஆண்டவராகிய கடவுள்: 'மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று; ஆதலால் அவனுக்குச்சரிநிகரான ஒரு துணைவியை அவனுக்கென உண்டாக்குவோம்' என்றார்.

ஆண்டவராகிய கடவுள் பூமியின் எல்லாவித மிருகங்களையும் வானத்துப் பறவைகள் அனைத்தையும் மண்ணினின்று படைத்த பின்னர், அவற்றிற்கு ஆதாம் என்னென்ன பெயர் இடுவானென்று பார்க்க அவற்றையெல்லாம் அவனிடம் கூட்டி வந்தார். ஏனென்றால் அந்த உயிரினங்களுக்கு ஆதாம் எந்தப் பெயரிட்டானோ அதுவே அவற்றிற்குப் பெயராய் அமைந்தது. அவ்வாறே ஆதாம் எல்லாக் கால்நடைகளுக்கும், வானத்துப் பறவைகளுக்கும், பூமியிலுள்ள எல்லா மிருகங்களுக்கும், தகுதியான பெயர்களை இட்டான். ஆனால் ஆதாமுக்கு ஒத்த துணை ஒன்றும் தென்படவில்லை.

அப்போது ஆண்டவராகிய கடவுள் ஆதாமுக்கு ஆழ்ந்த தூக்கம் வரச் செய்தார். அவன் அவ்வாறு தூங்கிக் கொண்டிருந்தபோது கடவுள் அவனுடைய விலாவெலும்புகளில் ஒன்றை எடுத்து, அவ்வாறு எடுத்த இடத்தைச் சதையினால் மூடினார்.

பின்னர் ஆண்டவராகிய கடவுள் ஆதாமிடமிருந்து எடுத்த விலாவெலும்பை ஒரு பெண்ணாகச் செய்து, அந்தப் பெண்ணை ஆதாமிடம் அழைத்துக்கொண்டு வந்தார். ஆதாம்: இவள் என் எலும்புகளின் எலும்பும் மாமிசத்தின் மாமிசமுமாய் இருக்கிறாள்; இவள் மனிதனிடத்தினின்று எடுக்கப்பட்டவளாதலால் மனுசி எனப்படுவாள் என்றான்.

இதன் பொருட்டு மனிதன் தன் தந்தையையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான்; இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள், (என்று சொன்னார்.)

ஆதாம், அவன் துணைவி ஆகிய இருவரும் நிருவாணமாய் இருந்தார்கள்; இருந்தும் அவர்கள் வெட்கம் என்பதை அறியாதிருந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 127: 1-2. 3. 4-5 (பல்லவி: 1a காண்)*

பல்லவி: **ஆண்டவருக்கு அஞ்சுவோர் அனைவரும் பேறுபெற்றோர்.**

1 ஆண்டவருக்கு அஞ்சும் நீ பேறுபெற்றோன்: அவர் காட்டிய வழியில் நடப்பவன் நீ பேறுபெற்றோன்.

2 ஏனெனில், உன் கையால் உழைத்து உன் உணவைக் கொள்வாய்: பேறு பெற்றவனாவாய். எல்லாம் உனக்கு நலமாகும். பல்லவி

3 கனிதரும் கொடி முந்திரிபோல் உன் மனைவி உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள். ஒலிவச் செடிகள்போல உன் மக்கள் பந்தியில் உன்னைச் சூழ்ந்திருப்பர். பல்லவி

4 ஆண்டவருக்கு அஞ்சும் மனிதனுக்குக் கிடைக்கும் ஆசி இதுவே.

5 சீயோனிலிருந்து ஆண்டவர் உனக்கு ஆசி பொழிவாராக: உன் வாழ்நாளெல்லாம் யெருசலேமின் செழுமையை நீ காணும்படி உனக்கு ஆசி கூறுவாராக. பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*உடன்படிக்கையை நீ மீறினதால், உன் அரசைக் கூறு கூறாக்குவோம். ஆனால், தாவீதின் பொருட்டு, ஒரு கோத்திரத்தை உன் மகனுக்குக் கொடுப்போம்.*

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம். *11:4-13*

சாலமோன் அரசர் முதிர்ந்த வயதினராயிருந்த போது அவருடைய மனைவிகள் அவர் இதயத்தை அன்னிய தேவர்களைப் பின்பற்றும்படி கெடுத்து விட்டார்கள். அதனால் அவரது இதயம் அவர் தந்தை தாவீதின்

இதயத்தைப்போல் தம் கடவுளாகிய ஆண்டவரோடு முழுவதும் ஒன்றித்திருக்கவில்லை. சாலமோன் சீதோனியரின் தேவதையாகிய அஸ்தார்த்தையும், அம்மோனியரின் குல தெய்வமாகிய மோலோக்கையும் வழிபட்டார். சாலமோன் தம் தந்தையைப் போல் ஆண்டவரை முழுவதும் பின்பற்றாது ஆண்டவருக்கு ஏற்காததைச் செய்தார். அப்பொழுது சாலமோன் யெருசலேமுக்கு எதிரான மலையில் மோவாபியரின் தெய்வமாகிய காமோசுக்கும் அம்மோனியரின் தெய்வமாகிய மோலோக்குக்கும் கோயில்களைக் கட்டினார். இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபம் காட்டிப் பலியிடுகிற புறவினத்தாரான தம் மனைவியர் எல்லோருக்கும் சாலமோன் செய்தார்.

ஆகையால் சாலமோனுக்கு இன்னொரு முறை தோன்றின ஆண்டவர், அவரது இதயம் இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரிடமிருந்து விலகியிருந்ததால் சாலமோன்மீது கோபமுற்றார். அந்நிய தேவர்களைப் பின்பற்ற வேண்டாம் என்று ஆண்டவர் அவருக்குக் கண்டிப்பாய்ச் சொல்லியிருந்தபோதிலும் அவர் அக்கட்டளைப்படி நடக்வில்லை. ஆகையால் ஆண்டவர் சாலமோனை நோக்கி,

"நாம் உன்னோடு செய்த உடன்படிக்கையையும், நாம் உனக்கு இட்ட கட்டளைகளையும் மீறி இவ்வாறு நடந்து கொண்டதால் உன் அரசை உன்னிடமிருந்து பறித்துக் கூறுகூறாக்கி உன் ஊழியரில் ஒருவனுக்குக் கொடுப்போம். ஆயினும் உன் தந்தை தாவீதின் பொருட்டு நீ உயிரோடு இருக்கும் போது நாம் இதைச் செய்ய மாட்டோம். உன் மகன் கையினின்று அதைப் பிரித்துத் துண்டு துண்டாக்குவோம். இருந்தபோதிலும் அரசு முழுவதையும் பறித்தெடுக்காது, நம் அடியான் தாவீதின் பொருட்டும் நாம் தேர்ந்துகொண்ட யெருசலேமின் பொருட்டும் ஒரு கோத்திரத்தை உன் மகனுக்குக் கொடுப்போம்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 105:3-4.35-36. 37.40 (பல்லவி: 4a)*

பல்லவி: ஆண்டவரே, நீர் உம் மக்கள்மீது காட்டிய கருணைக்கேற்ப என்னை நினைவுகூரும்.

3 அவர் தந்த கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர் பேறு பெற்றோர்:
நீதியானதை எந்நாளும் செய்பவர் பேறு பெற்றோர்.

4 ஆண்டவரே. நீர் உம் மக்கள்மீது காட்டிய கருணைக்கேற்ப என்னை நினைவு
கூரும்: உமது உதவியை எனக்குத் தாரும். பல்லவி

35 அதோடு அவ்வேற்றினத்தாரோடு சேர்ந்துகொண்டனர்: அவர்கள்
செய்த அக்கிரமங்களையே இவர்களும் செய்யலாயினர்.
36 அவர்கள் வழிபட்ட சிலைகளை வணங்கலாயினர்: அவையே அவர்களுக்குக்
கண்ணிகள் ஆயின. பல்லவி

37 தம் ஆண்மக்களை அச்சிலைகளுக்குப் பலியிடலாயினர்: தம் பெண்மக்களைப்
பேய்களுக்குப் பலியிட்டனர்.
40 தம் மக்கள்மீது ஆண்டவர் சினம் மூண்டெழுந்தார்: தம் உரிமைப்
பொருளான அவர்களை வெறுத்துத் தள்ளினார். • பல்லவி

அல்லேலூயா பாக. 1:21

அல்லேலூயா. உங்கள் உள்ளத்தில் ஊன்றப்பெற்ற வார்த்தையை அமைந்த மனத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள் : இந்த வார்த்தையே உங்கள் ஆன்மாவை மீட்கவல்லது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*மேசைக்கடியில் நாய்க்குட்டிகளும் குழந்தைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்கின்றன.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்: 7:24-30

யேசு புறப்பட்டுத் தீர், சீதோன் நாட்டுக்குச் சென்றார். ஒரு வீட்டிற்குள் போனார். அது ஒருவருக்கும் தெரியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அது மறைவாயிருக்க முடியவில்லை. உடனே ஒரு பெண் அவரைப்பற்றிக் கேள்வியுற்று, உள்ளே வந்து அவர் காலில் விழுந்தாள். அவளுடைய மகளை அசுத்த ஆவி பிடித்திருந்தது. அவள் புற இனத்தவள். சீரோ பெனீசிய குலத்தைச் சார்ந்தவள். தன் மகளிடமிருந்து பேயை ஓட்டுமாறு அவரைக் கேட்டுக்கொண்டாள். அவரோ அவளைப் பார்த்து, "முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்களுக்குப் போடுதல் நல்லதன்று" என்றார். அவளோ மறுமொழியாக, "ஆமாம் ஆண்டவரே, ஆனால் மேசைக்கடியில் நாய்க்குட்டிகளும் குழந்தைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்கின்றனவே" என்றாள். அதற்கு அவர், "இவ்வார்த்தையின் நிமித்தம் நீ போகலாம்; பேய் உன் மகளை விட்டுவிட்டது" என்றார். அவள் வீடு திரும்பியபோது சிறுமி கட்டிலில் கிடப்பதையும், பேய் அகன்று விட்டதையும் கண்டாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*நீங்கள் தெய்வங்கள் போலாகி, நன்மையும் தீமையும் அறிவீர்கள்.*

ஆதிஆகமத்திலிருந்து வாசகம் *3:1–8*

ஆண்டவராகிய கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப் பிராணிகளிலும் பாம்பு அதிகத் தந்திரமுள்ளதாய் இருந்தது. அது பெண்ணை நோக்கி, "இன்ப வனத்திலுள்ள எல்லா மரங்களின் கனிகளையும் உண்ண வேண்டாமென்று உங்களைக் கடவுள் ஏன் தடுத்தார்?" என்று கேட்டது.

பெண்: "இன்ப வனத்திலுள்ள மரங்களின் கனிகளை நாங்கள் உண்டே வருகிறோம்; ஆனால், இன்ப வனத்தின் நடுவிலிருக்கிற மரத்தின் கனியைத் தின்ன வேண்டாம்; தொடவும் வேண்டாமென்று கடவுள் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்; தின்றால் சாவோம்" என்றாள். பாம்பு பெண்ணை நோக்கி: "நீங்கள் உண்மையில் சாகவேமாட்டீர்கள்; நீங்கள் எப்போது அக்கனியைத் தின்பீர்களோ அந்நேரமே உங்கள் கண்கள் திறக்கப்படும். அதனால் நீங்கள் தெய்வங்கள் போல் ஆகி நன்மையும் தீமையும் அறிவீர்கள்; இது கடவுளுக்குத் தெரியும்" என்று சொல்லிற்று.

அப்பொழுது பெண் அந்த மரத்தின் கனி தின்பதற்கு நல்லது, பார்வைக்கு இனியது, அறிவைப் பெறுவதற்கு விரும்பத்தக்கது எனக் கண்டு, அதைப் பறித்துத் தானும் உண்டாள்; தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் அதைத் தின்றான்.

உடனே அவ்விருவருடைய கண்களும் திறக்கப்பட்டன. தாங்கள் நிருவாணமாய் இருந்ததை அவர்கள் கண்டு, அத்தி இலைகளைத் தைத்து இடுப்பில் உடுத்திக் கொண்டார்கள்.

மேலும், மாலையில் தென்றல் வீசும் வேளையிலே இன்ப வனத்தில் உலாவிக் கொண்டிருந்த ஆண்டவராகிய கடவுளின் குரலொலியைக் கேட்டார்கள். கேட்டதும், ஆதாமும் அவன் மனைவியும் ஆண்டவராகிய கடவுளின் முன்னிலையில் நில்லாதவாறு இன்ப வனத்து மரங்களிடையே ஒளிந்து கொண்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

திபா. 31:1-2, 5, 6, 7 (பல்லவி: 1a)

பல்லவி: **எவன் பாவம் போக்கப்பட்டதோ, அவன் பேறு பெற்றவன்.**

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ அவன் பேறு பெற்றவன்: எவன் பாவம் மறைக்கப்பட்டதோ அவனும் பேறு பெற்றவன்.

2 ஆண்டவர் எவன் மேல் பாவத்தைச் சுமத்தவில்லையோ அவன் பேறு பெற்றவன்: யாருள்ளத்தில் வஞ்சகமில்லையோ அவனும் பேறு பெற்றவன். பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன்; என் குற்றத்தை நான் உம் திருமுன் மறைத்தேனில்லை: "ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக் கொள்கிறேன்" என்றேன்; நீரும் என் குற்றத்தை மன்னித்தீர். பல்லவி

6 இதனால் நல்லவர் யாவரும் உம்மை நோக்கி வேண்டுவர்; நெருக்கடியான வேளையில் அவர்கள் உம்மை மன்றாடுவார்கள். வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும் அவர்களை நெருங்காது. பல்லவி

9 ஆண்டவரே, நீர் எனக்கு அடைக்கலமாய் உள்ளீர். இன்னல்கள் அனைத்தினின்றும் என்னைக் காத்தருள்வீர்: உம் மீட்பால் வரும் மகிழ்வாலே என்னை அணைக்கின்றீர். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

***இஸ்ராயேலர் இன்றுவரை தாவீதின் வம்சத்தை விட்டுப் பிரிந்து போயிருக்கிறார்கள்.***

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 11 : 29-32 . 12 : 9

அக்காலத்தில் எரோபோவாம் யெருசலேமிலிருந்து வெளியே போகிறபோது புதுச் சால்வையைப் போர்த்தியிருந்த சிலோனித்தராகிய அகியாசு என்ற இறைவாக்கினர் வழியிலே அவனைக் கண்டார்.

இருவரும் வயல் வெளியில் தனித்திருக்கையில், அகியாசு தாம் போர்த்தியிருந்த புதுச்சால்வையை எடுத்து அதைப் பன்னிரு துண்டுகளாக கிழித்து, எரோபோவாமை நோக்கி, "இதில் பத்துத் துண்டுகளை எடுத்துக் கொள்; ஏனெனில் இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவர் சொல்கிற

தாவது:'இதோ! நாம் சாலமோனுடைய கையிலிருந்து ஆட்சியைப் பிடுங்கிப் பிரித்து உனக்குப் பத்துக் கோத்திரங்களைக் கொடுப்போம். ஆயினும் என் ஊழியன் தாவீதுக்காகவும், இஸ்ராயேல் கோத்திரங்களிலெல்லாம் நாம் தேர்ந்துகொண்ட யெருசலேம் நகருக்காகவும் ஒரு கோத்திரம் அவன் கையில் இருக்கும்.

அப்படியே இன்றுவரை இஸ்ராயேலர் தாவீதின் வம்சத்தை விட்டுப் பிரிந்து போயிருக்கிறார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப்பாடல்

சங். 80 : 9-10ab. 11-12. 13-14 (பல்லவி : 10a-8a காண்)

பல்லவி : உன் கடவுளாகிய ஆண்டவர் நாமே:
நீ எனக்குச் செவிசாய்ப்பாய்.

9 வேறு தேவன் எவரும் உனக்கு இருத்தலாகாது: அந்நிய தேவன் யாரையும் நீ வணங்கலாகாது.
10 எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேற்றிய கடவுளாகிய ஆண்டவர் நாமே.
பல்லவி

11 ஆனால் என் மக்கள் என் குரலுக்குச் செவி சாய்க்கவில்லை: இஸ்ராயேலர் எனக்குக் கீழ்ப்படியவில்லை.
12 ஆகவே அவர்கள் இருதயக் கடினத்திற்கே கையளித்தேன்: தங்கள் யோசனையின்படி நடக்க விட்டுவிட்டேன்.
பல்லவி

13 என் மக்கள் எனக்குச் செவிசாய்த்திருந்தால் எவ்வளவோ நலம்! நான் காட்டிய வழியில் இஸ்ராயேல் நடந்திருந்தால் எவ்வளவோ நலமாயிருந்திருக்கும்!
14 அவர்கள் எதிரிகளை உடனுக்குடனே ஒழித்திருப்பேன்: என் கரத்தின் வல்லமை அவர்கள் எதிரிகளைத் தாக்கியிருக்கும்.
பல்லவி

அல்லேலூயா — அப். பணி 16 : 14b காண்

அல்லேலூயா. உம் திருமகனின் சொற்களை
எங்கள் மனத்தில் இருத்தும்படி
ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும்.
அல்லேலூயா.

### நற்செய்தி வாசகம்

**செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் செய்கிறார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 7:31-37

அக்காலத்தில்:

யேசு தீர் நாட்டை விட்டு, சீதோன் வழியாகத் தெக்கப்போலி நாட்டின் நடுவே வந்து கலிலேயாக் கடலை அடைந்தார். செவிடனும் திக்கு வாயனுமாகிய ஒருவனை அவரிடம் கொண்டுவந்து, அவன்மீது கையை வைக்குமாறு அவரை வேண்டினர். அவர் அவனைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று தம் விரல்களை அவன் காதுகளில் விட்டு, உமிழ் நீரால் அவன் நாவைத் தொட்டார். பின், வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சுவிட்டு அவனை நோக்கி, 'எப்பேத்தா' — அதாவது, திறக்கப்படு — என்றார். உடனே அவன் காதுகள் திறக்கப்பட்டன. நாவின் கட்டவிழ்ந்தது. நன்றாகப் பேசினான்.

இதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். எவ்வளவுக்கு அவர் கட்டளையிட்டாரோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவர்கள் அதை விளம்பரப்படுத்தினர். அவர்கள் மிகவும் மலைத்துப்போய், "எல்லாம் நன்றாகச் செய்திருக்கிறார். செவிடர் கேட்கவும் ஊமைகள் பேசவும் செய்கிறார்" என்று கூறினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**மண்ணைப் பண்படுத்தும்படி அவனை ஆண்டவராகிய கடவுள் இன்பவனத்திலிருந்து அனுப்பிவிட்டார்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம். 3:9-24

ஆண்டவராகிய கடவுள் ஆதாமைக் கூப்பிட்டு: எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் இன்ப வனத்தில் உமது குரலொலியைக் கேட்டேன். நிர்வாணியாய் இருந்ததால் பயந்து ஒளிந்து கொண்டேன்

என்றான். கடவுள்: நீ நிருவாணியாய் இருப்பதாக உனக்குச் சொன்னவன் யார்? உண்ண வேண்டாமென்று நாம் உனக்கு விலக்கியிருந்த கனியைத் தின்றாயோ என்று வினவினார். ஆதாம்: எனக்குத் துணையியாய் இருக்கும்படி நீர் எனக்குத் தந்தருளிய அந்தப் பெண்ணே அம்மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்; நானும் தின்றேன் என்றான். அப்போது ஆண்டவராகிய கடவுள் பெண்ணை நோக்கி: நீ ஏன் அவ்வாறு செய்தாய் என்று கேட்டார். அவள்: பாம்பு என்னை வஞ்சித்ததால் தின்றுவிட்டேன் என்று பதில் சொன்னாள்.

அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் பாம்பைப் பார்த்து: நீ அவ்வாறு செய்ததால் பூமியிலுள்ள எல்லாப் பிராணிகளிலும் சபிக்கப் பட்டதாய், உன் வயிற்றில் ஊர்ந்து, உயிரோடிருக்கும்வரை மண்ணைத் தின்பாய்; உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கு மிடையே பகையை உண்டாக்குவோம்; அவள் உன் தலையை நசுக்குவாள்; நீயோ அவளுடைய குதிங்காலைத் தீண்ட முயலுவாய் என்றார். அவர் பெண்ணை நோக்கி: துன்பங்களையும் கருப்ப வேதனைகளையும் உனக்கு அதிகப்படுத்துவோம்; வேதனையோடு நீ பிள்ளைகளைப் பெறுவாய்: கணவனின் அதிகாரத்துக்கு நீ அடங்கி இருப்பாய்; அவன் உன்னை ஆண்டு கொள்வான் என்றார்.

பின் கடவுள் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் சொல்லுக்குச் செவிசாய்த்து, உண்ண வேண்டாமென்று நாம் விலக்கியிருந்த மரத்தின் கனியைத் தின்றதினாலே உன் பொருட்டுப் பூமி சபிக்கப்பட்டிருக்கும்; நீ உழைத்துத்தான் உன் வாழ்நாளெல்லாம் அதன் பலனை உண்பாய். அது உனக்கு முட்களையும் முட்செடிகளையும் விளைவிக்கும்; பூமியின் புல் பூண்டு களை நீ உண்பாய்; நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்பாய். இறுதியில், நீ எந்தப் பூமியினின்று எடுக்கப்பட்டாயோ அந்தப் பூமிக்கே திரும்பிப் போவாய்; ஏனென்றால், நீ மண்ணாய் இருக்கிறாய்; மண்ணுக்கே திரும்புவாய் என்றார்.

பின் ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயரிட்டான்; ஏனென்றால், அவளே உயிர் வாழ்வோர்க்கெல்லாம் தாயானவள். அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் தோல் சட்டைகளைச் செய்து ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் அணிவித்தார். பின், இதோ ஆதாம் நன்மை தீமை அறிந்தவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆகிவிட்டானே! இனி அவன் தன் கையை நீட்டி வாழ்வளிக்கும் மரத்தின் கனியைப் பறித்துத் தின்று, என்றென்றும் உயிர் வாழ்வானே என்று சொல்லி,

அவன் எந்த மண்ணினின்று எடுக்கப்பட்டானோ அந்த மண்ணையே பண்படுத்தும்படி ஆண்டவராகிய கடவுள் அவனை இன்ப வனத்திலிருந்து அனுப்பிவிட்டார். அப்படி ஆதாமை வெளியே துரத்திவிட்ட பின்

கடவுள் இன்ப வனத்தின் வாயிலில், சுடர் விட்டெரியும் வாளை ஏந்தி எப்பக்கமும் சுழற்றுகின்ற கெருபிமை வைத்து, வாழ்வளிக்கும் மரத்திற்குப் போகும் வழியைக் காவல் செய்யச் சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 89:2. 3-4. 5-6. 12-13 (பல்லவி : 1)

பல்லவி : ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக
நீரே எங்களுக்குப் புகலிடம்.

2 மலைகள் தோன்றுமுன்பே, பூமியும் உலகும் உண்டாகுமுன்பே, ஊழி ஊழிக்காலமாக இறைவா, நீர் இருக்கிறீர். பல்லவி

3 மண்ணோடு மண்ணாகும்படி நீர் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறீர் : "மனுமக்களே மண்ணாகத் திரும்புங்கள்" என்கிறீர்.

4 ஏனெனில், உமக்கு ஆயிரம் ஆண்டுகள்கூட, கடந்துபோன நேற்றைய தினத்தைப் போலவும்; ஓர் இரவுச் சாமத்தைப் போலவும் உள்ளன. பல்லவி

5 அவர்களை எடுத்துவிடுகிறீர் : வைகறையில் கண்ட கனவைப் போலவும், செழித்து வளரும் பூண்டைப்போலவும் ஆகிறார்கள்.

6 காலையில் பூக்கிறது, செழித்திருக்கிறது : மாலையிலோ வாடிவிடுகிறது. பல்லவி

12 உள்ளத்தின் ஞானத்தை அடையுமாறு, எங்கள் வாழ்நாளைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும்.

13 ஆண்டவரே, திரும்பி வாரும்; எவ்வளவு காலம் கோபம் கொள்வீர்? உம் ஊழியர்மீது இரக்கம் வையும். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**எரோபோவாம் பொன்னினால் இருகன்றுக்குட்டிகளைச் செய்தான்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 12:26-32. 13:33-34

அந்நாட்களில் :

எரோபோவாம் தனக்குள் சொல்லிக்கொண்டதாவது: "இப்போது அரசு தாவீதின் குலத்திற்குத் திரும்பி வரும். இம் மக்கள் யெருசலேமில்

உள்ள ஆலயத்திலே பலிகளைச் செலுத்தப் போனால் அவர்கள் யூதாவின் அரசன் ரொபோவாம் என்ற தங்கள் தலைவனோடு சேர்ந்துகொண்டு என்னைக் கொன்று போடுவர்.'' தனக்குள் ஆலோசித்தபின் பொன்னால் இரு கன்றுகுட்டிகளைச் செய்து, மக்களை நோக்கி, "இனி நீங்கள் யெருசலேமுக்குப் போகாதீர்கள். இஸ்ராயேலரே, இதோ! எகிப்து நாட்டிலிருந்து உங்களை மீட்டு வந்த உங்கள் தெய்வங்கள்" என்று சொன்னான். பின்னர் ஒன்றைப் பேத்தலிலும் மற்றொன்றைத் தானிலும் வைத்தான். இது பாவத்திற்கு ஏதுவாயிற்று. மக்கள் இக் கன்றுக் குட்டியை வணங்க 'தான்' வரை போவார்கள்.

அது தவிர எரோபோவாம் மேடுகளில் கோயில்களைக் கட்டி லேவியின் புதல்வராயிராத மக்களில் தாழ்ந்தவர்களைக் குருக்களாக்கினான். யூதாவில் கொண்டாடப்படும் திருவிழாவிற்கு இணையாக, எட்டாம் மாதம் பதினைந்தாம் நாள் எரோபோவாம் ஒரு விழாக் கொண்டாடச் செய்தான். அவ்வாறே பேத்தலிலும் செய்து, தான் செய்து வைத்த கன்றுக்குட்டிகளையும் பீடத்தில் ஏற்றி, அவற்றிற்குப் பலியிட்டுத் தான் அமைத்திருந்த மேடுகளில்இருந்த குருக்களையும் பேத்தலில்ஏற்படுத்தினான்.

இவற்றின் பின்னும் எரோபோவாம் தன் கெட்ட நடத்தையை மாற்றிக்கொள்ளாது, மறுபடியும் மக்களில் ஈனமானவர்களை மேட்டுக் கோயில்களின் குருக்களாக்கினான். யார் யார் விரும்பினரோ அவர்கள் அனைவரையும் மேட்டுக் கோயில்களின் குருக்களாக அவன் அபிஷேகம் செய்தான். எரோபோவாமின் சந்ததி பூமியின்மேல் நிலைகொள்ளாது சிதறுண்டு அழிந்து போனதற்கு இப்பாவமே காரணமாய் இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 105:6-7a. 19-20.21-22 (பல்லவி; 4a)

பல்லவி: நீர் உம் மக்கள்மீது காட்டிய கருணைக்கேற்ப ஆண்டவரே, என்னை நினைவுகூரும்.

6 எங்கள் முன்னோர்களைப் போல நாங்களும் பாவம் செய்தோம், அக்கிரமம் செய்தோம்: தீமைகள் புரிந்தோம்.

7 எங்கள் முன்னோர்கள் எகிப்தில் நீர் செய்த அற்புதச் செயல்களை உணரவில்லை.
பல்லவி

19 ஓரேப் மலையில் கன்றுக்குட்டியை உருவாக்கினர்: பொன்னால் வார்த்த சிலையை வணங்கலாயினர்.

20 புல் மேயும் காளையின் சிலக்குக் கடவுளின் மாட்சியை ஈடாக்கினர்.
பல்லவி

21 தங்களை மீட்டுக்கொண்ட கடவுளை அவர்கள் மறந்தனர்: எகிப்தில்
புதுமை செய்தவரை மறந்தனர்.
22 காமின் நாட்டில் நிகழ்ந்த அற்புதங்கள் ஆற்றியவரை, செங்கடலருகே
வியப்புக்குரியன செய்தவரை மறந்தனர்.
பல்லவி

அல்லேலூயா

மத். 4:4

அல்லேலூயா. மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று,
கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும்
உயிர்வாழ்கிறான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அவர்கள் வயிறார உண்டனர்.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8:1-10

அந்நாட்களில் மீண்டும் ஒரு பெருங்கூட்டம் கூடியிருந்தது. அவர்கள் உண்ண ஒன்றும் இல்லை. அப்போது யேசு சீடரை அழைத்து, " இக் கூட்டத்தின்மீது நான் மனமிரங்குகிறேன். ஏனெனில், இவர்கள் விடாமல் இம்மூன்று நாட்களாக என்னுடன் இருக்கிறார்கள். இவர்களுக்கு உணவு ஒன்றுமில்லையே! இவர்களை வீட்டுக்குப் பட்டினியாக நான் அனுப்பினால் வழியில் சோர்ந்து விழுவர். இவர்களில் சிலர் தொலைவிலிருந்து வந்துள்ளனர்" என்றார்.

சீடர் அவருக்கு மறுமொழியாக, " இப்பாழ்வெளியில் இவர்களுக்கு வயிறார உணவளிப்பது எப்படி?" என்றனர். அதற்கு அவர், " உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன?" என்று கேட்க, " ஏழு" என்றனர். தரையில் பந்தியமரக் கூட்டத்துக்குக் கட்டளையிட்டார். பின்பு ஏழு அப்பங்களையும் எடுத்து நன்றிகூறி, பிட்டு, சீடருக்கு அளித்துப் பரிமாறச் சொன்னார். அவர்கள் கூட்டத்துக்குப் பரிமாறினர். அவர்களிடம் சிறு மீன்கள் சிலவும் இருந்தன. அவற்றையும் அவர் எடுத்து இறைபுகழ் கூறிப் பரிமாறச் சொன்னார்.

அவர்கள் வயிறார உண்டனர். மீதியான துண்டுகளை ஏழு கூடை நிறைய எடுத்தனர். உணவு அருந்தியவர் ஏறக்குறைய நாலாயிரம் பேர்.

பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டு, உடனே தம் சீடரோடு படகேறித் தல்மனூத்தாப் பக்கம் சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஆறும் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**அக்கிரமமாய் நடக்க அவர் எவனுக்கும் கற்பித்ததில்லை.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் *15:16-21*

கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், அவருக்கு நித்தியத்திற்கும் விருப்பமாய் நடக்கவும் உனக்கு மனமுண்டானால் அவைகள் உன்னைக் காப்பாற்றும். அவர் நீரும் நெருப்பும் உன் முன்பாக வைத்தார். எது வேண்டுமோ, உன் கையை நீட்டு, மனிதனுக்கு முன்பாக வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும் உண்டு. அவன் எதைத் தேர்ந்து கொள்வானோ அதை அடைவான். ஏனென்றால், கடவுளுடைய ஞானம் மகத்தானது. அதிகாரத்தில் வல்லமை உள்ளது. அவர் இடைவிடாமல் அனைவரையும் கண்டறிகிறார். ஆண்டவருடைய கண்கள் அவருக்கு அஞ்சி நடப்பவர்கள் மீது இருக்கின்றன. மனிதனுடைய எல்லாச் செயல்களையும் அவர் அறிகிறார். அக்கிரமமாய் நடக்க அவர் எவனுக்கும் கற்பித்ததில்லை; பாவம் செய்யும்படி எவருக்கும் உத்தரவு கொடுத்ததில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 118:1-2. 4-5. 17-18. 33-34 (பல்லவி : 1b)*

பல்லவி : ஆண்டவர்தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறு பெற்றோர்.

1 மாசற்ற வழியில் நடப்போர் பேறு பெற்றோர் : ஆண்டவர்தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறு பெற்றோர்.

2 அவருடைய ஆணைகளைக் கடைப்பிடிப்போர் பேறு பெற்றோர் : முழு மனத்தோடு அவரைத் தேடுவோர் பேறு பெற்றோர். பல்லவி

4 நீர் உம் கட்டளைகளைத் தந்தீர் : அவற்றை முற்றிலும் கடைப்பிடிக்க வேண்டுமென்றீர்.

5 உம்முடைய நியமங்களை நான் கடைப்பிடிக்க, என் நடத்தை உறுதி யுள்ளதாய் நிலைத்திருந்தால் எவ்வளவோ நலம்! பல்லவி

17 உம் வார்த்தைகளை நான் கடைப்பிடித்து வாழும் வண்ணம், உம் ஊழியன் எனக்கு அருள்கூரும்.

18 உமது திருச்சட்டத்தின் வியத்தகு செயல்களை நான் நன்குணரும் வண்ணம், என் கண்களைத் திறந்தருளும். பல்லவி

33 ஆண்டவரே, உம் நியமங்கள் குறிப்பிடும் வழியை எனக்குக் காட்டியருளும்: நான் அவற்றை அப்படியே கடைப்பிடிப்பேன்.

34 உம் திருச்சட்டப்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும் : அதை நான் முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஞானம் நமது மகிமைக்காக உலகம் உண்டாகுமுன்பே கடவுளின் திட்டத்தில் இருந்தது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2:6-10

சகோதரர்களே :

நிறைவு பெற்றவர்களிடையில் நாங்கள் ஞானத்தையே பேசுகிறோம். ஆனால் அது இவ்வுலகின் ஞானமன்று. அழிவுக்குரிய இவ்வுலகத் தலைவர்களின் ஞானமுமன்று.

கடவுளின் ஞானத்தையே பேசுகிறோம். அதுவோ மறைபொருளான ஞானம், இதுவரையில் அது மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அது நமது மகிமைக்காக உலகம் உண்டாகு முன்பே கடவுளின் திட்டத்தில் இருந்தது. அதை இவ்வுலகின் தலைவர்களுள் யாரும் அறிந்துகொள்ளவில்லை. அறிந்திருந்தால் மாட்சிமை மிக்க ஆண்டவரைச் சிலுவையில் அறைந்திருக்கவே மாட்டார்கள். நாங்கள் அறிவிப்பதோ மறைநூலில் எழுதியுள்ளவாறு, "கண்ணுக்குப் புலப்படாதது, காதுக்கு எட்டாதது, மனித உள்ளத்தில் எழாதது, கடவுள் தமக்கு அன்பு செய்கிறவர்களுக்காக ஏற்பாடு செய்தது."

இதைக் கடவுள் தம் ஆவியின் வழியாய் நமக்கு வெளிப்படுத்தினார். ஆவியானவர் எல்லாவற்றையும் ஊடுருவிக் காண்கிறார். கடவுளுடைய உள்ளத்தின் ஆழத்தையும் காண்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *மத். 11:25 காண்.*

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, உம்மைப் புகழ்கின்றோம்.
விண்ணரசு பற்றிய மறையுண்மைகளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இவ்வாறு முன்னோர்க்குச் சொல்லியுள்ளது; நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:17-37

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேனென்று நினைக்க வேண்டாம். அழிப்பதற்கன்று, நிறைவேற்றுவதற்கே வந்தேன். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகுமுன் திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ புள்ளியோ ஒழிந்து போகாது; எல்லாம் நிறைவேறும்.

ஆகையால், இச் சின்னஞ் சிறு கட்டளைகளில் ஒன்றையேனும் மீறி, அப்படியே மனிதர்க்கும் போதிப்பவன், விண்ணரசில் மிகச் சிறியவன் எனப்படுவான். அவற்றைக் கடைப்பிடித்துப் போதிப்பவனோ, விண்ணரசில் பெரியவன் எனப்படுவான். உங்களுக்குச் சொல்லுகிறேன்: மறைநூல் அறிஞர், பரிசேயர் இவர்களின் ஒழுக்கத்தைவிட உங்கள் ஒழுக்கம் சிறந்திராவிட்டால், விண்ணரசு சேரமாட்டீர்கள்.

'கொலை செய்யாதே, கொலை செய்வோன் தீர்ப்புக்குள்ளாவான்' என்று முன்னோர்க்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான். தன் சகோதரனை 'முட்டாள்' என்பவன், தலைமைச் சங்கத் தீர்ப்புக்குள்ளாவான். அவனை 'மதிகெட்டவனே' என்பவனோ எரிநரகத்திற்குள்ளாவான்.

நீ பீடத்தின்மேல் காணிக்கை செலுத்த வரும்பொழுது, உன் சகோதரனுக்கு உன்மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால், அங்கேயே, பீடத்தின் முன், உனது காணிக்கையை வைத்துவிட்டு, முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்துகொள். பின்னர் வந்து, உன் காணிக்கையைச் செலுத்து.

நீ உன் எதிரியோடு போகும்போது, வழியிலேயே அவனுடன் விரைவாகச் சமரசம் செய்துகொள். இல்லையேல், உன் எதிரி உன்னை நீதிபதியிடம் கையளிக்க, நீதிபதி உன்னைக் காவலனிடம் கையளிக்கக் கூடும்; நீ சிறையில் அடைபட நேரிடும். உறுதியாகவே உனக்குச் சொல்லுகிறேன்: கடைசிக் காசை நீ கொடுத்துத் தீர்க்கும்வரை அங்கிருந்து வெளியேறமாட்டாய்.

'விபசாரம் செய்யாதே' என்று முன்னோர்களுக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன்னுள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று.

உன் வலக்கண் உனக்கு இடறலாயிருந்தால், அதைப் பிடுங்கி எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைவிட, உன் உறுப்புகளுள் ஒன்று அழிந்து போவது உனக்கு நலம். உன் வலக்கை உனக்கு இடறலாயிருந்தால், அதை வெட்டி எறிந்துவிடு. உன் உடல் முழுவதும் நரகத்துக்குச் செல்வதைவிட, உன் உறுப்புகளுள் ஒன்று அழிந்து போவது உனக்கு நலம்.

'தன் மனைவியை விலக்கிவிடுகிறவன் எவனும் அவளுக்கு முறிவுச் சீட்டு கொடுக்கட்டும்' என்று கூறியுள்ளது. நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்; கெட்ட நடத்தைக்காக அன்றி எவனொருவன் தன் மனைவியை விலக்கிவிடுகிறானோ, அவன் அவளை விபசாரியாகும்படி செய்கிறான். விலக்கப்பட்டவளை மணப்பவனும் விபசாரம் செய்கிறான்.

'மேலும், பொய்யாணை இடாதே. ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்து' என்று முன்னோருக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது கடவுளின் அரியணை. மண்ணுலகின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது கடவுளின் கால்மணை. யெருசலேமின்மேலும் வேண்டாம்; ஏனெனில், அது பேரரசரின் நகரம். உன் தலையின்மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனெனில், உன் தலைமயிர் ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ, கறுப்பாக்கவோ உன்னால் இயலாது.

உங்கள் பேச்சு, 'ஆம் என்றால் ஆம்; இல்லை என்றால், இல்லை' என்று இருக்கட்டும். இதற்கு மிஞ்சினதெல்லாம் தீயவனிடமிருந்தே வருகிறது.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது, குறுகிய வாசகம்

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
5:20-22a. 27-28. 33-34a. 37.

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

''உங்களுக்குச் சொல்லுகிறேன் : மறைநூல் அறிஞர், பரிசேயர் இவர்களின் ஒழுக்கத்தைவிட உங்கள் ஒழுக்கம் சிறந்திராவிட்டால், விண்ணரசு சேரமாட்டீர்கள்.

'கொலை செய்யாதே, கொலை செய்வோன் தீர்ப்புக்குள்ளாவான்' என்று முன்னோர்க்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான்.

'விபசாரம் செய்யாதே' என்று முன்னோர்க்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும், ஏற்கெனவே தன்னுள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று.

மேலும், 'பொய்யாணை இடாதே, ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்து' என்று முன்னோருக்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆணையிடவே வேண்டாம்.

உங்கள் பேச்சு, 'ஆம் என்றால், ஆம்; இல்லை என்றால், இல்லை' என்று இருக்கட்டும். இதற்கு மிஞ்சினதெல்லாம் தீயவனிடமிருந்தே வருகிறது.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***தொழுநோயாளி பாளையத்துக்கு வெளியே தனித்து வாழக்கடவான்.***

லேவியர் ஆகமத்திலிருந்து வாசகம். *13:1-2.44-46*

ஆண்டவர் மோயீசனையும் ஆரோனையும் நோக்கிக் கூறியதாவது:

“ஒரு மனிதனுடைய தோலிலோ சதையிலோ வித்தியாசமான நிறமாவது கொப்புளமாவது ஒருவிதத் துலக்கமான வெண்படலமாவது உண்டானால், அது தொழுநோயென்று அறிந்து, அவனைக் குருவான ஆரோனிடமோ, அவர் புதல்வருள் எவனிடமோ கொண்டுவர வேண்டும்.

ஆகையால், தொழுநோயாளியென்று குருக்களின் தீர்மானப்படி விலக்கப்பட்டிருக்கிறவன், தையல் பிரிக்கப்பட்ட ஆடை அணிந்து, தன் தலையை மூடாமலும், முகத்தைத் துணியால் மறைக்காமலும் இருந்து, (யாரைக் கண்டாலும்) தீட்டு, தீட்டு என ஓலமிடக்கடவான். அவனுக்குத் தொழுநோய் இருக்குமட்டும் அவன் அசுத்தனானதால், அவன் பாளையத்திற்கு வெளியே தனித்து வாழக்கடவான்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 31:1-2.5.11(பல்லவி: 7 காண்)*

பல்லவி: **ஆண்டவரே, நீர் எனக்கு அடைக்கலமாயுள்ளீர்: உம் மீட்பால் வரும் மகிழ்ச்சியால் என்னை அணைக்கிறீர்.**

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ அவன் பேறு பெற்றவன்: எவன் பாவம் மறைக்கப்பட்டதோ அவனும் பேறு பெற்றவன்.

2 ஆண்டவர் எவன்மேல் பாவத்தைச் சுமத்தவில்லையோ அவன் பேறு பெற்றவன்: யாருள்ளத்தில் வஞ்சகம் இல்லையோ அவனும் பேறு பெற்றவன்.
பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன்; என் குற்றத்தை நான் உம் திருமுன் மறைத்தேனில்லை: "ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக் கொள்கிறேன்" என்றேன்; நீரும் என் குற்றத்தை மன்னித்தீர். பல்லவி

11 ஆண்டவரில் மகிழ்ந்திடுவீர், நீதிமான்களே, களிகூர்ந்திடுவீர்; நேர்மை யுள்ளவர்களே, நீங்கள் அனைவரும் அவரில் அக்களித்திடுவீர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**நான் கிறிஸ்துவைப்போல் நடக்கிறவாறே நீங்களும் என்னைப்போல் நடந்துகொள்ளுங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். *10:31-11:1*

சகோதரர்களே:

நீங்கள் உண்டாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாம் கடவுளின் மகிமைக்கெனச் செய்யுங்கள். யூதருக்கோ கிரேக்கருக்கோ கடவுளின் திருச்சபைக்கோ இடைஞ்சலாய் இராதீர்கள். நானும் அவ்வாறே அனைத்திலும் அனைவருக்கும் உகந்தவனாய் இருக்க முயலுகிறேன். எனக்குப் பயன் தருவதை நாடாமல், பலரும் மீட்படையும்படி அவர்களுக்குப் பயன் தருவதையே நாடுகிறேன்.

நான் கிறிஸ்துவைப்போல் நடக்கிறவாறே நீங்களும் என்னைப்போல் நடந்துகொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* *லூக். 7:16*

அல்லேலூயா. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றி யுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தொழுநோய் அவனை விட்டு நீங்க, அவன் குணமானான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *1:40-45*

அக்காலத்தில்:

தொழுநோயாளி ஒருவன் யேசுவிடம் வந்து முழந்தாளிட்டு, "நீர் விரும்பினால் என்னைக் குணமாக்க உம்மால் கூடும்" என்று வேண்டி

னான். யேசு அவன் மீது மனமிரங்கி, கையை நீட்டி, அவனைத் தொட்டு, "விரும்புகிறேன், குணமாகு" என்றார். உடனே தொழுநோய் அவனை விட்டு நீங்க, அவன் குணமானான்.

அவனை நோக்கி, "பார், யாருக்கும் ஒன்றும் சொல்லாதே. போய் உன்னைக் குருவிடம் காட்டி, நீ குணமானதற்காக, மோயீசன் கட்டளையிட்டதைக் காணிக்கையாகச் செலுத்து. அது அவர்களுக்கு அத்தாட்சியாகும்" என்று கண்டிப்பாய்ச் சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

அவனோ சென்று நடந்ததைச் சொல்லி எங்கும் விளம்பரப்படுத்தினான். அதனால் அவர் எந்த நகருக்குள்ளும் வெளிப்படையாய்ப் போக முடியாமல் வெளியே தனிமையான இடங்களில் இருந்தார். எனினும் மக்கள் எங்குமிருந்து அவரிடம் வந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***மனிதரை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்; ஆண்டவரை நம்புகிறவனே ஆசி பெற்றவன்.***

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 17:5-8

ஆண்டவர் கூறுவதாவது :

"மனிதனை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்; மனித பலவீனத்தையே அவன் தன் வலிமையாய்க் கொள்கிறான்; தன் இதயத்தை ஆண்டவரிடமிருந்து அகற்றுகிறான். அவன் பாலை நிலத்துப் பூண்டுக்குச் சமம்; நன்மை வந்தாலும் அதில் பலனைக் காணமாட்டான்; வறட்சி மிக்க பாலைநிலத்திலும் வாழ முடியாத உவர் நிலத்திலுமே அவன் குடியிருப்பு.

ஆண்டவரை நம்புகிறவனே ஆசி பெற்றவன்; ஆண்டவரே அவனுடைய நம்பிக்கை; அவன் நீரருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பானவன்; அது ஈரத்தில் வேரூன்றி இருக்கும்; கோடைகாலத்தில் அதற்கு அச்சமில்லை; அதன் இலைகள் பசுமையோடிருக்கும்; வறட்சிக் காலத்தில் அதற்குக் கவலையில்லை; அது ஒருக்காலும் கனிகொடாதிருக்காது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 1 : 1-2. 3. 4-6 (பல்லவி : 39 : 4a)

பல்லவி : தன் நம்பிக்கை யெல்லாம் ஆண்டவர் மீது வைத்தவனே பேறுபெற்றவன்.

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன், பாவிகளின் வழியில் செல்லாத
வன், பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய், அதை அல்லும்
பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல்
தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்: அவன்
செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒரு நாளுமிராது; காற்றோடு காற்றாய்ப்
பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்; தீயோரின் வழியோ
அழிவுக்கே செல்லும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றாலோ உங்கள் விசுவாசம் வீணானதே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15 : 12. 16-20

சகோதரர்களே :

கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயித்தெழுந்தார் என அறிவிக்கப் பட்டிருக்க, இறந்தோர் உயிர்ப்பதில்லை என உங்களுள் சிலர் சொல்வதெப்படி?

ஏனெனில், இறந்தவர்கள் உயிர்த்தெழுவதில்லையென்றால் கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றாலோ, உங்கள் விசுவாசம் வீணானதே. நீங்கள் இன்னும் பாவநிலையிலேயே இருக்கிறீர்கள். அப்படியானால், கிறிஸ்துவுக்குள் துஞ்சியவர்களும் அழிந்து விட்டனர். இம்மை வாழ்வுக்காக மட்டும் நாம் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்தவர்களாயிருந்தால், எல்லோரையும்விட நாம் இரங்குதற்குரியவர் ஆவோம்.

ஆனால் உள்ளபடி, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; துஞ்சினோரின் முதற்கனி அவரே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா லூக். 6:23ab

அல்லேலூயா. துள்ளி அகமகிழுங்கள்; ஏனெனில், இதோ! வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஏழைகள் பேறுபெற்றவர்கள்; பணக்காரர்களே உங்களுக்கு ஐயோ கேடு!**

✣ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:17. 20-26

அக்காலத்தில்:

யேசு பன்னிருவரோடு இறங்கி வந்து சமதளமான ஓரிடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீடர்கள் பெருங்கூட்டமாய் இருந்தனர். யூதேயா முழுவதிலிருந்தும் யெருசலேமிலிருந்தும், தீர் சீதோன் கடற்கரையிலிருந்தும் மாபெரும் திரளாக மக்களும் வந்திருந்தனர். அவர் சொல்லுவதைக் கேட்கவும், தங்கள் நோய்கள் நீங்கிக் குணமாகவும் அவர்கள் வந்திருந்தனர்.

அவரோ தம் சீடரை ஏறெடுத்துப் பார்த்துக் கூறியதாவது: "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில், கடவுளின் அரசு உங்களதே. இப்பொழுது பசியாய் இருப்பவர்களே, நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில், நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுபவர்களே, நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில், சிரிப்பீர்கள்.

மனுமகன் பொருட்டு மனிதர் உங்களை வெறுத்துப் புறம்பாக்கி வசைகூறி, உங்கள் பெயரே ஆகாது என்று இகழ்ந்து ஒதுக்கும்பொழுது நீங்கள் பேறுபெற்றவர்கள். அந்நாளில் துள்ளி அகமகிழுங்கள். ஏனெனில், இதோ! வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும். அவர்களுடைய முன்னோரும் இறைவாக்கினருக்கு அவ்வாறே செய்தனர்.

ஆனால், பணக்காரர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில் உங்களுக்கு ஆறுதல் கிடைத்துவிட்டது. இப்பொழுது திருப்தியாருப்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், பசியாயிருப்பீர்கள். இப்பொழுது சிரிப்பவர்களே, உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில்

துயருற்று அழுவீர்கள். மனிதர் எல்லாரும் உங்களைப் புகழும்பொழுது உங்களுக்கு ஐயோ கேடு! ஏனெனில், அவர்களுடைய முன்னோரும் போலித் தீர்க்கதரிசிகளுக்கு அவ்வாறே செய்தனர்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**காயின் தன் தம்பி ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டான்**

ஆதிஆகமத்திலிருந்து வாசகம் 4:1-15. 25

ஆதாம் தன் மனைவி ஏவாளோடு கூடி வாழ்ந்தான். அவள் கருத்தரித்துக் காயினைப் பெற்று, கடவுள் அருளால் ஓர் ஆண் மகனைப் பெற்றேன் என்றாள். பின் அவனுடைய தம்பியாகிய ஆபேலைப் பெற்றாள். ஆபேல் ஆடு மேய்ப்பவன் ஆனான். காயினோ நிலத்தைப் பயிரிடுபவன் ஆனான்.

நீண்ட நாட்களுக்குப் பின் நிகழ்ந்ததாவது: காயின் தன் விளைச்சலின் பலனை ஆண்டவருக்குக் காணிக்கையாய்ச் செலுத்தினான். ஆபேலோ தன் மந்தையின் தலையீற்றுக்களில் மிகக் கொழுத்த ஆடுகளை காணிக்கையாய்க் கொடுத்தான்.

ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் ஏற்றுக் கொண்டார். காயினையோ அவன் காணிக்கைகளையோ அவர் கண் நோக்கவில்லை. அதனால் காயின் மிக்க சினம் கொண்டான். அவன் முகம் வாடியது. அப்போது ஆண்டவர் அவனை நோக்கி: "நீ ஏன் கோபமாய் இருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பது ஏன்? நீ நன்மை செய்தால் உனக்கு வெகுமதி கிடைக்கும்; தீமை செய்தால் உடனே பாவம் உன் வாயிலில் வந்து பதுங்கி நிற்குமன்றோ? அதன் ஆசை உன் மேல் இருக்கும்; நீயோ அதை அடக்கிக் கொள்ள வேண்டும்'' என்றார்.

ஒருநாள் காயின் தன் தம்பி ஆபேலைப் பார்த்து: வெளியே போவோம் வா என்றான். வயல்வெளியில் இருந்தபோது காயின் தன் தம்பி ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டான். அப்பொழுது ஆண்டவர் காயினை நோக்கி: உன் தம்பி ஆபேல் எங்கே என்று வினவ, அவன்: நான் அறியேன்; என் தம்பிக்கு நான் என்ன காவலாளியா? என்றான். அதற்கு அவர்: உன் தம்பியின் இரத்தக்குரல் பூமியினின்று நம்மை நோக்கிக் கூக்குரலிடுகிறதே; நீ என்ன செய்தாய்? இதோ கேள்; பூமி தன் வாயைத் திறந்து, உன் கையால் சிந்திய உன் தம்பியின் இரத்தத்தை உட்கொண்டது. ஆகவே இன்று முதல் நீ அந்தப் பூமியில் சபிக்கப்பட்டவனாய் இருப்பாய். அதை நீ பயிரிட்டால் அது உனக்குப் பலன் தராது. பூமியில் நீ நிலையற்றவனும் நாடோடியுமாய் இருப்பாய் என்றார்.

அப்போது காயின் ஆண்டவரை நோக்கி, "என் பாவம் மன்னிக்கப்படக் கூடுமானதன்று; அது அத்தனை பெரிது. இதோ, இந்நாட்டிலிருந்து என்னை இன்று துரத்திவிடுகிறீர். இனி நான் உம் கண்ணுக்கு மறைந்தவனுமாய்ப் பூமியில் நிலையற்றவனும் நாடோடியுமாய் இருப்பேன். அப்படியானால் என்னைக் காணும் எவனும் என்னைக் கொல்வானே" என்றான். ஆண்டவர்: "அப்படி நடக்கவே நடக்காது; காயினைக் கொல்பவன் ஏழு மடங்கு பழியைச் சுமப்பான்" என்று காயினுக்குச் சொல்லி, அவனைக் கண்டுபிடிப்பவன் எவனும் அவனைக் கொல்லாதபடிக்கு அவனுக்கு ஓர் அடையாளம் இட்டார்.

பின்பு ஆதாம் தன் மனைவியோடு கூடி வாழவே, அவள் ஒரு மகனைப் பெற்றாள்: காயின் கொலை புரிந்த ஆபேலுக்குப் பதிலாகக் கடவுள் எனக்கு வேறொரு மகனைத் தந்தருளினார், என்று சொல்லி, அவள் அவனுக்குச் சேத் என்று பெயரிட்டாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 49:1, 8. 16இ-17. 20-21 (பல்லவி: 14அ)

பல்லவி: இறைபுகழ்ச்சி எனும் பலியை ஆண்டவருக்குச் செலுத்து.

1 ஆண்டவராகிய இறைவன் பேசலானார்: கிழக்குத்திசைமுதல் மேற்றிசைவரை
யுள்ள பூவுலகைத் தீர்ப்புக்கு அழைக்கலானார்.
8 நீ இடும் பலிகளைக்குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை: ஏனெனில், உன்
தகனப் பலிகள் எந்நேரமும் என் கண்முன்னே இருக்கின்றன. பல்லவி

16 'என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்? என் உடன்படிக்கையைப்
பற்றி நீ ஏன் பேசவேண்டும்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ? என் வார்த்தையைப்
புறக்கணித்தவன் அன்றோ நீ? பல்லவி

20 கூட்டத்தில் உட்கார்ந்து நீ பேசுவதெல்லாம் உன் சகோதரனுக்கெதிராக!
உன் சொந்த சகோதரனை நிந்தைக்குள்ளாக்குகிறாய்!
21 இப்படியெல்லாம் நீ செய்ய நான் வாளாவிருப்பதா? நானும் உன்னைப்
போலென்று நினைத்தாயா? உன்னைக் கண்டித்து நீ செய்ததையெல்லாம்
எடுத்துச் சொல்கிறேன், பார்!' பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*உங்கள் விசுவாசம் சோதிக்கப்படுவதால், மனவுறுதி விளையும்:*
*இவ்வாறு நீங்கள் சீர்மை குன்றாமல், நிறைவுள்ளவர்களாயிருப்பீர்கள்.*

அப்போஸ்தலரான புனித யாகப்பர்
எழுதிய திருமுகத்தின் தொடக்கம் *1:1–11*

உலகெங்கும் சிதறுண்டு வாழும் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும், கடவுளுக்கும், ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவுக்கும் ஊழியனான யாகப்பன் வாழ்த்துக்கூறி எழுதுவது:

என் சகோதரரே, பலவகைச் சோதனைகளுக்கு நீங்கள் உள்ளாகும்போது, அவை எல்லாம் மகிழ்ச்சி என்றே எண்ணுங்கள். உங்கள் விசுவாசம் சோதிக்கப்படுவதால், மனவுறுதி விளையும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. அம் மனவுறுதியோ நிறைவான செயல்களில் விளங்குவதாக! இவ்வாறு நீங்கள் குறைபாடு எதுவுமின்றி, சீர்மை குன்றாமல் நிறைவுள்ளவர்களாய் இருப்பீர்கள்.

உங்களுள் எவனுக்காவது ஞானம் குறைவாயிருந்தால், அவன் கடவுளிடம் கேட்கட்டும்; அவனுக்குக் கொடுக்கப்படும். முகம் கோணாமல் தாராளமாக எல்லாருக்கும் கொடுப்பவர் அவர். ஆனால் விசுவாசத்தோடு கேட்கவேண்டும். தயக்கம் எதுவும் கூடாது. தயக்கம் காட்டுபவன் காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலைக்கு ஒப்பாவான். இத்தகையவன் ஆண்டவரிடம் ஏதாவது பெறக்கூடும் என நினைத்துக்கொள்ளலாகாது. இவன் இரு மனம் உள்ளவன்; நிலையற்ற போக்கு உடையவன்.

தாழ்நிலையிலுள்ள சகோதரன், தன் உயர்வை எண்ணிப்பெருமை கொள்வானாக. செல்வம் உள்ளவனோ தாழ் நிலையுற்றாலும் பெருமை கொள்வானாக. ஏனெனில், அவன் புல்வெளிப் பூக்களைப்போல் மறைந்து போவான்; கதிரோன் எழ, வெயில் ஏறி, புல்லைத் தீய்த்துவிடுகிறது. பூக்களோ உதிர்ந்துவிட, அழகிய காட்சி மறைந்துவிடுகிறது. அவ்வாறே செல்வமுள்ளவனும் தான் மேற்கொள்ளும் காரியங்களில் வாடிப்போவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 118:67.68.71.72.75.76 (பல்லவி:77a)

பல்லவி : ஆண்டவரே, நான் வாழ்வு பெறும்படி உம் இரக்கப்பெருக்கம் எனக்கு உதவட்டும்.

67 துன்பம் என்னைத் தாக்குமுன்பு நான் தவறிழைத்தேன்: ஆனால் இப்போது உமது வாக்கின்படி நடக்கிறேன். பல்லவி

68 நல்லவர் நீர், நன்மையே செய்பவர் : எனக்கு உம் நியமங்களைக் கற்பியும். பல்லவி

71 எனக்குத் துன்பம் விளைந்தது நன்மையே: அதனால் உம் நியமங்களை நான் கற்றுக்கொள்ள முடிந்தது. பல்லவி

72 நீர் திருவாய் மலர்ந்த சட்டம், ஆயிரம் பொன்னையும் வெள்ளியையும்விட மேலானது. பல்லவி

75 ஆண்டவரே, உம் தீர்ப்புகள் நீதியானவை என அறிவேன்; நீர் என்னைத் துன்பத்துக்குள்ளாக்கியது நீதியே. பல்லவி

76 எனக்கு ஆறுதலளிக்க உமது இரக்கம் எனக்குக் கிடைக்கட்டும் : உம் ஊழியனுக்கு வாக்குறுதி தந்தீர் அன்றோ! பல்லவி

அல்லேலூயா அரு. 14: 6

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நானே வழியும், உண்மையும் உயிரும்: என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இத்தலைமுறை அருங்குறி கேட்பானேன்?**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8:11-13

அக்காலத்தில்:

பரிசேயர் வந்து யேசுவோடு தர்க்கிக்கத் தொடங்கி, வானிலிருந்து அருங்குறி ஒன்றைக் காட்டும்படி கேட்டு அவரைச் சோதித்தனர். அவர் பெருமூச்சுவிட்டு, "இத்தலைமுறை அருங்குறி கேட்பானேன்? உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: இத்தலைமுறைக்கு அருங்குறி எதுவும் அளிக்கப்படாது" என்ருர்.

அவர்களை விட்டுவிட்டு மீண்டும் படகேறி அக்கரைக்குச் சென்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் படைத்த மனித இனத்தைப் பூமியில் இல்லாதபடி அழித்து விடுவோம்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 6: 5-8. 7:1-5. 10

மண்ணுலகில் மனிதருடைய அக்கிரமம் பெருகினதையும், அவர்கள் எண்ணமெல்லாம் எப்போதும் தீமையையே நாடியிருந்ததையும் கண்டு, கடவுள், இவ்வுலகில் மனிதனைப் படைத்தது குறித்து வருந்திஞர். அப்போது அவர் மனம் நொந்து: நாம் படைத்த மனித இனத்தைப் பூமியில் இல்லாதபடி அழித்து விடுவோம்; மனிதன்முதல் மிருகங்கள்வரையிலும் ஊர்வனமுதல் வானத்துப் பறவைகள் வரையிலும், எல்லாவற்றையும் அழித்தொழிப்போம்: ஏனென்ருல் அவற்றைப் படைத்ததை நினைத்து வருந்துகிரேம் என்ருர்.

ஆனல் நோவா ஒருவர் மட்டும் ஆண்டவர் திருமுன் அருள் பெற்றவர் ஆனர்.

ஆண்டவர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பெட்டகத்தினுள் செல்லுங்கள். ஏனென்றால், இப்பொழுது இருக்கிற மனிதர்களுக்குள்ளே உன்னையே நமது முன்னிலையில் நீதிமானென்று கண்டோம். சுத்தமான எல்லா மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடியும், அசுத்தமான மிருகங்களிலோ ஆணும் பெண்ணுமாக இரண்டு சோடியும், வானத்துப் பறவைகளிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடியும் உன்னோடு சேர்த்துக்கொள். அதனால் பூமியெங்கும் உள்ளவற்றின் வித்து காக்கப்படும். ஏனென்றால், இன்னும் ஏழு நாட்களுக்குப்பின் நாற்பது பகலும் நாற்பது இரவுமாகப் பூமியின்மேல் நாம் மழை பொழியச் செய்து, படைக்கப்பட்ட உயிரினங்கள் எல்லாவற்றையும் பூமியின்கண் அழித்து விடுவோம் என்றார்.

ஆகையால், ஆண்டவர் தனக்குக் கட்டளையிட்டபடி நோவா எல்லாவற்றையும் செய்து முடித்தார். ஏழு நாட்களுக்குப் பின்னர் வெள்ளம் பூமியின்மீது பெருக்கெடுத்தோடியது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 28 : 1a.2. 3ac-4. 3b.9b-10 (பல்லவி : 11b)

பல்லவி: ஆண்டவர் அமைதியளித்துத் தம் மக்களை ஆசீர்வதிப்பார்.

1 வானோர்களே, ஆண்டவரை வாழ்த்துங்கள் :
2 ஆண்டவர் பெயருக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள் : அவருடைய திருமன்றத்தில் அவரை வழிபடுங்கள்.

பல்லவி

3 நீர்த்திரள்களின்மீது ஆண்டவரின் குரல் ஒலிக்கின்றது : நீர்ப்பரப்பின் மீது ஆண்டவர் விளங்குகின்றார்.
4 ஆண்டவரது குரல் வலிமை வாய்ந்தது, அவரது குரல் மாட்சிமை மிக்கது.

பல்லவி

3 மகத்துவமிக்க ஆண்டவர் பேரிடி முழங்குகின்றார் :
9 அவரது ஆலயத்தில் அனைவரும் "போற்றி, போற்றி" என்று ஆர்ப்பரிக்கின்றனர் :
10 வெள்ளப் பெருக்கின்மீது விளங்குகின்றார் ஆண்டவர் : என்றென்றும் அரசரென வீற்றிருப்பார் ஆண்டவர்.

பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

**கடவுள் எவரையும் சோதிப்பதில்லை.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் *1:12-18*

அன்புமிக்கவர்களே:

சோதனைகளை மனவுறுதியோடு தாங்குபவன் பேறுபெற்றவன். இதனால் அவனது தகைமை எண்பிக்கப்படும்; இறைவன் தம்மீது அன்பு செலுத்துவோர்க்கு வாக்களித்த வாழ்வை அவன் வெற்றி வாகையாகப் பெறுவான்.

சோதனைக்குள்ளாகும் எவனும், 'இச் சோதனை கடவுளிடமிருந்தே வருகிறது' எனச் சொல்லக்கூடாது. ஏனெனில், கடவுள் தீமைபுரியச் சோதிக்கப்படுபவர் அல்லர்; ஒருவரையும் அவர் சோதிப்பதுமில்லை. ஒருவன் சோதனைக்குட்படுவது, தன் சொந்த இச்சையாலேதான். அதுவே அவனைக் கவர்ந்து தன்வயப்படுத்துகிறது. இச்சையோ, கருவுற்றுப் பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை ஈன்றெடுக்கிறது.

என் அன்புச் சகோதரர்களே, ஏமாந்து போகவேண்டாம். நன்மையான எக்கொடையும், நிறைவான எவ்வரமும், விண்ணினின்றே வருகின்றன. ஒளியெல்லாம் படைத்த தந்தையே அவற்றிற்குப் பிறப்பிடம். அவரிடம் எவ்வகை மாற்றமும் இல்லை; மாறிமாறி நிழல் விழச் செய்யும் ஒளியன்று அவர். தம் படைப்புக்களுள் நாம் முதற்கனிகளாகும் பொருட்டு, உண்மையை அறிவிக்கும் வாக்கினால் நம்மை ஈன்றெடுத்தார். தாமே விரும்பியபடி இங்ஙனம் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 94:12-13a.14-15.18-19 (பல்லவி: 12a)

பல்லவி: ஆண்டவரே, உம்மால் அறிவு புகட்டப் பெறுபவன் பேறுபெற்றவன்.

ஆண்டவரே, உம்மால் அறிவு புகட்டப்பெறுபவன் பேறு பெற்றவன்; உமது சட்டத்தைக்கொண்டு நீர் யாருக்குக் கற்பிக்கின்றீரோ அவன் பேறுபெற்றவன்.
அப்போது அவன் துன்ப நாளிலும் உம்மிடமிருந்து இளைப்பாற்றி அடைவான். பல்லவி

ஆண்டவர் தம் மக்களைப் புறக்கணிப்பதில்லை; தம் உரிமைப் பொருளானவர்களைக் கைவிடுவதில்லை.
நீதிமான்கள் நீதித் தீர்ப்பையே பெறுவர்; நேரிய மனத்தோர் யாவரும் அதையே பின்பற்றுவர். பல்லவி

"இதோ, என் நடை தள்ளாடுகிறது" என்று நான் நினைக்கையில், ஆண்டவரே, உம் அருள் என்னைத் தாங்குகிறது.
என் இதயத்தில் கவலைகள் மிகும் வேளையில், உமது ஆறுதல் என் ஆன்மாவை இன்பத்தில் ஆழ்த்துகிறது. பல்லவி

அல்லேலூயா

அரு. 14:23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான்; என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார்; நாங்களும் அவனிடம் வருவோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

பரிசேயருடைய புளிப்பு மாவையும், ஏரோதுடைய புளிப்பு மாவையும் குறித்து விழிப்பாயிருங்கள்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 8:14-21

அக்காலத்தில்:

சீடர்கள் அப்பம் கொண்டுவர மறந்துவிட்டார்கள். படகில் ஒரே ஓர் அப்பந்தான் இருந்தது. "பரிசேயருடைய புளிப்பு மாவையும், ஏரோதுடைய புளிப்பு மாவையும் குறித்து விழிப்பாயிருங்கள், எச்சரிக்கை" என்று யேசு அறிவுரை கூறினார்.

"நம்மிடம் அப்பம் இல்லையே" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். இதையறிந்த யேசு அவர்களை நோக்கி, "உங்களிடம் அப்பம் இல்லை என்று பேசிக்கொள்வானேன்? இன்னுமா உணரவில்லை? இன்னுமா விளங்கவில்லை? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்ணிருந்தும் காண்பதில்லையா? காதிருந்தும் கேட்பதில்லையா? உங்களுக்கு நினைவில்லையா? ஐயாயிரம் பேருக்கு ஐந்து அப்பத்தை நான் பகிர்ந்தபோது, மீதித் துண்டுகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள்?" என்று கேட்க, "பன்னிரண்டு" என்றனர்.

ஏழு அப்பத்தை நாலாயிரம் பேருக்கு நான் பகிர்ந்தபோது மீதித் துண்டுகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள்?" என, "ஏழு" என்றனர். அவர் அவர்களை நோக்கி, "இன்னும் உங்களுக்கு விளங்கவில்லையா?" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

*பூமியின்மேல் தண்ணீர் இல்லை என்று கண்டார்.*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம். 8:6-13. 20-22

நாற்பது நாட்களுக்குப்பின் நோவா பெட்டகத்தின் சன்னலைத் திறந்து ஒரு காக்கையை வெளியே விட்டார். அது புறப்பட்டுப் போய்ப் பூமியில் வெள்ளம் வற்றுமட்டும் இங்குமங்குமாகச் சுற்றித் திரும்பவே இல்லை.

மறுபடியும், பூமியின்மீது வெள்ளம் வற்றிவிட்டதா என்று தெரிந்துகொள்ளும் பொருட்டு, (நோவா) ஒரு புறாவை வெளியே விட்டார். பூமியின்மீது எங்கும் வெள்ளம் பரந்து கிடந்தமையால், கால் வைத்து இளைப்பாறவும் இடம் காணாமல் அது திரும்பவும் அவரை நாடிப் பெட்டகத்திற்கு வந்தது. அவர் கை நீட்டி அதைப் பிடித்துப் பெட்டகத்தினுள் சேர்த்தார். அவர் மேலும் ஏழு நாட்கள் பொறுத்து மீண்டும் புறாவைப் பெட்டகத்திலிருந்து வெளியே விட்டார். அது மாலை

நேரத்தில் பசும் இலைகளையுடைய ஒலிவ மரத்தின் கிளையொன்றை அலகில் கவ்விக்கொண்டு தன் அண்டையில் வந்ததனால், பூமியின்மீது வெள்ளம் அற்றுப் போயிற்றென்று நோவா தெரிந்து கொண்டார். மேலும் அவர் வேறு ஏழு நாட்கள் பொறுத்திருந்து புறாவை விட, அது அவரிடம் திரும்பி வரவேயில்லை.

இவ்வாறு அறுநூற்றோராம் ஆண்டின்முதல் மாதம், முதல்நாளன்று பூமியின்மீது வெள்ளம் வற்றிப் போயிற்று. அப்பொழுது நோவா பெட்டகத்தின் மேல்தட்டைப் பிரித்து (வெளியே) பார்த்துப் பூமியின் மேல் தண்ணீர் இல்லையென்று கண்டார்.

பின் நோவா ஒரு பீடத்தைக் கட்டி, மிருகங்களிலும் சுத்தமான பறவைகளிலும் பலவற்றை எடுத்து அதன்மேல் தகனப் பலியாக ஒப்புக் கொடுத்தார். ஆண்டவர் அவற்றை நறுமணமுள்ள பரிமளமாக ஏற்றுக்கொண்டு, "நாம் இனி மனிதன் பொருட்டுப் பூமியை ஒருபோதும் சபிக்கமாட்டோம். ஏனென்றால், மனிதனுடைய இதய சிந்தனைகள் இளமைமுதல் தீமையின்மீதே நாட்டம் கொண்டுள்ளன. ஆதலால், இப்பொழுது செய்ததுபோல் இனி நாம் உயிரினங்கள் யாவையும் மறுமுறை அழிக்கமாட்டோம். பூமி இருக்குமட்டும் விதைப்பும் அறுப்பும், குளிரும் வெப்பமும், கோடைகாலமும் குளிர்காலமும் இரவும் பகலும் ஒழிவதில்லை" என்றுதிருவுளம்பற்றினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 115 : 3-4. 5-6. 9-10 (பல்லவி : 8a)

பல்லவி: ஆண்டவரே, புகழ்ச்சிப் பலியை
உமக்குச் செலுத்துவேன்.

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன கைம்மாறு செய்வேன்?

4 மீட்புக்காக நன்றிகூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன்.

பல்லவி

5 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

6 ஆண்டவர்தம் அடியாரின் மரணம் அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது.

பல்லவி

9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனை
களைச் செலுத்துவேன்.
10 ஆண்டவருடைய ஆலயத்தின் முற்றங்களிலும், யெருசலேமே, உன்
நடுவிலும் ஆண்டவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**இறைவார்த்தைகளின்படி நடப்பவர்களாய் இருங்கள்; அதைக்கேட்பதோடு மட்டும் நின்றுவிடாதீர்கள்.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1:19-27

என் அன்புச் சகோதரர்களே, இவை உங்களுக்குத் தெரியும். இனி இறை வார்த்தையைக் கேட்பதற்கு விரைதல் வேண்டும்: பேசுவதற்கோ, தாமதித்தல் வேண்டும்; சினங்கொள்வதற்கும் தாமதித்தல் வேண்டும். ஏனெனில், சினங்கொள்வதால் கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் விளைவதில்லை. ஆகவே, பெருக்கெடுக்கும் தீமையையும் மாசு அனைத்தையும் அகற்றி, உங்கள் உள்ளத்திலே ஊன்றப்பெற்ற வார்த்தையை அமைந்த மனத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள்; இவ்வார்த்தையே உங்கள் ஆன்மாவை மீட்கவல்லது.

இறை வார்த்தையின்படி நடப்பவர்களாய் இருங்கள். அதைக் கேட்பதோடு மட்டும் நின்றுவிடாதீர்கள். அப்படிச்செய்வது உங்களையே ஏமாற்றிக்கொள்வதாகும். ஏனெனில் கேட்பதோடு மட்டும் நின்று அதன்படி நடவாதவன், தன் முகச்சாயலைக் கண்ணாடியில் பார்த்துவிட்டுப் போனதும், அச்சாயல் எப்படியிருந்ததென்பதை உடனே மறந்துவிடும் ஒருவனுக்கு ஒப்பாவான். ஆனால் நிறைவான திருச்சட்டத்தை, விடுதலையாக்கும் அச்சட்டத்தைக் கூர்ந்து நோக்கி அதிலே நிலைப்பவன் அதைக் கேட்பதோடுமட்டும் நின்று விடுவதில்லை; கேட்பதை மறந்துவிடுவதுமில்லை; அதன்படி நடக்கிறான். அதன்படி நடப்பதால் அவன் பேறுபெற்றவன்.

இறைவனின் தொண்டனாகத் தன்னைக் கருதும் ஒருவன் நாவடக்கமற்றவனாகயிருப்பின், அவனது தொண்டு வீணானதே. இத்தகையவன் தன்னையே ஏமாற்றிக்கொள்கிறான். தந்தையாகிய கடவுள் முன்னிலையில் புனிதமும் மாசற்றதுமான தொண்டு எதுவெனில், வேதனையுறும் அனாதைகள், கைம்பெண்கள் இவர்களை ஆதரிப்பதும், உலகத்தால் மாசுபடாமல் தன்னைக் காத்துக்கொள்வதுமே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 14:2-3ab. 3cd-4ab.5 (பல்லவி : 1b)

பல்லவி : **ஆண்டவரே, உமது திருமலையில் குடியிருப்பவர் யார் ?**

2 மாசற்ற வாழ்க்கை நடத்துபவன், நீதி நியாயத்தைக் கடைப்பிடிப்பவன்,
இதயத்தில் நேரியவை நினைப்பவன்.
3 நாவால் எப்பழிச்சொல்லும் கூறாதவன். பல்லவி

அயலானுக்குத் தீமை செய்யாதவன், பிறரைப் பழித்துரைக்காதவன் :
4 தீயோரை இழிவாகக் கருதுபவன், ஆண்டவருக்கு அஞ்சுவோரை,
உயர்வாக மதிப்பவன்: பல்லவி

5 தனக்குத் துன்பம் வந்தாலும் தந்த வாக்குறுதியை மீறாதவன், தன்
பணத்தை வட்டிக்குக் கொடுக்காதவன் : மாசற்றவர்களுக்கு எதிராகக்
கைக்கூலி வாங்காதவன்; இங்ஙனம் நடப்பவன் என்றென்றும்
நிலைத்திடுவான். பல்லவி

அல்லேலூயா எபேசி. 1:17-18 காண்.

அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதென்று நாம் அறிந்துகொள்ளும்படி, நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக் கண்களுக்கு ஒளி தருவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அவன் பார்வைபெற்றுக் குணமடைந்து அனைத்தையும் தெளிவாகக் கண்டான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8:22-26

அக்காலத்தில்:

யேசுவும் சீடர்களும் பெத்சாய்தாவுக்கு வந்தனர். குருடன் ஒருவனை மக்கள் அவரிடம் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி வேண்டினர். அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றார். அவன் விழிகளில் உமிழ்ந்து, கைகளை அவன்மேல் வைத்து, "ஏதாவது தெரிகிறதா?" என்று கேட்டார். அவன் பார்வை பெறத் தொடங்கி, "மக்களைப் பார்க்கிறேன், மரங்கள் போலிருக்கின்றனர். ஆனால் நடக்கின்றனர்" என்றான்.

பின்பு அவர் தம் கைகளை அவன் கண்களில் மீண்டும் வைக்கவே, அவன் பார்வைபெற்றுக் குணமடைந்து, அனைத்தையும் தெளிவாகக் காணலானான். அவர் அவனை வீட்டிற்கனுப்பி, "ஊருக்குள் நுழையவும் வேண்டாம்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*நமது வில்லை மேகங்களிலே வைப்போம்; அதுவே நமக்கும் உலகத்துக்குமிடையேயுள்ள உடன்படிக்கைகளின் அடையாளமாகும்.*

*9:1-13*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்

கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள். பூமியின் எல்லா உயிரினங்களும், வானத்துப் பறவைகள் அனைத்தும் பூமியின் மீது நடமாடுகிற மற்றுமுள்ள யாவும் உங்கள் முன்னிலையில் அஞ்சி நடுங்குவனவாக. (அன்றியும்) கடலிலுள்ள எல்லா மீன்களும் உங்களுக்குக் கையளிக்கப்பட்டிருக்கின்றன. உயிரும் அசைவும் கொண்டுள்ள யாவும் உங்களுக்கு உணவாய் இருப்பனவாக. பசும் புற்பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல் அவையெல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தோம்.

ஆயினும், இறைச்சியை அதன் இரத்தத்தோடு உண்ணாதிருப்பீர்களாக. ஏனென்றால், உங்கள் உயிரின் இரத்தத்துக்காக எல்லா உயிரினங்களிடத்தும் மனிதனிடத்தும் பழிவாங்குவோம். மனிதனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடம் பழிவாங்குவோம். மனித இரத்தத்தைச் சிந்துபவன் இரத்தமும் சிந்தப்படும். ஏனென்றால், மனிதன் தெய்வச் சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான். நீங்களோ பலுகிப் பெருகிப் பூமியில் பரவி அதனை நிரப்புங்கள் (என்றருளினார்).

மேலும் கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களையும் நோக்கி: இதோ, நாம் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியாரோடும், பெட்டகத்திலிருந்து வெளியேறி உங்கள் அண்டையிலி

ருக்கிற பறவைகள், வீட்டு மிருகங்கள், மற்றும் பூமியிலுள்ள காட்டு விலங்குகள் முதலிய எல்லா உயிரினங்களோடும் நமது உடன்படிக்கையை நிறுவுவோம். உங்களோடு நாம் உடன்படிக்கை செய்வோம். ஆதலால் இனி மாமிசமெல்லாம் வெள்ளப் பெருக்குகளால் ஒருபோதும் அழிக்கப் படா. உண்மையில், பூமியைப் பாழாக்க இனி வெள்ளப் பெருக்கு வராது என்றருளினார். மேலும் கடவுள்: நமக்கும் உங்களுக்கும், உங்களுடனிருக்கும் எல்லா உயிரினங்களுக்கு மிடையே நித்திய தலைமுறைகளுக்கென்று நாம் செய்துகொள்ளும் உடன்படிக்கையின் அடையாளமாவது: நமது வில்லை மேகங்களிலே வைப்போம். அதுவே நமக்கும் உலகத்துக்கு மிடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 101:15-17. 18-20. 27,21-22 (பல்லவி: 19b)*

பல்லவி: ஆண்டவர் வானினின்று வையகத்தை நோக்கினார்.

15 ஆண்டவரே, புற இனத்தார் உமது பெயரைக் கேட்டு அச்சம் கொள்வர்: மாநிலத்து அரசர்கள் அனைவரும் உமது மாட்சிமைகண்டு மருள்வர்.

16 ஆண்டவர் சீயோனை மீளவும் எழுப்பும்போது, தம் மாட்சிமையில் அவர் விளங்கும்போது,

17 எளியோர் செய்யும் செபத்தைத் தள்ளாமல் செவியேற்பார்: அவர்களுடைய வேண்டுதலைப் புறக்கணியார்.

பல்லவி

18 பின்வரும் சந்ததிக்கென இதெல்லாம் எழுதப்படட்டும்: உருவாகி வரும் மக்கள் ஆண்டவரைப் புகழ்வார்களாக.

19 சிறைப்பட்டவர்களின் புலம்புதல்களைக் கேட்கவும், சாவுக்கென குறிக்கப் பட்டவர்களை விடுவிக்கவும், உன்னதங்களிலுள்ள தம் திருத்தலத்தினின்று ஆண்டவர் தம் பார்வையைத் திருப்பினார்: வானினின்று வையகத்தை நோக்கினார்.

பல்லவி

27 உம் ஊழியரின் மக்கள் அச்சமின்றி வாழ்வார்கள்: அவர்கள் மக்கள் உம்முன்னே நிலைத்திடுவர்.

21 இவ்வாறு ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்படி மக்களினங்கள், அரசுகள் அனைத்தும் ஒன்றாய்க் கூடும்போது,

22 ஆண்டவருடைய திருப்பெயர் சீயோனில் போற்றப்படும்: அவருடைய புகழ் யெருசலேமிலும் சாற்றப்படும்.

பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

*கடவுள் ஏழைகளைத் தேர்ந்துகொள்ளவில்லையா?*
*நீங்களோ ஏழைகளை அவமதிக்கிறீர்கள்.*

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2:1-9

என் சகோதரர்களே, மாட்சிமை மிக்க நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவில் விசுவாசமுள்ள நீங்கள் மக்களின் தோற்றத்தைப் பார்த்து அவர்களை நடத்தாதீர்கள். நீங்கள் கூடியுள்ள இடத்தில், பொன் மோதிரமணிந்து பகட்டான உடை உடுத்திய ஒருவன் வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். அழுக்குக் கந்தையோடு ஏழை ஒருவனும் அங்கே வருகிறான். பகட்டாக உடுத்தியவனைப் பார்த்து, "ஐயா, தயவு செய்து இங்கே அமருங்கள்" என்று கவனித்துக் கொள்கிறீர்கள். ஏழையிடமோ, "அடே, அங்கே நில்" என்கிறீர்கள். அல்லது "தரையில் உட்கார்" என்கிறீர்கள். இப்படி உங்களுக்குள்ளே வேறுபாடு காட்டி, தவறான முறையில் தீர்ப்பிடுகிறீர்கள் அல்லவா?

என் அன்புச் சகோதரர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்: உலகினர் கண்ணுக்கு ஏழையாய் உள்ளவர்களைக் கடவுள் விசுவாசத்தில் செல்வமுடையவர்களாக்கவும், தம் மீது அன்பு செலுத்துபவர்களுக்கு வாக்களித்த அரசியல் உரிமை தரவும் தேர்ந்துகொள்ளவில்லையா? நீங்களோ, ஏழைகளை அவமதிக்கிறீர்கள். உங்களைக் கொடுமைப்படுத்துகிறவர்கள் யார்? உங்களை நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்பவர்கள் யார்? பணக்காரர்கள் அல்லரா? யாருக்கு நீங்கள் உரியவர்களாய் இருக்கிறீர்களோ அவருடைய திருப்பெயரைப் பழித்துரைப்பவர்கள் அவர்கள் அல்லரோ? "உன் மீது நீ அன்புகாட்டுவதுபோல் உன் அயலான் மீதும் அன்புகாட்டுவாயாக" என்று மறைநூல் கூறும் இறையரசின் திருச்சட்டத்தை நீங்கள் கடைப்பிடிப்பீர்களாகில் நன்று. ஆனால் நீங்கள் ஒருவரின் தோற்றத்தைப் பார்த்து அவனை நடத்தினால், நீங்கள் செய்வது பாவம். திருச்சட்டத்தை மீறுகிறவர்களென அச்சட்டமே உங்களைக் கண்டனம் செய்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33 : 1-2. 3-4. 5-6 (பல்லவி : 6a)

பல்லவி : இதோ இக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்கிறார்.

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன், அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமை கொள்ளும். சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

3 என்னோடு ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள் : எல்லோரும் சேர்ந்து அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.
4 நான் ஆண்டவரைத் தேடினேன்: அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினார், எல்லாவித அச்சத்தினின்றும் என்னை விடுவித்தார். பல்லவி

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள் : வெட்கத்தால் தலைகுனிய மாட்டீர்கள்.
6 இதோ ! இக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்; எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார். பல்லவி

அல்லேலூயா

அரு. 6 : 63b. 69b

அல்லேலூயா. ஆண்டவரே, உம் சொற்கள் ஆவியும் உயிருமாகும் : வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் உள்ளன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மெசியா நீரே... மனுமகன் பாடுகள் பல படவேண்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 8 : 27-33

அக்காலத்தில் :

யேசு தம் சீடருடன் பிலிப்புச் செசரியாவைச் சார்ந்த ஊர்களுக்குப் புறப்பட்டுப் போனார். வழியில் தம் சீடரை நோக்கி, "மக்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள்?" எனக் கேட்டார். அதற்கு அவர்கள், "சிலர் ஸ்நாபக அருளப்பர் என்றும், சிலர் எலியாஸ் என்றும், சிலர் இறைவாக்கினர்களுள் ஒருவர் என்றும் சொல்கிறார்கள்" என்றனர்.

பின் அவர், "நீங்களோ என்னை யாரென்று சொல்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார். இராயப்பர் மறுமொழியாக, "நீர் மெசியா" என்றார். தம்மைப்பற்றி யாருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

மேலும் மனுமகன் பாடுகள் பல படவும், மூப்பராலும் தலைமைக் குருக்களாலும், மறைநூல் அறிஞராலும் புறக்கணிக்கப்பட்டுக் கொலையுண்டு, மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டுமென அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இதெல்லாம் வெளிப்படையாகச் சொன்னார்.

இராயப்பர் அவரைத் தனியாக அழைத்து அவரைக் கடிந்து கொண்டார். அவர் தம் சீடர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து, "போ பின்னாலே, சாத்தானே, ஏனெனில் உன் கருத்துக்கள் கடவுளுடைய கருத்துக்கள் அல்ல, மனிதனுடைய கருத்துக்களே" என்று இராயப்பரைக் கடிந்துகொண்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் இறங்கிப்போய் அவர்கள் மொழியைக் குழப்பிவிடுவோம்.**
*11:1–9*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்.

உலகத்தில் ஒரே மொழியும் ஒரே விதமான பேச்சும் வழங்கி வந்தன. மக்கள் கீழ்த்திசையிலிருந்து புறப்பட்டபோது, சென்னார் நாட்டில் சமவெளியைக் கண்டு அங்கே குடியேறினர். அப்பொழுது அவர்கள் ஒருவரோடொருவர்: வாருங்கள், செங்கல் அறுத்துச் சூளையிலிட்டுச் சுடுவோம் என்று பேசிக்கொண்டு, கருங்கல்லுக்குப் பதிலாகச் செங்கற்களையும், சாந்துக்குப் பதிலாகத் தாரையும் பயன் படுத்தினர்.

மேலும் அவர்கள்: வாருங்கள், நாம் நாடுகள்தோறும் சிதறிப் போகுமுன்னே ஒரு நகரையும், விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோமாக என்று சொன்னார்கள்.

ஆனால், ஆதாமின் புதல்வர் கட்டி வந்த நகரையும் கோபுரத்தையும் பார்க்க ஆண்டவர் இறங்கிவந்தார். அப்பொழுது அவர்: இதோ மக்கள் ஒரே இனமாயிருந்து ஒரே மொழி பேசி வருகிறதனாலன்றோ இதைச் செய்யத் தொடங்கினார்கள்! தாங்கள் செய்ய நினைத்ததை அவர்கள் விடாமல் எப்படியும் செய்து முடிப்பார்கள். சரி, நாம் இறங்கிப் போய், அவர்களுள் ஒருவர் பேசுவதை மற்றவர் அறியாவண்ணம் அவர்களது மொழியைக் குழப்பி விடுவோம் என்றார்.

அவ்வாறு ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து உலகமெங்கும் சிதறிப்போகச் செய்ததனால், அவர்கள் அந்நகரைக் கட்டுவதை விட்டு விட்டனர். பூமியெங்கும் வழங்கும் மொழிக் குழப்பம் அவ்விடத்தில் பிறந்ததனால் அதன் பெயர் 'பாபேல்' எனப்பட்டது. ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து நாடுகள்தோறும் போகச் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 32: 10-11. 12-13. 14-15 (பல்லவி: 12b)*

பல்லவி : தமது உரிமைப் பொருளாக ஆண்டவர்
தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

10 மக்கள் இனங்களின் திட்டங்களை ஆண்டவர் சிதறடிக்கிறார்: மக்களின் எண்ணங்களைப் பயனற்றவை ஆக்குகிறார்.

11 ஆண்டவருடைய திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும்; அவருடைய எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும். பல்லவி

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது; தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றவர்கள்.

13 வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார்: ஆதாமின் மக்கள் எல்லாரையும் பார்க்கிறார்.

பல்லவி

14 பூவில் வாழ்வோர் அனைவரையும் அவர் தம் உறைவிடத்தினின்று நோக்குகிறார்.

15 அனைவருடைய நெஞ்சங்களையும் உருவாக்கின அவர், அவர்கள் செய்வதை யெல்லாம் கவனிக்கிறார்.

பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*ஆன்மாவை இழந்த உடல் எப்படி உயிரற்றதோ,*
*அப்படியே செயலற்ற விசுவாசமும் உயிரற்றது.*

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 14-24, 26

என் சகோதரர்களே, தன்னிடம் விசுவாசம் உண்டு எனச் சொல்லுகிறவன் செயலில் அதைக் காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த விசுவாசம் அவனை மீட்கமுடியுமா? போதிய உடையோ அன்றாட உணவோ இல்லாத சகோதர சகோதரி யாரேனும் இருந்தால், தேவையானது ஒன்றையும் கொடாமல், ஒருவன் அவர்களைப் பார்த்து, "சுகமாகப் போய் வாருங்கள்; குளிர் காய்ந்து கொள்ளுங்கள்; பசியாறிக்கொள்ளுங்கள்" என்பானாகில் பயன் என்ன? விசுவாசமும் இதைப்போலவே செயலோடு கூடியதாய் இல்லாவிட்டால், அது தன்னிலே உயிரற்றதாகும்.

ஆனால், "ஒருவனிடம் விசுவாசம் உள்ளது, இன்னொருவனிடம் செயல் உள்ளது; அதனால் என்ன?" என்று யாராவது சொல்லக்கூடும். செயல்கள் இல்லாத அந்த விசுவாசத்தை எனக்குக் காட்டு. நான் செயல்களைக் கொண்டு என் விசுவாசத்தை உனக்குக் காட்டுகிறேன். கடவுள் ஒருவரே என்று நீ விசுவசிக்கிறாய், நல்லதுதான். பேய்கள்கூட அதை விசுவசிக்கின்றன; விசுவசித்து நடுங்குகின்றன. அறிவிலியே, செயலற்ற விசுவாசம் பயனற்றதென நீ அறிய வேண்டுமா? நம் தந்தையாகிய ஆபிரகாமைப் பார். தம் மகன் ஈசாக்கைப் பீடத்தின்மேல் பலி கொடுத்தபோது, செயல்களால் அன்றோ இறைவனுக்கு ஏற்புடையவரானார்? விசுவாசமும் செயல்களும் ஒருங்கே செயலாற்றின என்பதும், செயல்களால் விசுவாசம் நிறைவு பெற்றது என்பதும் இதிலிருந்து புலப்படுகிறதன்றோ? இவ்வாறு "ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார்; அதனால் கடவுள் அவரைத் தமக்கு ஏற்புடையவர் என மதித்தார்" என்ற மறைநூல் வாக்கு நிறைவேறியது. மேலும் 'அவர் கடவுளின் நண்பன்' எனவும் அழைக்கப்பெற்றார்.

ஆகவே, மனிதன் விசுவாசத்தினால் மட்டுமன்று, செயல்களாலும் இறைவனுக்கு ஏற்புடையவனாகிறான் என்று தெரிகிறது. ஆன்மாவை இழந்த உடல் எப்படி உயிரற்றதோ, அப்படியே செயலற்ற விசுவாசமும் உயிரற்றதே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 111:1-2.3-4.5-6 (பல்லவி : 1 காண்)

பல்லவி : ஆண்டவரின் கட்டளைகளை நினைத்து இன்பம்கொள்வோன் பேறுபெற்றோன்.

அல்லேலூயா.

அல்லது

ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன் : அவருடைய
1 கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமைமிக்கதாய் இருக்கும் : நேர்மை
2 யுள்ளோரின் சந்ததி ஆசி பெறும். பல்லவி

செழுமையும் செல்வமும் அவன் இல்லத்தில் உலவும் : அவனுடைய ஈகை
3 என்றென்றும் நிலைக்கும்.
இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான் :
4 கருணை, இரக்கம், நீதி உள்ளவனாய் இருப்பான். பல்லவி

மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிறான் : தன்
5 அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே.
எந்நாளும் அவன் அசைவுறான் : என்றென்றும் அவன் மக்கள் நினைவில்
6 வாழ்வான். பல்லவி

அல்லேலூயா அரு. 15:15b

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் ! ஏனெனில், நான் உங்களை நண்பர்கள் என்றேன் ; ஏனெனில், தந்தையிடமிருந்து நான் கேட்டதையெல்லாம் உங்களுக்கு அறிவித்தேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என்பொருட்டும், நற்செய்தியின்பொருட்டும் தன் உயிரை இழப்பவன் அதைக் காத்துக்கொள்வான்.**

மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8:34-9:1

✠ அக்காலத்தில் :

யேசு தம் சீடரையும் கூட்டத்தையும் அழைத்து, "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னையே மறந்து தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்தொடரட்டும். ஏனெனில், தன் உயிரைக்

காத்துக் கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துவிடுவான். என் பொருட்டும், நற்செய்தியின் பொருட்டும் தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக் கொள்வான்.

ஒருவன் தன் ஆன்மாவிற்கு கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயனென்ன? ஒருவன் தன் ஆன்மாவிற்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்? விபசாரமும் பாவமும் உள்ள இத்தலைமுறையில் என்னைப் பற்றியும், என் வார்த்தைகளைப் பற்றியும் வெட்கப்படுகிறவன் எவனோ, அவனைப் பற்றி மனுமகன் தம் தந்தையின் மாட்சிமையில் பரிசுத்த வானதூதரோடு வரும்போது வெட்கப்படுவார்" என்றார்.

மேலும் அவர்களை நோக்கி, "உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடவுளின் அரசு வல்லமையோடு வந்திருப்பதைக் காணும் வரை இங்கிருப்பவர்களுள் சிலர் சாவுக்குள்ளாக மாட்டார்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு:

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உலகங்கள் எல்லாம் கடவுளால் உருவாயின என்று விசுவாசத்தினால் உணர்கிறோம்.**

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 11 : 1-7

சகோதரர்களே :

விசுவாசம் என்பது நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவை பற்றி மனந்தளராத நிலை. இந்த விசுவாசத்தின் பொருட்டே நம் முன்னோர் நற்பெயர் பெற்றனர். உலகங்களெல்லாம் கடவுளின் திருச்சொல்லால் உருவாயின என்றும், ஆகவே காணாதவற்றினின்று காண்பவை உண்டாயின என்றும் விசுவாசத்தினாலேயே உணர்கிறோம்.

விசுவாசத்தினால்தான் ஆபேல் காயினைவிட மேலான பலியைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தான்; விசுவாசத்தினாலேயே, அவன் நல்லவன்

எனக் கடவுளிடமிருந்து சான்று பெற்ருன். ஏனெனில், அவனுடைய காணிக்கைகள் ஏற்றவை யெனக் கடவுளே சான்று பகர்ந்தார். இறந்தும் அவ்விசுவாசத்திஞல் இன்னும் பேசுகிருன்.

விசுவாசத்திஞலேயே ஏனேக் சாவைக் காணுதபடி எடுத்துக் கொள்ளப்பட்டார். கடவுள் அவரை மேலே எடுத்துக் கொண்டதால் மறைந்து போய்விட்டார். மேலே எடுத்துக் கொள்ளப்படு முன்பே கடவுளுக்கு உகந்தவர் என்று நற்சான்று பெற்றவராஞர். விசுவாசத்திஞலன்றி ஒருவனும் கடவுளுக்கு உகந்தவஞயிருக்க இயலாது. ஏனெனில், கடவுளை அணுகிச் செல்கிறவன் அவர் இருக்கிருர் என்றும், தம்மைத் தேடுபவர்களுக்குத் தக்க கைம்மாறு அளிக்கிருரென்றும் விசுவசிக்க வேண்டும்.

விசுவாசத்திஞலே, தம் கண்ணுக்கு மறைவாயிருந்ததைக் குறித்து நோவா இறைவஞல் எச்சரிக்கப் பெற்றபோது, தம் குடும்பத்தைக் காப்பாற்றப் பயபக்தியோடு பேழையை அமைத்தார். அதே விசுவாசத்திஞல் உலகைக் கண்டனம் செய்து, விசுவாசத்திஞல் இறைவனுக்கு ஏற்புடையவராகும் பேற்றுக்கு உரிமையாளர் ஆஞர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 144 : 2 - 3. 4-5. 10 - 11 (பல்லவி: 1bகாண்)

பல்லவி: ஆண்டவரே, உம் திருப்பெயரை என்றென்றும் வாழ்த்துவேன்.

2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன். என்றென்றைக்கும் உம் திருப்பெயரைப் புகழ்வேன்.

3 ஆண்டவர் மிக உயர்ந்தவர், மிகுந்த புகழ்ச்சிக்குரியவர்: அவரது மேன்மைக்கு அளவேயில்லை. பல்லவி

4 தலைமுறை தலைமுறையாக மனிதர் உம்முடைய செயல்களை எடுத்துரைப்பர்: தலைமுறை தலைமுறையாக உமது வல்லமையை வெளிப்படுத்துவார்கள்.

5 உம்முடைய மகத்துவத்தின் சொல்லரிய மாட்சிமையைப் பற்றிப்பேசுவர். உம் வியத்தகு செயல்களை எடுத்துரைப்பர். பல்லவி

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக. உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.

11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக. உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

**நாவையோ எம்மனிதனும் அடக்க முடிவதில்லை.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 1 - 10

என் சகோதரர்களே, நீங்கள் எல்லோரும் போதகர்கள் ஆகிவிட விரும்பவேண்டாம். போதகர்களாகிய நாங்கள் கண்டிப்பான தீர்ப்புக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பது தெரியுமன்றோ? ஏனெனில், நாம் அனைவரும் பலவற்றில் தவறுகிறோம்.

தவறான பேச்சுக்கு இடங்கொடாதவன் தன் முழு உடலையும் கட்டுப்படுத்த வல்லவன்; அவனே நிறைவுபெற்றவன். குதிரைகளைப் பாருங்கள். அவற்றை அடக்க வாயில் கடிவாளம் போட்டு முழுக் குதிரையையே கட்டுப்படுத்திவிடுகிறோம். கப்பல்களைப் பாருங்கள். அவை எவ்வளவு பெரியவையாய் இருந்தாலும், புயல் காற்றில் அடிபட்டாலும், கப்பலோட்டி சிறியதொரு சுக்கானைக்கொண்டு தான் விரும்பும் திசையிலெல்லாம் அவற்றைச் செலுத்துகிறான். மனிதனின் நாவும் அவ்வாறே. அது உடலின் மிகச் சிறிய உறுப்புத்தான். ஆயினும் பெரிய காரியங்களைச் சாதிப்பதாகப் பெருமையடிக்கிறது. சிறியதொரு நெருப்புப் பொறி எவ்வளவு பெரிய காட்டை எரித்துவிடுகிறது, பாருங்கள். நாவும் அந்த நெருப்புப் போலத்தான். அக்கிரம உலகின் உருவே அது. நம் உடலின் உறுப்புக்களுள் அமைக்கப்பட்டு உடல் முழுவதையும் கறைப்படுத்தி, மனிதனின் வாழ்க்கைச் சக்கரத்தை எரிக்கும் நெருப்புப்போல் உள்ளது. அந்நெருப்போ நரகத்திலிருந்தே வருகிறது. காட்டில் வாழ்வன, பறப்பன, ஊர்வன, கடலில்நீந்துவன ஆகிய எல்லா உயிரினங்களையும் மனிதன் அடக்கிவிடலாம்; அடக்கியும் உள்ளான். நாவையோ எம்மனிதனாலும் அடக்க முடிவதில்லை. ஓயாமல் தொல்லைப் படுத்தும் தீமை அது; சாவு விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது அது; பரம தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவதும் அந்நாவாலே; கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதனைத் தூற்றுவதும் அந்நாவாலே. போற்றுவதும் தூற்றுவதும் ஒரே வாய்தான். என் சகோதரர்களே, இப்படி இருத்தலாகாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இராயப்பர் யேசுவை நோக்கி, "ராபி, நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று! உமக்கு ஒன்றும் மோயீசனுக்கு ஒன்றும் எலியாசுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரம் அமைப்போம்" என்றார். தாம் சொல்லுவது இன்னதென அறியாமலே சொன்னார். ஏனெனில், அவர்கள் பேரச்சம் கொண்டிருந்தனர்.

அப்போது மேகம் ஒன்று வந்து அவர்கள்மேல் நிழலிட, "இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவிசாயுங்கள்" என்ற குரலொலி மேகத்திலிருந்து கேட்டது. அவர்கள் உடனே சுற்றிலும் பார்த்த போது, தங்கள் அருகில் யேசு ஒருவரைத்தவிர வேறு எவரையும் காணவில்லை.

மலையினின்று அவர்கள் இறங்கும்பொழுது, மனுமகன் இறந்தோரிடமிருந்து உயிர்க்கும்போதன்றி, அவர்கள் கண்டவற்றை ஒருவருக்கும் வெளிப்படுத்தக்கூடாது என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அவ்வார்த்தையை மனத்தில் இருத்தி, 'இறந்தோரிடமிருந்து உயிர்க்கும் போது' என்பதன் பொருள் என்ன என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர்.

"முதலில் எலியாஸ் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர் கூறுவதேன்?" என அவர்கள் அவரைக் கேட்டனர். அவர், "எலியாஸ் முதலில் வந்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தத்தான் போகிறார். ஆனால் மனுமகன் பாடுகள் பல படவும், புறக்கணிக்கப்படவும் வேண்டுமென எழுதப்பட்டுள்ளதே, அது எப்படி? ஆகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எலியாஸ் வந்தாயிற்று. அவரைக் குறித்து எழுதப்பட்டுள்ளபடி அவர்கள் தாங்கள் விரும்பியதெல்லாம் அவருக்குச் செய்தார்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஏழாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உனக்கு அன்பு செய்வதுபோல் உன் அயலானுக்கும் அன்புசெய்.**

லேவியராகமத்திலிருந்து வாசகம் *19:1-2. 17-18*

ஆண்டவர் மோயீசனை நோக்கிக் கூறியதாவது:

"இஸ்ராயேல் மக்கள் எல்லாச் சபையாருக்கும் நீ சொல்ல வேண்டியதாவது: நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்; நாம் பரிசுத்தராய் இருப்பதால், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்.

உன் சகோதரனை உன் இதயத்தில் பகைக்காதே. ஆனால், அவனுடைய பாவத்திற்கு நீ உடந்தையாகாதபடிக்கு வெளிப்படையாய் அவனுக்கு அறிவுரை சொல். பழிக்குப் பழி வாங்கத் தேடாதே. உன் மக்கள் உனக்கு அநீதி செய்தாலும், மனத்தில் பொருமை கொள்ளாதே. உனக்கு அன்பு செய்வதுபோல் உன் அயலானுக்கும் அன்பு செய். நாம் ஆண்டவர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 102:1-2. 3-4. 8, 10. 12-13 (பல்லவி: 8)*

பல்லவி: **ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்.**

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: என் அகத்துள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!

2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: அவர் செய்த நன்மைகளை எல்லாம் மறவாதே. பல்லவி

3
அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்: அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்: சினங்கொள்ளத் தாமதிப்பவர்; சாந்தமுடையவர்.
9 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை: நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ, அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி விடுகிறார்.
13 தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவது போல், ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

***எல்லாம் உங்களுக்கு உரியவையே; நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள், கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3:16-23

சகோதரர்களே :

நீங்கள் கடவுளின் ஆலயம் என்பதும், கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியாதா? கடவுளின் ஆலயத்தை எவனாவது அழித்தால், அவனைக் கடவுள் அழித்துவிடுவார். ஏனெனில், கடவுளின் ஆலயம் பரிசுத்தமானது; நீங்களே அவ்வாலயம்.

யாரும் தன்னை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். உங்களுள் எவனாவது இவ்வுலகப்போக்கின்படி தன்னை ஞானி எனக் கருதினால், ஞானியாகும்படி மடையனாகட்டும். ஏனெனில், இவ்வுலகத்தின் ஞானம் கடவுள்முன் மடமைதானே. "ஞானிகளை அவர்களுடைய சூழ்ச்சியிலேயே சிக்கவைக்கிறார்" என்றும், "ஞானிகளின் எண்ணங்களை அறிவார், அவை வீண் என அவருக்குத் தெரியும்" என்றும் எழுதியுள்ளதன்றோ?

ஆகையால் வெறும் மனிதர்களைப்பற்றி யாரும் பெருமை பாராட்டலாகாது. சின்னப்பனோ, அப்பொல்லோவோ, கெபாவோ,

உலகமோ, வாழ்வோ, சாவோ, நிகழ்காலமோ எதிர்காலமோ எல்லாம் உங்களுக்கு உரியவையே. நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள்; கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா 1 அரு. 2:5

அல்லேலூயா. கிறிஸ்துவின் வார்த்தையை ஒருவன் கடைப்பிடித்தால், அவனிடம் கடவுளன்பு உண்மையாகவே நிறைவாகியுள்ளது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:38-48

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீயோனை எதிர்க்க வேண்டாம். ஆனால் யாராவது உன் வலக்கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு. யாராவது வழக்காடி, உன் உள்ளாடையை எடுத்துக்கொள்ள விரும்பினால், அவனுக்கு உன் மேலாடையையும் கொடுத்துவிடு. யாராவது உன்னை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால், இரு கல் தொலை அவனோடு செல். கேட்கிறவனுக்குக் கொடு; உன்னிடம் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகம் கோணாதே.

'அயலானுக்கு அன்பு' 'பகைவனுக்கு வெறுப்பு' என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் பகைவர்களுக்கு அன்புசெய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள். அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறார்; நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும், மழை பொழியச் செய்கிறார்.

உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? ஆயக்காரரும் இவ்வாறே செய்வதில்லையா? உங்கள் சகோதரருக்கு மட்டும் வணக்கம் செய்வீர்களாகில், நீங்கள் என்ன பெரியகாரியம் செய்கிறீர்கள்?

புறவினத்தாரும் இவ்வாறே செய்வதில்லையா? ஆதலால், உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*நம்மை முன்னிட்டு உங்கள் அக்கிரமங்களை அழிப்போம்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்.
*43 : 18 - 19. 21 - 22. 24b - 25*

ஆண்டவர் கூறுவதாவது:

"கடந்து போனவற்றைச் சிந்திக்க வேண்டா, முற்காலத்து நிகழ்ச்சிகளைப்பற்றி எண்ணவேண்டா; இதோ, நாம் புதியன செய்கிறோம், இப்பொழுது அவை தோன்றும், நீங்களும் காண்பீர்கள்; பாழ்வெளியில் நாம் பாதை யொன்று அமைப்போம், பாலைநிலத்தில் ஆறுகள் ஓடச் செய்வோம்.

தமது மகிமையைப் பரப்பும்படி நமக்கென்றே இந்த மக்களை உண்டாக்கினோம். யாக்கோபே, நம்மை நீ மன்றாடவில்லை; இஸ்ராயேலே, நம்மைப்போற்ற நீ சிரத்தை கொள்ளவில்லை.

அதற்கு மாறாக உங்கள் பாவங்களால் நம்மை வருத்தினீர்கள், உங்கள் அக்கிரமங்களால் நமக்கு வேதனை தந்தீர்கள். நாமே, நம்மை முன்னிட்டு நாம்தாமே உங்கள் அக்கிரமங்களை அழிப்போம், உங்கள் பாவங்களை மறுபடி நினைவு கூரவும் மாட்டோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்*

சங். 41 : 1 - 2. 3 - 4. 12 - 13 (பல்லவி : 4b)

பல்லவி : உமக்கெதிராய்ப் பாவம் செய்தேன். ஆண்டவரே, என்னைக் குணப்படுத்தும்.

1 எளியவரைக் குறித்துக் கவலை உள்ளவன் பேறுபெற்றவன்; துன்ப நாளில் ஆண்டவர் அவனுக்கு மீட்பளிப்பார்.

2 ஆண்டவர் அவனைக் காத்துக்கொள்வார்; நீண்ட ஆயுளை அவனுக்கு அளிப்பார்; உலகில் அவனுக்கு நற்பெயர் அளிப்பார்; பகைவரின் விருப்பத்திற்கு அவனைக் கையளிக்க மாட்டார். பல்லவி

3 அவன் நோயுற்றுப் படுக்கையில் ஆண்டவர் அவனுக்குத் துணை செய்வார்.

4 "ஆண்டவரே! என்மீது இரக்கம் வையும், என்னைக் குணப்படுத்தும்; உமக்கெதிராய்ப் பாவம் செய்தேன்" என்று நான் வேண்டுகிறேன். பல்லவி

12 நீர் எனக்கேதும் நேராதபடி காத்துக் கொள்வீர்; என்றென்றும் உம் முன்னிலையில் என்னை நிறுத்தி வைப்பீர்.

13 இஸ்ராயேலின் இறைவனாகிய ஆண்டவர் வாழ்த்துப் பெறுவாராக; என்றென்றும் வாழ்த்துப் பெறுவாராக! ஆமென், ஆமென். பல்லவி

## இரண்டாம் வாசகம்

இயேசுவிடம், ஆம் என்பதும், இல்லை என்பதும் கலந்ததில்லை.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 1 : 18-22

சகோதரர்களே :

உங்களிடம் நான் பேசும்போது, ஆம் என்பதும், இல்லை என்பதும் கலந்ததில்லை; உண்மையாம் கடவுளே இதற்குச் சாட்சி. என் வழியாகவும் சில்வானு, தீமொத்தேயு வழியாகவும் உங்களிடையே அறிவிக்கப்பட்ட இறைமகனாகிய யேசு கிறிஸ்துவிடம் ஆம் என்பதும், இல்லை என்பதும் கலந்ததில்லை. 'ஆம்' என்பது ஒன்றே அவரிடம் இருந்து வருகிறது. ஏனெனில், கடவுளின் வாக்குறுதிகள் யாவற்றுக்கும் 'ஆம்' என்பதே அவரிடம் இருந்தது. ஆகையால்தான் நாம் கடவுளுக்குப் புகழுரை கூறும் பொழுது அவர் வழியாகவே 'ஆமென்' என்கிறோம்.

உங்களையும் எங்களையும் கிறிஸ்துவின் ஒன்றிப்பில் உறுதிப்படுத்தி நம்மை அபிஷேகம் செய்தவர் கடவுளே. அவரே நம்மீது தம் முத்திரை யிட்டு நம் உள்ளங்களில் இருக்கும்படி ஆவியானவரை அச்சாரமாக அளித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* • *லூக். 4 : 18–19*

அல்லேலூயா. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்,
சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும்
ஆண்டவர் என்னை அனுப்பினார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரமுண்டு.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *2: 1–12*

சில நாட்களுக்குப்பின் யேசு கப்பர்நகூம் ஊருக்கு மீண்டும் வந்தார். வீட்டில் அவர் இருக்கிறார் என்ற செய்தி பரவிற்று. பலர் வந்து கூடவே வாசலுக்கு வெளியே முதலாய் இடமில்லை. அவர் அவர்களுக்குத் தேவ வார்த்தையை எடுத்துச் சொன்னார்.

அப்பொழுது திமிர்வாதக்காரன் ஒருவனை நால்வர் சுமந்துகொண்டு அவரிடம் வந்தனர். கூட்டமிகுதியால் அவர்முன் அவனைக் கிடத்த முடியாமல் அவர் இருந்த வீட்டின் மேல்தட்டைப் பிரித்து, திறப்பு உண்டாக்கி, திமிர்வாதக்காரன் படுத்திருந்த படுக்கையை இறக்கினர். யேசுவோ அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார்.

அங்கிருந்த மறைநூல் அறிஞருள் சிலர், "என்ன, இவர் இப்படிப் பேசுகிறார்? கடவுளைத் தூஷிக்கிறார். கடவுள் ஒருவரேயன்றிப் பாவத்தை மன்னிக்க வல்லவர் வேறு யார்?" என்று உள்ளத்தில் எண்ணினர்.

இவர்கள் தமக்குள் இவ்வாறு எண்ணுவதை யேசு உடனே மனத்தில் அறிந்து, அவர்களை நோக்கி, "உங்கள் உள்ளத்தில் இப்படி நினைப்பதேன்? எது எளிது? இந்தத் திமிர்வாதக்காரனை நோக்கி, 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்பதா? 'எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட' என்பதா? மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டு என்று நீங்கள் உணருமாறு" —திமிர்வாதக்காரனை நோக்கி— "நான் உனக்குச் சொல்லுகிறேன்: எழுந்து உன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப்போ" என்றார்.

என்றதும், அவன் எழுந்து தன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு எல்லாருக்கும் முன்பாக வெளியே சென்றான். இதனால் அனைவரும் திகைப்புற்று, "இதைப்போல் நாம் ஒருபோதும் கண்டதேயில்லை" என்று கடவுளை மகிமைப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***ஆண்டவர் உம்மை இன்று என் கையில் ஒப்படைத்தார்: நானோ உம்மீது கை வைக்கத் துணியவில்லை.***

*சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம்*

*26:2.7-9. 12-13. 22-23*

*அந்நாட்களில் :*

சவுல் எழுந்து ஜிப் பாலைவனத்துக்குப் புறப்பட்டார். இஸ்ராயேலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் மனிதர்கள் அவரோடு ஜிப் பாலைவனத்தில் தாவீதைத் தேடச் சென்றார்கள்.

அப்படியே தாவீதும் அபிசாயியும் இரவில் ஆட்கள் இருந்த இடத்திற்கு வந்து, சவுல் தம் கூடாரத்தில் படுத்துத் தூங்குகிறதையும், அவர் தலைமாட்டில் அவருடைய ஈட்டி தரையில் குத்தியிருக்கிறதையும், அப்னேரும் மற்ற ஆட்களும் அவரைச் சுற்றிலும் தூங்குகிறதையும் கண்டனர். அபிசாயி தாவீதைப் பார்த்து, "இன்று கடவுள் உம் எதிரியை உமது கையில் ஒப்படைத்தார். இப்பொழுது நான் அவனை ஈட்டியினால் இரண்டாம் முறை குத்தாமல், ஒரே குத்தாய் நிலத்தில் பாயக் குத்தப் போகிறேன்" என்றான். தாவீது அபிசாயியை நோக்கி, "அவரைக் கொல்லாதே, ஆண்டவரால் அபிஷேகம் செய்யப்பட்டவரின் மேல் கை வைப்பவன் குற்றவாளி அன்றோ?" என்று சொன்னான்.

ஆகையால் தாவீது ஈட்டியையும், சவுல் தலைமாட்டிலிருந்த தண்ணீர்ப் பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டு இருவரும் புறப்பட்டுப் போயினர். ஒருவரும் காணவுமில்லை, அறியவுமில்லை, விழிக்கவுமில்லை. ஆண்டவர் அவர்களுக்கு ஆழ்ந்த தூக்கத்தை அனுப்பியிருந்தபடியால் அவர்கள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

தாவீது நடந்து சற்றுத் தொலைவிலிருந்த மலையுச்சியை அடைந்தான். இரு திறத்தாருக்கும் இடையே அதிக தூரம் இருந்தது. தாவீது, "இதோ, அரசருடைய ஈட்டி இங்கேஇருக்கிறது. அரசரின் ஊழியர்களில் ஒருவன் இவ்விடம் வந்து அதை எடுத்துக்கொண்டு போகட்டும். ஆனால் அவனவன் நீதிக்கும் பிரமாணிக்கத்திற்கும் தகுந்தபடி ஆண்டவர் ஒவ்வொருவனுக்கும் பலன் கொடுப்பார். ஆண்டவர் உம்மை இன்று என் கையில் ஒப்படைத்தார். நானோ ஆண்டவரால் அபிஷேகம் செய்யப் பட்டவர் மேல் கைவைக்கத் துணியவில்லை" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102.1-2. 3-4. 8,10. 12-13 (பல்லவி: 8a)

பல்லவி: **ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்.**

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: என் அகத்துள்ளதெல்லாம்
அவரது திருப் பெயரை வாழ்த்துவதாக:
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக! அவர் செய்த நன்மைகளை
யெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை யெல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களை யெல்லாம்
குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார். அருளையும் இரக்கத்தையும் உனக்கு
முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்; சினங் கொள்ளத் தாமதிப்பவர்;
சாந்தமுடையவர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை: நம் குற்றங்களுக்குத்
தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலை உள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி
விடுகிறார்.
13 தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவது போல, ஆண்டவர் தமக்கு
அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

***மண்ணைச் சார்ந்தவனின் சாயலைத் தாங்கியிருந்ததுபோல,***
***விண்ணைச் சார்ந்தவரின் சாயலையும் தாங்கியிருப்போம்.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15:45-49

சகோதரர்களே:

முதல் மனிதனாகிய ஆதாம் மனித உயிருள்ளவன் ஆனான். கடைசி ஆதாமோ உயிர் தரும் ஆவியானார்.

முதலில் உண்டானது தேவ ஆவிக்குரிய உயிர்கொண்டதன்று, மனித உயிர்கொண்டதுதான்; தேவ ஆவிக்குரியது பிந்தியதே. முதல் மனிதன் மண்ணிலிருந்து வந்தான். அவன் மண்ணைச் சார்ந்தவன். இரண்டாம் மனிதனோ விண்ணிலிருந்து வந்தார். மண்ணைச் சார்ந்த அவன் எப்படியோ, அப்படியே மண்ணைச் சார்ந்த யாவரும் உள்ளனர்; விண்ணைச் சார்ந்த இவர் எப்படியோ, அப்படியே விண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர்.

ஆகவே, மண்ணைச் சார்ந்தவனின் சாயலைத் தாங்கியிருந்ததுபோல, விண்ணைச் சார்ந்தவரின் சாயலையும் தாங்கியிருப்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 13:34

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன்: நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல்,***
***நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.***

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:27-38

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகிறேன்: உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களுக்கு

ஆசி கூறுங்கள். உங்களைத் தூற்றுவோருக்காகச் செபியுங்கள். ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு, மறு கன்னத்தையும் காட்டு. உன் மேலாடையைப் பறிப்பவனுக்கு, உள்ளாடையையும் மறுக்காதே. உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு. உன் உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக் கேட்காதே. பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவிகளும் தமக்கு அன்பு செய்பவர்களுக்கு அன்பு செய்கின்றனரே. உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், அதனால் உங்களுக்கு என்ன பலன்? பாவிகளும் அவ்வாறு செய்கின்றனரே. எவரிடமிருந்து திரும்பிப்பெற எதிர்பார்க்கிறீர்களோ, அவர்களுக்கே கடன் கொடுத்தால் உங்களுக்கு என்ன பலன்? ஏனெனில், சரிக்குச் சரி பெறுமாறு பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கின்றனரே.

உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள். அவர்களுக்கு நன்மை புரியுங்கள். ஒன்றும் எதிர்பாராமல் கடன் கொடுங்கள். அப்போது உங்களுக்கு மிகுதியான கைம்மாறு கிடைக்கும். உன்னதரின் மக்களாயிருப்பீர்கள். ஏனெனில், அவர் நன்றிகெட்டவர்க்கும் தீயவர்க்கும் பரிவு காட்டுகிறார். உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.

தீர்ப்பிடாதீர்கள், நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள். கண்டனம் செய்யாதீர்கள், கண்டனம் பெறமாட்டீர்கள். மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள். கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில், எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**எல்லாவற்றிற்குமுன் ஞானம் உண்டாக்கப்பட்டது.**

சீராக் ஆகமத்தின் தொடக்கம் 1:1-10

எல்லா ஞானமும் ஆண்டவராகிய கடவுளிடமிருந்து உண்டாகி, அவருடன் என்றென்றைக்கும் நித்தியமாய் இருக்கின்றது.

கடல் மணல்களையும் மழைத்துளிகளையும், உலகத்தின் நாட்களையும் கணக்கிட்டவன் யார்? வானத்தின் உயரத்தையும் பூமியின் அகலத்தையும் பாதாளத்தின் ஆழத்தையும் அளந்தவன் யார்? எல்லாவற்றிற்கும் முன்னிருந்த கடவுளின் ஞானத்தைக் கண்டுபிடித்தவன் யார்?

எல்லாவற்றிற்கும் முன் ஞானம் உண்டாக்கப்பட்டது. காலத் துவக்கத்திலிருந்து விவேகமுள்ள அறிவு இருந்தது. வான மண்டலங்களில் வீற்றிருக்கும் கடவுளின் வார்த்தையே ஞானத்தின் ஊற்றும், அதனை அடையும் வழிகளே அவருடைய நித்திய கட்டளைகளுமாய் இருக்கின்றன.

ஞானத்தின் அடித்தளம் எவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது? அதன் வியத்தகு பண்புகளை அறிந்தவன் யார்? ஞானத்தின் உணர்வு எவனுக்குத் தெரிவித்து வெளியாக்கப்பட்டது? அதன் பலவித வழிகளையும் கண்டு பிடித்தவன் யார்? எல்லாவற்றிற்கும் மேலான, எல்லாம் வல்ல படைப்பாளர் ஒருவர் இருக்கிறார். வல்லமையுள்ள அவ்வரசர் மிகவும் அஞ்சத்தக்கவர். தமது அரியணையில் வீற்றிருந்து ஆண்டுவரும் கடவுள் அவரே.

அவரே தமது அளவில்லாப் பரிசுத்த ஆவியைக் கொண்டு அதை உண்டாக்கி, அறிவித்து வெளிப்படுத்தினார். ஏனென்றால், தமது எல்லாப் படைப்புகளிலும், எல்லா உயிரினங்களிலும் தமது விருப்பத்திற்கு ஏற்றபடி அதைப் பகிர்ந்திட்டார்; தம்மை நேசிப்பவர்களுக்கு அதைக் கொணர்ந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 92:1ab, 1c-2, 5. (பல்லவி : 1 a)

பல்லவி : ஆண்டவர் ஆட்சி செய்கின்றார், மகத்துவத்தை ஆடையாய் உடுத்தியுள்ளார்.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் : மகத்துவத்தை அவர் ஆடையாய் உடுத்தியுள்ளார். ஆண்டவர் வல்லமையைக் கச்சைபோல் அணிந்து கொண்டிருக்கிறார் : பல்லவி

2 பூவுலகை அவர் நிலைப்படுத்தினார், அது அசைவுறாது.
ஆதியிலின்றே உமது அரியணை நிலையாய் உள்ளது : ஆதியினின்றே நீரும் உள்ளீர். பல்லவி

5 உம்முடைய நியமங்கள் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவை : ஆண்டவரே, புனிதமே உமது இல்லத்திற்கு ஏற்றது, எந்நாளும் ஏற்றதே. பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

உங்கள் உள்ளத்தில் கட்சி மனப்பான்மையிருந்தால், அதைப்பற்றி பெருமை பாராட்ட வேண்டாம்.

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 3 : 13 - 18

அன்புக்குரியவர்களே :

உங்களுள் ஞானமும் அறிவும் படைத்தவன் யாராவது இருந்தால், அவன் அதைத் தனது நன்னடத்தையினால் எண்பிக்கட்டும்; அவன் செயல்கள் ஞானத்தால் விளையும் சாந்தத்தோடு விளங்கட்டும். ஆனால், உங்கள் உள்ளத்தில் மனக்கசப்பும் பொறாமையும் கட்சி மனப்பான்மையும் இருந்தால், அதைப்பற்றிப் பெருமை பாராட்ட வேண்டாம். உண்மையை எதிர்த்துப் பொய் பேசவேண்டாம். இத்தகைய ஞானம் விண்ணினின்று வருவதன்று; மண்ணுலகையே சார்ந்தது, கீழ் நாட்டத்தைப் பின்பற்றுவது, பேய்த்தன்மை வாய்ந்தது. பொறாமையும் கட்சி மனப்பான்மையும் எங்குள்ளதோ, அங்கே குழப்பமும் எல்லா தீயசெயல்களும் இருக்கும். விண்ணினின்று வரும் ஞானமோ தீய எண்ணத்துடன் கலவாதது; இதுவே அதன் தலையான பண்பு. மேலும் அது

சமாதானத்தை நாடும்: பொறுமையைக் கடைப்பிடிக்கும்; இணக்கத்தை விரும்பும்; இரக்கமும் நற்செயல்களும் பெருகச் செய்யும்; நடுநிலை தவறாது, கள்ளமறியாது. சமாதானம் செய்வோர், சாமாதானத்தில் விதைக்கும் விதையிலிருந்து இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வென்னும் கனி விளைகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 18 : 7. 8. 9. 14 (பல்லவி: 8a)*

பல்லவி : **ஆண்டவரின் கட்டளைகள் நேரியவை: உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை.**

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது; ஆண்டவருடைய கட்டளை உறுதியானது, எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை; உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது பல்லவி

9 ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது ; என்றென்றும் நிலைத்திருப்பது : ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; எல்லாம் நீதியானவை. பல்லவி

14 எனக்கு அடைக்கலமும் என் மீட்பருமான ஆண்டவரே, உம் முன்னிலையில் என் வாய்மொழியும், என் இதயச் சிந்தனையும் உமக்கு உகந்தனவாகட்டும். பல்லவி

## அல்லேலூயா

*2 திமோத். 1:10b*

அல்லேலூயா . நம் மீட்பராகிய யேசுகிறிஸ்து சாவை அழித்து, வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**விசுவசிக்கிறேன் ஆண்டவரே, என் விசுவாசமின்மையை நீக்க உதவி செய்தருளும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 14-29

அக்காலத்தில் :

யேசு மலையினின்று இறங்கித் தம் சீடரிடம் திரும்பி வந்தபோது பெருங்கூட்டம் ஒன்று அவர்களைச் சூழ்ந்து இருப்பதையும், மறைநூல் அறிஞர் அவர்களுடன் வாதாடுவதையும் கண்டனர். மக்கள் அனைவரும் அவரைக் கண்டவுடனே திடுக்கிட்டு ஓடிவந்து, வணக்கம் செய்தனர். அவர், "எதைப்பற்றி வாதாடுகிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார்.

கூட்டத்திலிருந்த ஒருவன் மறுமொழியாகக் கூறியது: "போதகரே, ஊமைப்பேய் பிடித்த என் மகனை உம்மிடம் கொண்டுவந்தேன். அது எங்கே அவனை ஆட்கொள்கிறதோ அங்கே அவனைக் கீழே தள்ளுகிறது. அவன் நுரை தள்ளிப் பல்லைக் கடித்து விறைத்துப் போகிறான். அதை ஓட்டும்படி உம் சீடரைக் கேட்டேன். அவர்களால் முடியவில்லை."

அதற்கு அவர், "விசுவாசமில்லாத தலைமுறையே, எதுவரை உங்களோடு இருப்பேன்? எதுவரை உங்களைப் பொறுத்துக்கொண்டிருப்பேன்? அவனை என்னிடம் கொண்டுவாருங்கள்" என்றார். அவனை அவரிடம் கொண்டுவந்தனர். அவரைக் கண்டவுடன் பேய் அவனை அலைக்கழிக்க, அவன் தரையில் விழுந்து நுரை தள்ளிக்கொண்டு புரண்டான்.

அவர், "இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாகிறது?" என்று அவனுடைய தகப்பனைக் கேட்க, அவன் சிறுவயதிலிருந்தே இப்படித்தான். இவனைத் தொலைக்க அந்தப் பேய் அடிக்கடி நீரிலும் நெருப்பிலும் தள்ளியிருக்கிறது. உம்மால் ஏதாவது செய்யக்கூடுமானால் எங்கள்மேல் மனமிரங்கி உதவி புரியும்" என்றான்.

யேசு அவனை நோக்கி, "கூடுமானால்? விசுவசிப்பவனுக்கு எல்லாம் கூடும்" என்றார். உடனே சிறுவனுடைய தகப்பனார் "விசுவசிக்கிறேன். என் விசுவாசமின்மையை நீக்க உதவி செய்யும்" என்று கத்தினான்.

கூட்டம் தம்மிடம் வருவதைக் கண்டு, யேசு அசுத்த ஆவியைக் கடிந்து, "ஊமைச் செவிட்டுப் பேயே, உனக்குக் கட்டளையிடுகிறேன்: இவனை விட்டுப்போ, மீண்டும் இவனுள் நுழையாதே" என்றார். அது கத்திக்கொண்டு அவனை மிகவும் அலைக்கழித்தபின் வெளியேறிற்று.

பையன் பிணம்போலானான். அதைப் பார்த்த மக்கள் கூட்டம், "இறந்து விட்டான்" என்றது. யேசுவோ அவன் கையைப் பிடித்துத் தூக்கினார். அவன் எழுந்தான்.

அவர் வீட்டிற்குள் போன பின்பு, சீடர்கள், "அதை ஓட்ட எங்களால் ஏன் முடியவில்லை?" என்று அவரைத் தனிமையாகக் கேட்டார்கள். அதற்கு அவர், "இவ்வகைப் பேய் செபத்தினாலன்றி வேறு எதனாலும் வெளியேறாது" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**சோதனைக்குத் தப்ப உன் ஆன்மாவை ஆயத்தப்படுத்து.**

*சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்* *2:1-13*

மகனே, நீ கடவுளுக்கு ஊழியம் செய்யப் போகையில் நீதியிலும் அச்சத்திலும் நிலை கொண்டு, சோதனைக்குத் தப்ப உன் ஆன்மாவை ஆயத்தப்படுத்து.

உன் இதயத்தைத் தாழ்த்தி அமைந்திரு. செவி கொடுத்து நல்லறிவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள். கலக்க நேரத்தில் ஆத்திரப்பட்டு யாதொன்றும் செய்யாதே. ஆண்டவருடைய இரக்கத்தின் காலம் வரைக்கும் காத்திரு. அவரோடு ஒன்றித்துக் கடைசியில் உன் வாழ்க்கை பலன் கொடுக்கும்படி பொறுமையாய் இரு.

உனக்கு நேருவன எல்லாவற்றையும் பொறுத்துக்கொள். துன்பத்தில் திடமாயும், தாழ்வில் பொறுமையாயும் இரு. பொன்னும் வெள்ளியும் நெருப்பினால் சுத்தமாவது போல, மனிதரும் தாழ்ச்சி என்னும் உலையில் தகுதியானவர்கள் ஆகிறார்கள். கடவுள்பால் உன் விசுவாசத்தை வை; அவர் உன்னைக் காப்பாற்றுவார். செவ்வழியில் சென்று, அவர்பால் உன் நம்பிக்கையை வை; அவருக்கு அஞ்சி நட; நெடுங்காலம் நிலை கொள்வாய்.

ஆண்டவருக்கு அஞ்சுவதால் நீங்கள் அவர் இரக்கத்தை அடைவீர்கள். நன்னெறி வழுவாதபடி அவரை மறவாதீர்கள். ஆண்டவருக்கு அஞ்சும் நீங்கள் அவரை விசுவசியுங்கள்; உங்கள் சம்பாவனை வீணாகாது.

ஆண்டவருக்கு அஞ்சும் நீங்கள் அவரை நம்புங்கள்; அவர் இரக்கம் உங்கள் மகிழ்ச்சியாகும். ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்களே, அவரை நேசியுங்கள்; உங்கள் இதயங்கள் ஒளி பெறும்.

மக்களே, எல்லா மனிதரையும் பாருங்கள்; ஆண்டவரை நம்பின எவனும் கலங்கினதில்லையென்று கண்டறியுங்கள். அவருடைய கட்டளைகளில் நிலைநின்றவன் எவன் கைவிடப்பட்டான்? அவரை மன்றாடியவன் எவன் புறக்கணிக்கப்பட்டான்?

ஆண்டவர் தயவும் இரக்கமும் உள்ளவராதலால் துன்ப நேரங்களில் பாவங்களை மன்னிப்பார்; உண்மையாகத் தம்மைத் தேடுகிறவர்களை ஆதரிக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 36:3-4. 18-19. 27-28. 39-40 (பல்லவி:5 காண்)*

பல்லவி: உன் வாழ்வின் முடிவை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு: அவரே எல்லாம் செய்வார்.

3 ஆண்டவர் மீது நம்பிக்கை வை, நன்மை செய்: புனித நாட்டில் எவ்விதக் கவலையுமின்றி இருப்பாய்.

4 ஆண்டவரில் உன் இன்பத்தைத் தேடு: அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார். பல்லவி

18 நீதிமான்களுடைய வாழ்நாட்களைக் குறித்து ஆண்டவர் கருத்தாய் இருக்கிறார்: அவர்கள் உரிமைச் சொத்து என்றென்றும் நிற்கும்.

19 அழிவின் காலத்தில் அவர்கள் வெட்கிப் போகமாட்டார்கள்: பஞ்ச காலத்திலோ அவர்கள் நிறைவு கொள்வார்கள். பல்லவி

27 தீமையை விலக்கு, நன்மை செய்: அப்போது என்றென்றும் வாழ்வாய்.

28 ஏனெனில், ஆண்டவர் நேர்மையை விரும்புகிறார், தம் புனிதர்களை அவர் கைவிடுவதில்லை: நெறி கெட்டவர் அழிவுறுவர், அவர்கள் மக்கள் வேரோடு ஒழிந்துபோவர். பல்லவி

39 நல்லவர்களுக்கு ஈடேற்றம் ஆண்டவரிடமிருந்தே வரும்: துன்ப வேளையில் அவர்களுக்குப் புகலிடம் அவரே.

40 ஆண்டவர் அவர்களுக்குத் துணை நின்று விடுதலை அளிக்கிறார்; தீயோரின் கையினின்று விடுவித்துக் காப்பாற்றுகிறார்: ஏனெனில் அவர்கள் அவரிடம் அடைக்கலம் தேடுகின்றனர். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*தீய எண்ணத்தோடு கேட்பதாலே, நீங்கள் கேட்டாலும் அடைவதில்லை.*

திருத்தூதரான புனித யாக்கோபு எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 4:1-10

அன்புக்குரியவர்களே:

உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணம் என்ன? உங்கள் உடலில் போராட்டம் விளைவிக்கும் கீழ்த்தர ஆசைகள் அல்லவா? பிறர் பொருள்மீது ஆசை வைக்கிறீர்கள்; அதைப் பெறாததால், கொலை செய்கிறீர்கள்; பேராசை கொள்கிறீர்கள்; ஆசைப்படுவதை அடைய முடியாததால், சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். ஆசைப்படுவதை ஏன் அடைய முடியவில்லை? இறைவனிடம் கேட்காததால்தான். கேட்டாலும் ஏன் அடைவதில்லை? தீய எண்ணத்தோடு கேட்பதால்தான். கிடைப்பதைக் கீழ்த்தர ஆசைகளை நிறைவேற்றுவதில் செலவழிக்க கேட்கிறீர்கள். விபசாரிகள்போல் வாழ்பவர்களே, உலகத்தோடு நட்புக் கொள்வது, கடவுளைப் பகைப்பது என அறியீர்களோ? உலகுக்கு நண்பனாக விரும்பும் எவனும், கடவுளுக்குப் பகைவனாகிறான். நம்முள் குடியிருக்கச் செய்த ஆன்மாவை இறைவன் பேராவலோடு நாடுகிறார் என மறைநூல் கூறுவது வீண் என எண்ணுகிறீர்களோ? நாம் அதற்கேற்ப வாழ நமக்குத் தேவைக்கு மேலாகவே அருளையும் வழங்குகிறார்; ஆகவேதான், "செருக்குற்றவர்களைக் கடவுள் எதிர்க்கிறார்; தாழ்ச்சியுள்ளவர்களுக்கோ அருளை அளிக்கிறார்" என்று எழுதியுள்ளது.

ஆகவே கடவுளுக்குப் பணிந்து நடங்கள். அலகையை எதிர்த்து நில்லுங்கள், அது ஓடிவிடும். கடவுளை அணுகிச் செல்லுங்கள்; அவரும் உங்களை அணுகி வருவார். பாவிகளே, உங்கள் கைகளைத் தூய்மையாக்குங்கள்; இருமனத்தோரே, இதயங்களைப் புனிதப்படுத்துங்கள். உங்கள் இழிநிலையை உணர்ந்து புலம்பி அழுங்கள். உங்கள் சிரிப்பு அழுகையாக மாறட்டும்; மகிழ்ச்சி துயராகட்டும். ஆண்டவர்முன் உங்களைத் தாழ்த்துங்கள்: அவர் உங்களை உயர்த்துவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 54:6-7. 8-9 . 9b-10. 22 (பல்லவி: 22a)

பல்லவி : **ஆண்டவர்மீது உன் கவலையைப் போட்டுவிடு: அவர் உன்னை ஆதரிப்பார்.**

6 "புறாவைப்போல் எனக்குச் சிறகுகள் இல்லையே! இருந்தால் பறந்துபோய்
அமைதியடைந்திருப்பேனே!" என்று சொல்லிக்கொண்டேன்.
7 வெகு தொலைவு போயிருப்பேன்: பாலை வெளியில் தங்கியிருப்பேன்.
பல்லவி

8 புயலினின்றும் பெருங்காற்றினின்றும் வெகுவிரைவில் புகலிடம்
தேடியிருப்பேன்.
9 ஆண்டவரே, அவருடைய மொழிகளைக் கலங்கடித்து, குழப்பம் உண்டாகச்
செய்யும்:
பல்லவி

10 ஏனெனில், நகரத்தில் வன்முறையும் கலகமும் காண்கிறேன்.
இரவும் பகலும் அவைகள் அதன் மதில்களைச் சுற்றி வருகின்றன.
பல்லவி

22 ஆண்டவர்மீது உன் கவலையைப்போட்டுவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்:
நீதிமான் என்றும் நிலைகலங்கவிடமாட்டார்.
பல்லவி

கலாத். 6:14

அல்லேலூயா அல்லேலூயா. நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் சிலுவையிலன்றி நான் வேறெதிலும் பெருமைப்படமாட்டேன்; அந்தச் சிலுவையின் வழியாகவே உலகம் எனக்கு அறையுண்டதாய் இருக்கிறது; நானும் உலகிற்கு அறையுண்டவனாய் இருக்கிறேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் கையளிக்கப்படுவார்: ஒருவன் முதல்வனாயிருக்க விரும்பினால், அவன் அனைவரிலும் கடையனாயிருக்கட்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9:30-37

அக்காலத்தில்:

யேசுவும் அவர் சீடரும் மலையைவிட்டுப் புறப்பட்டு, கலிலேயாவினூடே சென்றார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று விரும்பினார். ஏனெனில், "மனுமகன் மனிதர்களிடம் கையளிக்கப்

படுவார். அவர்கள் அவரைக் கொல்லுவார்கள். கொல்லப்பட்டு மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவார்" என்று தம் சீடருக்குப் போதிக்கலானார். அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்கவும் அஞ்சினர்.

கப்பர்நகூமுக்கு வந்தனர். வீட்டில் இருக்கும்போது அவர் அவர்களை நோக்கி, "வழியில் என்ன வாதாடிக்கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தனர். ஏனெனில், "பெரியவன் யார்?" என்பதுபற்றி வழியில் தங்களுக்குள் விவாதித்திருந்தார்கள். அப்போது அவர் அமர்ந்து பன்னிருவரையும் அழைத்து, ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும், அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும் என்றார்.

பின்னர் ஒரு குழந்தையை எடுத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, அதை அரவணைத்து, "இத்தகைய குழந்தைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்ளுகிற எவனும் என்னையே ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்றுக்கொள்ளும் எவனும் என்னையன்று, என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்ளுகிறான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

முதல் ஆண்டு

## முதல் வாசகம்

**ஞானத்தைத் தேடுவோர்களைக் கடவுள் நேசிக்கிறார்.**

*சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்* 4:12-22

ஞானம் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு உயர்வுள்ள வாழ்வைத் தருகின்றது; தன்னைத் தேடுகிறவர்களை ஏற்றுக்கொண்டு, நீதிநெறியில் முன்செல்கின்றது. அதை நேசிக்கிறவன் வாழ்வை நேசிக்கிறான்; அதை அடையக் கவலைகொள்கிறவர்கள் அதன் சமாதானத்தைக் கைக்கொள்வார்கள்.

ஞானத்தைக் கைப்பற்றினவர்கள் வாழ்வை அடைவார்கள். அது புகுந்த இடமெல்லாம் கடவுள் ஆசீர்வதிப்பார். அதற்கு ஊழியம் செய்கிறவர்கள் புனிதருக்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆவார்கள். அதை நேசிப்பவர்களைக் கடவுள் நேசிக்கிறார். அதற்குச் செவிகொடுக்கிறவன் மனிதருக்கு நியாயம் தீர்க்க வல்லவன் ஆகிறான். அதைப் பார்க்கிறவன் நம்பிக்கையைக் கைவிடான்.

அதன்மீது நம்பிக்கை வைக்கிறவன் அதைத் தன் உரிமையாக அடைவான். அவன் சந்ததியாரும் அதில் நிலை கொள்வார்கள். ஏனென்றால், அது துன்ப நேரத்தில் அவனோடு உலவுகிறது; அவனை ஆதியில் தேர்ந்து கொள்கின்றது; பயத்தையும் அச்சத்தையும் சோதனையையும் அவன்மீது ஏவுகின்றது; அவன் எண்ணங்களால் அவனைச் சோதித்து, அவன் தன் ஆன்மாவில் நம்பிக்கை கொள்ளும்வரையிலும் தன் போதனையினால் உண்டாகும் துன்பத்தில் அவனை வருத்துகின்றது; அவனை உறுதிப் படுத்தி அவனிடம் நேர்வழி சென்று அவனை மகிழ்விக்கும்; அவன் இரகசியங்களை அவனுக்கு வெளியாக்கி, கலையையும் நீதியின் அறிவையும் அவனிடம் சேர்ப்பிக்கும்; அவன் தவறினானாயின், அவனை விட்டகன்று, பகைவன் கையில் அவனைக் காட்டிவிடும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 118 : 165. 168. 171. 172. 174. 175 (பல்லவி : 165b)*

பல்லவி: ஆண்டவரே, உமது சட்டத்தை நேசிப்பவர்களுக்கு மிகுதியான அமைதியுண்டு.

165 உமது சட்டத்தை நேசிப்பவர்களுக்கு மிகுதியான அமைதியுண்டு:
அவர்களை விழத்தாட்டக்கூடிய தடைகள் இல்லை. பல்லவி

168 உம் கட்டளைகளையும் கற்பனைகளையும் நான் அனுசரிக்கிறேன்: ஏனெனில்,
என் நடத்தை உமக்குத் தெரிந்திருக்கிறது. பல்லவி

171 உம் நியமங்களை எனக்கு நீர் கற்பித்தால், என் நா உமது புகழைப்
பாடும். பல்லவி

172 உம் வாக்கைக் குறித்து என் நா பாடுவதாக: ஏனெனில் உம் கற்பனைகள்
எல்லாம் நீதியானவை. பல்லவி

ஆண்டவரே, உம்மிடமிருந்து வரும் மீட்பை நான் விரும்புகிறேன்; உமது திருச்சட்டத்தில் நான் இன்பம் காண்கிறேன். பல்லவி

வாழ்வு பெற்று நான் உம்மைப் புகழ்வேனாக; உம் நீதி நெறிகள் எனக்குத் துணைபுரிவனவாக. பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்கள் வாழ்க்கை என்னவாகும்? எனவே ஆண்டவருக்குத் திருவுளமானால்.... என்று சொல்லுங்கள்.**

திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 4: 13-17

அன்புக்குரியவர்களே:

"இன்றோ நாளையோ அந்த நகருக்குச் செல்வோம், அங்கே ஓராண்டு தங்கி வியாபாரம் செய்வோம்; பணம் சம்பாதிப்போம்" என்றெல்லாம் பேசுகிறீர்களே, சற்றுக் கேளுங்கள். நாளைக்கு உங்கள் வாழ்க்கை என்ன ஆகும் என்பது உங்களுக்குத் தெரியாதே. நொடிப் பொழுதில் தோன்றி மறையும் புகை நீங்கள். ஆகவே அப்படிப் பேசாமல், "ஆண்டவர்க்குத் திருவுளமானால் நாம் உயிர் வாழ்வோம், இன்னின்ன செய்வோம்" என்று சொல்வதே சரி. நீங்கள் இப்போது வீம்பு பாராட்டித் தற்பெருமை கொள்ளுகிறீர்கள். இதுபோன்ற தற்புகழ்ச்சி நல்லதன்று. ஒருவனுக்கு நன்மை செய்யத் தெரிந்திருந்தும் அதைச் செய்யாவிட்டால் அவனுக்கு அது பாவம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 48: 1-2. 5-6. 7-9. 10 (பல்லவி: மத். 5:3)

பல்லவி: **எளியமனத்தோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.**

1 மக்கள் இனங்களே, நீங்களனைவரும் நான் சொல்வதற்குச் செவிசாயுங்கள்: புவியீது வாழ்வோரே, நீங்களனைவரும் இதற்குச் செவி கொடுங்கள்.

2 தாழ்ந்தோர், உயர்ந்தோர், பணக்காரர், ஏழைகள், நீங்கள் அனைவரும் இதற்குச் செவி கொடுங்கள். பல்லவி

5 துன்பமிகு நாளில் நான் அஞ்சவேண்டுவதேன்? என்னைத் துன்புறுத்து
வோர் செய்யும் அக்கிரமம் என்னைச் சூழும்போது, நான் ஏன் அஞ்ச
வேண்டும்?

6 தங்கள் செல்வத்தில் நம்பிக்கை வைப்போருக்கும், தம் செல்வப் பெருக்கை
நினைத்துப் பெருமைப்படுவோருக்கும், நான் அஞ்ச வேண்டுவதேன்?
பல்லவி

7 தன்னைத்தானே விடுவித்துக் கொள்பவன் ஒருவனுமில்லை: தன் மீட்புக்
குரிய விலையைக் கடவுளுக்குத்தர யாராலும் இயலாது.

8 அந்த மீட்புக்குரிய விலை மிக உயர்ந்தது.

9 சாவைக் காணாததும் என்றென்றும் நீடிப்பதுமான வாழ்வை வாங்கிக்
கொள்ள, எத்தொகையும் போதவே போதாது. பல்லவி

10 ஞானிகள் கூட இறப்பதைக் காணலாம்; அப்படியே ஞானமற்றவர்களும்
அறிவீனர்களாக இறந்தொழிவதைக் காணலாம்: தம் செல்வத்தை
அந்நியருக்கு விட்டுச் செல்வதைக் காணலாம். பல்லவி

அல்லேலூயா அரு 14 : 6

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நானே வழியும் உண்மையும் உயிரும்: என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நமக்கு எதிராக இல்லாதவன் நம் சார்பாக இருக்கிறான்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9: 38-40

அக்காலத்தில்:

அருளப்பர் யேசுவிடம், "போதகரே, நம்மைச் சாராத ஒருவன் உம் பெயரால் பேயோட்டுவதைக் கண்டு, அவனைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில், அவன் நம்மைச் சாராதவன்" என்றார். யேசு கூறியதாவது: அவனைத் தடுக்காதீர்கள்; என் பெயரால் புதுமை செய்தபின் உடனே என்னைப் பழித்துப் பேசக்கூடியவன் எவனுமில்லை. நமக்கு எதிராக இல்லாதவன் நம் சார்பாக இருக்கிறான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**மனந்திரும்பி ஆண்டவரிடம் சேரத் தாமதியாதே.**

*சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 5:1-10*

அநீதப் பொருட்கள் மீது உன் நம்பிக்கையை வைக்காதே. வாழ்க்கைக்குப் போதுமானது எனக்கு உண்டு என்று சொல்லாதே; ஏனென்றால் பழிவாங்கும் காலத்திலும் மரண நேரத்திலும் அவை உனக்கு உதவப் போவதில்லை. உன் வலிமையை நம்பி உன் இதயத்தின் தீய நாட்டங்களைப் பின் செல்லாதே. நான் எவ்வளவோ வலிமையுள்ளவன்; என் செயல்களைப் பற்றி என்னைக் கணக்குக் கேட்பவன் யார் என்று சொல்லாதே. ஏனென்றால், பழி வாங்கும் கடவுள் பழி வாங்குவார். பாவம் செய்தேன்; அதனால் எனக்கு வந்த தீங்கு என்ன என்று சொல்லாதே. ஏனென்றால், உன்னத கடவுள் பொறுத்திருந்து தண்டிப்பார். பொறுக்கப்பட்ட பாவத்தைப் பற்றி அச்சமற்று இராதே. பாவத்தின் மேல் பாவம் கட்டிக் கொள்ளாதே. ஆண்டவருடைய இரக்கம் பெரிது; என் கணக்கற்ற பாவங்கள் மீது அவர் இரங்குவார் என்று சொல்லாதே. ஏனென்றால், இரக்கமும் கோபமும் அவரிடம் விரைவில் சேர்ந்துவிடும். அப்பொழுது அவர் கோபம் பாவிகள் மீது விழும். மனந் திரும்பி ஆண்டவரிடம் சேரத் தாமதியாதே; நாளுக்கு நாள் தாமதம் செய்யாதே. ஏனென்றால், அவர் கோபம் திடீரென வரும்; பழி வாங்கும் காலத்திலோ அவர் உன்னைச் சிதறடிப்பார். அநீதச் செல்வங்களைப் பற்றி ஏக்கம் கொள்ளாதே. ஏனென்றால், மரண நேரத்திலும் பழிவாங்கும் நாளிலும் அவைகளால் உனக்கு யாதொரு பயனும் உண்டாகாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 1:1 2, 3, 4-6 (பல்லவி : சங். 39:4a)*

பல்லவி : தன் நம்பிக்கையெல்லாம் ஆண்டவர் மீது வைத்தவனே பேறு பெற்றவன்.

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன், பாவிகளின் வழியில்
செல்லாதவன், பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய், அதை அல்லும்
பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன். பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல்
தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான் : அவன்
செய்வதனைத்திலும் வெற்றி பெறுவான். பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒரு நாளுமிராது : காற்றோடு காற்றாய்ப்
பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார். தீயோரின் வழியோ
அழிவுக்கே செல்லும். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

1

### முதல் வாசகம்

**கொடுக்காத கூலி கூக்குரலிடுகிறது : அப்பேரொலி ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம். 5:1-6

பணக்காரரே, சற்றுக்கேளுங்கள். உங்களுக்கு வரப்போகும் அவல நிலையை நினைத்து அலறி அழுங்கள். உங்கள் செல்வம் மட்கிப்போயிற்று. உங்கள் ஆடைகள் பூச்சிகளினால் அரிக்கப்பட்டுவிட்டன. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்ச்சாட்சியாய் இருக்கும்; உங்கள் சதையைத் தின்றுவிடும். இறுதி நாளுக்காக நீங்கள் உங்களுக்கென நெருப்பைத்தான் குவித்து வைத்திருக்கிறீர்கள். உங்கள் வயலில் அறுவடை செய்தவர்களுக்குரிய கூலியைப் பிடித்துக் கொண்டீர்கள். கொடுக்காத கூலி கூக்குரலிடுகிறது

அறுவடையாளர் எழுப்பும் அப்பேரொலி வான்படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது. இவ்வுலகிலே இன்பப் பெரு வாழ்வில் மூழ்கியிருந்தீர்கள். உங்களுடைய அழிவு நாளுக்காக உங்கள் உள்ளங்களைக் கொழுக்க வைத்திருக்கிறீர்கள். நீதிமானுக்குத் தண்டனைத் தீர்ப்பளித்துக் கொலை செய்தீர்கள். அவனோ உங்களை எதிர்க்கவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 48:13ab-14ab, 14cd-15, 16-17, 18-19 (பல்லவி: மத். 5:3)

பல்லவி: எளிய மனத்தோர் பேறுபெற்றோர்: ஏனெனில், விண்ணரசு அவர்களதே.

13 மூடத்தனமான நம்பிக்கையுள்ளவர்கள் கதி இதுவே: தங்களுக்குக் கிடைத்த செல்வத்தில் மகிழ்ச்சி கொள்பவர்கள் கதி இதுவே.
14 கீழுலகில் அவர்கள் ஆடுகளைப்போல அடைபடுவர்: சாவே அவர்களுக்கு மேய்ப்பன். பல்லவி

நீதிமான்கள் அவர்கள்மேல் ஆட்சிசெலுத்துவர்: விரைவில் அவர்கள் தோற்றம் மறைந்தொழியும், கீழுலகே அவர்கள் இருப்பிடமாகும்.
15 ஆயினும், கடவுள் என்னைக் கீழுலகினின்று விடுவிப்பார்: என்னை அவர் ஏற்றுக்கொள்வார். பல்லவி

16 ஒருவன் பணக்காரனானால் அவனைக் கண்டு அஞ்ச வேண்டாம்: அவன் குடும்பச் செல்வம் பெருகினால் அஞ்ச வேண்டாம்.
17 அவன் சாகும்பொழுது தன்னோடு எடுத்துச் செல்வது ஒன்றுமில்லை: அவனுடைய சொத்து அவனோடு போவதில்லை. பல்லவி

18 "நிம்மதியான வாழ்வு உனக்குக் கிடைத்ததைப் பிறர் புகழ்வர்" என்று வாழ்நாளில் அவன் தன்னைப் பாராட்டிக் கொண்டாலும்,
19 தன் முன்னோர்கள் போன இடத்திற்கே அவனும் போவான்: அவர்கள் எந்நாளும் ஒளியைக் காணப்போவதில்லை. பல்லவி

அல்லேலூயா 1 தெச. 2:13

அல்லேலூயா. கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொள்ளுங்கள்; அதை மனித வார்த்தையாக அன்று, உள்ளபடியே கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இரண்டு கைகளோடு நரகத்திற்குப் போவதைவிடக் கை ஊனமுள்ளவனாய் வாழ்வில் நுழைவது உனக்கு நலம்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9 : 41-50

அக்காலத்தில்: யேசு தம் சீடருக்குக் கூறியதாவது:

“நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர் என்பதற்காக உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன், கைம்மாறு பெறாமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

என்னை விசுவசிக்கும் இச்சிறுவருள் ஒருவனுக்கு இடறலாய் இருப்பவன் எவனோ, அவனுடைய கழுத்தில் பெரிய எந்திரக்கல்லைக் கட்டி கடலில் தள்ளுவது அவனுக்கு நலம். உன் கை உனக்கு இடறலாய் இருந்தால் அதை வெட்டிவிடு. இரண்டு கைகளோடு நரகத்திற்கு அணையாத நெருப்பிற்குப் போவதைவிடக் கை ஊனமுள்ளவனாய் வாழ்வில் நுழைவது உனக்கு நலம். உன் கால் உனக்கு இடறலாயிருந்தால் அதை வெட்டிவிடு. இரண்டு கால்களோடு நரகத்தில் தள்ளப்படுவதைவிட முடவனாய் முடிவில்லா வாழ்வில் நுழைவது உனக்கு நலம். உன் கண் உனக்கு இடறலாயிருந்தால் அதை எறிந்து விடு. இரண்டு கண்களோடு நரகத்தில் தள்ளப்படுவதைவிட, ஒற்றைக் கண்ணனாய்க் கடவுளின் அரசிற்குள் நுழைவது உனக்கு நலம். அந்நரகத்திலோ, அவர்களை அரிக்கும் புழு இறவாது; நெருப்பும் அணையாது. ஏனெனில், ஒவ்வொருவனும் நெருப்பினால் உப்பிடப்படுவான். “உப்பு நல்லதுதான். ஆனால் உப்பு உவர்ப்பு அற்றுப் போனால் எதைக்கொண்டு அதற்குச் சாரம் ஏற்றுவீர்கள்? உங்களுக்குள் உப்பு இருக்கட்டும். ஒருவர் ஒருவரோடு சமாதானமாயிருங்கள்.”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***நம்பிக்கையுள்ள நண்பனுக்கு ஒப்பு ஒன்றுமில்லை.***

*சீராக் ஆகமத்திலிருந்து வாசகம்* 6 : 5 - 17

இன்சொல் நண்பரைப் பெருகச் செய்யும்; பகையாளிகளை சாந்தப் படுத்தும். இனிய சொல்லால் புண்ணியவானிடம் பல நலன்கள் உண்டாகும். பலர் உன் நண்பராய் இருக்கக்கடவார்கள். ஆனால் ஆயிரத்தில் ஒருவன் உன் ஆலோசனைக்காரனாய் இருக்கக் கடவான். உனக்கு நண்பன் வேண்டியிருக்கும்போது அவனை நன்கு ஆராய்ந்து தெரிந்துகொள். எளிதாய் அவன்மீது நம்பிக்கை வைக்காதே. ஏனென்றால், தன்னலத்தை நாடும் நண்பனும் உண்டு; அவன் உன் துன்ப காலத்தில் நிலைத்திருக்க மாட்டான். பகைவனாய்த் திரும்பும் நண்பனும் உண்டு; பகையும் சச்சரவும் நிந்தையும் காண்பிக்கும் நண்பனும் உண்டு. பந்தியில் அமர்ந்து சாப்பிடும் நண்பனும் உண்டு. ஆனால், அவன் ஆபத்துக் காலத்தில் நிலைப்பவனல்லன். உறுதியாக நிலைத்திருக்கும் நண்பனே உன்னை ஒத்தவனாய் இருப்பான்; உன் வீட்டில் இருப்பவர்களோடு விசுவாசமாய் நடந்துகொள்வான். அவன் உனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினாலும், உன் கண்முன் நின்று மறைந்தாலும் உன் நல்ல நட்பு மாறாமல் இருக்கக் கடவது. பகைவர்களினின்றும் விலக உன் நண்பனுக்கு உன்னைக் கையளி. நம்பிக்கையுள்ள நண்பன் பலமான காவலுக்குச் சமம்; அவனைக் கண்டடைந்தவன் செல்வத்தைக் கண்டவன் போலாவான். நம்பிக்கையுள்ள நண்பனுக்கு ஒப்பு ஒன்றும் இல்லை; அவனது நம்பிக்கைக்கு எந்த அளவு பொன்னும் வெள்ளியும் நிகராகா. நம்பிக்கையுள்ள நண்பன் வாழ்வைத் தரும் மருந்துபோல் இருக்கிறான். ஆண்டவருக்கு அஞ்சுகிறவர்கள் அவனைக் கண்டடைவார்கள். கடவுளுக்கு அஞ்சுகிறவன் நல்ல நண்பனை உரிமையாக்கிக் கொள்வான். ஏனென்றால், அவனைப்போலவே அவன் நண்பனும் இருப்பான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 118:12.16.18.27.34.35 (பல்லவி: 35a)

பல்லவி : உம் கற்பனைகள் காட்டும் நெறியில் ஆண்டவரே,
என்னை நடத்தும்.

12 ஆண்டவரே, நீர் வாழ்த்துக்குரியவர்: எனக்கு உம் நியமங்களைக் கற்பித்தருளும். பல்லவி

16 உம் நியமங்களை நினைத்து இன்புறுவேன்: உம் வார்த்தைகளை நான் மறவேன். பல்லவி

18 உமது திருச்சட்டத்தின் வியத்தகு செயல்களை நான் நன்குணரும் வண்ணம், என் கண்களைத் திறந்தருளும். பல்லவி

27 உம் கட்டளைகள் காட்டும் வழியில் என்னைச் செலுத்தும்: நான் உம் வியப்புக்குரிய செயல்களைத் தியானிப்பேன். பல்லவி

34 உம் திருச்சட்டத்தின்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும்: அதை நான் முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன். பல்லவி

35 உம் கற்பனைகள் காட்டும் நெறியில் என்னை நடத்தும்: அதுவே என் இன்பம். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**இதோ! நடுவர் வாசலிலே நிற்கிறார்.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 5:9-12

சகோதரர்களே, நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதபடி ஒருவருக்கெதிராய் ஒருவர் குறைகூறி முறையிடாதீர்கள். இதோ! நடுவர் வாசலிலே நிற்கிறார்.

சகோதரர்களே, ஆண்டவர் பெயரால் பேசின இறைவாக்கினரை நினைத்துக்கொள்ளுங்கள். துன்பத்தைத் தாங்குவதிலும், பொறுமையைக் கடைப்பிடிப்பதிலும் அவர்களை மாதிரிகளாகக் கொள்ளுங்கள். இத்தகைய மனவுறுதியுள்ளவர்களைப் பேறு பெற்றவர்கள் என்கிறோம். யோபின்

மன உறுதியைப்பற்றி அறிந்திருக்கிறீர்கள். இறுதியில் ஆண்டவர் அவருக்கு என்ன செய்தார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆண்டவர் மிகுந்த இரக்கமும் தயவுமுள்ளவர் என்று அறிந்திருக்கிறீர்கள்.

குறிப்பாக, என் சகோதரர்களே, ஆணையிடாதீர்கள், விண்ணுலகின் மீதோ மண்ணுலகின் மீதோ, வேறெதன் மீதோ, ஆணையிடவேண்டாம். நீங்கள், ஆம் என்றால் ஆம் என்றிருக்கட்டும்: இல்லை என்றால் இல்லை என்றிருக்கட்டும். இப்படிச் செய்தால் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்.

சங். 102:1-2 3-4 8-9 11-12 (பல்லவி: 8a)

பல்லவி: ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக; என் அகத்துள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக:
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: அவர் செய்த நன்மைகளை யெல்லாம் மறவாதே.
பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்; உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார். அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார்.
பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்: சினங்கொள்ளத் தாமதிப்பவர்: சாந்தமுடையவர்.
9 ஓயாமல் கடிந்துகொள்பவரல்லர்: எந்நேரமும் கோபம் காட்டுபவரல்லர்.
பல்லவி

11 ஏனெனில் வானகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்.
12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ, அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி விடுகிறார்.
பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை: உண்மையினால் எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10: 1-12

**அக்காலத்தில்:**

யேசு அங்கிருந்து புறப்பட்டு யூதேயா நாட்டுக்கும், யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும் மக்கள்கூட்டம் அவரிடம் வந்து கூட, வழக்கம்போல் அவர் அவர்களுக்கு மறுபடியும் போதித்தார். பரிசேயர் அவரை அணுகி, "கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டனர். அதற்கு அவர் மோயீசன் உங்களுக்கு என்ன கட்டளையிட்டார்!" என்று கேட்க அவர்கள், "முறிவுச் சீட்டு எழுதி அவளை விலக்கிவிடலாம் என்று மோயீசன் அனுமதி அளித்தார்" என்றனர்.

அதற்கு யேசு, "உங்களுடைய முரட்டுத் தனத்தின் பொருட்டே இக்கட்டளையை எழுதி வைத்தார். படைப்பின் தொடக்கத்திலிருந்தே கடவுள் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். ஆதலால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். இனி அவர்கள் இருவரல்லர், ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்றார்.

வீட்டிற்கு வந்து அவருடைய சீடர் மீண்டும் அதைப்பற்றி அவரைக் கேட்டார். அதற்கு அவர் அவர்களை நோக்கி, "தன் மனைவியை விலக்கி விட்டு வேறொருத்தியை மணப்பவன் எவனும் அவளுக்கு விரோதமாக விபசாரம் செய்கிறான். மனைவி தன் கணவனை விலக்கி வேறொருவனை மணந்துகொண்டால் அவளும் விபசாரம் செய்கிறாள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுள் தமது சாயலாக மனிதனைப் படைத்தார்.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 17 : 1 – 13

கடவுள் மண்ணால் மனிதனை உண்டாக்கினார்; தமது சாயலாக அவனைப் படைத்தார். திரும்பவும் அவனை மண்ணாகவே மாற்றுவார்; அவனுக்குத் தக்க வலிமையைக் கொடுத்தார். நாட்களின் தொகையையும் காலத்தையும் அவனுக்குக் குறித்தார்; நிலத்தில் உள்ளவைகளின் மீது அவனுக்கு அதிகாரம் கொடுத்தார். எல்லா உயிரினங்களும் அவனுக்கு அஞ்சும்படி செய்தார். அவனும் மிருகங்கள்மேலும் பறவைகள்மேலும் அதிகாரம் செலுத்தினான். அவர் அவனிடத்திலிருந்து அவனைப்போலவே அவனுக்கு ஒரு துணைவியை உண்டாக்கினார்; அறிவையும் நாவையும் கண்களையும் காதுகளையும், நினைப்பதற்கு மனத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார்; அறிவின் ஒளியால் அவர்களை நிரப்பினார். ஞான அறிவையும் அவர்களுக்குத் தந்தார்; அவர்கள் இதயத்தை ஞானத்தினால் நிரப்பினார்; நன்மையையும் தீமையையும் அவர்களுக்குக் காண்பித்தார். தம் செய்கைகளின் மாட்சியை அவர்களுக்குக் காண்பிக்க அவர்கள் இதயங்களின்மேல் தமது கண் வைத்தார். தம் புனித பெயரைக் கொண்டாடவும், அவர்கள் தம் செய்கைகளின் மாட்சியை வெளிப்படுத்துவதனால் தம் அரும் பெரும் செயல்களில் மகிமைப்படுத்தப்படவும் திருவுளம் கொண்டார்.

அவர் அவர்களுக்கு நன்னெறியை ஏற்படுத்தி வாழ்நாளின் ஒழுங்குக்கு அவர்களை உரிமையாளராக்கினார். அவர்களோடு நித்திய ஒப்பந்தம் செய்துகொண்டார்; தமது நீதியையும் தீர்மானங்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். அவருடைய பெருமையின் மாட்சியை அவர்கள் கண்கள் கண்டன. அவர்குரலின் மேன்மையை அவர்கள் செவிகள் கேட்டன. மேலும் அவர்: எல்லா அக்கிரமத்திலிருந்தும் விலகுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அயலாரைப்பற்றிய கட்டளைகளை ஏற்படுத்தினார்.

அவர்கள் நடத்தைகள் எப்போதும் அவர் முன்பாக இருக்கின்றன;
அவருடைய கண்களுக்கு அவை மறைந்தவை அல்ல.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102:13-14. 15-16. 17-18a (பல்லவி: 17 காண்க)

பல்லவி : **ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர்மீது அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்திருக்கும்.**

13 தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவதுபோல, ஆண்டவர் தமக்கு
அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார்.
14 ஏனெனில், அவர் நம்முடைய நிலைமையை நன்றாய் அறிந்திருக்கிறார். பல்லவி
நாம் தூசிக்குச் சமம் என்பது அவருக்குத் தெரியாமலில்லை.

15 மனிதனின் வாழ்நாள் புல்லைப்போன்றது: வயல்வெளிப் பூக்களைப்போல்
அவன் மலர்கிறான்.
16 காற்றடித்ததும் அது வதங்கி விடுகிறது: இருக்கிற இடம் தெரியாமல் பல்லவி
போய்விடுகிறது.

17 ஆண்டவருடைய இரக்கமோ அவருக்கு அஞ்சி நடப்போர்மீது
என்றென்றும் நிலை நிற்கும்: அவருடைய நீதியோ தலைமுறை
தலைமுறையாய் நிலைத்திருக்கும்.
18 அவருடைய உடன்படிக்கையைக் கடைப்பிடிப்போர்மேலும், அவர் நீதி பல்லவி
நிலைகொள்ளும்.

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**நீதிமான் முழு உள்ளத்தோடு செய்யும் மன்றாட்டு ஆற்றல் மிக்கது.**

அப்போஸ்தலரான புனித யாகப்பர் எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5:13-20

அன்புக்குரியவர்களே :

உங்களுள் யாரேனும் துன்புற்றால் செபிக்கட்டும். மகிழ்ச்சியாய் இருந்தால் இறைபுகழ் பாடட்டும். உங்களுள் ஒருவன் நோயுற்றிருந்தால்

அவன் திருச்சபையின் மூப்பர்களை அழைக்கட்டும்; அவர்கள் ஆண்டவர் பெயரால் அவன்மீது எண்ணெய் பூசி, அவனுக்காகச் செபிப்பர். விசுவாசமுள்ள செபம் நோயாளிகளைக் குணமாக்கும். ஆண்டவர் அவனை எழுப்பிவிடுவார். அவன், பாவம் செய்தவனாயிருந்தால், மன்னிப்புப் பெறுவான். ஆகவே, ஒருவருக்கொருவர் பாவ அறிக்கை செய்து கொள்ளுங்கள், ஒருவருக்காக ஒருவர் செபியுங்கள்; அப்போது குணமடைவீர்கள். நீதிமான் முழுஉள்ளத்தோடு செய்யும் மன்றாட்டு ஆற்றல்மிக்கது. எலியாஸ் நம்மைப்போல் எளிய நிலைக்குட்பட்ட மனிதர்தான். ஆயினும் மழைபெய்யக்கூடாது என்று உருக்கமாகச் செபித்தார். மூன்று ஆண்டு ஆறுமாதங்கள் மழையில்லாதுபோயிற்று. திரும்பவும் செபித்தார்; வானம் பொழிந்தது; நிலம் விளைந்தது.

என் சகோதரர்களே, உங்களுள் ஒருவன் உண்மையைவிட்டு விலகித் திரியும்போது, அவனை ஒருவன் மனந்திருப்பினால், தவறான வழியினின்று பாவியை மனந்திருப்புகிறவன் அவனது ஆன்மாவையே இறப்பினின்று மீட்பான் என்றும், திரளான பாவங்கள் அகலச் செய்வான் என்றும் அறிவீர்களாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 140:1-2. 3 . 8 (பல்லவி: 2a)

பல்லவி: ஆண்டவரே, என் மன்றாட்டு தூபம்போல் உம்மிடம் எழுக.

1 ஆண்டவரே, நான் உம்மை நோக்கிக் கூவுகிறேன். விரைவாய் எனக்குத் துணை செய்யும்.

2 உம்மை நோக்கி நான் கூப்பிடும்போது என் குரலுக்குச் செவி சாய்த்தருளும். தூபம்போல் என் மன்றாட்டு உம்மிடம் எழுக. மாலைப் பலிபோல் என் கைகள் உம்மை நோக்கி உயர்க.

பல்லவி

3 ஆண்டவரே, என் நாவுக்குக் காவல் வைத்தருளும். என் நாவாகிய வாயிலைக் காத்துக்கொள்ளும்.

8 ஏனெனில், ஆண்டவராகிய இறைவா, என் கண்கள் உம்மை நோக்கியே இருக்கின்றன. உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன். நான் அழிய விடாதேயும்.

பல்லவி

அல்லேலூயா மத். 11 : 25 காண்

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே போற்றி, ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கும் வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுளின் அரசைக் குழந்தைபோல் ஏற்றுக் கொள்ளாத எவனும் அதனுள் நுழையவே முடியாது.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *10:13-16*

அக்காலத்தில் :

குழந்தைகளை அவர் தொட வேண்டும் என்று அவரிடம் கொண்டு வந்தனர். சீடர் அதட்டினர்.

யேசு அதைக் கண்டு சினந்து, அவர்களை நோக்கி, "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், தடுக்க வேண்டாம். ஏனெனில், கடவுளின் அரசு இத்தகையோரதே. உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : கடவுளின் அரசைக் குழந்தை போல ஏற்றுக் கொள்ளாத எவனும் அதனுள் நுழையவே முடியாது" என்றார்.

பின்பு அவர் அவர்களை அரவணைத்து, கைகளை அவர்கள் மேல் வைத்து ஆசீர்வதித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# எட்டாம் வாரம்

## ஞாயிறு – முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**நாம் உன்னை மறக்கமாட்டோம்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *49 : 14-15*

சீயோன் மகள், “ஆண்டவர் என்னைக் கைவிட்டு விட்டார், ஆண்டவர் என்னை மறந்து போய் விட்டார்” என்றாள். “பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்துவிட்டாலும், நாம் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டோம்!”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 61 : 1-2. 5-6. 7-8ab (பல்லவி : 5a)*

பல்லவி : நெஞ்சே, கடவுளிடம் மட்டுமே சாந்திகொள்.

1 கடவுளிடம்தான் என் ஆன்மா சாந்தி கொள்கிறது; அவரிடமிருந்தே
எனக்கு மீட்பு வருகிறது.
2 அவர் ஒருவரே எனக்கு மீட்பும் அரணும் அடைக்கலமுமாயிருக்கிறார்;
எந்நாளும் நான் அசைவுறேன்.
பல்லவி

5 நெஞ்சே, கடவுளிடம் மட்டுமே சாந்திகொள்: ஏனெனில், நான் எதிர்
பார்ப்பது அவரிடமிருந்தே வருகிறது.
6 அவர் ஒருவரே எனக்கு மீட்பும் அரணும் அடைக்கலமுமாயிருக்கிறார்;
நான் அசைவுறேன்.
பல்லவி

7 கடவுளிடம் உள்ளது என் மீட்பும் மகிமையும். எனக்கு வலிமை தரும்
அரணும் என் அடைக்கலமும் இறைவனே.
8 நாட்டு மக்களே, எந்நாளும் அவர்மீது நம்பிக்கை வையுங்கள்; உங்கள்
உள்ளத்திலுள்ளதை அவருக்கு எடுத்துச் சொல்லுங்கள். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*ஆண்டவர் உள்ளங்களின் உட்கருத்துக்களை வெளியாக்குவார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 4:1-5

சகோதரர்களே:

எங்களைக் கிறிஸ்துவின் பணியாளர், கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர் என்றே எவரும் கருத வேண்டும். இனி, கண்காணிப்பாளர் நம்பிக்கைக்குரியவராய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாம் அன்றோ?

என்னைப் பொறுத்த மட்டில் எனக்கு நீங்களோ, மனிதரின் நீதிமன்றமோ தீர்ப்புக் கூறுவது பற்றி நான் கவலைப்படவில்லை. நானும் எனக்குத் தீர்ப்பிட்டுக் கொள்ள மாட்டேன். என் மனச்சாட்சி என்னை எதிலும் குற்றம்சாட்டவில்லை. ஆயினும், இதனால் நான் குற்றமற்றவன் என்று சொல்ல முடியாது. எனக்குத் தீர்ப்புக் கூறுகிறவர் ஆண்டவர்தாம்.

ஆகையால் குறித்த காலம் வருமுன் தீர்ப்பிடாதீர்கள், ஆண்டவர் வரும் வரை காத்திருங்கள். இருளில் மறைந்திருப்பதை அவர் வெட்ட வெளிச்சமாக்குவார். உள்ளங்களின் உட்கருத்துக்களை வெளியாக்குவார். அப்பொழுதுதான் ஒவ்வொருவனும் கடவுளிடமிருந்து புகழ்பெறுவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா எபி. 4:12

அல்லேலூயா. கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது; உள்ளத்தின் கருத்துக்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள்.***

✠ *மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்* 6:24-34

*அக்காலத்தில் :*

யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: "எவனும் இருதலைவர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில், ஒருவனை வெறுத்து மற்றவனுக்கு அன்பு செய்வான். அல்லது, ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனைப் புறக்கணிப்பான். கடவுளுக்கும் செல்வத்திற்கும் நீங்கள் ஊழியம் செய்ய முடியாது.

ஆதலால் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உயிர் வாழ எதை உண்பது என்றோ, உடலை மூட எதை உடுப்பது என்றோ கவலைப்படவேண்டாம். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவையல்லவா? வானத்துப் பறவைகளைப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் வானகத் தந்தை அவற்றிற்கும் உணவளிக்கிறார். நீங்கள் அவற்றிலும் மேலானவர்களன்றோ?

கவலைப்படுவதனால் உங்களில் எவன் தன் வளர்த்திக்கு ஒரு முழம் கூட்ட முடியும்? உங்கள் உடையைப்பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? வயல்வெளி மலர்கள் எப்படி வளர்கின்றன என்று கவனியுங்கள். அவை உழைப்பதுமில்லை நூற்பதுமில்லை. ஆயினும் சாலமோன்கூடத் தன் மாட்சியிலெல்லாம், இவற்றில் ஒன்றைப்போலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். குறைவான விசுவாசம் உள்ளவர்களே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வயல்வெளிப் புல்லைக் கடவுள் இவ்வாறு உடுத்துவாரானால் உங்களுக்கு எவ்வளவு தான் செய்யமாட்டார்!

ஆதலால், 'எதை உண்போம்?' 'எதைக் குடிப்போம்?' 'எதை உடுப்போம்?' என்று கவலைப்படவேண்டாம். ஏனெனில், புறவினத்தார் தாம் இவையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவையனைத்தும் தேவை என உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே, கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள்; இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். நாளைய தினம் தன்னைப்பற்றிக் கவலைகொள்ளும். அன்றன்றையதொல்லை அன்றன்றைக்குப் போதும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*முடிவில்லாக் காலத்திற்கும் உன்னை மணம் முடிப்போம்.*

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம் 2: 14b,15b, 19-20

ஆண்டவர் கூறுவதாவது :

இதோ, நாம் அவளை நயமாகக் கவர்ந்திழுத்துப் பாலை நிலத்துக்குக் கூட்டிப்போய் அவள் நெஞ்சோடு பேசுவோம். அப்பொழுது அவள் தன் இளமையின் நாட்களிலும், எகிப்து நாட்டினின்று வெளியேறிய காலத்திலும் செய்ததுபோல் அன்புக்கன்பு செய்வாள். அந்நாளில் முடிவிலாக் காலத்திற்கும் உன்னை மணமுடிப்போம்; நேர்மையிலும் நீதியிலும் நிலையான அன்பிலும், இரக்கத்திலும் உன்னை நாம் திருமணம் செய்து கொள்வோம். பிரமாணிக்கத்துடன் நாம் உன்னை மணந்து கொள்வோம், நாமே ஆண்டவர் என்பதை நீயும் அறிந்து கொள்வாய்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102:1-2. 3-4. 8-10. 12-13 (பல்லவி: 8a)

பல்லவி: ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக : என் அகத்திலுள்ளதெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக :

2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக : அவர் செய்த நன்மைகளை யெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை யெல்லாம் மன்னிக்கிறார் : உன் நோய்களை யெல்லாம் குணமாக்குகிறார்.

4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார் : அருளையும் இரக்கத்தையும் உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர் : சினங் கொள்ளத் தாமதிப்பவர் : சாந்தமுடையவர்.

10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை : நம் குற்றங்களுக்குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ, அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி விடுகிறார்.

13 தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவது போல, ஆண்டவர் தமக்கு அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*எங்கள் ஊழியத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 1b-6

சகோதரர்களே :

எங்களைப்பற்றி நாங்களே நற்சான்று கூறத்தொடங்குகிறோமா? அல்லது நற்சான்றுக் கடிதங்கள் சிலருக்குத் தேவையாய் இருப்பதுபோல் அத்தகைய கடிதங்களை உங்களிடம் காட்டவோ, உங்களிடமிருந்து பெறவோ வேண்டிய தேவை எங்களுக்கு உண்டா? நீங்களே எங்களுடைய நற்சான்றுக் கடிதம்; அது எங்கள் உள்ளங்களில் பொறிக்கப்பட்டுள்ளது; இதை எல்லா மனிதரும் பார்க்கவும் படிக்கவும் கூடும். எங்கள் ஊழியத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே என்பது வெளிப்படை. எழுதியதோ மையினாலன்று, உயிருள்ள கடவுளின் ஆவியினாலே; கற்பலகையில் அன்று, உங்கள் உள்ளங்களாகிய உயிர்ப் பலகையிலேயே எழுதப்பட்டது.

இத்தகைய நம்பிக்கையே நாங்கள் கிறிஸ்துவின் வழியாய்க் கடவுள் மேல் வைத்திருக்கிறோம். நாங்களே செய்துவிட்டதுபோல எதன் மேலும் உரிமை பாராட்டிக்கொள்ளும் தகுதி எங்களுக்கு இல்லை; எங்கள் தகுதியுடைமை கடவுளிடமிருந்தே வருகிறது. அவரே எங்களுக்குப் புதிய உடன்படிக்கையின் பணியாளராகும் தகுதியைத் தந்தார்; அந்த உடன்படிக்கையோ எழுதிய சட்டத்தைச் சார்ந்ததன்று; ஆவியான வரையே சார்ந்தது. ஏனெனில், எழுதிய சட்டம் விளைவிப்பது சாவு, ஆவியானவர் அளிப்பதோ வாழ்வு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா யாகப். 1:18

அல்லேலூயா. தம்முடைய படைப்புகளுள் நாம் முதற்கனிகளாகும் பொருட்டு, உண்மையை அறிவிக்கும் வாக்கினால் பரம தந்தை நம்மை ஈன்றெடுத்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*மணமகன் அவர்களோடு இருக்கிறான்.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:18-22

அக்காலத்தில்:

அருளப்பருடைய சீடரும் பரிசேயரும் நோன்பு இருந்தனர். அப்பொழுது சிலர் அவரிடம் வந்து, "அருளப்பருடைய சீடரும், பரிசேயருடைய சீடரும் நோன்பு இருக்க, உம்முடைய சீடர் ஏன் நோன்பு இருப்பதில்லை?" என்றனர்.

யேசு அவர்களை நோக்கி, "மணமகன் தங்களோடு இருக்குமளவும் அவன் தோழர்கள் நோன்பு இருக்கலாமா? மணமகனுடன் இருக்குந்தனையும் அவர்கள் நோன்பு இருக்க முடியாது. மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும். அப்பொழுது அவர்கள் நோன்பு இருப்பார்கள்.

பழைய ஆடையில் கோடித் துணியை எவனும் ஒட்டுப் போடுவதில்லை. அப்படிப் போட்டால் அந்த ஒட்டு பழையதைக் கிழிக்கும்; கிழிசலும் பெரிதாகும். புதுத் திராட்சை இரசத்தைப் பழஞ் சித்தைகளில் ஊற்றி வைப்பவர் எவரும் இல்லை. வைத்தால் இரசம் சித்தைகளைக் கிழிப்பதுமல்லாமல் இரசமும் சித்தைகளும் பாழாகும். ஆனால், புது இரசத்தைப் புதுச் சித்தைகளில் ஊற்றி வைக்க வேண்டும்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***பேசுவதற்கு முன்னரே மனிதனைப் புகழாதே.***

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 27: 5-8

சல்லடையில் சலிக்கும்போது உமி நின்றுபோவதுபோல, மனிதனுடைய எண்ணத்தில் சஞ்சலம் நின்றுபோகும். குயவனின் பாண்டங்களைச் சூளை பரிசோதிக்கின்றது. துன்ப சோதனைகள் நீதிமான்களைப் பரிசோதிக்கின்றன. மரத்தின் கண்காணிப்பை அதன் கனி காண்பிப்பதுபோல, மனிதன் வாயினின்று புறப்படும் வார்த்தைகள் அவன் மனத்திலுள்ள எண்ணத்தைக் காண்பிக்கும். பேசுவதற்கு முன்னரே மனிதனைப் புகழாதே. ஏனென்றால், வார்த்தைகளைக் கொண்டுதான் அவனை அறிய வேண்டும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 91: 1-2. 12-13. 14-15. (பல்லவி: 1aகாண்)

பல்லவி: **ஆண்டவரே, உம்மைப் புகழ்வது நல்லது.**

1 ஆண்டவரைப் புகழ்வது நல்லது: உன்னதமானவரே, உம் திருப்பெயருக்குப் புகழ் பாடுவது நல்லது.

2 காலையில் உம் இரக்கத்தையும், இரவெல்லாம் உம் பிரமாணிக்கத்தையும் எடுத்துரைப்பது நல்லது. பல்லவி

12 நீதிமான் பனையைப்போல் செழித்து வளர்வான். லீபானின் கேதுரு மரம் போல் ஓங்கிவளர்வான்.

13 ஆண்டவருடைய இல்லத்திலும், நம் கடவுளின் ஆலய முற்றங்களிலும் நடப்பட்ட அவர்கள் செழிப்புற்று விளங்குவர். பல்லவி

14 அவர்கள் முதிர்வயதிலும் பலனளிப்பர்: செழுமையும் கொழுமையும் கொண்டு விளங்குவர்.

15 என் அடைக்கலப் பாறையாகிய ஆண்டவர் எவ்வளவு நேர்மையுள்ளவர் என்றும், அவரிடத்தில் அநீதி இல்லையென்றும் பறைசாற்றுவர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**யேசுகிறிஸ்து வழியாக நமக்கு வெற்றியளித்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15 : 54 - 58

சகோதரர்களே:

அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையையும், சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையையும் அணிந்துகொள்ளும்பொழுது, எழுதியுள்ள இவ்வாக்கு நிறைவேறும். 'சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது.' சாவே, உன் வெற்றி எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே? பாவமே, சாவின் கொடுக்கு; பாவத்திற்கு வலிமை தருவது சட்டம். ஆனால் நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாய் நமக்கு இந்த வெற்றிதரும் கடவுளுக்கு நன்றி.

ஆகையால், என் அன்பார்ந்த சகோதரர்களே, உறுதியாய் இருங்கள், நிலை பெயராதீர்கள். உங்கள் உழைப்பு ஆண்டவருக்குள் வீணாவதில்லை என்பதை அறிந்து, ஆண்டவரின் வேலையைச் செய்வதில் சிறந்து விளங்குங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா பிலிப். 2 : 15 - 16

அல்லேலூயா. வாழ்வைப்பற்றிய வார்த்தைகளை ஏந்திநின்று,
உலகில் சுடர் விடும் விண்மீன்கள் எனத் துலங்குவீர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6 : 39-45

அக்காலத்தில்:

யேசு சீடர்களுக்கு ஓர் உவமை கூறினார்: குருடன் குருடனுக்கு வழி காட்ட முடியுமா? இருவரும் குழியில் விழமாட்டார்களா? சீடன் குருவுக்கு மேற்பட்டவனல்லன். தேர்ச்சி பெற்ற எவனும் தன் குருவைப் போன்றிருப்பான்.

உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக் கவனியாது, உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பைப் பார்ப்பதேன்? உன் கண்ணிலுள்ள விட்டத்தைப் பார்க்காத நீ, உன் சகோதரனை நோக்கி, 'தம்பி, உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுக்க விடு' என்று எப்படிச் சொல்லலாம்? வெளி வேடக்காரனே, முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்தெறி; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க நன்றாய்க் கண் தெரியும்.

"கெட்ட கனி தரும் நல்ல மரமில்லை: நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரத்தையும் அறிவது அதனதன் கனியாலே. ஏனெனில், முட்செடியில் அத்திப் பழம் பறிப்பாருமில்லை: நெருஞ்சியில் திராட்சைக்குலை கொய்வாருமில்லை. நல்லவன் தன் உள்ளமாகிய நற்கரு வூலத்தினின்று நல்லவற்றை எடுத்துக்கொடுக்கிறான். தீயவனோ தீயதி னின்று தீயவற்றை எடுத்துக் கொடுக்கிறான். ஏனெனில், உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவர்பால் திரும்பி, அவருடைய தீர்ப்புகளை அறிந்துகொள்**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 17:20-28

மனவருத்தப்படுகிறவர்களை மனந்திரும்பச் செய்வார்; பலவீனரைத் தேற்றி, நிலைநிறுத்துவார்; உண்மையை அவர்கள் உடைமையாக நியமிப்பார். ஆண்டவரிடமாய்த் திரும்பி உன் பாவங்களை விட்டுவிடு. ஆண்டவர்முன் மன்றாடி உன் குற்றங்களைக் குறைத்துவிடு. ஆண்டவர்பால் திரும்பி உன் அநீதியினின்று விலகு. அக்கிரமத்தை வெறுத்துப் பகைப்பாயாக.

கடவுளுடைய நீதிச் செயல்களையும் தீர்மானங்களையும் அறிந்து அவர் உனக்கு நியமித்த நிலையிலும், உன்னத கடவுளை நோக்கி, வேண்டுவதிலும் நிலைத்திரு. உயிரோடிருந்து கடவுளுக்கு வணக்கம் புரிகிறவர்

களோடு புனித உலகின் பேற்றைப் பெறச்செல். அக்கிரமிகளுடைய பொய்மையில் நில்லாதே. மரணத்திற்கு முன்பே கடவுளை வாழ்த்து. இறந்தவனுடைய வாழ்த்து ஒன்றுமில்லாமை போல் ஒழிந்து போகின்றது. உயிருள்ள போது கடவுளை வணங்குவாய். உயிரும் உடல் நலமும் இருக்கும் போதே அவரைப் புகழ்ந்தேத்து. அவருடைய இரக்கத்தைக் கொண்டாடுவாய்.

தம்மிடத்தில் திரும்புகிறவர்கள்மீது ஆண்டவருடைய இரக்கமும் அவருடைய மன்னிப்பும் எவ்வளவோ மாட்சிமையுள்ளனவாய் இருக்கின்றன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 31:1-2,5,6,7 (பல்லவி: 11a)*

பல்லவி : **ஆண்டவரில் மகிழ்ந்திடுவீர்; நீதிமான்களே களிகூருவீர்.**

1 எவன் பாவம் போக்கப்பட்டதோ அவன் பேறுபெற்றவன்: எவன் பாவம் மறைக்கப்பட்டதோ அவனும் பேறுபெற்றவன்.

2 ஆண்டவர் எவன்மேல் பாவத்தைச் சுமத்தவில்லையோ அவன் பேறுபெற்றவன்: யாருள்ளத்தில் வஞ்சகம் இல்லையோ அவனும் பேறுபெற்றவன். பல்லவி

5 என் பாவத்தை நான் உமக்கு வெளியிட்டேன்: என் குற்றத்தை நான் உம் திருமுன் மறைத்தேனில்லை. "ஆண்டவரிடம் என் பாவத்தை ஒப்புக்கொள்கிறேன்" என்றேன்: நீரும் என் குற்றத்தை மன்னித்தீர். பல்லவி

6 இதனால் நல்லவர் யாவரும் உம்மை நோக்கி வேண்டுவர்: நெருக்கடியான வேளையில் அவர்கள் உம்மை மன்றாடுவார்கள். வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும் அவர்களை நெருங்காது. பல்லவி

7 "ஆண்டவரே, நீர் எனக்கு அடைக்கலமாய் உள்ளீர், இன்னல்கள் அனைத்தினின்றும் என்னைக் காத்தருள்வீர்: உம் மீட்பால் வரும் மகிழ்வாலே என்னை அணைக்கின்றீர்." பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

*இயேசுவை நீங்கள் கண்டதில்லை எனினும், அவர்மீது அன்பும் விசுவாசமும் கொண்டு, சொல்லொண்ணா மகிழ்ச்சியோடு அக்களிப்புறுகிறீர்கள்.*

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1:3-9

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவர் போற்றி! இறந்தோரினின்று எழுந்த யேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால், இறைவன் தம் இரக்கப் பெருக்கத்தின்படியே நமக்கு வாழ்வுக்கு நம்பிக்கையைத் தரும் புதுப் பிறப்பை அளித்தார். இதனால் நமக்குக் கிடைக்கும் உரிமைப்பேறு அழியாதது, மாசற முடியாதது, வாடாதது. இறுதிக் காலத்தில் வெளிப்படப்போகும் மீட்பு வரும்வரை, விசுவாசத்தின் வழியாய்க் கடவுளின் வல்லமையால் காக்கப்பட்டிருக்கும் உங்களுக்கென்றே, அந்த உரிமைப்பேறு வானுலகில் வைக்கப்பட்டுள்ளது.

இப்போது சொற்பக்காலம் நீங்கள் பலவகைச் சோதனைகளால் துன்புற்றாலும், அப்பேற்றை நினைத்துக் களிகூருகிறீர்கள். இச்சோதனைகள் நிகழ்வது உங்கள் விசுவாசம் உண்மையானதென்று காட்டவே. அழியக் கூடிய பொன்னும் நெருப்பில் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் யேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் அவ்விசுவாசம் உங்களுக்குப் புகழும் மகிமையும் மாண்பும் தருவதாய் விளங்கும். நீங்கள் அவரைப் பார்த்ததில்லை எனினும், அவர்மீது அன்பு செலுத்துகிறீர்கள். இப்போதும் நீங்கள் அவரைப் பார்க்கிறதில்லை; அவர்மீது விசுவாசம் கொண்டு, சொல்லொண்ணா மகிழ்ச்சியும், மகிமை நிறை அக்களிப்பும் உற்று, உங்கள் விசுவாசத்தின் இறுதிப் பயனாக ஆன்ம மீட்பை அடைகிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 110:1-2.5-6.9,10c (பல்லவி: 5b)

பல்லவி: **ஆண்டவர் தாம் செய்த உடன்படிக்கையை என்றுமே மறவார்**
**அல்லேலூயா.**

1 **நெஞ்சார ஆண்டவரைப் போற்றிப் புகழ்வேன்: நீதிமான்களின் கூட்டத்திலும் சபையிலும் அவரைப் புகழ்வேன்.**
2 **ஆண்டவருடைய செயல்கள் மகத்தானவை: அவற்றில் இன்பம் கொள்வோர் அவற்றை உய்த்துணர்வர்.** பல்லவி

5 **தமக்கு அஞ்சி நடப்போர்க்கு உணவு ஊட்டினார். தாம் செய்த உடன்படிக்கையை என்றும் மறவார்.**
6 **புறவினத்தாரைத் தம் மக்களுக்கு உரிமையாக்கினார் : இவ்வாறு வல்லமை மிக்க தம் செயல்களைத் தம் மக்களுக்கு வெளிப்படுத்தினார்.** பல்லவி

9 **தம் மக்களுக்கு அவர் மீட்பை அளித்தார்; தம் உடன்படிக்கையை என்றென்றும் நிலைக்கச் செய்தார்.**
10 **அவரது புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.** பல்லவி

அல்லேலூயா 2 கொரி. 8:9

**அல்லேலூயா. யேசு கிறிஸ்து செல்வமிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி, உங்களுக்காக ஏழ்மையானார். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**உனக்கு உள்ளதெல்லாம் விற்று, என்னைப் பின்செல்.**

✠ **மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.** 10:17-27

**அக்காலத்தில்:**

**யேசு புறப்பட்டுப்போகும்போது, ஒருவன் ஓடிவந்து அவர்முன் முழந்தாளிட்டு, "நற்போதகரே, நான் முடிவில்லா வாழ்வு பெற என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான்.**

**யேசுவோ அவனை நோக்கி, "என்னை நல்லவர் என்பானேன்? கடவுள் ஒருவர் அன்றி நல்லவர் எவருமில்லை. கட்டளைகள் உனக்குத்**

# செவ்வாய்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**கட்டளைகளைக் கவனிப்பது பயனுள்ள பலியாகும்.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் *35:1-15*

கட்டளையைக் காப்பாற்றுகிறவன் காணிக்கையைப் பெருகச் செய்கிறான். கட்டளைகளைக் கவனிப்பதும், எல்லா அக்கிரமத்தினின்று அகல்வதும் பயனுள்ள பலியாகும். அநீதத்தை விட்டகன்று போவது பொறுத்தலை மன்றாடும் பலியாகவும், பாவங்களுக்கு மன்னிப்பாகவும் இருக்கின்றது.

மாவுக் காணிக்கை கொடுக்கிறவன் நன்றியறிந்த வணக்கம் செய்கின்றான். இரக்கம் காண்பிக்கிறவன் பலி ஒப்புக்கொடுக்கிறான். அக்கிரமத்தினின்று அகன்று போவது ஆண்டவருக்கு விருப்பமானது. அநீதத்தினின்று விலகுவது பாவ நிவாரணம்.

அப்பொழுது நீ ஆண்டவருடைய முன்னிலையில் வெறுங்கையனாய்க் காணப்பட மாட்டாய். இவைகளெல்லாம் கடவுள் கட்டளையைப்பற்றிச் செய்யப்படுகின்றன. நீதிமானுடைய காணிக்கை பலிபீடத்தைச் செழிப்பிக்கின்றது; உன்னத கடவுள் திருமுன் இனிய மணமாய் இருக்கின்றது. நீதிமானுடைய பலி விருப்பமாய் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆண்டவர் அவனை மறந்துவிட மாட்டார். நல்ல மனத்தோடு கடவுளுக்கு வணக்கம் செலுத்து. உன் கைகளின் முதற் காணிக்கைகளைக் குறைக்காதே. ஈகையிலெல்லாம் மகிழ்ந்த முகம் காண்பி; உன் பத்திலொரு பாகங்களை மகிழ்ச்சியாய்க் காணிக்கை கொடு.

உன்னத கடவுள் கொடுத்திருப்பதற்குத் தக்க வண்ணம் நீயும் அவருக்குக் கொடு. நல்ல முகத்தோடு உன் கைகளில் உள்ளதைக் கொடு. ஏனென்றால், ஆண்டவர் பதிலளிப்பவராய் இருக்கிறார்; ஏழு மடங்கு உனக்குத் திரும்பக் கொடுப்பார். தகாத காணிக்கைகளை ஒப்புக் கொடுக்காதே. ஏனென்றால், அவர் அவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார். அநீதப் பலியைக் கவனியாதே. ஏனென்றால், ஆண்டவர் நீதிபதியாய் இருக்கிறார்; அவரிடம் மனித ஒருதலைச் சார்பு இல்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 49:5-6. 7-8. 14, 23(பல்லவி : 23b)

பல்லவி: நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

5 'பலிகளினால் என்னுடன் உடன்படிக்கை செய்துகொண்ட என் புனிதர்களை ஒன்று கூட்டுங்கள்' என்கிறார்.
6 வானங்கள் அவரது நீதியை எடுத்தியம்பும்: ஏனெனில், கடவுளே நீதிபதியாய் வருகின்றார். பல்லவி

7 என் மக்களே, எனக்குச் செவி கொடுங்கள், இதோ நான் பேசுகிறேன்: இஸ்ராயேலே கேள், உனக்கெதிராய் நான் சான்று பகர்வேன்: 'நானே கடவுள், உன் கடவுள் நானே.'
8 நீ இடும் பலிகளைக்குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை: ஏனெனில் உன் தகனப் பலிகள் எந்நேரமும் என் கண்முன்னே இருக்கின்றன. பல்லவி

14 இறை புகழ்ச்சி எனும் பலியை ஆண்டவருக்குச் செலுத்து: உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து.
23 இறை புகழ்ச்சி என்னும் பலி இடுபவனே எனக்கு மதிப்புக் கொடுப்பவன்: நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**உங்களுக்கென்று இருந்தவற்றைப் பற்றி இறைவாக்குரைத்தனர். எனவே, மட்டுமிதத்தோடு, முழுநம்பிக்கை வையுங்கள்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 1:10-16

அன்புக்குரியவர்களே :

ஆன்ம மீட்பைக் குறித்துத்தான் இறைவாக்கினர் துருவித் துருவி ஆராய்ந்தனர்; உங்களுக்கென்றிருந்த அருளைப்பற்றி இறைவாக்குரைத்தனர். தங்களுக்குள்ளிருந்த கிறிஸ்துவின் ஆவி, கிறிஸ்து படவேண்டிய பாடுகளையும், அவற்றிற்குப்பின் வரவேண்டிய மகிமையையும் முன்னறிவித்தபோது, அவர் குறிப்பிட்ட காலமும் சூழ்நிலையும் எவையென்று

ஆராய்ந்தனர். இவற்றை முன்னறிவிக்கும் பணி தங்கள் பொருட்டன்று. உங்கள் பொருட்டே என்பது அவர்களுக்கு வெளிப்படுத்தப் பட்டது. அவர்கள் முன்னுரைத்தவையெல்லாம் விண்ணினின்று அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியால் நற்செய்தி அறிவிப்பவர்கள் வாயிலாய், இப்போது உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காண வானதூதர்களும் வேட்கைகொள்கின்றனர்.

ஆகவே, உங்கள் மனம் செயலாற்ற ஆயத்தமாயிருக்கட்டும். மட்டுமிதத்தோடு இருங்கள்; யேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் உங்களுக்கு அளிக்கப்பெறும் அருளின் மீது முழு நம்பிக்கை வையுங்கள். கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள் என நடங்கள். முன்பு நீங்கள் அறியாமையில் உழன்றபோது உங்கள் நடத்தை இச்சைகளுக்கு ஏற்றதாய் இருந்தது. அப்படி நடவாமல், உங்களை அழைத்த இறைவன் பரிசுத்தராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையில் முற்றும் பரிசுத்தராய் இருங்கள். ஏனெனில், 'யாம் பரிசுத்தர், ஆகவே நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்' என எழுதப்பட்டிருக்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 97 : 1. 2-3ab. 3c-4 (பல்லவி : 2a)*

பல்லவி : ஆண்டவர் தம் மீட்பை வெளிப்படுத்தினார்.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் : வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தம் மீட்பை வெளிப்படுத்தினார் : மக்கள் இனத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.

3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த் தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

4 மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன. வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்; அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ்பாடுங்கள். பல்லவி

## அல்லேலூயா

*மத். 11 : 25 காண்*

அல்லேலூயா : தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, போற்றி; ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

### நற்செய்தி வாசகம்

**இம்மையில் இன்னல்களோடு, இவற்றை நூறு மடங்காகவும் மறுமையில் முடிவிலா வாழ்வையும் பெறுவான்.**

மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10:28-31

அக்காலத்தில்:

இராயப்பர் யேசுவிடம், "இதோ! நாங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு உம்மைப் பின்சென்ருேமே" என்று சொன்ஞர்.

அதற்கு யேசு, "தன் வீட்டையோ, சகோதர, சகோதரியையோ, தாய் தந்தையையோ, மக்களையோ, நிலபுலன்களையோ, என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் துறந்துவிடும் எவனும், இம்மையில் இன்னல்களோடுகூட வீடு, சகோதர சகோதரி, தாய், பிள்ளை, நிலபுலன்களை நூறு மடங்காகவும், மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெருமல் போகான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். முதலானேர் பலர் கடையோராவர். கடையானேர் பலர் முதலாவர்" என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## புதன்

### முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று புறவினத்தார் அறிவார்களாக.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 36:1-2a. 5-6. 13-19

எல்லாவற்றிற்கும் ஆண்டவரான கடவுளே, எங்கள் மீது இரக்கமாயிரும்; எங்களை நோக்கிப் பார்த்து, உம் இரக்கங்களின் தன்மையை எங்களுக்குக் காண்பியும். உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று அறியவும், உம் மகத்துவங்களை வெளிப்படுத்தவும், புறவினத்தார் மீது உமது பயத்தை வரவிடும்.

உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று, ஆண்டவரே, நாங்கள் அறிந்திருப்பதுபோல, அவர்களும் உம்மை அறியக்கடவார்கள்.

நீர் புதுமைகளைப் புதுப்பியும்; புதிய அற்புதங்களைச் செய்யும். உம்மைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று அறியவும், உம் மகத்துவங்களை வெளிப்படுத்தவும் யாக்கோபின் கோத்திரத்தையெல்லாம் ஒன்றாய்ச் சேரும்; தொடக்கத்தில் இருந்தது போல் அவர்களை உரிமையாய் ஏற்றுக் கொள்வீர்.

உமது பெயரால் அழைக்கப்பட்ட மக்கள் மீதும், உம்முடைய மூத்த பிள்ளைக்கு ஒத்த இஸ்ராயேல் மீதும் நீர் இரக்கமாயிரும். நீர் புனிதப்படுத்திய நகரமும், இளைப்பாறும் நகரமுமாகிய யெருசலேமின் மீது இரக்கமாயிரும். உம் அற்புத வார்த்தைகளால் சீயோனையும், உமது மகிமையால் உம் மக்களையும் நிரப்பும்.

உமது படைப்பின் தொடக்க முதல் இருக்கிறவைகளுக்குச் சான்று கொடும். முன்னிருந்த இறைவாக்கினர்கள் உமது பெயரால் உரைத்த இறைவாக்குகளை மெய்யாக்கும். உம் இறைவாக்கினர்கள் உண்மையுள்ளவர்களென்று நிரூபிக்க உம் ஊழியர்களுக்குச் சம்பாவனை அளியும்.

உம் ஊழியர்களின் மன்றாட்டைக் கேட்டருளும். உம் மக்களின் மேல் ஆரோனின் ஆசிக்குத் தகுந்தாற்போல, எங்களை நீதியின் வழியில் நடத்தும். இம்மண்ணிலுள்ள யாவரும், நீரே எக்காலத்தையும் காணும் கடவுள் என்று அறியக்கடவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 78:8-9.11-13 (பல்லவி :சீராக். 36:1b)*

*பல்லவி :* ஆண்டவரே, உமது இரக்கத்தின் ஒளியை எங்களுக்குக் காட்டியருளும்.

8 முன்னோர்கள் செய்த குற்றங்களை எங்கள்மேல் சுமத்தாதேயும், உமது இரக்கம் எங்களுக்கு விரைவாகவே கிடைப்பதாக. ஏனெனில், நாங்கள் துயரத்துக்குள்ளானோம்.

பல்லவி

9 எங்கள் மீட்பரான இறைவா, உம் திருப்பெயரின் மகிமைக்காக எங்களுக்குத் துணை செய்யும், உம் பெயரின் பொருட்டு எங்கள் பாவங்களை மன்னித்து எங்களுக்கு விடுதலையளித்தருளும்.

பல்லவி

6 சிறைப்பட்டவர்களின் பெருமூச்சு உம் காதில் விழுவதாக, சாவுக்குக் குறிக்கப்பட்டவர்களை உமது கரத்தின் வல்லமைக்கேற்ப விடுவித்தருளும்.
பல்லவி

7 நாங்களோ உம் மக்கள், உமது மேய்ச்சலின் ஆடுகள், என்றென்றும் உம்மைப் போற்றிப் புகழ்வோம். தலைமுறை தலைமுறையாக உமது புகழை எடுத்துரைப்போம்.
பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

***மாசுமறுவற்ற செம்மறிபோன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தத்தினால் நீங்கள் விடுதலை பெற்றுள்ளீர்கள்.***

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *1:18-25*

அன்புக்குரியவர்களே :

உங்கள் முன்னோரிடமிருந்து வழிவழியாய் வந்த பயனற்ற நடத்தையினின்று உங்களை விடுதலை ஆக்குவதற்குக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது அழிவுறும் பொன்னும் வெள்ளியுமன்று; மாசுமறுவற்ற செம்மறிபோன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தமே. உலகம் தோன்றுமுன்னே முன்னறியப் பெற்ற இவர் உங்களுக்காக இந்த இறுதிக் காலத்தில் வெளிப்பட்டார். இறந்தோரினின்று அவரை உயிர்ப்பித்து மகிமைப்படுத்திய கடவுள்மீது நீங்கள் விசுவாசம்கொள்வது அவரால்தான். இதனால் உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் கடவுள்மீது ஊன்றியிருக்கின்றன.

உண்மைக்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆன்மாக்களைப் புனிதப்படுத்திய நீங்கள் சகோதரர்களிடம் கள்ளமற்ற அன்பு காட்ட முடியும். ஆகவே, ஒருவருக்கொருவர் ஆர்வமுடன் உளமார அன்பு செய்யுங்கள். நீங்கள் புதிதாய்ப் பிறந்துள்ளீர்கள். அப்பிறப்பு உங்களுக்கு அழிவுள்ள வித்தினாலன்று, அழிவில்லா வித்தினால் கிடைத்தது. உயிருள்ளதும், என்றும் நிலைத்து நிற்பதுமான கடவுளின் வார்த்தையால் பிறந்துள்ளீர்கள். ஏனெனில், "மனிதன் எவனும் புல்லைப் போன்றவன்; அவன் மகிமை அனைத்தும் புல்வெளிப் பூவை போன்றது. புல் உலர்ந்துபோம்; பூ உதிர்ந்துபோம்.

ஆனால், ஆண்டவரின் சொல் என்றென்றும் நிலைக்கும்." இச்சொல்லே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147 : 1-2, 3-4, 8-9 (பல்லவி : 1a)

பல்லவி : யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய் :
அல்லது அல்லேலூயா.

1 யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய் : சீயோனே, உன் இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பயன்படுத்தினார் : உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசியளித்தார். பல்லவி

3 அமைதி நிலவ உன் எல்லைகளைக் காத்தார் : கோதுமை வளத்தால் உனக்கு நிறைவு அளிக்கிறார்.
4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறார் : விரைந்து செல்கிறது அவருடைய வார்த்தை. பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார் : இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை : தம் கட்டளைகளை அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

அல்லேலூயா

மாற்கு 10:45

அல்லேலூயா. மனுமகன் பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இதோ, யெருசலேமுக்குப் போகிறோம். அங்கு மனுமகன் கையளிக்கப்படுவார்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10:32-45

அக்காலத்தில் :

சீடர்கள் பயணமாகி யெருசலேமை நோக்கிப் போகையில், யேசு அவர்களுக்கு முன் நடந்துகொண்டிருந்தார். அவர்களோ திகைப்புற்றிருந்தனர். பின்னே வந்தவர்களும் அச்சங்கொண்டிருந்தனர். மீண்டும் பன்னிருவரையும் அழைத்துத் தமக்கு நேரப்போவதை அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்.

"இதோ! யெருசலேமுக்குப் போகிறோம். மனுமகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞரிடமும் கையளிக்கப்படுவார். அவர்கள் அவர்களுக்குக் கொலைத் தீர்ப்பிட்டு, அவரைப் புறனவித்தாரிடம் கையளிப்பர். அவர்கள் அவரை எள்ளிநகையாடி, துப்பி, சாட்டையால் அடித்துக் கொல்லுவார்கள். அவரோ மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவார்" என்றார்.

செபதேயுவின் மக்கள் யாகப்பரும் அருளப்பரும் அவரிடம் வந்து, "போதகரே, நாங்கள் கேட்கப்போவதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும்" என்றனர். யேசுவோ அவர்களை நோக்கி, "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்றார். "நீர் உம் மாட்சிமையில் வீற்றிருக்கும் போது, எங்களுள் ஒருவர் உமது வலப்பக்கமும், மற்றவர் இடப்பக்கமுமாக அமர அருளும்" என்றார்கள்.

அதற்கு யேசு, "நீங்கள் கேட்பது என்னவென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்களும் குடிக்க முடியுமா? நான்பெறும் ஞானஸ்நானத்தை நீங்களும் பெறமுடியுமா?" என்றார். "முடியும்" என்றனர்.

அதற்கு யேசு, "நான் குடிக்கும் கிண்ணத்தில் குடிப்பீர்கள்; நான் பெறும் ஞானஸ்நானத்தையும் பெறுவீர்கள். ஆனால் எனது வலப் பக்கமோ இடப்பக்கமோ அமர அருள்வது என்னுடையதன்று; யாருக்கு ஏற்பாடு ஆகியிருக்கிறதோ அவர்களுக்கே அது கிடைக்கும்" என்றார்.

அதைக் கேட்ட பதின்மரும், யாகப்பர் மேலும் அருளப்பர் மேலும் சினங்கொள்ளத் தொடங்கினர். யேசு, அவர்களைத் தம்மிடம் அழைத்து, அவர்களுக்குக் கூறியது: "புறவினத்தாரிடையே தலைவர்கள் எனப்படுவோர் அவர்களை அடக்கி ஆளுகின்றனர். அவர்களுள் பெரியோர் அவர்கள்மீது அதிகாரம் காட்டுகின்றனர். இது உங்களுக்குத் தெரியும். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் எவன் பெரியவனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் எல்லாருக்கும் ஊழியனாய் இருக்கட்டும். ஏனெனில், மனுமகன் பணிவிடைபெறுவதற் கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஆண்டவருடைய படைப்பு அவர் மகிமையால் நிறைந்திருக்கிறது.**

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 42 : 15 26

ஆண்டவருடைய செயல்களை நினைத்துக்கொள். நான் பார்த்தவைகளை அறிவிப்பேன். ஆண்டவருடைய வார்த்தைப்படியே அவர் உண்டாக்கினவை செய்கின்றன. கதிரவன் அனைத்தையும் ஒளிர்வித்துப் பார்த்தது. ஆண்டவருடைய செயல் அவர் மகிமையால் நிறைந்திருக்கின்றது.

தமது மகிமையில் நிறுத்தி நிலைப்படுத்தின தம் எல்லா அதிசயங்களையும் புண்ணியவான்கள் அறிவிக்கும்படி எல்லாம் வல்ல ஆண்டவர் செய்யவில்லையா? அவர் பாதாளத்தையும் மனிதர் இதயத்தையும் பரிசோதித்தார்: அவர்களுடைய சூழ்ச்சிநிறை எண்ணங்களை அறிந்துகொண்டார்.

ஏனென்றால், ஆண்டவர் எல்லாக் கலைகளையும் அறிந்தவர்; யுகங்களின் அடையாளங்களைக் கண்டவர். அவர் கடந்தவைகளையும் வருங்காரியங்களையும் அறிவிக்கிறார்; மறைக்கப்பட்டவைகளின் குறிப்புகளைத் தெரிவிக்கிறார். எவ்வித எண்ணமும் அவருக்குத் தெரியாமல் போவதில்லை; எவ்வித வார்த்தையும் அவரிடத்தினின்று தன்னை மறைப்பதில்லை.

அவர் தமது ஞானத்தின் மகத்துவங்களை அலங்கரித்தார். அவரே யுகங்களுக்கு முன்னும் நித்திய காலத்திற்கும் இருக்கிறவர். யாதொன்றும் அவருக்குச் சேர்க்கப்படவில்லை: குறைக்கப்படுவதில்லை. மற்றவர்களுடைய அறிவுரையும் அவருக்கு வேண்டுவதில்லை.

அவருடைய செயல்கள் யாவும், எவ்வளவோ விரும்பத்தக்கவை. ஆனால், அவைகளைப்பற்றி நாம் சிந்திப்பதோ ஒரு துளி அளவேயாம். இவையாவும் வாழ்ந்திருக்கின்றன; என்றும் நிலைத்திருக்கின்றன. தேவையானபோது, எல்லாம் அவருக்குக் கீழ்ப்படிகின்றன.

எல்லாம் இரட்டையாகவும் ஒன்றுக்கொன்று எதிரானவையாகவும் இருக்கின்றன: அவர் யாதொன்றையும் குறைவாய்ச் செய்யவில்லை. ஒவ்வொன்றின் நன்மையையும் அவர் நிலைப்படுத்தினார். அவருடைய மகிமையைக் கண்டு சலித்துப்போகிறவன் யார்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 32: 2-3. 4-5. 6-7. 8-9 (பல்லவி: 6a)*

பல்லவி: **ஆண்டவரின் வார்த்தையால் வானங்கள் உண்டாயின.**

2 யாழிசை ஆண்டவரைப் புகழுங்கள்: பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள்.
3 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள், மகிழ்ச்சிக் குரலில் நன்றாகப் பாடுங்கள்.
பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது: அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார், அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது.
பல்லவி

6 ஆண்டவருடைய வார்த்தையால் வானங்கள் உண்டாயின: அவரது சொல்லால் வான் அணிகள் எல்லாம் உருவாயின.
7 குடத்தில் தண்ணீர் எடுப்பதுபோல் அவர் கடல் நீரை ஒன்று சேர்க்கிறார். பாத்திரங்களில் தண்ணீரை வைப்பதுபோல் ஆழ்கடலை அடைத்து வைத்திருக்கிறார்.
பல்லவி

8 பூவுலகெல்லாம் ஆண்டவருக்கு அஞ்சுவதாக: அதில் வாழ்வோரெல்லாரும் அவருக்கு அஞ்சுவார்களாக.
9 ஏனெனில், அவர் ஒரு வார்த்தை சொல்லவே, எல்லாம் உண்டாயின. அவர் கட்டளையிடவே அவை உருவாயின.
பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

*நீங்கள் அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம்;
உங்களை அழைத்தவரின் புகழ்ச்சிகளை அறிவிப்பீர்களாக.*

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5:2-5. 9-12

அன்புக்குரியவர்களே :

புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் போல் கலப்பற்ற ஞானப்பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாய் இருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் வளர்ச்சி பெற்று மீட்படைவீர்கள். ஆண்டவர் இனியவர் எனச் சுவைத்தீர்களன்றோ !

அவரையணுகி வாருங்கள். மனிதரால் விலக்கப்பட்டு, கடவுள் முன்னிலையில் விலைமதிப்பற்றதாய்த் தேர்ந்துகொள்ளப்பட்ட உயிருள்ள கல் அவரே. நீங்களும் உயிருள்ள கற்களென, ஞான இல்லமாக அமைக்கப் படுவீர்களாக. அதில் யேசுகிறிஸ்துவின் வழியாக இறைவனுக்குகந்த ஞானப்பலி நிறைவேற்றும் குருத்துவத் திருக்கூட்டமாக அமைவீர்கள்.

நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவ திருக் கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான மக்கள்; உங்களை இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி. ஒருகாலத்தில் நீங்கள் மக்கள் இனமாகவே இல்லை; இன்றோ நீங்கள் கடவுளுடைய மக்கள் இனம். ஒருகாலத்தில் நீங்கள் இரக்கம் பெருதவர்கள்; இன்றோ இரக்கம் பெற்றவர்கள்.

அன்புக்குரியவர்களே, நீங்கள் அந்நியரும், வெளிநாட்டினருமாய் இருப்பதால், ஆன்மாவிற்கு எதிராகப் போர் புரியும் ஊனியல்புக்குரிய இச்சைகளினின்று விலகுமாறு உங்களை வேண்டுகிறேன். புற மதத்தினர் உங்களைத் தீயவரென்று இப்போது தூற்றினாலும், உங்கள் நற்செயல்களைப் பார்த்து, கடவுள் வரும் நாளில், அவர்கள் அவரை மகிமைப்படுத்துமாறு, அவர்களிடையே நீங்கள் நன்னடத்தையில் சிறந்து விளங்குங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 99: 1-2. 3. 4. 5 (பல்லவி : 2b)

பல்லவி: ஆண்டவரின் திருமுன்னே அக்களிப்புடன் செல்லுங்கள்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் அக்களிப்போடு ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ் செய்யுங்கள். பெருமகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள்.
பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள்: அவரே நம்மை உண்டாக்கினவர். அவருக்கே நாம் சொந்தம்: அவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம்.
பல்லவி

4 புகழ்ப்பா இசைத்து அவருடைய வாயிலில் நுழையுங்கள் ; இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள் : அவரைப் போற்றிப் புகழுங்கள், அவருடைய பெயரை வாழ்த்துங்கள்.
பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர். அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது. அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும்.

பல்லவி

அல்லேலூயா அரு. 8 : 12

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நானே உலகின் ஒளி; என்னைப் பின்செல்பவன் இருளில் நடவான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ராபூனி, நான் பார்வை பெறவேண்டும்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 10:46-52

அக்காலத்தில்:

எரிக்கோவிலிருந்து யேசுவும், அவர் சீடரும், ஒரு பெருங் கூட்டமும் புறப்படும்போழுது திமேயுவின் மகன் பர்த்திமேயு என்ற கண் தெரியாத பிச்சைக்காரன் வழியோரத்தில் உட்கார்ந்திருந்தான். நாசரேத்தூர் யேசு தான் அவர் என்று கேள்வியுற்று, "தாவீதின் மகனே, யேசுவே, என்மீது இரக்கம் வையும்" என்று கூவத் தொடங்கினன். பேசாதிருக்கும்படி பலர் அவனை அதட்டினர்கள். அவனோ, "தாவீதின் மகனே, என்மீது இரக்கம் வையும்", என்று இன்னும் அதிகமாய்க் கூவினன்.

யேசு நின்று, "அவனை அழைத்து வாருங்கள்" என்றார். அவர்கள் குருடனை அழைத்து, "தைரியமாயிரு, எழுந்திரு, உன்னை அழைக்கிறார்" என்றார்கள். அவன் தன் போர்வையை எறிந்து விட்டு, துள்ளிக் குதித்து அவரிடம் வந்தான். யேசு, உனக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று அவனைக் கேட்க, குருடன், "ராபூனி, நான் பார்வை பெறவேண்டும்" என்றான்.

யேசு அவனை நோக்கி, "உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது, நீ போகலாம்" என்றார். அவன் உடனே பார்வை பெற்று, யேசுவுக்குப் பின்னே வழி நடந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*நம் முன்னோர்கள் இரக்கமுள்ள மனிதர், அவர்களது பெயர் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும்.*

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம். 44:1. 9-12

மகிமை பொருந்திய மனிதரையும், நம் முன்னோரையும் அவர்களுடைய சந்ததியில் வாழ்த்துவோம்.

நினைவு கூரப்படாத சிலர் உண்டு. அவர்கள் இராதவர்களைப்போல் ஒழிந்தார்கள். அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் பிறவாதவர்களைப் போலப் பிறந்தார்கள். ஆனால், இரக்கத்தின் செயல்கள் குன்றாதவர்களோ இரக்கமுள்ள மனிதராய் இருக்கிறார்கள். அவர்கள் சந்ததியில் நன்மை நிலைத்திருக்கின்றது.

அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகள் புனித உரிமையைக் கொண்டவர்கள். உடன் படிக்கைகளிலும் அவர்களுடைய சந்ததி நிலை கொண்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 149:1-2.3-4.5-6a,9b (பல்லவி : 4a)

பல்லவி : ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிறார்.

1ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்: புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக!
2இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து அகமகிழ்வார்களாக: சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக.
பல்லவி

3நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக: தம்புராவும் யாழும் கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.
4ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்பு கூர்கிறார்: தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிறார்.
பல்லவி

5மகிமை பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக: தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக!
6அவர்களது நாவில் இறைவனது பெரும் புகழ் ஒலிப்பதாக:
9இத்தகைய மகிமை அவர்தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.
பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**கடவுளுடைய பல்வகைப்பட்ட அருளின் சிரிய கண்காணிப்பாளர்களாக இருங்கள்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்

4:7-13

அன்புக்குரியவர்களே :

அனைத்தின் முடிவும் நெருங்கிவிட்டது. எனவே, நீங்கள் செபத்தில் ஈடுபடுவதற்குச் சம நிலையோடும், மட்டுமிதத்தோடும் வாழுங்கள். அனைத்திற்கும் மேலாக, ஒருவருக்கொருவர் எப்போதும் அன்பு காட்டுங்கள்; ஏனெனில், அன்பு திரளான பாவங்களை அகற்றிவிடும். முணுமுணுக்காமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.

உங்களுள் ஒவ்வொருவரும் தாம் பெற்ற வரத்திற்கு ஏற்றவாறு, கடவுளுடைய பலவகைப்பட்ட அருளின் சீரிய கண்காணிப்பாளர் எனக் கிடைத்த வரத்தைப் பிறர்க்குப் பணிபுரியப் பயன்படுத்துங்கள். பேசும் வரத்தைப் பெற்றவன், கடவுள் மொழியையே பேசுபவன்போல் பேசட்டும்; பணிசெய்யும் வரத்தைப் பெற்றவன், கடவுள் அளிக்கும் ஆற்றலை அடைந்தவன்போல் பணி செய்யட்டும்; இவ்வாறு யேசு கிறிஸ்துவின் வழியாகக் கடவுள் அனைத்திலும் மகிமை அடைவார். அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரித்தாகும். ஆமென்.

அன்புக்குரியவர்களே, துன்பத் தீயில் நீங்கள் புடமிடப்படுகையில், ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென மலைத்துப்போகாதீர்கள். எந்த அளவிற்குக் கிறிஸ்துவின் பாடுகளில் நீங்கள் பங்குகொள்ளுகிறீர்களோ, அந்த அளவிற்கு அகமகிழுங்கள்; அவரது மகிமை வெளிப்படும் போது, உவப்புடன் அக்களிப்புக்கொள்வீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 95:10.11-12,13 (பல்லவி: 13a)*

*பல்லவி :* பூவுலகை ஆட்சிசெய்ய ஆண்டவர் வருகின்றார்.

10 மாநிலத்தோரே, நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள்;
ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகை அவர் நிலைநிறுத்தியுள்ளார்.
அது அசைவுறாது: மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கின்றார். பல்லவி

11 வானங்கள் மகிழட்டும், பூவுலகம் களிகூரட்டும்: கடலும் அதில்
வாழ்வனவும் ஆரவாரம் செய்யட்டும்.
12 வயல் வெளியும் அதில் உள்ள அனைத்தும் ஆர்ப்பரிக்கட்டும். காட்டில்
உள்ள மரங்கள் அனைத்தும் அப்போது ஆண்டவர்முன் மகிழ்ச்சியுறும்.
பல்லவி

13 ஏனெனில், அவர் வருகின்றார்: பூவுலகை ஆட்சி செய்ய வருகின்றார்.
பூவுலகை அவர் நீதியுடன் ஆட்சி செய்வார்: மக்களை அவர்தம்
சொல்லுறுதியால் ஆள்வார். பல்லவி

*அல்லேலூயா* *அரு. 15:16*

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: "நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் உலகிற் சென்று பலன் தரும்படியாகவும் அந்தப் பலன் நிலைத்திருக்கும்படியாகவுமே." அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் வீடு எல்லா இனத்தாருக்கும் செபவீடு எனப்படும். கடவுள் மீது விசுவாசம் கொண்டிருங்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:11-26

யேசுவை மக்கள் கூட்டம் புகழ்ந்து ஆர்ப்பரித்தபின், அவர் யெருசலேமிற்கு வந்து கோவிலுக்குள் சென்றார். எல்லாம் சுற்றிப் பார்த்தார். ஏற்கெனவே பொழுது போய்விட்டதால் பன்னிருவருடன் பெத்தானியாவுக்குச் சென்றார்.

மறுநாள் பெத்தானியாவிலிருந்து போகும்பொழுது அவருக்குப் பசித்தது. இலைகள் நிறைந்த ஓர் அத்திமரத்தைத் தொலைவிலே கண்டு, அதில் ஏதாவது அகப்படுமோவென்று பார்க்கப் போனார். அதன் அருகே வந்தபோது இலைகள் தவிர வேறொன்றும் காணவில்லை. ஏனெனில், அது அத்திப்பழக் காலமன்று. அவர் அதை நோக்கி, "இனி ஒருவனும் ஒருகாலும் உன் பழத்தை உண்ணாதிருக்கட்டும்" என்றார். அவருடைய சீடர்கள் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் யெருசலேமிற்கு வந்தார்கள். அவர் கோயிலுக்குள் சென்று அங்கே விற்பவர்களையும் வாங்குபவர்களையும் துரத்தத் தொடங்கி, நாணயம் மாற்றுபவர்களின் பலகைகளையும், புறா விற்பவர்களின் இருக்கைகளையும் கவிழ்த்து விட்டார். யாதொரு பண்டத்தையும் கோயில் வழியாகக் கொண்டு போக எவனையும் விடவில்லை. "என் வீடு எல்லா இனத்தாருக்கும் செப வீடு எனப்படும் என்று எழுதியிருக்கிறதல்லவா? நீங்களோ அதைக் கள்வர் குகையாக்கிவிட்டீர்கள்" என்று அவர்களுக்குப் போதிக்கலானார்.

இதைக் கேட்டு தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் அவரை எப்படித் தொலைக்கலாம் என்று வழிதேடினார்கள். ஏனெனில் மக்கள் கூட்டம் அனைத்தும் அவருடைய போதனையைப் பற்றி மலைத்துப் போனதால் அவர்கள் அவருக்கு அஞ்சியிருந்தார்கள்.

மாலையானதும் பட்டணத்தை விட்டு வெளியேறினார். காலையில் அவர்கள் அவ்வழியோராய்ப் போகும்பொழுது அந்த அத்திமரம் வேரோடு பட்டுப்போயிருக்கக் கண்டார்கள். இராயப்பர் நிகழ்ந்ததை நினைவுகூர்ந்து, அவரை நோக்கி, "ராபி, நீர் சபித்த அத்திமரம் இதோ! பட்டுப் போயிற்று" என்றார்.

யேசு மறுமொழியாக, "கடவுள் மீது விசுவாசங் கொண்டிருங்கள். உறுதியாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் : இம் மலையைப் பார்த்து, 'நீ பெயர்ந்து கடலில் விழு' என்று சொல்லி, தான் சொல்லியதெல்லாம் நிறைவேறும் என்று தன்னுள்ளத்தில் தயங்காது விசுவசிப்பவன் எவனோ, அவனுக்கு அது கைகூடும். ஆதலால் நான் உங்களுக்குக் கூறுகிறேன் : நீங்கள் செபத்தில் எதெதைக் கேட்பீர்களோ, அதையெல்லாம் பெற்றுக் கொண்டோம் என்று விசுவசியுங்கள், உங்களுக்குக் கைகூடும்.

நீங்கள் செபம் செய்ய நிற்கும்போது யார்மேலாவது உங்களுக்கு மனத்தாங்கல் ஏதேனும் இருந்தால், மன்னித்து விடுங்கள். அவ்வாறே வானகத்திலிருக்கும் உங்கள் தந்தையும் உங்களுடைய குற்றங்களை மன்னித்து விடுவார்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

எனக்கு ஞானம் கொடுக்கிறவரை மகிமைப்படுத்துவேன்.

சீராக் ஆகமத்திலிருந்து வாசகம் 51 : 17-27

உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி கூறுவேன். ஆண்டவருடைய பெயரைத் துதிப்பேன்.

நான் இளைஞனாய் இருந்தபோதே, தவறிப்போவதற்கு முந்தியே என் செபத்தில் வெளிப்படையாய் ஞானத்தைத் தேடினேன்: கடவுள் ஆலயத்திற்கு முன்பாக அதற்காக மன்றாடினேன். இறுதிவரை அதைப் பின்பற்றுவேன், காலத்திற்குமுன் பழுக்கும் கொடிமுந்திரிப்பழத்தைப் போல் அது என்னிடம் வளமுற்றது. என் இதயம் அதன்பால் மகிழ்ச்சி கொண்டது.

என் பாதம் செவ்வழி நடந்தது. என் இளமை முதல் நான் அதை ஆராய்ந்தேன். தாழ்மையாய் என் செவியைச் செலுத்தினேன். அதை அடைந்தேன். என்னிடம் மிகுந்த ஞானத்தைக் கண்டேன். அதில் மிகவும் விருத்தி அடைந்தேன்.

எனக்கு ஞானம் கொடுக்கிறவரை மகிமைப்படுத்துவேன். அதைச் செய்வதற்குத் தீர்மானம் செய்து கொண்டேன். நன்மை செய்வதில் பெரும் முயற்சியெடுத்தேன். நான் கலக்கம் அடைய மாட்டேன்.

என் ஆன்மா அதில் போராடினது. அதைச் செய்வதில் நான் உறுதிப்படுத்தப்பட்டேன். என் கைகளை உயர்த்தினேன். அவற்றின் மூடத்தனத்தைப்பற்றிப் புலம்பினேன்.

ஞானத்தை நோக்கி, என் ஆன்மாவை நடத்தினேன். அறிவில் அதைக் கண்டேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 18 : 7, 8, 9, 10 (பல்லவி : 8a)*

பல்லவி : **ஆண்டவரின் கட்டளைகள் நேரியவை,**
**உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை.**

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது: ஆண்டவருடைய கட்டளை உறுதியானது; எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை: உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது. பல்லவி

9 ஆண்டவர் மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது: ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை. பல்லவி

10 பொன்னினும் மணியினும் பெரிதும் விரும்பத்தக்கவை: தேனினும் தேனடையினும் இனிமையானவை. பல்லவி

# இரண்டாம் ஆண்டு

## முதல் வாசகம்

**தவறி விழாமல் உங்களைக் காக்கவும், தம் மாட்சிமையின் முன்னிலையில் உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லவர் கடவுளே.**

அப்போஸ்தலரான புனித யூதா எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 17. 20b-25

அன்புக்குரியவர்களே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் முன்பே கூறியதை நினைவில் கொள்ளுங்கள்.

மிகப் பரிசுத்த விசுவாசத்தை அடிப்படையாய்க் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புங்கள்; பரிசுத்தஆவியின் ஆற்றலால் செபியுங்கள்.

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்து தம் இரக்கத்தில் முடிவில்லா வாழ்வை அளிக்கும் நாளை எதிர்பார்ப்பவர்களாய், கடவுளன்பில் நிலைத்திருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள். தயங்கிக் கிடக்கும் சிலர் உள்ளனர்; அவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள். வேறு சிலரைத் தீயினின்று வெளியேற்றிக் காப்பாற்றுங்கள். வேறு சிலருக்கு இரக்கங்காட்டும்போது எச்சரிக்கையாய் இருங்கள்: பாவ இச்சையால் மாசு படிந்த அவருடைய ஆடையை முதலாய் அருவருத்துத் தள்ளுங்கள்.

தவறி விழாமல் உங்களைக் காக்கவும், தம் மாட்சிமையின் முன்னிலையில் அக்களிப்போடு உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்ல, மீட்பராகிய ஒரே கடவுளுக்கு, நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் வழியாய் மகிமையும் மாட்சியும் ஆற்றலும் ஆட்சியும் அன்றும் இன்றும் என்றும் உரியன! ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 62:1, 2-3, 4-5 (பல்லவி: 1b)

பல்லவி : **ஆண்டவரே, என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது.**

1 இறைவா, என் இறைவா, ஆர்வமுடன் உம்மை நாடுகிறேன். நீரின்றி வறண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கியிருப்பதுபோல் என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது. என் உடலும் உம்மை ஆசிக்கிறது.
பல்லவி

2 உமது திருத்தலத்தில் உமது பிரசன்னத்தை நோக்குகிறேன். உமது வல்லமையையும் மாட்சிமையையும் நான் காண விழைகிறேன்.

3 வாழ்க்கையைவிட உமது அருள் எவ்வளவோ மேலானது. என் நாவும் உம்மைப் புகழ்ந்தேத்தும்.
பல்லவி

4 இங்ஙனம் என் வாழ்நாளில் உம்மை வாழ்த்துவேன். உமது பெயரைச் சொல்லி உம்மை நோக்கி என் கைகளை உயர்த்துவேன்.

5 செழுமையும் கொழுமையும் பெறுவது போல் என் உள்ளம் நிறைவுபெறும்; என்வாயில் மகிழ்ச்சி ஒலிக்கும்: என் நாவில் புகழ்ச்சி எழும்.
பல்லவி

அல்லேலூயா கொலோ. 3:16a, 17c

அல்லேலூயா. கிறிஸ்துவின் வார்த்தை நிறைவளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக: அவர் வழியாகத் தந்தையாகிய கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறீர்?***

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:27-33.

அக்காலத்தில் :

யேசுவும் அவர் சீடர்களும் மீண்டும் யெருசலேமுக்கு வந்தார்கள். அவர் கோயிலின் முற்றத்தில் உலாவிக்கொண்டிருக்கும்பொழுது, தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் மூப்பரும் அவரிடம் வந்து, "எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறீர்? அல்லது, இப்படிச் செய்ய உமக்கு அதிகாரம் கொடுத்தது யார்?" என்றார்கள்.

அதற்கு யேசு, "நானும் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லுங்கள். எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குக் கூறுவேன். அருளப்பருடைய ஞானஸ்நானம் வானகத்திலிருந்து வந்ததா? மனிதரிடமிருந்து வந்ததா? பதில் சொல்லுங்கள்" என்றார்.

அவர்கள் தங்களுக்குள் ஆலோசித்ததாவது: வானகத்திலிருந்து வந்தது என்போமாகில், பின் ஏன் நீங்கள் அவரை நம்பவில்லை என்று கேட்பார். இல்லை, மனிதரிடமிருந்து வந்தது என்று சொல்லலாமா?— பொதுமக்களுக்கு அஞ்சினார்கள். ஏனெனில், எல்லாரும் அருளப்பரை உண்மையான இறைவாக்கினர் என்று கருதி வந்தனர்.—எனவே, அவர்கள் யேசுவுக்கு மறுமொழியாக, "எங்களுக்குத் தெரியாது" என்றார்கள்.

அதற்கு யேசு, "நானும் எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறேன் என உங்களுக்குச் சொல்லேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஒன்பதாம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*இதோ, நான் ஆசியையும் சாபத்தையும் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன்.*

உப ஆகமத்திலிருந்து வாசகம் 11 : 18. 26-28

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது :

“நீங்கள் இவ்வாக்கியங்களை உங்கள் இதயங்களிலும் ஆன்மாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கைகளிலும் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவிலும் தொங்கவிடுங்கள்.

இதோ இன்று நான் ஆசியையும் சாபத்தையும் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன். இன்று உங்களுக்குக் கற்பிக்கின்ற உங்கள் கடவுளாகிய ஆண்டவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவீர்களாயின் (உங்களுக்கு) ஆசி (வரும்). உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், இப்போது நான் உங்களுக்குக் காண்பிக்கிற வழியை விட்டு விலகி, நீங்கள் முன் அறிந்திராத பிற தேவர்களைப் பின்பற்றுவீர்களாயின் (உங்களுக்குச்), சாபம் (வரும்).”

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 30 : 1-2a. 2b-3. 16,24. (பல்லவி : 2b)

பல்லவி : **ஆண்டவரே, எனக்கு அடைக்கலந்தரும் பாறையாயிரும்.**

1 **ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன். நான் ஒருநாளும் ஏமாற்றம் அடைய விடாதேயும்: உம்முடைய நீதியின்படி என்னை விடுவித்தருளும்.**
2 **என் பக்கம் செவிசாய்த்தருளும், என்னை விடுவிக்க விரைந்தருளும்.**
பல்லவி

**எனக்கு அடைக்கலந்தரும் பாறையாயிரும்.**
3 **ஏனெனில், நீர் எனக்குக் கற்கோட்டையாகவும் அரணாகவும் இருக்கின்றீர்: உம் பெயரின் பொருட்டு என்னை வழி நடத்தியருள்வீர், நல்வழி காட்டுவீர்.**
பல்லவி

16 **கனிந்த உம் திருமுகத்தை எனக்குக் காட்டியருளும்: உம் அருளன்பைக் காட்டி என்னை ஈடேற்றும்.**
24 **ஆண்டவர்மீது நம்பிக்கையுள்ளவர்களே, மனத்திடன் கொள்ளுங்கள்: உங்கள் நெஞ்சம் உறுதி கொள்ளட்டும்.** பல்லவி

## இரண்டாம் வாசகம்

**திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களின்றியே மனிதன் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்படுகிறான்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3:21-25a. 28

சகோதரர்களே :

**இப்பொழுதோ கடவுளின் திருவருட் செயல்முறை திருச்சட்டத்தின் சார்பின்றியே வெளியாக்கப்பட்டுள்ளது: அச்செயல் முறையையே திருச்சட்டமும் இறைவாக்கினரும் முன்னறிவித்தனர். இத்திருவருட் செயல்முறைப்படி யேசுகிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் வழியாய்க் கடவுள் செயலாற்றுகின்றார். விசுவசிக்கும் அனைவருக்காகவுமே இப்படிச் செயலாற்றுகின்றார். இதில் இன வேறுபாடே இல்லை. ஏனெனில், எல்லாருமே பாவம் செய்தனர்; எல்லாருமே கடவுளது மாட்சிமையின் சாயல் இழந்து போயினர். ஆனால் இறைவன் அருளால் அவர்கள்**

இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகிறார்கள்; கிறிஸ்து யேசு நிறைவேற்றிய விடுதலைச் செயலின் வாயிலாய் அங்ஙனம் ஆக்கப்படுகிறார்கள். விசுவாசத்தின் வழியாய்ச் செயல்படும் பரிகாரச் சாதனமாக அவரைக் கடவுள் இரத்தப்பலியாக்கினார்.

ஏனெனில், திருச்சட்டம் விதித்திருக்கும் செயல்களின்றியே மனிதன் விசுவாசத்தினாலே இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப்படுகிறான் என்பது என் கருத்து.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* அரு. 15:5

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நான் திராட்சைக்கொடி, நீங்கள் அதன் கிளைகள்; ஒருவன் என்னுள்ளும், நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி தருவான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கற்பாறையின் மீதும் மணல் மீதும் கட்டப்பட்ட வீடுகள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:21-27

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

“என்னை நோக்கி, ‘ஆண்டவரே, ஆண்டவரே’ என்று சொல்பவனெல்லாம் விண்ணரசு சேரமாட்டான். வானகத்திலுள்ள என் தந்தையின் விருப்பப்படி நடப்பவனே விண்ணரசு சேருவான். அந்நாளில் பலர் என்னை நோக்கி, ‘ஆண்டவரே, ஆண்டவரே, உம் பெயரால் நாங்கள் தீர்க்கதரிசனம் கூறவில்லையா? உம் பெயரால் பேய்களை ஓட்டவில்லையா? உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா?’ என்பர். அதற்கு, ‘உங்களை நான் அறிந்ததேயில்லை. நெறிகெட்டவர்களே, என்னை விட்டு அகன்று போங்கள்’ என்று அவர்களுக்கு நான் வெளிப்படையாகச் சொல்வேன்.

ஆகவே, நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடப்பவன் எவனும் கற்பாறையின் மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின்மேல் மோதியது. ஆனால், அது விழவில்லை. ஏனென்றால், கற்பாறையின்மேல் ஊன்றியிருந்தது.

நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவற்றின்படி நடக்காதவன் எவனும் மணல்மீது தன் வீட்டைக் கட்டிய மூடனுக்கு ஒப்பாவான். மழை பெய்தது, வெள்ளம் வந்தது, புயலடித்து அவ்வீட்டின்மேல் மோதியது. அது விழுந்தது. பெரிது அதன் அழிவு!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*நீயும் எகிப்தில் அடிமையாய் இருந்தாயென்று நினைத்துக்கொள்.*

உப ஆகமத்திலிருந்து வாசகம் 5:12-15

ஆண்டவர் கூறுவதாவது:

"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்டபடியே ஓய்வுநாளைப் புனிதமுள்ளதாக நினைக்கக்கடவாய். ஆறுநாளும் உழைத்து உன் வேலையெல்லாம் செய்வாய். ஏழாம் நாளோ சாபத்; அதாவது: உன் கடவுளாகிய ஆண்டவருடைய ஓய்வுநாளாம்.

அதிலே நீயேனும், உன் புதல்வன் புதல்வியேனும், வேலைக்காரன் வேலைக்காரியேனும், மாடு கழுதை வேறெந்த மிருகமேனும், உன் வாயிலின் உள்ளேயிருக்கிற அந்நியனேனும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். நீ இளைப்பாறுவதுபோல் உன் வேலைக்காரனும் வேலைக்காரியும் இளைப்பாறவேண்டும்.

நீயும் எகிப்திலே அடிமையாய் இருந்தாயென்றும், அங்கிருந்து உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னை வலுத்த கையாலும் ஓங்கிய புயத்தாலும் புறப்படச் செய்தாரென்றும் நினைத்துக்கொள். அதுபற்றியே ஓய்வு நாளை அனுசரிக்கும்படி உனக்குக் கட்டளையிட்டார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 80:2-3.4-5ab.5c-7a.9-10ab. (பல்லவி: 1a)

பல்லவி : நம் துணைவராம் இறைவனுக்கு அக்களிப்போடு புகழ் பாடுங்கள்.

2 வீணை மீட்டுங்கள், முரசு கொட்டுங்கள், இன்னிசை எழுப்பும் யாழும் சுரமண்டலமும் இசைத்துப் பாடுங்கள்.
3 அமாவாசை, முழுமதி, மற்றும் விழா நாட்களில் எக்காளம் ஊதுங்கள்.
பல்லவி

4 இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுத்த ஆணை அது, யாக்கோபின் இறைவன் தந்த கட்டளை அது.
5 எகிப்தைவிட்டு வெளியேறியபோது இச்சட்டத்தை அவர் சூசையின் இனத்தவர்க்குத் தந்தார்.
பல்லவி

அறியாத மொழியொன்று என் செவியில் விழுந்தது.
6 சுமையின்கீழ் அவர்கள் நொறுங்காத வண்ணம் அவர்களை விடுவித்தேன்.
மண்சுமந்து உழைத்துவந்த அவர்களை விடுவித்தேன்.
7 துன்பவேளையில் நீ என்னைக் கூவி அழைத்தாய், நான் உனக்கு விடுதலை அளித்தேன்.
பல்லவி

9 வேறு தேவன் எவரும் உனக்கு இருத்தலாகாது; அந்நிய தேவன் யாரையும் நீ வணங்கலாகாது.
10 எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேற்றிய கடவுளாகிய ஆண்டவர் நாமே.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**யேசுவின் வாழ்வு உங்கள் உடலில் வெளிப்படுவதாக.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது திருமுகத்திலிருந்து வாசகம் 4:6-11

சகோதரர்களே :

'இருளினின்று ஒளி சுடர்க' என்றுசொன்ன கடவுள்தாமே கிறிஸ்துவின் முகத்தில் வீசிய இறைமாட்சிமையின் அறிவொளி மிளிரும்படி, எங்கள் உள்ளங்களிலும் ஒளி சுடரச் செய்தார்.

ஆயினும், இணையற்ற இவ்வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை, கடவுளுக்கே உரியது என்று விளங்கும்படி, இந்தச் செல்வத்தைக் கொண்டிருக்கும் நாங்கள் வெறும் மட்கலங்களாகவே இருக்கிறோம். எல்லா வகையிலும் வேதனையுறுகிறோம்; ஆனால், ஒடுங்கிப்போவதில்லை. மனக் கலக்கம் அடைகிறோம்; ஆனால், மனம் உடைவதில்லை. துன்புறுத்தப் படுகிறோம்; ஆயினும் இறைவனால் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப் படுகிறோம்; ஆனால் அழிவுறுவதில்லை. இயேசுவின் வாழ்வு எங்கள் உடலில் வெளிப்படும்படி, போகுமிடமெல்லாம் யேசுவின் மரணப்பாடுகளைத் தாங்கிச் செல்கிறோம்.

ஏனெனில், யேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் ஊனுடலில் வெளிப்படும்படி, உயிரோடிருக்கும்போதே யேசுவுக்காக நாங்கள் எந்நேரமும் சாவுக்குக் கையளிக்கப்படுகிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 17 : 17b.a

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை :
உண்மையினால் எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மனுமகன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2 : 23-3 :6

ஓய்வுநாளில் வயல் வழியே யேசு செல்லும்பொழுது சீடர் நடந்து கொண்டே கதிர்களைக் கொய்யத் தொடங்கினர். பரிசேயரோ அவரை நோக்கி, "பாரும், ஓய்வுநாளில் செய்யத் தகாததை ஏன் செய்கிறார்கள்?" என்றனர்.

அதற்கு அவர், "தாவீதும் அவரோடு இருந்தவர்களும் உணவின்றிப் பசியாயிருந்தபொழுது அவர் என்ன செய்தார் என்று நீங்கள் ஒருபோதும் வாசித்ததில்லையோ? அபியத்தார் தலைமைக் குருவாய் இருந்தபொழுது அவர் கடவுளின் இல்லத்தில் நுழைந்து, குருக்களைத் தவிர வேறு எவரும் உண்ணக்கூடாத காணிக்கை அப்பங்களைத் தாம் உண்டது மட்டுமன்றி, கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தாரே" என்றார்.

அவர் அவர்களை நோக்கி, "ஓய்வுநாள் இருப்பது மனிதனுக்காக; மனிதன் இருப்பது ஓய்வுநாளுக்காக அன்று. ஆதலால் மனுமகன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர்" என்றார்.

மீண்டும் செபக்கூடத்திற்கு வந்தார். அங்கே சூம்பிய கையன் ஒருவனிருந்தான். அவர்மேல் குற்றஞ்சாட்டும்படி, ஓய்வு நாளில் குணமாக்குவாராவென்று பார்த்துக் கொண்டே இருந்தனர்.

அவரோ சூம்பிய கையனை நோக்கி, "எழுந்து நடுவிலே நில்" என்றார். பின் அவர்களிடம், "ஓய்வு நாளில் எது செய்வது முறை? நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா?" என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தனர். அவர் சினத்தோடு அவர்களைச் சுற்றிப்பார்த்து, அவர்களது மனக்கடினத்தைக் கண்டு வருந்தி, அவனை நோக்கி, "கையை நீட்டு" என்றார். நீட்டினான்; கை குணமாயிற்று.

பரிசேயரோ, வெளியே போய், ஏரோதியரோடு சேர்ந்து அவரை எப்படித் தொலைக்கலாமென்று அவருக்கெதிராக உடனே ஆலோசனை செய்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 2:23-28

பக்கம் 445 ✠ வரை.

---

# ஞாயிறு - 3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இங்கு வரும் புறவினத்தானுக்கும் செவிசாய்த்தருளும்.**

அரசர் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 8:41-43

அந்நாட்களில்: சாலமோன் ஆலயத்தில் மன்றாடிச் சொன்னதாவது:

"உம் மக்களாகிய இஸ்ராயேல் அல்லாத புறவினத்தார் உமது புகழ்பெற்ற பெயரையும் உமது கைவன்மையையும் உமது தோள் வலிமையையும் கேள்வியுற்று, உம் பெயரின் பொருட்டுத் தொலை நாட்டிலிருந்து வந்து, எங்கும் புகழ் பெற்ற இச்செய்தியால் அவர்கள் இங்கு

வந்து விண்ணப்பம் செய்யும்போது, உமது உறைவிடமாகிய விண்ணிலிருந்து நீர் அவர்களது குரலைக் கேட்டு, அவர்கள் கேட்பவற்றை எல்லாம் அருள்வீராக. இதனால் பூமியின் மக்கள் எல்லாரும் உம்மக்கள் இஸ்ராயேலைப் போல் உமக்கு அஞ்சி நான் கட்டின இவ்வாலயத்தில் உமது பெயர் விளங்குகிறதென்று அறிந்து கொள்வார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 116:1. 2 (பல்லவி: மாற்கு 16:15)

பல்லவி: உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள்.
அல்லது அல்லேலூயா.

1 மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்:
மண்ணுலக மக்களே, நீங்கள் அனைவரும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.
பல்லவி

2 ஏனெனில், நம்மீது அவரது அருளன்பு நிலையாய் உள்ளது: நம்மீது அவர்
கொண்டுள்ள பிரமாணிக்கம் என்றும் நிலைத்திருக்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*இன்னும் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கப் பார்த்தால்,*
*நான் கிறிஸ்துவின் ஊழியனாய் இருக்கவே முடியாது.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர்
கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தின் தொடக்கம். 1:1-2. 6-10

கலாத்திய நாட்டிலுள்ள சபைகளுக்கு,

மனிதர்களாலோ, மனிதன் வழியாகவோ ஏற்படுத்தப்படாமல், யேசு கிறிஸ்துவினாலும், அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்த பரம தந்தையாகிய கடவுளாலும் அப்போஸ்தலனாய் ஏற்படுத்தப்பட்ட சின்னப்பனாகிய யானும், என்னுடனிருக்கும் எல்லாச் சகோதரரும் எழுதுவது:

கிறிஸ்துவின் அருளால் உங்களை அழைத்தவரை விட்டு விட்டு, இவ்வளவு குறுகிய காலத்தில், வேறொரு நற்செய்தியைப் பின்பற்றப் போய்விட்டீர்களே! எனக்கே வியப்பாய் இருக்கிறது. வேறொரு

நற்செய்தி இருக்கிறது என்பதன்று; உங்கள் மனத்தைக் குழப்பிக் கிறிஸ்துவின் நற்செய்தியைத் திரிக்க விரும்பும் சிலர் உள்ளதுதான் தொல்லை.

ஆனால் நாங்கள் அறிவித்த நற்செய்தியின்றும் வேறான ஒன்றை, நாங்களோ, விண்ணிலிருந்து வந்த ஒரு தூதரோ, யார் வந்து அறிவித்தாலும், அவன் சபிக்கப்படுக! ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம், இப்பொழுது திரும்பவும் சொல்லுகிறேன்: நீங்கள் பெற்றுக் கொண்ட நற்செய்தியினின்று வேறானதொன்றை எவனாவது உங்களுக்கு அறிவித்தால், அவன் சபிக்கப்படுக!

இப்படி நான் சொல்லும்போது, நான் தேடுவது மனிதருடைய நல்லெண்ணமா, கடவுளுடைய நல்லெண்ணமா? நான் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கவா பார்க்கிறேன்? இன்னும் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கப்பார்த்தால், நான் கிறிஸ்துவின் ஊழியனாய் இருக்கமுடியாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அரு. 3:16

அல்லேலூயா. தம் மகனில் விசுவாசங் கொள்ளும் எவனும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு, அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இஸ்ராயேல் மக்களிடையிலும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:1-10

அக்காலத்தில்:

மக்களுக்குத் தம் உரையெல்லாம் கூறி முடித்தபின் யேசு கப்பர்நகூம் ஊருக்கு வந்தார். நூற்றுவர் தலைவன் ஒருவனுடைய வேலையாள் நோயுற்றுச் சாகக்கிடந்தான். தலைவன் அவன் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தான். யேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு, யூதரின் மூப்பரை அவரிடம் அனுப்பித் தன் வேலையாளைக் காப்பாற்ற வருமாறு வேண்டினான்.

அவர்களும் யேசுவிடம் வந்து, வருந்திக் கேட்டதாவது: "உம்மிடம் இவ்வரம் பெறுவதற்கு அவர் தகுதியுள்ளவரே. ஏனெனில் நம் மக்கள் மீது அவருக்கு அன்பு மிகுதி. நமக்கென செபக்கூடம் கட்டியிருக்கிறார்."

யேசு அவர்களுடன் போனார். வீட்டிற்குச் சற்றுத் தொலைவிலிருந்த பொழுதே அவரிடம் நூற்றுவர் தலைவன் நண்பர்களை அனுப்பி, "ஆண்டவரே, இவ்வளவு தொந்தரை வேண்டாம்; நீர் என் இல்லத்துள் வர நான் தகுதியற்றவன். அதனால்தான் நானும் உம்மிடம் வரத் தகுதியற்றவன் எனக் கருதினேன். ஒரு வார்த்தை சொல்லும், என் வேலையாள் குணமாகட்டும். ஏனெனில், நான் அதிகாரத்திற்கு உட்பட்டவனாயினும் எனக்கு அடியிலும் படை வீரர்கள் உள்ளனர். ஒருவனை நோக்கி, 'போ' என்றால் போகிறான்; வேறொருவனை நோக்கி 'வா' என்றால் வருகிறான்' என் வேலையாளைப் பார்த்து 'இதைச் செய்' என்றால் செய்கிறான்." என்றான்.

அதைக் கேட்ட யேசு அவனை வியந்து தம்மைப் பின்தொடரும் மக்கட் கூட்டத்தைத் திரும்பிப் பார்த்து, "இஸ்ராயேல் மக்களிடையிலும் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை என உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்து வேலையாள் உடல் நலத்தோடு இருப்பதைக் கண்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**தொபியாசு அரசனுக்கு அஞ்சுவதைவிட கடவுளுக்கு அதிகம் அஞ்சினார்.**

தொபியாசு ஆகமத்தின் தொடக்கம் *1 : 1a. 2, 2 : 1-9*

நெப்தலி குலத்தினரான தொபியாசு என்பவர் நெப்தலி நகரில் வாழ்ந்துவந்தார். அசீரிய அரசன் சல்மனசாரின் காலத்தில், அவர் சிறைப் படுத்தப்பட்டு அடிமையானார். அவ்வடிமைத்தனத்தின்போதும், அவர் உண்மை வழியைவிட்டு விலகாது நின்றார்.

ஆண்டவரின் திருவிழாவின்போது தொபியாசின் வீட்டில் பெரிய விருந்து ஒன்று தயாரிக்கப்பட்டது. அப்பொழுது அவர் தம் மகனை நோக்கி, "நம் குலத்தாரில் தெய்வபயமுள்ள சிலரை விருந்துக்கு அழைத்து வா" என்று சொன்னார். அவனும் அவ்வாறே சென்றான்,

உணவருந்த அமர்ந்தபோது, "இஸ்ரயேலர் ஒருவன் குத்துண்டு கொலை செய்யப் பட்டுச் சந்தைவெளியில் கிடக்கிறான்" என்று தன் மகன் சொன்னதும், அவர் அவ்விருந்தையே பருகாமல் எழுந்து சென்று பிணத்தை எடுத்து ஓர் அறையில் வைத்தார். சூரியன் மறைந்தபின் அதனை அடக்கம் செய்யலாம் என்று எண்ணி, துயரத்தோடு தெரிந்தவன் வீட்டுக்குத் திரும்பி வந்தார். அவர் அழுது உணவருந்தினார். ஆமோஸ் இறைவாக்கினர் பெத்தேலைப் பற்றிக் கூறிய "உங்கள் திருநாட்கள் துக்கமும் புலம்பலும் நிறைந்த நாட்களாக மாறும்" என்ற இறைவாக்கினை நினைத்து அவர் கண்ணீர் வடித்தார். அவர் இரவுக்கு அஞ்சாது வந்தார்.

சூரியன் மறைந்தபின், அவர் போய்ப் பிணத்தைப் புதைத்தார். எனவே, அவருடைய அயலார் அவரை ஏளனம் செய்து, "இதே வேலையைச் செய்ததற்காக முன்பு ஒருமுறை சாவுக்குத் தீர்ப்பிடப் பட்டும், எப்படியோ தப்பித்துக்கொண்டார். மறுபடியும், இவர் இறந்தோரை அடக்கம் செய்யத் துணிந்தது ஏன்?" என்றனர். ஆனால் அரசனுக்கு அஞ்சுவதைவிடக் கடவுளுக்கே அதிகம் அஞ்சி வந்தார். ஆதலால், கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களைத் தூக்கி வந்து தம் வீட்டிலேயே ஒளித்து வைத்து, நள்ளிரவில் அவற்றை அடக்கம் செய்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 112:1-2,3-4,5-6 (பல்லவி: 1a)

பல்லவி: ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன்.

அல்லது: அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன்; அவருடைய கட்டளை களை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.

2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமைமிக்கதாய் இருக்கும்; நேர்மை யுள்ளோரின் சந்ததி ஆசி பெறும். பல்லவி

3 செழுமையும் செல்வமும் அவன் இல்லத்தில் உள்ளன; அவனுடைய நீதி என்றென்றும் நிலைக்கும்.

4 இருளில் ஒளியென அவன் நேர்மையுள்ளவரிடையே விளங்குவான்; அருளும், இரக்கமும், நீதியும் உள்ளவனாய் இருப்பான். பல்லவி

5மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதன் நல்லதைச் செய்கிறான்: தன்
அலுவல்களை நீதியுடன் செய்பவனும் அப்படியே.
6எந்நாளும் அவன் அசைவுறான்: என்றென்றும் அவன் மக்கள் நினைவில்
வாழ்வான்.

பல்லவி

## இரண்டாம் ஆண்டு

### முதல் வாசகம்

**மதிப்புமிக்க கொடைகளை நமக்கு வழங்கினார்: அவற்றினால் நீங்கள் இறை இயல்பில் பங்குபெறக்கூடும்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய இரண்டாம் திருமுகத்தின் தொடக்கம்

*1 : 1–7*

நம் கடவுளும் மீட்பருமாகிய யேசு கிறிஸ்துவின் நீதிக்கேற்ப, நாங்கள் பெற்ற விசுவாசத்தைப் போலவே மதிப்புள்ள விசுவாசத்தைப் பெற்றுள்ளவர்களுக்கு, யேசு கிறிஸ்துவின் ஊழியனும் அப்போஸ்தலனுமான சீமோன் இராயப்பன் எழுதுவது: கடவுளையும் நம் ஆண்டவராகிய யேசுவையும் அறியச் செய்யும் அறிவினால், உங்களுக்கு அருளும் சமாதானமும் பெருகுக!

தமக்கேயுரிய மாட்சிமையாலும், ஆற்றலாலும் நம்மை அழைத்த இறைவனை அறியச் செய்யும் அறிவின் வாயிலாக, இறைப்பற்றுடன் கூடிய வாழ்வை வளர்க்கும் அனைத்தையும் அவரது தெய்வீக வல்லமை நமக்கு வழங்கியுள்ளது. இறைவன் வாக்களித்த கொடைகள் அந்த மாட்சிமையாலும் ஆற்றலாலும் நமக்கு வழங்கப்பட்டன. மதிப்பும் மாண்பும் மிக்க இக்கொடைகளால் நீங்கள், இச்சையின் விளைவாக இவ்வுலகிலுள்ள அழிவுக்குத் தப்பி, இறை இயல்பில் பங்குபெறக்கூடும்.

இதை மனத்தில் வைத்து, முழு ஊக்கங்காட்டி, உங்களிடம் விசுவாசத்தோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மனவுறுதியும், மனவுறுதியோடு இறைப்பற்றும், இறைப்பற்றோடு சகோதர நேசமும், சகோதர நேசத்தோடு அன்பும் இணைந்திருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 90:1-2. 14-15. 15-16 (பல்லவி: 2ஆ காண்க)

பல்லவி: என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்.

1 கடவுளின் அடைக்கலத்தில் இருப்பவரே, எல்லாம் வல்லவரின் நிழலில் வாழ்பவரே,
2 நீ ஆண்டவரை நோக்கி: "நீரே என் புகலிடம், நீரே என் அரண், என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்" என்று சொல். பல்லவி

14 அவன் என்னையே சார்ந்திருப்பதால், அவனை விடுவிப்பேன். என் பெயரை அறிந்ததால், அவனைக் காப்பாற்றுவேன்.
15 என்னை நோக்கிக் கூப்பிடுவான்; அவன் வேண்டுதலைக் கேட்பேன், துன்ப வேளையில் அவனோடு இருப்பேன். பல்லவி

அவனைத் தப்புவித்து பெருமைப்படுத்துவேன்.
16 நீடிய வாழ்வினால் அவனுக்கு மனநிறைவு தருவேன். என் மீட்பினை அவனுக்குக் காட்டுவேன். பல்லவி

அல்லேலூயா திருவெளி. 1:5ab

அல்லேலூயா, யேசு கிறிஸ்துவே, நம்பிக்கைக்குரிய சாட்சி நீரே, இறந்தோரிடமிருந்து எழுந்தவருள் தலைமையானவரும் நீரே: நீர் எங்களுக்கு அன்பு செய்து, உமது இரத்தத்தினால் எங்களைப் பாவங்களினின்று விடுவித்தீர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

அன்புமிக்க மகனை அவர்கள் பிடித்துக் கொன்று, திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே எறிந்துவிட்டார்கள்.

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12 : 1 - 12

அக்காலத்தில்:

தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர், மூப்பர் ஆகியோரிடம் யேசு உவமைகளில் பேசத் தொடங்கினார்:

ஒருவன் ஒரு திராட்சைத் தோட்டம் வைத்து, சுற்றிலும் வேலி அடைத்து, அதில் ஆலைக்குழி தோண்டி, கோபுரமும் கட்டி, அதைக் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விட்டு வெளியூர் சென்றான்.

பருவகாலத்தில் அக்குடியானவர்களிடமிருந்து தோட்டத்துப் பலனில் தன் பங்கை வாங்கி வரும்படி வேலையாள் ஒருவனை அனுப்பினான். அவர்களோ அவனைப் பிடித்து அடித்து வெறுங்கையாய் அனுப்பி விட்டார்கள். மீண்டும் மற்றோர் வேலையாளை அவர்களிடம் அனுப்பினான். அவனையும் அவர்கள் தலையில் அடித்து இழிவுபடுத்தினார்கள். வேறொருவனையும் அனுப்பினான். அவனைக் கொன்றனர். வேறு பலரை அனுப்பினான். அவர்களுள் சிலரை அடித்து, சிலரைக் கொன்று போட்டனர்.

அனுப்புவதற்கு இன்னும் ஒருவனே இருந்தான். அவன் அவனுடைய அன்பார்ந்த மகன். 'என் மகனை மதிப்பார்கள்' என்று, இறுதியாக அவனை அவர்களிடம் அனுப்பினான். குடியானவர்களோ, 'இவனே சொத்துக்குரியவன்; வாருங்கள் இவனைக் கொன்றுபோடுவோம், சொத்து நம்முடையதாகும்' என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டு, அவனைப் பிடித்துக் கொன்று, திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே எறிந்து விட்டார்கள்.

இனி, தோட்டத்துக்கு உரியவன் என்ன செய்வான்? வந்து, அக்குடியானவர்களை ஒழித்துத் தோட்டத்தை வேறு ஆட்களுக்கு விடுவான்.

'கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக் கல்லாய் அமைந்தது. ஆண்டவர் செயல் இது, நம் கண்ணுக்கு வியப்பே' என்று மறைநூலில் நீங்கள் படித்ததில்லையா?" என்றார்.

தங்களைக் குறித்தே இவ்வுவமையைக் கூறினார் என்று அவர்கள் உணர்ந்து, அவரைப் பிடிக்க வழி தேடினார்கள். ஆனால் பொதுமக்களுக்கு அஞ்சி அவரை விட்டுப் போனார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**பார்வை இழந்தது பற்றிக் கடவுளுக்கு எதிராய் அவர் முறையிடவில்லை.**

தொபியாசு ஆகமத்திலிருந்து வாசகம் 2:10-23

தொபியாசு அன்று அடக்கம் செய்த களைப்பில், தம் வீட்டிற்குத் திரும்பி வந்து, அங்கே சுவரோரமாய்க் கீழே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது தூக்கணங்குருவிக் கூண்டிலிருந்து சூடான எச்சம் தூங்கிக் கொண்டிருந்த அவர் கண்களில் விழ, அவை குருடாயின.

புனித யோபின் பொறுமையைப் போல், இவரது பொறுமையும் இவருடைய சந்ததியாருக்கு எடுத்துக்காட்டாய் இருக்கும் பொருட்டே, இச்சோதனை இவருக்கு நேரிடக் கடவுள் திருவுளமானார். இவர் இளமை முதல் எப்பொழுதும் கடவுளுக்கு அஞ்சி, அவர் கட்டளைகளைக் கடைப் பிடித்து வந்திருந்தபடியால், பார்வையிழந்த இந்த அவல நிலையிலும், அது பற்றிக் கடவுளுக்கு எதிராய் அவர் முறையிடவில்லை. அதற்கு மாறாக, அவர் தெய்வ பயத்தில் நிலையாய் நின்று தம் வாழ்நாள் முழுவதும் கடவுளுக்கு நன்றி கூறிவந்தார்.

ஏனெனில், புனித யோபை மன்னர்கள் பழித்தது போல், இவருடைய உற்றார் உறவினரும் இவரது நடத்தையை இகழ்ந்து பேசினார்கள். "நீர் எதை நம்பித் தர்மம் கொடுத்தும், இறந்தோரை அடக்கம் செய்தும் வந்தீரோ, அந்த உமது நம்பிக்கை வீண் போயிற்று அன்றோ?" என்று அவரைப் பழித்து வந்தார்கள். தொபியாசோ அவர்களைக் கடிந்து "நீங்கள் இவ்வாறு பேசாதீர்கள். ஏனெனில், நாம் புனிதர்களின் மக்கள். கடவுள்மேல் என்றுமே தளரா விசுவாசம் கொண்டிருப்போருக்கு அவர் அளிக்கவிருக்கும் மறுவுலக வாழ்வை எதிர்பார்த்திருப்போம் நாம்" என்பார்.

அவருடைய மனைவி அன்னாள் நாள்தோறும் நெசவு வேலைக்குப் போய்த் தன் சொந்த உழைப்பால் பெறக்கூடிய ஊதியத்தை வீட்டிற்குக் கொண்டு வருவாள். ஒருநாள், அவள் ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கி அதை வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு வந்தாள். அவளுடைய கணவர் அது

கத்தக்கேட்டு, "இது களவு செய்யப்பட்ட ஆடு அல்ல என்று பார்த்துக் கொள். களவு செய்யப்பட்டதாயின் அதன் உரிமையாளரிடம் திரும்பிக் கொடுத்துவிடு. ஏனெனில், களவு செய்யப்பட்ட பொருளைத் தொடுவதும் உண்ணுவதும் நமக்கு ஆகாது" என்றார். இதைக்கேட்ட அவருடைய மனைவி கோபம் கொண்டு, "உமது நம்பிக்கை எல்லாம் வீண் என்றும், உம் தருமச் செயல்கள் அனைத்தும் இவ்வளவுதான் என்றும் இப்போது தான் தெளிவாய்க் காண்கிறேன்" என்றாள். இவ்வாறு அவள் அவரை ஏசினாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 111 : 1-2. 7bc–8. 9 (பல்லவி : 7c காண்)*

பல்லவி : நீதிமானின் இதயம் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டது: எதையும் அது தாங்கக் கூடியது.
அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவன் பேறுபெற்றோன்: அவருடைய கட்டளைகளை நினைத்து அவன் இன்பம் கொள்வான்.
2 அவனுடைய சந்ததி பூவுலகில் வலிமை மிக்கதாய் இருக்கும். நேர்மையுள்ளோரின் சந்ததி ஆசிபெறும். பல்லவி

7 தீமையான செய்தி எதுவும் அவனை வருத்தத்துக்குள்ளாக்காது: அவன் இதயம் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து எதையும் தாங்கக்கூடியது.
8 அவன் நெஞ்சம் நிலையாய் இருக்கும்; அவனுக்கு அச்சம் மேலிடாது: தன் எதிரிகள் சிதறுண்டு போவதை அவன் பார்ப்பான். பல்லவி

9 ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பான்; அவனது ஈகை என்றென்றும் நிலைத்திருக்கும்: அவனது வலிமை மகிமை பெற்று விளங்கும். பல்லவி

## இரண்டாம் ஆண்டு

முதல் வாசகம்

புதிய வானமும் புதிய வையமும் வருமென்று காத்திருக்கிறோம்.

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 3:12-15a, 17-18

அன்புக்குரியவர்களே:

கடவுளுடைய நாளுக்காகக் காத்திருந்து, அது விரைவில் வர உழையுங்கள். அந்நாள் வரும்போது வானங்கள் நெருப்புக்கிரையாகி மறைந்தொழியும், அப்பொழுது பூதங்கள் வெந்துருகிப் போகும். நாமோ, நீதி குடிகொள்ளும் புதிய வானமும் புதிய வையமும் அவர் வாக்களித்தபடியே வருமென்று காத்திருக்கிறோம்.

ஆகவே, அன்புக்குரியவர்களே, இவற்றிற்காகக் காத்திருக்கும் உங்களை அவர் மாசுமறுவற்றவர்களாய், அமைதியான நிலையில் காணும்படி உழைத்துவாருங்கள். நம் ஆண்டவரின் பொறுமையே நமக்கு மீட்பு என எண்ணுங்கள்.

சகோதரர்களே, நீங்களோ இவையெல்லாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறீர்கள். தீயவர்களின் தவறான கொள்கைகளால் இழுபட்டு, உங்கள் உறுதி நிலையினின்று விழுந்து விடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நம் ஆண்டவரும் மீட்பருமான யேசு கிறிஸ்துவின் அருளிலும், அவரை அறியச்செய்யும் அறிவிலும் வளர்ச்சியடையுங்கள். அவருக்கே இன்றும் என்றும் மகிமை உண்டாகுக. ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 89:2. 3-4. 10. 14-16 (பல்லவி: 1)*

பல்லவி: **ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக நீரே எங்களுக்குப் புகலிடம்.**

2 **மலைகள் தோன்றுமுன்பே, பூமியும் உலகும் உண்டாகுமுன்பே, ஊழி ஊழிக்காலமாக, இறைவா, நீர் இருக்கிறீர்.** பல்லவி

3 **மண்ணோடு மண்ணாகும்படி நீர் மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறீர்; "மனு மக்களே மண்ணாகத் திரும்புங்கள்" என்கிறீர்.**

4 **ஏனெனில், உமக்கு ஆயிரம் ஆண்டுகள்கூட, கடந்துபோன நேற்றைய தினத்தைப்போலவும், ஓர் இரவுச் சாமத்தைப் போலவும் உள்ளன.** பல்லவி

10 **எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகள்; வலிமையுடையோர்க்கு எண்பது; அவற்றில் பெரும் பகுதி வருத்தமும் விண் கவலையுமே! ஏனெனில், அவை விரைவில் கழிந்து போகின்றன: நாங்களும் அவற்றோடு போய்விடுகிறோம்.** பல்லவி

14 **உம் இரக்கப் பெருக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்: எம் வாழ் நாளெல்லாம் களிகூர்ந்து அகமகிழ்வோம்.**

16 **உம் திருச்செயலை உம் அடியார்கள் காண்பார்களாக: அவர்களுடைய மக்களுக்கு உம் மகிமை விளங்குவதாக.** பல்லவி

*அல்லேலூயா* *எபே. 1;17-18 காண்.*

**அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால், எத்தகைய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது என்று நாம் அறிந்து கொள்ளும் படி, நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக் கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**செசாருடையதைச் செசாருக்கும் கடவுளுடையதைக்
கடவுளுக்கும் செலுத்துங்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *12:13-17*

அக்காலத்தில் :

யேசுவைப் பேச்சில் சிக்கவைக்கும்படி, பரிசேயர், ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்பினார்கள். அவர்கள் அவரிடம் வந்து, "போதகரே நீர் உண்மையுள்ளவர். எவர் தயவும் உமக்கு வேண்டியதில்லை. ஏனெனில் முகத்தாட்சணியம் பாராமல் கடவுளின் வழியை உண்மைக்கேற்பப் போதிக்கின்றீர் என்று எங்களுக்குத் தெரியும். செசாருக்கு வரி கொடுப்பது முறையா ? இல்லையா ? கொடுக்க வேண்டுமா ? வேண்டாமா ? என்று கேட்டார்கள்.

அவர்களுடைய கபடத்தை அறிந்து, "ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள் ? ஒரு வெள்ளிக்காசை என்னிடம் கொண்டு வாருங்கள், நான் பார்க்க வேண்டும்" என்றார். அவர்கள் கொண்டு வந்தார்கள். "இவ்வுருவமும் எழுத்தும் யாருடையவை ?" என்றார். "செசாருடையவை" என்றனர்.

யேசு, "செசாருடையதைச் செசாருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் அவரைக் குறித்து வியப்படைந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# அல்லேலூயா வசனங்கள்

## ஆண்டின் பொதுக்கால ஞாயிறுகளுக்கும் வாரநாட்களுக்கும் ஏற்றவை

1 1 சாமு. 3 : 9; அரு. 6 : 69b

அல்லேலூயா. ஆண்டவரே, பேசும்; உம் அடியான் கேட்கிறேன்: முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் உள்ளன அல்லேலூயா.

2 சங். 18 : 8

அல்லேலூயா. ஆண்டவரே, உமது சொல் உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுவது: உம்முடைய வார்த்தைகள் கண்களுக்கு ஒளி ஊட்டுவன. அல்லேலூயா.

3 சங். 24 : 4c, 5'

அல்லேலூயா. ஆண்டவரே, உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்: உமது உண்மை என்னும் பாதையில் என்னை நடத்தியருளும். அல்லேலூயா.

4 சங். 26 : 11

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வழியை எனக்குக் கற்பித்தருளும்: நேரிய வழியில் என்னை நடத்திச் செல்லும். அல்லேலூயா

5 சங். 94 : 8b, 7b

அல்லேலூயா. இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்: மாறாக, ஆண்டவருடைய குரலுக்குச் செவி கொடுங்கள். அல்லேலூயா.

6 சங். 110 : 7b, 8a

அல்லேலூயா. ஆண்டவரே, உம்முடைய கட்டளைகள் உண்மையானவை என்றென்றும் நித்தியமும் நிலையாயுள்ளவை அல்லேலூயா.

15 சங். 144 : 13cd.

அல்லேலூயா. ஆண்டவர் தம் வார்த்தைகளில் உண்மையுள்ளவர்;
தம் செயல்களில் அவர் புனிதமானவரே. அல்லேலூயா.

16 சங். 147 : 1a, 4a.

அல்லேலூயா. யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்;
உலகுக்கு அவர் தம் ஆணையை விடுக்கிறார். அல்லேலூயா.

17 மத். 4 : 4b.

அல்லேலூயா. மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று,
கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும்
உயிர் வாழ்கிறான். அல்லேலூயா.

18 மத். 11 : 25 காண்.

அல்லேலூயா. தந்தையே, விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே,
போற்றி, ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைச்
சிறுவருக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா.

19 லூக். 8:15 காண்

அல்லேலூயா. இறைவனின் வார்த்தையைக் கேட்டு, சீரிய செம்மனத்தில்
பதித்து நிலையாயிருந்து பலன் அளிப்பவர் பேறுபெற்றோர்.
அல்லேலூயா.

20 அரு. 6:63b. 68b.

அல்லேலூயா. ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிரு
மாகும் : முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள்
உம்மிடம் உள்ளன. அல்லேலூயா.

21 அரு. 8:12

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நானே உலகின் ஒளி; என்னைப்
பின்செல்பவன் இருளில் நடவான். அல்லேலூயா.

22 அரு: 10:27

அல்லேலூயா. என் ஆடுகள் என் குரலுக்குச் செவி கொடுக்கின்றன;
நானும் அவற்றை அறிவேன் : அவையும் என்னைப் பின்
தொடர்கின்றன என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

23 அரு. 14:6.

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார் : நானே வழியும் உண்மையும்
உயிரும் : என் வழியாயன்றி எவனும் தந்தையிடம்
வருவதில்லை. அல்லேலூயா.

24

அரு. 14:23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்பு செய்தால், என் வார்த்தையைக் கேட்பான்: என் தந்தையும் அவன் மேல் அன்பு கூர்வார்; நாங்களும் அவனிடம் வருவோம். அல்லேலூயா.

25

அரு. 15:15b.

அல்லேலூயா. ஆண்டவர் கூறுகிறார்: நான் உங்களை நண்பர்கள் என்றேன்: ஏனெனில், தந்தையிடமிருந்து நான்கேட்டதை யெல்லாம் உங்களுக்கு அறிவித்தேன். அல்லேலூயா.

26

அரு. 17:17 ab.

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை. உண்மையிலே எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.

27

அப். பணி. 16:14 காண்

அல்லேலூயா. உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும். அல்லேலூயா.

28

2 கொரிந். 5:19

அல்லேலூயா. கடவுள் உலகினரைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார்: அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை நம்மிடம் ஒப்படைத்தார். அல்லேலூயா.

29

எபே. 1:17–18 காண்

அல்லேலூயா. இறைவன் நம்மை அழைத்ததால், எத்தகைய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டுள்ளது என்று நாம் அறிந்து கொள்ளும்படி, நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் தந்தை நம் அகக் கண்களுக்கு ஒளி தருவாராக. அல்லேலூயா.

30

பிலிப் 2:15-16

அல்லேலூயா. வாழ்வைப் பற்றிய வார்த்தைகளை ஏந்தி நின்று, உலகில் சுடர்விடும் விண்மீன்கள் எனத் துலங்குவீர்கள். அல்லேலூயா.

31

கொலோ. 3 : 16a, 17c

அல்லேலூயா. கிறிஸ்துவின் வார்த்தை நிறைவளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக: அவர் வழியாகத் தந்தையாகிய கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அல்லேலூயா.

32 1 தெச. 2:13

அல்லேலூயா. கடவுளின் வார்த்தையை ஏற்றுக் கொள்ளுங்கள்; அதை மனித வார்த்தையாக அன்று, உள்ளபடியே கடவுள் வார்த்தையாகவே ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லேலூயா.

33 2 தெச. 2:14

அல்லேலூயா. நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் மகிமையை பெற்றுக்கொள்ளும்படி, நற்செய்தி வழியாக இறைவன் நம்மை அழைத்தார். அல்லேலூயா.

34 2 திமோத். 1:10b

அல்லேலூயா. நம் மீட்பராகிய யேசுகிறிஸ்து சாவை அழித்து,
வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்.
அல்லேலூயா.

35 எபி. 4:12

அல்லேலூயா. இறைவனின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது: உள்ளத்தின் கருத்துகளையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. அல்லேலூயா.

36 யாகப். 1:18

அல்லேலூயா. தம் படைப்புக்களுள் நாம் முதற் கனிகளாகும் பொருட்டு
உண்மையை அறிவிக்கும் வாக்கினால்
பரம தந்தை நம்மை ஈன்றெடுத்தார். அல்லேலூயா.

37 யாகப். 1:21

அல்லேலூயா. உங்கள் மனத்தில் ஊன்றப்பெற்ற வார்த்தையை அமைந்த உள்ளத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள்: இவ்வார்த்தையே உங்கள் ஆன்மாவை மீட்கவல்லது. அல்லேலூயா.

38 1 இரா. 1:25

அல்லேலூயா. ஆண்டவரின் சொல் என்றென்றும் நிலைக்கும்:
இச்சொல்லே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி.
அல்லேலூயா.

39 1 அரு. 2:5

அல்லேலூயா. கிறிஸ்துவின் வார்த்தையை ஒருவன் கடைப்பிடித்தால் அவனிடம் கடவுளன்பு உண்மையாகவே நிறைவாகியுள்ளது. அல்லேலூயா.

# தவக் காலம்

## திருநீற்றுப் புதன்

### முதல் வாசகம்

***உங்கள் உடைகளை அல்ல, உங்கள் இதயங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள்.***

இறைவாக்கினர் யோவேல் ஆகமத்திலிருந்து வாசகம் *2:12-18*

ஆண்டவர் கூறுகிறார் : இப்பொழுதாவது நோன்பிருந்து அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்; உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டா, உங்கள் இதயங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள். உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள், ஏனெனில் அவர் அருளும் இரக்கமும் உள்ளவர்; நீடிய பொறுமையுள்ளவர், நிலையான அன்புள்ளவர், செய்யக் கருதிய தீமையைக் குறித்து மனமாறுகிறவர். ஒருவேளை அவர் திரும்பவும் மனத்தை மாற்றிக் கொண்டு, நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு உணவுப் பலியும், பானப்பலியும் ஒப்புக் கொடுப்பதற்காக, உங்களுக்கு ஆசி வழங்கமாட்டாரென யார் அறிவார்?

சீயோனில் எக்காளம் ஊதுங்கள், உண்ணா நோன்புக்கெனக் காலத்தைக் குறிப்பிடுங்கள், வழிபாட்டுக் கூட்டத்தைக் கூட்டுங்கள். மக்களைக் கூட்டுங்கள், பரிசுத்த சபையை ஒன்று சேருங்கள், முதியோரைத் திரட்டுங்கள், சிறுவர்களைக் கூப்பிடுங்கள், பால்குடிக்கும் குழந்தைகளையும் ஒன்று கூட்டுங்கள்; மணமகன் தன் அறையை விட்டு வெளியேறட்டும், மணமகள் தன் மணமஞ்சத்தை விட்டுப் புறப்படட்டும்.

ஆண்டவருடைய ஊழியர்களாகிய அர்ச்சகர்கள் கோயில் முக மண்டபத்திற்கும் பீடத்திற்கும் நடுவில் நின்று கொண்டு, “ஆண்டவரே, உம் மக்கள் மேல் இரங்கியருளும்; உம்முடைய உரிமைச் சொத்தைப் புறவினத்தார் நடுவில் வசைமொழிக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக்காதீர்; ‘அவர்களுடைய கடவுள் எங்கே இருக்கிறார்?’ என்று மக்களினங்களின் நடுவில் ஏன் சொல்லப்படல் வேண்டும்?” என்று சொல்லி அழுவார்களாக!

ஆண்டவர் தம் நாட்டின்மேல் ஆர்வங் கொண்டார், தம்முடைய மக்கள்மீது இரக்கம் காட்டினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 50 : 1-2. 3-4a. 10-11. 12,15 (பல்லவி : 1a காண்)*

பல்லவி : ஆண்டவரே, இரக்கமாயிரும்: ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும்: உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்களைப் போக்கிவிடும்.
2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கி விடும்: என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

3 என் குற்றங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன்: நான் செய்த பாவம் எந் நேரமும் என் கண்முன்னே நிற்கின்றது.
4 உமக்கெதிராக மட்டுமே பாவம் செய்தேன்; உம் திருமுன்னிலையிலேயே செய்தேன். பல்லவி

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும். உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்;
11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளி விடாதேயும்: உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும். பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்; உமது பெருந் தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
15 ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்துவிடும்: என் வாய் உமது புகழ்ச் சியை எடுத்துரைக்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

கடவுளோடு ஒப்புரவாகுங்கள்: இதோ, தகுந்த காலம் இதுவே.

அப்போஸ்தலராகிய புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5:20-6:2

சகோதரர்களே:

நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய்ச் செயலாற்றுகிறோம்: நாங்கள் வேண்டுவது கடவுளே அறிவுறுத்துவது போன்றதாகும். ஆகவே கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் மன்றாடுகிறோம்: கடவுளோடு ஒப்புரவாகுங்கள். கிறிஸ்துவுக்குள் நாமும் கடவுளுடைய அருள் நன்மை உருவாய் பெறும்படி, பாவமே அறியாத அவரை நமக்காகப் பாவ உருவாக்கினார்.

இறைவனின் உடனுழைப்பாளர்களான நாங்கள், நீங்கள் பெற்ற கடவுளின் அருளை வீணாக்க வேண்டாமென மன்றாடுகிறோம். ஏனெனில், "தகுந்த காலத்தில் உனக்குச் செவி சாய்த்தேன்; மீட்பின் நாளில் உனக்குத் துணை நின்றேன்" என்கிறார் இறைவன். இதோ, அந்த தகுந்த காலம் இதுவே. இதோ! அந்த மீட்பின் நாள் இதுவே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் திபா. 95:7-8

இன்று நீங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதிருங்கள்; மாறாக ஆண்டவரின் குரலைக் கேட்பீர்களாக.

[illegible]

## நற்செய்தி வாசகம்

*மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தை உனக்குப் பிரதிபலன் அளிப்பார்.*

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
6 : 1-6. 16-18

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

" மனிதர் பார்க்கவேண்டுமென்று உங்கள் நற்செயல்களை அவர்கள் முன் காட்டிக்கொள்ளாதபடி கவனமாயிருங்கள். இல்லையேல், வானகத்திலுள்ள உங்கள் தந்தையிடம் உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.

எனவே, நீ பிச்சையிடும் பொழுது, மக்கள் புகழ வேண்டுமென்று வெளிவேடக்காரர் செபக் கூடங்களிலும் தெருக்களிலும் செய்வதுபோல், உனக்குமுன் பறை சாற்றச் செய்யாதே. அவர்கள் தங்கள் கைம்மாறு பெற்று விட்டனர் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீ பிச்சையிடும்பொழுதோ, உன் வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும். அப்பொழுது, நீ இடும் பிச்சை மறைவாயிருக்கும் ; மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார்.

நீங்கள் செபம் செய்யும் பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்கவேண்டாம் ; ஏனெனில், மனிதர் பார்க்கும்படி, அவர்கள் செபக் கூடங்களிலும் தெருக்கோடிகளிலும் நின்று செபம் செய்ய விரும்புவர். அவர்கள் தங்கள் கைம்மாறு பெற்றுவிட்டனர் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ செபம் செய்யும் பொழுது, உன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டு, மறைவாயுள்ள உன் தந்தையை நோக்கிச் செபம் செய். மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார்.

நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல் முகவாட்டமாய் இருக்கவேண்டாம். அவர்கள் நோன்பு இருப்பதை மனிதர் பார்க்கும் பொருட்டுத் தங்கள் முகத்தை விகாரப் படுத்திக் கொள்கின்றனர். அவர்கள் கைம்மாறு பெற்றுவிட்டனர் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீ நோன்பு இருக்கும்போது தலைக்கு எண்ணெய் தடவு ; முகத்தைக் கழுவு. அப்பொழுது நீ நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாமல், மறைவாயுள்ள உன் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதிபலன் அளிப்பார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திருநீற்றுப் புதனுக்குப் பின்வரும் வியாழன்

முதல் வாசகம்

**இதோ, இன்று நான் ஆசியையும் சாபத்தையும் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன்.**

உபா ஆகமத்திலிருந்து வாசகம் **30:15-20**

மோயீசன் மக்களைப் பார்த்துக் கூறியதாவது:

"இன்று நான் ஒரு பக்கத்திலே வாழ்வையும் நன்மையையும், மற்றொரு பக்கத்திலே சாவையும் தீமையையும் வைத்து உனக்குக் காண்பித்தேன் என்பதைச் சிந்தித்துப்பார். நீ வாழ்ந்து பெருகவும், நீ உரிமையாக்கிக் கொள்ளப் போகிற நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசி அளிக்கும்படிக்கும், நீ அவர்பால் அன்புகொள்ளவும், அவருடைய வழிகளில் நடக்கவும், அவருடைய கட்டளைகளையும் சட்டங்களையும் சடங்கு முறைகளையும் கைக்கொண்டு அனுசரிக்கவும் கடவாய்.

ஆனால், உன் இதயம் பேதலித்து, நீ உன் காதை அடைத்து மதிமயங்கிப் பொய்யைப் பின்பற்றிப் பிற தேவர்களுக்குப் பணிபுரிவாயாகில், நீ அழிந்து போவாயென்றும், யோர்தானைக் கடந்து நீ உரிமை கொள்ளப் புகவிருக்கும் நாட்டிலே கொஞ்சக் காலத்தில் மடிவாயென்றும் இன்று நான் உனக்கு முன்னறிவித்துச் சொல்கிறேன்.

நான் வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உங்களுக்கு முன்வைத்துக் காட்டினேன் என்பதற்கு விண்ணையும் மண்ணையும் இன்று சாட்சியாய் வைக்கிறேன். ஆதலால், நீயும் உன் சந்ததியும் வாழ்வு பெறவும், உன் உயிரும் நீடிய வாழ்வுமான ஆண்டவர், ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு என்னும் உன் மூதாதையருக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டுச் சொல்லிய நாட்டிலே நீ குடியேறவும், நீ உயிரைத் தேர்ந்துகொண்டு, உன் கடவுளாகிய ஆண்டவர்பால் அன்புகூர்ந்து, அவருடைய திருவுளத்துக்கு அமைந்து, அவரைப் பற்றிக் கொள்வாய்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 1: 1-2. 3. 4,6 (பல்லவி: சங். 39:4a)*

பல்லவி : **தன் நம்பிக்கையை ஆண்டவர்மீது வைத்தவனே பேறுபெற்றவன்**

1 **தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன், பாவிகளின் வழியில் செல்லாதவன்**
**பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.**
2 **கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனும், அதை அல்லும்**
**பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன்.** பல்லவி

3 **வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல்**
**தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்: அவன்**
**செய்வதனைத்திலும் வெற்றிபெறுவான்.** பல்லவி

4 **தீயவருக்கு அங்ஙனமிராது, ஒரு நாளுமிராது: காற்றோடு காற்றாய்ப்**
**பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.**
6 **நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்: தீயோரின் வழியோ**
**அழிவுக்கே செல்லும்.** பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் *மத். 4:17*

**விண்ணரசு நெருங்கிவிட்டது மனந்திரும்புங்கள், என்கிறார் ஆண்டவர்.**

## நற்செய்தி வாசகம்

**என்பொருட்டுத் தன் உயிரை இழப்பவன் அதைக் காத்துக்கொள்வான்.**

✠ **லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.** 9:22-25

**அக்காலத்தில் :**

**யேசு தம் சீடரை நோக்கி, மனுமகன் பாடுகள் பல படவும், மூப்பராலும் தலைமைக் குருக்களாலும் மறைநூல் அறிஞராலும் புறக்கணிக்கப்பட்டு, கொலையுண்டு மூன்றும் நாள் உயிர்த்தெழவும் வேண்டும் என்று சொன்னார்.**

**பின்னர் எல்லாரையும் பார்த்து அவர் கூறியதாவது : "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன், தன்னையே மறுத்துத் தன் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின் தொடரட்டும். ஏனெனில்,**

தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்து விடுவான். என்பொருட்டுத் தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக்கொள்வான். ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் தன்னையே பாழாக்கினல் பயன் என்ன? தனக்கே கேடு வருவித்தால் பயன் என்ன?"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திருநீற்றுப் புதனுக்குப் பின்வரும் வெள்ளி

## முதல் வாசகம்

**இதுவல்லோ நாம் விரும்பும் மேலான நோன்பு ?**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 58:1-9a

இறைவனாகிய ஆண்டவர் கூறுகிறார் :

"உரத்த குரலில் கத்திப் பேசு, நிறுத்தி விடாதே, எக்காளத்தைப் போல் உன் குரலை உயர்த்து; நம் மக்களுக்கு அவர்களுடைய அக்கிரமத்தை அறிவி, யாக்கோபின் வீட்டார்க்கு அவர்கள் பாவத்தைத் தெரிவி. நீதியைக் கடைப்பிடிக்கும் மக்கள் போலவும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கைவிடாதவர்கள் போலவும் நடித்து, நாடோறும் நம்மைத் தேடுகிறார்கள், நீதியான முறைமைகளைப் பற்றி நம்மிடம் கேட்கிறார்கள், கடவுளை அணுகி வர விழைகிறார்கள். 'நாங்கள் உண்ணு நோன்பிருந்தோம், நீர் கண்ணேக்காததேன் ? எங்களை நாங்களே ஒடுக்கினேம், நீர் அதை அறியாததேன் ?' என்கிறார்கள்.

இதோ, நீங்கள் உண்ணு நோன்பிருக்கும் நாளிலும் உங்கள் விருப்பத்தையே தேடுகிறீர்கள்; உங்கள் கூலியாட்களை வாட்டி வதைக்கிறீர்கள். இதோ, நீங்கள் உண்ணு நோன்பிருக்கும்போது, சண்டை சச்சரவுகள் போட்டுப் பிறரை அநியாயமாய் அடிக்கிறீர்கள். இன்று வரை நீங்கள் நோன்பிருந்தது போல் இருந்தால், உங்கள் கூக்குரல் உன்னதத்திற்கு எட்டாது.

மனிதன் தன்னையே நாள் முழுவதும் வதைத்துக்கொள்வதுதான் நமக்கு விருப்பமான நோன்பா ? நாணலைப் போலத் தலை குனிவதும், கோணி ஆடையை உடுப்பதும், சாம்பலில் உட்காருவதுந்தான் நமக்கேற்ற நோன்பா ? இதைத்தான் நோன்பென்றும், ஆண்டவருக்குகந்த நாளென்றும் சொல்லுகிறாயோ ?

"அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்துவிடு, அழுத்தியிறுத்தும் நுகத்தடிகளை இறக்கு; ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய், சுமையானதையெல்லாம் உடைத்தெறி; பசித்திருப்பவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு.

ஏழைகளுக்கும் அந்நியருக்கும் உன் வீட்டில் தங்குவதற்கு இடங் கொடு; ஆடையில்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து; உன் இனத்தானை அவமதிக்காதே; இதுவன்றோ நாம் விரும்பும் மேலான நோன்பு?

அப்போது, உன் ஒளி காலைக் கதிரவன் போல் தோன்றும், விரைவில் உனக்கு நலம் கிடைக்கும்; உன் நீதி உனக்குமுன் நடக்கும். ஆண்டவருடைய மகிமை உன்னைப் பின் தொடரும். அப்போது, ஆண்டவரைக் கூவியழைப்பாய், அவரும் உன் மன்றாட்டைக் கேட்டருள்வார்; அவரை நோக்கிக் கூக்குரலிடுவாய், அவரும், "இதோ இருக்கிறோம்" என்பார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 50 : 1-2. 3-4a. 16-17 (பல்லவி: 17b)*

*பல்லவி :* தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும்: உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்குறைகளைப் போக்கி விடும்.
2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கி விடும்: என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

3 என் குற்றங்களை நான் ஏற்றுக் கொள்கிறேன்: நான் செய்த பாவம் எந்நேரமும் என் கண்முன்னே நிற்கின்றது.
4 உமக்கெதிராக மட்டுமே பாவம் செய்தேன்; உம் திருமுன்னிலையிலேயே செய்தேன்: பல்லவி

16 ஏனெனில், பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை: தகனப்பலி கொடுத்தாலும் அதை நீர் ஏற்பதில்லை.
17 இறைவா, நான் உமக்குச் செலுத்த வேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே, தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

உதயமாகும்; உன் காரிருள் பட்டப் பகல் போல் இருக்கும். ஆண்டவர் என்றென்றும் உன்னை வழி நடத்துவார், பாலைநிலத்தில் உன் உள்ளம் நிறைவு பெறச் செய்வார்; உன் எலும்புகளை உறுதிப்படுத்துவார், நீர் வளம் மிக்க தோட்டம் போலும் வற்றாத நீரூற்றுப் போலும் விளங்கச் செய்வார்.

பல்லாண்டுகளாய்ப் பாழடைந்து கிடந்த உன் இடங்கள் கட்டப்படும்; தலைமுறை தலைமுறையாய்க் கிடந்த அடிப்படைகளை நீ கட்டியெழுப்புவாய்; மதிற்சுவர் உடைப்புகளைக் கட்டுகிறவன் என்றும், மக்கள் குடியேறும்படி தெருக்களை அமைக்கிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்.

"ஓய்வு நாள் ஒழுங்குகளை உதறித் தள்ளாமல், நமது பரிசுத்த நாளில் உன் விருப்பம்போல் செய்யாமலிருந்தால், ஓய்வு நாளை இன்ப நாள் என்றும், ஆண்டவருடைய பரிசுத்த நாளை மகிமையான நாள் என்றும் போற்றினால், அன்று உன் மனம்போன போக்குப்படி செல்லாமல், உன் விருப்பம்போலச் செய்யாமல், வீண் பேச்சுகளைப் பேசாமல் அந்நாளை மதித்து நடந்தால், அப்போது ஆண்டவரில் பேரின்பம் அடைவாய். நாட்டின் உயரமான இடங்களிலெல்லாம் உன்னை வெற்றிப் பவனியாய்க் கொண்டு செல்வோம்; உன் தந்தையாகிய யாக்கோபின் உரிமைச் சொத்திலிருந்து உனக்கு உணவு வழங்குவோம்; ஆண்டவரே இந்தத் திருவாய் மலர்ந்தார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 85: 1-2. 3-4. 5-6 (பல்லவி: 11a)

பல்லவி: ஆண்டவரே, உமது உண்மையின்படி நான் நடக்கும் வண்ணம் எனக்கு வழிகாட்டும்.

1 ஆண்டவரே, செவிசாய்த்து என் மன்றாட்டைக் கேட்டருளும்: ஏனெனில், நான் ஏழையும் எளியவனுமாயிருக்கிறேன்.
2 நான் உமக்கு அடியான் என்பதால் என்னைக் காப்பாற்றியருளும்: என் இறைவா, உம்மீது நம்பிக்கை வைத்திருக்கிற உம் ஊழியனை மீட்டருளும். பல்லவி

3 ஆண்டவரே, என்மேல் இரக்கமாயிரும்: ஏனெனில், எந்நேரமும் நான் உம்மை நோக்கி அபயக்குரல் எழுப்புகிறேன்.
4 ஆண்டவரே, என் ஆன்மாவை உம்மை நோக்கி எழுப்பினேன்: ஆதலால் உம் ஊழியனுடைய உள்ளத்தை மகிழ்வித்தருளும். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவரே, நீர் நல்லவர்; கருணைமிக்கவர்: உம்மைக் கூவி யழைக்கிற யாவருக்கும் மிகுந்த அருளன்பு காட்டுகிறவர்.
6 ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்: என் வேண்டுதலின் குரலுக்குச் செவி சாய்த்தருளும். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் எசேக். 33:11

நீசன் சாகவேண்டும் என்பது அல்ல, அவன் மனந்திரும்பி வாழ வேண்டும் என்பதே நம் விருப்பம், என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

*நீதிமான்களை அன்று, மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்க வந்தேன்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:27-32

அக்காலத்தில்:

யேசு சுங்கத் துறையில் அமர்ந்திருந்த லேவி என்ற ஆயக்காரனைக் கண்டு, "என்னைப் பின்செல்" என்றார். அவர் எழுந்து அனைத்தையும் விட்டு அவரைப் பின்சென்றார்.

லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரிய விருந்து செய்தார். ஆயக்காரரும் பிறரும் பெருங்கூட்டமாய் அவர்களோடு பந்தியில் அமர்ந்திருந்தனர். பரிசேயரும் அவர்களைச் சார்ந்த மறைநூல் அறிஞரும் முணுமுணுத்து அவருடைய சீடர்களிடம், "ஆயக்காரரோடும் பாவிகளோடும் நீங்கள் உண்பதும் குடிப்பதும் ஏன்?" என்றனர். யேசு அதற்கு, "மருத்துவன் நோய் அற்றவர்க்கன்று நோயுற்றவர்க்கே தேவை. நீதிமான்களை அன்று, மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்க வந்துள்ளேன்" என்று மறுமொழி கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# தவக்காலம் – முதல் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**முதல் பெற்றோரைப் படைத்ததும் அவர்களின் பாவமும்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம். *2:7–9, 3:1–7*

ஆண்டவராகிய கடவுள் களிமண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் முகத்தில் உயிர்மூச்சை ஊதவே, மனிதன் உயிர்உள்ளவன் ஆனான்.

ஆண்டவராகிய கடவுள் ஆதியிலே ஓர் இன்ப வனத்தை நட்டியிருந்தார். தாம் உருவாக்கின மனிதனை அதிலே வைத்தார். ஆண்டவராகிய கடவுள் அவ்வனத்திலே பார்வைக்கு அழகிய, நாவிற்கு இனிய கனிகள் கொண்டுள்ள பலவித மரங்களையும் மண்ணினின்று தோன்றச் செய்தார். மேலும், அந்த இன்ப வனத்தின் நடுவிலே வாழ்வளிக்கும் மரத்தையும், நன்மை தீமை அறியும் மரத்தையும் வளரச் செய்தார்.

ஆண்டவராகிய கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப் பிராணிகளிலும் பாம்பு அதிகத்தந்திரமுள்ளதாய் இருந்தது. அது பெண்ணை நோக்கி: இன்ப வனத்திலுள்ள எல்லா மரங்களின் கனிகளையும் உண்ண வேண்டாமென்று உங்களைக் கடவுள் ஏன் தடுத்தார் என்று கேட்டது. பெண்: இன்ப வனத்திலுள்ள மரங்களின் கனிகளை நாங்கள் உண்டே வருகிறோம்; ஆனால், இன்ப வனத்தின் நடுவிலிருக்கிற மரத்தின் கனியைத் தின்னவேண்டாம். தொடவும் வேண்டாமென்று கடவுள் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்; தின்றால் சாவோம் என்றாள்.

## இரண்டாம் வாசகம்

**பாவம் பெருகிய இடத்தில் அருள் அணை கடந்து பெருக்கெடுத்தது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

சகோதரர்களே : 5:12-19

ஒரே மனிதனால் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது போல, அம் மனிதனில் எல்லாரும் பாவஞ் செய்தமையால் எல்லா மனிதர்க்குள் சாவும் பரவியது. ஏனெனில், திருச்சட்டம் வருமுன்னும், உலகில் பாவம் இருந்தது; ஆனால் சட்டம் இல்லாத போது, குற்றச்சாட்டுக்கு இடமில்லை. ஆயினும், ஆதாம் முதல் மோயீசன் வரை இருந்தவர்கள், ஆதாம் கட்டளையை மீறிச் செய்த பாவத்தைப் போன்ற பாவஞ் செய்யாவிடினும், அவர்கள்மேலும் சாவு ஆட்சி செலுத்திற்று; இந்த ஆதாமோ வரவிருந்தவர்க்கு முன்னடையாளம்.

ஆனால் குற்றத்தின் தன்மை வேறு, அருட்கொடையின் தன்மை வேறு. எவ்வாறெனில் ஒருவன் செய்த குற்றத்தால் அனைவரும் இறந்தார்கள் அல்லவா? ஆனால் கடவுளின் அருளும், யேசுகிறிஸ்து என்னும் ஒரு மனிதரின் அருளால் கிடைக்கும் கொடையும் அனைவருக்கும் எவ்வளவோ மிகுதியாய்ப் பெருகியுள்ளன. இந்த அருட்கொடையின் பயன் வேறு, அந்த ஒரு மனிதன் செய்த பாவத்தின் விளைவு வேறு. ஏனெனில், ஒருவன் செய்த குற்றத்தால் விளைந்த தீர்ப்பு தண்டனைத் தீர்ப்பு. அனைவருடைய குற்றங்களுக்கும் கிடைத்த தீர்ப்போ அருட்கொடையாக வந்த விடுதலைத் தீர்ப்பு.

ஏனெனில், ஒரே ஒருவன் செய்த குற்றத்தாலே அந்த ஒருவன் வழியாகச் சாவு ஆட்சி செலுத்தினதென்றால், அருட்பெருக்கையும், இறைவனுக்கு ஏற்புடையவராகும் வரத்தையும் அடைந்து கொண்டவர்கள் யேசுகிறிஸ்து என்னும் ஒரே ஒருவர் வழியாக வாழ்வு பெற்று ஆட்சி செலுத்துவார்கள் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ?

ஆகவே ஒரே ஒருவனின் குற்றம் எல்லா மனிதர்க்கும் தண்டனைத் தீர்ப்பாய் முடிந்ததுபோல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதர்க்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் மலர்ந்தது. ஏனெனில், ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் பாவிகளானதுபோல், ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது குறுகிய வாசகம்

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

5 : 12. 17-19

சகோதரர்களே :

ஒரே மனிதனுல் பாவமும், பாவத்தால் சாவும் இந்த உலகத்தில் நுழைந்தது போல அம்மனிதனில் எல்லாரும் பாவஞ்செய்தமையால் எல்லா மனிதர்க்குள் சாவும் பரவியது.

ஏனெனில், ஒரே ஒருவன் செய்த குற்றத்தாலே அந்த ஒருவன் வழியாகச் சாவு ஆட்சி செலுத்தினதென்றுல், அருட்பெருக்கையும், இறைவனுக்கு ஏற்புடையவராகும் வரத்தையும் அடைந்து கொண்டவர்கள், யேசு கிறிஸ்து என்னும் ஒரே ஒருவர் வழியாக வாழ்வுபெற்று ஆட்சி செலுத்துவார்கள் என உறுதியாய் நம்பலாம் அன்றே?

ஆகவே, ஒரே ஒருவனின் குற்றம் எல்லா மனிதர்க்கும் தண்டனைத் தீர்ப்பாய் முடிந்ததுபோல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதர்க்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் மலர்ந்தது. ஏனெனில், ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் அனைவரும் பாவிகளானதுபோல் ஒருவரின் கீழ்ப்படிதலால் அனைவரும் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

நற்செய்திக்கு முன் வசனம் — மத். 4 : 4b

மனிதன் அப்பத்தினுல் மட்டும் அன்று
கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லிலும் உயிர் வாழ்கிறுன்.

## நற்செய்தி வாசகம்

**யேசு நாற்பது நாள் நோன்பிருக்கிறுர், சோதிக்கப்படுகிறுர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4 : 1-11

அக்காலத்தில் :

யேசு அலகையினுல் சோதிக்கப்படுமாறு பாலைவனத்திற்கு ஆவியானவரால் அழைத்துச் செல்லப் பெற்றுர். அங்கு நாற்பது பகலும், நாற்பது இரவும் நோன்பிருந்தபின் பசியுற்றுர். சோதிப்பவன் அவரை அணுகி, "நீர் கடவுளின் மகனுனுல் இந்தக் கற்கள் அப்பம் ஆகும்படி

கட்டளையிடும்'' என்றான். அவரோ மறுமொழியாக: ''மனிதன் அப்பத்தினால்மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்' என எழுதியிருக்கின்றதே'' என்றார்.

பின்னர் அலகை, அவரைத் திருநகரத்திற்குக் கொண்டுபோய்க் கோவில் முகட்டில் நிறுத்தி, ''நீர் கடவுளின் மகனானால் கீழே குதியும்; ஏனெனில், 'தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார், உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்' என எழுதியுள்ளது என்று சொல்ல, யேசு அதனிடம், 'உன் கடவுளாகிய ஆண்டவரை நீ சோதியாதே' எனவும் எழுதியிருக்கின்றது என்றார்.

மீண்டும் அலகை அவரை மிக உயர்ந்த மலைக்குக் கொண்டுபோய் உலக அரசுகள் அனைத்தையும் அவற்றின் மாட்சியையும் காட்டி, ''நீர் என்னைத் தெண்டனிட்டு வணங்கினால், இவை அனைத்தையும் உமக்குக் கொடுப்பேன்'' என்றது. அப்பொழுது யேசு அதனை நோக்கி, ''போ அப்பாலே, சாத்தானே, ஏனெனில், 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆராதிப்பாயாக' என எழுதியிருக்கிறது என்றார்.

பின்னர் அலகை அவரை விட்டகன்றது. அப்போது வானதூதர் அணுகி, அவருக்குப் பணிவிடை புரிந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**வெள்ளப் பெருக்கிலிருந்து மீட்கப்பட்ட நோவாவுடன் கடவுள் செய்த உடன்படிக்கை.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 9 : 8-15

கடவுள் நோவாவையும் அவர் புதல்வர்களையும் நோக்கி, ''இதோ, நாம் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியாரோடும், பெட்டகத்திலிருந்து வெளியேறி உங்கள் அண்டையிலிருக்கிற பறவைகள், வீட்டு மிருகங்கள், மற்றும் பூமியிலுள்ள காட்டு விலங்குகள் முதலிய எல்லா உயிரினங்களோடும் நமது உடன்படிக்கையை நிறுவுவோம்.

உங்களோடு நாம் உடன்படிக்கை செய்வோம். ஆதலால், இனி மாமிச மெல்லாம் வெள்ளப் பெருக்குகளால் ஒருபோதும் அழிக்கப்படா. உண்மையில், பூமியைப் பாழாக்க இனி வெள்ளப் பெருக்கு வராது" என்றருளினர்.

மேலும் கடவுள்: "நமக்கும் உங்களுக்கும், உங்களுடனிருக்கும் எல்லா உயிரினங்களுக்குமிடையே நித்திய தலைமுறைகளுக்கென்று நாம் செய்து கொள்ளும் உடன்படிக்கையின் அடையாளமாவது: நமது வில்லை மேகங்களிலே வைப்போம். அதுவே நமக்கும் உலகத்துக்குமிடையேயுள்ள உடன்படிக்கையின் அடையாளமாகும். ஆதலால், நாம் வானத்தை மேகங்களால் மறைத்திருக்கும்போது நம்முடைய வில் அங்குக்காணப்படும். அப்போது உங்களோடும் எல்லா உயிரினங்களோடும் (செய்து கொண்ட) நமது உடன்படிக்கையை நினைவு கூருவோமாகையால், இனி எல்லா உயிர்களையும் அழிக்கும் வெள்ளப் பெருக்கு இராது" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 24 : 4bc-5ab. 6-7bc. 8-9 (பல்லவி : 10 காண்)*

பல்லவி : ஆண்டவரே, உம்முடைய உடன்படிக்கையைக் கடைப்பிடிப்போர்க்கு உம்முடைய வழிகள் எல்லாம் அருளும் உண்மையும் கொண்டவையாம்.

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்: உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.
5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்: என் மீட்பராம் இறைவன் நீரே. பல்லவி

6 ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவுகூரும்: ஆதிகால முதல் உள்ள உம் அருளன்பை மறவாதேயும்.
7 உம் அருள் அன்பிற்கு ஏற்ப என்னை நினைவுகூரும், உமது அருள் நன்மையின் பொருட்டு என்னை மறவாதேயும். பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்: ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.
9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார்: எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இன்று உங்களை மீட்கும் ஞானஸ்நானத்துக்கு முன்னடையாளமாயிருக்கிறது இந்த நீர்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்

3:18-22

அன்புக்குரியவர்களே :

கிறிஸ்துவைப் பாருங்கள்; நீதியுள்ள அவர், அநீதருக்காக இறந்தார்; நம்மைக் கடவுளிடம் சேர்க்க, பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார்; ஊன் உடலில் சாவுக்குள்ளானார்; ஆனால், தேவ ஆவியில் உயிர் பெற்றார். அந்த ஆவியைக் கொண்டே, அவர் சிறையிலிருந்த ஆன்மாக்களிடம் சென்று, அவர்களுக்குத் தம் செய்தியை அறிவித்தார். இவ்வான்மாக்கள், அன்று நோவா, பேழையைச் செய்துகொண்டிருந்த காலத்தில், கடவுள் பொறுமையோடு காத்திருந்தபோது, கீழ்ப்படியாமல் போனவர்கள், அப்பேழையில் நுழைந்து, சிலர் — அதாவது எட்டுப்பேர் — நீரின் வாயிலாய்க் காப்பாற்றப்பட்டனர்.

இந்த நீரானது ஞான ஸ்நானத்துக்கு முன் அடையாளம்; இன்று அது உங்களை மீட்கிறது; இந்த ஞானஸ்நானம் உங்கள் உடலின் அழுக்கை நீக்குவதன்று; நல்ல மனசாட்சியுடன் கடவுளுக்குத் தரும் உறுதி வாக்காகும்; இந்த ஞானஸ்நானம் மீட்பளிப்பதோ யேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வழியாக. அவர் விண்ணகம் சென்றபின், அதிகாரம் தாங்குவோர், வலிமைமிக்கோர், தூதர் அனைவரையும் தமக்குட்படுத்தி, கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் மத். 4 : 4b

மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்.

## நற்செய்தி வாசகம்

இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டார்; வானதூதர் அவருக்குப் பணிவிடை புரிந்தனர்.

✠ 1 : 12-15

மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

அக்காலத்தில்:

ஆவியானவர் யேசுவைப் பாலைவனத்திற்குப் போகச் செய்தார். பாலைவனத்தில் அவர் சாத்தானால் சோதிக்கப்பட்டு நாற்பது நாள் இருந்தார். அங்குக் காட்டு விலங்குகளோடு இருந்தார். வானதூதர் அவருக்குப் பணிவிடை புரிந்தனர்.

அருளப்பர் சிறைப்பட்டபின் யேசு கலிலேயாவிற்கு வந்து, கடவுள் அருளிய நற்செய்தியை அறிவிக்கலானார். "காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கி விட்டது. மனந்திரும்பி, இந்நற்செய்தியை நம்புங்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு – 3 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களினத்தின் விசுவாசப் பிரமாணம்.

26:4-10

உப ஆகமத்திலிருந்து வாசகம்

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது:

"குரு கனிகளின் புதுப்பலனை உன் கையினின்று வாங்கி உன் கடவுளாகிய ஆண்டவரின் பலிபீடத்திற்கு முன்பாக வைக்கக்கடவான். நீயோ உன் ஆண்டவருடைய முன்னிலையில் வாய்விட்டுச் சொல்ல வேண்டியது என்னவென்றால்:

சீரிய நாட்டினன் ஒருவன் என் தந்தையைத் துன்புறுத்தியதினால் அவர் கொஞ்ச மக்களோடு எகிப்துக்குப்போய், அங்கே பெரிய பலத்த கணக்கிட முடியாத இனமானார். அப்பொழுது எகிப்தியர் நம்மை ஒடுக்கித் துன்புறுத்தி, சுமக்க முடியாச் சுமைகளை நம் மேல் சுமத்தினபோது, நாம்

நம் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட, அவர் நம்முடைய மன்றாட்டைக் கேட்டருளி, நமது சிறுமையையும் துன்பத்தையும் அவதியையும் பார்த்து, வலிய கரத்தாலும், ஓங்கிய புயத்தாலும் மிகப் பயங்கரத்திற்குரிய அடையாள அற்புத அதிசயங்களைக் காட்டி நம்மை எகிப்திலிருந்து புறப்படச் செய்தார். இவ்விடத்திற்கு நம்மை அழைத்து வந்து, பாலும் தேனும் பொழியும் இந்த நாட்டை நமக்குக் கொடுத்தார்.

அதனால் ஆண்டவர் எனக்குக் கொடுத்த நிலத்தினுடைய புதுப் பலனை நான் ஒப்புக் கொடுக்க வந்தேன் என்று சொல்லி, அதை உன் கடவுளாகிய ஆண்டவருடைய முன்னிலையில் வைத்து அவரைப் பணிந்து தொழக்கடவாய்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 90:1-2. 10-11. 12-13. 14-15 (பல்லவி: 15b காண்)*

பல்லவி: **துன்ப வேளையில் என்னோடு இரும், ஆண்டவரே.**

1 உன்னதரின் அடைக்கலத்தில் இருப்பவனே, எல்லாம் வல்லவரின் நிழலில் வாழ்பவனே,
2 நீ ஆண்டவரை நோக்கி, "நீரே என் புகலிடம், நீரே என் அரண்: என் இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்" என்று சொல். பல்லவி

10 தீமை உன்னை அணுகாது: துன்பம் உன் உறைவிடத்தை நெருங்காது.
11 ஏனெனில், நீ செல்லும் இடங்களில் எல்லாம், உன்னைக் காக்கும்படி தம் தூதருக்கு உன்னைக் குறித்துக் கட்டளையிட்டார். பல்லவி

12 உன் கால் கல்லில் மோதாதபடி, அவர்கள் உன்னைக் கைகளில் தாங்கிக் கொள்வார்கள்.
13 நச்சுப் பாம்பின்மீதும், விரியன் பாம்பின்மீதும் நடந்து செல்வாய்: சிங்கத்தையும் பறவை நாகத்தையுமே மிதித்துப் போடுவாய். பல்லவி

14 அவன் என்னையே சார்ந்திருப்பதால், அவனை விடுவிப்பேன்.
15 என் பெயரை அறிந்ததால், அவனைக் காப்பாற்றுவேன்; என்னை நோக்கிக் கூப்பிடுவான்; அவன் செபத்தைக் கேட்பேன்: துன்ப வேளையில் அவனோடு இருப்பேன்; அவனைத் தப்புவித்து பெருமைப்படுத்துவேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*கிறிஸ்துவில் விசுவசிக்கிறவனுக்குரிய விசுவாச அறிக்கை.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 10:8-13

*சகோதரர்களே :*

மறைநூலில் சொல்லியிருப்பது என்ன? "உன்னருகிலேயே உள்ளது வார்த்தை உன் வாயில் உள்ளது. உன் உள்ளத்திலேயே உள்ளது." அந்த வார்த்தை நாங்கள் அறிவிக்கிற விசுவாச அறிக்கையே. ஏனெனில், "இயேசு ஆண்டவர்" என உன் வாயினால் அறிக்கையிட்டு, "கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்" என உன் உள்ளத்தில் விசுவசித்தால், நீ மீட்புப் பெறுவாய். ஆம், உள்ளத்தால் விசுவசிப்பவன் இறைவனுக்கு ஏற்புடையவனாவான்; வாயினால் அறிக்கையிடுகிறவன், மீட்புப் பெறுவான். ஏனெனில், "அவர்மேல் விசுவாசம் வைக்கிறவனும் ஏமாற்றம் அடையான்" என்பது மறைநூல் வாக்கு.

யூதன் என்றோ, கிரேக்கன் என்றோ, வேறுபாடில்லை; அனைவர்க்கும் ஆண்டவர் ஒருவரே. அவரை நோக்கி மன்றாடுவோர் யாவர்க்கும் வள்ளன்மையுடையவர். "ஆண்டவருடைய பெயரைச் சொல்லி மன்றாடுபவன் எவனாயினும் அவன் மீட்புப்பெறுவான்" என்று எழுதியுள்ளதன்றோ?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் மத். 4:4b

மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று; கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்.

## நற்செய்தி வாசகம்

*பாலைவனத்துக்கு ஆவியானவரால் நடத்தப்பெற்றார், சோதிக்கப்பட்டார்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:1-13

*அக்காலத்தில் :*

யேசு பரிசுத்த ஆவியால் நிறைந்தவராய் யோர்தான் ஆற்றங்கரையினின்று திரும்பியபின், பாலைவனத்தில் தங்குமாறு ஆவியானவரால் நடத்தப்பெற்றார். அங்கு நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்

பட்டார். அந் நாட்களில் அவர் ஒன்றும் உண்ணவில்லை. அந்நாட்கள் கழிந்ததும், அவருக்குப் பசியெடுத்தது. அப்பொழுது அலகை அவரை நோக்கி, " நீர் கடவுளின் மகனுனால் அப்பமாக மாறும்படி இந்தக் கல்லுக்குச் சொல்லும்" என்றது. அதற்கு யேசு, 'மனிதன் உயிர்வாழ்வது அப்பத்தினால் மட்டுமன்று' என எழுதியிருக்கின்றதே" என்றார்.

பின்பு அலகை அவரை அழைத்துச் சென்று, உலக அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி, " இவற்றின் மேல் முழு அதிகாரத்தையும், இவற்றின் மகிமையையும் உமக்குக் கொடுப்பேன். ஏனெனில், இவை யாவும் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளன. என் விருப்பம்போல் எவருக்கும் இவற்றைக் கொடுக்க முடியும். எனவே, நீர் தெண்டனிட்டு என்னை வணங்கினால் இவை யாவும் உம்முடையவை ஆகும்' என்றது. அதற்கு யேசு, "'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவரை மட்டுமே ஆராதிப்பாயாக' என எழுதியிருக்கின்றதே" என்றார்.

பின்னர் அலகை அவரை யெருசலேமுக்குக் கூட்டிச் சென்று, கோயில் முகட்டில் நிறுத்தி, " நீர் கடவுளின் மகனுனால் இங்கிருந்து கீழே குதியும். ஏனெனில், 'உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்குக் கட்டளையிடுவார்' என்றும், 'உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்' என்றும் எழுதியுள்ளது" என்றது. அதற்கு யேசு, " உன் கடவுளாகிய ஆண்டவரை நீ சோதியாதே என்றும் சொல்லியிருக்கிறது" என்றார்.

இவ்வாறு, அலகை எல்லா விதத்திலும் யேசுவைச் சோதித்தபின் குறித்த காலம் வரும் வரைக்கும் அவரை விட்டுச் சென்றது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

**முறையோடு உன் பிறனுக்கு நீதி வழங்கு.**

லேவியராகமத்திலிருந்து வாசகம் 19:1-2, 11-18

ஆண்டவர் மோயீசனை நோக்கிக் கூறியதாவது :

"இஸ்ராயேல் மக்கள் எல்லாச் சபையாருக்கும் நீ சொல்ல வேண்டியதாவது : நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் ; நாம் பரிசுத்தராய் இருப்பதால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்.

களவு செய்யாதிர்கள். பொய் சொல்லாதிர்கள். எவனும் தன் பிறனை வஞ்சிக்கலாகாது. நமது பெயரைச் சொல்லி பொய்யாணையிடாதே; உன் கடவுளின் பெயரை அவமரியாதை செய்யாதே. நாம் ஆண்டவர். உன் பிறர் மீது அபாண்டம் சொல்லாமலும், அவனை வலுவந்தத்தால் வருத்தாமலும் இருப்பாயாக. உன் கூலியாளின் வேலைக்குக் கொடுக்க வேண்டிய கூலியை விடியற்காலை வரை உன்னிடம் வைத்திராதே. செவிடனைத் திட்டாமலும், குருடன் முன் இடறுகல் வைக்காமலும், உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சுவாயாக. ஏனென்றால், நாமே ஆண்டவர்.

அநீதி செய்யாதே. வழக்கிலே நீதிக்கு மாறாய்த் தீர்ப்பிடாதே. ஒருவன் ஏழையென்று கண்டு, அவனை அற்பமாய் எண்ணாதே. ஒருவன் பணக்காரனென்று பார்த்து முகத்தாட்சணியம் காட்டாதே. முறையோடு உன் பிறனுக்கு நீதி வழங்கு. நீ மக்களுக்குள்ளே குற்றம் சாட்டிக் கோள் சொல்லித் திரியாதே. உன் பிறனுடைய இரத்தப் பழிக்கு உள்ளாகாதே. நாம் ஆண்டவர்.

உன் சகோதரனை உன் இதயத்தில் பகைக்காதே. ஆனால், அவனுடைய பாவத்திற்கு நீ உடந்தையாகாதபடிக்கு வெளிப்படையாய் அவனுக்கு அறிவுரை சொல். பழிக்குப் பழி வாங்கத் தேடாதே. உன் மக்கள் உனக்கு அநீதி செய்தாலும், மனத்தில் பொருமை கொள்ளாதே. உனக்கு அன்பு செய்வதுபோல் உன் அயலானுக்கும் அன்பு செய். நாம் ஆண்டவர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 18 : 7, 8, 9, 14 (பல்லவி : அரு. 6 : 63b)

பல்லவி : ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்.

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது; ஆண்டவருடைய கட்டளை உறுதியானது, எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை; உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை; ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது. பல்லவி

9 ஆண்டவர் மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது; ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை. பல்லவி

14 எனக்கு அடைக்கலமும் என் மீட்பருமான ஆண்டவரே, உம் முன்னிலையில் என் வாய்மொழியும், என் இதயச் சிந்தனையும் உமக்கு உகந்தனவாகட்டும். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் 2 கொரிந். 6:2b

இதோ, ஏற்புடைய காலம் இதுவே;
இதோ, மீட்பின் நாள் இதுவே.

## நற்செய்தி வாசகம்

மிகச் சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கே நீங்கள்
செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்.

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 25 : 31-46

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது:

"வானதூதர் அனைவரும் புடைசூழ மனுமகன் தன் மாட்சிமையில் வரும்போது மாட்சி அரியணையில் வீற்றிருப்பார். அவர் முன்னிலையில் எல்லா இனத்தாரும் ஒன்று சேர்க்கப்படுவர். இடையன் செம்மறிகளையும் வெள்ளாடுகளையும் பிரிப்பதுபோல, அவர்களை வெவ்வேறாகப் பிரிப்பார். செம்மறிகளைத் தம் வலப்பக்கமும் வெள்ளாடுகளை இடப்பக்கமும் நிறுத்துவார்.

பின்னர், அரசர் தம் வலப்பக்கம் உள்ளோரை நோக்கி, 'வாருங்கள், என் தந்தையின் ஆசிபெற்றவர்களே, உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகுக. ஏனெனில், பசியாய் இருந்தேன், எனக்கு உணவு கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன், எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள், அன்னியனாய் இருந்தேன், என்னை வரவேற்றீர்கள், ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தினீர்கள், நோயுற்றிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள், சிறையில் இருந்தேன், என்னைக் காண வந்தீர்கள்' என்பார்.

அப்போது நீதிமான்கள் அவரிடம், 'ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாய் இருக்கக் கண்டு உணவு கொடுத்தோம்? தாகமாயிருக்கக் கண்டு குடிக்கக் கொடுத்தோம்? எப்பொழுது நீர் அன்னியனாய் இருக்கக் கண்டு வரவேற்றோம்? ஆடையின்றியிருக்கக் கண்டு உடுத்தினோம்? எப்பொழுது நீர் நோயுற்றோ சிறையிலோ இருக்கக் கண்டு, உம்மைப் பார்க்க வந்தோம்?' என்பார்கள். அதற்கு அரசர் அவர்களிடம் கூறுவார்: 'உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்.'

பின்னர், இடப்பக்கம் உள்ளோரை நோக்கி, 'சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்துள்ள முடிவில்லா நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில், நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவைக் கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன், எனக்குக் குடிக்கக் கொடுக்கவில்லை, அன்னியனாய் இருந்தேன், என்னை வரவேற்கவில்லை, ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தவில்லை, நோயுற்றும் சிறையில் இருந்தேன், என்னை பார்க்கவரவில்லை' என்பார்.

அப்பொழுது அவர்களும் அவரிடம், 'ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியனாகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருப்பதைக் கண்டு உமக்கு பணிவிடை செய்யாதிருந்தோம்?' என்பர். அவர் மறுமொழியாக, 'உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: சின்னஞ்சிறியவர் இவர்களுள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்யாது போனதெல்லாம் எனக்கே செய்யவில்லை' என்பார்.

எனவே, இவர்கள் முடிவில்லாத் தண்டனைக்கும், நீதிமான்கள் முடிவில்லா வாழ்வுக்கும் போவார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**நம் வார்த்தை நாம் விரும்பியதை எல்லாம் செய்து முடிக்கும்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *55 : 10-11*

ஆண்டவர் கூறுவதாவது :

"மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல், நிலத்தை நனைத்து செழிப்பாக்கி, அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து, விதைப்பவனுக்கு விதையும், உண்பவனுக்கு உணவும் தருகிறது. அவ்வாறே, நம் வாயினின்று புறப்படும் வார்த்தையும் இருக்கும். அது பயன் தராமல் நம்மிடம் திரும்பாது; நாம் விரும்பியதையெல்லாம் செய்து முடிக்கும்; எதற்காக நாம் அவை அனுப்புகிறோமோ, அதை நிறைவேற்றும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

## பதிலுரைப் பாடல்

*சங். 33 : 3-4. 5-6. 15-16. 17-18 (பல்லவி: 17b)*

பல்லவி : நீதிமான்களுக்கு நேரிட்ட எல்லாத் துன்பங்களினின்றும் இறைவன் அவர்களை விடுவித்தார்.

3 என்னோடு ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள் : எல்லோரும் சேர்ந்து
அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.
4 நான் ஆண்டவரைத் தேடினேன்; அவர் என் மன்றாட்டைக் கேட்டருளி
னார் : எல்லாவித அச்சத்தினின்றும் என்னை விடுவித்தார். பல்லவி

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள் : வெட்கத்தால் தலைகுனிய
மாட்டீர்கள்.
6 இதோ ! திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்:
எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார். பல்லவி

15 ஆண்டவருடைய கண்கள் நீதிமான்களை நோக்குகின்றன: அவருடைய
செவிகள் அவர்களது குரலைக் கேட்கின்றன.
16 ஆண்டவருடைய முகம் தீயோரை எதிர்த்து நிற்கின்றது: ஆண்டவர்
பூமியிலிருந்து அவர்களுடைய நினைவையே எடுத்து விடுவார். பல்லவி
17 நீதிமான்கள் கூக்குரலிட்டனர்; ஆண்டவர் அவர்களுக்குச் செவிசாய்த்தார்:
எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார்.
18 உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர்:
மனம் நைந்தவர்களைக் காத்தருள்வார். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் — மத். 4:4b

மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும்
ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் இவ்வாறு செபியுங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:7-15

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"செபம் செய்யும்பொழுது, புறவினத்தாரைப்போல் நீங்கள் பிதற்ற வேண்டாம். அதிகம் பேசுவதால் தங்கள் செபம் கேட்கப்படும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போல் இருக்க வேண்டாம். நீங்கள் கேட்பதற்கு முன்னமே உங்களுக்குத் தேவையானது இன்னது என்று உங்கள் தந்தைக்குத் தெரியும்.

ஆதலால், நீங்கள் இவ்வாறு செபியுங்கள்: வானகத்திலுள்ள எங்கள் தந்தாய், உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக, உமது அரசு வருக, உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக. எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை, நாங்கள் மன்னித்துள்ளதுபோல, எங்கள் குற்றங்களை மன்னித்தருளும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும்.

மனிதருடைய குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களாகில், உங்கள் வானகத் தந்தை உங்களையும் மன்னிப்பார். மனிதரை நீங்கள் மன்னியாவிடில், உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

*நினிவே மக்கள் தங்கள் தீநெறியை விட்டுத் திரும்பினார்கள்.*

இறைவாக்கினர் யோனாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 3:1-10

ஆண்டவர் யோனாசை நோக்கி, "நீ புறப்பட்டு நினிவே என்னும் மாநகருக்குப் போய் நாம் உனக்குச் சொல்லும் தூதுரையை அவர்களுக்கு அறிவி" என்றார். யோனாஸ் உடனே புறப்பட்டு ஆண்டவருடைய வார்த்தையின்படியே நினிவே நகருக்குப் போனார்; நினிவே ஒரு மாபெரும் நகரம்; அதன் ஒரு முனையிலிருந்து எதிர்முனைக்குச் செல்ல மூன்று நாளாகும். யோனாஸ் நகருக்குள் நுழைந்து, ஒருநாள் பயணம் செய்து, உரத்த குரலில், "இன்னும் நாற்பது நாட்களில் நினிவே வீழ்த்தப்படும்" என்று அறிவித்தார்.

நினிவே மக்கள் கடவுளை விசுவசித்தனர்; உடனே, உண்ணா நோன்பு இருக்கும்படி அறிக்கையிட்டனர்; பெரியோர்முதல் சிறியோர் ஈறாக அனைவரும் கோணியுடுத்திக் கொண்டனர். இந்தச் செய்தி நினிவே மன்னனுக்கு எட்டிற்று; அவனும் தன் அரியணையை விட்டிறங்கி, அரச ஆடையை அகற்றிவிட்டு கோணியுடுத்திச் சாம்பலில் அமர்ந்தான். மேலும் அறிக்கை யொன்று தயாரித்து நினிவே முழுவதும் விளம்பரப் படுத்தச் சொன்னான்: "அரசர், அவர் அமைச்சர்கள் ஆகியோரின் ஆணை யாவது: மனிதனோ மிருகமோ ஆடுமாடுகளோ எதையும் சுவைத்தலாகாது; உண்ணவோ நீர் பருகவோ கூடாது. மனிதன், மிருகம் எல்லாருமே கோணியாடை உடுத்திக்கொண்டு, கடவுளை நோக்கி உரத்த குரலில் கூவியழைக்கட்டும்; ஒவ்வொருவனும் தன் தீய வழியை விட்டுத் திரும்பட்டும்; தன் கைகளைக் கறைப்படுத்தும் வன்முறைச் செயல்களை விட்டொழிக்கட்டும். அப்போது ஒருவேளை ஆண்டவர் தம் மனத்தை மாற்றிக் கொண்டு, தம் கடுஞ்சினத்தை அமர்த்தக் கூடும்; நாமும் அழியாமல் தப்புவோம்."

அவர்கள் செய்ததைக் கடவுள் கண்டு, அவர்கள் தங்கள் தீநெறியை விட்டுத் திரும்பியதை அறிந்தார்; தாம் அவர்களுக்குச் செய்யப் போவதாகச் சொல்லியிருந்த தீங்கைக் குறித்துக் கடவுள் தம் மனத்தை மாற்றிக் கொண்டு, அதைச் செய்யாமல் விட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 50 : 1-2. 10-11. 16-17 (பல்லவி : 17b)

பல்லவி : தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும் : உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்குறைகளைப் போக்கிவிடும்.

2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கி விடும் : என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, என்னகத்தே உருவாக்கும் : உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.

11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளி விடாதேயும் : உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும். பல்லவி

16 ஏனெனில், பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை : தகனப்பலி கொடுத்தாலும் அதை நீர் ஏற்பதில்லை.

17 இறைவா, நான் உமக்குச் செலுத்த வேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே; தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் யோவேல் 2 : 12-13

ஆண்டவர் கூறுகிறார் : இப்பொழுதாவது உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்; ஏனெனில், நாம் அருளும் இரக்கமும் உள்ளவர்.

## நற்செய்தி வாசகம்

**இறைவாக்கினர் யோனாசின் அருங்குறியேயன்றி வேறெந்த அருங்குறியும் இத்தலைமுறைக்கு அளிக்கப்படாது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11 : 29-32

அக்காலத்தில் :

கூட்டம் பெருகப் பெருக, யேசு கூறலானார்: இத்தலைமுறை பொல்லாத தலைமுறை. அருங்குறி ஒன்று கேட்கிறது. யோனாஸ் இறைவாக்கினரின் அருங்குறியேயன்றி வேறெந்த அருங்குறியும் அதற்கு அளிக்கப்படாது. எவ்வாறு யோனாஸ் நினிவே மக்களுக்கு அருங்குறியாய் இருந்தாரோ, அவ்வாறே மனுமகனும் இத்தலைமுறைக்கு அருங்குறியாய் இருப்பார்.

தீர்வையின்போது தென்னாட்டு அரசி இத்தலைமுறையின் மக்களுக்கு எதிராக எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வாள். ஏனெனில், சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க உலகின் கடையெல்லையிலிருந்து வந்தாள். சாலொமோனிலும் மேலானது இதோ! இங்குள்ளது.

தீர்வையின்போது, நினிவே மக்கள் இத்தலைமுறைக்கு எதிராக எழுந்து இதனைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில், அவர்கள் யோனாஸ் உரைத்த தூதைக்கேட்டு மனந்திரும்பினார்கள். யோனாசிலும் மேலானது இதோ! இங்குள்ளது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

**ஆண்டவரே, உம்மையன்றி எனக்கு வேறு துணை ஏதுமில்லை.**

எஸ்தர் ஆகமத்திலிருந்து வாசகம் *14:13-5.12-14*

அந்நாட்களில் :

விரைவில் வரவிருந்த ஆபத்தைக் கண்டு அஞ்சிய எஸ்தர் அரசி ஆண்டவரிடம் சரண் அடைந்தாள்.

இந்நிலையில் அவள் இஸ்ராயேலின் கடவுளான ஆண்டவரை மன்றாடினாள்: "என் ஆண்டவரே, நீர் ஒருவரே எங்கள் அரசர்! திக்கற்ற உம் அடியாளுக்கு உதவி புரிந்தருளும். உம்மையன்றி எனக்கு வேறு துணை ஏது? என் ஆபத்து என் கைகளிலேயே இருக்கின்றது. உமக்கு நித்திய உரிமையாய் இருக்கும்படி எல்லா மக்களினின்றும் இஸ்ராயேலையும், அவர்களின் முன்னோர் அனைவரினின்றும் எங்கள் முன்னோரையும் தேர்ந்தெடுத்தீர் என்று என் தந்தையிடமிருந்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆண்டவரே, எங்களை நினைவுகூர்ந்து, எங்களது இடுக்கண் வேளையில் உம்மையே எங்களுக்கு வெளிப்படுத்தியருளும். ஆண்டவரே, தெய்வங்களுக்கெல்லாம் அரசரே, எல்லாம் வல்லவரே, அடியேனுக்குத் திடம்

அளித்தருளும். சிங்கத்தின் முன் எனக்கு நாவன்மையை அளித்தருளும். எங்கள் பகைவனும் அவனைச் சேர்ந்தவர்களும் அடியோடு அழியும்படி அவன் அவர்களைப் பகைக்கச் செய்தருளும்.

எங்களையோ கைகொடுத்துக் காத்தருளும். எல்லாம் அறியும் ஆண்டவரே, உம்மையன்றி வேறு துணை ஏதுமில்லாத எனக்கு உதவி புரிந்தருளும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங் 137:1-2a. 2bc. 3. 7c-8 (பல்லவி: 3a)

பல்லவி: ஆண்டவரே, நான் உம்மைக் கூவியழைத்த நாளில், என் மன்றாட்டைக் கேட்டருளினீர்.

1 ஆண்டவரே, என் முழு மனதுடன் உம்மைப் போற்றிப் புகழ்வேன்:
ஏனெனில் நான் வாய் திறந்து உம்மிடம் சொன்னதைக் கேட்டருளினீர்;
வான் தூதர் முன்னிலையில் உமக்குப் புகழ்பாடுவேன்.
2 உமது புனித ஆலயத்தில் உம்மை ஆராதிப்பேன். பல்லவி

உமது இரக்கத்தையும் சொல்லுறுதியையும் நினைத்து, உமது திருப்பெயரைப் புகழ்வேன்.

3 நான் உம்மைக் கூவியழைத்த நாளில் என் மன்றாட்டைக் கேட்டருளினீர்:
என் ஆன்மாவுக்கு மேன்மேலும் வலிமை தந்தருளினீர். பல்லவி

7 உமது வலக்கரம் என்னைக் காப்பாற்றும்.
8 ஆண்டவர் தாம் தொடங்கிய வேலையை எனக்கெனச் செய்து முடிப்பார்:
ஆண்டவரே, உமது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது; உம் படைப்புகளைக் கைவிடாதேயும். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் சங். 50: 10a. 12a.

தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்;
உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்.

## நற்செய்தி வாசகம்

**கேட்கிற எவனும் பெறுகிறான்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:7-12

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்கிற எவனும் பெறுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

தன் மகன் அப்பம் கேட்டால் ஒருவன் கல்லைக் கொடுப்பானா? உங்களில் யாராவது அப்படிச் செய்வானா? அல்லது அவன் மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பானா? ஆகவே, தீயோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிவீர்களானால், வானகத்திலுள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்பவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய் நன்மை செய்வார் !

ஆகையால் உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் இதுவே."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

**அக்கிரமி தன் தீயவழியை விட்டு மனந்திரும்பி உயிர்வாழ வேண்டும் என்பதல்லாது, அவன் சாகவேண்டும் என்பது நம் விருப்பமோ?**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 18:21-28

ஆண்டவராகிய இறைவன் கூறுவதாவது :

" அக்கிரமி ஒருவன் தான் செய்த பாவங்களையெல்லாம் வெறுத்துத் தள்ளிவிட்டு, நம் கற்பனைகளைக் கடைப்பிடித்து, சட்டம் சொல்வதையும் சரியானதையும் செய்வானாயின், அவன் உயிர் வாழ்வான் என்பது உறுதி;

அவன் சாகான்; அவன் ஏற்கெனவே செய்த தவறுகளை நினைக்கமாட்டோம்; அவன் கடைப்பிடித்த நீதியினால் உயிர் வாழ்வான். அக்கிரமி சாக வேண்டும் என்பது நம் விருப்பமோ? அவன் தன் தீய வழியை விட்டு மனந்திரும்பி உயிர் வாழவேண்டும் என்பதல்லவா நமது விருப்பம்.

நீதிமான் ஒருவன் தன் நீதி நெறியை விட்டு அக்கிரமியைப்போல் எல்லா வகையான பாவங்களையும் செய்தால், அவன் உயிர் வாழ்வானோ? அவன் ஏற்கெனவே செய்த நீதியான செயல்களில் ஒன்றையும் நாம் நினைக்கமாட்டோம். அவன் செய்த துரோகத்திலும் கட்டிக்கொண்ட பாவத்திலுமே அவன் சாவான். ஆயினும் நீங்கள், 'ஆண்டவர் நடந்து கொள்வது நீதியில்லை' என்று சொல்வீர்களோ? இஸ்ராயேல் வீட்டாரே, கேளுங்கள்: நமது வழியா நீதியானதில்லை? நீதியற்ற வழி உங்கள் வழியே அல்லவா?

நீதிமான் தன் நீதிநெறியை விட்டு விலகி, அநீதியைச் செய்தால், அதன் காரணமாய்ச் சாவான்; தான் செய்த அநீதியாலேயே சாவான். தீயவன் தான் நடந்த தீயவழியை விட்டு விலகி நீதி நெறியில் நடந்து, சட்டம் சொல்வதையும் சரியானதையும் செய்தால், தன்னையே காத்துக் கொள்வான். தன் நிலையை எண்ணிப் பார்த்து, தான் முன்செய்த அக்கிரமங்களையெல்லாம் விலக்கினதால், அவன் உயிர் வாழ்வான் என்பது உறுதி; அவன் சாகான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 129:1-2. 3-4. 5-6ac-7a. 7b-8. (பல்லவி : 3)

பல்லவி : ஆண்டவரே, யான் செய்த பாவங்களை நினைவுகூர்வீராகில்
ஆண்டவரே, உமக்குமுன் யார் நிற்க முடியும்?

1 ஆண்டவரே, அளவிலா வேதனையில் உம்மை நோக்கிக் கூவி அழைக்கிறேன்.
2 ஆண்டவரே, என் கூக்குரலுக்குச் செவி சாய்த்தருளும்: என் வேண்டுதலின்
குரலை உம் செவிகள் கவனமுடன் கேட்கட்டும். பல்லவி

3 ஆண்டவரே, யான் செய்த பாவங்களை நினைவுகூர்வீராகில், உமக்குமுன்
யார் நிற்க முடியும்?
4 வணக்கமுடன் நாங்கள் உமக்கு ஊழியம் செய்யுமாறு, நீர் பாவங்களை
மன்னிக்கிறீர். பல்லவி

5 ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன் : அவரது வாக்குறுதியில் என் ஆன்மா நம்பிக்கை கொண்டுள்ளது.

6 என் ஆன்மா ஆண்டவரை எதிர் நோக்குகின்றது. காவலர் உதயத்தை எதிர்பார்ப்பதற்கு மேலாக, இஸ்ராயேலர் ஆண்டவரை எதிர்பார்ப்பார்களாக.

பல்லவி

7 ஏனெனில், ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது ; அவருடைய மீட்புத் துணை பொங்கி வழிகின்றது.

8 இஸ்ராயேலரை அவர் மீட்பார் : அவர்கள் செய்த பாவங்கள் அனைத்தினின்றும் அவர்களை மீட்டுக் கொள்வார்.

பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் எசேக். 18 : 31

நீங்கள் செய்த துரோகங்களையெல்லாம் உங்களுக்குத் தூரமாக எறிந்து விடுங்கள், புதிய உள்ளத்தையும் புதிய மனத்தையும் உங்களுக்கெனப் படைத்துக் கொள்ளுங்கள், என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

**முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்து கொள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5 : 20-26

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :

"மறைநூல் அறிஞர், பரிசேயர் இவர்களின் ஒழுக்கத்தைவிட உங்கள் ஒழுக்கம் சிறந்திராவிடில், விண்ணரசு சேரமாட்டீர்கள். 'கொலை செய்யாதே, கொலை செய்வோன் தீர்ப்புக்குள்ளாவான்' என்று முன்னோர்க்குச் சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன் : தன் சகோதரனிடம் சினம் கொள்வோன் தீர்ப்புக்குள்ளாவான். தன் சகோதரனை 'முட்டாள்' என்பவன் தலைமைச் சங்கத் தீர்ப்புக்குள்ளாவான். அவனை 'மதிகெட்டவனே' என்பவனோ எரிநரகத்திற்குள்ளாவான்.

நீ பீடத்தின் மேல் காணிக்கை செலுத்த வரும்பொழுது, உன் சகோதரனுக்கு உன்மீது மனத்தாங்கல் இருப்பதாக அங்கே நினைவுற்றால், அங்கேயே, பீடத்தின்முன், உனது காணிக்கையை வைத்து விட்டு முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்துகொள். பின்னர் வந்து, உன் காணிக்கையைச் செலுத்து.

நீ உன் எதிரியோடு போகும்போது, வழியிலேயே அவனுடன் விரைவாகச் சமரசம் செய்துகொள். இல்லையேல், உன் எதிரி உன்னை நீதிபதியிடம் கையளிக்க, நீதிபதி உன்னைக் காவலனிடம் கையளிக்கக் கூடும்; நீ சிறையில் அடைபட நேரிடும். உறுதியாகவே உனக்குச் சொல்லுகிறேன்: கடைசிக் காசை நீ கொடுத்துத் தீர்க்கும்வரை, அங்கிருந்து வெளியேறமாட்டாய்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

*நீ உன் இறைவனாகிய ஆண்டவருடைய புனித மக்களாய் இருப்பாயாக.*

உப ஆகமத்திலிருந்து வாசகம் 26:16-19

மோயீசன் மக்களை நோக்கிக் கூறியதாவது:

"இந்தக் கட்டளைகளையும் இந்த நீதி நியாயங்களையும் நீ கைக்கொண்டு, உன் முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் அனுசரித்து நிறைவேற்ற வேண்டுமென்று உன் கடவுளாகிய ஆண்டவர் இன்று உனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

ஆண்டவர் எனக்குக் கடவுளாக இருப்பார் என்றும், நான் அவர் வழிகளில் நடந்து அவருடைய சடங்கு ஆசாரங்களையும் நீதி முறைமைகளையும் நியாயங்களையும் கைக்கொண்டு அனுசரிப்பேன் என்றும், அவர் கற்பித்தபடி நடப்பேன் என்றும் நீ இன்று அவருக்கு வாக்குறுதி கொடுத்தாய்.

ஆண்டவரும்: நீ நம்முடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு அனுசரிப்பாயாயின், நாம் முன் சொல்லியவண்ணமே உன்னைச் சொந்த மக்களாக வைத்துக் கொள்கிறோம் என்றும், நாம் நம்முடைய புகழ்ச்சி கீர்த்தி மகிமைக்காகப் படைத்த எல்லா இனத்தவரைக் காட்டிலும் உன்னை உயர்ந்த இனமாய் இருக்கும்படி செய்வோம் என்றும், நாம் சொல்லியபடியே நீ ஆண்டவருடைய புனித மக்களாய் இருப்பாய் என்றும், அவர் இன்று உனக்கு வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 119: 1-2. 4-5. 7-8 (பல்லவி: 1 காண்)

பல்லவி: ஆண்டவரின் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.

மாசற்ற வழியில் நடப்போர் பேறு பெற்றோர்; ஆண்டவர் தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறு பெற்றோர்.
அவருடைய ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர்; முழு மனத்தோடு அவரைத் தேடுவோர் பேறு பெற்றோர். பல்லவி

நீர் உம் கட்டளைகளைத் தந்தீர்: அவற்றை முற்றிலும் கடைப்பிடிக்க வேண்டுமென்றீர்.
உம்முடைய நியமங்களை நான் கடைப்பிடிக்க, என் நடத்தை உறுதியுள்ளதாய் இருந்திருந்தால் எவ்வளவோ நலம்! பல்லவி

நேரிய உள்ளத்தோடு நான் உம்மைப் போற்றிப் புகழ்வேன்: உம் நீதி மிக்க விதிகளை நான் கற்றுக் கொண்டு போற்றிப் புகழ்வேன்.
உம் நியமங்களைக் கடைப்பிடிப்பேன்: என்னை எந்நாளும் கைவிடாதேயும். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் 2 கொரிந். 6:2b.

இதோ, ஏற்புடைய காலம் இதுவே; இதோ, மீட்பின் நாள் இதுவே.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் வானகத் தந்தையைப்போல நிறைவுள்ளவர்களாய் இருங்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:43-48.

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"அயலானுக்கு அன்பு; பகைவனுக்கு வெறுப்பு" என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்: உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள் அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறார். நீதியுள்ளோர் மேலும், நீதியற்றோர் மேலும், மழை பொழியச்செய்கிறார்.

உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? ஆயக்காரரும் இவ்வாறே செய்வதில்லையா? உங்கள் சகோதரருக்கு மட்டும் வணக்கம் செய்வீர்களாகில், நீங்கள் என்ன பெரிய காரியம் செய்கிறீர்கள்? புறவினத்தாரும் இவ்வாறே செய்வதில்லையா?

ஆதலால், உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல், நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# தவக் காலம் – 2ஆம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*இறை மக்களுக்குத் தந்தையாகிய ஆபிரகாம் அழைக்கப் பெறுதல்.*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 12 : 1-4a

அந்நாட்களில் :

ஆண்டவர் ஆபிராமை நோக்கிக் கூறியதாவது :

"நீ உன் நாட்டையும், உன் இனத்தையும், உன் தந்தையின் வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காட்டவிருக்கிற நாட்டிற்குப் போகக்கடவாய். நாம் உன்னைப் பெருங் குடியாய்ப் பெருகச் செய்து, உன்னையும் ஆசீர்வதித்து, உன் பெயரையும் மேன்மைப்படுத்துவோம். நீ ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிப்பவர்களை நாம் ஆசீர்வதிப்போம். உன்னைச் சபிப்பவர்களை நாமும் சபிப்போம். மேலும் பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழியாய் ஆசீர்வதிக்கப்படும்" ஆண்டவர் தமக்குக் கட்டளையிட்டவாறு ஆபிராம் புறப்பட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32 : 4-5. 18-19. 20,22 (பல்லவி : 22)

பல்லவி : **ஆண்டவரே, நாங்கள் உம்மை நம்பியிருக்கும் அளவுக்கு உம் இரக்கம் எம்மீது இருப்பதாக.**

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது: அவருடைய
செயல்கள் எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்: அவருடைய அருளால் பூமி
நிறைந்துள்ளது. பல்லவி

15 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார்: தமது அருளை
நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.
19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்ச காலத்தில் அவர்களுக்கு
உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார். பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது. அவரே நமக்கு
உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.
22 ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக. நாங்கள் உம்மை நம்பி
யிருக்கும் அளவுக்கு உம் இரக்கமும் இருப்பதாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இறைவன் நம்மை அழைத்து, நம்மீது ஒளி வீசுகிறார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 1:8b-10

அன்புக்குரியவரே :

கடவுளின் வல்லமை பெற்று நற்செய்திக்காக என்னோடு துன்புறத் தயங்காதீர். கடவுள் நம்மை மீட்டு நமக்குப் பரிசுத்த அழைப்பை அளித்துள்ளார். நம்முடைய செயல்களை முன்னிட்டு அவ்வாறு செய்ய வில்லை; தாமே வகுத்த திட்டத்திற்கும் தமது அருளுக்கும் ஏற்பவே அவ்வாறு செய்தார். இவ்வருள் எல்லாக் காலங்களுக்கு முன்னரே கிறிஸ்து யேசுவில் நமக்குக் கொடுக்கப்பட்டது.

இக்காலத்தில் நம் மீட்பாரம் கிறிஸ்து யேசு உலகுக்குப் பிரசன்னமானதால் வெளிப்படையாயிற்று. அவர் சாவை அழித்து, சாவே அறியா வாழ்வை நற்செய்தியின் வழியாய் ஒளிரச் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம்

ஒளிரும் மேகத்திலின்று தந்தையின் குரலொலி கேட்டது: "இவரே என் அன்பார்ந்த மகன்; இவருக்குச் செவிசாயுங்கள்."

## நற்செய்தி வாசகம்

**அவரது முகம் கதிரவனைப்போல் ஒளி வீசியது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17:1-9

அக்காலத்தில்:

யேசு இராயப்பரையும் யாகப்பரையும், அவர் சகோதரர் அருளப்பரையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு ஒதுக்கமாய்க் கூட்டிக் கொண்டு போய், அவர்கள்முன் உருமாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளி வீசியது. அவர் ஆடைகள் ஒளியைப்போல் வெண்மையாயின. இதோ! மோயீசனும் எலியாசும் அவர்களுக்குத் தோன்றி அவரோடு உரையாடிக்கொண்டிருந்தனர். இராயப்பர் யேசுவை நோக்கி, "ஆண்டவரே, நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று! நீர் விரும்பினால் உமக்கு ஒன்றும், மோயீசனுக்கு ஒன்றும், எலியாசுக்கு ஒன்றுமாக இங்குக் கூடாரம் மூன்று அமைப்பேன்" என்று சொன்னார்.

அவர் பேசிக் கொண்டிருக்கையிலே, இதோ! ஒளிரும் மேகம் ஒன்று அவர்கள் மேல் நிழலிட்டது. "இவரே என் அன்பார்ந்த மகன்! இவரிடம் நான் பூரிப்படைகிறேன்: இவருக்குச் செவிசாயுங்கள்" என்ற குரலொலி, இதோ! மேகத்திலிருந்து கேட்டது. இதைக் கேட்ட சீடர் குப்புற விழுந்து பெரிதும் அஞ்சினர். யேசு அணுகிவந்து அவர்களைத் தொட்டு, "எழுந்திருங்கள், அஞ்ச வேண்டாம்" என்றார். அவர்கள் ஏறெடுத்துப் பார்த்தபோது யேசுவையன்றி வேறு எவரையும் காணவில்லை.

அவர்கள் மலையினின்று இறங்கும்பொழுது, "மனுமகன் இறந்தோரிடமிருந்து உயிர்க்கும் வரை இக்காட்சியை எவருக்கும் சொல்ல வேண்டாம்" என்று யேசு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

நம் முதுபெரும் தந்தை ஆபிரகாமின் பலி.

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 22: 1-2, 9a, 10-13, 15-18

அந்நாட்களில்:

கடவுள் ஆபிரகாமைச் சோதித்தபொழுது, அவரை: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட்டார்.

அவர்: அடியேன் தயார் என்று கூற, அவர்: நீ அதிகம் அன்பு செய்யும் உன் ஒரே புதல்வனான ஈசாக்கைத் தரிசனப் பூமிக்குக் கூட்டிக் கொண்டு போய், அங்கே நாம் உனக்குக் காட்டும் ஒரு மலையின் மீது அவனைத் தகனப்பலியாக ஒப்புக் கொடுப்பாய் என்று மொழிந்தருளினார்.

கடவுள் ஆபிரகாமுக்குக் காண்பித்திருந்த இடத்தை அவர்கள் அடைந்ததும், அவர் அங்கே ஒரு பீடம் அமைத்து அதன்மேல் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டி, பீடத்தில் அடுக்கியிருந்த விறகுக் கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தி, அவனைப் பலியிடத் தம் கையை நீட்டி வாளை உருவினார்.

அப்பொழுது ஆண்டவருடைய தூதர் ஒருவர் வானத்தினின்று: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட, அவர் அடியேன் தயார் என்று பதில் கூறினார். அவர்: உன் பிள்ளையின்மேல் கையோங்கி அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ தெய்வ பயமுடையவனாய், நம் பொருட்டு உன் ஒரே மகனையும் பலியிடத் தயங்கவில்லை என்று நாம் இப்போது அறிந்து கொண்டோம் என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை ஏறெடுத்துத் திரும்பிப் பார்க்கையில், முட்செடியிலே கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக் கிடாயைக் கண்டார்; அதைப் பிடித்துத் தம் மகனுக்குப் பதிலாகத் தகனப் பலியாய் ஒப்புக் கொடுத்தார்.

ஆண்டவருடைய தூதர் வானத்தினின்று மீண்டும் ஆபிரகாமைக் கூப்பிட்டு: ஆண்டவர் சொல்லுகிறதாவது: நம் பெயரைச் சொல்லி நாம் ஆணையிட்டு வாக்குறுதி செய்வது ஏதெனில், நீ அச்செயலைச் செய்த

தனுலும், நம்மைப்பற்றி நீ உன் ஒரே மகனையும் பலியிட மனம் துணிந்த தனுலும், நாம் உன்னை ஆசீர்வதித்து, விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் இனம் பெருகச் செய்வோம். உன் இனம் தன் பகைவர்களின் வாயில்களை உரிமையாக்கிக்கொள்ளும். அன்றியும், நீ நமது சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததினுல் பூமியிலுள்ள எல்லா இனத்தாரும் உன் சந்ததி வழியாக ஆசீர்வதிக்கப்படும்" என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 115:1,6,7-8.9-10 (பல்லவி: 114:9)*

பல்லவி: நான் ஆண்டவர் திருமுன் நடந்திடுவேன்;
வாழ்வோர் நாட்டில் வாழ்ந்திடுவேன்.

1 'மிக மிகத் துன்புறுகிறேன்! என்று சொன்னபோதுங்கூட நான் ஆண்டவரை நம்பினேன்.

6 ஆண்டவர்தம் அடியாரின் மரணம், அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது. பல்லவி

7 ஆண்டவரே, நான் உம் ஊழியன்; உம் அடியேன்; உம் அடியாளின் மகன்: என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்.

8 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்: ஆண்டவருடைய திருப்பெயரைக் கூவி அழைப்பேன். பல்லவி

9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

10 ஆண்டவருடைய ஆலயத்தின் முற்றங்களிலும், யெருசலேமே, உன் நடுவிலும் ஆண்டவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கடவுள் தம் சொந்த மகனென்றும் பார்க்கவில்லை.**

✠ அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *8:31b-34*

சகோதரர்களே:

கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நம்மை எதிர்த்து நிற்பவர் யார்? தம்சொந்த மகனென்றும் பாராமல், நம் அனைவருக்காகவும் அவரைக் கையளித்த அவர், தம் மகனேடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்

பாரோ? கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களுக்கு எதிராய் எவன் குற்றம் சாட்டக்கூடும்? அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கடவுளே சொல்லும்போது, தண்டனைத் தீர்ப்புக் கூறுபவர் யார்? கிறிஸ்து யேசு நமக்காக உயிர் நீத்தார், ஏன், உயிர்ப்பிக்கவும் பெற்றார். இந்தக் கிறிஸ்துவே கடவுளின் வலப்பக்கத்தில் இருந்து நமக்காகப் பரிந்து பேசுகிறார்.''

**இது ஆண்டவரின் அருள்வாக்கு.**

நற்செய்திக்கு முன் வசனம்

**ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது: "இவரே என் அன்பார்ந்த மகன்; இவருக்குச் செவிசாயுங்கள்''.**

## நற்செய்தி வாசகம்

**இவரே என் அன்பார்ந்த மகன்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9:2-10

அக்காலத்தில்:

யேசு இராயப்பரையும் யாகப்பரையும் அருளப்பரையும் அழைத்து ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையில் ஒதுக்கமாய்க் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுக்குமுன் உருமாறினார். அவர் ஆடைகள் வெள்ளைவெளேரென ஒளி வீசின. இவ்வுலகில் எந்தச் சலவைக்காரனும் அதுபோல வெளுக்க முடியாது. எலியாசும் மோயீசனும் அவர்களுக்குத் தோன்றி, யேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தனர்.

இராயப்பர் யேசுவை நோக்கி, "ராபி, நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று! உமக்கு ஒன்றும் மோயீசனுக்கு ஒன்றும் எலியாசுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரம் அமைப்போம்'' என்றார். தாம் சொல்வது இன்னதென அறியாமலே சொன்னார். ஏனெனில், அவர்கள் பேரச்சம் கொண்டிருந்தனர்.

அப்போது மேகம் ஒன்று வந்து அவர்கள்மேல் நிழலிட, "இவரே என் அன்பார்ந்த மகன், இவருக்குச் செவிசாயுங்கள்'' என்ற குரலொலி மேகத்திலிருந்து கேட்டது. அவர்கள் உடனே சுற்றிலும்பார்த்தபோது, தங்கள் அருகில் யேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை.

மலையினின்று அவர்கள் இறங்கும்பொழுது, மனுமகன் இறந்தோரிடமிருந்து உயிர்க்கும்போதன்றி, அவர்கள் கண்டவற்றை ஒருவருக்கும் வெளிப்படுத்தக்கூடாது என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

அவர்கள் அவ்வார்த்தையை மனத்தில் இருத்தி, "இறந்தோரிடமிருந்து உயிர்க்கும்போது" என்பதன் பொருள் என்ன என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**கடவுள் பிரமாணிக்கமுள்ள ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்தார்.**

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *15:5-12. 17-18*

அந்நாட்களில்:

ஆண்டவர் ஆபிரகாமை வெளியே அழைத்துக் கொண்டு போய், "நீ வானத்தை அண்ணாந்து பார். கூடுமாயின் விண்மீன்கள் எத்தனை யென்று எண்ணிப்பார். உன் சந்ததி அவ்வளவு இருக்கும்" என்றார். ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார். அது அவருக்கு நீதியாக எண்ணப் பட்டது.

"மீண்டும் கடவுள் அவரை நோக்கி, இந்நாட்டை உனக்குக் கொடுக்கும்படியாகவும், அதனை நீ உரிமையாக்கிக் கொள்ளும்படியாகவும் அல்லவா ஆண்டவராகிய நாம் ஊர் என்னும் கல்தேயர் நகரிலிருந்து உன்னை வெளிக் கொணர்ந்தோம்?" என்றார். அதற்கு அவர், ஆண்டவ ராகிய கடவுளே, நான் இதனை உரிமையாக்கிக் கொள்வேனென்று எப்படி அறிவேன் என்று கேட்டார். அண்டவர் அவருக்கு மறுமொழியாக, மூன்று வயது கிடாரி ஒன்றும், மூன்று வயதுள்ள வெள்ளாடு ஒன்றும் காட்டுப் புரு ஒன்றும், மாடப்புரு ஒன்றும் நம்மிடம் கொண்டு வா என்றார். அவற்றையெல்லாம் அவர் கொண்டுவந்து, அவற்றை நடுவே வெட்டித் துண்டங்களை ஒன்றிற்கொன்று எதிராக வைத்தார். பறவை களையோ அவர் துண்டிக்கவில்லை. வானத்துப் பறவைகள் அந்த உடல் களின்மேல் வந்திறங்கின. அவற்றை ஆபிரகாம் துரத்திக்கொண்டிருந்தார்.

பின் சூரியன் மறையும் வேளையில் ஆபிரகாமுக்கு அயர்ந்த தூக்கம் உண்டானது. பெரும் திகிலும் காரிருளும் அவரைச் சூழ்ந்து கொண்டன. சூரியன் மறைந்து காரிருள் உண்டானபின், புகைகின்ற ஒரு சூளையும், மேற் சொல்லப்பட்ட துண்டங்களின் நடுவே உலாவி நின்ற நெருப்பு மயமான ஒரு விளக்கும் காணப்பட்டன.

அந்நாளில் ஆண்டவர் ஆபிராமோடு உடன்படிக்கை செய்து: "எகிப்தின் நதிமுதல் யூப்பிரத்தீஸ் மாநதிவரையிலுள்ள இந்த நாட்டை உன் சந்ததியாருக்குத் தருவோம்" என்றருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 26:1. 7-8. 9abc. 13-14 (பல்லவி: 1a)

பல்லவி: ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு: நான் யாருக்கு அஞ்ச வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான் நடுங்க வேண்டும்?

பல்லவி

7 ஆண்டவரே, நானும்மை நோக்கி எழுப்பும் குரலைக் கேட்டருளும்; என் மீது அருள்கூரும், என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.
8 என் உள்ளம் உம்மோடு உரையாடுகிறது; உம்மை நான் பார்க்க விரும்புகிறேன்: ஆண்டவரே, நீர் எனக்கு இன்முகம் காட்ட வேண்டுமென விழைகிறேன்.

பல்லவி

9 உம் முகத்தை எனக்கு மறைத்துக் கொள்ளாதேயும்: சினம் கொண்டு உம் அடியானைத் தள்ளிவிடாதேயும். நீரே எனக்குத் துணை, என்னைத் தள்ளி விடாதேயும்.

பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில், ஆண்டவருடைய நலன்களைக் காண்பேனென நம்புகிறேன்.
14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனுயிரு: உன் உள்ளம் திடம் கொள்வதாக. ஆண்டவரை எதிர்பார்த்திரு.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

*கிறிஸ்து நம்மை மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3:17-4:1

சகோதரர்களே:

நீங்கள் அனைவரும் ஒருமிக்க என்னைப்போல் நடங்கள், நாங்கள் உங்களுக்கு முன்மாதிரி. அந்த முன்மாதிரியைப் பின்பற்றுபவர்களைக்

கவனியுங்கள். கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகளாய் நடப்போர் பலர் உள்ளனர். இதை உங்களுக்குப் பலமுறை கூறியுள்ளேன்; இப்போதும் கண்ணீரோடு சொல்லுகிறேன். அழிவே அவர்கள் முடிவு. வயிறே அவர்கள் கடவுள், மானக்கேடே அவர்கள் மகிமை. அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்ததே.

நமக்கோ வானகமே தாய்நாடு. அங்கிருந்து மீட்பர் வருவாரெனக் காத்திருக்கிறோம். ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவே அந்த மீட்பர். அவர் அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்த வல்ல ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை, மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்.

ஆகவே என் அன்புச் சகோதரர்களே, என் வாஞ்சைக்குரியவர்களே, நீங்களே என் மகிழ்ச்சி, நீங்களே என் வெற்றிவாகை. அன்புக்குரியவர்களே, நான் கூறியவாறு ஆண்டவருக்குள் நிலைத்திருங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

30:20–4:1

சகோதரர்களே :

நமக்கோ வானகமே தாய்நாடு. அங்கிருந்து மீட்பர் வருவாரெனக் காத்திருக்கிறோம். ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவே அந்த மீட்பர். அவர் அனைத்தையும் தமக்குக் கீழ்படுத்த வல்ல ஆற்றலால் தாழ்வுக்குரிய நம் உடலை, மாட்சிமைக்குரிய தம் உடலின் சாயலாக உருமாற்றுவார்.

ஆகவே, என் அன்புச் சகோதரர்களே, என் வாஞ்சைக்குரியவர்களே, நீங்களே என் மகிழ்ச்சி, நீங்களே என் வெற்றி வாகை. அன்புக்குரியவர்களே, நான் கூறியவாறு ஆண்டவருக்குள் நிலைத்திருங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

நற்செய்திக்கு முன் வசனம்

ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது; “இவரே என் அன்பார்ந்த மகன்; இவருக்குச் செவிசாயுங்கள்.”

## நற்செய்தி வாசகம்

**அவர் செபித்துக்கொண்டிருக்கும்பொழுது,**
**அவரது முகத்தோற்றம் மாறியது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9:28b-36

அக்காலத்தில்:

யேசு இராயப்பரையும் யாகப்பரையும் அருளப்பரையும் அழைத்துக்கொண்டு செபம் செய்ய மலைமீது ஏறினார். அவர் செபித்துக் கொண்டிருக்கும்பொழுது அவரது முகத்தோற்றம் மாறியது. அவரது ஆடையும் வெண்மையாய் ஒளி வீசியது. இதோ! அவருடன் இருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் மோயீசனும் எலியாசும். அவர்கள் விண்ணொளியிடையே தோன்றி,யெருசலேமில் நிறைவேறப்போ கின்ற அவருடைய இறுதிப் பயணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இராயப்பரும் அவரோடு இருந்தவர்களும் தூக்க மயக்கமாயிருந்தனர். விழித்தெழுந்து, அவருடைய மாட்சிமையையும், அவரோடு நின்ற இருவரையும் கண்டனர்.

அவ்விருவரும் அவரை விட்டுப் பிரியும்பொழுது இராயப்பர் யேசு விடம், "குருவே, நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று! உமக்கொன்றும் மோயீசனுக்கொன்றும், எலியாசுக்கொன்றுமாகக் கூடாரம் மூன்று அமைப்போம்" என்று தாம் சொல்லுவது இன்னதென்று அறியாமல் கூறினார். அவர் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்பொழுது, மேகம் ஒன்று வந்து அவர்கள்மேல் நிழலிட்டது. அவர்கள் அம்மேகத்தினுள் நுழையும் போது, சீடர்கள் அச்சம் கொண்டனர்.

அப்பொழுது, "இவரே என் மகன், நான் தேர்ந்துகொண்டவர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்" என்ற குரலொலி மேகத்திலிருந்து கேட்டது. அக்குரலொலி கேட்டபொழுது யேசு மட்டும் இருந்தார். அவர்களோ தாம் கண்டவற்றை அந்நாட்களில் ஒருவரிடமும் சொல்லாமல் மௌனங்காத்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

**நாங்கள் பாவம் செய்தோம். அக்கிரமம் புரிந்தோம்.**

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 9:4b-10

ஆண்டவரே, உமக்கு அன்பு செய்து, உம்முடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறவர்களுடன் உடன்படிக்கையைக் காத்து இரக்கம் காட்டுகிறவராகிய அஞ்சத்தக்க மகிமை மிக்க இறைவா, நாங்கள் பாவஞ் செய்தோம்: அக்கிரமம் புரிந்தோம்; தீநெறியில் நடந்து விலகிப் போனோம்; உம் கட்டளைகளையும் நீதி முறைமைகளையும் விட்டு அகன்று போனோம். எங்களுடைய அரசர்கள், தலைவர்கள், எங்கள் தந்தையர்கள், நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் உமது திருப்பெயரால் அறிவுரை கூறிய இறைவாக்கினர்களான உம் ஊழியர்களுக்கு நாங்கள் செவிசாய்க்கவில்லை.

ஆண்டவரே, நீதி உமக்கே உரியது; உமக்கு எதிராகச் செய்த துரோகங்களுக்காக உம்மால் அருகிலோ தொலைவிலோ எல்லா நாடுகட்கும் விரட்டப்பட்டிருக்கும் யூதர்களும், யெருசலேம் குடிகளும், எல்லா இஸ்ராயேலருமாகிய எங்களுக்கு இன்றுள்ளது போலத் தலை கவிழும் வெட்கமே உரியது.

ஆம், ஆண்டவரே, வெட்கமே எங்களுக்கும், எங்கள் அரசர்களுக்கும் எங்கள் தலைவர்களுக்கும் எங்கள் தந்தையர்களுக்கும் உரியது; ஏனெனில் நாங்கள் உமக்கு எதிராகப் பாவஞ் செய்தோம். எங்கள் இறைவனும் ஆண்டவருமாகிய உம்மிடத்தில் இரக்கமும் மன்னிப்பும் உண்டு; நாங்களோ உம்மை விட்டு அகன்று போனோம். இறைவாக்கினர்களாகிய தம் ஊழியர்கள் வாயிலாய் எங்களுக்குக் கொடுத்த தம்முடைய சட்டங்களின்படி நடக்குமாறு சொன்ன எங்கள் இறைவனாகிய ஆண்டவரின் குரலொலியை நாங்கள் கேட்க மறுத்தோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 78:8, 9, 11, 13 (பல்லவி: சங். 102:10a)

பல்லவி: ஆண்டவரே எங்களுடைய பாவங்களுக்கு ஏற்றபடி எங்களை நடத்தாதேயும்.

8 முன்னோர்கள் செய்த குற்றங்களை எங்கள் மேல் சுமத்தாதேயும்; உமது இரக்கம் எங்களுக்கு விரைவாகவே கிடைப்பதாக: ஏனெனில், நாங்கள் துயரத்திற்குள்ளானோம். பல்லவி

9 எங்கள் மீட்பரான இறைவா, உமது திருப் பெயரின் மகிமைக்காக எங்களுக்குத் துணை செய்யும்; உம் பெயரின் பொருட்டு எங்கள் பாவங்களை மன்னித்து எங்களுக்கு விடுதலையளித்தருளும். பல்லவி

11 சிறைப்பட்டவர்களின் பெருமூச்சு உம் காதில் விழுவதாக: சாவுக்குக் குறிக்கப்பட்டவர்களை உமது கரத்தின் வல்லமைக்கேற்ப விடுவித்தருளும். பல்லவி

13 நாங்களோ உம் மக்கள், உமது மேய்ச்சலின் ஆடுகள்; என்றென்றும் உம்மைப் போற்றிப் புகழ்வோம்: தலைமுறை தலைமுறையாக உமது புகழை எடுத்துரைப்போம். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 6:63b, 68b.

ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்;
முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.

## நற்செய்தி வாசகம்

**மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:36-38

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள். தீர்ப்பிடாதீர்கள், நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள். கண்டனம் செய்யாதீர்கள், கண்டனம் பெற மாட்டீர்கள். மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள்.

கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்ருய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில், எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். நீதியைத் தேடுங்கள்.

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 1:10. 16-20

சோதோமை ஆளுகிறவர்களே, ஆண்டவருடைய வாக்கைக் கேளுங்கள்; கொமோரா நாட்டின் மக்களே, நம் கடவுளின் கட்டளைக்குச் செவிசாயுங்கள்.

உங்களைச் சுத்திகரியுங்கள், தூய்மைப்படுத்துங்கள். நம் கண் முன்னிருந்து உங்கள் தீச்செயலை அகற்றுங்கள்; தீமை செய்வதைவிட்டு ஓயுங்கள்; நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; நீதியைத் தேடுங்கள், ஒதுக்கப்பட்டவனுக்கு உதவி செய்யுங்கள், திக்கற்ற பிள்ளைக்கு நீதி வழங்குங்கள், கைம்பெண்ணுக்காக வழக்கு நடத்துங்கள்.

வாருங்கள், இப்பொழுது வழக்காடுவோம் என்கிருர் ஆண்டவர்; உங்கள் பாவங்கள் செந்தூரம்போல் இருந்தாலும், உறைந்த பனிபோல வெண்மையாகும்; இரத்த நிறமாய் அவை சிவந்திருந்தாலும், பஞ்சைப் போல் அவை வெண்மையாகும்.

மனமுவந்து நீங்கள் நமக்குக் கீழ்ப்படிந்தால், நாட்டில் விளையும் நற்கனிகளை உண்பீர்கள்; கீழ்ப்படிய மறுத்து நமக்குக் கோபத்தை மூட்டினுல், திண்ணமாய் வாளுக்கு இரையாவீர்கள்; ஏனெனில் ஆண்டவரே திருவாய் மலர்ந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 49:8-9, 16bc-17, 21,23 (பல்லவி: 23 )

பல்லவி : நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்.

8 நீ இடும் பலிகளைக்' குறித்து உன்னைக் கண்டிக்கவில்லை: ஏனெனில், உன் தகனப் பலிகள் எந்நேரமும் என் கண்முன்னே இருக்கின்றன.
9 உன் வீட்டில் உள்ள காளைமாட்டையா நான் கேட்கிறேன்? உன் மந்தையிலுள்ள ஆடுகளையா நான் கேட்கிறேன்? பல்லவி

16 "என் கட்டளைகளை நீ ஏன் எடுத்துரைக்கிறாய்? என் உடன்படிக்கையைப் பற்றி நீ ஏன் பேசவேண்டும்?
17 ஒழுக்கத்தைப் பகைப்பவன் அன்றோ நீ? என் வார்த்தையைப் புறக்கணித்தவன் அன்றோ நீ? பல்லவி

21 இப்படியெல்லாம் நீ செய்ய நான் வாளாவிருப்பதா? நானும் உன்னைப் போலென்று நினைத்தாயா? உன்னைக் கண்டித்து நீ செய்ததையெல்லாம் எடுத்துச் சொல்கிறேன், பார்!
23 இறைபுகழ்ச்சி என்னும் பலி இடுபவனே எனக்கு மதிப்புக் கொடுப்பவன்: நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன்." பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் எசேக். 18 : 31

நீங்கள் செய்த துரோகங்களையெல்லாம் உங்களுக்குத் தூரமாய் எறிந்து விடுங்கள். புதிய உள்ளத்தையும் புதிய மனத்தையும் உங்களுக்கெனப் படைத்துக் கொள்ளுங்கள், என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

**அவர்கள் சொல்லுகிறார்கள், செய்வதில்லை.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 23 : 1-12

அக்காலத்தில் :

யேசு தம் சீடரையும் மக்கட்கூட்டத்தையும் நோக்கிக் கூறியதாவது :

"மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோயீசனுடைய இருக்கையில் அமர்ந்துள்ளனர். அவர்கள் உங்களுக்குச் சொல்லுவதெல்லாம் கடைப்

பிடித்து நடங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல் செய்யாதீர்கள். ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள்; செய்வதில்லை. பளுவான சுமையைக் கட்டி மக்களுடைய தோள்மேல் வைக்கிறார்கள்; தாங்களோ அதை ஒரு விரலாலும் அசைக்க மாட்டார்கள்.

தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்கவேண்டுமென்றே செய்கிறார்கள். ஏனெனில், அவர்கள் தம் சீட்டுப் பட்டங்களை அகலமாக்கிக் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதலிடங்களையும், செபக்கூடங்களில் முதல் இருக்கைகளையும் விரும்புகின்றனர். பொது இடங்களில் வணக்கம் பெறவும், மக்களால் "ராபி" எனப்படவும் ஆசிக்கின்றனர்.

நீங்களோ "ராபி" என்று அழைக்கப்படவேண்டாம். ஏனெனில், உங்கள் போதகர் ஒருவரே: நீங்கள் அனைவரும் சகோதரர். மண்ணுலகில் ஒருவரையும் தந்தையென்று கூறவேண்டாம். ஏனெனில், விண்ணுலகிலுள்ளவர் ஒருவரே உங்கள் தந்தை. குரு என்றும் அழைக்கப்படவேண்டாம். ஏனெனில், மெசியா ஒருவரே உங்கள் குரு.

உங்களுக்குள் பெரியவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் பெறுவான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

**வாருங்கள், அவனைத் தாக்குவோம்.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 18:18-20

"வாருங்கள், எரெமியாசுக்கு எதிராய்ச் சூழ்ச்சிகள் செய்வோம்; அர்ச்சகரிடமிருந்து சட்டம் அழியாது; ஞானியிடமிருந்து அறிவுரை போகாது; இறைவாக்கினரிடமிருந்து இறைவாக்கு ஒழியாது. ஆதலால் வாருங்கள், நாவினால் அவனைத் தாக்குவோம்; அவன் வார்த்தைகளை நாம் பொருட்படுத்தலாகாது" என்று சொன்னார்கள்.

ஆண்டவரே, எனக்குக் காதுகொடும்; என் பகைவர்கள் சொல்வதைக் கேளும்; நன்மைக்குத் தீமை செய்யலாமா? என் உயிருக்குக் குழி வெட்டியிருக்கிறார்களே! நான் அவர்களுக்கு நன்மையைக் கோரிடவும், உம் கோபத்தை அவர்களிடமிருந்து தடுத்து நீக்கவும் உம் முன்னிலையில் வந்து நின்றதை நினைத்தருளும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 30: 4-5, 13, 14-15 (பல்லவி: 16b)

பல்லவி: **ஆண்டவரே, உம் அருளன்பைக் காட்டி என்னை ஈடேற்றும்.**

4 என்னைப் பிடிக்க மறைவாக விரித்துள்ள கண்ணியினின்று என்னைத் தப்பு
வித்தருள்வீர்: ஏனெனில், நீர் எனக்கு அடைக்கலமாயுள்ளீர்.
5 உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்: ஆண்டவரே, வார்த்
தையில் தவறாத இறைவா, நீர் என்னை மீட்டருள்வீர். பல்லவி

13 பலர் என்னை இழித்துப் பேசுவது என் காதில் விழுந்தது; எப்பக்கமும்
அச்சம் என்னைச் சூழ்கிறது: பலரும் எனக்கெதிராய்ச் சதி செய்து என்
உயிரைப் பறிக்க எண்ணினர். பல்லவி

14 ஆனால் ஆண்டவரே, நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்: 'நீரே
என் கடவுள்' என்றேன்.
15 என் கதி உம் கையில் உள்ளது: என் எதிரிகளிடமிருந்தும் என்னைத்
துன்புறுத்துவோரிடமிருந்தும் என்னை விடுவித்தருளும். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 8:12b.

நானே உலகின் ஒளி, என்னைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான், என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

**அவருக்குக் கொலைத் தீர்ப்பிடுவர்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 20:17-28

அக்காலத்தில்:

யேசு யெருசலேமை நோக்கிப் போகையில் பன்னிரு சீடரையும் தனியே அழைத்து அவர்களிடம், "இதோ! யெருசலேமுக்குப் போகிறோம். மனுமகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞரிடமும் கையளிக்

கப்படுவார். அவர்கள் அவருக்குக் கொலைத் தீர்ப்பிட்டு, அவரை எள்ளி நகையாடவும், சாட்டையால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறவினத்தாரிடம் கையளிப்பர். அவரோ மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார்" என்று சொன்னார்.

பின்னர், செபதேயுவின் மக்களுடைய தாய், தன் மக்களுடன் யேசுவைப் பணிந்து எதையோ கேட்க வந்தாள். என்ன வேண்டும் என்று அவர் அவளைக் கேட்டார். "என் மக்கள் இவ்விருவரும் உம் அரசில், ஒருவன் உமது வலப்பக்கமும், மற்றவன் இடப் பக்கமும் அமரச் செய்வீர் என வாக்களியும்" என்றாள். அதற்கு யேசு, "நீங்கள் கேட்பது என்னவென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப் போகும் கிண்ணத்தில் நீங்களும் குடிக்க முடியுமா?" என்று கேட்டார். அவர்களோ "முடியும்" என்றனர். அதற்கு அவர், "ஆம், நான் குடிக்கப் போகும் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள்; ஆனால் என் வலப் பக்கமோ, இடப் பக்கமோ அமர அருளுவது என்னுடையதன்று. யாருக்கு என் தந்தை ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அது கிடைக்கும்" என்றார்.

அதைக் கேட்ட பதின்மரும் அவ்விரு சகோதரர் மேல் சினங்கொண்டனர். யேசு அவர்களைத் தம்மிடம் அழைத்துக் கூறியது: "புறவினத்தாரின் தலைவர்கள் அவர்களை அடக்கி ஆளுகின்றனர்; பெரியவர்கள் அவர்கள் மீது அதிகாரம் காட்டுகின்றனர்; இஃது உங்களுக்குத் தெரியும். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. எவன் உங்களுக்குள் பெரியவனாக விரும்புகிறானோ அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும். எவன் உங்களுக்குள் முதல்வனாய் இருக்க விரும்புகிறானோ அவன் உங்கள் ஊழியனாய் இருக்கட்டும்.

இவ்வாறே, மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

முதல் வாசகம்

***மனிதனை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்; ஆண்டவரை நம்புகிறவனே ஆசிபெற்றவன்.***

எரேமியாஸ்

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 17:5-10

ஆண்டவர் கூறுகிறார் :

"மனிதனை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன்; மனித பலவீனத்தையே அவன் தன் வலிமையாய்க் கொள்கிறான்; தன் இதயத்தை ஆண்டவரிடமிருந்து அகற்றுகிறான். அவன் பாலைநிலத்துப் பூண்டுக்குச் சமம்; நன்மை வந்தாலும் அதில் பலனைக் காணமாட்டான்; வறட்சி மிக்க பாலைவனத்திலும், வாழ முடியாத உவர் நிலத்திலுமே அவன் குடியிருப்பு.

ஆண்டவரை நம்புகிறவனே ஆசிபெற்றவன்; ஆண்டவரே அவனுடைய நம்பிக்கை; அவன் நீரருகில் நடப்பட்ட மரத்திற்கு ஒப்பானவன்; அது ஈரத்தில் வேரூன்றி இருக்கும்; கோடைக்காலத்தில் அதற்கு அச்சமில்லை; அதன் இலைகள் பசுமையோடிருக்கும்; வறட்சி காலத்தில் அதற்குக் கவலையில்லை; அது ஒருகாலும் கனி கொடாதிருக்காது.

இதயம் அனைத்தையும்விட வஞ்சனையுள்ளது; மிகவும் கெட்டுப் போனது; அதனை அறிகிறவன் எவன்? ஆண்டவராகிய நாம் உள்ளத்தை ஆராய்கிறோம், இதயத்தைப் பரிசோதிக்கிறோம்; ஒவ்வொருவனுடைய நடத்தைக்கும் செயல்களின் விளைவுக்கும் ஏற்றவாறு பலனளிக்கிறோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 1:1-2. 3. 4.6 (பல்லவி: 39:4a)*

பல்லவி: **தன் நம்பிக்கையை ஆண்டவர்மீது வைத்தவனே பேறு பெற்றவன்.**

1 தீயோரின் அறிவுரைப்படி நடவாதவன், பாவிகளின் வழியில் செல்லா
தவன், பழிகாரர் கூட்டத்தில் அமராதவன் பேறு பெற்றோன்.
2 கடவுளுடைய திருச்சட்டத்தில் இன்பம் காண்பவனாய், அதை அல்லும்
பகலும் தியானிப்பவனே பேறு பெற்றோன்.

பல்லவி

3 வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டு, இலைகள் என்றும் உதிர்க்காமல்
தக்க பருவத்தில் கனி தரும் மரத்துக்கு அவன் ஒப்பாவான்: அவன் செய்
வதனைத்திலும் வெற்றி பெறுவான்.

பல்லவி

4 தீயவருக்கு அங்ஙனமிராது, ஒரு நாளுமிராது: காற்றோடு காற்றாய்ப்
பறக்கும் பதர் போன்றவர்கள் அவர்கள்.
6 நல்லோரின் வழியைக் கடவுள் பாதுகாப்பார்: தீயோரின் வழியோ
அழிவுக்கே செல்லும்.

பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் — லூக். 8 : 15 காண்.

கடவுளின் வார்த்தையைக் கேட்டு, சீரிய செம்மனத்தில் பதித்து,
நிலையாயிருந்து பலன் அளிப்பவர் பேறு பெற்றோர்.

## நற்செய்தி வாசகம்

**உனக்கு இன்ப சுகமே கிடைத்தது, இலாசருக்குத் துன்ப துயரமே கிடைத்தது; இப்பொழுது அவன் இங்கே ஆறுதலடைகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 16 : 19-31

அக்காலத்தில்: யேசு பரிசேயரை நோக்கிக் கூறியதாவது:

"பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் விலையுயர்ந்த ஆடையும் மெல்லிய உடையும் அணிந்து நாள்தோறும் ஆடம்பரமாய் விருந்தாடுவான். அவனுடைய வாசலருகே இலாசர் என்னும் ஏழை ஒருவன் கிடந்தான்; அவனுடலெல்லாம் ஒரே புண்ணாயிருந்தது. அவன் அப்பணக்காரனின் பந்தியில் சிந்தினவற்றைக்கொண்டு பசியாற விரும்பினான்.

நாய்கள்கூட வந்து அவனுடைய புண்களை நக்கும். இந்த ஏழை இறந்தான்; வானதூதர் அவனைத் தூக்கிச் சென்று ஆபிரகாமின் அருகிலேயே அமர்த்தினர். பணக்காரனும் இறந்தான்; புதைக்கப்பட்டான்.

“அவன் பாதாளத்திலே வேதனைப்படுகையில் ஏறெடுத்துப் பார்த்தான். தொலையில் ஆபிரகாமையும், அவர் அருகிலேயே அமர்ந்திருந்த இலாசரையும் கண்டான். ‘தந்தை ஆபிரகாமே, என்மீது இரங்கி இலாசர் தன் விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து, என் நாவைக் குளிரச் செய்யும்படி அவனை அனுப்பும். நான் இந்நெருப்பில் வேதனைப்படுகிறேன்” என்று கத்தினான்.

“ஆபிரகாம் அவனை நோக்கி, மகனே, வாழ்நாளில் உனக்கு இன்ப சுகமே கிடைத்தது. இலாசருக்கு துன்ப துயரமே கிடைத்தது. இதை நினைத்துப்பார். ஆனால், இப்பொழுது அவன் இங்கே ஆறுதலடைகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பாதாளம் ஒன்று அமைந்துள்ளது. எனவே, இங்கிருந்து உங்களிடம் கடந்துவர ஒருவன் விரும்பினாலும் முடியாது; அங்கிருந்து எங்களிடம் தாண்டி வருவதும் கிடையாது” என்றார்.

அதற்கு அவன், “தந்தையே, அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டுகிறேன். எனக்குச் சகோதரர் ஐவர் இருக்கின்றனர். அவர்களும் இந்த வேதனைக் களத்திற்கு வாராதபடி அவன் எச்சரிக்கட்டும்” என்றான். ஆபிரகாமோ, “அவர்களுக்கு மோயீசனும் இறைவாக்கினர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்” என்றார். அவனோ, “அப்படியன்று, தந்தை ஆபிரகாமே, இறந்தோரிடமிருந்து யாராவது அவர்களிடம் சென்றால், மனந்திரும்புவர்” என்றான். அதற்கு அவர், “மோயீசனுக்கும் இறைவாக்கினர்களுக்கும் செவிசாய்க்காவிடில் இறந்தோரிடமிருந்து ஒருவன் உயிர்த்தெழுந்தாலும் நம்பமாட்டார்கள்” என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

***இதோ, கனவுகாண்கிறவன் வருகிறான்; வாருங்கள், அவனைக் கொன்று போடுவோம்.***

**ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்** *37:3-4. 12-13a. 17b-28*

இஸ்ராயேல், தனக்கு முதிர்ந்த வயதில் சூசை பிறந்தமையால், அவனை எல்லாப் புதல்வரையும்விட அதிகமாய் நேசித்து வந்தான். (அதனால்) அவனுக்குப் பல நிறமுள்ள ஓர் அங்கியைச் செய்து கொடுத்திருந்தான். தங்கள் தந்தை அவனை எல்லாரிலும் அதிகமாய் நேசிக்கிறாரென்று கண்டு, இவன் சகோதரர் இவனோடு ஒருபோதும் அன்பாய்ப் பேசாமல், இவனைப் பகைத்து வந்தனர்.

அப்படியிருக்கையில், அவன் சகோதரர் சிக்கேமில் தங்கித் தந்தையின் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். இஸ்ராயேல் சூசையை நோக்கி: உன் சகோதரர்கள் சிக்கேமில் ஆடு மேய்க்கிறார்கள். அவர்களிடம் உன்னை அனுப்பப் போகிறேன்; வா என்று கூறினான். ஆதலால், சூசை தன் சகோதரரைத் தேடித் தொட்டாயினிலே அவர்களைக் கண்டுபிடித்தான்.

அவர்கள் அவன் தூரத்திலே வரக்கண்டு, அவன் தங்களுக்கு அண்மையில் வருமுன்னே அவனைக் கொல்லச் சதி செய்து, ஒருவரொருவரை நோக்கி, கனவு காண்கிறவன் அதோ வருகிறான். நாம் அவனைக்கொன்று இந்தப் பாழ்கிணற்றில் போட்டுவிட்டு, பிறகு, ஒரு கொடிய மிருகம் அவனைத் தின்றுவிட்டதென்று சொல்வோம், வாருங்கள். அப்போதல்லவோ அவனுடைய கனவுகள் எப்படி முடியுமென்று விளங்கும் என்றனர்.

ரூபன் இவற்றைக் கேட்டு, அவனை அவர்கள் கைக்குத் தப்புவிக்கக் கருதி, சகோதரரைப் பார்த்து: நீங்கள் அவனைக் கொல்ல வேண்டாம்; அவன் இரத்தத்தைச் சிந்தவும் வேண்டாம். அவனைப் பாலைவனத்திலுள்ள பாழ்கிணற்றில் போட்டுவிட்டால் உங்கள் கை சுத்தமாகவே இருக்கும் என்றான். ரூபன் அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்துத் தந்தையிடம் அவனைச் சேர்க்கும்படியாகவே அவ்விதம் பேசினான்.

சூசை தன் சகோதரரிடம் வந்து சேர்ந்தவுடனே, அவன் அணிந்திருந்த பல நிறமுள்ள பெரிய அங்கியை அவர்கள் வலுக்கட்டாயமாய்க் கழற்றி, தண்ணீரில்லாத பாழ்கிணற்றிலே அவனைத் தள்ளி விட்டனர்.

பின் அவர்கள் உணவு அருந்தும்படி அமர்ந்தனர். அப்பொழுது கலயாத்திலிருந்து வந்து கொண்டிருந்த இஸ்மாயேலியரின் கூட்டத்தைக் கண்டனர். அவர்கள் எகிப்துக்கு வாசனைத் திரவியங்களையும் பிசினையும் வெள்ளைப் போளத்தையும் ஒட்டகங்களின் மேல் ஏற்றி வந்தனர். அப்போது யூதா தன் சகோதரர்களை நோக்கி : நாம் நம் சகோதரனைக் கொன்று அவன் இரத்தத்தை மறைப்பதனால் நமக்கு என்ன பயன் ? நமது கைகளை சுத்தமாய் வைத்துக் கொள்ளும்படி நாம் அவனை இந்த இஸ்மாயேலியருக்கு விற்று விடுவது நலம். ஏனென்றால், அவன் நம்முடைய சகோதரனும் நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறான் என்று சொல்ல, அவன் சகோதரர் அவன் சொன்ன திட்டத்திற்கு உட்பட்டனர்.

ஆகையால், மதியானியராகிய இந்த வியாபாரிகள் (தங்களைக்) கடந்து போகையில், அவர்கள் சூசையைப் பாழ்கிணற்றினின்று தூக்கியெடுத்து, (அந்த) இஸ்மாயேலியருக்கு அவனை இருபது வெள்ளிக் காசுக்கு விற்றனர். அவர்கள் அவனை எகிப்துக்குக் கொண்டு போனார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 104 : 16-17, 18-19, 20-21 (பல்லவி : 5a)*

பல்லவி : ஆண்டவர் செய்த வியத்தகு செயல்களை நினைவுகூருங்கள்.

16 நாட்டில் பஞ்சத்தை வரவழைத்தார் : உணவுப் பொருட்களனைத்தையுமே எடுத்து விட்டார்.

17 ஆனால் அதற்குமுன் அடிமையாக விற்கப்பட்ட சூசையை அனுப்பி வைத்தார்.

பல்லவி

18 அவருடைய கால்களுக்கோ விலங்குகள் இடப்பட்டன : அவருடைய கழுத்துக்கு இருப்புத்தளை இடப்பட்டது.

19 நாளடைவில் அவர் சொன்னது நிறைவேறியது : ஆண்டவருடைய வார்த்தை உண்மையென எண்பிக்கப்பட்டது.

பல்லவி

20 அரசன் ஆளனுப்பி அவரை விடுதலை செய்தான் : நாட்டின் மன்னன் அவருக்கு விடுதலையளித்தான்.

21 தன் இல்லத்திற்கு அவரைத் தலைவராக்கினான். தன் உடைமை அனைத்தின் மீதும் அவருக்கு அதிகாரமளித்தான்.

பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 3 : 16

**தம் மகனில் விசுவாசங்கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு, அந்த ஒரே பேறான மகனையே அளிக்குமளவுக்கு உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.**

## நற்செய்தி வாசகம்

**இவனே சொத்துக்குரியவன் : வாருங்கள், இவனைக் கொன்றுபோடுவோம்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
21:33-43.45-46

அக்காலத்தில் :

யேசு தலைமைக் குருக்களையும், மக்களின் மூப்பரையும் நோக்கிக் கூறியதாவது: "மற்றும் ஓர் உவமையைக் கேளுங்கள் : வீட்டுத் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் திராட்சைத் தோட்டம் வைத்துச் சுற்றிலும் வேலி அடைத்து, அதில் ஆலைக் குழிதோண்டி, கோபுரமும் கட்டி, அதைக் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விட்டு வெளியூர் சென்றான்.

காய்க்குங் காலம் நெருங்கியபொழுது தனக்கு வரவேண்டிய பலனை வாங்கி வரும்படி தன் ஊழியரைக் குடியானவர்களிடம் அனுப்பினான். குடியானவர்களோ அவனுடைய ஊழியரைப் பிடித்து, ஒருவனை அடித்தனர், ஒருவனைக் கொன்றனர், வேறொருவனைக் கல்லால் எறிந்தனர். முந்தினோரை விட மிகுதியான ஊழியரை மீண்டும் அனுப்பினான். அவர்களுக்கும் அவ்வாறே செய்தனர். இறுதியாக, 'என் மகனை மதிப்பர்' என்று, தன் மகனை அவர்களிடம் அனுப்பினான்.

குடியானவர்களோ மகனைக் கண்டு "இவனே சொத்துக்குரியவன், வாருங்கள் இவனைக் கொன்றுபோடுவோம்; இவன் சொத்து நமக்குக் கிடைக்கும்' என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டனர். அவ்வாறே அவனைப் பிடித்துத் திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே தள்ளிக் கொன்றனர். எனவே, திராட்சைத் தோட்ட உரிமையாளன் வரும் பொழுது அக்குடியானவரை என்ன செய்வான்?" என்று கேட்டார்.

அவர்களோ, "கொடியோரைக் கொடுமையாய்த் தண்டித்து ஒழித்து விடுவான்; உரிய காலத்தில் பலனைக் கொடுக்கும் வேறு குடியானவரிடம் திராட்சைத் தோட்டத்தை விடுவான்" என்றனர். யேசுவோ அவர்களுக்குக் கூறியது : "கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக்கல்லாய் அமைந்தது; ஆண்டவர் செயல் இது, நம் கண்ணுக்கு வியப்பே" என்று

நீங்கள் மறைநூலில் படித்ததே இல்லையா? எனவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கடவுளின் அரசு உங்களிடமிருந்து எடுபட்டு ஏற்ற பலனைத் தரும் இனத்தாருக்கு அளிக்கப்படும்.''

அவர் உரைத்த உவமைகளைக் கேட்ட தலைமைக் குருக்களும் பரிசேயரும் தங்களைப் பற்றியே கூறினார் என்று உணர்ந்து, அவரைப் பிடிக்க வழி தேடினர். ஆனால், கூட்டத்திற்கு அஞ்சினர். ஏனெனில் மக்கள் அவரை இறைவாக்கினராகக் கருதினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

**நம் பாவங்களை எல்லாம் ஆழ்கடலில் எறிந்து விடுவார்.**

இறைவாக்கினர் மிக்கேயாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7: 14-15. 18-20

ஆண்டவரே, உமது உரிமைச் சொத்தாய் இருக்கும் மந்தையாகிய உம் மக்களை உமது கோலினால் மேய்த்தருளும்; அவர்கள் தோட்டம் நிறைந்த நாட்டின் நடுவில் காட்டில் தனித்து வாழ்கிறார்களே; முற்காலத்தில் செய்ததுபோலவே அவர்கள் பாசானிலும் கலகாத்திலும் மேயட்டும். எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய நாட்களில் காட்டிய வாறு வியத்தகு செயல்களை எங்களுக்குக் காட்டியருளும்.

உமது உரிமைச் சொத்தில் எஞ்சியிருப்போரின் பாவத்தைப் பொறுத்து, அக்கிரமத்தை மன்னிக்கிற உமக்கு நிகரான கடவுள் உண்டோ? அவர் தம் கோபத்தை என்றென்றுமாய்ப் பாராட்ட மாட்டார்; ஏனெனில் நிலையான அன்பில் அவர் விருப்ப முள்ளவர்.

திரும்பவும் அவர் நம்மீது இரக்கம் கொள்வார், நம் அக்கிரமங்களைத் தம் காலடியில் மிதித்துப்போடுவார்; நம் பாவங்களை யெல்லாம் ஆழ்கடலில் எறிந்துவிடுவார். பண்டைநாளில் நீர் எங்கள் தந்தையர்களுக்கு ஆணையிட்டுச் சொல்லியிருப்பதுபோல, யாக்கோபுக்குப் பிரமாணிக்கத்தையும் ஆபிரகாமுக்கு நிலையான அன்பையும் காட்டியருளும்!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 102: 1-2. 3-4. 9-10. 11-12 (பல்லவி: 8a)

பல்லவி: **ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்.**

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: என் அகத்துள்ள தெல்லாம்
அவரது திருப் பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: அவர் செய்த நன்மைகளை
யெல்லாம் மறவாதே.
பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்: உன் நோய்களையெல்லாம்
குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்: அருளையும் இரக்கத்தையும் உனக்கு
முடியாகச் சூட்டுகிறார்.
பல்லவி

9 ஓயாமல் கடிந்துகொள்பவரல்லர்: எந்நேரமும் கோபம் காட்டுபவரல்லர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை: நம் குற்றங்களுக்குத்
தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை.
பல்லவி

11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ,
அவ்வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்.
12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி
விடுகிறார்.
பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் — லூக். 15:18

எழுந்து தந்தையிடம் போவேன்; போய், "அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்" என்று அவரிடம் சொல்வேன்.

## நற்செய்தி வாசகம்

**உன் தம்பியாகிய இவன் இறந்துபோயிருந்தான், உயிர்த்து விட்டான்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
15:1-3. 11-32

*அக்காலத்தில் :*

யேசு சொல்வதைக் கேட்க ஆயக்காரரும் பாவிகளும் அவரை அணுகியவண்ணமாயிருந்தனர். அதனால் பரிசேயரும் மறைநூல் வல்லுநரும், "இவர் பாவிகளை வரவேற்கிறார். அவர்களோடு உண்கிறார்" என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் பின்வரும் உவமையைக் கூறினார்.

"ஒருவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். இளையவன் தந்தையை நோக்கி, 'அப்பா, சொத்தில் எனக்கு வரவேண்டிய பங்கைக் கொடும்' என்றான். அவர் தம் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். சில நாட்களுக்குப்பின் இளைய மகன் தன் சொத்தெல்லாம் விற்றுப் பணத்தைத் திரட்டிக்கொண்டு தொலை நாட்டிற்குப் பயணமானான். அவ்விடத்தில் ஊதாரித்தனமாக வாழ்ந்து, சொத்தெல்லாம் அழித்தான்.

எல்லாவற்றையும் செலவழித்த பின்பு, அந்நாடெங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அவன் வறுமையுறலானான். அந்நாட்டுக் குடிகளுள் ஒருவனிடம் அண்டிப் பிழைக்கச் சென்றான். அவன் அவனைப் பன்றி மேய்க்கத் தன் வயலுக்கு அனுப்பினான். பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தன் வயிற்றை நிரப்ப விரும்பினான். ஆனால், அதையும் அவனுக்கு அளிப்பாரில்லை.

அறிவு தெளிந்து, 'என் தந்தையின் கூலியாட்கள் எத்தனையோ பேருக்கு நிறைய உணவு இருக்க, நான் இங்குப் பசியால் மடிகிறேனே. எழுந்து என் தந்தையிடம் போவேன். போய், "அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் என்று எண்ணப்படத் தகுதியற்றவன். என்னை உம்முடைய கூலியாட்களுள் ஒருவனாக நடத்தும்" என்று அவரிடம் சொல்வேன்,' என்றான். அப்படியே எழுந்து தன் தந்தையிடம் வந்தான்.

அவன் தொலைவில் வரும்போதே அவனுடைய தந்தை அவனைக் கண்டு மனமுருகி, ஓடிப்போய் அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டார். மகன் அவரிடம், 'அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன். இனிமேல் உம்முடைய மகன் என்று எண்ணப்பட நான் தகுதியற்றவன்' என்றான்.

தந்தையோ வேலையாட்களை நோக்கி, ‘முதல் தரமான ஆடை கொண்டு வந்து இவனுக்கு உடுத்துங்கள். கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் விரைவில் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். விருந்து கொண்டாடுவோம். ஏனெனில், இறந்து போயிருந்த என் மகன் இவன் மீண்டும் உயிர் பெற்றுள்ளான். காணமற் போயிருந்தவன் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்’ என்றார். அவர்கள் விருந்து கொண்டாடத் தொடங்கினர்.

அப்போது மூத்த மகன் வயலில் இருந்தான். வயலிலிருந்து திரும்பி வீட்டை நெருங்கியபொழுது நடனத்தையும் இசை முழக்கத்தையும் கேட்டு, வேலையாள் ஒருவனை அழைத்து நடப்பதென்னவென்று வினவினான். அதற்கு வேலையாள், “உம் தம்பி வந்துவிட்டார். அவர் நலமாகத் தம்மிடம் வந்து சேர்ந்ததால், உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்’ என்றான். “அவனோ சினந்து உள்ளே நுழைய மனமில்லாதிருந்தான். எனவே, அவனுடைய தந்தை வெளியில் வந்து அவனை அழைத்தார். அவன் தன் தந்தையிடம், ‘இதோ, இத்தனை ஆண்டுகளாக உமக்கு ஊழியம் செய்து வருகிறேன்; உம்முடைய கட்டளையை என்றும் மீறியதில்லை. ஆயினும் என் நண்பரோடு விருந்து கொண்டாட ஓர் ஆட்டுக்குட்டி கூட நீர் எனக்குக் கொடுத்ததில்லை. விலைமாதரோடு உமது சொத்தையெல்லாம் அழித்துவிட்ட இந்த மகன் வந்தபொழுது அவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கின்றீரே’ என்றான்.

அதற்குத் தந்தை, “மகனே, நீ என்றும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே. நாம் விருந்தாடி மகிழ்வது முறையே. ஏனெனில் உன் தம்பி இறந்துபோயிருந்தான், உயிர்த்து விட்டான்; காணமற்போயிருந்தான், கிடைத்து விட்டான்” என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# தவக் காலம் - 3ஆம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடும்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 17:3-7

அந்நாட்களில்:

உண்மையிலே தண்ணீர் இல்லாமையினால் தாக வேதனைப்பட்ட மக்கள் மோயீசனுக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும், ஆடு, மாடு முதலிய பிராணிகளையும் தண்ணீர்த் தாகத்தினால் கொன்றுவிடத்தானோ எகிப்திலிருந்து அழைத்து வந்தீர் என்று குறை சொல்லக் கேட்டு, மோயீசன் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டு: அடியேன் இம்மக்களுக்கு என்ன செய்வேன்? இன்னும் கொஞ்சத்தில் என்னைக் கல்லால் எறிவார்களே என்றார்.

அப்போது ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ மக்கள் முன் சென்று இஸ்ராயேல் பெரியோர் சிலரை உன்னுடன் அழைத்துக் கொண்டு, ஆற்றை அடித்த கோலை உன் கையில் ஏந்தி நடந்து போவாய். அதோ நாம் அவ்விடத்திலே ஓரேப் என்னும் பாறையின் மீது உன் முன் நிற்போம். நீ அந்தப் பாறையை அடி. அடிக்கவே, மக்கள் குடிக்கத் தண்ணீர் வெளிப்படும் என்றார்.

மோயீசன் இஸ்ராயேல் பெரியோர்கள் கண் முன் அவ்விதமே செய்தார். இஸ்ராயேல் மக்கள் வாதாடியதுமன்றி ஆண்டவர் தங்களோடு இருக்கிறாரோ இல்லையோ என்று அவர்கள் ஆண்டவரையும் சோதனை செய்த காரணத்தால் மோயீசன் இந்த இடத்திற்குச் சோதனை என்று பெயரிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 94:1-2, 6-7, 8-9 (பல்லவி: 8)

பல்லவி: "உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்" என்னும் ஆண்டவரது குரலை இன்று நீங்கள் கேட்பீர்களா?

1 வாருங்கள், ஆண்டவருக்குப் புகழ் பாடுவோம்: மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.

2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன்செல்வோம்: இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம்: நம்மைப் படைத்த ஆண்டவர் முன் முழந்தாளிடுவோம்.

7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள், அவர் அரவணைப்பிலுள்ள மந்தை. பல்லவி

8 இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா? அக்குரல் கூறுவதாவது: "அன்று மெரிபாவிலும் பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல், உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

9 அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்: என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியின்வழியாய்ப் பரம அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 1-2, 5-8

சகோதரர்களே:

விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவர்களான நாம், நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளுடன் சமாதானம் கொண்டிருக்கிறோம். நாம் இப்போது இருக்கும் அருள் நிலையை அடையும் பேறு, விசுவாசத்தினால் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்துள்ளது; அவர் வழியாகவே கடவுளின் மாட்சிமையைப் பெறுவோம் என்கிற நம்பிக்கையில் பெருமை கொள்கிறோம்.

நம்பிக்கையோ பொய்க்காது; ஏனெனில், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது. ஏனெனில், நாம் பாவத்தால் வலுவற்றிருந்த போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து பாவிகளுக்காக இறந்தார்; நீதிமானுக்காக ஒருவன் தன் உயிரைக் கொடுத்தல் அரிது-ஒருவேளை நல்லவன் ஒருவனுக்காக யாரேனும் தன் உயிரைக் கொடுக்கலாம்-ஆனால் நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்; இதனால் கடவுள் நம் மீது கொண்டுள்ள அன்பை எண்பிக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 4:42,15

ஆண்டவரே, நீர் உண்மையாகவே உலகின் மீட்பர்; நான் தாகம் கொள்ளாதபடி உயிருள்ள தண்ணீரை எனக்கு அளித்தருளும்.

## நற்செய்தி வாசகம்

**முடிவில்லா வாழ்வடையப் பொங்கியெழும் ஊற்று.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:5-42

அக்காலத்தில் ;

யேசு சமாரியா நாட்டிலுள்ள சீக்கார் என்னும் ஊருக்கு வந்தார். அவ்வூருக்கருகே யாக்கோபு தன் மகன் சூசைக்கு அளித்த நிலம் உண்டு. அங்கே யாக்கோபின் கிணறும் இருந்தது. பயணத்தால் களைத்திருந்த யேசு அக்கிணற்றருகே அமர்ந்தார். அப்போது ஏறக்குறைய நண்பகல்.

சமாரியப் பெண் ஒருத்தி நீர் மொள்ள வந்தாள். "எனக்குத் தண்ணீர் கொடு" என்று யேசு அவளிடம் கேட்டார். அவருடைய சீடரோ உணவு வாங்குவதற்காக ஊருக்குள் சென்றிருந்தனர். அச்சமாரியப் பெண் அவரைப் பார்த்து, "யூதனாகிய நீர் என்னிடம் தண்ணீர் கேட்பதெப்படி ? நான் சமாரியப் பெண் ஆயிற்றே !" என்றாள். ஏனெனில், யூதர் சமாரியரோடு பழகுவதில்லை.

யேசுவோ மறுமொழியாக, "கடவுளுடைய கொடை இன்னதென்பதையும், 'தண்ணீர் கொடு' என்று உன்னிடம் கேட்பவர் இன்னாரென்பதையும் நீ உணர்ந்திருந்தால், ஒருவேளை நீயே அவரிடம் கேட்டிருப்பாய். அவரும் உயிருள்ள தண்ணீரை உனக்களித்திருப்பார்" என்றார்.

அவளோ, "ஐயா, தண்ணீர் மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லை; கிணறோ ஆழமானது. அப்படியிருக்க எங்கிருந்து உமக்கு உயிருள்ள தண்ணீர் கிடைக்கும் ? நம்முடைய தந்தை யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ ? அவரே எங்களுக்கு இந்தக் கிணற்றை வெட்டிக் கொடுத்தார். அவரும், அவர் பிள்ளைகளும், கால்நடைகளும் இதன் தண்ணீரைக் குடித்தார்கள்" என்றாள்.

யேசு அவளை நோக்கி, "இத்தண்ணீரைக் குடிக்கும் எவனும் மீண்டும் தாகங் கொள்வான்.

நான் தரும் தண்ணீரைக் குடிப்பவனோ, என்றுமே தாகங் கொள்ளான். நான் அவனுக்கு அளிக்கும் தண்ணீரோ அவன் முடிவில்லா வாழ்வடைய அவனுக்குள் பொங்கியெழும் ஊற்றாகும் என்றார்."

அதற்கு அவள், "ஐயா, அத்தகைய தண்ணீரை எனக்குக்கொடும். அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது. தண்ணீர் மொள்ள இவ்வளவு தொலைவு வரத் தேவையும் இருக்காது" என்றாள்.

யேசு அவளிடம், "போய் உன் கணவனை இங்கு அழைத்துவா" என, அவள் "எனக்குக் கணவனில்லையே" என்றாள். யேசுவோ "'எனக்குக் கணவனில்லை' என்று நீ சொன்னது சரிதான். கணவர் உனக்கு ஐவர் இருந்தனர். இப்பொழுது உன்னோடிருப்பவனோ உன் கணவன் அல்லன். நீ சொன்னது உண்மையே" என்றார். அதற்கு அவள், "ஐயா, நீர் ஓர் இறைவாக்கினர் எனக் கண்டுகொண்டேன். எங்கள் முன்னோர் இம் மலையில் தொழுதனர். நீங்களோ தொழவேண்டிய இடம் யெருசலேமிலே தான் என்கிறீர்கள்" என்றாள்.

யேசு அவளை நோக்கி, "மாதே, என்னை நம்பு. நேரம் வருகிறது. அப்போது நீங்கள் பரம தந்தையைத் தொழுவது இம்மலையிலுமன்று யெருசலேமிலுமன்று. நீங்கள் தொழுவது இன்னதென்று உங்களுக்குத் தெரியாது. நாங்கள் தொழுவது இன்னதென்று எங்களுக்குத் தெரியும். ஏனெனில், மீட்பு வருவது யூதர்களிடமிருந்தே. நேரம் வருகின்றது ;— ஏன், வந்தேவிட்டது.—அப்பொழுது மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும் பரம தந்தையைத் தொழுவார்கள். ஏனெனில், தம்மைத் தொழும்படி தந்தை இத்தகையோரையே தேடுகிறார். கடவுள் ஆவியானவர்; ஆதலால் அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும்தான் அவரைத் தொழுதல் வேண்டும்" என்றார். அதற்கு அவள், "மெசியா—அதாவது, கிறிஸ்து — வருவார் என்று எனக்குத் தெரியும். அவர் வரும்பொழுது எங்களுக்கு அனைத்தையும் அறிவிப்பார்" என, "உன்னோடு பேசும் நானே அவர்" என்றார் யேசு.

அதற்குள் அவருடைய சீடர் வந்து, அவர் ஒரு பெண்ணோடு பேசுவதைக்கண்டு வியப்படைந்தனர். ஆயினும், என்ன வேண்டும்? என்றோ, அவளோடு என்ன பேசுகிறீர்? என்றோ எவரும் கேட்கவில்லை. அப்பெண் குடத்தை அங்கேயே விட்டுவிட்டு ஊருக்குச் சென்று, "நான் செய்ததெல்லாம் ஒருவர் எனக்குச் சொன்னார். அவரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ?" என்று எல்லாரிடமும் சொன்னாள். அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரைப் பார்க்கப்போனார்கள்.

இதற்கிடையில் அவருடைய சீடர், "ராபி, உண்ணும்" என்று அவரைக் கேட்டுக்கொண்டனர். அவரோ, "உங்களுக்குத் தெரியாத உணவு ஒன்று எனக்குள்ளது" என்றார். அதைக் கேட்டு சீடர்கள், "யாராகிலும் அவருக்கு உணவு கொண்டுவந்திருப்பார்களோ?" என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள். யேசுவோ, "என்னை அனுப்பினவரின் விருப்பத்தின்படி நடந்து அவரது வேலையைச் செய்து முடிப்பதே என் உணவு.

அறுவடைக்கு இன்னும் நான்கு மாதங்கள் இருக்கின்றன என்று நீங்கள் சொல்வது உண்டன்றோ? இதோ! உங்களுக்குச் சொல்லுகிறேன்: கண்களை ஏறெடுத்து வயல்களைப் பாருங்கள், பயிர் அறுவடைக்கு முற்றியிருக்கின்றது. அறுப்பவன் இப்பொழுதே கூலிபெற்று வருகிறான். விளைச்சலை முடிவில்லா வாழ்வுக்குச் சேகரிக்கிறான். இதனால் விதைப்பவனும் அறுப்பவனும் ஒருமிக்க மகிழ்ச்சியடைகின்றனர். நீங்கள் வருந்தி உழைக்காததை அறுக்க உங்களை அனுப்பினேன். மற்றவர்கள் உழைத்தார்கள். அவ்வுழைப்பின் பயனை அடைந்தவர்களோ நீங்கள். 'விதைப்பவன் ஒருவன், அறுத்துக் கொள்பவன் வேறொருவன்' என்னும் முதுமொழி இவ்வாறு உண்மையாயிற்று" என்றார்.

"நான் செய்ததெல்லாம் எனக்குச் சொன்னார்" என்று சாட்சியம் கூறிய பெண்ணுடைய வார்த்தையின் பொருட்டு, அவ்வூரிலே சமாரியர் பலர் அவரில் விசுவாசங்கொண்டனர். சமாரியர் அவரிடம் வந்து, தங்களோடு தங்கும்படி அவரை வேண்டினர். அவரும் அங்கு இரண்டு நாள் தங்கினார். அவருடைய வார்த்தையின் பொருட்டு இன்னும் பலர் விசுவாசங்கொண்டனர். "உன் வார்த்தையின் பொருட்டன்று நாங்கள் விசுவசிப்பது, நாங்களே அவர் சொன்னதைக் கேட்டு அவர் உண்மையாகவே உலகின் மீட்பர் என அறிந்துகொண்டோம்" என்று அப்பெண்ணிடம் சொன்னார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

4 : 5-15. 19b–26. 39a. 40-42

அக்காலத்தில்:

யேசு சமாரியா நாட்டிலுள்ள சீக்கார் என்னும் ஊருக்கு வந்தார். அவ்வூருக்கருகே யாக்கோபு தன் மகன் சூசைக்கு அளித்த நிலம் உண்டு. அங்கே யாக்கோபின் கிணறும் இருந்தது. பயணத்தால் களைத்திருந்த யேசு அக்கிணற்றருகே அமர்ந்தார். அப்போது ஏறக்குறைய நண்பகல். சமாரியப் பெண் ஒருத்தி நீர் மொள்ள வந்தாள். "எனக்குத் தண்ணீர் கொடு" என்று யேசு அவளிடம் கேட்டார். அவருடைய சீடரோ உணவு வாங்குவதற்காக ஊருக்குள் சென்றிருந்தனர். அச்சமாரியப் பெண் அவரைப் பார்த்து, "யூதனாகிய நீர் என்னிடம் தண்ணீர் கேட்பதெப்படி? நான் சமாரியப் பெண் ஆயிற்றே!" என்றாள்.—ஏனெனில், யூதர் சமாரியரோடு பழகுவதில்லை.—யேசுவோ மறுமொழியாக, "கடவுளுடைய கொடை இன்னதென்பதையும், 'தண்ணீர் கொடு' என்று உன்னிடம்

கேட்பவர் இன்னாரென்பதையும் நீ உணர்ந்திருந்தால், ஒரு வேளை நீயே அவரிடம் கேட்டிருப்பாய். அவரும் உயிருள்ள தண்ணீரை உனக்களித்திருப்பார் " என்றார்.

அவளோ, " ஐயா, தண்ணீர் மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லை; கிணறோ ஆழமானது. அப்படியிருக்க எங்கிருந்து உமக்கு உயிருள்ள தண்ணீர் கிடைக்கும்? நம்முடைய தந்தை யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரே எங்களுக்கு இந்தக் கிணற்றை வெட்டிக் கொடுத்தார். அவரும், அவர் பிள்ளைகளும், கால்நடைகளும் இதன் தண்ணீரைக் குடித்தார்கள் " என்றாள். யேசு அவளை நோக்கி, " இத் தண்ணீரைக் குடிக்கும் எவனும் மீண்டும் தாகங்கொள்வான். நான் தரும் தண்ணீரைக் குடிப்பவனோ, என்றுமே தாகங்கொள்ளான். நான் அவனுக்கு அளிக்கும் தண்ணீரோ அவன் முடிவில்லா வாழ்வையடைய அவனுக்குள் பொங்கியெழும் ஊற்றாகும் " என்றார்.

அதற்கு அவள், " ஐயா, அத்தகைய தண்ணீரை எனக்குக் கொடும். அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது, தண்ணீர் மொள்ள இவ்வளவு தொலைவு வரத் தேவையும் இருக்காது. ஐயா, நீர் ஓர் இறைவாக்கினர் எனக் கண்டுகொண்டேன். எங்கள் முன்னோர் இம்மலையில் தொழுதனர். நீங்களோ தொழவேண்டிய இடம் யெருசலேமிலேதான் என்கிறீர்கள்" என்றாள்.

யேசு அவளை நோக்கி, " மாதே, என்னை நம்பு. நேரம் வருகிறது, அப்பொழுது நீங்கள் பரம தந்தையைத் தொழுவது இம்மலையிலுமன்று யெருசலேமிலுமன்று. நீங்கள் தொழுவது இன்னதென்று உங்களுக்குத் தெரியாது. நாங்கள் தொழுவது இன்னதென்று எங்களுக்குத் தெரியும். ஏனெனில், மீட்பு வருவது யூதர்களிடமிருந்தே. நேரம் வருகின்றது;— ஏன், வந்தேவிட்டது.— அப்பொழுது மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும் பரம தந்தையைத் தொழுவார்கள். ஏனெனில், தம்மைத் தொழும்படி தந்தை இத்தகையோரையே தேடுகிறார். கடவுள் ஆவியானவர்; ஆதலால் அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும்தான் அவரைத் தொழுதல் வேண்டும்" என்றார்.

அதற்கு அவள், " மெசியா—அதாவது, கிறிஸ்து—வருவார் என்று எனக்குத் தெரியும். அவர் வரும்பொழுது எங்களுக்கு அனைத்தையும் அறிவிப்பார் " என, " உன்னோடு பேசும் நானே அவர் " என்றார் யேசு.

அவ்வூரிலே சமாரியர் பலர் அவரில் விசுவாசங்கொண்டனர். சமாரியர் அவரிடம் வந்து, தங்களோடு தங்கும்படி அவரை வேண்டினர். அவரும் அங்கு இரண்டுநாள் தங்கினார். அவருடைய வார்த்தையின்

பொருட்டு இன்னும் பலர் விசுவாசங்கொண்டனர். "உன் வார்த்தையின் பொருட்டன்று நாங்கள் விசுவசிப்பது, நாங்களே அவர் சொன்னதைக் கேட்டு அவர் உண்மையாகவே உலகின் மீட்டர் என அறிந்து கொண்டோம்" என்று அப்பெண்ணிடம் சொன்னார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*திருச்சட்டம் மோயீசன் வழியாக அளிக்கப்பெற்றது.*

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 20:17

அந்நாட்களில் :

ஆண்டவர் திருவுளம் பற்றிய எல்லா வாக்கியங்களுமாவன : எகிப்து நாட்டிலிருந்தும் அடிமை வாழ்விலின்றும் உன்னை விடுவித்த ஆண்டவராகிய நாமே உன் கடவுள். நமக்கு முன்பாக வேறே தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக. மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழுமுள்ள தண்ணீரிலும் உள்ளவைகளுக்கு ஒப்பான ஓர் உருவத்தையேனும் யாதொரு விக்கிரகத்தையேனும் உனக்கு நீ உண்டாக்கிக் கொள்ளவேண்டாம். அவைகளை வணங்கித் தொழவும் வேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவராய் இருக்கிற நாம் வல்லவரும் எரிச்சல் உள்ளவருமாய் இருக்கிறோம்; நம்மைப் பகைக்கிறவர்களைக் குறித்து, தந்தையரின் அக்கிரமத்தைப் பிள்ளைகளிடம் மூன்றும் நான்காம் தலைமுறைவரை விசாரித்து வருகிறவராய் இருக்கிறோம். நம்மிடம் அன்புகூர்ந்து, நம் கட்டளைகளைக் கைக்கொண்டு ஒழுகிவருகிறவர்களுக்கோ, ஆயிரமாயிரம் தடவையும் தயவு காட்டுவோம்.

உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாய்ச்சொல்ல வேண்டாம். ஏனென்றால், ஆண்டவர் தம்முடைய பெயரை வீணில் சொல்பவனைத் தண்டியாமல் விடமாட்டார்.

ஓய்வு நாளைப் பரிசுத்தமாய்க் கொண்டாட நினைவு கூர்வாயாக. ஆறு நாளும் நீ வேலை செய்து உன் தொழிலுக்கடுத்த காரியங்களை எல்லாம் நடத்துவாயாக. ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்ட-

வரின் ஓய்வு நாளாய் இருப்பதால், அன்று நீயாவது, உன் மகன் மகளாவது, உன் வேலைக்காரன் வேலைக்காரியாவது, உன் மிருகங்கள் அல்லது உன் வாயில்களில் இருக்கிற அந்நியனாவது யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏனென்றால், ஆண்டவர் ஆறு நாளில் விண்ணையும் மண்ணையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து, ஏழாம் நாளிலே ஓய்வு கொண்டமையால், ஆண்டவர் ஓய்வு நாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார்.

உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப் போகிற நாட்டிலே நீ நெடுநாள் வாழும் பொருட்டு உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக.

கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரம் செய்யாதிருப்பாயாக. களவு செய்யாதிருப்பாயாக.

உன் அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

உன் அயலான் வீட்டை விரும்பாதே: அவனுடைய மனைவியையாவது, வேலைக்காரனையாவது, வேலைக்காரியையாவது, மாட்டையாவது, கழுதையையாவது, மேலும் அவனுக்குக் கிடைத்த யாதொன்றையாவது விரும்பாதிருப்பாயாக என்றருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 20:1-3,7-8,12-17

அந்நாட்களில்:

ஆண்டவர் திருவுளம்பற்றிய எல்லா வாக்கியங்களுமாவன: எகிப்து நாட்டிலிருந்தும் அடிமை வாழ்விலின்றும் உன்னை விடுவித்த ஆண்டவராகிய நாமே உன் கடவுள். நமக்கு முன்பாக வேறே தேவர்களை நீ கொண்டிராதிருப்பாயாக.

உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாய்ச் சொல்ல வேண்டாம். ஏனென்றால், ஆண்டவர் தம்முடைய பெயரை வீணில் சொல்பவனைத் தண்டியாமல் விடமாட்டார். ஓய்வு நாளைப் பரிசுத்தமாய்க் கொண்டாட நினைவுகூர்வாயாக. உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப்போகிற நாட்டிலே நீ நெடுநாள் வாழும் பொருட்டு உன்

தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக. கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரம் செய்யாதிருப்பாயாக. களவு செய்யாதிருப்பாயாக. உன் அயலானுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக. உன் அயலான் வீட்டை விரும்பாதே: அவனுடைய மனைவியையாவது, வேலைக்காரனையாவது, வேலைக்காரியையாவது, மாட்டையாவது, கழுதையையாவது, மேலும் அவனுக்குக் கிடைத்த யாதொன்றையாவது விரும்பாதிருப்பாயாக என்றருளினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## பதிலுரைப் பாடல்

*சங். 18:7, 8, 9, 10 (பல்லவி: அரு. 6:68)*

பல்லவி: **ஆண்டவரே, முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.**

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது: ஆண்டவருடைய கட்டளை உறுதியானது, எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை; உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது. பல்லவி

9 ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது; ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை. பல்லவி

10 பொன்னினும் மணியினும் பெரிதும் விரும்பத் தக்கவை: தேனினும் தேனடையினும் இனிமையானவை. பல்லவி

## இரண்டாம் வாசகம்

***சிலுவையில் அறையுண்ட ஒரு மெசியாவை அறிவிக்கின்றோம்: இவர் மனிதர்களுக்கு இடறல், அழைக்கப்பட்டவர்களுக்கோ கடவுளின் ஞானம்.***

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் *1:22-25*

சகோதரர்களே :

யூதர்கள் அருங்குறிகள் வேண்டும் என்கின்றனர்; கிரேக்கர்கள் ஞானத்தை நாடுகின்றனர். நாங்களோ, சிலுவையில் அறையுண்ட ஒரு மெசியாவை அறிவிக்கின்றோம். இது யூதர்களுக்கு இடறலாயுள்ளது. புறவினத்தாருக்கு மடமையாயுள்ளது. ஆனால், யூதராயினும் சரி, கிரேக்கராயினும் சரி, அழைக்கப்பட்டவர்களுக்கு அவர் மெசியா, கடவுளின் வல்லமையும், கடவுளின் ஞானமுமானவர். ஏனெனில், கடவுளின் மடமை மனிதரின் ஞானத்தைவிட ஞானமிக்கது. கடவுளின் வலுவின்மை மனிதரின் வன்மையைவிட வன்மைமிக்கது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 3:16

தம் ஒரே பேறான மகனையே அளிக்குமளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்.
அம் மகனில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறுவர்.

## நற்செய்தி வாசகம்

**இவ்வாலயத்தை இடித்து விடுங்கள்; மூன்று நாளில் இதை எழுப்புவேன்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 2:13-25

யூதர்களுடைய பாஸ்காத் திருவிழா நெருங்கியிருந்ததால் யேசு யெருசலேமுக்குச் சென்றார். கோயிலிலே ஆடு, மாடு, புறா விற்பவர்களையும், அங்கே உட்கார்ந்திருந்த நாணய மாற்றுவோரையும் கண்டார். அப்போது கயிறுகளால் சாட்டை பின்னி அவர்கள் எல்லாரையும் கோயிலிலிருந்து துரத்தினார். ஆடு மாடுகளையும் விரட்டிவிட்டார். நாணயமாற்றுவோரின் காசுகளை விசியெறிந்து பலகைகளையும் கவிழ்த்துப் போட்டார்.

புறு விற்பவர்களைப் பார்த்து, "இதெல்லாம் இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள். என் தந்தையின் இல்லத்தை வாணிபக் கூடமாக்க வேண்டாம்" என்றார். 'உமது இல்லத்தின் மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்' என்று எழுதியுள்ளதை அவருடைய சீடர் நினைவுகூர்ந்தனர்.

அப்போது யூதர், "இப்படியெல்லாம் செய்கிறீரே, இதற்கு என்ன அறிகுறி காட்டுகிறீர்? என்று அவரைக் கேட்டனர். அதற்கு யேசு, "இவ்வாலயத்தை இடித்து விடுங்கள்; மூன்று நாளில் இதை எழுப்புவேன்" என்றார். யூதர்களோ, "இவ்வாலயத்தைக் கட்ட நாற்பத்தாறு ஆண்டுகளாயினவே, நீ மூன்றே நாளில் எழுப்பி விடுவாயோ?" என்று கேட்டனர். அவர் குறிப்பிட்டதோ அவரது உடலாகிய ஆலயத்தையே. அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தபொழுது, அவருடைய சீடர் அவர் இவ்வாறு சொல்லியிருந்ததை நினைவுகூர்ந்து, மறைநூலையும் யேசு கூறிய வார்த்தைகளையும் விசுவசித்தனர்.

பாஸ்காத் திருவிழாவின்போது அவர் யெருசலேமிலிருக்கையில், அவர் செய்த அருங்குறிகளைக் கண்டு பலர் அவருடைய பெயரில் விசுவாசங் கொண்டனர். யேசுவோ அவர்களை நம்பிவிடவில்லை. ஏனெனில், அவர் அனைவரையும் நன்கு அறிந்திருந்தார். மனிதனைப்பற்றி எவரும் அவருக்கு எடுத்துக்கூறத் தேவையில்லை.மனித உள்ளத்திலிருப்பதை அறிந்திருந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இவ்வாசகங்களுக்குப் பதிலாக, முதல் ஆண்டு வாசகங்களையும் பயன் படுத்தலாம். (பக்.528)

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இருக்கிறவரே என்னை உங்களிடம் அனுப்பினார்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 3:1-8a. 13-15

அந்நாட்களில்:

மோயீசன் மதியான்நாட்டுக் குருவாகிய யெத்திரோ என்னும் தன் மாமனின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில், மந்தையைப் பாலை நிலத்தின் உட்புறமாய் ஓட்டிக் கொண்டு, தெய்வ (காட்சி) மலை

வனப்பகுதியில் ஓரேபு மலை வரை வந்தான். ஆண்டவரோ ஒரு முட்செடியின் நடுவினின்று, நெருப்புக் கொழுந்து உருவத்தில் அவனுக்குக் காட்சியளித்தார். அவன், முட்செடி வெந்து போகாமலே எரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆகவே, மோயீசன்: நான் போய், முட்செடி வெந்துபோகாமல் எரிகிற இந்த அதிசயக் காட்சியைப் பார்ப்பேன் என்றான். ஆனால், அவன் உற்றுப் பார்க்க வருவதை ஆண்டவர் கண்டு, முட்செடியின் நடுவினின்று: மோயீசா, மோயீசா என்று அவனை அழைக்க, அவன்: இதோ இருக்கிறேன் என்று மறுமொழி கூறினான். அவர்: அணுகி வராதே! உன் காலணிகளைக் கழற்றிவிடு. ஏனென்றால், நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். மீண்டும் அவர்: உன் தந்தையின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நாமே என்றருளினார். மோயீசன், கடவுளை உற்றுப் பார்க்கத் துணியாது தன் முகத்தை மூடிக் கொண்டான்.

ஆண்டவர் அவனை நோக்கி: எகிப்தில் நம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகளைக் கண்ணுற்றோம். வேலை வாங்கும் மேற்பார்வையாளரின் கொடுமையின் பொருட்டு அவர்கள் இடுகிற கூக்குரலையும் கேள்வியுற்றோம். நாம் அவர்கள் துயரத்தை அறிந்தமையால், அவர்களை எகிப்தியர் கைகளினின்று விடுவித்துக் காப்பாற்றவும், இந்தநாட்டிலிருந்து நல்ல பரந்த நாட்டிலே, பாலும் தேனும் பொழியும் பூமியிலே, அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கி வந்தோம்.

மோயீசன் கடவுளை நோக்கி: இதோ நான் இஸ்ராயேல் மக்களிடம் போய்: உங்கள் முன்னோரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார் என்று நான் சொல்லும்போது, அவர்கள், அவருடைய பெயர் என்ன என்று என்னைக்கேட்டால், நான் அவர்களுக்கு என்ன பதில் சொல்வேன் என்றான். கடவுள் மோயீசனை நோக்கி: இருக்கிறவர் நாமே. (ஆதலால்) நீ இஸ்ராயேல் மக்களிடம் போய்: இருக்கிறவரே என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்லுவாய் என்றார்.

மீண்டும் கடவுள் மோயீசனை நோக்கி: உங்கள் முன்னோரின் கடவுளாகிய ஆண்டவர், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுளாய் இருக்கிறவரே என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்லுவாய். என்றும் நமது பெயரும் இதுவே; தலைமுறை தலைமுறையாக நமது நினைவுச் சின்னமும் இதுவே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 102:1-2.3-4.6-7.8,11 (பல்லவி: 8a)

பல்லவி: **ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்.**

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: என் அகத்துள்ளதெல்லாம்
அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: அவர் செய்த நன்மைகளை
யெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்: உன் நோய்களை யெல்லாம்
குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார்: அருளையும் இரக்கத்தையும் உனக்கு
முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

6 நீதிமிக்க செயல்களைப் புரிகிறார் ஆண்டவர்: துன்புற்றோர் யாவருக்கும்
நீதி வழங்குகிறார்.
7 மோயீசனுக்குத் தம் வழிகளை வெளிப்படுத்தினார்: இஸ்ராயேல் மக்களுக்
குத் தம் செயல்களை விளங்கச் செய்தார். பல்லவி

8 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்: சினங்கொள்ளத் தாமதிப்பவர்;
சாந்தமுடையவர்.
11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்
வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்
கிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**மோயீசனோடு மக்கள் பாலைவனத்தில் நடத்திய வாழ்க்கை நமக்கு அறிவு புகட்டும் படிப்பினையாக எழுதப்பட்டுள்ளது.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 10:1-2-6.10 2.

சகோதரர்களே :

நீங்கள் ஒன்றை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்: நம் முன்னோர் அனைவரும் மேகத்தின் கீழ் நடந்தனர்; அனைவரும் கடலைக் கடந்து சென்றனர். மோயீசனோடு உறவு விளைத்த ஞானஸ்நானம் ஒன்றை அவர்கள் அனைவரும் இவ்வாறு அம்

மேகத்திலும் கடலிலும் பெற்றனர். இயற்கைக்கு மேற்பட்ட அதே உணவை அனைவரும் உண்டனர். இயற்கைக்கு மேற்பட்ட அதே பானத்தை அனைவரும் பருகினர். தங்களைப் பின் தொடர்ந்த பாறையி லிருந்து பானம் பருகி வந்தனர். அப்பாறையோ இயற்கைக்கு மேற் பட்டது; அது கிறிஸ்துவே என்க. ஆயினும் அவர்களுள் பெரும்பாலோர் மேல் கடவுள் பிரியம் கொள்ளவில்லை; அவர்கள் பிணங்கள் பாலை நில மெங்கும் சிதறிக்கிடந்தன.

அவர்கள் தீயன இச்சித்ததுபோல் நாமும் இச்சிக்கலாகாது எனக் காட்டவே இவை நமக்கு முன் அடையாளமாய் நிகழ்ந்தன. அவர் களுள் சிலர் முணு முணுத்து அழிவு விளைக்கும் தேவதூதனால் மாண்டனர்; அவர் களைப்போல் நீங்களும் முணு முணுக்காதீர்கள்.

அவர்களுக்கு நிகழ்ந்த இவையெல்லாம் ஒரு முன்னடையாளயம். இறுதிக் காலத்தில் வாழும் நமக்கு அறிவு புகட்டும் படிப்பினையாக இவை எழுதப்பட்டன. ஆகையால், நிலையாய் நிற்பதாக நினைக்கிறவனுக்கு எச்சரிக்கை, அவன் நிலைகுலைந்து போகலாம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் மத். 4:17

ஆண்டவர் கூறுகிறார்: மனந்திரும்புங்கள்;
விண்ணரசு நெருங்கி விட்டது.

## நற்செய்தி வாசகம்

**மனந்திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும்
அவ்வாறே அழிவீர்கள்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13:1-9

அக்காலத்தில்:

சிலர் யேசுவிடம் வந்து, பிலாத்து கலிலேயரின் இரத்தத்தை அவர்களுடைய பலியோடு கலந்தான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர் மறுமொழியாக, “இக்கலிலேயர் இத்தகைய சாவுக்கு உள்ளானர்கள் என்பதால், மற்றெல்லாக் கலிலேயரையும்விட இவர்கள் பாவிகள் என்று கருதுகிறீர்களா? அப்படியன்று என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனந்திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும் அவ்வாறு அழிவீர்கள். சிலோவாமில் கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே; அவர்கள் யெருசலேமில் வாழ்ந்த மற்றெல்லாரையும்விடக் குற்றவாளிகள்

என்று கருதுகிறீர்களா? அப்படியன்று என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனந்திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும் அவ்வாறு அழிவீர்கள்'' என்றார்.

மேலும் அவர் இந்த உவமையைக் கூறினார்: ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தான். அவன் வந்து அதிலே பழம் தேடியபொழுது ஒன்றுங் காணவில்லை. ஆகவே, தோட்டக்காரனிடம், "மூன்று ஆண்டுகளாக வந்து இந்த அத்தி மரத்திலே, பழம் தேடுகிறேன். ஒன்றுங் காணவில்லை. இதை வெட்டி விடு. ஏன் வீணாக இடத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது?'' என்றான். அதற்கு அவன், 'ஐயா, இந்த ஆண்டும் இருக்கட்டும். சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். காய்த்தால் சரி, இல்லாவிட்டால் வெட்டி விடலாம்' என்றான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*இவ்வாசகங்களுக்குப் பதிலாக, முதல் ஆண்டு வாசகங்களையும் பயன் படுத்தலாம். (பக். 528)*

# வேறொரு பூசை

*இவ் வாரத்தின் ஏதாவது ஒரு நாளில், சிறப்பாக சமாரியப் பெண்ணைப் பற்றிய நற்செய்தி வாசகம் வாசிக்கப்படாத 2 ஆம், 3 ஆம் ஆண்டு களில் இப்பூசையைப் பயன்படுத்தலாம்.*

## முதல் வாசகம்

**மக்கள் குடிக்கத் தண்ணீர் வெளிப்படும்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *17 : 1-7*

அந்நாட்களில்:

இஸ்ராயேல் மக்களின் சபை முழுவதுமே சின் என்னும் பாலைவனத்திலிருந்து புறப்பட்டு, ஆண்டவருடைய கட்டளையின்படியே பற்பல இடங்களிலே தங்கிய பின்னர், இராப்பிதிம் என்னும் இடத்திற்கு வந்து பாளையம் இறங்கினர். அங்கு மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை.

அப்பொழுது அவர்கள் மோயீசனோடு வாதாடி : நீர் எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் தரவேண்டும் என்றனர். மோயீசன், நீங்கள் என்னோடு ஏன் வாதாடுகிறீர்கள்? ஆண்டவரை ஏன் சோதிக்கிறீர்கள் என்றார்.

உண்மையிலேயே அவ்விடத்தில் தண்ணீர் இல்லாமையினால் தாக வேதனைப்பட்ட மக்கள் மோயீசனுக்கு விரோதமாய் முறுமுறுத்து, நீர் எங்களையும், ஆடு, மாடு முதலிய பிராணிகளையும் தண்ணீர்த் தாகத்தினால் கொன்றுவிடத்தானோ எகிப்திலிருந்து அழைத்து வந்தீர் என்று குறை சொல்லக் கேட்டு, மோயீசன் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டு: அடியேன் இம்மக்களுக்கு என்ன செய்வேன்? இன்னும் கொஞ்சத்தில் என்னைக் கல்லால் எறிவார்களே என்றார்.

அப்போது ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ மக்கள் முன் சென்று இஸ்ராயேல் பெரியோர் சிலரை உன்னுடன் அழைத்துக்கொண்டு, ஆட்டை அடித்த கோலை உன் கையில் ஏந்தி நடந்து போவாய். அதோ நாம் அவ்விடத்திலே ஓரோபு என்னும் பாறைமீது உன்முன் நிற்போம். நீ அந்தப் பாறையை அடி. அடிக்கவே மக்கள் குடிக்கத் தண்ணீர் வெளிப்படும் என்றார். மோயீசன் இஸ்ராயேல் பெரியோர்கள் கண்முன் அவ்விதமே செய்தார்.

இஸ்ராயேல் மக்கள் வாதாடியதுமன்றி ஆண்டவர் தங்களோடு இருக்கிறாரோ இல்லையோ என்று அவர்கள் ஆண்டவரையும் சோதனை செய்த காரணத்தால் மோயீசன் இந்த இடத்திற்குச் சோதனை என்று பெயரிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 94:1-2.6-7a 7b-9 (பல் : 7b&8b)

பல்லவி: "உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்" என்னும் ஆண்டவரது குரலை இன்று நீங்கள் கேட்பீர்களா !

1 வாருங்கள் ஆண்டவருக்குப் புகழ்பாடுவோம்: மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.

2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்: இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம்: நம்மைப் படைத்த ஆண்டவர் முன் முழந்தாளிடுவோம்.

7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள், அவர் அரவணைப்பிலுள்ள மந்தை.

பல்லவி

இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா? அக்குரல் கூறுவதாவது:
8 "அன்று மெரிபாவிலும் பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல்,
உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
9 அங்கே உங்கள்முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்: என் செயல்களைக்
கண்டிருந்தும்என்னைச் சோதனைக்குட்படுத்தினர்."

பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம்

அரு. 4:42.15

ஆண்டவரே, நீர் உண்மையாகவே உலகின் மீட்பர்; நான் தாகம் கொள்ளாதபடி உயிருள்ள தண்ணீரை எனக்கு அளித்தருளும்.

## நற்செய்தி வாசகம்

**முடிவில்லா வாழ்வடையப் பொங்கியெழும் ஊற்று.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:5-42

(பக்கம் 531)

# திங்கள்

## முதல் வாசகம்

**இஸ்ராயேல் நாட்டில் தொழுநோயாளர் பலர் இருந்தனர்; ஆயினும், சீரியா நாட்டு நாமானைத்தவிர வேறு எவரும் குணமடையவில்லை.**

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 5:1-15a

அந்நாட்களில்:

சீரியா அரசனின் படைத்தலைவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நாமான் என்று பெயர். அரசன் அவனைப் பெரிய மனிதனாக மதித்துப் போற்றி வந்தான். ஏனெனில் அவனைக்கொண்டு ஆண்டவர் சீரியாவைக் காப்பாற்றியிருந்தார். அவன் ஆற்றல் படைத்தவனும் செல்வனுமாய் இருந்தும், அவனுக்குத் தொழுநோய் கண்டிருந்தது. அப்படியிருக்க, சில கள்ளர்கள் சீரியாவிலிருந்து இஸ்ராயேல் நாட்டில் நுழைந்து அங்கிருந்து ஒரு சிறுமியைக் கடத்திக்கொண்டு வந்திருந்தனர். இவளோ

நாமாலின் மனைவிக்குப் பணிவிடை புரிந்து வந்தாள். அச்சிறுமி தன் தலைவியை நோக்கி, "என் தலைவர் சமாரியாவில் இருக்கிற இறைவாக்கினரைப் பார்க்கச் சென்றிருந்தால் அவர் இவரது தொழுநோயை நிச்சயமாய்க் குணமாக்கியிருப்பார்" என்றாள். அதைக் கேட்ட நாமான் அரசனிடம் சென்று, இஸ்ராயேல் நாட்டிலிருந்து வந்திருந்த அச்சிறுமி கூறின அனைத்தையும் அவனுக்குத் தெரிவித்தான். சீரியாவின் அரசன் அதற்கு மறுமொழியாக, "நீர் அவ்விடம் போகலாம். நான் இஸ்ராயேல் அரசனுக்குக் கடிதம் அனுப்புவேன்" என்றான்.

நாமான் தன்னோடு பத்துத் தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் பொற்காசுகளையும் பத்து ஆடையணிகளையும் எடுத்துக்கொண்டு பயணமானான். கடிதத்தை இஸ்ராயேல் அரசனிடம் கொடுத்தான். அதில், "நீர் இக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட உடன் என் ஊழியன் நாமானுக்குக் கண்டுள்ள தொழுநோயினின்று நீர் அவனைக் குணமாக்கும் பொருட்டு அவனை உம்மிடம் அனுப்பியுள்ளேன் என்று அறிந்து கொள்ளும்" என எழுதப்பட்டிருந்தது. இஸ்ராயேல் அரசன் கடிதத்தைப் படித்த உடன் தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, "ஒரு மனிதனைச் சீரியா அரசர் என்னிடம் அனுப்பி அவனுக்குள்ள தொழுநோயைக் குணப்படுத்தச் சொல்லுகிறாரே; நானென்ன உயிரைக் கொடுக்கவும், உயிரை எடுக்கவும் கடவுளா? என்னோடு போரிட அவர் எவ்வாறு வாய்ப்புத் தேடிக்கொண்டிருக்கிறார் என்று பாருங்கள்" என்று கூறினான்.

கடவுளின் மனிதர் எலிசேயு இஸ்ராயேல் அரசன் இவ்வாறு தன் ஆடைகளைக் கிழித்துக் கொண்ட செய்தியை அறிந்து, அவனிடம் ஆள் அனுப்பி, "நீர் ஏன் உம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டீர்? அம்மனிதன் என்னிடம் வரட்டும். இஸ்ராயேலில் இறைவாக்கினர் உண்டு என அவன் அறியட்டும்" என்று சொல்லச் சொன்னார். ஆகையால் நாமான் தன் குதிரைகளோடும் தேர்களோடும் எலிசேயுவுடைய வீட்டு வாயிலின்முன் வந்து நின்றான். எலிசேயு அவனுக்கு ஆள் அனுப்பி, "நீ போய் யோர்தான் நதியில் ஏழு முறை குளித்தால் உன் உடல் நலம்பெறும்; நீயும் தூய்மையாவாய்" என்று சொல்லச் சொன்னார். அதற்கு நாமான் கோபமுற்று, "இறைவாக்கினர் என் அருகில் வந்து தம் கடவுளாகிய ஆண்டவரின் திருப் பெயரைச் சொல்லி வேண்டி, தொழுநோய் கண்ட இடங்களைக் கையால் தொட்டு எனக்குக் குணம் அளிப்பார் என்று நான் எண்ணியிருந்தேன். நான் குளித்து உடலைத் தூய்மைப்படுத்தும் பொருட்டு

இஸ்ராயேலில் உள்ள ஆறுகள் எல்லாவற்றையும் விட நல்ல தண்ணீரை உடைய தமாஸ்கு நகர நதிகளான ஆபானா, பார்பார் என்ற நதிகள் எங்களுக்கு இல்லையா ?" என்று சொல்லிச் சினத்தோடு தான் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

அந்நேரத்தில் அவனுடைய ஊழியர்கள் அவனை அணுகி, "தலைவ, இறைவாக்கினர் இதைவிடப் பெரிய காரியத்தைச் செய்யக் கட்டளையிட்டிருந்தாலும் நீர் அதைக் கட்டாயம் செய்திருப்பீர். அவர், 'குளிக்கப் போம், சுத்தமாவீர்' என்றபோது தாங்கள் எவ்வளவு மரியாதையாய்க் கேட்டுக் கொள்ள வேண்டியவராய் இருக்கிறீர் ?" என்றனர். எனவே, நாமான் புறப்பட்டுச் சென்று கடவுளின் மனிதர் தனக்குக் கட்டளையிட்டிருந்தபடி யோர்தான் நதியில் ஏழு முறை குளித்தான். இப்படிச் செய்ததால் அவனது உடல் நலம் பெற்று ஒரு சிறு குழந்தையின் உடலைப் போல் மாறினது; அவனும் முழுதும் தூய்மையானான்.

பின்பு அவன் தன் பரிவாரங்களோடு கடவுளின் மனிதரிடம் திரும்பி வந்தான். அவர் முன் நின்று, "இஸ்ராயேலின் கடவுளைத் தவிர வேறு கடவுள் அனைத்துலகிலும் இல்லை என இப்போது நிச்சயமாக அறிந்து கொண்டேன். ஆகையால், அடியேனுடைய காணிக்கைகளைத் தாங்கள் ஏற்க வேண்டும் என்று வேண்டுகிறேன்" என்றான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 41:1. 2; சங். 42:3. 4 (பல்லவி: சங். 41:2 காண்)

பல்லவி: உயிருள்ள இறைவன் மீது என் உள்ளம் தாகங் கொண்டது;
இறைவனின் முகத்தை என்று காண்பேன் ?

1 கலைமான் நீரோடைகளை ஆர்வமுடன் நாடிச் செல்வதுபோல், இறைவா, என் நெஞ்சம் உம்மை ஆர்வத்துடன் நாடிச் செல்கிறது. பல்லவி

2 இறைவன் மீது, உயிருள்ள இறைவன் மீது என் உள்ளம் தாகங் கொண்டது. என்று செல்வேன்? இறைவனின் முகத்தை என்று காண்பேன்? பல்லவி

3 உமது ஒளியை வீசியருளும், உமது உண்மையைக் காட்டியருளும்; அவையே என்னை வழி நடத்தி உமது புனித மலைக்கும் உறைவிடத்துக்கும் கொண்டு சேர்க்கும். பல்லவி

4 இறைவனின் பீடத்துக்குச் செல்வேன், எனக்கு அகமகிழ்வும் அக்களிப்பும் தரும் இறைவனிடம் செல்வேன் : இறைவா, என் இறைவா, வீணை கொண்டு உமக்குப் புகழ்பாடுவேன். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் சங். 129: 5.7

**ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன். அவரது வாக்குறுதியில் நம்பிக்கை வைக்கிறேன்.**

**ஏனெனில் அவரிடம் இரக்கம் உள்ளது, அவருடைய மீட்புத்துணை பொங்கி வழிகின்றது.**

## நற்செய்தி வாசகம்

**எலியாஸ், எலிசேயு என்பவர்களைப்போல் யேசுவும் யூதர்களுக்கென்று மட்டும் அனுப்பப்படவில்லை.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:24-30

யேசு நாசரேத்திற்கு வந்திருந்தபோது, செபக்கூடத்தில் மக்களை நோக்கி அவர் கூறியதாவது:

"உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்கப்படுவதில்லை. உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: எலியாசின் காலத்தில் மூன்று ஆண்டுகள் ஆறு மாதங்களாக வானம் வறண்டு நாடெங்கும் பஞ்சம் உண்டானபோது, இஸ்ராயேல் நாட்டில் கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் சீதோன் நாட்டின் சரேப்தா ஊர்க் கைம்பெண் ஒருத்தியிடமன்றி வேறு எவரிடமும் எலியாஸ் அனுப்பப்படவில்லை. இறைவாக்கினரான எலிசேயுவின் காலத்திலும் இஸ்ராயேல் நாட்டில் தொழுநோயாளர் பலர் இருந்தனர். ஆயினும் சீரியா நாட்டு நாமானைத் தவிர வேறு எவரும் குணமாக்கப்படவில்லை" என்றார்.

இவற்றைக் கேட்டுச் செபக்கூடத்தில் இருந்த அனைவரும் வெகுண்டெழுந்து, அவரை ஊருக்கு வெளியே தள்ளி, அவ்வூர் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிடக் கொண்டு சென்றனர். அவரோ அவர்களிடையே நடந்து தம் வழியே போனார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**வருந்துகின்ற உள்ளத்தோடும் தாழ்மையான சிந்தையோடும் உள்ள எங்களை ஏற்றருளும்.**

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 3 : 25, 34-43

அந்நாட்களில் :

அசாரியால் எழுந்து நின்று நெருப்பின் நடுவில் வாய்விட்டு வேண்டிக் கொண்டார் ; அவர் சொல்லிய செபம் இதுவே :

"உம் திருப்பெயரை முன்னிட்டு என்றென்றைக்கும் எங்களைக் கைவிட்டுவிடாதீர் ; உமது உடன்படிக்கை வீணுய்ப் போக விடாதீர். உம்முடைய அன்பர் ஆபிரகாமைப்பற்றியும், உம் ஊழியர் ஈசாக் என்பவரை பற்றியும், உம்முடைய பரிசுத்தனுகிய இஸ்ராயேலைப் பற்றியும் எங்களை விட்டு உம் இரக்கத்தை நீக்காதீர். ஏனெனில், நீர் அவர்களுடைய வித்தினை வானத்து விண்மீன்கள் போலும், கடலோரத்து மணலைப் போலும் பெருகப்பண்ணுவதாக வாக்குறுதி செய்தீரே!

ஆண்டவரே, நாங்கள் மற்றெந்த இனத்தாரையும்விட எண்ணிக்கையில் குறைந்து போனேம் ; எங்கள் பாவங்களின் காரணத்தால் இன்று இவ்வுலகிலேயே மிகவும் தாழ்வடைந்து விட்டோம். இப்பொழுதோ எங்களுக்கு அரசனில்லை, இறைவாக்கினரோ தலைவரோ யாருமில்லை ; தகனப்பலியில்லை, எவ்வகைப் பலியுமில்லை ; காணிக்கையோ தூபமோ கிடையாது ; உமது முன்னிலையில் முதற்கனிகளைப் படைக்கவோ, உமது இரக்கத்தைப் பெறவோ இடமே கிடையாது.

ஆயினும் வருந்துகின்ற உள்ளத்தோடும், தாழ்மையான சிந்தையோடும் உள்ள எங்களை ஏற்றருளும் ; செம்மறிக் கடாக்களையும் எருதுகளையும் முற்றிலும் எரித்துச் செலுத்தப்படும் தகனப்பலியைப்போலவும், பல்லாயிரம் கொழுத்த செம்மறிப் புருவைகளின் பலியைப் போலவும் எங்களுடைய பலி உமக்கு உகந்ததாய் இருக்கும்படி இன்றைக்கு உம் முன்னிலையில் எழும்புவதாக! ஏனெனில் உம்மை நம்பினேர்க்குக் கலக்கமில்லை.

இப்பொழுது நாங்கள் உம்மை முழு உள்ளத்தோடு பின்பற்றுகிறோம், உமக்கு அஞ்சி, உமது முகத்தை நாடுகிறோம். எங்களை அவமானத்துக்கு உள்ளாக்காதீர், உமது பரிவுக்கேற்பவும், இரக்கப் பெருக்கத்தின்படியும் எங்களை நடத்தியருளும். ஆண்டவரே, உம் வியத்தகு செயல்களால் எங்களை மீட்டு உமது திருப்பெயருக்கு மகிமை தேடித் தந்தருளும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 25: 4-5ab. 6-7bc. 8-9. (பல்லவி: 6a)

பல்லவி: ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவு கூரும்.

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்; உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.

5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்; ஏனெனில் என் மீட்பராம் இறைவன் நீரே. பல்லவி

6 ஆண்டவரே, உம் இரக்கப் பெருக்கத்தை நினைவுகூரும்; ஆதிகாலமுதல் உள்ள உம் அருளன்பை மறவாதேயும்.

7 உம் அருள் அன்பிற்கேற்ப என்னை நினைவுகூரும், உமது அருள் நன்மையின் பொருட்டென்னை மறவாதேயும். பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்; ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.

9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார்; எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் யோவேல் 2: 12-13

இப்பொழுதாவது உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்; ஏனெனில், நாம் அருளும் இரக்கமுமுள்ளவர், என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

**உங்களுள் ஒவ்வொருவனும் தன் சகோதரனை மன்னிக்காவிட்டால், தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 18: 21-35

அக்காலத்தில் :

இராயப்பர் யேசுவை அணுகி, "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு எதிராகக் குற்றஞ் செய்துவந்தால், நான் அவனை எத்தனை முறை மன்னிப்பது? ஏழு முறை வரைக்குமா?" என்று கேட்டார். அதற்கு யேசு கூறியதாவது: ஏழு முறை என்றன்று, எழுபது முறை ஏழு முறை என உனக்குச் சொல்லுகிறேன்.

"ஆகவே விண்ணரசு, தன் ஊழியரிடம் கணக்குக் கேட்க விரும்பிய ஓர் அரசனுக்கு ஒப்பாகும். கணக்குக் கேட்கத் தொடங்கியபொழுது, அவனிடம் பத்தாயிரம் 'தாலந்து' கடன் பட்ட ஒருவனைக் கொண்டுவந்தனர். அவன் கடன் தீர்க்க வகையற்றிருந்ததால், அவனையும் அவன் மனைவி மக்களையும் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் விற்றுக் கடனைத் தீர்க்குமாறு தலைவன் கட்டளையிட்டான். அவ்வூழியனோ அவன் காலில் விழுந்து, 'பொறுத்துக்கொள்ளும்; கடன் எல்லாம் தீர்த்து விடுகிறேன்' என்று வேண்டினான். அவ்வூழியனுடைய தலைவன் மனமிரங்கி அவன் கடனை மன்னித்து அவனை விட்டுவிட்டான்.

அவ்வூழியன் வெளியே சென்றதும், தன் உடனூழியரில் தன்னிடம் நூறு வெள்ளிக் காசு கடன்பட்ட ஒருவனைக் கண்டான். அவனைப் பிடித்துக் கழுத்தை நெரித்து, 'நீ பட்ட கடனைத் தீர்த்துவிடு' என்று கேட்டான். அந்த உடனூழியன், காலில் விழுந்து, 'பொறுத்துக் கொள்ளும்; எல்லாம் தீர்த்துவிடுகிறேன்' என்று வேண்டினான். அவனோ இணங்கவில்லை. ஆனால், கடனைத் தீர்க்குமட்டும் அவனைச் சிறையில் அடைத்தான்.

அவனுடைய உடனூழியர் நடந்ததைக் கண்டு மிகவும் வருந்தித் தலைவனிடம் சென்று நடந்ததையெல்லாம் அறிவித்தனர். அப்போது அவனுடைய தலைவன் அவனை அழைத்து, 'கெட்ட ஊழியனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் உன் கடனையெல்லாம் மன்னித்தேனே. ஆகவே, நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல, நீயும் உன்னுடைய உடனூழியனுக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டாமா? என்று கேட்டு, சினந்து, கடன் முழுவதும் தீர்க்கும்வரை வதைப்போரிடம் அவனைக் கையளித்தான்.

உங்களுள் ஒவ்வொருவனும் தன் சகோதரனை முழு உள்ளத்தோடு மன்னிக்காவிட்டால், என் வானகத் தந்தையும் இவ்வாறே உங்களுக்குச் செய்வார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

*நீங்கள் கட்டளைகளை ஏற்றுக்கொள்வதோடல்லாமல் அவற்றின்படி நடந்து கொள்ளவும் வேண்டும்.*

உப ஆகமத்திலிருந்து வாசகம் 4 : 1. 5-9

மோயீசன் மக்களைப் பார்த்துக் கூறியதாவது :

"இப்பொழுது, ஓ இஸ்ராயேலரே ! நீங்கள் பிழைத்திருக்கும் படிக்கும், உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கவிருக்கிற நாட்டிலே நீங்கள் புகுந்து அதை உரிமையாக்கிக் கொள்ளவும், உங்களுக்கு நான் சொல்லி வருகிற கட்டளைகளையும் நீதிகளையும் கூர்ந்து கேளுங்கள்.

என் கடவுளாகிய ஆண்டவர் எனக்குக் கட்டளையிட்டபடியே நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நீதிமுறைகளையும் கற்பித்தேனென்று அறிவீர்கள். ஆகையால், நீங்கள் உரிமையாக்கிக் கொள்ளப் போகிற நாட்டில் அவற்றை அனுசரிக்க வேண்டியிருக்கும். நீங்கள் அவற்றை ஏற்றுக் கொள்வதோடல்லாமல், அவற்றின்படி நடந்து கொள்ளவும் வேண்டும். உங்கள் ஞானமும் விவேகமும் மக்களின் முன்பாக எவ்வாறு விளங்கும்? அவர்கள் உங்களுடைய எல்லாச் சட்டங்களையும் பற்றி நீங்கள் சொல்லக் கேட்டு : ஆ! இவர்கள் பெரிய இனத்தவர்; ஞானிகளும் அறிவாளிகளுமாய் இருக்கிறார்கள் என்று சொன்னால் மட்டு மேயன்றோ ?

நம் கடவுளாகிய ஆண்டவரை நாம் மன்றாடுகிறபோதெல்லாம் அவர் நமது அண்டையில்தானே இருக்கிறார். ஆ! நம் கடவுளுக்கும் நமக்கும் இடையே இருக்கிற நெருங்கிய உறவு, வேறு எந்தப் புகழ் பெற்ற இனத்தவருக்கும் அவர்களுடைய தேவர்களுக்கும் இடையே உண்டோ? இல்லை,

உள்ளபடியே இந்நாளில் நான் உங்களுக்கு விவரித்துத் தெளிவிக்கும் சடங்கு முறைகளையும், நீதியுள்ள கட்டளைகளையும், நியாயச் சட்டங்களை யும் பெற்றிருக்கிற வேறு சிறந்த மக்கள் யார் ?

ஆதலால், நீ உன்னையும் உன் ஆன்மாவையும் கவனமாய்க் காக்கக் கடவாய். நீ கண்களால் கண்டவைகளை மறவாதே. உன் வாழ்நாளெல் லாம் அவை உன் இதயத்தை விட்டு நீங்காதபடிக்கு எச்சரிக்கையாய் இரு. அவற்றை உன் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 147:1-2.4-5.8-9 (பல்லவி: 1a)

பல்லவி : யெருசலேமே, ஆண்டவரைப் போற்றுவாய்.

1 யெருசலேமே, உன் ஆண்டவரைப் போற்றுவாய்: சீயோனே, உன்
இறைவனைப் புகழ்வாய்.
2 ஏனெனில், அவர் உன் கதவுகளின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தினர்:
உன்னகத்துள்ள உன் மக்களுக்கு ஆசி யளித்தார். பல்லவி

4 உலகுக்குத் தம் ஆணையை விடுக்கிறுர்: விரைந்து செல்கிறது அவருடைய
வார்த்தை.
5 வெண் கம்பளிபோல் பனி பொழியச் செய்கிறுர்: உறைபனியைச் சாம்
பல்போல் இறைக்கிறுர். பல்லவி

8 யாக்கோபின் இனத்தார்க்குத் தம் வார்த்தையை வெளிப்படுத்தினுர்:
இஸ்ராயேல் மக்களுக்குக் கட்டளைகளையும் நியமங்களையும் அறிவித்தார்.
9 வேறெந்த இனத்தார்க்கும் இங்ஙனம் செய்ததில்லை: தம் கட்டளைகளை
அவர்களுக்கு வெளியிட்டதில்லை. பல்லவி

## நற்செய்திக்கு முன் வசனம்

அரு. 6:63b.68b

ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்; முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.

## நற்செய்தி வாசகம்

**கடைப்பிடித்துப் போதிப்பவனே பெரியவன் எனப்படுவான்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:17-19

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேனென்று நினைக்கவேண்டாம். அழிப்பதற்கன்று, நிறைவேற்றுவதற்கே வந்தேன். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகுமுன் திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ புள்ளியோ ஒழிந்துபோகாது: எல்லாம் நிறைவேறும்.

ஆகையால், இச் சின்னஞ்சிறு கட்டளைகளில் ஒன்றையேனும் மீறி, அப்படியே மனிதர்க்கும் போதிப்பவன் விண்ணரசில் மிகச்சிறியவன் எனப்படுவான்; அவற்றைக் கடைபிடித்துப் போதிப்பவனே, விண்ணரசில் பெரியவன் எனப்படுவான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

**தங்கள் கடவுளாகிய ஆண்டவரின் சொல்லைக் கேட்காமல்**
**இருந்துவரும் மக்களினம் இதுவே.**

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7:23-28

ஆண்டவர் கூறுவதாவது:

"நாம் அவர்களுக்குக் கொடுத்த கட்டளை இதுவே: 'நம் வாக்குக்குச் செவிசாயுங்கள்; அப்போது நாம் உங்களுக்குக் கடவுளாய் இருப்போம்; நீங்கள் நமக்கு மக்களாய் இருப்பீர்கள். நீங்கள் நலமாய் இருக்கும்படி உங்களுக்கு நாம் கட்டளையிடும் நெறியில் ஒழுகுங்கள்.'

ஆனால் அவர்கள் கீழ்ப்படியவுமில்லை, செவிசாய்க்கவுமில்லை; அதற்கு மாறாகத் தங்கள் சொந்தச் சிந்தனைகளின்படியும் தீய உள்ளத்தின் பிடிவாதப் போக்கிலும் நடந்தார்கள்; முன்னேறிச் செல்லாமல்

பின்னிட்டுப் போனார்கள். உங்கள் தந்தையர் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய நாளிலிருந்து இன்றுவரை நம் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களை நாளுக்கு நாள் அவர்களிடம் இடைவிடாமல் அனுப்பிக்கொண்டிருந்தோம். ஆயினும் நமக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை; நாம் சொன்னதையும் கேட்கவில்லை; அதற்கு மாறாக வளையாத கழுத்தினராய், தங்கள் தந்தையர்களிலும் கெட்டவர்களாய் நடந்தார்கள்.

நீ போய் இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்வாய்: ஆயினும் அவர்கள் உன் சொற்களைக் கேட்க மாட்டார்கள்; நீ அவர்களைக் கூப்பிடுவாய்; அவர்கள் உனக்குப் பதில் கொடுக்க மாட்டார்கள். நீ அவர்களைப் பார்த்து, 'தங்கள் கடவுளாகிய ஆண்டவரின் சொல்லைக் கேட்காமலும், அவரால் திருத்தப்பட விரும்பாமலும் இருந்து வரும் மக்களினம் இதுவே; உண்மை அழிந்துபோயிற்று; அது அவர்கள் வாயிலிருந்து அற்றுப்போயிற்று என்று சொல்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 94:1-2. 6-7a. 7b-9 (பல்லவி: 8)

பல்லவி: ''உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்,'' என்னும் ஆண்டவரது குரலை இன்று நீங்கள் கேட்பீர்களா!

1 வாருங்கள் ஆண்டவருக்குப் புகழ்பாடுவோம்: மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.

2 புகழ்ப்பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்: இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம்: நம்மைப் படைத்த ஆண்டவர் முன் முழந்தாளிடுவோம்.

7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள், அவர் அரவணைப்பிலுள்ள மந்தை. பல்லவி

இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா? அக்குரல் கூறுவதாவது:

8 '' அன்று மெரிபாவிலும் பாலை வெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல், உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.''

9 '' அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்: என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர்.'' பல்லவி

[illegible]
யோவேல் 2:12-13

இப்பொழுதாவது உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்; ஏனெனில் நாம் அருளும் இரக்கமும் உள்ளவர், என்கிறார் ஆண்டவர்.

நற்செய்தி வாசகம்

என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராய் இருக்கிறான்.

லூ. லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:14-23

அக்காலத்தில்:

யேசு பேய் ஓட்டிக் கொண்டிருந்தார். அது ஊமைப் பேய். பேயை ஓட்டிவிட்டதும், ஊமையன் பேசினான். மக்கள் வியப்படைந்தனர். அவர்களுள் சிலர், "பேய்கள் தலைவனை பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய் ஓட்டுகிறான்" என்றனர். வேறு சிலர் அவரைச் சோதிக்க வானத்திலிருந்து அறிகுறி ஒன்று காட்டும்படி கேட்டனர்.

அவர்களுடைய எண்ணங்களை அறிந்த யேசு, "தனக்கு எதிராகப் பிரியும் எந்த அரசும் பாழாய்ப் போகும்; வீடுகளும் ஒன்றன் மேல் ஒன்றாய் விழுந்துவிடும். பெயல்செபூலைக் கொண்டு நான் பேய் ஓட்டுகிறேன் என்று சொல்லுகிறீர்களே; தனக்கு எதிராகத் தானே பிரியும் சாத்தானின் அரசு எப்படி நிலைக்கும்? நான் பேய்களை ஓட்டுவது பெயல்செபூலைக் கொண்டு என்றால், உங்கள் மக்கள் யாரைக் கொண்டு ஓட்டுகிறார்கள். எனவே, அவர்களே உங்களுக்குத் தீர்ப்பிடுவார்கள்."

நான் பேய்களை ஓட்டுவது கடவுளின் விரலால் என்றால், கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது. வலியவன் போர்க்கோலம் பூண்டு தன் அரண்மனையைப் பாதுகாத்தால், அவன் உடைமைகள் பத்திரமாக இருக்கும். அவனிலும் வலியவன் ஒருவன் எதிர்த்து வந்து அவனை வென்றால், அவன் நம்பியிருந்த போர்க் கருவிகளை யெல்லாம் பறித்துக் கொண்டு கொள்ளைப் பொருளையும் பங்கிடுவான்.

என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராய் இருக்கிறான். என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

***எங்கள் கைவேலைப்பாடுகளை நோக்கி, 'எங்கள் தேவர்கள்' என்று இனிச் சொல்லமாட்டோம்.***

14 : 2-10

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம்

ஆண்டவர் கூறுவதாவது :

"இஸ்ராயேலே, உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பிவா, ஏனெனில் உன் அக்கிரமத்தினாலேயே நீ வீழ்ச்சியுற்றாய். வாய்விட்டுச் சொல்லி ஆண்டவரிடம் திரும்புங்கள்: அக்கிரமங்களை எல்லாம் அப்புறப் படுத்தியருளும், நன்மையானதை ஏற்றுக்கொள்ளும், உதடுகளால் தரும் காணிக்கையை உமக்களிக்கிறோம்; அசீரியர் எங்களைக் காக்க மாட்டார்கள், குதிரைகள்மேல் நாங்கள் இனி ஏறமாட்டோம்; எங்கள் கைவேலைப்பாடு களை நோக்கி, "எங்கள் இறைவா!" என்று சொல்லமாட்டோம்; ஏனெனில் திக்கற்ற பிள்ளைக்குப் பரிவு காட்டுபவர் நீரே" என்று ஆண்ட வரிடம் சொல்லுங்கள்.

அவர்களுடைய பிரமாணிக்க மின்மையை நாம் குணமாக்குவோம், அவர்கள்மேல் உளமார அன்புகூர்வோம்; ஏனெனில் அவர்கள்மேலிருந்த நம் சினம் ஆறிவிட்டது; நாம் இஸ்ராயேலுக்குப் பனிபோல் இருப்போம், அவன் லீலியைப்போலத் தளிர்ப்பான். லீபானைப்போல வேரூன்றி நிற்பான். அவனுடைய கிளைகள் நீண்டு படரும், ஒலிவ மரம் போல் அவன் அழகு இருக்கும்; லீபானைப்போல் அவன் நறுமணம் பரப்புவான்.

நமது நிழலில் வாழ அவர்கள் திரும்பி வருவர். வளமான தானியமும் திராட்சையும் பயிரிடுவர். லீபானின் திராட்சை இரசம்போல் அவர்களது புகழ் விளங்கும். இனிமேல் எப்பிராயீமுக்குச் சிலைகள் எதற்கு? நாமே அவனுக்குச் செவி சாய்த்துக் கண்காணிக்கிறோம்; பசுமையான தேவதாரு மரம்போல் இருக்கிறோம்; நீ கனிகொடுப்பது நம்மாலேதான்.

ஞானம் நிறைந்தவன் இவற்றைக் கண்டு பிடிக்கட்டும், புத்தியுள்ளவன் இவற்றை அறிந்துகொள்ளட்டும்; ஏனெனில் ஆண்டவரின் வழிகள் நேர்மையானவை, நேர்மையானவர்கள் அவற்றில் நடக்கிறார்கள்; மீறுகிறவர்கள் அவற்றில் இடறி விழுகிறார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 80 : 5c - 7a, 7bc-8, 9-10ab, 13,16 (பல்லவி: 10-8a)

பல்லவி : உன் கடவுளாகிய ஆண்டவர் நாமே: எனக்குச் செவிகொடு.

5 அறியாத மொழியொன்று என் செவியில் விழுந்தது:
6 சுமையினின்று அவர்கள் நொறுங்காத வண்ணம் அவர்களை விடுவித்தேன்: மண் சுமந்து உழைத்து வந்த அவர்களை விடுவித்தேன்.
7 துன்பவேளையில் நீ என்னைக் கூவி அழைத்தாய், நான் உனக்கு விடுதலை அளித்தேன். பல்லவி

8 இடி முழக்கத்தினிடையே மேகத்தினின்று உனக்கு மறுமொழி சொன்னேன்: மெரிபாவின் நீர் ஊற்றண்டையில் உன்னைச் சோதித்தறிந்தேன். என் மக்களே, எனக்குச் செவிகொடுங்கள்; நான் உங்களுக்கு அறிவுரை கூறுவேன்: இஸ்ராயேலே, நீ எனக்குச் செவிசாய்ப்பாயானால் எவ்வளவோ நலமாயிருக்கும்! பல்லவி

9 வேறு தேவன் எவரும் உனக்கு இருத்தலாகாது: அந்நியதேவன் யாரையும் நீ வணங்கலாகாது.
10 எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேற்றிய கடவுளாகிய ஆண்டவர் நாமே. பல்லவி

13 என் மக்கள் எனக்குச் செவிசாய்த்திருந்தால் எவ்வளவோ நலம்! நான் காட்டிய வழியில் இஸ்ராயேல் நடந்திருந்தால் எவ்வளவோ நலமாயிருந்திருக்கும்!
16 கோதுமையின் கொழுமையால் நான் இஸ்ராயேல் மக்களை உண்பித்திருப்பேன்: காட்டுத் தேனால் அவர்களுக்கு நிறைவளித்திருப்பேன். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் மத். 4:17

மனந்திரும்புங்கள், என்கிறார் ஆண்டவர்; விண்ணரசு நெருங்கிவிட்டது.

## நற்செய்தி வாசகம்

**உன் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே கடவுள்;
அவருக்கு அன்பு செய்வாயாக.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12:28b34

அக்காலத்தில்:

மறைநூல் அறிஞருள் ஒருவன் யேசுவிடம் வந்து எல்லாவற்றிலும் முதல் கட்டளை எது என்று அவரைக்கேட்டான்.

யேசு மறுமொழியாக: "இஸ்ராயேலே கேள்: நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். ஆகவே, உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும் முழு வலிமையோடும் அன்புசெய்வாயாக என்பது முதல் கட்டளை. உன் மீது நீ அன்புகாட்டுவதுபோல் உன் அயலான் மீதும் அன்பு காட்டு வாயாக என்பது இரண்டாம் கட்டளை. இவற்றைவிடப் பெரிய கட்டளை வேறில்லை" என்றார்.

அதற்கு மறைநூல் அறிஞன், "சரிதான், போதகரே, நீர் சொன்னது உண்மையே. கடவுள் ஒருவரே, அவரைத் தவிர வேறொருவரில்லை. அவருக்கு முழு உள்ளத்தோடும், முழு அறிவோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும் அன்பு செய்வதும், தன்மீது அன்பு காட்டுவதுபோல் அயலான்மீது அன்புகாட்டுவதும், தகனப் லிகள், மற்றப் பலிகள் எல்லாவற்றையும்விட மேலானது" என்றான்.

அவன் அறிவோடு விடை அளித்ததைக் கண்ட யேசு, "நீ கடவுளுடைய அரசிற்குத் தொலைவிலில்லை" என்றார். அதுமுதல் ஒருவனும் அவரைக் கேள்வி கேட்கத் துணியவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

**பலியை அல்ல, இரக்கத்தையே நாம் விரும்புகிறோம்.**

இறைவாக்கினர் ஓசே ஆகமத்திலிருந்து வாசகம் 6 : 1-6

வாருங்கள் ஆண்டவரிடம் திரும்புவோம்; ஏனெனில், நம்மைக் காயப்படுத்தியவர் அவரே, அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே, அவரே நம் காயங்களைக் கட்டுவார். இரண்டு நாளைக்குப் பிறகு நமக்கு அவர் புத்துயிரூட்டுவார், மூன்றாம் நாள் அவர் நம்மை எழுப்பி விடுவார்; அதன்பின் அவர் முன்னிலையில் நாம் வாழ்ந்திடுவோம். ஆண்டவரைப் பற்றி அறிந்திடுவோம், அவரைப் பற்றி அறிய முனைந்திடுவோம்; அவருடைய வருகை விடிவெள்ளிபோலத் திண்ணமானது; மழைபோலவும், நிலத்தை நனைக்கும் இளவேனிற்கால மாரிபோலவும் அவர் நம்மிடம் வருவார்.

"எப்பிராயிமே, உன்னை நாம் என்ன செய்வோம்? யூதாவே, உன்னை நான் என்ன செய்வோம்? விடியற்காலையின் மேகம்போலும், கதிரவனைக் கண்ட பனிபோலும் உங்கள் அன்பு இருக்கிறதே! ஆதலால்தான் இறைவாக்கினர்களைக் கொண்டு நாம் அவர்களை வெட்டி வீழ்த்தினோம்; நமது வாய் மொழிகளால் அவர்களைக் கொன்றொழித்தோம், நமது தீர்ப்பு வெட்ட வெளிச்சம்போல வெளிப்படுகின்றது. ஏனெனில், நாம் விரும்புவது பலியை அன்று, அன்பையே நாம் விரும்புகிறோம்; தகனப்பலிகள் நமக்கு வேண்டியதில்லை, கடவுளை அறியும் அறிவே நாம் விரும்புகிறோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 50 : 1-2. 16-17. 18-19ab (பல்லவி : ஓசே 6 : 6)

பல்லவி: **பலியை அல்ல, இரக்கத்தையே நாம் விரும்புகிறேம்.**

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும்: உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்களைப் போக்கி விடும்.
2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து போக்கிவிடும்: என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

16 ஏனெனில், பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை: தகனப்பலி கொடுத்தாலும் அதை நீர் ஏற்பதில்லை.
17 இறைவா, நான் உமக்குச் செலுத்த வேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே: தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.
பல்லவி

18 உம் நன்மைத் தனத்திற்கேற்ப, ஆண்டவரே, சீயோனுக்குக் கருணை காட்டும்: யெருசலேமின் மதில்களை மீளவும் எழுப்புவீராக.
19 அப்போது முறையான பலிகளையும் காணிக்கைகளையும் ஏற்றுக்கொள்வீர்.
பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் சங். 94 : 7b. 8b

இன்று, உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்;
மாறாக, ஆண்டவரது குரலைக் கேட்பீர்களாக.

## நற்செய்தி வாசகம்

***இறைவனுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பியவன்***
***ஆயக்காரனே, பரிசேயன் அல்லன்.***

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 18: 9-14

அக்காலத்தில் :

தம்மை நீதிமான்களென நம்பிப் பிறரைப் புறக்கணிக்கும் சிலரை நோக்கி, யேசு சொன்னதாவது:

"இருவர் செபம் செய்யக் கோயிலுக்குச் சென்றனர். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்றுகொண்டு, 'கடவுளே, கள்வர் அநீதர் விபசாரர் முதலான மற்ற மனிதரைப்போலவோ, இந்த

ஆயக்காரனைப்போலவோ நான் இராததுபற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன். வாரத்திற்கு இருமுறை நோன்பிருக்கிறேன். என் வருவாயிலெல்லாம் பத்திலொரு பகுதி கொடுக்கிறேன்' என்று தனக்குள்ளே செபித்தான்.

ஆயக்காரனோ தொலைவில் நின்று வானத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் துணியாமல், 'கடவுளே, பாவி என்மேல் இரக்கமாயிரும்' என்று சொல்லி மார்பில் அறைந்துகொண்டான்.

இறைவனுக்கு ஏற்புடையவனாகி வீடு திரும்பியவன் இவனே, அவனல்லன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்பெறுவான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# தவக் காலம் – 4ஆம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**இஸ்ராயேல் மீது அரசராகத் தாவீது அபிஷேகம் பெறுகிறார்.**

சாமுவேல் ஆகமம் முதல் புத்தகத்திலிருந்து வாசகம் 16: 1b. 6-7. 10-13a

அந்நாட்களில் :

ஆண்டவர் சாமுவேலைப் பார்த்து, "கொம்பினால் செய்யப்பட்ட உன் கிண்ணத்தை எண்ணெய்யால் நிரப்பிக் கொண்டு வா; பெத்லகேமைச் சேர்ந்த இசாயினிடம் நாம் உன்னை அனுப்புவோம். நாம் அவன் புதல்வர்களில் ஒருவனை அரசனாகத் தேர்ந்து கொள்வோம்" என்றருளினார்.

இசாயின் புதல்வர்கள் வந்தபோது, சாமுவேல் எலியாபைக் கண்டு, "ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவன்தானோ?" என்று கேட்டார். ஆண்டவர் சாமுவேலை நோக்கி, "அவனுடைய முகத்தையும் உடல் உயரத்தையும் பார்க்காதே; ஏனெனில் நாம் அவனைத் தள்ளி விட்டோம். மனிதன் பார்க்கிறது ஒருவிதம், நாம் தீர்ப்பிடுவது வேறு விதம். மனிதன் வெளிக்குத் தோன்றுபவற்றை மட்டும் பார்க்கிறான்; ஆண்டவரோ இதயத்தைப் பார்க்கிறார்" என்று சொன்னார்.

இவ்வாறு இசாயி தன் புதல்வர்களில் எழுவரைச் சாமுவேல் முன் கொண்டு வந்தான். "இவர்களுள் ஒருவனையும் ஆண்டவர் தேர்ந்து கொள்ளவில்லை" என்று சாமுவேல் இசாயிடம் சொன்னார். அப்பொழுது இசாயியைப் பார்த்துச் சாமுவேல், "உன் பிள்ளைகள் எல்லாம் இவ்வளவு

தானா?" என்று கேட்டார். அதற்கு அவன் "இன்னும் ஒரு சிறுவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" என்று மறுமொழி சொன்னான். அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி, "நீ ஆள் அனுப்பி அவனை வரச் சொல்; அவன் வரும் வரை நான் உண்ணாது இருப்பேன்" என்றார். ஈசாய் ஆள் அனுப்பி அவனை அழைத்து வரச் செய்தான். அவனோ சிவந்த மேனியும், பார்வைக்கு அழகும், முகப் பொலிவும் உள்ளவனுமாய் இருந்தான். அப்பொழுது ஆண்டவர், "இவன்தான்; எழுந்து இவனை அபிஷேகம் செய்" என்று சொன்னார்.

அப்பொழுது சாமுவேல் கொம்பினால் செய்யப்பட்ட எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்து அவனுடைய சகோதரர் நடுவில் அவனை அபிஷேகம் செய்தார். அன்று முதல் ஆண்டவருடைய ஆவி தாவீதின் மேல் இறங்கி எப்பொழுதும் இருந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

திபா. 23:1-3a. 3b-4. 5. 6 (பல்லவி: 1)

பல்லவி: என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு!

1 என் ஆயன் ஆண்டவர்; எனக்கென்ன குறைவு!
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்;
3 என் களைப்பை ஆற்ற நீர் அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்; எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய வழியில் செலுத்துகின்றார்.

4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்கநேர்ந்தாலும், தீமை எதற்கும் அஞ்சேன்: ஏனெனில் நீர் என்னோடு இருக்கின்றீர்; உமது கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர்: என் தலைக்கு எண்ணெயைப் பூசினீர்; என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது. பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும்; என் வாழ்நாளெல்லாம் என்னைத் தொடரும்: ஆண்டவர்தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்; ஊழி ஊழிக்காலமும் குடியிருப்பேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இறந்தோரினின்று எழுந்து நில்; கிறிஸ்து உன்மேல் ஒளிர்ந்தெழுவார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 8-14

சகோதரர்களே :

ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்பொழுது ஆண்டவருக்குள் ஒளியாய் இருக்கிறீர்கள். ஒளியின் மக்களாக நடந்துகொள்ளுங்கள். ஒளியின் கனிகளோ நன்மை, நீதி, உண்மை. ஆண்டவருக்கு உகந்தது எது என்று உய்த்துணருங்கள். இருளின் பயனற்ற செயல்களைச் செய்பவர்களோடு சேரவேண்டாம்; அவை தவறெனக் காட்டுங்கள். மறைவில் அவர்கள் செய்வதெல்லாம் சொல்லக்கூட வெட்கமாயிருக்கிறது. ஒளியானது அவை அனைத்தும் தவறெனக் காட்டும்போது அவற்றின் உண்மைநிலை வெளியாகிறது. அவ்வாறு வெளியாக்கப்படுவதெல்லாம் ஒளிமயமாகிறது.

எனவேதான், 'தூங்குபவனே எழுந்திரு, இறந்தோரினின்று எழுந்து நில். கிறிஸ்து உன்மேல் ஒளிர்ந்தெழுவார்' என்றுள்ளது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 8:12

நானே உலகின் ஒளி, என்கிறார் ஆண்டவர்; என்னைப் பின் செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்.

## நற்செய்தி வாசகம்

**போய்க் கழுவினான், பார்வை பெற்றுத் திரும்பி வந்தான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 9:1-41

அக்காலத்தில்:

யேசு போய்க்கொண்டிருக்கும்போது பிறவிக் குருடன் ஒருவனைக் கண்டார். "ராபி, இவன் குருடனாகப் பிறந்தது யார் செய்த பாவம்? இவன் செய்த பாவமா? இவன் பெற்றோர் செய்த பாவமா?" என்று அவருடைய சீடர் அவரை வினவினர். யேசு, "இவன் செய்த பாவமும் அன்று, இவன் பெற்றோர் செய்த பாவமும் அன்று. கடவுளுடைய செயல்கள் இவன் மட்டில் வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தான்.

பகலாய் இருக்கும் வரை என்னை அனுப்பினவருடைய செயல்களை நாம் செய்யவேண்டியிருக்கிறது. இரவு வருகின்றது. அப்பொழுது எவனும் வேலைசெய்ய முடியாது. இவ்வுலகில் இருக்கும்வரை நான் உலகிற்கு ஒளி'' என்றார்.

இதைச் சொன்னபின், தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறுண்டாக்கி, அச்சேற்றை அவனுடைய கண்கள்மேல் பூசி, அவனை நோக்கி, "நீ போய்ச் சீலோவாம் குளத்தில் கழுவு'' என்றார். (சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவர் என்பது பொருள்.) அவன் போய்க் கழுவினான், பார்வையோடு திரும்பி வந்தான்.

அக்கம்பக்கத்தாரும், முன்பு அவனைப் பிச்சைக்காரனாகப் பார்த்து வந்தவர்களும், "இவன் தானே அங்கே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவன்?'' என்றனர். சிலர், "இவன் தான்'' என்றும், சிலரோ, "அவனல்லன், அவனைப்போலிருக்கிறான்'' என்றும் சொல்லிக்கொண்டனர். அவனோ, "நான் தான்'' என்றான். அவர்கள், "உனக்கு எப்படிப் பார்வை கிடைத்தது?'' என்று கேட்டனர். அவன், "யேசு என்பவர் சேறுண்டாக்கி என் கண்களில் பூசி, 'சீலோவாம் குளத்திற்குப் போய்க் கழுவு' என்றார். நான் போய்க் கழுவினேன். பார்வை பெற்றேன்'' என்றான். அவர்கள், "அவர் எங்கே?'' என்று அவனைக் கேட்க, அவன் "தெரியாது'' என்றான். முன்பு குருடனாயிருந்த அவனைப் பரிசேயரிடம் கூட்டிக்கொண்டு போயினர். இயேசு சேறுண்டாக்கி அவனுக்குப் பார்வை அளித்த நாள் ஓர் ஓய்வுநாள். எனவே பரிசேயரும், "எப்படிப் பார்வை அடைந்தாய்?'' என்ற அதே கேள்வியைக் கேட்டனர். அவனோ அவர்களிடம், "என் கண்களின்மேல் அவர் சேற்றைத் தடவினார்; போய்க் கழுவினேன்; இப்போது பார்க்கிறேன்'' என்றான். பரிசேயர்களுள் சிலர், "அவன் கடவுளிடமிருந்து வந்தவன் அல்லன். ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதில்லை'' என, சிலர், "பாவியானவன் இத்தகைய அருங்குறிகளை எப்படிச் செய்ய முடியும்?'' என்றனர். எனவே, அவர்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்கள் மீண்டும் குருடனை நோக்கி, "உனக்குப் பார்வை அளித்தவனைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாய்?'' என, அவன், "அவர் ஓர் இறைவாக்கினர்'' என்றான்.

அவன் குருடனாயிருந்து பார்வை பெற்றவன் என்பதை, அவன் பெற்றோரை அழைத்துக் கேட்கும்வரை யூதர்கள் நம்பவேயில்லை. "உங்கள் மகன் பிறவிக்குருடன் என்று சொல்லுகிறீர்களே, இவன் தானா? இவனுக்கு இப்பொழுது எப்படிக் கண் தெரிகிறது?'' என்று அவர்களை வினவினர். அதற்கு அவனுடைய பெற்றோர், "இவன் என் மகன்தான். பிறவியிலேயே குருடன்தான். இவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும். ஆனால் இப்பொழுது எப்படிக் கண் தெரிகிறது என்பது எங்களுக்குத் தெரியாது.

இவனுக்குப் பார்வை கொடுத்தவர் யார் என்பதும் எங்களுக்குத் தெரியாது. அவனையே கேட்டுக்கொள்ளுங்கள். அவன் வயது வந்தவன். நடந்ததை அவனே சொல்லட்டும்'' என்றனர். யூதர்களுக்கு அஞ்சியே அவனுடைய பெற்றோர் இவ்வாறு கூறினர். ஏனெனில், அவரை மெசியாவாக எவனு வது ஏற்றுக் கொண்டால், அவனைச் செபக்கூடத்திற்குப் புறம்பாக்க வேண் டுமென யூதர்கள் ஏற்கெனவே முடிவு செய்திருந்தனர். அதனால்தான் அவனுடைய பெற்றோர், ''அவன் வயது வந்தவன், அவனையே கேட்டுக் கொள்ளுங்கள்'' என்றனர்.

குருடனாயிருந்தவனை மீண்டும் அழைத்து அவனிடம், ''நீ கடவுளை மகிமைப்படுத்து; அவன் பாவி என்பது எங்களுக்குத் தெரியும்'' என்றனர். அவனோ, ''அவர் பாவியோ, அல்லரோ, எனக்குத் தெரியாது. ஒன்று தான் தெரியும். நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது பார்க்கிறேன்'' என்றான். மீண்டும் அவர்கள், ''அவன் உனக்கு என்ன செய்தான்? எப்படிப் பார்வை அளித்தான்?'' என்று வினவ, அவன், ''ஏற்கெனவே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கவனிக்கவில்லை. மறுபடியும் ஏன் அதைக் கேட்க வேண்டும்? நீங்களும் அவருடைய சீடர்களாக விரும்பு கிறீர்களோ?'' என்றான். அவர்கள் அவனைத் திட்டி, ''நீதான் அந்த ஆளுடைய சீடன். நாங்களோ மோயீசனுடைய சீடர். கடவுள் மோயீ சனோடு பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும். இவன் எங்கிருந்து வந்தான் என்பது எங்களுக்குத் தெரியாது'' என்று சொன்னார்கள். அதற்கு அவன், ''என்ன விந்தையாயிருக்கிறது! எனக்குப் பார்வை கொடுத்திருக்கிறார். இவர் எங்கிருந்து வந்தார் என்பது தெரியாதென் கிறீர்களே! பாவிகளுக்குக் கடவுள் செவிசாய்ப்பதில்லை. இறைப்பற்றுள் ளவனாய் அவர் விருப்பத்தின்படி நடக்கிறவனுக்கே செவிசாய்க்கிறார். இது நமக்கு நன்றாய்த் தெரியும். பிறவியிலேயே குருடனாயிருந்த ஒருவனுக்கு யாரும் பார்வையளித்ததாக ஒருபோதும் கேள்விப்பட்டதேயில்லை. இவர் கடவுளிடமிருந்து வராதிருந்தால் ஒன்றுமே செய்திருக்க முடியாது'' என்றான். அப்போது அவர்கள், ''பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் நீயா எங்களுக்குப் போதிக்கிறாய்?'' என்று சொல்லி அவனை வெளியே தள்ளிவிட்டார்கள்.

அவர்கள் அவனை வெளியே தள்ளிவிட்டதை யேசு கேள்வியுற்றார். பின்பு அவனைக் கண்டபொழுது, ''மனுமகனில் உனக்கு விசுவாசம் உண்டா?'' என, அவன், ''ஆண்டவரே, அவர் யார் எனச் சொல்லும், நான் அவரில் விசுவாசம் கொள்வேன்'' என்றான். யேசு அவனை நோக்கி, ''நீ அவரைப் பார்த்திருக்கிறாய். உன்னுடன் பேசுகிறவரே அவர்'' என்று கூற, அவன் ''ஆண்டவரே, விசுவசிக்கிறேன்'' என்று சொல்லி அவரைப் பணிந்து வணங்கினான். அப்போது யேசு,

"நான் தீர்ப்பிடவே இவ்வுலகத்திற்கு வந்தேன். பார்வையற்றோர் பார்வை பெறவும், பார்வையுள்ளோர் குருடராகவுமே நான் வந்தேன்" என்று கூறினார். அவருடனிருந்த பரிசேயர் சிலர் இதைக் கேட்டு "நாங்களுமா குருடர்?" என்று வினவ, யேசு, "நீங்கள் குருடராய் இருந்தால், உங்களுக்குப் பாவம் இராது. ஆனால், 'எங்களுக்குக் கண் தெரிகிறது' என்கிறீர்கள். ஆதலால், உங்கள் பாவத்திலேயே நீங்கள் நிலைத்திருக்கிறீர்கள்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

9: 1. 6-9. 13-17. 34 38

அக்காலத்தில் :

யேசு போய்க்கொண்டிருக்கும்போது பிறவிக் குருடன் ஒருவனைக் கண்டார். அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறுண்டாக்கி, அச்சேற்றை அவனுடைய கண்கள்மேல் பூசி, அவனை நோக்கி, "நீ போய்ச் சீலோவாம் குளத்தில் கழுவு" என்றார். (சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவர் என்பது பொருள்.) அவன் போய்க் கழுவினான், பார்வையோடு திரும்பி வந்தான். அக்கம்பக்கத்தாரும், முன்பு அவனைப் பிச்சைக்காரனைப் பார்த்து வந்தவர்களும், "இவன்தானே அங்கே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவன்?" என்றனர். சிலர், "இவன்தான்" என்றும், சிலரோ, "அவனல்லன், அவனைப் போலிருக்கிறான்" என்றும் சொல்லிக்கொண்டனர். அவனோ, "நான்தான்" என்றான்.

முன்பு குருடனாயிருந்த அவனைப் பரிசேயரிடம் கூட்டிக் கொண்டு போயினர். யேசு சேறுண்டாக்கி அவனுக்குப் பார்வை அளித்த நாள் ஓர் ஓய்வு நாள். எனவே பரிசேயரும், "எப்படிப் பார்வை அடைந்தாய்?" என்ற அதே கேள்வியைக் கேட்டனர். அவனோ அவர்களிடம், "என் கண்களின்மேல் அவர் சேற்றைத் தடவினார்; போய்க் கழுவினேன்; இப்போது பார்க்கிறேன்" என்றான். பரிசேயர்களுள் சிலர், "அவன் கடவுளிடமிருந்து வந்தவன் அல்லன். ஓய்வு நாளைக் கடைப்பிடிப்பதில்லை" என, சிலர், "பாவியானவன் இத்தகைய அருங்குறிகளை எப்படிச் செய்ய முடியும்?" என்றனர். எனவே, அவர்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்கள் மீண்டும் குருடனை நோக்கி, "உனக்குப் பார்வை அளித்தவனைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாய்?" என, அவன், "அவர் ஓர் இறை

வாக்கினர்" என்றான். அப்போது அவர்கள், "பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக்கிடக்கும் நீயா எங்களுக்குப் போதிக்கிறாய்?" என்று சொல்லி அவனை வெளியே தள்ளிவிட்டார்கள்.

அவர்கள் அவனை வெளியே தள்ளிவிட்டதை யேசு கேள்வியுற்றார். பின்பு அவனைக் கண்டபொழுது, "மனுமகனில் உனக்கு விசுவாசம் உண்டா?" என, அவன், "ஆண்டவரே, அவர் யார் எனச் சொல்லும், நான் அவரில் விசுவாசம் கொள்வேன்" என்றான். யேசு அவனை நோக்கி, "நீ அவரைப் பார்த்திருக்கிறாய். உன்னுடன் பேசுகிறவரே அவர்" என்று கூற, அவன் "ஆண்டவரே விசுவசிக்கிறேன்" என்று சொல்லி அவரைப் பணிந்து வணங்கினான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவரின் சீற்றமும் இரக்கமும் மக்கள் நாடுகடத்தப்படுதலிலும், அவர்கள் மீட்கப் பெறுவதிலும் வெளியாகின்றன.**

நாள் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் 36:14-16.19-23

அந்நாட்களில்:

குருக்களில் தலைமையானவர்களும் மக்களும் புறவினத்தாரைப் பின்பற்றிக் கெட்ட நடத்தையில் இறங்கினர். ஆண்டவர் தமக்கென யெருசலேமில் பரிசுத்தப்படுத்தியிருந்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினர். அவர்களுடைய முன்னோரின் கடவுளாகிய ஆண்டவர் தம் மக்கள்மீதும் தம் உறைவிடத்தின்மீதும் இரக்கம் கொண்டவராய்த் தம் தூதுவர்களை நாளும் அதிகாலையில் அவர்களிடம் அனுப்பி, அவர்களுக்கு அறிவுரை கூறி வந்தார். அவர்களோ கடவுளின் தூதர்களை ஏளனம் செய்து, அவர்கள் வார்த்தைகளை மதியாது, இறைவாக்கினரை நகைத்து நிந்தித்தனர். எனவே ஆண்டவரின் சீற்றம் மக்கள் மேல் மூண்டது. இனி உதவி எங்கிருந்து வரும்?

எதிரிகள் கடவுளின் ஆலயத்தைத் தீக்கு இரையாக்கினர்; யெருசலேமின் மதிலை இடித்துக் கோபுரங்களுக்குத் தீ வைத்தனர். அதிலிருந்த செல்வங்களையெல்லாம் அழித்து விட்டனர். வாளுக்கு இரையாகாது தப்பின எஞ்சியோர் சிறைப்படுத்தப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டனர். பாரசீக ஆட்சி ஏற்படும்வரை, அங்கே அரசனுக்கும் அவனுடைய புதல்வருக்கும் அடிமைகளாய் இருந்து வந்தனர். இவ்வாறு எரெமியாஸ் வாயிலாக ஆண்டவர் கூறியிருந்த வாக்கு நிறைவேறும் பொருட்டு, நாடு தான் ஓய்ந்திருக்க வேண்டிய ஆண்டுகளுக்கு ஈடாக ஓய்வை அனுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க் கிடந்த நாளெல்லாம் எழுபது ஆண்டுகளாக ஓய்ந்திருந்தது.

எரெமியாஸ் வாயிலாக ஆண்டவர் உரைத்திருந்த வாக்கு நிறைவேறும்படி பாரசீக அரசன் சீருஸ் என்பவனின் முதலாம் ஆண்டிலே ஆண்டவர் அவனை ஏவிவிட, சீருஸ் கடிதம் எழுதித் தனது நாடெங்கும் ஆட்களை அனுப்பினான்: "பாரசீக அரசன் சீருஸ் சொல்லுகிறதாவது: விண்ணகக் கடவுளாகிய ஆண்டவர் பூமியின் நாடுகளை எல்லாம் எனக்கு அடிமைப்படுத்தி, யூதாவிலுள்ள யெருசலேமில் தமக்கு ஓர் ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டுள்ளார். எனவே உங்கள் நடுவே வாழ்ந்து வரும் அவருடைய மக்கள் அனைவரும் யெருசலேமுக்குப் போகட்டும். அவர்களின் கடவுளாகிய ஆண்டவர் அவர்களோடு இருப்பாராக!" என்று எங்கும் விளம்பரம் செய்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 136: 1-2. 3.4-5. 6 (பல்லவி : 6a)

பல்லவி: உன்னை நான் நினையாதிருந்தால்,
என் நாவு மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

1 பாபிலோனின் ஆறுகளருகே அமர்ந்து சீயோனை நினைத்தபோது, நாங்கள் கண்ணீர் சிந்தினோம்.
2 அந்த நாட்டு அலரிச் செடிகள்மீது, எங்கள் யாழ்களை மாட்டி வைத்தோம்.
பல்லவி

3 எங்களைச் சிறையாக்கியவர்கள், நாங்கள் பாடும்படி கேட்டார்கள்; எங்களைத் துன்புறுத்தியவர்கள் மகிழ்ச்சிப் பா இசைக்கச் சொன்னார்கள்: 'சீயோனைப்பற்றிக் கீதங்கள் சிலவற்றைப் பாடிக்காட்டுங்கள்' என்றார்கள்.
பல்லவி

4 ஆண்டவருடைய பாடலை அந்நிய நாட்டில் எங்ஙனம் பாடுவோம்?
5 யெருசலேமே நானுன்னை மறப்பதாயிருந்தால், என் வலக்கை சூம்பிப் போவதாக. பல்லவி

6 உன்னை நான் நினையாதிருந்தால், என் நாவு மேல்வாயோடு ஒட்டிக்கொள் வதாக: எனக்குள்ள மகிழ்ச்சிக்கெல்லாம் மேலானதாக நான் யெருசலே மைக் கருதாவிடில் எனக்கு இதெல்லாம் நிகழ்வதாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**குற்றங்களால் இறந்தவர்களான நீங்கள் மீட்புப் பெற்றிருப்பது அருளாலே.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 4–10.

சகோதரர்களே :

கடவுள் இரக்கப் பெருக்கமுள்ளவர், அன்புமிக்கவர். நம் குற்றங்களால் நாம் இறந்தவர்களாய் இருந்தபோதிலும், அவர் நம்மீது கொண்ட பேரன்பினால் கிறிஸ்துவோடு நாம் உயிர்பெறச் செய்தார். நீங்கள் மீட்புப் பெற்றிருப்பது அருளாலேயே. கிறிஸ்து யேசுவுக்குள் நாம் அவரோடு உயிர்த்தெழவும், விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார். கிறிஸ்து யேசுவில் இறைவன் நம்மீது காட்டிய பரிவினாலே தம் அளவற்ற அருள் வளத்தை, வரப்போகும் காலங்களில் காண்பிப்பதற் காகவே இவையெல்லாம் செய்தார்.

அந்த அருளாலேயே விசுவாசத்தின் வழியாக மீட்பு அடைந் திருக்கிறீர்கள். இது உங்களால் ஆனதன்று; கடவுளின் நன்கொடையே. இது மனித செயல்களால் ஆனதன்று; எனவே எவனும் பெருமை பாராட்டிக் கொள்ளலாகாது. ஏனென்றால் நாம் இறைவனின் கைவேலையே. நாம் செய்யவேண்டுமென்று கடவுள் முன்னேற்பாடு செய்த நற்செயல்களில் நாம் ஈடுபடுவதற்கே கிறிஸ்து யேசுவுக்குள் நாம் படைக்கப்பட்டோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 3:16

தம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு, அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்.

## நற்செய்தி வாசகம்

**கடவுள் தம் மகனை உலகத்திற்கு அனுப்பியது, அவர் வழியாக உலகம் மீட்புப் பெறவே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3:14-21

அக்காலத்தில்: யேசு நிக்கொதேமுவுக்குக் கூறியதாவது:

மனுமகனில் விசுவாசங் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு. மோயீசன் பாலைவனத்தில் பாம்பை உயர்த்தியதுபோல், மனுமகனும் உயர்த்தப்படவேண்டும்.

தம் மகனில் விசுவாசங்கொள்ளும் எவரும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பியது அதற்கு தீர்ப்பளிக்க அன்று, அவர் வழியாக உலகம் மீட்புப் பெறவே. அவரில் விசுவாசங்கொள்பவன் தீர்ப்புக்கு ஆளாவதில்லை; விசுவாசங்கொள்ளாதவனோ ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டான். ஏனெனில், அவன் கடவுளின் ஒரேபேறான மகனின் பெயரில் விசுவாசங்கொள்ளவில்லை.

அவர்கள் பெறும் தீர்ப்பு இதுவே: ஒளி உலகத்திற்கு வந்துள்ளது; மனிதர்களோ ஒளியை விட இருளையே விரும்பினர்; ஏனெனில், அவர்களுடைய செயல்கள் தீயனவாயிருந்தன. பொல்லாது செய்பவன் எவனும் ஒளியை வெறுக்கிறான். தன் செயல்கள் தவறானவை என்று வெளியாகாதபடி அவன் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக்கேற்ப நடப்பவனோ தன் செயல்கள் கடவுளோடு ஒன்றித்துச் செய்தவையாக வெளிப்படும்படி ஒளியிடம் வருகிறான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இவ்வாசகங்களுக்குப் பதிலாக, முதல் ஆண்டு வாசகங்களையும் பயன்படுத்தலாம்.

(பக்கம் 563)

# ஞாயிறு - மூன்றாம் ஆண்டு

## முதல் வாசகம்

**வாக்களிக்கப்பட்ட நாடு வந்து சேர்ந்த இறைமக்கள் பாஸ்கா கொண்டாடுகின்றார்கள்.**

யோசுவா ஆகமத்திலிருந்து வாசகம் 5:9a, 10-12

அந்நாட்களில் :

ஆண்டவர் யோசுவாவை நோக்கி, "உங்கள் மேல் இருந்த எகிப்தின் பழியை இன்று நாம் நீக்கிவிட்டோம்" என்றார்.

இஸ்ராயேல் மக்கள் கல்கலாவில் இருந்து கொண்டு மாதத்தின் பதினான்காம் நாள் மாலை வேளையில் எரிக்கோவின் சமவெளியிலேயே பாஸ்காவைக் கொண்டாடினார். மறுநாளில் அவர்கள் நிலத்தின் விளைச்சல்களையும் புளியாத அப்பங்களையும் அவ்வாண்டின் மாவையும் உண்டனர்.

அவர்கள் நாட்டின் விளைச்சல்களை உண்ட பிறகு மன்னா பொழிவது நின்றது. இஸ்ராயேல் மக்களும் உண்ண முடியாது போயிற்று. ஆதலால் அது முதல் கானான் நாட்டில் அவ்வாண்டு விளைந்தவற்றை அவர்கள் உண்டு வந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 33:1-2.3-4.5-6 (பல்லவி: 8a)*

பல்லவி : **ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப்பாருங்கள்.**

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்; அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.

2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமை கொள்ளும்: சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி

3 என்னோடு ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள்; எல்லோரும் சேர்ந்து அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.

4 நான் ஆண்டவரைத் தேடினேன்; அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினார்: எல்லாவித அச்சத்தினின்றும் என்னை விடுவித்தார்.

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்: வெட்கத்தால் தலை குனியமாட்டீர்கள்.

6 இதோ! இக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்: எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார்.

## இரண்டாம் வாசகம்

**கிறிஸ்து வழியாக கடவுள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 17-21

சகோதரர்களே :

ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் புதியதொரு படைப்பாகி விட்டான்; பழையன கழிந்து போயின. இதோ! புதியன தோன்றியுள்ளன. இவை எல்லாம் கடவுள் செயல்தான். அவரே கிறிஸ்துவின் வழியாய் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கி, ஒப்புரவு செய்யும் திருப்பணியை எங்களுக்குக் கொடுத்தார். உள்ளபடியே கடவுள் உலகினரின் குற்றங்களுக்குரிய கடனைக் கணிக்காமல் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினார்; அவரே அந்த ஒப்புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார். ஆகவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய்ச் செயலாற்றுகிறோம்; நாங்கள் பேசுவது கடவுளே அறிவுறுத்துவது போலாகும்.

ஆகவே கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் மன்றாடுகிறோம்: கடவுளோடு ஒப்புரவாகுங்கள். கிறிஸ்துவுக்குள் நாமும் கடவுளுடைய அருள் நன்மை உருவைப் பெறும்படி பாவமே அறியாத அவரை நமக்காகப் பாவ உருவாக்கினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் லூக். 15 : 18

எழுந்து என் தந்தையிடம் போய் அவரிடம் சொல்வேன்:
"அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்.".

**உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான்; உயிர்த்து விட்டான்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

15: 1-3.11-32

அக்காலத்தில்:

யேசு சொல்வதைக் கேட்க ஆயக்காரரும் பாவிகளும் அவரை அணுகியவண்ணமாயிருந்தனர். அதனால் பரிசேயரும் மறைநூல் வல்லுநரும், "இவர் பாவிகளை வரவேற்கிறார். அவர்களோடு உண்கிறார்" என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் பின்வரும் உவமையைக் கூறினார்:

அவர் மேலும் கூறியதாவது: "ஒருவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். இளையவன் தந்தையை நோக்கி, "அப்பா, சொத்தில் எனக்கு வரவேண்டிய பங்கைக் கொடும்" என்றான். அவர் தம் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். சில நாட்களுக்குப் பின் இளையமகன் தன் சொத்தெல்லாம் விற்றுப் பணத்தைத் திரட்டிக்கொண்டு தொலை நாட்டிற்குப் பயணமானான். அவ்விடத்தில் ஊதாரித்தனமாக வாழ்ந்து, சொத்தெல்லாம் அழித்தான்.

எல்லாவற்றையும் செலவழித்த பின்பு, அந்நாடெங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அவன் வறுமையுறலானான். அந்நாட்டுக் குடிகளுள் ஒருவனிடம் அண்டிப் பிழைக்கச் சென்றான். அவன் அவனைப் பன்றி மேய்க்கத் தன் வயலுக்கு அனுப்பினான். பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தன் வயிற்றை நிரப்ப விரும்பினான். ஆனால், அதையும் அவனுக்கு அளிப்பாரில்லை. அறிவு தெளிந்து, 'என் தந்தையின் கூலியாட்கள் எத்தனைபோபேருக்கு நிறைய உணவு இருக்க, நான் இங்குப் பசியால் மடிகிறேனே. எழுந்து என் தந்தையிடம் போவேன், போய் "அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் என்று எண்ணப்படத் தகுதியற்றவன். என்னை உம்முடைய கூலியாட்களுள் ஒருவனாக நடத்தும்' என்று அவரிடம் சொல்வேன்" என்றான். அப்படியே எழுந்து தன் தந்தையிடம் வந்தான்.

அவன் தொலையில் வரும்போதே அவனுடைய தந்தை அவனைக் கண்டு மனமுருகி, ஓடிப்போய் அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டார். மகன் அவரிடம், 'அப்பா, வானகத்திற்கு எதிராகவும், உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன். இனிமேல் உம்முடைய மகன் என்று எண்ணப்பட

நான் தகுதியற்றவன்" என்றான். தந்தையோ ஊழியர்களை நோக்கி, 'முதல்தரமான ஆடை கொண்டுவந்து, இவனுக்கு உடுத்துங்கள். கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் விரைவில் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். விருந்து கொண்டாடுவோம். ஏனெனில், இறந்துபோயிருந்த என் மகன் இவன் மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணமற்போயிருந்தவன் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்' என்றார். அவர்கள் விருந்து கொண்டாடத் தொடங்கினர்.

அப்போது மூத்த மகன் வயலில் இருந்தான். வயலிலிருந்து திரும்பி வீட்டை நெருங்கியபொழுது நடனத்தையும் இசைமுழக்கத்தையும்கேட்டு, வேலையாள் ஒருவனை அழைத்து நடப்பதென்னவென்று வினவினான். அதற்கு வேலையாள், 'உம் தம்பி வந்துவிட்டார். அவர் நலமாகத் தம்மிடம் வந்துசேர்ந்ததால், உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்' என்றான். அவனோ சினந்து உள்ளே நுழைய மனமில்லாதிருந்தான். எனவே, அவனுடைய தந்தை வெளியில் வந்து அவனை அழைத்தார். அவன் தன் தந்தையிடம், 'இதோ! இத்தனை ஆண்டுகளாக உமக்கு ஊழியம் செய்து வருகிறேன்; உம்முடைய கட்டளையை என்றும் மீறியதில்லை. ஆயினும் என் நண்பரோடு விருந்து கொண்டாட ஓர் ஆட்டுக்குட்டிகூட நீர் எனக்குக் கொடுத்ததில்லை. விலைமாதரோடு உமது சொத்தையெல்லாம் அழித்துவிட்ட இந்த மகன் வந்தபொழுது, அவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே' என்றான்.

அதற்குத் தந்தை, "மகனே, நீ என்றும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே. நாம் விருந்தாடி மகிழ்வது முறையே. ஏனெனில் உன் தம்பி, இறந்துபோயிருந்தான், உயிர்த்துவிட்டான். காணமற்போயிருந்தான், கிடைத்துவிட்டான்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

இவ்வாசகங்களுக்குப் பதிலாக முதல் ஆண்டு வாசகங்களையும் பயன்படுத்தலாம்.
(பக்கம் 563)

# மற்ெரூரு பூசை

*இவ்வாரத்தின் ஏதாவது ஒரு நாளில், சிறப்பாக, பிறவிக் குருடனைப்பற்றி நற்செய்தி வாசகம் வாசிக்கப்படாத 2 ஆம் 3 ஆம் ஆண்டுகளில் இப்பூசையைப் பயன்படுத்தலாம்.*

## முதல் வாசகம்

**நான் இருளில் உட்கார்ந்திருக்கும்போது எழுந்திருப்பேன்: ஆண்டவர் எனக்கு ஒளியாயிருப்பார்.**

இறைவாக்கினர் மிக்கேயாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 7:7–9

நான் ஆண்டவரையே நோக்கியிருப்பேன், எனக்கு மீட்பளிக்கும் கடவுளுக்குக் காத்திருப்பேன், என் கடவுள் எனக்குச் செவிசாய்ப்பார்.

மாற்றானே, என்னைக்குறித்து அக்களிக்காதே, நான் வீழ்ச்சியுற்றாலும் எழுச்சி பெறுவேன்; நான் இருளில் உட்கார்ந்திருக்கும்போது, ஆண்டவர் எனக்கு ஒளியாயிருப்பார்.

நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவஞ்செய்ததால், அவர் எனக்காக வழக்காடி, எனக்கு நீதி வழங்கும்வரை ஆண்டவருடைய கோபத்தை நான் தாங்கிக்கொள்வேன். அவர் என்னை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவார், அவர் அளிக்கும் மீட்பை நான் காண்பேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

**இனி அழுகுரலோ, கூக்குரலோ கேட்கப்படாது.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 65 : 17-21

ஆண்டவர் கூறுகிறார் :

"இதோ, புதிய வானத்தையும் புதிய பூமியையும் நாம் படைக்கிறோம்; முன்னையவை நினைவில் இருக்கமாட்டா; எண்ணத்திலும் தோன்றமாட்டா. நாம் படைக்கப் போவதைக் குறித்து நீங்கள் என்றென்றும் மகிழ்ந்து அக்களிப்பீர்கள்; ஏனெனில், இதோ நாம் யெருசலேமை அக்களிப்பாகவும், அதன் குடிமக்களை மகிழ்ச்சியாகவும் படைக்கப் போகிறோம். நாமும் யெருசலேமைக் குறித்து அக்களிப்போம், நம் மக்களை நினைத்து அகமகிழ்வோம்; இனி ஆங்கே அழுகுரலோ கூக்குரலோ கேட்கப்படாது.

அதில் சில நாட்களே வாழ்ந்த சிறுவனோ, தன் வாழ்நாளை நிறைவு செய்யாக் கிழவனோ இருக்கமாட்டார்கள்; ஏனெனில், சிறுவன் நூறு வயதினனாய் இறப்பான்; நூறு வயதுள்ள பாவியோ சபிக்கப்படுவான். அவர்கள் வீடுகள் கட்டிக் குடியிருப்பார்கள்; திராட்சைக் கொடிகளை நட்டு அவற்றின் கனிகளை உண்பார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 29: 1,3. 4-5. 10-11a, 12b (பல்லவி 1a)*

பல்லவி: **ஆண்டவரே, உம்மைப் போற்றுவேன்; ஏனெனில் நீர் எனக்கு விடுதலையளித்தீர்.**

1 ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்; ஏனெனில், நீர் எனக்கு விடுதலையளித்தீர்: என் எதிரிகள் என்னைக் கண்டு மகிழ்வுற விடவில்லை.
3 ஆண்டவரே, கீழுலகினின்று என் ஆன்மாவை வெளியேற்றினீர்: பாதாளப் படுகுழிக்குச் செல்பவர்களிடையினின்று என்னைக் காத்தீர். பல்லவி

4 புனிதர்களே, ஆண்டவருக்குப் புகழ்பாடுங்கள்: அவர் எத்துணை பரிசுத்தர் என்பதை நினைத்துப் போற்றுங்கள்.
5 ஏனெனில், அவரது சினம் ஒரு நொடிப்பொழுது மட்டுமே, அவரது தயவோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்: மாலையில் அழுகையென்றால், காலையில் உண்டாவது அக்களிப்பு!

பல்லவி

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாய்த்தருளும், என் மீது இரங்கும்: ஆண்டவரே, எனக்குத் துணை செய்யும்.
11 என் அழுகையைக் களிநடனமாக மாற்றினீர்:
12 ஆண்டவராகிய என் இறைவா, என்றென்றும் உம்மைப் போற்றுவேன்.

பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் ஆமோஸ் 5 : 14

தீமையையல்ல நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வீர்கள்; ஆண்டவரும் உங்களோடு இருப்பார்.

## நற்செய்தி வாசகம்

**நீர் போகலாம், உம் மகன் உயிரோடிருக்கிறான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4 : 43-54

அக்காலத்தில்:

யேசு சமாரியாவிலிருந்து கலிலேயாவுக்குப் போனார். இறைவாக்கினருக்குத் தம் சொந்த ஊரில் மதிப்பில்லை என்று யேசுவே கூறியிருந்தார். திருவிழாவின்போது யெருசலேமிலே அவர் செய்ததெல்லாம் கண்டிருந்த கலிலேயர், அவர் கலிலேயாவுக்கு வந்தபொழுது அவரை வரவேற்றனர். ஏனெனில், அவர்களும் திருவிழாவிற்குச் சென்றிருந்தனர்.

அவர் கலிலேயாவிலுள்ள கானாவூருக்கு மீண்டும் வந்தார். அங்கேதான் முன்பு தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றிக் கொடுத்தார். கப்பர்நகூம் ஊரில் அரச அலுவலன் ஒருவன் இருந்தான். அவனுடைய மகன் பிணியுற்றிருந்தான். யேசு, யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்கு வந்திருப்பதைக் கேள்வியுற்ற அவன் அவரிடம் சென்று, தன் மகனைக் குணமாக்க வரும்படி அவரை வேண்டினான்; அவனுடைய மகன் சாகக் கிடந்தான்.

யேசுவோ அவனிடம், "அருங்குறிகளையும் அற்புதங்களையும் கண்டாலன்றி நீங்கள் விசுவசிக்க மாட்டீர்கள்" என்றார். அரச அலுவலன் அவரைப் பார்த்து, " ஆண்டவரே, என் குழந்தை இறந்துபோகுமுன்னே

வாரும்'' என்றான். யேசு அவனிடம், " நீர் போகலாம், உன் மகன் உயிரோடிருக்கிறான் '' என்றார். அவன் யேசு சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டான்.

வழியிலேயே அவனுடைய ஊழியர் எதிரே வந்து, " பிள்ளை பிழைத்துக் கொண்டான் '' என்று அறிவித்தனர். " எத்தனை மணிக்கு நலமடையலானான்? என்று அவன் அவர்களை வினவ, " நேற்று பிற்பகல் ஒரு மணிக்குக் காய்ச்சல் விட்டது '' என்றனர். '' உம் மகன் உயிரோடிருக்கிறான் '' என்று யேசு சொன்னதும் அதே நேரத்தில்தான் என்பது தந்தையின் நினைவிற்கு வந்தது. ஆகவே அவனும் அவனுடைய குடும்பம் முழுவதும் விசுவாசம் கொண்டனர்.

இதுவே யேசு செய்த அருங்குறிகளில் இரண்டாவது. இதை யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்கு வந்தபின் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

***தேவாலயத்திலிருந்து தண்ணீர் புறப்படக் கண்டேன்; அந்தத் தண்ணீர் யாரிடம் வந்ததோ அவர்கள் யாவருமே ஈடேற்றம் பெற்றனர்.***

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 47:1-9.12

அந்நாட்களில்:

வானதூதர் என்னைக் கோயிலின் வாயிலுக்குத் திரும்பக் கூட்டி வந்தார்; இதோ, வாயிற்படியின் கீழிருந்து தண்ணீர் ஊற்றெடுத்துக் கிழக்கே ஓடிக்கொண்டிருந்தது; (ஏனெனில் கோயிலின் முகப்பு கிழக்கு நோக்கியிருந்தது). அந்தத் தண்ணீர் கோயிலுக்குத் தென்புறமாய்ப் பலி பீடத்திற்குத் தெற்கே பாய்ந்தது. பின்னர் அவர் என்னை வடக்கு வாயில் வழியாய் வெளியே கொண்டுபோய், கிழக்கே நோக்கியிருக்கும் வெளிவாயில்வரை என்னைச் சுற்றி நடத்திக்கொண்டுவந்தார்; ஆங்கே தண்ணீர் தென்புறத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

அவர் தமது கையில் அளவு நூலைப் பிடித்துக்கொண்டு, கிழக்குப் பக்கமாய் நடந்து ஆயிரம் முழம் அளந்தார்; பிறகு என்னைத் தண்ணீர் வழியாய் நடத்திச் சென்றார்; தண்ணீர் கணுக்கால் அளவு இருந்தது. மறு

படியும் அவர் ஆயிரம் முழம் அளந்தார்; பிறகு தண்ணீரைக் கடக்கும்படி எனக்குச் சொன்னார்; அங்குத் தண்ணீர் முழங்கால் அளவு ஓடிற்று. மீண்டும் அவர் ஆயிரம் முழம் அளந்தார்; தண்ணீரைக் கடக்கும்படி கூறினார்; அங்கே தண்ணீர் இடுப்பளவு இருந்தது; இன்னும் ஆயிரம் முழம் அளந்தார்; அங்கே என்னால் கடக்கமுடியாத பெரு வெள்ளமாய் இருந்தது; ஏனெனில் வெள்ளம் பெருகி இருந்தது; நீந்திப் போகுமளவுக்கு வெள்ளம் ஓடிற்று; ஆனால் யாரும் அதை நடந்து கடக்க முடியாது. அவர் என்னை நோக்கி, "மனிதா, இதைக் கண்டாயா?" என்றார். பின் ஆற்றங்கரையோரமாய் என்னைத் திரும்ப நடத்திச் சென்றார்.

நான் திரும்பிப் போனபோது, ஆற்றின் இரு கரைகளிலும் மிகத் திரளான மரங்களைக் கண்டேன்; அவர் என்னை நோக்கி, "இந்தத் தண்ணீர் கிழக்குப் பகுதி நோக்கிப் பாய்ந்து, அராபா சமவெளிக்கு ஓடிச்சேரும்; கடலிலுள்ள நீரோடு இது போய்க் கலக்கும்போது, தண்ணீர் நல்ல தண்ணீராகத் தெளியும். இந்த ஆறு எங்கெல்லாம் பாய்கிறதோ அங்கெல்லாம் ஊர்வன யாவும் பிழைத்திருக்கும்; அங்கே திரளான மீன்கள் இருக்கும்: ஏனெனில் கடல் நீர் தெளிந்து நல்ல நீராகும்படியே இந்த நீர் அங்கே பாய்கிறது; ஆகவே இந்த ஆறு ஓடிப்பாயும் இடங்களில் எல்லாம் உயிர்கள் வாழும்.

வெள்ளத்தின் ஓரமாய் அதன் இரு புறத்துக் கரைகளிலும் எல்லா வகையான பழ மரங்களும் வளரும்; அவற்றின் இலைகள் உதிர்ந்துபோகா; கனிகள் அற்றுப்போகா: அவற்றுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த இடத்திலிருந்து புறப்பட்டு வருவதால், அம்மரங்கள் மாதந்தோறும் புதிய கனிகளைக் கொடுக்கும்; அவற்றின் பழங்கள் உணவாகவும், இலைகள் மருந்தாகவும் பயன்படும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

• சங். 45 : 1-2. 4-5. 7-8 (பல்லவி : 7)

பல்லவி : வான்படைகளின் ஆண்டவர் நம்மோடிருக்கிறார் :
யாக்கோபின் இறைவன் நமக்கு அரணாயுள்ளார்.

1 கடவுள் நம் அடைக்கலமும் பலமுமாயிருக்கிறார் : நெருக்கடி நேரத்தில்
நமக்கு உறுதுணையென நன்கு காட்டியுள்ளார்.

2 ஆகவே வையகமே புரண்டாலும் நாம் அசையமாட்டோம்: மலைகள்
கடல் நடுவிலே விழுந்தாலும் அச்சமில்லை. பல்லவி

4 நீரோடைகள் இறைவனின் நகருக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன : உன்னதரின் புனிதமிக்க கூடாரத்திற்கு மகிழ்ச்சி தருகின்றன.

5 அதன் நடுவே கடவுள் இருக்கின்றார், ஆகவே அது அசைவுறாது : வைகறையில் கடவுள் அதற்குத் துணை செய்வார்.

பல்லவி

7 வான் படைகளின் ஆண்டவர் நம்மோடிருக்கிறார்: யாக்கோபின் இறைவன் நமக்கு அரணாய் உள்ளார்.

8 வாருங்கள், வந்து ஆண்டவர்தம் செயல்களைப் பாருங்கள் : பூமிமீது அவர் வியத்தகு செயல்களைச் செய்துள்ளார்.

பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம்

சங். 50 : 10a. 12a.

தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்;
உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்.

## நற்செய்தி வாசகம்

**உடனே அம்மனிதன் குணமடைந்தான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

5:1-3a. 5-16

யூதர்களின் திருவிழா வந்தது. யேசுவும் யெருசலேமுக்குச் சென்றார். யெருசலேமில் 'ஆட்டுக் குளத்தை'ச் சுற்றி ஐந்து மண்டபங்கள் அமைந்த ஒரு கட்டடம் உண்டு. அதற்கு எபிரேய மொழியில் பெத்சாயிதா என்பது பெயர். இம்மண்டபங்களில் குருடர்கள், நொண்டிகள், வாத நோயாளிகள் எல்லாரும் கூட்டமாய்ப் படுத்துக்கிடப்பார்கள்.

முப்பத்தெட்டு ஆண்டுகளாகப் பிணியுற்றிருந்த ஒருவன் அங்கே படுத்துக்கிடந்தான். யேசு அவனைக் கண்டு, அவன் வெகுகாலமாக அந்நிலையில் இருந்துள்ளதை அறிந்து, "குணமாக விரும்புகிறாயா? என்று அவனைக் கேட்டார். பிணியாளி, "ஆண்டவரே, தண்ணீர் கலங்கும்போது, என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆளில்லை; நான் போவதற்கு முன் வேறொருவன் இறங்கிவிடுகிறான்" என்றான். யேசு அவனை நோக்கி, "எழுந்து படுக்கையைத் தூக்கிக்கொண்டு நட" என்றார். உடனே அவன் குணமடைந்து தன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு நடக்கலானான்.

அன்று ஓய்வுநாள். குணம்பெற்றவனை யூதர்கள் நோக்கி, "இன்று ஓய்வுநாள், படுக்கையைத் தூக்கிச் செல்வது முறையன்று," என்றார்கள். அவன் மறுமொழியாக, "என்னைக் குணமாக்கியவரே படுக்கையைத் தூக்கிக்கொண்டு நடக்கச் சொன்னார்" என்றான். அவர்கள் அவனிடம்,

"படுக்கையைத் தூக்கிக்கொண்டு நடக்கச் சொன்னவர் யார்?" என்று வினவினர். குணமானவனுக்கோ அவர் யாரென்று தெரியவில்லை. ஏனெனில், அவ்விடத்தில் கூட்டமாயிருந்ததால், யேசு அங்கிருந்து ஏற்கெனவே நழுவிப் போய்விட்டார்.

பின்பு யேசு அவனைக் கோயிலில் கண்டு, "இதோ! குணம் அடைந்துள்ளாய்; இதிலும் கேடானதேதுவும் உனக்கு நேராதபடி இனி பாவம் செய்யாதே" என்றார். அவன் போய்த் தன்னைக் குணமாக்கியவர் யேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான். யேசு இதை ஓய்வுநாளில் செய்ததற்காக யூதர்கள் அவருக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

**உலகிற்குப் புத்துயிர் தர மக்களுக்கு உடன்படிக்கையாய் உன்னை ஏற்படுத்தினேன்**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 49:8-15

ஆண்டவர் கூறியதாவது:

"உகந்த காலத்தில் உன் மன்றாட்டைக் கேட்டருள்வோம். மீட்பின் நாளில் உனக்கு உதவி புரிவோம்; உன்னைக் காத்தோம், மக்களுக்கு உடன்படிக்கையாய் உன்னை ஏற்படுத்தினேன்; உலகத்திற்கு புத்துயிர் தரவும், சிதறுண்ட உரிமைச் சொத்துகளை உடைமையாக்கவும், விலங்கிடப்பட்டவர்களைப் பார்த்து, 'வெளியே வாருங்கள்' என்று சொல்லவும், இருளில் இருப்பவர்களை நோக்கி, 'வெளிச்சத்திற்கு வாருங்கள்' என்று சொல்லவும் ஏற்படுத்தினேன்.

அப்பொழுது வழிகளில் தாராளமாய் நம் ஆடுகள் மேயும். எல்லாச் சமவெளிகளிலும் மேய்ச்சலைக் காணும். பசி தாகத்தால் அவை வருந்த மாட்டா, வெப்பமும் வெயிலும் அவற்றைத் தாக்க மாட்டா: ஏனெனில் அவற்றின்மேல் இரக்கமுள்ளவர் அவற்றைக் கண்காணித்து நடத்துவார்: நீரூற்றுகளுக்கு அவற்றைக் கூட்டிச் செல்வார். நம்முடைய மலைகளையெல்லாம் சமபாதையாக்குவோம், நம்முடைய வழிகள் யாவும் உயர்த்தப்படும்.

இதோ, இவர்கள் தொலையிலிருந்து வருவர், இதோ, அவர்கள் வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் மற்றவர்கள் தென்திசையினின்றும் வருவார்கள். வானமே அக்களித்து ஆர்ப்பரி, மண்ணுலகே மகிழ்ந்து துள்ளு; மலைகளே, மகிழ்ச்சியொலி ஆரவாரம் செய்யுங்கள்; ஏனெனில் ஆண்டவர் தம் மக்களைத் தேற்றினார், தம் எளியோர் மட்டில் இரக்கம் கொள்வார்.

சீயோன் மகளோ, "ஆண்டவர் என்னைக் கைவிட்டுவிட்டார், ஆண்டவர் என்னை மறந்துபோய்விட்டார்" என்றாள். "பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்து விட்டாலும், நாம் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டோம்!"

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப்பாடல்

சங். 144 : 8-9. 13cd-14. 17-18 (பல்லவி : 8a)

பல்லவி : **அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர்.**

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர் : சினங்கொள்ளத் தாமதிப்பவர், அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர் : தம் படைப்புகள் அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர். பல்லவி

13 ஆண்டவர் தம் வார்த்தைகளிலெல்லாம் உண்மையுள்ளவராயிருக்கிறார் ; தம் செயல்களிலும் புனிதமானவர்.
14 விழுந்து நொந்துபோன யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார் : தாழ்த்தப்பட்ட அனைவரையும் தூக்கி விடுகிறார். பல்லவி

17 ஆண்டவர் தம் வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர் : தம் செயல்களிலெல்லாம் புனிதமானவர்.
18 தம்மைக் கூவியழைக்கும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் உள்ளார் : நேர்மையுடன் தம்மைக் கூவியழைக்கிற யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் உள்ளார். பல்லவி

## நற்செய்திக்கு முன் வசனம்

அரு. 11 : 25a. 26

உயிர்ப்பும் உயிரும் நானே, என்கிறார் ஆண்டவர் ; என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான்.

நற்செய்தி வாசகம்

**தந்தை இறந்தவர்களை எழுப்பி, அவர்களுக்கு உயிரளிப்பதுபோல மகனும் தான் விரும்புவோருக்கு உயிரளிக்கின்றார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:17-30

அக்காலத்தில்:

யேசு யூதர்களிடம், "என் தந்தை இன்றுவரை செயலாற்றுகிறார், நானும் செயலாற்றுகிறேன்" என்றார். இப்படிச் சொன்னதால், யூதர்கள் அவரைக் கொல்ல வேண்டுமென்று மேலும் உறுதி பூண்டனர். ஏனெனில், ஓய்வுநாள் கட்டளையை மீறியதோடு கடவுளைத் தம் சொந்தத் தந்தை என்று சொல்லித் தம்மைக் கடவுளுக்குச் சமமாக்கி வந்தார்.

யேசு அவர்களை நோக்கிக் கூறியதாவது: "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மகன் தானாகவே ஒன்றும் செய்ய முடியாது. தந்தை செய்யக் காண்கிறதையே செய்வார். எதெதை அவர் செய்கிறாரோ, அதையெல்லாம் மகனும் அவ்வாறே செய்கிறார். தந்தை மகனை நேசித்து, தாம் செய்வதெல்லாம் அவருக்குக் காட்டுகிறார். இவற்றிலும் பெரிய செயல்களை அவருக்குக் காட்டுவார்: அவற்றைக் கண்டு நீங்களும் வியப்புறுவீர்கள்.

தந்தை இறந்தவர்களை எழுப்பி அவர்களுக்கு உயிரளிப்பதுபோல மகனும் தாம் விரும்பியவர்க்கு உயிரளிக்கின்றார். தந்தை எவனுக்கும் தீர்ப்பிடுவதில்லை. எல்லாரும் தந்தையை மதிப்பதுபோல மகனையும் மதிக்க வேண்டுமென்று தீர்ப்பிடும் உரிமை முழுவதையும் தந்தை மகனுக்கு அளித்துள்ளார். மகனை மதியாதவன் அவரை அனுப்பிய தந்தையையும் மதிப்பதில்லை.

உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரிடத்தில் விசுவாசம் கொள்பவன், முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான். அவன் தீர்ப்புக்குள்ளாகான்; சாவினின்று வாழ்வுக்குக் கடந்து சென்றுவிட்டான். உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நேரம் வருகின்றது, ஏன், வந்தே விட்டது. அப்பொழுது கடவுளுடைய மகனின் குரலை இறந்தோர் கேட்பர்; அதைக் கேட்டோர் வாழ்வர். ஏனெனில், தந்தை தம்மிலே உயிர் கொண்டுள்ளதுபோல மகனும் தம்மிலே உயிர் கொண்டிருக்கும்படி அவருக்கு அளித்துள்ளார். தீர்ப்பிடும் அதிகாரத்தையும் அவருக்கு அளித்துள்ளார். ஏனெனில், அவர் மனுமகன்.

இதைக் குறித்து வியப்புறாதீர்கள்; இதோ! நேரம் வருகிறது. அப்போது கல்லறையில் இருப்பவர்கள் எல்லாரும் அவருடைய குரலைக் கேட்டு வெளியே வருவர். அப்போது நல்லது செய்தவர் வாழ்வுபெற உயிர்த்தெழுவர். பொல்லாது செய்தவர் தண்டனைத் தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர். நானாகவே ஒன்றும் செய்ய முடியாது; தந்தை சொற்படியே தீர்ப்பிடுகிறேன். என் தீர்ப்பு நீதியானது. ஏனெனில், என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவர் விருப்பத்தையே நாடுகிறேன்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

***உம் மக்களுக்குத் தீங்கு செய்யாதபடி அவர்கள்மேல் இரக்கம்கொள்ளும்.***

*யாத்திராகமத்திலிருந்து வாசகம்* 32:7-14

*அந்நாட்களில் :*

ஆண்டவர் மோயீசனுக்குத் திருவாக்கருளி : ''இறங்கிப்போ. நீ எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உன் மக்கள் பாவம் செய்தார்கள். நீ அவர்களுக்குக் காண்பித்த வழியை அவர்கள் எவ்வளவு விரைவாய் விட்டு விலகி தங்களுக்கு வார்ப்பினால் கன்றுக்குட்டியொன்றைச் செய்து ஆராதித்து, பின் அதற்குப் பலியிட்டு : இஸ்ராயேலே; உன்னை எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உன் தேவர்கள் இவர்களேயாம்'' என்று சொன்னார்கள் என்றார். மீண்டும் ஆண்டவர் மோயீசனோடு பேசி : இந்த மக்களைப் பார்த்தோம். அவர்கள் வணங்காக் கழுத்துள்ள மக்கள் ஆகையால், நீ நம்மை விட்டுவிடு, நமது கோபம் அவர்கள்மேல் மூண்டு அவர்களை அழித்தொழிக்கும். உன்னை ஒரு பெரிய இனத்திற்குத் தலைவனாக்குவோம்'' என்றார்.

மோயீசனோ தம் கடவுளாகிய ஆண்டவரை மன்றாடி,'' ஆண்டவரே நீர் மகத்தான பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து நாட்டினின்று விடுதலையாக்கிய உம் மக்கள்மேல் ஏன் உமது கோபம் மூள வேண்டும்? 'மலைகளில் அவர்களை கொன்று போட்டுப் பூமியினின்று

அவர்களை அழித்தொழிக்க அல்லவோ கடவுள் அவர்களைக் கபடமாய் எகிப்து நாட்டிலிருந்து அழைத்துப் போனார்' என்று எகிப்தியர் சொல்வார்களே. அது வேண்டாம். உமது கோபத்தில் உக்கிரம் அமரக்கடவது. நீய மக்கள்மேல் நீர் இரக்கம் கொள்ள வேண்டுமென மன்றாடுகிறேன். நீர், ஆபிரகாம், ஈசாக், இஸ்ராயேல் ஆகிய உம் ஊழியர்களை நினைத்தருளும். அவர்களை நோக்கி, 'உங்கள் சந்ததியை விண்மீன்களைப்போன்று பெருகச்செய்து நாம் சொன்ன இந்த நாடு முழுவதையும் நீங்களும் உங்கள் சந்ததியாரும் என்றென்றும் உரிமையாகக் கொள்ளும்படிக்குத் தந்தருள்வோம்' என்று உமது பேரில் ஆணையிட்டுத் திருவுளம் பற்றினீரன்றோ" என்று மன்றாடினார்.

அப்பொழுது ஆண்டவருக்குக் கோபம் தணிய, தாம் மக்களுக்கு எவ்விதக் கேடும் செய்வதாகச் சொல்லியிருந்தாரோ அதைச் செய்யாமல் விட்டுவிட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 105:19-20.21-22.23 (பல்லவி: 4a)*

பல்லவி: **ஆண்டவரே, நீர் உம் மக்கள் மீது காட்டிய கருணைக்கேற்ப எங்களை நினைவுகூரும்.**

19 ஒரேப் மலையில் கன்றுக்குட்டியை உருவாக்கினர்: பொன்னால் வார்த்த சிலையை வணங்கலாயினர்.
20 புல் மேயும் காளையின் சிலைக்குக் கடவுளின் மாட்சியை ஈடாக்கினர். பல்லவி

21 தங்களை மீட்டுக்கொண்ட கடவுளை அவர்கள் மறந்தனர்: எகிப்தில் புதுமை செய்தவரை மறந்தனர்.
22 காமின் நாட்டில் நிகழ்ந்த அற்புதங்கள் ஆற்றியவரை, செங்கடலருகே வியப்புக்குரியன செய்தவரை மறந்தனர். பல்லவி

23 இறைவன் அவர்களை அடியோடு தொலைத்துவிட எண்ணினார்: ஆனால் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மோயீசன் குறுக்கிட்டார்.
அவரிடம் அவர்களுக்காகப் பரிந்து பேசினார்: அவர் கொண்ட சினத்தை அமர்த்தலானார்; அவர்களை அழித்துவிடாதபடி செய்தார். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 3:16

**தம் ஒரே பேறான மகனையே அளிக்குமளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்:**
**அம் மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் முடிவில்லா வாழ்வு பெறுவர்.**

## நற்செய்தி வாசகம்

***உங்களைக் குற்றம் சாட்டுபவர் ஒருவர் உண்டு;***
***அவர்தாம் நீங்கள் நம்பியிருக்கிற மோயீசன்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 5:31-47

அக்காலத்தில்: யேசு யூதர்களை நோக்கிக் கூறியதாவது:

“என்னைப்பற்றி நானே சாட்சியம் கூறினால் எனது சாட்சியம் செல்லாது. என்னைப்பற்றிச் சாட்சியம் கூற வேறொருவர் இருக்கிறார். அவர் என்னைப்பற்றிக் கூறும் சாட்சியம் செல்லும்; இதை நானறிவேன். நீங்கள் அருளப்பரிடம் ஆள் அனுப்பினீர்கள், அவரும் உண்மைக்குச் சாட்சியம் கூறினார். எனக்கோ மனிதன் தரும் சாட்சியம் தேவையில்லை. ஆனால் நீங்கள் மீட்புப் பெறும்படி இதை நினைவூட்டுகிறேன். அருளப்பர் எரிந்து சுடர்விடும் விளக்கு; அவருடைய ஒளியில் நீங்கள் சற்று நேரமே களிப்புற விரும்பினீர்கள்: அருளப்பருடைய சாட்சியத்திலும் மேலான சாட்சியம் எனக்கு உண்டு. நான் செய்துமுடிக்கத் தந்தை எனக்கு அருளியுள்ள செயல்களே.

நான் செய்துவரும் அச்செயல்களே, தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்குச் சான்று. இங்ஙனம், என்னை அனுப்பின தந்தையே என்னைப்பற்றிச் சாட்சியம் தந்துள்ளார். ஆயினும் நீங்கள் ஒருபோதும் அவருடைய குரலைக் கேட்டதுமில்லை. அவர் உருவத்தைக் கண்டதுமில்லை. அவருடைய வார்த்தை உங்களிடத்தில் நிலைத்திருப்பதாயில்லை. ஏனெனில், அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவசிப்பதில்லை. மறைநூலை ஆய்ந்து பார்க்கிறீர்கள், அதில் முடிவில்லா வாழ்வு கிடைப்பதாக நினைக்கிறீர்கள் அல்லவா? அதுவே என்னைப் பற்றிச் சாட்சியம் தருகிறது. இருப்பினும், வாழ்வு பெறும்படி என்னிடம் வர உங்களுக்கு விருப்பமில்லை.

மனிதர் தரும் மகிமை எனக்குத் தேவையில்லை. உங்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். கடவுளன்பு உங்களிடம் இல்லை. நான் என் தந்தையின் பெயரால் வந்துள்ளேன்; நீங்களோ என்னை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், இன்னொருவன் தன் பெயராலேயே வருவானாகில், அவனை ஏற்றுக்கொள்வீர்கள். ஒரே கடவுள் தரும் மகிமையை நாடாது, ஒருவருக்கொருவர் தரும் மகிமையைத் தேடிக் கொள்கிறீர்களே. நீங்கள்

கொள்ளவும், பொறுமையைச் சோதித்துப் பார்க்கவும், அவனை நிந்தை வேதனைப்படுத்திப் பார்ப்போம். வெட்கத்துக்குரிய சாவுக்கு அவனை ஆளாக்குவோம், ஏனெனில், அவன் சொற்படி அவனுக்குத்தான் கடவுளின் துணையிருக்குமே !''

பொல்லாதவர்கள் இவ்வாறு எண்ணி ஏமாந்து போயினர்: ஏனெனில் அவர்களின் தீய எண்ணமே அவர்களைக் குருடராக்கி விட்டது. கடவுளின் மறைபொருட்களை அவர்கள் அறியார்கள்; தூய வாழ்விற்கு கைம்மாறு உண்டு என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை; மாசற்ற ஆன்மாக்களுக்குப் பரிசு கிடைக்கும் என அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 33: 16-17.18-19.20-22 (பல்லவி: 18a)*

பல்லவி: உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர்.

16 ஆண்டவருடைய முகம் தீயோரை எதிர்த்து நிற்கின்றது: ஆண்டவர்
பூமியிலிருந்து அவர்களுடைய நினைவையே எடுத்துவிடுவார்.
17 நீதிமான்கள் கூக்குரலிட்டனர்: ஆண்டவர் அவர்களுக்குச் செவி சாய்த்
தார்: எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார். பல்லவி

18 உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர்:
மனம் நைந்தவர்களைக் காத்தருள்வார்.
19 நீதிமானின் துயரங்கள் பல: ஆனால் அவையனைத்தினின்றும் ஆண்டவர்
அவனைக் கடைத்தேற்றுவார். பல்லவி

20 அவர்களுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுவார்: அவற்றில்
ஒன்று முதலாய் நொறுங்காது.
22 தம் ஊழியரின் ஆத்துமங்களை ஆண்டவர் மீட்கிறார்: அவரிடம் அடைக்
கலம் புகுபவன் எவனும் தண்டனை யடையான். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் மத். 4:4b

**மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர்வாழ்கிறான்.**

## நற்செய்தி வாசகம்

**அவரைப் பிடிக்க வகைதேடினர்; ஆனால்
அவருடைய நேரம் இன்னும் வரவில்லை.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
7:1.2,10.25-30

அக்காலத்தில்:

யேசு கலிலேயாவிலே நடமாடி வந்தார். யூதர்கள் அவரைக் கொல்லத் தேடியதால் யூதேயாவில் நடமாட விரும்பவில்லை.

யூதர்களின் கூடாரத் திருவிழா அண்மையிலிருந்தது. அருடைய சகோதரர் திருவிழாவுக்குப் போனபின், அவர் வெளிப்படையாகப் போகாமல் மறைவாகச் சென்றார்.

யெருசலேம் நகரத்தார் சிலர், "இவரையன்றோ கொல்லத் தேடுகின்றனர்? இதோ! இவர் வெளிப்படையாய்ப் பேசுகிறார். யாரும் ஒன்றும் சொல்லக் காணோமே! இவர் மெசியாவென்று தலைவர்கள் உண்மையிலேயே அறிந்துகொண்டார்களோ? மெசியா தோன்றும் பொழுதோ, அவர் எங்கிருந்து வருவார் என்பது ஒருவனுக்கும் தெரியாது. ஆனால், இவர் எங்கிருந்து வருகிறார் என்பது நமக்குத் தெரியுமே" என்றனர். ஆகவே, யேசு கோயிலிலே போதிக்கையில் உரக்கச் சொன்னதாவது: "ஆம், ஆம், என்னை அறிவீர்கள்தான்: நான் எங்கிருந்து வருகிறேன் என்பதையும் அறிவீர்கள். ஆயினும், நானாகவே வரவில்லை. என்னை அனுப்பினவரோ உண்மையுள்ளவர். நீங்கள் அவரை அறியவில்லை. நானோ அவரை அறிவேன். ஏனெனில், நான் அவரிடமிருந்து வருகிறேன். என்னை அனுப்பியவரும் அவரே."

இதைக் கேட்டு, யூதர்கள் அவரைப் பிடிக்க நினைத்தனர். ஆனால் அவருடைய நேரம் இன்னும் வராததால் எவனும் அவரைத் தொடவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

பலிக்கென்று, அடிக்கக் கொண்டுபோகப்படும் சாந்தமான செம்மறிக்கு நான் நிகரானேன்.

இறைவாக்கினர் எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 11:18-20

ஆண்டவரே, நீர் எனக்கு அறிவித்தீர்; நான் அறிந்துகொண்டேன்; அவர்களுடைய தீய செயல்களையும் எனக்குக் காட்டிவிட்டீர். அடிக்கக் கொண்டுபோகப்படும் சாந்தமான செம்மறிக்கு நான் நிகரானேன். "மரத்தை அதன் கனிகளோடு அழிப்போம், வாழ்வோரின் நாட்டினின்று அவனை ஒழிப்போம்; அவன் பெயரே இல்லாமற் போகும்படி செய்வோம்" என்று எனக்கு எதிராகச் சதித் திட்டங்கள் தீட்டினார்கள்; நானோ அதை அறியாதிருந்தேன்.

சேனைகளின் ஆண்டவரே, நீரோ நீதியோடு நடுத்தீர்க்கிறவர், மனத்தின் மறை பொருள்களையும் இதயத்தின் சிந்தனைகளையும் சோதிக்கிறவர்; நீர் அவர்களைப் பழிவாங்குவதை நான் பார்க்கவேண்டும்; ஏனெனில் உம்மிடமே என் வழக்கைக் கூறினேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 7: 1-2. 8bc-9. 10-11 (பல்லவி: 1a)

பல்லவி: என் இறைவனும் ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன்.

என் இறைவனும் ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன்: என்னைத் துன்புறுத்துவோர் அனைவரிடமிருந்தும் எனக்கு மீட்பும் விடுதலையும் அளித்தருளும்.

எவனும் சிங்கத்தைப்போல என் உயிரைப் பறித்துக்கொள்ள விடாதேயும்; விடுவிப்பவன் எவனுமின்றி என்னை இழுத்துக்கொண்டுபோக விடாதேயும்.

பல்லவி

8 உமது நீதிக்கேற்ப ஆண்டவரே, எனக்கு நீதி வழங்கும்; எனது மாசின்
மைக்கேற்ப எனக்கு நீதி வழங்கும்.
9 தீயவர்களுடைய தீய மனம் ஒழிவதாக; உள்ளத்தையும் உள்ளுணர்வு
களையும் ஆய்ந்தறிபவரே, நீதியுள்ள இறைவனே, நல்லவரை நீர் நிலை
நிறுத்தும். பல்லவி

10 கடவுளே எனக்குக் கேடயம்; நேரிய மனத்தோரைக் காப்பவர் அவரே.
11 நேர்மையுள்ள நீதிபதியாம் உள்ளார் கடவுள்; நாள்தோறும் சினங்
கொள்ளும் இறைவன் அவர். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 3:16

தம் ஒரே பேறான மகனையே அளிக்குமளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்; அம்மகனில் விசுவாசம் கொள்ளும் எவரும் முடிவில்லா வாழ்வு பெறுவர்.

## நற்செய்தி வாசகம்

**கலிலேயா நாட்டிலிருந்தா மெசியா வருவார்?**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:40-53

அக்காலத்தில்:

கூட்டத்தில் சிலர் யேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, 'உண்மையாகவே இவர்தான் வரப்போகும் இறைவாக்கினர்' என்றனர். சிலர் 'இவர் மெசியா' என்றனர். வேறு சிலரோ, 'கலிலேயா நாட்டிலிருந்தா மெசியா வருவார்? தாவீதின் மரபிலிருந்தும், தாவீது குடியிருந்த பெத்லெகேம் ஊரிலிருந்தும் மெசியா வருவார் என மறைநூல் கூறவில்லையா?' என்றனர். இப்படி அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்களுள் சிலர் அவரைப் பிடிக்க விரும்பினர். ஆனால், எவனும் அவரைத் தொடவில்லை.

தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் அனுப்பிய காவலர்கள் திரும்பி வந்தார்கள். அவர்கள் காவலரிடம், "அவனை ஏன் பிடித்துக் கொண்டு வரவில்லை?" என்று கேட்டனர். காவலரோ, "எவரும் அவரைப்போல் என்றுமே பேசினதில்லை" என்றனர். அதற்குப் பரிசேயர்கள், "நீங்களும் ஏமாந்து போனீர்களோ? தலைவர்களிலாவது பரிசேயர்களிலாவது அவனை விசுவசித்தவர்கள் யாரேனும் உண்டா? திருச்சட்டமறியாத இக் கூட்டமோ சாபத்துக்குள்ளானது" என்றனர். அப்பரிசேயருள் ஒருவர்

நிக்கொதேமு.—அவரே முன்னொரு நாள் யேசுவிடம் வந்தவர்.—அவர் அவர்களைப் பார்த்து, " ஒருவன் செய்தது இன்னதென்று முதலில் அவனது வாக்குமூலத்தைக் கேட்டு அறிந்து கொள்ளாமல், நம் சட்டம் தீர்ப்பளிக்குமா ?" என்றார். அவர்களோ அவரிடம், " நீரும் கலிலேயரோ ? மறைநூலை ஆராய்ந்து பாரும். கலிலேயாவிலிருந்து இறைவாக்கினர் எவரும் தோன்றுவதில்லை என்பது தெரியவரும்" என்றனர். அனைவரும் வீடு திரும்பினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# தவக் காலம் - 5ஆம் வாரம்

## ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*உங்களுக்குள் நம் ஆவியைப் புகுத்துவோம்,
நீங்கள் உயிர் பெறுவீர்கள்.*

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 37 : 12-14

இறைவனாகிய ஆண்டவர் கூறுவதாவது: "எம் மக்களே, இதோ நாம் உங்கள் கல்லறைகளைத் திறப்போம்; கல்லறைகளிலிருந்து உங்களை எழுப்புவோம்; இஸ்ராயேல் நாட்டுக்கு உங்களைத் திரும்பக் கூட்டி வருவோம். எம் மக்களே, உங்கள் கல்லறைகளைத் திறந்து, அவற்றினின்று நாம் உங்களை எழுப்பும்போது, நாமே ஆண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்குள் நம் ஆவியைப் புகுத்துவோம்; நீங்கள் உயிர் பெறுவீர்கள். உங்கள் சொந்த நாட்டில் உங்களை வாழ வைப்போம்; அப்போது ஆண்டவராகிய நாமே இதைச் சொன்னோம், நாமே இதைச் செய்து முடித்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்," என்கிறார் இறைவனாகிய ஆண்டவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 129 : 1-2. 3-4. 5-6. 7b 8 (பல்லவி : 7)

பல்லவி: ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது; அவருடைய மீட்புத்துணை பொங்கி வழிகின்றது.

1 ஆண்டவரே, அளவிலா வேதனையில் உம்மை நோக்கிக் கூவி அழைக்கிறேன்.
2 ஆண்டவரே, என் கூக்குரலுக்குச் செவி சாய்த்தருளும்: என் வேண்டுதலின்
குரலை உம் செவிகள் கவனமுடன் கேட்கட்டும். பல்லவி

3 ஆண்டவரே, யான் செய்த பாவங்களை நினைவுகூர்வீராகில், உமக்குமுன்
யார் நிற்கமுடியும்?
4 வணக்கமுடன் நாங்கள் உமக்கு ஊழியம் செய்யுமாறு, நீர் பாவங்களை
மன்னிக்கிறீர். பல்லவி

5 ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன்: அவரது வாக்குறுதியில் என்
ஆன்மா நம்பிக்கை கொண்டுள்ளது.
6 என் ஆன்மா ஆண்டவரை எதிர்நோக்குகின்றது: காவலர் உதயத்தை
எதிர்பார்ப்பதற்கு மேலாக, இஸ்ராயேலர் ஆண்டவரை எதிர்பார்ப்
பார்களாக. பல்லவி

7 ஏனெனில் ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது: அவருடைய மீட்புத்துணை
பொங்கி வழிகின்றது.
8 இஸ்ராயேலரை அவர் மீட்பார்: அவர்கள் செய்த பாவங்கள் அனைத்
தினின்றும் அவர்களை மீட்டுக்கொள்வார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இறந்தோரிடமிருந்து யேசுவை உயிர்ப்பித்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருக்கிறார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 8 ; 8-11

சகோதரர்களே:

ஊனியல்பினர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்கமுடியாது; நீங்களோ ஊனியல்புக்கு உட்பட்டவர்கள் அல்ல; ஆவியின் செயலுக்கு உட்பட்டவர்கள். ஆனால், கடவுளின் ஆவி உங்களுள் குடியிருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் ஆவியை ஒருவன் கொண்டிராவிடில், அவன்

கிறிஸ்தவன் அல்லன். பாவத்தின் விளைவாக உங்கள் உடல் செத்ததாயினும் கிறிஸ்து உங்களுள் இருந்தால், இறைவனுக்கு ஏற்புடையவர்களாக்கப்பட்ட உங்களுக்கு தேவ ஆவி உள்ளுயிராய் இருப்பார். இறந்தோரிடமிருந்து யேசுவை உயிர்ப்பித்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால், இறந்தோரிடமிருந்து கிறிஸ்துவை உயிர்ப்பித்தவர் உங்களுள் குடிகொண்டுள்ள தமது ஆவியாலேயே சாவுக்குரிய உங்கள் உடல்களை உயிர்பெறச் செய்வார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 11 : 25a, 26

உயிர்ப்பும் உயிரும் நானே என்கிறார் ஆண்டவர்; என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான்.

## நற்செய்தி வாசகம்

**உயிர்ப்பும் உயிரும் நானே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11 : 1-45

அக்காலத்தில்:

லாசர் என்னும் ஒருவன் பிணியுற்றிருந்தான். அவன் பெத்தானியா ஊரினன். அதுவே மரியாள், அவளுடைய சகோதரி மார்த்தாள், இவர்களுடைய ஊர். இந்த மரியாள் தான், முன்னொரு நாள் ஆண்டவருக்குப் பரிமளத் தைலம் பூசி, அவருடைய பாதங்களைக் கூந்தலால் துடைத்தவள். பிணியுற்றிருந்த லாசர் அவளுடைய சகோதரன். அவளுடைய சகோதரிகள் யேசுவிடம் ஆளனுப்பி, "ஆண்டவரே, இதோ! நீர் நேசிக்கிறவன் பிணியுற்றுள்ளான்" என்று தெரிவித்தனர். யேசு இதைக்கேட்டு, "இப்பிணி சாவில் வந்து முடியாது, கடவுளுடைய மகிமைக்காகவே இப்படி ஆயிற்று. இதனால் கடவுளுடைய மகன் மகிமை பெற வேண்டியதிருக்கிறது" என்றார்.

மார்த்தாள், அவளுடைய சகோதரி மரியாள், லாசர் இவர்களிடம் யேசு அன்புகொண்டிருந்தார். அவன் பிணியுற்றிருந்த செய்தியைக் கேட்ட பின்பு அங்கேயே இரண்டு நாள் தங்கிவிட்டார். அந்த இரண்டு நாள் கழித்துத் தம் சீடரிடம், "மீண்டும் யூதேயாவுக்குப் போவோம், வாருங்கள்" என்றார். அவருடைய சீடர், "ராபி, இப்போதுதான் யூதர்கள் உம்மைக் கல்லால் எறியப் பார்த்தார்களே; நீர் மீண்டும் அங்குப் போகிறீரா?" என, யேசு மறுமொழியாக, "பகலுக்குப் பன்னிரண்டு

மணி நேரம் உண்டன்றோ? பகலில் நடப்பவன் இடறி விழுவதில்லை; ஏனெனில், அவன் இவ்வுலகின் ஒளியைக் காண்கிறான். இரவில் நடப்பவனே இடறி விழுகிறான்; ஏனெனில், அவனிடம் ஒளியில்லை" என்றார்.

இதைக் கூறியபின் அவர்களிடம், "நம் நண்பன் லாசர் தூங்குகிறான். அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பச் செல்கிறேன்" என்றார். அவருடைய சீடரோ, "ஆண்டவரே, தூங்கினால் நலம் அடைவான்" என்றனர். யேசு குறிப்பிட்டது அவனுடைய சாவையே. அவர்களோ வெறும் தூக்கத்தையே அவர் குறிப்பிட்டதாக நினைத்தனர். அப்போது யேசு, "லாசர் இறந்துவிட்டான். நான் அங்கு இல்லாமற் போனதுபற்றி மகிழ்கிறேன். உங்களுக்கு விசுவாசம் உண்டாகும் என உங்கள் பொருட்டு மகிழ்கிறேன். வாருங்கள், அவனிடம் செல்வோம்" என்று தெளிவாகச் சொன்னார். திதிமு என்னும் தோமையார் உடன்சீடரிடம், "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என்றார்.

யேசு அங்கு வந்தபொழுது, லாசரைக் கல்லறையில் வைத்து ஏற்கெனவே நான்கு நாள் ஆகியிருந்தது. பெத்தானியா யெருசலேமுக்கு அருகில் உள்ளது. இரு ஊருக்கும் ஏறக்குறைய இரண்டு கல் தொலை. சகோதரன் இறந்ததற்காக மார்த்தாள், மரியாள் இவர்களுக்கு ஆறுதல் அளிக்க யூதர் பலர் வந்திருந்தனர். யேசு வந்திருப்பதைக் கேள்வியுற்றதும் மார்த்தாள் அவரை எதிர்கொண்டு போனாள். மரியாளோ வீட்டிலேயே இருந்தாள். மார்த்தாள் யேசுவிடம், "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டான். இப்பொழுது கூட நீர் கடவுளிடமிருந்து கேட்பதெல்லாம் அவர் உமக்கு அருள்வார் என்று எனக்குத் தெரியும்" என்றாள். யேசு அவளை நோக்கி, "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்றார். அதற்கு மார்த்தாள், "இறுதி நாளில் எல்லாரும் உயிர்த்தெழும்போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது எனக்குத் தெரியும்" என்றாள். அவளிடம் யேசு, "உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசங்கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர் வாழ்கையில் என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான். இதை விசுவசிக்கிறாயா?" என்று கேட்டார். அவளோ, "ஆம் ஆண்டவரே, நீர் மெசியா; இவ்வுலகிற்கு வரும் கடவுளின் மகன் நீர்தான் என்று நான் விசுவசிக்கிறேன்" என்றாள்.

இப்படிச் சொன்னபின் மார்த்தாள் தன் சகோதரி மரியாளை அழைக்கச் சென்றாள். அவளிடம் வந்து, "போதகர் வந்துவிட்டார்; உன்னை அழைக்கிறார்" என்று காதோடு காதாய்ச் சொன்னாள். அதைக் கேட்டதும் மரியாள் விரைந்தெழுந்து அவரிடம் போனாள். யேசு ஊருக்குள் இன்னும் வரவில்லை. தம்மை மார்த்தாள் எதிர்கொண்ட இடத்திலேயே இருந்தார். மரியாளின் வீட்டில் அவளுக்கு ஆறுதல் சொல்லிக்

கொண்டிருந்த யூதர், அவள் விரைந்தெழுந்து வெளியே சென்றதைக் கண்டு, அழுவதற்குத்தான் கல்லறைக்குச் செல்கிருள் என்றெண்ணி அவளோடு போனார்கள்.

யேசு இருந்த இடத்திற்கு மரியாள் வந்ததும், அவரைக் கண்டு காலில் விழுந்து, "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டான்" என்றாள். மரியாள் அழுவதையும், அவளோடு வந்த யூதர் அழுவதையும் யேசு கண்டபொழுது மனம் குமுறிக் கலங்கி, "அவனை எங்கே வைத்தீர்கள்?" என்று கேட்க, "ஆண்டவரே, வந்து பாரும்" என்றார்கள். அப்போது யேசு கண்ணீர் விட்டார். அதைக் கண்ட யூதர்கள், "அவன் மேல் இவருக்கு எவ்வளவு நேசம், பாருங்கள்!" என்றனர். அவர்களுள் சிலர், "குருடனுக்குப் பார்வையளித்த இவர், இவன் சாகாமலிருக்கச் செய்யமுடியவில்லையா?" என்றனர். யேசு மீண்டும் மனம் குமுறியவராய்க் கல்லறைக்குச் சென்றார். அது ஒரு குகை; அதைக் கல் ஒன்று மூடியிருந்தது. "கல்லை எடுத்துவிடுங்கள்" என்றார் யேசு. செத்தவனுடைய சகோதரி மார்த்தாள் அவரை நோக்கி, "ஆண்டவரே, நான்கு நாள் ஆயிற்று; நாற்றம் அடிக்குமே!" என்றாள். அதற்கு யேசு, "உனக்கு விசுவாசம் இருந்தால், கடவுளின் மகிமையைக் காண்பாய் என்று நான் சொல்லவில்லையா?" என்றார். அப்பொழுது கல்லை அப்புறப்படுத்தினர். யேசு கண்களை ஏறெடுத்து, "தந்தாய், நீர் எனக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். நீர் என்றும் எனக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் சூழ்ந்து நிற்கும் கூட்டத்தின் பொருட்டே நான் இப்படிச் சொல்கிறேன். நீரே என்னை அனுப்பினீர் என்று இவர்கள் விசுவசிக்கவே இப்படிச் சொல்கிறேன்" என்றார். இதைச் சொன்னபின், உரத்த குரலில், "லாசரே, வெளியே வா" என்றார். என்றதும், இறந்தவன் வெளியே வந்தான். அவனுடைய கை, கால்கள் துணியால் சுற்றிக் கட்டுண்டிருந்தன. முகம் ஒரு துண்டால் மூடப்பட்டிருந்தது. அப்போது யேசு, "கட்டவிழ்த்து அவனைப் போகவிடுங்கள்" என்றார்.

மரியாளிடம் வந்திருந்த யூதர் பலர் யேசு செய்ததைக் கண்டு அவரில் விசுவாசங்கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது குறுகிய வாசகம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

11 : 3-7. 17.20-27. 33b-45

அக்காலத்தில்:

லாசருடைய சகோதரிகள் யேசுவிடம் ஆளனுப்பி, "ஆண்டவரே, இதோ! நீர் நேசிக்கிறவன் பிணியுற்றுள்ளான்" என்று தெரிவித்தனர். யேசு இதைக்கேட்டு, "இப்பிணி சாவில் வந்து முடியாது. கடவுளுடைய மகிமைக்காகவே இப்படி ஆயிற்று. இதனால் கடவுளுடைய மகன் மகிமை பெற வேண்டியிருக்கிறது" என்றார். மார்த்தாள், அவளுடைய சகோதரி மரியாள், லாசர் இவர்களிடம் யேசு அன்புகொண்டிருந்தார். அவர் பிணியுற்றிருந்த செய்தியைக் கேட்ட பின்பு அங்கேயே இரண்டுநாள் தங்கிவிட்டார். அந்த இரண்டு நாள் கழித்துத் தம் சீடரிடம், "மீண்டும் யூதேயாவுக்குப் போவோம், வாருங்கள்" என்றார்.

யேசு அங்கு வந்தபொழுது, லாசரைக் கல்லறையில் வைத்து ஏற்கெனவே நான்கு நாள் ஆகியிருந்தது. யேசு வந்திருப்பதைக் கேள்வியுற்றதும் மார்த்தாள் அவரை எதிர்கொண்டு போனாள். மரியாளோ வீட்டிலேயே இருந்தாள். மார்த்தாள் யேசுவிடம், "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டான். இப்பொழுதுகூட நீர் கடவுளிடமிருந்து கேட்பதெல்லாம் அவர் உமக்கு அருள்வார் என்று எனக்குத் தெரியும்" என்றாள். யேசு அவளை நோக்கி "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்றார். அதற்கு மார்த்தாள், "இறுதி நாளில் எல்லோரும் உயிர்த்தெழும்போது அவனும் உயிர்த்தெழுவான் என்பது என்க்குத் தெரியும்" என்றாள். அவளிடம் யேசு, "உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசங்கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர் வாழ்க்கையில் என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான். இதை விசுவசிக்கிறாயா?" என்று கேட்டார். அவளோ, "ஆம் ஆண்டவரே, நீர் மெசியா; இவ்வுலகிற்கு வரும் கடவுளின் மகன் நீர்தான் என்று நான் விசுவசிக்கிறேன்" என்றாள்.

ஆகவே யேசு மனம் குமுறிக் கலங்கி, "அவனை எங்கே வைத்தீர்கள்?" என்று கேட்க, "ஆண்டவரே, வந்து பாரும்" என்றார்கள். அப்போது யேசு கண்ணீர் விட்டார். அதைக் கண்ட யூதர்கள், "அவன் மேல் இவருக்கு எவ்வளவு நேசம், பாருங்கள்!" என்றனர். அவர்களுள் சிலர், "குருடனுக்குப் பார்வையளித்த இவர், இவன் சாகாமலிருக்கச் செய்ய முடியவில்லையா?" என்றனர். யேசு மீண்டும் மனம் குமுறியவராய்க் கல்லறைக்குச் சென்றார். அது ஒரு குகை; அதைக் கல் ஒன்று மூடியிருந்தது. "கல்லை எடுத்துவிடுங்கள்" என்றார் யேசு. செத்தவனுடைய

சகோதரி மார்த்தாள் அவரை நோக்கி, "ஆண்டவரே, நான்கு நாள் ஆயிற்று; நாற்றம் அடிக்குமே!" என்றாள். அதற்கு யேசு, "உனக்கு விசுவாசம் இருந்தால், கடவுளின் மகிமையைக் காண்பாய் என்று நான் சொல்லவில்லையா?" என்றார். அப்பொழுது கல்லை அப்புறப்படுத்தினர். யேசு கண்களை ஏறெடுத்து, "தந்தாய், நீர் எனக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். நீர் என்றும் எனக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். ஆனால், சூழ்ந்து நிற்கும் கூட்டத்தின் பொருட்டே நான் இப்படிச் சொல்கிறேன். நீரே என்னை அனுப்பினீர் என்று இவர்கள் விசுவசிக்கவே இப்படிச் சொல்லுகிறேன்" என்றார்.

இதைச் சொன்னபின், உரத்த குரலில், "லாசரே வெளியேவா" என்றார். என்றதும், இறந்தவன் வெளியே வந்தான். அவனுடைய கை கால்கள் துணியால் சுற்றிக் கட்டுண்டிருந்தன. முகம் ஒரு துண்டால் மூடப்பட்டிருந்தது. அப்போது யேசு, "கட்டவிழ்த்து அவனைப் போக விடுங்கள்" என்றார். மரியாளிடம் வந்திருந்த யூதர் பலர் யேசு செய்ததைக் கண்டு அவரில் விசுவாசங்கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**புதிய உடன்படிக்கை செய்வோம், பாவத்தை நினைவுகூர மாட்டோம்.**

இறைவாக்கினர் எரேமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 31 : 31-34

"இதோ, நாட்கள் வருகின்றன; அப்போது நாம் இஸ்ராயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை செய்வோம், என்கிறார் ஆண்டவர்; இது, நாம் எகிப்து நாட்டினின்று விடுவித்து இவர்களுடைய தந்தையரைக் கைபிடித்து நடத்தி வந்தபோது நாம் அவர்களோடு செய்த உடன்படிக்கையைப் போன்றிராது; நாம் அவர்களின் தலைவராய் இருந்தும் நம் உடன்படிக்கையை அவர்கள் முறித்துப் போட்டார்கள், என்கிறார் ஆண்டவர்.

அந்நாள் வரும்போது நாம் இஸ்ராயேல் வீட்டாரோடு செய்யப் போகும் உடன்படிக்கை இதுவே: நமது திருச்சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்போம்; அவர்களுடைய இதயங்களின்மேல் அதை

எழுதுவோம்; நாம் அவர்களின் கடவுளாய் இருப்போம்; அவர்கள் நம் மக்களாய் இருப்பர், என்கிறார் ஆண்டவர். இனி ஒவ்வொருவனும் தன் அயலானையோ, தன் சகோதரனையோ பார்த்து, 'ஆண்டவரை அறிந்து கொள்' என்று சொல்லிக் கற்பிக்க மாட்டான்: ஏனெனில், அவர்களுள் சிறியவன் முதல் பெரியவன் வரை அனைவரும் என்னை அறிந்து கொள்வார்கள், என்கிறார் ஆண்டவர்; ஏனெனில் அவர்களுடைய அக்கிரமத்தை நாம் மன்னித்து விடுவோம், அவர்களுடைய பாவத்தை இனிமேல் நினைவு கூரவேமாட்டோம்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 50:1-2. 10-11. 12-13 (பல்லவி: 10a)*

*பல்லவி:* தூயதோர் உள்ளத்தை இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும்: உம் இரக்கப்பெருக்கத்திற்கேற்ப என் குற்றங்குறைகளைப் போக்கிவிடும்.

2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப்போக்கிவிடும்: என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்: உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.

11 உம் திருமுன்னிலிருந்து என்னைத் தள்ளி விடாதேயும்: உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்: உமது பெருந்தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.

13 தீயவர்களுக்கு உம் வழிகளை நான் புகட்டுவேன்: பாவிகள் உம்மிடம் திரும்பி வருவர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

***கீழ்ப்படிதலைத் துய்த்துணர்ந்தார், முடிவில்லா மீட்பின் காரணரானார்.***

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 5:7-9

சகோதரர்களே:

கிறிஸ்து இம்மையில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து மீட்க வல்லவரிடம் பலத்த குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி, வேண்டுதல்களையும் மன்றாட்டுகளையும் ஒப்புக் கொடுத்தார். அவருக்கிருந்த பயபக்தியை

முன்னிட்டு இறைவன் அவருக்குச் செவிசாய்த்தார். அவர் இறைமகனாய் இருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார். இவ்வாறு, நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணரானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 12 : 26

ஆண்டவர் கூறுகிறார்: எனக்குப் பணிவிடை செய்பவன் என்னைப் பின் செல்லட்டும்: எங்கே நான் இருக்கிறேனோ, அங்கே என் பணியாளனும் இருப்பான்.

## நற்செய்தி வாசகம்

**கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 12 : 20-33

அக்காலத்தில்:

வழிபாட்டுக்காகத் திருவிழாவுக்கு வந்தவர்களுள் கிரேக்கர் சிலர் இருந்தனர். கலிலேயா நாட்டு பெத்சாயிதா ஊரினராகிய பிலிப்புவினிடம் இவர்கள் வந்து, "ஐயா! யேசுவைக் காண விரும்புகிறோம்" என்று கேட்டுக்கொண்டார்கள். பிலிப்பு வந்து பெலவேந்திரரிடம் சொல்ல, பெலவேந்திரரும் பிலிப்புவும் யேசுவிடம் சொன்னார்கள்.

அதற்கு யேசு, "மனுமகன் மகிமைபெறும் நேரம் வந்துவிட்டது. உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால்தான் மிகுந்த பலனளிக்கும். தன்னுயிரை நேசிக்கிறவன் அதை ^ → முடிவில்லாத வாழ்வுக்குக் காப்பாற்றிக்கொள்வான். எனக்குப் பணிவிடை செய்பவன் என்னைப் பின்செல்லட்டும்; எங்கே நான் இருக்கிறேனோ அங்கே என் பணியாளனும் இருப்பான். எவனாவது எனக்குப் பணிவிடை செய்தால், அவனுக்கு என் தந்தை மதிப்பளிப்பார். இப்பொழுது எனது ஆன்மா கலக்க மடைந்துள்ளது. நான் என்ன சொல்வேன்? தந்தாய், இந்நேரத்தின் சோதனையிலிருந்து என்னைக் காப்பாற்றும் என்பேனோ? இல்லை, இதற்காகத்தானே இந்நேரம்வரை வாழ்ந்தேன். தந்தாய், உமது பெயரை மகிமைப்படுத்தும்" என்றார்.

^ இழந்து விடுகிறான். இவ்வுலகில் தன் உயிரை
வெறுப்பவனோ அதை →

அப்பொழுது வானத்திலிருந்து, "மகிமைப் படுத்தினேன், மீண்டும் மகிமைப்படுத்துவேன்" என்ற குரலொலி வந்தது. சூழ்ந்து நின்ற மக்கள் அதைக் கேட்டு, "இடி இடித்தது" என்றனர். சிலரோ, "வானதூதர் ஒருவர் அவரோடு பேசினார்" என்றனர். ஆனால் யேசு, "இக்குரலொலி உங்கள் பொருட்டு உண்டானதேயன்றி, என்பொருட்டன்று." "இப்பொழுதே இவ்வுலகு தீர்ப்புக்குள்ளாகிறது. இப்பொழுதே இவ்வுலகின் தலைவன் புறம்பே தள்ளப்படுவான். நானே உலகினின்று உயர்த்தப் பெற்றபின் அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" என்றார்.

தாம் இறக்கப்போவது எவ்வாறு என்பதைக் குறிப்பிட்டே இப்படிச் சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இவ்வாசகங்களுக்குப் பதிலாக முதல் ஆண்டு வாசகங்களையும் பயன்படுத்தலாம்.
(பக். 596)

# ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இதோ, நாம் புதியன செய்கிறோம். நம் மக்களின் தாகம் தீர்ப்போம்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *43: 16-21*

பெருங்கடலில் வழி ஏற்படுத்தியவரும், பொங்கியெழும் நீரின் நடுவில் பாதை விட்டவரும், எகிப்தின் தேர்ப்படைகளையும் குதிரைகளையும், வலிமையுள்ள வீரர்களையும் கூட்டிவந்து, அவர்கள் மறுபடி எழுந்திராமல் முடிவில்லா உரக்கத்தில் ஆழும்படியும், விளக்குத் திரிபோல் நசுங்கி அழியும்படியும் செய்தவருமான ஆண்டவர் கூறுகிறார்:

"கடந்து போனவற்றைச் சிந்திக்கவேண்டா, முற்காலத்து நிகழ்ச்சிகளைப்பற்றி எண்ணவேண்டா; இதோ, நாம் புதியன செய்கிறோம், இப்பொழுது அவை தோன்றும், நீங்களும் காண்பீர்கள். பாழ்வெளியில் நாம் பாதையொன்று அமைப்போம், பாலை நிலத்தில் ஆறுகள் புறப்படச் செய்வோம். காட்டு மிருகங்களும் குள்ள நரிகளும், தீக்கோழிகளும்

நம்மை மகிமைப்படுத்தும்; ஏனெனில் தேர்ந்துகொள்ளப்பட்ட நம் மக்களின் தாகந் தீர்க்கப் பாழ்வெளியில் நீர் சுரக்கச் செய்வோம், பாலை நிலத்தில் ஆறுகள் புறப்படச் செய்வோம். நமது மகிமையைப் பரப்பும்படி நமக்கென்றே இந்த மக்களை உண்டாக்கினோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 125 : 1-2ab. 2cd-3. 4-5. 6 (பல்லவி: 3)

பல்லவி : ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்; அதனால் பெருமகிழ்ச்சி கொண்டோம்.

1 ஆண்டவர் சீயோனின் அடிமைகளை மீட்டு வந்தபோது, நாங்கள் கனவு கண்டவர்கள்போல் இருந்தோம்.
2 அப்போது நம் உதடுகளில் சிரிப்பு ஒலித்தது, நாவில் மகிழ்ச்சிக் கீதமும் எழும்பியது.
பல்லவி

"ஆண்டவர் அவர்களுக்கு மகத்தான காரியங்களைச் செய்தார்!" என்று அப்போது மக்களினத்தார் பேசிக்கொண்டனர்.
3 ஆம், ஆண்டவர் நமக்கு மகத்தான காரியங்களைச் செய்தார் : அதனால் பெருமகிழ்ச்சி கொண்டோம்.
பல்லவி

4 ஆண்டவரே, பாலைநிலத்தில் வெள்ளத்தைத் திருப்பிவிடுவதுபோல, எங்கள் நிலைமையை மாற்றிவிடும்.
5 கண்ணீரோடு விதைவிதைப்பவர்கள், பெருமகிழ்ச்சியோடு அறுவடை செய்வார்கள்.
பல்லவி

6 விதை தெளிக்கச் செல்லும்போது, அழுகையோடு செல்கிறார்கள் : அறுத்த அரிகளைச் சுமந்து வரும்போது பெருமகிழ்ச்சியோடு வருவார்கள். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*கிறிஸ்துவின் பொருட்டு அனைத்தையும் இழந்து விட்டேன்; அவரது சாவின் சாயலை என்னுள் ஏற்றேன்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 8-14

சகோதரர்களே :

என் ஆண்டவராம் கிறிஸ்து யேசுவை அறிதலாகிய ஒப்பற்ற செல்வத்தின் பொருட்டு அவையெல்லாம் இழப்பு எனக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்து விட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளவும், அவரோடு ஒன்றித்திருக்கவும் எல்லாவற்றையும் குப்பையெனக் கருதுகிறேன். இறைவனுக்கு ஏற்புடையவனாகும் தகுதி எதுவும் எனக்குச் சொந்தமாயில்லை. திருச்சட்டத்தால் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆகாத இந்நிலையில் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால்தான், இறைவனுக்கு நான் ஏற்புடையவன் ஆகமுடியும். அந்த ஏற்புடைமையோ கடவுள் அளிக்கும் கொடை. விசுவாசத்தை அடிப்படையாகக்கொண்டது. இனி நான் விரும்புவதெல்லாம் அவரை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே. அதாவது, அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையைத் துய்த்துணர வேண்டும். அவரது சாவின் சாயலை என்னுள் ஏற்று அவருடைய பாடுகளில் பங்குபெற வேண்டும். அப்போதுதான், இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுதலை நான் அடைவேன் என நம்பக்கூடும்.

இவையெல்லாம் அடைந்து விட்டேன் என்றோ, நிறைவு எய்தி விட்டேன் என்றோ சொல்வதற்கில்லை. எதற்காக கிறிஸ்து யேசு என்னை ஆட்கொண்டாரோ, அதை நான் பற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து ஓடுகிறேன். ஆம், சகோதரர்களே, முடிவை நான் பற்றிக் கொண்டுவிட்டேன் என்று எண்ணவில்லை. ஆனால் ஒன்று மட்டும் செய்கிறேன். கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு பரிசுபெறவேண்டி இலக்கை நோக்கி ஓடுகிறேன். கிறிஸ்து யேசுவுக்குள் என்னைக் கடவுள் மேலுலகுக்கு அழைப்பதே அப்பரிசாகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் யோவேல் 2:12-13

இப்பொழுதாவது உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர்; ஏனெனில், அருளும் இரக்கமும் உள்ளவர் நாம்.

## நற்செய்தி வாசகம்

**உங்களுள் பாவமில்லாதவன் முதலில் அவள்மேல் கல் எறியட்டும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *8 : 1-11*

*அக்காலத்தில் :*

யேசு ஒலிவ மலைக்குச் சென்றார். விடியற்காலையில் அவர் கோயிலுக்கு வர, மக்கள் எல்லாரும் அவரிடம் வந்தனர். அவர் அமர்ந்து அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்.

விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணொருத்தியை மறைநூல் வல்லுநரும் பரிசேயரும் கொண்டுவந்து நடுவில் நிறுத்தி, "போதகரே, இப்பெண் விபசாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டாள். இத்தகையவர்களைக் கல்லாலெறிந்து கொல்ல வேண்டுமென்பது மோயீசன் நமக்குக் கொடுத்த சட்டம். நீர் என்ன சொல்லுகிறீர்?" என்றனர். அவர்மேல் குற்றம் சுமத்த ஏதாவது கண்டுபிடிக்கும்படி, அவரைச் சோதிக்க இப்படிக் கேட்டனர்.

யேசுவோ குனிந்து விரலாலே தரையில் எழுதத் தொடங்கினார். அவர்கள் அந்தக் கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டதால் அவர் நிமிர்ந்து பார்த்து, "உங்களுள் பாவமில்லாதவன் முதலில் அவள்மேல் கல் எறியட்டும்" என்றார். மீண்டும் குனிந்து தரையில் எழுதலானார். அவர் சொன்னதைக் கேட்டதும் மூத்தவர் தொடங்கி ஒருவர்பின் ஒருவராக அவர்கள் போய்விட்டனர். கடைசியில் யேசு மட்டும் இருந்தார். அப் பெண்ணோ அந்த இடத்திலேயே நின்றுகொண்டிருந்தாள்.

அவர் நிமிர்ந்து பார்த்து, "மாதே, எங்கே அவர்கள்? உனக்கு எவரும் தீர்ப்பிடவில்லையா?" என்று கேட்டார். அவளோ, "ஒருவரும் தீர்ப்பிடவில்லை, ஆண்டவரே" என, யேசு, "நானும் தீர்ப்பிடேன். இனிமேல் பாவஞ் செய்யாதே, போ" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இவ்வாசகங்களுக்குப் பதிலாக, முதல் ஆண்டு வாசகங்களையும் பயன்படுத்தலாம்.

*(பக்கம். 596)*

# வேறொரு பூசை

*இவ்வாரத்தின் ஏதாவது ஒருநாளில், சிறப்பாக, லாசரைப்பற்றி நற்செய்தி வாசகம் வாசிக்கப்படாத 2ஆம் 3ஆம் ஆண்டுகளில் இப்பூசையைப் பயன்படுத்தலாம்.*

## முதல் வாசகம்

**சிறுவன்மேல் குப்புறப் படுத்துக்கொண்டார்; அப்போது சிறுவனின் உடம்பில் சூடு ஏறினது.**

அரசர் ஆகமம் இரண்டாம் புத்தகத்திலிருந்து வாசகம் : 18b–21. 32–37

ஒருநாள் சூனமித்தாளின் மகன் அறுவடை செய்வோருடன் இருந்த தன் தந்தையிடம் சென்றிருந்தான். அப்போது, தன் தந்தையைப் பார்த்து, "எனக்குத் தலை வலிக்கிறது, தலை வலிக்கிறது" என்று சொன்னான். அவனோ தன் ஊழியன் ஒருவனைப் பார்த்து, "நீ இவனை தூக்கிக் கொண்டுபோய் இவன் தாயிடம் விடு" என்றான். அவன் அப்படியே பிள்ளையைத் தூக்கிச் சென்று அவன் தாயிடம் விட்டான். அவள் அவனை நண்பகல் வரை மடிமேல் வளர்த்தி வைத்திருந்தாள். அதன்பின் அவன் இறந்தான். அவளோ கடவுளுடைய மனிதரின் அறைக்குச் சென்று, அவருடைய படுக்கையின்மேல் பிள்ளையைக் கிடத்தினாள்; பின்னர் கதவைப் பூட்டிவிட்டாள்.

ஆகவே எலிசேயு வீட்டினுள் நுழைந்து, இறந்த சிறுவன் தம் படுக்கையின்மேல் கிடக்கக்கண்டார். அப்பொழுது எலிசேயு சிறுவன் படுத்திருந்த அறைக்குள் நுழைந்து, கதவைத் தாழிட்டு, ஆண்டவரை நோக்கி வேண்டினார். பின்பு படுக்கையின்மேல் ஏறி வாயோடு வாயும் கண்ணோடு கண்ணும், கையோடு கைகளும் வைத்துச் சிறுவன்மேல் குப்புறப்படுத்துக்கொண்டார். உடனே பிள்ளையின் உடம்பில் சூடு ஏறினது. பின்பு படுக்கையை விட்டு இறங்கி அறையிலேயே அங்குமிங்கும் உலாவினார். மறுபடியும் படுக்கையின்மேல் ஏறிச் சிறுவன்மீது படுத்துக் கொண்டார். அப்போது குழந்தை ஏழுமுறை கொட்டாவி விட்டுக் கண் திறந்தது.

எனவே, எலிசேயு ஜியேசியை அழைத்து, "அந்தச் சூனமித்தாளை அழைத்துவா" என்றார். அவள் அறையில் நுழைந்தபோது எலிசேயு அவளை நோக்கி, "உன் மகனை எடுத்துக்கொண்டுபோ" என்றார். அவள்

அவரை அணுகி, அவரது காலடியில் வீழ்ந்து, தரை மட்டும் பணிந்து அவரை வணங்கினாள். பின்பு தன் மகனைக் கூட்டிக்கொண்டு வெளியே போனாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 16 : 1. 6-7. 8b. 15 (பல்லவி : 15b)

பல்லவி:

ஆண்டவரே, நான் விழித்தெழும்போது, உமது பிரசன்னத்தால் நிறைவுறுவேன்.

1
ஆண்டவரே, நியாயமான என் வழக்கைக் கேட்டருளும்; என் கூக்குரலைக்
கவனித்தருளும் : வஞ்சகமற்ற உதட்டினின்று எழும் என் வேண்டுதலுக்
குச் செவிசாய்த்தருளும். பல்லவி

6
இறைவா, என் மன்றாட்டைக் கேட்டருள்வீர் என்பதால் நான் உம்மைக்
கூவியழைக்கிறேன்: எனக்குச் செவிசாய்த்தருளும்; என் விண்ணப்பத்
7 தைக் கேட்டருளும்.
வியப்புக்குரிய உமது இரக்கத்தைக் காட்டியருளும்: உம் வலக்கரத்தில்
உம்மிடம் அடைக்கலம் புகுவோரை எதிரிகளிடமிருந்து காப்பவர் நீரே. பல்லவி

8
உம் சிறகுகளின் நிழலில் என்னை மறைத்துக்கொள்ளும்.
15
நானோவெனில், நீதியில் நிலைத்து உம் திருமுகத்தைக் காணவே விரும்புகி
றேன்: நான் விழித்தெழும்பொழுது உமது பிரசன்னத்தால் நிறைவுறுவ
தொன்றையே நான் விழைகிறேன். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 11 : 25a. 26

உயிர்ப்பும் உயிரும் நானே, என்கிறார் ஆண்டவர்: என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான்.

## நற்செய்தி வாசகம்

**உயிர்ப்பும் உயிரும் நானே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 11:1-45

(பக்கம் 596 காண்.)

# திங்கள்

## முதல் வாசகம்

**நான் யாதொன்றையும் செய்யாதிருந்தும் இதோ சாகிறேனே.**

இறைவாக்கினர் தானியேல் ஆகமத்திலிருந்து வாசகம்

*13 : 1-9. 15-17. 19-30. 33-62*

அந்நாட்களில் :

பாபிலோனில் குடியிருந்தவருள் ஒருவன் யோவாக்கீம் என்பவன். அவன் எல்சியாவின் மகளும், மிக்க அழகு வாய்ந்தவளும், கடவுளுக்கு அஞ்சி நடந்தவளுமான சூசன்னு என்பவளை மணந்தான். அவளுடைய பெற்றோர் நீதிமான்களாய் இருந்ததால், தங்கள் மகளை மோயீசனின் திருச்சட்டத்தின்படியே வளர்த்தார்கள். யோவாக்கீமோ பெருஞ் செல்வம் படைத்தவன்; அவன் வீட்டருகிலேயே அவனுக்கொரு பழத் தோட்டம் இருந்தது; அவன் மற்றெல்லாரையும்விட மதிப்பில் உயர்ந் தவனுதலால், யூதர்கள் அவனிடம் வந்துபோவது வழக்கம்.

அந்த ஆண்டில் மக்கள் நடுவிலிருந்து முதியவர்கள் இருவர் நீதிபதி களாய் ஏற்படுத்தப்பட்டார்கள்: அவர்களைக் குறித்து ஆண்டவர், "நீதிபதிகளாய் இருந்து, மக்களை நடத்தும் பொறுப்பேற்ற முதியவர் களால் பாபிலோனிலிருந்து அக்கிரமம் கிளம்பிற்று" என்று சொல்லி யிருந்தார். இவர்கள் யோவாக்கீம் வீட்டுக்கு அடிக்கடிப் போவது வழக்கம்; மக்களும் வழக்குகள் இருந்தால், அவர்கள் அனைவரும் அவர்களிடம் போவார்கள். நண்பகல் வேளையில் மக்கள் யாவரும் போனபிறகு சூசன்னு தன் கணவனுடைய தோட்டத்திற்குள் போய் உலாவுவாள். இவ்வாறு அவள் நாடோறும் போய் உலாவிக்கொண்டிருப்பதை அந்த முதியவர்கள் கண்டு, அவள் மேல் காமங்கொண்டனர். அவர்கள் மனம் மழுங்கிப் போயிற்று; வானத்தை ஏறெடுத்துப் பார்க்காமலும், நீதிமுறைமைகளை நோக்காமலும் தங்கள் கண்களைத் திருப்பிக் கொண்டனர்.

ஆகவே, அவர்கள் தகுந்த நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் கள்; ஒருநாள் வழக்கம்போலவே, அன்றும் சூசன்னு தன் பணிப்பெண்கள் இருவரோடு தோட்டத்திற்குள் நுழைந்து, அங்கே குளிக்க விரும்பினுள்; ஏனெனில், வெயில் கொடுமையாக இருந்தது. ஒளிந்து கொண்டு அவளைக்

கவனித்துக் கொண்டிருந்த கிழவர்களைத் தவிர, வேறு யாரும் அங்கே இல்லை. அவள் பணிப்பெண்களை நோக்கி, "எண்ணெய்யும் தைலமும் எனக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுத்தோட்டத்துக் கதவுகளைச் சாத்திவிட்டுப் போங்கள்; நான் குளிக்கப்போகிறேன்" என்று சொன்னாள்.

பணிப்பெண்கள் வெளியே போனவுடனே, அந்தக் கிழவர்கள் இருவரும் எழுந்து அவளிடம் ஓடிவந்து, "இதோ, தோட்டத்தின் கதவுகள் சாத்தப்பட்டுள்ளன; யாரும் பார்க்கவில்லை; உன்மேல் நாங்கள் ஆசை கொண்டுள்ளோம்; ஆகையால் எங்களுக்கு உடன்படு; எங்களோடு சேர். நீ உடன்படாவிட்டால், உன்னோடுகூட ஓர் இளைஞன் இருந்ததாகவும், அதனால்தான் நீ பணிப்பெண்களை வெளியே அனுப்பிவிட்டதாகவும் உனக்கெதிராய் நாங்கள் சாட்சி சொல்லுவோம்" என்றார்கள். சூசன்னா பெருமூச்சுவிட்டு, "நான் பெரிய நெருக்கடியில் மாட்டிக்கொண்டேன்; இதைச் செய்தால் எனக்குக் கிடைப்பது சாவு; செய்யாவிட்டால், உங்கள் கைகளுக்குத் தப்பமுடியாது. ஆனால் ஆண்டவர் முன்னிலையில் பாவஞ் செய்வதைவிட அதைச் செய்யாமல் உங்கள் கைகளில் அகப்படுவது நல்லது" என்றாள். உடனே சூசன்னா உரத்த குரலில் கூப்பிட்டாள்; கிழவர்களோ அவளுக்கு எதிராகக் கத்திக் கூப்பிட்டார்கள். அவர்களுள் ஒருவன் தோட்டத்து வாயிலண்டை ஓடிக் கதவைத் திறந்தான். தோட்டத்தில் கூக்குரல் கேட்டவுடன் வீட்டு ஊழியர்கள் அவளுக்கு நடந்ததென்ன என்று காணப் பின்புறக் கதவால் ஓடிவந்தார்கள். கிழவர்கள் தங்கள் கதையைச் சொன்னார்கள்; அதைக் கேட்ட ஊழியர்கள் மிகவும் வெட்கப்பட்டார்கள்; ஏனெனில் சூசன்னாவைப்பற்றி இத்தகையது ஒன்றும் என்றுமே கேள்விப்பட்டதில்லை.

மறுநாள் அவளுடைய கணவனாகிய யோவாக்கீமின் வீட்டுக்கு மக்கள் திரண்டு வந்தார்கள்; அவர்களோடு அந்தக் கிழவர்கள் இருவரும் வந்தார்கள்; சூசன்னாவைக் கொலைசெய்ய அவளுக்கு விரோதமாய்ச் சதித்திட்டம் போட்டுக்கொண்டு வந்தனர். இவர்கள் மக்களைப்பார்த்து, "எல்சியாவின் மகளும் யோவாக்கீமின் மனைவியுமாகிய சூசன்னாவை இங்கே கொண்டு வரும்படி ஆள் அனுப்புங்கள்" என்றார்கள். அவர்கள் உடனே அனுப்பினார்கள்; அவள் தன் பெற்றோர்களோடும் பிள்ளைகளோடும், சுற்றத்தார் அனைவரும் உடன்வர, வந்தாள்.

ஆனால் அவளுடைய உறவினரும், அவளை அறிந்தவர்கள் அனைவரும் அழத் தொடங்கினர். அப்போது அந்தக் கிழவர்கள் இருவரும் மக்கள் நடுவில் எழுந்து நின்று, தங்கள் கைகளை அவள் தலைமேல் வைத்தனர். அவளோ அழுதுகொண்டு வானத்தை நோக்கினாள்; ஏனெனில் அவளது உள்ளம் ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டிருந்தது. அந்தக் கிழவர்கள்

பேசினார்கள் : "நாங்கள் தனியாய்த் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கும்போது, இவள் இரண்டு தோழியரோடு சோலைக்குள் வந்தாள்; வந்தபின் அதன் கதவுகளைச் சாத்திவிட்டுப் பணிப்பெண்களை வெளியே அனுப்பிவிட்டாள். அப்பொழுது அங்கே ஒளிந்திருந்த ஓர் இளைஞன் அவளிடம் வந்து அவளோடு படுத்துக்கொண்டான். நாங்களோ தோட்டத்தின் ஒரு மூலையில் இருந்தோம்; அந்தக் கெட்ட செயலைப் பார்த்ததும், அவர்களிடம் ஓடிவந்தோம்; அவர்கள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்திருப்பதைக் கண்டோம். அவனை எங்களால் பிடிக்கமுடியவில்லை; ஏனெனில் அவன் எங்களைவிட வலுவுள்ளவனாய் இருந்தான்; கதவுகளைத் திறந்துகொண்டு ஓட்டம் பிடித்தான். ஆனால் நாங்கள் இவளைப் பிடித்து, அந்த இளைஞன் யாரென்று கேட்டோம்; இவள் சொல்லவில்லை; இதற்கு நாங்களே சாட்சி." அவர்கள் முதியவர்களாய் இருந்ததாலும், மக்களுக்கு நீதி வழங்குவோராய் இருந்ததாலும் மக்கள் அவர்கள் சொன்னதை நம்பி அவளைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள்.

அப்போது சூசன்னா உரத்த குரலில் கூவியழுது, "காலங்கடந்த இறைவா, நீர் மறை பொருட்களை அறிந்தவர்; நிகழுமுன் எல்லாவற்றையும் நீர் அறிவீர். அவர்கள் எனக்கு எதிராகப் பொய்ச்சான்று பகர்ந்தனர் என்பதையும் அறிவீர்; எனக்கு விரோதமாய் அவர்கள் இட்டுக்கட்டிச் சொன்னவற்றுள் நான் யாதொன்றையும் செய்யாதிருந்தும் இதோ நான் சாகிறேனே" என்றாள். ஆண்டவர் அவளுடைய வேண்டுதலைக் கேட்டருளினார்.

அவளைக் கொலைக் களத்திற்குக் கொண்டு போகும்போது, தானியேல் என்னும் பெயருள்ள இளைஞனின் பரிசுத்த ஆவியைக் கடவுள் தூண்டிவிட்டார். அவன் உரத்த குரலில், "இவளுடைய இரத்தப்பழிக்கு நான் பொறுப்பாளியல்லேன்" என்று கத்தினான். மக்கள் அனைவரும் அவன் பக்கம் திரும்பி, "நீ என்ன சொன்னாய்?" என்றார்கள். அவன் அவர்கள் நடுவில் நின்றுகொண்டு, "இஸ்ராயேல் மக்களே, வழக்கை விசாரியாமலும் உண்மையை ஆராயாமலும் இஸ்ராயேல் மகள் ஒருத்தியைச் சாவுக்குத் தீர்வையிட நீங்களும் மதியிழந்து போனீர்களா? நீதி வழங்கும் இடத்திற்குத் திரும்பி வாருங்கள்; ஏனெனில், இந்த மனிதர்கள் அவளுக்கு எதிராகப் பொய்ச்சான்று சொன்னார்கள்" என்றான்.

ஆகையால் மக்கள் விரைந்து திரும்பி வந்தார்கள்; முதியவர்கள் தானியேலை நோக்கி, "எங்கள் நடுவில் வந்து உட்கார்ந்து உன் கருத்தை எங்களுக்கு விளக்கிச் சொல்; ஏனெனில், முதியோர்க்குரிய சிறப்பை உனக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார்" என்றார்கள். தானியேல் அவர்களை நோக்கி, "அவர்கள் இருவரையும் வெவ்வேறிடத்தில் பிரித்து வையுங்கள்; அவர்களை நான் விசாரிக்கிறேன்" என்றான். அவர்களும் அவ்வாறே

"நன்றாகப் பொய் சொல்கிறாயே! அது உன் தலைமேல்தான் விழும்; ஏனெனில் இதோ, வானதூதர் கடவுளிடமிருந்து தீர்ப்புப் பெற்று, உன்னை இரண்டாக வெட்டுவார்" என்றான்.

அவனைத் தொலைவில் விலக்கிவிட்டு, மற்றவனை வரும்படியாகக் கட்டளையிட்டான். அவன் வந்ததும், அவனைப் பார்த்து, "யூதாவுக்கன்று, கானானுக்குப் பிறந்தவன் நீ; அழகு உன்னை மயக்கிவிட்டது; காமம் உன் மனத்தைக் கெடுத்து விட்டது. இஸ்ராயேல் பெண்களுக்கு நீங்கள் இருவரும் இப்படித்தான் இதுவரை செய்துவந்தீர்கள்; அவர்களும் பயத்தினால் தான் உங்கள் கெட்ட கருத்துக்கு இணங்கினார்கள்; ஆனால் யூதாவின் புதல்வியாகிய இவளால் உங்கள் அக்கிரமத்தைப் பொறுக்க முடியவில்லை. இப்போது கேள்: அவர்கள் பேசிக்கொண்டிருக்க நீ கண்டாயே, அவர்கள் எந்த மரத்தடியில் இருந்தார்கள்? சொல்" என்றான்; அதற்கு அவன். "கருவாலி மரத்தடியில்" என்றான். தானியேல் அவனை நோக்கி, நீயும் நன்றாய்ப் பொய் சொல்லுகிறாயே! அது உன் தலைமேல்தான் விழும்; ஏனெனில் ஆண்டவருடைய தூதர் உங்களை இரண்டு துண்டாக வெட்டி வீழ்த்தவும், இருவரையும் சாகடிக்கவும் வாளை ஏந்திக்கொண்டு நிற்கிறார்" என்றான்.

இதைக் கேட்டு அங்குள்ள மக்கள் அனைவரும், நம்பினவர்களைக் காப்பாற்றும் கடவுளை உரத்த குரலில் வாழ்த்திப் புகழ்ந்தார்கள். மேலும் அந்தக் கிழவர்கள் இருவருக்கும் எதிராக எழும்பினார்கள். ஏனெனில் அவர்கள் பொய்ச்சான்று சொல்லியதைத் தானியேல் அவர்கள் வாயாலேயே எண்பித்துவிட்டான். அவர்கள் பிறருக்குத் தர நினைத்திருந்த தண்டனையை அவர்களுக்கே தந்தார்கள்; மோயீசன் திருச்சட்டம் விதித்தபடியே, அவர்களை மக்கள் கொலை செய்தார்கள்; மாசற்ற இரத்தம் அன்று மீட்கப்பட்டது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 22 : 1-3a, 3b-4, 5, 6 (பல்லவி : 4ab)

பல்லவி : இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையானதெதற்கும் அஞ்சேன் ; ஏனெனில் நீர் என்னோடு இருக்கின்றீர்.

1 என் ஆயன் ஆண்டவர் : எனக்கென்ன குறைவு !
பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
2 என் களைப்பை ஆற்ற நீர்அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார் ;
எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

3 தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய வழியில் செலுத்து
கின்றார்.
4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையான
தெதற்கும் அஞ்சேன் : ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர் ; உமது
கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர் :
என் தலைக்கு எண்ணெய் பூசினீர் ; என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது.
பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும் ; என் வாழ்நாளெல்லாம் என்னைத்
தொடரும் ; ஆண்டவர்தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன் ; ஊழி
ஊழிக்காலமும் குடியிருப்பேன். பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் எசேக். 33 : 11

ஆண்டவர் கூறுகிறார் : தீயவன் சாகவேண்டும் என்பதன்று;
அவன் மனந்திரும்பி வாழவேண்டும் என்பதே நம் விருப்பம்.

## நற்செய்தி வாசகம்

**உங்களுள் பாவமில்லாதவன் முதலில் அவள்மேல் கல் எறியட்டும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிந்து வாசகம் 8:1-11

(பக்கம் 608)

மூன்ரும் ஆண்டில் இச் சுவிசேஷம் முந்தின ஞாயிறு வாசிக்கப்பட்டதால் அதற்குப் பதிலாகப் பின்வரும் சுவிசேஷம் வாசிக்கவும்.

**நானே உலகின் ஒளி,**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8:12-20

அக்காலத்தில் :

யேசு பரிசேயர்களைப் பார்த்து: "நானே உலகின் ஒளி: என்னைப்பின் செல்பவன் இருளில் நடவான். உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்" என்று கூறினுர். பரிசேயர்களோ அவரிடம், "உம்மைப்பற்றி நீரே சாட்சியம் கூறுகின்றீர். உம்முடைய சாட்சியம் செல்லாது" என்றனர்.

யேசு மறுமொழியாகச் சொன்னதாவது: "என்னைப்பற்றி நானே சாட்சியம் கூறினும் என் சாட்சியம் செல்லும். ஏனெனில், நான் எங்கிருந்து வந்தேன், எங்கே செல்கிறேன் என்று எனக்குத் தெரியும். நான் எங்கிருந்து வருகிறேன் என்ருே, எங்கே செல்கிறேன் என்ருே உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உலகுக்கு ஏற்றவாறு தீர்ப்பிடுகிறீர்கள். நானோ எவனுக்கும் தீர்ப்பிடுவதில்லை. அப்படி நான் தீர்ப்பிட்டாலும் என் தீர்ப்பு செல்லும். ஏனெனில், தீர்ப்பிடுவதில் நான் தனியாயில்லை, என்னை அனுப்பிய தந்தையும் என்னோடு இருக்கிருர். இவருடைய சாட்சியம் செல்லும் என்று உங்கள் சட்டத்திலே எழுதியுள்ளது அன்ருே? என்னைப்பற்றிச் சாட்சியம் நானும் கூறுகிறேன். என்னை அனுப்பிய தந்தையும் கூறுகிருர்." அவர்களோ, "உம் தந்தை எங்கே?" என்று கேட்க, யேசு மறுமொழியாக, நீங்கள் என்னையும் அறியீர்கள், என் தந்தையையும் அறியீர்கள். என்னை நீங்கள் அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள்" என்ருர்.

யேசு கோயிலில் போதிக்கையில், காணிக்கையறை அருகில் இப்படிக் கூறினுர். அவருடைய நேரம் இன்னும் வராததால் எவனும் அவரைப் பிடிக்கவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

*கடியுண்டவன் வெண்கலப் பாம்பை உற்றுநோக்கினால் உயிர் பிழைப்பான்.*

எண்ணாகமத்திலிருந்து வாசகம் *21:4-9*

அந்நாட்களில்:

இஸ்ராயேலர் 'ஓர்' என்ற மலையிலிருந்து புறப்பட்டு, ஏதோம் நாட்டைச் சுற்றிப் போகத்தக்கதாகச் செங்கடல் வழியாகப் பயணம் செய்தார்கள். வழியின் வருத்தத்தினாலே மக்கள் மனம் சலிக்கத் தொடங்கி, அவர்கள் கடவுளுக்கும் மோயீசனுக்கும் விரோதமாய்ப் பேசி: "நீ எங்களை எகிப்திலிருந்து வெளியேறச் செய்ததென்ன? நாங்கள் பாலைவனத்தில் சாகும்படிதானோ? இவ்விடத்தில் அப்பமுமில்லை, தண்ணீருமில்லை. இந்த அற்ப உணவு எங்கள் மனத்துக்கு வெறுப்பைத் தருகிறது" என்றார்கள்.

அப்பொழுது ஆண்டவர் கொள்ளிவாய்ப் பாம்புகளை அவர்களிடையே அனுப்பினார். பலர் கடியுண்டு சாவதைக்கண்டு, மக்கள் மோயீசனிடம் போய், "நாங்கள் கடவுளுக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதனால் பாவிகளானோம். பாம்புகள் எங்களை விட்டு நீங்கும்படி மன்றாட வேண்டும்" என்றார்கள். மோயீசன் அவர்களுக்காக வேண்டிக்கொள்ள,

ஆண்டவர் அவரை நோக்கி, "வெண்கலத்தால் ஒரு பாம்பின் உருவம் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கி வை. கடியுண்டவன் அதை உற்று நோக்கினால் உயிர் பிழைப்பான்" என்று திருவுளம்பற்றினார்; அவ்வாறே மோயீசன் வெண்கலப் பாம்பைச் செய்து அதை ஒரு கம்பத்தில் கட்டித் தூக்க, கடியுண்டவர்கள் அதைப் பார்த்து நலமடைந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 101 : 1-2. 15-17. 18-20 (பல்லவி: 1)

பல்லவி: **ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்; என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.**

1 ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும் : என் கூக்குரல் உம்
மிடம் வருவதாக.
2 இடுக்கண் உற்ற நாளில் உமது முகத்தை என்னிடமிருந்து மறைத்துக்
கொள்ளாதேயும் : என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தருளும்; உம்மைக்
கூவியழைக்கும்போது விரைவாக என் வேண்டுதலைக் கேட்டருளும்.

பல்லவி

15 ஆண்டவரே, புற இனத்தார் உமது பெயரைக் கேட்டு அச்சம் கொள்வர் :
மாநிலத்து அரசர்கள் அனைவரும் உமது மாட்சிமை கண்டு மருள்வர்.
16 ஆண்டவர் சீயோனை மீளவும் எழுப்பும்போது, தம் மாட்சிமையில் அவர்
விளங்கும்போது,
17 எளியோர் செய்யும் செபத்தைத் தள்ளாமல் செவியேற்பார்: அவர்களு
டைய வேண்டுதலைப் புறக்கணியார்.

பல்லவி

18 பின்வரும் சந்ததிக்கென இதெல்லாம் எழுதப்படட்டும்: உருவாகி வரும்
மக்கள் ஆண்டவரைப் புகழ்வார்களாக.
19 சிறைப் பட்டவர்களின் புலம்புதல்களைக் கேட்கவும், சாவுக்கென குறிக்கப்
20 பட்டவர்களை விடுவிக்கவும், உன்னதங்களிலுள்ள தம் திருத்தலத்தினின்று
ஆண்டவர் தம் பார்வையைத் திருப்பினார்: வானினின்று வையகத்தை
நோக்கினார்.

பல்லவி

### நற்செய்திக்கு முன் வசனம்

விதை கடவுளின் வார்த்தை; விதைப்பவரோ கிறிஸ்து; இவரைக் கண்டுகொள்கிற அனைவரும் என்றென்றும் நிலைத்திருப்பர்.

## நற்செய்தி வாசகம்

***மனுமகனை நீங்கள் உயர்த்திய பின்பு, நானே இருக்கிறேன் என்பதை அறிந்து கொள்வீர்கள்.***

✠ ***அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8 : 21–30***

*அக்காலத்தில் :*

*யேசு பரிசேயர்களை நோக்கி, "நான் செல்லுகிறேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால், உங்கள் பாவத்தில் மடிவீர்கள். நான் செல்லுமிடத்திற்கு உங்களால் வரமுடியாது" என்றார். யூதர்களோ, 'நான் செல்லுமிடத்திற்கு உங்களால் வரமுடியாது' என்று சொல்லுகிறானே, 'இவன் என்ன, தற்கொலை செய்துகொள்ளப்போகிறானோ? என்றனர். அவரோ "நீங்கள் மண்ணைச் சார்ந்தவர்கள்; நானோ விண்ணைச் சார்ந்தவன். நீங்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள், நானோ இவ்வுலகைச் சார்ந்தவனல்லேன். ஆகையால்தான் உங்கள் பாவங்களிலே மடிவீர்கள் என்று நான் கூறினேன். நானே இருக்கிறேன் என்று நீங்கள் விசுவசிக்காவிடில் உங்கள் பாவங்களிலே மடிவீர்கள்" என்றார்.*

*அவர்களோ, "நீர் யாராயிருக்கிறீர்?" என, யேசு, "நான் யாரென்று உங்களுக்குத் தொடக்கமுதல் சொல்லிவந்தேனோ, அவர்தான் நான். உங்களைப்பற்றிப் பேசவும் தீர்ப்பிடவும் பல காரியங்கள் உள்ளன. ஆனால், என்னை அனுப்பியவர் உண்மையானவர். நான் அவரிடமிருந்து கேட்டவற்றையே உலகிற்கு எடுத்துச் சொல்கிறேன்" என்றார். இப்படிச் சொன்னதில் அவர் தம் தந்தையைக் குறிப்பிட்டார் என்று அவர்கள் உணரவில்லை.*

*மேலும் யேசு அவர்களை நோக்கி, "மனுமகனை நீங்கள் உயர்த்திய பின்பு நானே இருக்கிறேன். நானாகவே எதையும் செய்வதில்லை. என் தந்தை எனக்குக் கற்பித்ததையே நான் எடுத்துச் சொல்லுகிறேன், என்று அறிந்து கொள்வீர்கள் என்னை அனுப்பினவர் என்னோடு இருக்கிறார். அவர் என்னைத் தனியே விட்டுவிடவில்லை. அவருக்கு உகந்ததையே எப்பொழுதும் செய்கிறேன்" என்றார்.*

*அவர் இவற்றைச் சொன்னபோது, பலர் அவரில் விசுவாசங் கொண்டனர்.*

*இது ஆண்டவரின் அருள்வாக்கு.*

# புதன்

## முதல் வாசகம்

[illegible]

[illegible] [illegible]

[illegible]

“[illegible]”

[illegible]

[illegible]

அப்போது மன்னன் நபுக்கோதனசார் வியப்புற்று விரைந்தெழுந்தான்; தன் அமைச்சர்களை நோக்கி, "மூன்று மனிதர்களையல்லவா கட்டி நெருப்பின் நடுவில் எறிந்தோம்?" என்று வினவினான். அதற்கு அவர்கள், "ஆம் அரசே" என்று விடை தந்தனர். அதற்கு அவன், "கட்டவிழ்க்கப் பட்டவர்களாய் நெருப்பின் நடுவில் இதோ, நான்கு பேர் உலாவுகிறதை நான் காண்கிறேனே! அவர்களுக்கோ ஒருவகைத் துன்பமும் நேரவில்லை; மேலும் நான்காம் பேர்வழியின் சாயல் உம்பர் உலகத்தார் சாயல்போல் இருக்கிறதே!" என்றான்.

அப்போது நபுக்கோதனசார் உரத்த குரலில் கூவிச் சொன்னான்: "சித்ராக், மிசாக், அபேத்நாகோ ஆகியவர்களின் கடவுள் புகழப்படுவாராக! தங்கள் கடவுளைத்தவிர வேறெந்தக் கடவுளையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, அரசனது கட்டளையைப் பொருட்படுத்தாமல் தங்கள் உடலைக் கையளித்த தம்முடைய ஊழியர்களை அவர் தம் தூதரை அனுப்பி மீட்டார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

தானி. 3 : 52, 53, 54, 55, 56

52 எங்கள் தந்தையரின் இறைவனாகிய ஆண்டவரே, நீர் புகழ் பெறுவீராக!
உமது மகிமையுள்ள திருப்பெயர் புகழப்படுவதாக!
பல்லவி என்றென்றும் போற்றப்படவும் உயர்த்தப்படவும் கடவதாக!

53 உமது மகிமையுள்ள பரிசுத்த கோயிலில் நீர் புகழப்படுவீராக!
பல்லவி என்றென்றும், எல்லார்க்கும்மேலாக வாழ்த்தும் மகிமையும் பெறுவீராக!

54 உமது அரசின் அரியணையின்மேலே நீர் புகழப்படுவீராக!
பல்லவி என்றென்றும் எல்லார்க்கும் மேலாக வாழ்த்தும் உயர்ச்சியும் பெறுவீராக!

55 கெருபீம்கள்மேல் அமர்ந்துபாதாளத்தைக் காண்கிறவரே, நீர் புகழப் படுவீராக!
பல்லவி என்றென்றும் எல்லார்க்கும் மேலாகப் போற்றுதலும் உயர்ச்சியும் பெறுவீராக!

56 வானகத்திலே நீர் புகழப்படுவீராக!
பல்லவி என்றென்றும் வாழ்த்தும் மகிமையும் பெறுவீராக!

நற்செய்திக்கு முன் வசனம் லூக். 8:15 காண்

வார்த்தையைக் கேட்டுச் சீரிய செம்மனத்தில் பதித்து,
நிலையாயிருந்து பலன் அளிப்பவர் பேறுபெற்றோர்.

## நற்செய்தி வாசகம்

**மகன் உங்களுக்கு விடுதலையளித்தால்தான்
உங்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8 : 31-42

அக்காலத்தில் :

யேசு தம்மை விசுவசித்த யூதர்களுக்கு, "நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருப்பீர்களாகில் உண்மையாகவே என் சீடராயிருப்பீர்கள். உண்மையை அறிவீர்கள். அவ்வுண்மையும் உங்களுக்கு விடுதலையளிக்கும்" என்றார். அவர்கள், "ஆபிரகாமின் வழிவந்தவர்கள் நாங்கள்; ஒருபோதும் யாருக்கும் அடிமைகளாயிருந்ததில்லை; அப்படியிருக்க, 'நீங்கள் விடுதலை பெறுவீர்கள்' என்று நீர் சொல்வதெப்படி?" என்று கேட்டனர். யேசுவோ மறுமொழியாக, "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : பாவஞ்செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை. வீட்டில் அடிமைக்கு நிலையான இடமில்லை. மகனுக்கோ எப்பொழுதும் இடமுண்டு. எனவே, மகன் உங்களுக்கு விடுதலையளித்தால்தான், உங்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கும். நீங்கள் ஆபிரகாமின் வழிவந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் என் வார்த்தை உங்களில் இடம் பெறாததால், நீங்கள் என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள். நான் என் தந்தையிடம் பார்த்ததைச் சொல்லுகிறேன். நீங்களோ உங்கள் தந்தையிடம் கேட்டதைச் செய்கிறீர்கள்" என்றார்.

அப்பொழுது அவர்கள், "ஆபிரகாமே எங்கள் தந்தை" என்றனர். யேசுவோ, "நீங்கள் ஆபிரகாமின் மக்களாயிருந்தால், ஆபிரகாமின் செயல்களைச் செய்வீர்கள். ஆனால் கடவுள் எனக்குக் கூறிய உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்த என்னை இப்பொழுது கொல்லத் தேடுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே! நீங்கள் செய்து வருவதோ உங்கள் தந்தையின் செயல்கள்தான்" என்றார். அவர்கள், "நாங்கள் வேசித்தனத்தில் பிறந்தவர்கள் அல்ல. எங்களுக்கு ஒரே தந்தை உண்டு. கடவுளே அவர் என்றனர்."

யேசுவோ அவர்களை நோக்கி, "கடவுள் உங்கள் தந்தையாயிருப்பின் எனக்கு அன்பு செய்வீர்கள்; ஏனென்றால், நான் கடவுளிடமிருந்து புறப்பட்டு வந்துள்ளேன். நானாக வரவில்லை. அவர்தான் என்னை அனுப்பினார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

***நீ திரளான மக்கள் இனங்களுக்குத் தந்தையாவாய்.***

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்

*17: 3-9*

*அந்நாட்களில் :*

ஆபிராம் முகம்குப்புற விழுந்து தொழுதான். அப்பொழுது கடவுள் அவனைப் பார்த்து : "நாம் சுயம்பு. இதோ, நம் உடன்படிக்கை உன்னுடன் இருக்கும். நீ திரளான மக்களுக்குத் தந்தையாவாய். இன்று முதல் உன் பெயர் ஆபிராம் அன்று, ஆபிரகாம் என்றே அழைக்கப்படும். ஏனென்றால், அநேக மக்களுக்கு உன்னைத் தந்தையாக ஏற்படுத்தினோம். நாம் உன்னைப் பெருந்திரளாய் விருத்தியடையச் செய்து பல இனத்தாருக்கும் உன்னைத் தந்தையாக்குவோம். அரசர்களும் உன்னிடமிருந்து தோன்றுவார்கள்.

நமக்கும் உனக்கும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நம் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாய் நிறுவுவோம். அதனாலே உனக்கும் உனக்குப் பின் உன் சந்ததியார்களுக்கும் நாம் கடவுளாக இருப்போம். அன்றியும், உனக்கு அன்னிய நாடாகிய இந்தக் கானான் நாடு முழுவதையும் உனக்கும் உன் சந்ததியாருக்கும் நித்திய உரிமையாகக் கொடுத்து, நாம் அவர்களுக்குக் கடவுளாக இருப்போம்" என்றார்.

மீண்டும் கடவுள் ஆபிரகாமை நோக்கி, "ஆதலால், நமது உடன்படிக்கையை நீயும் உனக்குப் பின் உன் சந்ததியாரும் தலைமுறை தலைமுறையாய்க் கடைப்பிடித்து வருவீர்களாக," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 104 : 4-5, 6-7, 8-9. (பல்லவி: 8a)

பல்லவி : **தம் உடன் படிக்கையை ஆண்டவர் என்றென்றும் நினைவு கூர்கின்றார்.**

ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவரது திருமுகத்தை
4 என்றும் தேடுங்கள்.
அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள் : அவருடைய புது
5 மைகளையும் அவர் உரைத்த நீதித்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள். பல்லவி

ஆண்டவருடைய ஊழியராகிய ஆபிரகாமின் வழித்தோன்றல்களே,
6 அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகிய யாக்கோபின் மக்களே,
ஆண்டவரே நம் கடவுள் : அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது.
7
பல்லவி

நம் உடன்படிக்கையை அவர் என்றென்றும் நினைவு கூர்கின்றார் : ஆயிர
8 மாயிரம் தலைமுறைக்கும் தாம் அளித்த வாக்குறுதியை அவர் நினைவு
கூர்கின்றார்.
ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையை அவர் மறக்கவில்லை :
9 ஈசாக்குக்கு அவர் இட்ட ஆணையை அவர் மறக்கவில்லை. பல்லவி

## நற்செய்திக்கு முன் வசனம்

சங். 94 : 8ab

இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் ;
ஆண்டவர் தம் குரலைக் கேட்பீர்களாக.

## நற்செய்தி வாசகம்

**உங்கள் தந்தை ஆபிரகாம் எனது நாளைக் காணவேண்டுமென்று ஆவலோடு ஆசித்தார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 8:51-59

அக்காலத்தில் :

யேசு யூதர்களை நோக்கி, "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : ஒருவன் என் வார்த்தையைக் கடைப்பிடிப்பானாகில் என்றுமே சாகான்" என்றார்.

எனவே, யூதர்கள், "நீ பேய்பிடித்தவன் என்பது இப்பொழுது தெளிவாகிறது. ஆபிரகாம் இறந்தார்; இறைவாக்கினர்களும் அவ்வாறே இறந்தனர். நீயோ, 'ஒருவன் என் வார்த்தையைக் கடைப்பிடிப்பானுகில் என்றுமே சாவுக்குள்ளாகமாட்டான்' என்று சொல்லுகிருய். நம் தந்தை ஆபிரகாமிலும் நீ பெரியவனே? அவர் இறந்தார். இறைவாக்கினர்களும் இறந்தனர். உன்னை யாரென நினைத்துக்கொள்கிருய்?" என்று வினவினர்.

அதற்கு யேசு, "நான் என்னையே மகிமைப்படுத்தினுல் என் மகிமை வீண் மகிமை. என் தந்தையே என்னை மகிமைப்படுத்துகிறவர். அவரையே நீங்கள் நம் கடவுள் என்று சொல்லுகிறீர்கள். எனினும் நீங்கள் அவரை அறியவில்லை, நானே அவரை அறிவேன். அவரை நான் அறியேன் என்ருல் உங்களைப்போல நானும் பொய்யனுவேன். ஆனுல், நான் அவரை அறிவேன்; அவருடைய வார்த்தையையும் கடைப்பிடிக்கிறேன். உங்கள் தந்தை ஆபிரகாம் எனது நாளைக் காட்சியில் கண்டு களிகூர்ந்தார்; அந்நாளைக் கண்டார்; பெருமகிழ்ச்சி கொண்டார்" என்ருர்.

யூதர்கள், "உனக்கு இன்னும் ஐம்பது வயதுகூட ஆகவில்லை; நீ ஆபிரகாமைப் பார்த்திருக்கிருயோ?" என்றனர். யேசுவோ அவர்களிடம், "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பே நான் இருக்கிறேன்" என்ருர். அதைக்கேட்டு அவர்கள் அவர்மேல் எறியக் கல் எடுத்தனர். யேசுவோ மறைவாக நழுவிக் கோயிலிலிருந்து வெளியேறினுர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

**ஆண்டவர் வலிமை மிகுந்த போர் வீரனைப்போல் என்னோடு இருக்கின்ருர்.**

எரெமியாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *20:10-13*

என்னைப் பலரும் பழித்துரைப்பதைக் கேட்கிறேன்; எப்பக்கமும் திகில் இருக்கிறது! "அவன்மேல் பழி சுமத்துங்கள், வாருங்கள் அவன்மேல் பழிசுமத்துவோம்" என்கிருர்கள். என்னோடு நெருங்கிப் பழகிய என் நண்பர்கள் கூட, என் வீழ்ச்சியை எதிர்பார்க்கிருர்கள்: "ஒரு வேளை அவன் ஏமாந்து போவான், அப்பொழுது நாம் அவனை மேற்கொள்வோம், அவன்மேல் பழிதீர்த்துக் கொள்வோம்" என்கிருர்கள்.

ஆனால் ஆண்டவர் வலிமை மிகுந்த போர்வீரனைப்போல் என்னோடு இருக்கின்றார்; ஆதலால் என்னைத் துன்புறுத்துகிறவர்கள் இடறி விழுவார்கள்; என்னை அவர்கள் மேற்கொள்ள மாட்டார்கள். அவர்கள் மிகவும் வெட்கி நாணுவார்கள்; ஏனெனில் அவர்கள் வெற்றிபெற மாட்டார்கள்; அவர்கள் அடைந்த இழிவு என்றென்றும் நீடிக்கும்; ஒருகாலும் அது மறக்கப்படாது. சேனைகளின் ஆண்டவரே, நீதிமானைச் சோதிக்கிறவரே, உள்ளத்தையும் இதயத்தையும் பார்க்கிறவரே, நீர் அவர்களைப் பழி வாங்குவதை நான் பார்க்க வேண்டும்; ஏனெனில் உம்மிடந்தான் என் வழக்கைச் சொன்னேன்.

ஆண்டவரைப் பாடிப் புகழுங்கள்; ஆண்டவரை வாழ்த்திப் போற்றுங்கள்; ஏனெனில் ஏழையின் உயிரைத் தீயோர் கையினின்று விடுவித்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 17 : 1-2a. 3. 4-5. 6 (பல்லவி : 6காண்)*

பல்லவி: என் துன்பவேளையில் நான் ஆண்டவரை அழைத்தேன்; அவர் என்னைக் கேட்டருளினார்.

1 என் ஆற்றலாய் உள்ளவரே, ஆண்டவரே, உமக்கு நான் அன்பு செய்கிறேன்.
2 ஆண்டவரே நீரே என் கற்பாறை. என் அரண், என் மீட்பர். பல்லவி

என் இறைவனே, நான் அடைக்கலம் புகுவதற்கு ஏற்ற கோட்டையாக உள்ளவரே, என் கேடயமும் எனக்கு மீட்பளிக்கும் வலிமையும் என் அடைக்கலமுமாக உள்ளவரே!
3 புகழ்ச்சிக்குரிய ஆண்டவரை நான் கூவி அழைப்பேன்: என் எதிரிகளினின்று மீட்படைவேன். பல்லவி

4 சாகடிக்கக்கூடிய பெருவெள்ளம் என்னைச் சூழ்ந்துகொண்டது: ஆபத்துக்குரிய வெள்ளம் என்னை அச்சத்தில் ஆழ்த்தியது.
5 கீழுலகின் தளைகள் என்னைப் பிணைத்துக்கொண்டன: சாவின் கண்ணிகளுள் நான் விழப்போனேன். பல்லவி

6 என் துன்ப வேளையில் நான் ஆண்டவரை அழைத்தேன்; என் இறைவனை நோக்கிக் கூக்குரலிட்டேன்: தம் ஆலயத்தில் நின்று என் குரலை அவர் கேட்டருளினார்: என் கூக்குரல் அவர் செவியில் விழுந்தது. பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம் அரு. 6 63b. 68b

ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்: முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.

## நற்செய்தி வாசகம்

***அவர்கள் அவரைப் பிடிக்கப் பார்த்தார்கள்: அவரோ அவர்கள் கையிலிருந்து தப்பிச் சென்றார்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 31-42

அக்காலத்தில்:

யூதர் யேசுவைக் கல்லால் எறியும்படி கல் எடுத்தனர். யேசுவோ, "தந்தையின் ஆற்றலால் மேலான செயல்கள் பல உங்களுக்குச் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றில் எச்செயலுக்காக என்னைக் கல்லால் எறியப் போகிறீர்கள்?" என்று கேட்டார். யூதர்கள் மறுமொழியாக, "மேலான செயல்களுக்காக நாங்கள் உன்னைக் கல்லால் எறியவில்லை. பழிச்சொல் சொன்னதற்காகவே அப்படிச்செய்கிறோம். ஏனெனில், நீ மனிதனாயிருந்தும் உன்னைக் கடவுளாக்கிக்கொள்கிறாய்" என்றார்கள்.

அதற்கு யேசு "நீங்கள் தேவர்கள் என நான் கூறினேன்" என்று உங்கள் சட்டத்தில் எழுதியுள்ளதன்றோ? எனவே, கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டவர்களைத் தேவர்கள் என்று அச்சட்டம் கூறுகிறது. இனி மறைநூல் ஒழிந்துபோக முடியாதாயின், தந்தையால் அர்ச்சிக்கப்பெற்று உலகிற்கு அனுப்பப்பட்ட நான், என்னைக் 'கடவுளின் மகன்' என்று சொல்லிக்கொண்டதற்காக, 'தூஷணம் சொல்லுகிறாய்' என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தையின் செயல்களைச் செய்யாவிடில், நீங்கள் என்னை விசுவசிக்கவேண்டாம்: ஆனால் நான் அவற்றைச் செய்தால் என்னை விசுவசிக்காவிட்டாலும், என் செயல்களையாவது நம்புங்கள். இங்ஙனம், தந்தை என்னிலும், நான் தந்தையிலும் இருக்கிறோம் என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள்: அவ்வறிவில் நிலைகொள்வீர்கள்" என்றார். இதைக்கேட்டு அவர்கள் அவரைப் பிடிக்கப்பார்த்தனர். அவரோ அவர்கள் கையிலிருந்து தப்பிச்சென்றார். யேசு மீண்டும் யோர்தானைக் கடந்து, அருளப்பர் முதலில் ஞானஸ்நானம் கொடுத்து வந்த இடத்திற்குச் சென்றார். அவர் அங்குத் தங்கியிருந்தபோது பலர் அவரிடம் வந்தனர். அவர்கள், "அருளப்பர் ஓர் அருங்குறியும் செய்ய

ஆசீர்வதித்துப் பலுகச் செய்வோம்; அவர்கள் நடுவில் நமது பரிசுத்த இடத்தை என்றென்றும் நிலைக்கச் செய்வோம். நம் இருப்பிடம் அவர்களுடன் இருக்கும்; நாம் அவர்கள் கடவுளாக இருப்போம்; அவர்கள் நம் மக்களாய் இருப்பர். நமது பரிசுத்த இடம் அவர்கள் நடுவில் என்றென்றும் நிலைக்கும்போது, ஆண்டவராகிய நாமே இஸ்ராயேலைப் பரிசுத்தப் படுத்துபவர் என்பதைப் புறவினத்தார் அறிந்துகொள்வர்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*எரேமி. 31 : 10. 11-12ab. 13. (பல்லவி: 10b)*

பல்லவி: **ஆயன் தன் மந்தையைக் காப்பதுபோல், ஆண்டவர் நம்மைக் காப்பார்.**

10 புறவினத்தாரே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள்: கேட்டுத் தொலைவிலுள்ள தீவுகளுக்கு அறிவியுங்கள்:
இஸ்ராயேலைச் சிதறடித்தவர் அவர்களைச் சேர்ப்பார், ஆயன் மந்தையைக் காப்பதுபோல் அவர்களைக் காப்பார் என்று சொல்லுங்கள். பல்லவி

11 ஏனெனில் ஆண்டவர் யாக்கோபை மீட்டார்: வலியவன் கையினின்றும் அவனை விடுவித்தார்.

12 அவர்கள் வந்து, சீயோனின் உச்சியில் பாடிப் போற்றுவார்கள், ஆண்டவர் அவர்களுக்கு அளிக்கும் நன்மைகளை நாடிக் கூட்டமாய் ஓடி வருவார்கள். பல்லவி

13 அப்போது கன்னிப் பெண்கள் நாட்டியமாடிக் களிப்பார்கள்; இளைஞரும் முதியோரும் அவ்வாறே மகிழ்வார்கள்; அவர்களுடைய அழுகையை அக்களிப்பாக மாற்றுவோம்; அவர்களைத் தேற்றித் துயரத்தைப் போக்கி, அவர்களை மகிழச் செய்வோம். பல்லவி

## நற்செய்திக்கு முன் வசனம்

*எசேக் 18 : 31*

ஆண்டவர் கூறுகிறார்: உங்கள் துரோகங்களையெல்லாம் உங்களுக்குத் தூரமாக எறிந்து விடுங்கள்; புதிய உள்ளத்தையும் புதிய மனத்தையும் உங்களுக்கெனப் படைத்துக் கொள்ளுங்கள்.

## நற்செய்தி வாசகம்

**சிதறிக் கிடந்த கடவுளின் மக்களை ஒன்றாய்ச் சேர்ப்பதற்காக.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

11 : 45-57

அக்காலத்தில்:

மரியாளிடமும் மார்த்தாளிடமும் வந்திருந்த யூதர் பலர் யேசு செய்ததைக் கண்டு அவரில் விசுவாசம் கொண்டனர். சிலரோ பரிசேயர்களிடம் சென்று யேசு செய்ததெல்லாம் அறிவித்தனர். தலைமை குருக்களும் பரிசேயர்களும் தலைமைச் சங்கத்தைக் கூட்டி, "இந்த ஆள் பல அருங்குறிகளைச் செய்கிறானே, என்ன செய்யலாம்? இவனை இப்படியே விட்டுவிட்டால் எல்லாரும் இவனில் விசுவாசம்கொள்வர். உரோமையர் வந்து நம் புனித இடத்தையும் நம் இனத்தையும் அழித்து விடுவார்களே" என்றனர். அவ்வாண்டின் தலைமைக் குருவாயிருந்த கைப்பாஸ், சங்கத்தில் எழுந்து மற்றவர்களை நோக்கி, "உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. நம் இனம் முழுவதுமே அழிந்து போகாதபடி ஒருவன் மட்டும் மக்களுக்காக இறப்பது நலம் என்பதை நீங்கள் உணரவில்லையே" என்றார்.

இதை அவர் தாமாகச் சொல்லவில்லை. அவ்வாண்டின் தலைமைக் குருவாயிருந்தபடியால், யேசு தம் இனத்தினருக்காக இறக்கப்போகிறார் என்பதைக் குறிப்பிட்டு இறைவாக்காகக் கூறினார். உள்ளபடி அவர் இறப்பது தம் இனத்தினருக்காக மட்டுமன்று, சிதறிக் கிடந்த கடவுளின் மக்களை ஒன்றாய்ச் சேர்ப்பதற்காகவுமே. அவரைக் கொல்ல அன்றே முடிவு செய்தனர்.

அது முதல் யேசு யூதர்களிடையே வெளிப்படையாக நடமாடவில்லை. பாலைவனத்திற்கு அருகிலுள்ள பகுதிக்குப் போய், எப்பிராயீம் என்ற ஊரில் தம் சீடருடன் தங்கியிருந்தார்.

யூதர்களுடைய பாஸ்கா விழா அண்மையிலிருந்தது. பாஸ்காவுக்கு முன்னே, பலர் துப்புரவுச் சடங்கு செய்வதற்காக நாட்டுப்புறங்களிலிருந்து யெருசலேமுக்குப் போனார்கள். அங்கே யேசுவைத் தேடினார்கள். "அவர் திருவிழாவுக்கு வருவாரா? வரமாட்டாரா? என்ன நினைக்கிறீர்கள்?" என்று கோயிலில் கூடிவந்தவர்களிடையே பேச்சு நடந்தது. தலைமைக் குருக்களும் பரிசேயரும் அவரைப் பிடிக்க விரும்பி, அவர் இருக்குமிடம் யாருக்காவது தெரிந்தால், தங்களிடம் வந்து அறிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# நற்செய்திக்கு முன் வசனங்கள்

## தவக் கால வார நாட்களுக்கானவை

1

சங். 50: 10a, 12a

தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்;
உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்.

2

சங். 94:8ab

இன்று, உங்கள் இதயங்களைக் கடினப்படுத்தாதீர்கள்;
மாறாக, ஆண்டவர் தம் குரலைக் கேட்பீர்களாக.

3

சங். 129:5.7

ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன், அவரது வாக்குறுதியில் நம்பிக்கை கொள்கிறேன்;
ஏனெனில், அவரிடம் இரக்கம் உள்ளது, மீட்புத்துணை பொங்கி வழிகின்றது.

4

எசேக் 18:31

ஆண்டவர் கூறுகிறார்: உங்கள் துரோகங்களையெல்லாம் உங்களுக்குத் தூரமாக எறிந்து விடுங்கள்;
புதிய உள்ளத்தையும் புதிய மனத்தையும் உங்களுக்கெனப் படைத்துக் கொள்ளுங்கள்.

5

எசேக. 33-11

ஆண்டவர் கூறுகிறார்: தீயவன் சாகவேண்டும் என்பதன்று,
அவன் மனந்திரும்பி வாழவேண்டும் என்பதே நம் விருப்பம்.

6

யோவேல் 2 : 12-13

இப்பொழுதாவது உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்;
ஏனெனில், அருளும் இரக்கமும் உள்ளவர் நாம், என்கிறார் ஆண்டவர்.

7 ஆமோஸ் 5:14

தீமையையல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வீர்கள்;
ஆண்டவரும் உங்களோடு இருப்பார்.

8 மத். 4:4b.

மனிதன் அப்பத்தினுல் மட்டும் அன்று,
கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினுலும் உயிர்வாழ்கிருன்.

9 மத். 4:17

மனந்திரும்புங்கள்;
விண்ணரசு நெருங்கிவிட்டது, என்கிருர் ஆண்டவர்.

10 லூக். 8:15 காண்

கடவுளின் வார்த்தையைக் கேட்டுச் சீரிய செம்மனத்தில் பதித்து,
நிலையாயிருந்து பலன் அளிப்பவர் பேறுபெற்ருேர்.

11 லூக். 15:18

எழுந்து என் தந்தையிடம் போவேன்;
அப்பா, வானகத்திற்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன் என்று அவரிடம் சொல்வேன்.

12 அரு. 3:16

தம் ஒரேபேருன மகனையே அளிக்குமளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்;
அந்த மகனில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வு பெறுவர்.

13 அரு. 6:63b. 68b.

ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்;
முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன.

14 அரு. 8:12b.

நானே உலகின் ஒளி, என்கிருர் ஆண்டவர்;
என்னைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்.

15 அரு. 11:25a. 26

ஆண்டவர் கூறுகிறார்: உயிர்ப்பும் உயிரும் நானே;
என்னில் விசுவாசம் கொள்பவன் ஒருபோதும் சாகான்.

16 2 கொரிந். 6:2b

இதோ, ஏற்புடைய காலம் இதுவே;
இதோ, மீட்பின் நாள் இதுவே.

17

விதை கடவுளின் வார்த்தை; விதைப்பவரோ கிறிஸ்து;
அவரைக் கண்டுகொள்கிற அனைவரும் என்றென்றும் நிலைத்திருப்பார்.

# பரிசுத்த வாரம்

## குருத்து ஞாயிறு

(திருப்பாடுகளின் ஞாயிறு)

## குருத்தோலைப் பவனி

நற்செய்தி வாசகம்

**முதல் ஆண்டு.**

**ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21:1-11

எருசலேமை நெருங்கி ஒலிவ மலையருகில் இருந்த பெத்பகேக்கு வந்தபொழுது யேசு, சீடர் இருவரை அழைத்து, "உங்களுக்கு எதிரே இருக்கும் ஊருக்குச் செல்லுங்கள். சென்றதும் அங்கே ஒரு கழுதை கட்டியிருப்பதையும், அதனுடன் குட்டியையும் காண்பீர்கள். அவிழ்த்து என்னிடம் கொண்டுவாருங்கள். யாராவது உங்களிடம் ஏதேனும் சொன்னால், இவை ஆண்டவருக்குத் தேவை. விரைவில் இவற்றைத் திருப்பி அனுப்பிவிடுவார் எனச் சொல்லுங்கள்" என்று சொல்லியனுப்

பிஞர். 'இதோ உன்னுடைய அரசர் கழுதையின் மேலும், பொதிமிருகக் குட்டியின் மேலும் அமர்ந்து சாந்தமாக உன்னிடம் வருகிருர் எனச் சீயோன் மகளுக்குச் சொல்லுங்கள்' என்று இறைவாக்கினர் கூறியது நிறைவேறுவதற்கே இதெல்லாம் நிகழ்ந்தது.

சீடர் சென்று யேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்தனர். கழுதையையும் குட்டியையும் ஓட்டிவந்து தம் போர்வைகளை அவற்றின் மேல் விரித்து, அவரை மேலே அமரச் செய்தனர். பெருங் கூட்டமான மக்கள் தங்கள் போர்வைகளை வழியில் விரித்தனர். சிலர் மரங்களிலிருந்து கிளைகளை வெட்டி வழியில் பரப்பினர். கூட்டமாக முன்னே சென்றவர் களும், பின்னே வந்தவர்களும், "தாவீதின் மகனுக்கு ஓசான்ஞ, ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி. உன்னதங்களில் ஓசான்ஞ" என்று ஆர்ப்பரித்தனர்.

யெருசலேமுக்குள் வந்தபொழுது நகர் முழுவதும் பரபரப்புற்று, "இவர் யார்?" என்று கேட்டது. மக்களோ, "இவர்தாம் கலிலேயாவின் நாசரேத்தூரிலிருந்து வந்த யேசு என்னும் இறைவாக்கினர்" என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## இரண்டாம் ஆண்டு

**ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *11:1-10*

யேசு யெருசலேமை அணுகி ஒலிவ மலைக்கு அருகில் இருந்த பெத்பகே, பெத்தானியா என்ற ஊர்களை அடுத்து வந்தபொழுது தம் சீடர்களுள் இருவரை அழைத்து, "உங்களுக்கு எதிரே இருக்கும் ஊருக்குப் போங்கள். அதில் நுழைந்தவுடன் இதுவரை யாரும் ஏருத கழுதைக் குட்டி ஒன்று கட்டியிருக்கக் காண்பீர்கள். அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள். 'என்ன செய்கிறீர்கள்?' என்று யாராவது உங்களைக் கேட்டால், 'இது ஆண்டவருக்குத் தேவை. உடனே திருப்பி இங்கே அனுப்பி விடுவார்' என்று கூறுங்கள்" எனச் சொல்லி அனுப்பினர்.

அவர்கள் சென்று தெருவில் ஒரு வாசலருகே கழுதைக்குட்டி யொன்று கட்டியிருக்கக் கண்டு, அதை அவிழ்த்தார்கள். அங்கே நின்றவர்களில் சிலர் அவர்களிடம், "என்ன செய்கிறீர்கள்? குட்டியை அவிழ்க்கிறீர்களே" என்ருர்கள். யேசு சொன்னபடி சீடர் சொல்லவே, அவர்கள் விட்டுவிட்டார்கள்.

குட்டியை யேசுவிடம் கொண்டுவந்து, தங்கள் போர்வைகளை அதன்மேல் போட, அவர் அதன்மேல் அமர்ந்தார். பலர் தங்கள் போர்வைகளை வழியில் விரித்தனர். வேறு சிலர் வெளிகளில் இலை தழைகளை வெட்டி வழியில் பரப்பினர். முன்னே சென்றவர்களும் பின்னே வந்தவர்களும், "ஓசான்ன, ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி. நம் தந்தையாம் தாவீதின் அரசு வருகிறது. அது வாழ்க. உன்னதங்களில் ஓசான்ன" என்று ஆர்ப்பரித்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

---

அல்லது

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

12 : 12-16

அக்காலத்தில்:

திருவிழாவுக்கு வந்திருந்த பெருங் கூட்டம் யேசு யெருசலேமுக்கு வருகிறார் எனக் கேள்வியுற்று, 'ஓசான்ன! ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி! இஸ்ராயேலின் அரசர் வாழி!' என்று ஆர்ப்பரித்து வரவேற்றனர். வழியிலிருந்த ஒரு கழுதைக் குட்டியின் மேல் யேசு அமர்ந்தார். இதைக் குறித்தே, 'சீயோன் மகளே, அஞ்சவேண்டாம். இதோ! உன் அரசர், கழுதைக் குட்டியின் மேல் ஏறி வருகிறார்' என்று எழுதியுள்ளது.

முதலில் அவருடைய சீடர் இதையெல்லாம் உணரவில்லை. யேசு மகிமை அடைந்தபொழுது, அவரைப்பற்றி இங்ஙனம் எழுதியிருந்ததென்றும், எழுதியபடியே அவருக்கு நடந்ததென்றும் நினைவுகூர்ந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## மூன்றும் ஆண்டு

**ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 19 : 28-40

அக்காலத்தில்:

யேசு யெருசலேமை நோக்கி அவர்களுக்கு முன்னுல் நடந்து போனுர். அவர் ஒலிவத் தோப்பு மலைக்கு அருகில் இருந்த பெத்பகே, பெத்தானியா என்ற ஊர்களை அடுத்து வந்தபோது, சீடருள் இருவரை அழைத்து, "எதிரே இருக்கும் ஊருக்குப் போங்கள். அதில் நுழையும்போது இதுவரை யாரும் ஏருத கழுதைக் குட்டி ஒன்று கட்டியிருக்கக் காண்பீர்கள். அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள். 'ஏன் அவிழ்க்கிறீர்கள்' என்று யாராவது உங்களைக் கேட்டால், அவனிடம் 'இது ஆண்டவருக்குத் தேவை' என்று கூறுங்கள்." எனச் சொல்லி அனுப்பினுர்.

அனுப்பப்பட்டவர்கள் சென்று, அவர் சொன்னபடியே கண்டனர். அவர்கள் கழுதைக் குட்டியை அவிழ்த்தபொழுது அதற்கு உரியவர்கள், "கழுதைக் குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்க, "இது ஆண்டவருக்குத் தேவை" என்றனர்.

அக்குட்டியை யேசுவிடம் கொண்டுவந்து, தங்கள் போர்வைகளை அதன் மேல் போட்டு, யேசுவை ஏறச் செய்தனர். அவர் செல்லும் போது வழியில் தங்கள் போர்வைகளை விரித்தனர். அவர் ஒலிவ மலைச்சாரலை நெருங்கியதும், சீடர் கூட்டமெல்லாம் தாங்கள் கண்ட புதுமைகள் அனைத்தையும்பற்றி மகிழ்ச்சியோடு, உரத்த குரலில், 'ஆண்டவர் பெயரால் அரசராக வருகிறவர் வாழி! வானகத்தில் அமைதியும் உன்னதங்களில் மகிமையும் உண்டாகுக' என்று கடவுளைப் புகழத் தொடங்கியது.

கூட்டத்திலிருந்த பரிசேயர் சிலர் அவரை நோக்கி, "போதகரே, உம்முடைய சீடர்களைக் கண்டியும்" என்றனர். அவர் மறுமொழியாக, 'இவர்கள் பேசாதிருந்தால், கற்களே கூவும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திருப்பலி

இந்த ஞாயிற்றுக் கிழமையில் தரப்பட்ட மூன்று வாசகங்களையும் வாசிப்பது நலம். ஆனால் ஆண்டவருடைய திருப்பாடுகளின் வரலாறு முக்கியமானதால், திருக்கூட்டத்தின் நிலைக்கு ஏற்றபடி, குருவானவர் ஒரு வாசகத்தை மட்டும் வாசிக்கலாம். அல்லது, தேவையானால் இரு வாசகங்களையும் விட்டுவிட்டு திருப்பாடுகளின் வரலாற்றை மட்டும் வாசிக்கலாம். மேலும் தேவையானால், அதன் குறுகிய வாசகத்தைப் பயன்படுத்தலாம்.

மேற்கூறியவை மக்களோடு சேர்ந்து நிறைவேற்றப்படும் திருப்பலிக்கே பொருந்தும்.

## முதல் வாசகம்

***நிந்தை கூறுவோரிடமிருந்து என் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை; அதற்காக வெட்கப்படேன் என்பது எனக்குத் தெரியும்.***

**இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம்** 50:4-7

களைத்தவனை வார்த்தையால் ஊக்குவிக்கும்படி, கற்றதை உணர்த்தும் நாவை ஆண்டவர் எனக்களித்தார்; நாடோறும் காலையில் என்னை எழுப்புகிறார்; எழுப்பி, ஆசானுக்குச் செவி மடுப்பதுபோல் அவருக்குச் செவிமடுக்கும்படி என் செவிப்புலனைத் தூண்டுகிறார். கடவுளாகிய ஆண்டவர் என் காதுகளைத் திறந்தார்.

நானோ அவரை எதிர்த்துப் பேசவில்லை, அவரை விட்டுப் பின்வாங்கிப் போகவில்லை. துன்புறுத்துகிறவர்களுக்கு என் உடலைக் கையளித்தேன்; தாடியைப் பிய்க்கிறவர்களுக்கு என் கன்னங்களைக் காட்டினேன்; நிந்தை கூறுவோர்க்கும், காறி உமிழ்வோர்க்கும், என் முகத்தை மறைத்துக் கொள்ளவில்லை. கடவுளாகிய ஆண்டவர் எனக்குத் துணை நிற்கிறார், ஆதலால் நான் கலக்கம் கொள்ளேன்; ஆதலால் என் முகத்தைக் கருங்கல்போல வைத்துக் கொண்டேன், அதற்காக வெட்கப்படேன் என்பது எனக்குத் தெரியும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 21 : 7-8. 16-17a. 18-19. 22-23 (பல்லவி: 1a)

பல்லவி: **இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்.**

7 என்னைப் பார்ப்போர் எல்லாரும் என்னை ஏளனம் செய்கின்றனர்:
உதட்டைப் பிதுக்கித் தலையை அசைக்கின்றனர்.

8 'ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்தானே, அவர் மீட்கட்டும்: அவருக்கு
இவன்மீது பிரியமிருந்தால் இவனை விடுவிக்கட்டும்' என்றார்கள்.
பல்லவி

16 ஏனெனில் பல நாய்கள் என்னைச் சூழ்ந்துகொண்டன; பொல்லாதவர்கள்
கூட்டம் என்னை வளைத்துக் கொண்டது: என் கைகளையும் கால்களையும்
துளைத்தார்கள்.

17 என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணிவிட முடியும்.
பல்லவி

18 என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள்: என் உடைமீது
சீட்டுப் போடுகிறார்கள்.

19 ஆனால், நீரோ ஆண்டவரே, என்னை விட்டுத் தொலைவில் போய் விடா
தேயும்: எனக்குத் துணையான நீர் எனக்கு உதவிபுரிய விரைந்து வாரும்.
பல்லவி

22 நானோ உன் நாமத்தை என் சகோதரருக்கு வெளிப்படுத்துவேன்: சபை
நடுவே உம்மை இவ்வாறு போற்றுவேன்:

23 ஆண்டவருக்கு அஞ்சுவோரே, அவரைப் புகழுங்கள்; யாக்கோபின்
சந்ததியே, நீங்கள் அனைவரும் அவரைப் போற்றுங்கள்: இஸ்ராயேல்
மக்களே, நீங்கள் அனைவரும் அவருக்கு அஞ்சுங்கள்!'
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தம்மைத் தாழ்த்தினார்: ஆதலால்தான் கடவுள் அவரை உயர்த்தினார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 6-11

கடவுள் தன்மையில் விளங்கிய கிறிஸ்து யேசு கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மை

தோன்றி மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவரானார்.

ஆகையால்தான் கடவுள் அவரை எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர் மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட, 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என்று தந்தையாகிய கடவுளுடைய மாட்சிக்காக எல்லா நாவுமே அறிக்கையிடும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் — பிலி. 2:8-9

சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கிறிஸ்து நமக்காகக் கீழ்ப்படிபவரானார். ஆதலால்தான் கடவுள் அவரை உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

## நற்செய்தி வாசகம்

முதல் ஆண்டு

மத்தேயு எழுதியபடி நம் ஆண்டவராகிய
இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் — 26 : 14-27 : 66

**எனக்கு என்ன தருவீர்கள்? நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேன்.**

அக்காலத்தில் :

பன்னிருவருள் ஒருவனான யூதாஸ் இஸ்காரியோத்து என்பவன் தலைமைக் குருக்களிடம் சென்று அவர்களிடம், "எனக்கு என்ன தருவீர்கள்? நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுப்பேன்" என்று கூறினான். அவர்களோ முப்பது வெள்ளிக்காசு அவனுக்குக் கொடுத்தனர். அதுமுதல் அவரைக் காட்டிக் கொடுக்க வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான்.

**பாஸ்கா உணவை உமக்கு நாங்கள் எங்கே ஏற்பாடு செய்யவேண்டும் என்கிறீர்?**

புளியாத அப்பத் திருவிழாவின் முதல்நாள் சீடர் இயேசுவை அணுகி, "நீர் பாஸ்கா உணவை உண்ண உமக்கு நாங்கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறீர்?" எனக் கேட்டனர். இயேசு கூறியது : "நகரத்தில் இன்னாரிடம் போய், 'என் நேரம் அருகிலுள்ளது; என் சீடருடன் உன்

வீட்டில் பாஸ்கா கொண்டாடுவேன்' எனப் போதகர் கூறுகிறார் என்று சொல்லுங்கள்.'' சீடரும் யேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்து பாஸ்கா உணவுக்கு ஏற்பாடு செய்தனர்.

**உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்.**

மாலையானதும், தம் பன்னிரு சீடருடன் பந்தி அமர்ந்தார், அவர்கள் உண்ணும்பொழுது, " உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் " என்றார். அவர்கள் மிகவும் வருந்தி, " நானோ ஆண்டவரே?'' என்று ஒவ்வொருவரும் கேட்கத் தொடங்கினர். அதற்கு அவர், "என்னுடன் பாத்திரத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக் கொடுப்பான். மனுமகன் தம்மைப்பற்றி எழுதியிருக்கிறபடியே போகிறார். மனுமகனைக் காட்டிக் கொடுப்பவனுக்கோ ஐயோ கேடு! அவன் பிறவாது இருந்திருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும்'' என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், " நானோ ராபி ?'' என்று கேட்க, அவரும், " நீயே சொல்லிவிட்டாய் '' என்றார்.

**இது என் உடல். இது என் இரத்தம்.**

அவர்கள் உண்ணும்பொழுது, யேசு அப்பத்தை எடுத்து இறை புகழ் கூறி, பிட்டு, தம் சீடருக்கு அளித்து, "இதை வாங்கி உண்ணுங்கள், இஃது என் உடல்'' என்றார். பின்னர், கிண்ணத்தை எடுத்து, நன்றிகூறி, அவர்களுக்கு அளித்து, "இதிலே அனைவரும் பருகுங்கள். ஏனெனில், உடன்படிக்கைக்கான என் இரத்தம் இது; பாவமன்னிப்புக்கென்று பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். உங்களுக்குச் சொல்லுகிறேன்: இது முதல் என் தந்தையின் அரசில் புதிய இரசம் உங்களோடு பருகும் நாள் வரை இந்தத் திராட்சைப்பழ இரசத்தைக் குடிக்க மாட்டேன்'' என்றார். புகழ்ப்பாடல் பாடிவிட்டு ஒலிவ மலைக்குச் சென்றனர்.

**மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறிப்போம்.**

அப்பொழுது யேசு அவர்களை நோக்கி, "இன்றிரவே என்னைக் குறித்து நீங்கள் அனைவரும் இடறல்படுவீர்கள். ஏனெனில், 'மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறிப்போம்' என எழுதியிருக்கிறது. ஆனால், நான் உயிர்த்தபின் கலிலேயாவிற்கு உங்களுக்குமுன் போவேன்'' என்று சொன்னார். அதற்கு இராயப்பர், "எல்லாரும் உம்மைக் குறித்து இடறல்பட்டாலும், நான் ஒருபோதும் இடறல்படேன்'' என்றார். யேசு அவரிடம், உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்: "இன்றிரவே கோழி கூவுமுன் என்னை மும்முறை மறுதலிப்பாய் '' என்றார். இராயப்பர், "உம்மோடு இறக்கவேண்டியிருந்தாலும் உம்மை மறுதலியேன்'' என்றார். அப்படியே சீடர் அனைவரும் கூறினர்.

வருத்தமும் மனக்கலக்கமும் அவரை ஆட்கொண்டன.

பின்னர் யேசு அவர்களுடன் கெத்சேமனி என்னும் தோட்டத்திற்கு வந்தார். வந்து சீடர்களிடம், "நான் அங்கே சென்று செபிக்கும் அளவும் இங்கே இருங்கள்" என்று சொல்லி, இராயப்பரையும் செபெதேயுவின் மக்கள் இருவரையும் தம்மோடு அழைத்துச் சென்றார். அப்போது வருத்தமும் மனக்கலக்கமும் அவரை ஆட்கொள்ளவே, அவர் அவர்களை நோக்கி, "என் ஆன்மா சாவுக்கு ஏதுவான வருத்தமுற்றிருக்கிறது. இங்கே தங்கி என்னுடன் விழித்திருங்கள்" என்றார். சற்று அப்பால் போய், குப்புறவிழுந்து, "என் தந்தையே, கூடுமானால் இத்துன்பக் கலம் என்னைவிட்டு அகலட்டும். எனினும், என் விருப்பப்படி அன்று, உமது விருப்பப்படி ஆகட்டும்" என்று செபித்தார். தம் சீடரிடம் வந்து அவர்கள் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு இராயப்பரை நோக்கி, "என்ன, ஒரு மணி நேரம் என்னுடன் விழித்திருக்க உங்களால் முடியவில்லையா? சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து செபியுங்கள். உள்ளம் ஊக்கமுடையதுதான், ஊனுடலோ வலுவற்றது" என்றார்.

இரண்டாம் முறையும் சென்று, "என் தந்தையே, நான் குடித்தாலொழிய இத்துன்பக் கலம் அகல முடியாதெனில் உமது விருப்பப்படியே ஆகட்டும்" என்று செபித்தார். மீண்டும் வந்து அவர்கள் தூங்குவதைக் கண்டார். ஏனெனில், அவர்கள் கண்கள் தூக்கமயக்கமுற்றிருந்தன. அவர்களை விட்டு மீண்டும் சென்று மூன்றாம் முறையாக அவ்வார்த்தைகளையே சொல்லிச் செபித்தார். பின் தம் சீடரிடம் வந்து, "இன்னும் தூங்கி இளைப்பாறுகிறீர்களா? இதோ! நேரம் நெருங்கி விட்டது. மனுமகன் பாவிகளிடம் கையளிக்கப்படப் போகிறார். எழுந்திருங்கள், போவோம். இதோ! என்னைக் காட்டிக்கொடுப்பவன் நெருங்கிவிட்டான்" என்றார்.

யேசுவின் மேல் கைபோட்டு அவரைப் பிடித்தனர்.

அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே இதோ! பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ் வந்தான். தலைமைக் குருக்களும் மக்களின் மூப்பரும் அனுப்பிய பெருங்கூட்டம் ஒன்று வாள்களோடும் தடிகளோடும் அவனுடன் வந்தது. அவரைக் காட்டிக்கொடுக்கிறவன், "எவரை நான் முத்தமிடுவேனோ அவர்தான்; அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். உடனே யேசுவை அணுகி, "ராபி, வாழ்க!" என்று அவரை முத்தமிட்டான். யேசுவோ, "நண்பா! எதற்காக வந்தாய்?' என்று அவனைக் கேட்டார். அப்பொழுது அவர்கள் நெருங்கி வந்து யேசுவின் மேல் கைபோட்டுப் பிடித்தனர். இதோ யேசுவோடு இருந்தவருள் ஒருவன் கையை நீட்டி வாளை உருவித் தலைமைக் குருவின் ஊழியனைத் தாக்கி, அவன் காதைத் துண்டித்தான். யேசுவோ

அவனிடம், "உன் வாளை உறையில் போடு. ஏனெனில், வாள் எடுப்போர் எல்லாரும் வாளால் மடிவர். நான் என் தந்தையைக் கேட்டால் பன்னிரு படைகளுக்கு மிகுதியான தூதரை அவர் இப்பொழுது எனக்கு அளிக்க மாட்டார் என்று நினைக்கிறாயா? அப்படிச் செய்தால் இவ்வாறு நடைபெறவேண்டும் என்னும் மறைநூல் வாக்கு எவ்வாறு நிறைவேறும்?" என்றார்.

அவ்வேளையில் யேசு, மக்கள்திரளை நோக்கி, "நீங்கள் கள்ளனைப் பிடிக்க வருவது போல வாளோடும் தடியோடும் என்னைப் பிடிக்க வந்தீர்களோ? நாள்தோறும் கோவிலில் அமர்ந்து போதித்துக்கொண்டிருந்தேன். நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை" என்று சொன்னார். இறைவாக்கினர்கள் எழுதியது நிறைவேறும் பொருட்டே இவையனைத்தும் நடைபெற்றன. அப்பொழுது சீடர் அனைவரும் அவரை விட்டுவிட்டு ஓடிப் போயினர்.

**மனுமகன் வல்லமையுள்ள இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்திருப்பதைக் காண்பீர்கள்.**

யேசுவைப் பிடித்தவர்களோ கைப்பாஸ் என்ற தலைமைக் குருவிடம் அவரைக் கூட்டிச் சென்றார்கள். அங்கே அறிஞரும் மூப்பரும் கூடியிருந்தனர். இராயப்பரோ தொலைவில் அவரைப் பின்தொடர்ந்து தலைமைக் குருவின் வீட்டு முற்றம் வரை வந்து, உள்ளே நுழைந்து முடிவைக் காணும்படி காவலருடன் உட்கார்ந்திருந்தார். தலைமைக் குருக்களும் தலைமைச் சங்கத்தார் அனைவரும் யேசுவைச் சாவுக்குக் கையளிக்கும்படி அவருக்கு எதிராகப் பொய்ச் சான்று தேடலாயினர். பல பொய்ச் சாட்சிகள் முன்வந்தும் அவர்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. இறுதியாக இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து, "இவன் கடவுளுடைய ஆலயத்தை இடித்து மூன்று நாட்களில் மீண்டும் கட்ட என்னால் முடியும்' என்றான்" எனக் கூறினர். தலைமைக் குரு எழுந்து, "உனக்கு எதிராக இவர்கள் சாட்சி சொல்லுகின்றனரே. மறுமொழியாக ஒன்றும் சொல்வதற்கில்லையா?" என்று கேட்டார்.

யேசுவோ பேசாதிருந்தார். தலைமைக் குரு அவரை நோக்கி, "உயிர் உள்ள கடவுளின் பெயரால் ஆணையிட்டுச் சொல்லுமாறு உன்னைக் கேட்கிறேன்: நீ கடவுளின் மகனான மெசியாவோ?" என்றார். யேசு "நீரே சொன்னீர். மேலும் மனுமகன் வல்லமையுள்ள இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்து, வானமேகங்களின்மீது வருவதை நீங்கள் இனிக் காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

அப்போது தலைமைக் குரு தம்முடைய ஆடைகளைக் கிழித்துக் கொண்டு, "இவன் சொல்லுவது தேவ நிந்தனை. இன்னும் சாட்சிகள் எதற்கு? இதோ! இப்பொழுது தேவதூஷணம் கேட்டீர்களே, உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார். அவர்களோ மறுமொழியாக "இவன் சாவுக்குரியவன்" என்றார்கள்.

"அப்பொழுது அவர்கள் அவருடைய முகத்தில் துப்பி அவரை அடித்தார்கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து, "மெசியாவே, உன்னை அறைந்தவன் யாரென்று எங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்" என்று கேட்டனர்.

*கோழி கூவுமுன்னர் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்.*

இராயப்பர் வெளியே முற்றத்தில் உட்கார்ந்திருந்தார். ஓர் ஊழியக்காரி அவரிடம் வந்து, "நீயும் கலிலேயனாகிய யேசுவோடு இருந்தாய்" என்றாள். அவரோ எல்லார் முன்னிலையிலும், "நீ சொல்வது எனக்குத் தெரியாது" என்று மறுத்தார். அவர் அங்கிருந்து வாயிலருகே வந்தபொழுது வேறோர் ஊழியக்காரி அவரைப் பார்த்துவிட்டு அங்கிருந்தவர்களிடம், "இவனும் நாசரேத்தூர் யேசுவோடு இருந்தான்" என்று கூறினாள். அவர், "அந்த ஆளை எனக்குத் தெரியாது" என்று ஆணையிட்டு மீண்டும் மறுத்தார்.

சிறிது நேரத்திற்குப் பின்பு, அங்கிருந்தவர்கள் அணுகி, "உண்மையாகவே நீயும் அவர்களுள் ஒருவன்தான்; ஏனெனில், உன் பேச்சே உன்னைக் காட்டிவிடுகிறது" என்று இராயப்பரிடம் கூறினார்கள். அப்பொழுது அவர், "அந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது" என்று சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார். உடனே கோழி கூவிற்று. இராயப்பரோ, "கோழி கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று யேசு சொன்னதை நினைவுகூர்ந்தார். வெளியே போய் மனம் வெதும்பி அழுதார்.

*யேசுவை ஆளுநரான போஞ்சுப் பிலாத்திடம் கையளித்தனர்.*

காலையானதும் தலைமைக் குருக்கள், மக்களின் மூப்பர் எல்லாரும் யேசுவைக் கொல்ல அவருக்கு எதிராக ஆலோசனை செய்தனர். அவரைக் கட்டி நடத்திச் சென்று ஆளுநன் பிலாத்திடம் கையளித்தனர்.

*காணிக்கைப் பெட்டியில் இவற்றைப் போடக்கூடாது; ஏனெனில் இவை இரத்தத்தின் விலை.*

அப்போது அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் தண்டனைக்கு உள்ளானதைக் கண்டு, மனம்வருந்தி, முப்பது வெள்ளிக்காசையும்

தலைமைக் குருக்களிடமும் மூப்பரிடமும் கொண்டுவந்து, மாசற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்துப் பாவம் செய்தேன்'' என்றான். அவர்களோ, ''எங்களுக்கென்ன? அஃது உன் பாடு'' என்றனர். அவனோ வெள்ளிக்காசுகளை ஆலயத்தில் எறிந்துவிட்டுப் போனான். போய் நான்று கொண்டு மடிந்தான்.

தலைமைக் குருக்கள் வெள்ளிக்காசுகளை எடுத்து, ''காணிக்கைப் பெட்டியில் இவற்றைப் போடக்கூடாது; ஏனெனில், இவை இரத்தத்தின் விலை'' என்றனர். ஆலோசனை செய்து, அன்னியரை அடக்கம் செய்ய அவற்றைக்கொண்டு 'குயவன் நிலத்தை' வாங்கினர். அதனால் தான் அந்நிலம் இன்றுவரை ''இரத்த நிலம்'' எனப்படுகிறது. ''இஸ்ராயேல் மக்களால் விலைமதிக்கப் பெற்றவருடைய விலையாகிய முப்பது வெள்ளிக் காசுகளை எடுத்து, ஆண்டவர் எனக்குக் குறித்தபடியே குயவன் நிலத்திற்குக் கொடுத்தார்கள்'' என்று எரேமியாஸ் இறைவாக்கினர் கூறியது அப்பொழுது நிறைவேறியது.

*நீ யூதரின் அரசனோ?*

யேசு ஆளுநன்முன் நின்றார். ஆளுநன் அவரை: ''நீ யூதரின் அரசனோ?'' என்று வினவ, யேசு, ''நீர்தான் சொல்கிறீர்'' என்றார். தலைமைக் குருக்களும் மூப்பரும் சாட்டிய குற்றங்களுக்கு அவர் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி, ''உனக்கு எதிராக இத்தனைச் சான்றுகள் கூறுகிறார்களே; உன் காதில் விழவில்லையா?'' என்று கேட்டான். அவரோ ஒன்றுக்கும் பதில் சொல்லவில்லை. அதைக் கண்டு ஆளுநன் மிகவும் வியப்புற்றான்.

திருவிழாதோறும் மக்கள் விரும்பும் ஒரு குற்றவாளியை ஆளுநன் விடுதலை செய்வது வழக்கம். பரபாஸ் என்ற பேர்போன கைதி ஒருவன் இருந்தான். எனவே, மக்கள் ஒன்றுகூடினபோது, பிலாத்து, ''நான் யாரை விடுதலை செய்யவேண்டும் என்கிறீர்கள்? பரபாசையா, மெசியா என்னும் யேசுவையா?'' என்று கேட்டான். ஏனெனில், அவர்கள் அவரைக் கையளித்தது பொறாமையால்தான் என்று அறிந்திருந்தான். அவன் நீதியிருக்கைமீது வீற்றிருந்தபொழுது அவன் மனைவி அவனிடம் ஆளனுப்பி, ''அந் நீதிமானின் காரியத்தில் நீர் தலையிட வேண்டாம். ஏனெனில், அவர் பொருட்டு இன்று கனவில் மிகவும் துன்புற்றேன்'' என்று கூறினாள்.

தலைமைக் குருக்களும் மூப்பரும் பரபாசை விடுவிக்கவும், யேசுவைத் தொலைக்கவும் கேட்கும்படி மக்களை ஏவி விட்டனர். ஆளுநன் ''இவ்விருவரில் யாரை உங்களுக்கு நான் விடுதலையாக்க வேண்டும் என்கிறீர்கள்?'' என்று அவர்களைக் கேட்டான். அவர்களோ ''பரபாசை'' என்றனர்.

[illegible] "அப்படியானால் மெசியா என்னும் யேசுவை நான் என்ன செய்வது?" என்றான். எல்லாரும் "அவனைச் சிலுவையில் அறையும்" என்றனர். ஆளுநன், "இவன் செய்த தீங்கு என்ன?" என்று அவர்களைக் கேட்டான். அவர்களோ, "சிலுவையில் அறையும்" என்று இன்னும் உரக்கக் கூச்சலிட்டனர். பிலாத்து தன்னால் ஒன்றும் ஆகவில்லை என்றும், அதற்கு மாறாகக் கலகமே ஏற்படுகிறதென்றும் கண்டு, தண்ணீர் எடுத்து மக்கள் முன்னிலையில் "இவனுடைய இரத்தத்தின் மட்டில் நான் குற்றமற்றவன்; அது உங்கள் பாடு" எனக் கூறிக் கை கழுவினான்.

அதற்கு மக்கள் அனைவரும், "இவன் இரத்தம் எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்" என்றனர். பின்னர், அவர்களுக்கு இசைந்து பரபாவை விடுதலை செய்தான். யேசுவையோ சாட்டையால் அடித்துச் சிலுவையில் அறையும்படி கையளித்தான்.

யூதரின் அரசே, வாழி.

ஆளுநனுடைய படை வீரர் யேசுவை அரண்மனைக்கு நடத்திச் சென்று அங்கே இருந்த பட்டாளத்தினர் எல்லாரையும் அவர்முன் ஒன்றுசேர்த்தனர். அவருடைய ஆடைகளைக் களைந்து செந்நிறப் போர்வையை அவருக்குப் போர்த்தினர்; முள்ளால் ஒரு முடியைப் பின்னி அவர் தலையில் வைத்தனர். வலக்கையில் ஒரு பிரம்பைக் கொடுத்தனர். அவர் முன் முழந்தாளிட்டு, "யூதரின் அரசே, வாழி" என்று எள்ளி நகையாடினர். அவர்மேல் துப்பிப் பிரம்பை எடுத்து அவரைத் தலையில் அடித்தனர். அவரை எள்ளி நகையாடிய பின் அப்போர்வையைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து, அவரைச் சிலுவையில் அறையக் கூட்டிச் சென்றனர்.

கள்வர் இருவரை அவருடன் சிலுவையில் அறைந்தார்கள்.

வெளியே செல்லுகையில் சிரேனே ஊரானாகிய சீமோன் என்ற ஒருவனைக் கண்டனர். அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைக் கட்டாயப்படுத்தினர். மண்டை ஓடு எனப் பொருள்படும் கொல்கொத்தா என்னும் இடத்திற்கு வந்தனர். கசப்புக் கலந்த திராட்சை இரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தனர். அவரோ அதைச் சுவைத்த பின் குடிக்க விரும்பவில்லை. அவரைச் சிலுவையில் அறைந்த பின்னர், சீட்டுப் போட்டு அவருடைய ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டனர். பின்னர், அங்கு அமர்ந்து காவல் காத்தனர். அவருடைய தலைக்குமேல் அவரைப் பற்றிய குற்ற அறிக்கையை வைத்தனர். அதில், "இவன் யூதரின் அரசன் யேசு" என்று எழுதியிருந்தது. அவருக்கு வலப்பக்கத்தில் ஒருவனும், இடப்பக்கத்தில் ஒருவனுமாகக் கள்வர் இருவரை அவருடன் சிலுவையில் அறைந்தார்கள்.

**நீ கடவுள் மகனாய் இருந்தால், சிலுவையிலிருந்து இறங்கிவா.**

அவ்வழியே சென்றவர்கள் தலையை ஆட்டி, "ஆலயத்தை இடித்து மூன்று நாட்களில் கட்டுவோனே, உன்னையே காப்பாற்றிக்கொள். நீ கடவுள் மகனாய் இருந்தால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று அவரைப் பழித்தனர். அவ்வாறே தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞரோடும் மூப்பரோடும் சேர்ந்து அவரை எள்ளி நகையாடி, "பிறரைக் காப்பாற்றிய இவன் தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. இவன் இஸ்ராயேலின் அரசனாம்! இப்பொழுது சிலுவையினின்று இறங்கட்டும், இவனை நம்புவோம். கடவுளை நம்பியிருந்தான்; அவருக்கு இவன்மேல் பிரியமிருந்தால் இப்பொழுது விடுவிக்கட்டும். 'நான் கடவுள் மகன்' என்றானே" எனக் கூறினர். அவ்வாறே அவருடன் அறையுண்ட கள்வரும் அவர்மேல் வசை கூறினர்.

**ஏலி, ஏலி, லெமா சபக்தானி**

நண்பகல் தொடங்கி மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. ஏறக்குறைய மூன்று மணிக்கு யேசு, "ஏலி, ஏலி, லெமா சபக்தானி"—அதாவது 'என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'—என்று உரக்கக் கூவினார். அங்கே நின்றவர்களுள் சிலர் அதைக் கேட்டு, "இவன் எலியாசைக் கூப்பிடுகிறான்" என்றனர்.

உடனே அவர்களுள் ஒருவன் ஓடி, கடற் காளானை எடுத்துக் காடியில் தோய்த்து, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மற்றவர்களோ, "பொறு, எலியாஸ் இவனைக் காப்பாற்ற வருவாரா பார்ப்போம்" என்றனர். யேசு மறுபடியும் உரக்கக் கத்தி ஆவி துறந்தார்.

**இங்கு முழந்தாளிட்டு சிறிதுநேரம் மௌனமாயிருக்கவும்**

இதோ! ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது. நிலம் நடுங்கியது. பாறைகள் வெடித்தன. கல்லறைகள் திறக்கவே, துஞ்சிய பரிசுத்தர்களின் உடல்கள் பல எழுந்தன. அவர் உயிர்த்தெழுந்தபின் இவர்கள் கல்லறையைவிட்டுத் திரு நகருக்கு வந்து பலருக்குத் தோன்றினார்கள். நூற்றுவர் தலைவனும் அவனுடன் யேசுவைக் காவல் காத்துக்கொண்டிருந்தோரும் நில நடுக்கத்தையும் நடந்தது அனைத்தையும் கண்டு மிகவும் அஞ்சி, "உண்மையில் இவர் கடவுளின் மகனாயிருந்தார்" என்றனர்.

கலிலேயாவிலிருந்து யேசுவைப் பின்தொடர்ந்து அவருக்குப் பணிவிடை புரிந்த பெண்கள் பலர் அங்கே இருந்தனர். தொலைவில் நின்றே பார்த்துக் கொண்டு இருந்தனர். அவர்களுள் மதலேன் மரியாளும், யாகப்பர், சூசை ஆகியவர்களின் தாயான மரியாளும், செபெதேயுவின் மக்களின் தாயும் இருந்தனர்.

*சூசை யேசுவின் உடலைத் தம் புதுக்கல்லறையில் வைத்தார்.*

மாலையானதும் அரிமத்தியா ஊராரான சூசை என்னும் செல்வர் ஒருவர் வந்தார். அவரும் யேசுவின் சீடர். அவர் பிலாத்திடம் போய் யேசுவின் உடலைக் கேட்டார். பிலாத்தும் அதை அவருக்கு அளித்துவிடக் கட்டளையிட்டான். சூசை உடலை எடுத்துத் தூய கோடித் துணியில் சுற்றி, தமக்கெனப் பாறையில் குடைந்திருந்த ஒரு புதுக் கல்லறையில் வைத்தார்; ஒரு பெரிய கல்லைப் புரட்டி, கல்லறையின் வாயிலில் வைத்துவிட்டுப் போனார். அங்கே மதலேன் மரியாளும், மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிரே அமர்ந்திருந்தனர்.

*உங்களிடம் காவல்காரர் உண்டே, போய் உங்களுக்குத் தெரிந்தபடி பத்திரப் படுத்திக் கொள்ளுங்கள்.*

மறுநாள், அதாவது ஆயத்தநாளுக்கு அடுத்த நாள், தலைமைக் குருக்களும் பரிசேயரும் பிலாத்திடம் கூடிவந்து, "ஐயா, அந்த வஞ்சகன் உயிருடன் இருந்தபொழுது 'மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவேன்' என்று சொன்னது எங்களுக்கு நினைவிலிருக்கிறது. ஒருவேளை அவனுடைய சீடர் வந்து அவன் உடலைத் திருடிக்கொண்டு போய்விட்டு, 'இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்' என்று மக்களிடம் சொல்லக்கூடும். அப்பொழுது முந்தின வஞ்சனையைவிடப் பிந்தினது மோசமாயிருக்கும். இது நிகழாதபடி கல்லறையை மூன்றும் நாள்வரை பத்திரப்படுத்தக் கட்டளையிடும்" என்றனர்.

பிலாத்தோ அவர்களை நோக்கி, "உங்களிடம் காவல்காரர் உண்டே, போய் உங்களுக்குத் தெரிந்தபடி பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள்" என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரையிட்டுக் காவலரை வைத்துக் கல்லறையைப் பத்திரப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

மத்தேயு எழுதியபடி,
நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின் திருப்பாடுகள் 27 : 11-54

*நீ யூதரின் அரசனோ?*

அக்காலத்தில் :

யேசு போஞ்சு பிலாத்தின் முன் நின்றார். ஆளுநன் அவரை: "நீ யூதரின் அரசனோ?" என்று வினவ, யேசு, "நீர்தான் சொல்கிறீர்"

என்றார். தலைமைக் குருக்களும் மூப்பரும் சாட்டிய குற்றங்களுக்கு அவர் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி, உனக்கு எதிராக இத்தனைச் சான்றுகள் கூறுகிறார்களே; உன் காதில் விழ வில்லையா ?'' என்று கேட்டான். அவரோ ஒன்றுக்கும் பதில் சொல்ல வில்லை. அதைக்கண்டு ஆளுநன் மிகவும் வியப்புற்றான்.

திருவிழாதோறும் மக்கள் விரும்பும் ஒரு குற்றவாளியை ஆளுநன் விடுதலை செய்வது வழக்கம். பரபாஸ் என்ற பேர்போன கைதி ஒருவன் இருந்தான். எனவே, மக்கள் ஒன்றுகூடினபோது, பிலாத்து, "நான் யாரை விடுதலை செய்யவேண்டும் என்கிறீர்கள்? பரபாசையா, மெசியா என்னும் யேசுவையா?'' என்று கேட்டான். ஏனெனில், அவர்கள் அவரைக் கையளித்தது பொறாமையால்தான் என்று அறிந்திருந்தான். அவன் நீதியிருக்கைமீது வீற்றிருந்தபொழுது அவன் மனைவி அவனிடம் ஆளனுப்பி, "அந்நீதிமானின் காரியத்தில் நீர் தலையிட வேண்டாம். ஏனெனில், அவர் பொருட்டு இன்று கனவில் மிகவும் துன்புற்றேன்'' என்று கூறினாள்.

தலைமைக் குருக்களும் மூப்பரும் பரபாசை விடுவிக்கவும், யேசுவைத் தொலைக்கவும் கேட்கும்படி மக்களை ஏவி விட்டனர். ஆளுநன் "இவ்விருவரில் யாரை உங்களுக்கு நான் விடுதலையாக்கவேண்டும் என்கிறீர்கள்?'' என்று அவர்களைக் கேட்டான். அவர்களோ "பரபாசை'' என்றனர். பிலாத்து, "அப்படியானால் மெசியா என்னும் யேசுவை நான் என்ன செய்யட்டும்?'' என்றான். எல்லாரும் "அவனைச் சிலுவையில் அறையும்'' என்றனர். ஆளுநன், "இவன் செய்த தீங்கு என்ன?'' என்று அவர்களைக் கேட்டான். அவர்களோ, "சிலுவையில் அறையப்படட்டும்'' என்று இன்னும் உரக்கக் கூச்சலிட்டனர்.

பிலாத்து தன்னால் ஒன்றும் ஆகவில்லை என்றும், அதற்கு மாறாகக் கலகமே ஏற்படுகிறதென்றும் கண்டு, தண்ணீர் எடுத்து மக்கள் முன்னிலையில் "இவனுடைய இரத்தத்தின் மட்டில் நான் குற்றம் அற்றவன்; அது உங்கள் பாடு'' எனக் கூறிக் கை கழுவினான். அதற்கு மக்கள் அனைவரும், "இவன் இரத்தம் எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்'' என்றனர். பின்னர், அவர்களுக்கு இசைந்து பரபாசை விடுதலை செய்தான். யேசுவையோ சாட்டையால் அடித்துச் சிலுவையில் அறையும்படி கையளித்தான்.

யூதரின் அரசரே, வாழி.

ஆளுநனுடைய படை வீரர் யேசுவை அரண்மனைக்கு நடத்திச் சென்று அங்கே இருந்த பட்டாளத்தினர் எல்லாரையும் அவர் முன் ஒன்று சேர்த்தனர். அவருடைய ஆடைகளைக் களைந்து செந்நிறப் போர்வையை

அவருக்குப் போர்த்தினர்; முள்ளால் ஒரு முடியைப் பின்னி அவர் தலையில் வைத்தனர்; வலக்கையில் ஒரு பிரம்பைக் கொடுத்தனர். அவர் முன் முழந்தாளிட்டு, "யூதரின் அரசே, வாழி" என்று எள்ளி நகையாடினர். அவர்மேல் துப்பிப் பிரம்பை எடுத்து அவரைத் தலையில் அடித்தனர். அவரை எள்ளி நகையாடியபின் அப்போர்வையைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து, அவரைச் சிலுவையில் அறையக் கூட்டிச் சென்றனர்.

**கள்வர் இருவரை அவருடன் சிலுவையில் அறைந்தார்கள்.**

வெளியில் செல்லுகையில் சிரேனே ஊராகிய சீமோன் என்ற ஒருவனைக் கண்டனர். அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைக் கட்டாயப்படுத்தினர். மண்டை ஓடு எனப் பொருள்படும் கொல்கொத்தா என்னும் இடத்துக்கு வந்தனர். கசப்புக் கலந்த திராட்சை இரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தனர் அவரோ அதைச் சுவைத்தபின் குடிக்க விரும்பவில்லை. அவரைச் சிலுவையில் அறைந்த பின்னர், சீட்டுப் போட்டு அவருடைய ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டனர். பின்னர், உட்கார்ந்து காவல் காத்தனர்.

அவருடைய தலைக்குமேல் அவரைப்பற்றிய குற்ற அறிக்கையை வைத்தனர். அதில், "இவன் யூதரின் அரசன் யேசு" என்று எழுதியிருந்தது. அவருக்கு வலப் பக்கத்தில் ஒருவனும், இடப்பக்கத்தில் ஒருவனுமாகக் கள்வர் இருவரை அவருடன் சிலுவையில் அறைந்தார்கள்.

**நீ கடவுள் மகனாய் இருந்தால் சிலுவையிலிருந்து இறங்கிவா.**

அவ்வழியே சென்றவர்கள் தலையை ஆட்டி, "ஆலயத்தை இடித்து மூன்று நாட்களில் கட்டுவோனே, உன்னையே காப்பாற்றிக் கொள். நீ கடவுள் மகனாய் இருந்தால், சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று அவரைப் பழித்தனர்.

அவ்வாறே தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞரோடும் மூப்பரோடும் சேர்ந்து அவரை எள்ளி நகையாடி, "பிறரைக் காப்பாற்றிய இவன் தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. இவன் இஸ்ராயேலின் அரசனாம்! இப்பொழுது சிலுவையினின்று இறங்கட்டும், இவனை நம்புவோம். கடவுளை நம்பியிருந்தான்; அவருக்கு இவன்மேல் பிரியமிருந்தால் இப்பொழுது விடுவிக்கட்டும். 'நான் கடவுள் மகன்' என்றானே" எனக் கூறினர். அவ்வாறே அவருடன் அறையுண்ட கள்வரும் அவர்மேல் வசை கூறினர்.

*ஏலி ஏலி லெமா சபக்தானி*

நண்பகல் தொடங்கி மூன்றுமணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. ஏறக்குறைய மூன்று மணிக்கு யேசு, "ஏலி, ஏலி, லெமா சபக்தானி"—அதாவது 'என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'—என்று உரக்கக் கூவினார். அங்கே நின்றவர்களுள் சிலர் அதைக் கேட்டு, "இவன் எலியாசைக் கூப்பிடுகிறான்" என்றனர்.

உடனே அவர்களுள் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்துக் காடியில் தோய்த்து, ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மற்றவர்களோ, "பொறு, எலியாஸ் இவனைக் காப்பாற்ற வருவாரா பார்ப்போம் என்றனர். யேசு மறுபடியும் உரக்கக் கத்தி ஆவி துறந்தார்.

*இங்கு முழந்தாளிட்டு சிறிது நேரம் மௌனமாயிருக்கவும்.*

இதோ! ஆலயத்தின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது. நிலம் நடுங்கியது. பாறைகள் வெடித்தன. கல்லறைகள் திறக்கவே, துஞ்சிய பரிசுத்தர்களின் உடல்கள் பல எழுந்தன. அவர் உயிர்த்தெழுந்தபின் இவர்கள் கல்லறையை விட்டு திரு நகருக்கு வந்து பலருக்குத் தோன்றினார்கள். நூற்றுவர் தலைவனும் அவனுடன் யேசுவைக் காவல் காத்துகொண்டிருந்தோரும் நில நடுக்கத்தையும் நடந்தது அனைத்தையும் கண்டு மிகவும் அஞ்சி, "உண்மையில் இவர் கடவுளின் மகனாயிருந்தார்" என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## இரண்டாம் ஆண்டு

மாற்கு எழுதியபடி
நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 14 : 1–15 : 47

*யேசுவைச் சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கொலைசெய்ய வகை தேடிக்கொண்டிருந்தார்கள்.*

பாஸ்காவும், புளியாத அப்பத் திருவிழாவும் வர இரண்டு நாள் இருந்தது. தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் சூழ்ச்சியாய் யேசுவைப் பிடித்துக் கொலைசெய்ய வகை தேடிக் கொண்டிருந்தார்கள். "திருவிழாவிலே வேண்டாம், ஒருவேளை மக்களிடையே கலகம் உண்டாகலாம்" என்றார்கள்.

**என் அடக்கத்தைக் குறித்து முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசினுள்.**

பெத்தானியாவில் தொழுநோய்ச் சீமோன் வீட்டில் அவர் இருந்தார். அங்கே பந்தி அமர்ந்திருக்கும்போது, பெண் ஒருத்தி நரந்தம் என்னும் விலையுயர்ந்த நல்ல பரிமளத்தைலம் உள்ள படிகச் சிமிழைக் கொண்டு வந்து உடைத்து அவருடைய தலையில் ஊற்றினுள். அப்போது சிலர் சினந்து, "தைலத்தை இப்படி வீணுக்குவானேன்? இத்தைலத்தை முந்நூறு வெள்ளிக்காசுக்கும் அதிகமாய் விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே" என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு அவள் மேல் சீறி எழுந்தனர்.

யேசுவோ, "ஏன் தொந்தரை செய்கிறீர்கள்? விடுங்கள். இவள் எனக்குச் செய்தது நேர்த்தியான செயல்தான். ஏனெனில், ஏழைகள் உங்களோடு எப்போதும் இருக்கிறுர்கள். வேண்டும்போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யமுடியும். நானே உங்களோடு இருக்கப்போவதில்லை. இவள் தன்னுல் இயன்றதைச் செய்தாள். என் அடக்கத்தைக் குறித்து முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசினுள். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: உலக முழுவதும் எங்கெங்கு நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவள் செய்ததும் இவள் நினைவாகக் கூறப்படும்" என்றுர்.

**யூதாஸ் இஸ்காரியோத்துக்குப் பணம் கொடுப்பதாக வாக்களித்தார்கள்.**

பன்னிருவருள் ஒருவனுன யூதாஸ் இஸ்காரியோத்து அவரைக் காட்டிக் கொடுக்கும்படி தலைமைக் குருக்களிடம் சென்றுன். அவர்கள் அதைக்கேட்டு மகிழ்ந்து அவனுக்குப் பணம் கொடுப்பதாக வாக்களித்தார்கள். அவனும் அவரை எவ்வாறு காட்டிக் கொடுக்கலாம் என வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான்.

**நான் என் சீடருடன் பாஸ்கா உணவை உண்பதற்கான அறை எங்கே?**

புளியாத அப்பத் திருவிழாவின் முதல் நாளில் பாஸ்காச் செம்மறியைப் பலியிடுவார்கள். அன்று சீடர் அவரிடம், "நீர் பாஸ்காப் பலியுணவை உண்ண நாங்கள் எங்கே போய் ஏற்பாடு செய்யவேண்டும் என்கிறீர்?" என்று கேட்டனர்.

அவர் சீடர்களுள் இருவரிடம், நகருக்குச் செல்லுங்கள். ஒருவன் தண்ணீர்க் குடம் சுமந்துகொண்டு உங்களுக்கு எதிரே வருவான். அவன் பின்னே செல்லுங்கள். அவன் எங்கே செல்லுகிறுனே அந்த வீட்டுத் தலைவனிடம், 'நான் என் சீடருடன் பாஸ்கா உணவை உண்பதற்கான அறை எங்கே?' என்று போதகர் கேட்கிறுர் எனச் சொல்லுங்கள். இருக்கை

முதலியன அமைந்து ஆயத்தமாயுள்ள ஒரு பெரிய மாடி அறையை அவன் உங்களுக்குக் காட்டுவான். அங்கே நமக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று சொல்லியனுப்பினார். சீடர்களும் போய் நகரை அடைந்து தங்களுக்கு அவர் சொல்லியவாறே நிகழ்ந்ததைக் கண்டு பாஸ்கா உணவுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

**என்னோடு உண்ணும் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்.**

மாலையானதும் அவர் பன்னிருவருடனும் வந்தார். அவர்கள் பந்தியமர்ந்து உண்ணும்பொழுது யேசு, ''என்னோடு உண்ணும் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். அவர்கள் வருத்தப்பட்டு ஒவ்வொருவராக 'நானோ, நானோ' என்று அவரைக் கேட்கத் தொடங்கினார்கள்.

அதற்கு அவர், ''பன்னிருவருள் ஒருவனே; என்னோடு பாத்திரத்தில் கையிடுபவனே. மனுமகன் தம்மைப்பற்றி எழுதியிருக்கிறபடியே போகிறார். மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறவனுக்கோ ஐயோ கேடு! அவன் பிறவாது இருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும்'' என்றார்.

**இது என் உடல், புதிய உடன் படிக்கையின் என் இரத்தம் இது.**

அவர்கள் உண்ணும் பொழுது, அவர் அப்பத்தை எடுத்து இறை புகழ் கூறி, பிட்டு அவர்களுக்கு அளித்து, ''இதை வாங்கிக்கொள்ளுங்கள் : இது என் உடல்'' என்றார். பின்னர், கிண்ணத்தை எடுத்து, நன்றி கூறி அவர்களுக்கு அளிக்க, அதில் அனைவரும் பருகினர். அப்போது அவர், ''உடன்படிக்கைக்கெனப் பலருக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இது. உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: இனிமேல், கடவுளின் அரசில் புதிய இரசம் குடிக்கும் நாள்வரை திராட்சைப்பழ இரசத்தைக் குடிக்க மாட்டேன்'' என்றார்.

**கோழி கூவுமுன், என்னை மும்முறை மறுதலிப்பாய்.**

புகழ்ப்பாடல் பாடிவிட்டு, ஒலிவ மலைக்குச் சென்றனர். யேசு அவர்களை நோக்கி, '' நீங்கள் அனைவரும் இடறல் படுவீர்கள். ஏனெனில், 'மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறிப்போம்' என எழுதியிருக்கிறது. ஆனால், நான் உயிர்த்தபின் கலிலேயாவிற்கு உங்களுக்குமுன் போவேன் '' என்றார்.

அதற்கு இராயப்பர், 'எல்லாரும் இடறல்பட்டாலும் நான் இடறல் படேன்'' என்றார். யேசு அவரிடம், '' உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன் : இன்றிரவே கோழி இருமுறை கூவுமுன், என்னை மும்முறை

அவர்களோ அவர்மேல் கைபோட்டுப் பிடித்தார்கள். அருகில் நின்றவர்களுள் ஒருவன் வாளை உருவித் தலைமைக் குருவின் ஊழியனைத் தாக்கி, அவனுடைய காதைத் துண்டித்தான்.

யேசு அவர்களிடம், "கள்வனைப் பிடிக்க வருவதுபோல் வாளோடும் தடியோடும் என்னைப் பிடிக்க வந்தீர்களோ? நாள்தோறும் கோயிலில் போதித்துக்கொண்டு உங்களிடையே இருந்தும், நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை. ஆனால் மறைநூல் கூறுவது இவ்வாறு நிறைவேற வேண்டும்" என்றார். அப்பொழுது அனைவரும் அவரை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள். இளைஞன் ஒருவன் வெறும் உடம்பின் மேல் துப்பட்டியைப் போர்த்திக்கொண்டு அவர் பின்னே சென்றான். அவனைப் பிடித்தார்கள். அவனோ துப்பட்டியை விட்டுவிட்டு ஆடையின்றி ஓடிப்போனான்.

**போற்றுதற்குரிய இறைவனின் மகனான மெசியா நீதானோ?**

யேசுவைத் தலைமைக் குருவிடம் கூட்டிச் சென்றனர். தலைமைக் குருக்கள், மூப்பர், மறைநூல் அறிஞர் எல்லாரும் வந்து கூடினர். இராயப்பரோ, தொலைவில் அவரைப் பின் தொடர்ந்து தலைமைக் குருவின் வீட்டு உள்முற்றம்வரை வந்து, காவலருடன் உட்கார்ந்து அனலில் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்.

தலைமைக் குருக்களும் தலைமைச் சங்கத்தார் அனைவரும் யேசுவைச் சாவுக்குக் கையளிக்கும்படி அவருக்கு எதிராகச் சான்று தேடியும், ஒன்றுமே கிடைக்கவில்லை. ஏனெனில், பலர் அவருக்கு எதிராகப் பொய்ச் சாட்சி கூறியும், அச்சாட்சிகள் ஒன்றுக்கொன்று ஒவ்வாதிருந்தன. சிலர் எழுந்து, "கையால் கட்டிய இவ்வாலயத்தை இடித்துக் கையால் கட்டாத வேறொன்றை மூன்று நாளில் கட்டுவேன்' என்று இவன் சொல்ல நாங்கள் கேட்டோம்" என அவருக்கு எதிராகப் பொய்ச்சாட்சி கூறினர். அவர்களுடைய சாட்சி ஒவ்வாதிருந்தது. தலைமைக் குரு அவர்கள் நடுவில் எழுந்து, உனக்கு எதிராக இவர்கள் சாட்சி சொல்லுகின்றனரே, மறுமொழியாக ஒன்றும் சொல்லுவதற்கில்லையா?" என்றுகேட்டார். அவரோ, மறுமொழியாக ஒன்றும் சொல்லாமல் பேசாதிருந்தார். மீண்டும் தலைமைக் குரு, "போற்றுதற்குரிய இறைவனின் மகனான மெசியா நீதானோ?" என்று அவரைக் கேட்டார்.

அதற்கு யேசு, "நான்தான். மனுமகன் வல்லமையுள்ள இறைவனின் வலப்பக்கத்தில் அமர்ந்து, வான மேகங்கள் சூழ வருவதைக் காண்பீர்கள்" என்றார். தலைமைக் குருவோ, தம்முடைய ஆடைகளைக் கிழித்துக்கொண்டு "நமக்கு இன்னும் சாட்சிகள் எதற்கு? தேவநிந்தனை கேட்டீர்களே. உங்களுக்கு என்ன தோன்றுகிறது?" என்றார். அவர்கள் அனைவரும்

"இவன் சாவுக்குரியவன்" என்று தீர்ப்பிட்டார்கள். அப்போது சிலர், அவர்மேல் துப்பவும், அவர் முகத்தை மூடி, அறைந்து, "தீர்க்க தரிசனமாகச் சொல்" என்று கூறவும் தொடங்கினர். காவலரும் அவரைக் கன்னத்தில் அறைந்தனர்.

*நீங்கள் சொல்லுகிற அந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது.*

இராயப்பர் கீழே முற்றத்தில் இருக்கையில், தலைமைக் குருவின் ஊழியக்காரிகளுள் ஒருத்தி வந்து, இராயப்பர் குளிர் காய்ந்துகொண்டிருக்கக் கண்டு, அவரை உற்று நோக்கி, "நீயும் நாசரேத்தூர் யேசுவுடன் இருந்தாய்" என்றாள். அவரோ, அதை மறுத்து, "நீ என்ன சொல்லுகிறாய் என்றே விளங்கவில்லை; எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று சொல்லிவிட்டு, வெளியே வாசல் மண்டபத்திற்குச் சென்றார். கோழியும் கூவிற்று.

மீண்டும், ஊழியக்காரி அவரைக்கண்டு, அருகே இருந்தவர்களிடம், "இவன் அவர்களுள் ஒருவன்" என்று சொல்லத்தொடங்கினாள். அவரோ மீண்டும் மறுத்தார். மீளவும் சிறிது நேரத்திற்குப்பின் அங்கு இருந்தவர்கள் இராயப்பரை நோக்கி, "உண்மையாக நீ அவர்களுள் ஒருவன்; ஏனெனில், நீ கலிலேயன்" என்றார்கள். அவரோ, "நீங்கள் சொல்லுகிற அந்த ஆளை எனக்குத் தெரியவே தெரியாது" என்று சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார். உடனே இரண்டாம் முறையும் கோழி கூவிற்று. "இருமுறை கோழி கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று தமக்கு யேசு சொன்னதை இராயப்பர் நினைவுகூர்ந்து கண்ணீர் சிந்தி அழலானார்.

**யூதர்களின் அரசனை நான் விடுதலை செய்வது உங்களுக்கு விருப்பமா?**

காலையானதும் மூப்பர், மறைநூல் அறிஞர், மற்றத் தலைமைச் சங்கத்தார் இவர்களோடு தலைமைக் குருக்கள் கூடி ஆலோசனை செய்து யேசுவைக் கட்டி நடத்திச் சென்று பிலாத்திடம் கையளித்தனர். பிலாத்து "நீ யூதரின் அரசனோ?" என்று வினவ, அவர் மறுமொழியாக, "நீர் தான் சொல்லுகிறீர்" என்றார். தலைமைக் குருக்கள் பலவற்றைக் குறித்து அவர்மீது குற்றம் சாட்டினார்கள். பிலாத்து மீண்டும் அவரிடம், "நீ மறுமொழி ஒன்றும் சொல்வதற்கில்லையா?" என்று கேட்டு, "இதோ! உன்மேல் இத்தனை குற்றம் சாட்டுகிறார்களே" என்றான். யேசுவோ அதன்பின் மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. பிலாத்து அதனைக் கண்டு வியப்புற்றான்.

திருவிழாதோறும் அவர்கள் கோரும் ஒரு கைதியை விடுதலைசெய்வதுண்டு. அப்போது பரபாஸ் என்ற கைதி ஒருவன் இருந்தான். ஒரு குழப்பத்தில் கொலைசெய்த கலகக்காரருடன் பிடிபட்டவன் அவன். கூட்டம் வந்து, வழக்கம்போல் தாங்கள் கோருவதைச் செய்யும்படி பிலாத்தைக் கேட்கத் தொடங்கியது. அதற்கு அவன், "யூதர்களின் அரசனை நான் விடுதலை செய்வது உங்களுக்கு விருப்பமா?" என்று கேட்டான். ஏனெனில், தலைமைக் குருக்கள் அவரைக் கையளித்தது பொறாமையால்தான் என்பது அவனுக்குத் தெரியும். பரபாசையே விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்லும்படி தலைமைக் குருக்கள் கூட்டத்தைத் தூண்டிவிட்டனர். பிலாத்து மீண்டும் அவர்களிடம், "அப்படியானால் நீங்கள் யூதர்களின் அரசன் என்று சொல்லுகிறவனை நான் என்ன செய்யட்டும்?" என்று கேட்டான். அவர்கள், "அவனைச் சிலுவையில் அறையும்" என்று மீண்டும் கூச்சலிட்டார்கள். அதற்குப் பிலாத்து, "இவன் செய்த தீங்கு என்ன?" என்று கேட்டான். அவர்கள், "அவனைச் சிலுவையில் அறையும்" என்று இன்னும் உரக்கக் கூச்சலிட்டார்கள். பிலாத்து அவர்களைத் திருப்தி செய்ய விரும்பிப் பரபாசை விடுதலை செய்து, யேசுவைச் சாட்டைகளால் அடித்து, சிலுவையில் அறையும்படி கையளித்தான்.

*முள் முடி ஒன்றைப் பின்னி அவருக்குச் சூட்டினர்.*

பண்டவீரர் அவரை அரண்மனைக்குள், அதாவது ஆளுநனின் மனைக்குள் நடத்திச் சென்று, அங்கேயிருந்த பட்டாளத்தினரை எல்லாம் கூட்டினர். பின்பு அவருக்குச் சிவப்பு ஆடை உடுத்தி முள்முடி ஒன்றைப் பின்னித் தலையில் சூட்டி, "யூதரின் அரசே வாழி" என்று வணக்கம் செலுத்தத் தொடங்கினர். மேலும் அவரைத் தலையில் பிரம்பால் அடித்து, அவர் மேல் துப்பி, முழந்தாளிட்டு வணங்கினர். இப்படி அவரை எள்ளி நகையாடியபின், சிவப்பு ஆடையைக் கழற்றிவிட்டு, அவருடைய ஆடைகளை உடுத்தி அவரைச் சிலுவையில் அறைய வெளியே கூட்டிச் சென்றார்கள்.

*கொல்கொத்தா என்னும் இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர்.*

சிரேனே ஊரானாகிய சீமோன் என்னும் ஒருவன் நாட்டுப்புறத்திலிருந்து அவ்வழியாய் வந்துகொண்டிருந்தான். அவன், அலெக்சாந்தர், ரூப்பு என்பவர்களுக்குத் தந்தை. அவனை அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி கட்டாயப்படுத்தினர். 'மண்டை ஓடு' எனப் பொருள்படும் கொல்கொத்தா என்னும் இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர்.

**நெறி கெட்டவர்களோடு ஒன்ருக எண்ணப்பட்டார்.**

அங்கே அவர்கள் அவருக்கு வெள்ளைப்போளம் கலந்த இரசத்தைக் கொடுத்தனர். அவர் அதை ஏற்கவில்லை. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். பின்னர், அவர் ஆடைகளில் எதெது யார் யாருக்கு என்று பார்க்கச் சீட்டுப் போட்டு பகிர்ந்துகொண்டார்கள். அவரைச் சிலுவையில் அறையும்போது காலை ஒன்பது மணி. அவர்மேல் சாட்டிய குற்றத்தைக் குறிக்கும் பலகையில், 'யூதரின் அரசன்' என்று எழுதியிருந்தது. அவருக்கு வலப்பக்கத்தில் ஒருவனும், இடப்பக்கத்தில் ஒருவனுமாகக் கள்வர் இருவரை அவருடன் சிலுவையில் அறைந்தனர். இவ்வாறு 'நெறி கெட்டவர்களோடு ஒன்ருக எண்ணப்பட்டார்' என்னும் மறைநூல் வாக்கு நிறைவேறியது.

**பிறரைக் காப்பாற்றிய இவன் தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை.**

அவ்வழியே சென்றவர்கள் தலையை ஆட்டி, "ஆலயத்தை இடித்து மூன்று நாளில் கட்டுபவனே, சிலுவையிலிருந்து இறங்கி, உன்னையே காப்பாற்றிக்கொள்" என்று சொல்லி அவரைப் பழித்தனர். அவ்வாறே தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞருடன் சேர்ந்து அவரை எள்ளி நகையாடி, "பிறரைக் காப்பாற்றிய இவன் தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. இஸ்ராயேலின் அரசனுகிய மெசியா இப்பொழுது சிலுவையினின்று இறங்கட்டும்; கண்டு நம்புவோம்" என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டனர். அவருடன் அறையுண்டவர்களும் அவர்மேல் வசைகூறினர்.

**யேசு உரக்கக்கூவி உயிர் நீத்தார்.**

நண்பகல் தொடங்கி, மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. மூன்று மணிக்கு யேசு, "எலோயி, எலோயி, லாமா சபக்தானி" என்று உரக்கக் கூவினர். இதற்கு, "என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்பது பொருள். அருகிலிருந்தவர்களுள் சிலர் இதைக் கேட்டு, "இதோ! இவன் எலியாசைக் கூப்பிடுகிறுன்" என்றனர். ஒருவன் ஓடிப்போய்க் கடற்காளானைக் காடியில் தோய்த்து, ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்து, பொறுங்கள், எலியாஸ் இவனைக் கீழே இறக்க வருவாரா பார்ப்போம்" என்றுன். யேசு உரக்கக் கூவி உயிர் நீத்தார்.

இங்கு முழந்தாளிட்டு, சிறிது நேரம் மௌனமாயிருக்கவும்.

அப்போது ஆலயத்தின் திரை, மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது. எதிரே நின்று கொண்டிருந்த நூற்றுவர் தலைவன் இவ்வாறு உயிர் நீத்ததைக்கண்டு, "உண்மையில் இம்மனிதன் கடவுளின் மகனுய் இருந்தார்" என்றுன்.

பெண்கள் சிலரும் அங்கு இருந்தனர். தொலைவில் நின்றே பார்த்துக் கொண்டு இருந்தனர். அவர்களுள் மதலேன் மரியாளும், சின்ன யாகப்பருக்கும் யோசெத்துக்கும் தாயான மரியாளும் சலோமேயும் இருந்தனர். யேசு கலிலேயாவிலிருந்தபொழுது இவர்கள் அவரைப் பின் தொடர்ந்து அவருக்குப் பணிவிடை புரிந்தவர்கள். அவருடன் யெருசலேமுக்கு வந்திருந்த பெண்கள் வேறு பலரும் இருந்தனர்.

**சூசை கல்லறையின் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார்.**

இதற்குள் மாலைநேரம் ஆகிவிடவே, ஓய்வுநாளுக்கு முந்தின அந்நாள் ஆயத்தநாள். ஆதலால், அரிமத்தியாவூர் சூசை துணிவுடன் பிலாத்திடம் சென்று, யேசுவின் உடலைக் கேட்டார். இவர் தலைமைச் சங்கத்தின் செல்வாக்குடைய ஓர் உறுப்பினர். இவரும் கடவுளின் அரசை எதிர்பார்த்திருந்தவர். யேசு அதற்குள் இறந்துவிட்டதைப் பற்றிப் பிலாத்து வியப்புற்றான். நூற்றுவர் தலைவனை அழைத்து, "அவன் இதற்குள் இறந்துவிட்டானா?" என்று கேட்டான். நூற்றுவர் தலைவனிடமிருந்து செய்தியை அறிந்ததும், சடலத்தைச் சூசையிடம் அளித்தான். சூசை கோடித்துணி வாங்கி வந்து, யேசுவை இறக்கி, துணியில் சுற்றி, பாறையில் குடைந்த கல்லறையில் வைத்து, அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார். மதலேன் மரியாளும், யோசெத்தின் தாயாகிய மரியாளும் அவரை வைத்த இடத்தைப் பார்த்துக் கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

*அல்லது குறுகிய வாசகம்*

மாற்கு எழுதியபடி,
நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 15: 1-39

**யூதர்களின் அரசனை நான் விடுதலை செய்வது உங்களுக்கு விருப்பமா?**

காலையானதும் மூப்பர், மறைநூல் அறிஞர், மற்றத் தலைமைச் சங்கத்தார் இவர்களோடு தலைமைக் குருக்கள் கூடி ஆலோசனைசெய்து யேசுவைக் கட்டி நடத்திச் சென்று பிலாத்திடம் கையளித்தனர். பிலாத்து, "நீ யூதரின் அரசனோ?" என்று அவரை வினவ, அவர் மறுமொழியாக, "நீர்தான் சொல்லுகிறீர்" என்றார். தலைமைக் குருக்கள் பலவற்றைக் குறித்து, அவர்மீது குற்றம் சாட்டினார்கள். பிலாத்து மீண்டும் அவரிடம், "நீ மறுமொழி ஒன்றும் சொல்வதற்கில்லையா?" என்று கேட்டு, "இதோ! உன்மேல் இத்தனைக் குற்றம் சாட்டுகிறார்கள்" என்றான். யேசுவோ அதன்பின் மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. பிலாத்து அதைக் கண்டு வியப்புற்றான்.

திருவிழா தோறும் அவர்கள் கோரும் ஒரு கைதியை விடுதலை செய்வதுண்டு. அப்போது பரபாஸ் என்ற கைதி ஒருவன் இருந்தான். ஒரு குழப்பத்தில் கொலை செய்த கலகக்காரருடன் பிடிபட்டவன் அவன். கூட்டம் வந்து, வழக்கம்போல் தாங்கள் கோருவதைச் செய்யும்படி பிலாத்தைக் கேட்கத் தொடங்கியது. அதற்கு அவன், "யூதர்களின் அரசனை நான் விடுதலை செய்வது உங்களுக்கு விருப்பமா?" என்று கேட்டான். ஏனெனில், தலைமைக் குருக்கள் அவரைக் கையளித்தது பொறாமையால்தான் என்பது அவனுக்குத் தெரியும். பரபாசையே விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்லும்படி தலைமைக் குருக்கள் கூட்டத்தைத் தூண்டி விட்டனர். பிலாத்து மீண்டும் அவர்களிடம், "அப்படியானால் நீங்கள் யூதர்களின் அரசன் என்று சொல்லுகிறவனை நான் என்ன செய்யட்டும்?" என்று கேட்டான். அவர்கள், "அவனைச் சிலுவையில் அறையும்" என்று மீண்டும் கூச்சலிட்டார்கள். அதற்குப் பிலாத்து, "இவன் செய்த தீங்கு என்ன?" என்று கேட்டான். அவர்கள், "அவனைச் சிலுவையில் அறையும்" என்று இன்னும் உரக்கக் கூச்சலிட்டார்கள். பிலாத்து அவர்களைத் திருப்தி செய்ய விரும்பிப் பரபாசை விடுதலை செய்து, யேசுவைச் சாட்டைகளால் அடித்து, சிலுவையில் அறையும்படி கையளித்தான்.

*முள் முடி ஒன்றைப் பின்னி அவருக்குச் சூட்டினர்.*

படைவீரர் அவரை அரண்மனைக்குள், அதாவது ஆளுநனின் மனைக்குள் நடத்திச் சென்று, அங்கேயிருந்த பட்டாளத்தினரை எல்லாம் கூட்டினர். பின்பு அவருக்குச் சிவப்பு ஆடை உடுத்தி முள்முடி ஒன்றைப் பின்னித் தலையில் சூட்டி, "யூதரின் அரசே வாழி" என்று வணக்கம் செலுத்தத் தொடங்கினர். மேலும், அவரைத் தலையில் பிரம்பால் அடித்து, அவர்மேல் துப்பி, முழந்தாளிட்டு வணங்கினர். இப்படி அவரை எள்ளிநகையாடியபின், சிவப்பு ஆடையைக் கழற்றிவிட்டு, அவருடைய ஆடைகளை உடுத்தி அவரைச் சிலுவையில் அறைய வெளியே கூட்டிச் சென்றார்கள்.

*கொல்கொத்தா என்னும் இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர்.*

சீரேனே ஊரானாகிய சீமோன் என்னும் ஒருவன் நாட்டுப் புறத்திலிருந்து அவ்வழியே வந்துகொண்டிருந்தான். அவன், அலெக்சாந்தர், ரூப்பு என்பவர்களுக்குத் தந்தை. அவனை அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி கட்டாயப்படுத்தினர். 'மண்டை ஓடு' எனப் பொருள்படும் கொல்கொத்தா என்னும் இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றனர்.

*நெறிகெட்டவர்களோடு ஒன்றாக எண்ணப்பட்டார்.*

அங்கே அவர்கள் அவருக்கு வெள்ளைப்போளம் கலந்த இரசத்தைக் கொடுத்தனர். அவர் அதை ஏற்கவில்லை. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். பின்னர், அவர் ஆடைகளில் எதெது யார் யாருக்கு என்று பார்க்கச் சீட்டுப் போட்டுப் பகிர்ந்துகொண்டார்கள். அவரைச் சிலுவையில் அறையும்போது காலை ஒன்பது மணி. அவர் மேல் சாட்டிய குற்றத்தைக் குறிக்கும் பலகையில், 'யூதரின் அரசன்' என்று எழுதியிருந்தது. அவருக்கு வலப் பக்கத்தில் ஒருவனும், இடப் பக்கத்தில் ஒருவனுமாகக் கள்வர் இருவரை அவருடன் சிலுவையில் அறைந்தனர். இவ்வாறு, 'நெறி கெட்டவர்களோடு ஒன்றாக எண்ணப்பட்டார்' என்னும் மறைநூல் வாக்கு நிறைவேறியது.

*பிறரைக் காப்பாற்றிய இவன் தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.*

அவ்வழியே சென்றவர்கள் தலையை ஆட்டி, "ஆலயத்தை இடித்து மூன்று நாளில் கட்டுபவனே, சிலுவையிலிருந்து இறங்கி உன்னையே காப்பாற்றிக்கொள்" என்று சொல்லி அவரைப் பழித்தனர். அவ்வாறே தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞருடன் சேர்ந்து அவரை எள்ளி நகையாடி, "பிறரைக் காப்பாற்றிய இவன் தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. இஸ்ராயேலின் அரசனாகிய மெசியா இப்பொழுது சிலுவையினின்று இறங்கட்டும்; கண்டு நம்புவோம்" என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டனர். அவருடன் அறையுண்டவர்களும் அவர் மேல் வசை கூறினர்.

*யேசு உரக்கக் கூவி உயிர் நீத்தார்.*

நண்பகல் தொடங்கி, மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. மூன்று மணிக்கு யேசு, "எலோயி, எலோயி, லாமா சபக்தானி" என்று உரக்கக் கூவினார். இதற்கு, "என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்பது பொருள். அருகிலிருந்தவர்களுள் சிலர் இதைக் கேட்டு, "இதோ! இவன் எலியாசைக் கூப்பிடுகிறான்" என்றனர். ஒருவன் ஓடிப்போய்க் கடற்காளானைக் காடியில் தோய்த்து, ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்து, "பொறுங்கள், எலியாஸ் இவனைக் கீழே இறக்க வருவாரா பார்ப்போம்" என்றான். யேசு உரக்கக் கூவி உயிர் நீத்தார்.

*இங்கு முழந்தாளிட்டு, சிறிது நேரம் மௌனமாயிருக்கவும்.*

அப்போது ஆலயத்தின் திரை, மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது. எதிரே நின்று கொண்டிருந்த நூற்றுவர் தலைவன் இவ்வாறு இவர் உயிர் நீத்ததைக் கண்டு, "உண்மையில் இம்மனிதன் கடவுளின் மகனாய் இருந்தார்" என்றான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## மூன்றும் ஆண்டு

லூக்காஸ் எழுதியபடி,
நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 22:14-23:56

**நான் பாடுபடுவதற்குமுன் உங்களோடு இந்தப் பாஸ்கா உணவை உண்ண ஆசைமேல் ஆசையாயிருந்தேன்.**

நேரம் வந்ததும், யேசு பந்தியமர்ந்தார்; அப்போஸ்தலரும் அவருடன் அமர்ந்தனர். அவர் அவர்களை நோக்கி, "நான் பாடுபடுவதற்கு முன் உங்களோடு இந்தப் பாஸ்கா உணவை உண்ண ஆசைமேல் ஆசையாயிருந்தேன். ஏனெனில், கடவுளுடைய அரசில் இது நிறைவேறுமளவும் இதை இனி உண்ணமாட்டேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

பின்பு கிண்ணத்தை எடுத்து, நன்றி கூறி, "இதை வாங்கி உங்களுக்குள் பகிர்ந்துகொள்ளுங்கள். ஏனெனில், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; கடவுளின் அரசு வரும்வரை திராட்சைப்பழ இரசத்தைக் குடிக்க மாட்டேன்" என்றார்.

**இதை என் நினைவாகச் செய்யுங்கள்.**

மேலும் அப்பத்தை எடுத்து, நன்றி கூறி, பிட்டு அவர்களுக்கு அளித்து, "இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல், இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார். அவ்வாறே, உணவு அருந்தியபின் கிண்ணத்தை எடுத்து, "இக் கிண்ணம், உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தத்திலாகும் புதிய உடன்படிக்கை."

மனுமகனைக் காட்டிக் கொடுப்பவனுக்கு ஐயோ கேடு.

“என்னைக் காட்டிக் கொடுப்பவன் இதோ! என்னோடு பந்தியில் அமர்ந்து உண்ணுகிறான். மனுமகன் தேவ ஏற்பாட்டின்படி போகத்தான் போகிறார். ஆனால் அவரைக் காட்டிக்கொடுப்பவனுக்கு ஐயோ கேடு!” என்றார். “அப்படியானால் நம்முள் யார் இதைச் செய்யப்போகிறவன்?” என்று அவர்கள் தங்களுக்குள்ளே வினவத் தொடங்கினர்.

நான் உங்கள் நடுவே பணிவிடை புரிபவனைப்போல் இருக்கிறேன்.

மேலும் தங்களுள் யாரைப் பெரியவனாகக் கருதவேண்டும் என்ற வாக்குவாதம் அவர்களிடையே உண்டாயிற்று. அதற்கு அவர், “புறவினத்தாரின் அரசர்கள் அவர்கள் மீது அதிகாரம் காட்டுகின்றார்கள். அப்படி அதிகாரம் செலுத்துவோர் ‘நன்மை புரிவோர்’ எனப்படுகின்றனர். நீங்களோ அப்படி இருத்தல் ஆகாது. ஆனால், உங்களுள் பெரியவன் சிறியவன் போலவும், தலைவன் பணிவிடை புரிபவன் போலவும் இருக்கட்டும். யார் பெரியவன்? பந்தியில் அமர்பவனா, பணிவிடை செய்பவனா? பந்தியில் அமர்பவன் அன்றோ? நானோ உங்கள் நடுவே பணிவிடை புரிபவனைப்போல் இருக்கிறேன்.

“என் துன்பச் சோதனைகளில் என்னுடன் நிலைத்து நின்றவர்கள் நீங்களே. என் தந்தை எனக்கு அரசுரிமை வழங்கியதுபோல் நானும் உங்களுக்கு அதை வழங்கப் போகிறேன். எனவே, என் அரசில் என்னுடன் பந்தியில் உண்பீர்கள், குடிப்பீர்கள். இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களுக்கும் நடுவராக அரியணைகளில் வீற்றிருப்பீர்கள்.

நீ திருந்தியபின் உன் சகோதரரை உறுதிப்படுத்து.

“சீமோனே, சீமோனே, இதோ! சாத்தான் உங்களைக் கோதுமையைப்போல் புடைக்க உத்தரவு பெற்றுக்கொண்டான். ஆனால் உன் விசுவாசம் தவறாதபடி உனக்காக மன்றாடினேன். நீ திருந்தியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து” என்றார். அதற்கு இராயப்பர், “ஆண்டவரே, உம்மோடு சிறைக்கும் சாவுக்கும் உள்ளாக ஆயத்தமாய் இருக்கிறேன்” என்றார். யேசுவோ, “இராயப்பா, ‘நான் அவரை அறியேன்’ என்று நீ என்னை மும்முறை மறுதலிக்குமுன் இன்று கோழி கூவாது என உனக்குச் சொல்லுகிறேன்” என்றார்.

எழுதியுள்ளது என் மட்டில் நிறைவேற வேண்டும்.

பின்பு அவர்களை நோக்கி, “பணப்பை, கைப்பை, மிதியடி எதுவுமில்லாமல் உங்களை நான் அனுப்பியபோது உங்களுக்கு ஏதாவது குறைவாய் இருந்ததா?” என்று வினவினார். “இல்லை” என்றனர். “இப்

பொழுதோ, பணப்பை உள்ளவன் அதை எடுத்துக்கொள்ளட்டும். பைப்பை உள்ளவனும் அவ்வாறே செய்யட்டும். வாள் இல்லாதவன், தன் மேலாடையை விற்றுவிட்டு வாள் ஒன்று வாங்கிக்கொள்ளட்டும். ஏனெனில், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: 'நெறி கெட்டவர்களோடு ஒன்றாக எண்ணப்பட்டார்' என்று எழுதியுள்ளது என்மட்டில் நிறைவேற வேண்டும். என்னைப்பற்றியதெல்லாம் நிறைவு பெறுகின்றது'' என்றார். அவர்கள், ''ஆண்டவரே, இதோ! இரண்டு வாள் இங்கு உள்ளன'' என்றனர். அவரோ, ''போதும்'' என்றார்.

*கொடிய வேதனைக்குள்ளாகவே, மேலும் உருக்கமாய்ச் செபித்தார்.*

அங்கிருந்து வெளியே புறப்பட்டுச் சென்று வழக்கப்படி ஒலிவ மலைக்கு வந்தார். அவருடைய சீடர் அவரைப் பின் தொடர்ந்தனர். அவ்விடத்தை அடைந்ததும் அவர்களை நோக்கி, ''சோதனைக்கு உட்படாதபடி செபியுங்கள்'' என்றார். பின்னர் அவர்களை விட்டுக் கல்லெறி தொலைவு சென்று முழங்காலிலிருந்து, ''தந்தையே, உமக்கு விருப்பமானால், இத் துன்பக் கலத்தை என்னிடமிருந்து அகற்றியருளும்; எனினும், என் விருப்பம் அன்று, உம் விருப்பமே நிறைவேறட்டும்'' என்று செபித்தார். அப்போது வான தூதர் ஒருவர் அவருக்குத் தோன்றி அவரைத் திடப்படுத்தினார். கொடிய வேதனைக்குள்ளாகவே, மேலும் உருக்கமாய்ச் செபித்தார். அவருடைய வியர்வை பெரும் இரத்தத்துளிகளாக நிலத்தில் விழுந்தது.

செபத்தை விட்டெழுந்து, தம் சீடரிடம் வந்தார். அவர்கள் துயரத்தால் தூங்குவதைக் கண்டு, அவர்களை நோக்கி, ''என் தூங்குகிறீர்கள்? எழுந்திருங்கள், சோதனைக்கு உட்படாதபடி செபியுங்கள்'' என்றார்.

*யூதாசே, முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறாய்?*

அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே, இதோ! ஒரு கூட்டம் வந்தது. பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ் என்பவன் அவர்களுக்கு முன் சென்று யேசுவை முத்தமிட அணுகினான். யேசு அவனை நோக்கி, ''யூதாசே, முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக் கொடுக்கிறாய்?'' என்றார். சூழ நின்றவர்கள் நடக்கப் போவதை உணர்ந்து, அவரிடம் ''ஆண்டவரே, வாளால் வெட்டுவோமா?'' என்று கேட்டனர். அவர்களுள் ஒருவன் தலைமைக் குருவின் ஊழியனைத் தாக்கி அவனுடைய வலக் காதைத் துண்டித்தான். ''போதும், நிறுத்துங்கள்'' என்று யேசு சொல்லி, அவன் காதைத் தொட்டுக் குணப்படுத்தினார்.

யேசு தம்மைப் பிடிக்க வந்திருந்த தலைமைக் குருக்களையும், கோயிலின் காவல் தலைவர்களையும், மூப்பர்களையும் நோக்கி, "நீங்கள் கள்வனிடம் வருவதுபோல், வாளோடும் தடியோடும் வந்தீர்களோ? நாள்தோறும் கோயிலில் நான் உங்களோடு இருந்தும் நீங்கள் என்மேல் கைவைக்கவில்லை. ஆனால், இது உங்கள் நேரம்; இருள் ஆட்சிபுரியும் நேரம்" என்றார்.

*இராயப்பர் வெளியே போய் மனம் வெதும்பி அழுதார்.*

பின்னர் அவர்கள் அவரைப் பிடித்து, தலைமைக்குருவின் இல்லத்திற்குக் கூட்டிச் சென்றனர். இராயப்பரோ தொலைவிலே பின்தொடர்ந்தார். முற்றத்தின் நடுவில் அவர்கள் நெருப்பு மூட்டி, அதைச் சுற்றி உட்கார்ந்தனர். இராயப்பரும் அவர்களோடு போய் உட்கார்ந்து கொண்டார். ஊழியக்காரி ஒருத்தி அவர் அனல் அருகே உட்கார்ந்திருப்பதைக் கண்டு, அவரை உற்றுப் பார்த்து, "இவனும் அவனுடன் இருந்தான்" என்றாள். அவரோ, "எனக்கு அவரைத் தெரியாதம்மா" என்று மறுத்தார். சற்று நேரத்திற்குப்பின் மற்றொருவன் அவரைக் கண்டு, நீயும் அவர்களுள் ஒருவன்தான்" என, இராயப்பரோ, "இல்லையப்பா" என்றார். ஏறக்குறைய ஒருமணி நேரம் கழித்து இன்னொருவன், "உண்மையாகவே இவனும் அவனோடு இருந்தான்; ஏனெனில் இவன் கலிலேயன் தான்" என்று அழுத்தமாகக் கூறினான். இராயப்பரோ, "நீ சொல்வது எனக்குத் தெரியாதப்பா" என்றார். உடனே அவர் பேசிக்கொண்டிருக்கையிலேயே கோழி கூவிற்று.

ஆண்டவர் திரும்பி இராயப்பரை உற்று நோக்கவே, "இன்று கோழி கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று ஆண்டவர் கூறிய வார்த்தையை அவர் நினைவு கூர்ந்து, வெளியே போய் மனம் வெதும்பி அழுதார்.

*உன்னை அடித்தவன் யாரென்று தீர்க்கதரிசனமாய்ச் சொல்.*

யேசுவைக் காவல் செய்து கொண்டிருந்தவர்கள் அவரை அடித்து ஏளனம் செய்தனர். அவருடைய முகத்தை மூடி, "உன்னை அடித்தவன் யாரென்று தீர்க்கதரிசனமாகச் சொல்" என்றனர். இன்னும் அவரைப் பலவாறு பழித்துப் பேசலாயினர்.

*தங்கள் நீதிமன்றத்திற்கு அவரைக் கூட்டிப்போனார்கள்.*

பொழுது விடிந்ததும் மூப்பர் சபையினரும், தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் ஒன்றுகூடித் தங்கள் நீதிமன்றத்திற்கு அவரைக் கூட்டிப்போய், "நீ மெசியாவானால், எங்களுக்குச்சொல்" என்றனர். அவர்

அவர்களை நோக்கி, "நான் உங்களுக்குச் சொன்னால் நீங்கள் என்னை நம்ப மாட்டீர்கள். நான் உங்களை வினவினாலோ, நீங்கள் விடையளிக்கவும் மாட்டீர்கள். இனிமேல் மனுமகன் வல்லமையுள்ள கடவுள் வலப்பக்கத்தில் அமர்ந்திருப்பார்" என்றார். அதற்கு அனைவரும், "அப்படியானால் நீ கடவுளின் மகனோ?" என, அதற்கு அவர், "நான் கடவுளின் மகன் என்று நீங்களே சொல்லுகிறீர்கள்" என்றார். அவர்களோ, "நமக்கு இன்னும் சாட்சியம் எதற்கு? இவன் வாயிலிருந்தே இதைக் கேட்டோமே" என்றனர்.

அவர்கள் எல்லோரும் கூட்டமாக எழுந்து, பிலாத்திடம் அவரைக் கூட்டிச் சென்றனர்.

**இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.**

"இவன் நம் மக்களிடையே குழப்பம் உண்டாக்குகிறான். செசாருக்கு வரி செலுத்தக் கூடாதென்கிறான். தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக்கொள்கிறான். இப்படியெல்லாம் இவன் செய்யக் கண்டோம்" என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினர், "நீ யூதரின் அரசனோ?" என்று பிலாத்து வினவ, அவர் மறுமொழியாக, "நீர் தான் சொல்லுகிறீர்" என்றார். அப்போது பிலாத்து தலைமைக் குருக்களையும் மக்களையும் நோக்கி, "இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என்றான். அவர்கள் "கலிலேயா தொடங்கி இவ்விடம்வரை யூதேயா எங்கும் இவன் போதித்து மக்களிடையே கிளர்ச்சி செய்கிறான்" என்று வற்புறுத்திக் கூறினார்கள்.

இதைக்கேட்டதும், பிலாத்து, "இவன் கலிலேயனோ?" என்று வினவினான். அவர் ஏரோதின் அதிகாரத்திற்கு உட்பட்டவர் என்று அறிந்ததும், அந்நாட்களிலே யெருசலேமில் தங்கியிருந்த ஏரோதிடம் அவரை அனுப்பினான்.

**ஏரோது தன் படையோடு சேர்ந்து அவரை அவமானப்படுத்தினான்.**

ஏரோது யேசுவைக் கண்டபொழுது மிக்க மகிழ்ச்சியுற்றான். ஏனெனில், அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். ஆகவே அவர் அருஞ் செயல் ஏதாவது செய்யக் காணலாம் என்று நம்பி அவரைப் பார்க்க நெடுநாளாக ஆவலாயிருந்தான். பற்பல கேள்விகளை அவரிடம் கேட்டான். அவரோ அவனுக்கு மறுமொழியே கூறவில்லை. தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் அவர்மீது மும்முரமாகக் குற்றஞ்சாட்டிய வண்ணம் நின்றனர். ஏரோது தன் படையோடு சேர்ந்து அவரை அவமானப்படுத்தி எள்ளி நகையாடி, அவருக்குப் பகட்டான உடை அணிவித்துப் பிலாத்திடம் திருப்பியனுப்பினான். அதுவரை ஒருவரோடொருவர் பகைமைகொண்டிருந்த ஏரோதும் பிலாத்தும் அன்றே நண்பராயினர்.

*பிலாத்து யேசுவை அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டுவிட்டான்.*

பிலாத்து தலைமைக் குருக்களையும் தலைவர்களையும் மக்களையும் ஒன்று கூட்டி, அவர்களை நோக்கி, "மக்களிடையே குழப்பம் உண்டாக்குபவன் என்று இவனை என்னிடம் கொண்டுவந்தீர்களே. இதோ! உங்கள் முன்னிலையில் விசாரித்தும் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை. ஏரோதும் காணவில்லை. அவர் இவனை என்னிடம் திருப்பி அனுப்பிவிட்டார். சாவுக்குரியதொன்றும் இவன் செய்யவில்லை. ஆகவே, இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்" என்றான்.

மக்களோ ஒருவாய்ப்பட, "இவனை ஒழித்து விடும்; பரபாசை எங்களுக்கு விடுதலை செய்யும்" என்று உரக்கக் கத்தினர். பரபாசோ நகரிலே நடந்த ஒரு குழப்பத்தில் கலந்து கொலை செய்ததாகச் சிறைப் பட்டவன். பிலாத்து யேசுவை விடுதலை செய்ய விரும்பி மீண்டும் அவர்களிடம் பேசினான். அவர்களோ, "அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று கத்தினர். மூன்றும் முறையாக அவர்களை நோக்கி, "இவன் செய்த தீங்கு என்ன? சாவுக்குரிய குற்றமொன்றும் இவனிடம் காணோம். ஆகவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்" என்றான். அவர்களோ அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த குரலில் வற்புறுத்திக் கேட்டனர்.

அவர்கள் கூச்சலே வெற்றி கண்டது. அவர்கள் கேட்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்பளித்தான். குழப்பத்தில் கலந்து கொலை செய்ததற்காகச் சிறைப்பட்டவனை அவர்கள் கேட்டுக் கொண்டபடியே விடுதலை செய்தான். யேசுவையோ அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டு விட்டான்.

*யெருசலேம் மகளிரே, எனக்காக அழாதீர்.*

அவரைக் கூட்டிச் செல்லும்போது வயலிலிருந்து வந்து கொண்டிருந்த சீரேனே ஊரானாகிய சீமோன் என்பவனைப் பிடித்து அவன்மேல் யேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப் பின்னாக அதைச் சுமந்து போகச் செய்தனர்.

திரளான மக்களும், அவருக்காக மாரடித்துக்கொண்டு புலம்பும் பெண்களும் கூட்டமாக அவரைப் பின்தொடர்ந்தனர். யேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "யெருசலேம் மகளிரே, எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவுமே அழுங்கள். ஒருநாள் வரும். அன்று 'மலடிகள் பேறுபெற்றவர்கள், பிள்ளைப்பேறற்ற வயிறுகளும், பாலூட்டாத கொங்கைகளும் பேறுபெற்றவை' என்பார்கள். அப்பொழுது மலைகளைப் பார்த்து, 'எங்கள்மேல் விழுங்கள்,' குன்றுகளைப்

பார்த்து, 'எங்களை மூடிவிடுங்கள்' என்று சொல்லத் தொடங்குவார்கள். பச்சைமரத்திற்கே இப்படிச் செய்கிறார்கள் என்றால், பட்டமரத்திற்கு என்ன நேருமோ'' என்றார். மரண தண்டனைக்காக இரு குற்றவாளிகளையும் அவரோடே கூட்டிச் சென்றனர்.

*தந்தையே, அவர்களை மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று தெரியவில்லை.*

மண்டை ஓடு என்னப்படும் இடத்திற்கு வந்தபின் அவரையும் அவரது வலப் பக்கத்தில் ஒருவனும் இடப்பக்கத்தில் மற்றவனுமாக அக்குற்றவாளிகளையும் சிலுவையில் அறைந்தனர். யேசு, ''தந்தையே, அவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை'' என்று சொன்னார். அவர்களோ அவருடைய ஆடைகளைப் பகிர்ந்துகொள்ளச் சீட்டுப் போட்டனர்.

*இவன் யூதரின் அரசன்.*

மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர். தலைவர்களும், ''மற்றவர்களைக் காப்பாற்றினான். இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப் பெற்றவருமானால் தன்னையே காப்பாற்றிக் கொள்ளட்டும்'' என்று அவரை ஏளனம் செய்தனர். படைவீரர்களும் அணுகி அவருக்குக் காடியைக் கொடுத்து, ''நீ யூதரின் அரசனானால் உன்னையே காப்பாற்றிக் கொள்'' என்று எள்ளி நகையாடினர். 'இவன் யூதரின் அரசன்' என்று எழுதியிருந்த பலகையை அவர் தலைக்கு மேல் வைத்திருந்தனர்.

*இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்.*

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன் ''நீ, மெசியா அல்லவா? உன்னையும் எங்களையும் காப்பாற்று'' என்று அவரைப் பழித்தான். மற்றவனோ, ''கடவுள் மட்டில் உனக்கு அச்சமே இல்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகியிருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. ஏனெனில் நம் செயல்களுக்குத் தக்க பலனைப் பெறுகிறோம். இவரோ, ஒரு குற்றமும் செய்யவில்லை'' என்று அவனைக் கடிந்து கொண்டான். பின்பு அவன், ''யேசுவே, நீர் அரசுரிமையோடு வரும்போது என்னை நினைவுகூரும்'' என்றான். அவனுக்கு யேசு, ''இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று நான் உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார்.

*தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.*

. அப்போது ஏறக்குறைய நண்பகல் வேளை. மூன்று மணிவரை கதிரோன் மறைந்திருக்க, நாடெங்கும் இருள் உண்டாயிற்று. ஆலயத்தின்

திரை நடுவில் கிழிந்தது. "தந்தையே, உமது கையில் என் ஆவியை ஒப் படைக்கிறேன்" என்று உரக்கக் கூவினார். இதைச் சொன்னதும் உயிர் நீத்தார்.

*இங்கு முழந்தாளிட்டு சிறிது நேரம் மௌனமாயிருக்கவும்.*

நிகழ்ந்ததைக் கண்ட நூற்றுவர் தலைவன், "உள்ளபடியே இவர் நீதிமான்தான்" என்று சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தினான். வேடிக்கை பார்க்க வந்த மக்கட் கூட்டம் நிகழ்ந்ததைக் கண்டு, மார்பில் அறைந்துகொண்டு திரும்பியது.

அவருக்கு அறிமுகமானவர்களும், கலிலேயாவிலிருந்து அவரைப் பின்தொடர்ந்த பெண்களும் தொலைவில் நின்று இதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

**சூசை யேசுவின் உடலைத் தன் கல்லறையில் அடக்கம் செய்தார்.**

சூசை என்ற ஒருவர் இருந்தார். இவர் தலைமைச் சங்கத்தின் உறுப் பினர். நல்லவர், நீதிமான். அவர்களுடைய திட்டத்திற்கும் செயலுக் கும் அவர் இணங்கவில்லை. யூதர்களுடைய ஊராகிய அரிமத்தியாவைச் சார்ந்தவர்; கடவுளுடைய அரசை எதிர்நோக்கியிருந்தவர். அவர் பிலாத்தை அணுகி யேசுவின் உடலைக்கேட்டார். அதைச் சிலுவை யிலிருந்து இறக்கிக் கோடித்துணியில் சுற்றி, பாறையில் குடைந்திருந்த கல்லறையில் அடக்கம் செய்தார். அதுவரை யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. அன்று ஆயத்த நாள். ஓய்வுநாள் தொடங்கும் வேளை. கலிலேயாவிலிருந்து யேசுவோடு வந்திருந்த பெண்களும் சூசையுடன் கூடவே இருந்து கல்லறையையும், உடலை அங்கு வைத்த வகையையும் கவனித்தனர். திரும்பிச் சென்று வாசனைப் பொருள்களையும், பரிமளத் தைலங்களையும் ஆயத்தப்படுத்தினர். கட்டளைப்படி ஓய்வுநாளை அனு சரித்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது குறுகிய வாசகம்

லூக்காஸ் எழுதியபடி,
நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 23 : 1-49

அக்காலத்தில் :

மூப்பர் சபையினரும், தலைமைக் குருக்களும் எழுந்து, பிலாத்திடம் யேசுவைக் கூட்டிச் சென்றனர்.

*இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.*

"இவன் நம் மக்களிடையே குழப்பம் உண்டாக்குகிறான். செசாருக்கு வரி செலுத்தக் கூடாதென்கிறான். தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக்கொள்ளுகிறான். இப்படியெல்லாம் இவன் செய்யக் கண்டோம்" என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினர். "நீ, யூதரின் அரசனோ?" என்று பிலாத்து வினவ, அவர் மறுமொழியாக, "நீர்தான் சொல்லுகிறீர்" என்றார். அப்போது, பிலாத்து தலைமைக் குருக்களையும் மக்களையும் நோக்கி, "இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என்றான். அவர்கள், "கலிலேயாதொடங்கி இவ்விடம்வரை யூதேயா எங்கும் இவன் போதித்து மக்களிடையே கிளர்ச்சி செய்கிறான்" என்று வற்புறுத்திக் கூறினார்கள்.

இதைக் கேட்டதும், பிலாத்து, "இவன் கலிலேயனோ?" என்று வினவினான். அவர் ஏரோதின் அதிகாரத்திற்கு உட்பட்டவர் என்று அறிந்ததும், அந்நாட்களிலே யெருசலேமில் தங்கியிருந்த ஏரோதிடம் அவரை அனுப்பினான்.

*ஏரோது தன்படையோடு சேர்ந்து அவரை அவமானப்படுத்தினான்.*

ஏரோது யேசுவைக் கண்டபொழுது மிக்க மகிழ்ச்சியுற்றான். ஏனெனில், அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். ஆகவே, அவர் அருஞ்செயல் ஏதாவது செய்யக் காணலாம் என்று நம்பி அவரைப் பார்க்க நெடுநாளாக ஆவலாயிருந்தான். பற்பல கேள்விகளை அவரிடம் கேட்டான். அவரோ அவனுக்கு மறுமொழியே கூறவில்லை. தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் அவர்மீது மும்முரமாகக் குற்றஞ் சாட்டிய வண்ணம் நின்றனர். ஏரோது தன் படையோடு சேர்ந்து அவரை அவமானப்படுத்தி, எள்ளி நகையாடி, அவருக்குப் பகட்டான உடை அணிவித்துப் பிலாத்திடம் திருப்பியனுப்பினான். அதுவரை ஒருவரோடொருவர் பகைமைகொண்டிருந்த ஏரோதும் பிலாத்தும் அன்றே நண்பராயினர்.

பிலாத்து யேசுவை அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டுவிட்டான்.

பிலாத்து தலைமைக் குருக்களையும் தலைவர்களையும் மக்களையும் ஒன்று கூட்டி, அவர்களை நோக்கி, "மக்களிடையே குழப்பம் உண்டாக்குபவன் என்று இவனை என்னிடம் கொண்டுவந்தீர்களே. இதோ! உங்கள் முன்னிலையில் விசாரித்தும் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை. ஏரோதும் காணவில்லை. அவர் இவனை என்னிடம் திருப்பி அனுப்பிவிட்டார். சாவுக்குரியதொன்றும் இவன் செய்யவில்லை. ஆகவே, இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்" என்றான்.

மக்களோ ஒருவாய்ப்பட, "இவனை ஒழித்து விடும்; பரபாசை எங்களுக்கு விடுதலை செய்யும்" என்று உரக்கக் கத்தினர். பரபாசோ நகரிலே நடந்த ஒரு குழப்பத்தில் கலந்து கொலை செய்ததாகச் சிறைப் பட்டவன். பிலாத்து யேசுவை விடுதலை செய்ய விரும்பி மீண்டும் அவர்களிடம் பேசினான். அவர்களோ, "அவனைச் சிலுவையில் அறையும்," என்று கத்தினர். மூன்றாம் முறையாக அவர்களை நோக்கி, "இவன் செய்த தீங்கு என்ன? சாவுக்குரிய குற்றமொன்றும் இவனிடம் காணேன். ஆகவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்" என்றான். அவர்களோ அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த குரலில் வற்புறுத்திக் கேட்டனர்.

அவர்கள் கூச்சலே வெற்றி கண்டது. அவர்கள் கேட்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்பளித்தான். குழப்பத்தில் கலந்து கொலை செய்ததற்காகச் சிறைப்பட்டவனை அவர்கள் கேட்டுக் கொண்டபடியே விடுதலை செய்தான். யேசுவையோ அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டு விட்டான்.

யெருசலேம் மகளிரே, எனக்காக அழாதீர்.

அவரைக் கூட்டிச் செல்லும்போது வயலிலிருந்து வந்து கொண்டிருந்த சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவனைப் பிடித்து அவன்மேல் யேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப் பின்னாக அதைச் சுமந்து போகச் செய்தனர். திரளான மக்களும், அவருக்காக மாரடித்துக்கொண்டு புலம்பும் பெண்களும் கூட்டமாக அவரைப் பின்தொடர்ந்தனர். யேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "யெருசலேம் மகளிரே, எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவுமே அழுங்கள். ஒருநாள் வரும் அன்று 'மலடிகள் பேறுபெற்றவர்கள். பிள்ளைப்பேறற்ற வயிறுகளும், பாலூட்டாத கொங்கைகளும் பேறுபெற்றவை' என்பார்கள். அப்பொழுது மலைகளைப் பார்த்து, 'எங்கள்மேல் விழுங்கள்' குன்றுகளைப் பார்த்து, 'எங்களை மூடிவிடுங்கள்' என்று சொல்லத் தொடங்குவார்கள்.

பச்சைமரத்திற்கே இப்படிச் செய்கிறார்கள் என்றால், பட்டமரத்திற்கு என்ன நேருமோ" என்றார். மரண தண்டனைக்காக இரு குற்றவாளிகளையும் அவரோடே கூட்டிச் சென்றனர்.

***தந்தையே, அவர்களை மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை.***

மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்தபின் அவரையும் அவரது வலப்பக்கத்தில் ஒருவனும், இடப்பக்கத்தில் மற்றவனுமாக அக்குற்றவாளிகளையும் சிலுவையில் அறைந்தனர். யேசு, "தந்தையே, அவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை" என்று சொன்னார். அவர்களோ அவருடைய ஆடைகளைப் பகிர்ந்து கொள்ளச் சீட்டுப் போட்டனர்.

***இவன் யூதரின் அரசன்.***

மக்கள் வேடிக்கைபார்த்துக் கொண்டு நின்றனர். தலைவர்களும், "மற்றவர்களைக் காப்பாற்றினான். இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப் பெற்றவருமானால் தன்னையே காப்பாற்றிக் கொள்ளட்டும்" என்று அவரை ஏளனம் செய்தனர். படைவீரர்களும் அணுகி, அவருக்குக் காடியைக் கொடுத்து, "நீ யூதரின் அரசனானால் உன்னையே காப்பாற்றிக் கொள்" என்று எள்ளி நகையாடினர். 'இவன் யூதரின் அரசன்' என்று எழுதியிருந்த பலகையை அவர் தலைக்குமேல் வைத்திருந்தனர்.

***இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்.***

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன் "நீ மெசியா அல்லவா? உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்தான். மற்றவனோ, கடவுள் மட்டில் உனக்கு அச்சமே இல்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாயிருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. ஏனெனில், நம் செயல்களுக்குத் தக்க பலனைப் பெற்றோம். இவரோ ஒரு குற்றமும் செய்யவில்லை" என்று அவனைக் கடிந்துகொண்டான். பின்பு அவன், "யேசுவே, நீர் அரசுரிமையோடு வரும்போது என்னை நினைவு கூரும்" என்றான். அவனுக்கு யேசு, "இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று நான் உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

***தந்தையே, உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.***

அப்போது ஏறக்குறைய நண்பகல் வேளை, மூன்று மணி வரை கதிரோன் மறைந்திருக்க, நாடெங்கும் இருள் உண்டாயிற்று. ஆலயத்தின் திரை நடுவில் கிழிந்தது. "தந்தையே, உமது கையில் என் ஆவியை

ஒப்படைக்கிறேன்'' என்று யேசு உரக்கக் கூவினர். இதைச் சொன்னதும் உயிர் நீத்தார்.

*இங்கு முழந்தாட்பணிந்து, சிறிது நேரம் மௌனமாயிருக்கவும்.*

நிகழ்ந்ததைக் கண்ட நூற்றுவர் தலைவன், "உள்ளபடியே, இவர் நீதிமான்தான்'' என்று சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தினன். வேடிக்கை பார்க்க வந்த மக்கட் கூட்டம் நிகழ்ந்ததைக் கண்டு, மார்பில் அறைந்துகொண்டு திரும்பியது.

அவருக்கு அறிமுகமானவர்களும், கலிலேயாவிலிருந்து அவரைப் பின்தொடர்ந்த பெண்களும் தொலைவில் நின்று இதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

# பரிசுத்த வாரத்தின் திங்கள்

## முதல் வாசகம்

*அவர் கூக்குரலிட மாட்டார்; அவர் குரல் தெருவிலே கேட்காது.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 42 : 1-7

ஆண்டவர் கூறுவதாவது :

"இதோ நம் ஊழியன், அவரை நாம் ஆதரிக்கிறோம், அவர் நம்மால் தேர்ந்துகொள்ளப்பட்டவர், அவரிடத்தில் நம் உள்ளம் பூரிப்படைகின்றது, அவர்மேல் நம்முடைய ஆவியைத் தங்கச் செய்தோம், அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். அவர் சச்சரவு செய்ய மாட்டார், அவர் முகத்தாட்சண்ணியம் பாரார். கூக்குரலிடவும் மாட்டார்; அவர் குரல் தெருவிலே கேட்காது. அவர் நெறிந்த நாணலை முறியார், புகையும் திரியை அணையார். உண்மையுள்ளவராய் அறத்தைக் கொணர்வார். உலகில் அறத்தை நிலைநாட்டும்வரை, அவர் மனந்தளர மாட்டார், ஊக்கங்குறைய மாட்டார்; அவருடைய சட்டத்திற்காகத் தீவுகளும் காத்திருக்கின்றன.''

வான்வெளியைப் படைத்து அதை விரித்தவரும், மண்ணுலகை நிலைநிறுத்தி, அதில் செடிகளை முளைப்பித்தவரும், அதன்மேல் இருப்பவர்களுக்கு மூச்சைக் கொடுத்து, நடமாடுகிறவர்களுக்கு ஆவியைத் தந்தவருமான ஆண்டவராகிய கடவுள் கூறுகிறார்:

"ஆண்டவராகிய நாமே அறத்தை நிலைநாட்ட உன்னை அழைத்திருக்கிறோம், உன் கையைப் பிடித்து உன்னைக் காத்தோம்; குருடர்களுக்குக் கண்களைத் திறக்கவும், கட்டுண்டவரைத் தளையினின்று விடுவிக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும், உன்னை மக்களுக்கு உடன்படிக்கையாகவும், புறவினத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்தினோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 26 : 1. 2. 3. 13–14 (பல்லவி: 1a)

பல்லவி : ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு.

ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு: நான் யாருக்கு அஞ்ச
1 வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான்
நடுங்கவேண்டும்?
பல்லவி

என் பகைவர்களும் எதிரிகளுமாகிய தீயோர் என்னை விழுங்க வருவது
2 போல் என்னைத் தாக்கும் போது, அவர்களே தடுமாறி விழுந்து
போயினர்.
பல்லவி

எனக்கெதிராய் அவர்கள் பாளையம் இறங்கினாலும் என்நெஞ்சம் கலங்காது.
3 எனக்கெதிராய்ப் போரெழுந்தாலும் நான் நம்பிக்கையோடிருப்பேன்.
பல்லவி

நானோ வாழ்வோருடைய நாட்டில், ஆண்டவருடைய நலன்களைக்
13 காண்பேனென நம்புகிறேன்.

ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு: உன் உள்ளம் திடம்
14 கொள்வதாக, ஆண்டவரை எதிர்பார்த்திரு.
பல்லவி

## நற்செய்திக்கு முன் வசனம்

எங்கள் அரசரே வாழி:
எங்கள் குற்றம் கண்டு இரக்கம் கொண்டவர் நீர் ஒருவரே.

## நற்செய்தி வாசகம்

*எனது அடக்க நாளைக் குறிப்பதற்கென்று இதைச் செய்யும்படி அவளை விட்டுவிடுங்கள்.*

*அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்* *12 : 1-11*

பாஸ்காவுக்கு ஆறுநாள் இருக்கும்போது, யேசு பெத்தானியாவுக்கு வந்தார். அங்கேதான் அவர் லாசரை இறந்தோரினின்று உயிர்ப்பித்தது. அங்கு அவருக்கு விருந்து அளித்தனர். மார்த்தாள் பணிவிடை செய்தாள். அவரோடு பந்தியமர்ந்தவர்களுள் லாசரும் ஒருவன். மரியாள் நரந்தம் என்னும் விலையுயர்ந்த நல்ல பரிமளத் தைலம் ஓர் இராத்தல் கொண்டு வந்து, யேசுவின் பாதங்களில் பூசி அவற்றைக் கூந்தலால் துடைத்தாள். தைலத்தின் நறுமணம் வீடு முழுவதும் பரவியது.

அவரைக் காட்டிக்கொடுக்கவிருந்தவனும், அவருடைய சீடருள் ஒருவனுமான யூதாஸ் இஸ்காரியோத்து, "ஏன் இந்தத் தைலத்தை முந்நூறு வெள்ளிக் காசுக்கு விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாது?" என்றான். ஏழைகள்மீது கவலையிருந்ததாலன்று அவன் இப்படிக் கூறியது; திருடனாயிருந்ததால்தான். தன்னிடம் ஒப்படைத்திருந்த பொதுப் பணத்திலிருந்து காசை அவன் எடுத்துக்கொள்வதுண்டு. யேசுவோ, "விட்டு விடு; எனது அடக்க நாளைக் குறிக்கும்படி அவள் இதைச் செய்யட்டும். ஏனெனில், ஏழைகள் உங்களோடு என்றும் உள்ளனர்; நானோ உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை" என்றார்.

அவர் அங்கிருப்பதைக் கேள்வியுற்ற யூதர் பெருங் கூட்டமாக வந்தனர். யேசுவுக்காக மட்டும் வரவில்லை; இறந்தவர்களிடமிருந்து யேசு உயிர்ப்பித்த லாசரைக் காண்பதற்காகவும் வந்தனர். அவன் பொருட்டு யூதருள் பலர் யேசுவிடம் போய் அவரில் விசுவாசங் கொண்டனர். ஆதலால், லாசரையும் கொன்றுபோடத் தலைமைக் குருக்கள் முடிவு செய்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பரிசுத்த வாரத்தின் செவ்வாய்

## முதல் வாசகம்

*உலகத்தின் எல்லைவரையில் நமது மீட்பு எட்டும்படி,*
*புறவினத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினோம்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 49:1-6

தீவுகளே, செவிகொடுத்துக் கேளுங்கள், தொலை நாட்டவரே, கூர்ந்து கவனியுங்கள்: கருப்பையிலேயே ஆண்டவர் என்னை அழைத்திருக்கிறார். என் தாய் வயிற்றிலேயே எனக்குப் பெயரிட்டிருக்கிறார். என் நாவைக் கூரிய வாளாக்கினார், தமது கையின் நிழலில் என்னைக் காத்தருளினார்; தீட்டிய அம்பாக என்னைச் செய்து, தமது அம்பறாத் தூணியில் ஒளித்து வைத்தார்.

என்னைப் பார்த்து: "இஸ்ராயேலே, நீ நம் ஊழியன், உன்னில் நாம் மகிமை யடைவோம்" என்றார். அதற்கு நான்: "பயனின்றி வீணாக உழைத்துச் சோர்ந்தேன், என் ஆற்றலைப் பயனின்றிச் செலவழித்தேன்; ஆயினும் என் நியாயம் ஆண்டவரின் பொறுப்பு. எனக்குரிய கைம்மாறு கடவுளிடம் உள்ளது" என்றேன்.

"யாக்கோபைத் தம்மிடம் அழைத்து வர, இஸ்ராயேலைத் தம்மிடம் கூட்டி வர, என்னைத் தம் ஊழியனாய் என் தாய் வயிற்றில், உருவாக்கிய ஆண்டவர் கூறுகிறார்; ஏனெனில் ஆண்டவர் திருமுன் நான் மகிமை யடைந்தேன், என் கடவுள் என்னுடைய வலிமை ஆனார். அவர் சொன்னார்: "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ராயேலில் எஞ்சினோரைத் திருப்பிக் கொணரவும், நமக்கு நீ ஊழியனாய் இருத்தல் பெரிதன்று. உலகத்தின் எல்லைவரையில் நமது மீட்பு எட்டும்படி, புறவினத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினோம்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 70 : 1-2. 3-4a. 5-6ab. 15, 17 (பல்லவி: 15 காண்)

பல்லவி : ஆண்டவரே, என் நா உமது மீட்புச் செயல்களை
எடுத்துரைக்கும்.

1 ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுகிறேன்: எந்நாளும் நான்
ஏமாற்றம் அடைய விடாதேயும்.
2 உமது நீதிக்கேற்ப எனக்கு விடுதலை அளித்துக் காத்தருளும்: எனக்கு
உம் செவிசாய்த்து என்னை மீட்டுக்கொள்ளும். பல்லவி

3 என் அடைக்கலப் பாறையாக நீர் இருந்தருளும்? கோட்டை அரணு
யிருந்து என்னை மீட்டருளும்: ஏனெனில், நீர் எனக்குக் கற்பாறையாகவும்
4 அரணுகவும் இருக்கிறீர்.
தீயவனின் கையினின்று, என் இறைவா. என்னை விடுவித்தருளும்.
பல்லவி

5 ஏனெனில், என் இறைவா, நான் உம்மையே எதிர்நோக்கி வாழ்கிறேன்:
ஆண்டவரே, என் இளமையிலிருந்து நீரே என் நம்பிக்கை.
6 பிறப்பிலிருந்து நீரே எனக்கு ஆதாரம்; தாயின் வயிற்றிலிருந்து நீரே
என் பாதுகாப்பு. பல்லவி

15 உமது அருள் நன்மையை என் நா எடுத்துரைக்கும்; நாள் முழுதும் உம்
அருட்துணையை எடுத்துச் சொல்லும்: உமது அருட்செயல்களுக்கோ
கணக்கே இல்லை.

17 இறைவா, நீர் எனக்கு என் இளமையிலிருந்தே அறிவு புகட்டினீர்:
இந்நாள்வரை நான் உமது வியத்தகு செயல்களை வெளிப்படுத்துகிறேன்.
பல்லவி

## நற்செய்திக்கு முன் வசனம்

பரம தந்தைக்குக் கீழ்ப்படிகின்ற எங்கள் அரசரே, வாழி :
அடிக்கக் கொண்டுபோகப்படும் சாந்தமான செம்மறிபோல
நீர் சிலுவையில் அறையப்படக் கொண்டு செல்லப்படுகிறீர்.

## நற்செய்தி வாசகம்

*உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்...*
*நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் கோழி கூவாது.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13:21-33. 36.38

அக்காலத்தில்:

தம் சீடர்களுடன் பந்தியமர்ந்த யேசு மனக் கலக்கத்தோடு, "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று வெளிப்படையாகக் கூறினார். இப்படிக் கூறியது யாரைப்பற்றி என்று சீடர் அறியாமல் திகைப்புற்று ஒருவரையொருவர் பார்த்தனர்.

யேசுவுடைய சீடர்களுள் ஒருவர் மார்பு பக்கமாய் அமர்ந்திருந்தார். அவர்மேல்தான் யேசு அன்புகொண்டிருந்தார். சீமோன் இராயப்பர் அவருக்குச் சைகை காட்டி, "யாரைப் பற்றிச் சொல்கிறார் என்று கேள்" என்றார். அவர் யேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டு, 'ஆண்டவரே, நீர் குறிப்பிடுவது யார்?" என்று கேட்டார். யேசுமறுமொழியாக, "அப்பத் துண்டை நான் யாருக்குத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன் தான்" என்று சொல்லி, அப்பத்தைத் தோய்த்து, சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாசுக்குக் கொடுத்தார். யூதாஸ் அப்பத் துண்டைப் பெற்றபின் அவனுக்குள் சாத்தான் நுழைந்தான்.

அப்போது யேசு அவனிடம், "செய்யவேண்டியதை விரைவில் செய்" என்றார். எதற்காக அவனிடம் இப்படிச் சொன்னார் என்பதைப் பந்தியில் இருந்த யாரும் கண்டுணரவில்லை. யூதாசிடம் பொதுப்பணம் இருந்ததால், "திருநாளுக்கு வேண்டியதை வாங்கிவா," அல்லது "ஏழைகளுக்கு ஏதாவது கொடு" என்று யேசு அவனுக்குச் சொல்லியிருக்கலாம் எனச் சிலர் எண்ணிக்கொண்டனர். அப்பத் துண்டை அவன் பெற்றுக் கொண்ட உடனே வெளியே போனான். அப்பொழுது இரவு.

அவன் வெளியே போனபின் யேசு சொன்னதாவது: "இப்பொழுது மனுமகன் மகிமை பெற்றார். கடவுளும் அவரால் மகிமை பெற்றார். கடவுள் அவரால் மகிமை பெற்றாரானால், கடவுளும் தம்மில் அவரை மகிமைப்படுத்துவார். அதையும் உடனே செய்வார். அன்புக்குழந்தைகளே, இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். என்னைத் தேடுவீர்கள். நான் யூதர்களுக்குச் சொன்னதுபோல உங்களுக்கும் இப்போது சொல்லுகிறேன்; நான் செல்லுமிடத்திற்கு உங்களால் வரமுடியாது.

அப்போது சீமோன் இராயப்பர், "ஆண்டவரே, எங்குச் செல்லுகிறீர்?" என்றார். யேசு மறுமொழியாக, "நான் செல்லுமிடத்திற்கு என்னைப் பின்தொடர இப்பொழுது உன்னால் முடியாது. பின்னரே என்னைப் பின்தொடர்வாய்" என்றார். அதற்கு இராயப்பர், "ஆண்டவரே, ஏன் இப்பொழுது நான் உம்மைப் பின்தொடர முடியாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்" என்றார். அதற்கு யேசு, "நீ எனக்காக உன் உயிரையும் கொடுப்பாயோ? உண்மையிலும் உண்மையாக உனக்குச் சொல்லுகிறேன்: நீ மும்முறை என்னை மறுதலிக்கு முன் கோழி கூவாது," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பரிசுத்த வாரத்தின் புதன்

## முதல் வாசகம்

***நிந்தை கூறுவோரிடமிருந்து என்முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை.***

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 50:4-9a

களைத்தவனை வார்த்தையால் ஊக்கும்படி, கற்றதை யுணர்த்தும் நாவை ஆண்டவர் எனக்களித்தார்; நாடோறும் காலையில் என்னை எழுப்புகிறார்; எழுப்பி, ஆசானுக்குச் செவி மடுப்பதுபோல் அவருக்கும் செவிமடுக்கும்படி என் செவிப்புலனைத் தூண்டுகிறார். கடவுளாகிய ஆண்டவர் என் காதுகளைத் திறந்தார்.

நானோ அவரை எதிர்த்துப் பேசவில்லை, அவரை விட்டுப் பின் வாங்கிப் போகவில்லை, துன்புறுத்துகிறவர்களுக்கு என் உடலைக் கையளித்தேன், தாடியைப் பிய்க்கிறவர்களுக்கு என் கன்னங்களைக் காட்டினேன்; நிந்தை கூறுவோர்க்கும், காறி உமிழ்வோர்க்கும், என் முகத்தை மறைத்துக் கொள்ளவில்லை. கடவுளாகிய ஆண்டவர் எனக்குத் துணை நிற்கிறார். ஆதலால் நான் கலக்கம் கொள்ளேன்; ஆதலால் என் முகத்தைக் கருங்கல்போல வைத்துக் கொண்டேன், அதற்காக வெட்கப் படேன் என்பது எனக்குத் தெரியும்.

என் சார்பில் தீர்ப்பு வழங்குபவர் அருகில் நிற்கிறார்; எனக்கு எதிராய் வழக்குத் தொடுப்பவன் எவன்? நடுவர்முன் ஒருமிக்க எழுந்து

நிற்போம். என்மேல் குற்றம் சுமத்துகிறவன் யார்? அவன் என்னை அணுகி வரட்டும். இதோ, கடவுளாகிய ஆண்டவர் எனக்குத் துணை நிற்கிறார், என்னைக் குற்றவாளியெனத் தீர்ப்பிடுகிறவன் யார்?

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 68 ; 7-9, 20-21, 30, 32-33 பல்லவி: 13cb)

பல்லவி: ஆண்டவரே, மிகுதியான உம் நன்மைத்தனத்திற்கு ஏற்ப,
உமக்குகந்த நேரத்தில் என் மன்றாட்டைக் கேட்டருளும்.

7 ஏனெனில்; உம் பொருட்டே நான் நிந்தனையை ஏற்றேன்; உம் பொருட்டே வெட்கத்தால் என் முகம் கவிழ்ந்து போயிற்று.

8 என் உறவினர்க்கும் நான் அந்நியனானேன்; என் சகோதரருக்கும் நான் வேற்று மனிதனானேன்.

9 உமது இல்லத்தின்மீது எனக்குண்டான ஆர்வம் என்னை எரித்துவிட்டது; உம்மை நிந்திப்பவர்களின் நிந்தனைகள் என்மேல் விழலாயின. பல்லவி

20 எனக்குற்ற நிந்தனையால் என் உள்ளம் உடைந்தது, தளர்வுறலானேன்; எனக்கு இரக்கம் காட்டுபவருண்டோ எனப் பார்த்தேன்: ஒருவருமில்லை. ஆறுதலளிப்பார் உண்டோ எனப் பார்த்தேன்: ஒருவரையும் காண வில்லை.

21 கசந்த பிச்சை எனக்கு உணவாகக் கொடுத்தனர்: என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தனர். பல்லவி

30 புகழ் இசைத்து இறைவனின் பெயரைப் புகழ்வேன்: நன்றி உணர்வோடு அவர் புகழ் சாற்றுவேன்.

32 எளியோரே, இதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளுங்கள்: இறைவனைத் தேடுவோரே, உங்கள் உள்ளம் புத்துயிர் பெறுவதாக.

33 ஏனெனில், ஏழைகளின் குரலை ஆண்டவர் கேட்டருளுகின்றார்: சிறைப் பட்ட தம் மக்களை அவர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

நற்செய்திக்கு முன் வசனம்

எங்கள் அரசரே வாழி :

எங்கள் குற்றம் கண்டு இரக்கம் கொண்டவர் நீர் ஒருவரே.

அல்லது

பரம தந்தைக்குக் கீழ்ப்படிகின்ற எங்கள் அரசரே வாழி;
அடிக்கக் கொண்டு போகப்படும் சாந்தமான செம்மறிபோல நீர்
சிலுவையில் அறையப்படக் கொண்டு செல்லப்படுகிறீர்.

## நற்செய்தி வாசகம்

*எழுதப்பட்டபடியே மனுமகன் போகிருர்; அவரைக் காட்டிக்
கொடுப்பவனுக்கோ ஐயோ கேடு.*

✣ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 26:14-25

அக்காலத்தில்:

பன்னிருவருள் ஒருவனுன யூதாஸ் இஸ்காரியோத்து என்பவன் தலைமைக் குருக்களிடம் சென்று அவர்களிடம், "எனக்கு என்ன தருவீர்கள்? நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேன்" என்று கூறினுன். அவர்களோ முப்பது வெள்ளிக்காசு அவனுக்குக் கொடுத்தனர். அதுமுதல் அவரைக் காட்டிக்கொடுக்க வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான்.

புளியாத அப்பத் திருவிழாவின் முதல்நாள் சீடர் யேசுவை அணுகி, "நீர் பாஸ்கா உணவை உண்ண உமக்கு நாங்கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறீர்?" எனக் கேட்டனர். யேசு கூறியது: "நகரத்தில் இன்னுரிடம் போய், 'என் நேரம் அருகிலுள்ளது; என் சீடருடன் உன் வீட்டில் பாஸ்கா கொண்டாடுவேன்' எனப் போதகர் கூறுகிருர் என்று சொல்லுங்கள். சீடரும் யேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்து பாஸ்கா உணவுக்கு ஏற்பாடு செய்தனர்.

மாலையானதும், தம் பன்னிரு சீடருடன் பந்தி அமர்ந்தார். அவர்கள் உண்ணும்பொழுது, "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்"என்ருர். அவர்கள் மிகவும் வருந்தி, "நானே ஆண்டவரே?" என்று ஒவ்வொருவரும் கேட்கத்தொடங்கினர்; அதற்கு அவர், "என்னுடன் பாத்திரத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான். மனுமகன் தம்மைப்பற்றி எழுதியிருக்கிறபடியே போகிருர். மனுமகனைக் காட்டிக் கொடுப்பவனுக்கோ ஐயோ கேடு! அவன் பிறவாது இருந்திருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்ருர். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், "நானே, ராபி?" என்று கேட்க அவரும், "நீயே சொல்லிவிட்டாய்" என்ருர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பரிசுத்த வாரத்தின் வியாழன்

# திருத்தைலத்தின் பலிபூசை

## முதல் வாசகம்

***ஆண்டவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார்: எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்கவும்; அவர்களுக்கு மகிழ்ச்சியின் தைலத்தைத் தரவும் என்னை அனுப்பியுள்ளார்.***

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் *61:1-3a, 6a, 8b-9*

ஆண்டவரின் ஆவி என்மேலே, ஏனெனில் ஆண்டவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார்; எளியோர்க்கு நற்செய்தி அறிவித்து, உள்ளம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும்; சிறைப்பட்டவர்களுக்கு விடுதலைச் செய்தியும், கட்டுண்டவர்களுக்கு மீட்புச் செய்தியும் அறிவிக்கவும்; ஆண்டவர் தம் அருளைத் தரும் ஆண்டையும், நம் கடவுள் பழிவாங்கும் நாளையும் தெரிவிக்கவும்; அழுகிறவர்கள் அனைவர்க்கும் ஆறுதல் அளிக்கவும்; சீயோனில் அழுகிறவர்களை மகிழ்விக்கவும்; சாம்பலுக்குப் பதிலாய் மணி முடியையும், அழுகைக்குப் பதிலாய் மகிழ்ச்சியின் தைலத்தையும், நைந்த உள்ளத்திற்குப் பதிலாய்ப் புகழ் என்னும் போர்வையையும் தரவும் ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார்.

நீங்களோ ஆண்டவருடைய அர்ச்சகர்கள் எனப்படுவீர்கள், நம் கடவுளின் திருப்பணியாளர்கள் எனப்பெயர் பெறுவீர்கள். உண்மையாய் அவர்களுக்குக் கைம்மாறு கொடுப்போம், அவர்களோடு முடிவில்லாத உடன்படிக்கை செய்வோம். அவர்களின் சந்ததி புறவினத்தார் நடுவிலும், அவர்களின் இனத்தார் மக்களினங்கள் மத்தியிலும் தெரிந்திருப்பர். அவர்களைப் பார்ப்பவர்கள் அனைவரும் ஆண்டவர் ஆசீர்வதித்த மக்களினம் இதுவே என அறிந்து கொள்வார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 88. 20-21, 24, 26 (பல்லவி: 1a காண்க)

பல்லவி: ஆண்டவரே, உம் அருட் செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன்.

20 'என் ஊழியன் தாவீதை நான் தேர்ந்தெடுத்தேன்: புனித தைலத்தால் அவரை அபிஷேகம் செய்தேன்.
21 'அதனால் என் கைவன்மை என்றும் அவருக்குத் துணை நிற்கச் செய்வேன்; என் புயப்பலம் அவரை உறுதிப்படுத்தச் செய்வேன். பல்லவி
24 'என் சொல்லுறுதியும் என் அருளும் அவரோடிருக்கும்: என் பெயரினால் அவரது வலிமை ஓங்கும்.
26 'நீரே என் தந்தை, என் இறைவன், எனக்கு மீட்பளிக்கும் அரண் என்று என்னை நோக்கிக் கூறுவார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**தந்தையும் கடவுளுமானவருக்கு நம்மை அரசகுல குருக்களாக்கினார்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 1:5-8

யேசு கிறிஸ்துவிடமிருந்து உங்களுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக. இவரே நம்பிக்கைக்குரிய சாட்சி, இறந்தோரிலிருந்து எழுந்தவருள் தலைப்பேறானவர், மண்ணுலக அரசர்களுக்குத் தலைமையானவர். இவர் நமக்கு அன்புசெய்து தமது இரத்தத்தினால் நம்முடைய பாவங்களினின்று நம்மை விடுவித்தார். மேலும் தம் தந்தையும் கடவுளுமானவருக்கு ஊழியம் செய்ய நம்மை அரசகுல குருக்களாக்கினார். இவருக்கே மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரியனவாகுக. ஆமென்.

இதோ அவர் மேகங்கள் சூழ வருகிறார். அனைவரும் அவரைக் காண்பர்; அவரை ஊடுருவக் குத்தினவர்களும் காண்பார்கள். அவருக்குச் செய்ததை நினைந்து மண்ணுலகின் குலத்தார் அனைவரும் புலம்பி அழுவர். ஆம், இது உண்மை. ஆமென்.

"அகரமும் னகரமும் நானே" என்கிறார் எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள். இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவர் அவரே.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் இசை. 61:1

**ஆண்டவரின் ஆவி என் மேலே:**
**எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க என்னை அனுப்பியுள்ளார்.**

## நற்செய்தி வாசகம்

**ஆண்டவருடைய ஆவி என் மேலே; ஏனெனில் என்னை அபிஷேகம் செய்துள்ளார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 4:16-21

அக்காலத்தில்:

யேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்திற்கு வந்தார். வழக்கப்படி ஓய்வுநாளன்று செபக்கூடத்திற்கு வந்து வாசிக்க எழுந்தார். இசையாஸ் எழுதிய இறைவாக்குகளின் ஏட்டுச் சுருளை அவரிடம் கொடுத்தனர். அதை விரித்ததும் பின்வரும் பகுதியைக் கண்டார். ‘ஆண்டவருடைய ஆவி என்மேலே, ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார்.’

பின்னர் ஏட்டைச் சுருட்டிப் பணிவிடைக்காரனிடம் கொடுத்துவிட்டு அமர்ந்தார். செபக்கூடத்தில் இருந்தவர்களின் கண்கள் அனைத்தும் அவரையே நோக்கிய வண்ணமாயிருந்தன. அப்போது அவர், “நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று” என்று கூறலானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பாஸ்கா விழாவின் மூன்று புனித நாட்கள்

# ஆண்டவரின் இராவுணவு விழாவில் மாலைப் பலிபூசை

## முதல் வாசகம்

***பாஸ்கா இராவுணவு பற்றிய விதிமுறைகள்.***

யாத்திராகமத்திலிருந்து வாசகம் *12 : 1-8. 11-14*

அந்நாட்களில் :

ஆண்டவர் எகிப்து நாட்டிலே மோயீசனுக்கும் ஆரோனுக்கும் திருவாக்கருளியதாவது : இம்மாதமே உங்களுக்கு மாதங்களின் தொடக்கமாம். இதுவே ஆண்டின் மாதங்களில் முதல் மாதமாம். நீங்கள் இஸ்ராயேல் மக்கள் கூட்டத்தார் யாவரையும் அழைத்துச் சொல்லவேண்டியதாவது :

இம் மாதத்தின் பத்தாம் நாள் குடும்பத்திற்கும் வீட்டிற்குமாக ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுக்கக் கடவர். ஆனால் ஒருவன் வீட்டில் இருக்கிறவர்கள் ஆட்டுக்குட்டியை உண்பதற்குப் போதுமானவர்களாய் இராமற்போனால் அவன், தன் அயல் வீட்டாரில் ஆட்டுக்குட்டியை உண்பதற்குத் தேவையான பேரை அழைத்து வருவான். ஆட்டுக்குட்டியோ, மறுவற்றதும் ஆண்பாலானதும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்கவேண்டும். ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் அந்த முறைப்படியே தெரிந்து கொள்ள வேண்டும். அதனை இம் மாதத்தின் பதினான்காம்

நாள்வரை வைத்திருந்து, இஸ்ராயேல் மக்களின் ஒவ்வொரு கூட்டத்தாரும் மாலையில் அதை அறுத்து, அதன் இரத்தத்தைச் சிறிது எடுத்து, ஆட்டை உண்ணும் வீட்டு வாயில் நிலைக்கால் இரண்டிலும் நிலையின் மேற் சட்டத்திலும் தெளிக்கவேண்டும். பின், அன்று இரவிலே, அடுப்பில் சுட்ட இறைச்சியைக் காட்டுக் கீரைகளோடும் புளியாத அப்பங்களோடும் உண்பார்கள்.

அதனை உண்ணவேண்டிய முறையாவது: நீங்கள் இடுப்பிலே கச்சைகட்டிக் காலிலே செருப்பு அணிந்தவர்களாயும், கையிலே கோலைப் பிடித்தவர்களாயும், அதனை விரைந்து உண்ணக் கடவீர்கள். ஏனென்றால் அது ஆண்டவருடைய பாஸ்கா (அதாவது: ஆண்டவருடைய கடத்தல்). உண்மையில் அந்த இரவிலே நாம் எகிப்து நாடெங்கும் கடந்து போய், எகிப்திலுள்ள மனிதன்முதல் விலங்குவரை தலைப் பேறுகளையெல்லாம் கொன்று, எகிப்தியத் தேவதைகளின்மீது நீதியைச் செலுத்துவோம். நாமே ஆண்டவர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்கு அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தைக் காணவே, உங்களை நாம் கடந்து போவோம். இவ்வாறு, நாம் எகிப்து நாட்டைத் தண்டிக்கும் போது, கொள்ளைநோய் உங்கள்மேல் வந்து அழிக்காதிருக்கும்.

நீங்களோ, அந்நாளை நினைவுகூர வேண்டிய நாளாகக்கொண்டு அதை உங்கள் தலைமுறை தோறும் ஆண்டவருடைய திருவிழா என்று எக்காலமும் கொண்டாடி வரக் கடவீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 115:3-4. 9-7bc. 8-9 (பல்லவி: 1 கொரி. 10:16 காண்க)

பல்லவி: திருக்கிண்ணத்தை ஏந்தி நாம் இறைபுகழ் கூறுவது
கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதலாமே.

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன
கைம்மாறு செய்வேன்?
4 மீட்புக்காக நன்றி கூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவ
ருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன்.
பல்லவி

6 ஆண்டவர்தம் அடியாரின் மரணம், அவருடைய பார்வையில் மிக
மதிப்புக்குரியது.
7 நான் உம் அடியேன்; உம் அடியாளின் மகன்: என் கட்டுகளை நீர்
அவிழ்த்துவிட்டீர்.
பல்லவி

8 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்: ஆண்டவருடைய திருப்
பெயரைக் கூவி அழைப்பேன்.
9 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும் அவருக்கு என் பொருத்தனை
களைச் செலுத்துவேன்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

*அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருகும்போதெல்லாம்
ஆண்டவர் மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்.*

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 11:23-26

சகோதரர்களே:

நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டது இதுவே. அதையே நான் உங்களுக்குக் கையளித்தேன். அதாவது, ஆண்டவராகிய யேசு, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்பத்தை எடுத்து நன்றி கூறி அதைப் பிட்டு: 'இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார். அவ்வாறே உணவு அருந்திய பின் கிண்ணத்தையும் எடுத்து 'இக் கிண்ணம் எனது இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை. இதைப் பருகும்போதெல்லாம் என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார்.

எனவே, நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருகும் போதெல்லாம் ஆண்டவர் வரும் வரையில் அவரது மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*நற்செய்திக்கு முன் வசனம்* *அரு. 13:14*

நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன்: நான் உங்களுக்கு அன்பு செய்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள் என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

***இறுதிவரை அவர்கள்மேல் அன்புகூரலானார்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *13 ; 1-15*

பாஸ்காத் திருவிழா தொடங்கவிருந்தது. தாம் இவ்வுலகினின்று தந்தையிடம் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டதென்று யேசு அறிந்திருந்தார். உலகிலிருந்த தம்மவர்மேல் அன்புகூர்ந்திருந்த அவர், இறுதி வரை அவர்கள்மேல் அன்புகூரலானார்.

இராவுணவு நடைபெறலாயிற்று. யேசுவைக் காட்டிக்கொடுக்குமாறு சீமோனின் மகனான யூதாஸ் இஸ்காரியோத்தை ஏற்கெனவே அலகை தூண்டியிருந்தது. தந்தை தம் கையில் அனைத்தையும் ஒப்படைத்துள்ளார் என்றும், தாம் கடவுளிடமிருந்து வந்ததுபோல் கடவுளிடமே திரும்பிச் செல்ல வேண்டும் என்றும் அறிந்தவராய், யேசு பந்தியிலிருந்து எழுந்து மேலாடையைக் களைந்துவிட்டு, ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். பின்னர், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, சீடர்களுடைய பாதங்களைக் கழுவி, இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்.

சீமோன் இராயப்பரிடம் வந்தார். "அவர் யேசுவிடம், ஆண்டவரே, நீரா என் பாதங்களைக் கழுவுவது!" என்றார். அதற்கு யேசு, "நான் செய்வது இன்னதென்று உனக்கு இப்போது தெரியாது. பின்னரே விளங்கும்" என்றார். இராயப்பரோ, "நீர் என் பாதங்களை ஒருபோதும் கழுவ விடமாட்டேன்" என, யேசு, "நான் உன்னைக் கழுவாவிடில் உனக்கு என்னோடு பங்கில்லை" என்றார். அப்போது சீமோன் இராயப்பர், அப்படியானால், "ஆண்டவரே, என் பாதங்களை மட்டுமன்று, என்

கைகளையும் தலையையும்கூடக் கழுவும்'' என்றார். யேசு அவரை நோக்கி, ''குளித்துவிட்டவன் தன் பாதங்களை மட்டும் கழுவினால் போதும்; அவன் முழுவதும் தூய்மையாயிருக்கிறான். நீங்களும் தூய்மையாயிருக்கிறீர்கள். ஆனால் எல்லோரும் தூய்மையாய் இல்லை'' என்றார். தம்மைக் காட்டிக் கொடுப்பவன் யாரென்று அவருக்குத் தெரிந்திருந்ததால், ''நீங்கள் எல்லோரும் தூய்மையாய் இல்லை,'' என்றார்.

அவர்களுடைய பாதங்களைக் கழுவியபின், தம் மேலாடையை அணிந்துகொண்டு மீண்டும் பந்தியில் அமர்ந்து, அவர்களை நோக்கி, ''நான் உங்களுக்குச் செய்தது இன்னதென்று விளங்கிற்றா? நீங்கள் என்னைப் போதகர் என்றும், ஆண்டவர் என்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுவது சரியே. நான் ஆண்டவர்தான், போதகர்தான். ஆகவே, ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவ வேண்டும். நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன். நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள்'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திருப்பாடுகளின் வெள்ளி

## முதல் வாசகம்

**நம் பாவங்களுக்காக அவர் காயப்பட்டார்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 52:13-53:12

இதோ, நம் ஊழியன் சிறப்படைவார், உயர்த்தப்படுவார், மேலோங்குவார், மிக உன்னதராவார்; பலபேர் அவரைக் கண்டு திடுக்கிட்டார்கள்—அவரது தோற்றம் அவ்வளவு சீர்குலைந்திருந்தது, மனிதசாயலே அவரிடம் இல்லை.—மனிதர்களின் வடிவே அவரிடம் காணப்படவில்லை, அதே அளவுக்கு மக்களினங்கள் பல திடுக்கிடும், அரசர்களும் அவரைப் பார்த்து வாய் பொத்தி நிற்பர்; ஏனெனில் சொல்லப்படாத ஒன்றைக் காண்பார்கள், இதுவரை கேட்டிராத ஒன்றைப் பார்ப்பார்கள். நாம் கேள்விப்பட்டதை யார் நம்பியிருக்கக்கூடும்? ஆண்டவரின் கைவன்மை யாருக்கு வெளிப்படுத்தப்பட்டது?

இளந்தளிர் போல் அவர் வளர்ந்தார், வறண்ட நிலத்திலிருக்கும் வேர்போலத் துளிர்த்தார்; அவரைப் பார்த்தோம், அவரிடம் அழகோ அமைப்போ இல்லை; கவர்ச்சியான தோற்றமும் இல்லை. இகழப்பட்டவர்,

மனிதரால் புறக்கணிக்கப்பட்டவர் ; அவர் துன்புறும் மனிதனுய்த் துயரத்திலாழ்ந்தவராய் இருந்தார் ; கண்டோர் கண் மறைத்து அருவருக்கும் ஒரு மனிதனைப்போல், அவர் இகழப்பட்டார், நாம் அவரை மதிக்கவில்லை. மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக்கொண்டார், நம்முடைய நோய்களைச் சுமந்துகொண்டார் ; ஆனால், அவர் தண்டனைக்குள்ளானவர் எனவும், கடவுளால் ஒதுக்கப்பட்டவர் எனவும், வாதிக்கப்பட்டவர் எனவும் நாம் எண்ணினோம்.

ஆனால் நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார், நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நொறுக்கப்பட்டார் ; நம்மை நலமாக்கும் தண்டனை அவர்மேல் விழுந்தது, அவருடைய காயங்களால் நாம் குணமடைந்தோம். ஆடுகளைப்போல் நாம் அனைவரும் வழி தவறி அலைந்தோம்.

கால்போன வழியே ஒவ்வொருவரும் போனோம்; நம் அனைவருடைய அக்கிரமங்களையும் ஆண்டவர் அவர்மேல் சுமத்தினார். அவர் கொடுமையாய் நடத்தப்பட்டார்; தாழ்மையாய் அதைத் தாங்கிக் கொண்டார்; அவர் வாய்கூடத் திறக்கவில்லை; கொல்வதற்காக இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக்குட்டிபோலும், மயிர் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறியாடுபோலும் அவர் வாய் திறக்கவில்லை.

கொடிய தீர்ப்புக்குப்பின் அவர் கொண்டு செல்லப்பட்டார், அவருக்கு நேர்ந்ததைப்பற்றி அக்கறை கொண்டவன் யார்? ஆம், அவர் வாழ்வோர் உலகினின்று எடுக்கப்பட்டார், தம் இனத்தாரின் அக்கிரமங்களுக்காகவே அவர் வதைக்கப்பட்டார். பொல்லாதவர்களோடு அவருக்குக் கல்லறை தந்தார்கள், சாகும்போது அவர் தீமை செய்கிறவர்களோடு இருந்தார்; ஆயினும் வன்முறைச் செயல் ஏதும் அவர் செய்தவர் அல்லர். அவருடைய வாயில் பொய்யே வந்ததில்லை.

அவரை வேதனையிலாழ்த்தி நொறுக்க ஆண்டவர் விரும்பினார். தம்மையே பாவத்திற்காக அவர் பலியாக்கினால், பெரியதொரு சந்ததியைக் கண்டு நீடுவாழ்வார்: ஆண்டவரின் திருவுளம் அவர் கையால் நிறைவேறும். தம் ஆன்மா பட்ட வேதனையின் பலனை அவர் கண்டு நிறைவு கொள்வார்: நம் ஊழியனாகிய அந்த நீதிமான் தமது அறிவினால் பலரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.

ஆதலால் பலபேரை அவருக்கு நாம் பங்காகத் தருவோம், அவரும் வல்லவர்களோடு கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக்கொள்வார்; ஏனெனில் சாவுக்கே தம் ஆன்மாவைக் கையளித்தார், பாவிகளுள் ஒருவனாய்க் கருதப்பட்டார்; ஆயினும் பலருடைய பாவத்தைத் தாமே சுமந்துகொண்டு பாவிகளுக்காகப் பரிந்து பேசினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப்பாடல்

திபா. 30:1&5, 11-12, 14-15, 16, 24 (பல்லவி: லூக். 23:46)

பல்லவி: தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.

1 ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுகிறேன். நான் ஒருநாளும் வெட்கமுற விடாதேயும்: உம்முடைய நீதியின்படி என்னை விடுவித்தருளும்.

5 உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்: ஆண்டவரே, வார்த்தையில் தவறாத இறைவா, நீர் என்னை மீட்டருள்வீர். பல்லவி

11 என் எதிரிகள் அனைவருடையவும் பழிச்சொல்லுக்கு நான் ஆளானேன்; என் அயலாரின் நகைப்புக்கு இலக்கானேன்: எனக்கு அறிமுகமானவர்களின் அச்சத்துக்குரியவனானேன்; வெளியே என்னைக் காண்கின்றவர்கள் என்னை விட்டு ஓடுகின்றனர்.

12 இறந்துபோனவன்போல் பிறர் கண்ணுக்கு மறைவானேன்: உடைந்து போன மட்கலத்தைப் போலானேன். பல்லவி

14 ஆனால் ஆண்டவரே: நான் உம்மீது நம்பிக்கை வைக்கிறேன்: 'நீரே என் கடவுள்' என்றேன்.

15 என் கதி உம் கையில் உள்ளது: என் எதிரிகளிடமிருந்தும் என்னைத் துன்புறுத்துவோரிடமிருந்தும் என்னை விடுவித்தருளும். பல்லவி

16 கனிந்த உம் திருமுகத்தை எனக்குக் காட்டியருளும்: உம் அருளன்பைக் காட்டி என்னை ஈடேற்றும்.

24 ஆண்டவர்மீது நம்பிக்கையுள்ளவர்களே, மனத்திடன் கொள்ளுங்கள்: உங்கள் நெஞ்சம் உறுதிகொள்ளட்டும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*கீழ்ப்படிதலைத் துய்த்துணர்ந்தார்; தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணமானார்.*

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4:14-16; 5:7-9

வானங்களையெல்லாம் கடந்துசென்ற ஒருவரை-அதாவது, கடவுளின் மகனாகிய யேசுவை—தனிப்பெரும் தலைமைக் குருவாகப் பெற்றுள்ள நாம், நாம் அறிக்கையிடும் விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்வோமாக. நம்முடைய குறைபாடுகளைக் கண்டு இரக்கம்காட்ட இயலாதவர் அல்லர்,

நம் தலைமைக் குரு. மாறாக, அவர் நம்மைப்போல் ஒருவராயிருப்பதால், பாவம் தவிர, மற்றெல்லாவற்றிலும் சோதனை துன்பங்களுக்கு உட்பட்டவரானார். தக்க வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும் இரக்கத்தைப் பெறவும், இறைஅருளின் அரியணையை அணுகிச் செல்லத் துணிவோமாக.

கிறிஸ்து இம்மையில் வாழ்ந்த காலத்தில் தம்மைச் சாவிலிருந்து மீட்க வல்லவரிடம் பலத்த குரலெழுப்பி, கண்ணீர் சிந்தி, வேண்டுதல்களையும் மன்றாட்டுகளையும் ஒப்புக்கொடுத்தார். அவருக்கிருந்த பயபக்தியை முன்னிட்டு இறைவன் அவருக்குச் செவிசாய்த்தார். அவர் இறைமகனாய் இருந்தும், பாடுகளினால் கீழ்ப்படிதலை நேரில் துய்த்துணர்ந்தார். இவ்வாறு, நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணரானார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வசனம் பிலிப். 2 : 8-9

சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கிறிஸ்து நமக்காகக் கீழ்ப்படிபவரானார்.
ஆதலால்தான் கடவுள் அவரை உயர்த்தி,
எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

## நற்செய்தி வாசகம்

அருளப்பர் எழுதியபடி நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 18 : 1-19 : 42

அக்காலத்தில் :

யேசு தம் சீடர்களோடு கெதரோன் அருவியைக் கடந்து போனார். அங்கே ஒரு தோட்டம் இருந்தது. தம் சீடரோடு அதில் நுழைந்தார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்கும் அந்த இடம் தெரியும். ஏனெனில், யேசுவும் அவருடைய சீடரும் அங்குக் கூடுவதுண்டு. யூதாஸ் படை வீரர்களையும், தலைமைக் குருக்களும் பரிசேயரும் அனுப்பிய காவலர்களையும் அழைத்துக்கொண்டு, விளக்குகளோடும் பந்தங்களோடும் படைக்கருவிகளோடும் அங்கே வந்தான். தமக்கு நிகழப் போவதையெல்லாம் அறிந்த யேசு முன் சென்று "யாரைத் தேடிவந்தீர்கள் ?" என்று அவர்களைக் கேட்டார். அவர்களோ, "நாசரேத்தூர் யேசுவை" என்று சொல்ல, யேசு, "நான்தான்" என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த

யூதாசும் அவர்களோடு இருந்தான். "நான்தான்" என்று சொன்னதும் அவர்கள் பின்வாங்கித் தரையில் விழுந்தனர். "யாரைத் தேடிவந்தீர்கள்?" என்று மீண்டும் அவர்களைக் கேட்டார். அவர்கள் "நாசரேத்தூர் யேசுவை" என்று சொல்ல, "நான்தான் என்று உங்களுக்குச் சொன்னேனே; என்னை நீங்கள் தேடிவந்திருந்தால் இவர்களைப் போகவிடுங்கள்" என்றார். "நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுள் ஒருவனையும் நான் அழிவுறவிடவில்லை" என்று அவர் கூறியிருந்தது இவ்வாறு நிறைவேற வேண்டியிருந்தது.

சீமோன் இராயப்பரிடம் ஒரு வாள் இருந்தது. அதை அவர் உருவித் தலைமைக் குருவின் ஊழியனைத் தாக்கி, அவனது வலக் காதை வெட்டினார். அவ்வூழியனின் பெயர் மால்குஸ். யேசு இராயப்பரை நோக்கி, "உன் வாளை உறையில் போடு. தந்தை எனக்குக் கொடுத்த துன்பக் கலத்தில் நான் குடிக்காதிருப்பேனோ?" என்றார்.

**யேசுவை முதலில் அன்னாசிடம் கொண்டு போயினர்,**

படை வீரரும், படைத் தலைவனும், யூத காவலரும் யேசுவைப் பிடித்துக் கட்டி முதலில் அன்னாசிடம் கொண்டுபோயினர். ஏனெனில், அவ்வாண்டில் தலைமைக் குருவாயிருந்த கைப்பாசுக்கு அவர் மாமனார். இந்தக் கைப்பாசுதான் "மக்களுக்காக ஒருவன் மட்டும் இறப்பது நலம்" என்று யூதர்களுக்கு ஆலோசனை கூறியவர்.

சீமோன் இராயப்பரும், வேறொரு சீடரும், யேசுவைப் பின் தொடர்ந்து வந்தனர். அந்தச் சீடர் தலைமைக் குருவுக்கு அறிமுகமானவராயிருந்ததால் யேசுவோடு அப்பெரிய குருவின் வீட்டு முற்றத்தில் நுழைந்தார். இராயப்பரோ வெளியில் வாயிலருகே நின்றுகொண்டு இருந்தார். தலைமைக் குருவுக்கு அறிமுகமாயிருந்த சீடர் வெளியே சென்று வாயில் காப்பவளிடம் சொல்லி, இராயப்பரை உள்ளே அழைத்து வந்தார். வாயில் காக்கும் ஊழியக்காரி இராயப்பரை நோக்கி, "நீயும் அம்மனிதனின் சீடர்களுள் ஒருவன் அன்றோ?" என, அவர் "நான் அல்லேன்" என்றார். அப்போது குளிராயிருந்ததால் ஊழியரும் காவலரும் கரிநெருப்பு மூட்டிச் சுற்றி நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தனர்.

தலைமைக் குரு யேசுவின் சீடர்களைப்பற்றியும், அவருடைய போதனையைப்பற்றியும் அவரை வினவினார். யேசு மறுமொழியாக, "நான் உலகிற்கு வெளிப்படையாகப் பேசினேன். செபக்கூடங்களிலும், யூதர் அனைவரும் கூடிவருகிற கோயிலிலும் எப்போதும் போதித்தேன்; மறைவாகப் பேசியது ஒன்றுமில்லை. என்னை ஏன் வினவுகிறீர்? அவர்களுக்குத் தெரியுமே" என்றார்.

என்றதும், அங்கு நின்றுகொண்டிருந்த காவலன் ஒருவன் "தலைமைக் குருவுக்கு இப்படியா மறுமொழி கூறுவது?" என்று சொல்லி யேசுவைக் கன்னத்தில் அறைந்தான். அதற்கு யேசு, "நான் பேசியது தவறாயிருந்தால் எது தவறு என்று காட்டு. பேசியது சரியானால் ஏன் என்னை அடிக்கிறாய்?" என்றார். பின்பு அன்னாஸ் அவரைக் கட்டுண்டிருந்தவாறே தலைமைக் குருவாகிய கைப்பாசிடம் அனுப்பினார்.

*நீயும் அவனுடைய சீடர்களுள் ஒருவனன்றோ? நான் சீடன் அல்லேன்.*

சீமோன் இராயப்பர் அங்கு நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தார். அங்கிருந்தவர்கள் அவரைப் பார்த்து, "நீயும் அவனுடைய சீடர்களுள் ஒருவனன்றோ?" என்று கேட்டனர். அவர், "நான் சீடன் அல்லேன்" என்று மறுத்தார். தலைமைக் குருக்களின் ஊழியருள் ஒருவன் இராயப்பரால் காது அறுபட்டவனுக்கு உறவினன். அவன் இராயப்பரிடம், "தோட்டத்தில் நான் உன்னை அந்த ஆளோடு காணவில்லையா?" என்று கேட்டான். இராயப்பர் மீண்டும் மறுத்தார். உடனே கோழி கூவியது.

*என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று.*

அதன்பின் யேசுவைக் கைப்பாசிடமிருந்து பிலாத்தின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது விடியற்காலம். பாஸ்கா உணவை உண்பதற்குத் தீட்டுப்படாமலிருக்க அரண்மனைக்குள் அவர்கள் நுழையவில்லை. எனவே, பிலாத்து அவர்களைக் காண வெளியே வந்து, "இவன் மேல் நீங்கள் சாட்டும் குற்றம் என்ன?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "இவன் குற்றவாளியாயிராதிருந்தால் நாங்கள் இவனை உமக்குக் கையளித்திருக்க மாட்டோம்" என்றனர். அப்போது, பிலாத்து "இவனைக் கொண்டுபோய் உங்கள் சட்டப்படி நீங்களே தீர்ப்பிடுங்கள்" என, யூதர்கள், "எவனையும் கொல்ல எங்களுக்கு உரிமையில்லை" என்றார்கள். தமக்கு எத்தகைய சாவு நேரிடும் என்பதைக் குறிப்பிட்டு யேசு கூறியது இப்படி நிறைவேற வேண்டியிருந்தது.

பிலாத்து மீண்டும் அரண்மனைக்குள் போய் யேசுவை வரச்சொல்லி "நீ யூதர்களின் அரசனோ?" என்று கேட்டான். யேசு மறுமொழியாக "நீராகவே இதைக் கேட்கின்றீரா, மற்றவர் என்னைப்பற்றி உம்மிடம் கூறினரா?" என்றார். அதற்கு பிலாத்து, "நான் யூதனா? உன் இனத்தாரும் தலைமைக் குருக்களும் உன்னை என்னிடம் கையளித்தார்களே, என்ன செய்தாய்?" என்றான். யேசுவோ, "என் அரசு இவ்வுலகத்தைச் சார்ந்ததன்று. என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததாயிருந்தால், நான் யூதரிடம் கையளிக்கப்படாதபடி என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால், என் அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று" என்றார். எனவே, பிலாத்து அவரை நோக்கி, "அப்படியானால் நீ அரசன்தானோ?" என்று

கேட்க, யேசு, "அரசன்" என்பது நீர் சொல்லும் வார்த்தை. உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே எனது பணி: இதற்காகவே பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவன் எவனும் எனது குரலுக்குச் செவிமடுக்கிறான்" என்றார்.

அதற்குப் பிலாத்து, "உண்மையா! அது என்ன?" என்று சொல்லிவிட்டு, மீண்டும் வெளியே சென்று யூதரை நோக்கி, "அவனிடம் குற்றம் ஒன்றும் காணவில்லை. பாஸ்காத் திருவிழாவின்போது உங்களைப் பிரியப்படுத்த ஒருவனை விடுதலை செய்யும் வழக்கம் உண்டே. அதன்படி யூதரின் அரசனை நான் விடுதலை செய்வது உங்களுக்கு விருப்பமா?" என்று வினவினான். அதற்கு எல்லாரும், "இவன் வேண்டாம்: பரபாசே வேண்டும்!" என்று மீண்டும் உரக்கக் கூவினர். அந்தப் பரபாசோ ஒரு கள்வன்.

*யூதரின் அரசே, வாழி.*

பின்பு பிலாத்து யேசுவைக் கொண்டுபோய்ச் சாட்டையால் அடிக்கச் செய்தான். மேலும் படைவீரர் முள்ளால் ஒரு முடியைப் பின்னி அவருடைய தலையில் வைத்து, அவருக்குச் சிவப்புப் போர்வை உடுத்தினர். அருகில் வந்து, "யூதரின் அரசே வாழி!" என்று சொல்லிக் கொண்டு அவருடைய கன்னத்தில் அறைமேல் அறை கொடுத்தனர்.

பிலாத்து மீண்டும் வெளியே வந்து மக்களைப் பார்த்து, "இதோ! நான் அவனை உங்கள்முன் வெளியே கொண்டு வருகிறேன். அவனிடம் ஒரு குற்றமும் நான் காணவில்லையென அறிந்துகொள்ளுங்கள்!" என்றான். ஆகவே, யேசு முண்முடி தாங்கி, சிவப்புப் போர்வை அணிந்தவராய் வெளியே வந்தார். பிலாத்து அவர்களை நோக்கி, "பாருங்கள், இதோ! மனிதன்" என்றான். அவரைக் கண்டதும் தலைமைக் குருக்களும் காவலர்களும், "சிலுவையில் அறையும் . . . சிலுவையில் அறையும்" என்று கத்தினர். அப்போது பிலாத்து, "நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறைந்துகொள்ளுங்கள். நானோ இவனிடம் குற்றம் ஒன்றும் காணவில்லை" என்றான். அதற்கு யூதர், "எங்களுக்குச் சட்டம் ஒன்று உண்டு. அச்சட்டத்தின்படி அவன் சாக வேண்டும். ஏனெனில், தன்னைக் கடவுளின் மகன் ஆக்கிக்கொண்டான்" என்றனர்.

இவ்வார்த்தையைக் கேட்டுப் பிலாத்து இன்னும் அதிகமாக அஞ்சினான். மீண்டும் அரண்மனைக்குள் சென்று யேசுவை நோக்கி, "நீ எங்கிருந்து வந்தவன்?" என்று கேட்க, யேசு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. அப்போது பிலாத்து, "என்னிடம் ஒன்றும் சொல்லமாட்டாயா? உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரமுண்டு, விடுவிக்கவும் அதிகாரம் உண்டு, தெரியாதா?" என்றான். யேசுவோ, "மேலிருந்து

உமக்கு அருளப்படாதிருந்தால் என்மேல் உமக்கு எவ்வதிகாரமும் இராது. ஆதலால் என்னை உம்மிடம் கையளித்தவன்தான் பெரிய பாவத்துக்குள்ளானன்'' என்றார்.

**ஒழிக, ஒழிக. அவனைச் சிலுவையில் அறையும்.**

அதுமுதல் பிலாத்து அவரை விடுவிக்க வழிதேடினன். யூதர்களோ, "இவனை விடுவித்தால் நீர் செசாருடைய நண்பர் அல்ல. தன்னை அரசனாக்கிக்கொள்ளும் எவனும் செசாரை எதிர்க்கிறான்'' என்று கூவினர். பிலாத்து இவ்வார்த்தைகளைக் கேட்டு யேசுவை வெளியே அழைத்து வந்து நீதியிருக்கைமீது அமர்ந்தான். அது 'கல்தளம்' என்ற இடத்தில் இருந்தது. அந்த இடத்திற்கு எபிரேய மொழியில் கபத்தா என்பது பெயர்.

அன்று பாஸ்காவுக்கு ஆயத்த நாள். ஏறக்குறைய நண்பகல். அப்போது பிலாத்து யூதர்களை நோக்கி, "இதோ! உங்கள் அரசன்'' என்றான். அவர்களோ, "ஒழிக, ஒழிக, அவனைச் சிலுவையில் அறையும்'' என்று கத்தினார்கள். அதற்குப் பிலாத்து, "உங்கள் அரசனை நான் சிலுவையில் அறைவதா?'' என்று கேட்க, தலைமைக் குருக்கள், "செசாரைத் தவிர வேறு அரசர் எங்களுக்கில்லை'' என்று சொன்னார்கள். அப்போது பிலாத்து, அவரைச் சிலுவையில் அறையும்படி அவர்களிடம் கையளித்தான்.

**அவரையும், அவரோடு வேறு இருவரையும் சிலுவையில் அறைந்தார்கள்.**

ஆகவே, அவரைக் கூட்டிக்கொண்டு போனார்கள்.

யேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு, எபிரேய மொழியிலே கொல்கொத்தா எனப்படும் இடத்திற்குச் சென்றார். அதற்கு 'மண்டை ஓடு' என்பது பொருள். அங்கு யேசுவைச் சிலுவையில் அறைந்தார். அவரோடு வேறு இருவரை இருபக்கங்களிலும், யேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து அறிக்கை ஒன்று எழுதிச் சிலுவையில் பொருத்தச் செய்தான். 'நாசரேத்தூர் யேசு யூதரின் அரசன்' என்று அதில் எழுதியிருந்தது. யேசுவைச் சிலுவையில் அறைந்த இடம் நகருக்கு அருகில் இருந்ததால் யூதர் பலர் அவ்வறிக்கையைப் படித்தார்கள். எபிரேயம், கிரேக்கம், இலத்தின் ஆகிய மொழிகளில் எழுதியிருந்தது. யூதரின் தலைமைக் குருக்கள் பிலாத்துவிடம் சென்று, "'யூதரின் அரசன்' என்று எழுத வேண்டாம். 'யூதரின் அரசன் நான்' என்று அவன் கூறியதாக எழுதும்'' என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் பிலாத்து, "நான் எழுதியது எழுதியதுதான்'' என்றான்.

என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள்.

அவரைச் சிலுவையில் அறைந்தபின், படைவீரர் அவருடைய உடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒன்று எடுத்துக் கொண்டனர்; அங்கியையும் எடுத்துக்கொண்டனர். அந்த அங்கி மேலிருந்து அடிவரை தையலில்லாமல் நெய்யப்பட்டிருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "அதைக் கிழிக்கவேண்டாம். அது யாருக்கு வரும் என்று பார்க்கச் சீட்டுப் போடுவோம்" என்றார்கள். 'என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டார்கள், என் உடைமீது சீட்டுப் போட்டார்கள்' என்று எழுதியுள்ள மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேற வேண்டியிருந்தது.

இதோ, உம் மகன். - இதோ, உன் தாய்.

படைவீரர் இப்படிச் செய்துகொண்டிருந்தபோது யேசுவின் சிலுவையருகில் அவருடைய தாயும், தாயின் சகோதரியும் கிளேயோ பாவின் மனைவியுமான மரியாளும், மதலேன் மரியாளும் நின்றுகொண்டு இருந்தார்கள். இயேசு தம் தாயையும், அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு, தம் தாயை நோக்கி, "அம்மா இதோ! உம் மகன்" என்றார். பின்பு சீடரை நோக்கி, "இதோ! உன் தாய்" என்றார். அந்நேர முதல் அந்தச் சீடர் அவளைத் தம் வீட்டில் ஏற்றுக்கொண்டார்.

எல்லாம் நிறைவேறிற்று.

பின்பு, எல்லாம் நிறைவேறியது என்று அறிந்த யேசு, "தாகமா யிருக்கிறது" என்றார். மறைநூல் நிறைவேறவே இப்படிச் சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையக் காடி இருந்தது. கடற்காளானைத் தோய்த்து, ஈசோப்பில் பொருத்தி, அதை உயர்த்தி அவரது வாயில் வைத்தார்கள். காடியைச் சுவைத்தபின் யேசு "எல்லாம் நிறைவேறிற்று" என்றார். பின்பு தலைசாய்த்து ஆவியைக் கையளித்தார்.

இங்கு முழந்தாளிட்டு, சிறிதுநேரம் மௌனமாயிருக்கவும்.

உடனே இரத்தமும் நீரும் வெளிவந்தன

அன்று பாஸ்காவுக்கு ஆயத்த நாள். அடுத்த நாள் ஓய்வு நாளாக வும் பெருவிழாவாகவும் இருந்தது. அந்த விழாவின்போது சிலுவையில் சவங்கள் இருத்தலாகாதென்று, கால்களை முறித்துப் பிணங்களை எடுத்து விடப் பிலாத்திடம் யூதர் விடை கேட்டனர். ஆகவே படைவீரர் வந்து யேசுவோடு சிலுவையில் அறையுண்டிருந்த இருவரின் கால்களையும் முறித் தார்கள். பின்பு யேசுவிடம் வந்தார்கள், அவர் ஏற்கெனவே இறந்திருப் பதைக் கண்டு அவருடைய கால்களை முறிக்கவில்லை. ஆனால் படைவீரன் ஒருவன் அவருடைய விலாவை ஈட்டியால் குத்தினான். உடனே இரத்தமும் நீரும் வெளிவந்தன.

இதைப் பார்த்தவனே இதற்குச் சாட்சியம் கூறியுள்ளான். அவனுடைய சாட்சியம் உண்மையானதே. தான் கூறுவது உண்மை என்பது அவனுக்குத் தெரியும். எனவே, நீங்களும் விசுவாசம் கொள்வீர்களாக. 'அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிபடாது' என்று எழுதியுள்ள மறைநூல் வாக்கு நிறைவேறுவதற்கே இவ்வாறு நிகழ்ந்தது. மீண்டும் 'தாங்கள் ஊடுருவக் குத்தியவரை நோக்குவர்' என்பது மறைநூலின் வேறொரு வாக்கு.

*யேசுவின் சடலத்தைப் பரிமளப் பொருட்களுடன் துணிகளில் சுற்றிக் கட்டினார்கள்.*

அரிமத்தியா ஊர் சூசை என்பவர் ஒருவரிருந்தார். அவரும் யேசுவின் சீடர். ஆனால் யூதர்களுக்கு அஞ்சி அதைக் காட்டிக்கொள்ளவில்லை. மேற்சொன்ன நிகழ்ச்சிகளுக்குப்பின் அவர் யேசுவின் சடலத்தை எடுத்துவிடப் பிலாத்திடம் விடைகேட்டார். பிலாத்து விடையளித்தான். அவர் வந்து யேசுவின் சடலத்தை எடுத்தார்.

முன்னொரு நாள் இரவில், யேசுவைப் பார்க்கப்போன நிக்கொதேமு கூட அங்கு வந்தார். அவர் வெள்ளைப் போளமும், அகில் தூளும் கலந்து நூறு இராத்தல் கொண்டுவந்தார். யேசுவின் சடலத்தை எடுத்து யூதரின் அடக்க முறைப்படி பரிமளப் பொருட்களுடன் துணிகளில் சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையுண்ட இடத்தில் தோட்டம் ஒன்று இருந்தது. அத்தோட்டத்தில் புதுக் கல்லறையொன்று இருந்தது. அதில் யாரையும் அதுவரை வைத்ததில்லை. அருகிலேயே அந்தக் கல்லறை இருந்ததாலும், அன்று யூதரின் பாஸ்காவுக்கு ஆயத்த நாளானதாலும் யேசுவை அதில் வைத்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா காலம்

## ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

### புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு

*பாஸ்கா திருவிழிப்புக்கென்று, பழைய ஏற்பாட்டிலிருந்து ஏழும் புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டும் ஆக ஒன்பது வாசகங்கள் தரப்பட்டுள்ளன. தனிப்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக, இவ்வாசகங்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளலாம். என்றாலும் பழைய ஏற்பாட்டிலிருந்து மூன்று வாசகங்களாவது இருக்கவேண்டும்; ஆனால் மிக முக்கியமான காரணங்கள் இருக்குமானால் எனினும், ''செங்கடலைக் கடந்தல்'' பற்றிய யாத்திராகம வாசகம் (3ஆம் வாசகம்) ஒருபோதும் விடப்படலாகாது. இவற்றிற்குப்பின் திருபமும் நற்செய்தி வாசகமும் வாசிக்கப்படும்.*

#### முதல் வாசகம்

**கடவுள் தாம் படைத்த எல்லாவற்றையும் நோக்கினார்!**
**அவை மிகவும் நன்றாய் இருந்தன.**

*1:1 - 2:2*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்

**ஆதியிலே கடவுள் விண்ணையும், மண்ணையும் படைத்தார். பூமி உருவமற்றதும் வெறுமையுற்றதுமாய் இருந்தது. பாதாளத்தின் முகத்தே இருள் பரவியிருந்தது. கடவுளின் ஆவியானவர் தண்ணீரின்மீது அசைவாடிக்கொண்டிருந்தார்.**

அப்பொழுது கடவுள் : ஒளி உண்டாகுக என்று உரைத்தார். உரைக்கவே, ஒளி உண்டாயிற்று. கடவுள் ஒளியை நல்லது என்று கண்டு, ஒளியை இருளினின்று பிரித்தார். ஒளிக்குப் பகல் என்றும், இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் சேர்ந்து முதல் நாள் ஆயிற்று.

பின் கடவுள் : நீர்த்திரளின் நடுவில் வான்வெளி உண்டாகி நீரினின்று நீர் பிரியக் கடவது என்றார். இவ்வாறு கடவுள் வானவெளியை உண்டாக்கி, வானவெளிக்குக் கீழேயுள்ள நீரையும், வானவெளிக்கு மேலேயுள்ள நீரையும் பிரித்தார். அதுவும் அவ்வண்ணமே ஆயிற்று. கடவுள் வானவெளிக்குப் பரலோகம் என்று பெயரிட்டார். மாலையும் காலையும் சேர்ந்து இரண்டாம் நாள் ஆயிற்று.

மேலும் கடவுள் : வானவெளிக்குக் கீழேயுள்ள நீரெல்லாம் ஒரே இடத்தில் ஒன்றாகச் சேரக்கடவது; காய்ந்த தரை தோன்றக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. காய்ந்த தரைக்கு நிலம் என்றும், ஒன்றாகச் சேர்ந்த நீர்த்திரளுக்குக் கடல் என்றும் கடவுள் பெயரிட்டார். அதுவும் நலமென்று கடவுள் கண்டார். அப்போது அவர், விதையைப் பிறப்பிக்கும் பசும் புற்பூண்டுகளையும், பூமியின்மீது தம்மிடம் விதைகளைக் கொண்டுள்ள கனிகளைத் தத்தம் இனத்தின்படியே தரும் மரங்களையும் பூமி முளைப்பிக்கக்கடவது என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. பூமி தத்தம் இனத்தின்படி தத்தம் விதையைப் பிறப்பிக்கும் புற்பூண்டுகளையும், தத்தம் இனத்தின்படி தம்மிடம் விதைகளைக்கொண்டுள்ள மரங்களையும் முளைப்பித்தது. கடவுள் அதுவும் நல்லதென்று கண்டார். மாலையும் காலையும் சேர்ந்து மூன்றாம் நாள் ஆயிற்று.

மேலும் கடவுள் : பரமண்டல வான்வெளியில் சுடர்கள் உண்டாகிப் பகலையும் இரவையும் பிரிக்கக் கடவன; அவை பருவ காலங்களையும் நாட்களையும் ஆண்டுகளையும் குறிப்பதற்கான அடையாளங்களாய் அமையக்கடவன. அவை பரமண்டல வான்வெளியில் சுடர்களாய் இருந்து பூமிக்கு ஒளிதரக்கடவன என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் பகலை ஆளப் பெரியதொரு சுடரும், இரவை ஆளச் சிறியதொரு சுடருமாக இருபெரும் சுடர்களையும் விண்மீன்களையும் உண்டாக்கினார். கடவுள் அவற்றைப் பரமண்டல வானவெளியில் நிறுவிப் பூமியின்மேல் ஒளி வீசவும், பகலையும் இரவையும் ஆளவும், ஒளியையும் இருளையும் பிரிக்கவும் அமைத்தார். கடவுள் அதுவும் நல்லதென்று கண்டார். மாலையும் காலையும் சேர்ந்து நான்காம் நாள் ஆயிற்று.

மேலும் கடவுள்: அசைந்து உலாவும் உயிரினங்களையும், பூமியின் மேலே பரமண்டல வான்வெளியில் பறந்து திரியும் பறவைகளையும், நீர்த்திரள் பிறப்பிக்கக்கடவது என்றார். அப்போது கடவுள் திமிங்கிலங்களையும், உயிரும் அசைவும் உடையனவாய் நீர்த்திரளில் உற்பத்தியாகிய வகை வகையான பிராணிகள், விதவிதமான பறவைகள் எல்லாவற்றையும் படைத்தார். கடவுள் அதுவும் நல்லதென்று கண்டார். அவர் அவைகளை ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள்; பறவைகளும் பூமியில் பலுகக் கடவன என்றார். மாலையும் காலையும் சேர்ந்து ஐந்தாம் நாள் ஆயிற்று.

பின் கடவுள், பலவகையான உயிரினங்களையும், வீட்டு விலங்குகளையும், ஊர்வனவற்றையும், காட்டு விலங்குகளையும் பூமி பிறப்பிக்கக் கடவது என்றார். அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் பலவகைக் காட்டு விலங்குகளையும், வீட்டு விலங்குகளையும், பூமியின் மீது ஊர்வன யாவற்றையும் படைத்தார். கடவுள் அதுவும் நல்லதெனக் கண்டார்.

பின்னர் கடவுள்: நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக: அவன் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும் மிருகங்களையும், பூமி முழுவதையும், பூமியின் மீது அசைவன ஊர்வன யாவற்றையும் ஆளக்கடவன் என்றார். இவ்வாறு கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். தெய்வச் சாயலாகவே அவனைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப் படுத்துங்கள்; கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், பூமியின் மீது அசைந்து உலாவும் உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றார். மேலும் கடவுள்: இதோ பூமியின் மீது விதைதரும் புற்பூண்டுகள் எல்லாவற்றையும், தத்தம் இனத்தின்படி தம் விதைகளைக் கொண்டிருக்கும் விதவிதமான மரங்களையும் உங்களுக்கு உணவாகத் தந்துள்ளோம்: மேலும், பூமியில் உயிர் வாழும் விலங்குகள், வானத்தில் பறக்கும் பறவைகள், உயிரோடு பூமியில் அசையும் எல்லாவற்றிற்கும் அதே புற்பூண்டுகளை உணவாகக் கொடுத்தோம் என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று.

அப்போது தாம் படைத்த எல்லாவற்றையும் நோக்கினார். அவை எல்லாமே மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் சேர்ந்து ஆறாம் நாள் ஆயிற்று.

இவ்வாறு விண்ணும் மண்ணும் அவற்றிற்கு அழகுதரும் யாவும் படைக்கப்பட்டு முடிந்தன. கடவுள் தாம் ஏழாம் நாளிற்குமுன் செய்த வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு ஏழாம் நாள் ஓய்வெடுத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம்

ஆதியிலே கடவுள் விண்ணையும், மண்ணையும் படைத்தார்.

பின்னர் கடவுள் : நமது சாயலாகவும் பாவனையாகவும் மனிதனைப் படைப்போமாக ; அவன் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும் மிருகங்களையும், பூமி முழுவதையும், பூமியின் மீது அசைவன ஊர்வன யாவற்றையும் ஆளக்கடவன் என்றார். இவ்வாறு கடவுள் மனிதனைத் தன் சாயலாகப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

கடவுள் அவர்களை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப்படுத்துங்கள்; கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், பூமியின்மீது அசைந்து உலாவும் உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றார். மேலும் கடவுள் : இதோ பூமியின்மீது விதைதரும் புற்பூண்டுகள் எல்லாவற்றையும், தத்தம் இனத்தின்படி தம் விதைகளைக் கொண்டிருக்கும் விதவிதமான மரங்களையும் உங்களுக்கு உணவாகத் தந்துள்ளோம் ; மேலும் பூமியில் உயிர் வாழும் விலங்குகள் வானத்தில் பறக்கும் பறவைகள், உயிரோடு பூமியில் அசையும் எல்லாவற்றிற்கும் அதே புற்பூண்டுகளை உணவாகக் கொடுத்தோம் என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. அப்போது கடவுள் தாம் படைத்த எல்லாவற்றையும் நோக்கினார். அவை எல்லாமே மிகவும் நன்றாய் இருந்தன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## பதிலுரைப் பாடல்

*சங். 103 : 1-2a. 5-6. 10-12. 13-14. 24-35c (பல்லவி: 30 காண்)*

*பல்லவி:* ஆண்டவரே, உமது ஆவியை அனுப்புவீர் ; உலகனைத்தும் புத்துயிர் பெறும்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக ! ஆண்டவரே, என் இறைவா
நீர் எத்துணை உயர்ந்தவர் !

2 மாண்பும் மகத்துவமும் நீர் அணிந்திருக்கிறீர் : ஒளியை நீர் போர்வை
யாக்கிக் கொண்டுள்ளீர் ; *பல்லவி*

5 பூமியை நீர் அடித்தளத்தின்மேல் அமைத்தீர் : அது எந்நாளும் அசையவே
அசையாது.

6 கடல்களை அதற்கு உடையெனத் தந்திருக்கிறீர் : வெள்ளப் பெருக்கு மலை
களையும் மூடியிருக்கும்படி செய்தீர். *பல்லவி*

10 நீரூற்றுகள் ஆறுகளாய்ப் பெருக்கெடுக்கக் கட்டளை இடுகிறீர்: மலை
களிடையே அவைகளை ஓடச் செய்கிறீர்.
12 அவற்றினருகேதான் வானத்துப் பறவைகள் குடியிருக்கின்றன: மரக்
கிளைகளிடையே இன்னிசை எழுப்புகின்றன. பல்லவி

13 தம் உள்ளிடத்திலிருந்து மலைகள்மீது நீர்பாயச் செய்கிறீர்: உம் செயல்
களின் பயனால் மாநிலம் நிறைவுறுகின்றது.
14 கால்நடைகள் உண்ணப் புல் முளைக்கச் செய்கிறீர்: மனிதருக்குப்
பயன்படப் பயிர் பச்சைகள் வளரச் செய்கிறீர். பல்லவி

24 ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள், எத்தனை, எத்தனை! அனைத்தையும்
நீர் ஞானத்தோடு செய்து முடித்தீர்: உம் படைப்புகளால் நிறைந்
துள்ளது வையகம்.
35 நெஞ்சே, ஆண்டவரை நீ வாழ்த்துவாயாக! பல்லவி

அல்லது

சங். 32: 4-5. 6-7. 12-13. 20,22 (பல்லவி: 5b)

பல்லவி: ஆண்டவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது.

4 ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது: அவருடைய செயல்கள்
எல்லாம் உண்மையானவை.
5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்: அவருடைய அருளால் பூமி
நிறைந்துள்ளது. பல்லவி

6 ஆண்டவருடைய வார்த்தையால் வானங்கள் உண்டாயின: அவரது
சொல்லால் வான் அணிகள் எல்லாம் உருவாயின.
7 குடத்தில் தண்ணீர் எடுப்பதுபோல் அவர் கடல் நீரை ஒன்றுசேர்க்கிறார்:
பாத்திரங்களில் தண்ணீரை வைப்பதுபோல் ஆழ்கடலை அடைத்து வைத்
திருக்கிறார். பல்லவி

12 ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொள்ளும் மக்கள் இனம் பேறுபெற்றது:
தமது உரிமைப் பொருளாக அவர் தேர்ந்தெடுத்த மக்கள், பேறு
பெற்றவர்கள்.
13 வானுலகிலிருந்து ஆண்டவர் பார்க்கிறார்: ஆதாமின் மக்கள் எல்லாரை
யும் பார்க்கிறார். பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது; அவரே நமக்கு
உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.

22 ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக: நாங்கள் உம்மை நம்பி யிருக்கும் அளவுக்கு உம் இரக்கமும் இருப்பதாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

*நம் தந்தை ஆபிரகாமின் பலி.*

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் 22:1-18

கடவுள் ஆபிரகாமைச் சோதிப்பதற்காக, அவரை: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட்டார். அவர்: அடியேன் தயார் என்று கூற, அவர்: நீ அதிகம் அன்பு செய்யும் உன் ஒரே புதல்வனை ஈசாக்கைத் தரிசனைப் பூமிக்குக் கூட்டிக் கொண்டு போய், அங்கே நாம் உனக்குக் காட்டும் ஒரு மலையின் மீது அவனைத் தகனப்பலியாகக் கொடுப்பாய் என்று மொழிந்தருளினார்.

அவ்வாறே ஆபிரகாம் இரவில் எழுந்து தமது கழுதைக்குச் சேணம் போட்டு, தம்மோடு இரண்டு ஊழியரையும் தம் மகன் ஈசாக்கையும் அழைத்துக் கொண்டு போய்த் தகனப் பலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை வெட்டின பின் கடவுள் தமக்குக் குறிப்பிட்டிருந்த இடத்தை நோக்கிப் பயணமானார்.

மூன்றாம் நாள் அவர் கண்களை உயர்த்தி அவ்விடத்தைத் தூரத்திலிருந்து கண்டபோது, தம் ஊழியர்களை நோக்கி: நீங்கள் கழுதையைப் பார்த்துக் கொண்டு இங்கே காத்திருங்கள். நானும் என் மகனும் அவ்விடம் விரைந்து சென்று (ஆண்டவரை) ஆராதித்த பின் உங்களிடம் திரும்பி வருவோம் என்றார்.

பின் தகனப் பலிக்கு வேண்டிய கட்டைகளை எடுத்து, தம் மகன் (தோளின்) மீது சுமத்தினார்; நெருப்பையும் வாளையும் கையில் எடுத்துக் கொண்டார். இவ்வாறு இருவரும் சேர்ந்து செல்கையில், ஈசாக் தன் தந்தையை நோக்கி, அப்பா! என, அவர்: ஏன் மகனே! என்று கேட்டார். அதற்கு: இதோ நெருப்பும் கட்டைகளும் இருக்கின்றன. தகனப்பலிக்கு வேண்டிய மிருகம் எங்கே என்று வினவினான். ஆபிரகாம்: தகனப்பலிக்கு வேண்டிய மிருகத்தைக் கடவுளே தயார் செய்து கொடுப்பார் மகனே! என்றார். இருவரும் ஒன்றாக நடந்து சென்று கொண்டிருந்தனர்.

கடவுள் ஆபிரகாமுக்குக் காண்பித்திருந்த இடத்தை அவர்கள் அடைந்ததும், அவர் அங்கே ஒரு பீடம் அமைத்து அதன்மேல் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டிப் பீடத்தில்

அடுக்கியிருந்த விறகுக் கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தி, தம் கையை நீட்டி வாளை உருவி அவனைப் பலியிட முயற்சிசெய்தார். அப்பொழுது ஆண்டவருடைய தூதர் ஒருவர் வானத்தினின்று: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட, அவர் அடியேன் தயார் என்று பதில் கூறினார். அவர்: பிள்ளையின்மேல் கையோங்கி அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ தெய்வ பயமுடையவனாய், நம்பொருட்டு உன் ஒரே மகனையும் பலியிடத் தயங்கவில்லை என்று நாம் இப்போது அறிந்துகொண்டோம் என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை ஏறெடுத்துத் திரும்பிப் பார்க்கையில், முட்செடியிலே கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக் கிடாயைக் கண்டார்; அதைப் பிடித்துத் தம் மகனுக்குப் பதிலாக அதைத் தகனப் பலியாய் ஒப்புக் கொடுத்தார். அவ்விடத்திற்கு, 'ஆண்டவர் காண்கிறார்' என்று பெயரிட்டார். அதனாலே, இந்நாள் வரை ஆண்டவர் மலையிலே காண்பார், என்று சொல்லப்பட்டு வருகின்றது.

ஆண்டவருடைய தூதர் வானத்தினின்று மீண்டும் ஆபிரகாமைக் கூப்பிட்டு : ஆண்டவர் சொல்லுகிறதாவது : நம் பெயரைச் சொல்லி நாம் ஆணையிட்டு வாக்குறுதி செய்வது ஏதெனில், நீ அச்செயலைச் செய்ததனாலும், நம்மைப் பற்றி நீ உன் ஒரே மகனையும் பலியிட மனம் துணிந்ததனாலும், நாம் உன்னை ஆசீர்வதித்து, விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் இனம் பெருகச் செய்வோம். உன் இனம் தன் பகைவர்களின் வாயில்களை உரிமையாக்கிக் கொள்ளும். அன்றியும் நீ நமது சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததினால் பூமியிலுள்ள எல்லா இனத்தாரும் உன் சந்ததிக்குள் ஆசீர்வதிக்கப்படுவர் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது குறுகிய வாசகம்

ஆதி ஆகமத்திலிருந்து வாசகம் *22: 1-2. 9a. 10-13. 15-18*

கடவுள் ஆபிரகாமைச் சோதிப்பதற்காக, அவரை: ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட்டார். அவர்: அடியேன் தயார் என்று கூற, அவர்: நீ அதிகம் அன்பு செய்யும் உன் ஒரே புதல்வனான ஈசாக்கைத் தரிசனைப் பூமிக்குக் கூட்டிக் கொண்டு போய், அங்கே நாம் உனக்குக் காட்டும் ஒரு மலையின் மீது அவனைத் தகனப்பலியாக ஒப்புக்கொடுப்பாய் என்று மொழிந்தருளினார்.

கடவுள் ஆபிரகாமுக்குக் காண்பித்திருந்த இடத்தை அவர்கள் அடைந்ததும், அவர் அங்கே ஒரு பீடம் அமைத்து அதன்மேல் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகனைப்பலியிட தம் கையை நீட்டி வாளை

உருவினார். அப்பொழுது ஆண்டவருடைய தூதர் ஒருவர் வானத்தினின்று ஆபிரகாம்! ஆபிரகாம்! என்று கூப்பிட, அவர் அடியேன் தயார் என்று பதில் கூறினார். அவர்: உன் பிள்ளையின்மேல் கையோங்கி அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ தெய்வ பயமுடையவனாய், நம்பொருட்டு உன் ஒரே மகனையும் பலியிடத் தயங்கவில்லை என்று நாம் இப்போது அறிந்து கொண்டோம் என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை ஏறெடுத்துத் திரும்பிப் பார்க்கையில், முட்செடியிலே கொம்பு மாட்டிக்கொண்டு நின்ற ஓர் ஆட்டுக் கிடாயைக் கண்டார்; அதைப் பிடித்துத் தம் மகனுக்குப் பதிலாக அதைத் தகனப் பலியாய் ஒப்புக் கொடுத்தார்.

ஆண்டவருடைய தூதர் வானத்தினின்று மீண்டும் ஆபிரகாமைக் கூப்பிட்டு: ஆண்டவர் சொல்லுகிறதாவது: நம் பெயரைச் சொல்லி நாம் ஆணையிட்டு வாக்குறுதி செய்வது ஏதெனில், நீ அச்செயலைச் செய்ததனாலும், நம்மைப் பற்றி நீ உன் ஒரே மகனையும் பலியிடமனம் துணிந்ததனாலும், நாம் உன்னை ஆசீர்வதித்து, விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் இனம் பெருகச் செய்வோம். உன் இனம் தன் பகைவர்களின் வாயில்களை உரிமையாக்கிக்கொள்ளும். அன்றியும், நீ நமது சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததினால் பூமியிலுள்ள எல்லா இனத்தாரும் உன் சந்ததிக்குள் ஆசீர்வதிக்கப்படுவர் என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

---

## பதிலுரைப் பாடல்

சங். 15: 5,8. 9-10. 11 (பல்லவி: 1)

பல்லவி: இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.

5 ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்: எனக்குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே.

8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்: அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன்.

பல்லவி

9 இதனால் என் இதயம் அகமகிழும்; என் உடலம் கவலையின்றி இளைப்பாறும்.

10 ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர்: உம் புனிதர் அழிவு காண விடமாட்டீர்.

பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர்: உம் திருமுன் எனக்கு நிறைமகிழ்ச்சியையும், உம் வலக்கையில் இடைவிடா இன்பத்தையும் நீர் காட்டுவீர்.
பல்லவி

## மூன்றும் வாசகம்

**இஸ்ராயேலின் மக்கள் வறண்டு கிடந்த கடலின் நடுவே நடந்தனர்.**

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 14 : 15-15 : 1

அந்நாட்களில்:

ஆண்டவர் மோயீசனை நோக்கி: நீ நம்மிடம் முறையிடுகிறதென்ன? இஸ்ராயேல் மக்களைப் புறப்பட்டுப் போகச் சொல். நீயோ உன் கோலை ஓங்கி, உன் கையைக் கடலின் மேல் நீட்டிக் கடலைப் பிரித்துவிடு. இஸ்ராயேல் மக்கள் அதன் நடுவிலே கால் நனையாமல் நடந்து போவார்கள். உங்களைப் பின்தொடரும்படி நாம் எகிப்தியரின் மனத்தைக் கடினப்படுத்துவோம். அதனால், பாரவோனாலும், அவன் படைகளாலும், அவனது தேர், குதிரைகளினாலும், நாம் மாட்சி அடைவோம். நாம் பாரவோனாலும் அவனுடைய தேர்களாலும் குதிரைகளினாலும் மாட்சி அடையும்போது, ஆண்டவர் நாமே என்று எகிப்தியர் அறிந்துகொள்வார்கள் என்றருளினார்.

அப்போது, இஸ்ராயேல் பாளையத்தின்முன் நடந்து கொண்டிருந்த கடவுளுடைய தூதர் பெயர்ந்து அவர்களுக்குப்பின் நடந்தார். அவரோடு கூட மேகத் தூணும் விலகி அவர்கள் பின்னால் காணப்பட்டது. அது எகிப்தியரின் படைக்கும் இஸ்ராயேலின் படைக்கும் இடையில் நின்று கொண்டது. அம்மேகம் இருளுள்ளதும், இரவிலே ஒளி வீசுகிறதுமாய் இருந்தமையால், இஸ்ராயேல் படையும் எகிப்தியர் படையும், இரவு முழுவதும் ஒன்றோடு ஒன்று சேரக்கூடாமல் போயிற்று.

அப்போது மோயீசன் கடலின்மேல் கையை நீட்டினார். நீட்டவே ஆண்டவர் இரவு முழுவதும் மிகக் கொடிய வெப்பக் காற்று வீசச் செய்து கடலை வாரிக் கட்டாந்தரையாக மாற்றினார். நீர் இரு பிரிவாகி விட்டது. இஸ்ராயேல் மக்களும் வறண்டு கிடந்த கடலின் நடுவே நடந்தனர். ஏனென்றால், அவர்களுக்கு வலப்புறத்திலும் இடப்புறத்திலும் நீர், மதிலைப்போல் நின்று கொண்டிருந்தது. பின்தொடர்ந்து வந்த எகிப்தியர்களும், பாரவோனுடைய தேர்களோடு குதிரை வீரர்களும் அவர்களுக்குப் பின்னால் கடலின் நடுவே புகுந்தனர். காலை நேரத்திலே ஆண்டவர் நெருப்பும் மேகமுமான தூணுக்குள் இருந்து, எகிப்தியரின் படைகள்மீது நோக்கம் வைத்து, அவர்களுடைய படைகளை அழித்தொழித்தார். அதாவது, தேர்களின் உருளைகள் சுழலவே, அவை கவிழ்ந்து மிக ஆழமான

இடத்தினுள் அமிழ்ந்து போயின. அதனால் எகிப்தியர்: இஸ்ராயேலை விட்டு ஓடிப் போவோமாக: இதோ ஆண்டவர் நம்மை எதிர்த்து அவர்கள் சார்பாய் நின்று போராடுகின்றார் என்றார்கள். அப்பொழுது ஆண்டவர் மோயீசனை நோக்கி: கடலின் மேலே கையை நீட்டு. நீட்டினால், நீர்த்திரள் திரும்பி எகிப்தியர் மேலும், அவர்களுடைய தேர் குதிரைகள் மேலும் வந்து விழும் என்றார். மோயீசன் கடல் மீது கையை நீட்டினார். நீட்டவே, விடியற்காலையில், கடல் வேகமாய்த் திரும்பி வந்தது. எகிப்தியர் ஓடிப்போகையில், நீர்த்திரள் அவர்களுக்கு எதிராக வந்தமையால், ஆண்டவர் அவர்களைக் கடலின் நடுவே அமிழ்த்திவிட்டார். இவ்வாறு நீர்த்திரள் திரும்பி வந்து, தொடர்ந்து கடலில் புகுந்திருந்த பாரவோனின் எல்லாப் படைகளையும் தேர் குதிரைகளையும் மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவனும் தப்பவில்லை. இஸ்ராயேல் மக்களோ வறண்டுபோன கடலின் நடுவே நடந்து வரும்போது அவர்களுடைய வலப்புறத்திலும் இடப்புறத்திலும் நீர்த்திரள் மதில்போல் நின்றுகொண்டிருந்தது.

இவ்வாறு ஆண்டவர் அன்று இஸ்ராயேலரை எகிப்தியருடைய கைகளினின்று காப்பாற்றினார்.

பின் அவர்கள் கடற்கரையில் எகிப்தியரின் சடலங்களைக் கண்டபோதும், ஆண்டவர் அவர்களைக் கண்டித்துக் காண்பித்த வல்லமையை கண்டுணர்ந்தபோதும் ஆண்டவருக்குப் பயந்து, அவர்மீதும் அவருடைய ஊழியனை மோயீசன் மீதும் நம்பிக்கை வைத்தார்கள்.

அப்பொழுது மோயீசன் இஸ்ராயேல் மக்களோடுகூட ஆண்டவரைப் புகழ்ந்து பாடிய சங்கீதமாவது:

## பதிலுரைப் பாடல்

*யாத். 15:1-2.3-4.5-6.17-18. (பல்லவி: 1a)*

பல்லவி **ஆண்டவர் மாண்புடன் புகழ்பெற்றார் ஆகவே அவரைப் பாடிடுவோம்.**

ஆண்டவருக்குப் பாட்டுப்பாடுவோம். ஏனென்றால் அவர் பெரும் புகழோடு வெற்றியில் சிறந்தார்; குதிரையையும் அதன்மேல் ஏறியிருந்த வீரனையும் கடலிலே வீழ்த்தினார். ஆண்டவர் என் வலிமையும் என் போற்றுரைகளுக்குத் தகுதிவாய்ந்தவருமாய் இருக்கிறார். அவர் எனக்கு

மீட்பைத் தந்தார். அவர் என் கடவுளாகையால் அவரை நான் மேன்மைப் படுத்துவேன். அவர் என் தந்தையின் கடவுளென்று போற்றிப் புகழ்வேன்.

பல்லவி

3 ஆண்டவர் போர் வீரனைப் போன்றவர். அவர் எல்லாம் வல்லவர் என்று
4 அழைக்கப்படுகின்றார். அவர் பாரவோனின் தேர்களையும் படைகளையும்
கடலிலே வீழ்த்தினார். சிறந்த அவன் தலைவர்கள் செங்கடலில் அமிழ்ந்திப்
போனார்கள்.

பல்லவி

5 கடல் அவர்களை மூடினது. அவர்கள் கல்லைப்போல் ஆழத்திலே வீழ்ந்தனர்.

6 ஆண்டவரே, உம்முடைய வலக்கை வலிமையால் பெரும் சிறப்பு எய்துகிறது. உமது வலக்கை பகைவரை நொறுக்கியது.

பல்லவி

17 நீர் அவர்களைக் கொண்டுபோய் மலைமீதும், ஆண்டவராகிய நீர் அமைத்
துள்ள அசையாத உறைவிடத்திலும் அவர்களை நாட்டுவீர். அது உமது
18 கையாலே நிலைநிறுத்தப்பட்ட உம்முடைய திருவுறைவிடமாம். ஆண்டவர்
என்றென்றும் செங்கோல் ஓச்சுவாராக.

பல்லவி

## நான்காம் வாசகம்

**முடிவில்லாத அன்போடு உன்மேல் இரக்கம் கொண்டார் உன் மீட்பராகிய ஆண்டவர்.**

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 54: 5-14

ஏனெனில் உன்னைப் படைத்தவரே உன்னை ஆட்கொள்வார். சேனைகளின் ஆண்டவர் என்பது அவர் பெயர்; இஸ்ராயேலின் பரிசுத்தரே உன் மீட்பர், உலகுக்கெல்லாம் கடவுள் என அழைக்கப்படுகிறார். ஏனெனில், கைவிடப்பட்டு மனம் நொந்தவளான மனைவியை அழைப்பது போலும், இளமை முதலே துணைவியாய் இருந்த ஒருத்தியை மணமுறிவுக்குப்பின் அழைப்பதுபோலும் ஆண்டவர் உன்னை அழைக்கிறார், என்கிறார் உன்னுடைய கடவுள். குறுகிய காலந்தான் நாம் உன்னைக் கைவிட்டோம், ஆனால் மிகுந்த இரக்கத்தோடு உன்னைச் சேர்த்துக் கொள்வோம். பொங்கிய கோபத்தில் ஒரு நொடிப்பொழுது உன்னிடமிருந்து நம் முகத்தைத் திருப்பிக் கொண்டோம்; ஆயினும், முடிவில்லாத அன்போடு உன்மேல் இரக்கம் கொள்வோம், என்கிறார் உன் மீட்பராகிய ஆண்டவர்.

நோவே நாட்களில் நாம் செய்ததுபோல் இன்றும் செய்வோம்: நோவே காலத்துப் பெருவெள்ளம் இனிமேல் மண்ணுலகை மூழ்கடிக்காது என்று ஆணையிட்டுச் சொன்னதுபோல், உன்மேல் சினங்கொள்ளவே மாட்டோம் என்றும், உன்னைக் கண்டனம் செய்யமாட்டோம் என்றும் ஆணையிட்டு உனக்கும் சொல்லியுள்ளோம். மலைகள் நிலைபெயரலாம், குன்றுகள் அசைந்து போகலாம், ஆனால் உன்மீது நாம் கொண்ட அன்பு நிலை பெயராதிருக்கும்; நம் சமாதானத்தின் உடன்படிக்கை அசையாதிருக்கும், என்கிறார் உன்மேல் இரக்கம் கொள்ளும் ஆண்டவர்.

"புயலால் அலைக்கழிக்கப்பட்டு ஆறுதலின்றித் தவிக்கும், ஏழைப் பெண்ணான யெருசலேமே, இதோ நாமே உன் கற்களை மாணிக்கங்கள் மேல் அடுக்குவோம்; உனக்கு நீலக் கற்களால் அடிப்படை இடுவோம். உன் கோட்டைச் சுவரின் முகடுகளைச் சலவைக் கற்களாலும், உன் வாயில்களைப் பளிங்குக் கற்களாலும், உன் சுவர்களையெல்லாம் விலையுயர்ந்த கற்களாலும் கட்டுவோம். உன் மக்கள் அனைவருக்கும் ஆண்டவரே போதிப்பார், உன் புதல்வர்களுக்கு நிரம்பச் சமாதானம் இருக்கும். நீதியில் நீ நிலைநாட்டப்படுவாய், கொடுமை அகன்று போம், நீ அஞ்ச மாட்டாய், பயம் ஒழிந்திருப்பாய், அது உன்னை அணுகாது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 29 1,3. 4-5. 10, 11a, 12b (பல்லவி: 1a)

பல்லவி: ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்; ஏனெனில் நீர் எனக்கு விடுதலையளித்தீர்.

1 ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்; ஏனெனில் நீர் எனக்கு விடுதலையளித்தீர்: என் எதிரிகள் என்னைக் கண்டு மகிழ்வுற விடவில்லை.
3 ஆண்டவரே, கீழுலகினின்று என் ஆன்மாவை வெளியேற்றினீர்: பாதாளப் படுகுழிக்குச் செல்பவர்களிடையினின்று என்னைக் காத்தீர்.
பல்லவி

4 புனிதர்களே, ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்: அவர் எத்துணை பரிசுத்தர் என்பதை நினைத்துப் போற்றுங்கள்.
5 ஏனெனில், அவரது சினம் ஒரு நொடிப்பொழுது மட்டுமே, அவரது தயவோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்: மாலையில் அழுகை என்றால், காலையில் உண்டாவது அக்களிப்பு!
பல்லவி

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாய்த்தருளும், என்மீதிரங்கும்: ஆண்டவரே, எனக்குத் துணைசெய்யும்.
11 என் அழுகையைக் களிநடனமாக மாற்றினீர்.
12 ஆண்டவராகிய என் இறைவா, என்றென்றும் உம்மைப் போற்றுவேன்.

பல்லவி

## ஐந்தாம் வாசகம்

*நம்மிடம் வாருங்கள் நீங்கள் வாழ்வீர்கள்; உங்களோடு முடிவில்லா உடன்படிக்கை செய்து கொள்வோம்.*

இறைவாக்கினர் இசையாஸ் ஆகமத்திலிருந்து வாசகம் 55:1–11

ஆண்டவர் கூறுவதாவது :

"தாகமாயிருப்பவர்களே, அனைவரும் நீரருகில் வாருங்கள், கையில் பணமில்லாதவர்களே, விரைந்து வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்! வாருங்கள், பணமுமின்றி விலையுமின்றி திராட்சை இரசமும் பாலும் வாங்கிப் பருகுங்கள்! அப்பமல்லாத ஒன்றுக்காகப் பணஞ் செலவிடுவானேன்? உங்களுக்கு நிறைவு தராத ஒன்றுக்காக உழைப்பானேன்? நாம் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள்; அப்போது சுவையானதை உண்பீர்கள், கொழுப்புள்ளதைப் புசித்து மகிழ்வீர்கள்.

செவிசாயுங்கள், நம்மிடம் வாருங்கள்; நாம் சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் வாழ்வீர்கள்; "தாவீதுக்கு நாம் வாக்களித்த அருள்வரங்களை நிலைப்பிக்க, உங்களோடு முடிவில்லா உடன்படிக்கை செய்து கொள்வோம். இதோ, மக்களுக்கு அவரைச் சாட்சியாகவும், புறவினத்தார்க்குத் தலைவராகவும் ஆளுநராகவும் ஏற்படுத்தினோம். யெருசலேமே, இதோ, நீ அறியாத மக்களைக் கூப்பிடுவாய், உன்னை அறிந்திராத இனத்தார், உன்னை மகிமைப்படுத்திய இஸ்ராயேலின் பரிசுத்தரும், உன் கடவுளுமாகிய ஆண்டவரை முன்னிட்டு உன்னிடம் ஓடி வருவார்கள்.

"ஆண்டவரைக் கண்டடையக்கூடிய போதே, அவரைத் தேடுங்கள், அவர் அண்மையில் இருக்கும் போதே, அவரைக் கூவியழையுங்கள். தீயவன் தன் தீநெறியையும், அநீதன் தன் எண்ணங்களையும் தள்ளிவிட்டு, ஆண்டவரிடம் திரும்பி வரட்டும், அவன்மேல் அவர் இரக்கம் காட்டுவார்; நம்முடைய கடவுளிடம் வரட்டும்; ஏனெனில் மன்னிப்பு வழங்குவதில் அவர் வள்ளல். நம்முடைய எண்ணங்கள் உங்கள் எண்ணங்களல்ல, நம்முடைய வழிகள் உங்கள் வழிகளல்ல, என்கிறார் ஆண்டவர். மண்ணி

லிருந்து விண் மிக உயர்ந்திருப்பது போல் உங்கள் வழிகளைவிட நம்முடைய வழிகளும், உங்கள் எண்ணங்களைவிட நம்முடைய எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.

"மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்திற்குத் திரும்பாமல், நிலத்தை நனைத்து, செழிப்பாக்கி, அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து, விதைப்பவனுக்கு விதையும், உண்பவனுக்கு உணவும் தருகிறது. அவ்வாறே, நம் வாயினின்று புறப்படும் வார்த்தையும் இருக்கும்; அது பயன் தராமல் நம்மிடம் திரும்பாது; நாம் விரும்பியதையெல்லாம் செய்து முடிக்கும்: எதற்காக நாம் அதை அனுப்பினோமோ, அதை நிறைவேற்றும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*இசை. 12:2-3. 4bcd.5-6 (பல்லவி: 3)*

பல்லவி: **மீட்பரின் ஊற்றுகளினின்று தண்ணீரை அகமகிழ்வோடு முகந்து கொள்வீர்கள்.**

2 இதோ கடவுள்தான் என் மீட்பு. அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன்,
அஞ்சேன்: ஏனெனில் ஆண்டவரே என் வலிமை, அவரையே பாடுவேன்.
என் மீட்பு அவரே.
3 மீட்பரின் ஊற்றுகளினின்று தண்ணீரை அகமகிழ்வோடு நீங்கள் முகந்து
கொள்வீர்கள். பல்லவி

4 ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள், அவரது பெயரைப் போற்றிப் புகழுங்கள். புறவினத்தார்க்கு அவர் செயல்களை அறிக்கையிடுங்கள், அவர் பெயர் உயர்ந்ததெனப் பறைசாற்றுங்கள். பல்லவி

5 ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள், ஏனெனில் மகிமைக்குரிய செயல்களைச்
செய்தார்; உலகெங்கும் இதனைத் தெரியப்படுத்துங்கள்.
6 சீயோனின் குடிகளே ஆர்ப்பரியுங்கள், மகிழ்ச்சியினால் பாடுங்கள்;
ஏனெனில் இஸ்ராயேலின் பரிசுத்தர், உன் நடுவில் மேன்மையோடு
விளங்குகிறார். பல்லவி

## ஆறும் வாசகம்

**ஆண்டவரின் ஒளிச்சுடரை நோக்கி நட.**

**இறைவாக்கினர் பாரூக் ஆகமத்திலிருந்து வாசகம்** 3:9-15. 32—4:4

இஸ்ராயேலே, வாழ்வளிக்கும் முறைமைகளைக் கேளுங்கள்; விவேகத்தைக் கற்றுக்கொள்ளக் காது கொடுத்துக் கேளுங்கள். இஸ்ராயேலரே நீங்கள் பகைவர்களின் நாட்டில் இருப்பது ஏன்? அந்நிய நாட்டில் தளர்ச்சியுற்றிருப்பது ஏன்? இறந்தவர்களோடு நீங்களும் தீட்டுப்பட்டவர்களாய்ப் பாதாளத்தில் இறங்குகிறவர்களோடு சேர்த்தெண்ணப்படுவது ஏன்? ஞானத்தின் ஊற்றை நீங்கள் கைவிட்டீர்கள். ஆண்டவரின் வழியில் நீங்கள் நடந்திருந்தால், உண்மையில் முடிவில்லாத சமாதானத்தோடு வாழ்ந்திருப்பீர்கள். ஞானம் எங்கேயிருக்கிறது, ஆற்றல் எங்கே உள்ளது, அறிவுத்திறன் எங்கிருக்கிறது என்று அறிந்து கொள்ளுங்கள்; அதே சமயத்தில் வாழ்நாளின் நீடிப்பும் நல்வாழ்வும், கண்களின் ஒளியும் சமாதானமும் எங்கிருக்கின்றன என்று அறிந்து கொள்வீர்கள். ஞானத்தின் இருப்பிடத்தைக் கண்டவன் யார்? அதன் கருவூல அறைகளுள் நுழைந்தவன் எவன்?

ஆனால் எல்லாம் தெரிந்தவர் அதை அறிந்திருக்கிறார், தம் மெய்ஞ் ஞானத்தினால் அதைக் கண்டடைந்தார், அவரே முடிவில்லாக் காலத்திற்கும் பூமியை நிலைநாட்டினார். பல்வகை மிருகங்களாலும் உயிர்களாலும் நிரப்பினார். அவர் ஒளியை அனுப்புகிறார், அது புறப்படுகின்றது; அதைத் திரும்ப அழைக்கிறார், அச்சத்தோடு கீழ்ப்படிகிறது. தத்தம் சாமத்தில் விண்மீன்கள் ஒளி வீசின, மகிழ்ச்சியாய் இருந்தன. அவற்றை அவர் அழைத்தார், அவை, "இதோ இருக்கிறோம்" என்றன; தங்களை உண்டாக்கியவருக்காக இன்பத்தோடு ஒளி வீசின.

அவரே நம்முடைய கடவுள், அவருக்கு இணையானவர் ஒருவருமில்லை! உண்மையறிவின் வழியனைத்தையும் கண்டவர் அவரே, தம் ஊழியனாகிய யாக்கோபுக்கு அதைக் கையளித்தார், தம் அன்புக்குரிய இஸ்ராயேலுக்குச் சொல்லிக் கொடுத்தார். அதன்பிறகு அந்த ஞானம் பூமியின்மேல் தோன்றிற்று, மனிதர்கள் நடுவில் குடி கொண்டிருந்தது. அந்த ஞானம் கடவுளுடைய கற்பனைகளின் நூலேயாகும், என்றென்றைக்குமிருக்கும் திருச்சட்டமே யாகும், இதைக் கடைப்பிடிப்பவர் அனைவரும் வாழ்வடைவர், இதைக் கைவிடுபவர் சாவையே அடைவர்:

யாக்கோபே, மனந்திரும்பு; அதைக் கைப்பற்றிக்கொள்; அதன் ஒளிச் சுடரையும், வீசும் வெளிச்சத்தையும் நோக்கி நட. உன்னுடைய மகிமையைப் பிறனுக்கு விட்டு விடாதே, உனது பெருமையை அந்நிய நாட்டானுக்கு விட்டுக்கொடுக்காதே. இஸ்ராயேலே, உண்மையாகவே நாம் பேறு பெற்றவர்கள்; கடவுளுக்கு உகந்தவை நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 18: 7. 8. 9. 10 (பல்லவி: அரு. 6:63)

பல்லவி: ஆண்டவரே, வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்குப் புத்துயிர் ஊட்டுவது: ஆண்டவருடைய கட்டளை உறுதியானது, எளியோருக்கு அறிவூட்டுவது. பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை; உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளி ஊட்டுவது. பல்லவி

9 ஆண்டவர்மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது. ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை. பல்லவி

10 பொன்னினும் மணியினும் பெரிதும் விரும்பத் தக்கவை: தேனினும் தேனடையினும் இனிமையானவை. பல்லவி

## ஏழாம் வாசகம்

*நாம் உங்கள் மேல் தூய நீரைத்தெளிப்போம்;*
*உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவோம்.*

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம்

*36: 16-17a. 18–28*

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது :

"மனிதா, இஸ்ராயேல் வீட்டார் தங்கள் சொந்த நாட்டில் குடியிருந்த காலத்தில், அதைத் தங்கள் தீய நடத்தையாலும் தீய செயல்களாலும் தீட்டுப்படுத்தினர்கள் : அவர்கள் இரத்தம் சிந்திக் குற்றம் செய்ததாலும், தங்கள் சிலைகளால் நாட்டைப் பங்கப்படுத்தியதாலும் நாம் அவர்கள்மேல் நம்கோபத்தையும் ஆத்திரத்தையும் காட்டி, அவர்களைப் புறவினத்தார்க்குள்ளே சிதறடித்தோம்; அவர்களைப் பல நாடுகளுக்குத் துரத்தி விட்டோம்; அவர்களுடைய நடத்தைக்கும் அக்கிரமங்களுக்கும் தக்கபடி அவர்களைத் தண்டித்தோம். அவர்கள் புறவினத்தாரிடம் போனபோது இந்தப் புறவினத்தார் அவர்களைக் குறித்து, 'இவர்கள் கடவுள் மக்களாம்; அப்படியிருந்தும் அவரது நாட்டிலிருந்து வெளியேற வேண்டி வந்ததாம்' என்று சொன்னர்கள்; அவ்வாறு அவர்கள் நமது திருப்பெயரின் பரிசுத்தம் கெடுவதற்குக் காரணமாய் இருந்தனர்; ஆயினும் இஸ்ராயேல் வீட்டார் தாங்கள் வந்து சேர்ந்த புறவினத்தார்களின் நடுவில் பங்கப்படுத்திய நமது திருப்பெயரை முன்னிட்டே அவர்கள்மேல் இரக்கம் கொண்டோம்.

"ஆதலால் இஸ்ராயேல் வீட்டாரிடம் சொல்: ஆண்டவராகிய இறைவன் கூறுகிறுர் : இஸ்ராயேல் வீட்டாரே, உங்களை முன்னிட்டு நாம் செயலாற்ற முற்படவில்லை; ஆனல் புறவினத்தாரின் நடுவில் நீங்கள் பங்கப்படுத்திய நமது திருப்பெயரை முன்னிட்டே செயலாற்றப் போகிறேம். புறவினத்தாரின் நடுவில் நமது திருப்பெயரின் பரிசுத்தத்தை நீங்கள் பங்கப்படுத்தினீர்கள்; பங்கப்படுத்தப்பட்ட மகத்தான நமது திருப்பெயரை நாம் பரிசுத்தமாக்குவோம்; இவ்வாறு நாம் உங்கள் வழியாய் அவர்கள் கண்முன் நமது பரிசுத்தத்தை நிலைநாட்டும்போது, நாமே ஆண்டவர் என்பதைப் புறவினத்தார் அறிந்து கொள்வார்கள், என்கிறுர் ஆண்டவர்.

ஏனெனில் புறவினத்தாரிடமிருந்து நாம் உங்களை மீட்போம்; எல்லா நாடுகளிலிருந்தும் உங்களைக் கூட்டிச் சேர்த்து, உங்கள் சொந்த நாட்டுக்கே திரும்பக் கொண்டுவருவோம். நாம் உங்கள்மேல் தூய

நீரைத் தெளிப்போம்; உங்கள் அழுக்குகள் எல்லாம் போய்விட, நீங்கள் தூய்மையாய் இருப்பீர்கள்; சிலைவழிபாட்டுத் தீட்டுகளிலிருந்து உங்களைத் தூய்மையாக்குவோம்.

உங்களுக்குப் புதிய இதயத்தை அருளுவோம். உங்கள் உள்ளத்தில் புதிய ஆவியை ஊட்டுவோம்; உங்கள் உடலிலிருந்து கல்லான இதயத்தை எடுத்துவிட்டு, உணர்ச்சியுள்ள இதயத்தை உங்களுக்குக் கொடுப்போம். உங்கள் உள்ளத்தில் நமது ஆவியை ஊட்டுவோம். நம் கற்பனைகளின்படி நடக்கவும், நம் நீதி முறைமைகளைக் கடைப்பிடிப்பதில் கவனமாயிருக்கவும் செய்வோம். உங்கள் தந்தையர்களுக்கு நாம் தந்த நாட்டில் நீங்கள் குடியிருப்பீர்கள்; அப்போது நீங்கள் நம் மக்களாய் இருப்பீர்கள், நாம் உங்கள் கடவுளாய் இருப்போம்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 41 : 2. 4bcd ; சங். 42 : 3. 4 (சங். 41 : 2)*

பல்லவி : கலைமான் நீரோடைகளை ஆர்வமுடன் நாடிச்செல்வதுபோல், இறைவா, என் நெஞ்சம் உம்மை ஆர்வத்துடன் நாடிச் செல்கிறது.

2 இறைவன்மீது, உயிருள்ள இறைவன்மீது என் உள்ளம் தாகங்கொண்டது; என்று சொல்வேன்? இறைவனின் முகத்தை என்று காண்பேன்?

4 மக்கள் கூட்டத்தோடு சேர்ந்து அவர்களை அழைத்துக் கொண்டு இறைவனின் இல்லத்திற்குச் சென்றேனே! அக்களிப்பும் புகழ் இசையும் முழங்க விழாக் கூட்டத்தில் நடந்தேனே! பல்லவி

3 உமது ஒளியை வீசியருளும், உமது உண்மையைக் காட்டியருளும்: அவையே என்னை வழி நடத்தி உமது புனித மலைக்கும் உறைவிடத்துக்கும் கொண்டு சேர்க்கும். பல்லவி

4 இறைவனின் பீடத்துக்குச் செல்வேன்; எனக்கு அகமகிழ்வும் அக்களிப்பும் தரும் இறைவனிடம் செல்வேன்: இறைவா, என் இறைவா, வீணை கொண்டு உமக்குப் புகழ்பாடுவேன். பல்லவி

*அல்லது, இத்திருவிழிப்பின் போது ஞானஸ்நானம் நடைபெறுமானால் ஐந்தாம் வாசகத்துக்குப் பின்வரும்பதிலுரைப் பாடலைப் பயன்படுத்தவும். (பக்கம் 714)*

அல்லது

சங். 50 : 10-11. 12-13. 16-17 (பல்லவி : 10)

பல்லவி : தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்.

10 தூயதோர் உள்ளத்தை இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும்: உறுதி
தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.
11 உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும் : உமது பரிசுத்த
ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும். பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும் : உமது பெருந்
தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
13 தீயவர்களுக்கு உம் வழிகளை நான் புகட்டுவேன் : பாவிகள் உம்மிடம்
திரும்பி வருவர். பல்லவி

16 ஏனெனில், பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை : தகனப்பலி கொடுத்
தாலும் அதை நீர் ஏற்பதில்லை.
17 இறைவா, நான் உமக்குச் செலுத்த வேண்டிய பலி நொறுங்கிய
உள்ளமே : தாழ்வுற்று நொறுங்கிய உள்ளமே : தாழ்வுற்று நொறுங்கிய
உள்ளத்தை, இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை. பல்லவி

---

## திருமுகம்

**இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 6: 3-11

சகோதரர்களே :

கிறிஸ்து யேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றோம் என்பதை அறியீர்களா? ஆகவே, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து பரம தந்தையின் மாட்சிமையால் எழுப்பப்பட்டதுபோல நாமும் புத்துயிர் பெற்றவர்களாய் வாழும்படி ஞானஸ்நானத்தின் வழியாய் அவரோடு இறந்து புதைக்கப்பட்டோம்.

ஏனெனில், அவருடைய மரணத்தின் சாயலைத் தாங்கி, அவரோடு பொருத்தி இணைக்கப்பட்டால், உயிர்த்தெழுதலின் சாயலையும் தாங்கி, அவரோடு இணைக்கப்படுவோம். நாம் இனிப் பாவத்துக்கு அடிமையாய்

இராதபடி பாவத்துக்கு உட்பட்ட உடல் அழிந்து போகுமாறு, நம்முடைய பழைய இயல்பு அவரோடு சிலுவையில் அறையுண்டது என்பது நமக்குத் தெரியும். செத்தவன் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டான் அன்றோ?

கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம்; இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார், இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர் என்று நாம் அறிந்திருக்கிறோம். அவர் சாவுக்குள்ளானார்; அந்தச் சாவு பாவத்தின் ஆளுகைக்கு உட்பட்ட வாழ்க்கையை ஒரே முறையில் எக்காலத்திற்கும் ஒழித்துவிட்ட சாவு. அவர் வாழ்கிறார்; அந்த வாழ்வு கடவுளுக்காக வாழும் வாழ்வு. அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் செத்தவர்கள்; கிறிஸ்து யேசுவுக்குள் கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என எண்ணிக்கொள்ளுங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 117: 1-2. 16ab-17. 22-23*

*பல்லவி :* அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில், அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.

2 'என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்' என்று இஸ்ராயேல் இனத்தார் சாற்றுவார்களாக.

பல்லவி

16 ஆண்டவரது வலக்கரம் வலிமையாய்ச் செயலாற்றியது. ஆண்டவரது வலக்கரம் என்னை நிலைநிறுத்தியது.

17 இறந்து ஒழியேன், உயிர் வாழ்வேன். ஆண்டவருடைய அருஞ் செயல்களைப் பறைசாற்றுவேன்.

பல்லவி

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.
23 ஆண்டவர் செயலிது. நம் கண்ணுக்கு வியப்பே!

பல்லவி

## நற்செய்தி வாசகம்

### முதல் ஆண்டு

**அவர் உயிர்த்துவிட்டார்; உங்களுக்குமுன்
அவர் கலிலேயாவுக்குப் போகிறார்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 28: 1-10

ஓய்வு நாளுக்குப்பின், வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் மதலேன் மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தனர். இதோ! பெரிய நில நடுக்கம் உண்டாயிற்று, ஆண்டவரின் தூதர் வானினின்று இறங்கிவந்து, கல்லைப் புரட்டி, அதன்மேல் அமர்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போன்றும், உடை உறைபனிபோல் வெண்மையாயும் இருந்தன. காவலர் அவரைக் கண்டு அஞ்சி நடுங்கிச் செத்தவர்போல் ஆயினர்.

வான தூதர் பெண்களை நோக்கி, "அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையுண்ட யேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் கூறியபடியே உயிர்த்துவிட்டார். வாருங்கள், ஆண்டவரைக் கிடத்திய இடத்தைப் பாருங்கள். விரைந்து செல்லுங்கள். அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்துவிட்டார் என்று அவர் சீடருக்குச் சொல்லுங்கள். இதோ! உங்களுக்குமுன் அவர் கலிலேயாவுக்குப் போகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள். இதோ உங்களுக்குச் சொல்லிவிட்டேன்" என்று சொன்னார்.

அவர்களும் அச்சத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் விரைவாகக் கல்லறையை விட்டு அகன்று, அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். இதோ! யேசு, அவர்களுக்கு எதிர்ப்பட்டு, "வாழ்க" என்றார். அவர்கள் அணுகி, அவர்பாதங்களைத் தழுவிக்கொண்டு அவரைப் பணிந்தனர். யேசு அவர்களை நோக்கி, "அஞ்சாதீர்கள், நீங்கள் என் சகோதரரிடம் சென்று, கலிலேயாவுக்குப் போகச் சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்று சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## இரண்டாம் ஆண்டு

*சிலுவையிலறையுண்ட நாசரேத்தூர் யேசு உயிர்த்து விட்டார்.*

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 16:1-8

ஓய்வுநாள் கழிந்ததும் மதலேன் மரியாளும் யாகப்பரின் தாய் மரியாளும் சலோமேயும் யேசுவின் உடலில் பூசுவதற்காகப் பரிமளப் பொருள்கள் வாங்கினர். வாரத்தின் முதல்நாள் அதிகாலையில் கதிரவன் எழுந்தபின் கல்லறைக்கு வந்தனர். "கல்லறைவாயிலிலிருந்து, யார் நமக்குக் கல்லைப்புரட்டிவிடுவார்?" என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டனர். நிமிர்ந்து பார்க்கும்பொழுது கல் புரண்டிருப்பதைக் கண்டனர். அதுவோ மிகப் பெரிய கல்.

அவர்கள் கல்லறைக்குள் நுழைந்தபொழுது, வெண்ணுடை அணிந்து வலப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞனைக் கண்டு திகிலுற்றனர். அவன் அவர்களை நோக்கி, "திகிலுறவேண்டாம். சிலுவையிலறையுண்ட நாசரேத்தூர் யேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்து விட்டார். இங்கே இல்லை. இதோ! அவரை வைத்த இடம். நீங்கள்போய் அவருடைய சீடர்களிடமும் இராயப்பரிடமும், 'உங்களுக்கு முன் அவர் கலிலேயாவிற்குப் போகிறார். அவர் உங்களுக்குக் கூறியவாறு நீங்கள் அவரை அங்கே காண்பீர்கள்' என்று சொல்லுங்கள்" என்றான்.

அவர்கள் வெளியே வந்து கல்லறையை விட்டு ஓடினார்கள். ஏனெனில், திகைப்பும் நடுக்கமும் அவர்களை ஆட்கொண்டது; அச்சம் மேலிட அவர்கள் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## மூன்றும் ஆண்டு

*உயிருள்ளவரை இறந்தோரிடையே தேடுவானேன்?*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 24:1-12

வாரத்தின் முதல்நாள் விடியற்காலையில் பெண்கள் தாங்கள் ஆயத்தப்படுத்தியிருந்த வாசனைப் பொருட்களை எடுத்துக்கொண்டு கல்லறைக்

குச் சென்றனர். கல்லறை வாயிலில் இருந்த கல் புரட்டியிருக்கக் கண்டனர். உள்ளே நுழைந்தபோது, ஆண்டவராகிய யேசுவின் உடலை அவர்கள் காணவில்லை.

ஆதலால் மனம் கலங்கினர். அப்பொழுது, இதோ! மின்னொளி வீசும் ஆடை அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினர். பெண்களோ அச்சங்கொண்டு, முகம் கவிழ்ந்து நின்றனர். தூதர்கள் அவர்களைப் பார்த்து, "உயிருள்ளவரை இறந்தோரிடையே தேடுவானேன்? அவர் இங்கே இல்லை; உயிர்த்துவிட்டார். மனுமகன் பாவிகளிடம் கையளிக்கப் பட்டுச் சிலுவையில் அறையுண்டு மூன்றும் நாள் உயிர்த்தெழ வேண்டுமென்று அவர் கலிலேயாவில் இருக்கும்போதே உங்களுக்குச் சொன்னதை நினைவு கூருங்கள்" என்றனர். அவர்களும் அவர் சொன்னதை நினைவு கூர்ந்தனர்.

கல்லறையை விட்டுத் திரும்பி வந்த பெண்கள், பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் இதெல்லாம் அறிவித்தனர். அப்பெண்கள் மதலேன் மரியாளும், அருளம்மாளும், இயாகப்பரின் தாய் மரியாளும் ஆவர். அவர்களோடு சேர்ந்து மற்றப் பெண்களும் இதை அப்போஸ்தலருக்குக் கூறினர். பெண்கள் கூறியது வெறும் பிதற்றலாகத் தோன்றியதால் அவர்கள் நம்பவில்லை.

இராயப்பரோ எழுந்து கல்லறைக்கு ஓடினார். குனிந்து பார்க்கையில் துணிகள் மட்டும் கிடக்கக் கண்டார். நிகழ்ந்ததைக் குறித்து வியந்து கொண்டே வீடு திரும்பினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா ஞாயிறு - பகலில் திருப்பலி

## முதல் வாசகம்

*இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தபின்,*
*அவரோடு நாங்கள் உண்டோம், குடித்தோம்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 10:34a. 37-43

அந்நாட்களில்:

இராயப்பர் பேசத் தொடங்கிச் சொன்னதாவது: "அருளப்பர் அறிவித்த ஞானஸ்நானத்திற்குப் பின் கலிலேயா தொடங்கி யூதேய

நாடெங்கும் நிகழ்ந்தது என்னவென்று உங்களுக்குத் தெரியும். நாசரேத்தூர் யேசுவைத்தான் குறிப்பிடுகிறேன். கடவுள் அவருக்குப் பரிசுத்த ஆவியையும் வல்லமையையும் அளித்து அபிஷேகம் செய்தார். கடவுள் அவரோடு இருந்ததால், அலகை துன்புறுத்திய அனைவரையும் குணமாக்கி, எங்கும் அவர் நன்மை செய்துகொண்டே சென்றார். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததே.

அவர் யூதேயா நாட்டிலும் யெருசலேமிலும் செய்த அனைத்திற்கும் நாங்கள் சாட்சிகள். அவரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்றுபோட்டனர். ஆனால், கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிர்ப்பித்தார். உயிர்த்தவரைக் கடவுள் அனைவருக்கும் வெளிப்படுத்தாமல், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சிகளுக்கே வெளிப்படுத்தினார். இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தபின் அவரோடு உண்டும் குடித்தும் வந்த நாங்களே சாட்சிகள். வாழ்வோரையும் இறந்தோரையும் நடுத்தீர்க்கக் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர் அவரே என்பதை மக்களுக்கு அறிவிக்கவும், சாட்சியம் கூறவும் கடவுள் எங்களுக்குப் பணித்தார். அவரைக் குறித்தே இறைவாக்கினர் அனைவரும் சாட்சியம் பகர்கின்றனர். 'அவரை விசுவசிக்கும் அனைவரும் அவருடைய பெயரால் பாவ மன்னிப்புப் பெறுவர்' என்று அவர்கள் கூறுகின்றனர்.''

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 117:1-2.16ab-17.22-23 (பல்லவி: 24)

பல்லவி: ஆண்டவர் படைத்த நாள் இதுவே; அக்களிப்போம் இன்று அகமகிழ்வோம்.

அல்லது அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; ஏனெனில், அவர் நல்லவர்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.

2 'என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்' என்று இஸ்ராயேல் இனத்தார், சாற்றுவார்களாக.

பல்லவி

16 ஆண்டவரது வலக்கரம் வலிமையாய்ச் செயலாற்றியது, ஆண்டவரது வலக்கரம் என்னை நிலைநிறுத்தியது.

17 இறந்தொழியேன், உயிர் வாழ்வேன் ஆண்டவருடைய அருஞ்செயல்களைப் பறைசாற்றுவேன்.

பல்லவி

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று. ஆண்டவர் செயலிது நம் கண்ணுக்கு வியப்பே!

'பல்லவி

## இரண்டாம் வாசகம்

**மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்; அங்கேதான் கிறிஸ்து அமர்ந்திருக்கிறார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொலோசியருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 1-4

சகோதரர்களே :

கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்; அங்கேதான், கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகில் உள்ளவற்றின்மீதே மனத்தைச் செலுத்தாமல் மேலுலகிலுள்ளவற்றின்மீதே மனத்தைச் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் இறந்து விட்டீர்கள். உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது. நம்முடைய உயிராகிய கிறிஸ்து தோன்றும் பொழுது, நீங்களும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது

**நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படி பழைய புளிப்பு மாவை அப்புறப்படுத்துங்கள்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 6b-8

சகோதரர்களே :

சிறிதளவு புளிப்புமாவு, பிசைந்தமாவு முழுவதையும் புளிக்கச் செய்யும் என்பது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படி பழைய புளிப்புமாவை அப்புறப்படுத்துங்கள். நீங்கள் புளியாத அப்பமன்றோ? ஏனெனில், நமது பாஸ்காப் பலி நிறைவேறி விட்டது. கிறிஸ்துவே அப்பலி. ஆகையால், விழாக் கொண்டாடுவோம். அதில் பழைய புளிப்பு மாவைப் பயன்படுத்தலாகாது. தீயமனம், கெடுமதி என்னும் புளிப்புமாவை விலக்கி நேர்மை, உண்மை என்னும் புளியாத அப்பத்தையே உண்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## தொடர் பாடல்

*இன்று இதைச் சொல்ல வேண்டும்; எண்கிழமை நாட்களில், விரும்பினுல், சொல்லலாம்.*

பாஸ்காப் பலியின் புகழ்தனையே
பாடிப் புகழ்வோம் கிறிஸ்தவரே.

மாசில் இளமறி மந்தையினை
மாண்பாய் மீட்டுக் கொணர்ந்தாரே;
மாசறு கிறிஸ்துவும் தந்தையுடன்
மாசுறு நம்மை இணைத்தாரே.

சாவும் உயிரும் தம்மிடையே
புரிந்த வியத்தகு போரினிலே
உயிரின் தலைவர் இறந்தாலும்
உண்மையில் உயிரோடாளுகின்ருர்.

வழியில் என்ன கண்டாய் நீ?
மரியே, எமக்கு உரைப்பாயே.

உயிரோடுள்ள கிறிஸ்து பிரான்
கல்லறைதன்னைக் கண்டேனே;
உயிர்த்து எழுந்த ஆண்டவரின்
ஒப்பரும் மாட்சியும் கண்டேனே.

சான்று பகர்ந்த தூதரையும்
போர்த்திய பரிவட்டத்தினையும்,
அவர்தம் தூய துகிலினையும்
நேராய்க் கண்ணுல் கண்டேனே.

கிறிஸ்து என்றன் நம்பிக்கை,
கல்லறை நின்று உயிர்த்தாரே,
இதோ, உமக்கு முன்னுலே
செல்வர் கலிலேயாவிற்கே.

மரித்தோர் நின்று உண்மையிலே
கிறிஸ்து உயிர்த்தது யாமறிவோம்.
வெற்றிகொள் வேந்தே, எம்மீது
நீரே இரக்கங் கொள்வீரே.

அல்லேலூயா 1 கொரி. 5:7b-8a

அல்லேலூயா. நமது பாஸ்காப்பலி நிறைவேறிவிட்டது; கிறிஸ்துவே அப்பலி: ஆகையால் ஆண்டவரிடமாய் விழாக்கொண்டாடுவோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழவேண்டும்*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 20:1-9

வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் இருட்டாயிருக்கும் பொழுதே மதலேன் மரியாள் கல்லறைக்கு வந்தாள். கல்லறை வாயிலில் இருந்த கல் எடுபட்டிருப்பதைக் கண்டாள். கண்டதும் சீமோன் இராயப்பரிடமும், யேசுவினால் நேசிக்கப்பட்டவராகிய மற்றச் சீடரிடமும் ஓடி வந்து அவர்களைப் பார்த்து, "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து எடுத்துவிட்டனர். அவரை எங்கே வைத்தனரோ அறியோம்" என்றாள்.

இராயப்பரும், மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமிக்க ஓடினார்கள். மற்றச் சீடரோ இராயப்பரைவிட விரைவாக ஓடி அவருக்குமுன் கல்லறையை அடைந்தார். குனிந்து உள்ளே பார்த்தபோது தரையில் துணிகள் கிடக்கக் கண்டார். ஆனால் உள்ளே நுழையவில்லை.

அவர் பின்னாலேயே சீமோன் இராயப்பரும் வந்தார். கல்லறைக்குள் நுழைந்து தரையில் கிடந்த துணிகளையும், யேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் தனியாகச் சுருட்டி ஒரு பக்கமாக வைக்கப்பட்டிருந்தது. கல்லறைக்கு முதலில் வந்த மற்றச் சீடரும் உள்ளே நுழைந்து பார்த்தார்; பார்த்து விசுவசித்தார். யேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழவேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அதுவரை அவர்கள் உணரவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

இந்த நற்செய்தி வாசகத்திற்குப் பதிலாக, திருவிழிப்புச் சுவிசேஷத்தைப் பயன்படுத்தலாம்: (பக். 721) பாஸ்கு ஞாயிறன்று மாலையில் திருப்பலி இருந்தால் லூக். 24:13-35 வரையிலுள்ள வாசகத்தையும் பயன்படுத்தலாம்: (பக். 735)

# பாஸ்கா எண்கிழமையில் திங்கள்

## முதல் வாசகம்

*இந்த யேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்;*
*இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகள்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 2:14. 22-32

பெந்தெகொஸ்தே நாளில், இராயப்பர் பதினொருவரோடு எழுந்து நின்று, உரத்த குரலில் பேசியதாவது :

"யூதர்களே, மற்றும் யெருசலேம் வாழ்மக்களே, நான் சொல்வதை அறிந்துகொள்ளுங்கள். என் சொல்லுக்குச் செவிகொடுங்கள்.

இஸ்ராயேல் மக்களே, நான் கூறுவதைக் கேளுங்கள் : புதுமைகள் அற்புதங்கள், அருங்குறிகளால் நாசரேத்தூர் யேசு கடவுளது சான்று பெற்றவராக உங்கள்முன் எண்பிக்கப்பெற்றார். ஏனெனில், நீங்கள் அறிந்திருப்பதுபோல் இவற்றையெல்லாம் உங்கள் நடுவில் கடவுளே அவர் வழியாகச் செய்தார். கடவுளின் திட்டத்திற்கும் முன்னறிவுக்கும் ஏற்பக் கையளிக்கப்பட்ட இவரைத்தான், நீங்கள் திருச்சட்டம் அறியாதவர்களைக் கொண்டு சிலுவையிலறைந்து கொன்றீர்கள். கடவுளோ அவரை மரண வேதனைகளினின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார். ஏனெனில் மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருத்தல் இயலாது.

தாவீது அவரைப் பற்றிக் கூறுவது : "ஆண்டவர் என்றுமே என் கண்முன் உள்ளார்: யான் அசைவுறாதபடி அவர் என் வலப்பக்கம் நிற்கிறார். இதனால் என் உள்ளம் மகிழ்ந்தது ; என் நாவு அக்களிப்பு எய்தியது : என் உடலும் நம்பிக்கையில் நிலைத்திருக்கும். ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர். உம் புனிதர் அழிவுகாண விடமாட்டீர். வாழ்வின் வழிகளை எனக்குக் காட்டினீர், உம் திருமுன் நிற்கும் என்னை மகிழ்வால் நிரப்புவீர்.

"சகோதரரே, மூதாதையாகிய தாவீதைப்பற்றி ஒளிவு மறைவின்றி உங்களுக்குக் கூறலாமா? அவர் இறந்தார் ; அடக்கம் செய்யப்பட்டார் : அவரது கல்லறை இந்நாள்வரை நம்மிடையே இருக்கின்றது. எனவே, 'அவர் பாதாளத்தில் விடப்படவில்லை' என்றும், 'அவர் உடல் அழிவு காணவில்லை' என்றும் அவர் கூறியது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னறிந்தேயாகும். ஏனெனில், தாவீது இறைவாக்கினரானதால்,

அவர் வழித்தோன்றல் ஒருவர் அவருடைய அரியணையில் அமர்வார் என்று கடவுள் ஆணையிட்டு உறுதியாகக் கூறியதை அவர் அறிந்திருந்தார். இந்த யேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்; இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகள்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 15:1-2a, 5. 7-8. 9-10. 11 (பல்லவி: 1)

பல்லவி: இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.
அல்லது அல்லேலூயா.

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும். உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.
2 ''நீரே என் ஆண்டவர்'' என்று ஆண்டவரிடம் சொன்னேன். பல்லவி

5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்: எனக்குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே.
7 எனக்கு ஆலோசனை கொடுத்த ஆண்டவரை நான் வாழ்த்துவேன்: இரவில் கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண் முன் கொண்டிருக்கிறேன்: அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன். பல்லவி

9 இதனால் என் இதயம் அகமகிழும்; என் உள்ளம் அக்களிக்கும்: என் உடலும் கவலையின்றி இளைப்பாறும்.
10 ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிட மாட்டீர்: உம் புனிதர் அழிவு காண விடமாட்டீர். பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர்: உம் திருமுன் எனக்கு நிறைமகிழ்ச்சியையும், உம் வலக்கையில் இடைவிடா இன்பத்தையும் நீர் காட்டுவீர். பல்லவி

விரும்பினால், தொடர்பாடலைச் சொல்லலாம் (பக்கம். 726)

## அல்லேலூயா

சங். 117: 24

அல்லேலூயா. ஆண்டவர் படைத்த நாள் இதுவே;
அக்களிப்போம், இன்று அகமகிழ்வோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் சகோதரரிடம் சென்று கலிலேயாவுக்குப் போகச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 28 : 8-15

அக்காலத்தில் பெண்கள் அச்சத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் விரைவாகக் கல்லறையை விட்டு அகன்று, அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள்.

இதோ! யேசு, அவர்களுக்கு எதிர்ப்பட்டு, "வாழ்க" என்றார். அவர்கள் அணுகி, அவர் பாதங்களைத் தழுவிக்கொண்டு அவரைப் பணிந்தனர். யேசு அவர்களை நோக்கி, "அஞ்சாதீர்கள், நீங்கள் என் சகோதரரிடம் சென்று, கலிலேயாவுக்குப் போகச் சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்று சொன்னார்.

அவர்கள் சென்றபின், இதோ! காவலருள் சிலர் நகருக்குள் வந்து நிகழ்ந்தவை அனைத்தையும் தலைமைக் குருக்களிடம் அறிவித்தனர். அவர்கள் மூப்பருடன் கூடி ஆலோசனை செய்து, படை வீரருக்கு நிரம்பப் பணம் கொடுத்து, "நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது இரவில் அவருடைய சீடர் வந்து அவரைத் திருடிச் சென்றனர் என மக்களுக்குச் சொல்லுங்கள். ஆளுநரின் காதுக்கு இது எட்டுமாயின் அவரிடம் சொல்லி உங்களுக்கு ஒரு தொந்தரவும் வராதபடி, நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என்றனர். அவர்களும் பணத்தை வாங்கிக் கொண்டு தங்களுக்குச் சொல்லிக் கொடுத்தபடி செய்தார்கள். இந்நாள் வரை யூதரிடையே இக்கதை பரவியிருக்கிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா எண் கிழமையில் செவ்வாய்

## முதல் வாசகம்

**மனந்திரும்புங்கள்; யேசுவின்பெயரால் நீங்கள் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெறுங்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 2:36-41

பெந்தெகொஸ்தே நாளில் இராயப்பர் யூதர்களை நோக்கிக் கூறியதாவது:

நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த யேசுவை, கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினார் என்பதை இஸ்ராயேல் குலத்தவரெல்லாம் உறுதியாக அறிந்துகொள்வார்களாக,"

இதைக்கேட்டு, அவர்கள் உள்ளம் குத்துண்டவர்களாய் இராயப்பரையும் மற்ற அப்போஸ்தலர்களையும் நோக்கி, "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று வினவினர். அதற்கு இராயப்பர், "மனந்திரும்புங்கள்; பாவ மன்னிப்பு அடைவதற்காக யேசு கிறிஸ்துவின் பெயரால் நீங்கள் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெறுங்கள். அப்பொழுதுபரிசுத்த ஆவியாம் திருக்கொடையைப் பெறுவீர்கள். ஏனெனில், இறைவன் தந்த வாக்குறுதி உங்களுக்குரியதே. என் உங்கள் பிள்ளைகளுக்கும் தொலைவிலுள்ள எல்லோருக்கும், நம் கடவுளாகிய ஆண்டவர் அழைக்கும் ஒவ்வொருவருக்குமே உரியது" என்றார். இன்னும் பல ஆதாரங்களைக் காட்டி, சாட்சியம் கூறி, "நெறி கெட்ட இத்தலைமுறையிலிருந்து நீங்கி உங்களை மீட்டுக்கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு அறிவுறுத்தினர்.

அவருடைய அறிவுரையை ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். இவ்வாறு, அன்று ஏறத்தாழ மூவாயிரம் பேர் சேர்ந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 32 ; 4-5. 18-19. 20. 22 (பல்லவி : 5b)

பல்லவி : ஆண்டவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது.

அல்லது அல்லேலூயா.

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது; அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.

5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்: அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது. பல்லவி

18 இதோ, தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார்: தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.

19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்ச காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார்.
பல்லவி

20 நம் ஆன்மா ஆண்டவருக்காகக் காத்திருக்கின்றது. அவரே நமக்கு உதவியும் கேடயமுமாயிருக்கிறார்.

22 ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக: நாங்கள் உம்மை நம்பியிருக்கும் அளவுக்கு உம் இரக்கமும் இருப்பதாக.
பல்லவி

விரும்பினால், தொடர்பாடலைச் சொல்லலாம் (பக்கம். 726)

அல்லேலூயா

சங். 117:24

அல்லேலூயா. ஆண்டவர் படைத்த நாள் இதுவே;
அக்களிப்போம் இன்று, அகமகிழ்வோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஆண்டவரைக் கண்டேன்; அவர் எனக்கு இறைவனைச் சொன்னார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 20:11-18

அக்காலத்தில்:

மரியாள் கல்லறைக்கருகில் வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். அழுதுகொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தாள். வெண்ணுடை அணிந்த வான தூதர் இருவரை அங்கே கண்டாள். யேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும், மற்றவர் கால்மாட்டிலுமாக அமர்ந்திருந்தனர். அவர்கள் அவளை நோக்கி, "அம்மா ஏன் அழுகிறாய்?" என, அவள், "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய் விட்டனர். எங்கே வைத்தனரோ தெரியவில்லை" என்றாள்.

இப்படிச் சொன்னபின் திரும்பிப்பார்த்தபொழுது யேசு நிற்பதைக் கண்டாள். ஆனால், அவர் யேசு என்று அவள் அறிந்து கொள்ளவில்லை. யேசு அவளை நோக்கி, "அம்மா, ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்டார். அவள் அவரைத் தோட்டக்காரன் என்றெண்ணி அவரிடம், "ஐயா, நீர் அவரைத் தூக்கிக்கொண்டுபோயிருந்தால் எங்கு வைத்தீர்? சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்" என்றாள். யேசு அவளை நோக்கி, "மரியே!" என்றார். அவள் திரும்பிப்பார்த்து, "ராபூனி!" என்றாள். இந்த எபிரேயச் சொல்லுக்குப் 'போதகரே' என்பது பொருள், யேசு அவளை நோக்கிக் கூறியதாவது; "என்னை இப்படிப் பற்றிக்கொள்

ளாதே. ஏனெனில், நான் மேலெழும்பி என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை, என் சகோதரர்களிடம் போய், 'என் தந்தையும் உங்கள் தந்தையும், என் கடவுளும் உங்கள் கடவுளுமாகியவரிடம் நான் மேலே எழும்பிச் செல்கிறேன்' என்று அவர்களுக்குச் சொல்.'' மதலேன் மரியாள் சீடரிடம் வந்து, ''ஆண்டவரைக் கண்டேன். அவர் எனக்கு இப்படிச் சொன்னார்'' என்று அறிவித்தாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா எண்கிழமையில் புதன்

## முதல் வாசகம்

**என்னிடம் உள்ளதை உனக்குக் கொடுக்கிறேன்: யேசுவின் பெயரால் எழுந்து நட.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *3 : 1 -10*

அந்நாட்களில் :

மாலை மூன்று மணிக்குச் செப நேரத்தில், இராயப்பரும், அருளப்பரும் கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது, பிறவியிலேயே முடவனாயிருந்த ஒருவனைத் தூக்கிக் கொண்டு வந்தனர். கோயிலுக்குள் போகிறவர்களிடம் பிச்சை வாங்குவதற்காக நாள்தோறும் அவனைக் கோயிலின் 'அழகு வாயில்' என்னும் வாசலருகில் வைப்பார்கள். இராயப்பரும் அருளப்பரும் கோயிலுக்குள் நுழைகையில் அவர்களைப் பார்த்து பிச்சை கேட்டான்.

இராயப்பரும் அருளப்பரும் அவனை உற்று நோக்கினர். இராயப்பர், ''இங்கே பார்'' என்றார். அவனோ ஏதேனும் கிடைக்கும் என்று அவர்களை ஆவலோடு நோக்கினான். இராயப்பர் அவனிடம், ''வெள்ளியோ, பொன்னோ என்னிடம் இல்லை. என்னிடம் உள்ளதை உன்னிடம் கொடுக்கிறேன்; நசரேனாகிய யேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நட'' என்று சொல்லி, அவனது வலக்கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே அவனுடைய பாதங்களும் கணுக்கால்களும் வலுவடைந்தன. அவன் துள்ளி எழுந்து நடக்கத் தொடங்கினான். துள்ளி நடந்து கடவுளைப் புகழ்ந்துகொண்டே அவர்களுடன் கோயிலுக்குள் சென்றான்.

அவன் நடப்பதையும், கடவுளைப் புகழ்வதையும் மக்கள் எல்லாரும் கண்டனர். கோயிலின் 'அழகு வாயிலில்' பிச்சை கேட்டு உட்கார்ந்திருந்தவன் அவனே என்று அறிந்து கொண்டனர். அவனுக்கு நிகழ்ந்ததைப் பார்த்து, திகைப்புற்று மலைத்துப் போயினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 104:1-2.3-4.6-7.8-9 (பல்லவி : 3b)

பல்லவி: ஆண்டவரைத் தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரைப் புகழ்ந்தேத்துங்கள்; அவர்தம் திருப்பெயரைச் சொல்லி வழிபடுங்கள்: எல்லா இனத்தாரும் அவருடைய செயல்களை அறியச் செய்யுங்கள்.

2 அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்; இசைக் கருவி மீட்டுங்கள்; அவர் செய்த வியத்தகு செயல்களையெல்லாம் பறைசாற்றுங்கள். பல்லவி

3 அவரது திருப்பெயரை நினைத்துப் பெருமைப்படுங்கள்: ஆண்டவரைத் தேடுவோரின் உள்ளம் மகிழ்வதாக.

4 ஆண்டவரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்: அவரது திருமுகத்தை என்றும் தேடுங்கள். பல்லவி

6 ஆண்டவருடைய ஊழியராகிய ஆபிரகாமின் வழித்தோன்றல்களே, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகிய யாக்கோபின் மக்களே,

7 ஆண்டவரே நம் கடவுள்: அவர் ஆட்சி உலகெங்கும் பரவியுள்ளது. பல்லவி

8 நம் உடன்படிக்கையை அவர் என்றென்றும் நினைவுகூர்கின்றார்: ஆயிரமாயிரம் தலைமுறைக்கும் தாம் அளித்த வாக்குறுதியை அவர் நினைவுகூர்கின்றார்.

9 ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையை அவர் மறக்கவில்லை: ஈசாக்குக்கு அவர் இட்ட ஆணையை அவர் மறக்கவில்லை. பல்லவி

விரும்பினால், தொடர் பாடலைச் சொல்லலாம் (பக்கம். 726)

அல்லேலூயா
சங். 117:24
அல்லேலூயா. ஆண்டவர் படைத்த நாள் இதுவே; அக்களிப்போம் இன்று அகமகிழ்வோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*அப்பத்தைப் பிட்கையில் அவரைக் கண்டுகொண்டனர்.*

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 24:13-35

வாரத்தின் முதல்நாள் இதோ, யேசுவின் சீடருள் இருவர் யெருசலேமிலிருந்து ஏழு கல் தொலைவிலிருந்த எம்மாவுஸ் என்ற ஊருக்குப் போய்க்கொண்டிருந்தனர். நடந்ததெல்லாம்பற்றித் தங்களுக்குள் பேசிக்கொண்டே சென்றனர். இப்படிப் பேசி உசாவுகையில், யேசுவே அவர்களோடு சேர்ந்துகொண்டு வழி நடக்கலானார். ஆனால் அவரைக் கண்டுகொள்ளாதபடி அவர்களின் பார்வை தடைபட்டிருந்தது. "எதைப் பற்றி நீங்கள் உரையாடிக்கொண்டு செல்லுகிறீர்கள்?." என்று அவர் அவர்களைக் கேட்டார். அவர்களோ வாடிய முகத்தோடு நின்றனர்.

அவர்களுள் ஒருவரான கிலேயோப்பா என்பவர் அவருக்கு மறுமொழியாக, "யெருசலேமில் உள்ளவர்களுள் நீர் ஒருவர்தான் இந்நாட்களிலே நடந்ததை அறியாதவர்போலும்" என்றார். அதற்கு அவர், "என்ன நடந்தது?" என்று கேட்டார். அவர்களோ, "நாசரேத்தூர் யேசுவைப்பற்றிய செய்திதான். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்லமையுள்ள இறைவாக்கினராயிருந்தார். தலைமைக் குருக்களும் தலைவர்களும் அவரை மரண தண்டனைக்கு உள்ளாகும்படி கையளித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இஸ்ராயேலுக்கு விடுதலை அளிப்பவர் அவரே என நாங்கள் நம்பியிருந்தோம். அது மட்டுமன்று. இதெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள் ஆகின்றது. மேலும் எங்களைச் சார்ந்த பெண்கள் சிலர் எங்களைத் திகைக்கச் செய்தனர். அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்று, அவரது உடலைக் காணாது திரும்பி வந்து, வானதூதர்களைக் காட்சியில் கண்டதாகவும், யேசு உயிரோடு இருக்கிறார் என்று அவர்கள் கூறினதாகவும் சொல்லுகிறார்கள். எங்கள் தோழருள் சிலரும் கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னபடியே இருக்கக் கண்டனர். அவரையோ காணவில்லை" என்றனர்.

அவர் அவர்களை நோக்கி, "அறிவில்லாதவர்களே, இறைவாக்கினர்கள் கூறியதெல்லாம் விசுவசிப்பதற்கு மந்த புத்தியுள்ளவர்களே, மெசியா

இப்பாடுகளைப் பட்டன்றோ மகிமையடைய வேண்டும்" என்று சொல்லி, மோயீசன்முதல் இறைவாக்கினர்கள் அனைவரும் எழுதிவைத்த வாக்குகளிலிருந்து தொடங்கி தம்மைக் குறித்த மறைநூல் பகுதிகளுக்கெல்லாம் விளக்கம் தந்தார்.

அவர்கள் தாங்கள் போகும் ஊரை நெருங்கினர் அவர் இன்னும் வழி நடக்க வேண்டியவர்போல் காட்டிக்கொண்டார். அவர்களோ, எங்களோடே தங்கும். மாலை நேரமாகிறது, பொழுதும் சாய்கிறது, என்று சொல்லி அவரைக் கட்டாயப்படுத்தினர். அவரும் அவர்களோடு தங்குவதற்குச் சென்றார். அங்கு அவர்களுடன் பந்தி அமர்ந்திருக்கையில் அவர் அப்பத்தை எடுத்து இறைபுகழ்கூறி, பிட்டு அவர்களுக்கு அளித்தார். அப்போது, அவர்கள் கண் திறக்கப்பட, அவரைக் கண்டுகொண்டனர். அவரோ, அவர்களிடமிருந்து மறைந்து போனார். அப்போது அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, "வழியில் அவர் நம்மோடு உரையாடி மறைநூலைத் தெளிவாக்குகையில் நம் உள்ளம் உருகவில்லையா !" என்றனர்.

அந்நேரமே, எழுந்து யெருசலேமுக்குத் திரும்பிச் சென்று, பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் கூடியிருக்கக் கண்டனர். கூடியிருந்தவர்கள், "உண்மையாகவே, ஆண்டவர் உயிர்த்தார். சீமோனுக்குக் காட்சி அளித்தார்" எனப் பேசிக்கொண்டிருந்தனர். அவ்விருசீடர் வழியில் நடந்ததையும், அப்பத்தைப் பிட்கையில் அவரைக் கண்டுகொண்டதையும் அவர்களுக்கு விவரித்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பாஸ்கா எண் கிழமையில் வியாழன்

### முதல் வாசகம்

**வாழ்வு அளிப்பவரைக் கொன்றீர்கள்; ஆனால்
கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 3 : 11-26

அந்நாட்களில்:

குணமடைந்த முடவன் இராயப்பரையும் அருளப்பரையும் விடாமல் அவர்களுக்குப் பின்னாலேயே போய்க்கொண்டிருக்கவே, மக்களெல்லாம் திகைப்புற்று, 'சாலொமோன் மண்டபம்' என்னும் இடத்திற்கு அவர்களிடம் ஓடிவந்தனர். இராயப்பர் அதைக் கண்டு, கூட்டத்துக்குக் கூறியது:

"இஸ்ராயேல் மக்களே, இதைக் கண்டு நீங்கள் வியப்பதேன்? எங்கள் சொந்த வல்லமையாலோ, பக்தியின் பலத்தினாலோ இவனை நடக்கவைத்ததாக எண்ணி எங்களை இப்படி விழித்துப் பார்ப்பதேன்? ஆபிரகாம் ஈசாக் யாக்கோபின் கடவுள், நம் முன்னோர்களின் கடவுள், தம் ஊழியர் யேசுவை மகிமைப்படுத்தினார்; நீங்களோ அவரைப் பகைவர்களிடம் கையளித்து விட்டீர்கள்; பிலாத்து விடுதலைத் தீர்ப்பு அளித்தபோதும் அவன்முன் அவரை மறுதலித்தீர்கள். நீதிமானும் புனிதருமானவரை மறுதலித்து, கொலைபாதகனை விடுதலை செய்யக் கேட்டுக்கொண்டீர்கள். வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவரைக் கொன்றீர்கள். ஆனால், கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார். இதற்கு நாங்கள் சாட்சிகள். இதோ உங்கள் கண்முன் நிற்கிறவன் உங்களுக்குத் தெரிந்தவன்.

யேசுவின் பெயர்மீதுள்ள விசுவாசத்தால், அவருடைய பெயரே இவனுக்கு வலுவூட்டியது. அவரால் உண்டாகும் விசுவாசமே உங்கள் எல்லோருக்கும் முன்பாக இவனுக்கு முழுக் குணம் அளித்தது.

"இனி, சகோதரர்களே, தெரியாமல் இப்படிச் செய்து விட்டீர்கள் என்று அறிவேன். அப்படியே உங்கள் தலைவர்களும் தெரியாமல் செய்து விட்டார்கள். கடவுளோ, தம் மெசியா பாடுபட வேண்டுமென இறைவாக்கினர் அனைவருடைய வாய்மொழியாலும் முன்னறிவித்ததை இவ்வாறு நிறைவேற்றினார். ஆகையால் உங்கள் பாவங்கள் ஒழியும் பொருட்டு மனம் மாறிக் கடவுளிடம் திரும்புங்கள். ஆண்டவர் அப்பொழுது இளைப்பாறும் காலத்தை அருளி, உங்களுக்கென மெசியாவாக ஏற்படுத்திய யேசுவை அனுப்புவார். தற்போது இந்த யேசு வானகத்தில் ஏற்கப்பெற்று அனைத்தும் புதிதாக்கப்படும் காலம் வரும்வரை அங்கே இருத்தல் வேண்டும். தொன்றுதொட்டு வந்த தம் பரிசுத்த இறைவாக்கினர்களின் வாயிலாகக் கடவுள் அக்காலத்தைப் பற்றி அறிவித்திருந்தார்.

இவ்வாறு மோயீசன், 'உங்கள் கடவுளாகிய ஆண்டவர் என்னைப் போன்ற ஓர் இறைவாக்கினரை, உங்கள் சகோதரர்களினின்று உங்களுக்கென எழச்செய்வார். அவர் உங்களுக்கு என்ன சொன்னாலும் அதற்குச் செவி கொடுங்கள். அந்த இறைவாக்கினரின் சொல்லைக்கேளாத எவனும் மக்களினின்று களைந்தெறியப்படுவான்' என உரைத்தார். அவ்வாறே, சாமுவேல் தொடங்கி இறைவாக்கு உரைத்த எல்லாரும் ஒருவருக்குப்பின் ஒருவராக இந்நாட்களைக் குறித்து முன்னறிவித்தனர்.

நீங்களோ இறைவாக்கினர்களின் புதல்வர்கள். 'உன் வித்தின் வழியாக மண்ணுலகின் குலமெல்லாம் ஆசிபெறும்' என்று கடவுள் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம் முன்னோருடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு உரியவர்கள் நீங்கள். உங்களுக்குத் தம் அருள் வழங்கி, ஒவ்

வொருவனையும் தன் தீச்செயல்களினின்று விலக்குவதற்காக, கடவுள் தம் ஊழியனை உயிர்ப்பித்து முதன்முதல் உங்களிடம் அனுப்பினார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 8:1a, 4.5-6,7-8 (பல்லவி 1ab)*

*பல்லவி :* **ஆண்டவரே, எம் ஆண்டவரே, உமது பெயர் உலகெங்கும் எவ்வளவோ வியப்புக்குரியது!**

*அல்லது* **அல்லேலூயா.**

1 ஆண்டவரே, எம் ஆண்டவரே, மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க
4 அவன் யார்? அவனைப் பற்றி அக்கறை கொள்ள அவன் யார் என்று
சொல்லத் தோன்றுகிறது!
*பல்லவி*

5 வான தூதரை விட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர், மாண்பை
யும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர், உம் படைப்புகள்
6 அனைத்தின் மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்: அனைத்தையும் அவனுக்குக்
கீழ்ப்படுத்தினீர்.
*பல்லவி*

7 ஆடுமாடுகள், வயல் வெளியில் உலவும் விலங்குகள் அனைத்தும், அவனுக்குப்
8 பணியச் செய்தீர்; வானத்துப் பறவைகள், கடலில் வாழும் மீன்கள்,
அதில் நீந்தும் அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர்.
*பல்லவி*

*விரும்பினால், தொடர் பாடலைச் சொல்லலாம் (பக்கம் 726)*

*அல்லேலூயா* *சங். 117 : 24*

**அல்லேலூயா.** ஆண்டவர் படைத்த நாள் இதுவே;
அக்களிப்போம் இன்று அகமகிழ்வோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மெசியா பாடுபட்டு, இறந்தோரிடமிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழவேண்டும் என்றிருந்தது.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *24:35-48*

**அக்காலத்தில் :**

சீடர் வழியில் நடந்ததையும், அப்பத்தைப் பிட்கையில் யேசுவைக் கண்டுகொண்டதையும் விவரித்தனர்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் யேசு, அவர்கள் நடுவே தோன்றி, "உங்களுக்குச் சமாதானம்" என்றார். அவர்கள் திடுக்கிட்டு, அச்சம்கொண்டு, ஏதோ ஆவியைக் காண்பதாக எண்ணினர். அப்போது அவர் அவர்களை நோக்கி, "ஏன் இந்தக் கலக்கம்? உங்கள் உள்ளத்தில் இத்தகைய எண்ணங்கள் எழுவானேன்? என் கைகளையும் கால்களையும் பாருங்கள். நானேதான்; தொட்டுப் பாருங்கள். நீங்கள் என்னிடம் காணும் எலும்பும் தசையும் ஆவிக்குக் கிடையாது" என்றார். இப்படிச் சொன்னபின்பு தம் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காட்டினார்.

அவர்களோ, மகிழ்ச்சி மிகுதியால் இன்னும் நம்பாமல் வியந்து கொண்டிருக்கும் பொழுது "உண்பதற்கு இங்கு ஏதாவது உங்களிடம் உண்டா?" என்றார். பொரித்த மீன் துண்டொன்று அவருக்குக் கொடுத்தனர். அதை எடுத்து அவர்கள்முன் சாப்பிட்டார்.

அவர் அவர்களைப் பார்த்து, "மோயீசனின் சட்டத்திலும், இறைவாக்குகளிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியுள்ளதெல்லாம் நிறைவேற வேண்டும் என்று நான் உங்களோடு இருந்தபோதே சொன்னேனே: இப்பொழுது நடப்பது அதுதான்" என்றார். மறைநூல் அவர்களுக்கு விளங்கும்படி அவர்களுடைய மனக்கண்ணைத் திறந்தார். பின்னர், அவர்களை நோக்கி, "மறைநூலில் எழுதியுள்ளது இதுதான்: மெசியா பாடுபட்டு, இறந்தோரிடமிருந்து மூன்றும் நாள் உயிர்த்தெழுவார்; பாவமன்னிப்படைய மனந்திரும்ப வேண்டுமென்று யெருசலேமில் தொடங்கி, புறவினத்தார் அனைவருக்கும் அவர் பெயரால் அறிவிக்கப்படும். இவற்றிற்கெல்லாம் நீங்கள் சாட்சி" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பாஸ்கா எண் கிழமையில் வெள்ளி

### முதல் வாசகம்

**இவராலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 4:1-12

அந்நாட்களில்:

முடவன் குணமடைந்த பின், இராயப்பரும் அருளப்பரும் மக்களுக்கு உரையாற்றிக்கொண்டிருக்கையில், குருக்களும், கோவிலின் காவல் தலைவனும், சதுசேயர்களும் அங்குத் தோன்றினர். அவர்கள் மக்களுக்குப்

போதிப்பதையும், யேசுவை எடுத்துக்காட்டாகக் கூறி, இறந்தோர் உயிர்த்தெழுவர் என அறிவிப்பதையும் கண்டு சினந்து, அவர்களைப் பிடித்தனர். ஏற்கெனவே பொழுது போயிருந்ததால் மறுநாள்வரை அவர்களைக் காவலில் வைத்தனர். தேவ வார்த்தையைக் கேட்டவர்களுள் பலர் விசுவாசங்கொண்டனர். இப்படி விசுவசித்த ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரமாயிற்று.

மறுநாள் மக்கள் தலைவர்களும் மூப்பர்களும் மறைநூல் அறிஞர்களும் யெருசலேமில் கூடினர். தலைமைக் குரு அன்னாஸ், கைப்பாஸ், யோவான், அலெக்சாந்தரும் தலைமைக் குருவின் குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் அங்கே இருந்தனர். அப்போஸ்தலர்களை நடுவில் நிறுத்தி, "எந்த வல்லமையால், யார் பெயரால் அதை நீங்கள் செய்தீர்கள்?" என்று வினவினர்.

அப்பொழுது இராயப்பர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, "மக்கள் தலைவர்களே. பெரியோர்களே, நோயாளிக்கு நாங்கள் செய்த நன்மையைக் குறித்து விசாரிப்பீர்களாகில், அவன் எவ்வாறு குணமானான் என்று எங்களைக் கேட்பீர்களாகில், அவன் குணம்பெற்று உங்கள்முன் நிற்பது நசரேயனாகிய யேசு கிறிஸ்துவின் பெயரால்தான். இது உங்கள் எல்லோருக்கும், இஸ்ராயேல் மக்கள் அனைவருக்குமே தெரிந்திருக்கட்டும், இந்த யேசுவைத்தான் நீங்கள் சிலுவையில் அறைந்தீர்கள். கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார். 'கட்டுவோராகிய உங்களால் விலக்கப்பட்டு மூலைக்கல்லாய் அமைந்த கல்' இவர்தாம், இவராலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை; ஏனெனில் நாம் மீட்படைவதற்கு அவர் பெயரைத் தவிர இவ்வுலகில் மனிதருக்கு வேறு பெயர் அருளப்படவில்லை" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 117: 1-2,4. 22–24. 25-27a (பல்லவி : 21)

பல்லவி : வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல்லாயிற்று.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: ஏனெனில், அவர் நல்லவர்;
என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.
2 'என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்' என்று இஸ்ராயேல் இனத்தார்
சாற்றுவார்களாக.

4 'என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்' என ஆண்டவருக்கு அஞ்சு
வோர் அனைவரும் சாற்றுவார்களாக.

பல்லவி

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.
23 ஆண்டவர் செயலிது: நம் கண்ணுக்கு வியப்பே!
24 ஆண்டவர் குறித்த நாள் இதுவே: இன்று அக்களிப்போம், அகமகிழ்
வோம்.

பல்லவி

25 ஆண்டவரே மீட்டருளும்: ஆண்டவரே வெற்றியைத் தாரும்.
26 ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்; ஆண்டவரது இல்லத்
தினின்று உங்களுக்கு ஆசி கூறுகிறோம்.
27 ஆண்டவராகிய இறைவனே, நம்மீது ஒளி வீசினார்.

பல்லவி

விரும்பினால், தொடர்பாடலைச் சொல்லலாம் (பக்கம் 727)

அல்லேலூயா சங். 117: 24

அல்லேலூயா. ஆண்டவர் படைத்த நாள் இதுவே;
அக்களிப்போம் இன்று அகமகிழ்வோம். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யேசு அருகில்வந்து அப்பத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார்; மீனையும் அவ்வாறே கொடுத்தார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21: 1-14

அக்காலத்தில்:

யேசு சீடருக்குத் திபேரியாக் கடலருகே மீண்டும் தோன்றினார்; தோன்றியது இவ்வாறு: சீமோன் இராயப்பர், திதிமு என்ற தோமையார், கலிலேயா நாட்டுக் கானாவூர் நத்தனயேல், செபெதேயுவின் மக்கள், யேசுவின் சீடர்களுள் வேறு இருவர் ஆகிய இவர்கள் கூடியிருந்தார்கள். அப்போது சீமோன் இராயப்பர் அவர்களை நோக்கி, "மீன் பிடிக்கப் போகிறேன்" என்றார். மற்றவர்களும், "உன்னோடு நாங்களும் வருகின்றோம்" என்று, போய்ப் படகிலேறினார்கள். அன்று இரவு அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

விடியற்காலையில் யேசு கரையில் நின்றார். ஆனால் அவரை யேசு என்று சீடர் அறிந்துகொள்ளவில்லை. யேசு அவர்களை நோக்கி, "பிள்ளைகளே, மீன் ஒன்றும் படவில்லையா?" என்று கேட்டார். அவர்கள் ஒன்று

யில்லை'' என்றனர். அப்போது அவர், படகின் வலப் பக்கமாய் வலை வீசுங்கள்; மீன் படும்'' என்றார். அப்படியே வலை வீசினர்; மீன்கள் ஏராளமாய் விழுந்ததால் அவர்கள் வலையை இழுக்க முடியவில்லை. யேசு அன்பு செய்த சீடர், ''அவர் ஆண்டவர்தான்'' என இராயப்பருக்குச் சொன்னார். ''அவர் ஆண்டவர்தான்'' என்று சீமோன் இராயப்பர் கேட்டவுடன், (தாம் ஆடையைக் களைந்துவிட்டிருந்ததால்) மேலாடையைக் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார். மற்றச் சீடர்களோ வலையை மீன்களுடன் இழுத்துக்கொண்டு படகிலே வந்தனர். (ஏனெனில், அவர்கள் கரையிலிருந்து வெகு தொலைவில் இல்லை. ஏறக்குறைய இருநூறு முழம் தொலைவில் தான் இருந்தார்கள்.)

கரையில் இறங்கியவுடன் கரிநெருப்பு மூட்டியிருப்பதையும், அதன் மேல் மீன் வைத்திருப்பதையும் கண்டனர். அப்பமும் இருந்தது. யேசு அவர்களை நோக்கி, ''நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்கள் சில கொண்டு வாருங்கள்'' என்றார். சீமோன் இராயப்பர் மறுபடியும் படகேறி வலையைக் கரைக்கு இழுத்து வந்தார். அதில் பெரிய மீன்கள் நிறைந்திருந்தன. அவை நூற்றைம்பத்து மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. யேசு அவர்களைப் பார்த்து, ''சாப்பிட வாருங்கள்'' என்றார். அவர் ஆண்டவர் என்றறிந்து சீடர்களுள் எவரும், 'நீர் யார்' என்று அவரைக் கேட்கத் துணியவில்லை. யேசு அருகில் வந்து அப்பத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார். மீனையும் அவ்வாறே கொடுத்தார். யேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தபின் தம் சீடர்க்கு இப்பொழுது தோன்றியது மூன்றாம் முறை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா எண்கிழமையில் சனி

## முதல் வாசகம்

**நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் பேசாமல் இருக்க இயலாது.**

4 : 13–21

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம்

அந்நாட்களில் :

இராயப்பரும் அருளப்பரும் கல்வியறிவு அற்றவர்கள் என மக்கள் தலைவர்களும் மூப்பர்களும் மறைநூல் அறிஞர்களும் அறிந்திருந்ததால், அவர்களுடைய துணிவைக் கண்டு வியப்புற்றனர். அவர்கள் யேசுவோடு

இருந்தவர்கள் என்பதும் தெரியும். எனினும் குணமான மனிதன் அவர்களுடன் நிற்பதைக் கண்டபோது ஒன்றும் மறுத்துப் பேச முடியவில்லை. மன்றத்தை விட்டு வெளியேற அவர்களுக்குக் கட்டளையிட்டு, தங்களுக்குள் ஆலோசனை செய்து, "சிறந்ததோர் அருங்குறி இவர்களால் நிகழ்ந்துள்ளது; யெருசலேமில் வாழ்வோர் அனைவருக்கும் அது நன்றாய்த் தெரியும்; அதை நம்மால் மறுக்க முடியாது. இவர்களை என்ன செய்யலாம்? ஆனால், இது மக்களிடையே மேலும் பரவாதிருக்க, இப்பெயரைச் சொல்லி யாரிடமும் பேசலாகாது என இவர்களை எச்சரிப்போம்" என்று முடிவு செய்தனர்.

அதன்பின் அவர்களை அழைத்து, இனி யேசுவின் பெயரைச் சொல்லி எதுவும் பேசவோ போதிக்கவோ கூடாது எனக் கட்டளையிட்டனர். அதற்கு மறுமொழியாக, இராயப்பரும் அருளப்பரும், "கடவுள் சொல்வதைக் கேட்பதற்கு மேலாக, நீங்கள் சொல்வதைக் கேட்பது கடவுளுக்கு முன் நீதியா? நீங்களே தீர்மானியுங்கள். நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் பேசாமல் இருக்க எங்களால் இயலாது" என்றனர். அவனுக்கு நிகழ்ந்ததைக் குறித்து எல்லாரும் கடவுளை மாட்சிமைப்படுத்தியதால், சங்கத்தினர் மக்களுக்கு அஞ்சி, அவர்களைத் தண்டிப்பதற்கு வழி காணாமல், மீண்டும் எச்சரித்து விடுதலை செய்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 117:1,14-15.16ab, 18.19-21* (பல்லவி: 21a)

பல்லவி: ஆண்டவரே, நீர் என் மன்றாட்டைக் கேட்டதால், நான் உமக்கு நன்றி செலுத்துவேன்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: ஏனெனில், அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.

14 ஆண்டவர் என் வலிமையும் திடமுமாய் உள்ளார்: எனக்கு அவர் மீட்பரானார்.

15 நீதிமான்களின் கூடாரங்களில் இதோ மீட்புக் குறித்து மகிழ்ச்சிக் குரல் ஒலிக்கின்றது. பல்லவி

16 ஆண்டவரது வலக்கரம் வலிமையாய்ச் செயலாற்றியது.

17
ஆண்டவரது வலக்கரம் என்னை நிலைநிறுத்தியது,
18
கண்டித்தார், ஆண்டவர் என்னைக் கண்டித்தார்: ஆனால் சாவுக்கு என்னைக்
கையளிக்கவில்லை.
பல்லவி
19
நீதிமான்கள் நுழையும் வாயில்களைத் திறந்துவிடுங்கள்: உள்நுழைந்து
நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்.
20
ஆண்டவரது வாயில் இது; இதுவழியாய் நீதிமான்களே நுழைவர்.
21
என் மன்றாட்டை நீர் கேட்டதால் நான் உமக்கு நன்றி செலுத்துவேன்:
எனக்கு நீர் மீட்பரானதால் உமக்கு நன்றி செலுத்துவேன். பல்லவி

விரும்பினால் தொடர் பாடலைச் சொல்லலாம். (பக்கம் 727).

அல்லேலூயா சங். 117:24

அல்லேலூயா. ஆண்டவர் படைத்த நாள் இதுவே; அக்களிப்போம்
இன்று அகமகிழ்வோம். அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

**உலகெங்கும்போய், நற்செய்தியினை அறிவியுங்கள்.**

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 16: 9–15

வாரத்தின் முதல்நாள் காலையில், யேசு உயிர்த்தெழுந்து முதலில் மதலேன் மரியாளுக்குத் தோன்றினார். இவளிடமிருந்துதான் அவர் ஏழு பேய்களைத் துரத்தியிருந்தார். முன்பு யேசுவோடு இருந்தவர்களிடம் அவள்போய் இதை அறிவித்தாள். அவர்கள் துயருற்று அழுதுகொண்டிருந்தனர். யேசு உயிருடனிருக்கிறார், அவள் அவரைக் கண்டாள் என்பதை அவர்கள் கேட்டபோது நம்பவில்லை.

அதன்பின் அவர்களுள் இருவர் நாட்டுப்புறத்திற்கு நடந்துபோகையில், அவர்களுக்கு வேற்றுருவில் தோன்றினார். அவர்களும் வந்து மற்றவர்களுக்கு அறிவித்தார்கள். அவர்கள் சொன்னதையும் சீடர்கள் நம்பவில்லை.

இறுதியாக, பதினொருவரும் உண்ணும்பொழுது அவர் தோன்றி, உயிர்த்தெழுந்த தம்மைக் கண்டவர்கள் சொன்னதை நம்பாத அவர்களுடைய விசுவாசமின்மையையும் பிடிவாதத்தையும் கடிந்துகொண்டார். மேலும் அவர்களை நோக்கி, “உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்” என்றுரைத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா காலத்தில் 2ஆம் வாரம்

## பாஸ்கா 2ஆம் ஞாயிறு – முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**விசுவசித்தவர்கள் எல்லாரும் ஒருமித்துத் தங்கள் உடைமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாய்க் கொண்டிருந்தார்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *2:42-47*

சகோதரர்கள், அப்போஸ்தலர்களின் படிப்பினையைக் கேட்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிட்குதலிலும், செபிப்பதிலும் நிலையாயிருந்தனர். அற்புதங்கள், அருங்குறிகள் பல அப்போஸ்தலர்கள் வழியாய் நடைபெற்றன. மக்களிடையே அச்சம் நிலவியது. விசுவசித்தவர் எல்லாரும் ஒருமித்துத் தங்கள் உடைமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாய்க் கொள்வர். நிலபுலம் உடைமைகளையெல்லாம் விற்று அவரவர் தேவைக்கேற்ப எல்லாரும் பங்கிட்டுக் கொள்வர்.

நாடோறும் தவறாமல் ஒரே மனதாய்க் கோயிலில் கூடுவர். வீடுகளில் அப்பத்தைப் பிட்டு மனமகிழ்வோடும், கபடற்ற உள்ளத்தோடும் பகிர்ந்துகொள்வர். இங்ஙனம் கடவுளைப் புகழ்ந்து வந்தனர். மக்கள் அனைவருக்கும் வேண்டியவர்களாய் விளங்கினர். ஆண்டவரும் மீட்புப் பெறுவோரை நாள்தோறும் அவர்களோடு சேர்த்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

*சங். 117 : 2-4, 13-15, 22-24 (பல்லவி : 1)*

பல்லவி : ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர்கள் நல்லவர் ; என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.

அல்லது அல்லேலூயா.

2 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம், அவர் நல்லவர் என்று இஸ்ரா
யேல் இனத்தார் சாற்றுவார்களாக.

3 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என்று ஆரோனின் குலத்தார்
சாற்றுவார்களாக.

4 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என ஆண்டவருக்கு அஞ்சுவோர்
அனைவரும் சாற்றுவார்களாக.

பல்லவி

13 என்னைத் தள்ளினார்கள்; விழத்தாட்ட தள்ளிப் பார்த்தார்கள்: ஆனால்
14 ஆண்டவர் எனக்குத் துணை செய்தார்.
ஆண்டவர் என் வலிமையும் திடமுமாய் உள்ளார்: எனக்கு அவர் மீட்ப
ரானார்.

15 நீதிமான்களின் கூடாரங்களில் இதோ மீட்புக்குறித்து மகிழ்ச்சிக்குரல்
ஒலிக்கின்றது.

பல்லவி

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.

23 ஆண்டவர் செயலிது: நம் கண்ணுக்கு வியப்பே.

24 ஆண்டவர் குறித்த நாள் இதுவே: இன்று அக்களிப்போம், அகமகிழ்
வோம்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**இறந்தோரினின்று எழுந்த யேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால், இறைவன் நமக்கு வற்றாத நம்பிக்கை தரும் புதுப்பிறப்பை அளித்தார்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல்
திருமுகத்திலிருந்து வாசகம் *1 : 3–9*

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமான வர் போற்றி! இறந்தோரினின்று எழுந்த யேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால், இறைவன் தம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப நமக்கு வற்றாத நம்பிக்கையைத் தரும் புதுப் பிறப்பை அளித்தார். இதனால் நமக்குக் கிடைக்கும் உரிமைப்பேறு அழியாதது, மாசுற முடியாதது, வாடாதது. இறுதிக் காலத்தில் வெளிப்படப்போகும் மீட்பு வரும்வரை, விசுவாசத்தின் வழியாய்க் கடவுளின் வல்லமையால் காக்கப்பட்டிருக்கும் உங்களுக்கென அந்த உரிமைப்பேறு வானுலகில் வைக்கப்பட்டுள்ளது.

இப்போது சொற்பக் காலம் நீங்கள் பலவகைச் சோதனைகளால் துன்புற்றாலும், அப்பேற்றை நினைத்துக் களிகூருகிறீர்கள் இச்சோதனைகள் நிகழ்வது உங்கள் விசுவாசம் உண்மையானதென்று காட்டவே. அழியக் கூடிய பொன்னும் நெருப்பில் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் யேசு

கிறிஸ்து வெளிப்படும் நாளில் அவ்விசுவாசம் உங்களுக்குப் புகழும் மகிமையும் மாண்பும் தருவதாய் விளங்கும். நீங்கள் அவரைப் பார்த்ததில்லை; எனினும், அவர்மீது அன்பு செலுத்துகிறீர்கள். இப்போதும் நீங்கள் அவரைப் பார்க்கிறதில்லை; எனினும் அவர்மீது விசுவாசங்கொண்டு, சொல்லொண்ணா மகிழ்ச்சியும், மகிமைநிறை அக்களிப்பும் உற்று, உங்கள் விசுவாசத்தின் இறுதிப் பயனாக ஆன்ம மீட்பை அடைகிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அரு. 20: 29

அல்லேலூயா. என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய்; காணாமலே விசுவசிப்பவர்கள் பேறு பெற்றவர்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**எட்டு நாளுக்குப்பின் யேசு வந்தார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

20 : 19-31

வாரத்தின் முதல் நாளாகிய அன்று மாலை, சீடர்கள் தாங்கள் கூடியிருந்த இடத்திலே யூதருக்கு அஞ்சிக் கதவுகளை மூடி வைத்திருக்கையில், யேசு வந்து அவர்களிடையே நின்று, "உங்களுக்குச் சமாதானம்!" என்றார். இவ்வாறு சொல்லி, அவர்களுக்குத் தம் கைகளையும் விலாவையும் காண்பித்தார். ஆண்டவரைக் கண்டு சீடர்கள் மகிழ்வுற்றனர்.

யேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்குச் சமாதானம்! என் தந்தை என்னை அனுப்பினதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். பின்பு அவர்கள்மேல் ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவை மன்னிக்கப்பெறும். எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ, அவை மன்னிப்பின்றி விடப்படும்" என்றார்.

பன்னிருவருள் ஒருவரான திதிமு என்ற தோமையார் யேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றதற்கு அவர், "அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலொழிய விசுவசிக்கமாட்டேன்" என்றார்.

எட்டு நாளுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் வீட்டில் இருந்தனர். தோமையாரும் அவர்களோடிருந்தார். கதவுகள் மூடியிருக்க யேசு வந்து அவர்களிடையே நின்று, "உங்களுக்குச் சமாதானம்!" என்றார். பின்பு தோமையாரை நோக்கி, "இங்கே உன் விரலையிடு; இதோ! என் கைகள். உன் கையை நீட்டி என் விலாவில் இடு; விசுவாசம் அற்றவனாயிராதே, விசுவாசங்கொள்" என்றார்.

அப்போது தோமையார் அவரை நோக்கி, "என் ஆண்டவரே, என் கடவுளே!" என்றார். யேசுவோ, "என்னைக் கண்டதால் விசுவாசங்கொண்டாய். காணாமலே விசுவசிப்பவர்கள் பேறு பெற்றோர்" என்றார்.

இந்நூலில் எழுதாத வேறுபல அருங்குறிகளையும் யேசு தம் சீடர்கள் கண்முன் செய்தார். யேசு கடவுளின் மகனாகிய மெசியாவென்று நீங்கள் விசுவசிக்கும்படியும், விசுவசித்து அவர் பெயரால் வாழ்வு பெறும்படியும் இந்நூலிலுள்ளவை எழுதப்பெற்றன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பாஸ்கா 2ஆம் ஞாயிறு–2ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒரே மும் ஒரே உயிருமாய் இருந்தனர்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *4 : 32-35*

விசுவாசிகள் அத்தனை பேரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர்; அவர்களுள் ஒருவனும் தன் உடைமை எதன்மீதும் உரிமை பாராட்டவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. அப்போஸ்தலர்கள் மிகுந்த வல்லமையோடு ஆண்டவராகிய யேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியம் கூறினர். அனைவருமே மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர்.

வறுமைப்பட்ட நிலையில் அவர்களுள் ஒருவனும் இல்லை. ஏனெனில் நில புலம், வீடு உடையவர்கள் அவற்றை விற்று அத்தொகையைக் கொண்டுவந்து அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைப்பார்கள். அவர்கள் அதை அவனவன் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுப்பார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 117 : 2-4. 16ab–18. 22-24 (பல்லவி : 1)

பல்லவி : **ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.**

அல்லது **அல்லேலூயா**

2 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம். அவர் நல்லவர் என்று இஸ்ரா
யேல் இனத்தார் சாற்றுவார்களாக.
3 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என்று ஆரோனின் குலத்தார்
சாற்றுவார்களாக.
4 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என ஆண்டவருக்கு அஞ்சுவோர்
அனைவரும் சாற்றுவார்களாக. பல்லவி

16 ஆண்டவரது வலக்கரம் வலிமையாய்ச் செயலாற்றியது; ஆண்டவரது
வலக்கரம் என்னை நிலைநிறுத்தியது.
17 இறந்தொழியேன், உயிர்வாழ்வேன்: ஆண்டவருடைய அருஞ்செயல்களைப்
பறைசாற்றுவேன்.
18 கண்டித்தார், ஆண்டவர் என்னைக் கண்டித்தார். ஆனால் சாவுக்கு என்னைக்
கையளிக்கவில்லை. பல்லவி

22 வீடுகட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.
23 ஆண்டவர் செயலிது: நம் கண்ணுக்கு வியப்பே!
24 ஆண்டவர் குறித்த நாள் இதுவே: இன்று அக்களிப்போம், அகமகிழ்
வோம். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கடவுளிடமிருந்து பிறந்தவன் எவனும் உலகை வெல்கிறான்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5 : 1-6

அன்புக்குரியவர்களே:

யேசுதான் கிறிஸ்து என்று விசுவசிக்கும் எவனுக்கும் கடவுளே தந்தை. தந்தைக்கு அன்பு செய்பவன், தந்தை பெற்ற மகனுக்கும் அன்பு செய்கிறான், நாம் கடவுளுக்கு அன்பு செய்து அவருடைய கட்டளைகளைக்

கடைப்பிடிக்கும்போது, கடவுளுடைய மக்களுக்கும் அன்பு செய்கிறோம் என்பது தெளிவாகிறது. அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதே கடவுள் அன்பு. அவருடைய கட்டளைகள் நமக்குச் சுமையல்ல.

ஏனெனில், கடவுளிடமிருந்து பிறந்தவன் எவனும் உலகை வெல்கிறான். உலகைத் தோற்கடித்து நாம் அடைந்த வெற்றி நம் விசுவாசமே. உலகை வெல்பவன் யார்? யேசு, கடவுளின் மகன் என்று விசுவசிப்பவனே.

இந்த யேசு கிறிஸ்து நீராலும் இரத்தத்தாலும் வந்தவர். நீரோடு மட்டுமன்று, நீரோடும் இரத்தத்தோடும் வந்தார், இதற்குத் தேவ ஆவியே சாட்சி, ஏனெனில், தேவ ஆவி உண்மையானவர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா
அரு. 20.29
அல்லேலூயா. என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய்; காணாமலே விசுவாசிப்பவர்கள் பேறுபெற்றவர்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

நற்செய்தி வாசகம் (பக்கம் 747) பாஸ்கா 2ஆம் ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**ஆண்டவரில் விசுவாசம் கொண்டவரின் கூட்டம் வளர்ந்துள்ளது.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 5:12-16

அப்போஸ்தலர்களுடைய கையால் அருங்குறிகளும் அற்புதங்களும் பல, மக்களிடையே நிகழ்ந்தன. எல்லாரும் சாலொமோன் மண்டபத்தில் ஒன்றாய்க் கூடுவதுண்டு. மற்றவர் யாரும் அவர்களோடு சேரத் துணியவில்லை. ஆனால் பொதுமக்கள் அவர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசினர்.

பெருந்தொகையான ஆண்களும் பெண்களும் ஆண்டவரில் விசுவாசங் கொண்டு அவர்களோடு சேர்ந்து கொண்டனர். எனவே, இராயப்பர் போகும்போது பிணியாளிகள் சிலர்மீது அவர் நிழலாவது விழும் என்று எதிர்பார்த்து அவர்களைத் தெருக்களில் கட்டில்களிலும் படுக்கைகளிலும் கிடத்துவார்கள். யெருசலேமைச் சுற்றியிருந்த நகரங்களிலிருந்து மக்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவியால் துன்புற்றவர்களையும் தூக்கிக்கொண்டு வந்து திரளாகக் கூடுவார்கள். அவர்கள் அனைவரும் குணமடைவார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

(சங். 117 : 2-4. 22-24. 25-27a (பல்லவி:1)

பல்லவி : **ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள், ஏனெனில் அவர் நல்லவர் : என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.**

அல்லது **அல்லேலூயா.**

2 அவர் நல்லவர் என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என்று இஸ்ரா
யேல் இனத்தார் சாற்றுவார்களாக.
3 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என்று ஆரோனின் குலத்தார்
சாற்றுவார்களாக.
4 என்றென்றும் உள்ளது அவரது இரக்கம் என ஆண்டவருக்கு அஞ்சுவோர்
அனைவரும் சாற்றுவார்களாக.

பல்லவி

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.
23 ஆண்டவர் செயலிது: நம் கண்ணுக்கு வியப்பே!
24 ஆண்டவர் குறித்த நாள் இதுவே: இன்று அக்களிப்போம், அகமகிழ்
வோம்.

பல்லவி

25 ஆண்டவரே மீட்டருளும்: ஆண்டவரே வெற்றியைத் தாரும்.
26 ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்: ஆண்டவரது
இல்லத்திலிருந்து உங்களுக்கு ஆசி கூறுகிறோம்.
27 ஆண்டவராகிய இறைவனே, நம்மீது ஒளி வீசினார்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**சாவுக்குட்பட்டேனாயினும் இதோ நான் என்றென்றும் வாழ்கிறேன்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் *1:9-11a. 12-13. 17-19*

கிறிஸ்து யேசுவுக்குள் உங்களோடு வேதனைகளிலும் அரசுரிமையிலும் மனவுறுதியிலும் பங்குகொள்ளும் உங்கள் சகோதரனாகிய அருளப்பன் யான், கடவுளின் வார்த்தையை அறிவித்து யேசுவுக்குச் சான்று பகர்ந்ததற்காகப் பத்மு என்ற தீவுக்கு அனுப்பப்பட்டேன். அன்று ஞாயிற்றுக்கிழமை: தேவ ஆவி என்னை ஆட்கொண்டது. எனக்குப்

பின்னுல் பெருங்குரல் ஒன்று கேட்டது. அது எக்காளம் போல் ஒலித்தது. "காட்சியில் காண்பவற்றை ஏட்டில் எழுதி, ஏழு சபைகளுக்கு அனுப்பு" என்று அக்குரல் சொன்னது.

என்னேடு பேசியவர் யார் என்று அறியத் திரும்பிப் பார்த்தேன். அப்படிப் பார்த்தபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளைக் கண்டேன். நடுவில் மனுமகனைப் போன்ற ஒருவரைப் பார்த்தேன்; அவர் நீண்ட அங்கி அணிந்திருந்தார். மார்பில் பொற்கச்சை கட்டியிருந்தார்.

நான் அவரைக் கண்டதும் செத்தவனைப்போல் அவருடைய அடிகளில் விழுந்தேன். அவர் என்னை வலக்கையால் தொட்டுச் சொன்னதாவது: "அஞ்சாதே, முதலும் இறுதியும் நானே. வாழ்பவரும் நானே. சாவுக்குட்பட்டேனுயினும் இதோ, நான் என்றென்றும் வாழ்கிறேன். சாவின் மீதும் பாதாளத்தின்மீதும் அதிகாரம் எனக்கு உண்டு. ஆகையால் நீ கண்டதையும் இப்போது நிகழ்கின்றதையும் இனி நிகழப் போவதையும் எழுது."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

*அவர்கள் மன்ருடியபின் அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினுல் நிரப்பப் பெற்றுக் கடவுளின் வார்த்தையைத் துணிவுடன் எடுத்துச் சொன்னுர்கள்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 4 : 23-31

அந்நாட்களில் :

இராயப்பரும் அருளப்பரும் விடுதலை அடைந்த பின் தம்மவர்களிடம் வந்து, தலைமைக் குருக்களும் பெரியோர்களும் தங்களுக்குச் சொன்ன யாவற்றையும் அறிவித்தனர். அதைக் கேட்டவர்கள் ஒருமிக்க உரத்த குரலில் கடவுளை நோக்கி,

"ஆண்டவரே, விண், மண், கடல் யாவற்றையும், அவற்றில் அடங்கிய அனைத்தையும் ஆக்கியவர் நீரே. நீரே பரிசுத்த ஆவியினுல் உம் ஊழியன் தாவீதின் வாயிலாக, 'புறவினத்தார் சீறுவதேன்? மக்கள் வீணுன சூழ்ச்சி செய்வதேன்? ஆண்டவருக்கும் அவர்தம் மெசியாவுக்கும் எதிராக மாநில மன்னர் எழுந்தனர். தலைவரும் ஒன்றுபட்டனர்' என மொழிந்தீர். உள்ளபடியே இந்நகரில் ஏரோதும், போஞ்சு பிலாத்தும்,

புற இனத்தாரும் இஸ்ராயேல் மக்களும் ஒன்றுபட்டு நீர் அபிஷேகம் செய்த உம் புனித ஊழியராகிய யேசுவை எதிர்த்து எழுந்தனர். இவ்வாறு உமது கைவன்மையும் திருவுளமும் தீர்மானித்ததெல்லாம் நிகழும்படி செய்தனர்.

ஆண்டவரே, இப்பொழுது அவர்களது மிரட்டலைப் பாரும். உமது வார்த்தையை முழுத்துணிவுடன் எடுத்துச் சொல்ல உம் ஊழியர்களுக்கு அருள்தாரும். உம் புனித ஊழியராகிய யேசுவின் பெயரால் நோய்கள் தீரவும், அருங்குறிகள் அற்புதங்கள் நடைபெறவும் உமது கைவன்மையைக் காட்டும்'' என மன்றாடினர்.

மன்றாடியபின் அவர்கள் குழுமியிருந்த இடம் அதிர்ந்தது; அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பெற்றுக் கடவுளின் வார்த்தையைத் துணிவுடன் எடுத்துச் சொன்னார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*(சங். 2:1-3, 4-6, 7-9 (பல்: 13c காண்)*

பல்லவி: ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறு பெற்றோர்.

அல்லது அல்லேலூயா.

1 புறவினத்தார் சீறுவது ஏன்? வேற்றினத்தார் வீணை சூழ்ச்சி செய்வானேன்?

2 மாநில மன்னர்கள் கலகம் விளைக்கிறார்கள். தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஆண்டவரையும், அவர் அபிஷேகம் செய்த அரசரையும் எதிர்த்துச் சதி செய்கிறார்கள்.

3 "அவர்கள் இட்ட தளைகளை இனித் தகர்த்தெறிவோம்: அவர்கள் வைத்த கண்ணிகளை உதறிவிடுவோம்'' என்கின்றனர். பல்லவி

4 வானுலகில் வீற்றிருப்பவரோ இதைப் பார்த்து நகைக்கின்றார், ஆண்டவர் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்கின்றார்.

5 வெகுண்டெழுந்து அவர்களை அச்சத்தில் ஆழ்த்துகிறார். கடுஞ்சினத்தால் அவர்களைக் கலங்கடிக்கின்றார்.

6 "சீயோனிலே, என் திருமலை மீதினிலே, நான் அவரை என் அரசராக நிறுவினேன்'' என்கிறார். பல்லவி

7
கடவுள் விடுத்த கட்டளையை நான் பறை சாற்றுவேன். ஆண்டவர்
8 என்னிடம் கூறியது. "நீர் எம் மகன், இன்று உம்மை ஈன்றெடுத்தோம்.
எம்மிடம் கேளும், யாம் உமக்கு மக்களினங்களை உரிமையாக்குவோம்.
9 உலகின் கடை எல்லைவரை உமக்குச் சொந்தமாக்குவோம்.
இருப்புக்கோல் கொண்டு அவர்களை நொறுக்குவீர். குயவனின் கலங்களென அவர்களைத் தவிடுபொடியாக்குவீர்." பல்லவி

அல்லேலூயா:

தொலோ. 3:1

அல்லேலூயா. கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின், மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்; அங்கேதான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். அல்லேலூயா.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் தரப்படும் அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக, பரிசுத்த ஆவி விழாவுக்குப்பின் தரப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து ஏதாவதொன்றைப் பயன்படுத்தலாம்.

## நற்செய்தி வாசகம்

**எவனும் மேலிருந்து பிறந்தாலன்றி, கடவுளுடைய அரசைக் காண முடியாது.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3: 1-8

பரிசேயர் ஒருவர் இருந்தார்; அவர் பெயர் நிக்கொதேமு; அவர் யூதப் பெரியோர்களுள் ஒருவர். அவர் ஓர் இரவில் யேசுவிடம் வந்து, "ராபி, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை அறிவோம். தன்னோடு கடவுள் இருந்தாலன்றி எவனும் நீர் செய்கிற அருங்குறிகளைச் செய்ய முடியாது" என்றார். யேசு மறுமொழியாக, "எவனும் மேலிருந்து பிறந்தாலன்றி, கடவுளுடைய அரசைக் காண முடியாது என்று உண்மையிலும் உண்மையாக உமக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

அதற்கு நிக்கொதேமு, "ஒருவன் வயதானபின் எப்படிப் பிறக்க முடியும்? மீண்டும் தாயின் வயிற்றில் நுழைந்து பிறக்கக் கூடுமோ?" என யேசு கூறியதாவது: "உண்மையிலும் உண்மையாக உமக்குச் சொல்லுகிறேன்: ஒருவன் நீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி கடவுளுடைய அரசில் நுழைய முடியாது. ஊனுடலால் பிறப்பது ஊனுடலே. ஆவியால் பிறப்பதோ ஆவி. நீங்கள் மேலிருந்து பிறக்க வேண்டுமென்று நான் உமக்குக் கூறியதால் வியப்படையாதீர். காற்று தான் விரும்பிய பக்கம்

வீசுகின்றது; அதன் ஓசை கேட்கிறது. ஆனால், எங்கிருந்து வருகின்றது என்பதோ எங்குச் செல்கின்றது என்பதோ தெரிவதில்லை. ஆவியால் பிறக்கும் எவனும் அப்படியே."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

*ஒரே உள்ளமும் ஒரே உயிருமாயிருந்தனர்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் **4:32-37**

விசுவாசிகள் அத்தனை பேரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்: அவர்களுள் ஒருவனும் தன் உடைமை எதன்மீதும் உரிமை பாராட்டவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. அப்போஸ்தலர்கள் மிகுந்த வல்லமையோடு ஆண்டவராகிய யேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியம் கூறினர். அனைவருமே மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர்.

வறுமைப்பட்ட நிலையில் அவர்களுள் ஒருவனும் இல்லை. ஏனெனில், நிலபுலம், வீடு உடையவர்கள் அவற்றை விற்று அத்தொகையைக் கொண்டு வந்து, அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைப்பார்கள். அவர்கள் அதை அவனவன் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுப்பார்கள்.

சைப்ரஸ் தீவினரான சூசை என்னும் லேவித்தர் ஒருவர் இருந்தார். அப்போஸ்தலர்கள் அவருக்குப் பர்னபா என்று பெயரிட்டனர். (அதற்கு ஆறுதலின் புதல்வன் என்பது பொருள்.) அவரிடம் ஒரு நிலம் இருந்தது. அதை விற்று, தொகையைக் கொண்டுவந்து அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 92: 1ab. 1c–2. 5 (பல்லவி: 1a)

பல்லவி : **ஆண்டவர் ஆட்சி செய்கின்றார், மகத்துவத்தை அவர் ஆடையாய் உடுத்தியுள்ளார்.**

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்; மகத்துவத்தை அவர் ஆடையாய் உடுத்தியுள்ளார். ஆண்டவர் வல்லமையைக் கச்சைபோல் அணிந்து கொண்டிருக்கிறார். பல்லவி

2 பூவுலகை அவர் நிலைப்படுத்தினார், அது அசைவுறாது.
ஆதியினின்றே உமது அரியணை நிலையாய் உள்ளது: ஆதியினின்றே நீரும் உள்ளீர். பல்லவி

5 உம்முடைய நியமங்கள் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவை: ஆண்டவரே, புனிதமே உமது இல்லத்திற்கு ஏற்றது, எந்நாளும் ஏற்றதே. பல்லவி

அல்லேலூயா அரு. 3:15

அல்லேலூயா. **மனுமகனில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு அவர் உயர்த்தப்பட வேண்டும். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**வானகத்திலிருந்து இறங்கிவந்த மனுமகனேயன்றி வேறெவரும் வானகத்திற்கு ஏறிச்சென்றதில்லை.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3:7-15

அக்காலத்தில்: யேசு நிக்கொதேமுவிடம் கூறியதாவது: "உண்மையிலும் உண்மையாக உமக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மேலிருந்து பிறக்க வேண்டும். காற்று தான் விரும்பிய பக்கம் வீசுகின்றது; அதன் ஓசை கேட்கிறது. ஆனால், எங்கிருந்து வருகின்றது என்பதோ, எங்குச் செல்கின்றது என்பதோ தெரிவதில்லை. ஆவியால் பிறக்கும் எவனும் அப்படியே."

நிக்கொதேமு மறுமொழியாக, "இது எவ்வாறு நடைபெற முடியும்?" என்று கேட்க, யேசு, "நீர் இஸ்ராயேலில் பேர்பெற்ற போதகராயிருந்தும் இது உமக்குத் தெரியாதா! உண்மையிலும் உண்மையாக

உமக்குச் சொல்லுகிறேன்: எமக்குத் தெரிந்ததைப் பற்றியே பேசுகிறோம்; யாம் கண்டதைக்குறித்தே சாட்சி கூறுகிறோம்; எம் சாட்சியத்தையோ நீங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. மண்ணுலகைச் சார்ந்தவைபற்றி நான் உங்களுக்குச் சொல்லியே நீங்கள் விசுவசிப்பதில்லையென்றால், விண்ணுலகைக் சார்ந்தவைபற்றி உங்களுக்குக் கூறினால் எவ்வாறு நீங்கள் விசுவசிக்கப் போகிறீர்கள்? வானகத்திலிருந்து இறங்கி வந்தவரேயன்றி வேறெவரும் வானகத்திற்கு ஏறிச் சென்றதில்லை. அப்படி வந்தவர் வானகத்திலிருக்கும் மனுமகனே. மனுமகனில் விசுவாசங் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு மோயீசன் பாலைவனத்தில் பாம்பை உயர்த்தியதுபோல்; மனுமகனும் உயர்த்தப்பட வேண்டும்'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

**நீங்கள் சிறையில் வைத்தவர்கள் இதோ! கோயிலில் மக்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கிறார்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 5 : 17-26

அந்நாட்களில் :

தலைமைக் குருவுக்கும், சதுசேயர் கட்சியினரான அவருடைய ஆட்களுக்கும் பொறாமை பொங்கி எழ, அவர்கள் அப்போஸ்தலர்களைக் கைது செய்து நகர்ச் சிறையில் வைத்தனர். ஆனால் ஆண்டவருடைய தூதர் இரவில் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்துவிட்டார். அவர்களை வெளியே கூட்டிவந்து, "நீங்கள் போய் இப் புது வாழ்வைப்பற்றிய அனைத்தையும் கோயிலில் மக்களுக்குத் தயங்காமல் சொல்லுங்கள்" என்றார். இதைக் கேட்டு அவர்கள் விடியற் காலையில் கோயிலுக்குப் போய்ப் போதிக்கத் தொடங்கினர்.

தலைமைக்குரு தம் ஆட்களுடன் வந்து, இஸ்ராயேலரின் ஆலோசனைக் குழுவாகிய தலைமைச் சங்கம் முழுவதையும் கூட்டி, அப்போஸ்தலர்களைக் கொண்டுவர, சிறைச்சாலைக்கு ஆள் அனுப்பினார். காவலர்கள் போன போது சிறைச்சாலையில் அவர்களைக் காணவில்லை. திரும்பி வந்து, சிறைச்

சாலை பத்திரமாகப் பூட்டியிருப்பதையும், காவலர்கள் கதவு எதிரில் நிற்பதையும் கண்டோம்; திறந்தபோது உள்ளே ஒருவரையும் காணோம்" என்று அறிவித்தனர்.

இதைக் கேட்ட கோயிலின் காவலர்த் தலைவனும், தலைமைக் குருக்களும் அவர்களுக்கு என்னதான் நடந்திருக்கக்கூடும் என்று திகைப்புற்றனர். அப்போது ஒருவன் வந்து, "நீங்கள் சிறையில் வைத்தவர்கள் இதோ! கோயிலில் மக்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கிறார்களே" என்றான். இதைக்கேட்டதும் காவலர்த் தலைவன் தன் ஆட்களுடன் போய் அவர்களைக் கூட்டி வந்தான். மக்கள் கல்லால் எறியக்கூடுமெனப் பயந்து அவர்களை வலுவந்தம் செய்யவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33:1-2. 3-4. 5-6. 7-8 (பல்லவி: 6a)

பல்லவி: திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்.

அல்லது அல்லேலூயா.

1
ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன். அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.
2
என் ஆன்மா ஆண்டவரில் பெருமை சொள்ளும்: சிறுமையுற்றோர் இதைக் கேட்டு அக்களிப்பார்களாக. பல்லவி
3
என்னோடு ஆண்டவரை மகிமைப் படுத்துங்கள்: எல்லோரும் சேர்ந்து அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.
4
நான் ஆண்டவரைத் தேடினேன்; அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினார்; எல்லாவித அச்சத்தினின்றும் என்னை விடுவித்தார். பல்லவி
5
அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்: வெட்கத்தால் தலைகுனிய மாட்டீர்கள்.
6
இதோ! திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்: எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார். பல்லவி
7
ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரைச் சுற்றி, அவருடைய தூதர் பாளையம் இறங்கிக் காத்திடுவார்.
8
ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்: அவரிடம் தஞ்சம் புகுவோன் பேறுபெற்றவன். பல்லவி

அல்லேலூயா

அல்லேலூயா. தம் மகனில் விசுவாசங்கொள்ளும் எவரும் முடிவில்லா வாழ்வைப் பெறும்பொருட்டு அந்த ஒரே பேறுன மகனையே அளிக்குமளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**கடவுள் தம் மகனை அனுப்பியது: அவர்வழியாக உலகம் மீட்புப் பெறவே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *3:16-21*

அக்காலத்தில்: யேசு நிக்கொதேமுவிடம் கூறியதாவது:

"தம் மகனில் விசுவாசங்கொள்ளும் எவரும் அழியாமல், முடிவில்லா வாழ்வைப் பெறும் பொருட்டு அந்த ஒரேபேறுன மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்பியது அதற்குத் தீர்ப்பளிக்க அன்று, அவர் வழியாக உலகம் மீட்புப்பெறவே. அவரில் விசுவாசங்கொள்பவன் தீர்ப்புக்கு ஆளாவதில்லை; விசுவாசங்கொள்ளாதவனே ஏற்கெனவே தீர்ப்புப் பெற்று விட்டான். ஏனெனில், அவன் கடவுளின் ஒரேபேறுன மகனின் பெயரில் விசுவாசங்கொள்ளவில்லை.

அவர்கள் பெறும் தீர்ப்பு இதுவே: ஒளி உலகத்திற்கு வந்துள்ளது; மனிதர்களோ ஒளியைவிட இருளையே விரும்பினர்; ஏனெனில், அவர்களுடைய செயல்கள் தீயனவாயிருந்தன. பொல்லாதது செய்பவன் எவனும் ஒளியை வெறுக்கிறான். தன் செயல்கள் தவருனவை என்று வெளியாகாதபடி அவன் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக்கேற்ப நடப்பவனே தன் செயல்கள் கடவுளோடு ஒன்றித்துச் செய்தவையாக வெளிப்படும்படி ஒளியிடம் வருகிறான்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

**இச் செய்திகளுக்கு நாங்கள் சாட்சிகள், பரிசுத்த ஆவியும் சாட்சி.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 5:27-33

அந்நாட்களில்:

காவலர்கள் அப்போஸ்தலர்களை அழைத்துக் கொண்டு வந்து தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தினார்கள். தலைமைக் குரு அவர்களை நோக்கி, "இப்பெயரைச் சொல்லிப் போதிக்கலாகாது என்று உங்களுக்கு நாங்கள் கண்டிப்பாகக் கட்டளையிடவில்லையா? ஆயினும் இதோ! நீங்கள் யெருசலேம் எங்கும் உங்கள் போதனையைப் பரப்பி விட்டீர்கள். அதோடு அந்த மனிதனின் இரத்தப் பழியையும் எங்கள்மேல் சுமத்தப் பார்க்கிறீர்கள்" என்றான்.

அதற்கு இராயப்பரும் அப்போஸ்தலர்களும் மறுமொழியாக, "மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதற்கு மேலாகக் கடவுளுக்கல்லவா கீழ்ப்படிய வேண்டும். நீங்கள் கழுமரத்தில் ஏற்றிக் கொலைசெய்த யேசுவை நம் முன்னோரின் கடவுள் உயிர்ப்பித்தார். இஸ்ராயேலருக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளும்படி கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலக்கையால் உயர்த்தினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்; கடவுள் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு அளிக்கும் பரிசுத்த ஆவியும் இதற்குச் சாட்சி" என்றனர்.

இதைக் கேட்டுச் சங்கத்தினர் சீற்றங்கொண்டு அவர்களை ஒழித்து விடத் திட்டமிட்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 33: 1, 8. 16–17. 18–19 (பல்லவி: 6a)

பல்லவி: திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்: அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.

8 ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்: அவரிடம் தஞ்சம் புகுவோன் பேறு பெற்றவன். பல்லவி

16 ஆண்டவருடைய முகம் தீயோரை எதிர்த்து நிற்கின்றது. ஆண்டவர் பூமியிலிருந்து அவர்களுடைய நினைவையே எடுத்து விடுவார்.

17 நீதிமான்கள் கூக்குரலிட்டனர்; ஆண்டவர் அவர்களுக்குச் செவி சாய்த்தார்: எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார். பல்லவி

18 உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர்:
மனம் நைந்தவர்களைக் காத்தருள்வார்.
19 நீதிமானின் துயரங்கள் பல: ஆனால் அவையனைத்தினின்றும் ஆண்டவர்
அவனைக் கடைத் தேற்றுவார்.

பல்லவி

அல்லேலூயா

அரு. 20:29

அல்லேலூயா. தோமையே, என்னைக் கண்டதால் விசுவாசங்கொண்டாய்; காணாமலே விசுவசிப்பவர்கள் பேறுபெற்றவர்கள். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***தந்தை மகன்பால் அன்பு செய்து, அனைத்தையும் அவர்கையில் ஒப்படைத்துள்ளார்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 3: 31–36

அக்காலத்தில்: யேசு நிக்கொதேமுவிடம் கூறியதாவது:

"மேலிருந்து வருபவன் எல்லோருக்கும் மேலானவன். மண்ணிலிருந்து உண்டானவன் மண்ணுலகைச் சார்ந்தவன்: அவன் மண்ணுலகைச் சார்ந்தவனாகவே பேசுகிறான். விண்ணுலகிலிருந்து வருபவரோ எல்லோருக்கும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் குறித்தே அவர் சாட்சியம் பகர்கின்றார். ஆனால், அவருடைய சாட்சியத்தை எவனும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அவருடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்வதோ, கடவுள் உண்மையானவர் என்பதற்கு அத்தாட்சி தருவது போலாகும்.

ஏனெனில், கடவுள் அனுப்பியவர் கடவுளின் சொற்களைக் கூறுகிறார்; ஏனெனில், கடவுள் அவருக்கு ஆவியை அளவு பார்த்துக் கொடுப்பதில்லை. தந்தை மகனுக்கு அன்புசெய்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார். மகனில் விசுவாசங்கொள்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான்: மகனில் விசுவாசங்கொள்ளாதவனோ வாழ்வைக்காணமாட்டான்: கடவுளின் சினமே அவன்மேல் வந்து தங்கும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

**யேசுவின் பெயருக்காகத் தாங்கள் இழிவுபடத் தக்கவர்களாய்க் கருதப்பட்டது பற்றி மனமகிழ்ந்து வெளியேறினார்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 5:34-42

அந்நாட்களில்:

கமாலியேல் என்னும் பரிசேயர் ஒருவர் சங்கத்தின் நடுவில் எழுந்தார். இவர் மக்கள் எல்லாரிடமும் மதிப்புப் பெற்றிருந்த ஒரு சட்ட வல்லுநர். இவர் அப்போஸ்தலர்களைச் சற்று நேரம் வெளியே அனுப்பக் கட்டளையிட்டு, சங்கத்தை நோக்கி, "இஸ்ராயேலரே, இம் மனிதர்களுக்கு நீங்கள் செய்யப்போவதைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், கொஞ்ச காலத்திற்கு முன்பு தெயுதாஸ் என்பவன் கிளம்பி, தான் ஒரு பெரிய மனிதன் என்று காட்டிக்கொண்டு வந்தான். ஏறத்தாழ நானூறு பேர் அவனுடன் சேர்ந்துகொண்டனர். ஆனால், இறுதியில் ஒழிந்தான். அவனைப் பின்பற்றிய அனைவரும் சிதறிப்போகவே எல்லாம் ஒன்றுமில்லாமல் போயிற்று. அவனுக்குப் பிறகு, மக்கள் தொகைக் கணக்கு எடுப்புக் காலத்தில் கலிலேயனான யூதாஸ் தோன்றித் தன்னோடு சேர்ந்து கிளர்ச்சி செய்ய மக்களைத் தூண்டினான். அவனும் ஒழிந்தான். அவனைப் பின்பற்றிய அனைவரும் சிதறுண்டனர்.

ஆகவே, நான் சொல்லுவது: இவர்களைவிட்டுவிடுங்கள். இவர்கள் காரியத்தில் தலையிட வேண்டாம். ஏனெனில், இவர்கள் திட்டமிட்டிருப்பதும் செய்து வருவதும் மனிதருடைய செயலாயிருந்தால், சிதைந்து போம். கடவுளுடையதாயின், நீங்கள் அவர்களைத் தொலைக்க முடியாது. மேலும் நீங்கள் கடவுளோடு போராடுவோர் ஆகக்கூடும்" என்றார். அவர் சொன்னதைச் சங்கத்தார் ஏற்றுக்கொண்டனர்.

பிறகு அப்போஸ்தலர்களை உள்ளே வரச்செய்து கசையால் அடிப்பித்து, இனி யேசுவின் பெயரைச் சொல்லிப் பேசலாகாதெனக் கட்டளையிட்டு அனுப்பிவிட்டார்கள். அவர்களோ யேசுவின் பெயருக்காகத் தாங்கள் இழிவுபடத்தக்கவர்களாய்க் கருதப்பட்டதுபற்றி, மனமகிழ்ந்து மன்றத்தை விட்டு வெளியேறினர்.

நாள்தோறும் விடாமல் கோயிலிலும் வீடுகளிலும் போதித்து யேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து வந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 16 : 1. 4. 13-14 (பல்லவி : 4ab காண்க)

பல்லவி : ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே ; ஆண்டவருடைய
இல்லத்தில் நான் குடியிருக்க வேண்டும்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு, நான் யாருக்கு அஞ்ச
வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான்
நடுங்க வேண்டும்?

பல்லவி

4 ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே, நான் விரும்புவதும் ஒன்றே:
ஆண்டவருடைய இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க
வேண்டும்; ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்கவேண்டும்; அவரது
ஆலயத்தை நான் பார்க்கவேண்டும்.

பல்லவி

13 நானோ வாழ்வோருடைய நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக் காண்பே
னென நம்புகிறேன்.

14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனாயிரு ; உன் உள்ளம் திடம் கொள்வ
தாக, ஆண்டவரை எதிர்பார்த்திரு.

பல்லவி

அல்லேலூயா மத். 4: 4b

அல்லேலூயா. மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று,
கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும்
உயிர்வாழ்கிறான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பந்தியமர்ந்தவர்களுக்கு அப்பங்களை வேண்டிய மட்டும் பகிர்ந்தளித்தார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6: 1-15

அக்காலத்தில் :

யேசு கலிலேயாக் கடலின் அக்கரைக்குச் சென்றார். அதற்குத் திபேரியாக் கடல் என்றும் பெயர். அவர் பிணியாளிகளுக்குச் செய்து வந்த அருங்குறிகளைக் கண்டதனால் பெருங் கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது. யேசு மலைமேல் ஏறி அங்குத் தம் சீடர்களோடு அமர்ந்திருந்தார். யூதர்களின் திருவிழாவாகிய பாஸ்கா அண்மையிலிருந்தது.

இயேசு ஏறெடுத்துப் பார்த்துப் பெருங்கூட்டம் ஒன்று தம்மிடம் வருவதைக் கண்டு, “இவர்கள் எல்லாருக்கும் உணவளிப்பதற்கு எங்கிருந்து அப்பம் வாங்குவது?” என்று பிலிப்பைக் கேட்டார். தாம் செய்யப் போவதை அறிந்திருந்தும் அவரைச் சோதிக்கவே இவ்வாறு கேட்டார். அதற்குப் பிலிப்பு, “இருநூறு வெள்ளிக் காசுக்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கொரு சிறு துண்டுகூட வராதே” என்றார். அவருடைய சீடருள் ஒருவரும், சீமோன் இராயப்பருடைய சகோதரருமான பெலவேந்திரர், “இங்கே ஒரு பையனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பமும்,இரண்டு மீனும் உள்ளன. ஆனால், இத்தனைப் பேருக்கு இது எப்படிப் போதும்” என்று சொன்னார்.

யேசுவோ, “மக்களைப் பந்தியமர்த்துங்கள்” என்றார். அங்கே நல்ல புல் தரை இருந்தது. எல்லாரும் அமர்ந்தனர். அவர்களுள் ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம். யேசு அப்பங்களை எடுத்து நன்றி கூறி, பந்தியமர்ந்தவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். அவ்வாறே மீன்களையும் கொடுத்தார். வேண்டிய மட்டும் வாங்கியுண்டார்கள் அவர்கள் வயிறார உண்டபின், “ஒன்றும் வீணாகாதபடி மீதியான துண்டுகளைச் சேர்த்துவையுங்கள்” என்று தம் சீடரிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே சேர்த்து, மக்கள் எல்லாரும் உண்டபின், ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து மீதியான துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினர்.

யேசு செய்த இந்த அருங்குறியைக் கண்டு, மக்கள், “உலகிற்கு வரப்போகும் இறைவாக்கினர் உண்மையிலே இவர்தான் என்றார்கள். ஆகவே, அவர்கள் வந்து தம்மைப் பிடித்துக் கொண்டுபோய் அரசனாக்க விரும்புகின்றனர் என்பதை அறிந்து, யேசு அவர்களை விட்டு விலகித் தனியாக மீண்டும் மலைக்குச் சென்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

### முதல் வாசகம்

**பரிசுத்த ஆவி நிரம்பப் பெற்ற எழுவரைத் தேர்ந்தெடுத்தார்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 6:1-7

அந்நாட்களில், சீடர்களின் தொகை பெருகவே, அவர்களிடையே கிரேக்க மொழி பேசுவோர், நாள்தோறும் நிகழும் அறப்பணியில், தங்கள்

கைம்பெண்கள் கவனிக்கப்படவில்லையென எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராக முறையிட்டனர்.

எனவே, பன்னிருவரும் சீடர்களை ஒன்றுகக் கூட்டி, "பந்தியில் பணிவிடை செய்வதற்காகக் கடவுளின் வார்த்தையைப் போதியாமல் விடுவது முறையன்று. ஆதலால் சகோதரரே, உங்களிடையே நன்மதிப்பு உள்ளவர்களாய்த் தேவ ஆவியும் ஞானமும் நிரம்பப்பெற்ற எழுவரைத் தேர்ந்தெடுங்கள். அவர்களை நாம் இப்பணிக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ செபத்திலும், தேவ வார்த்தையைப் போதிக்கும் பணியிலும் ஈடுபட்டிருப்போம்" என்றனர்.

இவ்வேற்பாடு அங்குக் கூடியிருந்த அனைவர்க்கும் ஏற்புடையதாக இருந்தது. அப்போது அவர்கள் விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்து விளங்கிய முடியப்பரையும், பிலிப்பு, பிரொக்கோரு, நிக்கானோர், தீமோன், பர்மேனு, அந்தியோக்கிய நகரத்தினரும் யூத மதத்தைத் தழுவியவருமான நிக்கொலா இவர்களையும் தேர்ந்தெடுத்து அப்போஸ்தலர் முன் நிறுத்தினர். அப்போஸ்தலர்கள் செபம் செய்து, அவர்கள்மேல் கைகளை விரித்தனர்.

கடவுளின் வார்த்தை மேன்மேலும் பரவி வந்தது. யெருசலேமில் சீடர்களின் தொகை மிகப் பெருகிற்று. யூத குருக்கள் பலரும் விசுவாசத்திற்குப் பணிந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 32: 1-2. 4-5. 18-19. (பல்லவி: 22)

பல்லவி: ஆண்டவரே, நாங்கள் உம்மை நம்பியிருக்குமளவுக்கு உம் இரக்கம் எம்மீது இருப்பதாக.

அல்லது அல்லேலூயா.

1 நீதிமான்களே, ஆண்டவரில் அகமகிழுங்கள்: நேர்மனத்தோர் அவரைப் புகழ்வது தகுமே.
2 யாழினுல் ஆண்டவரைப் புகழுங்கள்: பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள். பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது: அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.

5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்: அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது. பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார்: தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.

19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்ச காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார். பல்லவி

அல்லேலூயா:

அல்லேலூயா. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; அனைத்தையும் படைத்தவர் அவரே; மனுக்குலத்தின் மீது இரக்கம் கொண்டவரும் அவரே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**யேசு கடல் மேல் நடந்து வருவதைக் கண்டனர்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம். 6:16-21

இரவானதும் யேசுவின் சீடர் கடலுக்கு வந்து, படகு ஏறி அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்குப் புறப்பட்டனர். ஏற்கெனவே இருண்டு இருந்தது. யேசுவோ இன்னும் அவர்களிடம் வந்து சேரவில்லை. புயற் காற்று எழுந்தது; கடல் பொங்கிற்று.

அவர்கள் ஏறக்குறைய மூன்று நான்கு கல் தொலைவு படகு ஓட்டிய பின், யேசு கடல்மேல் நடந்து படகுக்கருகில் வருவதைக் கண்டு அஞ்சினர். அவரோ, "நான்தான், அஞ்சாதீர்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார். அவரைப் படகில் ஏற்றிக்கொள்ள விரும்பினர். ஆனால் படகு அதற்குள் அவர்கள் சேரவேண்டிய கரை போய்ச் சேர்ந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா காலத்தில் 3 ஆம் வாரம்

## பாஸ்கா 3ஆம் ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

*பாதாளம் அவரைத் தன் பிடியில் வைத்திருத்தல் இயலாது.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 2:14.22-28

பெந்தெகோஸ்தே என்னும் திருநாளின்போது, இராயப்பர் பதினொருவரோடு எழுந்து நின்று, மக்களை நோக்கி, உரத்த குரலில் பேசியதாவது: "யூதர்களே, மற்றும் எருசலேம் வாழ் மக்களே, நான் சொல்வதை அறிந்துகொள்ளுங்கள், என் சொல்லுக்குச் செவி கொடுங்கள்.

புதுமைகள், அற்புதங்கள், அருங்குறிகளால் நாசரேத்தூர் யேசு கடவுளது சான்று பெற்றவராக உங்கள் முன் எண்பிக்கப்பெற்றார். ஏனெனில், நீங்கள் அறிந்திருப்பதுபோல் இவற்றையெல்லாம் உங்கள் நடுவில் கடவுளே அவர் வழியாகச் செய்தார். கடவுளின் திட்டத்திற்கும் முன்னறிவுக்கும் ஏற்பக் கையளிக்கப்பட்ட இவரைத்தான், நீங்கள் திருச்சட்டம் அறியாதவர்களைக்கொண்டு சிலுவையிலறைந்து கொன்றீர்கள். கடவுளோ அவரை மரணவேதனைகளினின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார். ஏனெனில், மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருத்தல் இயலாதது. தாவீது அவரைப்பற்றிக் கூறுவது:

ஆண்டவர் என்றுமே என் கண்முன் உள்ளார்; யான் அசைவுறாதபடி அவர் என் வலப்பக்கம் நிற்கிறார். இதனால் என் உள்ளம் மகிழ்ந்தது; என் நாவு அக்களிப்பு எய்தியது; என் உடலும் நம்பிக்கையில் நிலைத்திருக்கும். ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர். உம் புனிதர் அழிவு காண விடமாட்டீர். வாழ்வின் வழிகளை எனக்குக் காட்டினீர்; உம் திருமுன் நிற்கும் என்னை மகிழ்வால் நிரப்புவீர்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 15: 1-2. 5. 7-8. 9-10. 11 (பல்லவி 11a)

பல்லவி: ஆண்டவரே வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர்.

அல்லது அல்லேலூயா.

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்; உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.
2 "நீரே என் ஆண்டவர்" என்று ஆண்டவரிடம் சொன்னேன்.
3 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்; எனக்
குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே.
பல்லவி

7 எனக்கு ஆலோசனை கொடுத்த ஆண்டவரை நான் வாழ்த்துவேன்;
இரவில்கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்:
அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன்.
பல்லவி

9 இதனால் என் இதயம் அகமகிழும்; என் உள்ளம் அக்களிக்கும்; என்
உடலும் கவலையின்றி இளைப்பாறும்.
10 ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர்: உம்
புனிதர் அழிவுகாண விடமாட்டீர்.
பல்லவி

11 வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர்: உம் திருமுன்
எனக்கு நிறைமகிழ்ச்சியையும், உம் வலக்கையில் இடைவிடா இன்பத்தை
யும் நீர் காட்டுவீர்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்களை விடுதலையாக்குவதற்குக் கொடுக்கப்பட்ட விலை மாசுமறுவற்ற செம்மறிபோன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தமே.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்

1: 17-21

அன்புக்குரியவர்களே :

நீங்கள் தந்தை என அழைக்கும் இறைவன், ஆளைப்பார்த்துத் தீர்ப்புக் கூறாதவர்; அவனவன் செயல்கள்படி தீர்ப்புக் கூறுபவர். ஆதலால்

நீங்கள் இவ்வுலகில் அந்நியரால் வாழும் காலமெல்லாம் அவருக்கு அஞ்சி நடந்துகொள்ளுங்கள். உங்கள் முன்னோரிடமிருந்து வழிவழியாய் வந்த பயனற்ற நடத்தையினின்று உங்களை விடுதலை ஆக்குவதற்குக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது அழிவுறும் பொன்னும் வெள்ளியுமன்று, மாசுமறுவற்ற செம்மறிபோன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தமே. உலகம் தோன்றுமுன்னே முன்னறியப்பெற்ற இவர் உங்களுக்காக இந்த இறுதிக் காலத்தில் வெளிப்பட்டார். இறந்தோரினின்று அவரை உயிர்ப்பித்து மகிமைப்படுத்திய கடவுள்மீது நீங்கள் விசுவாசம் கொள்வது அவரால் தான். இதனால் உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் கடவுள்மீது ஊன்றியிருக்கின்றன.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

நற்செய்தி வாசகம் p. 735

# பாஸ்கா 3ஆம் ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*வாழ்வு அளிப்பவரைக் கொன்றீர்கள்; ஆனால் கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *3: 13-15, 17-19*

அந்நாட்களில்: இராயப்பர் மக்களை நோக்கிக் கூறியதாவது:

ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் கடவுள், நம் முன்னோர்களின் கடவுள், நம் ஊழியர் யேசுவை மகிமைப்படுத்தினார்; நீங்களோ அவரைப் பகைவர்களிடம் கையளித்துவிட்டீர்கள்; பிலாத்து விடுதலைத் தீர்ப்பு அளித்தபோதும் அவன்முன் அவரை மறுதலித்தீர்கள். நீதிமானும் புனிதருமானவரை மறுதலித்து, கொலைபாதகனை விடுதலை செய்யக் கேட்டுக்கொண்டீர்கள். வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவரைக் கொன்றீர்கள், ஆனால் கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார். இதற்கு நாங்கள் சாட்சிகள்.

இனி சகோதரர்களே, தெரியாமல் இப்படிச் செய்துவிட்டீர்கள் என்று அறிவேன். அப்படியே உங்கள் தலைவர்களும் தெரியாமல் செய்துவிட்டார்கள்: கடவுளோ, தம் மெசியா பாடுபட வேண்டுமென இறைவாக்கினர் அனைவருடைய வாய்மொழியாலும் முன்னறிவித்ததை இவ்வாறு நிறைவேற்றினார். ஆகையால் உங்கள் பாவங்கள் ஒழியும்பொருட்டு மனம் மாறிக் கடவுளிடம் திரும்புங்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 4: 1. 6. 8 (பல்லவி: 6b)

பல்லவி: **ஆண்டவரே, உம் முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும்**

அல்லது **அல்லேலூயா.**

1 இறைவா, என் சார்பாக நின்று நீதியை விளங்க வைப்பவரே; உம்மை நான் கூப்பிடும் போது எனக்குச் செவிசாய்த்தருளும்; நான் இடுக்கண் உற்றபோது எனக்கு ஆறுதல் அளித்தீர்; என்மீதிரங்கி என் மன்றாட்டைக் கேட்டருளும். பல்லவி

6 "நன்மையானதை நமக்குக் காட்டுபவன் யார்?" என்கின்றனர் பலர். எங்கள் பக்கமாய் உமது முகத்தைத் திருப்பும், ஆண்டவரே, உம் முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும். பல்லவி

8 கலக்கமின்றி நான் இனிப் படுத்துறங்க முடியும்; ஏனெனில், ஆண்டவரே, நான் பாதுகாப்பில் வாழச் செய்கின்றீர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

***நம் பாவங்களைப்போக்கும் பரிகாரப்பலி அவரே,***
***உலகனைத்தின் பாவங்களையும் போக்கும் பரிகாரப்பலி அவரே.***

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல்
திருமுகத்திலிருந்து வாசகம் 2:1-5

என் அன்புக் குழந்தைகளே, நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டுமென்றே இதை உங்களுக்கு எழுதுகிறேன். ஆனால் ஒருவன் பாவஞ்செய்ய நேர்ந்தாலும், பரம தந்தையிடம் பரிந்துபேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார். அவரே இறைவனுக்கு ஏற்புடையவரான யேசு கிறிஸ்து. நம் பாவங்களைப்போக்கும் பரிகாரப் பலி அவரே, நம் பாவங்களை மட்டுமன்று, உலகனைத்தின் பாவங்களையும்போக்கும் பரிகாரப் பலி அவரே.

அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்தால்தான் நாம் அவரை அறிந்துள்ளோம் என உறுதிகொள்ளலாம். 'நான் அவரை அறிவேன்' என்று சொல்லிக்கொண்டு, அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காதவன் பொய்யன்: உண்மை என்பது அவனிடம் இல்லை. ஆனால் அவரது வார்த்தையை ஒருவன் கடைப்பிடித்தால், அவனிடம் கடவுளன்பு

உண்மையாகவே நிறைவாகியுள்ளது. நாம் அவருள் இருக்கிறோம் என்பது இதனால் உறுதியாகும்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

லூக். 24 : 32 காண்

அல்லேலூயா. ஆண்டவராகிய யேசுவே, மறைநூலை எங்களுக்குத் தெளிவாக்கியருளும்; நீர் எம்மோடு பேசும்போது எம் உள்ளம் உருகச் செய்தருளும். அல்லேலூயா.

நற்செய்தி வாசகம் (பக்கம் 738)

## பாஸ்கா 3ஆம் ஞாயிறு-3 ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

இச் செய்திகளுக்கு நாங்கள் சாட்சிகள், பரிசுத்த ஆவியும் சாட்சி.

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 5 : 27b - 32. 40b - 41

அந்நாட்களில் :

தலைமைக் குரு அப்போஸ்தலர்களை நோக்கி, "இப்பெயரைச் சொல்லிப் போதிக்கலாகாது என்று உங்களுக்கு நாங்கள் கண்டிப்பாகக் கட்டளையிடவில்லையா? ஆயினும் இதோ! நீங்கள் யெருசலேம் எங்கும் உங்கள் போதனையைப் பரப்பிவிட்டீர்கள். அதோடு, அந்த மனிதனின் இரத்தப் பழியையும் எங்கள்மேல் சுமத்தப் பார்க்கிறீர்கள்" என்றான்.

அதற்கு இராயப்பரும் அப்போஸ்தலர்களும் மறுமொழியாக, "மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதற்கு மேலாகக் கடவுளுக்கல்லவா கீழ்ப்படியவேண்டும். நீங்கள் கழுமரத்தில் ஏற்றிக் கொலை செய்த யேசுவை நம் முன்னோரின் கடவுள் உயிர்ப்பித்தார். இஸ்ராயேலருக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளும்படி கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலக்கையால் உயர்த்தினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்; கடவுள் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு அளிக்கும் பரிசுத்த ஆவியும் இதற்குச் சாட்சி" என்றனர்.

இனி யேசுவின் பெயரைச் சொல்லிப் பேசலாகாதென அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டு அவர்களை அனுப்பிவிட்டார்கள். அவர்களோ யேசுவின் பெயருக்காகத் தாங்கள் இழிவுபடத் தக்கவர்களாய்க் கருதப்பட்டதுபற்றி, மனமகிழ்ந்து மன்றத்தை விட்டு வெளியேறினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 29: 1-3. 4-5. 10-11a, 12b (பல்லவி: 2a)*

பல்லவி : ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்; ஏனெனில் நீர் எனக்கு விடுதலையளித்தீர்.

அல்லது, அல்லேலூயா.

1 ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்: ஏனெனில், நீர் எனக்கு விடுதலை
யளித்தீர்; என் எதிரிகள் என்னைக் கண்டு மகிழ்வுற விடவில்லை.
3 ஆண்டவரே, கீழுலகினின்று என் ஆன்மாவை வெளியேற்றினீர்:
பாதாளப் படுகுழிக்குச் செல்பவர்களிடையினின்று என்னைக் காத்தீர். பல்லவி

4 புனிதர்களே, ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்; அவர் எத்துணை பரிசுத்தர்
என்பதை நினைத்துப் போற்றுங்கள்.
5 ஏனெனில், அவரது சினம் ஒரு நொடிப்பொழுதுமட்டுமே. அவரது
தயவோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். மாலையில் அழுகை என்றால்,
காலையில் உண்டாவது அக்களிப்பு! பல்லவி

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாய்த்தருளும், என்மீதிரங்கும்; ஆண்டவரே,
எனக்குத் துணைசெய்யும்.
11 என் அழுகையைக் களிநடனமாக மாற்றினீர்.
12 ஆண்டவராகிய என் இறைவா, என்றென்றும் உம்மைப் போற்றுவேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**பலியான செம்மறி வல்லமையும் செல்வமும் பெறத் தகுதியுள்ளவர்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் *5: 11-14*

அருளப்பன் நான் கண்ட காட்சியில், அரியணையையும் உயிர்களையும் மூப்பரையும் சுற்றி நின்ற வானதூதர் பலரின் குரலையும் கேட்டேன். அவர்களின் எண்ணிக்கையோ ஆயிரமாயிரம், கோடானுகோடி. இவர்கள் உரத்த குரலில் பாடியது: "பலியான செம்மறி வல்லமையும் செல்வமும் ஞானமும் பலமும் மாட்சியும் மகிமையும் போற்றியும் பெறத் தகுதியுள்ளவர்."

பின்பு மேலுலகம், பூவுலகம், கீழுலகம், ஆழ்கடல் எங்குமுள்ள படைப்புகள் அனைத்தும், "அரியணையில் வீற்றிருக்கும் செம்மறியானவர்க்கும், போற்றியும் மாட்சியும் மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரியனவாகுக" என்று பாடக் கேட்டேன். நான்கு உயிர்களும் அதற்கு 'ஆமென்' என்று சொல்ல, மூப்பர்கள் அடிபணிந்து தொழுதனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அல்லேலூயா. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; அனைத்தையும் படைத்தவர் அவரே; மனுக்குலத்தின்மீது இரக்கம் கொண்டவரும் அவரே. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***யேசு அருகில் வந்து அப்பத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார்; மீனையும் அவ்வாறே கொடுத்தார்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21:1-19

அக்காலத்தில்:

யேசு சீடருக்குத் திபேரியாக் கடலருகே மீண்டும் தோன்றினார்; தோன்றியது இவ்வாறு: சீமோன் இராயப்பர், திதிமு என்ற தோமையார், கலிலேயா நாட்டுக் கானாவூர் நத்தனயேல், செபெதேயுவின் மக்கள், யேசுவின் சீடர்களுள் வேறு இருவர் ஆகிய இவர்கள் கூடியிருந்தார்கள். அப்போது சீமோன் இராயப்பர் அவர்களை நோக்கி, "மீன் பிடிக்கப் போகிறேன்" என்றார். மற்றவர்களும், "உன்னோடு நாங்களும் வருகின்றோம்" என்று போய்ப் படகிலேறினார்கள். அன்று இரவு அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

விடியற்காலையில் யேசு கரையில் நின்றார். ஆனால் அவரை யேசு என்று சீடர் அறிந்துகொள்ளவில்லை. யேசு அவர்களை நோக்கி, "பிள்ளைகளே, மீன் ஒன்றும் படவில்லையா?" என்று கேட்டார். அவர்கள், "ஒன்றுமில்லை" என்றனர். அப்போது அவர், "படகின் வலப் பக்கமாய் வலை வீசுங்கள்; மீன் படும்" என்றார். அப்படியே வலை வீசினர்: மீன்கள் ஏராளமாய் விழுந்ததால் அவர்கள் வலையை இழுக்க முடியவில்லை.

யேசு அன்பு செய்த சீடர், "அவர் ஆண்டவர்தான்" என இராயப்பருக்குச் சொன்னார். "அவர் ஆண்டவர்தான்" என்று சீமோன்

இராயப்பர் கேட்டவுடன், தாம் ஆடையைக் களைந்துவிட்டிருந்ததால் மேலாடையைக் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார். மற்றச் சீடர்களோ வலையை மீன்களுடன் இழுத்துக்கொண்டு படகிலே வந்தனர். (ஏனெனில், அவர்கள் கரையிலிருந்து வெகு தொலைவில் இல்லை. ஏறக்குறைய இருநூறு முழம் தொலைவில்தான் இருந்தார்கள்.)

கரையில் இறங்கியவுடன் கரிநெருப்பு மூட்டியிருப்பதையும், அதன் மேல் மீன் வைத்திருப்பதையும் கண்டனர். அப்பமும் இருந்தது. யேசு அவர்களை நோக்கி, "நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்கள் சில கொண்டு வாருங்கள்" என்றார். சீமோன் இராயப்பர் மறுபடியும் படகேறி வலையைக் கரைக்கு இழுத்து வந்தார். அதில் பெரிய மீன்கள் நிறைந்திருந்தன. அவை நூற்றைம்பத்து மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. யேசு அவர்களைப் பார்த்து, "சாப்பிட வாருங்கள்" என்றார். அவர் ஆண்டவர் என்றறிந்து சீடர்களுள் எவரும், "நீர் யார்?" என்று அவரைக் கேட்கத் துணியவில்லை. யேசு அருகில் வந்து அப்பத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தார். மீனையும் அவ்வாறே கொடுத்தார். யேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தபின் தம் சீடருக்கு இப்பொழுது தோன்றியது மூன்றும் முறை.

அவர்கள் சாப்பிட்டு முடிந்தபின் யேசு, சீமோன் இராயப்பரை நோக்கி, "அருளப்பனின் மகனான சீமோனே, இவர்களைவிட நீ அதிகமாய் எனக்கு அன்பு செய்கிறாயா?" என்று கேட்டார். அவர் அதற்கு, "ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றார். யேசுவோ அவரிடம், "என் ஆட்டுக்குட்டிகளை மேய்" என்றார். இரண்டாம் முறையாக யேசு அவரை நோக்கி, "அருளப்பனின் மகனான சீமோனே, நீ எனக்கு அன்பு செய்கிறாயா?" என, அவர் அவரை நோக்கி, "ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றார். யேசுவோ அவரிடம், "என் ஆடுகளைக் கண்காணி" என்றார்.

மூன்றும் முறையாக அவரை நோக்கி, "அருளப்பனின் மகனான சீமோனே, என்னை நீ நேசிக்கிறாயா?" என்று கேட்டார். "என்னை நேசிக்கிறாயா?" என்று அவர் மூன்றும் முறையாகக் கேட்டதால் இராயப்பர் மனம் வருந்தி யேசுவை நோக்கி, "ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும்" என்றார்.

யேசுவோ அவரிடம், "என் ஆடுகளை மேய். உண்மையிலும் உண்மையாக உனக்குச் சொல்லுகிறேன்: நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்திற்குச் சென்றாய். வயது முதிர்ந்தபொழுதோ, நீ கைகளை விரித்துக் கொடுப்பாய்; வேறொருவன் உன்னைக் கட்டி உனக்கு விருப்பமில்லாத இடத்திற்குக் கூட்டிச்செல்வான்"

என்றார். அவர் எத்தகைய மரணத்தால் கடவுளை மகிமைப்படுத்துவார் என்பதைக் குறிப்பிட்டு இவ்வாறு சொன்னார். இதைச் சொன்னபின், "என்னைப் பின்செல்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது குறுகிய வாசகம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21:1-14

(பக்கம் 741)

## திங்கள்

### முதல் வாசகம்

**முடியப்பரின் ஞானத்தையும் அவர்வழியாய்ப் பேசிய தேவ ஆவியையும் அவர்கள் எதிர்த்து நிற்க முடியவில்லை.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 6:8-15

அந்நாட்களில் :

முடியப்பர் அருளும் ஆற்றலும் நிறைந்தவராய் மக்களிடையே மாபெரும் அற்புதங்களையும் அருங்குறிகளையும் செய்துவந்தார். அப்போது உரிமை அடைந்தோரின் செபக் கூடத்தைச் சார்ந்த சிலரும், சிரேனே, அலெக்சந்திரியா நகரினர் சிலரும், சிலிசியா, ஆசியா நாட்டினர் சிலரும் முடியப்பரோடு தர்க்கம் செய்யக் கிளம்பினர். ஆனால் அவரது ஞானத்தையும் அவர் வழியாய்ப் பேசிய தேவ ஆவியையும் அவர்கள் எதிர்த்து நிற்க முடியவில்லை.

ஆதலால், "இவன் கடவுளுக்கும் மோயீசனுக்கும் எதிராகப் பழிச் சொற்கள் கூறியதைக் கேட்டோம்" என்று சொல்லச் சிலரைத் தூண்டி விட்டனர். அப்படியே மக்களையும் மூப்பரையும் மறைநூல் அறிஞரையும் ஏவினர். அவர்கள் உடனடியாகக் கிளம்பிப் போய் அவரைப் பிடித்து, தலைமைச் சங்கத்திற்கு இழுத்து வந்தனர்.

பொய்ச்சாட்சிகளைக் கொண்டுவந்து நிறுத்தினர். இச்சாட்சிகள், ''இவன் புனித இடத்திற்கும் திருச் சட்டத்திற்கும் எதிராக ஓயாது பேசி வருகிறான். 'நாசரேத்தூர் யேசு இவ்விடத்தை அழித்துவிடுவார், மோயீசன் நமக்குக் காட்டிய முறைமைகளை மாற்றி விடுவார்' என்று இவன் சொல்லக் கேட்டோம்'' என்றனர். சங்கத்தில் அமர்ந்திருந்தோர் அனைவரும் அவரை உற்று நோக்கியபோது, அவரது முகம் வான தூதரின் முகத்தைப் போல் இருப்பதைக் கண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 118 : 23-24. 26-27. 29-30 (பல்லவி : 1)*

பல்லவி : ஆண்டவர்தம் திருச்சட்டப்படி நடப்போர் பேறு பெற்றோர்

அல்லது அல்லேலூயா.

23 தலைவர்கள் எனக்கெதிராய் அமர்ந்து பேசினாலும் உம் ஊழியன் உம்முடைய நியமங்களைக் குறித்தே தியானிக்கின்றான்.
24 ஏனெனில், உம் ஆணைகள் எனக்கு இனிமையாயுள்ளன: உம் நியமங்களே எனக்கு ஆலோசனை தருபவை. பல்லவி

26 என் நெறிமுறைகளை உமக்கு எடுத்துச் சொன்னேன்: நீர் என் மன்றாட்டைக் கேட்டருளினீர்: உம் நியமங்களை எனக்குப்படிப்பித்தருளும்.
27 உம் கட்டளைகள் காட்டும் வழியில் என்னைச் செலுத்தும்: நான் உம் வியப்புக்குரிய செயல்களைத் தியானிப்பேன். பல்லவி

29 தவறான வழியில் என்னை நடக்க விடாதேயும்: உமது திருச்சட்டத்தை எனக்கு அருளும்.
30 உண்மையின் பாதையை நான் தேர்ந்து கொண்டேன்: உம் முறைமைகளை என் கண்முன் கொண்டேன். பல்லவி

அல்லேலூயா மத். 4 : 4b

அல்லேலூயா. மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர்வாழ்கிறான். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**அழிந்துபோகும் உணவுக்காக அல்ல, முடிவில்லாத வாழ்வளிக்கும் நிலையான உணவுக்காக உழையுங்கள்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
6 : 22-29

மக்கள் மறுநாளும் கடலின் அக்கரையிலேயே இருந்தனர். முந்தின நாள் அங்கே ஒரு படகுதான் இருந்தது என்பதும், அதில் சீடர் மட்டும் போனார்களேயன்றி, யேசு அவர்களோடு அப்படகில் ஏறவில்லை என்பதும் அவர்கள் நினைவுக்கு வந்தது. ஆண்டவர் நன்றி கூறித் தந்த அப்பத்தை உண்ட இடத்திற்கு அருகில் திபேரியாவிலிருந்து வேறு படகுகள் இதற்குள் வந்து சேர்ந்தன. யேசுவும் அவருடைய சீடர்களும் அங்கு இல்லாததைக்கண்டு மக்கள் அப்படகுகளிலேறிக் கப்பர்நகூமுக்கு அவரைத் தேடிவந்தார்கள். கடலின் இக்கரையில் அவரைப் பார்த்து, "ராபி, எப்பொழுது இங்கு வந்தீர்?" என்று கேட்டனர்.

யேசு மறுமொழியாக, " உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : நீங்கள் என்னைத் தேடுவது அருங்குறிகளைக் கண்டதாலன்று, அப்பங்களை வயிறார உண்டதால்தான். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம்; முடிவில்லாத வாழ்வளிக்கும் நிலையான உணவுக்காக உழையுங்கள். அதை மனுமகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில், அவருக்கே தந்தையாகிய கடவுள் தம் அதிகாரத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார் " என்றார்.

அவர்கள் அவரை நோக்கி, " கடவுளுக்கேற்ற செயல்களைச் செய்ய நாங்கள் என்ன செய்ய வேண்டும் ?" என, யேசு, " அவர் அனுப்பியவரை விசுவசிப்பதே கடவுளுக்கேற்ற செயல் " என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**ஆண்டவராகிய யேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்.**

7 : 51-8 : 1a

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம்

அந்நாட்களில்: முடியப்பர் மக்களையும் மூப்பரையும் மறைநூல்அறிஞரையும் நோக்கிக் கூறியதாவது:

"திமிர் பிடித்தவர்களே, விருத்தசேதனமில்லாத உள்ளமும் செவியும் படைத்தவர்களே, பரிசுத்த ஆவியை நீங்கள் எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். முன்னோருக்கேற்ற மக்கள் நீங்கள். இறைவாக்கினர்களுள் யாரைத்தான் உங்கள் முன்னோர் துன்புறுத்தவில்லை? அதுமட்டுமன்று, அவர்கள் நீதிமானுடைய வருகையை முன்னறிவித்தவர்களைக் கொலையுஞ் செய்தனர். இப்போது நீங்கள் அந்த நீதிமானையே காட்டிக்கொடுத்து, கொலை செய்தீர்கள். வானதூதர்களின் வழியாக நீங்கள் திருச்சட்டத்தைப் பெற்றிருந்தும் அதைப் பின்பற்றவில்லை."

இதைக் கேட்டவர்கள், உள்ளத்தில் கோபம் பொங்க, அவரைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தனர். முடியப்பரோ பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய் வானத்தை உற்று நோக்கினார். அப்போது, கடவுளின் மாட்சிமையையும், அவரது வலப் பக்கத்தில் யேசு நிற்பதையும் கண்டு, "இதோ! வானம் திறந்துள்ளதையும், மனுமகன் கடவுளின் வலப்பக்கம் நிற்பதையும் காண்கிறேன்" என்றார்.

அதைக் கேட்டு அவர்கள் எல்லாரும் பெருங் கூக்குரலுடன் காதை மூடிக்கொண்டனர். ஒருமிக்க அவர்மேல் பாய்ந்து, அவரை நகருக்கு வெளியே தள்ளி, அவரைக் கல்லால் எறியத் தொடங்கினர். சாட்சிகள் தங்கள் மேலாடைகளைச் சவுல் என்னும் ஓர் இளைஞனிடம் ஒப்படைத்தனர். அவர்கள் கல் எறிகையில் முடியப்பர், "ஆண்டவராகிய யேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டார். பிறகு முழங்காலிட்டு உரத்த குரலில், "ஆண்டவரே, இப்பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதீர்" என்று சொல்லி உயிர் துறந்தார்.

முடியப்பர் கொலைக்குச் சவுல் உடன்பட்டிருந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 30: 2cd-3. 5. 6b, 7a 16, 20b. (பல்லவி: 5a)

பல்லவி: **ஆண்டவரே, உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.**

அல்லது **அல்லேலூயா.**

2 எனக்கு அடைக்கலந்தரும் பாறையாயிரும்: கோட்டைபோலிருந்து என்னைக் காப்பாற்றும்.

3 ஏனெனில், நீர் எனக்குக் கற்கோட்டையாகவும் அரணுகவும் இருக்கின்றீர்: உம் பெயரின் பொருட்டு என்னை வழி நடத்தியருள்வீர், நல்வழி காட்டுவீர். பல்லவி

5 உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்: ஆண்டவரே, வார்த்தையில் தவருத இறைவா, நீர் என்னை மீட்டருள்வீர்.

6 நானே ஆண்டவரில் நம்பிக்கை வைக்கிறேன்.

7 உம் அருளன்பை நினைத்து நான் அகமகிழ்ந்து அக்களிப்பேன். பல்லவி

16 கனிந்த உம் திருமுகத்தை எனக்குக் காட்டியருளும்: உம் அருளன்பைக் காட்டி என்னை ஈடேற்றும்.

20 எதிரிகளுடைய சதிகளினின்று உம்முடைய திருமுகத்தின் ஆதரவால் அவர்களைப் பாதுகாக்கின்றீர் பல்லவி

அல்லேலூயா அரு. 6:35

அல்லேலூயா. நானே உயிர்தரும் உணவு; என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது என்கிருர் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**வானத்தினின்று உண்மையான உணவு அருள்பவர் மோயீசன் அல்லர்; என் தந்தையே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6 : 30 : 35

அக்காலத்தில்: மக்கள் யேசுவிடம்:

அவர்கள், "உம்மை நாங்கள் விசுவசிக்க ஓர் அருங்குறி பார்க்க வேண்டும்; என்ன அருங்குறி செய்வீர்? என்ன செயல் ஆற்றுவீர்? 'அவர்கள் உண்பதற்கு வானகத்திலிருந்து உணவு அருளினுர்' என்று எழுதியுள்ளதற்கேற்ப எங்கள் முன்னேர் பாலைவனத்தில் மன்னவை உண்டனரே" என்று கேட்டனர்.

யேசு அவர்களை நோக்கி, "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: வானத்திலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோயீசன் அல்லர்; வானத்திலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு

அருள்பவர் என் தந்தையே, ஏனெனில், வானினின்று இறங்கி வந்து உலகிற்கு உயிர் அளிப்பவரே கடவுள் தரும் உணவு" என்றார்.

அவர்களோ, "ஆண்டவரே இவ்வுணவை எப்பொழுதும் எங்களுக்குத் தாரும்" என்றனர். அதற்கு யேசு, "நானே உயிர் தரும் உணவு, என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது. என்னில் விசுவாசங்கொள்பவனுக்கு என்றுமே தாகம் இராது" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## புதன்

### முதல் வாசகம்

*எங்கும் திரிந்து நற்செய்தியை அறிவித்தனர்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 8: 1–8

அந்நாளில் யெருசலேமில் திருச்சபையை எதிர்த்துப் பெருங்கலாபனை எழுந்தது. அப்போஸ்தலர்களைத் தவிர மற்ற அனைவரும் யூதேயா, சமாரியாவின் நாட்டுப்புறமெங்கும் சிதறுண்டு போனார்கள். இறைப்பற்றுடையோர் சிலர் முடியப்பரை அடக்கம் செய்து அவருக்காகப் பெரிதும் துக்கம் கொண்டாடினர். சவுலோவென்றால் திருச்சபையை ஒழிக்க முயன்றார். வீடுவீடாய் நுழைந்து ஆண்களையும் பெண்களையும் இழுத்துக்கொண்டுபோய்ச் சிறையில் தள்ளினார்.

சிதறுண்டு போனவர்கள் தாங்கள் சென்ற இடங்களில் நற்செய்தியை அறிவித்தனர். பிலிப்பு சமாரியா நகருக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு மெசியாவை அறிவித்தார். பிலிப்பு செய்த அருங்குறிகளை மக்கள் கண்டபோது அல்லது அவற்றைக் குறித்துக் கேள்வியுற்றபோது, ஒருமனதாய்த் திரண்டு வந்து, அவர் சொல்வதைக் கருத்தாய்க் கேட்டனர். பேய் பிடித்திருந்த பலரிடமிருந்து அசுத்த ஆவிகள் கூச்சலிட்டுக்கொண்டு வெளியேறின. திமிர்வாதக்காரர், முடவர் பலர் குணமடைந்தனர். இதனால் அந்நகரில் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 65: 1-3a. 4-5. 6-7a. (பல்லவி: 1)

பல்லவி : மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்.

அல்லது அல்லேலூயா.

1 மாநிலத்தோரே, நீங்களனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்.
2 அவருடைய பெயரின் மாட்சிமையைப் புகழ்ந்து பாடுங்கள். அவரது
புகழ் எங்கும் விளங்கச் செய்யுங்கள்.
3 இறைவனை நோக்கிச் சொல்லுங்கள் : "உம் செயல்கள் எத்துணை மலைப்புக்
குரியவை. பல்லவி

4 மாநிலமனைத்தும் உம்மை வணங்கி உமக்குப் புகழ் பாடுவதாக; உமது
பெயரின் புகழைப் பாடுவதாக."
5 வாருங்கள், கடவுளுடைய செயல்களைப் பாருங்கள். மனிதர்களிடையே
அவர் செய்தவை மலைப்புக்குரியவையே. பல்லவி

6 கடலை அவர் கட்டாந்தரையாக்கினார்; ஆற்றை அவர்கள் நடந்து
கடந்தனர்; ஆகவே, அவரை நினைத்து மகிழ்வோம்.
7 தம் வல்லமையால் அவர் என்றென்றும் ஆட்சி செலுத்துகின்றார். பல்லவி

அல்லேலூயா அரு. 6:40

அல்லேலூயா. மகனில் விசுவாசம் கொள்பவன் எவனும் முடிவில்லா வாழ்வு பெறுவான்; நானும் அவனைக் கடைசிநாளில் உயிர்ப்பிப்பேன் என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**மகனைக் கண்டு கொள்கிற எவனும் முடிவில்லா வாழ்வு பெற வேண்டும் என்பதே தந்தையின் விருப்பம்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:35-40

அக்காலத்தில்: யேசு மக்கள் கூட்டத்தை நோக்கி:

"நானே உயிர் தரும் உணவு. என்னிடம் வருகிறவனுக்குப் பசியே இராது. என்னில் விசுவாசங்கொள்பவனுக்கு என்றுமே தாகம் இராது.

ஆனால், நான் உங்களுக்குச் சொன்னதுபோல், நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவசிப்பதாயில்லை. பரம தந்தை எனக்குத் தருவதெல்லாம் என்னிடம் வந்து சேரும். என்னிடம் வருபவனையோ நான் தள்ளிவிடேன். ஏனெனில், என் விருப்பத்தை நிறைவேற்ற அன்று, என்னை அனுப்பினவருடைய விருப்பத்தை நிறைவேற்றவே, நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்.

என்னை அனுப்பினவருடைய விருப்பமோ அவர் எனக்குத் தந்ததில் எதையும் நான் அழியவிடாமல் கடைசி நாளில் உயிர்ப்பிக்க வேண்டுமென்பதே. ஆம், என் தந்தையின் விருப்பம் இதுவே மகனைக் கண்டு, அவரில் விசுவாசங்கொள்பவன் எவனும் முடிவில்லா வாழ்வு பெற வேண்டும். நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

***நீர் முழு மனத்துடன் விசுவசித்தால் ஞானஸ்நானம் பெறலாம்.***

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 8 : 26 - 40

அந்நாட்களில்:

ஆண்டவரின் தூதர் பிலிப்புவிடம், "யெருசலேமிலிருந்து காசா ஊருக்குப் போகும் சாலை வழியாய்த் தெற்கு நோக்கிப் புறப்பட்டுச் செல்" என்றார். இச்சாலை இன்று ஆள் நடமாட்டமற்றது. பிலிப்பு புறப்பட்டுச் சென்றார். எத்தியோப்பிய அரசியான காந்தாக்கே என்பவளின் மேல்அலுலவன் ஒருவன் இறைவனை வழிபட யெருசலேமிற்குச் சென்றிருந்தான், அவன் ஓர் அண்ணகன். அவ்வரசியின் பொருளமைச்சன். அவன் தனது ஊர் திரும்புகையில் தேரில் உட்கார்ந்து, இசையாஸ் எழுதிய இறைவாக்குகளைப் படித்துக்கொண்டிருந்தான்.

"தேரை அணுகி அதன் கூடவே போ" என்று ஆவியானவர் பிலிப்புவிடம் சொன்னார். பிலிப்பு விரைந்து ஓடி, நெருங்கியபோது, அவன் இசையாஸ் எழுதிய இறைவாக்குகளைப் படிப்பதைக்கேட்டு,

"படிப்பதன் பொருள் உமக்கு விளங்குகிறதா? என்று வினவினார். அதற்கு அவன், "யாராவது எடுத்துச்சொன்னாலொழிய எப்படி விளங்கும்" என்று சொல்லி, தேரில் ஏறித் தன்னுடன் உட்காரும்படி பிலிப்புவை அழைத்தான்.

அப்போது அவன் படித்துக்கொண்டிருந்த மறைநூலின் பகுதி பின்வருமாறு: செம்மறிபோலக் கொல்லப்படுவதற்கு இழுத்துச் செல்லப் பட்டார். உரோமம் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத ஆட்டுக் குட்டிபோல், அவர் வாய் திறக்கவில்லை. தாழ்வுற்ற நிலையில் அவருக்கு நீதி வழங்கப்படவில்லை. அவரது சந்ததியைப் பற்றிச் சொல்பவன் யார்? ஏனெனில், அவரது வாழ்வு இவ்வுலகினின்று எடுபடும்.

அண்ணகன் பிலிப்புவிடம், "இறைவாக்கினர் யாரைக்குறித்து இதைக் கூறினார்? தன்னைக் குறித்தா? இன்னொருவரைக்குறித்தா? தயவு செய்து சொல்லும்" என்று கேட்டான். அதற்கு மறுமொழியாக, பிலிப்பு, மேற்சொன்ன மறைநூல் வாக்குகளை வைத்துக் கொண்டு, யேசுவைப் பற்றிய நற்செய்தியை அவனுக்கு அறிவித்தார்.

இப்படி அவர்கள் போகும்போது, வழியில் தண்ணீர் இருந்த ஓர் இடத்துக்கு வந்தார்கள். "இதோ, தண்ணீர் இருக்கிறது. நான் ஞான ஸ்நானம் பெறத் தடை என்ன?" என்று கேட்டர்ன் அண்ணகன். பிலிப்பு, "நீர் முழுமனத்துடன் விசுவசித்தால், நீர் ஞானஸ்நானம் பெறலாம்" என்றார். அதற்கு அவன்: "யேசுகிறிஸ்து கடவுளின் மகன் என்று விசுவசிக்கிறேன்" என்று சொல்லி, தேரை நிறுத்தச் சொன்னான். பிலிப்பு, அண்ணகன் இருவருமே தண்ணீரில் இறங்கினர். அவர் அவனுக்கு ஞானஸ்நானம் அளித்தார்.

இருவருமே தண்ணீரை விட்டு வெளியேறினபோது, ஆண்டவரின் ஆவியானவர் பிலிப்புவை அங்கிருந்து கொண்டுபோய் விட்டார். பின்னர் அண்ணகன் அவரைக் காணவில்லை. மகிழ்ச்சியோடு தன் வழியே சென்றான். பிலிப்புவோ, தாம் அசோத் என்னும் ஊரில் இருப்பதை உணர்ந்தார். பிறகு, சென்ற ஊர்களிலெல்லாம் நற்செய்தி அறிவித்துக் கடைசியாகச் செசரியாவை அடைந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 65: 8-9. 16-17. 20 (பல்லவி: 1)

பல்லவி: மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவர் முன் ஆர்ப்பரியுங்கள்.

அல்லது அல்லேலூயா.

8 மக்களினத்தாரே, நம் இறைவனுக்கு வாழ்த்துக் கூறுங்கள்; அவரது
புகழின் பெருமையைப் பறைசாற்றுங்கள்.
9 நம்மை வாழ வைத்தவர் அவரே: நம்முடைய காலடி தடுமாற அவர்
விடவில்லை. பல்லவி

16 கடவுளுக்கு அஞ்சுவோரே வாருங்கள், வந்து கேளுங்கள்; எனக்கு எத்
துணை நன்மை அவர் செய்துள்ளார் எனக் கூறுவேன்.
17 வாய் திறந்து அவரையே நான் கூவியழைத்தேன்: என் நாவாலே
அவரது புகழைச் சொன்னேன். பல்லவி

20 என் மன்றாட்டைப் புறக்கணியாத கடவுள் போற்றி! தம் இரக்கத்தை
என்னிடமிருந்து எடுத்துவிடாத இறைவன் போற்றி! பல்லவி

அல்லேலூயா அரு. 6:51

அல்லேலூயா. நானே வானின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு; இதை யாராவது உண்டால், அவன் என்றுமே வாழ்வான், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நானே வானினின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு,**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:44-51

அக்காலத்தில்: யேசு மக்கள் கூட்டத்தை நோக்கி:

என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவனும் என்னிடம் வர இயலாது; நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன். 'கடவுளிடமிருந்தே அவர்கள் எல்லாரும் கற்றுக்கொள்வர், என்று இறைவாக்கு நூல்களில் எழுதியுள்ளது.

தந்தைக்குச் செவிசாய்த்து அவரிடமிருந்து கற்றுக்கொண்ட எவனும் என்னிடம் வருகிறன். தந்தையை யாரேனும் நேரடியாகக் கண்டார்கள் என்றல்ல, கடவுளிடமிருந்து வந்தவர் தவிர வேறு ஒருவரும் கண்டதில்லை, அவர் ஒருவரே தந்தையைக் கண்டுள்ளார். உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன், என்னில் விசுவசிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான்.

நானே உயிர் தரும் உணவு. பாலைவனத்தில் உங்கள் முன்னோர் மன்னாவை உண்டனர்; ஆயினும் இறந்தனர். ஆனால் நான் குறிப்பிடும் உணவை உண்பவன் சாகான். இதற்காகவே இவ்வுணவு வானினின்று இறங்கியது. நானே வானின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு, இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான். நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காகப் பலியாகும் என் தசையே'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

**புறவினத்தார்க்கு எனது பெயரை அறிவிக்க என்னால் தேர்ந்து கொள்ளப்பட்ட கருவி அவர்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 9 : 1-20

அந்நாட்களில் :

சவுல் ஆண்டவருடைய சீடர்கள்மேல் சீறி எழுந்து, அவர்களைத் தொலைத்து விடுவதாக மிரட்டிவந்தார். தலைமைக் குருவை அணுகி, இப்புதிய நெறியைச் சார்ந்த ஆண் பெண் யாராயிருந்தாலும், அவர்களைக் கைது செய்து, யெருசலேமுக்குக் கொண்டுவரத் தமஸ்கு நகரிலுள்ள செபக் கூடங்களுக்குக் கட்டளைக் கடிதம் தரும்படி கேட்டார். பயணமாகி, தமஸ்கை நெருங்குகையில், திடீரென வானினின்று தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்துகொள்ள, தரையில் விழுந்தார். விழுந்ததும், "சவுலே, சவுலே, நீ என்னைத் துன்புறுத்துவதேன்?'' என்ற குரலைக் கேட்டார். "ஆண்டவரே, நீர் யார்?'' என்றார். அதற்கு ஆண்டவர், "நீ துன்புறுத்தும் யேசுதான் நான். தாற்றுக்கோலை எதிர்த்து உதைக்கிறது உனக்குக் கடினமாம்'' என்றார்.

இதைக்கேட்டு அவர் நடு நடுங்கித் திகைப்புற்று, "ஆண்டவரே, நான் என்ன செய்யும்படி சித்தமாயிருக்கிறீர்" என்றார்.

ஆண்டவர் அவருக்கு மறுமொழியாக, "எழுந்து நகருக்குப் போ. நீ என்ன செய்ய வேண்டுமென்பது உனக்குத் தெரிவிக்கப்படும்" என்று சொன்னார். அவருடன் பயணம் செய்தவர்கள், அங்கே ஒருவரையும் காணாமல், குரலை மட்டும் கேட்டு, வாயடைத்து நின்றனர். சவுல் எழுந்து நின்றார். கண் திறந்திருந்தும் ஒன்றையும் காணமுடியவில்லை. ஆகையால் உடனிருந்தோர் அவரைத் தமஸ்கு நகருக்கு கையைப் பிடித்து அழைத்துச் சென்றனர். அங்கே அவர் மூன்று நாள் பார்வையற்றிருந்தார். அந்த மூன்று நாளும் அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை.

தமஸ்கு நகரில் அனனியா என்ற சீடர் ஒருவர் இருந்தார். ஆண்டவர் அவருக்குத் தோன்றி, "அனனியாவே!" எனக் கூப்பிட, "ஆண்டவரே, இதோ, அடியேன்" என்றார். அப்போது ஆண்டவர், "நேர்த் தெரு என்ற தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டில் தார்சு நகரத்துச் சவுல் என்பவரைப் பார். இதோ! அவர் செபித்துக் கொண்டிருக்கிறார்" என்று கூறினார். அனனியா என்னும் ஒருவர் வந்து தாம் பார்வை அடையும்படி தம்மீது கைகளை வைப்பதாகக் காட்சி கண்டார்.

அதற்கு அனனியா, "ஆண்டவரே, அந்த ஆள் யெருசலேமில் உம் மக்களுக்கு என்னென்ன தீங்குசெய்தான் என்பதைப் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். உமது பெயரைச் சொல்லி மன்றாடுபவர் அனைவரையும் சிறைப்படுத்த, அவன் தலைமைக் குருக்களிடம் அதிகாரம் பெற்றுக்கொண்டு, இங்கேயும் வந்திருக்கிறான்" என்றார். ஆண்டவர் அதற்கு, "நீ போ; ஏனெனில், புறவினத்தாருக்கும் அரசர்க்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் எனது பெயரை அறிவிக்க என்னால் தேர்ந்துகொள்ளப் பட்ட கருவி அவர். என் பெயரின்பொருட்டு அவர் எவ்வளவு பாடுபட வேண்டும் என்பதை நான் அவருக்குக் காண்பிப்பேன்" என்றார்.

இதைக் கேட்டபின் அனனியா அவ்வீட்டிற்குச் சென்று, அவர்மீது கைகளை விரித்து, "சகோதரர் சவுலே, ஆண்டவர் என்னை உம்மிடம் அனுப்பியுள்ளார். நீர் வரும்பொழுது, வழியில் உமக்குத் தோன்றிய யேசுவே அவர். நீர் பார்வை அடையவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பெறவும், அவர் என்னை அனுப்பினார்" என்றார். என்றதும், அவர் கண்களிலிருந்து செதில் போன்றவை விழ, அவர் பார்வை அடைந்தார். உடனே ஞானஸ்நானம் பெற்றார். உணவு கொண்டபின் தென்படைந்தார். தமஸ்கு நகரில் சீடர்களுடன் சில நாள் இருந்தார். உடனடியாகச் செபக் கூடங்களில், யேசு கடவுளின் மகன்தான் என்று அறிவிக்கத் தொடங்கினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 116:1-2. (பல்லவி : மாற்கு. 16:15)

பல்லவி : உலகெங்கும் போய் நற்செய்தியினை அறிவியுங்கள்.

அல்லது அல்லேலூயா

மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்: மண்ணுலக மக்களே, நீங்கள் அனைவரும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள். பல்லவி

ஏனெனில், நம்மீது அவரது அருளன்பு நிலையாய் உள்ளது: நம்மீது அவர் கொண்டுள்ள பிரமாணிக்கம் என்றும் நிலைத்திருக்கும். பல்லவி

அல்லேலூயா அரு. 6 : 56

அல்லேலூயா. என் தசையைத் தின்று, என் இரத்தத்தைக் குடிப்பவன் என்னில் நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத் திருக்கிறேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

என் தசை மெய்யான உணவு, என் இரத்தம் மெய்யான பானம்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6:52-60

அக்காலத்தில் :

"நாம் உண்பதற்கு இவர் தம் தசையை எவ்வாறு அளிக்கக் கூடும்?" என்று யூதர் தமக்குள் வாதித்துக் கொண்டிருக்க, யேசு அவர்களை நோக்கிச் சொன்னதாவது :

" உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுமகனின் தசையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய உங்களுக்குள் உயிர் இராது. என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் முடிவில்லாத வாழ்வைக் கொண்டுள்ளான். நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன். என் தசை மெய்யான உணவு. என் இரத்தம் மெய்யான பானம். என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் என்னில் நிலைத்திருக்கிறான். நானும் அவனில் நிலைத்திருக்

கிறேன். உயிருள்ள தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல என்னைத் தின்பவனும் என்னால் வாழ்வான். வானினின்று இறங்கி வந்த உணவு இதுவே, இது நம் முன்னோர் உண்ட உணவுபோல் அன்று. அவர்கள் அதை உண்டார்கள், ஆயினும் இறந்தார்கள். இவ்வுணவைத் தின்பவனே என்றுமே வாழ்வான்."

கப்பர்நகூமிலுள்ள செபக் கூடத்தில் போதிக்கையில் இதையெல்லாம் சொன்னார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

***பரிசுத்த ஆவியின் ஆறுதல் நிரம்பப்பெற்று திருச்சபை வளர்ச்சியடைந்து வந்தது.***

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 9 : 31-42

அந்நாட்களில் :

யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெல்லாம் திருச்சபை அமைதியுற்று, ஆண்டவருக்கு அஞ்சி நடந்து, பரிசுத்த ஆவியின் ஆறுதல் நிரம்பப் பெற்று வளர்ச்சியடைந்து வந்தது.

இராயப்பர் எல்லாச் சபைகளையும் விசாரித்து வருகையில் ஒருநாள் லித்தா நகரில் வாழ்ந்துவந்த இறைமக்களிடம் வந்துசேர்ந்தார். அங்கே, எட்டு ஆண்டளவாகப் படுக்கையாய்க் கிடந்த திமிர்வாதக்காரன் ஒருவனைக் கண்டார். அவன் பெயர் ஐனேயா. இராயப்பர் அவனைப் பார்த்து, "ஐனேயா, யேசுகிறிஸ்து உனக்குக் குணம் அளிக்கிறார். எழுந்து நீயே உன் படுக்கையைச் சரிப்படுத்து" என்றார். உடனே அவன் எழுந்து நின்றான். அவனைக் கண்டு லித்தாவிலும் சாரோன் சமவெளியிலும் வாழ்ந்தவர் அனைவரும் ஆண்டவர் பக்கம் மனந்திரும்பினர்.

யோப்பாவிலுள்ள சீடர்களில் தபீத்தா என்றொருத்தி இருந்தாள். (தபீத்தா என்பதற்கு மான் என்பது பொருள்.) பிறருக்கு நன்மை புரிவதும் அறங்கள் செய்வதுமே அவளது வாழ்க்கையாயிருந்தது. அவள் நோய்வாய்ப்பட்டு ஒருநாள் இறந்து விட்டாள். சவத்தைக் குளிப்பாட்டி

மாடி அறையில் கிடத்தினர். யோப்பாவிற்கு அருகிலுள்ள லித்தா நகருக்கு இராயப்பர் வந்திருப்பதைக் கேள்வியுற்ற சீடர்கள் அவரிடம் இருவரை அனுப்பி, "உடனே எங்கள் ஊர்வரைக்கும் வரவும்" என மன்றாடினர்.

இராயப்பர் புறப்பட்டு அவர்களோடு வந்தார். வந்ததும் அவரை மாடி அறைக்கு அழைத்துச் சென்றனர். கைம்பெண்கள் எல்லாரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, தபீத்தா உயிரோடிருக்கையில் தங்களுக்குச் செய்து கொடுத்திருந்த உள்ளாடைகளையும் மேலாடைகளையும் அவரிடம் காட்டி அழுதனர். எல்லாரையும் வெளியே அனுப்பிவிட்டு இராயப்பர் முழங்கால்படியிட்டுச் செபித்தார். பின்பு, பிணத்தை நோக்கி, "தபீத்தா, எழுந்திரு" என்றார். என்றதும், அவள், கண்ணைத் திறந்தாள். இராயப்பரைக் கண்டு எழுந்து உட்கார்ந்தாள். கை கொடுத்து இராயப்பர் அவளை எழுந்து நிற்கச் செய்தார். விசுவாசிகளையும் கைம்பெண்களையும் உள்ளே அழைத்து அவர்களிடம் அவளை உயிருடன் ஒப்புவித்தார்.

இச்செய்தி யோப்பா நகரெங்கும் பரவியது. ஆண்டவர் மேல் பலர் விசுவாசம் கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

*சங். 115:3-4. 5-6. 7-8 (பல்லவி: 3)*

பல்லவி: ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன கைம்மாறு செய்வேன்!

அல்லது அல்லேலூயா.

3 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன கைம்மாறு செய்வேன்?
4 மீட்புக்காக நன்றி கூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன். பல்லவி

5 ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும், அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.
6 ஆண்டவர்தம் அடியாரின் மரணம், அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது. பல்லவி

7 ஆண்டவரே, நான் உம் ஊழியன்; உம் அடியேன்; உம் அடியாளின் மகன்: என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்.

8 புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்: ஆண்டவருடைய திருப் பெயரைக் கூவி அழைப்பேன்.

பல்லவி

அல்லேலூயா

அரு.6 : 63b,68b

அல்லேலூயா. ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிரு மாகும்; முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன. அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நாங்கள் யாரிடம் போவோம்! முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 6 : 60-69

அக்காலத்தில்:

யேசுவின் சீடருள் பலர், "இந்தப் பேச்சு மிதமிஞ்சிப் போகிறது, யார் இதைக் கேட்பார்?" என்றனர். இதைப்பற்றித் தம் சீடர் முணு முணுப்பதை யேசு உணர்ந்துகொண்டு, "இது உங்களுக்கு இடறலாக உள்ளதோ? இதற்கே இப்படியென்றால், மனுமகன் முன்னர் இருந்த இடத்திற்கு ஏறிச்செல்வதை நீங்கள் கண்டால் என்ன சொல்வீர்களோ! உயிர் அளிப்பது ஆவியே, ஊனுடல் ஒன்றுக்கும் உதவாது. நான் சொன்ன சொற்கள் உங்களுக்கு ஆவியும் உயிருமாகும். ஆனால், விசுவசியா தவர் சிலர் உங்களிடையே இருக்கின்றனர்" என்று அவர்களுக்குச் சொன்னார்.

ஏனெனில், விசுவசியாதவர் யார், தம்மைக் காட்டிக்கொடுப்பவன் யார் என்று யேசு தொடக்கத்திலிருந்தே அறிந்திருந்தார். மேலும், "'என் தந்தை அருள்கூர்ந்தாலொழிய எவனும் என்னிடம் வர இயலாது' என இதன் பொருட்டே நான் உங்களுக்குச் சொன்னேன்" என்றார்.

அன்றே அவருடைய சீடருள் பலர் அவரை விட்டுப் பிரிந்தனர். அதுமுதல் அவர்கள் அவரோடு சேரவில்லை. யேசு பன்னிருவரை நோக்கி, "நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?" என்றார். அதற்குச் சீமோன் இராயப்பர், "ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. நீரே கடவுளின் பரிசுத்தர். இதை நாங்கள் விசுவசிக்கிறோம்; இதை நாங்கள் அறிவோம்" என்று மறுமொழி கூறினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா காலத்தில் 4ஆம் வாரம்

## பாஸ்கா 4ஆம் ஞாயிறு - முதல் ஆண்டு

முதல் வாசகம்

கடவுள் இவரை ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினார்.

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 2, 14a, 36-41

பெந்தகொஸ்தே நாளில் இராயப்பர் பதினொருவரோடு எழுந்து நின்று, உரத்த குரலில் பேசியதாவது: நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த யேசுவை, கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினார் என்பதை இஸ்ராயேல் குலத்தவரெல்லாம் உறுதியாக அறிந்து கொள்வார்களாக.

இதைக் கேட்டு, அவர்கள் உள்ளம் குத்துண்டவர்களாய் இராயப்பரையும் மற்ற அப்போஸ்தலர்களையும் நோக்கி, "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினர். அதற்கு இராயப்பர், "மனந்திரும்புங்கள்; பாவமன்னிப்பு அடைவதற்காக யேசு கிறிஸ்துவின் பெயரால் நீங்கள் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெறுங்கள். அப்போது பரிசுத்த ஆவியாம் கொடையைப் பெறுவீர்கள். ஏனெனில், இறைவன் தந்த வாக்குறுதி உங்களுக்குரியதே. ஏன், உங்கள் பிள்ளைகளுக்கும் தொலைவிலுள்ள எல்லாருக்கும், நம் கடவுளாகிய ஆண்டவர் அழைக்கும் ஒவ்வொருவருக்குமே உரியது" என்றார்.

இன்னும் பல ஆதாரங்களைக் காட்டி, சாட்சியம் கூறி, "நெறிகெட்ட இத்தலைமுறையிலிருந்து நீங்கி, உங்களை மீட்டுக் கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு அறிவுறுத்தினார். அவருடைய அறிவுரையை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். இவ்வாறு, அன்று ஏறத்தாழ மூவாயிரம் பேர் சேர்ந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 11: 1–3a. 3b-4. 5.6 (பல்லவி: 1)

பல்லவி : **என் ஆயன் ஆண்டவர், எனக்கென்ன குறைவு.**
அல்லது **அல்லேலூயா.**

1 என் ஆயன் ஆண்டவர்: எனக்கென்ன குறைவு:
2 பசும்புல் மேய்ச்சலில் என்னை இளைப்பாறச் செய்கின்றார்.
3 என் களைப்பை ஆற்ற நீர்அருவிக்கு என்னை அழைத்துச் செல்கின்றார்.
எனக்குப் புத்துயிர் ஊட்டுகின்றார். பல்லவி

தம் திருப்பெயரின் பொருட்டு என்னைத் தம் நேரிய வழியில் செலுத்து கின்றார்.

4 இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், தீமையான
தெதற்கும் அஞ்சேன்: ஏனெனில், நீர் என்னோடு இருக்கின்றீர் : உமது
கோலும் கைத்தடியும் எனக்கு ஆறுதலாய் உள்ளன. பல்லவி

5 என் எதிரிகள் காண, நீர் எனக்கு விருந்தொன்றைத் தயாரிக்கின்றீர்: என்
தலைக்கு எண்ணெய் பூசினீர்: என் கிண்ணம் நிரம்பி வழிகின்றது. பல்லவி

6 கருணையும் அருளும் என்னைத் தொடரும், என் வாழ்நாளெல்லாம் என்னைத்
தொடரும், ஆண்டவர் தம் இல்லத்தில் நான் குடியிருப்பேன்: ஊழி ஊழிக்
காலமும் குடியிருப்பேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**உங்கள் ஆன்மாக்களின் ஆயரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.**

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 20. b-25

அன்புக்குரியவர்களே :

நன்மை செய்தும், அதற்காகத் துன்புற்றால், அதைப் பொறுமையாக ஏற்றுக்கொள்வதே கடவுளுக்கு உகந்தது. இவ்வாறு வாழவே நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்றபோது, தம்முடைய அடிச் சுவடுகளை நீங்கள் பின்பற்றுமாறு முன்மாதிரி தந்து சென்றார்.

அவர் பாவம் எதுவும் செய்ததில்லை, அவரது வாயினின்று வஞ்சகம்

வெளிப்பட்டதில்லை. அவர்கள் பழித்துரைத்தபோது, அவர் எதிர்த்துப் பழிக்கவில்லை. துன்புற்றபோது அச்சுறுத்தவில்லை. நீதியோடு தீர்ப்பிடும் இறைவனிடம் தம் காரியத்தை ஒப்படைத்தார். நாம் பாவங்களை அப்புறப் படுத்தி இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் வாழ, கழுமரத்தின்மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். அவருடைய காயங்களால் நீங்கள் குணமானீர்கள்.

நீங்கள் ஆடுகளைப்போல் வழி தவறி அலைந்தீர்கள். ஆனால், இப் போது உங்கள் ஆன்மாக்களின் ஆயரும் காவலருமானவரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

அல்லேலூயா அரு. 10 : 14

அல்லேலூயா. நல்ல ஆயன் நானே; என் ஆடுகளை நான் அறிவேன்; அவையும் என்னை அறிகின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஆட்டு மந்தைக்கு வாயில் நானே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 1–10

அக்காலத்தில் : யேசு கூறியதாவது :

"உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன் : ஆட்டுப் பட்டிக்குள் வாயில்வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்பவன் திருடன், கொள்ளைக்காரன், வாயில் வழியாக நுழைபவனே ஆடுகளின் ஆயன்; அவனுக்கே காவலன் வாயிலைத் திறந்துவிடுகிறான். ஆடுகளும் அவனுடைய குரலைத் தெரிந்துகொள்ளுகின்றன. அவன் தன் சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியில் ஓட்டுகின்றான். தன் ஆடுகளை வெளியில் கொண்டு போனபின் அவற்றிற்குமுன் நடந்து போகிறான். அவனது குரல் அவற்றிற்குத் தெரியுமாதலால் ஆடுகள் அவனைப் பின் தொடர்கின்றன. அன்னியனையோ அவை பின்தொட ராமல், அவனை விட்டு ஓடிப்போகும். ஏனெனில், அன்னியருடைய குரலை அவை அறிந்துகொள்வதில்லை."

இதை யேசு அவர்களுக்கு உவமையாகச் சொன்னார். சொன்னது என்னவென்று அவர்கள் கண்டுணரவில்லை.

ஆதலால் யேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உண்மையிலும்

உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஆட்டு மந்தைக்கு வாயில் நானே. எனக்கு முன்பு வந்தவர்கள் அனைவரும் திருடர், கொள்ளைக்காரர்; அவர்களுக்கு ஆடுகள் செவி கொடுக்கவில்லை. நானே வாயில். என் வழியாக நுழைபவன் மீட்புப் பெறுவான். உள்ளே போவான், வெளியே வருவான், மேய்ச்சலைக் கண்டடைவான். திருடுவதற்கும் கொல்லுவதற்கும் அழிப்பதற்குமேயன்றி வேறெதற்கும் திருடன் வருவதில்லை. நானோ, ஆடுகள் உயிர் பெறும்படி வந்தேன். அதை மிகுதியாய்ப் பெறும் பொருட்டே வந்தேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா 4ஆம் ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**இவராலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 4 : 8 - 12

அந்நாட்களில்:

இராயப்பர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, "மக்கள் தலைவர்களே, பெரியோர்களே, நோயாளிக்கு நாங்கள் செய்த நன்மையைக் குறித்து விசாரிப்பீர்களாகில், அவன் எவ்வாறு குணமானான் என்று எங்களைக் கேட்பீர்களாகில், அவன் குணம் பெற்று உங்கள்முன் நிற்பது நசரேயனாகிய யேசு கிறிஸ்துவின் பெயரால்தான். இது உங்கள் எல்லோருக்கும், இஸ்ராயேல் மக்கள் அனைவருக்குமே தெரிந்திருக்கட்டும். இந்த யேசுவைத்தான் நீங்கள் சிலுவையில் அறைந்தீர்கள். கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்.

கட்டுவோராகிய உங்களால் விலக்கப்பட்டு மூலைக்கல்லாய் அமைந்த கல் இவர்தாம். இவராலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை; ஏனெனில், நாம் மீட்படைவதற்கு அவர் பெயரைத் தவிர இவ்வுலகில் மனிதருக்கு வேறு பெயர் அருளப்படவில்லை" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 117:1, 8-9, 21-23, 26, 28, 29. (பல்லவி:22)

பல்லவி : வீடுகட்டுவோர் புறக்கணித்த கல்லே
வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.

8 மனிதன்மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்.

9 தலைவர்கள்மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்.

பல்லவி

21 என் மன்றாட்டை நீர் கேட்டதால் நான் உமக்கு நன்றி செலுத்துவேன்; எனக்கு நீர் மீட்பரானதால் உமக்கு நன்றி செலுத்துவேன்.

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.

23 ஆண்டவர் செயலிது; நம் கண்ணுக்கு வியப்பே!

பல்லவி

26 ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்: ஆண்டவரது இல்லத்தினின்று உங்களுக்கு ஆசி கூறுகிறோம்.

28 என் இறைவன் நீரே, உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன்: என் இறைவா, உம்மைப் புகழ்ந்தேத்துகிறேன்.

29 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கடவுள் இருப்பதுபோல் அவரைக் காண்போம்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3:1-2

அன்புக்குரியவர்களே :

பரம தந்தை நம்மிடம்காட்டிய அன்பு எவ்வளவு என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுகின்றோம். அவருடைய மக்களாகவே இருக்கின்றோம். உலகம் அவரைஅறிந்து கொள்ளாததால்தான் நாம் எத்தன்மையரென்பதையும் அது அறிந்துகொள்வதில்லை. அன்புக்

குரியவர்களே, இப்போது நாம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் வெளிப்படும்போது, அவரைப் போலவே நாமும் இருப்போம் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 10 : 14

அல்லேலூயா. நல்ல ஆயன் நானே; என் ஆடுகளை நான் அறிவேன். அவையும் என்னை அறிகின்றன, என்கிறார் ஆண்டவர்; அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன்னுயிரையே கொடுக்கிறான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 11-18

அக்காலத்தில்: யேசு கூறியதாவது:

"நல்ல ஆயன் நானே. நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தன்னுயிரையே கொடுப்பான். கூலிக்கு மேய்ப்பவன், ஆடுகளைச் சொந்தமாகக் கொண்டுள்ள ஆயனாயிராததால், ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப்போகிறான். ஏனெனில், கூலியாள் கூலியாள்தான். ஆடுகளின்மீது அவனுக்கு அக்கறையில்லை. ஓநாய் வந்து ஆடுகளை அடித்துக் கொண்டு போகிறது. மந்தையைச் சிதறடிக்கிறது.

நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிவது போலவும், நான் தந்தையை அறிவது போலவும் என் ஆடுகளை நான் அறிவேன். அவையும் என்னை அறிகின்றன. என் ஆடுகளுக்காக என் உயிரைக் கொடுக்கிறேன். இக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. அவற்றையும் நான் கூட்டிச் சேர்க்க வேண்டும். அவை என் குரலுக்குச் செவி கொடுக்கும். ஒரே ஆயனும் ஒரே மந்தையும் உண்டாகும்.

என் உயிரை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி நான் அதைக் கையளிக்கிறேன். ஆதலால் தந்தை என்னிடம் அன்புகூர்கிறார். எனது உயிரை என்னிடமிருந்து பறிப்பவன் எவனுமில்லை. நானாகவே என் உயிரைக் கையளிக்கிறேன். உயிரைக் கையளிக்கவும் எனக்கு அதிகாரம்

உண்டு. அதனை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இதுவே என் தந்தையிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட கட்டளை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பாஸ்கா 4ஆம் ஞாயிறு - 3ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**இதோ, நாங்கள் புறவினத்தாரைப்பால் செல்கிறோம்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 13 : 14. 43-52

அந்நாட்களில் :

சின்னப்பரும் பர்னபாவும் பெர்கேயிலிருந்து பயணத்தைத் தொடர்ந்து பிசிதியா நாட்டு அந்தியோகியா வந்தனர். ஓய்வுநாளில் செபக்கூடத்திற்குப் போய் அமர்ந்தனர். யூதர் பலரும், யூத மறையைத் தழுவிய புறவினத்தார் பலரும் இவர்களைப் பின் தொடர்ந்தனர். இவ்விருவரும் அவர்களுடன் உரையாடி, கடவுளுடைய அருளில் நிலையாயிருக்கும்படி ஊக்குவித்தனர்.

அடுத்த ஓய்வுநாளில் கடவுளின் வார்த்தையைக் கேட்க ஏறக்குறைய நகரத்தார் அனைவரும் வந்து கூடினர். இக் கூட்டத்தைக் கண்டு யூதர்கள் பொறாமை நிறைந்தவர்களாய்ச் சின்னப்பரைத் தூற்றி, அவர் சொன்னதை மறுத்துப் பேசினர். சின்னப்பரும் பர்னபாவும் துணிவோடு " முதலில் உங்களுக்குத்தான் கடவுளின் வார்த்தையைப் போதிக்கவேண்டியிருக்கிறது. ஆனால், நீங்கள் அதைப் புறக்கணித்து, முடிவில்லா வாழ்விற்குத் தகுதியற்றவர்கள் என நீங்களே உங்களுக்குத் தீர்ப்பிட்டுக் கொண்டீர்கள். ஆதலால், இதோ, நாங்கள் உங்களைவிட்டு, புறவினத்தார்பால் செல்கிறோம். ஏனெனில், 'உலகின் இறுதி எல்லைவரைக்கும் மீட்பைக்கொண்டுசெல்ல புறவினத்தாருக்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினேன்' என்று ஆண்டவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்" என்றனர்.

புறவினத்தார் இதைக்கேட்டு மகிழ்ந்து ஆண்டவரின் வார்த்தையை மகிமைப்படுத்தினர். முடிவில்லா வாழ்வுக்குக் குறிக்கப்பட்டவர்கள் அனைவரும் விசுவாசிகள் ஆயினர். ஆண்டவரின் வார்த்தை அந்நாடெங்கும் பரவிவந்தது. யூதர்களோ யூதமறையைத் தழுவிய பெருங்குடிப் பெண்டிரையும் நகரப் பெரியோர்களையும் தூண்டினர். சின்னப்பருக்கும் பர்னபாவுக்கும் எதிராகக் கலகம் உண்டாக்கி, அவர்களைத் தங்களது நாட்டிலிருந்து வெளியேற்றினர். இவர்கள் தம் காலிலிருந்து தூசியை அவர்களுக்கு எதிராகத் தட்டிவிட்டு இக்கோனியாவுக்குப் போயினர், சீடர்

களோ மகிழ்ச்சியாலும் பரிசுத்த ஆவியாலும் நிரம்பியவராய் வாழ்ந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

99:1-2. 3.5 (பல்லவி: 3c)

பல்லவி : அவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம்.
அல்லது அல்லேலூயா.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் அக்களிப்போடு ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள். பெரு மகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள். அவரே நம்மை உண்டாக்கினவர். அவருக்கே நாம் சொந்தம்: அவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது. அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*செம்மறியானவர் அவர்களை மேய்த்து வாழ்வளிக்கும் நீரூற்றுக்கு அவர்களை நடத்திச் செல்வார்.*

✠ அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 7:9. 14b-17

அருளப்பன் நான் யாராலும் எண்ண இயலாத பெருந்திரளான மக்களைக் கண்டேன். இவர்கள் எல்லா நாட்டையும் குலத்தையும் இனத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள். இவர்கள் அரியணைக்கும் செம்மறிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்தனர்; வெண்ணுடை அணிந்திருந்தனர்; கையில் குருத்தோலைகளை ஏந்தியிருந்தனர்.

மூப்பர்களுள் ஒருவர் என்னை நோக்கிச் சொன்னது: "இவர்கள் பெரும் வேதனையினின்று மீண்டவர்கள். தங்கள் ஆடைகளைச் செம்மறி

யின் இரத்தத்தில் தோய்த்து வெண்மையாக்கிக்கொண்டார்கள். ஆகவே தான் இவர்கள் சடவுளது அரியணை முன் நின்று அவரது ஆலயத்தில் இரவும் பகலும் அவருக்கு வழிபாடு செலுத்துகிறார்கள். அரியணையில் வீற்றிருப்பவர் அவர்களைத் தம் நிழலில் வாழச் செய்வார். இனி அவர்களுக்குப் பசி தாகம் இராது. வெயிலோ வெப்பமோ அவர்களைத் தாக்காது. ஏனெனில் அரியணை நடுவில் இருக்கும் செம்மறியானவர் அவர்களை மேய்த்து, வாழ்வளிக்கும் நீரூற்றுக்கு அவர்களை நடத்திச் செல்வார். கடவுள் அவர்களது கண்ணீர் அனைத்தையும் துடைத்து விடுவார்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 10:14

அல்லேலூயா. நல்ல ஆயன் நானே; என் ஆடுகளை நான் அறிவேன்; அவையும் என்னை அறிகின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நான் என் ஆடுகளுக்கு முடிவில்லா வாழ்வு அளிக்கிறேன்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10:27-30

அக்காலத்தில்: யேசு கூறியதாவது:

''என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிகொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன். அவையும் என்னைப் பின்தொடர்கின்றன. நான் அவற்றிற்கு முடிவில்லா வாழ்வு அளிக்கிறேன். அவை என்றும் அழியா. எவனும் என் கையிலிருந்து அவற்றைக் கவர்ந்து கொள்வதில்லை. என் தந்தை எனக்களித்தது அனைத்திலும் பெரிது. என் தந்தையின் கையிலிருந்து எவனும் எதையும் கவர்ந்துகொள்ள முடியாது. நானும் தந்தையும் ஒன்றே.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

**வாழ்வுக்கு வழியாகும் மனமாற்றத்தைக் கடவுள் புறவினத்தாருக்குக்கூட அருளினர்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 11:1-18

அந்நாட்களில் :

கடவுளின் வார்த்தையைப் புறவினத்தார்கூட ஏற்றுக்கொண்டதை யூதேயாவிலுள்ள சகோதரரும் அப்போஸ்தலரும் கேள்விப்பட்டனர். இராயப்பர் யெருசலேமுக்குச் சென்றபோது, விருத்தசேதனம் செய்து கொண்டவர்கள், "நீர் விருத்தசேதனம் செய்துகொள்ளாதவர்கள் வீட்டுக்குப்போய் அவர்களோடு சாப்பிட்டீரே!" என்று அவருடன் வாதாடினர்.

அதற்கு இராயப்பர் நடந்ததை விவரமாக விளக்கிச் சொன்னதாவது: "நான் யோப்பா நகரில் செபித்துக்கொண்டிருந்தபொழுது பரவசமாகிக் காட்சி கண்டேன். கப்பல் பாயைப்போன்ற ஒரு விரிப்பு நான்கு மூலைகளிலும் கட்டி வானத்தினின்று இறக்கப்பட்டு என்னிடம் வந்தது. அதை நான் உற்று நோக்குகையில் காட்டு விலங்குகள், தரையில் நடப்பன, ஊர்வன, வானில் பறப்பன யாவும் கண்டேன். அப்பொழுது, 'இராயப்பா, எழுந்து இவற்றைக் கொன்று சாப்பிடு' என ஒரு குரல் கேட்டது. அதற்கு நான், 'வேண்டாம், ஆண்டவரே. தீட்டும் அசுத்தமுமான எதையும் ஒருபோதும் நான் என் வாயில் வைத்ததேயில்லை' என்றேன். அதற்கு, 'சுத்தமெனக் கடவுள் சொன்னதை, தீட்டு என்று நீ சொல்லாதே' என மீளவும் அக்குரல் பேசிற்று. இப்படி மும்முறை நடந்தது. பின் எல்லாம் வானத்திற்கு எடுக்கப்பட்டன.

அதே நேரத்தில் செசரியாவிலிருந்து என்னிடம் அனுப்பப்பட்ட மூவர் நான் தங்கியிருந்த வீட்டுக்கு முன்னே வந்து நின்றனர். தயக்கமின்றி அவர்களுடன் செல்லும்படி ஆவியானவர் எனக்குச் சொன்னார். எனவே, நானும் இந்த ஆறு சகோதரர்களும் புறப்பட்டு அவருடைய வீட்டை அடைந்தோம். அவர் தம் வீட்டில் வானதூதர் தோன்றியதாகவும், அந்தத் தூதர் யோப்பாவுக்கு ஆள் அனுப்பி இராயப்பர் என்னும் சீமோனை வரச்சொல்லும்; நீரும் உம் வீட்டார் அனைவரும் மீட்புப் பெறு

வதற்கான வார்த்தைகளை அவர் உமக்குக்கூறுவார்" என்று தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்குச் சொன்னார்.

நான் பேசத்தொடங்கியதும், பரிசுத்த ஆவி முன்பு நம்மேல் இறங்கியதுபோலவே அவர்கள் மேலும் இறங்கினார். அப்போது 'அருளப்பர் நீரால் ஞானஸ்நானம் கொடுத்தார். நீங்களோ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள்' என்று ஆண்டவர் கூறிய வார்த்தையை நினைவுகூர்ந்தேன். ஆகவே, ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம்கொண்ட நமக்கு அருளிய அதே திருக்கொடையைக் கடவுள் அவர்களுக்கும் அருளினார் என்றால், கடவுளுக்குத் தடை செய்ய என்னால் எப்படி முடியும் ?

இதைக் கேட்டு அமைதி அடைந்தனர். "அப்படியானால், வாழ்வுக்கு வழியாகும் மனமாற்றத்தைக் கடவுள் புறவினத்தாருக்குக்கூட அருளினார்" என்று கடவுளை மகிமைப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 41: 1-2; சங். 42: 3.4 (பல்லவி : சங். 41 : 2a காண்)*

பல்லவி : உயிருள்ள இறைவன் மீது என் உள்ளம் தாகங்கொண்டது.

அல்லது அல்லேலூயா.

1 கலைமான் நீரோடைகளை ஆர்வமுடன் நாடிச்செல்வது போல், இறைவா, என் நெஞ்சம் உம்மை ஆர்வத்துடன் நாடிச் செல்கிறது

2 இறைவன்மீது, உயிருள்ள இறைவன்மீது என் உள்ளம் தாகங்கொண்டது: என்று செல்வேன்? இறைவன் முகத்தை என்று காண்பேன்? பல்லவி

3 உமது ஒளியை வீசியருளும், உமது உண்மையைக் காட்டியருளும்: அவையே என்னை வழிநடத்தி உமது புனித மலைக்கும் உறைவிடத்துக்கும் கொண்டு சேர்க்கும். பல்லவி

4 இறைவனின் பீடத்துக்குச் செல்வேன்; எனக்கு அகமகிழ்வும் அக்களிப்பும் தரும் இறைவனிடம் செல்வேன்: இறைவா, என் இறைவா, வீணைகொண்டு உமக்குப் புகழ் பாடுவேன். பல்லவி

அல்லேலூயா

அரு. 10:14

அல்லேலூயா. நல்ல ஆயன் நானே,
என் ஆடுகளை நான் அறிவேன். அவையும்
என்னை அறிகின்றன, என்கிறார் ஆண்டவர்.
அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஆட்டு மந்தைக்கு வாயில் நானே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10 : 1 - 10

(பக்கம்-793)

---

அல்லது, கடந்த ஞாயிறன்று (முதல் ஆண்டில்) இச்சுவிசேஷம் வாசிக்கப்பெற்றிருந்தால், பின்வருவதைப் பயன்படுத்தலாம்.

**நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தன்னுயிரையே கொடுக்கிறான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

10 : 11-18

(பக்கம் 796)

---

# செவ்வாய்

## முதல் வாசகம்

**கிரேக்கர்களுக்கும் ஆண்டவராகிய யேசுவைப் பற்றிய நற்செய்தி அறிவித்தனர்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 11:19:26

அந்நாட்களில்:

முடியப்பர்பற்றிய கலாபனையால் விசுவாசிகள் பெனிக்கியா, சைப்ரஸ், அந்தியோகியாவரைக்கும் சிதறுண்டு போயினர். அவர்கள் யூதர்களுக்கு மட்டுமே அன்றி வேறு யாருக்கும் தேவ வார்த்தையை அறிவிக்கவில்லை. ஆனால், இப்படிப்போனவர்களுள் சைப்ரஸ் தீவினர், சீரேனே ஊரார் சிலர் அந்தியோகியாவிற்கு வந்து கிரேக்கர்களை அணுகி, அவர்களுக்கும் ஆண்டவராகிய யேசுவைப்பற்றிய நற்செய்தி அறிவித்தனர். ஆண்டவரின் கைவன்மை அவர்களுக்குத் துணை நின்றது. ஆதலின், பலர் ஆண்டவர்மேல் விசுவாசம் கொண்டு மனந்திரும்பினர்.

இச்செய்தி யெருசலேமிலுள்ள திருச்சபைக்கு எட்டவே, பர்னபாவை அந்தியோகியாவிற்கு அனுப்பினர். பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவராய், நற்பண்புடன் விளங்கிய இவர், அங்குப் போய் கடவுளின் அருளைக் கண்டு மனமகிழ்ந்தார். மன உறுதியுடன் ஆண்டவரில் நிலைத்துநிற்க அனைவரையும் ஊக்குவித்தார். திரளான மக்கள் ஆண்டவர் பக்கம் சேர்ந்தனர்.

சவுலை நாடி பர்னபா தர்சு நகருக்குச் சென்றார். அங்கு அவரைக் கண்டு அந்தியோகியாவிற்கு அழைத்து வந்தார். இருவரும் அச்சபையோடு ஓராண்டு முழுவதும் உறவாடினர்; அங்கே பலருக்குப் போதித்தனர். அந்தியோகியாவில்தான் முதன்முறையாகச் சீடர்கள் 'கிறிஸ்தவர்கள்' என்ற பெயரைப் பெற்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 86:1-3. 4-5. 6-7. (பல்லவி: சங். 116 : 1a)

பல்லவி: மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்.

அல்லது: அல்லேலூயா.

1 திருமலைமீது தாம் அமைத்த இல்லத்தின் மேல் ஆண்டவர் பற்றுக் கொண்டிருக்கிறார்.
2 யாக்கோபின் கூடாரங்களைவிடச் சீயோனின் வாயில்கள்மீது அதிக அன்பு வைத்திருக்கிறார்.
3 இறைவனின் திருநகரே, உன்னைக் குறித்து மாண்புமிக்க செய்திகள் கூறப்படுகின்றன. பல்லவி

4 என்னை வழிபடுபவர்களோடு ராகாபையும் பாபிலோனையும் சேர்த்துக் கொள்வேன்: இதோ பிலிஸ்தேயா, தீர், எத்தியோப்பிய மக்களைக் குறித்து, 'இவர்களும் அங்கே பிறந்தனர்' என்பர்.
5 சீயோனைக் குறித்து, 'இன்னானின்னான் அதிலே பிறந்தான்: உன்னதமானவர்தாமே அதை உறுதிப்படுத்தினார்' என்று சொல்லப்படும். பல்லவி

6 மக்களினங்களைப் பதிவு செய்யும்போது, 'இன்னார் இங்கே பிறந்தனர்' என்று எழுதுவார்.
7 'என் ஊற்றுகளெல்லாம் உன்னிடத்திலே உள்ளன' என்று நடனமாடி அனைவரும் பாடுவர். பல்லவி

அல்லேலூயா — அரு. 10 : 27

அல்லேலூயா. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிகொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன்; அவையும் என்னைப் பின்தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நானும் தந்தையும் ஒன்றே.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.

*10:22-30*

யெருசலேமில் கோயில் அபிஷேகத் திருநாள் நடைபெற்றது. அப்பொழுது குளிர்காலம். கோயிலில் சாலொமோன் மண்டபத்தில் யேசு நடந்துகொண்டிருந்தார். அப்போது யூதர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு, "எவ்வளவு காலத்திற்கு எங்களைத் தயங்கவைப்பீர்? நீர் மெசியாவாக இருந்தால் தெளிவாகச் சொல்லிவிடும்" என்று கேட்டனர்.

அதற்கு யேசு, "நான் சொல்லிவிட்டேன், நீங்கள் தான் விசுவசிக்கிறதில்லை. என் தந்தையின் பெயரால் நான் புரியும் செயல்களே எனக்குச் சாட்சியம். ஆனால், நீங்கள் என் ஆடுகளைச் சேர்ந்தவர்களாக இராததால், விசுவசிக்கிறதில்லை. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவி கொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன். அவையும் என்னைப் பின்தொடர்கின்றன. நான் அவற்றிற்கு முடிவில்லா வாழ்வு அளிக்கிறேன். அவை என்றும் அழியா. எவனும் என் கையிலிருந்து அவற்றைக் கவர்ந்து கொள்வதில்லை.

என் தந்தை எனக்களித்தது அனைத்திலும் பெரிது. என் தந்தையின் கையிலிருந்து எவனும் எதையும் கவர்ந்துகொள்ள முடியாது. நானும் தந்தையும் ஒன்றே" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

**சவுலையும் பர்னபாவையும் எமக்கென ஒதுக்கிவையுங்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *12:24-13:5*
அந்நாட்களில்:

கடவுளின் வார்த்தை வளர்ச்சி பெற்றுப் பரவிவந்தது. பர்னபாவும் சவுலும் தம் ஊழியத்தை முடித்துவிட்டு மாற்கு என்னும் அருளப்பரை அழைத்துக்கொண்டு யெருசலேமிலிருந்து திரும்பினர்.

அந்தியோகியாவிலிருந்த சபையிலே இறைவாக்கினர்களும் போதகர்களும் இருந்தனர். அவர்கள், பர்னபா, நீகர் என்னும் சிமெயோன், சிரேனே ஊரான் லூகியு சிற்றரசன், ஏரோதுடன் வளர்ந்த மனுயீன், சவுல் என்பவராவர். ஒருநாள் அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடுகையில் பரிசுத்த ஆவி, "சவுலையும் பர்னபாவையும் நான் தெரிந்தெடுத்த வேலைக்காக எனக்கென ஒதுக்கி வையுங்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் நோன்பிருந்து செபம்செய்து, அவ்விருவர் மீது கைகளை விரித்து அவர்களை வழி அனுப்பினார்கள்.

இப்படிப் பரிசுத்த ஆவியால் அனுப்பப்பட்ட இவர்கள் செலூக்கியாவுக்குச் சென்றனர். அங்கிருந்து சைப்ரஸ்தீவுக்குக் கப்பல் ஏறினர். சாலமி துறையைச் சேர்ந்து யூதர்களின் செபக்கூடங்களில் கடவுளின் வார்த்தையை அறிவித்து வந்தனர். அருளப்பரைத் தங்களுக்குத் துணையாக அழைத்துச் சென்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 66:1-2. 4. 5, 7 (பல்லவி: 3)

பல்லவி: இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக; மக்கள் எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.

அல்லது அல்லேலூயா.

1 கடவுள் நம்மீது இரங்கி, நமக்கு ஆசி அளிப்பாராக: நம்மீது தம் திருமுக ஒளியை வீசுவாராக.

2 அப்போது உலகம் உமது வழியை அறிந்து கொள்ளும்: மக்களினங்கள் எல்லாம் உமது மீட்பை உணரும். பல்லவி

4 நீதியோடு மக்களை ஆள்கின்றீர், உலகத்து மக்களினங்கள்மீது ஆட்சி செலுத்துகின்றீர் என்று நாடுகள் அனைத்தும் மகிழ்ந்து கூறட்டும். பல்லவி

5 இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக: மக்கள் எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.

7 கடவுள் நமக்கு ஆசி அளிப்பாராக: மாநிலத்தின் கடையெல்லைவரை மக்கள் அவருக்கு அஞ்சுவார்களாக. பல்லவி

அல்லேலூயா

அரு. 8:12

அல்லேலூயா. நானே உலகின் ஒளி; என்னைப் பின்செல்பவன் உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நான் ஒளியாக இவ்வுலகிற்கு வந்தேன்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்.

12:44-50

அக்காலத்தில்: யேசு, உரக்கக் கூவிச் சொன்னது: "என்மேல் விசுவாசம் கொள்பவன் என்மேல் அன்று, என்னை அனுப்பினவர்மேல் தான் விசுவாசம் கொள்கிறான். என்னைக் காண்பவனும் என்னை அனுப்பின வரையே காண்கிறான்.

நான் ஒளியாக இவ்வுலகிற்கு வந்தேன். என்னில் விசுவாசங் கொள்பவன் எவனும் இருளிலேயே இருந்துவிடாதபடி வந்தேன். நான் சொல்வதை ஒருவன் கேட்டபின் அதன்படி நடவாவிடில் அவனுக்குத் தீர்ப்பிடுவது நானல்லேன். ஏனெனில், நான் உலகிற்குத் தீர்ப்பிட வரவில்லை, உலகை மீட்கவே வந்தேன்.

என்னைப் புறக்கணித்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவனுக்குத் தீர்ப்பிடும் ஒன்று உண்டு. நான் கூறிய வார்த்தையே அவனுக்கு இறுதி நாளில் தீர்ப்பிடும். ஏனெனில், நானாகவே பேசவில்லை; என்னை அனுப்பிய தந்தையே நான் என்ன கூற வேண்டும், என்ன பேச வேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளையோ முடிவில்லா வாழ்வு என்பது எனக்குத் தெரியும். எனவே, நான் சொல்வதெல்லாம் என் தந்தை எனக்குக் கூறியவாறே சொல்லுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

## முதல் வாசகம்

**தாவீது மரபிலிருந்தே கடவுள் யேசுவை மீட்பராக வரச்செய்தார்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 13:13-25

சின்னப்பரும் அவருடன் இருந்தவர்களும் பாப்போவிலிருந்து கப்பல் ஏறி பம்பிலியாவிலுள்ள பெர்கே துறையை அடைந்தனர். அருளப்பர் அவர்களை விட்டுப் பிரிந்து யெருசலேமுக்குத் திரும்பினார். பெர்கேயிலிருந்து பயணத்தைத் தொடர்ந்து பிசிதியா நாட்டு அந்தியோகியா வந்தனர். ஓய்வுநாளில் செபக்கூடத்திற்குப் போய் அமர்ந்தனர். திருச்சட்டமும் இறைவாக்குகளும் வாசித்து முடித்தபின், செபக்கூடத் தலைவர்கள் அவர்களைப் பார்த்து, "சகோதரரே, மக்களுக்கு அறிவுரை கூற ஏதாவது இருந்தால் பேசலாம்" என்றனர்.

சின்னப்பர் எழுந்து சைகை காட்டி உரைத்ததாவது: "இஸ்ராயேலரே, கடவுளுக்கு அஞ்சுபவரே, கேளுங்கள். இஸ்ராயேலராகிய இம்மக்களின் கடவுள் நம் முன்னோரைத் தெரிந்தெடுத்தார். நம் மக்கள் எகிப்து நாட்டில் குடியேறியபோது அவர்களை மேன்மைப் படுத்தினார். ஓங்கிய தம் கை வன்மையால் அவர்களை அந்நாட்டிலிருந்து வெளியேற்றி, பாலை நிலத்தில் நாற்பது ஆண்டளவாய், அவர்கள் போன போக்கையெல்லாம் சகித்து வந்தார். பின்னர், கானான் நாட்டில் ஏழு இனத்தினரை அழித்து, அவர்களுடைய நாடுகளை இவர்களுக்கு உரிமையாக்கினார். இவையெல்லாம் நடைபெற ஏறக்குறைய நானூற்று ஐம்பது ஆண்டுகளாயின. அதன் பின், இறைவாக்கினரான சாமுவேல் வரை அவர்களுக்கு நடுவர்களை அனுப்பினார்.

பின்னர் அவர்கள் ஓர் அரசனை ஏற்படுத்துமாறு வேண்டவே, கீஸ் என்பவனின் மகன் சவுலைக் கடவுள் அரசனாக ஏற்படுத்தினார். அவன் பெஞ்சமின் குலத்தினன்; நாற்பது ஆண்டுகள் ஆண்டான். பிறகு கடவுள் அவனை நீக்கிவிட்டு, தாவீதை அவர்களுக்கு அரசனாக ஏற்படுத்தினார். அவரைப்பற்றிக் கடவுள், 'யீசாயின் மகன் தாவீது என் மனத்துக்கு உகந்தவனாய் இருக்கக் கண்டேன். நான் விரும்பியதெல்லாம் அவன் செய்வான்' என்று நற்சான்று கூறினார்.

அவரது மரபிலிருந்தே கடவுள் தாம் வாக்களித்தபடி யேசுவை இஸ்ராயேலருக்கு மீட்பராக வரச்செய்தார். யேசுவின் வருகைக்குமுன், அருளப்பர் இஸ்ராயேல் மக்கள் அனைவருக்கும், மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று அறிவித்துவந்தார். தம் பணி முடிவுறும் காலத்தில் அருளப்பர், 'நீங்கள் என்னை யாரென நினைக்கிறீர்களோ, அவரல்ல நான். இதோ! ஒருவர் எனக்குப்பின் வருகின்றார். அவருடைய மிதியடிகளை அவிழ்க்க நான் தகுதியற்றவன்' என்றார்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 88:1-2. 20-21. 24, 26 (பல்லவி :2a காண்)

பல்லவி: ஆண்டவரே, உம் அருட்செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரது அருட்செயல்களை நினைத்து நான் என்றென்றும் பாடுவேன். உமது சொல்லுறுதியை எல்லாத் தலைமுறைகளுக்கும் என் நாவால் எடுத்துரைப்பேன்.

2 'என்றென்றும் உள்ளது எம் அருளன்பு' என்று நீர் கூறினீர்: உமது சொல்லுறுதிக்கு வானகமே அடித்தளம். பல்லவி

20 என் ஊழியன் தாவீதை நான் தேர்ந்தெடுத்தேன்; புனித தைலத்தால் அவரை அபிஷேகம் செய்தேன்.

21 அதனால் என் கைவன்மை என்றும் அவருக்குத் துணை நிற்கச் செய்வேன். என் புயப்பலம் அவரை உறுதிப்படுத்தச் செய்வேன். பல்லவி

24 என் சொல்லுறுதியும் என் அருளும் அவரோடிருக்கும்: என் பெயரினால் அவரது வலிமை ஓங்கும்.

26 நீரே என் தந்தை, என் இறைவன், எனக்கு மீட்பளிக்கும் அரண் என்று என்னை நோக்கிக்கூறுவார். பல்லவி

அல்லேலூயா திருவெளிப். 1:5ab

அல்லேலூயா. யேசு கிறிஸ்துவே, நீரே நம்பிக்கைக் குரிய சாட்சி, இறந்தோரிலிருந்து எழுந்தவருள் தலைப்பேறானவர்; எங்களுக்கு அன்பு செய்து, உமது இரத்தத்தினால் எங்கள் பாவங்களினின்று எங்களை விடுவித்தார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13:16-20

சீடர்களின் பாதங்களைக் கழுவியபின், யேசு அவர்களுக்குக் கூறியதாவது:
உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஊழியன் தலைவனுக்கு மேற்பட்டவன் அல்லன். அப்போஸ்தலனும் தன்னை அனுப்பியவருக்கு மேற்பட்டவன் அல்லன். இதையெல்லாம் அறிந்து அதன்படி நடப்பீர்களாகில் நீங்கள் பேறுபெற்றவர்கள்.

நான் சொல்வது உங்கள் எல்லோரையும்பற்றி அன்று, நான் தேர்ந்துகொண்டவர்கள் இன்னாரென்று எனக்குத் தெரியும். ஆனால், 'என்னோடு உண்பவனே என்மேல் பாய்ந்தான்' என்ற மறைநூல் வாக்கு நிறைவேறவேண்டும். அப்படி நிகழும்போது நானே இருக்கிறேன் என்று நீங்கள் விசுவசிக்கும் பொருட்டு, நிகழ்வதற்கு முன்னதாக இப்பொழுதே உங்களுக்குக் கூறுகிறேன்.

உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்பவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்; என்னை ஏற்றுக்கொள்பவனோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறான்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## வெள்ளி

### முதல் வாசகம்

*யேசுவைக் கடவுள் உயிர்ப்பித்து, தமது வாக்குறுதியை நிறைவேற்றினார்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 13 : 26-33

அந்நாட்களில்: சின்னப்பர் பிசிதியா நாட்டு அந்தியோகியாவுக்கு வந்திருந்தபோது, அவர் செபக்கூடத்தில் உரைத்ததாவது:
“சகோதரரே, ஆபிரகாம் வழி வந்தவர்களே, மற்றும் கடவுளுக்கு அஞ்சுபவர்களே, நமக்கன்றோ இந்த மீட்பைப்பற்றிய செய்தி அனுப்பப்பட்டது. யெருசலேம் வாசிகளும், அவர்களுடைய தலைவர்களும் அம்மீட்பரை அறிந்துகொள்ளவில்லை. ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படும் இறைவாக்கினரின் வார்த்தைகளையும் புரிந்துகொள்ளவில்லை. ஆயினும் அவருக்குத் தீர்ப்பளித்தபோது அவ்வாக்கியங்களை நிறைவேற்றினர். சாவுக்குரிய குற்றம் எதுவும் காணாதிருந்தும் அவரைத் தொலைக்குமாறு பிலாத்துவைக் கேட்டனர். அவரைக் குறித்து எழுதப்பட்டவை அனைத்தும் நிறைவேறிய பின்னர் அவரைக் கழுமரத்திலிருந்து இறக்கி, கல்லறையில் வைத்தனர்.

கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து எழுப்பினார். அவரும் கலிலேயாவிலிருந்து தம்முடன் யெருசலேம் வந்திருந்தவர்களுக்குப் பல நாட்கள் தோன்றினார். அவர்கள் இப்போது மக்கள்முன் அவருக்குச் சாட்சியாக நிற்கின்றனர்.

நாங்களும் உங்களுக்கு அறிவிக்கும் நற்செய்தியாவது: யேசுவைக் கடவுள் உயிர்ப்பித்து, நம் முன்னோருக்கு அளித்த வாக்குறுதியை அவர்களுடைய மக்களாகிய நமக்கென நிறைவேற்றினார். அதைப்பற்றியே இரண்டாம் சங்கீதத்தில், 'நீர் எம் புதல்வர், இன்று உம்மை யாம் ஈன்றெடுத்தோம்' என்று எழுதியுள்ளது."

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 2:6–7. 8-9. 10-11 (பல்லவி: 7)

பல்லவி: நீர் எம் மகன்: இன்று உம்மை ஈன்றெடுத்தோம்.

அல்லது அல்லேலூயா

6 "சீயோனிலே, என் திருமலை மீதினிலே நான் அவரை என் அரசராக நிறுவினேன்!" என்கிறார்.

7 ஆண்டவர் விடுத்த கட்டளையை நான் பறைசாற்றுவேன்: அவர் என்னிடம் கூறியது: நீர் எம் மகன், இன்று உம்மை ஈன்றெடுத்தோம். பல்லவி

8 எம்மிடம் கேளும், யாம் உமக்கு மக்களினங்களை உரிமையாக்குவோம்: உலகின் கடை எல்லைவரை உமக்குச் சொந்தமாக்குவோம்.

9 இருப்புக்கோல் கொண்டு அவர்களை நொறுக்குவீர்: குயவனின் கலங்களென அவர்களைத் தவிடு பொடியாக்குவீர்." பல்லவி

10 ஆகவே அரசர்களே, இப்போது உணர்ந்து கொள்ளுங்கள்: மாநிலத்தை ஆள்பவர்களே, அறிந்து கொள்ளுங்கள்.

11 ஆண்டவருக்கு அச்சத்தோடு ஊழியம் செய்யுங்கள்: நடுக்கத்துடன் அவர் முன் அகமகிழுங்கள். பல்லவி

அல்லேலூயா

அரு. 14:6

அல்லேலூயா. நானே வழியும் உண்மையும் உயிரும்; என் வழியாயன்றி எவனும் தந்தையிடம் வருவதில்லை, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நானே வழியும் உண்மையும் உயிரும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 14 : 1-6

அக்காலத்தில் : யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"உள்ளம் கலங்கவேண்டாம். கடவுள்மீது விசுவாசம் வையுங்கள். என்மீதும் விசுவாசம் வையுங்கள். என் தந்தையின் இல்லத்திலே உறைவிடங்கள் பல உள்ளன; இல்லாதிருந்தால் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஏனெனில், உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகிறேன். நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது, நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். நான் போகும் இடத்திற்கு வழி உங்களுக்குத் தெரியும்."

அப்போது தோமையார், "ஆண்டவரே, நீர் செல்லுமிடமே எங்களுக்குத் தெரியாதிருக்க, அங்கே போகும் வழி எப்படித் தெரியும்?" என்றார். யேசுவோ, "நானே வழியும் உண்மையும் உயிரும். என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

**இதோ, புறவினத்தார்பால் செல்கிறோம்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 13:44-52

அடுத்த ஓய்வுநாளில் கடவுளின் வார்த்தையைக் கேட்க ஏறத்தாழ நகரத்தார் அனைவரும் வந்து கூடினர். இக் கூட்டத்தைக் கண்டு, யூதர்கள் பொறாமை நிறைந்தவர்களாய்ச் சின்னப்பரைத் தூற்றி, அவர், சொன்னதை மறுத்துப் பேசினர். சின்னப்பரும் பர்னபாவும் துணிவோடு,

"முதலில் உங்களுக்குத்தான் கடவுளின் வார்த்தையைப் போதிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நீங்கள் அதைப் புறக்கணித்து, முடிவில்லா

வாழ்விற்குத் தகுதியற்றவர்கள் என நீங்களே உங்களுக்குத் தீர்ப்பிட்டுக் கொண்டீர்கள். ஆதலால், இதோ, நாங்கள் உங்களைவிட்டு, புறவினத்தார்பால் செல்கிறோம். ஏனெனில், 'உலகின் இறுதி எல்லைவரைக்கும் மீட்பைக் கொண்டுசெல்ல புறவினத்தார்க்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தினேன்' என்று ஆண்டவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்" என்றனர்.

புறவினத்தார் இதைக் கேட்டு மகிழ்ந்து ஆண்டவரின் வார்த்தையை மகிமைப்படுத்தினர். முடிவில்லா வாழ்வுக்கு குறிக்கப்பட்டவர்கள் அனைவரும் விசுவாசிகள் ஆயினர். ஆண்டவரின் வார்த்தை அந்நாடெங்கும் பரவிவந்தது. யூதர்களோ யூதமறையைத் தழுவிய பெருங்குடிப் பெண்டிரையும் நகரப் பெரியோர்களையும் தூண்டினர். சின்னப்பருக்கும் பர்னபாவுக்கும் எதிராகக் கலகம் உண்டாக்கி, அவர்களைத் தங்களது நாட்டிலிருந்து வெளியேற்றினர். இவர்கள் தம் காலிலிருந்து தூசியை அவர்களுக்கு எதிராகத் தட்டிவிட்டு இக்கோனியாவுக்குப் போயினர். சீடர்களோ மகிழ்ச்சியாலும் பரிசுத்த ஆவியாலும் நிரம்பியவராய் வாழ்ந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 1,2-3ab, 3cd-4, (பல்லவி 3c)

பல்லவி: மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: வியத்தகு செயல்
களை அவர் செய்துள்ளார்; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு
வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார்; மக்கள் இனத்தார் காணத்
தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த் தாம்
தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவுகூர்ந்தார். பல்லவி

4 மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக்
கண்டன. வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரி
யுங்கள், அகமகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

அல்லேலூயா 8:31b-32

அல்லேலூயா. நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருப்பீர்களாகில் உண்மையாகவே என் சீடராயிருப்பீர்கள்; உண்மையையும் அறிவீர்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என்னைக் காண்கிறவன் தந்தையையும் காண்கிறான்:**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 14:7-14

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கி:

"நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தவர்களாயிருக்கிறீர்கள். அவரைக் கண்டவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்றார்.

இதைச் கேட்ட பிலிப்பு, "ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும்; அதுவே போதும்" என்றார். யேசு அவரை நோக்கி, "பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும், என்னை அறிந்துகொள்ளவில்லையா? என்னைக் கண்டவன் தந்தையையே கண்டான். பின் 'தந்தையை எங்களுக்குக் காட்டும்' என்று கேட்பதெப்படி? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருக்கிறதாக நீ விசுவசிக்கவில்லையா? நான் உங்களுக்குக் கூறும் சொற்களை நானாகவே கூறுவதில்லை. என்னுள் இருந்துகொண்டு செயலாற்றுவது என் தந்தையே. நான் தந்தையினுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள். சொல்வதை நம்பாவிடில், செயல்களின் பொருட்டேனும் விசுவசியுங்கள்.

உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் செய்யும் செயல்களை என்னில் விசுவாசங்கொள்பவனும் செய்வான். ஏன், அவற்றினும் பெரியன செய்வான். ஏனெனில், நான் தந்தையிடம் செல்லுகிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பதெல்லாம் செய்வேன். இதனால் தந்தை மகனில் மகிமை பெறுவார். என் பெயரால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

•

# பாஸ்கா காலத்தில் 5-ஆம் வாரம்

## பாஸ்கா 5ஆம் ஞாயிறு-முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**தேவ ஆவி நிரம்பப் பெற்ற எழுவரைத் தேர்ந்தெடுத்தார்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *6:1-7*

(பக்கம் 764)

### பதிலுரைப் பாடல்

*சங். 32:1-2. 4-5. 18-19 (பல்லவி: 22)*

பல்லவி : ஆண்டவரே, உம் இரக்கம் எம்மீது இருப்பதாக:
நாங்கள் உம்மை நம்பியிருக்குமளவுக்கு உம் இரக்கமும்
இருப்பதாக. அல்லேலூயா

1 நீதிமான்களே, ஆண்டவரில் அகமகிழுங்கள்: நேர்மனத்தோர் அவரைப் புகழ்வது தகுமே.

2 யாழினால் ஆண்டவரைப் புகழுங்கள்: பத்து நரம்பு வீணையால் அவரது புகழ் பாடுங்கள். பல்லவி

4 ஏனெனில், ஆண்டவருடைய வார்த்தை நேர்மையானது: அவருடைய செயல்கள் எல்லாம் உண்மையானவை.

5 நீதியும் நேர்மையும் அவர் விரும்புகிறார்: அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது. பல்லவி

18 இதோ தமக்கு அஞ்சுபவர்களை ஆண்டவர் பார்க்கிறார்: தமது அருளை நம்புவோரை அவர் கண் நோக்குகிறார்.

19 அவர்களைச் சாவினின்று விடுவிக்கவும், பஞ்ச காலத்தில் அவருக்கு உணவு கொடுக்கவுமே அவர் பார்க்கிறார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

*நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரசகுருத்துவத் திருக்கூட்டம்.*

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 2 : 4 - 9

அன்புக்குரியவர்களே :

ஆண்டவரையணுகி வாருங்கள். மனிதரால் விலக்கப்பட்டு கடவுள் முன்னிலையில் விலைமதிப்பற்றதாய்த் தேர்ந்து கொள்ளப்பட்ட உயிருள்ள கல் அவரே. நீங்களும் உயிருள்ள கற்களென, ஞான இல்லமாக அமைக்கப்படுவீர்களாக. அதில் யேசு கிறிஸ்துவின் வழியாக இறைவனுக்குகந்த ஞானப்பலி நிறைவேற்றும் குருத்துவத் திருக்கூட்டமாக அமைவீர்கள். ஏனெனில், "இதோ, நான் கல்லொன்றைத் தேர்ந்தெடுத்து, விலைமதிப்பற்ற மூலைக்கல்லாக அதைச் சீயோனில் நாட்டுகிறேன், அதன்மேல் விசுவாசம் வைப்பவன் ஏமாற்றம் அடையான்" என்று மறைநூலில் காணக்கிடக்கிறது.

விசுவாசமுள்ள உங்களுக்குத்தான் அக்கல் மதிப்புள்ளது. விசுவாசமில்லாதவர்களுக்கோ, "கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக்கல்லாய் அமைந்தது. தடுக்கி விழச்செய்யும் கல் அது. இடறலான பாறை அது" என்னும் வாக்குகள் பொருந்தும். தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாததால் தான் அவர்கள் தடுக்கி விழுகின்றனர் ; இதற்கென்றே அவர்கள் குறிக்கப்பட்டிருந்தனர்.

நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அரசகுருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான மக்கள் ; உங்களை இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா*

அரு. 14:6

அல்லேலூயா. நானே வழியும் உண்மையும் உயிரும்; என் வழியாயன்றி, எவனும் தந்தையிடம் வருவதில்லை, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நானே வழியும் உண்மையும் உயிரும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 14:1-12

அக்காலத்தில்: யேசு தம் சீடர்களை நோக்கி,

"உள்ளம் கலங்கவேண்டாம். கடவுள்மீது விசுவாசம் வையுங்கள். என்மீதும் விசுவாசம் வையுங்கள். என் தந்தையின் இல்லத்திலே உறைவிடங்கள் பல உள்ளன; இல்லாதிருந்தால் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஏனெனில், உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது, நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். நான் போகும் இடத்திற்கு வழி உங்களுக்குத் தெரியும்" என்றார்.

அப்போது தோமையார், "ஆண்டவரே, நீர் செல்லுமிடமே எங்களுக்குத் தெரியாதிருக்க, அங்கே போகும் வழி எப்படித் தெரியும்?" என்றார்; யேசுவோ, "நானே வழியும் உண்மையும் உயிரும். என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தவர்களாயிருக்கிறீர்கள். அவரைக் கண்டவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்றார்.

இதைக் கேட்ட பிலிப்பு, "ஆண்டவரே, தந்தையை எங்களுக்குக் காட்டும்; அதுவே போதும்" என்றார். யேசு அவரை நோக்கி, "பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும், என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் கண்டவன் தந்தையையே கண்டான். பின் 'தந்தையை எங்களுக்குக் காட்டும்' என்று கேட்பதெப்படி? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருக்கிறதாக நீ விசுவசிக்கவில்லையா? நான் உங்களுக்குக் கூறும் சொற்களை நானாகவே கூறுவதில்லை. என்னுள் இருந்துகொண்டு செயலாற்றுவது என் தந்தையே. நான் தந்தையினுள் இருக்கிறேன், தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள். சொல்வதை நம்பாவிடில் செயல்களின் பொருட்டேனும் விசுவசியுங்கள்.

உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் செய்யும் செயல்களை என்னில் விசுவாசங்கொள்பவனும் செய்வான். ஏன், அவற்றினும் பெரியன செய்வான். ஏனெனில், நான் தந்தையிடம் செல்லுகிறேன்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா 5ஆம் ஞாயிறு - 2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***ஆண்டவர் அவருக்கு வழியில் தோன்றியதை பர்னபா எடுத்துக் கூறினார்.***

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 9 : 26 - 31

அந்நாட்களில்:

சவுல் யெருசலேமுக்குச் சென்றபின் சீடர்களுடன் சேர்ந்துகொள்ள முயன்றார். ஆனால் அவரும் ஒரு சீடர் என்பதை நம்பாமல் அனைவரும் அவரைக் கண்டு அஞ்சினர்.

அப்பொழுது பர்னபா அவரை அப்போஸ்தலர்களிடம் அழைத்துக் கொண்டுபோய், ஆண்டவர் அவருக்கு வழியில்தோன்றி அவரோடு பேசினதையும், தமஸ்குவில் யேசுவின் பெயரால் துணிவுடன் போதித்ததையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினார். அதுமுதல் சவுல் யெருசலேமில் அவர்களுடன் நெருங்கிப் பழகி, ஆண்டவர் பெயரால் துணிவோடு பேசலானார். கிரேக்க மொழி பேசுவோரிடம் போய் விவாதித்து வந்தார். அவர்களோ அவரைத் தொலைக்கப் பார்த்தனர். அதை அறிந்த சகோதரர்கள் அவரைச் செசரியாவுக்கு அழைத்துக்கொண்டு போய், தர்சு நகருக்கு அனுப்பிவைத்தனர்.

இதற்கிடையில் யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெல்லாம் திருச்சபை அமைதியுற்று, ஆண்டவருக்கு அஞ்சிநடந்து, பரிசுத்த ஆவியின் ஆறுதல் நிரம்பப் பெற்று வளர்ச்சியடைந்து வந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 21:25b-26. 27,29. 30-31 (பல்லவி : 25a)

பல்லவி : ஆண்டவரே, பேரவையில் உம்மை நான் புகழும் வரம் உம்மிடமிருந்தே எனக்குண்டு.

அல்லது அல்லேலூயா.

அவருக்கு அஞ்சுவோர் முன்னிலையில் என் பொருத்தனைகளைச் செலுத்து
25 வேன்.
எளியோர் உண்பர், நிறைவு பெறுவர், ஆண்டவரைத் தேடுவோர்
26 அவரைப் புகழ்வர்: "உங்களுடைய நெஞ்சங்கள் என்றென்றும் வாழ்க!"
என்பர்.

பல்லவி

பூவுலகின் கடையெல்லைகளில் உள்ளவர்கள் அனைவருமே இதை நினைத்து
27 ஆண்டவரிடம் திரும்புவார்கள்: உலகின் மக்களினங்களெல்லாம் அவர்
திருமுன் விழுந்து வணங்குவார்கள்.
தரையினுள் துஞ்சுவோர் யாவரும் அவரை மட்டுமே ஆராதிப்பர்:
29 கல்லறைக்குச் செல்லுகிற யாவரும் அவர்முன் தலை வணங்குவர்.

பல்லவி

நான் அவருக்காகவே வாழ்வேன்: என் சந்ததியார் அவருக்கே ஊழியம்
30 செய்வர்.
வரப்போகிற தலைமுறையினருக்கு ஆண்டவரைக் குறித்துத் தெரிவிப்
31 பார்கள்: பிறக்கப் போகும் மாந்தர்க்கு அவருடைய நீதியைக்குறித்து,
"இதெல்லாம் ஆண்டவருடைய செயல்" என்று அறிவிப்பார்கள்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

***விசுவாசம் வைத்து, அன்பு செய்ய வேண்டும்;***
***இதுவே அவரது கட்டளை.***

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம்

3 : 18-24

அன்புக் குழந்தைகளே, நம் அன்பு சொல்லிலும் பேச்சிலும் இராமல், செயலில் விளங்கும் உண்மையான அன்பாய் இருக்கட்டும். இதனால் நாம் உண்மையைச் சார்ந்தவர்கள் என்றறிவதோடு, அவர்முன் நம் மனச்சான்றை அமைதிப்படுத்த முடியும். ஏனெனில், நம் மனச்சான்று நம்மைக் கண்டனம் செய்தால், நம் மனச்சான்றைவிடக் கடவுள் மேலானவர், அனைத்தையும் அறிபவர் என்பதை நினைவில்கொள்வோம்.

அன்புக்குரியவர்களே, நம்மனச்சான்று நம்மைக்கண்டனம் செய்யாதிருந்தால், கடவுள்முன் நாம் நம்பிக்கையோடு நிற்க முடியும். அப்போது தான் நாம் கேட்பதையெல்லாம் அவரிடமிருந்து பெறுவோம். ஏனெனில், அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவருக்குகந்ததைச் செய்கிறோம்.

நாம் அவருடைய மகன் யேசு கிறிஸ்துவின் பெயர்மீது விசுவாசம் வைத்து, அவர் தந்த கட்டளைப்படி ஒருவர்க்கு ஒருவர் அன்பு செய்ய வேண்டும்; இதுவே அவரது கட்டளை. அவருடைய கட்டளைகளைக் கடைப் பிடிப்பவன் அவருள் நிலைத்திருக்கிறான்; அவரும் அவனுள் நிலைத்திருக் கிறார்; அவர் நம்முள் நிலைத்திருக்கிறார் என்பதை அவர் நமக்கு அருளிய ஆவியினால் அறிகிறோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 15:4-5b

அல்லேலூயா. நான் உங்களில் நிலைத்திருப்பதுபோல், நீங்களும் என்னில் நிலைத்திருங்கள்; என்னுள் நிலைத்திருப்பவன் மிகுந்த கனிதருவான், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஒருவன் என்னுள்ளும், நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனி தருவான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 15:1-8

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"நானே உண்மையான திராட்சைக் கொடி; என் தந்தையே பயிரிடுபவர். என் கிளைகளில் கனி கொடாத எக்கிளையையும் அவர் தறித்துவிடுவார். கனி தரும் கிளையையோ மிகுந்த கனிதரும்படி கழித்து விடுவார். நான் உங்களுக்குக் கூறிய வார்த்தையால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாக இருக்கிறீர்கள். நான் உங்களில் நிலைத்திருப்பதுபோல் நீங்களும் என்னில் நிலைத்திருங்கள். கிளையானது திராட்சைக் கொடியில் நிலைத்திருந்தாலன்றித் தானாகக் கனி தரமுடியாது. அவ்வாறே, நீங்களும் என்னில் நிலைத்திருந்தாலன்றிக் கனி தர முடியாது. நான் திராட்சைக் கொடி; நீங்கள் அதன் கிளைகள். ஒருவன் என்னுள்ளும் நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனி தருவான். ஏனெனில், என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஒருவன் என்னுள் நிலைத்திராவிடில், கிளையைப்போல் வெட்டி எறியப்பட்டு உலர்ந்து போவான். அக்கிளைகளை ஒன்று சேர்த்து நெருப்பில் போட்டுச் சுட்டெரிப்பார்கள். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் விரும்பியதெல்லாம் கேளுங்கள். உங்களுக்கு அருளப்படும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராக விளங்குவதே என் தந்தைக்கு மகிமை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா 5ஆம் ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

***சபையைக் கூட்டிக் கடவுள் தங்களுக்காக அரிய பெரிய செயல்கள் புரிந்ததை எடுத்துரைத்தார்கள்.***

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 14:21b, 27

அந்நாட்களில்:

சின்னப்பரும் பர்னபாவும் லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா ஆகிய ஊர்களுக்குத் திரும்பினர். சீடர்களின் மனத்தை உறுதிப்படுத்தி விசுவாசத்தில் நிலைத்துநிற்க வேண்டுமென்றும், 'பல துன்பங்களின் வழியாகவே நாம் கடவுளின் அரசிற்குள் நுழைய வேண்டுமென்றும், அறிவுறுத்தினர். ஒவ்வொரு சபைக்கும் மூப்பர்களை ஏற்படுத்தினர். நோன்பிருந்து செபம் செய்த பின்னர், அவர்கள் விசுவசித்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

பிசீதியாவைக் கடந்து பம்பிலியாவிற்கு வந்தனர். பெர்கேயில் தேவ வார்த்தையைப் போதித்து அத்தாலியாவிற்குச் சென்றனர். அவர்கள் இப்போது செய்துமுடித்த பணிக்காக, கடவுளின் அருளுக்கு ஒப்படைக்கப் பட்டுச் சென்றது அந்தியோகியாவிலிருந்துதான்.

அங்கே வந்து சேர்ந்ததும், சபையைக் கூட்டிக் கடவுள் தங்களுக்காக அரிய பெரிய செயல்களைப் புரிந்ததையும், புறவினத்தாருக்கு விசுவாச வாயிலைத் திறந்துவிட்டதையும் எடுத்துரைத்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 114:8-9. 10-11. 12-13ab. (பல்லவி: 1 காண்)*

பல்லவி: **என் இறைவா, என் அரசே, என்றென்றும் உம் திருப்பெயரை வாழ்த்துவேன்.**

அல்லது: அல்லேலூயா.

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர்: சினங்கொள்ளத் தாமதிப்பவர்,
9 அருள் உள்ளம் படைத்தவர்.
ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர்: தம் படைப்புகள் அனைத்
10 தின்மீதும் இரக்கம் காட்டுபவர். பல்லவி

ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக: உம்
11 முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக: உமது
12 ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

இவ்வாறு மனுமக்கள் உம் வல்லமையை அறிந்துகொள்வர். உமது
13 மாண்புமிக்க அரசின் வல்லமையைத் தெரிந்து கொள்வர்.
உமது அரசு ஊழிஊழியாக உள்ள அரசு; உம்முடைய ஆட்சி தலைமுறை
தலைமுறையாக நிலைத்துள்ளது. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**கடவுள் அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் துடைத்து விடுவார்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 21 : 1 - 5.

அருளப்பன் நான் புதிய வானகமும் புதிய வையகமும் கண்டேன். முதலிலிருந்த வானகமும் வையகமும் மறைந்துபோயின. கடலும் இல்லாமல் போயிற்று.

அப்போது புதிய யெருசலேம் ஆகிய பரிசுத்த நகரம் கடவுளிடமிருந்து விண்ணினின்று இறங்கி வரக்கண்டேன். மணமகனுக்கென அலங்கரிக்கப்பட்ட மணமகளைப்போல் அது மலர்ந்தது. பின் அரியணையிலிருந்து ஒரு பெருங் குரலைக் கேட்டேன். அக் குரல், "இதோ, கடவுளின் இல்லம் மனிதரிடையே உள்ளது; அவர்களோடு அவர் குடிகொள்வார். அவர்கள் அவருக்கு மக்களாயிருப்பர்; கடவுள் தாமே அவர்களோடு இருப்பார். அவர்களுடைய கண்ணீரனைத்தையும் துடைத்துவிடுவார்; இனிச் சாவில்லை, புலம்பலில்லை, அழுகையில்லை, நோவில்லை. முன்னிருந்தவை மறைந்துபோயின" என்றது.

அரியணைமீது வீற்றிருந்தவர், "இதோ நான் அனைத்தையும் புதியனவாக்குகிறேன்" என்றார். மேலும், "இவ்வார்த்தைகள் நம்பத்தக்கவை, உண்மையானவை என்று எழுது" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 13:34

அல்லேலூயா. நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன். நான் உங்களுக்கு அன்பு செய்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன். நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 13:31-33a, 34-35.

யூதாஸ் இராவுணவுச் சாலையை விட்டு வெளியே போனபின் யேசு சொன்னதாவது:

"இப்பொழுது மனுமகன் மகிமை பெற்றார். கடவுளும் அவரால் மகிமை பெற்றார். கடவுள் அவரால் மகிமை பெற்றாரானால், கடவுளும் தம்மில் அவரை மகிமைப்படுத்துவார். அதையும் உடனே செய்வார்.

அன்புக் குழந்தைகளே, இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன்: நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள். நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள். நீங்களும் ஒருவர்மீதொருவர் அன்புகொண்டிருந்தால்தான் நீங்கள் என் சீடர் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

**பயனற்ற சிலைகளை விட்டுவிட்டு உயிருள்ள கடவுள் பக்கம் திரும்ப வேண்டும் என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 14:5-18

அந்நாட்களில் :

புறவினத்தாரும் யூதரும் தம் தலைவர்களுடன் சேர்ந்து சின்னப்பரையும் இழிவுபடுத்தி, கல்லாலெறியத் திட்டமிட்டனர். அப்போஸ்தலர்களோ அதை அறிந்து லிக்கவோனியா நாட்டு லீஸ்திரா, தெர்பை என்னும் ஊர்களுக்கும் சுற்றுப் புறங்களுக்கும் ஓடினர். அங்கெல்லாம் நற்செய்தி அறிவித்தனர்.

கால் வழங்காத ஒருவன் லீஸ்திராவில் இருந்தான். அவன் பிறவி முடவன், என்றுமே நடந்ததில்லை. சின்னப்பர் பேசுவதை அவன் கேட்டான். அவர் அவனை உற்று நோக்கி, குணம் பெறுவதற்கான விசுவாசம் அவனிடம் உள்ளதை உணர்ந்து, உரத்த குரலில் "எழுந்திரு, கால் ஊன்றி நேராக நில்" என்றார். அவன் துள்ளி எழுந்து நடக்கத் தொடங்கினான்.

மக்கட் கூட்டம் சின்னப்பர் செய்ததைக் கண்டு லிக்கவோனிய மொழியில், "தெய்வங்களே மனித உருவில் நம்மிடையே இறங்கி வந்துள்ளன" என்று கூச்சலிட்டனர். சின்னப்பர் முக்கிய பேச்சாளராயிருந்ததால், அவரை மெர்க்குரி என்றும், பர்னபாவை ஜுப்பிட்டர் என்றும் அழைத்தனர். அப்போது, நகருக்கு எதிரிலுள்ள ஜுப்பிட்டர் கோயில் அர்ச்சகன், எருதுகளையும் மாலைகளையும் வாயிலுக்குக் கொண்டுவந்து, மக்களுடன் சேர்ந்து பலியிட முற்பட்டான்.

ஆனால் இதைக் கேள்வியுற்ற அப்போஸ்தலர் பர்னபாவும் சின்னப்பரும் தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள் ஓடி உரத்த குரலில், "நண்பர்களே, என்ன செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல எளிய நிலைக்குட்பட்ட மனிதர்கள்தானே. இப்பயனற்ற சிலைகளை விட்டுவிட்டு உயிருள்ள கடவுள் பக்கம் திரும்பவேண்டுமென்று நற்செய்தியை அறிவிக்கிறோம். விண், மண், கடல் யாவற்றையும் அவற்றிலடங்கிய அனைத்தையும் ஆக்கியவர் அவரே. கடந்த காலங்களில் அவர் எல்லா இனத்தாரும் தங்கள் மனம் போன போக்கில் நடக்க விட்டுவிட்டார். ஆயினும், தம்மை அறிந்துகொள்ள எத்தகைய சான்றும் இல்லாதபடி விட்டுவிடவில்லை. எவ்வாறெனில், வானினின்று உங்களுக்கு மழையைப் பொழிந்து, செழிப்புமிக்க பருவங்களை அளித்து, உங்கள் உள்ளம் மகிழ்ச்சி பொங்க, நிறைய உணவு கொடுத்து உங்களுக்கு நன்மை புரிந்து வந்தார்" என்றனர்.

இவ்வாறு பேசியதால் தங்களுக்கு மக்கட் கூட்டம் பலியிடுவதை ஒருவாறு தடுக்க முடிந்தது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 113:9-10, 11-12, 23-24 (பல்லவி: 1)

பல்லவி : எங்களுக்கன்று, ஆண்டவரே, மகிமை எங்களுக்கன்று; அது உம் பெயருக்கே உரியது.

அல்லது அல்லேலூயா.

9 எங்களுக்கன்று ஆண்டவரே, மகிமை எங்களுக்கன்று; அது உம் பெய
ருக்கே உரியது: உம் இரக்கத்தையும் பிரமாணிக்கத்தையும் முன்னிட்டு
மகிமை உமக்கே உரியது.
10 "அவர்களுடைய கடவுள் எங்கே" எனப் புறவினத்தார் சொல்வது ஏன்?
பல்லவி

11 நம் இறைவனோ வானுலகில் உள்ளார். தாம் விரும்பிய யாவும் செய்
துள்ளார்.
12 புறவினத்தாருடைய சிலைகள் வெறும் வெள்ளியும் பொன்னுமே; வெறும்
மனிதக் கைவேலையே.
பல்லவி

23 ஆண்டவரின் ஆசி பெற்றவர்கள் நீங்கள்: வானமும் வையமும் படைத்
தவரே உங்களுக்கு ஆசி அளித்துள்ளார்.
24 விண்ணகமோ ஆண்டவருக்கு உரியது: மண்ணகத்தையோ அவர் மனு
மக்களுக்கு அளித்துள்ளார்.
பல்லவி

அல்லேலூயா அரு. 14:16

அல்லேலூயா. பரிசுத்த ஆவி உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்; நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் உங்களுக்கு நினைவூட்டுவார். அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

**தந்தை அனுப்பப்போகிற துணையாளர் உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 14:21, 26

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவனே எனக்கு அன்பு

காட்டுகிறவன். எனக்கு அன்பு காட்டுகிறவன்மேல் என் தந்தையும் அன்புகூர்வார். நானும் அவன்மேல் அன்புகூர்ந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்.''

யூதாஸ்—இஸ்காரியோத்து யூதாஸ் அல்லன், இன்னொரு யூதாஸ்—அவரை நோக்கி, ''ஆண்டவரே, நீர் உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாது எங்களுக்கு மட்டும் வெளிப்படுத்துவதாகச் சொல்லுகிறீரே, ஏன் அப்படி? என,

யேசு மறுமொழியாக, ''ஒருவன் எனக்கு அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான். என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார். நாங்களும் அவனிடம் வந்து, அவனோடு குடிகொள்வோம். எனக்கு அன்பு செய்யாதவன் என் வார்த்தைகளைக் கேட்பதில்லை. நீங்கள் கேட்கும் வார்த்தையோ என்னுடையதன்று: என்னை அனுப்பிய தந்தையுடையதே. இதெல்லாம் நான் உங்களோடிருக்கும்போதே உங்களுக்குச் சொன்னேன். தந்தை என் பெயரால் அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியான துணையாளரும் உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார். நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் நினைவூட்டுவார்,'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**சபையைக் கூட்டிக் கடவுள் தங்களுக்காக அரிய பெரிய செயல்கள் புரிந்ததை எடுத்துரைத்தார்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *14:19-28*

அந்நாட்களில்:

அந்தியோகியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் யூதர்கள் வந்து மக்களை ஏவி, சின்னப்பரைக் கல்லாலெறிந்தார்கள். அவர் இறந்துவிட்டதாக எண்ணி நகருக்கு வெளியே இழுத்துப்போட்டார்கள். சீடர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். பிறகு அவர் எழுந்து நகருக்குள் சென்றார். மறுநாள் பர்னபாவுடன் தெர்பைக்குப் புறப்பட்டார்.

அந்நகர மக்களுக்கு நற்செய்தியை அறிவித்து, பலரைச் சீடராக்கியபின் லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா ஆகிய ஊர்களுக்குத் திரும்பினர். சீடர்களின் மனத்தை உறுதிப்படுத்தி விசுவாசத்தில் நிலைத்து நிற்க வேண்டுமென்றும், 'பல துன்பங்களின் வழியாகவே நாம் கடவுளின் அரசிற்குள் நுழைய வேண்டுமென்றும்' அறிவுறுத்தினர். ஒவ்

வொரு சபைக்கும் மூப்பர்களை ஏற்படுத்தினர். நோன்பிருந்து செபம் செய்தபின்னர், அவர்கள் விசுவசித்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

பிசிதியாவைக் கடந்து பம்பிலியாவிற்கு வந்தனர். பெர்கேயில் தேவ வார்த்தையைப் போதித்து அத்தாலியாவிற்குச் சென்றனர். அவர்கள் இப்போது செய்துமுடித்த பணிக்காக, கடவுளின் அருளுக்கு ஒப்படைக்கப்பட்டுச் சென்றது அந்தியோகியாவிலிருந்து தான். அங்கே வந்து சேர்ந்ததும், சபையைக் கூட்டிக் கடவுள் தங்களுக்காக அரிய பெரிய செயல்களைப் புரிந்ததையும், புறவினத்தாருக்கு விசுவாச வாயிலைத் திறந்துவிட்டதையும் எடுத்துரைத்தனர். அங்கே சீடர்களுடன் பல நாள் தங்கியிருந்தனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 114 : 10-11. 12-13ab. 21 (பல்லவி: 12b காண்)

பல்லவி : ஆண்டவரே, உம்முடைய புனிதர்கள் உமது அரசின் மகிமையை எடுத்துரைப்பார்களாக.

அல்லது அல்லேலூயா.

10 ஆண்டவரே, உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக: உம்முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக: உமது ஆற்றலைப் பறை சாற்றுவார்களாக. பல்லவி

12 இவ்வாறு மனுமக்கள் உம் வல்லமையை அறிந்துகொள்வர்; உமது மாண்புமிக்க அரசின் வல்லமையைத் தெரிந்து கொள்வர்.
13 உமது அரசு ஊழிஊழியாக உள்ள அரசு; உம்முடைய ஆட்சி தலைமுறையாக நிலைத்துள்ளது. பல்லவி

21 ஆண்டவருடைய புகழ்ச்சியை என் நா எடுத்தியம்புவதாக: மனிதர் யாவரும் என்றென்றும் அவருடைய திருப்பெயரை வாழ்த்துவார்களாக. பல்லவி

## அல்லேலூயா

லூக். 24:26

அல்லேலூயா. மெசியா பாடுபட்டு, இறந்தோரிடமிருந்து, உயிர்த்தெழுந்து, மகிமை அடைய வேண்டும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14:27-31b

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன்; நான் உங்களுக்கு அளிக்கும் சமாதானமோ உலகம் தரும் சமாதானம் போல் அன்று. உள்ளம் கலங்க வேண்டாம், மருள வேண்டாம். 'நான் போகிறேன், போய் உங்களிடம் திரும்பி வருவேன்' என்று நான் சொன்னதைக் கேட்டீர்கள், உங்களுக்கு என்மேல் அன்பிருந்தால் நான் தந்தையிடம் போவதுபற்றி மகிழ்வீர்கள் ஏனெனில், தந்தை என்னிலும் மேலானவர்.

இவை நிகழும்போது, நீங்கள் விசுவசிக்கும் பொருட்டு இவை நிகழ்வதற்கு முன்னதாக, இப்பொழுதே உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களோடு பேச இனி அதிக நேரமில்லை. ஏனெனில், இவ்வுலகின் தலைவன் வருகிறான்; அவனுக்கோ என்மேல் அதிகாரமில்லை. ஆனால், நான் என் தந்தைக்கு அன்பு செய்கிறேன் என்பதையும், அவர் எனக்குக் கட்டளையிட்டபடி நடக்கிறேன் என்பதையும் உலகம் தெரிந்துகொள்ள வேண்டும்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

**இச் சிக்கலைத் தீர்க்க அவர்கள் யெருசலேமிலுள்ள அப்போஸ்தலர் மூப்பர்களிடம் செல்லத் தீர்மானித்தார்கள்**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம்

15:1-6

அந்நாட்களில்:

யூதேயாவிலிருந்து வந்த சிலர், "மோயீசனின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்துகொள்ளாவிட்டால் நீங்கள் மீட்படைய முடி-

யாது'' என்று சகோதரர்களுக்குப் போதிக்கத் தொடங்கினர். சின்னப்பரும் பர்னபாவும் அவர்களை எதிர்த்தெழவே, கடும் வாக்குவாதம் உண்டாயிற்று. ஆகையால் சின்னப்பரும் பர்னபாவும் வேறு சிலரும் இச் சிக்கலைத் தீர்க்க யெருசலேமிலுள்ள அப்போஸ்தலர், மூப்பர்களிடம் செல்லத் தீர்மானித்தனர்..

அதன்படி, சபையினரால் வழியனுப்பப்பட்டு, புறவினத்தார் மனந்திரும்பிய செய்தியை அறிவித்துக்கொண்டு, பெனிக்கியா, சமாரியா வழியாகப் பிரயாணம் செய்தனர். இச்செய்தி சகோதரர் எல்லாருக்கும் பெரிதும் மகிழ்ச்சியளித்தது. அவர்கள் யெருசலேமுக்கு வந்து சேர்ந்தபோது சபையாரும் அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் அவர்களை வரவேற்றனர். அப்போது. கடவுள் தங்களுக்காகச் செய்த அரிய பெரிய செயல்களை எடுத்துரைத்தனர்

ஆனால், விசுவாசிகளான பரிசேயக் கட்சியினர் சிலர் கிளம்பி, புறவினத்தார் விருத்தசேதனம் பெறவேண்டும், மோயீசனுடைய சட்டத்தைப் பின்பற்ற அவர்களுக்குக் கட்டளையிடவும் வேண்டும் என வாதாடினர். இதை ஆய்ந்து பார்க்க அப்போஸ்தலரும் மூப்பர்களும் கூடினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 121:1-2. 4b-5. (பல்லவி: 1 காண்)*

பல்லவி: அகமகிழ்ந்து ஆண்டவர் இல்லம் செல்வோம்.
அல்லது அல்லேலூயா.

1 ''ஆண்டவர் தம் இல்லம் செல்வோம்'' என்று எனக்குச் சொல்லினர்:
நான் பெருமகிழ்ச்சியுற்றேன்.
2 யெருசலேமே, இதோ உன் வாயிலில் வந்து நிற்கின்றோம். பல்லவி

4 கோத்திரங்கள், ஆண்டவருடைய கோத்திரங்கள் அங்குச் செல்கின்றன:
இஸ்ராயேலின் சட்டப்படி ஆண்டவருடைய திருப்பெயரைப் போற்றச்
செல்கின்றன.
5 நீதி இருக்கைகள் அங்கே அமைக்கப்பட்டுள்ளன: தாவீதின் இல்லத்து
அரியணைகள் அங்குள்ளன. பல்லவி

*அல்லேலூயா*

அரு. 15 : 4. 5b

அல்லேலூயா. நான் உங்களில் நிலைத்திருப்பதுபோல நீங்களும் என்னில் நிலைத்திருங்கள் ;
என்னில் நிலைத்திருப்பவன் மிகுந்த கனி தருவான் என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஒருவன் என்னுள்ளும் நான் அவனுள்ளும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனி தருவான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

15 : 1-8

(பக்கம் 820)

# வியாழன்

## முதல் வாசகம்

**கடவுள்பக்கம் மனந்திரும்புகிற புறவினத்தாருக்குத் தொல்லை கொடுத்தலாகாது; என் முடிவு இதுவே.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம்

15:7-21

*அந்நாட்களில் :*

நெடுநேரம் வாதாடிய பின் இராயப்பர் எழுந்து, அப்போஸ்தலர்களுக்கும் மூப்பர்களுக்கும் கூறியதாவது :

“சகோதரரே, புறவினத்தார் என் வாய்மொழியால் நற்செய்தியைக் கேட்டு, விசுவாசம் கொள்ளும்படி கடவுள் தொடக்கத்திலிருந்தே உங்களிடையில் என்னைத் தேர்ந்துகொண்டார். இது உங்களுக்குத் தெரிந்ததே. உள்ளங்களை அறியும் கடவுள் நமக்கு அளித்ததுபோல், அவர்களுக்கும் பரிசுத்த ஆவியை அளித்து, அவர்கள் சார்பில் சாட்சியம் தந்தார். விசுவாசத்தினால் அவர்களுடைய உள்ளங்களை அவர் தூய்மையாக்கியதில் நமக்கும் அவர்களுக்குமிடையே எந்த வேறுபாடும் காட்டவில்லை. எனவே, நம் முன்னோரோ, நாமோ சுமக்க முடியாத நுகத்தை இச்சீடர்கள் தோளின்மேல் ஏன் சுமத்துகிறீர்கள்? இப்படி ஏன் கடவுளைச்

சோதிக்கிறீர்கள்? புறவினத்தாரும் சரி, நாமும் சரி, மீட்புப்பெறுவது ஆண்டவராகிய யேசுவின் அருளால்தான். இதுவே நம் விசுவாசம்'' என்றார்.

இதைக் கேட்டு அனைவரும் அமைதியாகி, பர்னபா, சின்னப்பர் இவர்கள் வழியாக, கடவுள் புறவினத்தாரிடையே செய்த அருங்குறிகள், அற்புதங்களையெல்லாம் அவர்களே எடுத்துரைக்கக் கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் பேசி முடித்தபின் யாகப்பர் கூறியதாவது, ''சகோதரரே, நான் சொல்லுவதைக் கேளுங்கள். புறவினத்தாரிடையே தமக்கென மக்களைத் தேர்ந்துகொள்ளக் கடவுள் முதன் முறையாக அவர்களை நாடிவந்த செய்தியை அவர்களுக்குச் சிமெயோன் எடுத்துக்கூறினார். இதற்கொப்ப இறைவாக்கினர்கள் எழுதியுள்ளதாவது:

''அதன்பின் நான் திரும்பிவந்து விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டுவேன், அதில் பாழடைந்து போனதை மீண்டும் கட்டி எழுப்புவேன். அதைப் பார்த்து மற்ற மனிதர்களும், எனக்கு அர்ச்சிக்கப்பட்ட புறவினத்தார் எல்லாரும் ஆண்டவரைத் தேடுவர் என்று தொன்றுதொட்டு இவற்றை வெளிப்படுத்தும் ஆண்டவர் கூறுகிறார்.''

ஆதலால், கடவுள்பக்கம் மனந்திரும்புகிற புறவினத்தாருக்குத் தொல்லை கொடுத்தலாகாது. என் முடிவு இதுவே. அவர்கள் சிலைகளால் தீட்டுப்பட்டதைத் தொடாமல் கெட்ட நடத்தையை விலக்கி, மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி, மிருக இரத்தம் இவற்றை உண்ணாமல் இருக்குமாறு அவர்களுக்கு எழுதுங்கள். முன்னுள்தொட்டு மோயீசனின் சட்டத்தைப் போதிப்பவர்கள் எல்லா ஊர்களிலும் உள்ளனர். இச்சட்டம் ஓய்வுநாள்தோறும் செபக்கூடங்களில் வாசிக்கப்பட்டு வருகிறது.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 95 : 1-2a. 2b-3. 10 (பல்லவி: 3 காண்)

பல்லவி : மக்கள் அனைவரிடையிலும் ஆண்டவர்தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: மாநிலத்தோரே,
நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.
2 ஆண்டவரைப் பாடுங்கள், அவர் பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

அவர் தரும் மீட்பை நாடோறும் அறிவியுங்கள். புற இனத்தாரிடையே
அவரது மாட்சிமையை எடுத்துச் சொல்லுங்கள்: மக்கள் அனைவரிடை
யிலும் அவர்தம் வியத்தகு செயல்களைக் கூறுங்கள். பல்லவி

10 மாநிலத்தோரே, நீங்கள் புறவினத்தாரிடையே அறிவியுங்கள்: "ஆண்ட
வர் ஆட்சி செய்கின்றார்," பூவுலகை அவர் நிலை நிறுத்தியுள்ளார். அது
அசைவுறாது. மக்களை அவர் நேர்மையுடன் ஆள்கின்றார். பல்லவி

அல்லேலூயா

அரு. 10:27

அல்லேலூயா. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிகொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன், அவையும் என்னைப் பின்தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**என் அன்பில் நிலைத்திருங்கள்; உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெறும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 15:9-11

அக்காலத்தில்: யேசு தம் சீடரைநோக்கிக் கூறியதாவது:

"தந்தை என்மேல் அன்புகூர்ந்ததுபோல் நானும் உங்கள்மேல் அன்புகூர்ந்தேன். என் அன்பில் நிலைத்திருங்கள். நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவருடைய அன்பில் நிலைத்திருப்பது போல, நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள். என் மகிழ்ச்சி உங்களில் இருக்கும்படியும், உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறும்படியும் நான் உங்களுக்கு இதெல்லாம் கூறினேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

*பரிசுத்த ஆவியும் நாங்களும் கூறும் தீர்மானம் இதுவே; இன்றியமையாதவை தவிர, எச்சுமையும் உங்கள்மேல் சுமத்தப்படலாகாது.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் **15 : 22-31**

அந்நாட்களில் :

அவர்களுள் இருவரைத் தெரிந்தெடுத்து, சின்னப்பர், பர்னபா இவர்களோடு அந்தியோகியாவிற்கு அனுப்புவதென அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் திருச்சபையினர் அனைவரும் தீர்மானித்தனர். அவ்விருவர், சகோதரர்களுள் செல்வாக்குப் பெற்றிருந்த பர்சபா வென்னும் யூதாசும், சீலாவும் ஆவர். இவர்கள் வழியாகப் பின்வரும் கடிதம் எழுதி அனுப்பினர் :

"அந்தியோகியா, சீரியா, சிலிசியா ஆகிய இடங்களில் உள்ள புறவினச் சகோதரர்களுக்கு - உங்கள் சகோதரர்களான அப்போஸ்தலரும் மூப்பரும் வாழ்த்துக்கூறி எழுதுவது: எங்களுள் சிலர் அங்கு வந்து தங்கள் பேச்சினால் உங்களைக் கலக்கமுறச் செய்து மனத்தைக் குழப்பினர் என்று கேள்விப்பட்டோம். இவர்களுக்கு நாங்கள் எக்கட்டளையும் தந்ததில்லை. ஆகையால் நம் ஆண்டவர் யேசு கிறிஸ்துவின் பெயருக்காகத் தங்கள் உயிரையே கையளித்துள்ள, எங்கள் அன்புக்குரிய சின்னப்பர், பர்னபா ஆகியவர்களோடு நாங்கள் தெரிந்தெடுத்தோரை உங்களிடம் தூதுவராக அனுப்ப ஒருமனத்தோடு தீர்மானித்தோம். எனவே, யூதாசையும் சீலாவையும் உங்களிடம் அனுப்புகிறோம். நாங்கள் எழுதியுள்ளதை இவர்கள் உங்களுக்கு வாய்மொழியாகச் சொல்லுவார்கள்.

பரிசுத்த ஆவியும் நாங்களும் கூறும் தீர்மானம் இதுவே: இன்றியமையாதவை தவிர, எச்சுமையும் உங்கள்மேல் சுமத்தப்படலாகாது. சிலைகளுக்குப் படைத்தது, மிருக இரத்தம், மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி இவற்றை உண்ணாமலிருப்பதோடு, கெட்ட நடத்தையிலிருந்து விலகி நில்லுங்கள். இவற்றைத் தவிர்த்தலே முறை. வணக்கம்."

விடை பெற்றபின், தூதுவர் அந்தியோகியாவுக்குச் சென்றனர். அங்குச் சபையாரைக் கூட்டிக் கடிதத்தைக் கொடுத்தனர். அக்கடிதத்தை வாசித்தபின், அதனால் கிடைத்த ஊக்கத்தினால் மகிழ்ச்சி கொண்டனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 56:7-8. 9-11 (பல்லவி: 9a)

பல்லவி: ஆண்டவரே, உம்மை மக்களிடையே புகழ்வேன்.

அல்லது அல்லேலூயா.

7 உறுதிகொண்டுள்ளது என் உள்ளம்: இறைவா, உறுதி கொண்டுள்ளது
என் உள்ளம். இன்னிசை பாடுவேன்: புகழ் இசைப்பேன்:
8 என் நெஞ்சே விழித்தெழு; வீணையே, யாழே, விழித்தெழுங்கள்:
பொழுது விடியச் செய்வேன். பல்லவி

9 ஆண்டவரே உம்மை மக்களிடையே புகழ்வேன்: மக்களினத்தாரிடையே
உமக்குப் புகழ்பாடுவேன்.
10 ஏனெனில், உயர்ந்துள்ளது வானமட்டும் உமதிரக்கம்: மேகங்கள்
மட்டும் உயர்ந்துள்ளது உமது சொல்லுறுதி.
11 இறைவனே, நீர் வானங்களுக்கு மேலாக உன்னதராய் விளங்கியருளும்
உமது மாட்சிமை புவியனைத்தும் விளங்குவதாக. பல்லவி

அல்லேலூயா அரு. 15:15b

அல்லேலூயா. உங்களை நண்பர்கள் என்றேன்; ஏனெனில், தந்தையிடமிருந்து நான் கேட்டதையெல்லாம் உங்களுக்கு அறிவித்தேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் ஒருவர் ஒருவரிடம் அன்பு கூர வேண்டுமென்பதே எனது கட்டளை.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 15:12-17

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

நான் உங்களிடம் அன்புகூர்ந்ததுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரிடம் அன்புகூரவேண்டுமென்பதே எனது கட்டளை. தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை. நான் உங்களுக்குக் கட்டளையிட்டதெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்கள். உங்களை நான் இனி ஊழியர் என்று சொல்லேன்;

ஏனெனில், தலைவன் செய்வது இன்னது என்று ஊழியனுக்குத் தெரியாது. ஆனால் உங்களை நண்பர்கள் என்றேன். ஏனெனில், தந்தையிடமிருந்து நான் கேட்டதையெல்லாம் உங்களுக்கு அறிவித்தேன்.

நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் உலகிற் சென்று பலன் தரும்படியாகவும், அந்தப் பலன் நிலைத்திருக்கும்படியாகவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே, நீங்கள் தந்தையை என் பெயரால் கேட்பதெல்லாம் அவர் உங்களுக்கு அருள்வார். நீங்கள் ஒருவர் ஒருவரிடம் அன்புகூர வேண்டுமென்பதே எனது கட்டளை.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## முதல் வாசகம்

**மகெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 16:1-10

அந்நாட்களில்:

சின்னப்பர் தேர்பேவுக்குச் சென்று, அங்கிருந்து லீஸ்திராவுக்கு வந்து சேர்ந்தார். அங்கே தீமோத்தேயு என்ற சீடர் ஒருவர் இருந்தார். அவருடைய தாய் யூத இனத்தைச் சார்ந்த ஒரு கிறிஸ்துவப் பெண். தந்தையோ கிரேக்க இனத்தினன். இந்தத் தீமோத்தேயு, லீஸ்திரா, இக்கோனியா நகரங்களிலுள்ள சகோதரர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். சின்னப்பர் அவரைத் தம்முடன் அழைத்துச்செல்ல விரும்பினார். அவருடைய தந்தை கிரேக்க இனத்தினன் என அனைவரும் அறிந்திருந்ததால் அவ்விடங்களிலிருந்த யூதர்களின் பொருட்டு அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார்.

அவர்கள் ஊர்தோறும் செல்லுகையில், யெருசலேமிலிருந்த அப்போஸ்தலரும், மூப்பரும் தீர்மானித்த கட்டளைகளை அங்குள்ளோரிடம் ஒப்படைத்து அவற்றைக் கடைப்பிடிக்கக் கற்பித்தனர். ஆகவே சபைகள் விசுவாசத்தில் வேரூன்றி நாடோறும் தொகையிற் பெருகிவந்தன.

பிறகு, தேவ வார்த்தையை ஆசியாவில் போதிக்காதபடி பரிசுத்த ஆவி அவர்களைத் தடுக்கவே, அவர்கள் பிரிகியா, கலாத்தியா பகுதிகளைக் கடந்து சென்றனர். அவர்கள் மீசியாவின் எல்லைக்கு வந்தபொழுது பித்தினியாவுக்குச் செல்லப் பார்த்தனர். ஆனால், யேசுவின் ஆவி அவர்களைப் போகவிடவில்லை. எனவே, மீசியாவைக் கடந்து துரோவா நகரை அடைந்தனர்.

அங்கே சின்னப்பர் இரவில் ஒரு காட்சி கண்டார். அதில் மசெதோனியா நாட்டினன் ஒருவன் தோன்றி, "நீர் மசெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்" என்று தம்மை வேண்டுவதாகக் கண்டார். காட்சி முடிந்ததும் நற்செய்தியை அவர்களுக்கு அறிவிக்கக் கடவுள் எங்களை அழைத்துள்ளார் என்று முடிவு செய்து உடனே மசெதோனியா செல்ல வழி தேடினோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 99 : 1-2. 3.5 (பல்லவி : 1)

பல்லவி : மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் அக்களிப்போடு ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.

அல்லது அல்லேலூயா.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் அக்களிப்போடு ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள்: பெரு மகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

3 ஆண்டவரே கடவுள் என்று அறியுங்கள் : அவரே நம்மை உண்டாக்கினவர். அவருக்கே நாம் சொந்தம் : அவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம். பல்லவி

5 ஏனெனில் ஆண்டவர் நல்லவர், அவர் இரக்கம் என்றென்றுமுள்ளது : அவருடைய வார்த்தை தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். பல்லவி

## அல்லேலூயா

கொலோ. 3 : 1

அல்லேலூயா. கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின், மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்;
அங்கேதான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நீங்கள் உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல; ஏனெனில்
நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்தேன்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
15: 18-21

அக்காலத்தில்: யேசு தம் சீடரிடம் கூறியதாவது:

உலகம் உங்களை வெறுக்கிறதென்றால் உங்களை வெறுக்குமுன்னே அது என்னை வெறுத்தது என்று தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உலகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால் உலகம் தனக்குச் சொந்தமானதை நேசிக்கும். நீங்களோ உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. ஏனெனில், நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்தேன். ஆதலால்தான் உலகம் உங்களை வெறுக்கின்றது.

'ஊழியன் தலைவனுக்கு மேற்பட்டவன் அல்லன் என்று நான் உங்களுக்குக் கூறியதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள்; உங்களையும் துன்புறுத்துவார்கள்; என் வார்த்தையைக் கேட்டிருந்தால்தானே உங்கள் வார்த்தையையும் கேட்பார்கள். என்னை அனுப்பினவரை அறியாததால் என் பெயரைக் குறித்து இப்படியெல்லாம் உங்களை நடத்துவார்கள்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா காலத்தில் 6ஆம் வாரம்

குறிப்பு: (நமது நாட்டில் நடப்பது போல) ஆண்டவரின் விண்ணேற்றவிழா அடுத்துவரும் ஞாயிறன்று கொண்டாடப்பெறும் இடங்களில், பாஸ்கா காலத்தின் 6ஆம் ஞாயிறுக்குத் தரப்பட்டுள்ள 2ஆம் வாசகம், நற்செய்தி வாசகம் ஆகியவற்றிற்குப் பதிலாக, 7ஆம் ஞாயிறுக்குத் தரப்பட்டுள்ளவற்றைப் பயன் படுத்தலாம். (பக்கம் 868)

## பாஸ்கா 6ஆம் ஞாயிறு - முதல் ஆண்டு

### முதல் வாசகம்

***அவர்கள்மீது கைகளை விரிக்கவே, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள்.***

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 8 : 5-8. 14-17

அந்நாட்களில் :

பிலிப்பு சமாரியா நகருக்குச் சென்று அங்கு உள்ளவர்களுக்கு மெசியாவை அறிவித்தார். பிலிப்பு செய்த அருங்குறிகளை மக்கள் கண்டபோது அல்லது அவற்றைக் குறித்துக் கேள்வியுற்றபோது, ஒருமனதாய்த் திரண்டுவந்து, அவர் சொல்வதைக் கருத்தாய்க் கேட்டனர். பேய் பிடித்திருந்த பலரிடமிருந்து அசுத்த ஆவிகள் கூச்சலிட்டுக் கொண்டு வெளியேறின. திமிர்வாதக்காரர், முடவர் பலர் குணமடைந்தனர். இதனால் அந்நகரில் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று.

கடவுளின் வார்த்தையைச் சமாரியர் ஏற்றுக்கொண்டதை யெருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, இராயப்பரையும் அருளப்பரையும் அவர்களிடம் அனுப்பினர். அவர்கள் போய், சமாரியர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர்களுக்காக வேண்டினர். ஏனெனில், அதுவரையில் அவர்களில் ஒருவர்மீதும் பரிசுத்த ஆவி இறங்கவில்லை. ஆண்டவராகிய கிறிஸ்துவின் பெயரால் ஞானஸ்நானம்

மட்டுமே பெற்றிருந்தனர். ஆதலின், அப்போஸ்தலர்கள் அவர்கள் மீது கைகளை விரிக்கவே, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 65:1-3a. 4-5. 6-7a. 16-20 (பல்லவி: 1)

பல்லவி: மாநிலத்தோரே, நீங்களனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்.

அல்லது அல்லேலூயா.

1 மாநிலத்தோரே, நீங்களனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்;
2 அவருடைய பெயரின் மாட்சிமையைப் புகழ்ந்து பாடுங்கள்: அவரது புகழ் எங்கும் விளங்கச் செய்யுங்கள்.
3 இறைவனை நோக்கி, "உம் செயல்கள் எத்துணை மலைப்புக் குரியவை" என்று சொல்லுங்கள். பல்லவி

4 "மாநிலமனைத்தும் உம்மை வணங்கி உமக்குப் புகழ் பாடுவதாக: உமது பெயரின் புகழைப் பாடுவதாக" என்று சொல்லுங்கள்.
5 வாருங்கள், கடவுளுடைய செயல்களைப் பாருங்கள்: மனிதர்களிடையே அவர் செய்தவை மலைப்புக்குரியவையே. பல்லவி

6 கடலை அவர் கட்டாந்தரையாக்கினார்; ஆற்றை அவர்கள் நடந்து கடந்தனர்: ஆகவே அவரை நினைத்து மகிழ்வோம்.
7 தம் வல்லமையால் அவர் என்றென்றும் ஆட்சி செலுத்துகின்றார். பல்லவி

16 கடவுளுக்கு அஞ்சுவோரே வாருங்கள், வந்து கேளுங்கள்: எனக்கு எத்துணை நன்மை அவர் செய்துள்ளார் எனக் கூறுவேன்.
20 என் மன்றாட்டைப் புறக்கணியாத கடவுள் போற்றி! தம் இரக்கத்தை என்னிடமிருந்து எடுத்துவிடாத இறைவன் போற்றி! பல்லவி

## இரண்டாம் வாசகம்

ஊனுடலில் சாவுக்குள்ளானார், தேவ ஆவியில் உயிர் பெற்றார்.

அப்போஸ்தலரான புனித இராயப்பர் எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 3 : 15-18

அன்புக்குரியவர்களே :

ஆண்டவராகிய கிறிஸ்து, பரிசுத்தர் என உங்கள் உள்ளத்தில் போற்றுங்கள். நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு விளக்கங் கூறும் படி யாராவது கேட்டால் தக்க விடை பகர எப்போதும் தயாராய் இருங்கள். ஆனால், விளக்கங் கூறும்போது சாந்தத்தோடும் மரியாதையோடும் பேசுங்கள்; உங்கள் மனச்சாட்சியும் குற்றமற்றதாய் இருக்கட்டும். அப் போதுதான், நீங்கள் அவதூறுக்கு ஆளாகும்போது, உங்கள் கிறிஸ்தவ நன்னடத்தையைப் பழிப்பவர்கள் நாணமடைந்துபோவார்கள். ஏனெ னில், தீமை செய்து துன்புறுவதைவிட, கடவுளுக்குத் திருவுளமானால், நன்மை செய்து துன்புறுவதே மேல்.

கிறிஸ்துவைப் பாருங்கள்; நீதியுள்ள அவர், அநீதருக்காக இறந் தார்; நம்மைக் கடவுளிடம் சேர்க்க, பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார்; ஊன் உடலில் சாவுக்குள்ளானார்; ஆனால் தேவ ஆவியில் உயிர்பெற்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா
அல்லேலூயா.

அரு. 14:23.

ஒருவன் எனக்கு அன்பு செய்தால், என் வார்த்தையைக் கேட்பான்; என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார். நாங்களும் அவனிடம் வருவோம், என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*நான் தந்தையைக் கேட்பேன்; அவர் மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருவார்.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

14 : 15–21

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"உங்களுக்கு என்மீது அன்பிருந்தால், என் கட்டளைகளைக் கடைப் பிடிப்பீர்கள். நானும் தந்தையைக் கேட்பேன்; தந்தை மற்றொரு துணை யாளரை உங்களுக்குத் தருவார். அவர் உங்களோடு என்றும் இருப்பார். அவர் உண்மையின் ஆவியானவர். உலகம் அவரைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், உலகம் அவரைக் காண்பதுமில்லை அறிவதுமில்லை. நீங்களோ அவரை அறிவீர்கள். ஏனெனில், அவர் உங்களோடு தங்கி உங்களுள் இருக்கிறார்.

நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்; உங்களிடம் திரும்பி வருகிறேன். இன்னும் சிறிது காலத்தில் உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள். ஏனெனில் நான் வாழ்கிறேன். நீங்களும் வாழ்வீர்கள். நான் என் தந்தையினுள்ளும், நீங்கள் என்னுள்ளும் நான் உங்களுள்ளும் இருப்பதை நீங்கள் அந்நாளில் அறிந்துகொள்வீர்கள். என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவனே எனக்கு அன்பு காட்டுகிறவன். எனக்கு அன்பு காட்டுகிறவன்மேல் என் தந்தையும் அன்புகூர்வார். நானும் அவன்மேல் அன்புகூர்ந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்,'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா 6ஆம் ஞாயிறு—2ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*பரிசுத்த ஆவியாம் திருக்கொடை புறவினத்தார்மேலும் பொழியப்பட்டது.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம். 10:25-26. 34-35. 44-48.

இராயப்பர் உள்ளே வரவே, கொர்னேலியு அவரை எதிர்கொண்டு அவர் காலில் விழுந்து வணங்கினார். இராயப்பர், "எழுந்திரும், நானும் மனிதன்தான்'' என்று அவரை எழுப்பினார். அப்பொழுது இராயப்பர் பேசத் தொடங்கிச் சொன்னதாவது! "கடவுள் மனிதர்களிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை என்பதை இப்போது மெய்யாகவே உணர்கிறேன். எக்குலத்தவனாயினும், இறைவனுக்கு அஞ்சி அவருக்கு ஏற்புடையதைச் செய்பவனே அவருக்கு உகந்தவன்.

இவ்வாறு இராயப்பர் பேசிக்கொண்டிருக்கையில் அவருடைய வார்த்தைகளைக் கேட்ட அனைவர்மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார். பரிசுத்த ஆவியாம் திருக்கொடை புறவினத்தார்மேலும் பொழியப்படுவதைக் கண்டு, இராயப்பருடன் வந்திருந்த யூதகுல விசுவாசிகள் அனைவரும் திகைத்து நின்றனர். ஏனெனில், அவர்கள் பல மொழிகளில் பேசிக் கடவுளைப் போற்றுவதைக் கேட்டனர்.

அப்பொழுது இராயப்பர், நம்மைப்போல் இவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றபின் இவர்கள் நீரால் ஞானஸ்நானம் பெறுவதற்கு

யார் தடை செய்ய முடியும்?'' என்று, இயேசுகிறிஸ்துவின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கட்டளையிட்டார். பின்னர் சில நாள் தங்களோடு தங்கும்படி அவர்கள் அவரைக் கேட்டுக்கொண்டார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 97 : 1. 2-3ab. 3cd-4 (பல்லவி) : 2b காண்)

பல்லவி : **மக்கள் இனத்தார் காண ஆண்டவர் தம் மீட்பை அறிவித்தார்.**

அல்லது **அல்லேலூயா.**

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் : வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார்; அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினர் : மக்களினத்தார் காணத் தம் நீதியை அறிவித்தார்.

3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த் தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவுகூர்ந்தார். பல்லவி

4 மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன. வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள் : அக மகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**அன்பே கடவுள்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 7 - 10

அன்புக்குரியவர்களே, நாம் ஒருவர்க்கொருவர் அன்பு செய்வோமாக. ஏனெனில், அன்பு கடவுளிடமிருந்து வருகிறது, அன்பு செய்பவன் எவனும் கடவுளிடமிருந்து பிறந்துள்ளான்; அவனே கடவுளை அறிவான். அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை; ஏனெனில், அன்பே கடவுள். தம் ஒரேபேறுன மகனின் வழியாக நாம் வாழ்வு பெறும் பொருட்டு, கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினர். இதனால்

கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுத்தப்பட்டது. நாம் கடவுளுக்கு அன்பு செய்ததில் அன்று, அவரே நமக்கு அன்பு செய்து, நம் பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம் மகனை அனுப்பியதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அரு. 14:23

அல்லேலூயா. ஒருவன் எனக்கு அன்பு செய்தால், என் வார்த்தையைக் கேட்பான்; என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார், நாங்களும் அவனிடம் வருவோம், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 15:917

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

தந்தை என்மேல் அன்பு கூர்ந்ததுபோல் நானும் உங்கள்மேல் அன்புகூர்ந்தேன். என் அன்பில் நிலைத்திருங்கள். நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவருடைய அன்பில் நிலைத்திருப்பது போல, நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள். என் மகிழ்ச்சி உங்களில் இருக்கும்படியும், உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறும்படியும் நான் உங்களுக்கு இதெல்லாம் கூறினேன்.

நான் உங்களிடம் அன்புகூர்ந்ததுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரிடம் அன்புகூர வேண்டுமென்பதே எனது கட்டளை. தன் நண்பர்களுக்காக உயிரைக்கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை. நான் உங்களுக்குக் கட்டளை யிட்டதெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்கள். உங்களை நான் இனி ஊழியர் என்று சொல்லேன்; ஏனெனில் தலைவன் செய்வது இன்னது என்று ஊழியனுக்குத் தெரியாது. ஆனால் உங்களை நண்பர்கள் என்றேன். ஏனெனில், தந்தையிடமிருந்து நான் கேட்டதையெல்லாம் உங்களுக்கு அறிவித்தேன்.

நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் உலகிற் சென்று பலன் தரும்படியாகவும்,

அந்தப் பலன் நிலைத்திருக்கும்படியாகவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே, நீங்கள் தந்தையை என் பெயரால் கேட்பதெல்லாம் அவர் உங்களுக்கு அருள்வார்.

நீங்கள் ஒருவர் ஒருவரிடம் அன்புகூர வேண்டுமென்பதே எனது கட்டளை."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பாஸ்கா 6ஆம் ஞாயிறு - 3ஆம் ஆண்டு

### முதல் வாசகம்

**பரிசுத்த ஆவியும் நாங்களும் கூறும் தீர்மானம் இதுவே: இன்றியமையாதவை தவிர; எச்சுமையும் உங்கள்மேல் சுமத்தப்படலாகாது.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 15 : 1-2. 22-29

அந்நாட்களில்:

யூதேயாவிலிருந்து வந்த சிலர், "மோயீசனின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்துகொள்ளாவிட்டால் நீங்கள் மீட்படைய முடியாது" என்று சகோதரர்களுக்குப் போதிக்கத் தொடங்கினர். சின்னப்பரும் பர்னபாவும் அவர்களை எதிர்த்தெழவே, கடும் வாக்குவாதம் உண்டாயிற்று. ஆகையால் சின்னப்பரும் பர்னபாவும் வேறு சிலரும் இச்சிக்கலைத் தீர்க்க யெருசலேமிலுள்ள அப்போஸ்தலர், மூப்பர்களிடம் செல்லத் தீர்மானித்தனர்.

அப்பொழுது, அவர்களுள் இருவரைத் தெரிந்தெடுத்து, சின்னப்பர், பர்னபா இவர்களோடு அந்தியோகியாவிற்கு அனுப்புவதென அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் திருச்சபையினர் அனைவரும் தீர்மானித்தனர். அவ்விருவர், சகோதரர்களுள் செல்வாக்குப் பெற்றிருந்த பர்சபா என்னும் யூதாசும், சீலாவும் ஆவர். இவர்கள் வழியாகப் பின்வரும் கடிதம் எழுதி அனுப்பினர்:

" அந்தியோகியா, சீரியா, சிலிசியா ஆகிய இடங்களில் உள்ள புறவினச் சகோதரர்களுக்கு—உங்கள் சகோதரர்களான அப்போஸ்தலரும் மூப்பரும் வாழ்த்துக்கூறி எழுதுவது: எங்களுள் சிலர் அங்கு வந்து தங்கள் பேச்சினால் உங்களைக் கலக்கமுறச் செய்து மனத்தைக் குழப்பினர்

என்று கேள்விப்பட்டோம். இவர்களுக்கு நாங்கள் எக்கட்டளையும் தந்த தில்லை. ஆகையால் நம் ஆண்டவர் யேசு கிறிஸ்துவின் பெயருக்காகத் தங்கள் உயிரையே கையளித்துள்ள, எங்கள் அன்புக்குரிய சின்னப்பர், பர்னபா ஆகியவர்களோடு நாங்கள் தெரிந்தெடுத்தோரை உங்களிடம் தூதுவராக அனுப்ப ஒருமனத்தோடு தீர்மானித்தோம். எனவே, யூதாசையும் சீலாவையும் உங்களிடம் அனுப்புகிறோம். நாங்கள் எழுதியுள்ளதை இவர்கள் உங்களுக்கு வாய்மொழியாகச் சொல்லுவார்கள்.

பரிசுத்த ஆவியும் நாங்களும் கூறும் தீர்மானம் இதுவே: இன்றியமையாதவை தவிர, எச்சுமையும் உங்கள்மேல் சுமத்தப்படலாகாது. சிலைகளுக்குப் படைத்தது, மிருக இரத்தம், மூச்சடைத்துச் செத்ததின் இறைச்சி இவற்றை உண்ணாமலிருப்பதோடு, கெட்ட நடத்தையிலிருந்து விலகி நில்லுங்கள். இவற்றைத் தவிர்த்தலே முறை. வணக்கம்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 66:1-2. 4. 5, 7 (பல்லவி: 3)

பல்லவி: இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக.
மக்கள் எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.

அல்லது அல்லேலூயா.

1 கடவுள் நம்மீது இரங்கி, நமக்கு ஆசி அளிப்பாராக. நம்மீது தம் திருமுக ஒளியை வீசுவாராக.

2 அப்போது உலகம் உமது வழியை அறிந்துகொள்ளும்; மக்களினங்கள் எல்லாம் உமது மீட்பை உணரும். பல்லவி

4 நீதியோடு மக்களை ஆள்கின்றீர், உலகத்து மக்களினங்கள்மீது ஆட்சி செலுத்துகின்றீர் என்று நாடுகள் அனைத்தும் மகிழ்ந்து கூறட்டும். பல்லவி

5 இறைவா, மக்களினங்கள் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக: மக்கள் எல்லாரும் உம்மைக் கொண்டாடுவார்களாக.

7 கடவுள் நமக்கு ஆசி அளிப்பாராக: மாநிலத்தின் கடையெல்லைவரை மக்கள் அவருக்கு அஞ்சுவார்களாக. பல்லவி

## இரண்டாம் வாசகம்

**விண்ணினின்று புனித நகர் இறங்கிவருவதை எனக்குக் காட்டினார்.**

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய
திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம் 21: 10-14. 22:23

தேவ ஆவி என்னை ஆட்கொள்ளவே, வான தூதர் உயர்ந்ததொரு பெரியமலைக்கு என்னைக்கொண்டு சென்றார். கடவுளிடமிருந்து விண்ணினின்று யெருசலேம் நகர் இறங்கி வருவதை எனக்குக் காட்டினார். கடவுளுடைய மாட்சிமை அதைச் சூழ்ந்திருந்தது. அது விலைமிக்க இரத்தினக்கல் போலும், பளிங்கென ஒளி வீசும் மணிக்கல்போலும் சுடர்விட்டது. உயர்ந்ததொரு பெரிய மதில் அதைச் சூழ்ந்திருந்தது. அதற்குப் பன்னிரு வாயில்கள் காணப்பட்டன. அவ்வாயில்களில் பன்னிரு தூதர்கள் நின்றார்கள். இஸ்ராயேலின் பன்னிரு குலத்தோரின் பெயர்கள் வாயில்களில் பொறிக்கப்பட்டிருந்தன. கிழக்கே மூன்று, வடக்கே மூன்று தெற்கே மூன்று, மேற்கே மூன்று வாயில்கள் இருந்தன. நகரின் மதில் பன்னிரு அடிக்கற்கள்மேல் கட்டப்பட்டிருந்தது. அவற்றின் மேல் செம்மறியின் பன்னிரு அப்போஸ்தலர்களின் பன்னிரு பெயர்களும் இருந்தன.

அதனுள் நான் ஆலயத்தைக் காணவில்லை. எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவரும் செம்மறியுமே அதன் ஆலயம். அந்நகருக்கு ஒளி கொடுக்க கதிரவனோ நிலவோ தேவையில்லை. கடவுளுடைய மாட்சிமை அதற்கு ஒளி வீசியது; செம்மறியே அதன் விளக்கு.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

*அல்லேலூயா* அரு. 10-14. 22-23

அல்லேலூயா: ஒருவன் எனக்கு அன்புசெய்தால், என் வார்த்தையைக் கேட்பான்; என் தந்தையும் அவன்மேல் அன்பு கூர்வார், நாங்களும் அவனிடம் வருவோம், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**பரிசுத்த ஆவி, நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் நினைவூட்டுவார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 14 : 23-29

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"ஒருவன் எனக்கு அன்பு செய்தால், என் வார்த்தையைக் கேட்பான். என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார். நாங்களும் அவனிடம் வந்து, அவனோடு குடிகொள்வோம். எனக்கு அன்பு செய்யாதவன் என் வார்த்தைகளைக் கேட்பதில்லை. நீங்கள் கேட்கும் வார்த்தையோ என்னுடையதன்று: என்னை அனுப்பிய தந்தையுடையதே.

இதெல்லாம் நான் உங்களோடிருக்கும்போதே உங்களுக்குச் சொன்னேன். தந்தை என் பெயரால் அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியான துணையாளரும் உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார். நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் நினைவூட்டுவார்.

சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன்; நான் உங்களுக்கு அளிக்கும் சமாதானமோ உலகம் தரும் சமாதானம்போல் அன்று, உள்ளம் கலங்க வேண்டாம், மருள வேண்டாம். 'நான் போகிறேன். போய் உங்களிடம் திரும்பி வருவேன்' என்று நான் சொன்னதைக் கேட்டீர்கள்: உங்களுக்கு என்மேல் அன்பிருந்தால் நான் தந்தையிடம் போவதுபற்றி மகிழ்வீர்கள். ஏனெனில், தந்தை என்னிலும் மேலானவர். இவை நிகழும்போது, நீங்கள் விசுவசிக்கும் பொருட்டு இவை நிகழ்வதற்கு முன்னதாக, இப்பொழுதே உங்களுக்குச் சொன்னேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

*சின்னப்பர் கூறியதை மனத்தில் இருத்தும்படி, ஆண்டவர் அவனது இதயத்தில் அருளொளி வீசினர்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம். 16 : 11-15

துரோவாவில் கப்பலேறி சமெத்திராக்கே தீவுக்கும், மறுநாள் நெயாப்பொலிக்கும் நேராகப் போனோம். அங்கிருந்து பிலிப்பி நகருக்கு வந்து சேர்ந்து, அங்கே சில நாட்கள் தங்கியிருந்தோம். அது மகெ

தோனியா நாட்டில் உள்ள ஒரு மாவட்டத்தின் முக்கியமான நகரங்களில் ஒன்று; உரோமையர்களின் குடியேற்ற நகரம். ஓய்வுநாளில் நகர வாயிலைக் கடந்து ஆற்றங்கரைக்குச் சென்றோம். அங்கே யூதர்கள் செபிக்கும் இடம் இருக்குமெனக் கருதினோம். அப்படியே பெண்கள் சிலர் அங்குக் கூடியிருந்தனர். அமர்ந்து அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினோம்.

தியத்தைரா நகரைச் சார்ந்த பெண்ணொருத்தி அங்கிருந்தாள். அவள் பெயர் லீதியா; இரத்தாம்பரம் விற்பவள்; யூதமறையைத் தழுவியவள். சின்னப்பருடைய போதனையை அவள் கேட்டுக்கொண்டிருக்கும் போது, அவர் கூறியதை மனத்தில் இருத்தும்படி ஆண்டவர் அவளது இருதயத்தில் அருளொளி வீசினார். அவளும் அவளுடைய வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றதும், "ஆண்டவரிடம் நான் விசுவாசமுள்ளவள் என்று நீங்கள் கருதினால், என் வீட்டிற்கு வந்து தங்குங்கள்" என்று எங்களை இறைஞ்சி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டாள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 149 : 1-2, 3-4, 5-6a, 9b (பல்லவி: 4a.)

பல்லவி: ஆண்டவர் தம் மக்கள்மீது அன்புகூர்கிறார்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள். புனிதர்கள் சபையில் அவரது புகழ் ஒலிப்பதாக.

2 இஸ்ராயேல் இனத்தார் தம்மைப் படைத்தவரை நினைத்து அகமகிழ்வார்களாக. சீயோன் மக்கள் தம் அரசரை நினைத்துக் களிகூர்வார்களாக.
பல்லவி

3 நடனம் செய்து அவரது பெயரைப் புகழ்வார்களாக: தம்புராவும் யாழும் கொண்டு அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக.

4 ஏனெனில் ஆண்டவர் தம் மக்கள்மீது அன்பு கூர்கிறார்: தாழ்ந்தவர்களுக்கு மீட்பளித்து அணிசெய்கிறார்.
பல்லவி

5 மகிமை பொங்கப் புனிதர்கள் களிகூர்வார்களாக: தம் படுக்கைகளில் மகிழ்ந்து பாடுவார்களாக.

6 அவர்களது நாவில் இறைவனது பெரும்புகழ் ஒலிப்பதாக:

9 இத்தகைய மகிமை அவர்தம் புனிதர்கள் அனைவர்க்கும் உண்டாகும்.
பல்லவி

அல்லேலூயா

அரு. 15 : 26b. 27a

அல்லேலூயா. உண்மையின் ஆவியானவர் வந்து என்னைப்பற்றிச் சாட்சியம் கூறுவார்; நீங்களும் சாட்சியம் கூறுவீர்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உண்மையின் ஆவியானவர் வந்து என்னைப்பற்றிச் சாட்சியம் கூறுவார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
15:26–16:4

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"நான் தந்தையிடமிருந்து உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவர் தந்தையிடமிருந்து வரும் உண்மையின் ஆவியானவர். அவர் வந்து என்னைப்பற்றிச் சாட்சியம் கூறுவார். நீங்கள் கூட சாட்சியம் கூறுவீர்கள். ஏனெனில், தொடக்கமுதல் என்னோடு இருந்து வருகிறீர்கள்.

நீங்கள் இடறல் படாதவாறு, இவையெல்லாம் நான் உங்களுக்குச் சொன்னேன். உங்களைச் செபக்கூடத்திற்குப் புறம்பாக்குவார்கள். இதோ! நேரம் வருகிறது, அப்போது உங்களைக் கொல்லுபவர்கள் கடவுளுக்குப் பலி செலுத்துவதாக எண்ணிக்கொள்வார்கள். தந்தையையோ என்னையோ அறியாதிருப்பதால்தான் உங்களை இப்படி நடத்துவார்கள். அந்நேரம் வரும்பொழுது, முன்பே நான் உங்களுக்குச் சொன்னதாக நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இதற்காகத்தான் இதெல்லாம் உங்களுக்குக் கூறினேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**ஆண்டவராகிய யேசுவின்மேல் விசுவாசம் கொள்; நீயும் உன் வீட்டாரும் மீட்படைவீர்கள்.**

16:22-34

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம்

அந்நாட்களில் :

பிலிப்பி நகரத்து மக்கள் கூட்டம் சின்னப்பரையும் சீலாவையும் எதிர்த்தெழுந்தது; நடுவர்கள் அவர்களுடைய மேலாடைகளைக் கிழித்தெறிந்து, அவர்களைச் சாட்டையால் அடிக்கக் கட்டளையிட்டனர். அவர்களை நையப் புடைத்தபின் சிறையில் தள்ளி, பத்திரமாகக் காவல் செய்யுமாறு சிறைக் காவலனுக்குக் கட்டளையிட்டனர். இக்கட்டளையின் படி அவன் அவர்களை உட்சிறையில் தள்ளி, கால்களைத் தொழுமரத்தில் சேர்த்துப் பிணித்து விட்டான்.

நள்ளிரவு வந்தது. சின்னப்பரும் சீலாவும் கடவுளைப் புகழ்ந்து பாடிச் செபித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரெனச் சிறைக் கூடத்தின் அடித்தளமே ஆடும் அளவுக்கு, பெரியதொரு நில நடுக்கம் ஏற்பட்டது. உடனே, கதவுகளெல்லாம் திறந்தன ; அனைவரின் விலங்குகளும் தகர்ந்து விழுந்தன. சிறைக் காவலன் விழித்துக்கொண்டான். சிறைக் கதவுகள் திறந்திருப்பதைப் பார்த்து, கைதிகள் தப்பி ஓடியிருப்பர் என்று எண்ணி, வாளை உருவித் தன் உயிரை மாய்த்துக் கொள்ளப் போனான். ஆனால், சின்னப்பர் உரத்த குரலில், "தீங்கு எதுவும் செய்து கொள்ளாதே; நாங்கள் எல்லோரும் இங்குத்தான் இருக்கிறோம்" என்று கத்தினார்.

சிறைக்காவலன் விளக்கைக் கொண்டுவரச்சொல்லி உள்ளே ஓடினான். அவன் நடுங்கிக் கொண்டே சின்னப்பர், சீலா இவர்களின் காலில் விழுந்தான். அவர்களை வெளியே அழைத்து வந்து, "ஐயன்மீர், மீட்படைய நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "ஆண்டவராகிய யேசுவின்மேல் விசுவாசம் கொள். நீயும் உன் வீட்டாரும் மீட்படைவீர்கள்" என்றனர்.

பிறகு அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த அனைவருக்கும் ஆண்டவருடைய வார்த்தையை அறிவித்தனர். அவ்விரவு நேரத்திலேயே அவர்களை அழைத்துச் சென்று, அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவன் குடும்பத்தார் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றனர். அப்போது அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்து, விருந்து வைத்தான். கடவுளை விசுவசிக்கும் பேறு கிடைத்ததுபற்றி தன் வீட்டார் அனைவரோடும் கூடிக் களிகூர்ந்தான்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 137:1-2a. 2bc-3. 7c-8 (பல்லவி: 7c)

பல்லவி: **ஆண்டவரே, உமது வலக்கரம் என்னைக் காப்பாற்றும்.**

அல்லது **அல்லேலூயா.**

1 ஆண்டவரே, என் முழு மனத்துடன் உம்மைப் போற்றிப் புகழ்வேன்;
ஏனெனில் நான் வாய் திறந்து உம்மிடம் சொன்னதைக் கேட்டருளினீர்;
வான் தூதர் முன்னிலையில் உமக்குப் புகழ் பாடுவேன்.
2 உமது புனித ஆலயத்தில் ஆராதிப்பேன்; பல்லவி

3 உமது இரக்கத்தையும் சொல்லுறுதியையும் நினைத்து, உமது திருப்
பெயரைப் புகழ்வேன்.
நான் உம்மைக் கூவியழைத்த நாளில் என்மன்றாட்டைக் கேட்டருளினீர்:
என் ஆன்மாவுக்கு மேன்மேலும் வலிமை தந்தருளினீர். பல்லவி

7 உமது வலக்கரம் என்னைக் காப்பாற்றும்.
8 ஆண்டவர் தாம் தொடங்கிய வேலையை எனக்கெனச் செய்து முடிப்பார்:
ஆண்டவரே, உமது அருளன்பு என்றென்றும் நிலைத்துள்ளது; உம்
படைப்புகளைக் கைவிடாதேயும். பல்லவி

அல்லேலூயா அரு. 16:7.13

**அல்லேலூயா.** உண்மையின் ஆவியானவரை உங்களிடம் அனுப்புவேன்;
அவர் நிறை உண்மையை நோக்கி உங்களை வழி நடத்து
வார், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

***நான் போகாவிடில், துணையாளர் உங்களிடம் வரமாட்டார்.***

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
15 : 5b - 11

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"இப்பொழுது என்னை அனுப்பியவரிடம் போகிறேன், ஆயினும் 'எங்கே போகிறீர்?' என்று உங்களுள் யாரும் என்னைக் கேட்கவில்லை. ஆனால், நான் இதை உங்களுக்குக் கூறியதால் உங்கள் உள்ளத்தில் வருத்

தம் நிறைந்துள்ளது. எனினும் நான் உங்களுக்குச் சொல்வது உண்மை. நான் போவதே உங்களுக்கு நல்லது. போகாவிடில், துணையாளர் உங்களிடம் வரமாட்டார். போனால்தான் அவரை உங்களிடம் அனுப்புவேன்.

பாவம் யாரைச் சாரும், நியாயம் யார் பக்கம் உள்ளது, இறைவனின் தீர்ப்பு எத்தகையது என்பதை அவர் வந்தபின் எடுத்துக்காட்டி உலகினர் செய்த தவற்றை மெய்ப்பிப்பார். பாவம் உலகினரையே சாரும் என்று காட்டுவார்; ஏனெனில், அவர்கள் என்னில் விசுவாசம் கொள்ளவில்லை. நியாயம் என் பக்கம் உள்ளது என்று காட்டுவார்: ஏனெனில் நான் தந்தையிடம் செல்கிறேன்: இனிமேல் நீங்கள் என்னைப் பார்க்க முடியாது. இறைவனின் தீர்ப்பு எத்தகையது என்று காட்டுவார்: ஏனெனில், இவ்வுலகின் தலைவன் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டான்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# புதன்

## முதல் வாசகம்

*யாரென்று அறியாமல் நீங்கள் வழிபடும் தெய்வத்தையே உங்களுக்கு நான் அறிவிக்கப் போகிறேன்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 17:15. 22-18:1

அந்நாட்களில் :

சின்னப்பருடன் சென்றவர்கள் அவரை ஏத்தென்ஸ்வரை அழைத்துக் கொண்டுபோனார்கள். அதிவிரைவில் தம்மிடம் வந்துசேர வேண்டும் என்று சீலாவுக்கும் தீமோத்தேயுக்கும் அவர் கொடுத்த கட்டளையைப் பெற்றுக்கொண்டு அவர்கள் ஊர் திரும்பினர்.

சின்னப்பர் அரையொபாகு மன்ற நடுவில் எழுந்து நின்று, ''ஏதென்ஸ் நகரப்பெருமக்களே, நீங்கள் எவ்வகையிலும் மிக்க மதப் பற்றுள்ளவர்கள் என்று தெரிகிறது. நீங்கள் வழிபடுபவற்றைச் சுற்றிப் பார்த்து வருகையில் 'நாம் அறியாத தெய்வத்திற்கு' என்று எழுதியிருந்த பீடம் ஒன்றையும் கண்டேன். சரி,யாரென்று அறியாமலே நீங்கள் வழிபடும் தெய்வத்தையே உங்களுக்கு நான் அறிவிக்கப்போகிறேன்.

உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள், விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராம் அவர், மனிதனின் கையால் உருவான கோயில்களில் வாழ்வதில்லை. அனைத்திற்கும் மூச்சு, உயிர் எல்லாமே

அளிக்கும் அவர் மக்களின் கையால் பணிவிடை பெறுவது தமக்கு ஏதோ தேவைப்படுவதாலன்று. ஒரே மூலத்திலிருந்து மனுக்குலம் முழுவதையும் உண்டுபண்ணி, அதை மாநிலத்தில் வாழச் செய்தார். அவர்களுக்குக் குறிப்பிட்ட காலப் பகுதிகளையும் அவர்கள் குடியிருக்க வேண்டிய எல்லைகளையும் அவர்களுக்கு வரையறுத்துக் கொடுத்தார். அவர்கள் தம்மைத் தேடவேண்டுமென்பதற்காக இவ்வாறு செய்தார். இருட்டில் தடவித் தேடுவது போலாவது ஒருவேளை அவர்கள் தம்மைத் தேடிக்கண்டுபிடிக்கக் கூடுமென்றே இங்ஙனம் கடவுள் செய்தார். ஏனெனில், அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார். 'நாம் வாழ்வதும் இயங்குவதும் இருப்பதும் அவரிலேதான்'. உங்கள் புலவர்களில் ஒருவர் கூறுவதுபோல, நாமும் அவரினமே.

நாம் கடவுளின் இனத்தவராதலால், பொன், வெள்ளி, கல் இவற்றைக் கொண்டு மனிதனின் கலைத்திறனும் அறிவும் அமைத்த வேலைப்பாட்டிற்குத் தெய்வீகம் ஒப்பானதென்று எண்ணலாகாது. மக்கள் அறியாமையால் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்ததைக் கடவுள் பொருட்படுத்தாமல், இப்போது உலகெங்கும் எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறார். ஏனெனில், அவர் ஒருநாளைக் குறித்துள்ளார். அந்நாளில் தாம் நியமித்த மனிதனைக்கொண்டு உலகை நீதியோடு தீர்ப்பிடுவார். இதை அனைவருக்கும் எண்பிக்க, இறந்தோரிடமிருந்து அவரை உயிர்ப்பித்தார்'' என்றார்.

இறந்தோரின் உயிர்ப்பு என்று கேட்டதும் சிலர் ஏளனம் செய்தனர். வேறு சிலரோ, ''இதைப்பற்றி நீர் மீண்டும் வந்து பேசும், கேட்போம்'' என்றனர். இத்துடன் சின்னப்பர் மன்றத்தை விட்டு வெளியே சென்றார். ஒரு சிலர் விசுவாசங்கொண்டு அவருடன் சேர்ந்துகொண்டனர். அவர்களில் அரையொப்பாகு சங்கத்தின் உறுப்பினராகிய தியோனீசியூஸ் ஒருவர். மற்றும் தாமரி என்பவளும், வேறு சிலரும் இருந்தனர். அதன்பின் சின்னப்பர் ஏத்தென்ஸ் நகரைவிட்டுக் கொரிந்துவுக்கு வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 148:1-2. 11-12. 13. 14

பல்லவி : வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்துள்ளன.

அல்லது அல்லேலூயா.

1 வானத்தினின்று ஆண்டவரைப் புகழுங்கள்: உன்னதத்தில் நின்று அவரைப் போற்றுங்கள்.
2 ஆண்டவர்தம் தூதர்களே, அவரைப் புகழுங்கள்: அவருடைய படைகளே, நீங்களெல்லோரும் அவரைப் போற்றுங்கள். பல்லவி

11 உலகத்து அரசர்களும் மக்களனைவரும், தலைவர்கள், உலகத்தின் நீதிபதிகள் அனைவருமே,
12 இளைஞர்கள் இளங்குமரிகள், முதியோர் சிலருடன்கூடி ஆண்டவரைப் புகழுங்கள். பல்லவி

13 படைப்பு எல்லாம் ஆண்டவரைப் புகழட்டும்: ஏனெனில் அவருடைய பெயர்மட்டும் உன்னதமானது, அவருடைய மகத்துவம் வானம் பூமியனைத்தையும் கடந்தது. பல்லவி

14 தம் மக்களை மேன்மைப்படுத்தி வலிமையடையச் செய்தார்: அவர் செய்தது அவர் அடியார்க்குப் பெருமை அளித்தது. அவரை அண்மித்துள்ள இஸ்ராயேல் மக்களுக்குப் பெருமை அளித்தது. பல்லவி

*அல்லேலூயா* *அரு. 14:10*

அல்லேலூயா. நான் தந்தையைக் கேட்பேன், அவர் மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருவார்; அவர் உங்களோடு என்றும் இருப்பார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**உண்மையின் ஆவியானவர் நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *16:12-15*

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியவை இன்னும் பல உண்டு. ஆனால் அவற்றை இப்பொழுது உங்களால் தாங்கமுடியாது. உண்மையின் ஆவியானவர் வந்தபின், நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் பேசுவதைத் தாமாகப் பேசுவதில்லை; கேட்பதையே பேசுவார். வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். உங்களுக்கு அறிவிப்பதை எனக்குள்ளதிலிருந்தே பெற்றுக்கொள்வதால் அவர் என்னை

மகிமைப் படுத்துவார். தந்தையுடையதெல்லாம் என்னுடையதே. எனவே தான் 'உங்களுக்கு அறிவிப்பதை எனக்குள்ளதிலிருந்து பெற்றுக்கொள் கிறார்' என்றேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# ஆண்டவரின் விண்ணேற்றம்

## முதல் வாசகம்

*அவர்கள் கண்முன்பாக அவர் மேலே உயர்த்தப்பெற்றார்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *1:1-11*

தெயோபிலே, யேசு தாம் தேர்ந்துகொண்ட அப்போஸ்தலர்கள் செய்யவேண்டியவற்றைப் பரிசுத்த ஆவியினால் கட்டளையிட்டு விண்ணேற் படைந்த நாள்வரை, அவர் செய்தவை, போதித்தவை யாவற்றையும் என் நூலின் முதற்பகுதியில் எழுதினேன். தாம் பாடுபட்ட பின்னர் யேசு நாற்பது நாள் அளவாக அவர்களுக்குத் தோன்றி, கடவுளின் அரசைப்பற்றிக் கூறி, பல சான்றுகளால், தாம் உயிரோடு இருப்பதைக் காட்டினார்.

ஒருநாள் அவர் அவர்களோடு உண்ணும்போது, "நீங்கள் யெருசலேமை விட்டு நீங்காமல் தந்தை வாக்களித்ததை எதிர்பாருங்கள்" என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். "அருளப்பர் நீரால் ஞானஸ்நானம் கொடுத்தார். நீங்களோ இன்னும் சில நாட்களில் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று என் வாய்மொழியாக நீங்கள் கேட்டது இவ்வாக்குறுதியைப் பற்றித்தான்" என்றார்.

ஆகவே, கூடியிருந்தவர்கள், "ஆண்டவரே, இஸ்ராயேலுக்கு அரசாட்சியை நீர் மீட்டுத் தரும் காலம் இதுதானோ?" என்று வினவினர். அதற்கு அவர், "தந்தை தம் அதிகாரத்தால் குறித்துள்ள காலங்களையும் நேரங்களையும் அறிவது உங்களைச் சார்ந்ததல்ல. ஆனால், பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது அவரது வல்லமையைப் பெற்று யெருசலேமி லும், யூதேயா, சமாரியா முழுவதிலும் மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் என் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார்.

இதைச் சொன்ன பின்பு, அவர்கள் கண்முன்பாக மேலே உயர்த்தப் பெற்றார். மேகம் ஒன்று அவரை மேலே எடுத்துச்சென்று, அவர்களுடைய

பார்வையிலிருந்து அவரை மறைத்துக்கொண்டது. அவர் போகும் பொழுது, அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருந்தனர். அப்போது வெண்ணாடை அணிந்த இருவர் அங்கே தோன்றி, "கலிலேயரே, ஏன் இப்படி வானத்தைப் பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? உங்கள் நடுவிலிருந்து வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்ற இந்த யேசு எவ்வாறு வானகம் செல்லக் கண்டீர்களோ, அவ்வாறே மீண்டும் வருவார்" என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 46:1-2. 5-6. 7-8. (பல்லவி: 5)*

பல்லவி: மக்கள் ஆர்ப்பரிக்க இறைவன் அரியணை ஏறுகிறார்: எக்காளம் முழங்க ஆண்டவர் எழுந்தருளுகிறார்.

அல்லது அல்லேலூயா.

1 மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் கைகொட்டுங்கள்: அக்களிப்போடு இறைவனுக்குப் புகழ்பாடி ஆர்ப்பரியுங்கள்.

2 ஏனெனில், ஆண்டவர் உன்னதமானவர், அஞ்சுதற்குரியவர்: உலகுக்கெல்லாம் பேரரசர். பல்லவி

5 மக்கள் ஆர்ப்பரிக்க இறைவன் அரியணை ஏறுகிறார்: எக்காளம் முழங்க ஆண்டவர் எழுந்தருளுகிறார்.

6 பாடுங்கள், இறைவனுக்குப் புகழ் பாடுங்கள்: பாடுங்கள், நம் வேந்தனுக்குப் புகழ் பாடுங்கள். பல்லவி

7 ஏனெனில் கடவுள் உலகுக்கெல்லாம் அரசர்: அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்.

8 நாடுகள் அனைத்தின் மீதும் இறைவன் ஆட்சிபுரிகின்றார்; தம் புனித அரியணைமீது இறைவன் வீற்றிருக்கின்றார். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**அவரை விண்ணுலகில் தம் வலப்புறத்தில் அமரச் செய்தார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் *1:17-23*

சகோதரரே :

நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் கடவுளும், மாட்சிமை மிக்க தந்தையுமானவர் தேவ ஆவியை உங்களுக்குக் கொடுப்பாராக! அந்த ஆவியினால் நீங்கள் உண்மையை வெளிப்படுத்தும் அருளையும் ஞானத்தையும் பெற்று, அவரை முற்றும் அறிந்துகொள்வீர்களாக, இறைவன் உங்களை அழைத்ததால் எத்தகைய நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும், இறைமக்களிடையே அவர் உங்களுக்கு அளிக்கும் உரிமைப் பேற்றின் மாட்சிமை எவ்வளவு வளம் மிக்கது என்றும், விசுவசிப்போரான நம் பொருட்டு அவர் விளங்கச் செய்யும் வல்லமை எத்துணை பெருமை மிக்கது என்றும் நீங்கள் அறிந்து கொள்ளும்படி உங்கள் அகக் கண்களுக்கு ஒளி தருவாராக! நமக்காக அவர் காட்டும் இவ்வல்லமை கிறிஸ்துவில் அவர் செயற்படுத்திய அவரது வலிமை மிக்க பேராற்றலே ஆகும். இறந்தோரிடமிருந்து கிறிஸ்துவை உயிர்ப்பித்து அவரை விண்ணுலகில் தம் வலப்புறத்தில் அமரச்செய்தது இவ்வல்லமையே. ஆம், தலைமை ஏற்போர், அதிகாரம் தாங்குவோர், வலிமை மிக்கோர், ஆட்சி புரிவோர் ஆகிய தூதர் அனைவருக்கும் மேலாகவும், இவ்வுலகில் மட்டுமன்று மறுவுலகிலும், வேறு எப்பெயர் கொண்டவருக்கும் மேலாகவும் அவரை உயர்த்தினார்.

அனைத்தையும் அவருக்கு அடிபணியச் செய்து, அனைத்திற்கும் மேலாக அவரைத் திருச்சபைக்குத் தலையாய் ஏற்படுத்தினார். திருச்சபையோ அவருடைய உடல்; எல்லா வகையாலும் எப்பொழுதும் இறைவனால் நிறைவாக்கப்பெறும் கிறிஸ்துவின் நிறைவே அத்திருச்சபை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா — மத். 28;19, 20

அல்லேலூயா. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்; நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

முதல் ஆண்டு

**விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.**

✠ மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் முடிவு — 28:16-20

அக்காலத்தில் :

பதினொரு சீடரும் தங்களுக்கு யேசு குறிப்பிட்டிருந்த கலிலேயாவின் மலைக்குச் சென்றனர். அவரைக் கண்டு பணிந்தனர். சிலரோ ஐயமுற்றனர். யேசு அவர்களை அணுகிக் கூறியது: "விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள். இதோ! நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## இரண்டாம் ஆண்டு

***விண்ணேற்படைந்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்தார்.***

✠ மாற்கு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் முடிவு 16 : 15-20

அக்காலத்தில்: யேசு பதினொருவருக்குத் தோன்றி, அவர்களை நோக்கி,

"உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் மீட்புப் பெறுவான், விசுவசியாதவனுக்குத் தண்டனை கிடைக்கும். விசுவசிப்பவர்களிடம் இவ்வருங் குறிகள் காணப்படும்; என் பெயரால் பேய்களை ஓட்டுவர், புதிய மொழிகளைப் பேசுவர், பாம்புகளைக் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கிழைக்காது. பிணியாளிகள்மேல் கைகளை வைப்பர், அவர்களும் நலமடைவர்" என்றுரைத்தார்.

இவ்வாறு அவர்களோடு பேசி முடித்தபின், ஆண்டவர் யேசு விண்ணேற்படைந்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய் எங்கும் தூதுரைத்தனர். ஆண்டவரும் அவர்களோடு செயல்புரிந்து, உடனிகழ்ந்த அருங்குறிகளால் தேவ வார்த்தையை உறுதிப்படுத்தினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## மூன்றும் ஆண்டு

**அவர்களுக்கு ஆசிகூறுகையில், வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றார்.**

✠ லூக்காஸ் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் முடிவு 24:46-53

அக்காலத்தில்:

யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: மறைநூலில் எழுதியுள்ளது இதுதான்: மெசியா பாடுபட்டு, இறந்தோரிடமிருந்து மூன்றும் நாள் உயிர்த்தெழுவார்; பாவமன்னிப்படைய மனந்திரும்ப வேண்டுமென்று யெருசலேமில் தொடங்கி, புறவினத்தார் அனைவருக்கும் அவர் பெயரால் அறிவிக்கப்படும். இவற்றிற்கெல்லாம் நீங்கள் சாட்சி. இதோ! என் தந்தை வாக்களித்ததை நான் உங்களுக்கு அனுப்பப் போகிறேன். உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை நீங்கள் அணிந்துகொள்ளும் வரை நகரிலேயே தங்கியிருங்கள்.''

பெத்தானியாவை நோக்கி அவர்களைக் கூட்டிச் சென்று, கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி கூறினார். அப்படி ஆசி கூறுகையில் அவர்களை விட்டுப் பிரிந்து, வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்றார். அவர்கள் தெண்டனிட்டு வணங்கிப் பெருமகிழ்ச்சியுடன் யெருசலேம் திரும்பினர். கோயிலில் கடவுளை இடைவிடாமல் போற்றிப் புகழ்ந்துகொண்டிருந்தனர். ஆமென்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வியாழன்

(நம் நாட்டில் நடப்பது போல்) ஆண்டவரின் விண்ணேற்ற விழா பாஸ்கா 7 ஆம் ஞாயிறுக்குத் தள்ளிவைக்கப் பெற்றுள்ள இடங்களில், இன்று பின்வரும் வாசகங்களைப் பயன்படுத்தவும்.

## முதல் வாசகம்

**அவர்களுடன் தங்கி வேலை செய்துவந்தார்; செபக்கூடத்திலும் விவாதித்து வந்தார்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 18:1-8

அந்நாட்களில்:

சின்னப்பர் ஏத்தென்ஸ் நகரைவிட்டுக் கொரிந்துவுக்கு வந்தார். அங்கு பொந்த்து நாட்டைச் சேர்ந்த ஆக்கிலா என்ற யூதன் ஒருவனையும், அவனுடைய மனைவி பிரிஸ்கிலாவையும் கண்டார். கிலவுதியு பேரரசன்

யூதர் எல்லாரையும் உரோமையினின்று வெளியேறக் கட்டளையிட்டதால், அவர்கள் அண்மையில்தான் இத்தாலியாவிலிருந்து வந்திருந்தார்கள். சின்னப்பர் அவர்கள் வீட்டுக்குச் சென்றார், அவர்கள் கூடாரம் செய்பவர்கள். சின்னப்பரும் அதே தொழிலைச் செய்பவராதலால் அவர்களுடன் தங்கி வேலை செய்து வந்தார். ஓய்வுநாள் தோறும் செபக்கூடத்தில் விவாதித்து யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் விசுவாசமூட்ட முயன்றார்.

மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயுவும் வந்த பின்னர், சின்னப்பர் தேவ வார்த்தையைப் போதிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தார். 'யேசுதான் மெசியா' என்று யூதர்களிடம் வலியுறுத்திக் கூறுவார். ஆனால் அவர்கள் அதை எதிர்த்துப் பழித்தபோது, அவர் தம் ஆடையை உதறிக்கொண்டு, "உங்கள் குற்றத்தின் விளைவு உங்கள் தலைமேல் விழட்டும். அது என் குற்றமில்லை. இனி, நான் புற இனத்தாரிடம் போகிறேன்" என்றார்.

அவ்விடத்தை விட்டுவிட்டு, யூத மறையைத் தழுவிய தித்தியு யுஸ்து என்பவரின் வீட்டுக்குப் போனார். அவ்வீடு செபக்கூடத்தை அடுத்திருந்தது. அந்தச் செபக்கூடத் தலைவன் கிறிஸ்பு, தன் குடும்பத்தார் அனைவருடன் ஆண்டவரில் விசுவாசம் கொண்டான். சின்னப்பர் கூறியதைக்கேட்ட கொரிந்தியர் பலரும் விசுவசித்து ஞானஸ்நானம் பெற்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 97:1. 2–3ab. 3cd–4 (பல்லவி: 2b காண்)*

பல்லவி: மக்கள் இனத்தார் காண, ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள். வியத்தகு செயல்களை அவர் செய்துள்ளார். அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினார்: மக்கள் இனத்தார் காண தம் நீதியை அறிவித்தார்.

3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த் தாம் தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவுகூர்ந்தார். பல்லவி

4 மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன. வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்; அக மகிழுங்கள், களிகூறுங்கள், புகழ் பாடுங்கள்.

பல்லவி

அல்லேலூயா

அரு. 14:18.

அல்லேலூயா. நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்; நான் போய் உங்களிடம் திரும்பி வருவேன்; உங்கள் உள்ளமும் மகிழ்ச்சியுறும், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் நாம்பாடும் அல்லேலூயா வசனத்திற்குப் பதிலாக 901ஆம் பக்கத்தில் கண்டுள்ள தொகுப்பிலிருந்து ஏதாவதொன்றை எடுத்துக்கொள்ளலாம்.

## நற்செய்தி வாசகம்

*நீங்கள் துன்புறுவீர்கள், ஆனால் உங்கள் துன்பம் இன்பமாக மாறும்.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

16:16-20

அக்காலத்தில்:

யேசு தம் சீடரை நோக்கி, "இன்னும் சிறிது காலத்தில் என்னைக் காணமாட்டீர்கள். பின்னும் சிறிது காலத்தில் மீண்டும் என்னைக் காண்பீர்கள்" என்றார். அதைக் கேட்டு அவருடைய சீடர், "இன்னும் சிறிது காலத்தில் என்னைக் காணமாட்டீர்கள், பின்னும் சிறிது காலத்தில் மீண்டும் என்னைக் காண்பீர்கள்' என்றும், 'தந்தையிடம் செல்கிறேன்' என்றும் இவர் சொல்வதின் பொருள் என்ன?" என்று தங்களிடையே பேசிக்கொண்டனர். "இந்தச் சிறிது காலம் என்பது என்ன? அவர் சொல்வது நமக்கு விளங்கவில்லையே!" என்றனர்.

அவர்கள் தம்மை வினவ விரும்புவதை யேசு அறிந்து, அவர்களை நோக்கி, "இன்னும் சிறிது காலத்தில் என்னைக் காணமாட்டீர்கள், பின்னும் சிறிது காலத்தில் மீண்டும் என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைப்பற்றி உங்களுக்குள் உசாவுகிறீர்கள் அல்லவா? உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், உலகமோ மகிழும். நீங்கள் துன்புறுவீர்கள், ஆனால் உங்கள் துன்பம் இன்பமாக மாறும்," என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# வெள்ளி

## முதல் வாசகம்

**இந்நகரில் எனக்குரிய மக்கள் பலர் உள்ளனர்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *18:9-18*

சின்னப்பர் கொரிந்து நகரில் இருந்தபோது, ஓரிரவு ஆண்டவர் அவருக்குக் காட்சியில் தோன்றி, "அஞ்சாதே, போதித்துக்கொண்டேயிரு, நிறுத்தி விடாதே, நான் உன்னோடிருக்கிறேன். உனக்குத் தீங்கிழைக்க எவனும் எதிர்த்தெழமாட்டான். இந்நகரில் எனக்குரிய மக்கள் பலர் உள்ளனர்" என்றார். எனவே, சின்னப்பர் தேவவார்த்தையை மக்களுக்குப் போதித்துக்கொண்டு ஓராண்டு ஆறுமாதம் அங்கே தங்கியிருந்தார்.

ஆனால் கல்லியோன் என்பவன் அகாயாப் பகுதியில் ஆளுநனாக இருக்கையில், யூதர்கள் சின்னப்பருக்கு எதிராக ஒருமிக்க எழுந்து, "சட்டத்துக்கு முரணான முறையில் கடவுளை வழிபடுமாறு மக்களை இவன் தூண்டிவிடுகிறான்" என்று அவரை நீதிமன்றத்திற்கு இழுத்துவந்தனர். சின்னப்பர் பேச வாயெடுக்குமுன், கல்லியோன் யூதர்களைப் பார்த்து, 'யூதர்களே, இதில் ஏதாவது அநீதியோ, அக்கிரமமோ இருந்திருக்குமானால், நான் முறைப்படி விசாரித்திருப்பேன். ஆனால் இதெல்லாம் வெறும் சொற்களையும் பெயர்களையும் உங்கள் சட்டத்தையும் பற்றிய பூசல்தான். ஆதலின் நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். இதில் நடுவனாயிருக்க எனக்கு விருப்பமில்லை" என்று சொல்லி, அவர்களை நீதிமன்றத்திலிருந்து துரத்திவிட்டான்.

அவர்கள் அனைவரும் செபக்கூடத் தலைவனான சொஸ்தேனேயைப் பிடித்து மன்றத்திற்கு எதிரே அடித்தனர். ஆனால், கல்லியோன் இதையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

சின்னப்பர் இன்னும் பல நாட்கள் கொரிந்து நகரில் தங்கினார். பின்பு, சகோதரர்களிடம் விடைப்பெற்றுக்கொண்டு சீரிய நாட்டுக்குக் கப்பல் ஏறினார். (பிரிஸ்கிலாவும் ஆக்கிலாவும் அவருடன் சென்றனர்.) தாம் செய்திருந்த பொருத்தனையின்படி, கெங்கிரைத் துறையில் அவர் முடிவெட்டிக்கொண்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 46:1-2. 3-4. 5-6 (பல்லவி : 7a)

பல்லவி: **கடவுள் உலகுக்கெல்லாம் அரசர்.**

அல்லது **அல்லேலூயா.**

1 மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் கைகொட்டுங்கள் : அக்களிப்போடு இறைவனுக்குப் புகழ்பாடி ஆர்ப்பரியுங்கள்.
2 ஏனெனில், ஆண்டவர் உன்னதமானவர், அஞ்சுதற்குரியவர் : உலகுக்கெல்லாம் பேரரசர். பல்லவி

3 மக்களை நமக்குக் கீழ்ப்படுத்தினார் : நாடுகளை நமக்கு அடிபணிய வைத்தார்.
4 நமக்கு உரிமைப் பொருளாக நாட்டைத் தேடித் தந்தார் ; தாம் அன்பு செய்யும் யாக்கோபுக்கு அது பெருமை தருவதாகும். பல்லவி

5 மக்கள் ஆர்ப்பரிக்க இறைவன் அரியணை ஏறுகிறார் ; எக்காளம் முழங்க ஆண்டவர் எழுந்தருளுகிறார்.
6 பாடுங்கள், இறைவனுக்குப் புகழ் பாடுங்கள். பாடுங்கள், நம் வேந்தனுக்குப் புகழ் பாடுங்கள். பல்லவி

அல்லேலூயா லூக். 24:46. 26

**அல்லேலூயா. மெசியா பாடுபட்டு, இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து, மகிமையடைய வேண்டும். அல்லேலூயா.**

## நற்செய்தி வாசகம்

**உங்கள் மகிழ்ச்சியை உங்களிடமிருந்து எவனும் பறித்துவிட மாட்டான்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 10:20-23a

அக்காலத்தில் : யேசு தம் சீடரைநோக்கிக் கூறியதாவது :

"உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், உலகமோ மகிழும். நீங்கள் துன்புறுவீர்கள், ஆனால் உங்கள் துன்பம் இன்பமாக மாறும்.

குழந்தை பிறக்கும்போது தாயானவள், தனக்குப் பேறுகாலம் வந்துவிட்டதால் துன்புறுகிறாள். குழந்தையைப் பெற்றெடுத்த பின்போ உலகில் மனிதன் ஒருவன் தோன்றினான் என்ற மகிழ்ச்சியால் தன் வேதனையை மறந்து விடுகிறாள். அதுபோலவே இப்பொழுது நீங்களும் துன்புறுகிறீர்கள். ஆனால் நான் உங்களை மீண்டும் காணும்பொழுது உங்கள் உள்ளம் மகிழ்வுறும். உங்கள் மகிழ்ச்சியை உங்களிடமிருந்து எவனும் பறித்துவிட மாட்டான். அந்நாளில் என்னிடம் எதுவும் கேட்க மாட்டீர்கள்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## சனி

### முதல் வாசகம்

*யேசுவே மெசியா என்று அப்பொல்லோ மறை நூலின் வாயிலாக எண்பித்தார்.*

அப்போஸ்தர் பணியிலிருந்து வாசகம் 18:23-28

சின்னப்பர் அந்தியோகியாவில் சிறிது காலம் தங்கியபின் அங்கிருந்து புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகக் கலாத்தியா, பிரிசியா ஆகிய நாடுகளெங்கும் சுற்றி, சீடர்கள் அனைவரையும் உறுதிப்படுத்தினார்.

அலெக்சாந்திரியாவில் பிறந்த அப்பொல்லோ என்ற யூதர் ஒருவர் எபேசுக்கு வந்திருந்தார். அவர் சொல் வன்மை மிக்கவர். மறைநூல் வல்லுநர். ஆண்டவரது அருள் நெறியைக் கற்றறிந்த அவர் ஆர்வமிக்க உள்ளத்துடன் யேசுவைப் பற்றிய செய்திகளைப் பிழையறப் போதித்து வந்தார். ஆனால், அருளப்பரின் ஞானஸ்நானம் மட்டுமே அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் செபக்கூடத்தில் துணிவுடன் பேசத் தொடங்கினார். அவர் பேசியதைக் கேட்ட பிரிஸ்கிலாவும் ஆக்கிலாவும் அவரைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு போய், கடவுளின் அருள் நெறியை அவருக்குத் திட்டவட்டமாய் விளக்கினர்.

அவர் அகாயாவிற்குப் போக விரும்பவே, சகோதரர் அவரை ஊக்குவித்து, வரவேற்கும்படி சீடர்களுக்கு எழுதினர். அவர் அங்குச் சேர்ந்தபொழுது விசுவாசத்தின் அருளைப் பெற்றவர்களுக்குப் பெரிதும் உதவியாய் இருந்தார். யேசுவே மெசியா என்று மறைநூலின் வாயிலாக எண்பித்து, யூதர்களோடு எல்லாருக்குமுன் வன்மையாய் வாதாடி, அவர்களுடைய தவற்றை எடுத்துக்காட்டினார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 46:1-2. 7-8. 9 (பல்லவி: 7a)

பல்லவி: கடவுள் உலகுக்கெல்லாம் அரசர்.

அல்லது அல்லேலூயா.

1 மக்களினத்தாரே, நீங்கள் யாவரும் கைகொட்டுங்கள்: அக்களிப்போடு
இறைவனுக்குப் புகழ்பாடி ஆர்ப்பரியுங்கள்.
2 ஏனெனில், ஆண்டவர் உன்னதமானவர், அஞ்சுதற்குரியவர்: உலகுக்
கெல்லாம் பேரரசர். பல்லவி

7 ஏனெனில் கடவுள் உலகுக்கெல்லாம் அரசர்: அவருக்கு இன்னிசை
எழுப்புங்கள்.
8 நாடுகள் அனைத்தின்மீதும் இறைவன் ஆட்சிபுரிகின்றார்: தம் புனித
அரியணைமீது இறைவன் வீற்றிருக்கின்றார். பல்லவி

9 ஆபிரகாமின் இறைவனுடைய மக்களோடு புறவினத்தாரின் தலைவர்கள்
கூடியிருக்கின்றனர்: ஏனெனில், உலகின் தலைவர்களெல்லாம் இறைவனுக்
குரியவர்கள்; அவரே மிக உன்னதமானவர். பல்லவி

அல்லேலூயா அரு. 16: 28

அல்லேலூயா. தந்தையிடமிருந்து புறப்பட்டு, உலகிற்கு வந்தேன்; இப்பொழுது உலகத்தை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*தந்தையே உங்களை நேசிக்கிறார்; ஏனெனில், நீங்கள் என்னை நேசித்து, விசுவசித்தீர்கள்.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
16: 23b-28.

அக்காலத்தில்: யேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:

"உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் தந்தையிடம் எதைக் கேட்டாலும் அதை என் பெயரால் உங்களுக்குத் தருவார். இதுவரையில் என் பெயரால் நீங்கள் எதையும்

கேட்டதில்லை. கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சி நிறைவு அடையும்.

இவையெல்லாம் நான் உங்களிடம் உருவகமாய்ப் பேசினேன். இதோ! நேரம் வருகிறது: அப்போது உருவகமாய் உங்களிடம் பேசேன், என் தந்தையைப்பற்றித் தெளிவாய் எடுத்துச் சொல்வேன். அந்நாளில் என் பெயரால் நீங்கள் வேண்டுவீர்கள். ஆயினும், உங்களுக்காகத் தந்தையிடம் மன்றாடுவேன் என்று நான் சொல்லவில்லை. தந்தையே உங்களை நேசிக்கிறார். ஏனெனில், நீங்கள் என்னை நேசித்து நான் கடவுளிடமிருந்து வந்தேன் என்று விசுவசித்தீர்கள்.

தந்தையிடமிருந்து புறப்பட்டு உலகிற்கு வந்தேன். இப்பொழுது உலகத்தைவிட்டுத் தந்தையிடம் செல்கின்றேன்.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா காலத்தில் 7ஆம் வாரம்

## பாஸ்கா 7ஆம் ஞாயிறு-முதல் ஆண்டு

### முதல் வாசகம்

**ஒரே மனதாய்ச் செபத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் *1 : 12-14*

யேசு வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றபின் அப்போஸ்தலர்கள் ஒலிவுத்தோப்பு என்னும் மலையிலிருந்து யெருசலேமுக்குத் திரும்பினார்கள். இம்மலை யெருசலேமுக்கு அருகில் உள்ளது. ஓய்வுநாளில் நடக்கக் கூடிய தூரம்தான். இப்படித் திரும்பி வந்த இராயப்பர், அருளப்பர், யாகப்பர், பெலவேந்திரர், பிலிப்பு, தோமையார், பார்த்தொலோமேயு, மத்தேயு, அல்பேயுவின் மகன் யாகப்பர், தீவிரவாதி என்னும் சீமோன், யாகப்பரின் மகன் யூதா ஆகியவர்கள் தாங்கள் வழக்கமாய்த் தங்கும் மாடி அறைக்குப் போனார்கள். இவர்கள் எல்லாரும் பெண்களோடும், யேசுவின் தாய் மரியாளோடும், அவருடைய சகோதரர்களோடும் ஒரே மனதாய்ச் செபத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 26: 1. 4. 7-8a (பல்லவி: 13)

பல்லவி: நான் வாழ்வோருடைய நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக் காண்பேன் என நம்புகிறேன்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு: நான் யாருக்கு அஞ்ச
வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான்
நடுங்கவேண்டும்?

பல்லவி

4 ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே, நான் விரும்புவதும் ஒன்றே:
ஆண்டவருடைய இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க
வேண்டும்; ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்கவேண்டும்;
அவரது ஆலயத்தை நான் பார்க்கவேண்டும்.

பல்லவி

7 ஆண்டவரே, நான் உம்மை நோக்கி எழுப்பும் குரலைக் கேட்டருளும்; என்
மீது அருள்கூரும், என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.
8 என் உள்ளம் உம்மோடு உரையாடுகிறது; உம்மை நான் பார்க்க விரும்பு
கிறேன்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

*யேசுவினுடைய பெயரின் பொருட்டுப் பிறர் உங்களை வசைகூறினால் நீங்கள் பேறு பெற்றவர்கள்.*

அப்போஸ்தலரான புனித இராயப்பர்
எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 4 : 13-16

அன்பிற்குரியவர்களே:

எந்த அளவிற்குக் கிறிஸ்துவின் பாடுகளில் நீங்கள் பங்குகொள்கிறீர்களோ, அந்த அளவிற்கு அகமகிழுங்கள்; அவரது மகிமை வெளிப்படும்போது, உவப்புடன் அக்களிப்புக் கொள்வீர்கள். யேசுவினுடைய பெயரின் பொருட்டுப் பிறர் உங்களை வசை கூறினால், நீங்கள் பேறு பெற்றவர்கள்; அப்போது இறைமாட்சிமையும் கடவுளின் ஆவியும் உங்கள் மீது தங்கும். ஆனால் உங்களுள் எவனும் கொலைஞன் என்றோ, திருடன், தீமை செய்பவன் என்றோ, பிறர் காரியங்களில் தலையிடுபவன் என்றோ துன்பத்திற்குள்ளாதல் கூடாது. மாறாக ஒருவன் கிறிஸ்தவன் என்பதற்காகத் துன்பத்திற்கு உள்ளானால், அதைப்பற்றி வெட்கப்படவேண்டாம்; அப்பெயரைப் பெற்றிருப்பதால், அவன் கடவுளை மகிமைப்படுத்துவானாக.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 14 : 18. 28; 16 : 22

அல்லேலூயா. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்; நான் போய் உங்களிடம் திரும்பி வருவேன்; உங்கள் உள்ளம் மகிழ்வுறும், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தந்தாய், நீர் உம் மகனை மகிமைப்படுத்தும்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்

17 : 1-11a

அக்காலத்தில் :

யேசு வானத்தை அண்ணாந்துபார்த்து மன்றாடியதாவது :

"தந்தாய், நேரம் வந்துவிட்டது. உம் மகன் உம்மை மகிமைப்படுத்துமாறு நீர் உம் மகனை மகிமைப்படுத்தும். ஏனெனில், நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் எல்லாருக்கும் அவர் முடிவில்லா வாழ்வைக் கொடுக்கும்பொருட்டு மனுமக்கள் அனைவர்மீதும் நீர் அவருக்கு அதிகாரம் அளித்திருக்கிறீர். முடிவில்லா வாழ்வு என்பது, உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய யேசுகிறிஸ்துவையும் அறிவதே.

நீர் எனக்குச் செய்யக்கொடுத்த பணியைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மகிமைப்படுத்தினேன். தந்தாய், உலகம் உண்டாகுமுன்பு உம்மிடம் எனக்கிருந்த அதே மகிமையை அளித்து இப்பொழுது என்னை உம்முன் மகிமைப்படுத்தும்.

உலகிலிருந்து பிரித்து நீர் எனக்கு அளித்த மக்களுக்கு உமது பெயரை வெளிப்படுத்தினேன். அவர்கள் உமக்கு உரியவர்களாயிருந்தார்கள். அவர்களை என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உமது வார்த்தையைக் கேட்டார்கள். நீர் எனக்குத் தந்ததெல்லாம் உம்மிடமிருந்தே வந்ததென்பது இப்பொழுது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில், நீர் எனக்கு அறிவித்ததையே அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையாகவே அறிந்துகொண்டார்கள். நீர் என்னை அனுப்பினீர் என்பதையும் விசுவசித்தார்கள்.

அவர்களுக்காக நான் உம்மை மன்றாடுகிறேன். நான் மன்றாடுவது உலகிற்காக அன்று. நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே. ஏனெனில், அவர்கள் உமக்குரியவர்கள். என்னுடையதெல்லாம் உம்முடையதே; உம்முடையதும் என்னுடையதே. அவர்களால் நான் மகிமை பெற்றிருக்கிறேன். இனி நான் உலகில் இரேன். அவர்களோ உலகில் இருக்கின்றார்கள். நான் உம்மிடம் வருகிறேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா 7ஆம் ஞாயிறு - 2 ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

*இவர்களுள் ஒருவர் யேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக எங்களோடு சேர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 1: 15-17. 20a. 20c-26

அந்நாட்களில், (ஏறக்குறைய நூற்றிருபது சகோதரர் கூடியிருக்கையில்), இராயப்பர், அவர்கள் நடுவில் எழுந்து பேசியதாவது:

"சகோதர்களே, யேசுவைக் கைது செய்தவர்களுக்கு வழிகாட்டியான யூதாசைக் குறித்துப் பரிசுத்த ஆவி தாவீதின் வழியாக முன்னறிவித்த மறைநூல் வாக்கு நிறைவேற வேண்டியிருந்தது. அவன் நம்முள் ஒருவனுக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்தில் பங்கு பெற்றிருந்தான். சங்கீத நூலில், 'அவன் அலுவலை வேறொருவன், ஏற்றுக்கொள்ளட்டும்' என்று எழுதியுள்ளது. ஆகையால், அருளப்பரின் ஞானஸ்நானமுதல், ஆண்டவராகிய யேசு நம் நடுவினின்று எடுத்துக்கொள்ளப்பெற்ற நாள் வரை, அவர் நம்மோடு பழகிய காலமெல்லாம் நம்முடனிருந்தவர்களுள் ஒருவர் யேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக நம்மோடு சேர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது."

எனவே, அவர்கள் இருவரைக் குறிப்பிட்டனர். அவர்களுள் ஒருவர் மத்தியாஸ், மற்றொருவர் பர்சபாஸ் என்னும் சூசை; இவருக்கு யுஸ்துஸ் என்ற பெயருமிருந்தது. அப்போது எல்லாரும், "ஆண்டவரே, அனைவரின் உள்ளங்களையும் அறிபவரே, யூதாஸ் இந்த அப்போஸ்தலர் ஊழியத்தில் தனக்கிருந்த இடத்தைவிட்டு விலகி, தனக்குரிய இடத்திற்குப் போய்விட்டான். அவன் இழந்த இடத்தைப் பெறுவதற்கு, இவ்விருவருள் யாரை நீர் தேர்ந்துகொள்கிறீர் எனக் காண்பித்தருளும்" என்று மன்றாடினர். பிறகு, சீட்டுப் போட்டார்கள். சீட்டு மத்தியாஸ் பேருக்கு விழவே, அவர் பதினொரு அப்போஸ்தலர்களோடு சேர்த்துக்கொள்ளப் பட்டார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102: 1-2. 11-12. 19-20ad (பல்லவி: 19a)

பல்லவி : ஆண்டவர் வானுலகில் தமது அரியணையை ஏற்படுத்தினர்.

அல்லது அல்லேலூயா.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. என் அகத்துள்ளதெல்லாம்
அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. அவர் செய்த நன்மைகளை
யெல்லாம் மறவாதே.
பல்லவி

11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்
வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்.
12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி
விடுகிறார்.
பல்லவி

19 ஆண்டவர் வானுலகில் தமது அரியணையை ஏற்படுத்தினர்: அனைத்தின்
மீதும் அவர் ஆட்சி புரிகிறார்.
20 வானதூதர்களே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்:
ஆண்டவருடைய சொற்படி நடக்கும் வல்லமையுள்ள தூதர்களே,
அவரை வாழ்த்துங்கள்.
பல்லவி

## இரண்டாம் வாசகம்

***அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான், கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்.***

அப்போஸ்தலரான புனித அருளப்பர் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம். 4 : 11-16

அன்புக்குரியவர்களே, கடவுள் நமக்கு இவ்வாறு அன்பு செய்தார் என்றால், நாமும் ஒருவர்க்கொருவர் அன்பு செய்தல் வேண்டும். கடவுளை எவனும் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால், நாம் ஒருவர்க்கொருவர் அன்பு செய்தால், கடவுள் நம்முள் நிலைத்திருக்கிறார், அவரது அன்பு நம்மிடம் நிறைவுற்றிருக்கிறது. தம் ஆவியில் அவர் நமக்குப் பங்கு தந்தமையால், நாம் அவருள் நிலைத்திருக்கிறோம் எனவும், அவர் நம்முள் நிலைத்திருக்கிறார் எனவும் அறிகிறோம்.

தந்தை தம் மகனை உலகின் மீட்பராக அனுப்பினாரென்று கண்டோம்; அதற்குச் சான்று பகர்கின்றோம். இயேசு கடவுளின் மகன் என ஏற்றுக்கொள்பவன் எவனோ அவனுள் கடவுள் நிலைத்திருக்கிறார்; அவனும் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான். இங்ஙனம், கடவுள் நம்மீது கொண்ட அன்பை அறியலானோம்; அந்த அன்பை விசுவசித்தோம். அன்பே கடவுள்; அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான். கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா அரு. 14:18. 28;16:22

அல்லேலூயா. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்; நான் போய் உங்களிடம் திரும்பி வருவேன்; உங்கள் உள்ளம் மகிழ்வுறும், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நாம் ஒன்றாய் இருப்பதுபோல் இவர்களும் ஒன்றாயிருப்பார்களாக.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17 : 11b-19

அக்காலத்தில்:

யேசு வானத்தை அண்ணாந்து பார்த்து மன்றாடியதாவது: பரிசுத்த தந்தாய், நாம் ஒன்றாய் இருப்பதுபோல் நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களும் ஒன்றாயிருக்கும்படி உமது பெயரால் அவர்களைக் காத்தருளும். நான் அவர்களோடு இருந்தபொழுது அவர்களை உமது பெயரால் காத்து வந்தேன். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களைக் காப்பாற்றினேன். அவர்களுள் ஒருவனும் அழிவுறவில்லை. மறைநூல் நிறைவேறும்படி அழிவுக்குரியவன் மட்டுமே அழிவுற்றான்.

இப்பொழுது உம்மிடம் வருகிறேன். என் மகிழ்ச்சி அவர்கள் உள்ளத்தில் நிறைவுறும்படி, உலகிலிருக்கும்பொழுதே நான் இதைச் சொல்லுகிறேன். உமது வார்த்தையை அவர்களுக்கு அளித்தேன். உலகமோ அவர்களை வெறுத்தது. ஏனெனில், நான் உலகைச் சார்ந்தவனாயிராததுபோல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்களல்லர். உலகிலிருந்து அவர்களை எடுத்து விடும்படி நான் மன்றாடவில்லை, தீயவனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே உம்மை மன்றாடுகிறேன். நான் உலகைச் சார்ந்தவனாயிராததுபோல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்லர்.

உண்மையினால் அவர்களை அர்ச்சித்தருளும். உமது வார்த்தையே உண்மை. நீர் என்னை உலகிற்கு அனுப்பியதுபோல் நானும் அவர்களை உலகிற்கு அனுப்பினேன். அவர்கள் உண்மையினாலே அர்ச்சிக்கப்பெறும்படி அவர்களுக்காக என்னையே நான் அர்ச்சனையாக்குகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பாஸ்கா 7ஆம் ஞாயிறு - 3ஆம் ஆண்டு

## முதல் வாசகம்

**மனுமகன் கடவுளின் வலப்பக்கம் நிற்பதைக் காண்கிறேன்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 7: 55-60

அந்நாட்களில் :

முடியப்பர் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய் வானத்தை உற்று நோக்கினார். அப்போது, கடவுளின் மாட்சிமையையும், அவரது வலப் பக்கத்தில் யேசு நிற்பதையும் கண்டு, "இதோ! வானம் திறந்துள்ளதையும், மனுமகன் கடவுளின் வலப்பக்கம் நிற்பதையும் காண்கிறேன்" என்றார். அதைக் கேட்டு அவர்கள் எல்லாரும் பெருங் கூக்குரலுடன் காதை மூடிக்கொண்டனர். ஒருமிக்க அவர்மேல் பாய்ந்து, அவரை நகருக்கு வெளியே தள்ளி, அவரைக் கல்லால் எறியத் தொடங்கினர். சாட்சிகள் தங்கள் மேலாடைகளைச் சவுல் என்னும் ஓர் இளைஞனிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் கல் எறிகையில் முடியப்பர், "ஆண்டவராகிய யேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டார். பிறகு முழங்காலிட்டு உரத்த குரலில், "ஆண்டவரே, இப்பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதீர்" என்று சொல்லி உயிர் துறந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 96 : 1, 2b. 6, 7c. 9 (பல்லவி: 1a, 9a)

பல்லவி : பூவுலகனைத்தையுமே ஆளும் உன்னதராம் ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்.

அல்லது அல்லேலூயா.

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்ருர்: பூவுலகு களிகூர்வதாக! தீவுகள் எல்லாம் அகமகிழட்டும்!
2 நீதியும் நேர்மையும் அவரது அரியணைக்கு அடிப்படை. பல்லவி

6 வானங்கள் அவரது நீதியை எடுத்துரைக்கின்றன: உலக மக்களனைவரும் அவரது மகிமையைக் காண்கின்றனர்.
7 அவர் முன்னிலையில் தெய்வங்களெல்லாம் குப்புற விழுகின்றன. பல்லவி

9 ஏனெனில் ஆண்டவரே, நீர் பூவுலகனைத்தையுமே ஆளும் உன்னதர்: தெய்வங்களனைத்திற்கும் மேலானவர். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஆண்டவராகிய யேசுவே வாரும்.**

அப்போஸ்தலராகிய புனித அருளப்பர் எழுதிய திருவெளிப்பாடு நூலிலிருந்து வாசகம் 22:12-14. 16-17. 20

அருளப்பனுகிய நான், என்னிடம் பேசிய ஒரு குரலைக் கேட்டேன்:

அதாவது:

"இதோ விரைவாகவே வருகிறேன். அவனவன் செயலுக்கேற்ப அவனவனுக்கு அளிக்கும் கைம்மாறு என் கையிலிருக்கிறது. அகரமும் னகரமும்—முதலும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே." தங்கள் ஆடைகளைத் துவைத்து வெண்மையாக்கிக் கொண்டவர்கள் பேறுபெற்றவர்கள். வாழ்வின் மரத்தின்மீது அவர்களுக்கு உரிமையிருக்கும். வாயில்கள்வழியாக அந்நகரத்தில் நுழையவும் முடியும்.

யேசுவாகிய நான் சபைகளைப் பற்றிய இச்சாட்சியங்களை உங்களுக்கு அறிவிக்க என் தூதரை அனுப்பினேன். தாவீதின் வேரும் வழித்தோன்றலும் நானே. ஒளிமிகு விடிவெள்ளியும் நானே.

ஆவியானவரும் மணமகளும், "வாரும்" என்கின்றனர். இதைக் கேட்பவனும், "வாரும்" என்று சொல்லட்டும். தாகமாயிருப்பவன் வரட்டும். விருப்பமுள்ளவன் வாழ்வின் நீரை இலவசமாக ஏற்றுக்கொள்ளட்டும். இவற்றிற்குச் சான்று பகர்கிறவர், "ஆம், விரைவாகவே வருகிறேன்" என்கிருர்.

ஆமென். ஆண்டவராகிய யேசுவே, வாரும்!

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அரு. 14: 18. 28; 16: 22

அல்லேலூயா. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன், நான் போய் உங்களிடம் திரும்பிவருவேன்; உங்கள் உள்ளம் மகிழ்வுறும், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*ஒருமைப்பாட்டின் நிறைவை எய்துவார்களாக.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
17: 20-26

அக்காலத்தில்: யேசு வானத்தை அண்ணாந்து பார்த்து மன்றாடியதாவது: "பரிசுத்த தந்தாய், அவர்களுக்காகமட்டும் நான் மன்றாடவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னில் விசுவாசம் கொள்பவர்க்காகவும் மன்றாடுகிறேன். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன். நீர் என்னை அனுப்பினீர் என்று இதனால் உலகம் விசுவசிக்கும்.

நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி, நீர் எனக்கு அளித்த மகிமையை நான் அவர்களுக்கு அளித்தேன். இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் ஒருமைப்பாட்டின் நிறைவை எய்துவார்களாக. இங்ஙனம், நீர் என்னை அனுப்பினீர் என்றும் நீர் என்பால் அன்புகூர்ந்தீர் என்றும் உலகம் அறிந்துகொள்ளும்.

தந்தாய், நானிருக்கும் இடத்திலே நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களும் என்னோடிருக்கும்படி விரும்புகிறேன். இதனால், உலகம் உண்டாகும் முன்பு நீர் என்மேல் அன்பு வைத்து எனக்களித்த மகிமையை அவர்கள் காண்பார்கள்.

நீதியுள்ள தந்தாய், உலகம் உம்மை அறியவில்லை, நானோ உம்மை அறிவேன். நீர் என்னை அனுப்பினீர் என்று அவர்களும் அறிந்துகொண்டார்கள். நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்களுள் இருக்கவும் நானும் அவர்களுள் இருக்கவும் உமது பெயரை அவர்களுக்கு அறிவித்தேன், இன்னும் அறிவிப்பேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# திங்கள்

## முதல் வாசகம்

**நீங்கள் விசுவாசத்தைத் தழுவியபொழுது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டீர்களா ?**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 19 : 1–8

அப்பொல்லோ கொரிந்திலிருக்கும்பொழுது, சின்னப்பர் மலைப்பாங்கான நாட்டைக் கடந்து எபேசுக்கு வந்தார். அங்குச் சீடர் சிலரைக் கண்டு, "நீங்கள் விசுவாசத்தைத் தழுவியபொழுது பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டீர்களா?" என்று கேட்டார்கள். அவர்கள், "பரிசுத்த ஆவி இருக்கிறார் என்றுகூட நாங்கள் கேள்விப்பட்டதில்லையே" என்றனர். அதற்கு அவர், "அப்படியானால் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்?" என, "அருளப்பரின் ஞானஸ்நானம்" என்றனர். சின்னப்பர் அப்பொழுது, "அருளப்பர் கொடுத்தது மனந்திரும்பியதைக் காட்டும் ஞானஸ்நானம். அதைக் கொடுத்தபோது, தமக்குப்பின் வருபவர்மீது விசுவாசம்கொள்ள வேண்டுமென மக்களுக்குச் சொன்னார்: அவர் அப்படிச் குறிப்பிட்டது இயேசுவைத்தான்" என்றார்.

அதைக் கேட்டு அவர்கள் ஆண்டவராகிய யேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றனர். சின்னப்பர் அவர்கள்மேல் கைகளை விரித்ததும், பரிசுத்த ஆவி அவர்கள்மேல் இறங்கினார். அப்பொழுது அவர்கள் பல மொழிகளைப் பேசவும் இறைவாக்கு உரைக்கவும் தொடங்கினர் அவர்கள் ஏறக்குறைய பன்னிரண்டு பேர்.

பின், அவர் செபக்கூடத்திற்குச் சென்றார். அங்கு மூன்று மாதமளவும் கடவுளின் அரசைப்பற்றி மக்களிடம் துணிவுடன் பேசி அவர்களோடு வாதித்துத் தாம் சொல்வது உண்மையென ஏற்கச் செய்தார்.

இது ஆண்டவரின் அருள் வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங்.67 : 1-2. 3-4ac. 5-6ab. (பல்லவி: 32a)*

பல்லவி : **மாநிலத்து அரசுகளே, இறைவனுக்குப் புகழ்பாடுங்கள்.**

அல்லது **அல்லேலூயா.**

1 எழுகின்றார் இறைவன், சிதறுண்டுபோகிறார்கள் அவர் எதிரிகள்;
அவரைப் பகைத்தவர்கள் அவர் திருமுன் நிற்காமல் ஓடிப்போகிறார்கள்.
2 புகையானது சிதறுவதுபோல் அவர்கள் சிதறிப்போகட்டும்; அனலில்
மெழுகு உருகுவதுபோல், தீயோர் கடவுள் திருமுன் மடிந்தொழிவர்.

பல்லவி

3 நீதிமான்களோ மகிழ்வுறுவர், கடவுள் திருமுன் அக்களிப்பர்; மகிழ்ச்சி
யால் இன்பம் கொள்வர்.
4 இறைவனுக்கு இன்னிசை பாடுங்கள், அவரது பெயருக்குப் புகழ் பாடுங்கள்;
ஆண்டவர் என்பது அவரது திருப்பெயர்.

பல்லவி

5 தம் புனித இல்லத்தில் உறையும் இறைவன் அநாதைகளுக்குத் தந்தை;
விதவைகளுக்குப் பாதுகாவல்.
6 கைவிடப்பட்டவர்களுக்குக் கடவுள் இல்லமொன்றை ஆயத்தப்படுத்து
கிறார், சிறைப்பட்டவர்களை நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறார்.

பல்லவி

அல்லேலூயா — கொலோ. 3:1

அல்லேலூயா. கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின், மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்; அங்கேதான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**தைரியமாயிருங்கள், நான் உலகை வென்றுவிட்டேன்.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 16:29-33

அக்காலத்தில்:

சீடர்கள் யேசுவிடம், "இப்பொழுதுதான் தெளிவாகப் பேசுகிறீர்; உருவகம் ஒன்றும் இல்லை. உமக்கு எல்லாம் தெரியும். யாரும் உம்மைக் கேள்வி கேட்கத் தேவையில்லை என்று இப்பொழுது தெரிகிறது. கடவுளிடமிருந்து நீர் வந்தீர் என்று இதனால் விசுவசிக்கிறோம்" என்றனர்.

அதற்கு யேசு, "இப்பொழுது நீங்கள் விசுவசிக்கிறீர்களா? இதோ! நேரம் வருகிறது, வந்தேவிட்டது; அப்பொழுது நீங்கள் சிதறுண்டு ஒவ்வொருவரும் தத்தம் வீட்டுக்கு ஓடிப்போவீர்கள்; என்னைத் தனியாய்

விட்டுவிடுவீர்கள். ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை: தந்தை என்னோடு இருக்கிறார்.

என்னில் நீங்கள் சமாதானத்தைக் கண்டடையும்படி, இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொன்னேன். உலகில் உங்களுக்கு வேதனை உண்டு; ஆயினும் துணிவுடன் இருங்கள்; நான் உலகை வென்றுவிட்டேன்'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# செவ்வாய்

## முதல் வாசகம்

**ஆண்டவராகிய யேசு என்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்றி, என் வாழ்க்கைப் பயணத்தை முடிக்கிறேன்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 20: 17-27

அந்நாட்களில் :

சின்னப்பர் மிலேத்திலிருந்து எபேசுக்கு ஆள் அனுப்பிச் சபையின் மூப்பர்களை வரவழைத்தார். அவர்கள் வந்தபின் அவர் அவர்களிடம் பேசிய மொழிகள் இவை:

"நான் ஆசியாவிற்கு வந்த நாள்முதல் எப்போதும் உங்களிடம் எவ்வாறு நடந்துகொண்டேன் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. கண்ணீர் சிந்தும் அளவுக்கு, யூதர்களின் சூழ்ச்சியினால் எனக்கு ஏற்பட்ட இன்னல்கள் பலவற்றிடையே ஆண்டவருக்கு மிக்க தாழ்மையுடன் ஊழியஞ்செய்தேன். நன்மை தரும் யாவற்றையும் உங்களுக்கு அறிவிக்க நான் பின்வாங்கவில்லை; பொது இடங்களிலும் போதித்தேன்; வீடு வீடாகவும் போய்ப் போதித்தேன். மக்கள் கடவுள் பக்கம் மனந்திரும்ப வேண்டும், நம் ஆண்டவராகிய யேசுகிறிஸ்துவிடம் விசுவாசம் கொள்ளவேண்டும், என யூதருக்கும் கிரேக்கருக்கும் வற்புறுத்திக் கூறினேன். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததே.

ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டவனாய், இதோ! நான் இப்போது யெருசலேமுக்குச் செல்லுகிறேன். அங்கு எனக்கு என்னென்ன நேருமோ, நான் அறியேன். சங்கிலிகளும் வேதனைகளும் எனக்காகக் காத்திருக்கின்றன என்று நான் செல்லும் ஊர்தோறும் பரிசுத்த ஆவி எனக்கு உறுதி கூறுவது மட்டுமே அறிவேன். ஆனால், நான் என் உயிரை

ஒரு பொருட்டாய்க் கணிக்கவில்லை. அதைப் பெரிதென மதிக்கவில்லை. கடவுளுடைய அருளைப்பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவராகிய யேசு என்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்றி, என் வாழ்க்கைப் பயணத்தை முடிப்பேனாகில் அதுவே போதும்.

உங்களிடையே பழகி இறையரசைப்பற்றிய செய்தியைப் போதித்து வந்தேன். இனிமேல், அந்தோ! உங்களுள் ஒருவனும் என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை என்று எனக்குத் தெரியும். கடவுளின் திட்டம் முழுவதையும் உங்களுக்கு அறிவிக்க நான் பின்வாங்கவில்லை. ஆகவே, நான் இன்று உங்களுக்குக் கூறும் ஒரு வார்த்தை: யாருடைய அழிவுக்கும் நான் குற்றவாளியல்ல.''

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 67 : 9-10. 19-20 (பல்லவி: 32a)

பல்லவி : மாநிலத்து அரசுகளே, இறைவனுக்குப் புகழ் பாடுங்கள்.

அல்லது அல்லேலூயா.

9 இறைவனே, உம் உரிமையான நாட்டின்மீது நிரம்ப மழை பொழியச் செய்தீர். சாரமற்றுப்போன நிலத்தை மீண்டும் வளமாக்கினீர்.

10 உம்முடைய மந்தை அதில் குடியிருந்தது: இறைவனே, உமது அருளால் நீர் ஏழைகளுக்கென்று அதைத் தயார் செய்தீர்.

பல்லவி

19 ஒவ்வொரு நாளும் ஆண்டவர் வாழ்த்தப்பெறுவாராக: நம் மீட்பராகிய கடவுள் நம் சுமைகளைத் தாங்கிக்கொள்கின்றார்.

20 நம் கடவுள் நமக்கு மீட்பருளும் கடவுள்: சாவினின்று தப்பச் செய்பவர் ஆண்டவராகிய கடவுள்.

பல்லவி

அல்லேலூயா அரு. 14: 16

அல்லேலூயா. நான் தந்தையைக் கேட்பேன்: தந்தை மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருவார்; அவர் உங்களோடு என்றும் இருப்பார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

*தந்தாய், நீர் உம்மகனை மகிமைப்படுத்தும்.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17: 1-11a

(பக்கம் 869)

# புதன்

## முதல் வாசகம்

*வளர்ச்சியையும் உரிமைப் பங்கையும் அளிக்கவல்ல கடவுளுக்கு உங்களை ஒப்படைக்கிறேன்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 20:28-38

அந்நாட்களில்: சின்னப்பர் எபேசு சபையின் மூப்பர்களிடம் கூறியதாவது:

"உங்களைப்பற்றி விழிப்பாயிருங்கள்; மந்தை முழுவதைக் குறித்தும் விழிப்பாயிருங்கள். ஏனெனில், கடவுள் தமது இரத்தத்தினால் சொந்தமாக்கிக்கொண்ட தம் திருச்சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை அம்மந்தைக்கு மேற்பார்வையாளராக ஏற்படுத்தியுள்ளார். நான் சென்றபின் கொடிய ஓநாய்கள் உங்களுக்குள்ளே நுழையும். அவை மந்தையைத் தாக்காமல் விடா என்பதை அறிவேன். உங்களிடமிருந்தே சிலர் தோன்றி, சீடர்களையும் தம்மிடம் கவர்ந்துகொள்ளுமளவுக்கு உண்மையைத் திரித்துக் கூறுவர்.

எனவே, விழிப்பாயிருங்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக அல்லும் பகலும் அயராமல் நான் உங்கள் ஒவ்வொருவர்க்கும் கண்ணீரோடு கூறி வந்தேன் என்பதை நினைவில் வையுங்கள். இப்பொழுது உங்களைக் கடவுளுக்கும், அவருடைய அருள் வார்த்தைக்கும் ஒப்படைக்கிறேன். அவ்வார்த்தை உங்களுக்கு முழு வளர்ச்சியையும், அர்ச்சிக்கப்பட்டவர் அனைவரோடு பங்கையும் அளிக்கவல்லது.

ஒருவருடைய பொன்னையோ வெள்ளியையோ ஆடையையோ நான் விரும்பவில்லை. என்னுடைய தேவைகளுக்காகவும், என்னோடு இருப்பவர்கள் தேவைகளுக்காகவும் இந்தக் கைகளே உழைத்தன என்பது உங்களுக்கே தெரியும். இவ்வாறு பாடுபட்டு உழைத்து பலவீனரைத் தாங்க வேண்டுமென்று பலவகையில் காட்டினேன். 'பெறுவதினும் தருவதே இன்பம்' என்று ஆண்டவராகிய யேசு சொன்னதை நினைவில் வைத்தல் வேண்டும்.''

இப்படிச் சொன்னபின், எல்லாரோடும் முழங்கால் படியிட்டுச் செபித்தார். அப்போது எல்லாரும் சின்னப்பரைக் கட்டி அணைத்து முத்தமிட்டுப் பெரிதும் புலம்பி அழலாயினர். இனி நீங்கள் என் முகத்தைப் பார்க்கமாட்டீர்கள் என்று அவர் சொன்னதுதான் அவர்களுக்கு மிக்க துயரம் வருவித்தது. அப்படியே கப்பல்வரைச் சென்று அவரை வழியனுப்பினர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

### பதிலுரைப் பாடல்

சங். 67: 28-29. 32-34a, 34b-35c (பல்லவி: 32a)

பல்லவி : மாநிலத்து அரசுகளே, இறைவனுக்குப் புகழ் பாடுங்கள்.

அல்லது அல்லேலூயா.

28 இறைவனே, உம் வல்லமையைக் காட்டியருளும்: எம் சார்பாய்ச் செயலாற்றும் இறைவனே, உம் வல்லமையைக் காட்டியருளும்.

29 யெருசலேமிலுள்ள உமது ஆலயத்தை முன்னிட்டு, மன்னர்கள் உமக்குக் காணிக்கைகள் கொண்டுவருவார்களாக. பல்லவி

32 மாநிலத்து அரசுகளே, கடவுளை நினைத்துப் பாடுங்கள்; ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்.

33 வான்வெளியில், ஆதிகால வானங்களிடையே பவனி செல்லும் ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள்.

34 இதோ, அவர் தம் குரலை விடுக்கிறார்; வல்லமையுடன் குரல் விடுக்கிறார். கடவுள் வல்லவரென்று ஏற்றுக்கொள்ளுங்கள். பல்லவி

35 இஸ்ராயேல்மீது அவர் மாண்பு விளங்குகிறது, அவருடைய வல்லமை மேகங்களில் விளங்குகிறது.

கடவுள் வாழ்த்துப் பெறுவாராக. பல்லவி

அல்லேலூயா — அரு. 17 : 17b.a

அல்லேலூயா. ஆண்டவரே, உமது வார்த்தையே உண்மை;
உண்மையினால் எங்களை அர்ச்சித்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**நாம் ஒன்றாய் இருப்பதுபோல் இவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17 : 11b-19

[ பக்கம் 872 ]

# வியாழன்

## முதல் வாசகம்

**நீ உரோமையிலும் சாட்சியம் தரவேண்டும்.**

**அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம்** 22:30; 23:6-11

அந்நாட்களில்:

யூதர்கள் சின்னப்பர்மேல் சாட்டிய குற்றம் யாது என்பதைப் படைத்தலைவன் சரியாகத் தெரிந்துகொள்ள விரும்பி, அவரை விடுதலை செய்து, தலைமைக் குருக்களையும் தலைமைச் சங்கத்தார் அனைவரையும் கூடும்படி கட்டளையிட்டான். பின்னர், சின்னப்பரைக் கொண்டுவந்து அவர்கள் முன்னிலையில் நிறுத்தினான்.

அச்சங்கத்தில் ஒருசாரார் சதுசேயர், மற்றொருசாரார் பரிசேயர் என்பதை அறிந்திருந்த சின்னப்பர் அவர்களைப் பார்த்து, "சகோதரர்களே, நான் ஒரு பரிசேயன், பரிசேயரின் வழித்தோன்றலே. இறந்தோர் உயிர்த்தெழுவர் என்ற என் நம்பிக்கையைக்குறித்துத் தீர்ப்புக்குள்ளாயிருக்கிறேன்" என்று உரக்கக் கத்தினார்.

அவர் இப்படிச் சொன்னதும், பரிசேயருக்கும் சதுசேயருக்கும் இடையே வாக்குவாதம் உண்டாயிற்று. சபையும் இரண்டுபட்டது. ஏனெனில், சதுசேயர் உயிர்த்தெழுதலோ வானதூதரோ ஆவியோ

உண்டு என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. பரிசேயரோ, இவையெல்லாம் உண்டென்று ஒப்புக்கொள்வர். எனவே, பேரிரைச்சல் எழுந்தது. அப்பொழுது பரிசேயர் கட்சியைச் சார்ந்த மறைநூல் அறிஞர் சிலர் எழுந்து 'இவனிடத்தில் ஒரு தவற்றையும் காணோம்; ஓர் ஆவியோ, ஒரு வானதூதரோ இவனோடு பேசியிருந்தாலென்ன ?'' என்று வாதாடினர்.

இப்படி வாக்குவாதம் முற்றவே, சின்னப்பரைக் கண்டதுண்டமாக்கி விடுவார்களோ எனப் படைத்தலைவன் அஞ்சி, படைவீரர்களை அனுப்பி அவரைக் கூட்டத்தின் நடுவிலிருந்து கோட்டைக்குக் கொண்டுபோகக் கட்டளையிட்டான்.

அன்றிரவு ஆண்டவர் அவருக்குத்தோன்றி, ''தைரியமாயிரு, என்னைக்குறித்து நீ யெருசலேமில் சாட்சியம் தந்ததுபோல், உரோமையிலும் சாட்சியம் தரவேண்டும்'' என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 15 : 1–2a 5. 7-8. 9-10. 11 [பல்லவி: 1]

பல்லவி : இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.

அல்லது அல்லேலூயா.

1 இறைவா, என்னைப் பாதுகாத்தருளும்: உம்மிடம் நான் அடைக்கலம்
புகுந்தேன்.
2 "நீரே என் ஆண்டவர்'' என்று ஆண்டவரிடம் சொன்னேன்.
5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்: எனக்
குரியதை எனக்கென வைத்திருப்பவர் நீரே.
பல்லவி

7 எனக்கு ஆலோசனை கொடுத்த ஆண்டவரை நான் வாழ்த்துவேன்:
இரவில்கூட என் இதயம் எனக்கு அறிவுரை கூறுகிறது.
8 ஆண்டவரை நான் எந்நேரமும் என் கண்முன் கொண்டிருக்கிறேன்:
அவர் என் வலப்பக்கத்தில் இருப்பதால் நான் அசைவுறேன்.
பல்லவி

9 இதனால் என் இதயம் அகமகிழும்; என் உள்ளம் அக்களிக்கும்: என்
உடலும் கவலையின்றி இளைப்பாறும்.
10 ஏனெனில், என் ஆன்மாவைப் பாதாளத்தில் விட்டுவிட மாட்டீர்; உம்
புனிதர் அழிவுகாண விடமாட்டீர்.
பல்லவி

வாழ்வுக்குச் செல்லும் வழியை நீர் எனக்குக் காண்பிப்பீர்: உம் திரு முன் எனக்கு நிறைமகிழ்ச்சியையும், உம் வலக்கையில் இடைவிடா இன்பத்தையும் நீர் காட்டுவீர்.
பல்லவி

அல்லேலூயா அரு. 17: 21

அல்லேலூயா. தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக; நீர் என்னை அனுப்பினீர் என்று இதனால் உலகம் விசுவசிக்கும், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**ஒருமைப் பாட்டின் நிறைவை எய்துவார்களாக.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 17: 20-26

(பக்கம் 875)

# வெள்ளி

## முதல் வாசகம்

**இறந்துபோயிருந்த யேசு உயிரோடிருப்பதாகச் சின்னப்பன் சாதித்துக்கொண்டிருந்தான்.**

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 25: 13-21

அந்நாட்களில்:

அகிரிப்பா அரசனும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டு கொள்ள செசரியாவுக்கு வந்தனர். அவர்கள் அங்குச் சில நாள் தங்கியிருக்கவே, பெஸ்து சின்னப்பரைப் பற்றிய செய்தியெல்லாம் அரசனிடம் சொன்னான். அவன் சொன்னது:

"பெலிக்ஸ் காவலில் விட்டுப்போன கைதி ஒருவனிருக்கிறான். நான் யெருசலேமுக்குப் போயிருந்தபோது, தலைமைக் குருக்களும் யூத மூப்பர்களும் அவனுக்கெதிராகத் தீர்ப்பிட வேண்டினர். நான் அதற்கு மறுமொழியாக, குற்றஞ் சாட்டப்பட்டவன் குற்றஞ் சாட்டியவர்களுக்கு

எதிரே நின்று மறுப்புக்கூற வாய்ப்பளிக்காமல், அவரை அவர்களுக்குத் தானம்போல் அளித்துவிடுவது உரோமையருக்கு முறையன்று" எனக் கூறினேன்.

ஆகவே, அவர்கள் என்னோடு இங்கு வந்தபோது காலந்தாழ்த்தாது, மறுநாளே நான் நீதி இருக்கையில் அமர்ந்து அந்த ஆளை அழைத்துவரச் சொன்னேன். ஆனால், குற்றம் சாட்டினவர்கள் அவனுக்கு எதிராகப் பேச எழுந்தபோது நான் எதிர்பார்த்த குற்றங்களில் எதையும் அவன் மேல் சுமத்தவில்லை. அவன்மேல் சொன்னதெல்லாம் ஏதோ தங்கள் மதத்தைப்பற்றிய பூசலாகத்தான் இருந்தது. யேசு என்னும் ஒருவனைப் பற்றிக்கூட தர்க்கம் நடந்தது. இறந்துபோயிருந்த அந்த யேசு உயிரோடிருப்பதாகச் சின்னப்பன் சாதித்துக்கொண்டிருந்தான்.

நான் இதெல்லாம் எப்படி விசாரிப்பது என்று தெரியாமல் தயங்கியவனாய், 'நீ யெருசலேமுக்குச் சென்று அங்கு இதைப்பற்றி விசாரிப்பதற்கு இசைவாயா?' என்று அவனைக் கேட்டேன். அதற்குச் சின்னப்பன், மாட்சிமைமிக்க மன்னரது தீர்ப்புக்கெனத் தன் வழக்கை ஒதுக்கி வைக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆகவே, செசாரிடம் அனுப்பும்வரை அவனைக் காவலில்வைக்க நான் கட்டளையிட்டேன்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

சங். 102: 1-2. 11-12. 19-20 ab (பல்லவி: 19a

பல்லவி: ஆண்டவர் வானுலகில் தமது அரியணையை ஏற்படுத்தினார்.

அல்லது அல்லேலூயா.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக; என் அகத்துள்ள தெல்லாம் அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக.

2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. அவர் செய்த நன்மைகளை யெல்லாம் மறவாதே. பல்லவி

11 ஏனெனில், வானுலகம் பூவுலகிற்கு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்வளவுக்கு அவர் தமக்கு அஞ்சி நடப்பவர்களுக்குத் தயவு காண்பிக்கிறார்.

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ, அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றிவிடுகிறார். பல்லவி

19 ஆண்டவர் வானுலகில் தமது அரியணையை ஏற்படுத்தினார். அனைத்தின்
மீதும் அவர் ஆட்சிபுரிகிறார்.
20 வானதூதர்களே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்:
ஆண்டவருடைய சொற்படி நடக்கும் வல்லமையுள்ள தூதர்களே, அவரை
வாழ்த்துங்கள். பல்லவி

அல்லேலூயா

அரு. 14:26

அல்லேலூயா. பரிசுத்த ஆவி உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்; நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் உங்களுக்கு நினைவூட்டுவார். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

என் ஆட்டுக்குட்டிகளை மேய், என் ஆடுகளை மேய்

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 21:15 19

தம் சீடர்களுக்குத்தோன்றி, அவர்களோடு சாப்பிட்டு முடிந்தபின் யேசு, சீமோன் இராயப்பரை நோக்கி, "அருளப்பனின் மகனான சீமோனே, இவர்களைவிட நீ அதிகமாய் எனக்கு அன்பு செய்கிறாயா?" என்று கேட்டார். அவர் அதற்கு, "ஆம், ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றார். யேசுவோ அவரிடம், "என் ஆட்டுக் குட்டிகளை மேய்" என்றார். இரண்டாம்முறையாக யேசு அவரை நோக்கி, "அருளப்பனின் மகனான சீமோனே, நீ எனக்கு அன்பு செய்கிறாயா?" என அவர் அவரை நோக்கி, "ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றார். யேசுவோ அவரிடம், "என் ஆடுகளைக் கண்காணி" என்றார்.

மூன்றாம் முறையாக அவரை நோக்கி, "அருளப்பனின் மகனான சீமோனே, என்னை நீ நேசிக்கிறாயா?" என்று கேட்டார். "என்னை நேசிக்கிறாயா?" என்று அவர் மூன்றாம் முறையாகக் கேட்டதால் இராயப்பர் மனம் வருந்தி யேசுவை நோக்கி, "ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே. நான் உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும்" என்றார். யேசு அவரிடம், "என் ஆடுகளை மேய்.

"உண்மையிலும் உண்மையாக உனக்குச் சொல்லுகிறேன்: நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்திற்குச் சென்றாய். வயது முதிர்ந்தபொழுதோ, நீ கைகளை விரித்துக் கொடுப்பாய், வேறொருவன் உன்னைக் கட்டி உனக்கு விருப்பமில்லாத இடத்திற்குக் கூட்டிச் செல்வான்" என்றார்.

அவர் எத்தகைய மரணத்தால் கடவுளை மகிமைப்படுத்துவார் என்பதைக் குறிப்பிட்டு இவ்வாறு சொன்னார். இதைச் சொன்னபின், "என்னைப் பின்செல்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# சனி

## காலைப் பூசை

### முதல் வாசகம்

*உரோமையில் தங்கி, கடவுளின் அரசைப்பற்றிய செய்தியை அறிவித்துக் கொண்டிருந்தார்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 28: 16-20. 30-31

நாங்கள் உரோமை சேர்ந்தபோது காவல் செய்கிற படை வீரனோடு தனி வீட்டில் தங்குவதற்குச் சின்னப்பர் உத்தரவு பெற்றுக்கொண்டார் மூன்று நாளுக்குப்பின், சின்னப்பர் யூதப்பெரியோர்களை வரவழைத்தார். அவர்கள் ஒன்றுகூடியபின் அவர்களைப் பார்த்து, "சகோதரர்களே நம்முடைய மக்களுக்கு எதிராகவோ, முன்னோருடைய முறைமைகளுக்கு மாறாகவோ நான் எதுவும் செய்யவில்லை. எனினும் யெருசலேமில் கைதியாக்கப்பட்டு உரோமையருக்குக் கையளிக்கப்பட்டேன். அவர்கள் என்னை விசாரித்து சாவுத் தண்டனைக்குரிய குற்றம் எதுவும் என்னிடம் காணாதபடியால் என்னை விடுதலையாக்க விரும்பினார்கள்.

ஆனால் யூதர்கள் அதை ஏற்றுக்கொள்ளாததால் என் வழக்கு செசாருடைய மன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்று உரிமை கோர அவசியம் ஏற்பட்டது. எனினும் நான் இப்படிச் செய்தது, என் இனத்தார்மேல் குற்றம் சாட்ட வேண்டுமென்றல்ல. இதனால்தான் நான் உங்களைக் கண்டு பேச அழைத்தேன். இஸ்ராயேல் மக்களுக்குள்ள நம்பிக்கையை நானும் கொண்டிருப்பதால்தான் இவ்வாறு விலங்கிடப்பட்டுள்ளேன்" என்றார்.

வாடகை கொடுத்து ஓர் இடத்தில் அவர் ஈராண்டுகள் தங்கினார் தம்மைக் காண வந்தோரை உபசரித்து, மிக்கத் துணிவோடு, தடையெதுவு

மின்றி அவர்களுக்குக் கடவுளின் அரசைப்பற்றிய செய்தியை அறிவித்து ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவைப்பற்றி உண்மைகளைப் போதித்து வந்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## பதிலுரைப் பாடல்

*சங். 10: 4. 5,7 (பல்லவி: 7b காண்)*

*பல்லவி:* ஆண்டவரே, நேர்மையுள்ளவர்கள் உமது முகத்தைக் காண்பார்கள்.

*அல்லது* அல்லேலூயா.

4 ஆண்டவர்தம் இருக்கை புனித ஆலயம்: ஆண்டவருடைய அரியணை
வானகம், அவருடைய கண்கள் எளியவனை உற்று நோக்குகின்றன. மனு
மக்களை அவை பரிசோதித்துப் பார்க்கின்றன. *பல்லவி*

5 நீதிமானையும் தீயோனையும் ஆண்டவர் ஊடுருவிப்பார்க்கிறார்: தீமையை
விரும்புகின்றவனை அவர் வெறுக்கிறார்.
7 ஏனெனில், ஆண்டவர் நீதியுள்ளவர், நீதியை நேசிப்பவர்: நேர்மை
யுள்ளவர்கள் அவர் முகத்தைக் காண்பார்கள். *பல்லவி*

*அல்லேலூயா* *அரு. 16 : 7. 13*

அல்லேலூயா. பரிசுத்த ஆவியை உங்களிடம் அனுப்புவேன்; அவர் நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

**இச்சீடரே இவையெல்லாம் எழுதிவைத்தார்; இவருடைய சாட்சியம் உண்மை.**

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் *21:20-25*

*அக்காலத்தில்:*

இராயப்பர் திரும்பிப் பார்த்து, யேசு அன்பு செய்த சீடர் பின்னால் வருவதைக் கண்டார். இரா உணவின்போது மார்பிலே சாய்ந்து, "ஆண்டவரே உம்மைக் காட்டிக்கொடுப்பவன் யார்?" என்று கேட்டவர் அவரே.

இவரைக்கண்டு இராயப்பர் யேசுவிடம், "ஆண்டவரே, இவனுக்கு என்ன ஆகும்?" என்று கேட்டார். அதற்கு யேசு, "நான் வருமளவும் அவன் அப்படியே இருக்கவேண்டும் என்பது எனக்கு விருப்பமாயிருந்தால் உனக்கென்ன? நீயோ என்னைப் பின்செல்" என்றார்.

இதிலிருந்து அந்தச் சீடர் இறக்கமாட்டார் என்ற பேச்சு சகோதரர்களிடையே பரவியது. ஆனால் யேசு, "நான் வருமளவும் அவன் அப்படியே இருக்க வேண்டும் என்பது எனக்கு விருப்பமாயிருந்தால் உனக்கென்ன?" என்று கூறினாரேயன்றி, "இறக்கமாட்டான்" என்று கூறவில்லை.

"இச்சீடரே இவற்றுக்குச் சாட்சி. இவரே இவையெல்லாம் எழுதி வைத்தார். இவருடைய சாட்சியம் உண்மை என்று அறிவோம். யேசு செய்தவை வேறு பல உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுத வேண்டிய நூல்களை உலகமே கொள்ளாது என்று கருதுகிறேன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு

# பரிசுத்த ஆவி ஞாயிறு

## திருவிழிப்புப் பூசை

### முதல் வாசகம்

**பூமியெங்கும் வழங்கும் மொழிக்குழப்பம் அவ்விடத்தில் பிறந்தமையால், அதன் பெயர் பாபேல் எனப்பட்டது.**

ஆதிஆகமத்திலிருந்து வாசகம் 11 : 1-9

உலகத்தில் ஒரே மொழியும் ஒரே விதமான பேச்சும் வழங்கி வந்தன. மக்கள் கீழ்த்திசையிலிருந்து புறப்பட்டபோது, சென்னார் நாட்டில் சமவெளியைக் கண்டு அங்கே குடியேறினர்.

அப்பொழுது அவர்கள் ஒருவரோடொருவர்: "வாருங்கள், செங்கல் அறுத்துச் சூளையிலிட்டுச் சுடுவோம்" என்று பேசிக்கொண்டு, கருங்கல்லுக்குப் பதிலாகச் செங்கற்களையும், சாந்துக்குப் பதிலாகத் தாரையும் பயன்படுத்தினர். மேலும் அவர்கள்: "வாருங்கள், நாம் நாடுகள் தோறும் சிதறிப் போகுமுன்னே ஒரு நகரையும், விண்ணை முட்டும் ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் புகழ் உண்டாகச் செய்வோமாக" என்று சொன்னார்கள்.

ஆனால், ஆதாமின் புதல்வர் கட்டிவந்த நகரையும் கோபுரத்தையும் பார்க்க ஆண்டவர் இறங்கிவந்தார். அப்பொழுது அவர்: "இதோ, மக்கள் ஒரே இனமாயிருந்து ஒரே மொழி பேசி வருகிறதனாலன்றோ இதைச் செய்யத் தொடங்கினார்கள்! தாங்கள் செய்ய நினைத்ததை அவர்கள் விடாமல் எப்படியும் செய்து முடிப்பார்கள். சரி நாம் இறங்கிப் போய், அவர்களுள் ஒருவர் பேசுவதை மற்றவர் அறியாவண்ணம் அவர்களது மொழியைக் குழப்பிவிடுவோம்" என்றார்.

அன்றாறு ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து உலகெங்கும் சிதறிப் போகச் செய்ததனால், அவர்கள் அந்நகரைக் கட்டுவதை விட்டு விட்டனர். பூமியெங்கும் வழங்கும் மொழிக் குழப்பம் அவ்விடத்தில் ஏற்பட்டதனால் அதன் பெயர் பாபேல் எனப்பட்டது. ஆண்டவர் அவர்களை அவ்விடத்திலிருந்து நாடுகள் தோறும் சிதறிப்போகச் செய்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லது

2

*ஆண்டவர், மக்கள் அனைவரும் காண, சீனாய் மலைமீது இறங்கினார்.*

யாத்திராகமத்திலிருந்து வாசகம் 19: 3-8, 16-20b

அந்நாட்களில்:

மலையிலிருந்து கடவுள் தம்மைக் கூப்பிடுவதை மோயீசன் கேட்டு அவருடைய மலையில் ஏறினபோது, ஆண்டவர் அவரை நோக்கி: "நீ யாக்கோபு வம்சத்தாராகிய இஸ்ராயேல் மக்களுக்கு அறிவிக்க வேண்டியதாவது:

'நாம் எகிப்தியருக்குச் செய்தவைகளையும், உங்களை நாம் கழுகுகளின் இறக்கைகள்மேல் சுமந்து நமக்குச் சொந்தமாய் ஏற்றுக்கொண்ட விதத்தையும் நீங்களே கண்டிருக்கிறீர்கள். ஆகையால், நீங்கள் நமது வாக்கைக் கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக்கொண்டு அனுசரிப்பீர்களேயாகில், எல்லா மக்களிலும் நீங்களே நமது உடைமையாய் இருப்பீர்கள். ஏனென்றால், பூமியெல்லாம் நம்முடையது. அன்றியும், நீங்கள் நமக்கு இராஜரீக ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த சனமுமாய் இருப்பீர்கள்.' இவை நீ இஸ்ராயேல் மக்களுக்குச் சொல்ல வேண்டிய வார்த்தைகளாம்" என்றார்.

மோயீசன் வந்து, மக்களுள் பெரியோரை அழைத்து, ஆண்டவர் தமக்குச் சொன்ன அனைத்தையும் அவர்களுக்கு விவரமாய்ச் சொல்ல, மக்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து மறுமொழி சொல்லி: "ஆண்டவர் சொன்னவையெல்லாம் செய்வோம்" என்றனர்.

மூன்றாம் நாள் பொழுது புலரும் நேரத்தில் இதோ பேரிடி முழங்கியது, மின்னல் வெட்டியது; மலையின் மேல் கார்மேகம் வந்து கவிழ்ந்தது; எக்காளம் பேரொலி எழுப்பியது. அதனால் பாளையத்திலிருந்த மக்கள் அனைவரும் அச்சமுற்றனர். அப்பொழுது மக்கள் ஆண்டவருக்கு எதிர் கொண்டு போக, மோயீசன் அவர்களைப் பாளையம் இருந்த இடத்

திலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார். அவர்கள் மலையின் அடிவாரத்திலே நின்றனர்.

ஆண்டவர் சீனாய் மலைமீது நெருப்பில் இறங்கியபடியாலும், சூளையிலிருந்து புகை புறப்படுவது போல மலையினின்று புகை எழும்பியதாலும், அந்தச் சீனாய் மலை புகைக் காடாகிப் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. எக்காலமும் வர வரப் பேரொலி எழுப்பி நெடுநேரம் முழங்கிக் கொண்டிருந்தது. அவ்வேளை மோயீசன் சடவுளோடு பேசிக் கொண்டிருந்தார்; ஆண்டவரும் அவருக்கு மறு மொழி சொல்லிய வண்ணம் இருந்தார். பின் ஆண்டவர் சீனாய் மலையின் சிகரத்தில் இறங்கி, மோயீசனை அங்கு வரச் சொல்லி அழைத்தார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது

3

**உலர்ந்த எலும்புகளே, உங்களுக்குள் ஆவியை நுழையச் செய்வோம், நீங்கள் உயிர்பெற்று வாழ்வீர்கள்.**

இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்திலிருந்து வாசகம் 37: 1–14

அந்நாட்களில் :

ஆண்டவருடைய கரம் என்மேல் இருந்தது: ஆண்டவருடைய ஆவி என்னைத் தூக்கிக் கொண்டுபோய் ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் விட்டது; அங்கே எலும்புகள் மிகுதியாய்க் கிடந்தன. அவற்றைச் சுற்றி என்னை அழைத்துச் சென்றார்: இதோ, அந்தப் பள்ளத்தாக்கில் எலும்புகள் மிகப்பல கிடந்தன; அவை முற்றும் உலர்ந்திருந்தன.

அவர் என்னை நோக்கி, "மனிதா, இந்த எலும்புகள் உயிர்பெறக் கூடுமோ?" என்று வினவினார். "ஆண்டவராகிய இறைவா, உமக்குத் தெரியுமே" என்று விடை பகர்ந்தேன். மீண்டும் அவர் என்னிடம், "இந்த எலும்புகளுக்கு இறைவாக்குரைத்து அவற்றுக்குச் சொல்: உலர்ந்த எலும்புகளே, ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள். 'இந்த எலும்புகளுக்கு ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: 'இதோ, உங்களுக்குள் ஆவி நுழையச் செய்வோம், நீங்கள் உயிர் பெற்று வாழ்வீர்கள். பின்னும், உங்கள்மேல் நரம்புகளை வைப்போம், உங்கள்மேல் சதை பிடிக்கச் செய்வோம்; உங்களைத் தோலால் மூடுவோம்; உங்களில் ஆவியை ஊட்டுவோம்; நீங்கள் உயிர் பெற்று வாழ்வீர்கள். அப்போது நாமே ஆண்டவர் என்பதை அறிவீர்கள்" என்று சொல் எனக் கூறினார்.

அவர் ட்கடளையிட்டவாறே நான் இறைவாக்குச் சொன்னேன்; அவ்வாறு நான் இறைவாக்குரைக்கும்போது, ஓர் ஒலி கேட்டது; இதோ, அசைவும் உண்டாயிற்று; ஒவ்வொரு எலும்பும் மற்றொரு எலும்பை அணுகி ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டன. நான் பார்த்துக்கொண்டு இருக்கும்போது, இதோ, அவற்றின்மேல் நரம்புகள் காணப்பட்டன; அவற்றில் சதை பிடித்திருந்தது; அவற்றைத் தோல் மூடியிருந்தது; ஆயினும் அவற்றில் உயிர் இல்லை.

அப்பொழுது அவர் என்னை நோக்கி, "ஆவிக்கு இறைவாக்குக் கூறு, மனிதா, இறைவாக்குச் சொல்; ஆவிக்கு நீ சொல்: 'ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்: ஆவியே, நாற்றிசையிலிருந்தும் வா; வந்து உயிரிழந்த இவர்கள் மீது ஊதி, இவர்கள் உய்யும்படி செய்" என்றார்.

அவர் எனக்குக் கட்டளையிட்டவாறே நான் இறைவாக்குரைத்தேன்; அவர்களுள் ஆவி புகுந்தது; அவர்கள் உயிர்பெற்றுத் தரையில் காலூன்றி நின்றனர்; அவர்கள் மாபெரும் சேனைபோல் இருந்தனர்.

பின்னும் அவர் என்னிடம் சொன்னார்: "மனிதா, இந்த எலும்புகள் இஸ்ராயேல் வீட்டாரனைவரும். இதோ, அவர்கள், 'எங்கள் எலும்புகள் முற்றிலும் உலர்ந்து போயின; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் முற்றிலும் அறுபட்டோம்' என்கிறார்கள். ஆகையால் நீ அவர்களுக்கு இறைவாக்குக் கூறு: 'ஆண்டவராகிய இறைவன் கூறுகிறார்:

எம் மக்களே, இதோ நாம் உங்கள் கல்லறைகளைத் திறப்போம்; கல்லறைகளிலிருந்து உங்களை எழுப்புவோம்; இஸ்ராயேல் நாட்டுக்கு உங்களைத் திரும்பக் கூட்டிவருவோம். எம் மக்களே, உங்கள் கல்லறைகளைத் திறந்து, அவற்றினின்று நாம் உங்களை எழுப்பும்போது, நாமே ஆண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்குள் நம் ஆவியைப் புகுத்துவோம்; நீங்கள் உயிர் பெறுவீர்கள். உங்கள் சொந்த நாட்டில் உங்களை வாழவைப்போம்; அப்போது, ஆண்டவராகிய நாமே இதைச் சொன்னோம், நாமே இதைச் செய்து முடித்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்' என்கிறார் ஆண்டவராகிய இறைவன்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

அல்லது

4 **நம் அடியாராகிய ஆண்கள், பெண்கள்மீது நம் ஆவியைப் பொழிந்திடுவோம்.**

இறைவாக்கினர் யோவேல் ஆகமத்திலிருந்து வாசகம் 2 : 28-32

ஆண்டவர் கூறுவதாவது :

"எல்லார்மேலும் நம் ஆவியைப் பொழிந்திடுவோம், உங்கள் புதல்வர் புதல்வியர் இறைவாக்குரைப்பர்; உங்கள் முதியோர் கனவுகள் காண்பர், உங்கள் இளைஞர்கள் காட்சிகள் அருளப்பெறுவர். ஆம், அடிமைகளாய் இருக்கும் ஆண்கள், பெண்கள்மீதும் அந்நாட்களில் நம் ஆவியைப் பொழிந்திடுவோம்.

"இன்னும் விண்ணிலும் மண்ணிலும், அற்புதங்களைக் காட்டுவோம்; எங்குமே இரத்தமும் நெருப்பும் புகையும் இருக்கும். அச்சந்தரும் பெருநாளாம் ஆண்டவரின் நாள் வருமுன், கதிரோன் இருளாகும் நிலவோ இரத்தமாய் மாறும்.

அப்பொழுது ஆண்டவரின் பெயரைச்சொல்லி மன்றாடும் எவனும் மீட்புப் பெறுவான்; ஏனெனில் ஆண்டவர் சொன்னவாறே, சீயோன் மலையிலும் யெருசலேமிலும் தப்பியவர் வாழ்வர், ஆண்டவர் அழைத்தவர்களும் தப்பிப்பிழைத்தவர்கள் நடுவில் இருப்பார்கள்."

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

---

## பதிலுரைப் பாடல்

சங். 103 : 1-2a. 24,35c. 27-28. 29bc-30 (பல்லவி: 30 காண்)

பல்லவி : ஆண்டவரே, உமது ஆவியை அனுப்புவீர்,
உலகனைத்தும் புத்துயிர் பெறும்.

அல்லது அல்லேலூயா.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக: ஆண்டவரே, என் இறைவா, நீர் எத்துணை உயர்ந்தவர்.

2 மாண்பும் மகத்துவமும் நீர் அணிந்திருக்கிறீர்: ஒளியை நீர் போர்வையாகக்கொண்டுள்ளீர்.

பல்லவி

24 ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள், எத்தனை, எத்தனை! அனைத்தையும் நீர் ஞானத்தோடு செய்து முடித்தீர்: உம் படைப்புகளால் நிறைந்துள்ளது வையகம்.

25 நெஞ்சே, ஆண்டவரை நீ வாழ்த்துவாயாக!

பல்லவி

27 இவையெல்லாம் உம்மையே நம்பியிருக்கின்றன: தக்க காலத்தில் உண
வளிப்பீர் என்று எதிர்பார்க்கின்றன.
28 நீர் கொடுக்க, அவை பெற்றுக்கொள்கின்றன: நீர் உமது கையைத்
திறக்க அவை நலன்களால் நிறைவுறுகின்றன.

பல்லவி

29 உம் முகத்தை நீர் மறைத்துக்கொண்டால், அவை தத்தளிக்கும்: அவற்
றின் மூச்சை நீர் நிறுத்திவிட்டால் அவை மடிந்து மறுபடியும் மண்ணுக்
கு விடும்.
30 உமது ஆவியை நீர் அனுப்பினால் அவை படைக்கப்படும்: உலகனைத்தும்
புத்துயிர் பெறும்.

பல்லவி

## இரண்டாம் வாசகம்

**ஆவியானவர்தாமே நமக்காகச் சொல்லொண்ணாப் பெருமூச்சுகளோடு பரிந்துபேசிச் செபிக்கிறார்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் உரோமையருக்கு
எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்

8:22-27

சகோதரரே:

இந்நாள் வரை படைப்புப் பொருள் அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதைத் நாம் அறிவோம். படைப்பு மட்டுமன்று; முதற்கனியாகத் தேவ ஆவியைக்கொண்டுள்ள நாமும் இறை மக்களாக்கப்படும் நாளை எதிர்நோக்கி, அதாவது நம் உடல் விடுதலையாக்கப்படும் நாளை எதிர்நோக்கித் தவித்துக்கொண்டிருக்கிறோம். மீட்பு நமக்குக் கிடைத்துவிட்டது. ஏனெனில், மீட்பு நமக்குக் கிடைத்துள்ளதெனினும், நம்பிக்கையளவில்தான் கிடைத்துள்ளது. எதிர்பார்க்கும் ஒன்றைக் கண்டடைந்தால் அங்கு நம்பிக்கைக்கு இடமில்லை. கண்ணால் காண்கிறதை எவனாவது எதிர்பார்ப்பானா? நாம் காணாததை எதிர்நோக்கி நம்பிக்கை கொண்டிருந்தால், அப்படி எதிர்நோக்குவதில் நம் மனவுறுதியைக் காட்டுகிறோம்.

அவ்வாறே நம் வலுவற்ற நிலையில் நமக்குத் தேவ ஆவி துணை நிற்கிறார்; ஏனெனில், செபிக்கவேண்டிய முறையில் செபிப்பதெப்படி என நாம் அறியோம்; தேவ ஆவிதாமே நமக்காகச் சொல்லொண்ணாப் பெருமூச்சுகளோடு பரிந்து பேசிச் செபிக்கிறார். உள்ளங்களை ஊடுருவிக் காண்கிற இறைவன் தேவ ஆவியின் கருத்தை அறிவார்; அவர் இறை மக்களுக்காகக் கடவுளுக்கேற்பப் பரிந்து பேசுகிறார் என்பதை இறைவன் அறிவார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

அல்லேலூயா

அல்லேலூயா. பரிசுத்த ஆவியே எழுந்தருளி வாரும்; உம்முடைய விசுவாசிகளின் இதயங்களை நிரப்பியருளும்; அவற்றில் உமது அன்புத் தீ பற்றியெரியச் செய்தருளும்.

அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

*உயிருள்ள நீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்.*

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம் 7:37-39

திருவிழாவின் இறுதியான பெருநாளிலே, யேசு எழுந்துநின்று உரத்த குரலில், "யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும். என்னில் விசுவாசங்கொள்பவன் குடிக்கட்டும். மறைநூல் கூறுவதுபோல், அவனுடைய உள்ளத்திலிருந்து உயிருள்ள நீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்" என்றார்.

தம்மில் விசுவாசங்கொள்வோர் பெறப்போகும் ஆவியானவரைக் குறித்து அவர் இவ்வாறு சொன்னார். ஆவியானவரோ இன்னும் அருளப்படவில்லை. ஏனெனில், யேசு இன்னும் மகிமை பெறவில்லை.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

# பெருவிழாப் பூசை

## முதல் வாசகம்

*எல்லாரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று பேசத்தொடங்கினர்.*

அப்போஸ்தலர் பணியிலிருந்து வாசகம் 2: 1-11

பெந்தெகொஸ்தே என்னும் திருநாளின்போது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள், திடீரென, பெருங்காற்று வீசுவது போன்ற இரைச்சல் வானத்தினின்று உண்டாகி அவர்கள் இருந்த வீடு முழுவதும் ஒலித்தது. நெருப்புப்போன்ற நாவுகள் அவர்களுக்குத் தோன்றிப் பிளவுண்டு ஒவ்வொருவர்மேலும் வந்து தங்கின. எல்லாரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பெற்று ஆவியானவர் அருளியபடி அயல் மொழிகளில் பேசத் தொடங்கினர்.

அச்சமயத்தில், வானத்தின் கீழ் இருக்கும் எல்லா நாட்டினின்றும் பக்தியுள்ள யூதர்கள் வந்து யெருசலேமில் தங்கியிருந்தார்கள். அவ்வொலியைக் கேட்டு மக்கள் கூட்டமாகக் கூடினர். அவர்கள் பேசுவதை மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் மொழியில் கேட்டுத் திடுக்கிட்டனர். அனைவரும் திகைத்துப்போய் வியப்புடன், இதோ! பேசுகிற இவர்கள் எல்லாரும் கலிலேயர்கள் அல்லவா? அப்படியிருக்க அவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் நம் தாய் மொழியில் கேட்பதெப்படி? பார்த்தர், மேதர், எலாமீத்தர் ஆகியோரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து, ஆசியா, பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சீரேனே நகரை அடுத்த லீபியாவின் பகுதிகள் ஆகிய நாடுகளில் வாழ்பவரும், உரோமையிலிருந்து வந்தவர், — யூதர், யூத மதத்தைத் தழுவியவர், — கிரேத்தர், அரபியர் ஆகிய நாம் யாவரும் நம் மொழிகளிலேயே கடவுளின் மாபெருஞ் செயல்களை அவர்கள் பேசக் கேட்கிறோமே?'' என்றனர்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பதிலுரைப் பாடல்

சங். 103: 1ab, 24ac, 29bc - 30. 31, 34 (பல்லவி: 30 காண்)

பல்லவி: ஆண்டவரே, உமது ஆவியை அனுப்புவீர்; உலகனைத்தும் புத்துயிர் பெறும்.

அல்லது அல்லேலூயா.

1 நெஞ்சே! நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக! ஆண்டவரே, என் இறைவா, நீர் எத்துணை உயர்ந்தவர்.

24 ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள், எத்தனை, எத்தனை! உம் படைப்புகளால் நிறைந்துள்ளது வையகம். பல்லவி

29 அவற்றின் மூச்சை நீர் நிறுத்திவிட்டால், அவை மடிந்து மறுபடியும் மண்ணாகிவிடும்.

30 உமது ஆவியை நீர் அனுப்பினால் அவை படைக்கப்படும்: உலகனைத்தும் புத்துயிர் பெறும். பல்லவி

31 ஆண்டவருடைய மாட்சிமை என்றென்றும் விளங்குவதாக. தம் படைப்புகளைக் குறித்து ஆண்டவர் மகிழ்வாராக.

34 என் புகழுரை அவருக்கு இனியதாய் இருப்பதாக: நான் ஆண்டவரில் மகிழ்ச்சிகொள்வேன். பல்லவி

## இரண்டாம் வாசகம்

**நாம் அனைவரும் ஒரே ஆவியாய் ஒரே உடலுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்.**

அப்போஸ்தலரான புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 12:3b-7. 12-13

சகோதரரே :

பரிசுத்த ஆவியின் ஏவுதலாலன்றி "யேசு ஆண்டவர்" என்று யாரும் சொல்லமுடியாது.

வரங்கள் பலவகை; தேவஆவி ஒருவர்தாம். திருப்பணிகள் பலவகை; ஆண்டவரோ ஒருவர்தாம். ஆற்றல்மிக்க செயல்கள் பலவகை; கடவுளோ ஒருவர்தாம். அவரே அனைத்தையும் அனைவரிலும் செயலாற்றுகிறார். தேவ ஆவியின் செயலை வெளிப்படுத்தும் ஆற்றல் அவனவனுக்கு அருளப்படுவது பொது நன்மைக்காகவே.

உடல் ஒன்று, உறுப்புகள் பல; உடலின் உறுப்புகள் பலவகையாயினும், ஒரே உடலாய் உள்ளன; கிறிஸ்துவும் அவ்வாறே என்க. ஏனெனில், நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும் உரிமைக்குடி மக்களாயினும், அனைவரும் ஒரே ஆவியால் ஒரே உடலுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்; ஒரே ஆவியால் தாகந் தணியப் பெற்றோம்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

## தொடர் பாடல்

தூய ஆவியே, எழுந்தருள்வீர்,
வானின்றுமது பேரொளியின்
அருட்சுடர் எம்மீதனுப்பிடுவீர்.

எளியவர் தந்தாய், வந்தருள்வீர்,
நன்கொடை வள்ளலே, வந்தருள்வீர்,
இருதய ஒளியே, வந்தருள்வீர்.

உன்னத ஆறுதலானவரே,
ஆன்ம இனிய விருந்தினரே,
இனிய தண்மையும் தருபவரே.

உழைப்பில் களைப்பைத் தீர்ப்பவரே,
வெம்மை தணிக்கும் குளிர் நிழலே,
அழுகையில் ஆறுதலானவரே.

உன்னத பேரின்ப ஒளியே,
உம்மை விசுவசிப்போருடைய
நெஞ்சின் ஆழம் நிரப்பிடுவீர்.

உமதருள் ஆற்றல் இல்லாமல்
உள்ளது மனிதனில் ஒன்றுமில்லை,
நல்லது அவனில் ஏதுமில்லை.

மாசு கொண்டதைக் கழுவிடுவீர்,
வரட்சியுற்றதை நனைத்திடுவீர்,
காயப்பட்டதை ஆற்றிடுவீர்.

வணங்காதிருப்பதை வளைத்திடுவீர்,
குளிரானதைக் குளிர் போக்கிடுவீர்,
தவறிப் போனதை ஆண்டருள்வீர்.

இறைவா உம்மை விசுவசித்து,
உம்மை நம்பும் அடியார்க்குக்
கொடைகள் ஏழும் ஈந்திடுவீர்.

புண்ணிய பலன்களை வழங்கிடுவீர்,
இறுதியில் மீட்பும் ஈந்திடுவீர்,
அழிவிலா இன்பம் அருள்வீரே.

அல்லேலூயா

அல்லேலூயா. பரிசுத்த ஆவியே, எழுந்தருளிவாரும், உம்முடைய விசுவாசிகளின் இதயங்களை நிரப்பியருளும், அவற்றில் உமது அன்பின் தீ பற்றியெரியச் செய்தருளும். அல்லேலூயா.

## நற்செய்தி வாசகம்

தந்தை என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்;
பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

✠ அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்திலிருந்து வாசகம்
20: 19-23

வாரத்தின் முதல் நாளாகிய அன்று மாலை, சீடர்கள் தாங்கள் கூடியிருந்த இடத்திலே யூதருக்கு அஞ்சிக் கதவுகளை மூடி வைத்திருக்கையில், யேசு வந்து அவர்களிடையே நின்று, "உங்களுக்குச் சமாதானம்!" என்றார். இவ்வாறு சொல்லி, அவர்களுக்குத் தம் கைகளையும் விலாவையும் காண்பித்தார். ஆண்டவரைக் கண்டு சீடர்கள் மகிழ்வுற்றனர்.

யேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்குச் சமாதானம்! என் தந்தை என்னை அனுப்பினதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். பின்பு அவர்கள்மேல் ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவை மன்னிக்கப்பெறும். எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ, அவை மன்னிப்பின்றி விடப்படும்" என்றார்.

இது ஆண்டவரின் அருள்வாக்கு.

பரிசுத்த ஆவி ஞாயிறுக்குப் பின்வரும் திங்கட்கிழமையிலும், இன்றும் செவ்வாய்க்கிழமையிலும் கூட, [illegible] வேண்டுமெனில், அன்று வருவது வழக்கமென [illegible] இந்த விழாப் பூசையைத் திரும்பவும் பயன்படுத்தலாம்; அன்று பரிசுத்த ஆவியானவரின் [illegible] பூசையைப் பயன்படுத்தலாம்.

## அல்லேலூயா வசனங்கள்

### பாஸ்கா காலத்தில் விண்ணேற்ற விழாவுக்கு முன்வரும் வார நாட்களுக்கானவை

ஒவ்வொரு நாளும் தியானப்பாட்டின் வசனத்திற்குப் பதிலாக பின் வருவன வற்றுள் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

1. லூக். 24:46

அல்லேலூயா. மெசியா பாடுபட்டு, இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து மகிமை அடைய வேண்டும். அல்லேலூயா.

2. அரு. 10:14

அல்லேலூயா. நல்ல ஆயன் நானே; என் ஆடுகளை நான் அறிவேன்; அவையும் என்னை அறிகின்றன. என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

3. அரு. 10:27

அல்லேலூயா. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவி கொடுக்கின்றன; நானும் அவற்றை அறிவேன்; அவையும் என்னைப் பின் தொடர்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

4. அரு. 20:29

அல்லேலூயா. தோமையே, என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய், காணாமலே விசுவசிப்பவர்கள் பேறுபெற்றவர்கள். அல்லேலூயா.

5. உரோ. 6:9

அல்லேலூயா. இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்; இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர். அல்லேலூயா.

6. கொலோ. 3: 1

அல்லேலூயா. கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்; அங்கேதான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். அல்லேலூயா.

7. திருவெளி. 1: 5ab

அல்லேலூயா. யேசுகிறிஸ்துவே, நீரே நம்பிக்கைக்குரிய சாட்சி, இறந்தோரிலிருந்து எழுந்தவருள் தலைப்பேறானவர்; எங்களுக்கு அன்புசெய்து உமது இரத்தத்தினால் எங்கள் பாவங்களிலிருந்து எங்களை விடுவித்தீர். அல்லேலூயா.

8.

அல்லேலூயா. கிறிஸ்து உயிர்த்தெழுந்து நம்மீது ஒளிவீசினார், நம்மைத் தமது இரத்தத்தினால் மீட்டருளினார். அல்லேலூயா.

9.

அல்லேலூயா. நமக்காகச் சிலுவையில் தொங்கிய ஆண்டவர் கல்லறையினின்று உயிர்த்தெழுந்தார். அல்லேலூயா.

10.

அல்லேலூயா. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; அனைத்தையும் படைத்தவர் அவரே; மனுக்குலத்தின்மீது இரக்கம் கொண்டவரும் அவரே. அல்லேலூயா.

11.

அல்லேலூயா. மரித்தோர்நின்று உண்மையிலே கிறிஸ்து உயிர்த்தது யாமறிவோம்: வெற்றிகொள் வேந்தே, எம்மீது நீரே இரக்கம் கொள்வீரே. அல்லேலூயா.

# அல்லேலூயா வசனங்கள்

## பாஸ்கா காலத்தில் விண்ணேற்ற விழாவுக்குப் பின்வரும் வார நாட்களுக்கானவை

ஒவ்வொரு நாளும் தரப்பட்டுள்ள வசனத்திற்குப் பதிலாகப் பின்வருவனவற்றுள் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

1.

மத். 28: 19. 20

அல்லேலூயா. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்: நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

2.

அரு. 14: 16

அல்லேலூயா. நான் தந்தையைக் கேட்பேன், அவர் மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருவார்; அவர் உங்களோடு என்றும் இருப்பார். அல்லேலூயா.

3.

அரு. 14: 16

அல்லேலூயா. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். நான்போய் உங்களிடம் திரும்பி வருவேன்; உங்கள் உள்ளமும் மகிழ்ச்சியுறும், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

4.

அரு. 14: 28

அல்லேலூயா. பரிசுத்த ஆவி உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்; நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் உங்களுக்கு நினைவூட்டுவார். அல்லேலூயா.

5. அரு. 16: 7–13

அல்லேலூயா. உண்மையில் ஆவியானவரை உங்களிடம் அனுப்புவேன்; அவர் நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

6. அரு. 16: 28

அல்லேலூயா. தந்தையிடமிருந்து புறப்பட்டு உலகிற்கு வந்தேன்; இப்பொழுது உலகத்தை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன். அல்லேலூயா.

7. கொலோ. 3: 1

அல்லேலூயா. கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்; அங்கேதான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். அல்லேலூயா.

# பதிலுரைப் பாடல்களுக்கான பொதுப் பாடங்கள்

ஒவ்வொரு பதிலுரைப் பாடலின் பாடம் தனி வாசகத்திற்கு ஏற்ப, அதனுடன் இணைந்திருப்பதால், இதனை திருப்பலி வாசக நூலிலிருந்தே எடுத்தல் வேண்டும். எனவே வாசகத்தோடு அதனை பதிலுரைப்பாடலும் தேர்ந்தெடுக்கப்படும்.

ஆயினும் இறைமக்கள் பதிலுரைப் பாடலின் பல்லவியை எளிதாகப் பாடுவதற்காக, ஆண்டின் பல்வேறு காலங்களுக்கு, அல்லது புனிதரின் பலதரப்பட்ட நிலைகளுக்கு ஏற்றவாறு சில பல்லவிகளும் சங்கீதங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பதிலுரைப் பாடல்களைப் பாடும்பொழுது, வாசகத்தோடு இணைந்த பாடல்களுக்குப் பதிலாக இப்பல்லவிகளையும் சங்கீதங்களையும் பயன்படுத்தலாம்.

**(General institution of the Roman Missal. No. 36)**

## பல்லவிகள்

திருவருகைக் காலம்

ஆண்டவரே, எங்களை மீட்க எழுந்துவாரும்.

கிறிஸ்து பிறப்புக் காலம்

ஆண்டவரே, உமது மகிமையை இன்று கண்டோம்.

தவக்காலம்

ஆண்டவரே உமது சொல்லுறுதியையும் இரக்கத்தையும் நினைவு கூர்ந்தருளும்.

பாஸ்கா காலம்.

அல்லேலூயா. (இருமுறை அல்லது மும்முறை)

ஆண்டின் பொதுக் காலம்.

a) புகழுரைச் சங்கீதமானால்:

ஆண்டவரைப் போற்றுங்கள், ஏனெனில் அவர் நல்லவர்.

அல்லது

ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம். ஏனெனில், உம்முடைய செயல்கள் வியப்புக்குரியன.

அல்லது

ஆண்டவருக்குப் புதியதோர் பாடல் பாடுங்கள்.

b) வேண்டுதல் சங்கீதமானால்:

கூவியழைப்போர் அருகில் உள்ளார் ஆண்டவர்.

அல்லது

ஆண்டவரே எங்களுக்குச் செவிசாய்த்து எங்களை மீட்டருளும்.

அல்லது

அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.

## சங்கீதங்கள்

திருவருகைக் காலம்

சங். 24:4-5ab. 8-9. 10, 14 (பல்லவி: 1b)

பல்லவி : ஆண்டவரே, உம்மைநோக்கி
என் ஆன்மாவை எழுப்பினேன்.

4 ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்: உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.

5 உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்: என் மீட்பராம் இறைவன் நீரே. பல்லவி

8 ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்: ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார்.

9 நீதி நெறியில் எளியோரை நடத்துவார், எளியோர்க்குத் தம் வழியை கற்பிப்பார். பல்லவி

10 ஆண்டவருடைய உடன்படிக்கையையும் கட்டளைகளையும் கடைப்பிடிப்போர்க்கு அவருடைய வழிகள் எல்லாம் அருளும் உண்மையும் கொண்டவை.

14 தமக்கு அஞ்சி நடப்போரிடம் ஆண்டவர் அன்புறவு கொண்டுள்ளார்: தமது உடன்படிக்கையை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். பல்லவி

அல்லது சங். 84:8ab-9. 10-11. 12-13 (பல்லவி: 7)

பல்லவி : ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காட்டியருளும்.
உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.

8 ஆண்டவராகிய இறைவன் சொல்வதென்னவென்று நான் கேட்பேன்: தம் மக்களுக்கும் தம் புனிதருக்கும், அவர் கூறுவது சமாதானமே.

9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு மீட்பு மெய்யாகவே அண்மையில் உள்ளது. அதனால் நம் நாட்டில் அவரது மாட்சிமை குடிகொள்ளும். பல்லவி

10 இரக்கமும் சொல்லுறுதியும் ஒன்றையொன்று சந்திக்கும்: நீதியும் அமை
தியும் ஒன்றையொன்று அரவணைக்கும்.
11 உண்மை பூமியினின்று முளைத்தெழும்: நீதி, நேர்மை வானத்தினின்று
எட்டிப்பார்க்கும். பல்லவி

12 நன்மையானதை ஆண்டவர் அருள்வார்: நம் நிலமும் தன் பலனைத் தரும்.
13 நீதி அவருக்கு முன் செல்லும், மீட்பும் அவரைப் பின் தொடரும். பல்லவி

## கிறிஸ்து பிறப்புக் காலம்

சங். 97: 1. 2–3ab. 3cb–4. 5-6 (பல்லவி: 3c)

பல்லவி: மாநிலத்தின் எல்லைகள் யாவும் நம் இறைவன் தந்த மீட்பைக்
கண்டன.

1 ஆண்டவருக்குப் புதியதோரு பாடல் பாடுங்கள்: வியத்தகு செயல்களை
அவர் செய்துள்ளார். அவரது வலக்கரமும் புனித புயமும் அவருக்கு
வெற்றியைக் கொணர்ந்தன. பல்லவி

2 ஆண்டவர் தமது மீட்பை வெளிப்படுத்தினர்: மக்கள் இனத்தார்
காணத் தம் நீதியை அறிவித்தார்.
3 தமது நன்மைத்தனத்தையும் இஸ்ராயேல் இனத்தவர் சார்பாய்த் தாம்
தந்த சொல்லுறுதியையும் அவர் நினைவு கூர்ந்தார். பல்லவி

மாநிலத்தின் எல்லைகள் யாவும் நாம் இறைவன் தந்த மீட்பைக் கண்டன.
4 மாநிலத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்: அக
வையகத்தோரே, நீங்கள் ஆண்டவரை நினைத்து ஆர்ப்பரியுங்கள்: அக
மகிழுங்கள், களிகூருங்கள், புகழ் பாடுங்கள். பல்லவி

5 யாழ் இசைத்து ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள், வீணையும் யாழும்
இசைத்துப் பாடுங்கள்.
6 எக்காளமும் கொம்பும் ஊதி ஆண்டவராகிய அரசரின் திருமுன்
களிகூருங்கள். பல்லவி

## திருக்காட்சி விழா

சங். 71: 1-2. 7–8. 10-11. 12-13 (பல்லவி: 11 காண்)

பல்லவி: மாநிலத்தரசர் அனைவரும், ஆண்டவரே, உம்மை
வணங்குவர்.

1 இறைவா, அரசனிடம் உமது நீதி நேர்மை விளங்கச்செய்யும். அரச மகனிடம் உமது நீதித் தன்மை விளங்கச் செய்யும்.

2 நீதியோடு அவர் உம் மக்களை ஆள்வாராக: உம்முடையவரான எளியோரை நேர்மையுடன் நடத்துவாராக. பல்லவி

7 அவரது ஆட்சியின் நாளில் நீதி செழித்தோங்குவதாக. சமாதானம் நிலைபெறும்: நிலவு இருக்கும்வரையில் சமாதானம் நிலைபெறும்.

8 ஒரு கடலினின்றும் மறுகடல் வரைக்கும் அவர் அதிகாரம் செலுத்துவார். நதியினின்று உலகின் எல்லை வரை அவர் ஆள்வார். பல்லவி

10 தார்சிஸ் நாட்டு மன்னர்களும் தீவுகளின் மன்னர்களும் காணிக்கைகள் கொணர்வர்: அராபியா, சாபா நாட்டு வேந்தர்களும் காணிக்கை செலுத்துவர்.

11 மாநிலத்தரசர் அனைவரும் அவரை வணங்குவர்: மக்களினத்தார் அனைவரும் அவருக்கு ஊழியம் செய்வர். பல்லவி

12 தம்மைக் கூவி அழைக்கும் ஏழைக்கு அவர் விடுதலை தருவார். திக்கற்ற எளியவனை விடுவிப்பார்.

13 ஏழை எளியவன்மீது இரக்கம் கொள்வார்: ஏழைகளின் வாழ்வை மலரச் செய்வார். பல்லவி

## தவக் காலம்

*சங். 50: 1-2. 3-4a. 10-11. 12,15 (பல்லவி: 1aகாண்)*

பல்லவி: இரக்கம் வையும் ஆண்டவரே, நாங்கள் பாவம் செய்தோம்.

1 இறைவா, உம் இரக்கத்திற்கேற்ப என்மீது இரக்கம் வையும்: உம் இரக்கப் பெருக்கத்திற்கேற்ப என் குற்றங் குறைகளைப் போக்கிவிடும்.

2 நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவிப் போக்கிவிடும்: என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும். பல்லவி

3 என் குற்றங்குறைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன்: நான் செய்த பாவம் எந்நேரமும் என் கண்முன்னே நிற்கின்றது.

4 உமக்கெதிராகமட்டுமே பாவம் செய்தேன்; பல்லவி

10 தூயதோர் உள்ளத்தை, இறைவா, நீர் என்னகத்தே உருவாக்கும், உறுதிதரும் ஆவியை என்னுள் மலரச்செய்யும்.

11 உம் திருமுன்னிலிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும், உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். பல்லவி

12 உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும்; உமது பெருந்
தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.
15 ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்துவிடும்: என் வாய் உமது புகழ்ச்
சியை எடுத்துரைக்கும்.
பல்லவி

அல்லது சங். 90: 1-2. 10-11. 12-13. 14-15 (பல்லவி: 15bகாண்)

பல்லவி : **துன்பவேளையில், ஆண்டவரே, என்னோடு இருந்தருளும்.**

1 உன்னதரின் அடைக்கலத்தில் இருப்பவனே, எல்லாம் வல்லவரின் நிழலில்
வாழ்பவனே,
2 நீ ஆண்டவரை நோக்கி: "நீரே என் புகலிடம், நீரே என் அரண், என்
இறைவா, நான் உம்மை நம்பியுள்ளேன்" என்று சொல். பல்லவி

10 தீமை உன்னை அணுகாது, துன்பம் உன் உறைவிடத்தை நெருங்காது.
11 ஏனெனில், நீ செல்லும் இடங்களில் எல்லாம், உன்னைக் காக்கும்படி தம்
தூதருக்கு உன்னைக் குறித்துக் கட்டளையிட்டார். பல்லவி

12 உன் கால் கல்லில் மோதாதபடி அவர்கள் உன்னைக் கைகளில் தாங்கிக்
கொள்வார்கள்.
13 நச்சுப் பாம்பின்மீதும், விரியன் பாம்பின்மீதும் நடந்து செல்வாய்; சிங்கத்
தையும் பறவை நாகத்தையுமே மிதித்துப் போடுவாய். பல்லவி

14 அவன் என்னையே சார்ந்திருப்பதால், அவனை விடுவிப்பேன். என்
பெயரை அறிந்ததால், அவனைக் காப்பாற்றுவேன்.
15 என்னை நோக்கிக் கூப்பிடுவான்; அவன் செபத்தைக் கேட்பேன், துன்ப
வேளையில் அவனோடு இருப்பேன். அவனைத் தப்புவித்து பெருமைப்
படுத்துவேன். பல்லவி

அல்லது

சங். 129: 1-2. 3-4bc. 4c-6. 7-8 (பல்லவி: 7)

பல்லவி : **ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது; அவருடைய மீட்புத்துணை பொங்கிவழிகின்றது.**

1 ஆண்டவரே, அளவிலா வேதனையில் உம்மை நோக்கிக் கூவி அழைக்கி
றேன்.
2 ஆண்டவரே, என் கூக்குரலுக்குச் செவிசாய்த்தருளும்: என் வேண்டு
தலின் குரலை உம் செவிகள் கவனமுடன் கேட்கட்டும். பல்லவி

3 ஆண்டவரே, யான் செய்த பாவங்களை நினைவுகூர்வீராகில், உமக்குமுன்
யார் நிற்கமுடியும்?
4 வணக்கமுடன் நாங்கள் உமக்கு ஊழியம் செய்யுமாறு, நீர் பாவங்களை
மன்னிக்கிறீர். பல்லவி

5 ஆண்டவர் மீது நம்பிக்கை வைக்கிறேன்: அவரது வாக்குறுதியில் என்
ஆன்மா நம்பிக்கைகொண்டுள்ளது.
6 என் ஆன்மா ஆண்டவரை எதிர் நோக்குகின்றது: காவலர் உதயத்தை
எதிர்பார்ப்பதற்கு மேலாக,
இஸ்ராயேலர் ஆண்டவரை எதிர்பார்ப்பார்களாக. பல்லவி

7 ஏனெனில் ஆண்டவரிடம் இரக்கம் உள்ளது. அவருடைய மீட்புத்துணை
பொங்கி வழிகின்றது.
8 இஸ்ராயேலரை அவர் மீட்பார்: அவர்கள் செய்த பாவங்கள் அனைத்தி
னின்றும் அவர்களை மீட்டுக்கொள்வார். பல்லவி

## பரிசுத்த வாரம்

சங். 21:7-8. 16-17a. 18-19. 22-23 (பல்லவி: 1a)

பல்லவி: இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைநெகிழ்தீர்?

7 என்னைப் பார்ப்போர் எல்லாரும் என்னை ஏளனம் செய்கின்றனர்:
உதட்டைப் பிதுக்கித் தலையை அசைக்கின்றனர்.
8 'ஆண்டவர்மீது நம்பிக்கைவைத்தானே, அவர் மீட்கட்டும்: அவருக்கு
இவன்மீது பிரியமிருந்தால் இவனை விடுவிக்கட்டும்' என்றார்கள். பல்லவி

16 ஏனெனில், பல நாய்கள் என்னைச் சூழ்ந்துகொண்டன; பொல்லாதவர்
கூட்டம் என்னை வளைத்துக்கொண்டது: என் கைகளையும் கால்களையும்
துளைத்தார்கள்.
17 என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணிவிட முடியும். பல்லவி

18 என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள்: என் உடை
மீது சீட்டுப் போடுகிறார்கள்.
19 ஆனால், நீரோ ஆண்டவரே, என்னைவிட்டுத் தொலைவில் போய் விடா
தேயும்: எனக்குத் துணையான நீர் எனக்கு உதவிபுரிய விரைந்து வாரும்.
பல்லவி

22 நானோ உம் நாமத்தை என் சகோதரருக்கு வெளிப்படுத்துவேன்: சபை
நடுவே உம்மை இவ்வாறு போற்றுவேன்.

23 'ஆண்டவருக்கு அஞ்சுவோரே, அவரைப் புகழுங்கள்: யாக்கோப்பின்
சந்ததியே, நீங்கள் அனைவரும் அவரைப் போற்றுங்கள்: இஸ்ராயேல்
மக்களே, நீங்கள் அனைவரும் அவருக்கு அஞ்சுங்கள்.'

பாஸ்காப் புனித இரவு

சங். 135:1-3. 4-6. 7-9. 24.26 (பல்லவி: 1b)

1 ஆண்டவர் நல்லவர், அவரைப் போற்றுங்கள்.

பல்லவி: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

2 தேவர்களுக்கெல்லாம் தேவனைப் போற்றுங்கள். பல்லவி
3 ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரைப் போற்றுங்கள் பல்லவி

4 அரும்பெரும் செயல்கள் புரிந்தவர் அவர் ஒருவரே பல்லவி
5 ஞானமுடன் வானங்களை அமைத்தவர் அவரே பல்லவி
6 நீர்த்திரள்மீது நிலத்தை அமைத்தவர் அவரே பல்லவி

7 பேரொளி விளக்குகளை ஏற்படுத்தியவர் அவரே பல்லவி
8 பகலை ஆள்வதற்குப் பகலவனைப் படைத்தவர் அவரே பல்லவி
9 இரவை ஆள்வதற்கு நிலவையும் விண்மீன்களையும் ஏற்படுத்தியவர்
அவரே பல்லவி

24 நம் எதிரிகளிடமிருந்து நம்மை விடுவித்தவர் அவரே பல்லவி
25 உயிரினம் அனைத்திற்கும் உணவூட்டுபவர் அவரே பல்லவி
26 விண்ணக இறைவனைப் போற்றுங்கள் பல்லவி

அல்லது

சங். 135: 1.3.16. 21-23. 24-26 (பல்லவி: 1b)

1 ஆண்டவர் நல்லவர், அவரைப் போற்றுங்கள்

பல்லவி: ஏனெனில் அவர் இரக்கம் என்றென்றும் நிலைத்துள்ளது.

3 ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரைப் போற்றுங்கள் பல்லவி
16 பாலைவனத்தின் வழியே தம் மக்களை அழைத்துச் சென்றவர் அவரே பல்லவி

21 அவர்கள் நாட்டைத் தம் மக்களுக்கு உரிமையாக்கியவர் அவரே பல்லவி
22 தம் ஊழியரான இஸ்ராயேலுக்கு உரிமையாக்கியவர் அவரே பல்லவி
23 தாழ்வுற்ற நிலையில் நம்மை நினைவுகூர்ந்தவர் அவரே பல்லவி

24 நம் எதிரிகளிடமிருந்து நம்மை விடுவித்தவர் அவரே பல்லவி
25 உயிரினம் அனைத்திற்கும் உணவூட்டுபவர் அவரே பல்லவி
26 விண்ணக இறைவனைப் போற்றுங்கள் பல்லவி

பாஸ்கா காலம்

சங். 117:1-2. 16ab-17. 22-23 (பல்லவி: 24)

பல்லவி: ஆண்டவர் குறித்த நாளிதுவே:
அக்களிப்போம், இன்று அகமகிழ்வோம்.

அல்லது அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா.

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; ஏனெனில், அவர் நல்லவர்: என்
றென்றும் உள்ளது அவரது இரக்கம்.
2 "என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்" என்று இஸ்ராயேல் இனத்
தார் சாற்றுவார்களாக.
பல்லவி

16 ஆண்டவரது வலக்கரம் என்னை நிலை நிறுத்தியது: ஆண்டவரது வலக்
கரம் வலிமையாய்ச் செயலாற்றியது.
17 இறந்தொழியேன், உயிர் வாழ்வேன்: ஆண்டவருடைய அருஞ்செயல்
களைப் பறைசாற்றுவேன்.
பல்லவி

22 வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று.
23 ஆண்டவர் செயலிது, நம் கண்ணுக்கு வியப்பே! பல்லவி

அல்லது

சங். 65:1-3a, 4-5, 6-7a, 16, 20 (பல்லவி: 1)

பல்லவி: மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் ஆண்டவர்முன்
ஆர்ப்பரியுங்கள்.

அல்லது அல்லேலூயா.

1 மாநிலத்தோரே நீங்களனைவரும் ஆண்டவர்முன் ஆர்ப்பரியுங்கள்.
2 அவருடைய பெயரின் மாட்சிமையைப் புகழ்ந்து பாடுங்கள். அவரது
புகழ் எங்கும் விளங்கச் செய்யுங்கள்,
3 இறைவனை நோக்கி: உம் செயல்கள் எத்துணை மலைப்புக்குரியவை.
பல்லவி

4 மாநிலமனைத்தும் உம்மை வணங்கி உமக்குப் புகழ் பாடுவதாக: உமது பெயரின் புகழைப் பாடுவதாக என்று சொல்லுங்கள்.

5 வாருங்கள், கடவுளுடைய செயல்களைப் பாருங்கள்: மனிதர்களிடையே அவர் செய்தவை மலைப்புக்குரியவையே!

பல்லவி

6 கடலை அவர் கட்டாந்தரையாக்கினார்; ஆற்றை அவர்கள் நடந்து கடந்தனர்: ஆகவே, அவரை நினைத்து மகிழ்வோம்.

7 தம் வல்லமையால் அவர் என்றென்றும் ஆட்சி செலுத்துகின்றார்.

பல்லவி

16 கடவுளுக்கு அஞ்சுவோரே வாருங்கள், வந்து கேளுங்கள்: எனக்கு எத்துணை நன்மை அவர் செய்துள்ளார் எனக் கூறுவேன்.

20 என் மன்றாட்டைப் புறக்கணியாத கடவுள் போற்றி! தம் இரக்கத்தை என்னிடமிருந்து எடுத்துவிடாத இறைவன் போற்றி!

பல்லவி

## விண்ணேற்ற விழா

சங். 46: 1-2. 5-6. 7-8 (பல்லவி: 5)

பல்லவி: மக்கள் ஆர்ப்பரிக்க, இறைவன் அரியணை ஏறுகிறார்: எக்காளம் முழங்க, ஆண்டவர் எழுந்தருளுகிறார்.

அல்லது அல்லேலூயா.

1 மக்களினத்தாரே, நீங்கள்யாவரும் கைகொட்டுங்கள்: அக்களிப்போடு இறைவனுக்குப் புகழ் பாடி ஆர்ப்பரியுங்கள்.

2 ஏனெனில், ஆண்டவர் உன்னதமானவர், அஞ்சுதற்குரியவர். உலகுக்கெல்லாம் பேரரசர்.

பல்லவி

5 மக்கள் ஆர்ப்பரிக்க, இறைவன் அரியணை ஏறுகிறார்: எக்காளம் முழங்க, ஆண்டவர் எழுந்தருளுகிறார்.

6 பாடுங்கள், இறைவனுக்குப் புகழ் பாடுங்கள்: பாடுங்கள் நம் வேந்தனுக்குப் புகழ் பாடுங்கள்.

பல்லவி

7 ஏனெனில் கடவுள் உலகுக்கெல்லாம் அரசர்: அவருக்கு இன்னிசை எழுப்புங்கள்.

8 நாடுகள் அனைத்தின்மீதும் இறைவன் ஆட்சி புரிகின்றார்: தம் புனித அரியணைமீது இறைவன் வீற்றிருக்கின்றார்.

பல்லவி

## பரிசுத்தஆவி விழா

சங். 103: 1ab, 24ac. 29bc-30. 31, 34 (பல்லவி: 30 காண்)

பல்லவி : ஆண்டவரே, நீர் உமது ஆவியை அனுப்புவீர்: உலகனைத்தும் புத்துயிர் பெறச்செய்வீர்.

அல்லது அல்லேலூயா.

1 நெஞ்சே! நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக! ஆண்டவரே, என் இறைவா, நீர் எத்துணை உயர்ந்தவர்.

24 ஆண்டவரே, உம் வேலைப்பாடுகள், எத்தனை, எத்தனை! உம் படைப்புகளால் நிறைந்துள்ளது வையகம்.

பல்லவி

29 அவற்றின் மூச்சை நீர் நிறுத்திவிட்டால் அவை மடிந்து மறுபடியும் மண்ணுக்குத் திரும்பிவிடும்.

30 உமது ஆவியை நீர் அனுப்பினால் அவை படைக்கப்படும்: உலகனைத்தும் புத்துயிர் பெறும்.

பல்லவி

31 ஆண்டவருடைய மாட்சிமை என்றென்றும் விளங்குவதாக: தம் படைப்புகளைக் குறித்து ஆண்டவர் மகிழ்வாராக.

34 என் புகழுரை அவருக்கு இனியதாய் இருப்பதாக: நான் ஆண்டவரில் மகிழ்ச்சிகொள்வேன்.

பல்லவி

## ஆண்டின் பொதுக்காலம்

சங். 18: 7. 8. 9. 14. (பல்லவி: அரு. 6: 64b)

பல்லவி : ஆண்டவரே, உம்முடைய சொற்கள் ஆவியும் உயிருமாகும்.

7 ஆண்டவரது திருச்சட்டம் சால்புடையது; ஆன்மாவுக்கு புத்துயிர் ஊட்டுவது: ஆண்டவருடைய கட்டளை உறுதியானது; எளியோருக்கு அறிவூட்டுவது.

பல்லவி

8 ஆண்டவருடைய கட்டளைகள் நேரியவை: உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுபவை: ஆண்டவரது கற்பனை தூய்மையானது; கண்களுக்கு ஒளியூட்டுவது.

பல்லவி

9 ஆண்டவர் மீதுள்ள அச்சம் புனிதமானது; என்றென்றும் நிலைத்திருப்பது: ஆண்டவருடைய தீர்ப்புகள் உண்மையானவை; அவை எல்லாம் நீதியானவை.

பல்லவி

14 எனக்கு அடைக்கலமும் என் மீட்பருமான ஆண்டவரே, உம் முன்னிலை
யில் என்வாய் மொழியும், என் இதயச் சிந்தனையும் உமக்கு உகந்தன
வாகட்டும்.
பல்லவி

அல்லது

*சங். 33: 1-2. 3-4. 5-6. 7-8 (பல்லவி: 8a)*

பல்லவி : **ஆண்டவரே என் ஒளி, என்மீட்பு.**

1 ஆண்டரே என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு: நான்யாருக்கு அஞ்ச
வேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான்
நடுங்கவேண்டும்?
பல்லவி

4 ஆண்டவரிடம் நான் வேண்டுவது ஒன்றே: நான் விரும்புவதும் ஒன்றே:
ஆண்டவருடைய இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க
வேண்டும்; ஆண்டவருடைய இனிமையை நான் சுவைக்கவேண்டும்;
அவரது ஆலயத்தை நான் பார்க்கவேண்டும்.
பல்லவி

13 நானுே வாழ்வோருடைய நாட்டில் ஆண்டவருடைய நலன்களைக் காண்
பேனென நம்புகிறேன்.
14 ஆண்டவரை எதிர்பார்த்து வல்லவனுயிரு: உன் உள்ளம் திடம் கொள்வ
தாக, ஆண்டவரை எதிர்பார்த்திரு.
பல்லவி

அல்லது

*சங். 26: 1. 4. 13-14 (பல்லவி: 1a)*

பல்லவி : **ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்.**

1 ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன், அவரது புகழ் எப்போதும்
என் நாவில் ஒலிக்கும்.
2 என் ஆன்மா ஆண்டவரில் பெருமைகொள்ளும். சிறுமை யுற்றோர் இதைக்
கேட்டு அக்களிப்பார்களாக.
பல்லவி

3 என்னேடு ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள்; எல்லோரும் சேர்ந்து
அவரது பெயரைப் புகழ்ந்தேத்துவோம்.
4 நான் ஆண்டவரைத் தேடினேன்: அவர் என் மன்றாட்டைக் கேட்டருளி
ஞர், எல்லாவித அச்சத்திலின்றும் என்னை விடுவித்தார்.
பல்லவி

5 அவரை நோக்குங்கள், மகிழ்ச்சி அடைவீர்கள்: வெட்கத்தால் தலைகுனிய மாட்டீர்கள்.

6 இதோ! திக்கற்றவன் கூவியழைக்க, ஆண்டவர் அவன் குரலைக் கேட்டார்; எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார். பல்லவி

7 ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரைச் சுற்றி அவருடைய தூதர் பாளையம் இறங்கிக் காத்திடுவார்.

8 ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்: அவரிடம் தஞ்சம் புகுவோன் பேறுபெற்றவன். பல்லவி

அல்லது

சங். 62: 1. 2-3. 4-5. 7-8 (பல்லவி: 1b)

பல்லவி: ஆண்டவரே, என் இறைவா, என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது.

1 இறைவா, என் இறைவா, ஆர்வமுடன் உம்மை நாடுகிறேன். நீரின்றி வறண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கியிருப்பதுபோல் என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது. என் உடலும் உம்மை ஆசிக்கிறது.

பல்லவி

2 உமது திருத்தலத்தில் உமது பிரசன்னத்தை நோக்குகிறேன். உமது வல்லமையையும் மாட்சிமையையும் நான் காண விழைகிறேன்.

3 வாழ்க்கையைவிட உமது அருள் எவ்வளவோ மேலானது, என் நாவும் உம்மைப் புகழ்ந்தேத்தும். பல்லவி

4 இங்ஙனம் என் வாழ்நாளில் உம்மை வாழ்த்துவேன். உமது பெயரைச் சொல்லி உம்மை நோக்கி என் கைகளை உயர்த்துவேன்.

5 செழுமையும் கொழுமையும் பெறுவதுபோல் உன் உள்ளம் நிறைவு பெறும்; என் வாயில் மகிழ்ச்சி ஒலிக்கும்; என் நாவில் புகழ்ச்சி எழும்.
பல்லவி

6 படுக்கையிலும் நான் உம்மை நினைந்துக்கொண்டிருப்பேன். இரவு சாமங்களில் உம்மைத் தியானிப்பேன்.

7 ஏனெனில், நீர் எனக்கு உதவியாயுள்ளீர். உம் சிறகுகளின் நிழலில் நான் அக்களிக்கின்றேன்.

8 என் ஆன்மா உறுதியாக உம்மைப் பற்றிக்கொண்டது. உமது வலக்கரம் எனக்கு ஆதரவாயுள்ளது. பல்லவி

அல்லது

சங். 94: 1-2, 6-7, 8-9 (பல்லவி: 8)

பல்லவி: இன்று உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக்கொள்ளாதீர்கள்: மாறாக ஆண்டவருடைய குரலுக்குச் செவிகொடுங்கள்.

1 வாருங்கள் ஆண்டவர்க்குப் புகழ் பாடுவோம். மீட்பளிக்கும் பாறையாம் அவருக்கு அக்களிப்புடன் பாடுவோம்.

2 புகழ்ப் பாக்கள் இசைத்துக்கொண்டு அவர் திருமுன் செல்வோம்: இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வோம். பல்லவி

6 வாருங்கள் ஆராதிப்போம், தெண்டனிடுவோம், வணங்குவோம், நம்மைப் படைத்த ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.

7 அவரே நம் கடவுள், நாமோ அவரால் மேய்க்கப்படும் மக்கள், அவர் அரவணைப்பிலுள்ள மந்தை. இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களா? அக்குரல் கூறுவதாவது; பல்லவி

8 அன்று மெரிபாவிலும் பாலைவெளியில் மாசாவிலும் நிகழ்ந்ததுபோல் உங்கள் இதயங்களைக் கடினப்படுத்திக்கொள்ளாதீர்கள்.

9 "அங்கே உங்கள் முன்னோர்கள் என்னைச் சோதித்தனர்; என் செயல்களைக் கண்டிருந்தும் என்னைச் சோதனைக்குட்படுத்தினர். பல்லவி

அல்லது

சங். 99: 1, 2, 4. (பல்லவி: 3c)

பல்லவி: ஆண்டவருடைய மக்கள் நாம், அவருடைய மந்தையின் ஆடுகள் நாம்.

1 மாநிலத்தோரே, நீங்கள் அனைவரும் அக்களிப்போடு ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள். பல்லவி

2 மகிழ்ச்சியுடன் அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள். பெருமகிழ்ச்சியுடன் அவர் திருமுன் செல்லுங்கள். பல்லவி

4 புகழ்ப் பா இசைந்து அவருடைய வாயிலில் நுழையுங்கள்; இன்னிசையுடன் அவருடைய முற்றங்களில் நில்லுங்கள்: அவரைப் போற்றிப் புகழுங்கள், அவருடைய பெயரை வாழ்த்துங்கள். பல்லவி

அல்லது

சங். 102 : 1-2, 3-4, 8.10, 12-13 (பல்லவி: 8a)

பல்லவி : அன்பும் அருளும் மிக்கவர் ஆண்டவர்.

1 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. என் அகத்துள்ளதெல்லாம்
அவரது திருப்பெயரை வாழ்த்துவதாக!
2 நெஞ்சே, நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக. அவர் செய்த நன்மைகளை
யெல்லாம் மறவாதே. பல்லவி

3 அவர் உன் பாவங்களையெல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம்
குணமாக்குகிறார்.
4 உன் உயிரை அழிவினின்று மீட்கிறார். அருளையும் இரக்கத்தையும்
உனக்கு முடியாகச் சூட்டுகிறார். பல்லவி

5 ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்; சினங்கொள்ளத் தாமதிப்பவர்
சாந்தமுடையவர்.
10 நம்முடைய பாவங்களுக்கு ஏற்றபடி நடத்துவதில்லை: நம் குற்றங்களுக்
குத் தக்கபடி நம்மைத் தண்டிப்பதில்லை. பல்லவி

12 கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலைவுள்ளதோ,
அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றி
விட்டார்.
13 தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவதுபோல, ஆண்டவர் தமக்கு
அஞ்சுவோருக்கு இரக்கம் காட்டுகிறார். பல்லவி

அல்லது

சங். 144: 1-2. 8-9. 10-11. 13cd-14 (பல்லவி: 1காண்)

பல்லவி : என் இறைவா, என் அரசே,
என்றென்றும் உம் பெயரை வாழ்த்துவேன்.

அல்லது அல்லேலூயா.

1 என் இறைவா, என் அரசே, நான் உம்மைப் புகழ்ந்து பாடுவேன். என்
றென்றும் உம் திருப்பெயரை வாழ்த்துவேன்.
2 நாள்தோறும் நான் உம்மை வாழ்த்துவேன். என்றென்றைக்கும் உம்
திருப்பெயரைப் புகழ்வேன். பல்லவி

8 அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர். சினங்கொள்ளத் தாமதிப்பவர்
அருள் உள்ளம் படைத்தவர்.
9 ஆண்டவர் அனைவருக்கும் நன்மை செய்பவர், தம் படைப்புகள் அனைத்
தின் மீதும் இரக்கம் காட்டுபவர் பல்லவி

10 ஆண்டவரே உம்முடைய படைப்புகள் யாவும் உம்மைப் புகழுக. உம்
முடைய புனிதர்கள் உம்மை வாழ்த்துக.
11 உமது அரசின் மகிமையை அவர்கள் எடுத்துரைப்பார்களாக. உமது
ஆற்றலைப் பறைசாற்றுவார்களாக. பல்லவி

13 தம் வார்த்தைகளிலெல்லாம் உண்மையுள்ளவராயிருக்கிறார். தம் செயல்
களிலும் புனிதமானவர்.
14 விழுந்து நொந்துபோன யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார்: தாழ்த்தப்
பட்ட அனைவரையும் தூக்கி விடுகிறார். பல்லவி

CHS
St. XAVIER'S COLLEGE
FATHER'S LIBRARY
TIRUNELVELI-2